இன்றைய உதயனின் விலை ரூ. 20 மட்டுமே! (வழக்கமான விலையான 30 ரூபா அல்ல)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 33 கதிர் 49 தை 01ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 14 ஜனவரி 2018 வள்ளுவர் ஆண்டு 2049



உள்ளக சுயநிர்ணய உரிமைக்கு அங்கீகாரம் தரும் தீர்வு

வேண்டும் என்கிறார் சம்பந்தன்

யாழ்ப்பாணம், ஜனவரி 14

நீண்டகாலமாகப் புரையோடிய புண்ணாகக் கருதப்படுகின்ற தேசிய இனப் பிரச்சினைக்கு உள்ளக சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கக் கூடியதாகவும் சுயாட்சியுடன் கூடியதுமான ஒரு நிரந்தரத் தீர்வு இந்த ஆண்டு காணப்பட வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார்.

தைத்திருநாளை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் தெரிவித்துள்ளதாவது-

இந்துமா கடலின் முத்தென விளங்கும் இலங்கைத் திருநாட்டில் வாழும் தமிழ் மக்களுக்கும், புலம்பெயர்ந்து உலகெங்கும் பரந்து வாழும் எம் உறவுகளுக்கும் தைப்பொங்கல் இனிய நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மன மகிழ்வெய்துகின்றேன்.

இன்று, தமிழ்கூறும் நல்லுலகம் எங்கும் தமிழர் திருநாள், உழவர் பெரு » 05

குதூகல பொங்கல் இன்று

நேற்றே ஏற்பாடுகள் முழுமை

யாழ்ப்பாணம், ஜன. 14

நிண்ட காலத்தின் பின்னர் தமிழ்ப் புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் களைகட்டியுள்ளன. வெடிகொளுத்துதலும் மத்தாப்பு கொளுத்தி மகிழ்தலுமாக தைத்திருநாள் நேற்றிரவே களைகட்டியிருந்தது. யாழ். நகரப் பகுதியில் நள்ளிரவில் தொடர் வெடி கொளுத்தி இளைஞர்கள் சிலர் புத்தாண்டை வரவேற்றனர். » 04



வாசகர்கள் விளம்பரதாரர்கள் முகவர்கள் அனைவருக்கும் உதயனின் தைத்திருநாள் வாழ்த்துக்கள்.

மார்ச், ஏப்ரலில் மின் தடை ஏற்படலாம்

கொழும்பு, ஜன. 14

எதிர்வரும் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் நாடு முழுவதும் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய நிலை ஏற்படும் என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

அந்தக் காலப்பகுதியில் நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்தில் 45 நாள்கள் பராமரிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதால் இந்த மின்வெட்டு நடைமுறைப் படுத்தப்படும் என்று தெரி » 04

மங்களவை வளைப்பதற்கு வியூகம் வகுக்கின்றது சு.க.!

கொழும்பு, ஜன. 14

நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர வைத் தமது கட்சிக்குள் கொண்டுவருவதற்கான வியூகமொன்றை வகுத்துள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர்களுள் ஒருவர் அது தொடர்பில் இரகசியப் பேச்சுகளை ஆரம்பித்துள்ளார் என்று உயர்மட்ட அரசியல் வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினரான மங்கள சமரவீர, ஐக்கிய தேசியக் கட்சியுடன் » 05

புலிகளின் பாடலுக்காக மைத்திரி திட்டவில்லை

யாழ்ப்பாணம், ஜன. 14

தமிழீழத்தை மீட்டெடுப்பதற்காக எழுந்து வா என்று அறைகூவல் விடுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பாடலை சுதந்திரக் கட்சியின் பரப்புரைக் கூட்டத்தில் ஒலிபரப்பியமை தொடர்பில், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தன்னுடன் பேசவோ தன்னைத் திட்டவோ இல்லை என்று உதயன் பத்திரிகையிடம் தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் » 05

இலங்கை போன்ற நாடுகள்

சீனாவின் பக்கம் சாய்வது ஆபத்து

இந்திய இராணுவத் தளபதி கருத்து

கொழும்பு, ஜன. 14

இலங்கை போன்ற நாடு கள் சீனாவை நோக்கிச் செல்வதை அனுமதிக்கக்கூடாது என்று இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் பிபின் ராவத் தெரிவித்தார்.

இந்திய இராணுவ தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். » 05

பொங்கலுக்கும் ஓய்ந்துவிடாத வேட்பாளர்கள்

யாழ்ப்பாணம், ஜன. 14

தைப் பொங்கல் பண்டிகை நேற்றே களைகட்டத் தொடங்கியிருந்தது. மக்கள் எல்லோரும் பொங்கல் தயார்ப்படுத்தலில் மூழ்கியிருந்தனர். அந்தக் களேபரத்துக்கு இடையிலும் தமது தேர்தல் பரப்புரையில் » 05

தவறவிட்டவர்களுக்கு ஓர் நற்செய்தி!

உதயன் பொங்கல் மலர் தனித்துவமாக 132 பக்கங்களில் எந்தவொரு விளம்பரமும் இல்லாது நேற்று வெளிவந்தது. குறுகிய அறிவித்தலுடன் மலர் வெளிவந்ததால் முற்பதிவு செய்து அதனைப் பெறமுடியாது தவறவிட்டதாகப் பலரும் கவலை தெரிவித்தனர்.

உங்களுக்குக் கவலையே வேண்டாம். தவறவிட்டவர்கள் அனைவரும் உங்கள் உதயன் முகவரிடம் இருந்து பொங்கல் மலரை இன்றும் பெற்றுக்கொள்ளலாம். அப்படியும் கிடைக்காதவர்கள் உதயன் பத்திரிகை அலுவலகத்தில் நேரடியாகவே பெற்றுக்கொள்ளலாம். பொங்கல் மலரின் விலை ரூபா 60.

வடக்குக் காணி விடுவிப்பில் மைத்திரி கூறுவது பொய்!

சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜன. 14

வடக்கில் படையினர் வசம் இருந்த 80 வீதமான பொது மக்களின் காணிகள் அவர்களிடம் மீளக் கையளிக்கப்பட்டுள்ளன் என்று அரச தலைவர் மைத்திரிபால வெளியிட்டுள்ள அறிக்கை தொடர்பில் ஆச்சரியமும் ஏமாற்றமும் அடைந்துள்ளோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

வட மாகாணத்தில் விடுவிக்கப்பட்டதாக கூறப்படும் பொதுமக்களின் குடியிருப்புகள் மற்றும் விவசாய காணிகள் இன்னும் படையினர் வசமே உள்ளன என்பதை தாழ்மையுடன் தெரியப்படுத்துகிறேன். இந்த விவசாய நிலங்களுக்கு சொந்தமான பொதுமக்களில் » 04

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கவனவீர்ப்பு

வவுனியா ஜன.14

காணாமல் ஆக்கப்பட்டவர்களை வெளிப்படுத்தவும் விடுவிக்கவும் வலியுறுத்தி வவுனியாவில் தொடர்போராட்டம் நடத்தும் உறவுகள் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தினர்.

தைத்திருநாள் வந்துள்ள நிலையில் தமது உறவுகள் மீட்கப்படுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழுத்தம் கொடுக் » 05

நாடுகடந்த அரசு உறுப்பினர் நாட்டுக்குள் நுழையத் தடை!

கொழும்பு, ஜன. 14 -

கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் வந்திறங்கிய நாடு கடந்த தமிழீழ அரசின் உறுப்பினர் ஒருவருக்கு இலங்கைக்குள் நுழைவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. நாடு கடத்தப்படுவதற்காக அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சுரேஸ்நாத் இரத்தினபாலன் (வயது - 48) தனது மனைவி மற்றும் இரண்டு குழந்தைகளுடன் அபுதாபி வழியாக கடந்த வியாழக்கிழமை மாலை 3.45 மணியளவில் கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் வந்திறங்கினார். குடிவரவு அதிகாரிகளால் அவர் » 04



சமத்துவமும் சமாதானமும் நிறையட்டும்

நல்லை ஆதீன குரு முதல்வர்



இன்று தை பிறந்திருக்கின்றது. தைப் பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். பிறந்திருக்கும் தைத் திருநாளை இருகரங்கூப்பி வர வேற்பதில் உளம் பூரிப்படை கின்றோம். இவ்வாறு நல்லை ஆதீன குரு முதல்வர் தெரிவித் தார். அவர் அனுப்பியுள்ள பொங் கல் வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அதில் உள்ளதாவது

தைப்பொங்கல் தமிழர் திருநாள், உழவுக்கும் தொழி லுக்கு வந்தனை செய்வோம். என்ற வாக்குக்கிணங்க வாழ்வாங்கு வாழ்ந்து வில்லங்கம் யாவும் விலகி அனைத்து மக்களும் ஆனந்த வாழ்வில் திளைத்து சமத் துவமும் சமாதானமும் நிறைந்து விளங்க எல்லாம் வல்ல வண்ணை வைத்தீஸ்வரனை வழிபட்டு நிற் கின்றோம். என்றுள்ளது.

நன்றி உணர்வைத் தரும் விழாவாக அமையட்டும்



நன்றி கூறும் பண்பு அனைத்து மனித ருக்கும் மிகவும் தேவையான ஒன்று. நம்மைப் படைத்த இறைவன் நம் மோடு வாழும் அயலவர் நம்மை காக்கும் இயற்கை ஆகிய மூவர்க்கும் நாம் என்றுமே நன்றியுடையவர்களாக இருக்கவேண்டும் என யாழ். மறைமா வட்ட ஆயர் மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தெரிவித்தார். பொங்கல் வாழ்த்துச் செய்தியில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அனேகமான வேளைகளில் நாம் நன்றி கூறவும் நன்றியாக இருக்கவும் மறந்துவிடுகிறோம். இது அவர்கள் பணி இது அவர்கள் க்டமை இதற்காக பணம் செலுத்தப்படுகின்றமை யால் அவர்கள் இதைச் செய்யவேண்டுமென என்கின்ற மனப்பாங்கே நம்மில் மேலோங்கி இருக்கிறது.

தேர்தல் நெருங்கியுள்ள நிலையில் தமிழ் மக்கள் தமது நிலைப் பாட்டை தெளிவாக வெளிப்படுத்த வேண்டும். தமிழ் மக்களின் பொதுநலனில் அக்கறை கொண்டோர் யார் தமிழ் மக்களின் நீதியோடு கூடிய நிரந்தர தீர்வுக்காக உழைக்கக் கூடியோர் யார் என்பதை இனங்காணவேண்டும். முகங்களுக்கல்ல கொள்கைகளுக்கே முன்னுரிமை கொடுக்க வேண்டும். ஊர வர் உறவுகள் என்ற உணர்வு எல்லைகளைத் தாண்டி உண்மையாக திறமையுடையோரையும் இளையோர்களை யும் தெரிவு செய்ய வேண்டும் என வேண்டுகிறோம். அரசி யல்வாதிகளும் தமது தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கள் கொள்கை சுயலாபங்கள் கட்சி நலன்கள் கருத்து வேறுபாடு கள் போன்ற அனைத்தையும் கடந்து தமிழ் மக்களின் ஒட்டு மொத்த சுபீட்சமான எதிர்காலத்துக்கே முன்னுரிமை கொடுக்க வேண்டுமென வாழ்த்தி நிற்கின்றேன் என்றார்.

பொங்கல் விழாக்கள்

யாழ்ப்பாணம், ஜன.14

வடமராட்சி தமிழ்சங்கத்தின் தைப்பொங்கல் விழா வியாபாரிமூலை கலைமணி சனசமூக முன்றலில் இன்றுகாலை 8 மணிக்கு நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து அகில இலங்கை இளங் கோ கழ கத்தினரின் பட்டிமன்றமும், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். இந்தவிழாவில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ய)

வவுனியா மாவட்ட சமூகசேவை அலுவலகமும் எல்லப் பர் மருதங்குளம் சிவன் முதியோர் இல்லமும் அல்லை யூர் இணையத்துடன் இணைந்து பரீஸ் லாசப்பல் தமிழ் வர்த்தகர்கள் அனுசரணையில் நடத்தும் மாபெரும் பொங்கல் விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு சிவன் முதியோர் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கென மதியம் ஒரு மணிக்கு வவுனியா யங்ஸ்ரார் மைதானத்தில் இருந்து சிறப்பு போக்குவரத்து சேவை களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

தெல்லிப்பழை சித்தியம்புளியடி சித்தியம்பதியுறை அண் ணமார் தேவஸ்தான தைப்பொங்கல் இன்றுமாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது. சிறப்பு பூஜைகளுடன் ஆரம்பமாகி வழுந்துப் பானைப்பூசையும், பொங்கல்வி ழாவும் நடைபெறும். (ய)

நல்லதொரு விடிவு கிட்ட இறையருள் கிட்டட்டும்

கலாநிதி ஆறு.திருமுருகன் வாழ்த்து



ஈழத்தமிழர்களுக்கு இறையருளினால் நல்லதொரு விடிவு கிடைக்க மன்றாடு வோம். அனைவருக்கும் இதயபூர்வ மான வாழ்த்துக்களையும் நல்லாசிகளை யும் தெரிவித்து அமைகிறேன். இவ்வாறு கலாநிதி ஆறு.திருமுருகன் வாழ்த்துத் தெரிவித்தார்.

அவர் அனுப்பியுள்ள தைப் பொங்கல் வாழ்த்துச் செய்தியி லேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தைத்திங்கள் முதல்நாள் தைப்பொங்கல் திருநாள். உலகம் முழுவதும் வாழும் இந்து மக்கள் இயற்கைத் தெய்வமாகிய சூரிய பகவானுக்கு பொங்கிப் படைத்து நன்றி சொல்லும் நன் னாள். பாரம்பரிய பண்பாட்டை பேணிப் பாதுகாத்த எம் மூதா தையர்கள் என்றும் மறக்கமுடியாதவர்கள். எத்தனை நாகரி கங்கள் எம்மைச் சூழ்ந்த போதிலும் எம் மூதாதையர்கள் எவ்வளவு தூரம் எங்கள் பண்பாட்டை விட்டுக் கொடுக்காமல் காத்து எமது சந்ததிக்கு கைமாறு செய்தார்கள் என்பதை இன் றைய தலைமுறை நன்கு உணரவேண்டும். இந்தநாளில் அனைவரையும் அரவணைத்து ஆறுதல் செய்வோம். சிறைக்கூடங்களிலும் மருத்துவமனைகளிலும் காத்திருக்கும் அன்பு உள்ளங்களுக்காக பிரார்த்தனை செய்வோம். எங்கும் ஏழைகள் இல்லாத உலகைக் காண இறையருள் கைகூட வேண்டும் என இந்நாளில் பிரார்த்திப்போம் என்று அவர் தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (ற)

அன்பு பொங்கட்டும்

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய பிரதம குரு வாழ்த்து

உண்மை, அன்பு, நேர்மை ஆகியவற்றை ஒருவராலும் தடுத்து நிறுத்த முடியாது இந்த மூன்று பண்புகளும் உங் களிடம் நிறைந்திருந்தால் அதுவே ஆனந்தப் பொங்கல். இவ்வாறு வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தா னம் பிரதம குரு சிவஸ்ரீ.சோமாஸ்கந்ததண்டபாணிகதே சிகர் தெரிவித்தார்.

அவர் அனுப்பியுள்ள பொங்கல் வாழ்த்துச் செய்தி யிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அதில் உள்ளதாவது;

ஆன்மிக பலத்தால் நாம் உலகுக்கே வழிகாட்ட இந்த பொங்கல் திருநாளில் சூளுரைப்போம். நாம் அன்பு என் னும் அடித்தளத்தால் உருவாக்கப்பட்டிருக்கிறோம் அதில் தான் உண்மையான ஆனந்தம் அடங்கியிருக்கிறது என்பதை சரித்திரங்கள் புக முடியாத காலத்துக்கு முன்பே நாம் இந்த உண்மையை உலகத்துக்கு பிரகடனப்படுத்தி யிருக்கிறோம்.

அன்புதான் ஆனந்தம் அன்புதான் கடவுள் அன்புதான் எல்லாம் இந்த பொங்கல் திருநாளில் அன்பு பெருகட்டும் ஆனந்தம் நிறையட்டும். என்றுள்ளது.

தசாப்தங்களாகத் தீர்க்கப்படாத தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நல்லதோர் தீர்வு கிடைக்கட்டும்



பல தசாப்தங்களாக தீர்க்கப்படாத தமிழ் மக்களின் பிரச்சனைக்கு நல்லதோர் தீர்வு கிடைப்பதுடன் எத்தகைய இன்னல் வரி னும் தமிழர் ஆகிய நாம் எமது சுயத்தை இழக்காது வாழ வேண்டும் என இந்து சமய பேரவையின் செயலாளர் சி.சக்திகீர் வன் தெரிவித்தார். தைப்பொங்கல் வாழ்த்துச் செய்தியில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயரிய விழுமியங்களையும் கலை கலாசாரங்களையும் கொண்ட எமது மொழி அன்னியர் ஆட்சியில் இருந்து இன்று வரை சோதனைக்குள்ளேயே ஆழ்ந்து கிடக்கின் றது.

இந்த இருளில் இருந்து வெளியே வருவதற்கு நாம் அனைவ ரும் வேறுபாடுகளை மறந்து ஒரே நோக்கோடு பயணிப்போ மாக. கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகளால் காணாமற் போன உறவினரின் வருகைக்காக ஏங்கி நிற்கும் உறவுக ளுக்கு என்ன வார்த்தை சொல்லித்தான் ஆறுதல் கூறமுடியும். கடந்த காலப்போரில் தாய் தந்தையரை இழந்த குழந்தைகள், குழந்தைகளை இழந்த பெற்றோர், கணவனை இழந்த மனைவி, மனைவியை இழந்த கணவன் என்று இன்னோ ரின் இந்த புகழுக்கு மத்தியில் வாழ்வோருக்கு நாம் என்ன தான் செய்து விட்டோம் என்று சிந்தித்து ஈமம்மாலியன்ற வற்றை செய்ய திடசங்கற்பம் பூணுவோமாக இப் புனித நாளில் அனைவரும் சகல செல்வங்களும் பெற்று பல் லாண்டு எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாம சுந்தரி சமேத சிதம்பர நடராஜ பெருமானை பிரார்த்தித்து எனது நல் வாழ்த்துகளைத் தெரிவிக்கின்றேன் - என்றார்

சுபீட்சமான வாழ்வு கிட்ட வாழ்த்துக்கள்

வாசுதேவக்குருக்கள் வாழ்த்து

இறையருளால் அனைவரதும் வாழ்வும் சுபீட்சமாக அமை வுற பிரார்த்திக்கின்றேன். தமிழ் மக்கள் அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்.

இவ்வாறு வீணாகான குருபீட முதல்வர் சிவஸ்ரீ சபா வாசுதேவக்குருக்கள் தெரிவித்தா

அவர் அனுப்பியுள்ள தைப்பொங்கல் வாழ்த்துச் செய்தியி லேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

உழவர் திருநாளாம் தைப்பொங்கல் எமது இனத்தின் தலைசிறந்த கலாசாரத் திருநாளாகக் கொண்டாடப்படுகின் றது. தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். அதற்கமை வாக இவ்வாக்கு உண்மையாகட்டும். எமது வாழ்விற்கு விடிவு ஏற்பட மாட்டாதா என ஏங்கும் எமது மக்களுக்கு தைப்பொங்கல் நல்வழி காட்டட்டும். எமது மக்களுக்கு நல்லதொரு வாழ்வு உதயமாகட்டும். நீண்ட நெடிய எமது வரலாற்றில் எமக்காக, எமது கலை கலாசார விடிவுக்காக உயிர் தியாகம் செய்தவர்கள் ஏராளம். அவர்களது ஆத்மா எமது மக்களின் விடுதலைக்காக இத்திருநாளில் ஆசிர்வ திக்கட்டும்.

துன்பங்கள் விலகி மகிழ்ச்சி பொங்க இறையருளைப் பிரார்த்தித்து ஆசிர்வதிக்கின்றேன் என்று அவர் தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (ற)

பொங்கும் மங்களம் எங்கும் தங்கட்டும்

வண்ணை வைத்தீஸ்வர பிரதம குரு வாழ்த்து

தமிழர்களின் பெருநாளாகிய இன்றைய தைப்பொங்கல் நன்னாள் சைவ சமயிகளின் ஆனந்தம் பரவும் புண்ணி யப் பெருநாள். இந்த நாளில் எல்லாமக்களும் சீரோடும் சிறப்போடும் வாழ வேண்டுமென்று ஆசிகள் நல்கி வாழ்த்துகின்றோம். இவ்வாறு வண்ணை வைத்தீஸ் வர பிரதம குரு சிவஸ்ரீ சொ.இ.விக்னேஸ்வரக் குருக்கள் தெரிவித்தார். அவர் விடுத்துள்ள தைப் பொங்கல் வாழ்த் துச் செய்திலேயே இவ்வாறு குறிப்பிட் டுள்ளார். அதில் உள்ளதாவது:

ஈழம் வாழ் மக்கள் அனைவருக்கும் பொங்கும் மங்க ளம் எங்கும் தங்கட்டும் இற்றை நாள் வரைபட்ட கஷ்டங் களும், துன்பங்களும், இன்னல்களும், இடுக்கண்க ளும் அறவே நீங்கப் பெற்று மங்கள வாழ்வில் வளமு டன் திகழ வேண்டுமென்று யாழ் வண்ணை வைத்தீஸ் வரனை வணங்கி வாழ்த்தி ஆசிகூறி வாழ்த்துகின் றோம். என்றுள்ளது.

தமிழ் மக்கள் தமது சொந்த மண்ணில் சுயமரியாதையுடன் வாழ வழி பிறக்க வேண்டும்

தமிழர் திருநாள் என்ற வகையில் குதூகலமாகவும் கொண்டாடி மகிழ்வது வழக்கம். ஆனால் இன்றைய சூழல்நிலையில் உதயமாகும் தைத்திங்கள் தமிழ் மக்க ளுக்கு எவ்வகையிலும் மகிழ்ச்சியை ஏற்படுத்தமுடியாத நிலையில் அமைந்துள்ளது என அகில இலங்கை இந்துமா மன்றம் வெளியிட்டுள்ள பொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

மேலும் அதில் தெரிவித்ததாவது,

இந்த நாட்டில் வாழும் வடக்கு கிழக்கு பகுதிகளைச் சேர்ந் தவர்கள் சொல்ல முடியாத சோதனைகளுக்கும் முகங் கொடுத்து எதிர்நீச்சல் போட்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார் கள்.

அவர்களில் பெரும்பாலானவர்கள் தங்கள் சொந்த வீடுக ளிலிருந்து வெளியேறி சொந்த மண்ணிலேயே அகதிக ளாக வாழ்கிறார்கள். அதுவே அவர்களின் விதியாக அமைந்துள்ளது.

இந்த நிலை மாற வேண்டும். இந்து மக்களை பெரும்பான் மையாகக் கொண்ட தமிழ்பேசும் மக்கள் தங்கள் சொந்த மண்ணில் சுதந்திரத்துடனும் சுயமரியாதையு டனும் வாழ்வதற்கு மலரும் தை மாதத்திலிருந்து வழிபிறக்க வேண்டும்.

அதற்காகப் பிரார்த்திக் கின்றோம். கடந்த காலங்களில் அனுபவித்துவந்த எல்லாவிதமான இன்னல்களும் முற் றாக நீங்கி, அவர்கள் எதிர்பார்க்கும் அரசியல் தீர்வொன்றின மூலம் அவர்களது வாழ்வில் மகிழ்ச்சியும் நிம்மதியும் விமோசனமும் கிடைப்பதற்கு மலரும் தைத்தி ருநாள் வழிவகுக்க வேண்டும் என ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமான் திருவருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம். எனத் தெரிவிக்கப்பட்டது.

எதிர்கால தலைமுறையினரை நல்வழிப்படுத்தும் இத்தகைய பண்டிகைகள்



மானிட சமூகத்தை நாகரிகத்தை நோக்கிப் பயணிக்க வைப்பதில் உழவுத் தொழிலே முக்கிய காரணியாக அமைந்தது என அரச அதிபர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

தைத் திருநாளை முன்னிட்டு வெளியிட்ட பொங்கல் வாழ்த்துச் செய்தியில் இதனைக் குறிப்பிட்டார்.

வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்ததாவது:

உலகவாழ் தமிழ் மக்களால் இயற்கைக்கு தமது நன்றியைப் பறைசாற்றும் வகையில் கடைப்பிடிக்கப்படும் தைத் திருநாளை முன்னிட்டு இந்த வாழ்த்துச் செய்தியை அனுப்பி வைப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

நவீன தொழில்நுட்ப வளர்ச்சியால் கிராமவாசிகள் விவசாயத்தைக் கைவிட்டு, நகரங்களை நோக்கிப் படையெடுக்கும் நிலையிலும் பாரம்பரியங்களுடன் கொண்டாடப்படும் இத்தகைய பண்டிகைகள் மனிதனின் கலாசாரம், பண்பாடு, மனிதநேயம், ஒற்றுமை, பகிர்ந்துண்ணல் போன்ற விழுமியப்பண்புகளை சமூகத்தில் பேண உதவுகின்றது.

இத்தகைய செயற்பாடுகள் எதிர்கால தலைமுறையினரை நல்வழிப்படுத்தும் வகையில் பாதுகாப்பதற்கும் வாய்ப்பாக அமைகின்றன. தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற நம்பிக்கையுடன் கொண்டாடப்படும் தைத்திருநாள் அனைவரது வாழ்க்கையிலும் வளம் பெற வேண்டும் என பிரார்த்திப்பதோடு அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன் - என்றார்.

விடுதலை வாழ்வு மலரட்டும்

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா வாழ்த்து



தை பிறந்துவிட்டது விடுதலை வாழ்வு மலரும் எனக் கண்ணீரைத் துடைத்து புது நம்பிக்கை மீது திடசங்கற்பங் கொண்டு வாழ்ந்திட இந்தத் தைப்பொங்கல் திருநாளில் பொங்கி மகிழ்வோம். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா தெரிவித்தார்.

அவர் அனுப்பியுள்ள பொங்கல் வாழ்த்துச் செய்திலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அதில் உள்ளதாவது:

மக்கள் வாழ்வியலில் துன்ப துயரங்கள் இயல்பானதே தைபிறந்தால் வழிபிறக்கும் என்று நம்பிக்கை வளருவதும் வாழ்வில் பொங்கல் வருவதும் பண்டைக்கால முதல் இன்று வரை கொண்டாடி வருவது தமிழர் வாழ்வியலின் சிறப்பை எடுத்துக் காட்டுகிறது.

தமிழர் பாரம்பரியத்தைப் பண்பாடுகளை இழந்து போவோமாயின் தமிழர்அடையாளங்களையும் தனித்துவ நாகரிகத்தையும் வரலாற்றில் இழந்து விடுவோம். தமிழ் மக்கள் எழுவோம் வாழ்வோம் தமிழ் நிலத்தில் ஆள்வோம் என்ற நம்பிக்கையுடன் தைத்திங்களில் பொங்கி மகிழ்வோம் - என்றுள்ளது.

நல்லிணக்கத்துக்கான தினம்

ரணில் தனது வாழ்த்தில் தெரிவிப்பு



தமிழ் மக்களும், ஏனைய சமூகத்தினரும் ஒன்றுபட்டு எதிர்கால இலங்கையின் சமாதானத்துக்காக உறுதிபூணும் ஓர் தேசிய நல்லிணக்க தினமாக தைப்பொங்கல் அமைகின்றது, என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். தைத்திருநாளை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்துச்செய்தியிலேயே இந்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

இலங்கை மக்களது வாழ்க்கையை முன்னேற்றிச் செல்லும் இந்தத் தருணத்தில் இலங்கை மற்றும் உலகெங்கு முள்ள தமிழ் மக்கள் உவகையுடன் இன்று தைத்திருநாளை கொண்டாடுகின்றனர்.

பொங்கல் திருநாளானது மகிழ்ச்சிகரமாக நன்றி செலுத்துகின்ற மற்றும் மீளமைப்புக்கான மக்கள் திருநாளாக அமைகின்றது. தமிழ் மக்களும், ஏனைய சமூகத்தினரும் ஒன்றுபட்டு எதிர்கால இலங்கையின் சமாதானத்துக்காக உறுதிபூணும் ஓர் தேசிய நல்லிணக்க தினமாக அமைகின்றது.

உலகத்தின் மிகப் பழமையான நாகரிகத்தைக் கொண்ட தமிழர்கள், உழவுத் தொழிலைப் போற்றி எருதுகள், கால்நடைகளுக்கும், இயற்கைக்கும் நன்றி தெரிவிக்கின்ற வகையில் அறுவடைத் திருநாளைத் தைப்பொங்கல் திருவிழாவாக நெடுங்காலமாகக் கொண்டாடி வருகின்றனர்.

இயற்கையின் பெறுமதி சமத்துவத்துக்கு மதிப்பளிக்க வேண்டியதன் முக்கியத்துவம், நன்றி தெரிவிக்கும் உயரிய பண்பு போன்ற அனைத்து மதங்களினதும் மனித நேயக்கருத்துக்களை தைப்பொங்கல் பண்டிகை எமக்கு எடுத்தியம்புகின்றது.

தமிழர்கள், இன மத பேதமின்றி அனைத்து மக்களுடனும் ஒன்றிணைந்து தைப்பொங்கல் திருவிழாவைக் கொண்டாடுதலானது சமாதானம் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கான முக்கிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்துகின்றது.

இயற்கையுடன் தொடர்புறும் போது அதன் பாதுகாப்புக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதற்கும் இன மத பேதங்களைத் தாண்டி சமாதானம் சகோதரத்துவம் மேலோங்கும் மனித சமூகமொன்றை உருவாக்கவும் இம்முறை தைப்பொங்கல் பண்டிகை முன்மாதிரியாக அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன். தைப் பொங்கல் பண்டிகையைக் கொண்டாடும் சகோதர தமிழ் மக்களுக்கு எனது உளப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றுள்ளது.

தமிழர் துயர் நீங்கட்டும்

சரவணபவன் எம்.பி. வாழ்த்து



தமிழர்களின் துயரங்கள் நீங்கி, சுபீட்சமான வாழ்வு பெற்று வாழ தைத்திருநாளில் வேண்டுவோம். அனைவருக்கும் தித்திக்கும் தைப் பொங்கல் திருநாள் வாழ்த்துக்கள். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

தைப்பொங்கலை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழர்களின் பாரம்பரியத்தை எடுத்துக் காட்டும் நன்றி தெரிவிக்கும் திருநாளே தைப் பொங்கல் திருநாள். தமிழர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்க வேண்டும் என்று இந்த நாளில் இறைவனை வேண்டுவோம்.

அனைவரும் இன்புற்று மகிழ்ச்சியுடன் அனைத்து நலன்களும் பெற்று வாழ வேண்டும் என்று இறைவனை வேண்டுவோம். தித்திக்கும் தைப் பொங்கல் திருநாள் அனைவருக்கும் அமையட்டும் என்று வாழ்த்துகின்றேன் என்று அவர் தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டார். (ற)

தை பிறப்புடன் தமிழர் வாழ்வு விடிய வேண்டும்

வட மாகாண சபை அமைச்சர் அனந்தி சசிதரன் வாழ்த்து



தை பிறப்புடன் தமிழர் வாழ்வும் விடிய வேண்டும் என்ற உன்னத இலட்சியத்தை உலகத்தமிழர் உள்ளமெங்கும் விதைத்து தமிழ்ப் புத்தாண்டை வருக வருக என வரவேற்பதோடு அனைவருக்கும் தைப்பொங்கல் நல் வாழ்த்துக களையும் தெரிவித்துக் கொள்வதில் பேரு வகை கொள்கிறேன். இவ்வாறு வட மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்தார்.



சாவகச்சேரிப் பொதுச் சந்தையில் பொங்கல் வியாபாரம் களைகட்டியது நேற்று பெருமளவு மக்கள் பொருள்களை கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டினார்கள். (ற-ரி5)

ஒற்றுமையின் அடையாளமாக மாறட்டும் தைத் திருநாள்

கத்தோலிக்க கலை இலக்கியவட்டம் செயலாளர் செ.யோச்பாலா வாழ்த்து



இல்லங்களிலும் உள்ளங்களிலும் பொதுமையங்களிலும் இன்புற்று வாழும் இன்நாளில் தைமகளை வரவேற்று ஒற்றுமையின் அடையாளமாக பொங்கி பகிரும் நன்நாளில் யாவர்க்கும் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள். இவ்வாறு கத்தோலிக்க கலை இலக்கியவட்ட செயலாளர் செ.யோச்பாலா தெரிவித்தார்.

அவர் அனுப்பியுள்ள பொங்கல் வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அதில் உள்ளதாவது விவசாயிகளின் நன்றிப் பெருவிழாவான தைப்பொங்கல் தமிழ் விழாவாக மலரும் நன்நாளை கொண்டாடும் மனங்களில் ஆன்மிக, பண்பாட்டு பற்றுதி வலுப்பெற்று பகிர்ந்துண்ணும் விருந்தோம்பல் உளசமூக அன்பின் அடையாளமாக உறவுகளுக்கு நம்பிக்கைதரும் நன்நாளாக மலர்கிறது. நல் எண்ணங்கள் நல் எதிர்பார்ப்புக்கள் தூர நோக்கை அடையும் திடசங்கர்ப்பத்துடன் எல்லோர் மனங்களும் நட்புக்கள் நல்லுறவுகள் நல் எண்ணங்களால் இன்முகத்துடன் அன்பைப் பகிர்ந்து பொங்கல் நல் வாழ்த்துக்களை பகிர்ந்து கொள்வோம். என்றுள்ளது.

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜன.14

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் பாரம்பரிய விளையாட்டு விழாவும் பொங்கல் கலைவிழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிதொடக்கம் வாலிபத்திடலில் இடம்பெறவுள்ளன.

சங்க ஊடகத்துறை பொறுப்பாளர் நா.சுகந்தன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டுக்கான அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி கலந்துகொள்வார். சிறப்புவிருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீட மூத்த விரிவுரையாளர் கலாநிதி க.சிதம்பரநாதன், தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி நந்தகுமார், கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட விரிவுரையாளர் சட்டத்தரணி ந.காண்டீபன் ஆகியோரும், மதிப்புறு விருந்தினர்களாக இளவாலையூர் கவிஞர் இளவாலை இராசநாயகம், கண்டி போதனா மருத்துவமனை மருத்துவர் பிரசாத் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

காலை 8.30 மணியில் இருந்து காங்கேசன்துறை கடல்கரையில் பட்டமேற்றல் போட்டிகளும், மாலை பாரம்பரிய விளையாட்டுவிழா என்பனவும் இடம் பெறும். இதில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ய-4)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

தித்திக்கட்டும் பொங்கலுடன் சேர்ந்து தமிழர் தம் வாழ்வும்

தைத் திருநாள், தமிழர்களின் பெருநாள் இன்று. நன்றி மறவாமாந்தரின் மாண்புமிகுநாள். உழவர்திருநாள் என்று சொல்லப்பட்டாலும் சூரியன் இன்றி இந்தப் பூவுல கும் உயிர்களும் இல்லை. சூரிய வெப்பம் இன்றேல் பூமி வெறும்குளிர்உருண்டைமட்டுமே. வான்வெளியில்சுற்றிச் சுழலும் கழிவைப் போன்றது. எனவே சூரியனே மனித வாழ்வின்அடிநாதம்; அச்சாரம். அந்த உண்மையைப் புரிந் துகொண்டதால்தான்தமிழர்கள்தைப்பொங்கலைச்சூரியப் பெருவிழாவாக்கினார்கள். இன்றும் அதுவே தொடர்கின் றது.

சூரியனேஉலகத்தின்அடிப்படை இயக்க ஆற்றலாக இருக் கிறான். ஒரு பிண்டம் (உடம்பு) இயங்க வேண்டுமானால் வெப்ப ஆற்றல் தேவை. ஓர் அண்டம் (உலகம்) இயங்க வேண்டுமானாலும் சூரியனின் ஆற்றல் தேவை. சூரியன் இன்றி இவ்வுலகில் ஓர் அணுவும் அசையாது. எனவேதான் நமது பண்பாட்டில் சூரிய வழிபாட்டுக்கு மிக உன்னதமான இடத்தை வைத்திருக்கிறோம்.

அதற்கும் மேலே, நம்பிக்கைதான் வாழ்க்கை. அது அற்றுப் போகும்போது வாழ்வில் பிடிப்புத் தளர்ந்துபோகும். 365 நாள்களுக்கு ஒரு தடவை மீண்டும் மீண்டும் நம்பிக்கை யோடு வாழ்க்கையை முன்னகர்த்தும் உத்தியையும் இந்தத் தைத் திருநாள் கொண்டுள்ளது. ''தை பிறந்தால் வழி பிறக் கும்'' என்பது அந்த நம்பிக்கை.

நன்றி அறிவித்தல், நம்பிக்கையை விதைத்தல், பூமி இயக்க உண்மையைப் புரிந்துகொள்ளல், தமிழர் தம் பண்பாட்டுச் செழுமையைப் பறைசாற்றல் என்று தைத் திருநாள் பன்மு கங்களைக்கொண்டது. அதுதமிழர்களின்தேசியவிழாவாக, தமிழர்களின் அரசுகளால் சிலாகித்துக் கொண்டாடப்பட வேண்டியது. அத்தகைய நிலை ஒன்று விரைவில் வரட்டும் என்றும் அதைச் செய்யக்கூடிய வீரியம்மிக்க தலைவர் ஒரு வர் கிடைத்திடுவார் என்றும் இந்தத் தைத் திருநாளில் நம் பிக்கைகொள்வோம்.

பொங்கல் கொண்டாட்டம் என்பது 4 நாள்களைக் கொண் டிருந்தது. போகி, பொங்கல், மாட்டுப் பொங்கல், காணும் பொங்கல் என அது நிறைந்திருந்தது. பொங்கலன்று வரக் கூடிய சூரிய பூசையையும், அதன் மங்கலங்களையும் வர வேற்கும் முகமாக போகி (அதாவது பழையன கழிதல்) மார்கழி மாதக் கடைசி நாளன்று கொண்டாடப்படுகிறது. அதன்பின்னர்மூன்றுநாள்களுக்கும்தொடர்ச்சியானகொண் டாட்டங்கள் இருக்கும். அத்தகையதொரு பெருங்கொண் டாட்ட தமிழர் திருநாளாக, தனிப் பெரும் நாளாக தைத் திருநாள் மலர்வதற்கான காலம் கனியவேண்டும். அதை ஆதரிக்கும் தமிழர் ஆட்சிகளும் மலரவேண்டும்.

தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக ஓர் அரசியல் தீர்வு கிடைக்கவேண்டும். படையினரின் ஆக்கிரமிப்பில் இருக் கும் எஞ்சிய காணிகளும் விடுவிக்கப்படவேண்டும். வீதிக ளில் கிடந்து போராடும் மக்கள் தமது வீடுகளுக்குத் திரும்பி நிம்மதிப் பெருமூச்சுவிடவேண்டும், காணாமற்போனவர் களின் கதி அறியப்படவேண்டும். அத்தோடு அவர்களின் உறவுகளுக்கு உதவிகளும் இழப்பீடுகளும் கிடைத்திட வேண்டும். போர்க்குற்ற விசாரணை சுயாதீனமாக, நீதியாக நடந்திடவேண்டும். பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சிறைகளில் வாடும் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும். பாழாய்ப்போன அந்தச் சட்டமே இல்லாமல் செய்யப்படவேண்டும். வடக்கு வாழ் மக்களுக்கு பொரு ளாதார மேம்பாடு கிட்டவேண்டும்.

இப்படி எல்லாமும் நடந்திட பிறந்திடும் தைத் திங்கள் தந்து மகிழ்வையும் மங்கலத்தையும் பொழிந்திடும் என்கிற நம் பிக்கையுடன் ஒவ்வொருவர் வீட்டிலும் தித்திப்பான பொங்கலைப் பொங்கிப் படைத்து மகிழ்ந்திடுவோம்.

பொங்கல் விழாக்கள்

யாழ்ப்பாணம்.ஜன.14
இணுவில் அபிராமி சி.க.கூ சங்கமும் சனச சம்மேளனம் இணைந்து நடத்தும் பொங்கல் விழாவும், பட்டிமன்றமும், இன்னிசைக் கச்சேரியும் இணுவில் கந்தசுவாமி கோவிலடியில் இன்று ஞாயிற்றுக்கிழமை மதியம் ஒரு மணிக்கு இடம்பெறவுள்ளது.
சம்மேளன உபதலைவர் செ.இலகுநாதன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக இலங்கை சி.க.கூ.ச சம்மேளனத்தின் தலைவர் ஏ.கீரி வந்தெனியா கலந்து கொள்ளவுள்ளார்.
அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (எ-4)

யாழ்ப்பாணம்.ஜன.14
நாகேஸ்வரம் அளவெட்டி மேற்கு ஸ்ரீநாகவர தநாராயணர் கோவிலில் தைப்பொங்கல் விழா இன்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெறும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (160)

தென்மராட்சி ஜன.14
கச்சாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் மாணவர் நாடாளுமன்ற கலாசார சமய அலுவல்கள் மற்றும் விழுமிய மேம்பாட்டு அமைச்சின் ஏற்பாட்டில் பொங்கல் விழா பாடசாலை முற்றத்தில் நாளை 15ஆம் திகதி காலை 7.30 மணிக்கு இடம்பெறும்.
பாடசாலையின் அதிபர் கா.குணசிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் விருந்தினராக ஒய்வு நிலைப் பிரதி அதிபர் சி.நவபாலன் கலந்து கொள்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

யாழ்ப்பாணம், ஜன.14
கருகம்பனை இந்து இளைஞர் கழகத்தின் பொங்கல் விழாவும், இலவச கணினி வகுப்பு ஆரம்பமும் இன்றுகாலை கருகம்பனை தமிழ் மன்றம் சனசமூக நிலையத்தில் நடைபெறும் பொங்கல் விழாவைத் தொடர்ந்து மாணவர்களுக்கு கணினிப் பயிற்சி ஆரம்பமாகும். (ய)

யாழ்ப்பாணம், ஜன.14
கைதடி முதியோர் இல்ல தைத்திருநாள் பொங்கல் விழா இன்றுகாலை 8 மணிக்கு வளாகத்தில் உள்ள வைரவர் ஆலயத்தில் சிறப்பு பூஜை வழிபாடுகளுடன் நடைபெறும். அதனைத் தொடர்ந்து கலைநிகழ்வுகளும் இடம்பெறும். (ய-17)

யாழ்ப்பாணம், ஜன.14
யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பொங்கல் விழா நாளைகாலை 8.30 மணிக்கு சங்க வளாகத்தில் நடைபெறும். சங்கத்தின் தலைவர் என்.எஸ்.சத்தியதாசன் தலைமையில் நடைபெறும் விழாவில் சிறப்புச் சொற்பொழிவுகளும் இடம்பெறவுள்ளன. (ய-17)

சாவகச்சேரி.ஜன.14
மீசாலை ஸ்ரீவிநாயகர் சனசமூக நிலையமும் ஸ்ரீவிநாயகர் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் தைப்பொங்கல் விழாவும் கிராமிய விளையாட்டுநிகழ்வும் மீசாலை பாலையடி விநாயகர் ஆலய முன்றிலில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளன.
நிலையத் தலைவர் வி.புவிந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் கிராமிய பாரம்பரிய கலைநிகழ்வுகளும், பாரம்பரிய விளையாட்டுக்களான கிரிஸ்கம்பம் ஏறுதல், முட்டி உடைத்தல், தலையணைச் சண்டை, கயிறிழுத்தல் போன்றவற்றுடன் சிறுவர்களுக்கான விளையாட்டுக்களும் இடம்பெறும் என நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (9)

யாழ்ப்பாணம்.ஜன.14
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பொங்கல் விழா பாடசாலை வளாகத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். அதனைத்தொடர்ந்து முற்பகல் 11.30 மணிக்கு பாரம்பரிய கலை அம்சங்களைக் கொண்ட கலாசார நடைபவனியும் நடைபெறும் எனவும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார். (எ-4)

(முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...)

நாடுகடந்த...

களின் கடவுச்சீட்டுகள் சோதனையிடப்பட்ட போது, சுரேஸ்நாத் இரத்தினபாலனின் பெயர் கறுப்புப்பட்டியலில் இருப்பது கண்டறியப்பட்டது. அவரது குடும்பத்தினரை இலங்கைக்குச் செல்ல அனுமதி வழங்கப்பட்ட போது அவர்கள், அவருடனேயே இருக்க முடிவு செய்துள்ளனர்.
திருப்பி அனுப்பப்படுவதற்காக அவர்கள் வானூர்தி நிலைய இடைத்தங்கல் அறையில் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர் என்று வானூர்தி நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் என்று கூறப்பட்டுள்ளது.
அதேவேளை, இவர்களை நாடு கடத்தும் உத்தரவை இல்லாமல் செய்து, இலங்கைக்குள் நுழைவதற்கான அனுமதியைப் பெற்றுக் கொடுக்க பல்வேறு முயற்சிகள் முன்னெடுக் கப்படுகின்றன என்றும் கொழும்பு ஆங்கில ஊடகம் தெரிவித்துள்ளது. தடுத்து வைக்கப் பட்டுள்ள சுரேஸ்நாத் இரத்தினபாலன், நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் உறுப்பினர் என்றும், முன்னைய அரசால் கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்பட்ட புலம்பெயர் தமிழர் களில் ஒருவர் என்றும் கூறப்படுகிறது. (ற-5)

வடக்குக்...

பலர் தமது வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர். வடமாகாணத்தில் பொதுமக்களின் காணிகளில் படையினர் ஆடம்பர விடுதிகளையும் கட்டியுள்ளனர். பொது மக்களின் இந்த காணிகளை விடுவிக்க அரச தலைவர் தேவையான நடவடிக்கைகளை எடுத்து அதற்கான முனைப்புகளை மேற்கொள்ள வேண்டும்.
அப்போது இந்த காணிகளுக்குரிய மக்கள் தமது காணிகளில் அமைதியாக வாழ்க்கையை கொண்டு நடத்த முடியும். அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டு, இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ள காணிகளின் விவரத்தையும் அரச தலைவருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். (ற-5)

மார்ச்...

விக்கப்பட்டுள்ளது. தற்போது காணப்படும் மின்சார நெருக்கடியை போக்கும் வகையில், 100 மெகாவோட் மின்சாரத்தை விலைக்கு வாங்க இலங்கை மின்சார சபை நடவடிக்கை எடுத்துள்ளது. அத்துடன், மின்சார சபையில் தொழில்நுட்ப சங்கத்தில் பங்கேற்பதில் பொறியியலாளர்கள் சங்கம் புறக்கணிப்பை மேற்கொண்டுள்ளமை காரணமாக இந்த யோசனையை நடைமுறைப்படுத்துவதில் நெருக்கடி ஏற்பட்டுள்ளமையே இதற்கு காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-5)

குதூகல...

புதுப் பானை வாங்குதல் பொங்கலுக்குத் தேவையான பொருள்கள் வாங்குதல் என்று மக்கள் பெரும் ஆரவாரத்துடன் நேற்று முழு நாளும் ஈடுபாடு காட்டினர். பட்டாசு மற்றும் வாணங்களின் விற்பனையும் கொடிகட்டிப் பறந்தது. திருநெல்வேலி, மருதனார்மடம், சுன்னாகம் சந்தைகள் நேற்ற முழு நாளும் மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழிந்தன. புத்தாடைகள் வாங்குவதிலும் பலர் ஈடுபட்டிருந்தனர்.
கடந்த சில ஆண்டுகளை விட இந்த ஆண்டு தைப் பொங்கலை கொண்டாடுவதில் மக்கள் பெரும் ஆர்வமாக ஈடுபட்டிருந்தனர் என்று வடக்கு முழுவதும் உள்ள உதயன் செய்தியாளர்கள் அறிவித்தனர். சில இடங்களில் பொங்கல் கொள்வனவு நேற்றுமுன்தினமே களைகட்டத் தொடங்கியிருந்தது.
யாழ்ப்பாணத்தில் மிக முக்கியமான சந்தைகளான திருநெல்வேலி, மருதனார்மடம், சுன்னாகம் சந்தைகளில் மக்கள் கூட்டம் அலைமோதியது. பொங்கல் பானைகள் அதிலும் மண்பானைகளும் அதிகளவில் மக்களால் கொள்ளவனவு செய்யப்பட்டன. கரும்பு, இஞ்சி மஞ்சள் இலை, வாழைப்பழம் உள்ளிட்ட பழவகைகளையும் மக்கள் ஆர்வத்துடன் வாங்கினர். சந்தைகள் பெரும் பரபரப்பாக இருந்தன. நேற்றுக் காலையிலிருந்து மாலை வரையில் சனக் கூட்டத்துக்குக் குறைவில்லாமல் இருந்தது.
தென்பகுதி வியாபாரிகள் வாகனங்களில் புத்தாடைகளைக் கொண்டு வந்து விற்பனை செய்தனர். அவற்றைக் கொள்வனவு செய்வதிலும் மக்கள் கூட்டம் அலைமோதியது.
நேற்று முன்னிரவு ஆரம்பித்த பட்டாசுச் சத்தம் நள்ளிரவு தாண்டியும் தொடர்ந்தது. கிறிஸ்மஸ், ஆங்கிலப் புத்தாண்டு பண்டிகைகளைவிட, பட்டாசுச் சத்தங்கள் நேற்று அதிகமாக இருந்தன.
வீடு வளவுகளைத் துப்புரவாக்கி பொங்கல் இடத்தைத் தயார்ப்படுத்தும் பணிகளையும் நேற்று இரவே மக்கள் முழுமைப்படுத்தியிருந்தனர். பொங்கலிடும் இடத்திற்குத் தோரணம் கட்டுவதற்கான தென்னங் குருத்தோலைகளுடன் பலரும் வீதிகளில் நேற்றுப் பயணித்ததையும் காணமுடிந்தது. (உ-5)

பொங்கலுக்கும்...

கவனமாக இருந்தனர் உள்ளூராட்சி வேட்பாளர்கள் சிலர்.

தேர்தலுக்கு இன்னமும் 25 நாள்களே இருக்கின்றன. அதற்குள் தமது பரப்புரைகளை முடுக்கி விடவேண்டும் என்பதில் வேட்பாளர்கள் குறியாக இருக்கின்றனர். கட்சி பேதமின்றி சகல வேட்பாளர்களும், வாக்காளர்களைக் கவர்வதில் கவனம் செலுத்துகின்றனர். அதனால் அவர்களுக்குப் பொங்கல், கொண்டாட்டம் எதுவும் உறைப்பதாக இல்லை. கருமமே கண்ணாக இருக்கின்றனர்.

பொங்கல் ஓர் தமிழர் பண்பாட்டுப் பெருவிழா. அதனைக்கூட ஒழுங்காகச் செய்யாமல் தத்தமது வீடுகளில் அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதைவிட்டு பரப்புரையில் மூழ்கிப் போயிருக்கும் இவர்கள் எல்லாம் தமிழர்களின் பிரதிநிதிகளாக வந்து என்ன கிழித்துவிடப்போகிறார்கள் என்று, வேட்பாளர்கள் தமது வீடு தாண்டியதும் சிலர் பேசிக்கொண்டார்கள். (உ-5)

மங்களவை...

இணைந்து தற்போது நிதி மற்றும் ஊடக அமைச்சராகப் பதவி வகித்து வருகிறார். பிணைமுறி விவகாரம் மற்றும் சில அரசியல் விவகாரங்கள் குறித்து அவர் அதிருப்தியில் இருக்கிறார் என்று கூறப்படுகின்றது.

அவரை சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் கொண்டுவர முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. சுதந்திரக் கட்சியின் உயர்மட்ட தலைவர் ஒருவர் இதற்கான வியூகங்களை வகுத்துள்ளார் என்றும் அதன்படி சில மந்திராலோசனைகள் இடம்பெற்றுள்ளன என்றும் தெரியவருகின்றது. அவரை மீண்டும் கட்சிக்குள் கொண்டுவந்தால் கட்சியின் உயர்மட்ட பதவி ஒன்றை அவருக்கு வழங்குவது குறித்தும் ஆலோசிக்கப்படுகின்றது என்றும் அறியமுடிகின்றது. (ற-5)

காணாமல்...

கும் வகையில் இந்தக் கவனவீர்ப்பு ஏற்பாடு செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

நண்பகல் 12மணியளவில் வவுனியா கந்தசுவாமி ஆலயத்தில் ஆலய வழிபாட்டு நடத்தப்பட்டது. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சுமார் 40 பேர் வரையில் ஏ-9 வீதியில் வவுனியா தலைமைத் தபாலகத்தின் முன்பாகக் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களை வெளிப்படுத்தவும் விடுவிக்கவும் வலியுறுத்தி அவர்களின் உறவினர்கள் கிளிநாச்சி, வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய இடங்களில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். வவுனியாவில் நேற்று 324 ஆவது நாளாகப் போராட்டம் தொடர்ந்தது. (ற-402)

உள்ளக...

நாள் எனப் பெருமைப்படும் தைத்திருநாள் உவகையுடன் கொண்டாடப்படுகின்றது. இப்பூவுலகில் பருவ காலங்கள் மாறி மாறி வருகின்றன. அத்தகைய மாற்றங்களுக்கு சூரிய பகவானே காரணியாகின்றார். அந்த வகையில் மாறிவரும் மாரி காலத்தில் கிடைக்கின்ற மழைவீழ்ச்சியின் போது விதைக்கப்படுகின்ற பயிர் வகைகள் வளர்ந்து, முற்றி தைமாத ஆரம்பத்தில் அறுவடைக்குத் தயாராகின்றன. எமது பாவனைக்கான உணவுப் பொருள்களை உற்பத்தி செய்ய உதவிடும் சூரிய பகவானுக்கு நன்றி பாராட்டும் திருநாளாகவே தைப்பொங்கல் பெருநாள் கொண்டாடப்படுகின்றது.

தைமாதம் பிறக்கின்றது என்றாலே மக்கள் மனங்களில் பெரும் எதிர்பார்ப்புக்களும் துளிர்விடத் தொடங்கி விடுவதுண்டு. எமது மக்களது மனங்களில் நீண்டகால எதிர்பார்ப்பாக இருப்பது, தேசியப்பிரச்சினைக்கான தீர்வேயாகும். அந்த வகையில், நீண்டகாலமாகப் புரையோடிய புண்ணாகக் கருதப்படுகின்ற எமது தேசியப்பிரச்சினைக்கு, புதிய அரசமைப்பின் ஊடாகத் தீர்வைக் காண்பதற்கான முன்முயற்சிகள் கடந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு எமது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளக்கூடிய பல அம்சங்களை உள்ளடக்கியதான அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டில், தாமதமின்றி அதற்கான தொடர் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு மேலும் சிறந்த பரிந்துரைகளையும் உள்ளடக்கி, அனைத்து மக்களதும் இறையாண்மையை மதிக்கக் கூடியதாகவும், அவர்களின் உள்ளக சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கக்கூடியதாகவும், நீடித்து நிலைத்திருக்கக்கூடியதுமான சுயாட்சியுடன் கூடிய ஒரு நிரந்தரத் தீர்வைக் காண்பதன் மூலம் இதயசுத்தியுடனான புரிந்துணர்வையும் இன நல்லிணக்கத்தையும் ஒற்றுமையையும் ஏற்படுத்துவதற்கு வழியேற்பட வேண்டுமென இந் நன்நாளில் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சாந்தி, சமாதானத்துடன் கூடிய சௌபாக்கிய மிக்க நாடாக இந்நாடு சிறந்தோங்க, பிறக்கும் தைத்திங்கள் வழிகோலிட எல்லாம் வல்ல இறையருளை இறைஞ்சுவதுடன், எனது நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன் - என்று குறிப்பிட்டுள்ளார். (ற-5)

சீனாவின்...

சீனா வலிமையான நாடாக இருக்கலாம். ஆனால் இந்தியா பலவீனமான நாடு அல்ல. பாகிஸ்தான் எல்லையின் மீதுள்ள கவனத்தை இந்தியா சீனாவின் பக்கமும் திருப்ப வேண்டிய தேவை உள்ளது.

எமது அயல்நாடுகள் சீனாவை நோக்கி நகர்வதை அனுமதிக்கக் கூடாது. அயலவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கும் கொள்கையை இந்திய அரசு காத்திரமாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

சீனாவைக் கையாளுவதற்கான பரந்துபட்ட மூலோபாயத்தின் ஒரு பகுதியாக, நேபாளம், பூட்டான், மியான்மார், இலங்கை, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளை இந்தியா தன் பக்கம் தக்கவைத்துக் கொள்ள வேண்டும்.

இந்த நாடுகளுக்கு தொடர்ந்து ஆதரவளிப்பதற்கு இந்தியா முழுமையான முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று அவர் அதில் குறிப்பிட்டுள்ளார். (ற-5)

புலிகளின்...

இராமநாதன்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் அறிமுக நிகழ்வு யாழ். நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

நிகழ்வில், தமிழீழ விடுதலைப் புலிகளின் எழுச்சிப் பாடல் ஒலிக்க விடப்பட்டிருந்தது. இது தெற்கில் உடனடியாகவே அதிர்வலையை ஏற்படுத்தியது. இந்தச் சம்பவத்தின் மூலம் தமிழீழத்தை மைத்திரி ஆதரிக்கிறாரா என்று நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் மூத்த புதல்வருமான நாமல் ராஜபக்ச உடனடியாகவே கேள்வி எழுப்பியிருந்தார்.

இதையடுத்து தமது கட்சிக் கூட்டத்தில் புலிகளின் பாடலை ஒலிபரப்பியமைக்காக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனை அலைபேசியில் அழைத்துத் திட்டினார் என்று நேற்றுத் தகவல் வெளியானது. கொழும்பு அரசியல் பரப்பிலும் இந்த விடயம் சிலாகித்துப் பேசப்பட்டது.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனை 'உதயன்' வினவியது.

"நானும் சமூகவலைத் தளத்தில் இந்தத் தகவலைப் பார்த்தேன். அதில் எந்த உண்மையும் இல்லை. அப்படி ஒரு சம்பவம் நடக்கவேயில்லை. செய்தியைப் பார்த்துச் சிரித்தேன்.

என்னைப் பொறுத்தவரை எமது நிகழ்வில் நாம் ஒலிபரப்பிய பாடல், தமிழர் எழுச்சிக்கான பாட்டு. இதை எந்தவித உள்நோக்கத்துடனும் பார்க்கத் தேவையில்லை. நாங்கள், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கோ, அரசுக்கோ ஆதரவு தருவதற்காக தமிழர் உணர்வுகளைவிட்டு, உணர்ச்சிகளை விட்டுப் போகவேண்டும் என்ற தேவையில்லை. அதே உணர்வு உணர்ச்சி எப்போதுமே இருக்கும். தமிழ்த் தலைமைகள் எங்களை ஏமாற்றிக் கொண்டிருக்கும்போது நாங்கள் நித்திரையாக இருக்கக்கூடாது என்பதற்கான பாட்டுத்தான் அது" என்றார்.

நாமலின் கேள்விக்குத் தான் உரிய தருணத்தில் உரிய பதில் அளிப்பார் என்றும் அவர் தெரிவித்தார். (உ-5)

அழகாக தோன்ற வேண்டுமா ?

கேர்வல் கிரீம்: கருமைநிறம், பருக்கள், கண்கருவளையம், உதட்டுக்கருமை, கை, கால், முதுகு, கருமை அனைத்திற்குமானது (கிரீம், சோப், குளிசை)

ஆயுள் வேத தலைமுடி வளரச்செய்யும் எண்ணெய் : தலைமுடியுதிர்வு நீங்க, நீளமாக முடிவளர, முடி புதிதாக முளைக்க, இளநரை நீங்க, பேன், பொடுகு, தலையிடி நீங்க அற்புதமான பாரம்பரிய முறையில் காய்ச்சிய எண்ணெய்

உடல் எடை குறைக்க: உடல் எடை குறைய, வயிறு மார்பு குறைக்க, ஊளச்சதை, மலச்சிக்கல் நீங்க (குளிசை, பால்மா, கிரீம் டொனிக்)

உடல் எடை கூட: உடல் எடை கூட, ஒட்டிய கன்னம் குண்டுக்கன்னங்களாக மாற, கணச்சூடு, பலவீனம் நீக்க (குளிசை, லேகியம்)

பேசியல்: முகக்கருமை நீங்க, முக மினுமினுப்பு பெற ஒரே தடவையில் அற்புதமாற்றம் பெற (ஆயுள் வேத மூலப்பொருள்கள் கொண்டுசெய்யப்படும்)

பதிவு இல. 16168
077 314 9386
221, நாவலர் றோட் யாழ்.

மரண அறிவித்தல்

பிறப்பு 17 . 10 . 1948 — இறப்பு 12 . 01 . 2018



கந்தர்கந்தையா வன்னியசிங்கம்

(சாரதி)

இராசவீதி, தோப்பு, அச்சுவேலியைச் சேர்ந்த கந்தர்கந்தையா வன்னியசிங்கம் (சாரதி) 12.01.2018 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் துளசிமணிதேவியின் (மாதவர் சங்கத் தலைவி) அன்புக் கணவரும் கந்தையா லச்சுமிப்பிள்ளை, கந்தையா கனகரத்தினம், பஞ்சலிங்கம் பத்மாவதி, கணேசலிங்கம் சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் வசந்தகுமார், வசந்தராஜன் (சாரதி), மதிவானன் வசந்தலதா (ஜேர்மன்), வசந்தரூபன் (சாரதி), ராஜஸ்ரீலன், வசந்தகுமாரி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் தனுஷ், மாதுரி, மதுரா, ஜனனி, தனுரியா, அஜித்குமார், தர்மிஷன், டக்ஷியன், யந்சா, நிலோஜன், தருண் ஆகியோரின் பேரனும் குமாரு மதிவாணன், ராஜஸ்ரீலன் வசந்தகுமாரி, வசந்தகுமார் தேவிகா, வசந்தராஜன் சர்மிளா, வசந்தரூபன் யசோதகுமாரி ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (15.01.2018) திங்கட்கிழமை அடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இராசவீதி, தோப்பு, அச்சுவேலி. (CS/128)(15.) குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்



பிறப்பு 29.09.1940 — இறப்பு 12.01.2018

அல்வாயையைப் பிறப்பிடமாகவும், ஈஸ்வரி இல்லம் சூரா வத்தை சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தாமு பேரின்ப நாதன் (13.01.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான தாமு - பொன்னம்மா தம்பதியரின் கனிஷ்டபுத்திரனும் காலஞ்சென்றவர்களான இராச சிங்கம் - பிள்ளையம்மா தம்பதியரின் அன்புமருமகனும் லோகேஸ்வரியின் அன்புக் கணவரும் வீரசிங்கம் (ஓய்வு நிலை அதிபர்), தவநாயகி காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், சிந்தாமணி, தங்கம்மா, அம்பிகாவதி ஆகியோரின் அன்புச்சகோதரரும் செல்லத்தம்பி காலஞ்சென்றவர்களான தெய்வநாயகி, அப்பையா, கதிரவேலு, இராசேந்திரம், கணேசு ஆகியோரின் அன்பு மைத்துனரும் சிவலோஜினி, பத்மலோஜினி (உத்தியோகத்தர் - யா / சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத்தந்தையும் புலேந்திரகுமார் (ஆசிரியர், யா/ வயாவிளான் மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புமாமனாரும் பிரிதிபன், டர்சிகன் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.01.2018) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தே. புலேந்திரகுமார் (மருமகன்)
(077 615 8800)

தகவல்:
குடும்பத்தினர்

(CS/12898)(11,17)

சீனிவாசகம் செந்தூர்ராசா

(சித்தன்கேணி, கலைநகர் சின்பசிகாமணி, கலாபூசணம் கலைநகர் காங்கேயம்பதி முத்துமாரி அம்பாள் ஆலய அறங்காவலர்)



பிறப்பு 29.09.1940 — இறப்பு 12.01.2018

சித்தன்கேணி, கலைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட சீனிவாசகம் செந்தூர்ராஜா 12.01.2018 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்க ளான சீனிவாசகம் - தையல்முத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இர்ராசரத்தினம் - சரஸ் வதி தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற மங்களேஸ் வரியின் அன்புக் கணவரும் குமுதவல்லி, வசந்தவல்லி, விஜியவல்லி (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையும் பத்மசிவம், இன்பவதனன் (சிற்பச்சக்கரவர்த்தி), சதானந்தராஜா (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமனும் நேசமலர், சிறீராஜமூர்த்தி (ஓய்வுதியர்), வதனராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் அருளானந்தசிவம், சிற்பஞ்[illegible]ண்டிதன், சிவஞானமணி, காலஞ்சென்றவர்களான பகரசிங்கம், அருமைநாயகம் மற்றும் குகானந்தராசா, பரமேஸ்வரி (பிரான்ஸ்), புனிதபுஸ்பம், முத்துச்சிவராசா (பிரான்ஸ்), மகமாரியம்மா, பவளம்மா, காலஞ்சென்றசச்சிதானந்தன் மற்றும் சிவஞானபோதலிங்கம், கலைச்செல்வி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் கேந்தி ரேசன் (ஆய்வுகூட உத்தியோகத்தர், யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி), திலகரேசன் (பிரான்ஸ்), வினிஜா, போசன், காலஞ்சென்ற சஞ்சீவன் மற்றும் நிலக் ஷனா (அமெரிக்கா), சயந்தா (அமெரிக்கா), கேசினி (அமெரிக்கா), லக்சியா (அமெரிக்கா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.01.2018) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொற்கைத்துறை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலைநகர், சித்தன்கேணி.
077 979 0821, 077 904 3660,
021 225 0896

தகவல்:
குடும்பத்தினர்.

(15)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 21.03.1933

மறைவு 25.01.2017

திருமதி பாக்கியம் அருமைநாயகம்

திதி : திரயோதசி (14.01.2018)

அம்மாவே தெய்வம் உலகினிலே.

அவர் இல்லாமல் இவ்வுலகில் ஒன்றுமே இல்லை.

என்றும் அம்மாவின் நினைவுகளுடன்.....

மானிப்பாய் வீதி,
ஓட்டுமடம் ,யாழ்ப்பாணம்.

பிள்ளைகளி

(CS/12906)(16.17)

4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 18.06.1957

உதிர்வு 28.12.2013

அமரர் முதலி மார்க்கண்டு

திதி - அபரபக்கஏகாதசி(12.01.2018 வெள்ளி)

நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்

விடத்தற்பளை வீதி.
உசன் மிருசுவில்.

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(IN5577)(16)

FS Printers

அனைத்தும்
தனித்துவமான
கணினி வழவமைப்புடன்



021 492 7471,
021 492 7472

esprintersjaffna@gmail.com

357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

நன்றி செலுத்தும் ஆராதனை



கடந்த 15.12.2017 ஆம் திகதி

திருமதி கிரேஸ் பிரேமலதா செந்திநாதன்

அவர்களின் அடக்க ஆராதனையில் கலந்து கொண்டு எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மலர் வளையங்கள் அனுப்பியவர்களுக்கும் எம்மை ஜெபத்தில் தாங்கிய வர்களுக்கும் அடக்க ஆராதனையில் நமக்கு உதவிய அனைவருக்கும் நமது நன்றியைத் தெரிவித்துக்கொள் கின்றோம்.

இன்று (14.01.2018) ஞாயிற்றுக்கிழமை மாலை 7.00 மணிக்கு நன்றி செலுத்தும் ஆராதனை கல்கிஸ்சையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

குடும்பத்தினர்.

(J 9066/15/17)

13 ஆம் ஆண்டு நினைவும் 32 ஆவது பிறந்த தினமும்

அமரர்
ஜெயக்குமாரன்
தனுசன்



(யா/கோண்டாவில் இராமகிருஸ்ண மிஷன் வித்தியாலய பழைய மாணவன்)

ஆண்டுகள் பதின்மூன்று
ஒடி மறைந்தாலும் உன் நினைவு
எம் நெஞ்சை விட்டகலாது
கண்ணிமைப் பொழுதெல்லாம்
கண்ணெதிரே நிறைந்தவனே
கதிகலங்க வைத்துவிட
காலம் துணிந்தானே
நிலையற்ற இவ்வுலகில் எமக்கு நீ
நிலையான ஒரு செல்வமடா
தந்தையைப் பாராயோ? பெற்ற அன்னை
உதிரத்தின் துடிப்பினைப் பாராயோ
உடன் பிறப்புக்களின் உருக்குலைவைப்
பராயோ
உன் அன்புக்கு எவையும் ஈடாகுமோ?

மலர்வு 04.05.1986

உதிர்வு 15.01.2005

குடும்பத்தினர்.

பழனி ஆண்டவர் கோயிலடி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

(CS/12902)(11.17)

அனைவருக்கும் இனிய பொங்கல் வாழ்த்துக்கள்.

அருந்துங்கள் விருந்து

சைவம் - அசைவம்

அறுசுவை யாழ் பாரம்பரிய ஆகாரம்

அருந்தும் வசதி - பார்சல் சேவை -
வெளியிட வைபவ சேவை -தங்கும் இட வசதி, இலவச மண்டப வசதி

தினமும் 11 மணி முதல் அறுசுவைகளை ஓடியல் கூழ் பரிமாறப்படும்



வெள்ளி
ஸ்பெஷல் மரக்கறி மற்றும் இனிப்பு பனங்கட்டி
ஓடியல் பரிமாறப்படும்.

எமது உணவகம் விஸ்தரிக்கப் படவுள்ளதால் தொழில்சார் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.



மேலும் பல விஷேட யாழ் உணவுகள்

விருந்து @ யாழ் பாடி

49-51, அம்மன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

+9475 987 5800,
+9421 222 6868.

கொழும்பில் தங்குமிட வசதிகள்

COLOMBO HUT

9/3, 16வது ஒழுங்கை, கொழும்பு-03

+94 112 574688, +94 115 055055, +94 756 530348

tysunda@gmail.com

விளம்பர தொடர்புகளுக்கு

advt@uthayan.com,

021 493 1111

மரண அறிவித்தல்

சின்னதுரை சற்குணம்

(உரிமையாளர் கொழும்பு ஸ்ரோர்ஸ். சுன்னாகம்)



பிறப்பு 05.02.1949

இறப்பு 10.01.2018

யாழ். கந்தரோடையைப் பிறப் பிடமாகவும், அப்பிளானை, கோப் பாய் மத்தி, கோப்பாயை வசிப்பிட மாகவும் கொண்ட சின்னதுரை சற்குணம் 10.01.2018 புதன் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்க ளான சின்னதுரை - பார்வதிதம்பதி களின் கனிஷ்ட புத்திரரும், காலஞ் சென்றவர்களான முத்தையா - அன்னமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும், சுசீலாதேவியின் அன்புக் கணவரும், முகுந்தன் (நிஷான் - La Chapelle, பிரான்ஸ்), கிருஷ்ணவேணி (பிரான்ஸ்), சைலஜா (கொழும்பு), நிசந்தன் (பிரான்ஸ்), தர்சிகா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற தனபாலசிங்கம் மற்றும் அமிர்தலிங்கம், மகாதேவன் (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கருணாமூர்த்தி (பிரான்ஸ்), சுகந்தன் (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாம னாரும், அனுசன், மதுசன், அக்ஷயா (பிரான்ஸ்), ஆதிஷன், அக்ஷரன், இசான் (கொழும்பு) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.01.2018) திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவி னர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

முகுந்தன் (பிரான்ஸ்)- +33 678 292528,
நிசந்தன் (பிரான்ஸ்) - +33 668 682 306,
கருணா, வேணி (பிரான்ஸ்)- +33 626 756 223, +33 148 960 311,
சுகந்தன் (இலங்கை)- +94 773 577 234

(CS/12898)(16.17)

FS Printers

357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com

விளம்பர தொடர்புகளுக்கு
021 493 1111
advt@uthayan.com,

உதயன்

மரண அறிவித்தல்கள்

வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்



கோப்பாய் மத்தி கணபதியப்புலத்தை பிறப்பிடமாகவும் இல .106 A.V றோட் . அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் நேற்று (13.01.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் வேலுப்பிள்ளை தெய்வானை தம்பதிகளின் அன்பு மகனும் செல்லையா இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் செல்வநாயகியின் அன்புக் கணவரும் சிவதர்சன், தர்சனா, சந்திரிக்கா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் செல்லத்துரை காலஞ்சென்ற அப்புத்துரை மற்றும் கந்தசாமி, சரஸ்வதி காலஞ்சென்ற லட்சுமி மற்றும் பாக்கியம், மகேஸ்வரி, தம்பிராசா, கலாராணி, விஜயராணி மற்றும் காலஞ்சென்ற சிவபாதம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராஜேஸ்வரி, யோகேந்திரராணி,சரஸ்வதி, சாந்தி, யோகரத்தினம் காலஞ்சென்ற கனகலிங்கம் மற்றும் கனகரத்தினம் , சக்திவடிவேல்,அம்பிகா,சேதுலிங்கம், சிவானந்தராஜா காலஞ்சென்ற இராசம்மா, செல்லம்மா, செல்வசோதி மற்றும் செல்வபூபதி, செல்வரத்தினம், செல்வராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.01.2018) ஞாயிற்றுக்கிழமை இல .106,A.V வீதி,அரியாலையில் உள்ள அவரது இல்லத்தில் பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப 4.00 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
குடும்பத்தினர்.

106, A.V றோட்,
அரியாலை.

உத்தியோகபூர்வ முடிவுகள்
சம்பூர்ண வாசனாவ
Development Fortune
சீட்டிழுப்பு வாரம் 109
சீட்டிழுப்பு 13.01.2018 சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 14 18 31 38
சுப்பர் இலக்கம் 06
அதிஷ்ட மாதம் நவம்பர்
அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் ரூ. 82,55,040/=
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 31,97,738/=
அடுத்த ஜக்பொட் ரூ. 10,71,784/=
2018.01.18 ஆம் திகதி வியாழக்கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கண்டித் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு: 0114 824 824 www.dlb.lk

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 136
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2018.01.13
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 55,753,940/-
வெற்றி இலக்கங்கள் 38 51 61 75 A
தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>AKஎன டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
அவசர துரித அழைப்பு: - 0114 824 824, 0112 333 778

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
ஜனித வாசனாவ
வெற்றி வாரம் 2981 திகதி 13.01.2018
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து 19 31 57 59 M
போனஸ் இல. 01
திங்கட் கிழமை ஜக்பொட் 40, 195,055/=
தொ.பே : 011 4824824
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
நீல நிற டிக்கட்டுக்கள் 2018.01.15 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

SUPER BALL B
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 754
சீட்டிழுப்பு திகதி 13.01.2018 சனிக்கிழமை
I 02 30 46 47
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,068, 988/-
தொ.பே : 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
ஊதா நிற டிக்கட்டுகள் 2018.01.15 ஆம் திகதி திங்கட் கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

மரண அறிவித்தல்



பிறப்பு
10
.
02
1936

இறப்பு
13
.
01
2018

தியாகராசா மரியமலர்

தியாகராசா மரியமலர் நேற்று (13.01.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் தியாகராசாவின் அன்பு மனைவியும் சோபிகா, அஸ்வினி (வவுனியா), காந்திராஜ் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ் சென்ற ஜோசேப் பாக்கியநாதர், பாக்கியநாதர் திரேசம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான கிறிஸ்ரி யோசெப், மேரியோசெப், அன்ரனி, கென்றி யோசெப், இமானுவேல், பிலிப்யோசெப் தோமஸ், மேரிபுருனோ, றஞ்சினிமற்றும்ஜேம்ஸ்(கனடா), ஜெசிந்தாராகினி (இந்தியா), மரிஸ்ரெலா(யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் தவமலர், சிவராசா ஆகியோரின் மைத்துனரும் அன்ரன் ஜங்கரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், நெடுங்கேணி, ஷோபிகா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் நலிவர்வசோன், கெவின், ஷவியோன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கரப்பன்காட்டில் உள்ள அவரது இல்லத்திலிருந்து நாளை (15.01.2018) திங்கட்கிழமை 10 மணிக்கு வவுனியா புனித அந்தோனியார் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நம்பைக்குளம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 656 7813

(C5518/15)

British BUSINESS COLLEGE
Where Students Come First

BBC பாலர் பாடசாலையின்
20ம் வருடத்தில் சிறந்த கல்விச்சேவையுடன்
2018ம் ஆண்டிற்கான அனுமதிகள்

BBC Early Learning Schools

சர்வதேச தரத்திலான Canada கல்லூரியின் ஆசிரிய
பயிற்றுவிப்பாளர்களினால்பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்கள்

CELEBRATING 20 YEAR IN EDUCATION 1998 2018

NO ADMISSION FEES
NO MONTHLY FEES

❖ சர்வதேச அங்கீகாரம் பெற்ற நவீன கல்வித்திட்டம் ❖ ஆங்கிலமொழி மூல கற்கை வகுப்புக்கள்
❖ தமிழ் கட்டாய பாடம் ❖ மாதந்தோறும் செயற்பாட்டு திறனையும் அறிவையும் வெளிக்கொணரும் விசேட சமூகம் சார் நிகழ்வுகள் ❖ விளையாட்டுடன் கூடிய கற்கைநெறிகள்

❖ 2 முதல் 5 வயது குழந்தைகளுக்கான கற்கைநெறிகள்

பிரிவு	Play Group	Montessori	Pre School
வயது	2+ முதல் 3 வரை	3+ முதல் 4 வரை	4+ முதல் 5 வரை
காலம்	1 வருடம்	1 வருடம்	1 வருடம்

❖ வருடத்தின் எந்த மாதத்திலும் குழந்தைகளை சேர்க்கமுடியும்
❖ கற்கை முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

வளாகங்கள்
நல்லூர் | யாழ்ப்பாணம் | மானிப்பாய் 1 | மானிப்பாய் 2 | சங்கானை | அளவெட்டி | மல்லாகம் | கோப்பாய் | புத்தூர் | பருத்தித்துறை | சாவகச்சேரி

தலைமையகம் : British Business College
இல.653, நாவலர் வீதி நல்லூர், யாழ்ப்பாணம். தொ.இல : 077 408 3656 / 077 468 2951



யாழ். மக்களுக்காக
மாபெரும்
பண்டிகை சலுகை
HONDA
யாழ்ப்பாண தொழில்நுட்பம்
அனைத்து வகையான பழைய மோட்டார் சைக்கிள்களுக்கும்
புதிய ஹொனண்டா மோட்டார் சைக்கிள்
ரூபா 20 000 /= வரை விலைக்கழிவுடன் லீசிங்
(நிபந்தனைக்கு உட்பட்டது)
இலவசம்
பதிவுக்கட்டணம், காப்புறுதி, SLS தலைக்கவசம்
ஜனவரி 15, 16 ஆம் திகதிகளில்
நல்லூர் கோவில் பின்புறம் றியோவிற்கு அருகில்.
ஹொண்டா வேர்ல்ட் 077 038 7111, 077 038 7444, 076 359 4350

பொங்கட்டும் பொங்கட்டும்
இல்லங்கள் மகிழ்வில் பொங்கட்டும்
தங்கட்டும், தங்கட்டும்
தரணி செய்யும் அமைதி தங்கட்டும்

வெல்லட்டும் வெல்லட்டும்
மனிதாபிமானமே பூமியில் வெல்லட்டும்
சொல்லட்டும் சொல்லட்டும்
உண்மைகளை உரத்து உலகுக்கு சொல்லட்டும்

உண்ணட்டும், உண்ணட்டும்
உழைத்துண்டு வாழ்வோரே உண்ணட்டும்
செய்யட்டும், செய்யட்டும்
சேவை மனம் கொண்டோரை தெரிவு செய்யட்டும்

கழையட்டும், கழையட்டும்
கயவர்கள் கெடுபிடிகள் கழையட்டும்
காக்கட்டும், காக்கட்டும்
பண்பாட்டு விழுமியங்கள் காக்கட்டும்

செல்லட்டும் செல்லட்டும்
பொதுப்புள்ளோர் பொதுப்பேர்க செல்லட்டும்
பகிரட்டும், பகிரட்டும்
பகிர்தோர் வாழ்வு மலர பகிரட்டும்

மலரட்டும், மலரட்டும்
மழலைகள் நிர்காலம் மகிழ்விலே மலரட்டும்
வாழ்த்தட்டும், வாழ்த்தட்டும்
உடலுள ஆன்மீகம் தழைத்தோங்க வாழ்த்தட்டும்.

பொங்கிப் பொலியட்டும்





செ.யோசப்பாலா

வெஸ்ரன்
ஜுவல்லர்ஸ்
தரம் நம்பிக்கை கைராசி
மற்றும் தரம் குன்றா
சிங்கப்பூர் தரத்திலான
நகைகளை உத்தரவாதத்துடன்
பெற்றுக் கொள்ள இன்றே
நாடுங்கள்....
Western
Jewellerss
அனைவருக்கும்
இனிய தைத்திருநாள்
வாழ்த்துக்கள்.
இல.81, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 6916



பட்டத்திருவிழா -2018

இலங்கையில் உன்னதமான ஒரு சிறந்த பொழுதுபோக்கு விளை யாட்டுப்போட்டி போன்ற நிகழ்வு யாழ்ப்பாணத்தில் வல்வெட்டித்துறை யின் கடற்கரையில் இடம் பெறும் விநோத பட்டத்திருவிழா ஆகும். இலங்கையில் உள்ள அனைத்து கலைத்திறமை வாய்ந்த பட்ட வல்லு-னர்களால் விதம் விதமான விநோத பட்டங்கள் ஏற்றி தைப்பொங்கல் தினத்தில் மக்களின் மனதை மகிழ்விக்கின்ற நிகழ்வாகும். இப்போ ட்டியானது தைப்பொங்கல் தினமான 14 ஆம் திகதி வருடா வருடம் வல்வெட்டித்துறையின் உதயசூரியன் உல்லாசக் கடற்கரையில் மிகவும் கோலாகலமாக ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட பார்வையா-ளர்கள் பார்த்து மகிழும் மாபெ ரும் பட்டத் திருவிழா இடம் பெறுவதாகும். இப்போட்டியினை இலங்கையிலிருந்து எப்பாகத்தில் இருப்பவர்களும் கலந்து கொள்ள முடியும் என்பதுடன் கலைத் திறமையும் அவற்றின் ஆக்கம், தொழில்நுட்பம், அழகு என்பவை யினை கருத்தில் கொண்டே பட்டங்கள் பரிசீலினை செய்யப்பட்டு உயரப்பறத்தல், தாழப்பறத்தல் என்பவை யினை கொண்டே பரிசில் கள் வழங்கப்படுகின் றன.

பட்டம் கட்டி ஏற்றுபவர்களை கேலி செய்யும் இந்தச் சமூகத்தில் அவ்வாறான திறமைசாலிகளுக்கு தனியான களம் ஒன்று அமைத்து அவர்களின் திறமைகளை வெளியுலகிற்கு கொண்டு வந்து அவர்களும் ஒரு பட்டக்கலைஞர் என்று இந்தப் பட்டப் போட்டி நிரூபித்துள்ளது.

மேலும் எவ்வித வருமான நோக்கமுமின்றி இந்தப் பட்டப்போட்டியை வருடாவருடம் மிகவும் சிறப்புற நடாத்தும் வல்லை விக்னேஸ்வரா சனசமூக சேவா நிலையத்தின் செயற்பாடு மிகவும் வரவேற்கத்தக்கது.

இப்போட்டியானது 2011 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பட்டத்திருவிழா ஆனது இன்று தைப்பொங்கல் தினமும் மிகவும் கோலாகலமாக நடை பெறுவதினை இட்டு மிகவும் பெருமையடைகின்றோம். இப்பட்டத்திரு விழாவினை கண்டுகளிக்க அனைவரையும் அரவணைக்கின்றோம்.

விளம்பர அனுசரணை

புத்தம் புதிய டிசைன்களில் சிறுவர், சிறுமியர்களுக்கான ஆடைகள், அழகுசாதனப் பொருள்கள் மற்றும் பலசரக்குப் பொருள்கள் வாங்கி மகிழ்ந்திடநாடவேண்டிய இடம்
ஆர்.வி.ஜி மெடிக்கல்ஸ்
ARVEGIE MEDICALS

021 222 2129
இல.504, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

V.V.RAMASAMY PILLAI & SONS
RVG Company
இல.58, நல்லூர் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
021 222 6806/
021 222 4766

ARVEGIE (PVT)Ltd
Importers, Exporters & Dealers in
Kendu Leaves
No.169, Wolfendhal Street,
Colombo - 13.
Tel: 2436380, 2330491
Fax : 2438659, 2437719
Email: arvegiecolombo@hotmail.com
Web : www.arvegie.com

APALLO ENTERPRISES
173 1/1, Wolfendhal Street.
Colombo - 13
RVG Beedi Merchant
011 233 5340

VANATHY PRINTERS (PVT) LIMITED
Quality offset Printers, Tag Makers, Box cutters Plate Processors & Stationers
No - 171, Sri Kathiresan's treet,
Colombo - 13
254 2430/ 254 2431

Gowry Printers
Qulity Offset printers for Greeting cards, Cartoons, Brochures and Books.
207, Sri Ratnajothi Saravanamuthu Mawatha (Wolfendhal Street)
Colombo - 13.
011 243 2477/ 011 242 3433
Fax: 011 242 3433

ASR
A/C & Non A/C Hall
Wedding Halls


ஒரே நேரத்தில் 750 பேர் இருக்கக் கூடிய குசன் கதிரை வசதி.
ஒரே நேரத்தில் 200 பேர் உணவருந்தும் வசதி
Lift வசதி. விசாலமான வாகனத்தரிப்பிட வசதி
ஒரே நேரத்தில் அனைவரும் நிகழ்வுகளை பார்க்கக்கூடியவாறு தொலைக்காட்சி வசதி குளிரூட்டப்பட்ட மணப்பெண் அலங்கார அறை
உணவுகளை தாங்களே பரிமாற்றிக் கொள்ளும் வசதி மற்றும் தங்களின் விருப்பத்திற்கேற்ப உணவு வகைகளை தெரிவு செய்யும் வசதி
திருமணங்கள், பதிவுத்திருமணங்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள் மற்றும் ஏனைய நிகழ்வுகளை உங்கள் எண்ணம் போல் சிறந்த முறையில் அனைத்து வசதிகளுடன் சிறப்பாக நடத்திட முடியும்.
15.02.2018 - 15.03.2018 வரை நடத்தப்படும் கிறிஸ்தவ திருமணங்கள், பூப்புனித நீராட்டு விழாக்களுக்கு 15% விலைக்கழிவினை வழங்குகின்றோம்.
அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர் கலாசார திருமண மண்டபம்.
இல.542, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 373 4116, 021 222 1355
Annamalaiyan Sri Ragaventhirar Enterprises (Pvt) Ltd
E-mail : asrhall@hotmail.com
Find us on : Facebook.com/jaffnaasrenterprises

யாழ்நகரில்
ASR Hotel
மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள
சர்வதேச தரத்துடனான
நட்சத்திர தங்குமிட விடுதி


அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இனிய தைப்பொங்கல் திருநாள் வாழ்த்துக்கள்

அண்ணா தொழிலகம்

அண்ணா நிறுவனத்தின்
புதியதோர் உற்பத்தி

அண்ணா நூடில்ஸ்

உடனடித் தயாரிப்பு உண்ணச்
சுவையான உணவு அண்ணா உற்பத்தி
விற்பனை நிலையங்கள் எல்லா இடமும்
பெற்றுக்கொள்ளலாம்.







அண்ணா மல்லிக் கோப்பி

உலகத் தரம் வாய்ந்த பொதிகளில் உங்கள்
வசதிக்கேற்ப எமது விற்பனை முகவர்களிடம் இருந்து
பெற்றுக்கொள்ளலாம்.

ANNA INTERNATIONAL (PVT) LTD.
214 /5,Messenger Street, Colombo - 12.
+ 941 124 36063

துரை வீதி, இணுவில். 021 224 1565

(13.17)

அனைத்து வாடிக்கையாளர்களுக்கும்
இனிய தைப்பொங்கல் திருநாள் வாழ்த்துக்கள்

எங்கள் குடும்பத்தின் ஆரோக்கியத்துக்கும்,
மகிழ்ச்சிக்கும் காரணம்

V.S.P நல்லெண்ணெய்

தாயின் அன்பைப் போன்று
நம்பிக்கையானது
VSP நல்லெண்ணெய்



Prepared under
Hygienic method Specially For
physicians and domestic purposes
750ml
IMPROVED FORMULA PURITY GUARANTEED

V.S.P
SPECIAL LUNCH OIL

போலிகளை கண்டு ஏமாறாமல்
V.S.P நல்லெண்ணெய் வாங்கும்போது
தயாரிப்பாளரும் ஏக விநியோகஸ்தரும்
பரிமளா ஸ்ரோர்ஸ்
26/A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரியை பார்த்து வாங்கவும்

தயாரிப்பாளரும் ஏக விநியோகஸ்தரும்:
பரிமளா ஸ்ரோர்ஸ்
இல. 26A, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 4135/ 9165
முகாமையாளர்: பொ.பாஸ்கரன்

Special
V.S.P.
Gingelly Oil

சுகாதார முறையில் உணவுக்கும்
வைத்தியத்துக்கும்
விசேடமாக தயாரிக்கப்பட்டது
வி.எஸ்.பி. நல்லெண்ணெய்

(13.17)

அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இனிய
பொங்கல் வாழ்த்துக்கள்

நியூட்டன் எலக்ரிக்கல்

NEWTONE ELECTRICAL



வீட்டு வயரிங் செய்வதற்குத்
தேவையான மின்சார பொருள்கள்,
பைப்புக்கள்,மோட்டார் என்பன
சில்லறையாகவும் மொத்தமாகவும்
பெற்றுக் கொள்ளலாம்.



169, Sir Pon Ramanathan Rd,
Thirunelveli South, Jaffna.

Phone : 021 222 2037,
Cell : 077 061 0280.

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

Vayuputhra Phone Shop

வாயுபுத்ரா போன் சொப்



அனைத்து
விதமான போன்
விற்பனை மற்றும்
பழுதுபார்த்தல்

T.P: 077 36 44 246 / 077 8595 151
No.364, Hospital Road, Jaffna.

வாயுபுத்ரா புக்கிங் சென்றர்

அதிசொகுசு பயணிகள் போக்குவரத்துச் சேவை

ஆசனப் பதிவகம்



077 36 44 246 / 077 85 95 151

யாழ் ⟷ கொழும்பு
(தினமும்)

சகல விதமான பேருந்துகளுக்கும் ஆசனப் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

ஆசன பதிவுகளுக்கும் மேலதிக தொடர்புகளுக்கும் ➤ இல.364, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (13.17)

1717 FOLLOW US www.mobitel.lk

பால் பொங்கும் நன்னாளில் அனைத்து இல்லங்களிலும் மகிழ்ச்சி பொங்கட்டும்

இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்



வருடத்திற்கான சேவை
வணிகக்குறியீடு

சிலிம் வணிகக்குறியீட்டு
மேன்மை 2017

Sri Lanka Telecom
Mobitel

இனிய
தைத்திருநாள்
நல் வாழ்த்துக்கள்

தைப்பொங்கலானது இயற்கை நமக்களித்த வரப்பிரசாதங்களுக்கு நன்றியுணர்வைத் தெரிவிப்பதற்காக கொண்டாடப்படும் ஒரு திருநாளாகும். வளங்கொழிக்கும் எமது நாட்டின் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கும் அதன் மேன்மையான பலன்களை அறுவடை செய்யவும் மக்களுடன் இணைந்து பயணிக்கும் "கெலனி கேபிள்ஸ்" எமது மக்களுக்கு சமாதானத்தையும் சுபீட்சத்தையும் நல்குவதாக இப்பொங்கலானதுஅமைய வேண்டுமென வாழ்த்துகிறது.

KELANI CABLES Fire Shield Safety Forever.. KELANI LIGHTING

9வது யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை

www.jitf.lk
jitf.lk
வடக்கிற்கான உங்களது நுழைவாயில்

JITF 2018
9TH JAFFNA INTERNATIONAL TRADE FAIR

26 27 28 ஜனவரி JANUARY
10.00 am - 8.00 pm
யாழ்ப்பாணம் மாநகரசபை மைதானத்தில்
Municipal Grounds - Jaffna

தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்



ORGANIZED BY LECS
+94 71 7488107
MAIN SPONSOR S-Lon
IN ASSOCIATION WITH CCTV
OFFICIAL PARTNERS

உயிர் வாழும் உயிர்களுக்கெல்லாம்
உறவான உழவர்க்கும்
உடன் உழைத்த கால்நடைக்கும்
உளமார உவகை கூர்ந்து
உதயனைப் பணிய உதித்த
இத் தைத் திருநாளில்

இனிய தைப்பொங்கல்
வாழ்த்துக்கள் !



ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව
பிரதேச அபிவிருத்தி வங்கி
Regional Development Bank

சேமிப்பு | நுண் நிதிக் கடன் | சிறிய மற்றும் நடுத்தரளவு கடன்
வீடமைப்புக் கடன் | தொரின் தொர சேமிப்பு முகவர் சேவை | ATMS
அடகு சேவை | பணப்பரிமாற்ற சேவை
Web: www.rdb.lk | Email : info@rdb.lk | இல. 933, கண்டி வீதி, வெதமுல்ல, களனி. | தொ.பேசி: + 94 11 2035454 + 94 11 2035455-9

இனிய
தைத்திருநாள்
வாழ்த்துக்கள்!



இன்றைய வாழ்வுக்கு நன்றி!
நாளைய நம்பிக்கைக்கு நன்றி!
வளமான எதிர்காலத்துக்கு நன்றி!
Web: www.unionassurance.com
/Unionassurance
யூனியன் அஷ்யூரன்ஸ்
உங்கள் நலனை நாம்க்கை இன்று


தித்திக்கும் தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்!
Ritzbury
ரிட்ஸ்பரி சொக்கலட்
இலங்கையின் நம்பர் வன் சொக்கலட்
50

ஒப்பந்த அடிப்படையில் மேற்பார்வையாளர் நியமனம்

யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தினால் முன்னெடுக்கும் தொழில் உபகரணங்கள் வாழ்வாதார திட்டம் தொடர்பில் குறிப்பிட்ட வேலைகளை மேற்பார்வை செய்து கணக்கறிக்கைகளை சமர்ப்பிக்கதக்க வகையில் அலுவலர் ஒருவர் தேவையாக உள்ளார். குறித்த துறையுடன் அனுபவமுள்ள, கணினி அறிவுள்ள, குறைந்தது O/L பரீட்சையில் சித்தியெய்திய விண்ணப்பதாரிகள் சுயமாக தயாரித்த தமது விண்ணப்பப்படிவத்துடன் 15.01.2018 அன்று பிற்பகல் 1.00 மணிக்கு சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

(CS 12870)(12-17)

இல.100, பிரதான வீதி, தலைவர்,
யாழ்ப்பாணம் யாழ்.மாவ.க.தொ.கூ.ச
தொ.பே. 021 222 9797 ச.சம்மேளனம்

வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் முன்னணி Hotel ஆன Tilko Jaffna City Hotel இற்கு பின்வரும் பணியாளர்கள் தேவைப்படுகின்றார்கள்.

- சலவை நிலைய முகாமையாளர் - Laundry Manager (தொழில் நுட்பம், இயந்திர பாவனை மற்றும் இரசாயன பாவனை சம்பந்தமான குறைந்தது ஒரு வருட அனுபவம்)
- சலவை நிலைய உதவியாளர்கள் - Laundry Assistant (அனுபவம் விரும்பத்தக்கது)
- மேசன் - Masan
- தச்சு தொழிலாளி - Carpenter
- வர்ணப்பூச்சாளர் - Painter
- பராமரிப்பு உதவியாளர் (மின் / குழாய் இணைப்பாளர் Maintenance assistant) - ஆண்(20 - 30 வயது)

அனுபவம் மற்றும் வயதிற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும்.

உணவு மற்றும் தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.

தங்களது சுயவிவரக் கோவையை 20.01.2018 இற்கு முன்னர் நேரில் அல்லது கீழ்க்காணும் முகவரிக்கு / மின்னஞ்சலிற்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

(C-5514) (4.17)

தொடர்புகளுக்கு :
021 720 0707/ 077 767 5200
info@cityhoteljaffna.com

Tilko Jaffna City Hotel
70/6, K.K.S. Road,Jaffna.

சிற்றுண்டி வகைகள்

பற்றிஸ், றோல்ஸ், பயிற்றமுருண்டை, லட்டு மற்றும் இடியப்பம், இட்லி, தோசை, அப்பம் மற்றும் பல சுத்தம், சுவை, தரம் பேணப்பட்டு செய்து கொடுக்கப்படும்.

077 235 8491 (CS 12694) (11-17)

வாடகைக்கு

கிளிநொச்சி நகரப் பகுதியில் அலுவலகமாக அல்லது தங்குமிடமாக பாவிக்கக் கூடிய 8 அறைகளும் சிறிய மண்டபமும் வாடகைக்குண்டு.

071 496 2868, 076 972 0606 (CS 12769) (11-17)

உங்கள் வாகன நடமாட்டங்களை

இலகுவாக தொலைபேசி ஊடாக அவதானியுங்கள் வாகன பாதுகாப்பையும் அதிகரியுங்கள். 077 888 7051

LEARN MORE LADIES TAILORING INSTITUTE

MUTHUKIRSHNAR LANE, CHUNNAKAM
077 972 0267

50 வருட அனுபவமுள்ள ஆசிரியையினால் தயாரிக்கப்பட்ட நவீன இலகு தையல் பயிற்சிப் புத்தகம் பாகம் - II

இரவிக்கை - SAREE BLOUSE

65 படங்களில் 250 விளக்கப்படங்களுடன்

யாழ் பூபாலசிங்கம் புத்தகசாலையிலும்
எமது தையற்பயிற்சி நிலையத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

அனுபவமுள்ள ஆசிரியையினால் நவீன தையல்பயிற்சிகள்.

- ஆண், பெண் இருபாலாருக்கும் சகல உடைகளும் வெட்டுவதற்கும் தைப்பதற்கும் பயிற்சிகள்.
- இயந்திரப் பூ வேலைப் பயிற்சிகள்.
- வெளிநாடு செல்வோருக்கும், தொழில் புரிவோருக்கும் வசதிக்கேற்ற நேரங்களில் துரித பயிற்சி.
- தகுதியான பதிவு செய்யப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படும்.

(CS 12665) (4.17)

ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர். தவமணி சுப்பிரமணியம் (மணி)

(திதி : 15 ஜனவரி 2018 சதுர் தசி)

ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும் ஆறவில்லை எங்கள் மனம் சகோதரிக்கு சகோதரியாய், தாயற்ற எங்களுக்கு அன்புத் தாயாகவும், பேரப்பிள்ளைகளுக்கு அன்பு பாட்டியாகவும், இருந்து அரவணைத்த உங்களின் அன்பிற்கு எதுவுமே ஈடாகுமா?

மண்ணோடு மறையும் காலம்வரை எம் நெஞ்சோடு உங்கள் நினைவுகளுடனும் உங்கள் ஆத்மா அந்த போசுட்டி முருகனின் திருவடி நிழலில் சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

தகவல் குடும்பத்தினர், கருங்காலி, காரைநகர்
யோசப்டயல் லேன், கொழும்பு -15.

உள்ளம் மகிழும் உவகை பொங்கலிலே ~ இனி இல்லம் முழுதும் செல்வச் செழிப்பினிலே!

அபிவிருத்தி லொத்தர் சபை உங்கள் அனைவருக்கும் தைப்பொங்கல் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றது.



வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 356, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொ.பேசி இல: 0112 333 546-47 | பெக்ஸ்: 0112 333 545 | மின்னஞ்சல்: devlottr@slt.lk | வெப்தளம்: www.dlb.lk

HOLMES POLLARD & STOTT - 0163

விளம்பரத் தொடர்புகளுக்கு 021 493 1111

softlogic

இத் தைத்திருநாளை
சொவ்ட்லொஜிக் வழங்கும்
சிறந்த சலுகைகளுடன்
கொண்டாடுங்கள்!



பொங்கலோ பொங்கல்!

Panasonic LED TV | TH-32E403



• my Home Screen | • Adaptive Backlight Dimming | • In-House TV Streaming

~~ரூ.56,999/-~~
ரூ.38,999/-
ரூ.18,000/- தள்ளுபடி
18 மாதங்களில் வட்டி இன்றி செலுத்துக
மாதந்தம் ரூ.3,056/- மேலாக

softlogic PRIZM LED TV | SFT40E200D



~~ரூ.89,999/-~~ ரூ.69,999/-
ரூ.20,000/- தள்ளுபடி
15 மாதங்களில் வட்டி இன்றி செலுத்துக
மாதந்தம் ரூ.5,400/- மேலாக

Panasonic LED TV | TH-43E403



• my Home Screen | • Adaptive Backlight Dimming | • In-House TV Streaming

~~ரூ.109,999/-~~ ரூ.94,999/-
ரூ.15,000/- தள்ளுபடி
15 மாதங்களில் வட்டி இன்றி செலுத்துக
மாதந்தம் ரூ.6,600/- மேலாக

SAMSUNG



SM-C701F | Galaxy C7 Pro
• 5.7" Super AMOLED Capacitive Touchscreen
• 16 MP Front & Back Camera
• 64 GB Internal Storage
• 4 GB RAM

~~ரூ.61,000/-~~
ரூ.57,999/-
ரூ.3,000/- தள்ளுபடி

Panasonic மைக்ரோவேவ்



NN-SM332 — • 25litre Capacity • 800W Microwave Power • Mechanical Operation

~~ரூ.15,999/-~~ ரூ.14,999/-
ரூ.1,000/- தள்ளுபடி

Whirlpool சலவை இயந்திரம்



WWT-70X 7 kg
• Dual Wash Speed | • Mini Pulsators | • Twin Tub

~~ரூ.29,999/-~~
ரூ.26,999/-
ரூ.3,000/- தள்ளுபடி
36 மாதங்களில் வட்டி இன்றி செலுத்துக
மாதந்தம் ரூ.833/- மேலாக

Panasonic பிரமியம் இன்வர்டர் எயார் கன்டிஷனர்



CS / CU-S10TKH | 10,000 BTU

~~ரூ.123,999/-~~ ரூ.111,599/-
ரூ.12,400/- தள்ளுபடி
15 மாதங்களில் வட்டி இன்றி செலுத்துக
மாதந்தம் ரூ.8,400/- மேலாக

INVERTER
AEROWINGS
ECONAVI
nanoe-G

உத்தரவாதம் பெற்ற விநியோகிஸ்தர்

அனைத்து முன்னணி வங்கிகளிடமிருந்தும் 0% வட்டி தீட்டம்

விசேட சேவை அழைப்பு 011 5 541 900

011 5 705 705

சொவ்ட்லொஜிக் உத்தரவாதம் சகிதம்

உங்கள் வைத்தியரை அணுக
ஏனைய சேவைகள் மற்றும் விபரணை நிலையத்தல
DOC
WESTERN UNION WU moving money for better

சொவ்ட்லொஜிக் மெக்ஸ் ஸ்டோர் - யாழ்ப்பாணம் - 021 5678989
சொவ்ட்லொஜிக் ஸ்டோர் - யாழ்ப்பாணம் - 021 5671108

softlogic

பசு விற்பனைக்கு

முதலாம் ஈற்று 10 நாள்களில் கன்று ஈன இருக்கும் பசு விற்பனைக்குண்டு.

077 420 6382

MOBILE CONNECTION

எம்.டி Dialog 500 நிமிட Free Blaster Mobile இணைப்புக்கள். Dialog TV 2500/=, SLT 4G 1900/= உள்ளது. தேவையானவர்கள் உடனடியான அணுகுகவும்.

077 297 1961 /077 764 3322

வைத்தியம்

நாள்பட்ட நோயாளர்களும், பலவிதமான வைத்தியங்கள் மூலம் குணமடையாதவர்களும் மருத்துவ சோதனைகளுடன் அணுகவும். வாதம், முள்ளந்தண்டு சம்பந்தமான அனைத்துப் பிரச்சினைகள் Asthma, தீராத சளி, நடுக்கம், கால் வீக்கம், Cellutitis ஆரம்ப நிலை Kidney Failure, SLE, High ESR, குழந்தையாகவியம் இல்லாமை Prostate வீக்கம், High PSA பொறுமையுடன் சிகிச்சை செய்யும் போது குணம் நிச்சயம்

Dr.R.Sivagurunathan
077 730 1669
No.54, 33rd Lane, Wellawatte,
வைத்தியரை யாழிலும் சந்திக்கலாம்.
நடமாடமுடியாத நோயாளர்க்கு அவர்களின் இடத்திலும் சிகிச்சை உண்டு.

விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள உணவகத்துக்குரிய தளபாடங்கள் விற்பனைக்குண்டு.

077 353 0959

மணமகள் தேவை

ரோகினி நட்சத்திரமும், 8இல் செவ்வாய் மூன்று சுற்றுப்பாவம் 17¼ கொண்ட தற்சமயம் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்டவருக்கு மணமகள் தேவை.
தரகர்கள் ஈடுபட வேண்டாம்.

077 160 7635

வாடகைக்கு

உரும்பிராய் வடக்கு இந்துக் கல்லூரிக்கு பக்கத்தில் நவீன வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு :- 076 4734 160

தேவை

வீட்டுப் பணிப்பெண் தேவை.

077 635 9284

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மத்தியூஸ் வீதியில் ஒரு பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

077 614 6434

மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1981, மகம், 12 செவ்வாய், சொந்த தொழில் புரியும் மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை.

077 375 5429

வாடகைக்குத் தேவை

எமக்கு 1கியூப் (100 க.அடி) அளவுடைய ரிப்பர் / கன்டர் வாகனம் தொடர்ச்சியாக தேவை. கொடுப்பனவு நேரடியாக பேசித் தீர்மானிக்கலாம்.

077 760 6588

தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்துக்கு திறமையும், அனுபவமும் கொண்ட கணிய அளவையாளர் (QS) மற்றும் கூலியாள்கள் (Labour), தேவை.

076 316 5731, 076 316 5734
E.mail:- careers@decon.lk

கடை தேவை

யாழ். சத்திர சந்திக்கு அருகில் கடை வாடகைக்கு தேவை.

077 188 2518

பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் வசிக்கும் வைத்திய குடும்பத்துக்கு வீட்டில் தங்கி நின்று குழந்தையைப் பராமரிப்பதற்கு பெண் வேலையாள் தேவை.

071 092 5926



TVS



இப்பண்டிகைக் காலத்தில் TVS SCOOTERS கொள்வனவு செய்து
ரூபா. 18,000 வரையான விசேட விலைக்கழிவுகளை பெற்றிடுங்கள்

TVS SCOOTERS

ரூ. 233,000 ரூ 215,000
ரூ. 239,900 ரூ.232,400
ரூ. 235,000 ரூ. 224,000

5 YEARS / UP TO 75,000 KMS WARRANTY LEADER

www.sakaz.lk

இச்சலுகை ஜனவரி 18 வரை மாத்திரமே நிபந்தனைகள் உண்டு

மாவட்டரீதியில்

கொழும்பு, களுத்தறை	- 0774 636 345	காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, இரத்தினபுரி	- 0777 283 095	அம்பாறை, மட்டக்களப்பு	- 0773 748 155
குருணாகல், புத்தளம்	- 0773 580 841	அநுராதபுரம், பொலன்நறுவை, மாத்தளை	- 0773 215 746	யாழ்ப்பாணம், கிளிநொச்சி	- 0777 782 739
பதுளை, மொனராகல	- 0772 057 660	கம்பஹா, கேகாலை, கண்டி, நுவரெலியா	- 0773 497 641	முல்லைத்தீவு, மன்னார், வவுனியா	- 0773 358 305
				திருகோணமலை	- 0777 419 411

தரித எண்
0114 600 500

www.tvslanka.lk
www.facebook.com/TVSLanka.lk

A/L நிறைவடைந்தது
உங்கள் பட்டப்படிப்பிற்கு
தயாராகுங்கள்.

NSBM
GREEN
UNIVERSITY
TOWN

நீங்களும் விருட்சமாக
மிளிர்ந்திட முயல்பவரா?



ஸ்டீவ் ஜொப்ஸ்,
கணினி உலகில்
புதியதோர் புரட்சிகரமிக்க
மாற்றத்தை நிகழ்த்தி Apple
கணினி, iphone கையடக்கத்தொலைபேசி
என எராளமான நவீன தொழில்நுட்ப
உபகரணங்களை உலகுக்கு அறிமுகப்படுத்தி
விருட்சமாக மிளிர்ந்த உலகின் மாமனிதராவார்.

விதைகளை விருட்சங்களாக்கிடும் பொற்காலம் இது.
முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கலை
பிரிவுகள் என 2000 மாணவர்களுக்கு மட்டும் வழங்கப்படும் உன்னத
வாய்ப்பினை தவறவிடாதீர்கள்.

உங்கள் பட்டப்படிப்பினை தீர்மானிப்பதற்கு முன் தெற்காசியாவின் முதல்
கல்விக்கலாசாலை நகருக்கு ஓர் முறை வருகைத் தாருங்கள்.

SCHOOL OF BUSINESS

UGC APPROVED DEGREE PROGRAMMES - OFFERED BY NSBM

BSc in Business Management (Human Resource Management) (Special)
BSc in Business Management (Logistics Management) (Special)
BSc in Business Management (Project Management) (Special)
BSc in Business Management (Industrial Management) (Special)
BM (Honours) in Accounting and Finance
BA in Business Communication

UNIVERSITY OF PLYMOUTH – UNITED KINGDOM

BSc (Honours) International Management and Business
BSc (Honours) Accounting and Finance
BSc (Honours) Marketing Management
BSc (Honours) Operations and Logistics Management
BSc (Honours) Events, Tourism and Hospitality Management
BSc (Honours) Business Communication

UNIVERSITY COLLEGE DUBLIN – IRELAND

BSc (Honours) Management
BSc (Honours) Human Resource Management

VICTORIA UNIVERSITY – AUSTRALIA

Bachelor of Business: Banking and Finance &
Financial Risk Management

SCHOOL OF COMPUTING

UGC APPROVED DEGREE PROGRAMMES OFFERED BY NSBM

BSc in Management Information Systems (Special)
BSc (Honours) in Software Engineering
BSc in Multimedia

UNIVERSITY OF PLYMOUTH – UNITED KINGDOM

BSc (Honours) Software Engineering
BSc (Honours) Computer Networks
BSc (Honours) Computer Security

UNIVERSITY COLLEGE DUBLIN – IRELAND

BSc (Honours) Management Information Systems

VICTORIA UNIVERSITY – AUSTRALIA

Bachelor of Information Technology

SCHOOL OF ENGINEERING & SCIENCE

BSc (Honours) Engineering in
Computer Systems Engineering

Bachelor of Engineering (Honours)
Electrical & Electronic Engineering

க.பொ.த. சாதாரண தரத்தின் பின்?
Foundation Programme for Bachelor's Degree
NSBM ஒரு வருடத்திற்கான அடிப்படை பாடத்திட்டத்தை மேற்கொள்வதன்
மூலம் நேரடியாக பட்டப்படிப்பிற்கு நுழைவதற்கான வாய்ப்புகள் தரப்படும்.

மார்ச் மாத குழுவுக்கான
மாணவர்கள் இணைத்துக் கொள்ளும்
படலம் தற்போது ஆரம்பம்
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
011-544 5000

உடனடி அழைப்புகளுக்கு:
070 3388 700
070 3388 701

எமது காரியாலயம் தற்போது
மு.ப. 8.30 முதல் பி.ப. 7.30
வரை திறந்திருக்கும்

AACSB
உயர் கல்வி நிருவனத்தின்
அங்கத்துவம்

WITH PLYMOUTH UNIVERSITY
VICTORIA UNIVERSITY MELBOURNE AUSTRALIA
THE UNIVERSITY OF WESTERN AUSTRALIA
அங்கீகரிக்கப்பட்ட உலகின் தலைச்சிறந்த பல்கலைக்கழகங்கள்
அவுஸ்திரேலியாவில் பட்டப்படிப்பினை
பூர்த்தி செய்வதற்கான வாய்ப்பு

NSBM GREEN UNIVERSITY TOWN
நிறைகள் அபிவிருத்தி
மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சு

NSBM கல்விகலாசாலை நகரம் மாற்றுவதை பிற்றிப்பா வேறாகவும் இலங்கை
E-mail : inquiries@nsbm.lk
www.nsbm.lk

திருமண சேவை

மலரும் இனிய தைமாதத்தில் உங்கள் வீட்டில் மாங்கல்யம் மலர காளி அம்மன் துணையுடன் எங்கள் சேவையை தொடர்பு கொள்ளவும். உள்நாடு, வெளிநாடு, அரச உத்தியோகம், இந்து, R.C சகல வரன்களும் எம்மிடம் உண்டு.

இன் நன்னாளில் தொடர்புகட்கு: 077 604 0920/ 077 946 4287

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 18 . 11 . 1947

மறைவு 14 . 01 . 2017

வைத்திய கலாநிதி

குமாரசாமி மகேசன்

வைத்திய சேவையை தொழிலாகக் கொண்டு மக்கள் சேவை செய்த அன்பு, பண்பு, கடமை உள்ளம் கொண்ட மகேசன் ஐயாவை குடும்பத்தினராகிய நாம் நினைவு கூருகின்றோம்.

குடும்பத்தினர்.

பதின்னான்காம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 11 . 12 . 1974

விண்ணில் 15 . 01 . 2004

அமரர் **பேரானந்தம் உமாசுதன்**

(போட்டோ சுதன்)

திதி: 14.01.2018

தைப்பொங்கல் அன்று எம்மைப் பிரிந்து சென்ற எம் மகனே!
காலங்கள் சென்றாலும் எம் அன்பு பிரியாது
வருவாய் வருவாய் எனக் காத்திருந்தோம் தினமும்
ஏன் வரவில்லை என் சுதனே!
பதின்னான்கு ஆண்டுகள் சென்றதடா
நீ வருவாய் என தினமும் காத்திருப்போம்.

காராளவளவு,
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

என்றும் உன் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

3 ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 19 . 12 . 1929

மறைவு 19 . 12 . 2014

திதி:14.01.2018

அமரர் **செல்லர் கந்தையா**

மூச்சடங்கிப் போன செய்தி காதில்
மூர்ச்சையாக இன்னும் எதிரொலிக்க
மூர்க்கமான எமன் விதிசெயலை
மூளிரு முகத்தாலை வேண்டி நின்று
மூடிய விழிகள் திறப்பதற்கு முன்னர்
மூன்று ஆண்டுகள் விரைந்தே ஓடின!

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!

இல.07, சென்மேரிஸ்
2 ஆம் ஒழுங்கை,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

துயருடன்
குடும்பத்தினர்.

குதிரை வண்டிலுக்கு சாரதி தேவை

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த ஒருவருக்கு முழு நேரமாகக் குதிரையைப் பராமரித்து, சாரதியாக குதிரை வண்டிலை ஓட்டுவதற்கு உண்மையான, திடகாத்திரமான சாரதி தேவை.

தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

(CS/12843)(11.17)

454/3, அரசடி லேன், ஆனைக்கோட்டை.

077 594 2233

புதிய பொங்கல் இங்கு பொங்குதே – ஒற்றுமை இதயம் எங்கும் வந்து தங்குதே!

பீப்பள்ஸ் இன்ஷூரன்ஸ் பிஎல்சி நிறுவனத்தார் தங்கள் நண்பர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் அனைவருக்கும் தைப்பொங்கல் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றனர்.



பலம், நிரந்தரம், நிலைபேறான தன்மையின் அடிப்படையில் நிறுவப்பட்டுள்ள பீப்பள்ஸ் இன்ஷூரன்ஸ் பிஎல்சி இலங்கையிலுள்ள முன்னணி பொது காப்பீட்டு வழங்குனர்களில் ஒன்றாக திகழ்வதுடன் கொழும்பு பங்குச்சந்தையில் இதன் பங்குகள் முதன்மை பெற்றுள்ளன.

வாருங்கள் வாழ்வில் எழுச்சி பெற எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.

இன் உறுப்பினர்

பீப்பள்ஸ் இன்ஷூரன்ஸ் பிஎல்சி
இல. 07, ஹெவ்லொக் வீதி, கொழும்பு 05.
தொ.பேசி: 0112 206 406 பெக்ஸ்: 0112 206 436

PEOPLE'S INSURANCE
அன்புடன் பாதுகாக்கும்

நியூ உதயா
ஜுவல்லர்ஸ்

தங்கப்பவுண் நகை வியாபாரம்

காலங்கள் மாறலாம் அதுபோல் நாமும் புதிய பழக்கவழக்கங்கள் அனுபவங்கள், அங்கீகாரங்கள், பொறுப்புக்கள், இந்த மாற்றங்கள் எல்லாம் வளர்ச்சியின் ஒரு பாகம். இருப்பினும் இப்படியொரு மாற்றங்கள் நமக்குள் இருந்தாலும் சில பொருட்கள் நம்மிடையே என்றுமே மாறுவதில்லை. எத்தனையோ மாற்றங்களிலும்

**ஒன்று மட்டும் என்றுமே மாறாது.
உறவுகள்...**

**பிறக்கும்
தைத்திருநாள்
அனைவர் மனதிலும்
இன்பமாய் பொங்கிட
பிரார்த்திக்கின்றோம்**

NEW Uthayaa JEWELLERS

[10]

91, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். Tel: 021 222 2031

021 222 2031
newuthayajwellrs@gmail.com
No 91, Power House Road, Jaffna
Newuthaya Jwellrs
uthaya.new

மனிதப் பண்பை பேணி நாம் பொங்கிடுவோம்

பச்சையரிசியும் பயிற்றம்பருப்பும்
பசும்பாலுடன் சக்கரையுஞ்சேர்த்து
பச்சையத்தைந்து பாரிற்கு உணவளிக்கும்
பகலவனுக்குப் பொங்கலிடுவர்
பண்டைய தமிழர் வாழ்வியலில் பல
விஞ்ஞான தத்துவங்களைச் சேர்த்தே
சண்டைகளிற் கூட சாதுரியம்மிகு
அயுத பலத்துடன் ஆண்டுவந்தார்

வேதனையுற்று வாழ்வாதாரந் தேடி
வேற்று நாடுகளில் வசித்த போதும்
சாதனைகள் செய்வதுடன் சற்றும் சலிக்காது
சக்கரைப் பொங்கலும் செய்துவாறார்
எந்தக் கலாசார சூழலிலும் எங்கள்
சொந்தக் கலாசார விழாக்கள் செய்து
விந்தைகள் செய்திடும் எம்மவரே
மனிதப் பண்பினைப்பேணி நாம் பொங்கிடுவோம்



க.ஆனந்தராசா

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்
தமிழ்ப்பூங்கா பதிப்பகம்
TamilPoonga
சகலவிதமான அச்சு வேலைகளும், அழைப்பிதழ்களும்
சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.
OFFSET PRINTERS
பிரதான வீதி, நெல்லியடி
Main Street,Nelliady.
021 226 4014, 077 959 7145
email- tamilpoonka@gmail.com
www.nelliadytamilpoonga.blogspot.com

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய பொங்கல் வாழ்த்துக்கள்
RAINBOW TILES STORES
பெயின்ற் வகைகள், மாபிள் வகைகள், எல்லோன் பி.வி.சி. பைப் வகைகள், கட்டடப் பொருள்கள், விவசாய மருந்துவகைகள், துவிச்சக்கர வண்டி உதிரிப்பாகங்கள் மற்றும் மின்சாரப் பொருள்கள் அனைத்தும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
ரெயின்போ ரைல்ஸ் ஸ்ரோர்ஸ்
பருத்தித்துறை வீதி, மந்திகை புலோலி.
021 226 2696, 077 869 5418

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய பொங்கல் வாழ்த்துக்கள்
நெல்லியடியில் பிரமாண்டமான புடைவை மாளிகை
செல்லமுத்தாஸ்
புடைவை மாளிகை
விதம் விதமான சாறிவகைகள், சல்வார் துணிகள், சேட், ரீசேட், பஞ்சாபிகள் இன்னும் ஏராளமான புடைவைகளுடன் சிறுவர் முதல் அனைவருக்கும் ஏற்ற பலவகையான ஆடைகளை மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய இடம்
செல்லமுத்தாஸ்
புடைவை மாளிகை
பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.
021 226 3238

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய பொங்கல் வாழ்த்துக்கள்
moving money for better
WESTERN UNION
MONEY TRANSFER
Money Master
New AMBIGA STORES
நியூ அம்பிகா ஸ்ரோர்ஸ்
✓ உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உள்நாட்டு, வெளிநாட்டு துரித தபால் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்
இல.33, பிரதான வீதி, நெல்லியடி.
Mob:- 077 667 9340
Fax :- 021 226 4197
Tel"- 021 226 3571
newambiga@gmail.com
உறவினர்களிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்.
DHL aramex SKYNET

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ
அனைவருக்கும் இனிய பொங்கல் வாழ்த்துக்கள்.
ரூபி ஜுவல்லரி
S.N.G. BUILDING
RUBE JEWELLERY
ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு : 1982
இங்கு 916 தங்க நகைகள் ready - made ஆக வாங்கவோ அல்லது Order கொடுத்து செய்து கொள்ளவோ முடியும்.
தங்கத்தை தரம்பார்க்கும் நவீன இயந்திரம் எம்மிடம் உண்டு.
227-229 , கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
ruby jewellery and gems
021 221 6919 / 077 734 4074
எமது ஸ்தாபனத்திற்கு யாழ் நகரிலோ இலங்கையின் வேறு எப் பாகத்திலோ கிளைகள் கிடையாது.

அனைத்து வாடிக்கையாளர்களுக்கும்...
ஷைலோ நிறுவனத்தின்
தமிழர் திருநாளாம்
தைப் பொங்கல்
நல் வாழ்த்துக்கள்
ஓடர் செய்து விசேட வைபவங்களுக்கும் பெற்றுக்கொள்ளலாம்
உங்கள் கடைகளுக்கு விற்பனைக்கு மொத்தமாக பெற்றுக்கொள்ள..
Tel : 076 360 4900
Sylo Ice Cream
#76, Amman Street, Kokuvil East, Jaffna. Tel : 021 221 2003
#442, Hospital Road, Jaffna. Tel : 021 221 7885

எம் உறவுகளுக்கு BCAS யாழ் வளாகத்தின்



தைத்திருநாள் வாழ்த்துக்கள்

AFTER A/Ls
INTAKE NOW

வாழ்க்கையின் வெற்றியினை
தீர்மானிப்பது பரீட்சை முடிவுகள்
மாத்திரம் அல்ல,
உரிய நேரத்தில் எடுக்கும்
சரியான தீர்மானங்களும் தான்...!



BCAS Ranked
once again as
No. 1
"Platinum Partner"

UNIVERSITY OF CANBERRA
Pearson
BTEC

HND
BUSINESS MANAGEMENT
MARKETING | HRM
Leading to **BA (Hons)**
from the UK Universities

HND
QUANTITY SURVEYING
Leading to **BSc (Hons)**
from the UK Universities
UGC Recognized
TVEC Approved

HND
BIOMEDICAL SCIENCE
BIOTECHNOLOGY
Leading to **BSc (Hons)**
from the UK Universities

HND
CIVIL ENGINEERING
Leading to **BEng / BSc (Hons)**
from the UK Universities

HND
TELECOM ENGINEERING
Leading to **BEng (Hons)**
from the UK Universities

HND
COMPUTING
Leading to **BSc (Hons)**
from the UK Universities

HND
ELECTRICAL & ELECTRONIC
ENGINEERING
Leading to **BEng / BSc (Hons)**
from the UK Universities

LLB
LAW
Leading to **LLB (Hons)**
from the UK Universities



BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

Jaffna Campus
16, Point Pedro Road,
Jaffna.

JAFFNA 077 710 2131
077 960 3753
COLOMBO 077 283 4595

Corporate Office
32, Dharmarama Road,
Colombo 6.
T : 0112597217

ISO 9001:2015 CERTIFIED

021 221 9910
Visit us on Facebook | info@bcas.lk | www.bcas.lk

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாழக்கையாளர்கள் அனைவருக்கும்
இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

New Nelson Learners
நியூ நெல்சன் லேணர்ஸ்

அரச அங்கீகாரம் பெற்ற முதன்மை சாரதிப் பயிற்சிப் பாடசாலை
Ds. 590

89, Kandy Road, Chundukuli, Jaffna.
T.P: 021 222 4527, 077 358 1916, 077 790 6064
Fax: 021 222 9109



- குறிப்பிட்ட காலப்பகுதியில் மிகவிரைவாக.
- எழுத்து பரீட்சையில் சித்தியடைய விசேட வகுப்புகள் நடைபெறும்.
- எமது கிளை நிறுவனங்களிலே வாகனப் பயிற்சிகள் நடைபெறும்.
- மும்மொழிகளிலும் ஆண்.பெண் இருபாலாருக்கும் பயிற்சிகள்.
- விரும்பிய நேரத்தில் பயிற்சிகளை மேற்கொள்ள முடியும்.
- தவணை முறையில் கட்டணம் செலுத்த முடியும்.
- யாழ்.நகரின் முன்னணி பயிற்றுவிப்பாளர்கள்.

(m.1295) (13.17)

97A, Point Pedro Road.
Nelliyadi, karaveddi.
T.P.: 021 226 1393,
077 111 3382

Main Road,
Valvettithurai.
T.P.: 077 5573711

அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இனிய தைப்பொங்கல் திருநாள் வாழ்த்துக்கள்

சங்கானையில்
வர்த்தக விளம்பர
NR
ஒலிபரப்பு சேவை



யாழ்ப்பாண சர்வதேச வர்த்தக கண்காட்சி
வளாகத்தில் 3 நாள்கள்
காலை - 9.00 தொடக்கம் இரவு 8.00 மணிவரை
ஒலிபரப்பு சேவை நடைபெறும்.
உங்கள் வியாபார நிலைய நிறுவனங்களுக்கு
தேவையான நிறைவான அனுகூலங்களைப்
பெற்றுக்கொள்ள தொடர்புகளை ஏற்படுத்தவும்.

தொடர்பு :- 077 936 1583



MATHI COLOURS

OFFSET
SCREEN
DIGITAL



அச்சமைப்பின் புதிய பரிமாணத்துடன்

மதி கலர்ஸ்
பிரிண்டர்ஸ்

திருமண அழைப்பிதழ்
காட்சியறை

இல.10, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்
021 2229285, 077 7222259
mathicolours@gmail.com
mathicolours
0702222259



அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இனிய தைப்பொங்கல் திருநாள் வாழ்த்துக்கள்
மனோகரன் ஹாட்வெயார்
உங்களுக்குத் தேவையான கட்டடப் பொருள்கள், பெயின்ற் வகைகள், PVCபைப், மாபிள் வகைகள் என்பவற்றுடன் துவிச்சக்கர வண்டிகள், எலெக்ரிக் பொருள்கள் என்பவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் குறைந்த விலையில் பெற்றிடலாம்.
சாவகச்சேரி வீதி, மந்திகை, புலோலி. தொ.பே : 021 226 4192

அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இனிய தைப்பொங்கல் திருநாள் வாழ்த்துக்கள்
M.Ayngaran
Sri Kamadchee
Nagai maadam
ஸ்ரீ காமாட்சி நகைமாடம்
ஒடர் நகைகள் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்
கொடிகாமம் வீதி, நெல்லியடி.
T.P: 077 884 9255/ 021 226 1655

சகல விதமான வீட்டுத்தளபாடங்கள் மற்றும் கோயிலுக்கு தேவையான பித்தளைப் பொருள்கள் வாங்குவதற்கு நாடவேண்டிய இடம்.
அனைவருக்கும் இனிய பொங்கல் வாழ்த்துக்கள்
SRI SHAKTHY MADAM
ஸ்ரீ சக்தி மாடம்
பிரதான வீதி, நெல்லியடி. 021 491 1830/ 021 320 5743
கிளை : Arulmani Furniture Sales Center அருள்மணி தளபாடவிற்பனை நிலையம்
பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி T.P: 021 491 1830

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய பொங்கல் வாழ்த்துக்கள்
யசோ ரெக்ஸ்
பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.
திருமணப் பட்டுப்புடைவைகள் மற்றும் சகலவிதமான ஆடை வகைகளுக்கும்
YASO TEX
Main Street, Nelliyadi, Karaveddy.
021 226 4997

அனைவருக்கும் இனிய பொங்கல் வாழ்த்துக்கள்
இடியப்பம், பிட்டு, தோசை, இட்லி, கொத்துறொட்டி, றோல், சுடச்சுடவடை, மதிய சைவஉணவு முதலியவற்றைப் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்.
அருள்நாயகி சைவ உணவகம்
பிரதான வீதி, நெல்லியடி

அனைவருக்கும் இனிய பொங்கல் வாழ்த்துக்கள்
சகல விதமான சிற்றுண்டி வகைகளுக்கு நாடவேண்டிய இடம்
Green Leaf Cream House
T.P: 077 377 3197
N.M.M.V.Road, Nelliady, karaveddy.

அனைவருக்கும் இனிய பொங்கல் வாழ்த்துக்கள்
நந்தினி பழக்கடை
சகல விதமான உள்நாட்டு, வெளிநாட்டு பழவகைகள் மற்றும் வெளிநாட்டுக்கு அனுப்பக்கூடிய பருத்தித்துறை தட்டைவுடை மற்றும் பலகார வகைகள், சுத்தமான பனங்கட்டி, எள்ளுப்பாகு, கேக், பிஸ்கற் வகைகள் என்பவற்றை ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
ஞாயிறு மற்றும் விடுமுறை நாள்களில் திறந்திருக்கும்.
நந்தினி பழக்கடை
நவீன சந்தை (பல் நிலைய அருகில், பருத்தித்துறை)
077 273 7514

தஷானி கிளாஸ் ஹவுஸ்
சகல விதமான ஹவுஸ் பேனிச்சர்ஸ், பிற்றிங் வேலைகள், கிளாஸ், வகைகள், மெத்தை வகைகள் அனைத்தையும் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்.
T.P: 021 226 3076 இல.114, பிரதான வீதி, நெல்லியடி.

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய பொங்கல் வாழ்த்துக்கள்
MARUTHAM PAINT DEALERS
அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்
உங்கள் இல்லங்கள் மற்றும் அலுவலகங்களை அழகுபடுத்த Dulux, Nippon பெயின்ற் Nippon சிமெந்து வகைகள் அனைத்தையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம்
மருதம் பெயின்ற் டீலேர்ஸ்
இல.152, பிரதான வீதி, நெல்லியடி.
021 226 3214 , 077 2347 453

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய பொங்கல் வாழ்த்துக்கள்
ஒடர் நகைகள், குறித்த தவணையில் 22 கரட் தங்கத்தில் செய்து கொடுக்கப்படும்.
தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்
சரவணா மகாலட்சுமி தங்கமாடம்
இல.97, பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.
Mail: saravanajewelery@gmail.com
NO:- 021 226 2111

அனைவருக்கும் இனிய பொங்கல் வாழ்த்துக்கள்
ஸ்ரீ சுசிலா ஆபரண மாளிகை
Sri Susila Gold House
(916 KDM) தங்க நகைகள் மொத்தமாகக் கிடைக்கும்.
239, Main Street, Point Pedro. 239 பிரதான வீதி, பருத்தித்துறை.
T.P. No: 077 721 0206,021 226 1003, 021 320 7437

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்
ARUN TEX & Fancy Palace
அருண் புடைவையகம் & அழகுமாடம்
சாறி, சல்வார், ஆண்களுக்கான சேட் ரீசேட் மற்றும் சிறுவர்களுக்கான சகல ஆடைவகைகள் அனைத்திற்கும் நாடவேண்டிய ஒரே இடம்
பிரதான வீதி, நெல்லியடி. 021 226 2857

அனைவருக்கும் இனிய பொங்கல் வாழ்த்துக்கள்.

ஒளியருவி

பிரதான வீதி,
நெல்லியடி.
021 226 2850

டிஜிற்றல் கலர் லாப்

போட்டோ அன் வீடியோ படப்பிடிப்பு - 4K
எமது சேவைகள் : போட்டோ பிறிண்ட் 4R - 12 X 36
நவீன சின்தரிக் கரிஸ்மா அல்பம் வடிவமைத்தல்
டிஜிற்றல் பனர் பிறிண்டிங் (சகல அளவுகள்)
டிஜிற்றல் பனர் பிறிண்டிங் (RGB COLOUR)

கிளை: பிரதேச செயலகம் முன்பாக, சாவகச்சேரி. 021 227 0808.
பிரதான வீதி, பருத்தித்துறை. 0777 241 958

அன்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள் உரித்தாகுக.

சஸ்வின் உணவகம்

காலை, இரவு சிற்றுண்டி, மதியம் பிரியாணி,
பிறைட்ரைஸ், கொத்துரொட்டி என்பன சிறந்த முறையில் தயாரித்து
வழங்கப்படும். விஷேட நிகழ்வுகளுக்கும் ஓடர்களுக்கும் பெற்றுக்
கொள்ளலாம். அத்துடன் யாழ் - கொழும்பு Van Car, Service,
உள்ளூர் சேவை. திருமண சேவை. கார் வசதிகளும் பெற்றுக் கொள்ள
நாடவேண்டிய இடம்

நியூ சஸ்வின் உணவகம்
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
077 260 0678

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் இனிய பொங்கல் வாழ்த்துக்கள்.

நெல்லியடியில் பிரமாண்டமான தளபாடமாளிகை

உங்கள் வீட்டிற்கும், அலுவலகங்களுக்கும் தேவையான அனைத்து
தளபாடங்களையும் நியாய விலையில் பெற்றுக் கொள்ள
நாடவேண்டிய ஒரே இடம்.

நியூ ஸ்ரார் பேனிச்சர்

பிரதான வீதி,
நெல்லியடி.
(சம்பத் வங்கி அருகில்)
077 917 4358

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய பொங்கல் வாழ்த்துக்கள்

பூம்புகார் சில்க் ஹவுஸ்

Our Fashions are Matchless
Styles Fantastic
Prices Shirting Suiting,
Bombay Shalwar,
Baby Items.

Poompugar Silk House
இல.124, பிரதான வீதி, நெல்லியடி.

அனைவருக்கும் இனிய பொங்கல் வாழ்த்துக்கள்.

எரிக்கணைஸ்

அனைவருக்கும்
இனிய
பொங்கல்
வாழ்த்துக்கள்.

கண்வைத்திய
நிபுணர்களால் சிபாரிசு
செய்யும் கண்ணாடிகளை
சரிவரப்பெற்றுக்
கொள்ளவும்,
நவீன ரக Frame களையும்
தரமான Lense களையும்
பெற்றுக்கொள்ள
அன்றும் இன்றும் என்றும்

கண்ணாடிகளிற்கு பெயர் பெற்ற
ஒரே ஸ்தாபனம்

இலை.566, 564, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

கிளைகள்: இல.105, கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம்
இல.91, கே.கே.எஸ் வீதி,
கொக்குவில்.

நல்லூர்க் கந்தன்
திருமண சேவை

எல்லா மதம்,
எல்லா இனம்,
வெளிநாடு,
உள்நாடு
ஆகிய சகல
திருமணங்களும்
எம்மால் செய்து
கொடுக்கப்படும்.

வி.ஜெயந்தி
077 973 3183, 021 221 6071
இல.303, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இனிய
பொங்கல் வாழ்த்துக்கள்

தவம் போட்டோ
THAVAM PHOTO

புகைப்படத்துறையில்
36 வருடங்களுக்கு மேலாக
கால்பதித்த வேளையதில்.....

சகல மங்கலகரமான
நிகழ்வுகளுக்கும் மற்றும் அனைத்து
விதமான நிகழ்வுகளுக்கும்
போட்டோ, அல்பம், வீடியோ
என்பன சிறந்த
முறையில்
எம்மால் செய்து
கொடுக்கப்படும்.

362, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
167, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

ஸ்ரீ லக்ஷ்மி பிளாசா
Sri Lakshmi Plaza

திருமணம்,
கொண்டாட்டங்கள்,
பெரு நிறுவன நிகழ்வுகள்
பிறந்த நாள் விழா விசேட
நிகழ்வுகள்
இன்னும் பல...

E-mail:jaffnasrilakshmiplaza@gmail.com
http://www.facebook.com/jaffnasrilakshmiplaza
021 222 9296, 075 783 6550 / 0044 746 657 8511

இல.84, ஜயனார் கோயில் வீதி.
தட்டாதெரு சந்தி (அருகில்), யாழ்ப்பாணம்.

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

Eagle Paint Shop
NELLIYADY

உங்கள் வாகனங்கள், இல்லங்கள் மற்றும்
அலுவலகங்களை அழகுபடுத்த

- ஸ்பிறே பெயின்ற் வகைகள் (Debeer, Sunny, Metalic)
- கட்டட பெயின்ற் வகைகள் (Colour box, GLO, Shield kenlux)

அனைத்தையும் நீங்கள் பெற்றுக் கொள்ள
நாடவேண்டிய இடம்.

No. 24, Kodikamam Road,
Nelliyady.
T.P.No : 077 149 2439

Main Street,
Pandateruppu.
T.P.No : 077 441 2549

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் நடராஜா தனபாலசூரியர்
(தங்கராசா)

தோற்றம்	மறைவு
23 . 05 . 1944	25 . 01 . 2017

நீதி – நீரயோதசி

காலச்சக்கரத்தில்
கருணை முகம் மலர்த்தி
காணும் போதெல்லாம்
உதிராப் பூவை உதிர்த்தி
எம் குடும்ப வாழ்விற்கு
நல்வழி காட்டியவரே
காலன் உங்களை அணைத்து
ஓராண்டாகிவிட்ட போதிலும்
எம்காட்சிகள் ஒவ்வொன்றிலும்
நீங்கள் தினம் காட்சி கொள்வீர்
முதலாம் ஆண்டு நினைவு நாளில்
தங்களின் ஆத்ம சாந்திக்காக இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.

மனைவி.

227, கொழும்புத்துறை வீதி,
பாண்டியந்தாழ்வு, யாழ்ப்பாணம்.

(C.12863) (14.17)

மரண அறிவித்தல்



அன்னை மடியில் 01 . 07 . 1932

இறைவன் அடியில் 12 . 01 . 2018

தம்பு வேலுப்பிள்ளை

(முன்னாள் பங்காளர் Rajah cooperation - கொழும்பு, வவுனியா, கிளிநொச்சி)

புலோலி தெற்கு தம்பப்பாய் வளவைப் பிறப்பிடமாகவும், கொழும்பு மற்றும் சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட தம்பு வேலுப்பிள்ளை நேற்றுமுன்தினம் (12.01.2018) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் இராஜலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தம்பு - வள்ளிப் பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முருகேசு - சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், வனிதா (கனடா), வினோகந்தா (லண்டன்), வானதி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஞானேஸ்வரன், அபிராமி, சிறிகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கீத்தனா விபூஷிகா, தேவிகா, ஷியானு, விதுஷன், விபூஜா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி சுப்பரமணியம் மற்றும் தனலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், பரமேஸ்வரி, நடராசா, மகேஸ்வரி, கிருஷ்ணப்பிள்ளை, தர்மலிங்கம் செல்லம்மா, சந்திரகுமாரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.01.2018) திங்கட்கிழமை முற்பகல் 8 மணியள வில் நுணாவில் மத்தி சாவகச்சேரியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வடமராட்சி புலோலி ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நுணாவில் மத்தி,
சாவகச்சேரி.

தகவல்
குடும்பத்தினர்.

(ACH.296(11.17)

இராஜலட்சுமி (குஞ்சு) - 021 227 0921, 077 877 8419,
தர்மலிங்கம் - 076 550 6932, வனிதா (கனடா) - 00169055098114
வினோ (லண்டன்) - 0044 203 6096 397,
வானதி (கனடா) - 00164720 37839

மரண அறிவித்தல்

மகாலிங்கம் உதயராணி



தோற்றம் 14.02.1968 மறைவு 11.01.2018

நெடுந்தீவு கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற கதிர்காமு கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும் 53/3, முரசுமோட்டையைப் பிறப்பிடமாகவும் 113, பெரியகுளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மகாலிங்கம் உதயராணி கடந்த 11.01.2018 வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.01.2018) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பெரியகுளம், கண்டாவளை.
077 020 6398

(K 494/)

தகவல்:
குடும்பத்தினர்.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 08 . 04 . 1965

சிவன் அடியில் 25 . 01 . 2017

அமரர் நல்லையா கண்ணதாசன்
(ஆசிரியர்)

திதி: திரயோதசி

ஆண்டொன்று போனாலும்
அழியாது நம் துயரம்
உறவுகளுக்கெல்லாம் உற்ற துணையாகி
மாணாக்கருக்கு நல்லாசானாகி
கண்மூடி விழிப்பதற்குள் கணப்பொழுதில்
நடந்தவைகள் நிஜம் தானா

அன்னாரின் ஆத்மா இறைவனின் பாதார விந்தங்களை சென்றடைய பிரார்த்திக்கின்றோம்

323, நாவலர் வீதி,
இலுப்பையடிச் சந்தி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(CS.12223) (13.17)

ஓராண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 19 . 04 . 1936

ஆண்டவன் பிடியில் 26 . 12 . 2016

அமரர் செல்லத்துரை துரைசிங்கம் (JP)

[ஓய்வுபெற்ற ஆசிரியர், சங்கத்தானை மீனாட்சி அம்மன் ஆலய முன்னாள் தர்மகர்த்தா, தலைவர் மற்றும் போசகர், சங்கத்தானை சாரதா சனசமூகநிலைய ஸ்தாபகர், பூநகரி பரம்பன் கிராய் தமிழ்கலவன் பாடசாலை ஸ்தாபகர்]

திதி: திரயோதசி

ஓராண்டு சென்றாலும் துயரினின்று எம்மால்
மீண்டுவிட முடியவில்லை
உம் வாழ்வின் நினைவலைகள் எப்போதும்
எம் சுவாசத்தில் கலந்திருக்கும்
கண்காணா தொலைவிற்கு சென்றிட்ட உம்மால்
எண்ணில்லா துயருடன்
உம் ஆத்ம சாந்திக்காக தியானிக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அம்பிகா இல்லம், குறுக்கு வீதி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

மீளாத் துயருடன்,
குடும்பத்தினர்.

விளம்பரங்களுக்கு
advt@uthayan.com,
021 493 1111

உலகின் தலைசிறந்த ஆங்கில பயிற்சிப்பட்டறை

உலகின் தலைசிறந்த ஆங்கில பயிற்சிப்பட்டறையாக 7th World Scientific Congress இனால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

வாழ்க்கையைக் கட்டியெழுப்பும் இடம்

British Way English Academy

இலங்கையின் முதலாவது ஆங்கிலத்துக்கான பயிற்சிப்பட்டறை

SLIM

நிட்டம்புவ | காலி | மாத்தறை | அநுராதபுரம் | நுகேகொட | கம்பஹா | யாழ்ப்பாணம்
நீர்கொழும்பு | கண்டி | குருநாகல் | கிரிபத்கொட | இரத்தினபுரி | எம்பிலிப்பிட்டிய

இரண்டு மாத காலப் பயிற்சி — 02 Months

காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை திங்கள் முதல் வெள்ளி வரை இரண்டு மாத காலப் பயிற்சி வழங்கப்படும்.

இப்பயிற்சியானது பிரித்தானியா மற்றும் அனேக நாடுகளில் கையாளும் விதத்தில் இரண்டு மாதத்திற்குள் ஆங்கில அறிவே இல்லாத ஒருவருக்கு கற்பிக்கும் முறைமைக்கேற்ப இலங்கையிலும் விசேடமாக யாழ் மண்ணிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியின் மூலம் 100% ஆங்கிலத்தை சரளமாக பேச வைக்க முடியுமென இக்கல்வியகம் உத்தரவாதம் அளிக்கின்றது.

30, January, 2018 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

வார இறுதி வகுப்புகள் — 04 Months

காலை 8.30 முதல் 4.00 மணி வரை பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில்

வார இறுதி வகுப்புகள் ஞாயிறு காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை நான்கு மாத காலம் நடைபெறும். தொழில் செய்பவர்களுக்கு இப்பயிற்சிநெறி மிகவும் உகந்ததாகும்.

28, January, 2018 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

KIDS' Class Grade 1-10

சனிக்கிழமைகளில் காலை 8.30 முதல் 12.30 வரையும் மாலை 1.00 முதல் 4.00 வரையும்

சிறுவர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த பாடநெறியானது மாணவர்களின் ஆங்கிலம் தொடர்பாக காணப்படும் பயத்தை நீக்கி அவர்களின் சிறந்த எதிர்காலத்திற்கான சரியான வழியை காண்பிப்பதற்காக விசேடமாக தயாரிக்கப்பட்டுள்ளது

சேர்வதற்கு இன்றே பதிவு செய்யவும்

IELTS

சனிக்கிழமைகளில் மாலை 1.30 முதல் 5.30 வரை

சேர்வதற்கு இன்றே பதிவு செய்யவும்

British Way English Academy

Contact (Jaffna Branch) : 021 300 55 55

No.15, Kannathiddy, Jaffna. (In front of the Shivan Kovil)

முகவர் தேவை

ஆயுர்வேத திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட பிரசித்தி பெற்ற மருந்துகளை வடக்கு / கிழக்கு மாகாணங்களில் விநியோகிக்க அனுபவம் வாய்ந்த விநியோக முகவர் தேவை.
(கவர்ச்சிகரமான சலுகைகள் வழங்கப்படும்.) (N 9287) (14.17)

077 755 3014

MAJESTIC CINEPLEX A CEYLON THEATRES CINEMA Jaffna

கார்கில்ஸ் ஸ்குவெயர்

(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில்







விசாரணை ☎ 021- 2227712

Find us on facebook MajesticCineplexSL

www.ceylontheatres.lk

தேவை

தெகிவளை பகுதியில் நன்கு ஸ்தாபிதமான சங்கிலித் தொடர் குடும்ப றெஸ்ரோறன்ஸ்களுக்கு அனுபவம் வாய்ந்த இறைச்சி வெட்டுபவர் உடனடியாக தேவை. தெகிவளைக்கு அருகில் வசிப்பவராக இருக்க வேண்டும். கவர்ச்சிகரமான சம்பளமும் சேவைப்படியும் வழங்கப்படும்.

077 919 7661

விற்பனைக்கு

ஓமந்தை மாணிக்க வளவுச் சந்திக்கு முன்பாக A9 வீதியில், 02R, 3.3P, வீட்டுக்கிணறு, கழிவறையுடன் கூடிய உறுதிக்காணியும், மாணிக்க வளவுச் சந்திக்கு அருகில் புகையிரத பாதைக்கு மேற்குப் பக்கத்தில் 09A, 02R, 28p பண்ணை விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு: 077 6910010, 077 4910158

தேவை

நன்கு ஸ்தாபிதமான சங்கிலித் தொடர் குடும்ப றெஸ்ரோறன்ஸ்களுக்கு அனுபவமுள்ள சீன சமையற்காரர்கள், சோறு கறி சமைக்கும் சமையற்காரர்கள், சமையலறை உதவியாளர்கள் உடனடியாகத் தேவை. தேவைப்படின் உணவும் தங்குமிடமும் வழங்கப்படும்.

076 664 3423

வேலையாள்கள் தேவை

கொழும்பிலுள்ள Restaurant ஒன்றுக்கு ஆள்கள் தேவை.

- காசாளர் (Cashier)
- சமையல் உதவியாளர் (Kitchen Helper)

உடன் தேவை.
அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

071 803 7742, 077 373 2580

தேவை

பிரபலமான சங்கிலித் தொடர் குடும்ப றெஸ்ரோறன்ஸ்களுக்கு அனுபவம் வாய்ந்த வெயிட்டர்கள் உடனடியாக தேவை. கவர்ச்சிகரமான சம்பளமும் சேவைப்படியும் வழங்கப்படும். தேவைப்படின் உணவும் தங்குமிடமும் வழங்கப்படும். (N 8284) (14.17)

076 664 3423

Pizza Hut

மலரும் தைப்பொங்கல் திருநாள்
உங்கள் அனைவருக்கும்
அதிர்ஷ்டம், செல்வம்
மற்றும் வளத்தை பெற்றுத்தரட்டும்!

பிட்சா ஹட்மிருந்து நல்வாழ்த்துக்கள்!

இலக்கம் 600, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்

(0112) 729 729
(0114) 729 729

இணையதளம் மூலம் ஆர் செய்ய
www.pizzahut.lk

இலவச App ஐ தரவிறக்கம் செய்ய

ANDROID APP ON Google play

Available on the iPhone App Store

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு
021 493 1111
advt@uthayan.com,

திடீர் பலிக்கும் மந்திரம்

தீராத நோயா? தீராத கடனா? பசு மாடுகள் விருத்தி வேண்டுமா? ஒருவரை ஒருவர் வசியம் செய்ய வேண்டுமா? வீட்டுக்காவல் செய்ய வேண்டுமா? தேவைகளுக்கு

காலசித்தர் Rev.P.K.சாமி J.P ஜயா
மலையாள மாந்திரீக உச்சாட்ட பீடம்,
இல.23, மேலிட் றோட், கொட்டாஞ்சேனை.
(Kotahena) கொழும்பு - 13
011 2342 463/64 WhatAPP- 077 7588405

கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் தலைவரும் சட்டத்தரணியும் முன்னாள் நீதிபதியுமான **திரு. இ. வசந்தசேனன்** அவர்களின் புதல்வி

திருமதி **காயத்திரி காசிதாசன்**

அவர்களது மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சைவ பரிபாலனசபையினர், 66, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.

வேலைவாய்ப்பு

எமது நிறுவனத்துக்கு Salesmen/ Girl தேவை. சம்பளம் மற்றும் கமிஷன் வழங்கப்படும். சுயவிவரக்கோவையுடன் நேரில் வரவும்.

077 764 3322 / info@remlk.com

FS Printers

357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com

வீடு வாடகைக்குண்டு

இரண்டு மாடியைக் கொண்ட நவீன வசதியுடன் கூடிய (A/C) அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. (நேரில் பார்வையிடலாம்) (அலுவலக பாவனைக்கும் Restaurant ஆக பயன்படுத்துவதற்கும் உகந்தது) மாதாந்த வாடகை 70, 000/=

075 908 2636/ 075 208 2636
99/7, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

ENGLISH PERSONAL CLASSES

ஆங்கிலம், பிரத்தியேக வகுப்புக்கள்
அனுபவம் மிக்க ஆசிரியரினால்
உங்கள் வீட்டிற்கு வந்து
கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு - 077 658 9443
K. சிவா, யாழ்ப்பாணம்

DISTRIBUTORS WANTED

விநியோகஸ்தர்கள் தேவை வடமாகாணம்

கொழும்பில் இயங்கிவரும் பழக்கலவை குளிர்பானம் (Nectar Drink), Cup Drink, மற்றும் Sweets தயாரித்து விநியோகிக்கும் நிறுவனத்திற்கு வடமாகாணத்தில் விநியோகஸ்தர்கள் தேவை.

கொடுப்பனவுகள்: கவர்ச்சிகரமான கொமிஷன், வாகன கொடுப்பனவு, விற்பனை பிரத்தி கொடுப்பனவு
தகைமைகள்: வங்கி உத்தரவாதம், களஞ்சிய வசதி

தொடர்பு: 076 374 2131

வேலையாள்கள் தேவை

புடைவைக் கடைக்குப் பெண் விற்பனையாளர்கள் தேவை.
முன்னனுபவம் விரும்பத்தக்கது.

வேம்படி ரெக்ஸ்ரைல்
273, 275 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
077 990 1002, 021 221 6834,
021 221 7741

அனெக்ஸ் வாடகைக்கு

ஆனைப்பந்தியில் அனெக்ஸ் வாடகைக்கு உண்டு.
உத்தியோகத்தர்களுக்கு உகந்தது.

அம்பாள் மரக்காலைக்கு பக்கத்து ஒழுங்கையில்
New No:- 371/3,
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

வான் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள ஒப்பந்த அடிப்படையில் அரச பொறியியலாளர் பயன்படுத்திய நல்ல நிலையிலுள்ள (JQ- இலக்க Toyota Hiace (DIESEL Convert) வான் விற்பனைக்கு அல்லது பெறுமதி அடிப்படையில் Car/ வீட்டுப் பாவனை வானுக்கு மாற்றீடு செய்யலாம்.

077 604 0920/077 308 6440

DIPLOMA IN TEACHING

A new way training for English medium teachers

Cert/ Dip in Primary Geo/ICTteaching
Cert/ Dipin Primary Science teaching
Cert/ Dip in Primary English teaching
Cert/ Dip in Primary Math teaching
Cert/ Dip in Pre School teaching

6 Free seats Available!!
Conditions apply

Eligibility:
Pre school
O/L - Eng, Math Primary
A/L - 2 Passes in Math / Science

REGISTRATION OPEN!

100 % JOB GURANTEED! SALARIES MATCHING THE GOVT.TEACHER!
ONLY 12 CANDIDATES ENROLEED!
6 MONTHS ON THE JOB TRAINING!

Duration: Certificate - 18 mnts, Diploma - 2.5 years

Visahlam Further Education College
127/1 Temple Road, Jaffna.
admin@visalamholdings.com 021 221 9695 075 979 9695

GREENY GLOBAL PROMOTORS(Pvt)Ltd.

பாதுகாப்பான சூழலுக்காக நாங்கள்



இனிய பொங்கல் வாழ்த்துக்கள்

மீள் சுழற்சிக்குட்படுத்த கூடிய பொலித்தின் மற்றும் பிளாஸ்டிக் பொருள்களை கொள்வனவு செய்யும் எமது சமுதாய பொறுப்பு வாய்ந்த நிறுவனமானது பொங்கல் தின நல்வாழ்த்துக்களை வாடிக்கையாளர்கள், நண்பர்கள் மற்றும் ஆதரவளர்களுக்கு தெரிவித்து நிற்கின்றோம்.

சகல வகையான பொலித்தீன், பிளாஸ்ரிக் மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுகளை வழங்குவதற்கு நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்

024 792 2550 / 077 610 9957

உரிமையாளர்கள் மற்றும் உழியர்கள்.

CIM UK இன் MARKETING பாடநெறிகள்

இப்பொழுது யாழ் நகரில்!!

WHY CIM?

10% Discount on Tuition fee

1.) பட்டய சந்தைப்படுத்தல் தொழிற்பண்பட்டவர் தகுதி! Charted Marketer status
2.) O/L உடன் பட்டப்படிப்பு பட்ட மேற்படிப்பிக்கான நுழைவாயில்! Earn your Degree/Masters Just with O/L
3.) Sri Lankan, UK, Ausi MBA விற்கான அடிப்படை தகுதி!
4.) சந்தைப்படுத்தல் தொழிற்போட்டி சார் மேம்பாடு! Competitive Advantage
5.) சந்தைப்படுத்தல் துறையின் சமீபத்ய மாற்றங்கள் தொடர்பான மேம்பட்ட அறிவு! Keep up with latest trends in Marketing
6.) உலகளாவிய பட்டய சந்தைப்படுத்தல் அங்கீகாரம்! Interntional Marketer Recognition.



CIM

Classes from 20th Jan 2018!

Visahlam Further Education College
127/1 Temple Road, Jaffna.
Phone: 021 221 9695 Mobile: 075 979 9695
Email: admin@visalamholdings.com

10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

சோமு திரவியசிங்கம்



தோற்றம்
15.10.1942

மறைவு
14.01.2008

நீங்கள் இவ்உலகை விட்டு நீங்கி ஆண்டுகள் பத்து சென்றாலும்
எம்மை விட்டு நீங்காத உங்கள் நினைவுகள் என்றும் பசுமையாகவே இருக்கும்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

நவாலி வடக்கு, மானிப்பாய். குடும்பத்தினர்.

(C 31746) (14,17)

மரண அறிவித்தல்

திருமதி **பாக்கியம் பொன்னையா**



யாழ். ஆவரங்கால் சிவன் வீதியை பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் பொன்னையா நேற்று முன்தினம் (12.01.2018) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசித் தம்பி - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், அச்செழுவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான செல்லப்பா - தங்கப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பொன்னையா (ஓவசியர்) அவர்களின் அன்பு மனைவியும், நாகராணி, சிவானந்தராஜா (விநாயகர் ஸ்ரோர்ஸ், புத்தூர்), தவராஜா (ஆசிரியர், இடைக்காடு மகாவித்தியாலயம், அறிவகம் கல்வி நிலையம் - அச்சுவேலி, சிவன் கல்வி நிலையம் - புத்தூர்), திலகராஜா (லண்டன்), காலஞ்சென்ற யோகராஜா ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான பஞ்சாட்சரம், சாந்தலிங்கம் மற்றும் இராமநாதன், காசிநவரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், நவரத்தினம் (சாலை பொறியியலாளர் - இ.போ.ச - காரைநகர்), தேவிகா, பராசக்தி, மோகனா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், ரேகா (ஆஸ்திரேலியா), யயந்தி (ஆசிரியை - ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம்), புஸ்பகுமார் (நிலைய பொறுப்பதிகாரி, பளை புகையிரத நிலையம்), சுஜீவன் (ஆஸ்திரேலியா), வித்தியாசாகர் (சிரேஷ்ட விற்பனை அதிகாரி - கோஸ்வே பெயின்ற்ஸ்), நிரூபா (வருமான பரிசோதகர் - வலி கிழக்கு பிரதேச சபை, புத்தூர்), கீதாஞ்சலி, சிவாஞ்சலி (மாணவிகள்), செந்தூரன் (லண்டன்), பானுஷா (லண்டன்) ஆகியோரின் அருமைப் பேர்த்தியும், சிரேக்ஸ்னா (ஆஸ்திரேலியா), ரேஜல் (ஆஸ்திரேலியா), காசினி, மதுஷிகா, கரிஸ்ணி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுத்திகிரியைகள் நாளை (15.01.2018) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியள வில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் கரதடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் வீதி,
ஆவரங்கால், புத்தூர்.

(சி.எஸ். 12897)
(13.17)

தகவல்:
பொ. சிவானந்தராஜா (மகன்)
பொ. தவராஜா (மகன்)

FS Printers

அனைத்தும்
தனித்துவமான
கணினி வடிவமைப்புடன்



021 492 7471,
021 492 7472
esprintersjaffna@gmail.com
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

உதயன்

விளம்பர
தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111

வெளிநாடுகளுக்கான
பொதிகள் சேவை

11 kg மேற்பட்ட பொதிகளுக்கு UK-550/-
1 kg க்கான கட்டணம் France - 700/-
Germany - 650/-
ஏனைய நாடுகளுக்கும் விசாரி விலைக் கழிவு பொதிகள் அனுப்பி வைக்கப்படும் Swiss - 750/-
Canada - 950/-
சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் நிபுணத்துவம் வாய்ந்தவர்களூடாக செய்து கொடுக்கப்படும்

திருமுருகன் கொம் நெற் (பிறைவெட்) லிமிடெட்

26, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். (ஆனந்தன் முதலாளி அருகாமையில்)
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
10, பிரதான வீதி, மெல்லிப்பழை
மிரிஸ்ஸ, மன்னார்.
077 755 4528
3-5 Working Days
DHL aramex SKYNET

வேலையாள்கள் / வழங்குநர்கள் தேவை

யாழ் நகரில் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் புதிய 5 மாடி கட்டடத்திற்கு கீழ்வரும் வேலையாள்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றனர்.

- உப ஒப்பந்தக்காரர் (Sup-- Contractors) சட்டரிங், கம்பிவேலை, மேசன்வேலை
- வேலையாள்கள் - சட்டரிங், கம்பிவேலை, மேசன் கூலி
- வழங்குனர்கள் - மண்ல், செங்கல்

கவர்ச்சிகரமான சம்பளம், தங்குமிடவசதி, நாளாந்தச்செலவு பணம் என்பன நிறுவனத்தால் வழங்கப்படும்.

(ஞ 12863)(12-17)

RN. Construction P/L Work Site
No.474 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு :-
த.ரதிகரன் - 077 238 3469
சி.நிருத்தன் - 077 2060 662
காரியாலயம் - 021 5673 180



(10)

VACANCY ANNOUNCEMENT

AgoySoft (Pvt) Ltd

A PREMIUM SOFTWARE DEVELOPERS

AgoySoft

1. Receptionist
   - A young dynamic, qualified, dedicated with pleasant Personality.
   - Having an excellent Verbal and written Skills in English and Tamil.
   - Sinhala Knowledge is an added advantage.

2. Management Assistants
   - A Pass in both mathematics and English Ordinary Level Examination is a must.
   - 3 Passes in A/L (Bio, Maths, Technology streams are preferable).

3. Accounts Assistant
   - AAT Completed / Degree/ Part qualified in CIMA/ CMA/ ICA or Similar qualification.
   - Good inter personal Skills and good Communication Skills in English
   - Age below 30 Years.

4. Developers
   - A Degree or Equivalent qualification in IT field.
   - Experience will be Considered as an asset.
   - Age limit between 18 to30.



FORWARD YOUR CV TO Career@agoysoft.com WITHIN 7 DAYS.
☎ 021 205 2393
NO.273, ADIYAPATHAM ROAD, KOKUVIL EAST JAFFNA

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.01.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.

உதயன்

14.01.2018



கலை இலக்கிய பொங்கல் மலர் 2018

சுதந்திரப் பயிர்...

கவிதை



மகாகவி பாரதியார்

தண்ணீர் விட்டோ வளர்த்தோம்? சர்வேசா! இப்பயிரைக்
கண்ணீராற் காத்தோம் கருகத் திருவுளமோ?
எண்ணமெலாம் நெய்யாக எம்முயிர் னுள்வளர்ந்த
வண்ண விளக்கிஃது வடியத் திருவுளமோ?
ஓராயிர வருடம் ஓய்ந்து கிடந்த பின்னர்
வாராது போல வந்த மாமணியைத் தோற்போமோ?
தர்மமே வெல்லுமெனும் சான்றோர்சொல் பொய்யாமோ?
கர்ம விளைவுகள் யாம் கண்டதெலாம் போதாதோ?
மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதுவும்
நூலோர்கள் செக்கடியில் நோவதுவுங் காண்கிலையோ?
எண்ணற்ற நல்லோர் இதயம் புழுங்கியிரு
கண்ணற்ற சேய்போற் கலங்குவதுங் காண்கிலையோ?
மாதரையும் மக்களையும் வன்கண்மை யாற்பிரிந்து
காத லிளைஞர் கருத்தழிதல் காணாயோ
எந்தாய்! நீ தந்த இயற்பொருளெ லாமிழந்து
நொந்தார்க்கு நீயன்றி நோவழிப்பார் யாருளரோ?
இன்பச் சுதந்திரம்நின் இன்னருளாற் பெற்றதன்றோ
அன்பற்ற மாக்கள் அதைப்பறித்தாற் காவாயோ?
வான் மழை யில்லையென்றால் வாழ்வுண்டோ? எந்தைசுயா
தீன்மெமக் கில்லை யென்றால் தீனரெது செய்வோமே?
நெஞ்சகத்தே பொய்யின்றி நேர்ந்ததெலாம் நீ தருவாய்
வஞ்சகமோ எங்கள் மனத்தூய்மை காணாயோ
பொய்க்கோ உடலும் பொருளுயிரும் வாட்டுகிறோம்?
பொய்கக்கோ தீராது புலம்பித் துடிப்பதுமே?
நின்பொருட்டு நின்னருளால் நின்னுரிமை யாம்கேட்டால்,
என்பொருட்டு நீ தான் இரங்கா திருப்பதுவோ?
இன்று புதிதாய் இரக்கின்றோமோ? முன்னோர்
அன்று கொடு வாழ்ந்த அருமையெலாம் ஓராயோ?
நீயும் அறமும் நிலைத்திருத்தல் மெய்யானால்
ஓயுமுனர் எங்களுக்கிவ் ஓர்வரம் நீ நல்குதியே.

மீண்டும் தொடங்கும் மிடுக்கு...

கவிதை



மகாகவி உருத்திரமூர்த்தி

மப்பின்றிக் காலமழை காணாத மண்ணிலே
சப்பாத்தி முள்ளும் சரியாய் விளையாது
ஏர்ஏறாது காளைஇழுக்காது எனினும் அந்தப்
பாறை பிளந்து பயன் விளைப்பான் என் ஊரான்

ஆழத்து நீருக் ககழ்வான் நாற்று
வாழத் தன் ஆவி வழங்குவான் ஆதலால்
பொங்கி வளர்ந்து பொலிந்தது பார் நன்னெல்லு

வாடும் வயலுக்கு வார்க்கா முகில் கதிர்கள்
சூடும் சிறுபயிர்மேல் சோ என்று நள்ளிரவிற்
கொட்டும் உடன் கூடும் கொலைக்காற்றும் தானுமாய்
எட்டுத் திசையும் நடுங்க முழங்கி எழும்
ஆட்டத்து மங்கையர்போல் அங்கு மொய்த்து நின்ற
பயிர்
பாட்டத் வீழ்ந்தழிந்து பாழாகிப் போய் விடவே
கொள்ளைபோல் வந்து கொடுமை விளைவித்து
வெள்ளம் வயலை விழுங்கிற்று பின்னர் அது
வற்றியதும் ஓயா வலக்கரத்தில் மண் வெட்டி
பற்றி அதோபார் பழையபடி கிண்டுகிறான்
சேர்ந்தவற்றை முற்றும் சிதற வைக்கும் வானத்தைப்
பார்த்தயர்ந்து நிற்கும் பழக்கமற்றோன் வாழி அவன்
ஈண்டு முதலில் இருந்தும் முன்னேறுவதற்கு
மீண்டும் தொடங்கும் மிடுக்கு

கவிதை



புதுவை இரத்தினதுரை

அள்ளிவர ஏன் ஆசை வரவில்லை

வடித்து இறக்கினால்
ரோஜா நிறத்தில் பூத்திருக்கும்
'பூநகரி மொட்டைக்கறுப்பன்' சோறு
கரைத்துக் காய வைத்த
களிமண்போல
பசைப் பிடிப்பாகக் குழையும்
'பலாலி' மரவள்ளிக் கிழங்குக் கறி
பொன்னாலைப் பாலத்து சிறுதிரளிக் குழம்பு
எல்லாம் குழைத்து ஒரு கவளம்
செத்தவன் நாக்கிலும் நீரூறும்
உண்டு மகிழ்ந்து எத்தனை நாளாச்சு?
சாப்பிட வாய்க்கு ஒருபிளவு பாக்கும்
சாறு பிழியும்
'மாவிட்டபுரத்து' குருத்து வெற்றிலையும்
வாய்க்கு ருசி
சாப்பிட்டால் நாக்கு சிவக்கும்
எத்தனை நாளாச்சு?
எங்கள் நிலம்
எங்கள் கடல்
ஆனால் போக முடியவில்லையே
உனக்கேன் கோபம் வரவில்லை?
மொட்டைக் கறுப்பனை மறந்து
சீனத்துப் பச்சையுடன் திருப்தி கொண்டாயா?
'ஆனையிறவில்' உப்பு வீணில் கரைகிறது
அள்ளிவர உனக்கேன் ஆசை வரவில்லை?
இழந்தவற்றை மீளப்பெற எழும்பு.

கவிதை



இ.முருகையன்

ஒரு முனையில் திரள்க

செல் திசை ஏது?
இனி நாம் செய்வது
யாவது?
எனத்
தீட்டுக திட்டம்.
உடன்
ஓட்டுக உட்பகையை
புல்லென எண்ணி
வெறும் பூசல்கள்
சூழ்கிறவர்
போயொழிவார்,
நமது உட்போர்கள்
ஒழிந்து விடின்.

ஒருவர் உரைப்பதனை
உளறல் எனப் பிற பேர்
ஒழிய மறுப்பதிலும்
'பகிடி' நகைப்பதிலும்
அரிய பகற் பொழுதும்
அகல் இரவுப்
பொழுதும்
அழிவு தனிற்பட நாம்
அலைவது
நற்செயலோ?

தலைமை பிடிப்பதிலும்
தமை உய்ய
வைப்பதிலும்
சமயம் இதிற் புகுதல்
தமிழை அறப்பதுவே!

தொலைக
வறுப்புரைகள்
சுயநலம் அற்றொழிக.

தொழில்கள் மிகப் பெருக
விழிகள் திறப்படைக.

அறம் ஒழிவித்தவரின்
அநீதி செகுத்திடவும்
அழகு தமிழ்க்கும்
அரியணையை
அளித்திடவும்
திறமை அனைத்தினையும்
செயல்பட வைத்திடவும்
செருவில் அறப்படையின்
ஒரு முனையில் திரள்க.

முனை ஒருமித்து
எதிரி முகம் அடி பட்டு விழும்
முறைமையில்
இக்கணமே
அறிநெறியிற் பெருக இனிய
தமிழ்க்கு உரிய
இடம் உற எத்தடையும்
இலை எனும்
அப்பெரிய
நிலைமை பிறப்படைய.

இந்த மலரில் இணைந்துள்ள படைப்பாளிகள்

கட்டுரைகள்

1. மனோன்மணி சண்முகதாஸ் 4
2. கோகிலாமகேந்திரன் 7
3. பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் 8
4. சாந்தினி சிவநேசன் 11
5. விஜயலட்சுமி சண்முகராஜா 11
6. தே. தேவானந் 12
7. கலாநிதி இராஜேந்திரராணி ஞானேஸ்வரன் 14
8. ச.லலீசன் 18
9. பேராசிரியர் அ.சண்முகதாஸ் 20
10. நா.யோகேந்திரநாதன் 21
11. அ.யேசுராசா 24
12. இ.இராஜேஸ்கண்ணன் 29
13 கே.எஸ். சிவஞானராசா 31
14. கலாநிதி கந்தையா சிறிகணேசன் 32
15. தி.தவரட்ணம் 34
16. கு.டிலீப் அமுதன் 37
17. அ.அஜந்தன் 38
18. கே.பாலன் 39
19. செ.யோசப்பாலா 40
20. தி.செல்வமனோகரன் 41
21. தேவராஜா விஜிதா 43
22. உடுவிலூர் கலா 43
23. ம.ந.கடம்பேசுவரன் 44
24. ஜெயபாரதி கௌசிகன் 46
25. தெணியான் 47
26. கே.ரி.கணேசலிங்கம் 48
27. வி.எஸ்.தங்கராஜா 49
28. சூ.ராஜப்பிரகாஸ் 50
29. வ.க.இராஜேஸ்வரன் 51
30. பேராசிரியர் நா.சண்முகலிங்கன் 57
31. பேராசிரியர் சபா ஜெயராசா 59
32. க.பரணீதரன் 63
33. ஜ.சாந்தன் 65
34. க.நா.சபாரட்ணம் 73
35. செ.செல்வராஜா 76
36. நா.நவராஜ் 84
37. மருத்துவர் சி.யமுனாநந்தா 86
38. கட்டடக் கலைஞர் இ.மயூரநாதன் 88
39. பேராசிரியர் வ.மகேஸ்வரன் 90
40. சி.றமேஸ் 97
41. கலாநிதி கிருஷ்ணவேணி 99
42. அ.விஜயகிருஸ்ணன் 107
43. பா.துவாரகன் 110
44. பேராசிரியர் செ.யோகராசா 114
45. இரா. சந்திரசேகர சர்மா 116
46. கலாநிதி.சு.குணேஸ்வரன் 117
47. அருணாசெல்லத்துரை 120
48. மதுரகவி.கரை.எம்.பி.அருளானந்தம் 132

கவிதைகள்

1. சி.கருணாகரன் 6
2. எஸ். தர்சி 15
3. ம.சி.சந்திரபோஸ் 26
4. கிரிஷாந் 28
5. செல்லையா குமாரசாமி 33
6. நா.கீர்த்தலோஜினி 35
7. க.ஸ்ரீகர்ஷன் 38
8. பொ.யோகேஸ்வரன் 42
9. இரா.ஜெயக்குமார் 44
10. த.அஜந்தகுமார் 45
11. தவ தஜேந்திரன் 53
12. சி.ப.வேந்தன் 55
13. நெடுந்தீவு கே.யோகேஸ் 58
14. சோ.பத்மநாதன் 60
15. தர்மினி ரஜீவன் 62
16. கை.சரவணன் 66
17. ந.சத்தியபாலன் 68
18. விவேகானந்தனூர் சதீஸ் 70
19. ம.பா.மகாலிங்கசிவம் 70
20. கோகுலராகவன் 72
21. யாத்திரிகன் 75
22. நாக.சிவசிதம்பரம் 77
23. கு.ரஜீவன் 79
24. வேலணையூர் தாஸ் 81
25. வேல்நந்த குமார் 83
26. யோ.புரட்சி 87
27. த.சிவகுமாரன் 94
28. த.ஜெயசீலன் 98
29. முருகு 100
30. சித்தாந்தன் 108
31. க.சட்டநாதன் 111
32. பா.பாலாஜினி 116
33. பி.வி.ஜோசப் 119
34. சி.ஜெயசங்கர் 122
35 வேலணையூர் சுரேஸ் 124
36. மித்ராஞ்ஜனி கனக புனிதராஜா 126
37. வெற்றிச்செல்வி 128
38. உமாசுத சர்மா மாதவி 130
39. டானியல் சௌந்தரன் 131
40. கந்தபோரின்பம் 132

சிறுகதைகள்

1. கே.ஆர்.டேவிட் 5
2. இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன் 27
3. குப்பிளான் ஐ.சண்முகன் 36
4. யமுனாராணி செந்தில்பாலன் 45
5. மலரன்னை 52
6. த.கலாமணி 54
7. தொல்புரம் சி.கதிர்காமநாதன் 56
8. யோகேஸ்வரி சிவப்பிரகாசம் 61
9. உடுவில் அரவிந்தன் 67
10. தேவிபரமலிங்கம் 69
11. சந்திரா தனபாலசிங்கம் 71
12. ந.மயூரரூபன் 74
13. ஏ.ஜே.ஞானேந்திரன் 78
14. நெடுந்தீவு மகேஷ் 80
15. நடராசா இராமநாதன் 82
16. மிருசுவில் தமிழ்தாசன் 95
17. தையிட்டி அ.இராசதுரை 109
18. செ.டானியல் ஜீவா 112
19. ஆர்.எஸ்.ஆனந்தன் 115
20. ஜனதா ஜோர்ச் 123
21. இந்திரா ஆனந்தன் 125
22. ப்ரியமதா பயஸ் 127
23. தெல்லிப்பழையூர் தி.சிதம்பரபாரதி 129
24. சி.காசிப்பிள்ளை 131

நேர்காணல்கள்

1. விரிவுரையாளர் வ.பாலமுருகன்
நேர்கண்டவர்
ந.ஜெயதாஸ் 16
2. மருத்துவர் சா.சிவயோகன்
நேர்கண்டவர்கள்
நா.நவராஜ்,
ந.ஞானசூரியர் 101

பக்க வடிவமைப்பாளர்கள்

ஆ. வேணி





க.தபீந்திரன்



கட்டுரை

மங்கல விளக்கு ஏற்றுவோம்



பேராசிரியர்
மனோன்மணி சண்முகதாஸ்

வடமராட்சி – தும்பளையைச் சேர்ந்தவர். இளங்கலைமாணி, முதுதத்துவமாணி, முனைவர் பட்டங்களைப் பெற்றிருக்கும் கல்விமான். உலக மாநாடுகள், கருத்தரங்குகள் பலவற்றில் ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பித்திருக்கிறார். ஜப்பான் – கக்சுயின் பல்கலைக்கழக ஆய்வு நிலைப் பேராசிரியராக இருந்தவர். பல ஆய்வுக்கட்டுரைகளை தமிழ், ஜப்பானிய, ஆங்கில மொழிகளில் எழுதியிருக்கிறார்.



ஒளியை வேண்டி ஏற்றப்படுவது விளக்கு. மனிதனுடைய அரியதொரு கண்டுபிடிப்பு. இயற்கையோடு மனிதன் இயைந்து வாழ்ந்த தொன்மைக் காலத்தில் அவனுடைய இருட்சூழலை நீக்க இரண்டு சுடர்கள் துணைநின்றன. கதிரவனும் நிலவும் அந்த இரண்டு சுடர்களாக நிலவின. இந்த இரண்டு சுடர்களும் பகலையும் இரவையும் ஒரு நாளை இரண்டு பகுதிகளாக மனிதன் உணர வழிசெய்தன. அவை கொடுத்த ஒளியிலே மனிதன் காலத்தின் கடப்பைக் கண்டு தனது நாளாந்தக் கடமைகளைத் திட்டமிட்டுச் செய்தான். பகலையும் இரவையும் தன் முயற்சிக்கும் உடல் ஓய்வுக்கும் பயன்படுத்தினான். மனிதனுடைய நாடோடிவாழ்வில் இவை இரண்டுமே அவனை வழிநடத்தின.

ஆனால், மனிதன் அலைந்து திரியாமல் ஓரிடத்தில் நிலையாக வாழ எண்ணியபோது மலைக்குகைகளையும், குடில்களையும் உறைவிடங்களாகப் பயன்படுத்தினான். அந்தக் கட்டத்தில் அவன் நெருப்பைக் கண்டுபிடித்தான். மூங்கில்கள் காற்றின் விரைவால் ஒன்றோடொன்று உராயும்போது தீப் பற்றின. அது மனிதனுக்கு இன்னொரு இயற்கையான ஒளியைக் காட்டியது. இத்துடன் சில உறுதியான கற்களை ஒன்றோடு ஒன்று உரசும்போது நெருப்புப் பொறி தோன்றியது. அந்தப் பொறியிலே காய்ந்த சருகுகளை இட்டபோது அது தீயாகப் பரவியது. வேட்டையாடி வந்த விலங்குகளின் தசையை நெருப்பிலிட்டு உண்டபோது அது புதிய சுவை தந்தது. அவ்வாறு நெருப்பிலிடும்போது விலங்குகளின் உடற்கொழுப்பு உருகியது. அதிலிருந்து 'நெய்' என்னும் எரிபொருள் மனிதனுக்குக் கிடைத்தது. வெடித்துத்திறந்த இலவம்காயின் பஞ்சுப்பகுதியில் அந்த 'நெய்'யைத் தோய்த்து அதில் நெருப்பைப் பற்ற வைத்தபோது விளக்கு என்னும் 'ஒளிதரு கலன்' உருவாகியது.

பின்னர் நீர்நிலைகளினருகிலும் கடற்கரையிலும் மனிதனுடைய குடியேற்றம் பரவியபோது மீனின் கொழுப்பும் எரிபொருள் நெய்யாகக் கிடைத்தது. இந்த ஒளி விளக்கின் தகழிகள் மண் அகல்களாக மாறின. செம்பு, இரும்பு போன்ற உலோகங்கள் கண்டுபிடிக்கப்பட்டபோது குத்துவிளக்குகள் உருவாகின. மனிதன் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுப் பண்பட்ட வாழ்வை மேற்கொண்டபோது ஆடு, மாடு, எருமை போன்ற விலங்குகளின் பாலிலிருந்து நெய்யைப் பெற்றான். அந்த 'நெய்', விளக்குகளுக்குப் பயன்படுத்தப்பட்டது. இதன் பின்னர் மரங்களின் விதைகளிலிருந்தும் நெய்யைப் பெறும் வழியை அறிந்தான். அதனால் தேங்காய், இலுப்பை, எள், வேம்பம்விதை என்பவற்றிலிருந்தும் நெய் பெறப்பட்டது. வீடுகளிலும் வழிபாட்டிடங்களிலும் செல்லும் வழித்தடங்களிலும் விளக்குகள் எரியத் தொடங்கின. இந்த விளக்குகள் பற்றிய செய்திகள் தொன்மை இலக்கியங்களிலே பதிவு செய்யப்பட்டுள்ளன.

சிறப்பாகத் தமிழர் வாழ்வியலில் விளக்கு ஒரு பண்பாட்டு மரபாகப் பேணப்படுகிறது. வையக மெங்கும் ஒளிதரும் கருவியாக விளக்குப் பயன்பட்டாலும், தமிழர் வாழ்வியலில் அதன் வகிபாகம் தனித்துவமானது. இன்று மின் விளக்கிலே வாழ்வு நடத்தும் தலைமுறை பண்டைய பண்பாட்டு நிலையையும் அறிய வேண்டும். எனவே விளக்குப் பற்றிய தமிழிலக்கியப் பதிவுகளை இந்தக் கட்டுரை வழங்கவுள்ளது.

தமிழிலக்கியத்தில் விளக்கு

தமிழிலக்கியத்தில் விளக்குப் பற்றிய பதிவுகள் வீடு, சமூகம், வழிபாடு என்ற மூன்று நிலைகளிலே உள்ளன. இந்த இணைப்பு நிலையை அப்பருடைய பாடல் ஒன்று வருமாறு சுட்டிக்காட்டியுள்ளது.

"இல்லக விளக்கை இருள் கெடுப்பை
கொல்லக விளக்கை கோதி உள்ளை
பல்லக விளக்கை பலரும் காண்பை
நல்லக விளக்கை நமச்சிவாயவே"

இல்லகம், பல்கலம், நல்லகம் என்ற மூன்றிடங்களிலும் ஏற்றப்படும் விளக்குகளின் பயன்கள் இங்கு விளக்கப்பட்டுள்ளன. இத்தகைய மூன்று நிலையான விளக்குகளிலும் அடிப்படையாக வழிபாட்டுணர்வே செறிந்திருக்கின்றது. அப்பர் முதலில் குறிப்பிடும் இல்லக விளக்கு ஏற்றலைத் தொன்மை இலக்கியமான நெடுநல்வாடை மிகத் தெளிவாக, வருமாறு பதிவு செய்துள்ளது.

"மடவரல் மகளிர் மிடைசெய் செவ்வி
யரும்பின் பைங்காற் பித்திகத்
தவ்வித ழவிழ்பு பதஞ் சுமழ் பொழுதின்
திருமுகஞ் செய்வினைக் கிரீஇந்நிற் கொளீஇ
நெல்லும் மலரும் தூவிக் கைதொழுது
மல்ல லாவண மாலை யயர்....."
(நெடுநல்வாடை: 39-44)

அந்தக் காலத்தில் இளம் பெண்கள் விளக்கேற்றும் பணியைச் செய்தனர். அவர்கள், மாலைக் காலத்தில் மலரும் பித்திகையால் விளக்கேற்றும் வேளை வந்ததை உணர்ந்தனர். உடனே விளக்கேற்றுவர். வீடுகளில் விளக்கு ஏற்ற இரும்பினால் செய்யப்பட்ட விளக்குகளே அப்போது பயன்படுத்தப்பட்டுள்ளன. நெய்யினால் ஈரமாகியதிரிகளைக் கொளுத்துகின்றனர். விளக்கின் ஒளியிலே இறைவனைக் காண்கின்றனர். அதனால் ஏற்றிய விளக்கின் அடியிலே நெல்லையும் மலரையும் தூவி வழிபாடு செய்கின்றனர். இந்த வழிபாடு வீட்டு வழிபாடாக நீண்ட காலம் நிலவியுள்ளது.

இவ்வாறு விளக்கேற்றி வழிபாடு செய்யும் பண்பாட்டு மரபு மங்கல நிகழ்வுகளிலும் பேணப்பட்டதைத் தமிழின் தொன்மை இலக்கியம் பதிவு செய்துள்ளது.

"உழுத்து தலைப் பெய்த கொழுங்கஞ் சிறுதலை
பெருஞ் சோற்று அமலை நிற்பெறூஉம் நாள்
தண் பெரும் பாத்தர் தருமணல் எருவின்
மனைவிளக் குறுத்த மாலை தொடங்கி
கனை இருள் அகன்ற கவின்பெறு காலை..."
(அகநானூறு: 86)

உழுத்தம் பருப்பை நிறையச் சேர்த்துச் சமைத்த குழைவாக வெந்த இனிய பொங்கலின் பெரிய உருண்டைகளை அங்கே கூடியிருந்து உண்ணும் செயற்பாடு இடையறாது நடந்துகொண்டிருந்தது. அந்த வீட்டிலே வரிசையாகக் கால்களிட்ட பெரிய பந்தரும் இருந்தது. அந்தப் பந்தலின் தரையிலே நல்ல வெண்மணல் பரவப்பட்டிருந்தது. மனை விளக்குகளை ஒரு பக்கம் ஏற்றி வைத்திருந்தார்கள். எங்கும் பூமாலைகள் தொங்கவிடப்பட்டிருந்தன. அப்போது அடர்த்தியான இருள் அகன்ற அழகான காலைப் பொழுதாக இருந்தது. இந்தச் சொல்லோவியத்தை ஆக்கியவர் நல்லூர் கிழார் என்னும் புலவர். அவர் வீட்டிலே மனைவிளக்கு ஏற்றப்படும் நடைமுறையைப் பதிவு செய்துள்ளார். இந்த விளக்கு மங்கல விளக்காகத் திகழ்கிறது. எனவே 'மங்கல விளக்கு' என்பது ஒரு நிகழ்வின் தொடக்கத்தில் ஏற்றப்படும் விளக்காகும். வீட்டிலே மாலை நேரத்தில் ஏற்றப்படும் விளக்குகள் ஒளியைத் தரும் விளக்குகளாக இருந்தாலும் சிறப்பு நிகழ்வின்போது ஏற்றப்படும் விளக்கே சிறப்பாக 'மங்கல விளக்கு' என இன்றுவரை அழைக்கப்படுகிறது. எனவே இந்த விளக்கு ஒரு பல்லக விளக்காகவிளங்கியது. நாட்டார் நடைமுறைகளில்.

இன்று விளக்கு

இன்றும் 'விளக்கடியில் வைத்தல்' என்னும் நடைமுறை வழக்கில் உள்ளது தாய்மனையில் வடகிழக்கு மூலையில் எப்போதும் ஒரு விளக்கு எரிந்து கொண்டிருக்கும். அந்த விளக்கினடியில் படையல் செய்யப்படும். பின்னர் வீட்டிலுள்ளோர் அதைப் பகிர்ந்துண்பர். ஒவ்வொரு நாளும் இந்த மடை செய்வதாகவிருந்த இந்த வழக்கம் இப்போது அருகிவிட்டது. ஆனால் இரண்டு சிறப்பான நாள்களில் இந்தப் படையல் செய்யும் நடைமுறை இன்றும் வழக்கிலுள்ளது. கார்த்திகை விளக்கீடு அன்றும், தைப்பொங்கல் அன்றும், மாலை இந்த விளக்கீட்டுப் படையலைச் செய்வர். கார்த்திகையில் பனம்கிழங்கின் பயனாகப் பெற்ற ஒடியல் பிட்டு அந்தப் படையலிலே சிறப்பாக இடம்பெறும். தைப்பொங்கல் படையலில் புலால் உணவு சிறப்பாக இடம்பெறும். இறந்த தம்முடைய முன்னோர்களுக்காக இந்தப் படையலைச் செய்வதாக நம்பியே படையல் செய்யப்படுகிறது. மாலை நேரம் விளக்கடியில் இந்தப் படையலைப் படைத்துப் பின்னர் அதை எல்லோருமாகப் பகிர்ந்து உண்ணும் நடைமுறை தமிழரிடையே வழக்கமாக இருந்துள்ளது.

மங்கல விளக்கு:

ஒரு செயற்பாட்டைத் தொடங்கும்போது விளக்கு ஏற்றித் தொடங்கும் மரபு நீண்ட காலமாக இருந்துள்ளது. பொதுவாக இருளை நீக்க ஏற்றப்படும் விளக்கை விட இந்த விளக்கு வேறுபட்டது. மங்கலப் பொருள்கள் எட்டு வகைப்படுத்தப்பட்டுள்ளன. அதை அட்ட மங்கலம் என அழைத்தனர். கவரி, நிறைகுடம், கண்ணாடி, தோட்டி, முரசு, விளக்கு, பதாகை, இணைக்கயல் என்னும் அட்ட மங்கலத்தில் ஒன்றாக இருப்பதால் விளக்கு 'மங்கல விளக்கு' என்ற சிறப்புப் பெயரைப் பெற்றது. அது எங்கே ஏற்றப்பட்டாலும் மங்கலமான செயற்பாடாகவே அமைகிறது. அது இறைவழிபாட்டுச் சூழலை ஏற்படுத்துகிறது. இறைவனை ஒளிவடிவிலே காண மங்கலவிளக்கு இறைவடிவமாகத் தோன்றுகின்றது. இதனால் தான் மங்கல விளக்கு ஏற்றப்படும்போது எல்லோரும் எழுந்து நிற்பர். வழிபாடு செய்யும் சூழலில் நிற்பதை உணர்வர். இந்தப் பண்பாட்டு நடைமுறையை இன்று பல முதியவர்களே கைவிட்டுவிட இளையதலை தடுமாறி நிற்கிறது.



இந்த ஆண்டுக்கான 'ஏ.எல்.' பரீட்சை தொடங்கி இன்று ஆறாவது நாள். சரசு கலைப் பிரிவு மாணவி. அவளுக்கு இன்றுதான் பரீட்சை ஆரம்பமாகின்றது. இன்று அவளுக்குத் தமிழ்ப் பாடம். கடந்த இரவு முழுவதும் சரசுவாலும், பொன்னம்மாவாலும் தூங்க முடியவில்லை.



சரசுவுக்கு மட்டுமல்ல...!

"அட்மிசன் காட் எடுத்தீங்களா...?" அன்புராசா பாதர் கேட்கிறார்.
"எடுத்திட்டன் பாதர்' சரசு அடக்கமாகப் பதில் கூறுகிறாள். "பேனை, பென்சில்... மேலதிகமாப் பேனை, பென்சில் கொண்டு போக வேணும்..." "இருக்குப் பாதர்..." "கேள்விப் பேப்பரை நிதானமாய் வாசிச்சு விளங்க வேணும்... கேள்வி எவ்வளவுக்கு விளங்குதோ... அவ்வளவுக்கு விடை தெளிவாய் அமையும்... விடைத்தாளிலை ஒவ்வொரு பக்கத்துக்கும் இலக்கமிட வேணும்..." சரசுக்கு அறிவுரை கூறிய அன்பு பாதர், தனது வலது கையைச் சரசுவின் உச்சந் தலையில் பரப்பி வைத்து, தனது கண்களை மூடிச் செபிக்கிறார்...

அன்பு பாதரின் வலது கைப் பெருவிரல் சரசுவின் நெற்றியில் சிலுவை அடையாளமிடுகிறது.
"ஆண்டவன் உங்களை ஆசீர்வதிப்பார்... சந்தோசமாய்ப் போட்டுவாருங்கோ... நிச்சயமாக நீங்கள் சித்தியடைவீர்கள்..." அன்பு பாதர் முழு மனதோடு அவளை வாழ்த்துகிறார். புறப்பட்ட சரசு, திரும்பித் தாயைப் பார்க்கின்றாள். தொப்புள் கொடி உறவு கலந்த பார்வை. தாயின் உதடுகள் துடிக்க, அவளது கண்கள் கலங்குகின்றன.
"போட்டு வா சரசு..." பொன்னம்மாவின் வார்த்தைகள் அவளது கருப்பையிலிருந்து வெளிவருகின்றன. சரசு புறப்படுகின்றாள்.

இந்த ஆண்டுக்கான 'ஏ. எல்.' பரீட்சை தொடங்கி இன்று ஆறாவது நாள். சரசு கலைப்பிரிவு மாணவி. அவளுக்கு இன்றுதான் பரீட்சை ஆரம்பமாகின்றது. இன்று அவளுக்குத் தமிழ்ப் பாடம். கடந்த இரவு முழுவதும் சரசுவாலும், பொன்னம்மாவாலும் தூங்க முடியவில்லை.
"சரசு எனக்கு வயதாகிப் போச்சு... உடம்பும் ஏலாமல் வந்திட்டிது... நான் இன்னும் எவ்வளவு காலம் இருக்கப் போறனோ தெரியாது. நீ உன்ரை காலிலை நிக்க வேணுமெண்டால் உனக்கொரு வேலை வேணும்,... அதுக்கு நீ இந்தச் சோதினையிலை பாசாக வேணும். நீ பாசாகியிட்டால் அன்பு பாதர் எப்படியாவது ஒரு அரசாங்க வேலை தேடித் தருவதாகக் கூறியுள்ளார். அவர் நல்ல மனிசன். அவர் சொன்னால் கட்டாயம் செய்வர். நீ உன்ரை வயித்தைக் கழுவுறதுக்கு, உனக்கு நிரந்தரமானதொரு வருமானம் இருக்கவேணும். நீ இந்தச் சோதினையிலை பாஸ் பண்ணி உனக்கொரு வேலையும் கிடைச்சிட்டால் நான் சந்தோஷமாய்க் கண்ணை மூடுவன்" பொன்னம்மா திரும்பத் திரும்பச் சரசுக்கு இதைத்தான் சொன்னாள்.
"அம்மா...! நான் சோதினையிலை பாஸ் பண்ணுவன். அன்பு பாதர் எனக் கொரு வேலை தேடித் தருவர். நான் உழைச்சுச் சம்பாரிச்சு. ஒரு காணி வாங்கி, அதிலை ஒரு வீடு கட்டி, அந்த வீட்டிலை உன்னை வாழவைப்பனம்மா"
சரசு தாய்க்குக் கூறினாள். பொன்னம்மா சரசுவின் பேச்சைக் கேட்டுப் பூரித்துப் போனாள். 'கற்பனை' என்ற உணர்வு நிலையொன்று மனிதனது சிந்தனையில் இல்லாமல் போயிருந்தால்...
ஏழைகளால் 'சந்தோஷம்' என்ற அந்த உன்னதமான உணர்வு நிலையை எந்தக் காலத்திலும் அனுபவிக்க முடியாமல் போயிருக்கும்...?

◆ ◆ ◆

நீண்டு போய்க் கிடக்கும் கண்டி வீதியில் அமைந்துள்ள பரந்தன் சந்தி -மூன்று வீதிகளின் சந்திப்பு முனை - முற்சந்தி. பரந்தன் சந்தியிலிருந்து புதுக்குடியிருப்பு நோக்கி நீண்டிருக்கும் வீதியில், ஏறத்தாழ மூன்று கிலோ மீற்றர்கள் தூரத்தில் அமைந்துள்ள முரசுமோட்டைக் கிராமம். இதுதான் பொன்னம்மாவின் பூர்வீகக் கிராமம். பொன்னம்மா தனது குடும்பத்துடன் குடியிருந்த தாய்நிலம், அவளது பாட்டன் வழிச்சொத்து. பொன்னம்மா, அவளது புருஷன் கதிரேசு, மூத்த மகள் சரசு என்று அழைக்கப்படுகின்ற சரஸ்வதி, சரசுவுக்குக் கீழ் இரண்டு ஆண் பிள்ளைகள். ஐந்து பேரைக் கொண்ட குடும்பம். கதிரேசு மேசன் வேலையைத் தொழிலாகக் கொண்டிருந்தான். பொன்னம்மா தோட்டம் செய்தாள். பிள்ளைகள் மூவரும் படித்துக் கொண்டிருந்தனர். சிறப்பான வாழ்க்கையை அவர்கள் வாழ்ந்தார்கள் என்று கூறமுடியாவிட்டாலும், இரைப்பை காய்ந்து போகாதளவுக்கு வாழ்ந்தார்கள் என்று கூறலாம்.
தமிழீழப் பிரதேசமாக இருந்த வன்னிப் பெருநிலப் பரப்பை இலங்கை இராணுவத்தினர் கைப்பற்றியபோது ஒரு தொகுதி இராணுவத்தினர் பரந்தனுக்கூடாகவும் முன்னேறினர். 2009ஆம் ஆண்டின் முற்பகுதியில் ஒரு நாள் இரவு...
முரசு மோட்டையிலும் முரசுமோட்டையைச் சூழவுள்ள கிராமங்களையும் நோக்கி இராணுவத்தினர் ஷெல் குண்டுகளைப் பரவலாக ஏவினர். ஒரு குண்டு பொன்னம்மாவின் வீட்டு முகட்டில் வீழ்ந்து வெடித்தது. கதிரேசுவும், இரண்டு ஆண் பிள்ளைகளும் உடல் சிதறிப் பலியாகினர், சரசுவின் இடது கை முளங்கையோடு துண்டாடப்பட்டது. பொன்னம்மா காயப்பட்டாள்...
அதன் பின்பு என்ன நடந்ததென்று பொன்னம்மாவுக்கோ, சரசுவுக்கோ தெரியாது. என்ன நடந்திருக்கும்....? வழமைபோல்தான் நடந்திருக்கும்... கரவலையில் அகப்பட்ட மீன்களைக் கரையேற்றி... பிரப்பம் கடகங்களில் நிறைப்பதுபோல... பிணங்களைப் பொறுக்கி ரைக்ரரில் ஏற்றி... 'பைக்கோ' இயந்திரத்தால் பெருங்குழி தோண்டி... அந்தக் குளிக்குள் பிணங்களை நிரப்பி மூடப்பட்டிருக்கும்...
அங்கு காயப்பட்டவர்கள் வவுனியா ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்தனர். பொன்னம்மாவுக்கும், சரசுவுக்கும் ஏற்பட்ட அதிர்விலிருந்து மீண்டு சுய நிலைக்கு வரப் பல நாள்கள் பிடித்தன.
"அம்மா இனிமேல் விளக்கீட்டுக்குப் பந்தம் தேடவேண்டிய அவசியமில்லை... என்ரை கையிலை எண்ணையை ஊத்திக் கொழுத்தலாம்..." சரசு தனது இடது கையைத் தூக்கிக் காட்டியபடி அழுதழுது தாய்க்குக் கூறினாள்.
பொன்னம்மா தனது தலையில் அடித்துக் குரல் வைத்து அழுதாள்...! அந்த நோயாளர் விடுதியில் தங்கியிருந்த சிங்கள நோயாளர்கள் கூடக் கண்கலங்கிப் போயினர்....
இந்து சமயத்தைச் சேர்ந்தவர்களுக்குக் கார்த்திகை மாதத்தில் 'விளக்கீடு' என்றொரு அனுட்டான தினம் வரும். இந்தத் தினத்தில், இந்து சமயத்தவர்கள், தடிகளின் ஒரு பக்க முனைகளில் சீலைத் துண்டைச் சுற்றிப் பந்தமாக்கி அந்தப் பந்தத்தில் தேங்காய் எண்ணையை ஊற்றிக் கொளுத்துவார்கள்.
சரசுவும் விளக்கீட்டுத் தினத்தில் தனது வீட்டு வாசலில் 'பந்தம்' கொழுத்தியிருக்கிறாள். இப்போது அவளது இடக்கை முளங்கைப் பகுதியோடு அஸ்தமனமாக்கி, அந்தப் பகுதியின் முனையில் மருத்துவர்கள் 'பன்டேஜை' சுற்றியிருந்தனர்.
அது விளக்கீட்டுக்குக் கொழுத்துகின்ற 'பந்தம்' போலிருந்தது. அதைத் தான் சரசு இப்போது கூறினாள்.
இப்படி எத்தனை சரசுகள் இந்த மண்ணில்...?
ஏறத்தாழ இரண்டு மாதங்களின் பின்னர் சரசுவுக்கான சிகிச்சை முடிந்து ஆஸ்பத்திரியை விட்டு வெளியேற வேண்டிய காலம் வந்தது.
"ஐயா...! நாங்கள் அநாதைகள். எங்களை ஒரு அநாதை விடுதியிலை சேர்த்து விடுங்கோ..." பொன்னம்மா கூப்பிய கரங்களோடு வைத்திய சாலை அத்தியட்சகரிடம் யாசித்தாள்.
வைத்தியசாலையின் அத்தியட்சகர் ஒரு சிங்களவர். அவரது அலவலக மேசையில் ஒரு புத்தர் சிலை. தினசரி அந்தப் புத்தர் சிலைக்கு மலர் வைத்துத்தான் அவர் தனது கடமைகளை ஆரம்பிப்பார்.
சரசுவை மேலும் இரண்டு நாள்கள் நோயாளர் விடுதியில் தங்க வைத்து, ஒரு கத்தோலிக்க சுவாமியாரோடு தொடர்பு கொண்டு, அவரை

சிறுகதை



கே. ஆர். டேவிட்

ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளரான இவர், ஆனைக் கோட்டையைச் சேர்ந்தவர். ஈழத்தின்சிறுகதையாளர்களில் ஒருவராவார். "அவர் பார்வையாளராகவிருந்து கதை படைப்பதில்லை. பங்காளியாக இருந்தே கதை படைப்பவர்" எனச் 'சிரித்திரன்' சுந்தர் இவர் பற்றிக் குறிப்பிடுகிறார். 'வரலாறு அவளைத் தோற்றுவிட்டது' என்ற வீரகேசரி வெளியீடான நாவலுடன் இவரது எழுத்துக்கள் படைப்புக்கள் ஆயின. இத்துடன் பத்துக்கு மேற்பட்ட சிறுகதைத் தொகுப்புக்களை வெளியிட்டவர். 'நீரில் கிழித்த கோடுகள்' இறுதியாக வெளிவந்தது.

பிரளித்துமை...

யாரோ செந்நிறமாக வானத்தை மாற்றிக் கொண்டிருக்கும்
பின் மதியத்தில்
எதிர்பாராத விதமாகத் தேவாலயத்தின் மணியொலித்தது
அந்த மணியொலியில் கலையாமல் வந்தமர்கின்றன புறாக்கள்
பிரார்த்தனை மண்டபத்தில்
கூடிய புறாக்கள் ஆண்டுகளாயிரமாய்
சிலுவையிலே அறையப்பட்டிருக்கும் கிறிஸ்துவை
விடுவிப்பதைப் பற்றியும்
இன்னும் காயதோடிக் கொண்டிருக்கும் குருதியைப் பற்றியும் பேசின
துக்கம் தாளாத மேரியின் கண்களிலிருந்து
துயரோசை எழுந்து கேவியது
ஏதோ சத்தம் கேட்கிறதேயென்று அங்கே வந்த
குருவானவர்
எல்லாவற்றையும் கண்டு அதிசயித்தார்
என்ன ஏதென்று புரியாத பதற்றத்தோடு
தேவாலயத்தை விட்டு அவசரமாக வெளியேறிச் சென்றார்.
அதே வேகத்தோடு உள்ளே வந்தாள் காஜா
அந்தக் கணத்திலேதான்
சிலுவையிலிருந்து விடுவிக்கப்பட்டார் கிறிஸ்து
ஓடிச் சென்றவள் ஆரத்தழுவி அவரை முத்தமிட்டாள்
காயங்களின் மீது மருந்திட்டாள்
சிலுவையிலிருந்து விடுதலையாகிய கிறிஸ்துவை
காடுகள். மலைகள். ஆறுகள். வெளிகள். சமுத்திரங்கள்.
நகரங்கள். கிராமங்கள். தோட்டங்கள் எல்லாம் கடந்து
அழைத்துச் சென்றாள் காஜா தன்னுடைய வீட்டுக்கு
சந்துகளின் வழியே அவர்கள் சென்று கொண்டிருந்தபோது
ஓரிரவில் ஏழுபேர் புணர்ந்து களைத்த பெண்ணொருத்தி
கிறிஸ்துவை அடையாளம் கண்டு அழைத்தாள்
குனிந்து அவளுடைய கண்களில் தழும்பிய
துயரத்தில் முத்தமிட்டார் கிறிஸ்து

பிறகு மூவருமாகச் சேர்ந்து காஜாவின் வீட்டில் நுழைந்தனர்
அங்கே கைளை நீட்டியவாறு நின்றது கைவிடப்பட்டிருந்த சிலுவை
"ஆயிரமாயிரமாண்டுகளாய் உங்களோடிருந்தேனே
விட்டுச் செல்லவும் விலகியிருக்கவும் முடியுமா நம்மால்" என்றது கிறிஸ்துவிடம்
ஓடிச்சென்று அதை ஆரத்தழுவிக் கொண்டார் கிறிஸ்து
காலத்தைப் பிளந்து வழிந்தோடியது அமுதம்

கவிதை



சி. கருணாகரன்

கிளிநொச்சி – இயக்கச்சி எனும் கிராமத்தைச் சேர்ந்தவர். எழுத்தாளர், சுயாதீன ஊடகவியலாளர், இதழாளர், பதிப்பாளர், விமர்சகர் எனப் பல தளங்களிலும் 1980களின் முற்பகுதியில் இருந்து ஈடுபட்டு வருகிறார்.. இவருடைய எழுத்துக்கள் தமிழ் இலக்கியப் பரப்பில் இவருக்கான தனித்துவத்தை எப்போதுமே கொண்டிருக்கின்றன. கட்டுரைத் தொகுதிகள், சிறுகதைகள், கவிதைத் தொகுதிகள் போன்றவற்றை எழுதி வெளியிட்டுள்ளார். இவருடைய கவிதைகள் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டும் வெளியாகியிருக்கின்றன.

சரசுவுக்கு...

ஆஸ்பத்திரிக்கு வரவழைத்துச் சரசுவையும், பொன்னம்மாவையும் அவரிடம் ஒப்படைத்தார். பறப்பதற்கு வலுவற்ற தாய்ப் பறவையையும், ஒரு இறக்கையை இழந்த குஞ்சுப் பறவையையும் அந்தக் கத்தோலிக்க சுவாமியார் பொறுப்பேற்றுக் கொண்டார். பொறுப்புக் கொடுத்தவர் ஒரு பௌத்தன். பொறுப்பை ஏற்றுக்கொண்டவர் ஒரு கத்தோலிக்கன். பொறுப்பாயிருப்பவர்கள் இந்துக்கள்.

◆ ◆ ◆

அன்புராசா... யாழ்ப்பாணத்தில், சாவகச்சேரிப் பிரதேசத்திலுள்ள அடைக்கலநாயகி தேவாலயத்தின் பங்குத் தந்தையாக இருந்தார். இந்த ஆலயத்தின் பின்புறமாக ஆலயத்தோடு தொடர்புபட்டுப் பங்குத் தந்தையின் விடுதி அமைந்திருந்தது. இந்த விடுதிக்குப் பின்னால், புறம்பாக நான்கு அறைகளுடன் கூடியதொரு மண்டபம் அமைந்திருந்தது. இந்த மண்டபம் நீண்ட காலமாகப் பாவனையற்றிருந்தது.
அன்பு பாதர் அந்த மண்டபத்தைப் பயன்படுத்த முடிவு செய்தார். தேவாலயத்தைச் சூழவுள்ள அனைத்து மதத்தினரையும் அரவணைத்துக் கத்தோலிக்க மேலிடத்தின் அனுமதியோடு அந்த மண்டபத்தை ஒரு அநாதைகள் விடுதியாக்கினார். 'அன்புக் கரம்' என்ற பெயரில் அந்த விடுதி இயங்கியது.
ஏறத்தாழ ஒரு வருடம் சென்றிருக்கும்...
அங்கிருந்த அநாதையான மக்களைப் பயன்படுத்தி அதையொரு தொழிற்சாலையாக்கினார். இந்தப் பிரதேசத்திலுள்ள தேவாலயங்களுக்கு வேண்டிய மெழுகுவர்த்தியும், தேவாலயங்களில் நடக்கின்ற பூசைப் பலியின்போது பாவிக்கப்படுகின்றன. 'வைன்' என்ற திரவமும் இங்கு உற்பத்தி செய்யப்பட்டன. இந்த உற்பத்தியில் கிடைக்கின்ற வருமானம் அனைத்தும் அங்கு தங்கியிருக்கும் அநாதைகளுக்கே பயன்படுத்தப்பட்டது.
இங்குதான் சரசுவும், பொன்னம்மாவும் தங்கவைக்கப்பட்டனர். சரசு, பொன்னம்மா உட்பட இந்த விடுதியில் முழுவதுமாகப் பதினெட்டுப் பேர் தங்கியிருந்தனர். இந்த விடுதியில் தங்கியிருந்த சிறுவர்களுக்குப் பக்கத்தில் உள்ள பாடசாலையில் கல்வி வசதியையும் அன்பு பாதர் ஏற்படுத்திக் கொடுத்திருந்தார். சரசுவும் இந்தப் பாடசாலையில் சேர்க்கப்பட்டாள்.

வவுனியா ஆஸ்பத்திரி அத்தியட்சகரிடமிருந்து சரசுவையும், பொன்னம்மாவையும் பொறுப்பேற்ற பொழுது வறுமை வெக்கையில் உலர்ந்து போயிருந்த அவர்களின் தோற்றங்களையும், குறிப்பாகச் சரசுவின் 'விளக்கீட்டுப் பந்தம்' போன்ற அவளது இடது கையையும் பார்த்துத் தனக்குள் அழுது கொண்டார் அன்புபாதர். பொன்னம்மா வாழ்க்கைப் பயணத்தில் பல மைல்களைத் தாண்டியவள். ஆனால், சரசு...? வாழ்க்கையின் ஆரம்பப் புள்ளியில் நிற்பவள். இவளின் எதிர்காலம்...?
சரசு அழகானவளா? அல்லது கவர்ச்சியானவளா? அல்லது பொருள் வளம் உள்ளவளா? போதாதற்கு ஊனமாகிப் போன கை. பொன்னம்மாவுக்குப் பிறகு இவளது வாழ்க்கை...? சூனியமாகிப்போன சரசுவின் வாழ்க்கைக்குக் கல்விதான் துடுப்பாக அமையும் என்று அன்பு பாதர் நம்பினார். படித்து ஏதோவொரு அரச பதவியில் அமர்வதன் மூலந்தான் இவளால் எதிர்காலத்தில் தனது சொந்தக் காலில் நிற்க முடியும் எனத் தனக்குள் தானே முடிவு செய்து கொண்டார்.
காலம் நகர்ந்தது... 'அன்புக்கரம்' ஓரளவு விரிவடைந்ததோடு, உறுதியையும் பெற்றிருந்தது. மெழுகுவர்த்தி, 'வைன்' என்பவைகளோடு இன்னும் சில உள்ளூர் உற்பத்திகளும் செய்யப்பட்டன.
சரசு 'ஏ.எல்.' வகுப்பு மாணவியானாள்.
அந்தப் பாடசாலையில் கலைப் பிரிவு மட்டுந்தான் இருந்தது. சரசுவும் கலைப் பிரிவு மாணவியாகவே இருந்தாள். சரசு 'ஏ.எல்.' சித்தியடைய வேண்டும். பல்கலைக் கழகம் செல்ல வேண்டும். பட்டதாரி ஆக வேண்டும். என்ற நீண்ட கற்பனைகள் அன்பு பாதரிடம் இருக்கவில்லை. சரசு 'ஏ.எல்.' சித்தியடைந்து ஓர் அரச பதவிக்குரிய தகுதியைப் பெற்றுக் கொண்டால் போதுமென்ற இலக்கே அவரிடமிருந்தது.
சிலவேளை சரசு 'ஏ.எல்.' பரீட்சையில் சிறந்த சித்திகளைப் பெற்று பல்கலைக் கழகம் செல்லும் தகுதியைப் பெற்றால், அதையும் சரசுவுக்குச் சாதகமாகவே அன்பு பாதர் சிந்திப்பாரென்று உறுதிபடக் கூறலாம்.

◆ ◆ ◆

வீட்டிலிருந்து புறப்பட்ட சரசு பரீட்சை நிலையத்தை வந்தடைந்தாள். அவளுக்கு இது புதிய அனுபவமாக இருந்தாலும் தனது சுட்டிலக்கத்தைத் தேடி, அந்த இடத்தில் அமர்ந்து கொண்டாள். அவளது சட்டைப் பையிலிருந்த கைக்கடிகாரத்தைத் தேடி எடுத்து மேசை மீது வைத்தாள். அன்பு பாதர் இவளது பரீட்சைத் தேவைக்காக யாரிடமோ இரவல் வாங்கிக் கொடுத்த மணிக்கூடு. ஒரு பேனையை எடுத்து மேசை மீது வைக்கிறாள். அவள் பரீட்சை எழுதத்தயாராகிவிட்டாள்.
"பரீட்சை ஆரம்பமாகப் போகின்றது... சகல பரீட்சார்த்திகளிடமும் பூரணப் படுத்தப்பட்ட 'அட்மிசன் காட்டும்' தேசிய அடையாள அட்டையும் இருக்க வேண்டும்... உங்களுக்குப் பரீட்சை தொடர்பான ஏதாவது பிரச்சினைகள் இருப்பின்... பரீட்சை ஆரம்பமாதற்கு முன்பே எங்களிடம் வெளிப்படுத்திக் கொள்ளுங்கள்..."
பிரதம மேற்பார்வையாளர் கூறுகின்றார்.
பரீட்சை மண்டபம் அமைதியாக இருக்கிறது.
வினாத்தாள் விநியோகிக்கப்படுகின்றது.
சரசுவுக்கும் வினாத்தாள் விநியோகிக்கப்படுகின்றது...
சரசு வினாத்தாளை வாசிக்க ஆரம்பிக்கின்றாள்....
முதலாவது கேள்வி...

"முதலாவது பகுதியில் உள்ள மூன்று வினாக்களில் ஒன்றைத் தெரிவு செய்து கட்டுரை வரைக?"
1. நடக்கவிருக்கின்ற தமிழ் விழாவில் 'இலங்கையின் பல்லின மக்களுக்கிடையில் சகோதரத்துவத்தை வளர்ப்பதில் இலங்கை அரசு மேற்கொண்ட பொறிய முயற்சிகள்' என்ற தலைப்பில் நீர் அற்றவிருக்கும் உரையை விவரிக்குக.
சரசு கேள்வியைத் திரும்பவும் வாசிக்கின்றாள்... திரும்பத் திரும்ப வாசிக்கின்றாள்... இதயத்தில் ஏதோ ஒருவித வறட்சி...?
சகல மனிதர்களுக்குமே இதயமுண்டு. அந்த இதயத்துள் அவர்களது வாழ்வியல் சார்ந்த அனுபவப் படிமங்களுண்டு. அதுவும் நெருப்புத் தணல் போன்ற அனுபவங்கள். அவளது இதயத்தின் இடது பக்கமாக அமைந்துள்ள இடது கை. முழங்கையோடு அஸ்தமனமாகி விளக்கீட்டுப் பந்தமாய்த் தொங்குகின்றது... வலது கையில் பேனா... விடை எழுத வேண்டும்...! அவளது வலது கைப் பெருவிரலுக்கும், சுட்டு விரலுக்குமிடையில் இருந்த பேனா அவளை அறியாமலேயே வழுவி மேசை மீது விழுகின்றது...?



எண்ணங்களின் மேல் வாழ்தல்

எண்ணிய எண்ணம் கடந்து நின்றானே' என்று திருமூலர் திரு மத்திரத்தில் கூறுவார். இறைவன் எமது எண்ணங்கள் எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டவன், எமது எண்ணங்களுக்குள் இறைவனை அடக்கிவிட முடியாது என்று கூறலாம். அல்லது எமது மனம் எண்ணங்களைக் கடக்கும்போது இறை அனுபவம் சாத்தியப்படும் என்றும் கூறலாம்.

உள அரோக்கியம் மேம்படுவதற்கு மிகச் சிறந்த வழி தியானம் செய்தல் என்று விஞ்ஞானம் ஏற்றுக் கொண்டு விட்ட காலம் இது. இயல்பில் எமது மனம் பல் வேறு எண்ணங்களுக்குள் தொடர்ந்து அலைந்து கொண்டிருக்கும். நிகழும் கணத்தின் அனுபவங்களை எண்ணிப் பார்க்கும். பிறகு கடந்த காலத்தினுள் ஓடும். எதிர்காலம் பற்றிய கனவுகளில், பயங்களில் முழ்கும். திட்டங்கள் தீட்டும். இந்தத் தாறுமாறான ஓட்டத்தைக் குறைக்க வேண்டும். தியானத்தின் ஆரம்பத்தில் ஏதாவது ஒன்றைப்பற்றிமட்டும் எண்ணத்தை வைத்து கொள்ளலாம். அது ஓர் ஒளிச்சுடராக இருக்கலாம். அல்லது சுவாசமாக இருக்கலாம். ஏதாவது ஓர் உருவமாக இருக்கலாம். 'எண்ணம் இறையே'' என்று பொன்வண்ணத்தந்தாதி கூறும். அவ்வாறு ஒரு விடயத்தை மட்டும் சிந்திப்பதற்கான ஒரு பயிற்சியாக உச்சாடனங்களை மேற் கொள்ளலாம். கோயில்களில் மந்திர ஜெபம் செய்வது அதே நோக்கத்துடன் தான். வாய் ஒரு விடயத்தை உச்சரிக்கும் போது மனம் அதைவிட்டு வேறு இடம் செல்வது சற்றுக் கடினம். அதனால் அப்படிச் செய்யத் தொடங்கும்போதே கவ்ட மான உணர்வுகள் குறையத் தொடங்கும். 'சிவகாமி மகனைச் சண்முகனைச் சிந்தனைசெய்மனமே" என்று பாடினால் தீவினை அகலும் என்று கூறுவது அதைத் தான். இன்னொருவகையில் பாரத்தால் குறிப்பிட்ட ஓர் இலக்கை நோக்கி ஒரே எண்ணமாக இருந்தால் அந்த எண்ணம் நிறைவேறுவதற்கான வாய்ப்பு அதிகரிக்கும். ஆயினும் அந்த எண்ணம் மானிட மேன்மை நோக்கியதாய் இருக்க வேண்டும். "எண்ணிய முடிதல் வேண்டும். நல்லவே எண்ணல் வேண்டும்" என்று வேண்டினான் பாரதி. அப்படி ஒரு மித்த மனத்துடன் 'எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி' உண்டாகும் என்று நம்பலாம்.

இவை எல்லாவற்றையும் கடந்த, அழ்ந்த தியானத்தில் எண்ணங்கள் அற்ற நிலை தோன்றும். அந்த நிலை நோக்கிப் பயிற்சி செய்யும்போது அவ்வப்போது எமது கட்டுப்பாட்டை மீறி ஊடுருவும் எண்ணங்கள் எவை என்று அவதானிக்காலம். எண்ணங்களை உருவாக்கும் சுயமும் (thinking self) அதை அவதானிக்கும் சுயமும் (observing self) வேறானவை. எம்மை எப்போதும் அவதானிக்கும். சுயத்தை வலிமைப்படுத்துவது உள ஆரோக்கிய மேன்மையின் முக்கியமானது என அண்மைக்கால ஆய்வுகள் கூறுகின்றன.

சரி, எண்ணம் என்றால் என்ன.? எண்ணம் அற்ற நிலை பேரின்ப நிலை என்றால் எண்ணம் என்பது என்ன என்று சரியாகத் தெரியவேண்டும் அல்லவா?

மனதில் திடீரென்று தோன்றுகிற ஒரு கருத்து அல்லது அபிப்பிராயம் தான் எண்ணம் எனலாம். எண்ணங்களைத் தொடர்ந்து உணர்வுகள் உருவாவதால் எண்ணங்களை உணர்வுகளின் விம்பங்கள் எனலாம். அல்லது உணர்வுகள் உணர்ச்சிகள் எண்ணங்களின் நிழல்கள் ஆகலாம். ஆகவேதான் எமது எண்ணங்கள் மாறுகின்றபோது உலகமே மாறுகிறது என்று கூறுகிறார்கள். மனிதர்கள் தமது எண்ணங்களுக்குக் கொடுக்கும் வடிவமே அவர்களாது செயல்களாகப் பரிணமிக்கின்றன. எண்ணங்கள் தான் ஆத்மாவின் நிறத்தைத் தீர்மானிக்கின்றன என்று கூறப்படுவதுண்டு.

எமது மூளையின் மேற்பகுதி மூளைய மேற் பட்டை எனப்படும். அதில் முன்பக்கமாக அதவாது நெற்றிப்பக்கமாக இருக்கும் ஒரு சோணை முன்நுதல் சோணை. அதுதான் எண்ணங்களுக்குப் பொறுப்பான அதிபர். உணர்வுகளைப் பிரக்ஞை பூர்வமாகக் கையாள்வதிலும் முன்நுதல் சோணைக்கு முக்கிய பொறுப்பு உண்டு. எண்ணங்கள் உண்மைகள் அல்ல.

எண்ணங்கள் எப்போதும் யதார்த்தமானவையாக இருப்பதில்லை அவை கட்டாயம் முக்கிய மானவையாக இருக்க வேண்டும் என்ற அவசியமும் இல்லை. எமது எண்ணம் எப்போதும் எமக்கான கட்டளையாக இருக்க வேண்டுமா? இல்லை எமது எண்ணங்கள் எப்பொதும் புத்தி சாலித்தனமானவையாய் இருக்க வேண்டும், இருக்கும் என்று எதிர்பார்க்கமுடியாது.

எண்ணம் என்பது மொழி. சில வேளைகளில் வெறும் செற்கள், சொற்றொடர்கள் அல்லது வசனங்கள். சில சந்தர்ப்பங்களில் அவை ஒலிகளாய் இருக்கும். அது உண்மையாக இல்லாமல் இருக்காலாம் எமக்கு உதவுவதாய் இல்லாமல் இருக்கலாம் என்பதை மறந்து விடமுடியாது. எப்படியும் எமது எண்ணம் எமக்கு அச்சுறுத்தலாய் அமைவதை அனுமதிக்கமுடியாது. வழமையாக எமது மனம் எமக்கு அவசியமில்லாத, பயனில்லாத, ஆரோக்கியமற்ற எண்ணங்களோடு உறவாடிக் கொண்டிருக்கும். எமது அனுபவங்களை மதிப்பிடு செய்து, மகிழ்வு தாரத அனுபவங்களை எதிர்காலத்தில் தவிர்க்கும்படி கட்டளை இடப் பார்க்கும். அவ்வாறு நாம் தவிர்க்கும்போது அந்த நடத்தைக்கு வேறு காரணங்களைத் தேடிக் கொடுக்கும் வேலையையும் சிந்திக்கும் சுயம் செய்யும். இவ்வாறு மிகச் சிக்கலாகச் சிந்திக்கும் திறன் சிலவேளை வாழ்வின் சில கூறுகளில் உதவும், சிக்கலான சிந்தனை பரீட்சைகளில் உதவலாம். "எண்ணம் மிக்கான்" என்று சேக்கிழார், சுந்தரமூர்த்தி நாயனானரைப் பற்றிக்கூறும்போது "அறிவில் வல்ல ஆரூரன்" என்று தான் கருதுவார்.

இந்த எண்ணங்கள் எமக்குத் தொல்லை தரும்போது பல உளநலப்பிரச்சினைகள் தோன்றுகின்றன. அதற்கு என்ன செய்யாலாம்?

முதலில் எமது எண்ணங்களை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். இந்த எண்ணம் எப்போது எனக்குள் வருகின்றது என்று அவதானிக்கும் சுயம் கண்டுகொள்ள வேண்டும். அது திரும்பத் திரும்ப வருகின்ற கவ்டமான, மறையான எண்ணமாக இருந்தால், அதை ஏற்றுக்கொண்டு பரவலாக்காலாம்.

எண்ணங்கள் செறிவடையும்போது தொல்லை தரும். ஆகவே பரவலாக்கல் வழிமுறைகளைப் பின்பற்றலாம். அந்த எண்ணத்துக்கு ஒரு சுவாரசியமான பெயர் வைக்கலாம். உதாரணமாக அது தற்கொலை எண்ணமாக இருந்தால், "ஆ...ஆ.. அந்தக் கயிற்று எண்ணம்... அவர்தான் வாறார்" என்று அவதானிக்கும் சுயம் குறிந்துக் கொள்ளலாம். அல்லது அதனை ஒரு பாடல்வரி அக்கிப்பாடிப் பார்க்கலாம். பல்வேறு மெட்டுக்களில் மாறி மாறிப் பாடலாம். அந்த எண்ணத்தை அடையாளம் காண உதவியமைக்கு மனதுக்கு நன்றி கூறாலாம். அதே எண்ணத்தை ஒரு விந்தியாசமான குரலில் கூறிப் பார்த்துச் சிரித்துக் கொள்ளாலாம். அதை ஒரு தொலைக்காட்சி பொட்டி முகப்பில் கற்பனையாக எழுதிப் பின் அழித்து விடலாம். அதுவே பல வகைகள் கொண்ட தொடர் எண்ணம் என்றால் அதற்கு இடையிடை சிறு தலைப்புக்கள் வைத்து மகிழலாம். வீட்டின் சுவரில் கற்பனையில் எழுதிப் பார்த்து. அழித்துப் பின் வேறோர் இடத்தில் எழுதலாம். இப்படி விளையாடும் போது எண்ணங்கள் பரவலடைவது இலகுவாகும். அதேசமயம் முடிந்தவரை இந்தக் கணத்தில் என்ன நடைபெறுகிறதோ அது சம்பந்தப்பட்ட எண்ணங்களோடு இருப்பது நல்லது. எமது வாழ்வின் விழுமியங்களை நாமே நிச்சயம் செய்து கொள்ளலாம். விழுமிய வழியில் இலக்குகளை அடைவதற்காக நாம் அர்ப்பணிப்புடன் செலலும் பாதையில் எண்ணங்கள் வரட்டும். அவை வந்த மாதிரிப் போகட்டும் அவற்றோடு போராட வேண்டாம்.

மனம் திறந்து பேசுவது. நேர்மையாக இருப்பது. அன்பாகவும் ஆதராவாகவும் நடந்து கொள்வது போன்ற விழுமியங்களோடு முரண்படாமல் எமது எண்ணங்கள் அமைந்து கொண்டால் வாழ்வு மகிழ்வுடன் முன்னேறும். ஆயினும் எண்ணம் முற்றிலும் அற்ற ஒரு நிலை வாய்க்குமா? சாதராண மனிதர்களுக்கு அது கஸ்டம். அப்படி ஒரு நிலை வாய்க்குமாயின் அதில் இருக்கும் எண்ணங்கள் வரும் நீலைக்குத் திரும்ப யாரும் விரும்பமாட்டார்கள்!

> வழமையாக எமது மனம் எமக்கு அவசியமில்லாத, பயனில்லாத, அரோக்கியமற்ற எண்ணங்களோடு உறவாடிக் கொண்டிருக்கும். எமது அனுபவங்களை மதிப்பிடு செய்து, மகிழ்வு தாரத அனுபவங்களை எதிர்காலத்தில் தவிர்க்கும்படி கட்டளை இடப்பார்க்கும். அவ்வாறு நாம் தவிர்க்கும் போது அந்த நடத்தைக்கு வேறு காரணங்களைத் தேடிக் கொடுக்கும் வேலையையும் சிந்திக்கும் சுயம் செய்யும். இவ்வாறு மிகச் சிக்கலாகச் சிந்திக்கும் திறன் சில வேளை வாழ்வின் சில கூறுகளில் உதவும்

கட்டுரை



கோகிலா மகேந்திரன்

விழிசிட்டி இவரது சொந்த இடம். நாவல், சிறுகதை எழுத்தாளர், நாடக இயக்குநர், உளவளத்துணையாளர் எனும் பன்முக ஆற்றல் மிக்கவர். 'துயிலும் ஒரு நாள் கலையும்', 'தூவனம் கவனம்' போன்ற நாவல்களையும், பிரசவங்கள்', 'வாழ்வு ஒரு வலைப்பந்தாட்டம்', 'மனித சொரூபங்கள்', 'அறிமுகங்கள்', 'வரிக்குயில்' ஆகிய சிறுகதைத் தொகுப்புக்களையும் வெளியீடு செய்திருக்கிறார். உதவிக்கல்விப் பணிப்பாளராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்ற இவர், தற்போது உளவளத் துணை நிலையமான சாந்தியகத்தின் பணிப்பாளர்.



தமிழகத்தை அடுத்து புகழ்பெற்ற சிவாலயங்கள் இருந்த இடமாகத் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள திருக்கோணேஸ்வரத்தையும், மன்னார் மாவட்டத்திலுள்ள திருக்கேதீஸ் வரத்தையும் போற்றிப்பாடுகின்றனர்.

கட்டுரை



பேராசிரியர் ப. புஷ்பரட்ணம்

யாழ்ப்பாணம் பல்கலைகழகத்தின் தொல்லியல் துறை பேராசிரியரான இவர் வரலாறு தொல்லியல் சார் ஆய்வுகளில் தீவிரமாக இயங்கிவருகின்றார். இலங்கை வரலாற்றில் செல்வாக்கைச் செலுத்தும் அளவுக்குப் பல்வேறு ஆய்வுகளை முன்னெடுத்து வரும் இவர், அது சம்பந்தமான பல வியக் கத்தக்க ஆய்வுமுடிவுகளையும்வெளியிட்டு வருகின்றார். பல்வேறு வரலாற்று ஆய்வு நூல்களை வெளியிட்டு வருவதுடன் இலங்கையின்.பல்வேறு திசைகளின் தொல்லியல்வரலாற்றியல்சம்பந்தமான ஆய்வுகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றார்.

தமிழர் வரலாறு பற்றிய ஆய்வில் திருகோணமலை – திருமங்களாயில் கண்டுபிடிக்கப்பட்ட

புராதன சிவன் ஆலயத்தின் வகிபாகம்

இந்து மதமும் திருகோணமலையும்

இலங்கையில் இந்து மதத்தின் தொன்மை தொடர்பாக அதிகசான்றுகள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்களில் ஒன்றாகக் கிழக்கிலங்கையிலுள்ள திருகோணமலை மாவட்டம் காணப்படுகிறது. கண்டுபிடிக்கப்பட்டவை மதம் சார்ந்த சான்றுகளாக மட்டுமன்றி தமிழர் வரலாறு, பண்பாடு பற்றிய சான்றுகளாகவும் காணப்படுகின்றன.







தேரவாத பௌத்த மதத்தை முதன்மைப் படுத்திக் கூறும் இலங்கையின் முதல் வரலாற்றுப் பாளி இலக்கியங்களில் ஒன்றான மகாவம்சம் கி.பி.3 தொடக்கம் 4ஆம் நூற்றாண்டுகளில் அநுராதபுரத்தில் ஆட்சிபுரிந்த மகாசேன மன்னன் காலத்தில் கிழக்கிலங்கையில் இருந்த மூன்று சிவாலயங்களை அழித்து அந்த இடங்களில் பௌத்த ஆலயங்களைக் கட்டியதாகக் கூறுகிறது. வரலாற்று அறிஞர்கள் மகாவம்சம் கூறும் இந்து ஆலயங்களில் இரண்டு திருகோணமலை மாவட்டத்தில் இருந்ததாக அடையாளப் படுத்திக்கூறுகின்றனர். கி.பி. 6ஆம்நூற்றாண்டிலிருந்துதமிழகத்தில்பக்திஇயக்கத்தைத் தலமையேற்று நடாத்திய நாயன்மார், தமிழகத்தை அடுத்து புகழ் பெற்ற சிவாலயங்கள் இருந்த இடமாகத் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள திருக்கோணேஸ்வரத்தையும், மன்னார் மாவட்டத்திலுள்ள திருக்கேதீஸ் வரத்தையும் போற்றிப்பாடுகின்றனர். அதிலும் கோணேஸ்வரர் ஆலயத்தைப் பாடும்போது அதைத்தமிழர்கள் செறிந்து வாழ்ந்த இடமாகக் குறிப்பிடுகின்றனர். அந்தக் காலப்பகுதியில் இங்கு மிகப் பெரிய இந்து ஆலயங்கள் இருந்திருக்கலாம் என்பதைக் கோணேஸ் வரர் ஆலயச் சுற்றாடலில் மேற்கொள்ளப்பட்ட நீரடிஅகழ்வாய்வுகளின்போதுகண்டுபிடிக்கப்பட்ட ஆலய அழிபாடுகளும், கல்வெட்டுக்களும்உறுதிசெய்கின்றன.

பத்தாம் நூற்றாண்டில் இருந்து (கி.பி. 993தொடக்கம்கி.பி.1070வரை)பொலநறுவையைத்தலைநகராகக்கொண்டு சோழர் ஆட்சி செய்த காலப்பகுதியில் திருகோண மலையே அவர்களின் உபதலைநகரமாகவும், அவர்களின் அரசியல், இராணுவ, நிர்வாக, பண்பாட்டு மையமாகவும் விளங்கியது. இலங்கைக்கு 'மும்முடிச் சோழ மண்டலம்' எனப்பெயரிட்டுஅதைத்தலைநகர் தஞ்சையுடன் ஒன்பதாவது மண்டலமாக இணைத்த சோழர், தமிழகத்தைப் போல் இலங்கையையும் மண்டலம், வளநாடு, நாடு, ஊர் எனப் பிரித்து நிர்வகித்தனர். அந்தக்காலப்பகுதியில்சோழர் திருகோண மலையை ஐந்து வளநாடுகளாகப் பிரித்து நிர்வகித்திருந்தனர். இதை இங்கு கிடைத்த சோழக் கல்வெட்டுக்கள் உறுதிசெய்கின்றன. தஞ்சைப் பெருங்கோவிலில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகள் திருகோணமலை யில் இருந்து கொண்டுவரப்பட்ட நெல், இலுப்பைப்பால் முதலான பொருட்கள் பற்றிக் கூறுகின்றன. இவற்றில்இருந்துசோழர் ஆட்சியில் தமிழ்நாட்டில் சோழரின் தலைநகராக இருந்த தஞ்சாவூருக்கும் திருகோண மலைக்கும் இடையே நெருங்கிய தொடர்பிருந்தமை தெரிகிறது. சோழர்களின்தலைநகராகஇருந்த பொலநறுவையில் கட்டிய இந்து ஆலயங்கள்சில இன்றும்இலங்கைத்தொல்லியல் திணைக்களத்தால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. ஆயினும் பொலநறுவையைக் காட்டிலும் அதிக எண்ணிக்கையிலான ஆலயங்கள் அவர்களின் ஆட்சிக்காலத்தில் திருகோண்மலை மாவட்டத்தில் கட்டப்பட்டதை அந்த மாவட்டத்தில்கண்டுபிடிக்கப்பட்டசோழக் கல்வெட்டுக்களும், ஆலய அழிபாடுகளும்உறுதிசெய்கின்றன.

தற்போதைய கந்தளாய் ஆலயச் சுற்றாடலில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் சோழர்காலத்தில் இங்கிருந்த பிரமதேயம் அதாவது பிராமண குடியிருப்புகள் பற்றிக் கூறுகின்றன. இந்தப் பிரமதேயம் முதலாம் இராஜராஜ சோழ மன்னன் பெயரில் 'இராஜராஜ சதுர்வேதி மங்கலம்' எனப் பெயரிடப்பட்டு அழைக்கப்பட்டது. இந்தப் பிரமதேயம் சோழர் ஆட்சியின் பின்னர் பொலநறுவையில் ஆட்சி செய்த சிங்கள மன்னர்களின் ஆதரவையும், நன்கொடைகளையும் பெற்றதைச் சிங்கள மன்னர்கள் வெளியிட்டதமிழ்க்கல்வெட்டுக்களில்இருந்து அறியமுடிகிறது. இந்தப் பிரமதேயத்துக்கு ஆதரவுவழங்கியமுதலாம்விஜயபாகு மன்னன் இராஜராஜ சதுர்வேதி மங்கலம் என்ற பெயரை தனது பெயரில் விஜயராஜ சதுர்வேதி மங்கலம் என மாற்றினான். இலங்கையில் இதுவரைக் கண்டுபிடிக்கப்பட்ட தமிழ்க் கல்வெட்டுக்களில் அதிக எண்ணிக்கையிலானகல்வெட்டுக்கள்திருகோணமலை மாவட்டத்தில்இருந்துகண்டுபிடிக்கப்பட்டவையாகும். அதிலும் சோழக்கல்வெட்டுக்கள் சோழரின் தலைநகராக இருந்த பொலநறுவையைக் காட்டிலும்திருகோணமலையில் இருந்தே அதிக எண்ணிக்கையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த ஆதாரங்கள் சோழர் காலத்தில் இந்து மதமும் அது சார்ந்த பண்பாடும் திருகோணமலை யில் மேலோங்கியிருந்ததைக் காட்டுகின்றன.

கி.பி.13 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கலிங்கமாகன் ஆட்சியுடன் பொலநறுவை இராசதானி வீழ்ச்சியடைந்தது.

இற்றைக்கு 1400ஆண்டுகளுக்கு முன்னர் பக்தி இயக்கத்தைத் தலைமையேற்று நடத்திய நாயன்மார் ஈழத்தில் இருந்த கோணேஸ்வரர் ஆலயத்தையும், கேதீஸ்வரர் ஆலயத்தையும் போற்றிப் பாடும் அளவுக்கு அவை தமிழத்தில் நன்கு பிரபல்லயமாக இருந்துள்ளன. நாயன்மாரால் போற்றிப் பாடப்பட்ட தமிழக ஆலயங்கள் பலவும் அவை தோன்றிய காலக் கலைமரபுடன் பிற்காலத்திலும் புகழ்பெற்றுக் காணப்படுகின்றன.

இதைத் தொடர்ந்து சிங்கள மக்களும், சிங்கள இராசதானியும் தெற்கு நோக்கி நகர்ந்தன.

இந்தச் சந்தர்ப்பத்தில் யாழ்ப்பாணத்தில் நல்லூரைத் தலைநகராகக் கொண்ட தமிழ் இராசதானி தோன்ற முன்னர் திருகோணமலை உள்ளிட்ட வடஇலங்கையில் கலிங்கமாகன், அவனைத் தொடர்ந்து சாவகன் தலைமையிலான அரசு இருந்தது பற்றி பாளி, சிங்கள இலக்கியங்கள் கூறுகின்றன. இந்த அரசின் ஆதிக்க மையங்கள், இராணுவ மையங்கள் நிலைகொண்டிருந்த இடங்களில் திருகோணமலை முக்கியஇடம்பெற்றிருந்ததை அந்த இலக்கியங்களில் இருந்து அறியமுடிகிறது. இதைத் தமிழ்நாடு - புதுக்கோட்டை மாவட்டத்தில் குடுமியாமலை என்ற இடத்தில் உள்ள 1262ஆம் ஆண்டுக் குரிய பாண்டியக் கல்வெட்டும் உறுதி செய்கிறது. இந்தக் கல்வெட்டு சிங்கள அமைச்சன் ஒருவன் தமிழ்நாடு சென்று பாண்டிய மன்னனிடம் அடிபணிந்து திறைகொடுக்கச் சம்மதித்தன் பேரில் பாண்டியப் படை வடஇலங்கை மீது படையெடுத்து ஆட்சியில் இருந்த சாவகனை அடிபணியக் கேட்டதாகவும், அதற்கு அவன் மறுத்ததால் அவனைக் கொன்று அவன் மகனை ஆட்சியில் அமர்த்தியதாகவும், பின்னர் இந்த வெற்றியின் நினைவாகத் தமது இரட்டைக் கயல் பொறித்த கொடியை திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கோணமலையிலும், திரிகூடகிரியிலும் பொறித்ததாகக் கூறுகிறது. இதைத் திருகோணமலைக் கோட்டையில் உள்ளபாண்டியக்கல்வெட்டும்உறுதி செய்கிறது. இந்த ஆதாரங்கள் சோழர் ஆட்சியின் பின்னரும் தமிழர் வரலாற்றில் திருகோணமலை முக்கியத்துவம் பெற்றிருந்ததைக் காட்டுகின்றன. இந்தவரலாற்றுப்பின்னணியில் அண்மையில் திரு மங்களாய்க் காட்டுப்பகுதில் கண்டுபிடிக்கப்பட்ட சிவன் ஆலயத்தின் அழிபாடுகளையும், அவற்றிடையே கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுகளையும் நோக்குவது பொருத்தமாகும்.



திருமங்களாய் ஆலய அழிபாடுகளில் கிடைத்த நம்பத்தகுந்த ஆதாரங்களுள் அந்த ஆலயத் தூண்களில் பொறிக்கப்பட்டிருந்த கல்வெட்டுக்கள் இந்த ஆலயம் பற்றிய ஆய்வில் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் காணப்படுகின்றன.

திருமங்களாய்ச் சிவன் ஆலயம்

இந்த ஆலயம் திருகோணமலை மாவட்டத்தில் கிளிவெட்டிப் பிரதேசத்தின் காட்டுப் பகுதியில் திருமங்களாய் என்ற கிராமத்தில் காணப்படுகிறது. 1985ஆம் ஆண்டுக்கு முன்னர் இந்தக் கிராமத்தில் 460க்கு மேற்பட்ட தமிழ்க் குடும்பங்கள் வசித்ததாகக் கூறப்படுகிறது. இது உண்மையாக இருக்கலாம் என்பதை இங்கு அழிவடைந்த நிலையில் அடையாளம் காணப்பட்டுள்ள மேலும் இரண்டு இந்து ஆலயங்களும், பாழடைந்த புராதன கிணறுகளும், மாமரங்களும் உறுதி செய்கின்றன. இங்கு பாரம்பரியமாகவாழ்ந்துவந்தமக்கள் 1985ஆம் ஆண்டில் இருந்து இடம்பெயர்ந்துகிளிவெட்டிமுதன்மைவீதியை அண்மித்துக் குடியேறியதால் தற்போது திருமங்களாயைச் சுற்றிய ஏழு கிலோ மீற்றர்கள் வரையான பிரதேசம் பெரும் காடாக உள்ளது. இந்தக் காட்டில் கொடிய மிருகங்கள் வசிப்பதால் இதன் சுற்றுவட்டத்தில் வசிக்கும் மக்களைப் பாதுகாக்கும் நோக்கில் இந்தக் காட்டைச் சுற்றி மின்சார வேலிகள் அமைக்கப்பட்டு இந்தக் காட்டுப்பிரதேசம் வனவிலங்குத் திணைக்களத்தின் பாதுகாப்புக்குரிய பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் சேருவிலைச் சேர்ந்த அன்பர் ஒருவர் அழிவடைந்த ஆலயம் ஒன்றின் ஒளிப்படத்தை யாழ்ப்பாணப்பிரதேசத் தொல்லியல்திணைக்கள அதிகாரி ஒருவருக்கு அனுப்பியிருந்தார். அந்தஒளிப்படத்தில்காணப்பட்ட ஆலயத்தின் வடிவமைப்பும், அதன் கலைமரபும் பொலநறுவை இரண்டாம் சிவ தேவாலயத்தை நினைவுபடுத்தியதால் அந்த ஆலயத்தை நேரில்சென்று ஆய்வுசெய்யத்தூண்டியது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தொல்லியல் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆய்வுக்கு வேண்டிய நிதியுதவியையும், வாகன வசதியையும்; பல்கலைக்கழக நிர்வாகம் வழங்கியது. இந்த ஆய்வில்யாழ்ப்பாணப் பிரதேச மத்திய கலாசார நிதியத்தின் திட்டப்பணிப்பாளரும் தொல்லியல் திணைக்கள அதிகாரிகளும் பங்கு கொண்டனர்.

ஆலயத்தின் அமைப்பும் கலைமரபும்

மக்கள் குடியிருக்கும் தற்போதைய கிளிவெட்டிப் பிரதேசத்தில் இருந்து ஏறத்தாழ 7கிலோ மீற்றர்கள் தொலைவில் அடர்ந்த காட்டின் மத்தியில் இந்த ஆலயம் காணப்படுகிறது. பெருமளவுக்கு இந்த ஆலயம் அழிவடைந்து அதன்பெரும்பகுதிமண்ணுக்குள் புதையுண்டு காணப்பட்டிருந்தபோதும் தொடந்து மேற்கொண்ட ஆய்வால் ஆலயத்தின் அமைப்பு, அதன் கலைமரபு, தோற்ற காலம் என்பவற்றைப் பெருமளவுக்கு அடையாளம் காணமுடிந்துள்ளது. கருங்கற்களையும், செங்கட்டிகளையும் கொண்டு கட்டப்பட்டுள்ள இந்த ஆலயம் கர்ப்பக்கிரகம், அந்தராளம், முன்மண்டபம், கொடிக்கம்பம், துணைக்கோவில்கள், சுற்றுமதில் என்பன கொண்டு கட்டப்பட்டிருக்கலாம் என்பதை ஆலயத்தின் நாலாபுறத்திலும் உள்ள அழிவடைந்த அத்திபாரங்கள், கருங்கற் தூண்கள், செங்கற்கள் என்பன உறுதிசெய்கின்றன. கர்ப்பக்கிரகமும், அதற்கு மேலமைந்த விமானமும் முற்றாகச் சிதைவடைந்து தற்போது அந்த இடத்தில் சிறு மேடு காணப்படுகிறது.

கர்ப்பக்கிரகத்துடன் இணைந்திருந்த கோமுகியைத் தவிர அங்கிருந்த பீடங்களோ, தெய்வச்சிலைகளோ அல்லது சிற்பங்களையோ இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை. கர்ப்பக்கிரகத்தை ஒட்டியதாக இரண்டு மீற்றர்கள் நீள அகலத்தில் ஆழமான தீர்த்தக்கேணி அழிவடைந்த நிலையிலும் ஆலயத்துக்கு முன்பக்கமாக நூறு மீற்றர்கள் தொலைவில் பொது மக்கள் பாவனைக்கான மிகப் பெரிய கிணறும் காணப்படுகின்றன. இந்த ஆலயத்தின் அமைப்பு, கலைமரபு, தூண்களின் வடிவமைப்புபொலநறுவைசிவதேவாலயத்தை நினைவுபடுத்தினாலும் தோற்றத்தில் இந்த ஆலயம்மிகப்பெரியதென்பதைநிச்சயப்படுத்த முடிகிறது.

இந்த ஆலயத்துக்குரிய கருங்கற் தூண்கள், செங்கற்கள்ஆலயச்சுற்றாடலில்ஆங்காங்கே சிதறிக் காணப்படுகின்றன. பல தூண்கள் மண்ணுள்புதையுண்டுகாணப்படுகின்றன. அவை ஒவ்வொன்றும் மிகச் சிறந்த தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி வெட்டப்பட்டவை



> மக்கள் குடியிருக்கும் தற்போதைய கிளிவெட்டிப் பிரதேசத்தில் இருந்து ஏறத்தாழ 7கிலோ மீற்றர்கள் தொலைவில் அடர்ந்த காட்டின் மத்தியில் இந்த ஆலயம் காணப்படுகிறது. பெருமளவுக்கு இந்த ஆலயம் அழிவடைந்து அதன் பெரும் பகுதி மண்ணுக்குள் புதையுண்டு காணப்பட்டிருந்தபோதும் தொடந்து மேற்கொண்ட ஆய்வால் ஆலயத்தின் அமைப்பு, அவற்றின் கலைமரபு, தோற்ற காலம் என்பவற்றைப் பெருமளவுக்கு அடையாளம் காணமுடிந்துள்ளது.

யாக உள்ளன. பல்வேறு அளவுகளில், வடிவங்களில் மண்ணுள் புதையுண்டிருந்த கோமுகிகள், தெய்வச் சிலைகளை வைப்பதற்குப் பயன்படுத்திய பீடங்கள், தூண்கள் என்பன பிரதான ஆலயத்தை சுற்றித்துணைக் கோவில்களும்இருந்துள்ளன என்பதை உறுதிப்படுத்துகின்றன. ஆலயத்தின் பிரதான வாசல் பகுதியில் புதையுண்டிருக்கும் தூண்கள், செங்கற்கள், தூண்களில் கதவுகள் பயன்படுத்தப்பட்டதற்கு ஆதாரமாக இருக்கும் துவாரங்கள் என்பன இந்த ஆலயத்துக்குச் சிறிய அளவிலான கோபுரம் இருந்திருக்கலாம் என எண்ணத் தூண்டுகின்றன. சற்சதுர வடிவில் சேதுக்கப்பட்ட தூண்களும், அவற்றில் செதுக்கப்பட்ட போதிகைகளும், அரைவட்ட வடிவில் கருங்கல்லில் செதுக்கப்பட்ட பீடங்களும், பல அளவுகளில் வடிவமைக்கப்பட்ட கோமுகிகள் என்பனவும் தமிழகத்தில் பல்லவர்காலத்தில்இருந்து தோன்றிவளர்ந்த திராவிடக் கலைமரபை அப்படியே பிரதிபலிக்கின்றன.

ஆலயத்தில் கண்டுபிடிக்கப்பட்ட தமிழ்க் கல்வெட்டுக்கள்

ஆலயங்களில் பொறிக்கப்படும் கல்வெட்டுக்கள் அந்த ஆலயங்கள் மக்களின் பயன்பாட்டிலிருந்த காலத்தை அடையாளப்படுத்துவதில் நம்பகரமான ஆதாரமாகக் காணப்படுகின்றன. கல்வெட்டுக்கள் இலக்கியங்களைப் போல் விரிவான வரலாற்றுத் தரவுகளைத் தராவிட்டாலும் அவை சம்பவம் நடந்த காலத்தில் பொறிக்கப்படுவதால் அவற்றால் அறியப்படும் வரலாற்றுச் சம்பவங்கள் காலத்தைக் கணிப்பதில் பெருமளவுக்கு உண்மைத் தன்மை வாய்ந்தவையாக உள்ளன.

திருமங்களாய் ஆலய அழிபாடுகளில்கிடைத்த நம்பத்தகுந்த ஆதாரங்களுள் அந்த ஆலயத் தூண்களில் பொறிக்கப்பட்டிருந்த கல்வெட்டுக்கள் இந்த ஆலயம் பற்றிய ஆய்வில் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் காணப்படுகின்றன. இங்கு வேறுபட்ட காலத்தைச் சேர்ந்த ஐந்து தமிழ்க் கல்வெட்டுக்கள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. முழுமையான அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டால்மேலும் பல கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்க அதிக வாய்ப்புக்கள் உள்ளன. ஆயினும் இதுவரை கிடைத்த கல்வெட்டுக்களில் இருந்து இந்த ஆலயம் திருகோண

மலையில், குறிப்பாக கிளிவெட்டிப் பிரதேச மக்களிடையே பெற்றிருந்த முக்கியத்துவத்தை அறியப் பெரிதும் உதவியாக உள்ளன.

இங்கு கிடைத்த மூன்று கல்வெட்டுக்கள் அவற்றின் எழுத்தமைதி கொண்டு இற்றைக்கு 1000ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்பதை (கி.பி.10ஆம் நூற்றாண்டு) உறுதிபடக்கூறமுடிகிறது. ஏனைய இரண்டு கல்வெட்டுக்கள் ஆலயத்தூண் ஒன்றில் பொறிக்கப்பட்டாலும் அவற்றின் காலம் 15ஆம் 16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என்பதை அவற்றின் எழுத்தமைதி கொண்டு உறுதிப்படுத்த முடிகிறது. அவற்றின் எழுத்தமைதி மற்றும் கூறப்பட்ட வரலாற்றுச் செய்திகளைக் கொண்டுஒரேகற்தூணில்வேறுபட்டகாலத்தில் சாசனங்கள் பொறிக்கப்பட்டுள்ளமை தெரிகிறது.

இந்தக் கல்வெட்டுக்களை மேலும் ஆய்வு செய்த தமிழகச் சாசனவியல் அறிஞர்களான பேராசிரியர் சுப்பராயலு, பேராசிரியர் இராஜவேலு, கலாநிதி இராசகோபால் மற்றும் இலங்கை அறிஞர்களான பேராசிரியர் பத்மநாதன், கலாநிதி இரகுபதி ஆகியோர் இந்தக் கல்வெட்டுக்கள் அனைத்தும் இந்த ஆலயத்தில் நாளாந்தம் நடைபெறும் கிரியைகள் மற்றும் ஒழுங்கான ஆலய நிர்வாகம் தொடர்பாக சமூகத்தின் பல தரப்பட்ட மக்கள் தானமாக வழங்கிய காசு, பொன், பசு என்பவற்றைக் கூறுவதாகவும் குறிப்பிட்டுள்ளனர். அவற்றுள் கல்வெட்டுக்களில் வரும் தானம் வழங்கியவர்களின் பெயர்களான கூத்தன், திருச்சிற்றம்பலமுடையார் முதலான பெயர்கள் சமகால தமிழக இலங்கைச் சோழக் கல்வெட்டுக்களில் வரும் பெயர்களை நினைவுபடுத்துவதாக உள்ளன.





ஆலயத்தின் தோற்ற காலம்

இங்கு கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக்களை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்ததில் இந்த ஆலயம் பத்தாம் நூற்றாண்டிலிருந்து வழிபாட்டிலிருந்தமை உறுதியாகத் தெரிகிறது. அதனால் இந்த ஆலயம் பத்தாம் நூற்றாண்டில்தான் தோன்றியதென்ற முடிவுக்கு வரமுடியாதிருக்கிறது. இந்த ஆலயத்துக்கு அருகிலும், அதன் சுற்றாடலிலும் மேற்கொண்ட கள ஆய்வின்போது பத்தாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட அதாவது ஏழாம், எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த பலவகை மட்பாண்டங்கள், கூரை ஓடுகள், சுடுமண் உருவங்களைக் கண்டுபிடிக்க முடிந்தது. இந்த ஆதாரங்கள் இலங்கையில் சோழர் ஆட்சி ஏற்பட முன்னரே இந்த ஆலயம் தோன்றியதை உறுதிப்படுத்துகின்றன. ஆரம்பத்தில் சிறு கோயிலாக இருந்து பத்தாம் நூற்றாண்டிலிருந்து சமகாலத் திராவிட கலைமரபில் கருங்கற்களைப் பயன்படுத்திக்கட்டப்பட்டிருக்க வாய்ப்புண்டு என்றும் கருத முடிகிறது. அவ்வாறு கட்டப்பட்ட ஆலயம் தொடர்ந்தும் வழிபாட்டிலிருந்ததையே பிற்கால பதினாறாம், பதினேழாம் நூற்றாண்டு களுக்குரிய கல்வெட்டுக்கள் உறுதி செய்கின்றன. இவ்வாறான சிறப்பு இலங்கையில் தோன்றிய புராதன இந்து ஆலயங்கள் பலவற்றுக்குக் கூட இல்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இந்தக் கூற்றை உறுதிசெய்வதற்கு மேலும் பல ஆதாரங்கள் உள்ளன.

இவ்வாலயம் அழிவடைந்ததைத் தொடர்ந்து இங்கிருந்த சிலைகள், சிற்பங்கள், விக்கிரகங்கள் என்பவற்றை அந்த ஊர் மக்கள் பிற இடங்களுக்கு எடுத்துச்சென்றதாகக் கூறப்படுகிறது. கர்ப்பக்கிருகம் அமைந்துள்ள இடத்தில் வெட்டப்பட்டிருக்கும் ஆழமான குழிகள் புதையல் தோண்டிவர்களின் செயற்பாடு எனக்கூறப்படுகிறது. இவ்வாறு இங்கிருந்து எடுக்கப்பட்ட ஆலயப் பொருள்கள் தற்போது எங்கிருக்கின்றன என்பதை எம்மால் உறுதிப்படுத்த முடியவில்லை. ஆயினும் இந்த ஆலயத்தில் இருந்து எடுக்கப்பட்ட ஆல மணியொன்று தற்போது திருகோணமலையில் கங்குவேலி என்ற கிராமத்தில் உள்ளது. அந்த மணியில் "திருமங்களாய் கோவிலுக்கு அவ்வூரிலிருக்கும் பத்திப்பெட்டிமகன் பத்தன்யுடைய உபையம்" என்ற வாசகம் காணப்படுகிறது. இந்தச் சாசனத்தின் காலம் பதினாறாம் நூற்றாண்டுக்குப் பிந்தியதெனப் பேராசிரியர் பத்மநாதன் கூறுகிறார். ஏறத்தாழ இதன் சமகாலத்தில் எழுந்த ஆலயப் பதிகங்கள் திருகோண மலையில் இருந்த வரலாற்றுப் பழமைவாய்ந்த ஆலயங்களில் ஒன்றாகத் திருமங்களாய்ச் சிவன் ஆலயத்தைக் கூறுகின்றன. இவற்றில் இருந்து திருமங்களாய்ச் சிவன் ஆலயத்துக்கு நீண்டவரலாறு இருப்பது தெரிகிறது.

ஆரம்பத்தில் சிறு கோயிலாக இருந்து பத்தாம் நூற்றாண்டிலிருந்து சமகாலத் திராவிட கலைமரபில் கருங்கற்களைப் பயன்படுத்தி கட்டப்பட்டிருக்க வாய்ப்புண்டு என்றும் கருத முடிகிறது. அவ்வாறு கட்டப்பட்ட ஆலயம் தொடர்ந்தும் வழிபாட்டிலிருந்ததையே பிற்கால பதினாறாம், பதினேழாம் நூற்றாண்டு களுக்குரிய கல்வெட்டுக்கள் உறுதி செய்கின்றன. இவ்வாறான சிறப்பு இலங்கையில் தோன்றிய புராதன இந்து ஆலயங்கள் பலவற்றுக்குக் கூட இல்லை என்பது இங்கு சிறப்பாக குறிப்பிடத்தக்கது. இந்தக் கூற்றை உறுதிசெய்வதற்கு மேலும் பல ஆதாரங்கள் உள்ளன.

சக்தி தொலைக்காட்சியின் பங்களிப்பு

இற்றைக்கு 1400ஆண்டுகளுக்கு முன்னர் பக்தி இயக்கத்தைத் தலைமையேற்று நடத்திய நாயன்மார் ஈழத்தில் இருந்த கோணேஸ்வரர் ஆலயத்தையும், கேதீஸ்வரர் ஆலயத்தையும் போற்றிப் பாடப்பட்ட தமிழக ஆலயங்கள் பலவும் அவை தோன்றிய காலக் கலைமரபுடன் பிற்காலத்திலும் புகழ்பெற்றுக் காணப்படுகின்றன. ஆனால் அவர்கள் போற்றிப் பாடிய ஈழத்து ஆலயங்கள் இரண்டும் இன்று பழைய வரலாற்றுப் பெருமையுடன் நினைவுபடுத்தப்பட்டாலும், அந்த ஆலயங்கள் தோன்றிய காலத்துக் கலைமரபுகளைக் காணமுடியவில்லை. இதற்கு இந்த இரண்டு ஆலயங்களும் கடற்கரை சார்ந்த துறைமுகங்களில் அமைந்திருந்தமையால் முதலில் இலங்கையின் கரையோரங்களில் ஆதிக்கம் செலுத்திய ஐரோப்பியர் கடைப்பிடித்த கலையழிவுக் கொள்கையால் இந்த ஆலயங்கள் அழிக்கப்பட்டமையே காரணமாகும்.

நாயன்மாரால் போற்றிப் பாடப்பட்ட தமிழக ஆலயங்கள் பலவும் அவை தோன்றிய காலக் கலைமரபுடன் பிற்காலத்திலும் புகழ்பெற்றுக் காணப்படுகின்றன. ஆனால் அவர்கள் போற்றிப் பாடிய ஈழத்து ஆலயங்கள் இரண்டும் இன்று பழைய வரலாற்றுப் பெருமையுடன் நினைவுபடுத்தப்பட்டாலும், அந்த ஆலயங்கள் தோன்றிய காலத்துக் கலைமரபுகளைக் காணமுடியவில்லை. இதற்கு இந்த இரண்டு ஆலயங்களும் கடற்கரை சார்ந்த துறைமுகங்களில் அமைந்திருந்தமையால் முதலில் இலங்கையின் கரையோரங்களில் ஆதிக்கம் செலுத்திய ஐரோப்பியர் கடைப்பிடித்த கலையழிவுக் கொள்கையால் இந்த ஆலயங்கள் அழிக்கப்பட்டமையே காரணமாகும்.

வரர் ஆலயத்தையும் போற்றிப் பாடும் அளவுக்கு அவை தமிழத்தில் நன்கு பிரபல்யமாக இருந்துள்ளன. நாயன்மாரால் போற்றிப் பாடப்பட்ட தமிழக ஆலயங்கள் பலவும்அவைதோன்றியகாலக்கலைமரபுடன்பிற்காலத்திலும்புகழ்பெற்றுக் காணப்படுகின்றன. ஆனால் அவர்கள் போற்றிப் பாடிய ஈழத்து ஆலயங்கள் இரண்டும் இன்று பழைய வரலாற்றுப் பெருமையுடன் நினைவு படுத்தப்பட்டாலும், அந்த ஆலயங்கள்தோன்றியகாலத்துக்கலைமரபுகளைக் காணமுடியவில்லை. இதற்கு இந்த இரண்டு ஆலயங்களும் கடற்கரைசார்ந்த துறைமுகங்களில் அமைந்திருந்தமையால் முதலில் இலங்கையின் கரையோரங்களில் ஆதிக்கம் செலுத்திய ஐரோப்பியர் கடைப்பிடித்த கலையழிவுக் கொள்கையால் இந்த ஆலயங்கள் அழிக்கப்பட்டமையே காரணமாகும்.

திருமங்களாயில் கண்டுபிடிக்கப்பட்ட சிவன் ஆலயம் திருகோணமலைக் கடற்கரையில் இருந்து பல மைல்கள் தொலைவில் காட்டுப்பகுதில் அமைந்துள்ளது. இந்த ஆலயத்தின் தோற்ற காலம் கோணேஸ்வரர் ஆலயத்தின் தொடர்ச்சியாகப்பார்க்கப்படக்கூடியது. திருகோணமலையில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் இங்கிருந்த புராதன ஆலயங்கள் பற்றிக் கூறினாலும் இதுவரை அந்த ஆலயங்கள் பற்றி அதிகம் அறியமுடியவில்லை. இந்த நிலையில் திருமங்களாய் கர்டுப்பகுதியில் கல்வெட்டுக்களுடன் கூடிய மிகப்பெரிய ஆலயத்தின் அழிபாடுகள் அதன் தோற்றகாலக் கலைமரபுகளுடன் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது முக்கிய வரலாற்று நிகழ்வாகும்.

திருகோணமலை ஆலயங்கள் பற்றிய பதிகங்களில் திருமங்களாய்ச் சிவன் ஆலயம் வரலாற்றுப் பழமைவாய்ந்த ஆலயங்களில் ஒன்றாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஆலயத்தைத் திருமங்களாய் பிரதேசத்தைச் சார்ந்துள்ள மக்களும் அறிந்துள்ளனர். ஆயினும் தொல்லியல், வரலாற்று ஆய்வாளர்கள் இந்த ஆலயத்தை அடையாளம் கண்டு ஆய்வு செய்வதில் ஆர்வம் காட்டவில்லை. அடர்ந்த காட்டின் மத்தியில் நீண்ட நேரம் தங்கியிருந்து ஆய்வு செய்வதில் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் இதற்கு ஒரு காரணமாக இருந்திருக்கலாம். ஆயினும் தற்போது அந்த ஊர் மக்கள் காட்டிய ஆர்வத்தாலும், ஒத்துழைப்பாலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தொல்லியற் குழுவினரால் அந்த ஆலயத்தின் பழமை பற்றிய பல உண்மைகளை வெளிக்கொணர முடிந்துள்ளது.

அவற்றை வெளியுலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியதில் சக்தி தொலைக்காட்சிக் குழுவினருக்கு முக்கிய இடம் உண்டு. இலங்கையில்பொலநறுவை இரண்டாம்சிவன் ஆலயத்தை அடுத்து பண்டைய இந்து ஆலயம் பாதுகாக்கப்பட்டிருக்கும் இடம் என்ற பெருமையைத் திருகோணமலை - திருமங்களாய் பெறும் என்பதில் ஐயமில்லை.



ஆளுமை விருத்தியில் அழகியல் கல்வியின் முக்கியத்துவம்

அழகியல் தூண்டல்கள் இயல்வழித்தூண்டல்கள் ஆகும். தாயின் தாலாட்டைக் கேட்டுத் தூங்கும் குழந்தை இராக இரசனையில் தூங்குகின்றது. குழந்தைக்கு இராகமோ, வசன மொழியோ தெரியாத நிலையில் இயல்பாகவே தூங்க வைக்கும் சக்தி தாலாட்டு இசைக்கு உண்டு.

ஒரு வயது நெருங்கிக் கொண்டிருக்கும் குழந்தைகள் "கைவீசம்மா கைவீசு" என்ற வசனங்களை இராக இசையுடன் கேட்டு கை வீசுவதுடன்,துள்ளிசைப்பாடல்களைக்கேட்டுஅவர்கள்பிடித்துக்கொண்டு நிற்பதும், துள்ளி அசைவதும் அவர்கள் இசையின் மூலம் செயல்படுவர் என்பதை நிரூபணம் செய்கின்றன.

நிலவைக் காட்டி, குழந்தையை இரகசிக்க விட்டு குழந்தையின் வாய்க்குள் உணவை ஊட்டியதும் குழந்தை உணவு உண்கிறேன் என நினைக்காமல் நிலவில் இலயித்து இருப்பது பொறிவழி இரசனை. குழந்தைப்பருவமும் பிள்ளைப்பருவமும் போலச் செய்யும் அழகியல் பருவங்களாகும். இந்தப் பருவங்களில் ஐம்பொறி வழி இரசனையை ஏற்படுத்த முடியும். காதால் கேட்டவற்றையும், தூண்டியபடி செய்து காட்டி மகிழும். இந்தப் பருவம் வெட்கம், பயம், வெருட்சி, கூச்சம் போன்ற மனநிலைகளை அறியாத பருவம். இந்தநிலையில்அந்தப்பிள்ளையின்ஆளுமையை ஸ்திரப்படுத்துவது அவசியம். மேடைக் கூச்சம், செயல் கூச்சம் அற்று இரசிப்பை ஏற்படுத்துவது இந்தப் பருவங்களே. இவற்றை இந்தப் பருவத்தினரிடம் ஏற்படுத்திவிட்டால் இரசிப்பவன் மாத்திரமின்றி இரசிக்க வைக்கும் பாத்திரங்களாகவும் அவர்களை ஆக்கமுடியும்.

ஒருவன் தன்னை உணரவும், தன்னை வெளிப்படுத்தவும் மேற்குறிப்பிட்ட தற்துணிவு, மனஸ்திரம் வேண்டும். அத்தகைய மனஸ்திரத்தை அழகியல் கல்வியால் எற்படுத்தமுடியும். அந்த மன ஸ்திர நிலையே ஆளுமை எனப்படும்.

ஒருவன் தன்னில் திருப்தி அடைய வைக்கத் தன்புலப்பாடு தெரிதல் வேண்டும். அழகியல் கல்வி தன் புலப்பாட்டை வெளிக்காட்டும் கலை. அது ஆளுமைக் கல்வியாகவும் அமையும்.

ஆரம்பக் கல்வி கற்கையில் முதன்மை நிலை 1இல் அழகியல் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. இசையும் அசைவும் கொண்டு அறிவைப் பெறவைக்கப்படுகின்றது. குழந்தை கற்கின்றேன் என உணராது கற்க வைக்கும் சக்தி இசைக்கும், நடனத்துக்கும் (அசைவு) இருக்கின்றது. அச்சமில்லாது, சுமை என்று உணராது. மனதைப் பேணிக்கற்பதன் மூலம் ஆளுமையை நெறிப்படுத்தும் வழிகாட்டல் அழகியல் கல்விக்கு உண்டு என்பது இந்தக் கல்விச் சிந்தனையின் எடுத்துக்காட்டாகும். அதேபோல் அழகியற் கல்வி ஒருவனது ஆளுமையைக் காலம் பூராகவும் செயல்படவைக்கும் ஆளுமையைக்கொடுக்கும். இன்று அழகியல் கல்வி ஆரம்பக் கல்வி தொட்டு பல்கலைக்கழகம் வரை புகுந்து உயர்பட்டம், ஆராய்ச்சி போன்ற பல்வேறு துறைகளில் பரந்துபட்டு விரிவு பெற்றுள்ளது. பாடசாலைகளில் இசை, நடனம், சிற்பம், சித்திரம் இசைக்கருவிகளை இசைத்தல் போன்ற பல் துறைகளில் பரிணமித்திருப்பதைக் காணலாம். உழைத்தகளை தீர்ந்து எழுச்சி பெறச்செய்ய இசையால் முடியும். மகிழ்ச்சியைக் கொடுத்து ஆளுமையைத் தட்டி எழுப்ப இசையால் முடியும். புரட்சிப் பாடல்கள் உணர்வுகளைத்தட்டி எழுப்பி ஒருவித வலுவைக் கொடுக்கின்றன. துன்பத்தில் துவண்ட மனம் மீண்டெழும் உணர்வைப் பெறும். அந்த மீண்டெழும் ஆளுமையைக் கொடுப்பது அழகியல் கல்வி என்பது மனதை வளர்க்கும் நடைமுறை அந்த நடைமுறையை இலகுவாகவும், பயனுறுதியாகவும் செயல்பட வைக்க மனதைச்சமநிலைப்படுத்தவேண்டும் அந்த மனதைச் சமநிலைப்படுத்தும் சக்தி அழகியலுக்கே உண்டு.



கட்டுரை



சாந்தினி சிவநேசன்

கொக்குவிலைச் சேர்ந்தவர். நடனக் கலைஞர் ஏரம்பு சுப்பையாவின் புதல்வி. கதகளி, பரதநாட்டியம் போன்றவற்றில் கலைமாணிப் பட்டத்தையும், 'நர்த்தனத் திலகம்' எனும் பட்டத்தையும் பெற்றிருக்கிறார். 45வருட கால கலை அனுபவமுள்ளவர். அதில் 20வருடங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றியுள்ளார். தற்போது ஓய்வில்.

"வாழ்க்கையே கல்வி, கல்வியே வாழ்க்கை" என்பதை அடிநாதமாகக் கொண்ட செயற்பாட்டைக் கலை வழங்குகின்றது. அத்தகைய வாழ்க்கை சித்திரிப்புக்களைக் கலைப்பணியூடாகச் செயல்வழி காட்டப்படகின்றது. அந்த வழிகாட்டல்களில், இசை, நடனம், நாடகம், கூத்து தெருக்கூத்து போன்ற வடிவங்கள் சமூகத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டன. கட்டிளமைப்பருவம் பருவ உணர்வுகளின் களஞ்சியம். அந்த உணர்வுகள் பாலியலில் வீழ்ந்து விடாமல் காப்பாற்ற அழகியல் துறைகளில் திசை திருப்பி அதில் நல் ஆளுமையை அந்தவயதில்கட்டியெழுப்பவும்அழகியல்கல்விபேருதவியளிக்கும். இன்று நாடகமும் அரங்கியலும் எனும் அழகியல்துறை பாடசாலைக் கல்வியில் புகுத்தப்பட்டிருப்பது ஆளுமை வளர்க்கும் ஒரு சிறந்த நடைமுறை எனலாம்.

இன்று இளம் சமூகத்தினரைக் கவர்ந்திழுப்பவர்களாகத் திரைப்படக் கலைஞர்கள், சின்னத் திரைக்கலைஞர்கள் விளங்கி வருகின்றார்கள். அந்தத் திரைப்படக் கலைஞர்கள் எந்தப் பாத்திரமானாலும், எந்தத் துறையின் பாத்திரமாயினும் சிறந்த ஆளுமைக்குக் கட்டுப்பாட்டு, வழி நின்று ஆளுமைச்செயற்பாட்டுடன் வீர, தீரத்துடனும், புத்தி சாதுரியத்துடனும், அழகியல் பாங்குடனும், (சண்டைக் காட்சிகள் கூட) நடித்துக் காட்டுகின்றார்கள்.

அதனால் அரசியலில் கூட புகுந்து பலம் பெற்றுத் திகழும் அளவுக்கு மனித உள்ளங்களை வசீகரிக்கும் ஆளுமை அடிப்படை உருவாக்கப்படுகிறது. நாட்டில் சிறந்த ஆளுமையுடைய தலைவர்களை, கல்விமான்களை உருவாக்கவேண்டியது கல்வி, சமூகப்பரிமாணங்களையும், சமூக நியாயாதிக்கங்களையும் உள்வாங்கிப் பரப்ப வேண்டியதும் கல்விதான். எனவே அத்தகைய ஆளுமையை மாணவரிடையே நாடகங்கள், இசை, நடனம் மூலம் சமர்ப்பிக்கும்போது நல்லதும், கெட்டதும், நியாயமானதும் தெரியும். அதன்வழி ஒருவரின் ஆளுமையை நல்லவழியில் திசைதிருப்பி நெறிப்படுத்த கலைகளால்தான் முடியும் என நம்பமுடிகின்றது. கலையின்பமே நிலையின்பமாம்!

கலைமகள் கைப்பொருளே



பண்டைத் தமிழர் கண்ட அமிழ்திலும் இனிய யாழின் அடிப்படையாகப் பிறந்த நரம்பு வாத்தியக் கருவிகளுள் வீணை சிறப்புப் பெற்றது. கலைமகளின் கையில் இருப்பதிலிருந்தே அதன் பெருமையை நாம் உணரலாம். யாழைப்போலவேவீணையும்தெய்வத்தின் திருக்கரங்களில் இடம்பெற்றது.

வேத காலத்திலேயே வீணை முக்கியமான கருவியாக விளங்கியது. அதாவது அசுவதேயாகம் செய்யும் பொழுது இராச்சியத்தில் தெய்வத்திருமகளைத்தாங்கவைப்பதற்காக கூடித்திரியர்களும் அந்தணர்களும் வீணை வாத்தியத்தை இசைத்து வந்தார்கள் என யசுர் வேதம் கூறுகின்றது. புராணங்களிலும் இதிகாசங்களிலும் வீணையைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கின்றது.

வரகுண பாண்டியன் காலத்தில் சோம சுந்தரக் கடவுள் தன்னுடைய பக்தனாகிய பாணபத்திரனென்ற வித்துவான் பொருட்டு விறகுத் தலையனாக வந்து 'சாதாரி' இராகம் இசைத்து வடநாட்டு வீணை வல்லவனாகிய ஏமநாதன் என்பவனை ஓடும்படி செய்ததாகத் திருவிளையாடல் புராணம் கூறுகின்றது. தமிழ் உலகுக்கு வீணை மிகப் பழமையானது என்று சொல்லத் தகும்.

சங்கீத ரத்னாகரத்தில் பிரகதி, களவதி, மகதி, கச்சபி என்ற நான்குவீணைகளையும்அவற்றுக்குஆரியர்களானவிசுவாவசு, தும்புரு, நாரதர் முதலியவர்களையும் குறிப்பிடுகின்றது.

அந்தக் காலத்தில் ஒரு தந்தியுடையது, இரண்டு தந்தியுடையது என்று வீணைகள் சொல்லப்பட்டுள்ளன. இந்தக் காலத்தில் பெரும்பாலும் ஏழு தந்திகளையுடைய வீணைகளே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தஞ்சையை ஆண்ட இரகுநதா மன்னர் காலத்தில் வீணை முழு வளர்ச்சியைப் பெற்றது. இதை 'ரகுநாத வீணை', 'தஞ்சாவூர் வீணை' எனவும் அழைக்கிறார்கள். வீனை வாசிப்பவர்களை 'வைணீகர்' எனக் கூறுவர்.

இராவணேஸ்வரனிலிருந்து அப்பர் சுவாமிகள், ஆதிசங்கர் வரையில் வீணையை வாசிக்காத பெரியவர்களே இல்லை. காளிதாசர், அம்பிகையைப் போற்றிப்பாடும்பொழுது "மாணிக்க வீணாம்..." என்றுதான் ஆரம்பித்துப் பாடினார்.

கைலாய மலையில் உமாதேவியார் துயிலும் கோலத்தைக் கண்ட இறைவனின் கற்பனையின் விளைவே உருத்திர வீணை. பார்வதி தேவியின் இரண்டு தனங்களையும் இரண்டு குடங்களாகவும், அவருடைய கையானது அதன் மீது தண்டாகவும், உருவாகி அந்தக்கோலத்தில்எழுந்ததோற்றமே 'வீணாதார தட்சணாமூர்த்தி'.

இந்த இசைக் கருவியை இயக்கிய இறைவன் முதன் முதலாக அதை நான்முகனாகிய பிரம்மாவுக்கு அளித்தார். அதை நான்முகன் தனது மனைவியாகிய கலை மகளுக்கு அளித்தார். இது அறிஞர்களின் அபிப்பிராயம். ஆகவே தான் மற்றைய கருவிகளுக்கில்லாத பெருமையும் சிறப்பும் வீணைக்கு.

கர்நாடக இசை வடிவங்களையும், தசவித கமகங்களையும், சுருதி நுட்பங்களையும் வீணை வாத்தியத்தின் மூலமாக நிரூபிக்கலாம்.

நான்கு தந்திகளும், மூன்று தளத் தந்திகளும், 24 மெட்டுக்களையும் உடைய வீணையின் உறுப்புக்களில் சிவன் தண்டாகவும், உமை நாணாகவும், தோள் திருமாலாகவும், யாழ்க் குதிரை திருமகளாகவும், சுரக்காய்க் குடம் நான் முகனாகவும், இணைக்கபட்ட நரம்புகள் வாசுகியாகவும், ஜீவா நிறங்களாகவும் அமைந்தன என்றும் குறிப்பிடுவார்.

தற்காலத்தில் கையாளும் வீணையானது 'சரஸ்வதி வீணை' என்று அழைக்கப்படுகிறது. "வீணையின் தத்துவத்தை அறிந்தவன் சுலபமாக மோட்சத்தை அடைகின்றான்" என்று யாஞ்ஞவல்ய மகரிஷி ஸ்மிருதியில் கூறுகிறார்.

இத்தகைய தெய்வீகம் பொருந்திய வாத்தியமான வீணையை இலங்கை அரசன் இராவணேஸ்வரன் தனது கொடியில் ஏந்தி 'வீணைக் கொடியுடைய வேந்தன்' எனச் சிறப்புப் பெயர்பெற்றான். அவன் ஆண்ட இந்தத் தேசமும் 'வீணாகான புரம்' எனச் சிறப்புப் பெயர் பெற்றது. இத்தகைய சிறப்புப் பெற்ற நமது ஈழ மண்ணில் வீணை வாத்தியத்தின் இசைப் பங்கை வளர்ப்பது இசைக் கலைஞர்கள் அனைவரதும் முக்கிய தொண்டாகும்.

கட்டுரை



விஜயலட்சுமி சண்முகராஜா

யாழ்ப்பாணம் – நாவலர் வீதியைச் சேர்ந்தவர். 'வீணா விஹார்' எனும் இசைப் பள்ளியை ஆரம்பித்து 30 வருடங்களுக்கு மேலாக நடத்தி வருகிறார். பல்கலைக் கழகங்களில் வருகைதரு விரிவுரையாளர். கிழவன் காடு கலாமன்றத்தின் வீணை ஆசிரியர்.

போரின் பின்னரான அரங்கு







யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டப்ப டிப்பையும் முது அறிவியல்மாணிப் பட்டத் தைச் சென்னைப்பல்கலைக்கழகத்திலும் நிறைவு செய்தவர். தாய்லாந்து மற்றும் டென் மார்க் நாடுகளில் பட்டயக்கற்கைகளைப் பூர்த்தி செய்திருக்கிறார். யாழ்ப்பாணப் பல்க லைக்கழகத்தின் ஊடக வளங்கள் பயிற்சிமை யத்தின் பணிப்பாளராகப் பணியாற்றியிருக்கி றார். கடந்த 25வருடங்களுக்கு மேலாக நாட கத்துறையில் தொடர்ச்சியாக இயங்கிக் கொண்டிருக்கிறார். 'செயல் திறன் அரங்க இயக்கம்' என்ற நாடக நிறுவனத்தை ஆரம் பித்துகடந்த 15 ஆண்டுகளாகஇயக்கிவருகி றார். 50 மேற்பட்ட நாடகங்களை எழுதியும் நெறிப்படுத்தியுமுள்ளார். ஊடகத்துறையி லும் நாடகத்துறையிலுமாக ஒன்பது நூல் களை எழுதியுள்ளார்.

கட்டுரை



தேவநாயகம் தேவானந்த்

போரின் பின்னரான அரங்கு என்பதை முதலில் வரையறை செய்தல் வேண்டும். இதன்போது போர்க்கால அரங்கு மற்றும் போரின் முன்னரான அரங்கு என்பதையும் புரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. இலங்கையில் விடுதலைப்புலிகளின் ஆயுதங்களை மௌனிக்கச்செய்த பின்னர் விடுதலைப்புலிகளை முற்றுமுழுதாக இராணுவரீதியாகத் தோற்கடித்ததாக இலங்கை அரசு மார்தட்டிக் கொண்ட தான 2009ஆம் ஆண்டுக்குப்பின்னரான சூழலை இங்குநாம் போரின்பின்ன ரான சூழல் என்று வரையறுக்க முற்படுகின்றோம். கடந்த எட்டு வருடகாலங் கள் இதற்குள் அடங்கும் எனலாம்.

போரின் பின்னரான சூழல் என்பதற்குள் மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலம் மற் றும் 'நல்லாட்சி' என்ற கோஷத்தோடு நகர்ந்துகொண்டிருக்கும்மைத்திரி - ரணி லின் மூன்றாண்டுகால ஆட்சிக் காலம் என்பன அடங்கும். போர்க்கால அரங்கு மற்றும் போரின் முன்னரான அரங்கு பற் றித் தனியான ஆய்வுகள் அவசியமாகின் றன. அவற்றின் தொடர்ச்சியே போரின் பின்னரான அரங்கு என்பதையும் மனங்கொள்ள வேண்டும்.

போர்க்கால நாடகங்கள் வெறுமனே பரப்புரை நாடகங்களல்ல

"போர்க்காலம் என்பது அரங்கப் படைப் பாக்கத்துக்கு உகந்த சூழலைக் கொண்டி ருந்தது" என்றதான கலைஞர்கள் பலரின் கருத்தும் கவனத்தில் கொள்ளத்தக்கது. இதில் விடுதலைப்புலிகளால் தயாரிக்கப் பட்ட நாடகங்கள் அவை தொடர்ச்சியாகப் பல நூறு இடங்களில் மேடையேற் றப்பட்டிருந்தன. போர்ச் செய்திகளை மக்களிடம் கொண்டு சேர்த்தன. இவற்றை வெறுமனே 'பரப்புரை நாடகங்கள்' என்று புறமொதுக்கிவிட முடியாது என்பதையும் பதிவு செய்தாக வேண் டும். இவை தவிர்ந்து போர்க் காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மேடையேற்றப்பட்ட நாடகங்களும் கவ னத்தில் கொள்ளப்பட வேண்டியவையா கின்றன. போர்க் காலத்தில் வளங்களும் வசதிகளும் குறைவாகக் காணப்பட்ட ஒரு சூழலில் நாடகங்கள் படைக்கப்பட்டு மேடையேற்றப்பட்டன என்பது கவனிக் கப்பட வேண்டியதாகின்றது. விடுதலைப் புலிகளின் காலத்தில் நாடகங்களைப் படைப்பதற்கான ஏதுநிலை காணப்பட்டது என்பதையும் இந்த நேரத்தில் பதிவு செய் தாக வேண்டும். இதற்கு, விடுதலைப் போ ராட்ட காலத்தில் பொது எதிரி ஒருவர் இருந் ததும் அந்தப் பொது எதிரியை இலக்கு வைத்து ஒரு மையநிலைப்பட்டு படைப்பா ளிகள் செயற்பட்டதும் முக்கிய காரணமெ னலாம்.



"போர்க் காலத்தில் கலைஞன் பிற ஈன நிலை கண்டு துள்ளினான்" என்பது கவ னத்தில் கொள்ளப்பட வேண்டியதாகின் றது. இந்தக்காலத்தில்வெளிவந்தநாடகங் கள், இராணுவ அட்டூழியங்கள் மற்றும் போர்ப் பாதிப்புக்கள் அதிலிருந்து மீள்வதற் கான எழுச்சி போன்ற பல விடயங்களைத் தமது பேசுபொருளாகக் கொண்டிருந்தன. போர்முடிவடைந்தபின்னர்நிலைமைகள் தலைகீழாக மாறின. விடுதலைக்கான எந்தவொருநம்பிக்கைக்கீற்றும்இல்லாது போனது. விரக்தி, தோல்வி மனப்பாங்கு, "இனி என்ன...? என்ற நம்பிக்கையற்ற நிலை, சாதாரண வாழ்வுக்கான பெரும் போராட்டம், வாழ்க்கையை இயல்பு நிலைக்குக்கொண்டுவருவதற்கானதிண் டாட்டம், சொந்த இடத்தில் குடியேறுதல் பற் றிய பிரச்சினைகள், போர் இழப்புக்கான நிவாரணம் பெறுதல், அதற்கான அலைச் சல், தங்கி வாழுதல், கையேந்துதல், மௌனமாகக் குமுறுதல் என்று பல்வேறு சுமைகளைச் சுமக்க வேண்டியதான சூழ லாக அது காணப்பட்டது. இதேவேளை வெளிப்பாட்டுச் சுதந்திரத்துக்கான வாய்ப் பும் இல்லாமல்போனது. இதன் விளைவா கவேதேர்ந்தகலைஞன்தனதுகலைப்பய ணத்தைக்கைவிட்டுதனக்குமுன்இருந்த புதிய சவாலை எதிர் கொள்ளதிலேயே தனது முழு நேரத்தையும் செலவிட ஆரம் பித்தான். பல கலைக்குழுக்கள் கலைந்து சென்றன. பலர் தொடர்ந்து இயங்கமுடியா மல்திணறினார்கள்.

படைப்பாக்கச் சூழலில் ஒரு வகையான தறுக்கணிப்பு நிலைமை உருவானது. தொடர்ச்சி அறுபட்டது. படைப்புக்கள் கருக் கொள்வதற்கோ பிரசவிப்பதற்கோ வாய்ப் பின்றிப் போனது எனலாம். பிறர் ஈன நிலைகண்டுதுள்ளவேண்டியகலைஞன் தனது ஈனநிலையைப் போக்குவதற்கா கத் திண்டாடினான். 'துள்ளுதல்' துன்பம் தரும் ஒன்றாகவே இந்தக் காலகட்டத்தில் காணப்பட்டது. துயர் படிந்த முகங்களோடு தங்கள் முகங்களையும் புதைத்தவர்க ளாகக் கலைஞர்கள் காணப்படார்கள். அதேவேளை ஆடம்பர நிகழ்வுகளை, போர் வெற்றிக்கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக நடந்த நிகழ்வுகளை அலங்கரிக் கின்ற காட்சி நிகழ்வுகளாகச் சில கலைப்ப டைப்புக்களின் மேடையேற்றங்கள் ஆங் காங்கே நடைபெற்றன. இதில் சில கலை ஞர்கள் 'வெறும் சப்பிகளாக' தங்கள் படைப்புக்களைப் பிரசவித்தார்கள். ஊட்ட மான வீரியமான படைப்புக்களைக்காண முடியவில்லை. இவ்வாறான படைப்புக் களை உயிர் தொலைந்த வியாபாரப் படைப்புக்கள் எனலாம். இதுவே ஒரு செல் நெறியாக உருவாகும் அபாயமும் தொடர் கிறது.

செயல் திறன் அரங்க இயக்கத்தின் புதிய அரங்க முயற்சி

மட்டுப்பாடுகள், வரையறைகள், கட்டிறுக் கங்கள் மத்தியில் கலைஞன் கலையைப் பிரசவிக்க முடியாது. அந்தச் சூழல் மாற்றப் பட வேண்டும் என்ற எண்ணங்கள் வலு பெற்றன. அந்த எண்ணத்தின் அடிப்படை யிலான சில முயற்சிகள்; குறைப்பிரச வங் களாகவே நிகழ்ந்தன. கருப்பை தறுக்க ணித்திருப்பதும் உணரப்பட்டது. இந்தச் சூழ்நிலையில் செயல் திறன் அரங்க இயக் கம் ஒரு புதிய அரங்க முயற்சியை ஆரம் பிக்கிறது. கடந்த பத்து வருடகாலமாகத் தொடர்ச்சியாக நாடக செயல் இயக்கத்தின் நின்ற பட்டறிவை மூலதனமாகக் கொண்டு இந்த முயற்சி ஆரம்பிக்கப்படுகி றது. 2013ஆம் ஆண்டு இந்தச் செயற்திட் டம் ஆரம்பிக்கப்பட்டது. போரின் பின்ன ரான கதைகளை நாடகமாக்குதல் என்பது இதன் முதன்மை நோக்கமாக இருந்தது. இதற்காகப்புதியதாகஇளைஞர்களைநாட கத்துறையில் பயிற்றுவிப்பது. அவர்க ளின் கதைகளை நாடகங்களாக உருவாக் குவது என்று தீர்மானிக்கப்படு கிறது. முத லில் போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சார்ந்த இளைஞர்களை ஐந்து கிராமங்களி லிருந்து தேர்ந்தெடுத்துக்கொண்டோம். பின்னர் 2014, 2015, 2016 ஆம் ஆண்டுக ளில் இவ்வாறாக யாழ்ப்பாணத்திலும் முல் லைத்தீவிலுமாகவுள்ள கிராமங்களில் இருந்து தேர்ந்தெடுத்துக்கொண்ட 150 இளைஞர்களுக்கு நாடகப்பயிற்சி அளிக்கப்பட்டு முப்பது நாடகங்களைத் தயாரித்து மேடையேற்ற முடிந்தது. நாட கக் களப்பயிற்சிகளுடன் பயிற்சிகள் ஆரம் பிக்கப்பட்டன. அதில் பங்கு பற்றிய இளை ஞர்கள் தமது ஆழ்மனதில் கிடந்த கதைக ளைக் கொட்டித் தீர்த் தார்கள். அவற்றில் அதிகமானவை போர்க் காலத்தின் கதைகள் போரின் பின்னரான சூழலில் அந்தக் கதைகளோடு தாம் எப்

போரின் பின்னரான அரங்கு

படி வாழ்கிறோம் என்பது பற்றியும் சொன்னார்கள்.

அந்த ஆழ்மனக் கதைகளைக் கிளறுவ தற்கு அரங்கு ஓர் அற்புதமான கருவி எனலாம். ஒரு சிறு வட்டத்துக்குள் பாது காப்பான வெளியை உருவாக்கும் வல் லமையை அது கொண்டுள்ளது. அதில் மெல்ல மெல்ல நம்பிக்கை பிறக்கும். அதன்வழி பகிர்தல் நடக்கும்.

நாடகப் பயிற்சியில் பங்குபற்றியவர் களே நாடகங்களுக்கான கருவைத் தெரிவு செய்தார்கள், சட்டகமிட்டார்கள், கோர்வையாக்கி உணர்வோடு பிசைந்து கோர்த்தெடுத்தார்கள். நெறிப்படுத்துநர் வழிப்படுத்துநர்களாக இருந்து உதவி னர். எழுத்துருவாக்கப் பணி பின்னரே ஆரம்பமானது. எழுத்துருவென்பதைப் பருவறையான வழிகாட்டல் குறிப் பென்றே கருதலாம். நாடகங்கள் ஒவ் வொன்றும் தயாரிப்பின்போதும் பல மாற்றங்களுக்கு உட்பட்டன. பின்னர் தொடர்ச்சியான மேடையேற்றங்க

யதார்த்தம் என்பதை மனங்கொள்ள வேண்டும். இதேவேளை ஈழத்து நாடக வரலாறு புதிய பண்டநுகர்வுப் பண்பாட் டுக்குள் தன்னைப் புதிப்பித்துக்கொள்ள வேண்டிய கட்டாயச் சூழலுக்குள்ளும் பயணிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள் இருந்தது என்பதும் மனம் கொள்ளத்தக் கது. இலங்கையைப் பொறுத்தவரை யில் வெளிப்பாட்டுச் சுதந்திரத்துக்கான ஏதுநிலை மேலும் வளர்ச்சியடைய வேண்டிய தரத்திலேயே காணப்படுகி றது.

அதிலும் நாடகம் என்ற பலர் இணைந்து பணிசெய்கின்ற கலையைப் பொறுத்த மட்டில் படைப்பு ஒன்று கருக்கொண்டு பிரசவிப்பது வரையில் தடைகள் ஏரா ளம். இதனால் படைப்புதறுக்கணித்துவி டுவதற்கும் வாய்ப்புக்கள் அதிகம். இலக் கியப்படைப்பாளி தன் கதையையோ, கட்டுரையையோ, கவிதையையோ தான் விரும்பியபடி எல்லை கடந்து பய ணித்துப் படைக்க முடியும் அவற்றை



ளின்போதும் மேலும் மாற்றத்துக்கு உட் பட்டுத் தொடர்ச்சியாகச் செழுமைபெற் றன. இவ்வாறு தயாரிக்கப்பட்ட நாடகங் கள் நாடக விழா ஒன்றில் மேடையேற் றப்பட்டன. பின்னர் அவை கிராமங்க ளி லும், சாத்தியமான இடங்களிலும் மேடையேற்றப்பட்டன. பார்வையாளர் கள் நெருக்கமாக இருக்கின்ற ஒரு வெளி யில் மேடையேற்றப்பட்டன. அதற்கான பிரத்தியேகமான வெளி உருவாக்கப் பட்டு அதில் நாடகங்கள் மேடையேற்றப் பட்டன. இங்கு 'வி' வடிவத்தில் அமைந்த மூன்று வட்டங்கள், அவற்றை இணைப் பதற்கான பாலங்கள் இரண்டு, நடுவில் சற்று பெரிய மேடை அது 20அடி விட்டம் கொண்டது. அதற்கு இரண்டு பக்கத்தி லும் உள்ள இரண்டு சிறிய வட்டங்க ளும் 10அடி விட்டம் கொண்டவையா கும். வானத்தைக்கூரையாகக்கொண்ட இந்த மேடையில் நிகழ்த்துவதற்கான ஒரு புதிய அளிக்கை முறையும் உருவா கியிருந்தது.

இந்த நாடக விழாவில் மேடையேறு கின்ற நாடகங்கள் போரின் பின்னரான நிலைமையை வெளிக் காட்டுகின்றன. இடப்பெயர்வு, வறுமை, தாய் நிலம் மல டாக்கப்டுதல், அதிகார வர்க்கத்தின் குழ றுபடிகள், விதவைகளின் பிரச்சினை கள், போர் இழப்புக்கள், தொடரும் துய ரங்கள், துயரத்திலிருந்து மீளெழும் முயற்சிகள் என்று பல பிரச்சினைகள் பேசப்பட்டன.

யதார்த்தமான பிரச்சினைகள் நாடகப்ப டிமங்களாகத் தரப்படுகின்றபோது யதார்த்த விரோதமாகவே காட்சியா கின. இங்கு யதார்த்த விரோதமே

இன்றைய தகவல் தொழில்நுட்பப் உல கில் வெளிப்படுத்தவும் வாய்ப்புக்கள் ஏரா ளம். விமர்சனங்க ளையும் அபிப்பிரா யங்க ளையும் பெற முடியும். அது அவனை உயிர்ப்புள்ள படைப்பாளியாக வைத்திருக்க உதவும். ஆனால் நாடகங் களைப் படைப்பதற்கு ஆளணியைத் திரட்டிக் கொள்வது முதல் நிதி தேடுவது ஈறாகப் பெரும் சிரமப்பட வேண்டியிருக் கிறது. இவையெல்லாவற்றையும் தாண்டி நாடகத்தைத் தயாரித்து விட் டால், அதை மேடையேற்றுவற்கான இடம்தேடி அலைவதும், மேடையேற் றத்துக்கு அனுமதிபெறுவது போன்றன வும் படைப்பாளியைச் சலிப்படையச் செய்துவிடும்.

2013ஆம் ஆண்டு செயல் திறன் அரங்க இயக்கம் நாடகத் திருவிழாவை அறிமு கம் செய்து நாடகங்களைப் பொது வெளி யில் மேடையேற்றத் துணிகிறது. ஒன் பது நாடகங்களைத் தயாரித்து இரண்டு நாள்கள் தொடர்ச்சியாகத் திறந்த வெளி யில் 'வி' வடிவ மேடையமைத்து நல் லூரில் அமைந்துள்ள கிட்டுப் பூங்கா வில் நாடகத் திருவிழா நடத்தப் பட்டது.

வார்த்தைகளை நறுக்காகப் பேசிப் பிரமாண்டமான படிமங்களை ஒலி, ஒளி மற்றும் இசையசை வுகளுடன் மேடைவெளியை நாடகங்கள் நிரப்பியி ருந்த தன. இந்த நாடகங்களின் பேசுபொருள் கவனத்தில் கொள்ளத்தக்கது. முழு வது மாக 27நாடகங் கள் கடந்த ஐந்தாண் டுகளில் மேடையேற்றப்பட்டிருக்கின் றன. இவற்றை இரண்டு பிரிவாகப் பார்க்க முடியும்.

1. தனியாள் நாடகங்கள்
2. குழு நாடகங்கள்

குழு நாடகங்கள்;

முழுவதுமாக 14நாடகங்கள் தயாரிக்கப் பட்டுள்ளன. அவற்றில் 'வெப்பக்குடுவை', 'கருப்பைத்தறுக்கணிப்பு', 'வீடு பேறு', 'கல்லறைக் கவிதைகள்', 'தூவானம்', 'உருமறைப்பு', 'புதையுண்ட சடங்கு ' ஆகிய ஏழு நாடகங்களும் போர்க் காலத் தில் தாம் அனுபவித்த துயரங்களைப் பற்றிப்பேசுகின்றன. குறிப்பாக இரா ணுவ நடவடிக்கைகள், கொலைகள், அங்கவீனங்கள், காணாமல் ஆக்கப்பட் டமை,குடும்பங்கள்சிதறடிக்கப்பட்டமை, உள, சமூகப் பாதிப்புக்கள் போன்ற பல் வேறு விடயங்களைப் பற்றிப் பேசிய தோடு அந்தப் பாதிப்புக்களில் இருந்து விடுபடுவதற்கான வழிகளைத்தேடுவ தாகவும் அமைந்துள்ளன. 'கொடிது கொடிது', 'வண்டியும் தொந்தியும்', 'ஏகாந்தம்', 'வேடதாரிகள்', 'சிரிப்பு மூடை', 'வெண்மை எழில்', 'இரகசியப் படுகொலை' போன்ற நாடகங்கள் போர்; முடிவடைந்த பின்னர் தோன்றும் புதிய பிரச்சினைகளான அரசியல்வாதிகளின் கெடுபிடி, ஏமாற்று வேலைகள், வீரப் பேச்சுக்களும் போலிகளுமான நிலை மைகள், வறுமை அதன் தாக்கம், தாய் நிலம் மலடாக்கப்படுதல், அதிகாரிகளின் சோம்பேறித்தனம், வன்முறைக்கலாச் சாரம், குடும்பங்கள் சிதறடிக்கப்படு தல், தீராது நீளுகின்ற காணாமல் ஆக்கப் பட்டோர்பிரச்னைகள்,கல்வியில்காணப்ப டுகின்ற ஒரு வகையான தறுக்கணிப்பு நிலைமையென்று பல்வேறு பிரச்சி னைகளைப்பேசுகின்றன.

தனியாள் நாடகங்கள்

இந்தக் காலகட்டத்தில் நடிப்பதற்கு ஆட்க ளைக் கண்டுபிடிக்க முடியாத சூழலில் ஓரிரு நடிகர்களுடன் நாடகங்களைத் தயாரிப்பதுபற்றியஎண்ணம்வலுப்பெற் றது. இதனால் செயல் திறன் அரங்க இயக் கம் பல்வேறு பாணிகளில் அமைந்த தனி யாள்நாடகங்களைத்தயாரிப்பதில் அதிக கவனம் செலுத்தியது. 2014ஆம் ஆண்டு இதற்கெனத் தனியான போட்டியொன்



போர்க்காலம் என்பது அரங்கப் படைப்பாக்கத்துக்கு உகந்த சூழலைக் கொண்டிருந்தது' என்ற தான கலைஞர்கள் பலரின் கருத்தும் கவனத்தில் கொள்ளத்தக்கது. இதில் விடுத லைப்புலிகளால் தயாரிக் கப்பட்ட நாடகங்கள் அவை தொடர்ச்சியாகப் பல நூறு இடங்க ளில் மேடையேற்றப்பட்டிருந்தன. போர்ச் செய்திகளை மக்களிடம் கொண்டு சேர்த்தன. இவற்றை வெறு மனே 'பரப்புரை நாடகங்கள்' என்று புறமொதுக்கிவிட முடியாது என்பதையும் பதிவு செய்தாக வேண்டும். இவை தவிர்ந்து போர்க் காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்க ழகத்தில் மேடையேற்றப்பட்ட நாடகங்களும் கவ னத்தில் கொள்ளப்பட வேண்டியவையாகின்றன.

றையும் நடத்தியிருந்தது. அதேவேளை கடந்த ஐந்து வருடங்களில் 13தனியாள் நாடகங்களைத் தயாரித்து நாடகத் திரு விழாக்களில் மேடையேற்றியிருந்த னர். 'வேடங்கட்டும் பட்டதாரி', 'நல்லதங் காள்', 'கடலில்கிடந்த பெருமூச்சு', 'நான் தொலைத்த சைக்கிள்', 'தாலி', 'மரணச் சான்றிதழ்', 'மருந்துக்குப் போராட்டம், அடையாளம்', 'வலிகளின் விளிம்பில்' 'பய ணங்களின் வலிகள்', 'மீள் விசாரணை', 'தந்தை பாசம்', 'பத்து ரூபா' போன்றதான 13நாடகங்கள் பலகாத்திரமான சமூகப்பி ரச்சினைகளையும் தனியாள் பிரச்சினை களையும் பேசியிருந்தன. 'தாலி', மர ணச்சான்றிதழ், வலிகளின் 'விளிம்பில்', 'பயணங்களின் வலிகள்', 'தந்தை பாசம்' போன்ற நாடகங்கள் இறுதிப் போர்க் காலத்தின் அவலங்களைப் பேசின. நாட கங்கள் ஒவ்வொன்றும் பற்றித் தனித்த னியே விரிவாக ஆராயமுடியுமாயினும் விரிவஞ்சித்தவிர்த்துக்கொள்கின்றேன். கலைப்படைப்புக்களைப் பிரசவிக்க முடி யாத போரின் பின்னரான சூழலில் கடந்த ஐந்து வருடகாலத்தில் போர் தொடர்பாகவும் அதன் பாதிப்புக்கள் தொடர்பாகவும் செயல் திறன் அரங்க இயக்கம் முழுவது மாக 27 நாடகங்க ளைத் தயாரித்திருப்பது முக்கியமான பதிவாகும். அதுவும் ஒரு நிறுவனம் இவற்றைத் தயாரித்து வருடாந்தம் நாட கத்திருவிழாக்களை ஒழுங்கு செய்து மேடையேற்றியிருப்பது ஈழத்து நாடக வரலாற்றில்முக்கியமானபதிவுமாகும்.

கட்டுரை

இயற்கை ஒரு கொடை



கலாநிதி திருமதி இராஜேந்திரமணி ஞானேஸ்வரன்

தென்மராட்சி – மறவன்புலவைச் சேர்ந்தவர். யாழ்ப்பாண பல்கலைக்கழக விலங்கியல் துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றுகிறார். யாழ்.பல்கலைக்கழகத்தில் தனது முதலாவது பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்த இவர் தனது கலாநிதிப் பட்டத்தையும் ஆய்வுமானிப் பட்டத்தையும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பூர்த்தி செய்தார். அத்துடன் விலங்கியல், பூச்சியியல் சார் துறைகளில் மக்கள் மத்தியில் விழிப் புணர்வுச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார்.



இயற்கை ஒரு கோடை. அதைக் கடவுள் நமக்குக் கொடுத்திருப்பதாக நின்னைக்கிறார்கள். இயற்கையை இறைவன் என்றும் சிலர் கொண்டாடுகின்றனர். இறைவனால் வழங்கப்பட்டிருப்பதும், இறைவனாகப் பார்க்கப்படுவதுமான இயற்கை இன்றைக்கு அமைதியிழந்து காணப்படுகின்றது. காரணம் மனிதர்கள் மாத்திரமே. இதனால் இயற்கை இடர்கள் பற்றி அனர்த்த முகாமைத்துவ மையங்கள் அடிக்கடி எச்சரித்துக்கொண்டிருக்கின்றன. இயற்கை என்றால் அழிவு தானோ...? எனச் சாதாரண மக்கள் இன்றைக்குப் பயந்து போயிருப்பதில் ஆச்சரியம் ஏதும் இல்லை.

ஆழமாக யோசிக்கத் தேவை இல்லை. எம்மைச் சூழ்ந்து காணப்படும் தானாகத் தோன்றிய அல்லது மனிதனால் உருவாக்கப்படாத, சகல வளங்களையும் நாம் இயற்கையாகக் கொள்ளலாம். நீரோ, நிலமோ, காற்றோ மனிதன் எதையும் உருவாக்கவில்லை. ஆதிகாலம் தொட்டு மனிதன் இயற்கையுடன் ஒன்றியே வாழ்க்கையை நடாத்தியிருக்கின்றான். அவ்வப்போது வந்த இயற்கையின் சீற்றங்களைச் சமாளித்தும் இருக்கின்றான். அன்று சனத்தொகை இன்றுபோல பெருகி இல்லாதது மட்டுமின்றி, அன்றைய மனிதன் தனது தேவைக்கு மட்டுமே இயற்கையில் பயனை எடுத்தான். அதில்ஏற்படும்குறைவைத்தானே நிரப்பும் வண்ணம் இயற்கைக்குக் குறிப்பிட்டளவு கால அவகாசத்தைக் கொடுத்தான். அனால், பெருகிக் கிடக்கும் இன்றைய மனிதனோ இயற்கை வளங்களைத் தொடர்ச்சியாகப் பயன்படுத்துகின்றான். அதன் மீள் நிரப்புகைக்கேற்ற கால அவகாசத்தைக் கொடுப்பதில்லை. அத்துடன் அதன் தன்மை கெட்டுப்போகும் வண்ணம் சீரழித்தும் விட்டுவிடுகின்றான். இதனால் தான் எங்கும் காலநிலை மாற்றங்களும் அதனூடான இடர்களும் இடர் முகமைத்துவங்களும் எமது வாழ்வின் அன்றாட நிகழ்வுகளாகிவிட்டன.

எமது நாடு ஒரு சிறிய நாடு. ஒரே நேரத்தில் பல்வேறுபட்டகாலநிலைத்தாக்கங்களுக்கு உள்ளாகின்றது. ஒரு பகுதிக்கு வறட்சி நிவாரணம், மறு பகுதிக்கு வெள்ள நிவாரணம் வழங்க வேண்டிய நிலை அரசுக்கு. குடா நாட்டுக்குள்ளேயே யாழ்ப்பாணத்தில் மழை – மரக்கறித்தோட்டம் பாதிப்பு சாவகச்சேரியில்வறட்சி -நெல்வயல்வாடிப்போகின்றது. இதுகடந்தவருடஐப்பசியின்நிலவரம். காலநிலை மாற்றத்துக்கான முதன்மைக் காரணம் மரங்களை அழிப்பதே என எல்லோருக்கும் தெரிகிறது. ஆனால் திருத்திக்கொள்ள இன்னும் மனமோ நேரமோ வரவில்லை. மனிதன் இயற்கையைத் தன் எண்ணப்படி, தனது இஷ்டத்துக்கே கையாளுகின்றான். கல்வி அறிவு அதிகரிக்க அதிகரிக்க அபிவிருத்திஎன்றபெயரில் இயற்கையைச் சீரழிக்க முற்படுகிறான். இதன்போது இயற்கையின் தன்மை, அதன் கொள்ளளவு, செயற்பாடு என்பன பற்றிய எண்ணம், எதையும்கருத்தில்எடுக்காமல்முடிவுகளையும் செயற்பாடுகளையும் மேற்கொள்கின்றான். இந்த இடர்களுக்குக் காரணம் இவையே. அவற்றுள் ஒரு சிலவற்றைப்பற்றி பார்ப்போம்.

விவசாயம்

இதன் ஆதாரம் வளமுள்ள நிலம். மனிதனின் கரம் படாத ஒரு நிலம். அதைக் காடு மண்டியுள்ள ஒரு காணி என வைப்போம். அதில் ஆயிரக்கணக்கான உயிரினங்கள் காணப்படும். பக்ரீரியா, பூஞ்சனம் போன்ற கண்ணுக்கு தெரியாத நுண்ணங்கிகள், சிற்றுண்ணிகள், மிகச் சிறிய பூச்சிகள் உயிர்வாழும். இன்னும் பல பறவைகளும் மிருகங்கள், ஊர்வனவும் தங்கி வாழும். எமக்கு நன்கு தெரிந்த கறையான், மண்புழு போன்றவையும் சாதாரணமாகவே மண்ணில் இருக்கும். இவை போசனைச் சத்துக்களைப்பயிர்கள் இலகுவாகஉறிஞ்சி எடுக்கும் வண்ணம் மண்ணுக்கு மாற்றிக் கொடுத்தவண்ணமே இருக்கும். இரசாயனப் பொருள்கள் பாவிக்காத விவசாய நிலங்களில் வசித்து விவசாயிக்கு நன்மை செய்யும் உரினங்கள் பலவுண்டு. இவை அதீத இரசாயன உள்ளீடுகளால் அழிக்கப்படுவதால் நாம் இயற்கையின் பாதுகாப்பை இழந்துவிடுகின்றோம்.


இரைகவ்விகள் சிலந்தி


பீடைப்பூச்சிகளின் முட்டையினுள் தனது முட்டையை இடும் ஒட்டுண்ணி பூச்சி (மிகவும் சிறியவை)


இரைகவ்விகள்சிலந்தி


இரைகவ்விகள் கும்பிடுபூச்சி


இரைகவ்விகள் பறவைகள்


இரைகவ்விகள் வண்டுகள


இரைகவ்விகள் ஊசித்தும்பிகள்


இரைகவ்விகள் தும்பிகள்

வேர்கள் இலகுவாக மண்ணுள் ஊடுருவும் வண்ணம் இவை மண்ணுக்குள் காற்று வெளியிடையை அதிகப்படுத்தும். மண்ணில் நச்சுத் தன்மை பரவாமல் பாதுகாக்கும். இது இயற்கையாகவே நடக்கும் விந்தை. அனால், அதற்குச் சிலகால எல்லை உள்ளது. அன்றைய விவசாயம் இதைப்போற்றியது. ஆனால், தொழில்நுட்ப வளர்ச்சிக்கும் பெருகிக் கிடக்கும் சனத்தொகைக்கு ஏற்ப அதிக விளைச்சலைப் பெற வேண்டிய கட்டாயமுள்ள இன்றைய விவசாயத்துக்கோ இயற்கையின் ஆயுளைத் திரும்பிக்கூட பார்க்காமல் வேகமாக முன்னேறுவதே குறிக்கோள் ஆகவுள்ளது. இந்தச் செயன்முறை இன்றைய விவசாயிகளையும் மாற்றிவிட்டது. பணமீட்டும் போராட்டம் அவர்களுக்கு. உரப்பாவனைகள், புதிய புதிய கிருமிநாசினிப் பாவனைகள் என நிலம் நஞ்சேறிக் கொண்டிருக்கிறது. மக்கள் நஞ்சுண்ணும் கண்டர்களாகிவிட்டனர்.

இயற்கைப் பசளைகளை மறந்தே விட்டனர்

உற்பத்தி பெருக என்ன செய்யலாம்? என்பதே ஆராய்ச்சியாளர்களின் சிந்தனையாக வுள்ளது. அவர்களின் நோக்கம் எல்லாம் புதிய நெல், மரக்கறி வர்க்கங்கள், இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லிகள், களை கொல்லிகள் என எல்லாவற்றையும் புதிது புதிதாக உருவாக்குவதிலேயே இருக்கிறது. பாரம்பரிய நெல் மரக்கறி வர்க்கங்கள் படிப்படியாக அழிந்து வழக்கொழிந்து போய்த் தாவர பாரம்பரிய வள மையங்களில் (PGRC) அடைக்கலமாகிவிட்டன. யூரியாவும், புல் மருந்துகளும், பூச்சி மருந்துகளும் ஓர் அத்தியாவசிய உள்ளீடாக மாறியதில் எமது விவசாயிகள் இயற்கை உரங்களை மறந்தே விட்டனர். இரசாயனங்களின் பயன்பாடு எமது வயல் நிலங்களிலும் தோட்ட நிலங்களிலும் மண் வளத்தை முற்றாக அழித்து விட்டிருப்பதை யாரும் உணரும் நிலையில் இல்லை.

இயற்கை... (தொடர்ச்சி)

மண் மலடாகிப் போனது!

மண்ணில் இயற்கையாக இருக்கக் கூடிய நன்மை தரும் நுண்ணங்கிகள் அழிந்து போய் விட அது மலடாகிப் போனது தெரியாமல் மீண்டும் மீண்டும் யூரியாவைப் போட்டு விளைச் சலை எதிர்பார்க்கும் நாம், இந்த உரங்கள் தரைக்கீழ் நீருடன் சேர்ந்து நீரைப் பாழாக்கிக் கொண்டிருப்பதை உணர்வதில்லை. செய்தியில் வருவதால் ஒயில் கலந்த நீர் உடல் நலத் துக்குக் கேடு என்பதை அறிகிறார்கள். நைதரசன் நிரம்பப் பெற்ற உரங்களால் நீர் நஞ்சா கும் என்ற ஆராய்ச்சி முடிவுகள் பொதுவெளியில், மக்கள் மத்தியில் பரப்புரை செய்யப்படு வதில்லை ஆகையால், மக்களுக்கு அதன் பாதகம் தெரிய வாய்ப்பில்லை. நீரில் ஒயில் கலந்திருந்தால் கண்ணுக்குத் தெரியும். ஆனால் இந்த நைத்திரேற்றுக்கள்...? பூச்சி இருக்கின்றதோ இல்லையோ உரம் போட்டால் பூச்சி மருந்து அடிக்கவேண்டும் என்பது எமது விவசயிகளின் தாரக மந்திரம். சில சமயங்களில் பூச்சி மருந்து ஒன்றையும் பங்கசு மருந்து ஒன்றையும் சேர்த்துக் கலந்து கூட்டாகவும் அடிப்பார்கள். இதை அவர்களுக்கு யார் சொன்னது? மருந்துக் கடைக்காரர் தான்! அவருக்கு வியாபாரம் களை கட்டியிருக் கும். விவசாயியும் இந்தமுறை நல்ல விளைச்சல் பெறுவார். காலம் செல்லச் செல்லத் தான் விளைவு தெரியும். மண் மலடாகிப் போய்விடும். விவசாயின் காலம் முடிந்துவிடும். பின்னால் வரும் மகனின் நிலைமை...?

நெடுஞ்சாலைகள்

போக்குவரத்து வசதிகள் நாட்டின் அபிவிருத்தியின் ஓர் அங்கம். மிகவும் இன்றியமையா தவை. ஆனால், இயற்கையை மாற்றியமைக்கக் கூடியவை. வீதிகள், சாலைகள் நிர்மா ணிக்கும்போது அது செல்லும் இடமெல்லாம் உள்ள இயற்கை பாதிக்கபட்டாமல் இருக்க வேண்டும் என்று சட்டமே உள்ளது. முதலில் ஓர் ஆய்வு நடத்தி இயன்றவரை இயற்கையு டன் ஒத்துப்போகும் வண்ணமே இந்த அமைப்புக்களை ஏற்படுத்தவேண்டும். ஆனால் நடப்பது என்ன...? நெடுஞ்சாலைகள் அமைந்த இடங்களில் எல்லாம் வெள்ள இடர், மண் சரிவு, பாறைப் பிளவு! இதற்குக் காரணம் என்ன? வீதிகளைக் கட்டமைத்த வல்லுநர்கள் கற்றவர்கள்தானே? கற்றவர்கள் தான் ஆனால் இயற்கையைக் கற்கவில்லை. அதை எவ் வாறு கவனமாகக் கையாள வேண்டும் எனக் கற்கவில்லை. இயற்கையைப் பாதுகாக்காத தொழில்நுட்பம் அழிவையே கொடுக்கும். இப்போது கொடுப்பதுபோல.

யாழ் குடாநாட்டில் ஓர் உதாரணம்

நீண்ட கரையோரங்களையும் கடலேரிகளையும் கொண்ட ஒரு சிறிய நிலப்பரப்பு யாழ். குடாநாடு. இயற்கையாகவேநீர் வளம் அதிகம் காணப்படுகின்றது. அது நன்நீராகினும் சரி கடல் நீராகினும் சரி. எமது வளம்தான் எமது வாழ்வாதாரம். மீன்பிடியும் விவசாயமும் எமது பொருளாதாரம். மழைகாலங்களில் கிடைக்கும் மழைநீர் குளம், குட்டை, கிணறுகளில் நிரம்பி மிஞ்சியது ஏரியூடாகள், வாய்க்கால்களூடாகக் கடலைச் சென்றடைகின்றது. குறித்த மழைநீர் மூன்று வழிகளில் நிலப்பரப்பை விட்டு வெளியேறுகின்றது. இந்த மழைப் பருவத்துக்கு முன்னரே மழைக்கால ஆயத்தங்கள் பலவும் செய்யப்பட வேண்டும். சேமிக் கப்பட்டவைபோக ஏனைய நீர் வழிந்தோட வழி இருக்கின்றதா என ஒவ்வொரு மழைக்கு முன்னரும் பரிசீலித்துத் திருத்தங்கள் செய்ய வேண்டும். ஆனால் நடப்பது என்ன? சரி யாக ஆவணிக்குப் பின்னரே குடாநாட்டு வீதிகளின் திருத்தப்பணிகளை ஆரம்பிக்கின்ற னர். கவனித்துப்பாருங்கள்.!! பாலங்களை உடைத்து மண், கற்கள் நிரப்பப்பட்டு நீரோட்டத் தைத் தடைப்படுத்தித் திருத்த வேலைகள் ஆரம்பமாகும். இது ஒரு சிறு பிள்ளையின் விளையாட்டு வேலைபோல இருக்கும். இதனால் குடாநாட்டினுள் வெள்ளம் தேங்கத் தொடங்கும். வெள்ள நிவாரணம் ஆரம்பிக்கும். திருத்த வேலைகள் அப்படியே கிடக்கும். பின்னர் அவசர அவசரமாகப் பூசி மெழுகி விடுவார்கள். உடைத்த கற்களையும், பழைய பாலமீதிகளையும் அப்படியே, அதிலேயே போட்டு விட்டு எல்லோரும் போய்விடுவார்கள். அடுத்த ஆண்டு வெள்ள நிவாரணத்துக்கு வழியமைத்து விட்டு. உதாரனமாகப் பொன் னாலை - பருத்தித்துறை வீதி யில் உள்ள தொண்டமனாறு பாலம் மற்றும் நாவற்குழியில் காணப்படும் ரயில் பாதைப்பாலம் போன்று.

வீதிகள், பாலங்கள் அமைக்கும்போது நீரோட்டம் பாதிக்கப்படக் கூடாது. செலவை மட்டும் கருத்தில்கொண்டு பாலங்களைச் சிறிதாக அமைத்தும், இயற்கைக்கு இசைவாக அமைக் காமல் அதன் வழமையான செயற்பாட்டுக்கு இடையூறு ஏற்படும் வகையிலும் அமைத்து விடுவதால் இயற்கை சிதைவுற நேர்கிறது. ஏரியின் கமுத்தை பிடித்து நெரிப்பது போன்ற செயல்களைச் செய்தால் தரையில் நீர்மட்டம் உயர்ந்து வெள்ளம் வருவதைத் தடுக்க முடி யாது தானே! நீரைத் தன்போக்கில் சுதந்திரமாக ஓடுவதற்கே வழிசமைக்கவேண்டும். ஓர் ஏரியை ஊடறுத்துப் பாதையிட்டு அதன் நடுவே பாலத்தை அமைத்தால், அந்தப் பாலத் தின் நாலபுறங்களும், நீரோட்டத்தால் கொண்டு வந்துசேர்க்கப்படும் மணல், சேறு, சகதி, கழிவுகள் உள்ளிட்ட அடையல்கள் ஒன்று திரண்டு திட்டுக்காளாகிவிடும். நீரோட்டத்தின் இயல்புநிலை பாதிக்கப்பட்டுவிடும். இவ்வாறான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்க முன்னர் அது சார்ந்து ஆராய்;ந்து செயலாற்றுவதில்லை. வெளிநாடுகளில் நீர் நிலைகளுக்கு மேலாக வீதிகள், பாலங்கள் எவ்வாறு போடப்பட்டுள்ளன என்பதையாவது அறிந்து கொண்டுசெயற்படுவதில்லை. அவர்கள் சிற்பிகள். நாங்கள் இயற்கையின் சிதைப்பிகள்.



ஒரு சுருக்குக் கயிறு போன்றிருந்து உப்பாறு ஏரியின் அள வைக் குறைக்கும் நாவற்குழி ரயில்கடவைப் பாலம்.



நீரோட்டத்தின் இயல்பில் மாற்றங்கள் ஏற்படா வண்ணம் தென் அமெரிக்க நாடான உருகுவேயில் உருவாக்கப்பட்டி ருக்கின்ற வட்ட வடிவப் பாலம்.

அலையாத்தும் காடுகள் (கண்டல் காடுகள்)

2004ஆம் ஆண்டு சுனாமிக்குப் பின்னரே இந்தக் காடுகள் இறைவனின் கொடை என் பதை உலகம் அறிந்தது. சீறிவரும் அலைகளின் வேகத்தைத் தாங்கிக் கரையை அண்மிக் கும்போது அவற்றின் வேகத்தைக் குறைத்து விடுவதால் தான் இதற்கு 'அலையாத்தும் காடுகள்' என்று பெயர். இவை நிலத்தடி நீர் இருப்புக்கும் வழிவகுப்பன. மீன், இறால் போன்ற கடல் வாழ் உயிர்களின் பெருக்கத்துக்குரிய இடமும் இவை தான். இலங்கையின் கரையோரங்கள் முழுவதும் காணப்படும் இந்தக் காடுகளைப் பாதுகாப்பதற்கு எல்லாவித நடவடிக்கைகளையும் இலங்கை அரசு எடுக்கின்றது. ஆனால் குடாநாட்டில் அவற்றுக்கு நிகழ்வது என்ன? சரசாலையிலும் அம்பனிலும் இருக்கும் கண்டல் காடுகளை அழித்துத் தென்னந் தோப்புக்களை உருவாக்குகின்றோம். மன்னார் கரையோரங்களில் குறிப்பாக விடத்தல் தீவுப் பகுதிகளில் கண்டல் காடுகள் கவனமாகப் பராமரிக்கப்படுகின்றன. இனி யொரு இயற்கை சீற்றம் வருமானால் அந்தப் பகுதி இந்தக் காடுகளால் பாதுக்காகப்படும் என்பதில் ஐயமில்லை. சரி இனி என்ன செய்யலாம்...? இனியாவது இத்தகைய அபிவிருத் தித் திட்டங்களை வகுக்கும்போது இலாப, நட்டக் கணக்குகளைப் பணம் எனும் அளவிடை யில் கணிக்காமல் நீண்டகால நோக்கில், இயற்கையைப் பேணவேண்டும் எனும் அரிய மூலதனத்தின் அடிப்படையில் கணித்து வகுக்க வேண்டும்.

கவிதை



எஸ். தர்சி

சிவராமலிங்கம் தர்சிகா ஆசிரியையாகப் பணிபு ரிகிறார். யாழ்ப்பாணம் சுண்டுக்குளியைச்சேர்ந் தவர். வளர்ந்து வரும் இளம் எழுத்தாளர். அதி கமான கவிதைகளை உதயன் பத்திரிகையிலே எழுதியுள்ளார்கள். ஓவி யம், சிறுகதைத்துறைகளி லும் ஆர்வம் உள்ளவர்.

அகன்ற பாதையின் இரு பக்கங்களிலிருந்தும் வருவாள்
அவள் வருவதெற்கென்றே இன்னொரு
பக்கத்தையும் கொண்டிருக்கும் வீதி

பொம்மைக்குட்டிகளைச் சுமந்து வருகிறாளோ...?
எனப் பா....ர்க்கையில்?
வீதி முழுக்கச் சுவராகி நீள்வாள்

கண்கள் பத்தாது என்பேன்
கவனும் பத்தாது என்பாள்



தலை வலித்த நாளில் நள்ளிரவில் தைலமாவாள்
படக்கென்று புரண்டு படுக்கையில்
வாய்பொத்தி அரும்பு மீசை இழுப்பாள்

மதியம் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில்
அவள் வீடு கடக்க நேரிடும்
"ஒரு வாய்" என ஊட்டுவாள்
வாயையும் அப்போது சற்றே கூட்டுவாள்

மழை நாளில் குடை கொண்டு ஓடி வருவாள்.
வெயில் தாங்காதென்கையில்
குடையை எனக்கும் சேர்த்துப் பிடிப்பாள்

"புத்தம் புது மலரே என் ஆசை சொல்லவா...." என
காதில் கிசுகிசுப்பாள்

"என் சதுவைப் பார்த்திங்களா?" என்று
ஊரு முழுக்க தம்பட்டம் அடிப்பாள்

"இப்ப என்ன முத்தம் தானே" என
வீட்டுச் சந்தில் நாளுக்கொன்றும்
சிலபோது நாளெல்லாம் நின்றும் கொடுப்பாள்

ஓர் அடர் வினை நாளில்
அத்திப்பூ உதிர யுத்தப்பூ அதிர நான்
ஊர்விட்டு வெளியேறியபோது
அவள் பித்துப் பிடித்த கடவுளென
வீதியின் எப்பக்கமிருந்தும் வந்தாள்

20வருடங்களுக்கு பின் கவிதை தொடர்கிறது...

யாரோவெனப் பார்த்து விட்டு
யாரோவாகவே அமர்ந்திருக்கும் அவளை
பத்து நிமிடங்களுக்கு மேல் பார்க்க முடியாமல்
தலை தெறிக்க ஓடி வருகிறேன்
என் வழி முழுவதுமாய்
எல்லாப் பக்கங்களிலிமிருந்தும்)
அவள் வந்து கொண்டேயிருக்கிறாள்



நேர்காணல்

அந்நியர் ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போர் புரிந்து மக்களையும், மண்ணையும் காத்தலைத் தலையாய கடமையாகக் கொண்ட ஒரு தலைவன் எவ்வாறு இருந்திருப்பான்?



வ. பாலமுருகன்
(சிரேஷ்ட விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம்)





பாலமுருகன் கொக்குவிலைச் சேர்ந்தவர். ஓய்வு பெற்ற சித்திரபாட சேவைக்கால ஆலோசகரும் ஓவியருமான செ.வரதராஜனுடைய புதல்வன். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சித்திரமும் வடிவமைப்பும் துறையின் சிரேஸ்ட விரிவுரையாளர். இவரால் அமைக்கப்பட்ட பண்டாரவன்னியன்சிலைஒன்று முல்லைத்தீவு நகரத்தின் மத்திய பகுதியில் நிறு வப்பட்டுள்ளது. அந்தச்சிற்பத்தையொட்டியநேர் காணல் இது...

பண்டார வன்னியனைத் தமிழர்கள் தமது வீரத்தின்அடையாளமானஒருமன்னனாகக்கொள்கின்றனர். அந்த மன்னன் மாவீரன் மட்டுமன்றி மக்களைநேசிக்கின்றஒருதலைவனும்கூட.வீரத்தையும்பாசத்தையும்ஒருங்கேஒருசிற்பத்தில்வெளிப்படுத்தல்என்பதுசவாலானவிடயமே. உடற்கட்டமைப்பு, வாளை ஏந்தி நிற்கின்ற நிலை போன்றவற்றால் வீரத்தையும் முகபாவம், கண் பார்வையால் மக்களை அன்புடன் அரவணைக்கின்ற ஒரு தலைவனாகவும் பண்டாரவன்னியனின் இந்தச் சிலையை அமைத்திருப்பதில் பாலமுருகன் வெற்றிபெற்றிருக்கிறார் என்றுதான் சொல்ல வேண்டும்.

கே: *உங்களால்உருவாக்கப்பட்ட பண்டாரவன்னியனின்உருவச்சிலையானது வடமாகாணத்தில் உள்ள சிலைகளிடத்தே குறிப்பிடத்தக்க ஓர் இடத்தைப் பிடித்துள்ளது என்பது பலரதும் கருத்தாகவுள்ளது. முகநூல் வாயிலாகவும்நேரடியாகவும்பலரதுகவனத்தையும் பாராட்டுதல்களையும் பெற்றுக்கொண்ட இந்தச் சிலையை இவ்வளவு திறம்பட உங்களால் எவ்வாறு அமைக்க முடிந்தது என்பதை எங்களுடன் பகிர்ந்து கொள்ள முடியுமா?*

உண்மையைக் கூறவேண்டுமாயின் சிறுவயதிலிருந்தே நான்பார்த்துவந்தசிற்பங்கள்தொடர்பாகவும்அவைகொண்டிருந்த யதார்த்தப் பண்புகள் தொடர்பாகவுமாக எனக்குள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற விவாதங்களாலும், மனித உடற்கூற்றியல் தொடர்பான எனது தேடல்களாலுமே இத்தகையதொரு படைப்பை உருவாக்க முடிந்ததெனலாம். மன்னன்என்றுபார்க்கின்றபோதுஇலக்கியங்கள்வாயிலாகவும், சினிமா மற்றும் நாடகங்கள் வாயிலாகவும் நாம் பெற்றுக் கொண்ட அனுபவங்கள் ஊடாகவே நாம் மன்னன் ஒருவனைக் கற்பனை செய்து கொள்கின்றோம். மன்னன் என்பவன் செல்வச் செழிப்பு மிக்கவன், ராஜபோகங்களை அனுபவிக்கின்றவன் என்ற வகையில் அழகிய ஆபரணங்கள் பலவற்றை அவனுக்கு அணிவித்து அழகாகக் காட்சி தருகின்ற ஒருவனாகவே அவனைக் கற்பனை செய்தும் கொள்கின்றோம். பல சந்தர்ப்பங்களில் அவ்வாறே அவனது உருவச்சிலைகளும் சித்திரிக்கப்படுகின்றன. இது காரணமாகச் சில சந்தர்ப்பங்களிலேதெய்வஉருவங்களுக்கும்மன்னர்களது உருவச்சிலைகளுக்குமிடையே காண்பியல் ரீதியாக வித்தியாசத்தைக் கண்டுகொள்ளமுடிவதும் கடினமாக இருக்கின்றது.

என்னைப் பொறுத்த வரையில் இவ்வாறன சிற்பங்களை அமைக்கின்றபோதுவரலாற்றுரீதியாக,ஆராய்ச்சிமனப்பாங்குடனேயே அணுகுதல் வேண்டும். அதாவது 18ஆம் நூற்றாண்டில்வாழ்ந்தஒருதமிழ்மன்னன், அந்நியர்ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போர் புரிந்து மக்களையும் மண்ணையும் காத்தலைத் தலையாய கடமையாகக் கொண்ட ஒரு தலைவன்எவ்வாறுஇருந்திருப்பான்?அவனதுஅமைப்பு, அணிகலன்கள்மற்றும்ஆயுதங்கள்போன்றனஎவ்வாறுஇருந்திருக்கும்? அவனது உடலமைப்பு, முக அமைப்பு என்பன எவ்வாறு இருக்கும் என்பவற்றை அந்தக் காலத்துடன் ஒத்துப் போகின்ற வகையிலே ஆராய்ந்து அமைப்பதன் மூலமே சுயமான, யதார்த்தம்நிறைந்தஒருபடைப்பாகஅதைஉருவாக்கமுடியும்என்றுநம்பினேன். இந்தப்பண்டாரவன்னியன் உருவச் சிலையை அமைத்தலை ஓர் ஆராய்ச்சியாகவே மேற்கொண்டேன். அதன் முடிவைத்தான் தற்போது முல்லைத்தீவுப்பிரதேசசபைக்குமுன்பாகஉங்களால்பார்க்கமுடிகிறது.

கே: *இந்த உருவச் சிலையின் உடகம் ஏது? அதன் உயரம் மற்றும் அளவு விஸ்தீரணங்களை எப்படித் தீர்மானித்தீர்கள்?*

இந்தச் சிலையைச் சீமெந்துக் கலவை கொண்டே உருவாக்கினேன். பண்டார வன்னியனின்உயரத்தைஎட்டுஅடியாகவும். அந்த உருவச்சிலையை நிறுத்தி வைத்திருக்கும் பீடத்தை எட்டு அடியாகவும்நிர்ணயித்தேன்.

கே: *இந்தஎட்டுஅடிஉயரத்தை எப்படியாகத் தீர்மானித்தீர்கள்?*

இந்தச் சிலையை ஒரு மனிதனுடைய இயல்பானஉயரத்தை(lifesize)உடையாதாக அமைப்பதென்பதே நோக்கமாக இருந்தது. தூரப்பார்வையில் பார்க்கின்றபோது ஒரு மனிதனின் சரியான உயரத்தில் சிலை தெரியவேண்டுமானால், ஒரு மனிதனின்சராசரிஉயரத்தைவிடசற்றுக் கூடுதலான உயரத்திலேயே அந்தச் சிற்பத்தை அமைத்தல்வேண்டும். அதுமட்டுமல்ல அந்தச் சிற்பம் எந்த இடத்திலே நிறுவப்படப்போகின்றது? அதன் பின்னணி என்ன? என்பவற்றைப் பொறுத்து அதற்கேற்ற வகையிலேதான் இப்படியான உருவச்சிலைகளின் அளவு விடயங்களைத் தீர்மானிக்கவேண்டும். முதலிலேயேஅவற்றைக்கவனித்துஅதற்கேற்பசிற்பத்தைச் செய்தாலே உருவச்சிலைகளை அமைத்து நிறுவியதன் பின்பும் அவை காத்திரத்தன்மையுடன் இருக்கமுடியும். இவ்வாறான உருவச்சிலைகளை அமைத்தலில் உள்ள உத்திநுட்பங்களில் இதுவும் ஒன்றாகும். அத்துடன் பண்டார வன்னியனைத் தமிழ் மக்கள் வீரத்தின் அடையாளமானஒருமன்னனாகக்கொண்டாடிவருகின்றனர். எனவே சாதாரண மனித உருவச் சிலைகளைப் போல் அல்லாது கதாநாயகத் தன்மை கலந்த ஓர் உருவச்சிலையாக இதை அமைக்கமுடிவெடுத்தேன். அளவுப்பிராமாணங்களிலேசில மாற்றங்களைச் செய்து அமைத்தல் என்பதும் இத்தகைய சிலை அமைத்தலில் உள்ளநுட்பங்களில்ஒன்றாகும். இவற்றுக்கு அமைவாகவே இந்தச் சிலையை அமைத்தேன்.

முல்லைத்தீவுநகரில்அமைந்துள்ளபிரதேசசபையின்மதில் சுவரை அண்மித்து இந்தச் சிலையை நிறுவுவதால், அதன் பின்னணியில்பிரதேசசபைக்கட்டடங்களும், மதில்சுவரும், மின் கம்பங்களும் அமையப் பெறும். இவற்றைக் கருத்தில் கொண்டும் பண்டாரவன்னியனின் உயரத்தை எட்டு அடியாக்குவதற்குத் தீர்மானித்

➡

நேர்கண்டவர்



ந. ஜெயதாஸ்

சித்திரமும் வடிவமைப்பும் நுண்கலைமாணி பட்டதாரி. தற்போது பத்திரிகையாளன். பத்திரிகையின் வாராந்த பக்கங்களின் பொறுப்பாளர்.





தேன். அதனால்தான் அது சரியான தோற்றத்தை வெளிப்படுத்திநிற்கின்றது. இதில்சாதகமாகஅமைந்தவிடயம்என்னவென்றால், சிற்பத்தின் அளவை(size), அதன் நிலையை pose) தீர்மானிக்கும் முழுச் சுதந்திரமும் என்னையே சார்ந்திருந்தது. இந்தச் சிலையின் வெற்றிக்கு அதுவும் ஒரு காரணமே.

கே: *இந்தச் சிற்பத்தை அமைப்பதற்கு உங்களுக்கு இருந்த சவால்களாக எவற்றைக் குறிப்பிடுவீர்கள்?*

பொதுவாகவே இத்தகைய சந்தர்ப்பங்களிலே நேரம், நிதி என்பவையே சவால்களாக அமைவன. ஆனால், இந்தச் சிலை அமைப்பதில் இவை இரண்டுமே எனக்குப் போதுமானவையாகஇருந்தன.இந்தச் சிற்பம் நிறுவப்படவேண்டிய இடம் முல்லைத்தீவு. ஆனால் சிற்பத்தை யாழ்ப்பாணம் - கொக்குவிலில் எனது வீட்டிலிருந்தே உருவாக்கினேன். செய்து முடித்ததன் பின்னர் கிட்டத்தட்ட 125கிலோ மீற்றர்களுக்கு இந்தச் சிலையைஎடுத்துச்செல்லவேண்டியிருந்தது. எடுத்துச்செல்லும்போது சேதம் ஏதும் ஏற்படாதவாறு அமைக்கவேண்டும்என்பதிலும்கவனம் செலுத்தவேண்டியிருந்தது. அதாவதுபுவியீர்ப்பு மையத்தை (center of gravity) சரியான முறையில் தீர்மானித்தல், சிற்பத்தின்உள்அமைப்பை (agmatuge) சரியானமுறையில்இரும்புக்கம்பிகளால்ஒட்டி அமைத்தல் மற்றும் கொங்கிறீட் கலவையைக் கொண்டு முழு உள் அமைப்பையும் கட்டமைத்தல்(structure) போன்றவற்றில் மிகவும் கவனமாகச் செயல்பட்டேன். ஆனாலும் சிற்பம்உரியஇடம்சென்றுசேரும்வரைபதற்றத்துடனேயே இருக்கவேண்டியதாயிற்று.

கே: *பரம்பரை வழியாகச் சிற்பத்தைச் செய்துவருபவர்களையும்சிற்பம்செய்தலைஒருகற்கையாகப் பயின்று அதைச் செய்து வருபவர்களையும் பற்றிய உங்கள்கருத்து?*

ஒருவர் கலைத்துறையிலே சிறந்து விளங்குகின்றார் என்றால் பிறப்பிலேயே கலை அறிவை அவர் பெற்றிருக்கிறார் என்பதுதான்உண்மை. பிறப்பிலேயேகலைஞானத்தைப் பெற்றுக்கொள்ளாத ஒருவர் கலையைப் பெற்றுத் தேர்ச்சி பெற்றிருக்கின்றார் என்று கூறமுடியாது. அதாவது பிறப்பிலேயேகலைஞானத்தைப்பெற்றஒருவர்அதைக்கற்பதனூடாக அதை மேலும் விருத்தி செய்து கொள்கின்றார். அதே போன்று கலையைக் கற்காது யாரும் அதிலே தேர்ச்சி பெறவும் முடியாது. உதாரணமாகப் பரம்பரை பரம்பரையாகச் சிற்பத்துறையில் ஈடுபட்டு வருகின்றவர்கள் தந்தையிடமிருந்துமகனும்மகனிடமிருந்துஅவரதுமகனுமாகதற்றிந்துகொண்டே செல்கின்றனர். அதாவது சிற்பத்தை அமைக்கும் உத்தி நுட்பங்களை அவதானித்து அவற்றைப் பின்பற்றுகின்றனர். உபகரணங்களைப் பயன்படுத்துகின்ற முறைகளை அறிந்துகொள்கின்றனர். தமது சிற்ப ஆக்கங்களுக்குக் கிடைக்கின்ற விமர்சனங்களை ஆராய்ந்து தமது படைப்புக்களை மேலும் மேலும் சிறப்பாகப் படைப்பதற்குரிய முயற்சியில் ஈடுபடுகின்றனர். இவை அனைத்தையும் கற்றல்நடைமுறைக்குள்ளேவைத்தே நாம் உற்றுநோக்கவேண்டும். ஆனால், இன்றைய கால கட்டத்திலே, சிற்பம் என்பது நிறுவனம் சார்ந்தகற்கையாக, செயன்முறை சார்ந்த(pratical)மற்றும்கோட்பாடு சார்ந்த (theory) கற்கையாகவும் முறையான பயிற்சியை வழங்கக் கூடியதாகவும் உள்ளது; மேலும் நவீன உபகரணங்களின் பாவனை, இணையத்தளத்தினூடாகக் கற்றுக்கொள்ளல் போன்றவைகலையைநிறுவனரீதியாகக் கற்காது பரம்பரை வழியாக மேற்கொள்பவர்கள்கூட அதன் பல நுட்பங்களையும்கற்கக்கூடியசூழலுக்குள் ளேயே உள்ளார்கள் என்பதையே காட்டுகின்றது. கலைத்துறையைப் பொறுத்த வரையில் எவ்வளவு தூரம் கலை உருவாக்கச் செயற்பாட்டிலே ஆராய்ச்சி மனப்பாங்குடனும்அர்ப்பணிப்புடனும் ஈடுபடுகின்றோமோ அவ்வளவு தூரம் சிறந்த கலைப் படைப்புக்களை உருவாக்க முடியும் அந்தக் கலைத்துறையிலே சிறந்து விளங்க முடியும் என்பதுதான் எனது கருத்தாகும்.













கட்டுரை

ச.லலீசன்

சாவகச்சேரி – சரசாலையைச் சேர்ந்தவர். கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் சிரேஷ்ட விரிவுரையாளராகவுள்ளார். யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் பொதுச் செயலாளர். 25வருடங் களுக்கு மேலாக மேடைப் பேச்சாளராகவும் இருந்து வருகிறார்.

தமிழில் சொற்பொழிவின் மாற்று வடிவங்கள் பெறும் செல்வாக்கு

இலங்கையை அடிப்படையாகக் கொண்ட பார்வை

ஆய்வுச் சுருக்கம்

தமிழில் சொற்பொழிவு நீண்ட வரலாற்றைக் கொண்டதாக அமைந்திருக் கின்றது. வாய்வழிக் கலையாக அமைந்திருப்பதால் இதை வரண்முறை யாக ஆவணப்படுத்தி நோக்கும் போக்கு அரிதாகவுள்ளது. சொற்பொழிவு என்பது தற்காலத்தில் பயன்படுத்தப்படும் முதன்மைச் சொல்லாக இருப்பி னும் பேச்சு, பிரசங்கம், உரை முதலிய சொற்களால் இந்தச் செயன்முறை குறிக்கப்படு கின்றது. இந்த ஆய்விலும் இந்தச் சொற்கள் யாவும் ஒரு பொரு ளிலேயே பயன்படுத்தப்படுகின்றன.

தமிழில் சொற்பொழிவு பிரபலம் பெறுவதற் கான அடிப்படைக் களமாக விளங்கியது இலங்கை ஆகும். மிசனறிமார் ஆற்றிய பங்களிப்பும் நாவலர், சதாவதானி நா. கதி ரேவேற்பிள்ளை போன்றோர் நல்கிய பங்க ளிப்பும் இதன் வளர்ச்சியில் முக்கியமான தாகும். பல்வேறு அறிஞர்களின் பங்களிப்பு டன் வளர்த்தெடுக்கப்பட்ட இந்தக் கலை, காலத்தின் தேவை கருதி மாற்று வடிவங் களை நாடியுள்ளது. பட்டிமண்டபம், வழக் காடு மன்றம், சுழலும் சொற்போர், விவாதம், சொல்லாடுகளம் என்பன போன்ற பெயர்க ளால் அழைக்கப்படும் நிகழ்வுகள் இன்று பிரபல்யம் பெற்று விளங்குகின்றன. இவற் றுக்கான அடிப்படை சொற்பொழிவு ஆகும். சமயத் தளத்தில் ஆரம்பிக்கப்பட்ட சொற் பொழிவுச்செயற்பாடு அரசியல்சமூகம்என விரிந்து, தொழில்சார் பேச்சாளர்களையும் உருவாக்கியுள்ளது. சொற்பொழிவின் மாற்று வடிவங்கள் பலருக்கு வருவாயை நல்கும் கலையாக உருப்பெற்றுள்ளன. இன்று இணையம் மற்றும்தொலைக்காட்சி களில் சொற்பொழிவை அடிப்படையாகக் கொண்டபல கலை நிகழ்ச்சிகள் ஒளிபரப்பா கிவருகின்றன.

விவரித்தல், உற்று நோக்குதல், பகுப்பாய்வு, விமர்சனம்என்றஅடிப்படையில்இந்தக்கட்டு ரைக்கான ஆய்வு முறையியல் அமைந் துள்ளது.

திறவுச் சொற்கள் : சொற்பொழிவு, பேச்சா ளர், வேறு வடிவங்கள் அல்லது மாற்று வடி வங்கள். பட்டிமண்டபம், அருகிவரும் கலை

ஆய்வு அறிமுகமும் பிரச்சினையும்

பேச்சு, உரை, சொற்பொழிவு என்ற பெயர்க ளால் அழைக்கப்படுகின்ற ஆற்றுகை வடிவம் ஆரம்ப காலத்தில் சமயத் தளத்தில் கைக் கொள்ளப்பட்ட பிரசார ஊடகமாகக் காணப் பட்டது. சமயத் தளத்தில் இது பெரும்பாலும் பிரசங்கம் என்ற பெயரால் அழைக்கப்பட் டது. சங்க இலக்கியங்களிலும் சிலப்பதி காரம் மற்றும் மணிமேகலை ஆகிய இரட் டைக் காப்பியங்களிலும் பிரசங்கச் செயன் முறைக்கு ஒப்பான ஒரு செயற்பாடு இடம் பெற்றிருப்பதாகக் கருத இடமுண்டு. ஆயி னும் இந்தக் கலை வாய்மொழி சார்ந்த ஆற் றுகைக் கலையாகக் காணப்படுகின்றமை யால் போதிய ஆவணப்படுத்தல்கள் வரண் முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. மேனாட்டார் வருகையுடன் சொற் பொழிவுச்செயற்பாடு, சமயச்செய்திகளைப் பிரசாரம் செய்வதற்கான முக்கிய கலை வடி வமாக அடையாளப்படுத்தப்பட்டது. கிறிஸ் தவ, இஸ்லாமிய சமயத் தளங்களின் வழி பாட்டு நிகழ்வுகளில் ஓரங்கமாகப் பிரசங்கச் செயன்முறையும்உள்வாங்கப்பட்டது.

பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் இரு பதாம் நூற்றாண்டிலும் சிறப்புற்றிருந்த சொற்பொழிவு, பல்வேறு காரணிகளின் தாக்கங்களால் இன்று அருகிவரும் கலைக ளுள் ஒன்றாக அடையாளப்படுத்தப்படும் நிலைமைக்குச் சென்றுள்ளது. இந்த நிலை யில் மனிதர்கள் இணைந்து செயற்படும் கூட்டு முயற்சியாகச் சொற்பொழிவின் மாற்று வடிவங்கள் தம்மைத் தகவமைத் துக்கொண்டன.

ஆய்வின் எல்லை

இலங்கையைக் களமாகக் கொண்டே சொற்பொழிவுக்கான மாற்று வடிவங்கள் நோக்கப்படுகின்றன. காலத்துக்குக் காலம் தொலைக்காட்சிகளின் இரசனைச் செல் வாக்கால் புதிய உத்திகள் புகுத்தப்படு கின் றன. இலங்கையில் பார்வையிடக்கூடிய தமிழகத் தொலைக்காட்சிகளில் இடம்பெ றும் சொற்பொழிவு சார்ந்த மாற்று நிகழ்வு களும்இங்குகருத்தில்கொள்ளப்பட்டுள்ளன.

ஆய்வின் முக்கியத்துவம்

நீண்ட வரலாற்றைக் கொண்ட சொற்பொ ழிவு, காலத்துக்கேற்ப தன்னைத் தகவ மைத்து மக்கள் செல்வாக்குக்கு உட்படும் நிலைமையை இவ்வாய்வேடு சுட்டும். இத னால் சொற்பொழிவின் மாற்று வடிவங் களை மேலும் அறிமுகம் செய்யக்கூடிய சூழல் ஏற்படுத்தப்படும்.

ஆய்வின் கருதுகோள்

- சொற்பொழிவுச் செயன்முறை தற்கால சமூகத்தவரிடையே அருகிவரும் கலை வடி வங்களுள் ஒன்றாகக் காணப்படுகின்றது.
- சொற்பொழிவுக்கான மாற்றுவடிவங்கள் மக்களிடையே செல்வாக்கைப் பெற்று வரு கின்றன.

தரவு சேகரித்தல்

இந்த ஆய்வுக்கான முதனிலைத் தரவுகளா கச் சொற்பொழிவு மற்றும் அதன் மாற்று வடிவச் செயற்பாட்டாளர்கள் மற்றும் நுகர் வோரது கருத்துக்கள் அமைகின்றன. இரண்டாம் நிலைத் தரவுச் சாதனங்களாகச் சொற்பொழிவு குறித்த நூல்கள், பருவ இதழ் களில் வெளிவந்த கட்டுரைகள் என்பன அமைகின்றன.

சொற்பொழிவின் தோற்றமும் தற்போதைய நிலையும்

தமிழில்சொற்பொழிவின்தோற்றம்குறித்து வாதப்பிரதிவாதங்கள் உள்ளன. சங்ககால இலக்கியங்களில்காணப்படுகின்ற

பல்சான்றீரே! பல்சான்றீரே!
குமிமகளிர் கூந்தல் புரைய
அமரின் இட்ட அருமுள் வேலிக்
கல்லென் பாசறைப் பல்சான்றீரே

(புறநானூறு - 301)

முதலிய பாடல்களும் திருக்குறளில் சொல் வன்மை, அவை அஞ்சாமை முதலிய அதி காரங்களில் குறிப்பிடப்படும் செய்திகளும் சொற்பொழிவு வடிவம் நீண்டகால வர லாற்றை உடையது என்பதை உணரவைக் கின்றன. இருப்பினும் மிசனறிமாருடைய வருகைக்குப் பின்னரே சமயத்தளத்தில் சொற்பொழிவுச்செயன்முறை ஆரம்பிக்கப்பட்டது எனக்கருதுவாரும்உள் ளனர். மிசனறியாரின் செல்வாக்கால் உந் தப்பெற்ற நல்லூர் ஆறுமுகநாவலர் 31.12.1847ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணைச் சிவன்கோவிலில் முதன்முதலாகச் சொற்பொழிவாற்றினார். சொற்பொழிவு முறைமை செல்வாக்குப் பெறுவதற்கு முன்னர் புராணங்களுக்குப் பயன் சொல்லுகின்ற செயற்பாடே செல் வாக்குப்பெற்றிருந்தது.

பிரபல பேச்சாளர்களின் நாவசைந்தால் நாடசையும் என்ற அளவுக்கு நிலைமை இருந்தது. சமயத் தளத்திலும் அரசியல் தளத்திலும் கருத்துக்களை விதைப்ப தற்கு ரிய முக்கிய ஊடகமாகச் சொற்பொழிவே விளங்கிற்று. இருப்பினும் இருபத்தோராம் நூற்றாண்டில் சொற்பொழிவுக்குள்ள சமூ கச் செல்வாக்கு வலுக்குன்றியதாகவே கணிப்பிடப்படுகின்றது. அருகிவரும் கலை களுள் ஒன்றாகத்தற்போது இதைஅடையா ளப்படுத்துகின்றனர்.

சொற்பொழிவின் மாற்று வடிவங்கள்

சொற்பொழிவின் இரசனைத் தன்மையை மேம்படுத்தும் நோக்குடன் பட்டிமண்டபம், வழக்காடுமன்றம், சுழலும் சொற்போர், சொல்லாடுகளம், விவாத அரங்கம் முத லிய நிகழ்ச்சிகள் அறிமுகமாகிவருகின் றன. சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதியில் (1908 - 1982) இவற்றை மக்களிடையே பிரபலமடையச் செய்த பெருமை கம்பன் கழக ஸ்தாபகராக விளங்கிய கம்பனடிப் பொடிசா.கணேசனையேசாரும். இன்றுபிர பலம் பெற்றுத் திகழும் மாற்று வடிவமாகத் திகழ்வது பட்டிமண்டபம் ஆகும். இதன்தோற் றத்தையும் இரண்டாயிரம் வருடங்களுக்கு முற்பட்டதாகக் காணும் போக்கு உள்ளது. இதைவிட விவாதம், வழக்காடு மன்றம், சுழ லும் சொற்போர், சொல்லாடுகளம் என்பன முக்கிய வடிவங்களாகக்காணப்படுகின்றன.

பட்டிமண்டபம்

பட்டிமண்டபம்பற்றியசெய்திகள்சிலப்பதிகா ரம், மணிமேகலை, திருவாசகம் முதலிய பண்டைத் தமிழ் இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. இலக்கியங்களில் பட்டிமண் டபம் பற்றிய செய்திகள் சிலப்பதிகாரத்தில் இந்திரவிழா ஊர் எடுத்த காதையில்,

'மா நீர் வேலி வச்சிர நல்நாட்டு
கோன் இறை கொடுத்த கொற்றப் பந்தரும்
மகத நல்நாட்டு வாள்வாய் வேந்தன்
பகை புறத்துக் கொடுத்த பட்டிமண்டபமும்'

(இ.எ. காதை 99 - 102)

எனவரும் அடிகள் பட்டிமண்டபம் பற்றிய செய்திகளை உள்ளடக்கியுள்ளன.

மணிமேகலை விழாவறைக் காதையில்,

'தண்மணற் பந்தரும் தாழ்தரு பொதியிலும்
புண்ணிய நல்லுரை அறிந்தோர்
பொருந்துமின்
ஒட்டிய சமயத்து
உறுபொருள் வாதிகள்
பட்டிமண்டபத்துப்
பாங்கறிந்து ஏறுமின்'

(விழாவறை காதை 58 - 61)

எனவரும் அடிகள் பட்டிமண்ட பம்அந்தக்காலத்தில் இருந்தமை பற்றி அறியத்தருகின்றன.

பல்லவர் காலத்தில் எழுந்த திருவாசகம்

கட்டறுத் தெனை ஆண்டு கண்ணார நீ
இட்ட அன்பரோடு யாவரும் காணவே
பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை
எட்டினோடு இரண்டும் அறியேனையே

(திருச்சதகம்: 49)

எனப் பட்டிமண்டபம் பற்றிய செய்தியை வெளிப்படுத்துகின்றது. சோழர் காலத்தில் எழுந்த கம்பராமாயணத்திலும் பட்டிமண்டபம் பற்றிய செய்தி உள்ளது.

மாட கூடங்கள் மாளிகை ஒளிகை மகளிர்
ஆடு அரங்குகள் அம்பலம் தேவர் ஆலயங்கள்
பாடல் வேதிகைப் பட்டிமண்டபம் முதல் பலவும்
நாடி ஏகினன் இராகவன் புகழ் என்னும் நலத்தான்

(கம்பராமாயணம்: சுந்தரகாண்டம் 133)

மேலைத் தேசத்தில் பட்டிமண்டபம்

மேலைப்புலத்தில் பட்டிமண்டபத்துக்குச் சமதையாக விவாதம் என்ற சொல்லையே பயன்படுத்துகின்றனர். பொதுமக்கள் முன்னிலையில் அல்லது நாடாளுமன்றத்தில் அல்லது சட்டசபையில் இடம்பெறுகின்ற முறைசார் வாதத்தையே விவாதம் (Debate) என்ற சொல்லால் அழைக்கின்றனர். பண்டைய கிரேக்கத்தில் இடம்பெற்ற ஏதேன்ஸின் ஜனநாயகமாக்கல் Athenian democracy தொடர்பான சொற்போர்கள் பிரபலமானவை.

இவை கி.பி. 5ஆம் நூற்றாண்டில் இடம்பெற்றன. உலக வரலாற்றில் கல்வி மீதான ஆர்வம் அதிகரித்த காலப்பகுதியாக 18ஆம் நூற்றாண்டையே குறிப்பிடுவர். இந்தக் காலத்தில் மறுமலர்ச்சி தொடர்பான சிந்தனைகள் வலுப்பெற்றன.

இதனால் 18ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் லண்டனில் விவாதச் சங்கங்கள் தோற்றம் பெற்றன. மறுமலர்ச்சிக்காலத்தில் (AgeofEnlightenment) இந்தவிவாதங்கள் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவையாக அமைந்தன.

கிறிஸ்தவ சமய மறுமலர்ச்சியை நோக்காகக் கொண்டு ஜோன் ஹென்லி என்பவர் 1726ஆம் ஆண்டில் லண்டனில் ஓறேற்றரி சபையை உருவாக்கினார். இது விவாதங்களுக்காகவே உருவாக்கப்பட்ட சபை ஆகும். இது மக்களிடையே விவாதத் திறனைப் பிரபலப்படுத்தியது.

தமிழில் மரபுநிலைப் பட்டிமண்படம்

கம்பனடிப்பொடி சா. கணேசன் ஏற்படுத்திய வடிவத்தையே இன்றும் இலங்கையில் பெரும்பாலானவர்கள் கைக் கொள்கின்றனர். இங்கு அணிக்கு மூன்று பேர் வாதிடுவர். தலைப்பு இருதரப்புக்குரியதாக அல்லது முத்தரப்புக்குரியதாக அமைந்திருக்கும்.

எடுத்துக்காட்டு: இசைப்பாடல் மரபின் ஊடாகப் பக்தியை வளர்ப்பதில் பெரிதும் பங்களித்தவர் திருஞானசம்பந்தரே - சுந்தரரே (இருதரப்புக்குரிய தலைப்பு) இசைப்பாடல் மரபின் ஊடாகப் பக்தியை வளர்ப்பதில் பெரிதும் பங்களித்தவர் திருஞானசம்பந்தரே - திருநாவுக்கரசரே - சுந்தரரே. (முத்தரப்புப் பட்டிமண்டபத்துக்குரிய தலைப்பு)

நடுவர் முகவுரையைச் சொல்லிப் பட்டி மண்டபத்தை ஆரம்பித்து வைக்க அணித்தலைவர் தலைப்புப் பற்றி விளக்கம் வழங்கித் தமது தரப்பு வாதங்களைத் தொடக்கி வைப்பார். தொடர்ந்து எதிரணித்தலைவர் தான் ஒருவரை விலக்கணத்தை முன்மொழிந்து எதிரணித் தலைவரது கருத்துக்களை மறுத்துத் தனது நியாயங்களை முன் வைப்பார்.

தொடர்ந்து அணி சார்ந்த ஏனைய பேச்சாளர்கள் இவ்வாறு வாதங்களையும் மறுவாதங்களையும் முன் வைத்தவாறு பட்டிமண்டபத்தை நகர்த்திச் செல்வர். நிறைவில் இரண்டு அணித்தலைவர்களும் தொகுப்புரை ஆற்றுவர். இது தமது அணியினர் குறிப்பிட்ட கருத்துக்களுக்கான தொகுப்பாகவும் முத்தாய்ப்பாகத் தமது நியாய வலியுறுத்தலாகவும் எதிர் அணியினருக்கான மறுப்பாகவும் அமையும். முதலில் பேசிய அணித் தலைவர் இறுதியாகவே தொகுப்புரையை ஆற்றுவார். இதனால் தனக்கு எதிரான தலைவர் கருத்துக்களை மறுதலிக்கக்கூடிய வாய்ப்பு அவருக்கு வழங்கப்படும். தொகுப்புரையின் போது புதிய கருத்துக்களை முன்னிறுத்துவது அழகல்ல.

ஈற்றில் நடுவர் இரண்டு அணி வாதங்களைச் சீர் தூக்கிப் பார்த்துத் தலைப்பில் உள்ள ஒரு நுட்பத்துக்குப் பொருந்தக்கூடிய விடயத்தை முன்னிறுத்தித் தனது தீர்ப்பை அறிவிப்பார். அணிவாதங்களை ஒரு புறம் வைத்துவிட்டு தனது நியாயங்களை முன்னிறுத்தித் தீர்ப்பொன்றை அறிவிக்கும் நடைமுறையும் நடுவர்களால் கைக் கொள்ளப்படுகின்றது.

பட்டிமண்டபத்தில் நேரக்குறுக்கம்

விவாதங்கள் நேரவரையறையற்றே இடம்பெற்றன. இதைப் பொதுமக்கள் முன்பான ஆற்றுகை நிகழ்வாக மேடையேற்றியபோது நேரவரையறை இடவேண்டிய தேவை ஏற்பட்டது. 1976ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற தமிழ்விழாவின் போது 'தேவன் யாழ்ப்பாணம்' அவர்களை நடுவராகக் கொண்டு இடம்பெற்ற வழக்காடு மன்றம் கூடு பிடித்தமையால் காலையைத் தாண்டி மாலை வரை இடம்பெற்றதாகக் குறிப்பிடுவர். தொலைக்காட்சிகளில் பட்டிமண்டபங்கள் செல்வாக்குப் பெற்ற பின்னர் ஒரு மணி நேரத்துள் அல்லது ஒன்றரை மணி நேரத்துள் நிறைவு செய்ய வேண்டிய நிகழ்வுகளாக இவை அமைந்தன. இதனால் அணிக்கு இருவர் பேசும் வழக்கம் ஏற்படுத்தப்பட்டது. அதிலும் அணித்தலைவர் இறுதியாகவே பேசுவார். இங்கு தொகுப்புரை இடம்பெறுவதில்லை. இத்தகைய பட்டிமண்டப வடிவமே இன்று தமிழகத்தில் பிரபலமாகக் கைக் கொள்ளப்படுகின்றது. இலங்கையிலும் மெல்ல மெல்ல இந்த வடிவம் செல்வாக்குப் பெற்று வருகின்றது.



விவாதம்

பட்டிமண்டபத்துக்கு ஒப்பானதாக அமைந்தாலும் இங்கு தலைப்பில் ஒருமைத்தன்மை காணப்படும். பெரும்பாலும் ஆம் - இல்லை அல்லது ஏற்றுக்கொள்ளலாம் அல்லது ஏற்றுக்கொள்ள முடியாது என்றவாறான தலைப்புக்களே இதில் அமைகின்றன. போருக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் அமைதி ஏற்பட்டுள்ளது இல்லை என அமைவது ஒரு விவாதத்துக்குரிய தலைப்பாகவே நோக்கப்படும்.

வழக்காடு மன்றம்

நீதிமன்ற வழக்குகள் பெற்ற செல்வாக்கின் அடிப்படையில் இலக்கிய வழக்காடுமன்றங்கள் மக்களிடையே செல்வாக்குப் பெற்றன. இங்கு நடுவர் ஒருவரோ அல்லது நடுவர் ஆயம் என்ற நிலையில் மூவரோ அமர்ந்திருப்பர். குற்றச்சாட்டை ஓர் அணியும் அதற்கான மறுப்பை இன்னோர் அணியும் மேற்கொள்ளும். ஒருவர் பேசும் வேளையில் குறுக்கிடுவதற்கு நீதிபதிக்கும் வாதிகளுக்கும் அனுமதி உண்டு.

சுழலும் சொற்போர்

இந்த வடிவம் ஒரு பிரச்சினைக்குக் காரணமான அல்லது ஒரு விடயத்தில் செல்வாக்குச் செலுத்தும் பன்முகக் காரணிகளை அடையாளப்படுத்தும் நிகழ்ச்சியாகும். ஒருவர் பேசிய பின் அவரை மறுத்து மற்றையவர் பேசும் நடைமுறையும் ஒருவரையொருவர் வினாத்தொடுக்கும் நடைமுறையும் இங்கு உண்டு.

சமயத்தளத்தில் மாற்று வடிவங்கள் பொருத்தமானவையா?

திருத்தலங்களில் பட்டிமண்டபங்களை நடத்தக்கூடாது என்ற கொள்கையுடையோரும் உள்ளனர். இங்கு இடம் பெறக்கூடிய வாதப்பிரதிவாதங்கள் பக்திசார்ந்த உணர்வைக் கேடுறுத்துவதாக அமையலாம் என்பதாலேயே இத்தகைய கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக பக்தி உணர்வில் பெரிதும் விஞ்சி நிற்பவர் சிறுத்தொண்டரா? இயற்பகையாரா? என்ற பட்டிமண்டபத்தை நடத்துவதாக இருந்தால் வாதப் பிரதிவாதங்கள் செய்வோர் பக்தி என்ற தளத்தில் நின்று பயணம் செய்வோராக அமைய வேண்டியது கட்டாயமாகின்றது. மக்களைக் கவர்கின்றோம் என்ற போக்கில் பிள்ளைக் கறி சமைப்பதையும் மனைவியைத் தானமாகக் கொடுப்பதையும் விகட மாக்கினால் அது குளிக்கப்போய்ச் சேறு பூசுவதாக அமைந்து விடலாம்.

ஆய்வின் கண்டறிதல்கள்

சொற்பொழிவு வடிவம் தனிமனிதன் சார்ந்த செயற்பாட்டுக் கலையாக இருக்கும் நிலையில் குழுச் செயற்பாட்டு நிலை நிகழ்ச்சிகள் தற்போது பலராலும் விரும்பப்படுகின்றமையை நோக்கமுடிகின்றது. குறுகிய நேரத்துள் தாக்கவியல் ரீதியான கருத்துக்களையே இன்று பலரும் விரும்புகின்றனர். இதே நேரம் சபையைக் கவரவேண்டும் என்பதற்காகப் பொருத்தமற்ற அல்லது தேவையற்ற நகைச்சுவைக் கதைகளைப் பேசும் களமாகவும் இந்த நிகழ்ச்சிகள் காணப்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில் போலச்செய்தல் (மிமிக்கிரி) நிகழ்ச்சிகளுக்கு ஒப்பானவையாகவும் பட்டிமண்டங்கள் அமைவதுண்டு. தொலைக்காட்சி அலைவரிசைகளின் பெருக்கத்தால் வெவ்வேறு பெயர்களைக் கொண்ட சொற்பொழிவின் மாற்றுவடிவ நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகின்றன. 'நீயா? நானா?', 'யாவரும் கேளீர்', 'சொல்லாடுகளம்', 'அரட்டை அரங்கம்' என்பன அவற்றுள் சிலவாகும்.

> சொற்பொழிவு வடிவம் தனிமனிதன் சார்ந்த செயற்பாட்டுக் கலையாக இருக்கும் நிலையில் குழுச் செயற்பாட்டு நிலை நிகழ்ச்சிகள் தற்போது பலராலும் விரும்பப்படுகின்றமையை நோக்க முடிகின்றது. குறுகிய நேரத்துள் தாக்கவியல் ரீதியான கருத்துக்களையே இன்று பலரும் விரும்புகின்றனர்.



> பிரபல பேச்சாளர்களின் நாவசைந்தால் நாடசையும் என்ற அளவுக்கு நிலைமை இருந்தது. சமயத் தளத்திலும் அரசியல் தளத்திலும் கருத்துக்களை விதைப்பதற்குரிய முக்கிய ஊடகமாகச் சொற்பொழிவே விளங்கிற்று. இருப்பினும் இருபத்தோராம் நூற்றாண்டில் சொற்பொழிவுக்குள்ள சமூகச் செல்வாக்கு வலுக்குன்றியதாகவே கணிப்பிடப்படுகின்றது. அருகிவரும் கலைகளுள் ஒன்றாகத் தற்போது இதனை அடையாளப்படுத்துகின்றனர்.

விதப்புரைகள்

- சொற்பொழிவின் மாற்று வடிவங்கள் குறித்த பயிற்சிப் பட்டறைகளை நடத்துதல்
- சொற்பொழிவுக்கான மாற்று வடிவங்களை மக்கள் மத்தியில் பிரபலமாக்குதல்
- சொற்பொழிவு சார்ந்த துறைகளில் ஈடுபடுவோருக்கு ஊக்குவிப்புக்களை வழங்குதல்
- மக்களின் இரசனைப் பண்பை மேம்படுத்தல்
- பாடசாலை மட்டத்தில் இதன் உயர்நிலைச் செயற்பாட்டுக்கான களங்களை வழங்குதல்
- இலங்கைத் தமிழ் சொற்பொழிவுசார் கலைஞர்களுக்கான ஆதரவுக்களத்தை புலம்பெயர் உறவுகள் ஊடாக ஏற்படுத்துதல்

நிறைவுரை

மக்களிடம் சேரவேண்டிய கருத்துக்களை விதைப்பதற்கான முதன்மைக்களம் சொற்பொழிவும் அதுசார்ந்த மாற்றுவடிவத் துறைகளும் ஆகும். இதை வினைத் திறனுள்ள வகையில் கையாண்டு சமூக மாற்றங்களை ஏற்படுத்த அனைவரும் முனைய வேண்டும்.

உதவியன

- அறந்தை நாராயணன் (2007) மேடையில் பேசலாம் வாருங்கள், நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிட். சென்னை
- சிவகாமி. ச. (2005), சொற்பொழிவிலக்கியம், உலகத்தமிழிலக்கிய வரலாறு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை
- சிவலிங்கராஜா. எஸ். (2001) ஈழத்துத் தமிழ் இலக்கியச் செல்நெறி தனலக்குமி புத்தகசாலை, திருநெல்வேலி.
- சிவலிங்கராஜா. எஸ்(2015) யாழ்ப்பாணத்தில் சமயச் சொற்பொழிவுப் பாரம்பரியம், கலைக்கேசரி, (Vol 06 Issue 03) கொழும்பு.
- முத்து சிவம். ஆ. (1947) மேடைக்கலை, கார்த்திகாயினி பிரசுரம், புதுக்கோட்டை ஸ்டேட்.
- லலீசன். ச. (2009) தமிழில் பிரசங்கமரபு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ் முதுமாணிக் கற்கைக்காக எழுதப்பட்ட பிரசுரிக்கப்படாத ஆய்வேடு.
- ஜெபநேசன். எஸ். (2006) தமிழ்ச்சமுதாயத்தில் பிரசங்கமரபின் தோற்றமும் வளர்ச்சியும் சிலகுறிப்புக்கள்,
- யாழ்ப்பாணம் மொழியும் வாழ்வும் ஓர் அறிமுகக் கையேடு (தொகுப்பு: மனோன்மணி சண்முகதாஸ், மயில்வாகனம் இரகுநாதன்) கோகுலம் வெளியீடு, திருநெல்வேலி



தமிழ் ஓர் ஒட்டமைப்பு மொழி

கட்டுரை



பேராசிரியர் அ. சண்முகதாஸ்

திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் மொழித்துறைத்தலைவராகஇருந்தவர்.பலஆய்வுநூல்களையும், கட்டுரைகளையும் எழுதியவர். நைஜீரியாவிலுள்ள இபாதன் பல்கலைக்கழகத்தில் மொழியியல் துறையிலும், ஜப்பான் – டோக்கியோ காகூசன் பல்கலைக் கழகத்திலும் வருகைதரு விரிவுரையாள ராகவும் பணிபுரிந்தவர். 1998இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் (பொறுப்பு) பதவியையும் 2007இல் பல்கலைக் கழகத்தின் பல நிரிவாகப் பொறுப்புக்களையும் கவனித்தார். இலங்கையின் பல்வேறு கல்வி நிறுவனங்களின் கல்விக்குழு, பாடத்திட்டக்குழு, மதிப்பீட்டுக் குழு எனப் பல நிலைகளில் பணி புரிந்தவர். அயல் நாட்டுப் பல்கலைக் கழகங்கள் அனுப்பும் முனைவர் பட்ட ஆய்வேடுகளை மதிப்பிடும் தேர்வாளராகவும் பணிபுரிந்த பெருமைக்குரியவர். யுனேஸ்கோ விருது, இலங்கை அரசின் சாகித்ய ரத்னா உட்பட பல விருதுகளைப் பெற்றவர்.

உலகிலே ஒட்டமைப்புப் பண்புடைய பல மொழிகள் உள்ளன. தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற திராவிட மொழிகளெல்லாம் ஒட்டமைப்புப் பண்புடையன. திராவிட மொழிகளுள் ஒன்றாகிய தமிழ்மொழியும் ஒட்டமைப்புப் பண்புடையது. ஓர் அடிச்சொல்லுடன் பல ஒட்டுக்களைச் சேர்த்துச் சொற்களை ஆக்கும் பண்பு தமிழ்மொழியிலே காணப்படுகின்றது. எடுத்துக்காட்டாக 'படி' என்னும் அடிச்சொல்லுடன் ஒட்டுக்களைச் சேர்க்குமிடத்து பல புதிய சொற்கள் உருவாகின்றன.

படி– படி + ந்த் +ஆன்: படிந்தான்
படி – கின்ற்+ ஆன்: படிகின்றான்
படி – வ்+ஆன்: படிவான்
படி – த்த் ஆன்: படித்தான்
படி – க்கின்ற் ஆன்: படிக்கின்றான்
படி – படி + ப் +ப்ஆன்: படிப்பான்
படி – பு: படிப்பு
படி – வு: படிவு
படி – ம்+அம்: படிமம்
படி – கை: படிகை
படி – தல்: படிதல்
படி – த்தல்: படித்தல்
படி – க்க்+அ பட்+அது: படிக்கப்பட்டது
படி + ப்பி + த்த்+ ஆன்: படிப்பித்தான்

பல்லாயிரக்கணக்கான தமிழ்ச் சொற்கள் இவ்வாறு பல அடிச்சொற்களுடன் ஒட்டுக்களை ஒட்டுவதால் ஆக்கப்படுகின்றன. இவ்வாறு ஒட்டுக்களைச் சேர்க்குமிடத்து அந்த ஒட்டுக்கள் ஆங்கிலம் போன்ற மொழிகளிலேதனித்துநிற்பதுபோலன்றித் தமிழிலே அடிச்சொல்லுடன் சேர்ந்து விடுகின்றன. இவ்வாறு சேர்ந்த சொற்களைப் பிரிக்குமிடத்து சிற்சில வேளைகளில் மயக்கமேற்படுவதுண்டு. எடுத்துக் காட்டாக 'அவரைக்காய்' எனும் சொல்லை.

அவரை + காய்
அவர் + ஐ +காய்

என்று இரண்டு வகையாகப் பிரிக்கலாம். முதலாவது, 'அவரையினுடைய காய்' என்று பொருள்படும். இரண்டாவது 'அந்த ஆளைக்காய்' (சினத்தல்) என்று பொருள்படும். இத்தகைய இயல்பு தமிழ்மொழியின் ஒட்டமைப்புப் பண்பினாலேயே ஏற்படுகின்றது. தமிழ்க் கவிதைகளுக்கு ஒருவகையான கவர்ச்சியாற்றலைக் கொடுக்கும் ஓர் அணிவகை இந்த ஒட்டமைப்புப் பண்பினாலேயே அமைகின்றது. இதனால் இந்த அணியை ஒட்டணி என்றே பெயரிட்டுள்ளனர்.

"வெள்ளரிக்காயாவிரும்புமவரைக்காயா உள்ளமிளகாயா ஒரு பேச்சுரைக்காயா"

என்னும் பாடலை இரண்டு வகையாகப் பிரித்துப் பொருள்கொள்ளலாம். "வெள்ளரிக்காயா? விரும்புகின்ற அவரைக்காயா? பெருந்தொகையாக உள்ள மிளகாயா? ஒரு பேச்சுரைக்காயா?" என்று நாம் உண்ணுகின்ற மரக்கறி வகைகளை நிரைப்படுத்துவதாக இந்தப் பாடலைக் கொள்ளுதல் ஒருவகை. இன்னொரு வகையில், வெள் அரிக்கு ஆயா! விரும்பும் அவரைக்காயா! உள்ளம் இளகாயா! ஒரு பேச்சு உரைக்காயா! எனப் பிரித்துப் பொருள் கொள்ளலாம். அதன்படி "வெண்மையான காப்பை அணிந்த பெண்ணே! (உன்னை) விரும்புகின்ற அவரைச் சினக்க வேண்டாம்! (உன்) உள்ளம் இளகமாட்டாயா! (என்னுடன்) ஒரு பேச்சு உரைக்கமாட்டாயா!" என்று பொருள் கொள்ளலாம். இவ்வாறு இரட்டுற மொழியக்கூடிய பாடல் அமைவதற்குத் தமிழ் ஒட்டு மொழிப் பண்பே வகை செய்கின்றது. "வெள்ளெருக்கஞ் சடைமுடியான் ..." என்னும் கம்பராமாயணப் பாடலிலே "ஒருவன் வாளி" என்று முடியும் இறுதி அடியையும் 'ஒருவன் 10 வாளி' என்று பிரிக்கும்போது "ஒப்பற்றவனுடைய அம்பு' என்னும் பொருளையும்" "ஒரு + வன் +வாளி' என்று பிரிக்கும் போது 'ஒரு வலிமை மிக்க அம்பு' என்னும் பொருளையும் தருவது இத்தகைய ஒட்டணிப் பாங்கேயாகும்.

ஆங்கிலம் போன்ற இந்தோ – ஐரோப்பிய மொழிகளிலே ஒலியியைபு (Rhyme) என்பது கவிதை அடிகளின் இறுதியிலே இடம் பெறுவதாகும். இறுதியில் இடம்பெறும் சீர்களிலோ, சொற்களிலோ ஒலியியைபு ஏற்படுகின்றது. எடுத்துக்காட்டாக.

Twinkle twinkle little star
How I wonder what you are
Up above the world so high
Like a diamond in the sky.

எனும் கவிதைப் பகுதியிலே நான்கு அடிகள் உள. முதலிரு அடிகளிலும் ஈற்றுச்சொற்களாக star, are என்பன இடம்பெறுகின்றன. இறுதி இரண்டிகளிலும் ஈற்றுச் சொற்களாக high, sky என்பன இடம்பெறுகின்றன. இவ்விரண்டிலும் ஒலி இயைபு இடம் பெறுகின்றது.

இந்தோஐரோப்பிய மொழிகளைச் சேர்ந்த சமஸ்கிருதத்தில்,

"லோகாபி ராமம்
ரணரங்க தீரம்
ராஜீவ நேத்ரம்
ரகுவம்ச நாதம்"

என்னும் பாடலில் 'ரம்' என்னும் ஈற்றடி இயைபுத் தொடை இடம்பெறுகின்றதை நோக்கலாம். சிங்களத்தில்

"ஹுலங்க மாவீ
றலனட்ட வாவீ
மல்சொல வாவீ வீ வீ வீ வீ"

என்னும் பாடலில் 'வீ' என்னும் அடியிறுதி இயைபு அமைகின்றது. ஆனால் தமிழ் முதலிய திராவிட மொழிகளிலே எதுகையும் மோனையுமே இடம்பெறுகின்றன.

"நந்தா எழிலரசி நாணமுடன் உடல்வளைத்து
சிந்தா முறுவலுடன் செல்கின்றாய் காவிரியே"

என்னும் பாடலடிகளில் 'நந்தா', 'நாணமுடன்' என முதலடியிலும் 'சிந்தா', 'செல்கின்றாய்' என இரண்டாவது அடியிலும் 'ந' 'நா', 'சி', 'செ' என்னும் எழுத்துக்கள் எதுகைகளாய் அமைகின்றன. 'நந்தா', 'சிந்தா' என்பன மோனைகளாக அமைகின்றன. தமிழ்மொழிப் பாடல்களிலே எதுகையும் மோனையும் அமைய ஆங்கிலம் போன்ற மொழிப் பாடல்களிலே பாடலடி இறுதி ஒலியியைபு இடம்பெறுகிறது. தமிழ் ஓர் ஒட்டுமொழியாகையால் எதுகையும் மோனையும் அமைகின்றன. ஆனால் தமிழ் மொழியிலும் இந்தப் பாடலடியிறுதி ஒலியியைபுப் பண்பு பிற்காலத்தில் வந்து சேர்ந்துவிட்டது.

பதினான்காம் நூற்றாண்டுக்குப் பின்னர் பல இசைப்பாடல்களிலே அடியிறுதி ஒலியியைபு பெருமளவு இடம்பெறலாயிற்று. சித்தர் பாடல்களிலே பல எடுத்துக் காட்டுகளைக்காணலாம்.கடுவெளிச்சித்தருடைய,

"நந்த வனத்திலோ ராண்டி – அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்
கொண்டுவந் தானொரு தோண்டி –
மெத்தக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி"

என்னும் பாடலிலே 'ஆண்டி', 'வேண்டி', 'தோண்டி', 'உடைத்தாண்டி' என்னும் ஒலியியைபு எதுகை இடம்பெறுகின்றது.

அவருடைய பாடல்கள் எல்லாமே இப்படியான அடியிறுதி ஒலியியைபு கொண்டனவாயமைகின்றன. பள்ளு, குறவஞ்சி போன்ற இசைநாடகப் பண்புடைய இலக்கிய வடிவங்கள் பதினைந்தாம் நூற்றாண்டுக்குப் பின்னர் தோன்றுகின்றன. முக்கூடற் பள்ளு, திருக்குற்றலாக் குறவஞ்சி குமரகுருபரருடைய மீனாட்சியம்மை குறம், போன்ற இலக்கியங்களிலே பல செய்யுள்கள் அடியிறுதிஎதுகைகொண்டனவாயமைந்துள்ளன.

"கொழுங்கொடிவிருந்த வள்ளிக்
கிழங்கு கல்லி எடுப்போம்
குறிஞ்சிமலர் தெரிந்து முல்லைக் கொடியில் வைத்துத் தொடுப்போம்
பழம்விழுந்த கொழுஞ்சாற்றின் தேறலின்
வாய் மடுப்போம்
கிம்புரியின் கொம்பெடுத்து வெம்புதினை
இடிப்போம்"

என்னும் மீனாட்சியம்மை குறம் பாடலிலே 'எடுப்போம்', 'தொடுப்போம்', 'மடுப்போம்', 'இடிப்போம்' என்னும் ஒலியியைபு அலகுகள் இடம்பெறுகின்றன. முக்கூடற்பள்ளு நூலிலிருந்து பின்வரும் பாடல் எடுத்துக் காட்டாகத் தரலாம்.

"தத்தும் யாப்புனல் முத்தம் அடைக்கும்
சாலைவாய்க் கன்னல் ஆலை உடைக்கும்
கத்தும் பேரிகைச் சத்தம் புடைக்கும்
கலிப்பு வேலை ஒலிப்பைத் துடைக்கும்
நித்தம் சாறயர் சித்ரம் படைக்கும்
நிதியெல் லாந்தன் பதியிற் கிடைக்கும்
மத்தம் கூடும் மதோன்மத்த ரான
மருதீசர் மருதூர் எங்கள் ஊரே".

அண்ணாமலை ரெட்டியாருடைய காவடிச் சிந்துப் பாடல்களிலே அடியிறுதி எதுகை பெருமளவு பயின்று வந்துள்ளது. பாரதியினுடைய சிந்துப் பாடல்களும் இந்தப் பண்புடையதாயமைகின்றன.

"வெடிபடு மண்டத் திடிபடு
தாளம்போட – வெறும்
வெளியி லிரத்துக் களியொடு
பூதம் பாடப் பாட்டின்
அடிபடு பொருளின்
அடிபடு மொலியிற் கூடக் களித்
தாடுங் காளீ! சாமுண்டி 'கங்காளீ"

என்ற 'ஊழிக்கூத்து'ப் பாட்டிலும் அடியிறுதி எதுகை அமைவதைக் காணலாம். பிற்காலத்திலே பல கவிதைகளிலே இத்தகைய செய்யுள் பண்பு இடம்பெற்றுள்ளது. செய்யுள்களிலே அடிமுதல் எதுகை நீண்டகாலமாகக் காணப்படும் பண்பாகும். ஆங்கிலச் செய்யுளைத் தமிழிலே மொழிபெயர்க்கும் போது கூட இந்தப் பண்பே மேலோங்கி நிற்கின்றது. தமிழ் மொழி ஓர் ஒட்டு மொழி என்பதாலேயே அதில் எதுகை, மோனைகள் பயன்படுகின்றன. ஆங்கிலம் போன்ற மொழிகளிலே எதுகை, மோனைகள் அமைவதில்லை.



போருக்குப் பின்பான தமிழ் அரசியல் களம்

கட்டுரை



நா. யோகேந்திரநாதன்

ஈழத்தின் மூத்த படைப்பாளி. சிறுகதை, நாடகம், நாவல் என்பவற்றில் ஈடுபாடு கொண்ட இவர், தமிழ் மக்களின் விடுதலையின்பால் தீராத காதல் கொண்டவர். போராட்ட காலத்தில் பத்திரிகைத்துறையிலும்வானொலித்துறையிலும் தனித்து விளங்கினார். வானெலித்துறையில் பிரதி எழுதுதல், தயாரித்தல், குரல் கொடுத்தல் எனப் பல்துறை ஆற்றல் கொண்டவராக இருந்தார். தற்போது தீவிரமான அரசியல் கட்டுரையாளராக விளங்கும் இவர், விடுதலைப் போராட்டத்தை மையமாக வைத்து 'நீந்திக் கடந்த நெருப்பாறு' எனும் நாவலின் இரண்டு பாகங்களை வெளியீடு செய்திருப்பதோடு மூன்றாவது பாகத்தையும் எழுதி வருகிறார்.

வெளியிலிருந்து மேற்கொள்ளப்படும் சில தாக்கங்கள் தேசத்தின் மீதோ தேசிய இனத்தின் மீதோ சில பாதிப்புக்களை ஏற்படுத்த முடியுமென்றாலும்கூட ஏற்படும் மாற்றங்கள் மேற்குறிப்பிட்ட நான்கு அம்சங்களினதும் அடிப்படையிலேயே அமைகின்றன. எனினும் வெளிப் பாதிப்புகளால் இந்த அம்சங்களின் வரையறைகள் மீறப்படுமானால் அந்தத் தேசமோ, இனமோ தனது தனித்துவத்தை இழக்கும் அபாயம் ஏற்படுகிறது. போர்கள் அகவயப்பட்டவையாக இருந்தாலென்ன வெளியிலிருந்து திணிக்கப்பட்டாலென்ன அவை அரசியலின் இன்னொரு வடிவமாகவே அமைந்திருக்கும். அதாவது போர் என்பது குருதி சிந்துகின்றி அரசியல் என்பதும் அரசியல் என்பது குருதி சிந்தாத போர் என்பதும் ஓர் அடிப்படை உண்மையாகும்.

1948ஆம் ஆண்டு இலங்கை பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் பெற்ற பின்பு ஈழத் தமிழ் இனமானது மூன்று விதமான அரசியலுக்குள் பயணித்துள்ளது. முதலாவது போருக்கு முன்னரான ஜனநாயக அரசியல். அடுத்தது, போரின் போதான ஆயுதப் போராட்ட அரசியல். மூன்றாவது, போரின் பின்னரான ஆயுதப் போராட்டத்தின் தொடர்ச்சியான தாக்கம் குறைவடையாத ஓர் அரசியல்.

போரின் பின்னரான இந்த நிலைமாறு கால அரசியலைப் பார்ப்பதற்கு முன்னால் போரின் முன்னரானதும் போரின்போதிலுமான அரசியலை நாம் மேலோட்டமாக வெனினும் பார்ப்பது அவசியமாகிறது. இவை மூன்றில் எவையுமே தனியானவையல்ல. அவை ஒன்றிலிருந்துமற்றொன்றுபிறந்தவையாகவோ அல்லது மற்றையவற்றின் பிறப்புக்கான காரணங்களைத் தன்னகத்தே கொண்டவையாகவோ அமைந்திருந்தன. எனவே போரின் பின்னரான அரசியல் கூடப் போரின் முன்பானதும் போரின் போதானதுமான அரசியலின் தொடர்ச்சியாகும்.

போரின் முன்பான அரசியல்

இலங்கை சுதந்திரம் பெற்றதன் பின்பான, ஈழப் போருக்கு முன்பான அரசியல் என்பது நாடாளுமன்ற உரைகள், பொதுக்கூட்டங்களில் நடத்தப்படும் கவர்ச்சிகரமான தனிமனித ஆற்றல்களை வெளிப்படுத்தும் சொற்பொழிவுகள் என்ற வட்டத்துக்குள்ளேயே நின்றன. அந்தக் காலத்தில் தனிநபர்களின் நாயகத் தன்மைகள் உருவாக்கப்பட்டு அவர்களே இனத்தின் குரலாக விளங்கினர். ஆனால் 1956ஆம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டம் முன்வைக்கப்பட்ட காலப் பகுதியில் மக்கள் மயப்படுத்தப்பட்ட அரசியல் ஆரம்பமாகி நாடாளுமன்ற உரைகள், பொதுக்கூட்டங்கள் போன்ற முறைகள் தொடர்ந்தாலும் அரசியலானது மக்கள் மயப்படுத்தப்பட்டதாக மாநாடுகள், பாதயாத்திரைகள், சமபந்திப் போசனங்கள், சத்தியாக்கிரகங்கள் போன்ற ஜனநாயக வடிவிலான போராட்டம் என்ற வடிவங்களை எடுத்தது. தமிழ் மக்களின் போராட்டம் ஜனநாயக வழியில் அமைந்த போதும் சிங்களப் பெரும்பான்மையினர் தமிழ் மக்கள் மீது வன்முறைகளை ஏவி விட்டனர். இதன் உச்சகட்டமே 1958ஆம் ஆண்டு இனக்கலவரம். பேரினவாதிகளாலும்சிங்களக்காடையர்களாலும்தொடர்ந்த வன்முறைகள் 1960ஆம் ஆண்டில் தமிழ் அரசுக் கட்சியின் தலைமையில் இடம் பெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்தின் போது இராணுவ வன்முறையாகப் பரிமாணம் பெற்றது. எனினும் தமிழ் மக்களின் போராட்டங்கள் முனைப்படையும்போதோ அல்லது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு தேவைப்படும் போதோ பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம் ஆகியன எழுதப்படுவதும் கிழித்தெறியப்படுவதுமான ஏமாற்று நடைமுறைகள் நடந்தன. இவை ஒரே நாட்டுக்குள் தமிழ் மக்களுக்கான நியாயபூர்வமான தீர்வு எட்டப்பட முடியாது என்ற எண்ணக் கருவைத் தமிழ் அரசியல் சூழலில் உருவாக்கின.

அந்த நிலையில் தமிழ்க் காங்கிரஸ், தமிழ் அரசுக் கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியாக ஒன்றிணைந்து வட்டுக்கோட்டை மாநாட்டில் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்தன. பின்வந்த காலத்தில் ஜே. ஆர். ஜெயவர்த்தனா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி பிரிவினைக்கு எதிரான அரசியல் அமைப்பின் 6ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றி யது. அதன் மூலம் தமிழ் மக்களின் ஜனநாயக அரசியல் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

இந்தக் காலப்பகுதியில் இனக்கலவரங்களை வழிநடத்தித்தமிழ்மக்களின்உயிர்களைப் பலியெடுப்பதிலும் சொத்துக்களைச் சூறையாடுவதிலும்பெண்களைப்பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தவதிலும் ஐக்கிய தேசியக் கட்சியினர் முக்கிய பங்கை வகித்தனர். அதன்போது தமிழ்த் தலைமைகள் ஐக்கியதேசியக்கட்சியுடன்மென்போக்கையும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஏப்போதுமே முரண்படும் போக்கையும் கடைப்பிடித்தனர். உதாரணமாகத் திருமலையில் அமைந்துள்ள பிரித்தானியக் கடற்படைத்தளத்தையும் கட்டுநாயக்கா றோயல் விமானப் படைப் பிரிவையும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசு வெளியேற்றியபோது அவர்களை வெளிறேய வேண்டாமெனப் பிரித்தானிய மகாராணிக்குத் தந்தியடித்த பெருமை தமிழ் அரசுக் கட்சிக்குரியது. அதே நிலைப்பாட்டையே ஐக்கிய தேசியக் கட்சியும் எடுத்திருந்தது. அதுமட்டுமன்றி சிறிலங்கா சுதந்திரக் கட்சி தனது ஆட்சியில் சிங்கள மக்களின் கலை, இலக்கியம், மதம் போன்றவற்றை வளர்த்தெடுப்பதில் தீவிர அக்கறை காட்டியது. தமிழ்த்தலைமைகள் தமிழர் உரிமை பற்றிப் பேசியபோதும் ஈழத் தமிழர்களின் தனித்துவமான கலாசார அம்சங்கள் தொடர்பாக எவ்வித அக்கறையும் காட்டவில்லை. அந்தக் குறை ஆயுதப் போராட்ட அரசியலின்போது பெருமளவு நிவர்த்திசெய்ப்பட்டது. மேற்குலக ஏகாதிபத்திய நலன்கள், தீவிர இடதுசாரி அரசியல் கொள்கைகளுக்கான எதிர்ப்பு போன்ற விடயங்களில்ஐக்கியதேசியக்கட்சி, தமிழரசுக் கட்சி உட்படத் தமிழ்த் தலைமைகள் ஒரே நிலைப்பாட்டையே எடுத்து வந்தன. ஆனால்சிறிலங்கா சுதந்திரக்கட்சிசிங்கள மொழி, தேசிய, கலாசார, தேசியப் பொருளாதாரம் என்பவற்றில் தீவிர அக்கறை காட்டியது. தேசியதன்னிறைவுப்பொருளாதாரத்தைக் கட்டி வளர்க்க அவர்கள் எடுத்த முயற்சியால் தமிழ் விவசாயிகள் சிறந்த பயன்களைப் பெற்றனர். அதுமட்டுமன்றி ஈழத் தமிழ் இலக்கியத்தில் பெரும் வளர்ச்சி ஏற்படவும் இலங்கைத் தமிழ்த் திரைப்படத் துறைஉருவாகிவளரவும்வாய்ப்புக்கள்ஏற்பட்டன.

போரின் போதான அரசியல்

பல்கலைக்கழகங்களுக்குமாணவர்களை அனுமதிப்பதில் இன அடிப்படையிலான தரப்படுத்தல்கள் கொண்டுவரப்பட்டமை சிறிலங்கா சுதந்திரக் கட்சி மீது இளைய தலைமுறையினருக்குப் பெரு அதிருப்தியைஏற்படுத்தியது. ஏற்கனவே இனக்கலவரம் என்ற பெயரில் தமிழ் மக்கள் மீது நடந்தேறிய இன அழிப்பு நடவடிக்கைகள், தொடர்ந்து ஆட்சியாளர்களால் தமிழ்த் தலைமைகள் ஏமாற்றப்பட்டு வந்தமை, தமிழ் மக்களின் ஜனநாயகப் போராட்டங்கள் இராணுவ ஒடுக்குமுறை மூலம் அடக்கப்பட்டமை போன்ற நடவடிக்கைகள் காரணமாக ஏற்பட்டிருந்த கொதிநிலை இந்தப் பல்கலைக் கழகத் தரப்படுத்தலுடன் கூர்மையடைந்தது. மாணவர் பேரவை மூலம் ஒரு புறம் எழுச்சிப் போராட்டங்கள் இடம்பெற மறுபுறம்ஆயுதநடவடிக்கைகளும்மெல்ல மெல்ல ஆரம்பமாகின. முதல் ஆயுத நடவடிக்கையில் இறங்கியவர்கள் சிவகுமாரன் தலைமையிலான ஒரு சிறிய குழுவினர். அதுகாரணமாகப்பல இளைஞர்கள்கைது செய்ப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர். இந்த நிலையில்பொலிஸாருக்குஎதிராகவும்அரசஆதரவாளர்களுக்கு எதிராகவும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. சிவகுமாரன் ஒரு சுற்றி வளைப்பின்போது 'சயனைட்' அருந்தி வீரச்சாவடைந்தார். அடுத்து ஆயுதப் போராட்டத்தை முன் கொண்டு செல்ல நிறுவன மயப்பட்ட அமைப்புத் தேவை என்ற எண்ணம் முகிழ்த்தது. தங்கத்துரை அவர்களால் ரெலோ இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. இன்னொருபுறம் படித்த சில புத்திஜீவிகளால் தமிழ் மக்களின் பொருளாதார மேம்பாட்டை முன்வைப்பதாகக் கூறி 'ஈரோஸ்' இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. இன்னொருபுறம் இவர்கள் எவருடனுமே தொடர்புப



டாது மிகவும் இரகசியமானதும் கடுமையானகட்டுப்பாடுகளைக்கொண்டதுமான புதிய தமிழ்ப் புலிகள் அமைப்பு பிரபாகரனால்ஆரம்பிக்கப்பட்டது.

ஆங்காங்கே சில தாக்குதல்கள் இடம் பெற்றன. பொலிஸார் மட்டுமன்றி இராணுவத்தினரும் களமிறக்கப்பட்டனர். எங்கும் தேடுதல் வேட்டைகளும் இராணுவ ரோந்து நடவடிக்கைகளும் முடுக்கிவிடப் பட்டன. ஏராளமான இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். மருத்துவர்களான தர்மலிங்கம், ஜெயகுலராஜா, தனிநாயகம் அடிகள், விரிரையாளர் நிர்மலா நித்தியானந்தன் போன்ற கல்விமான்கள் கூடக் கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டனர். அவர்களுள் ரெலோ இயக்கத் தலைவர்களான தங்கத்துரை குட்டிமணியும் அடங்குவார்.

விடுதலைப் புலிகளால் பொலிஸ் நிலையத் தாக்குதல், கண்ணிவெடித் தாக்குதல்கள் இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளைக் குழுவினரின் கொலை போன்ற வெற்றிகரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இராணுவ ரோந்து அணியினர் மீது புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 13 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். சம்பவம் முழு இலங்கையையுமே அதிரவைத்தது.

அதையடுத்து ஜக்கிய தேசியக் கட்சியின் முழுமையான ஆதரவுடன் 1983ஆம் ஆண்டில் இனக்கலவரம் அரங்கேறிப் பெரும் இன அழிப்பு நடவடிக்கையாக முன்னெடுக்கப்பட்டது. ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். சொத்துக்கள் சூறையாடப்பட்டன. ஏராளமான குடியிருப்புக்கள் எரியூட்டப்பட்டன. தங்கத்துரை. குட்டிமணி உட்பட 56போராளிகள் வெலிக்கடைச் சிறைச்சாலைக்குள் வைத்துச் சிறை அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் படுகொலை செய்யப்பட்டனர்.

இவை எல்லாம், மெல்ல மெல்ல வளர்ச்சி பெற்றுவந்தஆயுதப்போராட்டத்தைவிஸ்வரூபம்எடுக்கவைத்தது. அத்துடன்தமிழ் அரசியல் நாடாளுமன்ற அரசியலிலிருந்தும் சாத்வீக அரசியல் போராட்டங்களிலிருந்தும் முற்றாகவே வெளியேறி ஆயுதப் போராட்டஅரசியலானது. அந்தக்காலப்பகுதியில் 23வரையான ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் தோன்றினாலும் அவற்றில் பல காலப் போக்கில் காணாமல் போய்விட்டன. அல்லது பெரிய இயக்கங்களால்விழுங்கப்படஈரோஸ், புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். விடுதலைப் புலிகள் ஆகிய அமைப்புக்கள்மட்டுமேஎஞ்சின. ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப், புளொட் போன்ற அமைப்புக்கள் இந்திய உளவுப் பிரிவின் வழிகாட்டலில் இயங்கத்தொடங்கின. புலிகள் அதைத் தவிர்த்தனர். அந்த இயக்கங்கள்விடுதலைப்புலிகளால்தடைசெய்யப்பட்டன. ஈறோஸ் இரண்டாகப் பிரிந்து ஒரு பகுதி விடுதலைப் புலிகளுடன் இணைந்து கொண்டது. அதன் பின்பு தமிழ் மக்களின் அரசியல் விடுதலைப் புலிகளின் ஏகத்தலைமையிலான அரசியலாக எழுச்சி பெற்றது. ஆரம்பத்தில் ரோந்து செல்லும் படையினர் மீதும், தூரோகிகள், உளவர்ளிகள் மீதும் தாக்குதல் நடத்திய புலிகள் இராணுவத்தை முற்றுகையிட்டு முடக்குமள வுக்கு வளர்ச்சி பெற்றனர். முற்றுகையையுடைத்துவெளியேறப் பல தடவைகள் படையினர் முயன்



ஆயுதப் போராட்டத்தில் புலிகள் வெற்றியை நோக்கி வேகமாக முன்னேறிய நிலைமையில் புலிகளுக்கும் அரசுக்குமிடையேயான சமாதானப்பேச்சுக்கள் நோர்வேயின் அனுசரனையுடன் ஆரம்பமாகின. இந்தக் காலப்பகுதியில் தான் புலிகளின் அரசியல் குரலாகத் தமிழர் விடுதலைக்கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ, தமிழ் காங்கிரஸ் ஆகிய அமைப்புக்கள் ஒன்றினைந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. நாடாளுமன்ற அரசியலில் புலிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மூலம்

றும் அந்த முயற்சிகள் விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட் டன. 'ஒப்பரேசன் லிபறேசன்' இராணுவ நடவடிக்கை மூலம் வடமராட்சி வரை முன்னேறிய இராணுவம் நெல்லியடியில் வைத்துப் புலிகள் நடத்தியகரும்புலித்தாக்குதல்மூலம்பேரிழப்பைச் சந்தித்தது. இலங்கை கதிகலங்கிப்போய் இந்திய இராணுவத்தை 'அமைதிப்படை' என்ற பெயரில் துணைக்கு அழைத்தது. தமிழ் மக்களுக்கு உதவி செய்வதாகக் கூறி வந்திறங்கிய இந்திய இராணுவத்தின் முக்கிய பணி விடுதலைப் புலிகளை அழிப்பதே. அவ்வாறே புலிகள் மீது போரைத் தொடுத்தது. புலிகள் மணலாற்றுக்குப் பின்வாங்கினர். புலிகளை நோக்கிஅடுத்தடுத்துமூன்றுபெரும்சுற்றிவளைப்புகளை நடத்தியது. ஆனாலும் இந்தியப் படையால் வெற்றி முடியவில்லை. இந்தக் காலகட்டத்தில் விடுதலைப் புலிகள் கைக் கொண்ட இராஜதந்திர அரசியல் மூலமாக இந்திய விரோத மனப்பான்மை கொண்ட பிரேமதாசாவுடன் இணைந்து இந்திய அமைதிப்படையை நாட்டை விட்டே வெளியேற்ற முடிந்தது. மீண்டும் இலங்கை அரசுடன் போர் ஆரம்பித்தது. பல இராணுவ நடவடிக்கைகள் முறியடிக்கப்பட்டன. பல படைத்தளங்கள் தகர்க்கப்பட்டன. சூரியக் கதிர் நடவடிக்கை மூலம் படையினரால் யாழ். குடாநாடு கைப்பற்றப்பட்ட பின் வன்னி புலிகளின் முக்கிய தளமாகியது. இந்தக் காலப்பகுதியில் தான் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் ஒரு நிழல் அரசு உருவாக்கப்பட்டு ஒரு புரட்சிகர அரசியல் அரங்கேறியது. ஓர் அரசுக்குரிய கட்டுமானங்களுடன் திறமையான நிர்வாகக் கட்டமைப்புக்கள் உருவாக்கப்பட்டன. தரைப்படை அணிகள், கடற்படை அணிகள் வான்படை, கரும்புலி அணிகள், வலுவான புலனாய்வுக் கட்டமைப்பு, படை வேவுப் பிரிவு எனப் போருக்குரிய வலிமையான, திறமையான, படை அணிகள் உருவாக்கப்பட்டன. பொதுநிர்வாகம், நீதிநிர்வாகம், மருத்துவத்துறை, பொருண்மியம், கல்விக் கழகம் போன்ற சிவில் நிர்வாக அமைப்புக்களும் உருவாக்கப்பட்டன. மேலும் கலை இலக்கியத்துறையில் பாரம்பரியக் கலைகள் புத்துயிர் பெற்றன. நவீனகலை இலக்கியப்படைப்புக்களுக்கும் தளமமைக்கப்பட்டன. குறும்படம், முழுநேர திரைப்படம் என்பன வற்றிலும் புதிய இலக்குகள் எட்டப்பட்டன. தொலைக்காட்சி, வானொலி நிலையங்கள் அமைக்கப்பட்டு கலை இலக்கியப் படைப்புகளுக்கும் ஊக்கமளிக்கப்பட்டன. இதே காலப்பகுதியில், ஓயாத அலை ஒன்றின் மூலம் முல்லைத் தீவுப்படைத் தளமும் ஓயாத அலை இரண்டின் மூலம் கிளிநொச்சியும் ஓயாத அலை மூன்றின் மூலம்பல இராணுவக்கட்டுப்பாட்டுப்பகுதிகளும் ஆனையிறவுப் பெருந்தளமும் புலிகளால் கைப்பற்றப்பட்டன. ஜெயசிக்குறு, ரணகோஷ், தீச்சுவாலை போன்ற படை நடவடிக்கைகளும் புலிகளால் முறியடிக்கப்பட்டன.

இவ்வாறாக ஆயுதப் போராட்டத்தில் புலிகள் வெற்றியை நோக்கி வேகமாக முன்னேறிய நிலைமையில் புலிகளுக்கும் அரசுக்குமிடையேயான சமாதானப்பேச்சுக்கள் நோர்வேயின் அனுசரனையுடன் ஆரம்பமாகின. இந்தக் காலப்பகுதியில் தான் புலிகளின் அரசியல் குரலாகத் தமிழர் விடுதலைக்கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ, தமிழ் காங்கிரஸ் ஆகிய அமைப்புக்கள்ஒன்றினைந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. நாடாளுமன்ற அரசியலில் புலிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மூலம் பங்கு கொள்ள ஆரம்பித்தனர். 2000ஆம் ஆண்டில் பேச்சுக்கள் தோல்வியடைய மீண்டும் போர் ஆரம்பமானது. 2009இல் முள்ளிவாய்க்காலில் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு விடுதலைப்புலிகள் அமைப்பு செயற்படமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டது. விடுதலைப்புலிகளின் தோல்வி பற்றிப் பல வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. சமாதானப் பேச்சுக்கள்முறிவடைந்தபின்புபன்னாடுகள் இலங்கை அரசுக்குப் படையுதவி, படைப்பயிற்சியுதவி, ஆயுத உதவி, நிதியுதவி, புலனாய்வு உதவி என்பனவற்றைத் தாராளமாக வழங்கியமையும் சமாதான காலத்தில் இலங்கைப் புலனாய்வுப்பிரிவினர், இந்திய உளவுப்பிரிவினர், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாகப் பன்னாட்டு உளவு நிறுவனங்கள் வெவ்வேறு வடிவங்களில் ஊடுருவி, பேராளிகளின் கட்டமைப்புகளிலும், மக்கள் மத்தியிலும் போராட்ட உணர்வை நீர்த்துப்போகவைக்கவும்குழப்பமானகருத்துக்களைவிதைக்கவும் மேற்கொண்ட சதிகளே காரணம் என்ற கருத்துக்கள் கண்டறியப்பட்டன.

3. போருக்குப் பின்னான அரசியல்

போருக்குப் பின்பான அரசியலில் ஆயுதப்போராட்டம் முற்றாகவே இல்லாதொழிக்கப்பட்டாலும் அதன் தாக்கம் தொடர்கிறது. கால நகர்வில் அதுதவிர்க்கமுடியாததாகும். அதன் காரணமாகத் தமிழீழ விடுதலைப்புலிகளால்உருவாக்கப்பட்டதமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் தலைமைச் சக்தியாகத் தொடர்ந்து நிலைக்கக் கூடியதாக இருக்கிறது. ஆனாலும் அதற்குள் பலமாக விளங்கும்தமிழரசுக் கட்சி இன்றுவரைத் தமிழ்தேசியக்கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்ய மறுத்து வருகிறது. ஆனால் தமிழ் மக்கள் மத்தியிலோ, தேசிய அரசியலிலோ, பன்னாட்டு அரசியலிலோ தமிழ் தேசியக்கூட்டமைப்பே தமிழ் மக்களின் தலைமைச் சக்தியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் மந்தமானபிரிவினர், தீவிரமானபிரிவினர்என இரண்டு முரண்பட்ட போக்குடையோர் உண்டு. தமிழ் மக்கள் மத்தியில் வீராவேசக் கோசங்களை முன்வைக்கும் அதேவேளையில்அவற்றைவெறும்தேர்தல் சுலோகங்களாக மட்டுப்படுத்தி அரசுடன் மென்போக்கை கைக்கொள்பவர்களும் தமது கொள்கைகளில் பற்றுக் கொண்டு விட்டுக்கொடுப்புகளுக்கு இடம் கொடுக்காதவர்களும் உள்ளனர். இதில் எந்தப்பிரிவு பலமாக.விளங்குகிறதோ அந்தப் பாதையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புவழிநடத்தப்படும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குத் தமிழ் மக்கள் இரண்டுகாரணங்களுக்காக ஆதரவு வழங்குகின்றனர். ஒன்று அது தமிழீழ விடுதலைப்புலிகளால் ஆரம்பிக்கப்பட்டது. மற்றையது தமிழ் மக்களின் ஐக்கியத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூலமே வெளிப்படுத்த முடியும் என நம்புவது. அதன் காரணமாகவே பலமான மாற்று அணியொன்றை உருவாக்க முடியாத நிலை நிலவுகிறது.

2000ஆம் ஆண்டு தேர்தலின்போது வேட்பாளர்கள் நியமனத்தில் இணக்கப்பாட்டுக்கு வரமுடியாத நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட்டு வெளியேறினர் கஜேந்திரகுமார் குழுவினர். அவர்களின் வெளியேற்றம் பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தியது. அவர்களின் வெளியேற்றம் காரணமாகத் தமிழ்தேசியக்கூட்டமைப்புக்குள் தீவிரப்போக்குப் பலவீனமடைந்து மந்தப்போக்குக் கொண்டோரின்





கை ஓங்கியது. மேலும் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்துடன் எந்தவித தொடர்பைக் கொண்டிராதவரான சுமந்திரன் தேசியப்பட்டியல் உறுப்பினராக உள்வாங்கப்பட்டுத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வழித்தடத்தைத் தீர்மானிக்கும் சக்தியாக மாறினார். இதனால் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு உரிமைப்போராட்டத்தின் மீதுள்ள நேர்மையான போக்கு பலவீனமடையும் நிலை ஏற்பட்டது. அது மட்டுமன்றி தமிழ் உணர்வாளர்கள் அவர்களின் பின்னால் இழுபடும் நிலையும் ஏற்பட்டது. இழுபடத் தவறினால் புறமொதுக்கப்படும் ஆபத்து அவர்களுக்கு இருந்தது. இன்னொருபுறம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னியாக உருவாகிய கஜேந்திரகுமார் அணியினரோ மக்களைத் தமக்குப் பின்னால் அணிதிரட்டுவதில் அக்கறை காட்டவில்லை. ஊடகவியலாளர் சந்திப்புக்கள் ஊடாக அறிக்கைகள் விடுவதான மட்டுப்படுத்தப்பட்ட அரசியலையே மேற்கொண்டனர். ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கஜேந்திரகுமார் தமிழ் மக்கள் பிரச்சினை கள் தொடர்பாக ஆற்றிய பணி காத்திரமானது என்றாலும் கூட அது மக்கள் மத்தியில் சரியான முறையில் உணர்த்தப்படவில்லை. பின்னர் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியைத் தனிமைப்படுத்தும் நிலை ஏற்பட்டது. அதன் காரணமாக எந்த ஒரு தேர்தலிலும் அவர்களால் எந்த ஓர் ஆசனத்தையும் பெற முடியவில்லை.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைமை தங்கள் மந்தப்போக்கை வலுப்படுத்தும் வகையில் முன்னாள் நீதியரசர் சி.வி.விக்கினேஸ்வரன் அவர்களை மாகாணசபையின் முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தியது. அவர் பதவியேற்றுச் சில மாதங்களுக்கிடையேயே தமிழ் மக்களின் உணர்வைப் புரிந்துகொண்டு அதற்கேற்ற வகையில் போக்கைக் கடைப்பிடிக்க ஆரம்பித்தார். கூட்டமைப்பின் தலைமைச் சக்திகளும், துணைகளும் மறைமுக, நேரடி அழுத்தங்களை அவர் மீது மேற்கொண்டாலும் அவர் தனது நிலைப்பாட்டிலிருந்த கீழிறங்கி விடவில்லை.

இந்த நிலையில் தான் விக்னேஸ்வரனைத் தலைமையாகக் கொண்டு தமிழ் மக்கள் பேரவை ஆரம்பிக்கப்பட்டது. இதில் கஜேந்திரகுமார், சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோரும் இணைந்து கொண்டனர். இதன் தலைமையில் நடத்தப்பட்ட தமிழ் நிகழ்வு தமிழ் மக்கள் மத்தியில் ஒரு பெரும் நம்பிக்கை ஒளியைப் பாய்ச்சியது. மீண்டும் மக்கள் மயப்படுத்தப்பட்ட உரிமைப்போராட்ட அரசியல் ஆரம்பிக்கப் போவதாகவே எதிர்பார்த்தனர். ஆனால் மக்கள் எதிர்பார்ப்புக்கு மாறாக அதுவும் தன்னைக் கனவான் அரசியலுக்குள் சுருக்கிக்கொண்டது. முதலமைச்சர் மட்டும்தான் அதிகாரத்தின் பெறுமதியைச் சாதகமாக்கி விட்டுக் கொடுப்புக்கு இடமின்றிக் குரல் கொடுக்கிறார். ஆனால் அதுகூட மக்கள் மயப்படுத்தப்படாத தனிமனித ஆற்றுகையாகவே விளங்கி வருகிறது.

இணக்க அரசியல் காலம்

2015ஆம் ஆண்டில் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கையின் பேரில் தமிழ் மக்கள் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவை வழங்கினர். அடுத்து இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலிலும் தமிழ்தேசியக் கூட்டமைப்பைத் தமதுதலைமைச் சக்தியாகத் தெரிவு செய்தனர். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கு எதிர்க்கட்சித் தலைவராகும் வாய்ப்புக்கிட்டியது. அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஓர் இணக்க அரசியலுக்குள் புகுந்து கொண்டது. தேர்தல் காலத்திலும் அதன்பின்பும் மக்கள் மத்தியில்வடக்குக்கிழக்கு ஒன்றிணைந்த தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகத்தில் சமஷ்டி ஆட்சி ஒன்றைக்கோருவதாக முழக்கங்களை மேற்கொண்டாலும்அரசிடம்அவற்றை வலியுறுத்திப்பேசும்நிலை தென்படவில்லை. அப்படிப்பட்ட கோரிக்கையை முன்வைத்து வலியுறுத்தும்போது அதைப் பயன்படுத்தி மகிந்த அணியினர் எல்லாவற்றையும் குழப்பி விடுவார்கள் என்பதால் இப்போதைக்கு அடக்கி வாசித்துப் புதிய அரசமைப்பின் மூலம் நியாயபூர்வமான தீர்வை எட்டப்போவதாகக் கூறப்பட்டது.



படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட தமது காணிகளில் குடியேறுவது, காணமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், அரசியல் கைதிகள் விடுதலை போன்ற விடயங்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. மக்கள் இயல்பாகவே நடத்தும் போரட்டங்களில் ஒன்றிணைந்து அதற்குத் தலைமை தாங்கி அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையிலான செயற்பாடுகளைக்கூட முன்னெடுக்கவில்லை. மேற்சார்ந்து மக்கள் முன்னெடுக்கும் போராட்டங்கள் கூர்மையடையும்போது அரசதலைவருடன் பேசுவது, படை அதிகாரிகளுடன் பேசுவது போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டு சிலவாக்குறுதிகளைப்பெற்றுப்போராட்டங்களை மழுங்கடித்து, வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமை தொடர்பாக எவ்வித கரிசனையும் காட்டாத நிலைமையும், தமிழ் மக்களிடையே இந்த விடயங்களில் அரசை நியாயப்படுத்தும் போக்கையும் அவர்கள் கையாண்டு வருகின்றனர். நாடாளுமன்றத்தில் உரையை நிகழ்த்தினாலும் அவற்றை நிறைவேற்றுவது தொடர்பாக எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் எடுப்பதில்லை. 2015ஆம் ஆண்டில் இலங்கை அரசு ஏற்றுக்கொண்ட ஐ.நா.மனித உரிமைகள் சபையின் தீர்மானங்களை நடமுறைப்படுத்துமாறுகூடக் குறைந்த பட்சம் அழுத்தம் கொடுப்பது இல்லை. எல்லாவற்றுக்கும் புதிய அரசமைப்பு 'சகலரோக' நிவாரணியாகத்தமிழ்த் தேசியக்கூட்டமைப்பால் காட்டப்படுகிறது. ஆனால் அரச தலைவர், தலமை அமைச்சர்ஆகியோர்சமஷ்டியைஏற்றுக்கொள்ளப் போவதில்லை எனத் தெளிவாகவே கூறி வருகின்றனர். அதைவிட வடக்குக் கிழக்கு இணைக்கப்படமாட்டாதென அரச தரப்பினர் மட்டுமல்ல ஜே.வி.பியும் கூறி வருகிறது. இடைக்கால அறிக்கையை நாடாளுமன்றத்தில் முன்வைத்துப் பேசிய அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல மாகாணங்களுக்குக் காணி அதிகாரம் வழங்கப்படமாட்டாதெனத் தெரிவித்துள்ளார். இடைக்கால அறிக்கை பற்றி விளக்கம் கொடுக்கும் போது சுமந்திரனோ, "மாகாணங்கள் விரும்பினால் நாங்களாக இணைந்து கொள்ளலாமெனக்" கூறிவருகிறார். இதனால் இணக்க அரசியல் செய்யும் சம்பந்தன், சுமந்திரன் ஆகியோர் அரசின் பேச்சாளர்களாகமாறிவிட்டனரோ என்றசந்தேகம் மக்கள்மத்தியில்எழ ஆரம்பித்தது. பலதரப்பினராலும் மாற்றுத் தலைமைக்கான ஒரு தேவை உணரப்பட்டது.

இடைக்கால அறிக்கை தொடர்பான விவாதத்தில் சிவசக்தி ஆனந்தனை உரையாற்ற அனுமதிக்காததை அடுத்து சுரேஷ் பிரேமச்சந்திரன் "இனித் தாம் வீட்டுச்சின்னத்தில் போட்டியிடப்போவதில்லை" எனத்தெரிவித்தார். அதையடுத்துத் தமிழ்தேசிய மக்கள் முன்னணி ஈழமக்கள் புரட்சிகர முன்னணி ஆகியன இணைந்ததமிழ்மக்கள்பேரவையின் அனுசரணையுடன் புதிய கூட்டணி ஒன்றை உருவாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இது ஒரு மாற்றுத் தலமையாக முடியாவிட்டாலும் அதற்கான ஒரு ஆரம்பமாக எதிர்பார்க்கப்பட்டது. சின்னம் தொடர்பான பிரச்சினையில் இணக்கப்பாட்டுக்கு வரமுடியாத நிலையில் கூட்டணி பிறக்கு முன்பே இறந்துவிட்டது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை நிராகரிப்பவர்கள்: ஒரு குறைந்தபட்ச உடன்பாட்டுடன் கூட ஒரே அணியாக இணைய முடியவில்லை யென்றால், மாற்றுத்தலைமை தொடர்பான நம்பிக்கையை இவர்கள் மீது மக்கள் வைப்பார்களா? அந்த நிலையில் மாற்றுத்தலைமை வெறும்காணல்நீர்என்பதுநிதர்சனமாகியது.

உள்ளூராட்சி அரசியல்

தற்சமயம் உள்ளூராட்சிச் சபைகளின் தேர்தல் அரம்பித்து விட்ட நிலையில் பிரதான அணிகளாக தமிழ்த் தேசிய்க் கூட்டமைப்பு, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிலான குழு ஆகியோர் களமிறங்கியுள்ளனர். வேறு பல குழுக்கள் களத்தில் இறங்கியிருந்தாலும் இவை மூன்றுமே முக்கியமானவையாகப்பார்க்கப்படுகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் தமிழரசுக்கட்சியின் ஆதிக்கம் காரணமாக முரண்பாடுகளுக்கும் மோதல்களுக்கும் பஞ்சமில்லை. எப்படியிருப்பினும் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை ஒரு வலிமையான தலைமையின் கீழ் நேர்மையாகவும், தந்திரோபாய அடிப்படையினும் வெற்றியை நோக்கி முன்கொண்டு செல்வதில் எந்த ஒரு தரப்பினருக்கும் அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை. பதவி, அதிகாரம் என்பன இலக்கு வைக்கப்படுகின்றனவே தவிர, கிடைத்த பதவிகளைப் பயன்படுத்தி, அர்ப்பணிப்புடன் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் முகமாகச் சேவை செய்வதில்எவரும்அக்கறைகாட்டுவதாகத்தெரியவில்லை.

மக்களின்போராட்டங்கள்தொடர்பாகஅரசு எப்படியான அலட்சியப் போக்கைக் காண்பிக்கின்றதோ அவ்வாறே மக்கள் தெரிவு செய்த அரசியல் கட்சிகளும், கூட்டணிகளும் அக்கறையற்றுச் செயற்படுகின்றன.

ஆக, போருக்குப் பின்னான அரசியல் களம் என்பது திக்குத் தெரியாத காட்டில் தமிழ் மக்களைக் கண்களைக் கட்டி விட்டுள்ளது. அரசியல் அமைப்புக்கள் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பாகக் குத்து வெட்டுகளை மேற்கொண்டபோதிலும் தமிழ் மக்களிடம் தேர்தல் தொடர்பில் அக்கறையற்ற போக்கே காணப்படுகின்றது.



படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட தமது காணிகளில் குடியேறுவது, காணமல் ஆக்கப்படார் விவகாரம், அரசியல்கைதிகள்விடுதலைபோன்ற விடயங்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆக்கபூர்வமான எந்தநடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. மக்கள் இயல்பாகவே நடத்தும் போரட்டங்களில் ஒன்றிணைந்து அதற்குத் தலைமை தாங்கி அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையிலான செயற்பாடுகளைக்கூடமுன்னெடுக்கவில்லை.


எலிப்பத்தாயம


எலுமிச்சை மரம்



ஏ குரூயல் ரொமான்ஸ்


ஜல்சாஹர்



பியாசா

யாழ். பொதுசன நூலக வாசகர் வட்டத்தின் திரைப்படக் காட்சிகள்!

கட்டுரை

யாழ்ப்பாணம் – குருநகரைச் சேர்ந்த அ. யேசுராசா, 'அஞ்சல் அதிபரும் தந்தியாளரும்' சேவையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். எழுபதாம் ஆண்டிலிருந்து கலை, இலக்கியச் செயற்பாட்டாளராக – சிறுகதை, கவிதை, மொழியாக்கம், விமர்சனம், இதழியல், தொகுப்பு வெளியீடு, திரைப்படக் கழகம் எனப் பல்வேறு துறைகளில் இயங்குகிறார். 1974 இல், 'தொலைவும் இருப்பும் ஏனைய கதைகளும்' என்ற இவருடைய முதல் நூல் வெளியாகியது. இதுவரை எட்டு நூல்கள் வந்துள்ளன. முன்னர் வெளிவந்த 'அலை', 'கவிதை', 'தெரிதல்' ஆகிய சிற்றிதழ்களின் ஆசிரியர். தற்போது, யாழ். பொதுசன நூலக வாசகர் வட்டத்தின் தலைவராகச் செயற்படுகிறார்.



அ. யேசுராசா

நூலகம் அறிவைத் திரட்டுவதற்குரிய நிலையமாக இருக்கிறது. அறிவு பல துறைகளில் பரந்திருக்கிறது. சமூக விஞ்ஞானம், இயற்கை விஞ்ஞானம் முதலிய துறைகளில் நூல்கள், இதழ்கள், செய்தித்தாள்கள், 'மைக்ரோஃவில்ம்' சுருள்கள் எனப் பெருந்தொகையினதான சேகரிப்புகள், யாழ். பொதுசன நூலகத்தில் உள்ளன. அவரவரின் விருப்பத் தேர்வுக்கமைய யாரும் அவற்றைப் பயன்படுத்தலாம். இலக்கியம் மற்றும் கலைகள் சம்பந்தமானவற்றில் அதிகமானோர் ஆர்வம் காட்டுகின்றனர்.

நூலகம் நோக்கிய வாசகர் வருகையை ஊக்குவிப்பதில், பல்வேறு செயல்முறைகள் நடைமுறையிலுள்ளன. அங்கு இயங்கும் வாசகர் வட்டமும் இவ்விதத்தில் தனக்கேயுரிய முறையில் திட்டமிட்டுச் செயற்படுகின்றது. ஏழுபேரைக்கொண்ட குழுவொன்று இதில் இயங்குகிறது. மாதந்தோறும் ஓர் உரைநிகழ்ச்சியையும், அரியபிற மொழிக்கலைத்திரைப்படங்களுடன் -வித்தியாசமான சிறந்ததமிழ்ப்படங்களையும் காண்பித்து வருகின்றது. ஒவ்வொருநிகழ்ச்சிமுடிவிலும்பார்வையாளரும்பங்கேற்கும்கலந்துரையாடலையும் நடத்துகிறது. பல்வேறு கருத்துக்களை வெளிப்படுத்தும் களமான இது, ஒருவிதத்தில் சனநாயகப் பண்புடன் அறிவுப்பரம்பலை நிகழ்த்துவதாகவுள்ளமை குறிக்கத்தக்கது. இந்தப் பின்னணியில் திரைப்படக் காட்சி நிகழ்வுகளை முக்கியமாக நோக்கலாம். திரைப்படம் என்றதும் எமக்கு உடன் தோன்றுவது தென்னிந்தியத் தமிழ்த் திரைப்படங்கள் தான். அவற்றுக்குத்தான் நமதுமக்களில் பெரும்பாலார் பழக்கப்பட்டவர்கள். சிலபுறநடைகளைத்தவிர்த்தால், யதார்த்தமற்ற மனோரதியக் காதல்/பாடல் காட்சிகள், தனியாளின் அதிசூரத்தனச் சண்டைகள், நகைச்சுவை அறுவைகள், பாலியல் கவர்ச்சிக் குத்தாட்டங்கள் என்ற வாய்பாட்டில் மிகைப்படுத்தப்பட்ட தன்மைகளுடன் உருவாக்கப்படும் - பொதுப் புத்தியை அவமதிக்கும் - மசாலாப் படங்கள் அவை. அவற்றுக்கு எந்தக் கலைப் பெறுமானமும் கிடையாது. பிறமொழியினரின் கேலிப்பார்வைக்குள் அகப்பட்டுத் தமிழனின் கலையுணர்வைக்கீழ்மட்டத்தினதாக வகைப்படுத்துபவைதான் அவை! ஆனால், இந்தியாவின் பிறமொழிகளிலோ உலகின் ஏனைய மொழிகளிலோ நவீன கலைத் துறையான இந்தத் திரைப்படத்துறை, (பொழுதுபோக்குப்படங்களுடன்) மிகச்சிறந்த படைப்பாளர்களையும் படைப்புகளையும் உருவாக்கியிருக்கிறது.

உலகின் மேன்மையான திரைக்கலைப் படைப்புகளை நாம் அறிந்துகொள்ள முடியும். அதற்கான வாய்ப்புக்களை ஓரளவுக்காவது ஏற்படுத்தவே, வாசகர் வட்டம் முயல்கிறது. இதுவரை ஏழு திரைப்படங்கள் வாசகர் வட்டத்தால் காண்பிக்கப்பட்டுள்ளன. பிறமொழித் திரைப்படங்கள் யாவும் ஆங்கிலத் துணைத் தலைப்புக்களுடன் காட்டப்படுவது, அவற்றைப்புரிந்துகொள்வதற்குத்துணை செய்கிறது. ஆங்கிலம் அறியாதவர்களையும் மனதில் கொண்டு, படம் ஆரம்பிப்பதற்கு முன்னர் தமிழில் அறிமுகக் குறிப்புகள் வழங்கப்படுகின்றன.

படத்தின் முடிவில் நடைபெறும் கலந்துரையாடலின்போதும் பல்வேறு கருத்துக்கள் பகிரப்படுகின்றன.

இதுவரைக் காண்பிக்கப்பட்ட திரைப்படங்கள் பற்றி இனிச் சுருக்கமாகப் பார்க்கலாம்.





1.லெமன் ற்றீ (எலுமிச்சை மரம்)

'எரான் றிக்லிஸ்' என்பவரால் 2008ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இஸ்ரேலியத்திரைப்படம் இதுவாகும். ஹீப்ரு, அரபு, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் உரையாடல்கள் அமைந்துள்ளன. இஸ்ரேலில் மேற்குக்கரைப் பகுதியில் வசிக்கும் சல்மா ஸிடேன் என்ற பலஸ்தீன விதவைப் பெண் மணிக்கு, எலுமிச்சைத் தோட்டமிருக்கிறது. அவளின் வாழ்வாதாரம் அதுமாத்திரம்தான். நாற்பது ஆண்டுகளாக - தந்தையின் காலத்திலிருந்து அது இருக்கிறது. அந்தத் தோட்டத்தின் எதிரில் இஸ்ரேலியப் பாதுகாப்பமைச்சர் புதிய வீடு கட்டிக் குடியேறுகிறார் 'முற்றிலும் உடனடிப் பாதுகாப்புத் தேவைக்காக....'

எனக் குறிப்பிட்டு, அந்தத் தோட்டத்தை அழிக்கும்படி பிராந்திய இராணுவத் தலைமையகம் அவளுக்குக் கட்டளை பிறப்பிக்கிறது. எஃியாட் என்னும் வழக்கறிஞரின் துணையுடன் இஸ்ரேலிய உயர் நீதிமன்றம் வரை சென்று, தனது தோட்டத்துக்காகச் சல்மா போராடுகிறாள். 'அவர்கள் இங்கு வந்ததிலிருந்து என் வாழ்க்கை நரகமாகிவிட்டது!' என்று, ஒருமுறை அவள் சொல்கிறாள். இறுதியில், அங்கு காணப்படும் 50வீதமான மரங்களை 30சென்ரி மீற்றர்கள் உயரத்துக்கு வெட்டிவிடும்படி தீர்ப்பளிக்கப்படுகிறது. 'முழு வெற்றி கிடைக்கவில்லையாயினும், பலஸ்தீனரின் வரலாற்றில் வெற்றிப் பாதையில் இதுவொரு முதற்படி' என, எஃியாட் சொல்கிறார். இராணுவ அதிகாரத்தின் அநீதியான தலையீடும், சல்மாவின் உரிமைக்கான உணர்வுப்போராட்டமும் எமது மண்ணுக்கும் பொருந்தியதாயுள்ளன!

21ஆவது ஐரோப்பியத் திரைப்பட விழாவில், சிறந்த நடிகைக்கான விருதை சல்மா பாத்திரத்தில் நடித்த ஹியாம் அப்பாஸ் பெற்றுக்கொண்டார். பெர்லின் திரைப்பட விழாவில், 'பனோரமா சபையோர் விருது' - இந்தப் படத்தின் நெறியாளரான எரான் றிக்லிஸ்க்கு வழங்கப்பட்டது.

2.பியாசா (தாகம்)

புகழ்பெற்ற நெறியாளரான குருதத் என்பவரால், 1957 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட ஹிந்தித் திரைப்படம் இதுவாகும்.

விஜய் என்ற கவிஞன் இதில் முக்கிய கதாபாத்திரம். பட்டதாரியான இவர் வேலையற்றவன். மணமான இரண்டு சகோதரர்களும் அவனைப் புறக்கணிக்கின்றனர்; தாய் மட்டுமே அவ்வப்போது உதவுகிறாள். ஏற்கெனவே கல்லூரிக் காலக் காதலி மீனா, அந்தஸ்து மோகத்தில் இவனைக் கைவிட்டு, கோஷ் என்னும் பதிப்பக உரிமையாளனை மணம்புரிந்துவிட்டாள். தனது கவிதைகளை நூலாக்கவும் இயலவில்லை. குலாபோ என்னும் விலைமாது இவனது வாழ்வில் குறுக்கிடுகிறாள்; இவனது கவிதைகள் மீதான ஈடுபாடு. பின்னர் ஒருதலைக் காதலாக மாறுகிறது. பழைய காதலியை விஜய் சந்திக்க நேர்கிறது. தாய் இறந்ததைக் காலம்பிந்திக் கேள்விப்படுகிறான். சகோதரரின் புறக்கணிப்பும் தொடர்கிறது. சேரத் தற்கொலைசெய்ய முடிவெடுக்கிறான்.

ஆனால், அவன் இறக்காதபோதும் சந்தர்ப்பச் சூழல் அவன் இறந்துவிட்டதாகப் பத்திரிகைகளில் செய்திவரக் காரணமாகிறது. குலாபோவின் முயற்சியால் அவனது கவிதைத் தொகுப்பு நூலாகிறது. மக்களிடம் பிரபலமாகிறது. கோஷும் சகோதரரும் நண்பனும் சேர்ந்து, அவனது பெயரைப் பயன்படுத்திப் பணம் திரட்ட விழா நடத்துகின்றனர்; அங்கு வரும் விஜய் அவர்களால் தாக்கப்பட்டு வெளியேற்றப்படுகிறான். கோஷுடனான முரண்பாட்டானால் சகோதரரும் நண்பனும் இன்னொரு விழாவை ஒழுங்குசெய்கின்றனர். அங்கு வரும் விஜய், தான் கவிஞன் விஜய் அல்லவெனப் பகிரங்கமாக மறுக்கிறான்!

வாழும்போது புறக்கணித்து, இறந்துவிட்டதாகக் கருதும்போது பாராட்டிக் கொண்டாடுவதை ஏற்காது தனது அடையாளத்தைத் தானே மறுப்பதன்மூலம், தனது எதிர்ப்பைக் காட்டுகிறான். எஸ். டி. பர்மனின் இசையமைப்பில் பாடல்கள் இனிமையாகவுள்ளன. பாடல்காட்சிகளைப்படமாக்குவதில் குருதத் புகழ்பெற்றவருங்கூட! வி. கே. மூர்த்தி அவரது ஒளிப்பதிவாளராவார். 'கவித்துவ யதார்த்தம்' என்பது குருதத்தின் படங்களில் வெளிப்படுவதாகப் பாராட்டும் விமர்சன மதிப்பீடுகள் உள்ளன. அமெரிக்காவின் 'ரைம்' இதழ், 'சிறந்த உலகத் திரைப் படங்கள் நூறு' எனும் தனது பட்டியலில்(2005), இந்தத்திரைப்படத்தையும்சேர்த்திருக்கிறது. லண்டனிலிருந்து வெளிவந்த புகழ்பெற்ற திரைப்பட இதழான 'சைற் அன்ட் சவுண்ட்', 'காலத்தை வென்ற திரைப்பட நெறியாளர்' வரிசையில், குருதத்தின் பெயரையும் இணைத்துள்ளது!

3.எலிப்பத்தாயம் (எலிப்பொறி).

அடூர் கோபால கிருஷ்ணன் எனும் உலகப் புகழ்பெற்ற நெறியாளர், 1981 இல் மலையாளத்தில் உருவாக்கிய படம் இதுவாகும். கேரளத்தில் நிகழும் நிலப்பிரபுத்துவக் குடும்ப மொன்றின் சிதைவை இது, கலாபூர்வமாகச் சித்திரிக்கிறது. பெரிதான பழைய வீட்டில் உண்ணி, சகோதரிகளான ராஜம்மாவுடனும் ஸ்ரீதேவியுடனும் வசிக்கிறான். ராஜம்மா மணமாகாமல் முதுகன்னியாகியவள். ஸ்ரீதேவி ரியூட்டரியில் கல்வி கற்கிறாள். வயதாகியும் உண்ணியும் மணம் புரியவில்லை. உண்ணி இயலாமை நிறைந்தவன்;. எல்லாவற்றுக்கும் இளையசகோதரிராஜம்மாவில்தங்கியிருக்கிறான். கண்ணெதிரே தென்னங்கன்றை மேயும் பசுவைக் கலைப்பதற்கும் ராஜம்மாவையே கூப்பிடுகிறான். எலிக்கும் பயம், தண்ணீரைக் கடப்பதற்கும் பயம், தேங்காய்க்கள்வருக்கும்

பயம். கூலிக்காரப் பெண் இவனுடன் சரசமாகப் பழக முயலும்போதும் - சலனங்கள் இருந்தாலும் - அச்சத்தில் மௌனங்கொள்கிறான்! அக்கா ஜானம்மா வந்து சொத்தில் பங்கு கேட்கும்போதும் அசட்டையாக இருக்கிறான். ஸ்ரீதேவி வீட்டைவிட்டு ஓடியதில் ராஜம்மா பதற்றமடைகிறாள்;. இவன் சாதாரணமாகவே இருக்கிறான். சுற்றிலும் நிகழும் எந்த மாறுதலையும் அவன் கண்டுகொள்வதில்லை. திடீரென வயிற்று வலிக்கு ஆளாகி ராஜம்மா சாவடைந்த பின்பே, ஆடிப்போகிறான். வீட்டுக்குள் முடங்குகிறான். கதவுகளை மூடி அச்சத்துடன் அடைபட்டுக் கிடக்கிறான். இறுதியில் கதவை உடைத்து அயலவர் வந்து, அவனைத் தூக்கிகொண்டு சென்று, வீட்டின் முன்னே உள்ள குளத்தில் வீசுகின்றனர். பிறகு, நனைந்தபடியே அவன் எழுந்துவந்து குளத்துப் படியில் நிற்கும் காட்சியுடன், படம் முடிகிறது.

முடிவு பார்வையாளரின் தீர்மானத்துக்கு விடப்படுகிறது. படத்தின் முற்பகுதியில், சிக்கிய எலியுடன் பொறியைக் குளத்து நீரில் ஸ்ரீதேவி அமிழ்த்துவது, மூன்று தடவைகள் காட்டப்படுகிறது. இறுதியில் தனித்தபின், உண்ணியும் ஓர் எலிபோல் ஆகிவிடுகிறான். சிதிலமடையும் வீடும் எலிப் பொறி ஆகிவிடுகிறது!

ஒவ்வொரு பாத்திரமும் சிறப்பாக உருவாக்கப்பட்டிருக்கின்றது. நடிப்பு, ஒளிப்பதிவு, இசை, செறிவான தொகுப்பு என்பவற்றால் திரைப்படம், செம்மைத்தன்மை கொண்டதாயுள்ளது. 1982ஆம் ஆண்டில் பிரித்தானியத் திரைப்பட நிறுவனத்தின் விருதை இந்தப் படம் பெற்றுக்கொண்டது.

இந்தியத்தேசியவிருதுகள், உலகத்திரைப்படவிழாக்களில் ஆக்கங்களைத் திரையிடும் வாய்ப்பு, ஜூரியாகப் பங்கேற்றல் முதலிய கௌரவங்களைப் பெற்றவர் அடூர் கோபாலகிருஷ்ணன். இதுவரை பதினொரு முழுநீளத் திரைப்படங்களையும், இருபத்தைந்துக்கு மேற்பட்ட ஆவணப் படங்களையும் அவர் உருவாக்கிப் பாராட்டுதல்களைப் பெற்றுள்ளார்!

4.ஜல்சாகர் (சங்கீத அறை).

உலகப் புகழ்பெற்ற வங்காள நெறியாளர் சத்யஜித் ரே நெறியாள்கை செய்த திரைப்படம் இது. 1958ஆம் ஆண்டில் வெளியானது.

பொருளாதார வளங்கள் அழிவடைந்த நிலையிலும், பழம் பெருமைகள் பற்றிய நினைவுகளுடனும், கலைகளை இரசித்துப் போஷிக்கும் மனப்பாங்கு குடனும் இருப்பவர் ஜமீந்தார் பிஸ்வம்பர் ரோய். வீழ்ச்சியடைந்து செல்லும் நிலப்பிரபுத்துவத்தின் குறியீடு போன்றவர் அவர்.

ஒப்பந்தகாரனாகித்திரட்டியசெல்வத்தின்மூலம்மஹிம்கங்குலி புதுப்பணக்காரனாகி - மேலெழுச்சி காணும் புதிய வர்க்கத்தினனாகிறான்; பெருமைக்காக அவனும் இசை நிகழ்ச்சியைத் தன்வீட்டில் ஒழுங்குசெய்கிறான். இதைப் பிஸ்வம்பர் ரோயினால் ஏற்றுக்கொள்ள முடிவதில்லை. நீண்டநாள்களாக மூடிக்கிடந்த தனது மாளிகையின் சங்கீத அறையைத் தூசிதட்டித் துப்புரவு செய்யச் சொல்கிறார். முதலில் நாட்டிய நிகழ்ச்சியையும், சிறிது நாள்களின் பின்னர் பிரபலமான கலைஞனின் இசைக்கச்சேரியையும் ஒழுங்குசெய்கிறார். எஞ்சியிருக்கும் சிறிதளவான தங்க நாணயங்களை வைத்தே இவற்றைச் செய்கிறார். மோசமான நிதி நிலைமை பற்றி காரியஸ்தன் சுட்டிக் காட்டுவதை அவர் பொருட்படுத்துவதில்லை. தனது பெருமையைத் தக்கவைப்பதிலேயே ஒரே முனைப்பு! தனது முதிய சமையல்காரனிடம், "எல்லாம் எனது நரம்புகளில் ஓடும் பெருமைக்குரிய இரத்தத்தினால்...." என்று கூறிக் கர்வப்படுகிறார்.

நிலப்பிரபுத்துவத்தின் வீழ்ச்சியுடன் புதிய பணக்காரவர்க்கம் மேலெழுவதைச் சித்திரிப்பதற்கும் அப்பால், ஆழ்ந்த புரிதல்களுடனும் ஈடுபாட்டுடனும் கலைகளைப் போஷிக்கும் நிலப்பிரபுக்களின் கலாசாரம் மறைவதை அடையாளப்படுத்துவது தனது அக்கறையென, சத்யஜித் ரே குறிப்பிட்டிருக்கிறார். பிஸ்வம்பர் ரோயாக வரும் சாபி பிஸ்வாஸின் நடிப்பும், விலாயத்கானின் இசையமைப்பும் மிகச் சிறப்பானவை.

"இந்த அற்புதப் படைப்பால், மாபெரும் திரைப்பட மேதைகளில் ஒருவர் என்ற நிலைத்த கௌரவத்தை சத்யஜித் ரே பெறுவார்." என, அமெரிக்காவின் 'நியூஸ் வீக்' இதழ், 1963ஆம் ஆண்டில் குறிப்பிட்டுள்ளது.

5. ஏ குரூயல் ரொமான்ஸ் (குரூரமான ஒரு காதல் கதை).

ரியஸனோவ் எனும் நெறியாளரால், 1984ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட ரஷ்யத் திரைப்படம் இது. அலெக்சாந்தர் ஒஸ்ரோவ்ஸ்கியின் 'சீதனமில்லாத மணப்பெண்' நாடகத்தை அடிப்படையாகக் கொண்டது. குடும்பத் தலைவன் இறந்தபின் செல்வத்தில் நொடிந்துபோன ஒரு குடும்பம். ஆரம்பக் காட்சியில், தாயான ஒகுடலோவா மூத்தமகளுக்குத் திருமணத்தை முடித்து வைத்து, அவளைக் கணவனுடன் அனுப்புகிறாள். லரீஷா மணமாகாத மற்றைய மகள். கப்பல் சொந்தக்காரனான பரட்டோவ் லரீஷாவைக் காதலிக்கிறான். அவளும் விரும்புகிறாள். அந்த உறவைத் தாயும் அங்கீகரிக்கிறாள். ஆனால், அவன் ஏற்கெனவே திருமணமானவன் என்பது அவர்களுக்குத் தெரியாது. தபால் அதிகாரியான யூலி கபிட்டோனோவிச்சும் லரீஷாவுடன் விரும்பிப் பழகுகிறான். ஆனால் அந்தஸ்தில் குறைந்தவன் என, அவனை இவர்கள் பொருட்படுத்துவதில்லை. குடும்பத்துடன் தொடர்புள்ள க்னுரோவ் என்னும் செல்வந்தனும், வியாபாரியும் லரீஷாவின் சிறுவயது நண்பனுமான வாஸ்யாவுங்கூட, அவள்மீது ஆசை கொண்டுள்ளனர். பரட்டோவ் திடீரெனக் காணாமல் போகிறான். போலியான வங்கிக் காசாளன் ஒருவன் அவளைத் திருமணம் செய்ய முனைகிறான். தாய் வற்புறுத்தியதில் லரீஷாவும் சம்மதிக்கிறாள். பணமோசடிக்காகக் காவலர் அவனைக் கைதுசெய்வதில், அது தடைப்படுகிறது. பிறகு கபிட்டோனோவிச்சை அவள் ஏற்க நேர்கிறது. திருமணத்துக்கு முன் விருந்தொன்றை அவன் ஒழுங்குசெய்யும் வேளை திரும்பிவரும் பரட்டோவ், தந்திரமாக லரீஷாவை அழைத்துக் கொண்டு - க்னுரோவ், வாஸ்யா மற்றும் தனது ஜிப்சிக் கூட்டத்தினருடன். வோல்கா நதியிலுள்ள கப்பலுக்குச் செல்கிறான்.

நகரும் கப்பலில் விருந்தும், ஆட்டமும் பாட்டுமாகக் கொண்டாட்டம். பரட்டோவ் தனது அறைக்கு லரீஷாவைக் கூட்டிச் சென்று, உடல் உறவு கொள்கிறான். பின்னர் காலையில் அவளைக் கைவிடுகிறான். அவள் ஏமாற்றத்தில் விரக்தியடைகிறாள். அவளின் கையறுநிலையை க்னுரோவும் வாஸ்யாவும் பயன்படுத்தப் பார்க்கின்றனர். வள்ளமொன்றில் தொடர்ந்துவந்து கப்பலின் கீழ்த்தளத்தால் ஏறும் கபிட்டோனோவிச், தன்னை ஏற்றுக்கொள்ளும்படி லரீஷாவிடம் கெஞ்சுகிறான்; அவள் அருவருப்புடன் அவனை உதாசீனப்படுத்திச் செல்ல முனைகிறாள். "எனக்கு நீ இல்லையென்றால் ஒருவருக்கும் இல்லை!" எனக்கூறி, கைத்துப்பாக்கியால் அவன் சுடுகிறான். செருகும் விழிகளுடன் தள்ளாடியபடி நிலத்தில் மல்லாந்து வீழ்கிறாள். அவன் தன் செயலுக்கு அவலமாய்க் குரல் எழுப்பி அலறுகிறான். ஆகாயத்தில் பறவைகள் கூட்டமாய்ச் சிதறிப்பறக்கின்றன! மகளின் நல்வாய்ப்புக்காக அங்கலாய்க்கும் தாய், இளமை உணர்வில் மயக்கத்துடன் காதல்கொள்ளும் இளம்பெண், அவளைப் பயன்படுத்தும் சுயலநல ஆண், உண்மையாக அவளைக் காதலித்தும் ஒதுக்கப்படும் ஒருவன் ('அழகிய பெண்களெல்லாம் ஏன் எமாற்றுக்காரரை எப்போதும் விரும்புகின்றனர்?' என்று, ஒருமுறை கேட்கிறான்!), லரீஷா கைவிடப்பட்டுக் கையறு நிலையிலுள்ளபோது - பழக்கமானவர் மற்றும் சிறுவயதுத் தோழன் என விருந்தாலும், 'தவிச்ச முயல் அடிக்கப் பார்க்கும்' இருவர் எனக் கட்டமைக்கப்படும் பாத்திரங்கள் - வெவ்வேறு மனப்பாங்கு கொண்ட மனிதர்கள் பற்றிய ஆழமான புரிதல்களைக் கலைத்துவத்துடன், வலுவாக எமக்குத் தருகின்றன. ரஷ்ய தேசியத் திரைப்பட விழா விருது, 1985ஆம் ஆண்டில் இந்தப் படத்துக்கு வழங்கப்பட்டது. 35முழுநீளத் திரைப்படங்களை உருவாக்கிய எல்டர்யிஸனோவ், சோவியத் ரஷ்யாவின் 'மக்கள் கலைஞர் விருதை' 1984ஆம் ஆண்டில் பெற்றவர் என்பதும் குறிக்கத்தக்கது!

6. ஒருத்தி

பிரபல ஆவணப்பட நெறியாளரான அம்ஷன்குமாரின் நெறியாள்கையில், 2003ஆம் ஆண்டில்உருவாக்கப் பட்ட முழுநீளத் திரைப்படம். எழுத்தாளர் கி. ராஜநாராய ணனின் 'கிடை' குறுநாவலை அடிப்படையாகக் கொண் டது. 1884காலச்சூழலில், ஆலம்பட்டி எனும் கரிசல் கிராமத்தில் கதை நிகழ்கிறது. ஆடுவளர்த்தலும் பருத்தி விவசாயமும் செய்யும் மக்கள் அவர்களது வாழ்க்கைச் சூழல்சித்திரிக்கப்படுகின்றன. செவனியும்எல்லப்பனும் முக்கிய பாத்திரங்கள். செவனி தாழ்த்தப்பட்ட சமூகத் தைச்சேர்ந்தவள்; எல்லப்பன் உயர்சாதி. இருவருக்குமி டையில் காதல் ஏற்படுகிறது. இடையில், இருவரது ஆட்டு மந்தைகள் வீராயியின் பருத்தித் தோட்டத்தை நாசமாக்கியமை பற்றிய பஞ்சாயத்து.

சுப்பையா நாயக்கர், தோட்டத்தில் நாசமேற்பட்ட கார ணத்தைக் கண்டுபிடிக்கிறார். ஜமீன்தாரின் வரிச்சுரண் டல்; ஆங்கில அதிகாரியின் வருகை. செவனி ஊர்மக்க ளின் குறைகளை எடுத்துச் சொல்லியதால், ஆங்கில அதிகாரியால் சில நன்மை கள் மக்களுக்கு ஏற்படுகின் றன. ஜமீன்தாரின் ஆள்க ளால் அவள் துன்பத்துக்கா ளாகிறாள். எல்லப்பனுக்குச் சொந்தத்தில், அக்கா - தங் கையான சகோதரிகளைத் திருமணம் செய்துவைக்க ஏற்பாடுகள்நடப்பதை அறிந்த செவனி, 'கிடை'யை மறித்துத் தனக்கு நியாயம் கேட்கிறாள். கீதாரியின் முயற்சியால் எல் லப்பனுக்கு அவளை மணம் முடித்து வைக்க, பஞ்சாயத் தில் முடிவாகிறது.



ஆனால், அவளும் எல்லப்ப னும் வேறு ஊரில்தான் வாழ வேண்டுமென நிபந்தனை யும் போடப்படுகிறது. "ஆனா என்னால.... நான் பொறந்த இந்தப் பூமி, என் சாதிசனம், நான் வளக்கிற ஆடுகள் இதெல்லாத்தையும் மறந்திட்டு இருக்க முடியாது...." எனக்கூறி, செவனிமறுத்துவிடுகிறாள்; 'கிடை'மறிப்பை யும் விலத்திக்கொள்கி றாள். எல்லப்பனுக்கும் முந் தையசகோதரிகள் இருவருக்கும்திருமணம்நடக்கிறது. மீண்டும் வழமைபோல் கிராமத்து வாழ்க்கை.

வேறுவேறு குணநலன்கொண்டதமிழ் மனிதர்கள், கிரா மத்து நிலக்காட்சிகள், வாழ்க்கை இயக்கம் என்பன தனித்துவ அடையாளத்துடன் நன்கு காட்சிப்படுத்தப்ப டுகின்றன. இயல்பான தோற்றம், பேச்சுமொழி, இயல் பான நடிப்பு என்பன செவனி, எல்லப்பன், கீதாரி, சுப் பையா, ஆங்கில அதிகாரி, ஜமீந்தார், செவனியினதும் எல்லப்பனினதும் பெற்றோர் ஆகிய பாத்திரங்களை உயிர்ப்புள்ளதாக்குகின்றன. பின்னிசை காட்சிகளுக் குப் பொருத்தமாய் அமைந்து உணர்வொன்றிப்பை நிகழ்த்துகின்றது இவ்வாறு வித்தியாசமான கதை, காட் சிப்படுத்தல், நடிப்பு, இசை, இறுக்கமான படத்தொகுப் புப் போன்றவற்றால் மிகச்சிறந்த திரைப்படமாக அமை கிறது. இந்தியாவின் நான்கு நகரங்களில் நடைபெற்ற உலகத் திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்ட இந்தத் திரைப்படம், தமிழர்களுக்குப் பெருமை சேர்க்கிறது. நெறியாளர் அம்ஷன்குமார் மதிப்புடன் பாராட்டப்பட வேண்டியவர்!

7.1999

லெனின்எம். சிவத்தின்நெறியாள்கையில், 2009ஆம் ஆண்டில் ஈழத் தமிழர்களால் கனடாவில் உருவாக்கப் பட்ட திரைப்படம். எண்பதுகளின் பிற்பகுதியிலும் தொண்ணூறுகளிலும் வன்முறைக் குழுக்கள் பல, கன டாவிலுள்ள புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் மத்தியில் இருந்தன. சமூகப் பெரியவர்களின் முயற்சியால் குழுக் களிடையே அமைதி நிலவிய காலச்சூழலில், இந்தக் கதை நிகழ்கிறது. இரவில் கொலை ஒன்று நிகழ்கிறது. அதைச் செய்தவனின் மனப்பாங்கு, தம்பியான அவ னைக் காப்பாற்ற குழுவில் தன்மீது நம்பிக்கையுள்ள ஒருவன் மேல் பழியைப் போடும் குழுத் தலைவனின் முயற்சி, அந்த நம்பிக்கைத் துரோகத்தை அறிந்த அவன், கொலைசெய்த குழுவைக் காவல் துறையிடம் தந்திரமாக மாட்டிவிட்டுத் தான் விலகிச்செல்லல் முதலி யன சித்திரிக்கப்படுகின்றன. இடையில் அப்பாவிகள் மூவர், தவறுதலாக எதிர்க் குழுவால் சுட்டுக் கொல்லப்ப டுகின்றனர். தம்பியின் வன்முறைச்செயலால் துயரடை யும் குழுத்தலைவனான சகோதரன், வன்முறைக் குழு வுடன் தொடர்புள்ள மகன் மீதான பாசத்தில் வருந்தும் தந்தை பாத்திரங்கள் - மிகவும் இயல்பாக வந்துள்ளன. ஏனைய பாத்திரங்களும் நன்றாக அமைந்துள்ளன. கனடிய வாழ்வின் சில பக்கங்கள் கூர்மையாக வெளிக் கொண்டுவரப் படுகின்றன.

அங்கேயிருந்தாலும்தாயகத்தில்வன்னியில்துன்புறும் அநாதைச் சிறுவர்களுக்கு உதவுவதற்கு நிதிசேர்க்கும் இளைஞர்களும், அவர்களுக்கு உதவும் நமது மக்க ளும் மனதில் நெகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றனர். காட் சிப்படுத்தல்கள் மிக அருமை. ஆரம்பத்தில் இரவில் காரில் போகையில் காட்டப்படும் காட்சியே, படத்தின் தரத்துக்குக் கட்டியம் கூறுவதுபோலுள்ளது. பின்னர் வரும் காட்சிகள் அனைத்திலுமே ஒளிப்பதிவு சிறப்பாக உள்ளது. அதுபோலவே சூழல் காட்சிகளுக்கேற்ப அமையும் பின்னணி இசை மனதைப் பிணிக்கிறது. கலையனுபவத்துக்கு இவ்விரண்டும் மிகவும் துணை யாகின்றன. சபேசன் ஜெயராஜசிங்கம் ஒளிப்பதிவையும், ராஜ்குமார் தில்லை யம்பலம் இசையையும் கையாண்டுள் ளனர். நடிகர்கள் அனைவரும் மிக இயல்பாக நடிக்கின்றனர்; படம் முழுவ தும் பேசப்படும் எமது பேச்சுமொழி, மிக இயல்பாக வந்துள்ளது. முதலில் காட் டப்படும் சிறுதுண்டுக் காட்சி பின்னர் வரும்போது விவரமாக அதை விளக்கி நின்று, முந்திய சிறுதுண்டுக் காட்சியு டன் இணையும் உத்தி, சிறப்பாக உள் ளது. இந்தஉத்திபல இடங்களில்கையா ளப்பட்டுள்ளது. நேர்கோட்டு முறையி லல்லாது பலவற்றை இவ்வாறு வெளிப் படுத்தியமைக்கு, நெறியாளர்பாராட்டுக் குரியவர். சிறப்பான படத்தொகுப்பின் மூலம் திரைப்படம் நம்மில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. சிறப்பான திரைக்க தையின் மேல் ஒரு கலைப்படைப்பை நிர்மாணித்த நெறியாளர் லெனின் எம். சிவம், மிகுந்த பாராட்டுக்குரியவர்.



வன்கூவர் உலகத் திரைப்பட விழாவில் முதலில் திரையிடப்பட்டுக், கனடாவின் சிறந்த பத்துத் திரைப்படங்களில் ஒன் றாக இது பட்டியலிடப் பட்டுமுள்ளது. ஈழத்தமிழர் படைப்பு என்ற வகையில், நாம் பெருமை அடையலாம்!

வாசகர் வட்டம் நிகழ்த்தும் இப்படியான மாதாந்தத்திரைப்படக்காட்சிகள்பற்றிய செய்திகள், உள்ளூர்ச் செய்தித்தாள்க ளிலும் முகநூலிலும் வெளிவருகின் றன. ஏற்கெனவே கைத்தொலைபேசி இலக்கம் கொடுத்திருப்பவர்களுக்குக் குறுஞ்செய்தி மூலமும் அறிவிக்கப்படு கின்றது. காட்சிகள் இலவசமாகவே காட் டப்படுகின்றன. அப்படியிருந்தும் ஆரம் பத்தில் 15தொடக்கம் 20பேர் வரையி லேயே வந்தனர். இறுதித் தமிழ்த் திரைப் படங்கள் இரண்டுக்கும் 40 தொடக்கம் 50 பேர்வரை வந்தனர். நல்ல திரைப்ப டங்க ளைப் பார்த்து இரசிப்போர் தொகை பெருகவேண்டும். உள்ளூரில் குறும்படங்கள், முழுநீளத் திரைப்படங்களைத் தயாரிக்கும் முயற்சிகள் பல தற்போது நடைபெறுகின்றன.

நல்ல திரைப்படங்கள் உருவாக்கப்படுவதற்கு, அவற்றை இரசிக்கும் ஆதரிக்கும் இரசிகர் தொகை, கட்டாயம் அதி கரிக்கப்படவேண்டும். பிரெஞ்சுக் கலாசார அமைச்சரா யிருந்த அந்த்ரோ மால்றோவும் ஒருமுறை இதை வற்பு றுத்தியிருக்கிறார். "நல்ல இரசிகர்கள் உருவாகினால் தான் நல்ல திரைப்படங்கள் உருவாக்கப்படும்!"

கவிதை



ம. சி. சந்திரபோஸ்

நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கவிதைத் துறை யில் ஈடுபாடு கொண்டதோடு சுய முயற்சி சார்ந்த கருத்துக்க ளிலும் தீவிரமான நிலை கொண்டவர்.

காற்பாறைகள் உனக்காக.....

என் பிரிய இளைஞனே!
நான் தான் இறைவன்
புத்தாண்டின் - உன்
புது வரவுக்காகப் பார்த்திருப்பேன் வாழ்த்துக்கூறி வரம் தர!
வரும்போது வழியில் ஒரு தவம் இருப்பாயா?

இயற்கை வரைந்த முதுமைச் சித்திரங்கள்!
மண்நோக்கி வரவு கேட்கும் மரணத்தின் நெருக்கங்கள்!
பணமுடிச்சு அவிழ, அதில் பதுங்கிய உறவுகளைத் தொலையவிட்ட ஏமாளிகள்!
நிமிஷ வாழ்வில் உயிர் தூங்கும் உன் எதிர்கால நினைவுச்சின்னங்கள்!
உன் உச்சரிப்பில்'கிழடுகள்'
அங்கே கொஞ்சம் குனிந்து 'சுகமா' என்றொரு சொல்லைக் காதுவழியே நெஞ்சுக்குள் காட்டிவிட்டு வா!
உனக்காகக் காத்திருப்பேன்.

பச்சைத்தண்ணியில் பத்தியம் காப்பவர்!
வறுமை ஒன்றையே-மாத வருமானமாய்க் கண்டவர்!
பிறக்கும் வருடத்துக்கு வாழ்த்துச்சொல்லவும் வார்த்தை அற்றவர்!
சீவி முடித்துச் சிங்காரித்துப் புத்தாடையோடு - நீ புதுபவனி வரும்போது
வேலிப் பொட்டுக்குள் - உன் விசித்திரம் பார்க்கும் வேற்றுவாசிகள்!
அந்த வேலியோர நெஞ்சங்களில் துணிச்சல் வேரோன்றைத் தூவிவிட்டு வா!
உனக்காகக் காத்திருப்பேன்.

நித்தம் அமாவாசையை நெஞ்சுக்குள் சேமிக்கும்
ஊனக்கண்ணை உத்தரவிட்ட சோதரர்!
புதுவருடம் பிறப்பதும், இறப்பதும் பிரித்தறியா ஞானிகள்!
உன் கைகுலுக்கின் கனம் காணக் காத்திருப்பார்!
அங்கே, வெள்ளைப்பிரம்பு பற்றி ஒருமுறை விசாரித்துவிட்டு வா!
உனக்காகக் காத்திருப்பேன்.

என் பிரிய இளைஞனே!
ஆலயம் வந்தாயா?
வா!
வரும்வழி எல்லாம்
கருணைத்தவம் காத்தாயா?
வா...நான்தான் கடவுள்
உள்ளேதான் இருக்கிறேன்...!

இல்லை.
சுயநலக் கல்லறைக்குள்
உயிர்ப் பிணமானாயோ
உள்ளே போ...
கற்பாறைகள்
உனக்காகக் காத்திருக்கின்றன.



சிறுகதை



இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்

1972முதல்எழுத்துலக,1984முதல்பத்திரிகைத் துறைஅனுபவம்.சிறுகதை,நாவல்,கட்டுரை,விமர் சனம், நாடகத்துறையில் ஈடுபாடு. குறுநாவல், நாவல், சிறுகதை, பதிவும் பகிர்வும் உட்படப் பத்து நூல்கள். 'வெளிச்சம்' முதலாவது இதழை வடிவ மைத்து கிட்டத்தட்ட ஐம்பது இதழ்கள் வரை வடிவ மைப்பாளர். நூறாவது வெளிச்சம் இதழின் சிறப்பாசிரியர், வடிமைப்பாளர். ஈழநாடு வாரமலர், ஈழநாடு மாத மலர், பொருண்மிய வெளியீடுகளான 'ஆதாரம்', 'காப்பரண்', பொருண்மியச் செய்திகள் போன்றவற்றின் பிரதம ஆசிரியராக இருந்தவர். தற் போது 'தளவாசல்' காலாண்டிதழின் பிரதம ஆசிரியர்.



நீங்கள் நல்லாய் இருக்க வேணும்

கதை ஒன்று

2009மே16ஆம்திகதி.மதியம்தாண்டியபொழுது. சனங்கள் வட்டுவாகல் பாலத்தை நோக்கி நடந்துகொண்டிருந்தார் கள். ஏற்கனவே 1995இல் நாவற்குழிப் பாலத்தை நோக்கி நகர்ந்ததைப்போலநடைதான். ஆனால், அந்தப்பாலக்கடப் புக்கு ஓர் அவசரம் இருந்தது. இப்போது அப்படியில்லை. அதைவிட மோசமான அவலமும், வேகமும், வேதனையும் நிறைந்த பயணம்.

பாதையின் இரு புறமும் வாகனங்கள். புயல டித்துக் கடற்கரையில் ஒதுங்கியதுபோல் கூரைகழன்றும், எரிந்தும், பிரிந்தும், புகைந் தும், இரைந்தும்கிடந்தன. அதனருகேகாயம் பட்ட அநேகம்பேர். கால்களையும் கைகளை யும்நீட்டிக்கொண்டு, "ஐயா, அம்மா, அக்கா... எங்களையும்கூட்டிக்கொண்டுபோங்கோ..." என்று புலம்பியபடி...

இதை எதையுமே கவனிக்காமல் சனங்கள் மிகவேகமாக, பள்ளத்தை நோக்கி ஓடும் நீரோட்டமாக ஓடிக்கொண்டிருந்தார்கள். பாதையின் இரு புறமும், சற்றுத் தள்ளித் தள் ளிச்செல்கள்விழுந்துவெடித்துக்கொண்டிருந் தன. துப்பாக்கிச் சத்தங்கள் வேறு.

"ஐயோ... அம்மா.." என்ற அலறல்களும்.

போட்டிருந்தஉடுப்பைத்தவிரநேசனிடம்எது வும் இருக்கவில்லை. கூட பரமேஸ். அவன் கைகளைப் பிடித்தபடி வந்துகொண்டிருந் தான். அவனது இடது கையில் சிறிய காயம். இரத்தம்வடிந்துகாய்ந்துபோய். வரதன்எங்கு போனான் என்று தெரியவில்லை. முன் னுக்கே போய்விட்டானா? அல்லது பின் னாலே வருகின்றானா? எனத் தெரிய வில்லை. அதைப் பற்றி யோசிக்க நேரமும் இல்லை. போகின்ற சனங்களோடு போய்ச் சேர்ந்திட வேண்டியதுதான்.

அன்று காலை எட்டு மணிக்கு இப்படித்தான் எல்லோரும் ஒரு தடவை பர பரவெனப் புறப் பட்டார்கள்.

"சனமெல்லாம் போகுதாம் வாங்கோ வாங்கோ" என்றவாறு மண்தரையில் படுத் துக்கிடந்தவர்கள்எல்லாம்வெளிக்கிட்டார்கள். துப்பாக்கிச்சன்னங்கள்ஆள்உயரமட்டத்தில் சீறிப்பாய்ந்துகொண்டிருக்கத்தடைதாண்டப் புறப்பட்டவர்கள்போல் தலை குனிந்தும், வளைந்தும் சென்றார்கள். என்றாலும் அவர் களால் பாலத்தைத் தாண்ட முடியவில்லை. திரும்பவும் தலை குனிந்து ஓடிவந்து பனை வடலிக்குள் 'பம்மி'க் கொண்டார்கள். காலை யில் இவ்வாறு புறப்பட்டபோது நேசனுடன் பரமேசுவும்வரதனும்இருந்தார்கள். இப்போ துதான் வரதன் 'மிஸ்சிங்'.

ஆளை ஆள்பார்க்காமலேவிரைந்துகொண் டிருந்தபோது. "டேய்" என்றபழக்கமானகுரல். நேசனின் முதுகைக் கைதொட்டு அழுத்திப் பிடிக்க அந்தக் குரல் கேட்டது.

நடந்தபடியே திரும்பிப் பார்க்க, அவசரமான தோற்றத்துடன் வரதன் வந்தான். ''என் னடா..." என்றான் நேசன்.

"நில்லு ஒரு அலுவல்"

நேசன் சினம்கொண்டான்.

"என்னடாகதைக்கிறாய்...? எல்லாரும்அந்த ரப்பட்டு ஓடிக்கொண்டிருக்க நீ என்னடா கதைக்கிறாய்?"

"பொறு மச்சான் பொறு... வாற சந்தர்ப்பத்த விடக்கூடாது'

"என்னடாசொல்லுறாய்?"

கோபம் கொப்பளிக்க நேசன் கேட்க, பரமேசு பக்கம் வந்தான்.

"மச்சான்உங்ககிட்டலபனவடலிக்கலொறி ஒண்டுபிரிஞ்சுபோய்க்கிடக்கு. அதுக்கக்கனக் கக்கிடக்குதடா"

"என்னடா?"

"காசும் நகையும் இருக்கும்போல. ஏன்ரா வாற சந்தர்ப்பத்த விடுவான். அந்தப் பக்கம் ஒரு சனமும் இல்ல. போனா எடுக்கக் கூடியத எடுத்திடலாம். பத்துப் பதினைஞ்சு நிமிசத்துக்கிடேல்லை விசயத்த முடிச்சிடலாம்" என்றான் வரதன்.

கோபத்தின் உச்சத்தில் நின்ற நேச னின் தலையில், குளிர் நீர் வார்த் தாற்போல் இருந்தது. பரமேஸ் முகத்திலும் மாற்றம் ஏற்பட்டது.

"கனக்கக் கிடக்கோ" என்றான் உச் சாகமாக

"ஓமடாப்பா... அப்படித்தான் இருக்க வேணும்"

"கெதியாப்போய்வந்திடலாம். இப்ப டியொரு சந்தர்ப்பம் இனிமேல் ஒரு போதும்வராது' என்றான்மீண்டும் வரதன்.

அதற்குப் பின்னரும் நேசனால் மறுக்கமுடியவில்லை.

வரதன்திரும்பிச்சனங்களைவிலத் தத் தொடங்கினான். அவன் தோளைத் தொட்டுக்கொண்டு பர மேஸ். பின்னால்நேசன்.

'குபு குபு' வென்று பாலத்தை நோக் கிப் பாய்ந்து கொண்டிருந்த ஆக் களைஎதிர்த்துக்கொண்டுதிரும்பிப் போவது சிரமமாக இருந்தது. என் றாலும் போனார்கள்.

சற்றுநேர அசைவுக்குப் பின்னர் வரதன் ஓரிடத்தில் நின்றான்.

"இதாலதான் போகவேணும். எதா வது பாக் எடுத்தால் நல்லது" என்ற படிதரையைப் பார்க்கத் தொடங்கினான்.

தெருக் கரையோரமாகச் சிதைந்து நனாவி தப் பொருட்களுக்கிடையில் கிடந்த ஒரு தோல்ப்பையைத் தூக்கி அதற்குள் கிடந்த பொருட்களை இழுத்தெறிந்தான் பரதன்.

"டேய்ஆளுக்கொருபாக்எடுங்கோடா. அங்க போய்த் தேட ஏலாது"

பரமேசும் நேசனும் சுடுதண்ணி குடித்தவர் களாக மாறி பக் தேடி அவற்றைக் கவிழ்த் துக்கொட்டி. பின்னர் தோள்களில் கொழு விக்கொண்டு. வரதன் பின்னால் ஓடினார் கள்.

பனை வடலிக்கிடையில் வாகனங்கள் போகக்கூடியஒருபாதை. வயதானபெண்ம ணியின் தலை உச்சியாகக் கரைந்திருந்தது. அதன் இரண்டுபக்கமும் வாகனங்கள்தான். ரக்ரர்கள். கன்ரர்கள்.

சிறிது தூரம் சென்ற பின்னர். சனங்களைக் காணவில்லை.

வெறுமை நிறைந்த அந்தப் பகுதியில் லொறி கள் நிரைக்குநின்றன. சில எரிந்துபோய், ஒரு சில எரிந்தபடி.

பயமும்பதட்டமும்பொங்கப்பொங்க, வரதன் பின்னால் நேசனும் பரமேசும் ஓடினர். சட் டென்று வரதன் நின்றான்.

வாய் பிளந்திருந்த லொறி ஒன்றிலிருந்து அரி சியும் மாவும் சிதறுண்டு இருந்தன. பால்மா வும் அப்படித்தான்.

சற்றுத் தள்ளிக் காணப்பட்ட அந்த லொறி புது விதமாக இருந்தது.

முழுமையாகப் பிரியாத அந்த லொறியை அண்மித்த வரதன், "கெதியா வாங்கோடா" என அவசரப்படுத்தினான்.

அந்தச் சுற்றப்புறத்தில் அதிர்வுகள் ஏற்பட்டன. குண்டுச்சத்தங்கள்துப்பாக்கிவெடிகளும்அம ளியாகக் கேட்டன.

"வாங்கோடா வாங்கோடா..." என்ற வரத னின்குரல்இடறஆரம்பித்தது. பயமும்ஆசை யும் அவனுள் புகுந்து அவனை அலைக் கழித்திருக்க வேண்டும்.

படார்என்றுகால்களைத்தூக்கிவைத்துஅரை குறையாய்ப் பிரிந்துபோய்இருந்த அந்த லொறியின் பின்புறம் ஏறி உள்ளே இறங்கி னான்வரதன்.

கீழே நின்றபடி அவனைப் பார்த்தார்கள் நேச னும் பரமேசும் இரண்டு கைகளாலும் அக்கம்பக்கம்'குபுகுபு'வென்றுளியஆரம்பித் தது.

நேசன்பயத்துடன்வாகனத்தைவிட்டுக்கீழே குதித்தான் பிறகு "டேய் வாங்கோ பிரச்சினை யில்லாட்டித் திரும்பவும் வந்து பாப்பம்" என்ற படி முன்னே ஓட வரதனும் பரமேசும் லொறியை விட்டுக் குதித்துப்பாய.

மின்னினால்போல்அந்தப்பகுதிக்குமிகஅண் மையாகச் செல்கள் விழுந்து வெடித்தன. யாரோ தலையில் ஓங்கி அடிப்பது போலும் கால் கைகளைப் பிரித்தெடுப்பதுபோலவும் நெசனுக்கு உணர்வுகள்உண்டாயின.

வலது காலில் பெரு வலி எடுத்தது. அதைத் தாங்கிக் கொள்ள முடியாத நிலையில் அவன் உணர்விழந்தான்.

▬ ▬ ▬

முதலில்கண்விழித்தபோது. ஒன்றும்தெரிய வில்லை. கஸ்ரப்பட்டுக் கண் திறக்க எதிரே தெரிந்த மரக் கொப்புக்களை விறாண்டியபடி சூரிய ஒளி கண்களைப் பொசுக்கியது. ஒரு தடவை கண்களை மூடி மீண்டும் திறக்க, எதிரே சுபத்திரா. அவளின் பக்கத்தில் முழு நீளத் தாடியுடன் ஒரு வயதானவர், "அப்பன் எப்பிடியடா இருக்கிற?"

நேசனின் தலையைத்தடவியபடிஅவர், அவ னது பக்கத்தில் வந்தார்.

என்னநிறம்என்றுசொல்லமுடியாதஒருநிறக் குறைப்போத்தில் தண்ணீருடன் சுபத்திரா தலை குனிந்திருந்தாள். அவள் முகத்தில் ஒரு வகை அனுதாபம். குழப்பகரமான அந்தச் சூழ்நிலையில் சுபத்திராவைப் பார்த்தான். ஒளிக்க வேண்டும்போல் இருந்தது.

▬ ▬ ▬

சாம்பலைக்கரைத்துப்பூசினால்போல்இருள், வரைந்த சித்திரமாகத் தெரிந்தது. கடற்கரை விளிம்பில்ஒளிப்பொட்டுக்களாக-கடற்படைப் படகுகளாக இருக்க வேண்டும். அலைந்தா டின. அந்தவிளிம்பின்மேல்அடிவானில்தரை யில்சிந்தப்படும்இரத்தவெள்ளத்தைஉறிஞ்சி எடுத்துச் சிவந்தாற்போல் மாலைச் சூரியன்.

கடற்கரைக்கு எதிரே ஒரே மட்டத்தில் பரவியி ருந்த பனை வடலிகளுக்குப் பின்னால், நெருப்பு வேலியிட்டிருந்தது. அதன்மேலே கரும்புகை.

பனை வடலிக்கும் கடற்கரைக்கும் இடைப் பட்ட அந்தச் சிறிய பிரதேசத்துக்குள் தறப்பாள் வீடுகளும் சின்னாபின்னமாய்ப் போய்க்கி டந்த மணல் மூட்டைகளும்.

குஞ்சு, குருமண்களைச் சுமந்தபடியும் சுமை களை இழுத்துக் கொண்டும் சனங்கள்எந்தப்பக்கம்செல்வ

நீங்கள் நல்லாய் இருக்க வேணும்

தென்று தெரியாமல் அமளிப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.
ஓரமாக இருந்த ஒரு சிறிய ஆலமரத்தின் கீழ் சிலகுடும்பங்கள் தம் புலங்களைத் தொலைத்துவிட்டு என்ன செய்வதென்று தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தார்கள்.
அவ்வாறு இருந்தவர்களில்மூன்று இளைஞர்களும்இருந்தார்கள். அவர்கள் நேசன், பரமேஸ்வரதன்.
மூவரும் குடும்பங்களைத் தவறவிட்டுத் தனித்துத் திரிந்து கொண்டிருந்தார்கள்.
யாருக்காவது பங்கர்வெட்டிக்கொடுப்பது. மண் மூட்டை அடிப்பது என்று சமயத்தில் வரும் வேலைகளைச் செய்துகொண்டு பகல் வேளைகளில் பதுங்கியிருக்கவும் தலைப்பட்டார்கள். அவ்வப்போதுயாராவதுதவறவிடும்பிரயோசனமானபொருட்களையும் எடுத்துப் பசியாறிக் கொண்டிருந்தார்கள்.
ஆள்ச் சேர்ப்பு அமளியான அந்த யுத்த வேளையில் கடைசித் தொட்ர் புதுங்குகுழி அமைக்கும் வேலைகளுக்கு இளைஞர்கள், நடுத்தர வயதினர் கட்டாய பணியில் ஈடுபடுத்தப்பட்ட சூழலில்துப்பாக்கிக்குண்டுகள்ராஞ்சிக்கொண்டு,போகும்இடங்களில் இவ்வாறான பணிகளில் ஈடுபடாமல் இருப்பதற்காக இவர்கள் தலைமறைவாகியிருந்தனர்.
தத்தம்குடும்பங்களோடுஇருந்தால், இப்படிப்பதுங்கிவாழ்வது கஸ்ரமென்பதால் தான் இந்த ஏற்பாடு.
பொழுது போவது பிரச்சினையானதுபோலவே இந்தப் பொக்கணைக் கடற்கரையில் பொழுதைக் கழிப்பதும் கஸ்ரமாக இருந்தது அவர்களுக்கு.
சாப்பாடே பிரச்சினையானபோது தேநீர் குடிப்பதும் தம் அடிப்பதும் எப்படிச் சரிவரும்? எனச் சாத்திரம் கேட்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.
தேநீர்க் கடைதேடி அதிக காசு கொடுத்துத் தேநீர் குடிக்க வழியில்லாததால் ஒரு கிளாஸ் தேநீரை வாங்கி மூன்று பேரும் மிடறு மிடறாய்க் குடித்து, காய்ந்த அரசம் இலையையோ, ஆலம் இலையையோ பீடி மாதிரிச் சுற்றிக் குடிக்கும் இயல்பு நிலைக்கு வந்து விட்டார்கள்.
மணல்அளைந்துகொண்டிருந்தநேசன்தற்செயலாகத்தலை நிமிர்ந்தபோது வேகமாக ஓடிவந்த ஒருவன்- ஒருத்தி - பெண்ணாக இருக்க வேண்டும். ஆலமரத்தின் அடியோடு இவர்களுக்கிடையே அருகாமையில் பதுங்கிக் கொண்டாள். இருளைப் பழக்கப்படுத்தி அவளை அந்த மெல்லிருளில் நேசன் பார்த்தான். சற்றேதெரிந்தமுகம். "அடஇதுசுபத்திராதானே..." என நினைத்துக் கொண்டு அதை உறுதி செய்ய அவளைப் பார்த்தான்.
பரிதவிக்கும் விழிகளும் பட படவெனும் நெஞ்சுமாக இருந்த அவள், நேசனைப் பார்த்தாள். "நீங்கள் நேசன் தானே...?" என்று அவள் கேட்க, அவன் பதில் ஏதும் சொல்லாமல் அந்த இடத்தைவிட்டு விரைந்து எழும்பினான். எதுவுமே சொல்லாமல்அவன்விரைந்துபோவதைக்கண்டவரதனும்பரமேசும் அவன் பின்னால் ஓடினார்கள்.

■ ■ ■

சுபத்திராவைக் கண்டதும் நேசனுக்கு ஒரு வகைக் குற்ற உணர்;ச்சி ஏற்பட்டது. காரணம் அவனுக்குத்தான் தெரியும். விரைந்து ஓடிக் கொண்டிருக்கையில் நேசனுக்குச் சுபத்திராவைத்தான்முதலில்கண்டகாட்சிமிதந்துதெரிந்தது. இரணைப் பாலையில் செதுக்கி விட்டால்போல் உயரம் கொண்ட தென்னை மரங்கள் நிறைந்த வளவுக்குள் நேசன் குடும்பம்தறப்பாள்கொட்டில்கட்டிமணல்தரையில்நைலோன் பாய் விரித்துத் தங்கியிருந்தது.
அந்தத்தென்னைமரவளவுக்குள்தறப்பாள்கொட்டில்கள்தான் அநேகம். திருவிழாச் சனம்போல் எப்போதும் சனங்கள்.
ஒருவிடிகாலைப்பொழுதில்செல்சத்தங்கள்அதிகமாகிச்சுற்றிச் சுற்றி விழுந்து கொண்டிருந்தன. அந்த வேளையில் யாரும் பங்கருக்குள் இருக்கவில்லை. கந்தகப் புகையும் காதைக் கிழிக்கும் சத்தமும் சனங்களைச் சிதற வைக்க அகப்பட்ட பங்கருக்குள்பாய்ந்தோடிப்பதுங்கத்தொடங்கினார்கள்அவர்கள். மூச்சுக்கள் சுட்டுக்கொண்டிருந்த ஒரு பங்கருக்குள் நேசன் எதிர்ப்புறத்தில் ஒரு பெண் அமர்ந்திருந்தாள். அவளது கையிலிருந்து இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. கண்களில் கண்ணீர்.
சிறிதுநேர அமைதிக்குப்பின்னர் சூழவும் சத்தங்கள் அமர்ந்து போயின. பாம்புகள்தலைதூக்குவதுபோல்ஒவ்வொருவராகத் தலையைத் தூக்கிக் கொண்டு வெளியே வந்தார்கள். இவர்களின்தென்னந்தோப்பைச்சூழவிருந்தவளவுகளில்இப்போது செல்கள் விழுந்து வெடித்துக் கொண்டிருந்தன. சனங்கள் கூக்குரலிட்டு அலறிக் கொண்டிருந்தனர்.
அவளைத்தொடர்ந்துநேசனும்பங்கரைவிட்டுவெளியேவந்தான். அவள்தான்அணிந்திருந்தபஞ்சாபியின்சோளைஎடுத்துக்காயத்தைஅழுத்திப்பிடித்துக்கொண்டிருந்தாள். வெளியே வந்தவள் தென்னை மர ஓரமாகப் போய் அமர்ந்தாள். நேசனின்பின்னால்வந்தஅவனதுஅம்மா, "பெரியகாயமோசுபத்திரா...?" என்றபடி அவள் அருகில்போய்க் குனிந்தாள்.
'தெரியேல்லஆனாநல்லாநோகுது' என்றாள்பதிலுக்குஅவள். நேசன் அவளைப் பார்த்தான்.
அவள் முகத்தில் விழிம்பு கட்டிய வேதனை விழிகள் வழியே வேளிப்படுவதாகநேசன்உணர்ந்தான். எண்ணைகாணாது வெடித்துச்சிதறும்இலவம்பஞ்சாகக்காட்சிப்படுத்தப்பட்டிருந்த அவள் தலைமயிர் எண்ணை வடிந்து சற்று வனப்பிழந்து கிடந்த அவள் முகமும் விழிக் கரையோரத்தில் தெரிந்த பீளைகளின் எச்சமும் சற்றே ஈர்ப்பில்லாத ஒரு பொழிவை அவளுக்குத் தந்தாலும் அவளில் ஒரு சிறு மின்னல் மின்னுவதை நெசன் உணர்ந்தான்.
"இவள் தலை முழுகி, உலர்ந்த மயிர்க்கட்டை தோளில் புரள சுழன்றாடும் விழிகளுடன் முகம் சிவக்க வந்தால்...! எப்படியிருக்கும்...?"என்றஎண்ணம்பட்டென்றுநேசனுக்குவந்துபோனது.
"வா பிள்ள அதில மெடிக்ஸ் பிள்ளையள் இருக்குது. மருந்து கட்டிக்கொண்டு வருவம் என்று அழைத்தாள் நேசனின் அம்மா" அவள் அதற்கு உடன்பாடாக இல்லை.
"ஏன்யோசிக்கிறபிள்ள? அடுத்ததரம்செல்லடிக்கிறதுக்குஇடையில மருந்து கட்டிக் கொண்டு வந்திடுவம்"
"இல்ல வேண்டாம்" என்றாள் அவள் மீண்டும்.
"உதென்ன விசர்க்கதை. வாபோவம்" என்று மீண்டும்வலியுறுத்தி அவளைப் பிடித்திழுக்காத குறையாக மருந்து கட்ட அழைத்துப்போனாள்நேசனின்அம்மா.போகும்போது, "ஒரு இடமும் போகாத போய் பங்கருக்க இரு" என்று நேசனைப் பார்த்துச் சொன்னாள்.
தாய் பங்கரைப் பார்த்துச் சொன்னதும் பங்கருக்குள் இருந்த போதுஅவள்கையில்ஒருபையைவைத்திருந்ததைநேசன்நினைவுபடுத்திக்கொண்டான். இப்போதுஅவள்கையில்அந்தப்பை இல்லை. அதன் விளைவு...? விரைந்து பங்கருக்குள் நுழைந்தநேசன் அதைத்தேட, அந்தப்பை அவன்கைகளுக்குள் வந்தது.

■ ■ ■

"காலிலைதான்காயம். மயங்கிப்போய்க்கிடந்தனியள். நான் மாமாவோடை தற்செயலாய் இதாலை வந்தபடியாள் உங்களைக் கண்டனான். விட்டிட்டுப்போக மனம் வரயில்லை. இந்தாங்கோ பொக்கற்றுக்கை கிடந்த ஐ.சியும் காசும்" என்று நீட்டினாள் சுபத்திரா.
அவனைச் சுற்றி எதுவுமே இல்லை. போட்டிருந்த சேட்டிலும் சறத்திலும் இரத்தக் காயங்கள். தோளில் கொழுவிய பாக், கூட விருந்த நண்பர்கள் எல்லாமே 'மிஸ்சிங்'.
"ஒண்டுக்கும் யோசிக்காதையுங்கோ நாங்கள் எப்பிடியும் ஆஸ்பத்திரிக்குப் போவம்" என்றாள் சுபத்திரா.

கதை இரண்டு

இரண்டுபிள்ளைகளுடன்சுபத்திராவின்வாழ்க்கைஅல்லாடிக் கொண்டிருக்கிறது. மூத்த பெண்பிள்ளை - ஏழு வயது. அடுத்ததும்பெண் பிள்ளைதான். மூன்று வயது.
திடீர் திடீர் எனக் காணாமல்போகும் குடிகாரப் புருசன் காணாமல்போய்மூன்றுமாதங்களுக்குமேலாகிவிட்டது. வாழ்க்கையைக் கொண்டு நடாத்த அவள் படும்பாடு கடவுளுக்குத்தான் வெளிச்சம்.
கொட்டில்போட்டுஇருக்கஇடம்கொடுத்தவளவுக்காரச்சீமான் எப்போதாவது. பாவப்பட்டு அரிசி, மரக்கறிகள் கொடுப்பார். அவள் கஸ்ரத்தை உணர்ந்து, தொடர்ந்து இருக்க விட்டிருக்கிறார்கள். ஆனால் நாளாந்தச் சீவியம்...?
சமையல் வேலைக்குப் போனால், ஒரு நாளைக்கு ஐந்நூறு ரூபாதருவதாகயாரோசொன்னதைநம்பிஅதைஉறுதிசெய்வதற்காகப் புறப்பட்டுத் தெருவுக்கு வந்தாள். தெரு முகப்புச் சுவரில்"உங்கள்வாக்குகளைஅளித்துஇவரைத்தெரிவுசெய்யுங்கள்"என்றசுவரொட்டிபுதிதாகத்தெரிந்தது. அதில்நேசனின் படம் இருந்தது. அதை அவள் கவனிக்கவில்லை. ■

கன்னி அம்மன்



தூக்கணாங் குருவிக் கூடுகள்
நூனிகளில் தொங்கும் முதிய மரம்
"நேற்று
நான் வருவேன் என்று
நினைத்தாயா" என்றேன்
மஞ்சளாய் வெடித்தது சூரியன்
வாய்க்காலின் வெள்ளம் உடலேறியது
குழந்தைக்குள் சிரிக்கிறாய்
வயல் நெல் நிறம்பிற்று
மீண்டும்
நெடுங்காலத்துக்குப் பிறகு
எனது கருவறையில் அமர்ந்திருக்கும்
கன்னி அம்மனைப்போல்
வீற்றிருக்கிறாய்
நெடும் பள்ளத்தில் வீழும்
பேரருவியாய்
திரும்பிச் சொல்கிறாய்
சில வரிகளை
மீள்
பாதைகள் செய்யும் செல்லக் காத்திருக்கின்றன
கருவறை இருட்டு
மூக்குத்தி வெளிச்சம்

கடல் கடலானது

இது பாலைவனம், இந்தப் பாலைவனம்
பாலைவனமாகும் முன்னர் இதைக் கடந்து
போன
கடைசி நதியின் கடைசி துளி விடைபெறுதலுக்கும் உன்
இருப்பின் அமைதி. அது என்
உள்ளூறிப் பெருகும் கடல்.
கடல் கடலானது. நீராலும் உப்பாலும் ஆனதல்ல.
கடல் போன்ற காற்றால், கடல் போன்ற வெளியால், கடல் போன்ற
ஒன்றால் ஆனது கடல். அதனால் தான் கடல் கடலானது
.நீராலும் உப்பாலும் ஆனதல்ல
இந்த இருள், கடல் போன்ற இருளானது
இந்தக் கடல், கடல் போன்ற நீரானது.
குழந்தைகள் மிருகங்களிடம் இருந்து கடல் போலக் கத்தப்
பழகுகிறார்கள்.
கடல் பற்றிய உயர்ந்த கவிதை,
எழும் அலைகளின் வாழும் வேட்கையைப் போன்றது
அது கடலின் நிரந்தர தீவிரத்தை உருவாக்கும்
தொலை வானிலும் தொலை வானுக்கு அப்பாலும் கடல்
தான்
கடல் மட்டும் தான் என்பதை உணர்த்தும்.
அது உன் கைகளில் கொண்டு வந்து சேர்க்கும் அதனுள்
வாழும்
உயிர்களது சுவாசத்தின் ஜீவ காற்றை.
அது கடலிடம் இருக்கும் தாங்கிக் கொள்ள முடியாத கடல்
எனும் உணர்வை உன்
விரல்களுக்குள் பெருக விடும்.
கடலே பூமியின் கருப்பை; அதனால் தான் பெண்ணுக்கு
கடலின் வாசனை; கடலின்
கருணை; கடலின் வன்முறை; கடலின் குழந்தைத் தனம்;
கடலின் முடிவின்மை; கடலின்
பிடிபடாத புதிர்த் தன்மை.
அப்படித் தான் எதனாலும் சொல்வதென்றால்,
ஆணின் பெண்ணின்
இரத்தக் கடலில் விளைந்தது தான் உடல் எனும் கடல்
அது கடல் எனும் உடலில் மூழ்க மூழ்கவே.

கவிதை



கிரிஷாந்

யாழ்ப்பாணம், இலங்கை. எழுத்துச் செயற்பாட்டாளர். மயானகாண்டம் என்றதொகுப்பில் சில கவிதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. புதிய சொல், கலைமுகம், மறு பாதி, ஆக்காட்டி, குவர்னிகா, தீராநதி, கல்கி, படிகள்போன்றஇதழ்களில்கவிதைகளும் கட்டுரைகளும்பிரசுரமாகியுள்ளன, மலைகள், எதுவரை, பொங்கு தமிழ். மாற்றம்போன்ற இணைய இதழ்களிலும்அவ்வாறே. விதை குழுமத்தின் செயற்பாட்டாளர்.

இலக்கியங்களின் நோக்கம் வெறுமனே கலானுபவத்தையும் கலைத்துவ நுகர்வையும் மாத்திரம் உறுதிப்படுத்துவதல்ல. இலக்கியங்கள் ஏதோ வொரு வகையில் சமூகப் பயன் நோக்கியதாக அமைகின்றன. இலக்கியங்கள் சமூக அமைப்புமுறை மற்றும் அதன் தொழிற்பாடுகளின் பிரதிபலிப்புகளாகத்தான் தோற்றம் பெறுகின்றன. அவை தாம் தோன்றிய காலத்தின் சமூகப் போக்குகளைப் பதிவாக்குவதுடன் அந்தச் சமூகப் போக்குகளின் வழியாகத் தமக்கான இலக்கியக் கொள்கையையும் வகுத்துக்கொள்கின்றன.

ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளில் சிறுவர்களுக்கான சமூக நீதி

கட்டுரை



இராஜேஸ்வரன்
இராஜேஸ்கண்ணன்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சமூகவியல்துறை முதுநிலை விரிவுரையாளர். சிறுகதைப் படைப்பாளியாகவும்இலக்கியத்திறனாய்வாளராகவும் அடையாளப்படுத்தப்படுபவர். இலக்கியத்தில் சமூகப் பார்வைகளும் பதிவுகளும்', 'கிராமியக் கல்வி மேம்பாடு சமூகவியல் பார்வைகள்' போன்ற சமூகவியல்சார்ந்தநூல்களையும்'முதுசெமாக', 'தொலையும் பொக்கிசங்கள்', 'இரகசியமாய்க் கொல்லும் இருள்' போன்ற சிறுகதைத் தொகுப்புக்களையும் வெளியீடு செய்துள்ளார்.



இன்றைய உலகமயமாக்கல் போக்கில் இலக்கியத் தளத்தில் பல்வேறு வகையானதளமாற்றங்கள்நிகழ்ந்தவண்ணம் உள்ளன. எவ்வாறு இலக்கியங்கள் வாழ்வையும் இனவரைவியல் கூறுகளையும் பதிவாக்கம்செய்கின்றனவோ அவ்வாறே நிகழ்ந்தேறிவரும் உலகமயமாக்கத்தின் விளைவான சமூக மாற்றங்களையும் பதிவாக்குகின்றன.

உலகளாவிய நிலையில் மனிதவாழ்வுக்கான சமூக நீதிபற்றிய கேள்விகள் வலுத்துவருகின்றன. பல்வேறு வகையில் அடுக்கமைக்கப்பட்ட சமூகங்களில் அவ் அடுக்கமைப்புக்களால் உருவாக்கப்பட்ட அசமத்துவங்கள் அதிகரித்துவருகின்றன. இந்த அசமத்துவங்கள் சமூக நீதியைக் கேள்விக்குள்ளாக்குகின்றன. சமூக அநீதிகள் பல்வேறு அடிப்படைகளில் நிகழ்கின்றன. வர்க்கம், சாதி, மதம், இனம், பால்நிலை, வயது முதலிய பல்வேறு அடிப்படைகளில் சமூக அநீதிகள் நிகழ்ந்துவருவதால் அவை குறித்த சமூக நீதிக்கானதேடல்கள்முனைப்படைந்துள்ளன. இத்தகைய தேடல்கள் பல்வேறு தளங்களில்நிகழ்ந்துவருவதைப்போலவே இலக்கியங்களிலும்நிகழ்கின்றன.

இலக்கியமும் சிறுவர்களும்

நவீன இலக்கிய வடிவங்களில் ஒன்றான சிறுகதைகளில் சமூகநீதி பற்றி அதிகம் பேசப்பட்டுள்ளது. எல்லா இலக்கியங்களைப் போலவே சிறுகதைகளும் வெளிப்படுத்தும்பொருளில்சமூகஏற்றத்தாழ்வுகளுக்கு எதிரான குரல்களாக ஒலித்துவந்துள்ளன. அந்தவகையில் சிறுகதை இலக்கியத்தில் சிறுவர்களுக்கு இழைக்கப்படும் சமூக அநீதிகள் பற்றிய வெளிப்படுத்தல்களைத்தனித்துஅடையாளப்படுத்துமளவுக்கு அவை பதிவாகியுள்ளன. இன்றைய சமூகப் போக்குகளின் பிரதிபலிப்பாக இவை வெளிப்படுகின்றன. தமிழ் இலக்கியச் சூழலில் சிறுவர்களுக்கான இலக்கியங்கள்அதிகம்வெளிவருவதைப்போல சிறுவர்கள் பற்றிய இலக்கியங்கள் வெளிவருவதில்லை. சிறுவர்களுக்கான இலக்கியங்கள் (literature for children) சிறுவர்களை மகிழ்வூட்டவும், அவர்களின் கற்பனை ஆற்றலை விரிவுபடுத்தவும், புத்தாக்கச் சிந்தனையை விரிவாக்கவும், இலட்சிய வேட்கையைத் தூண்டவும் துணை புரிகின்றன. தமிழ் இலக்கியச் சூழலில் சிறுவர்களுக்கான இலக்கியங்களுக்கு நீண்ட வரலாறு உண்டெனினும் அது சிறுவர்களுக்கான பாடல்களால் ஆக்கிரமிக்கப்பட்ட அளவுக்கு ஏனைய இலக்கிய வடிவங்களால் வெகுஜனத் தளத்தில் செல்வாக்குப் பெறவில்லை. தமிழிலும்கூட சிறுவர் பாடல்கள், சிறுவர் கதைகள், சிறுவர் நாவல்கள்குறிப்பிடத்தக்களவுவெளிவந்தன. எனினும் அவற்றின் சமுதாயப் பெறுமானம் வளர்ச்சிபெற்ற நாடுகளைப்போல அமையவில்லை. மரபுகளைக்கையளிப்பதில் கவனமெடுத்த சிறுவர் இலக்கியங்கள் மரபுகளின் சிக்கல்களை விமர்சனம் செய்யும் அறிவையோ, உலகை வெல்லும் புத்தாக்கங்களைப் புனையும் அறிவையோவிரிவாக்குவதில்குறைநிலையிலேயே இருந்தன.

சிறுவர்கள் பற்றிய இலக்கியங்கள் (literatures on children)

சிறுவர்களின் உலகம் எத்தகையது? அவர்களின் சமூகச்சூழல் அவர்களை எவ்வாறு பாதிக்கின்றது? சிறுவர்களுக்கும் வயதுவந்தவர்களுக்குமான அனுபவ இடைவெளிகளால் உருவாகும் சிக்கல்கள்எவை?போன்றபலகேள்விகளுக்குப் பதில்களாக அமைகின்றன சிறுவர் பற்றிய இலக்கியங்கள். சிறுவர்களுக்கான இலக்கியங்களின்நேரடிப்பயனாளிகள் சிறுவர்கள் தான். மாறாகச் சிறுவர் பற்றிய இலக்கியங்களின் பயனாளிகள் சிறுவர்கள் மாத்திரமல்லர். படைப்பாளிகளின்நோக்கில்சிறுவர்பற்றியஇலக்கியங்களின் நேரடிப் பயனாளிகளாக இலக்குமையக்குழுக்களாகப்பெரியவர்கள்தான் கருதப்படுகின்றனர்.

சமகாலச் சமூகப் போக்கில் சிறுவர்கள் தமக்கான இன்பம் தரும் உலகத்தை இழந்துவருகின்றனர். அவர்கள் மீதான சமூகத்தின்அழுத்தங்கள்மிகுந்துள்ளன. 'பிள்ளைகளின் மனம் பூப்போன்றது, மிருதுவானது, மிகை சுமை தாங்காதது, உள்ளுறும் இனிய உணர்வுகளால் இன்பமளிப்பது. பிள்ளைகளின் அகவுலகம் அற்புதமானது. அவர்களால் தமக்கென ஒரு புறவுலகினை இலகுவில் கட்டியமைக்கமுடிவதில்லை. ஏற்கனவேபெரியவர்களால் மூத்தவர்களால் கட்டமைக்கப்பட்டசமூகஉலகில்வாழத்தலைப்படுகின்றனர். பேராசை, அந்தஸ்து வேட்கை, குரோதம், மோகம், ஏற்றத்தாழ்வு, போலி கௌரவம், ஒடுக்குமுறைகள், வன்முறைகள் முதலிய பல எதிர்நிலைப் பொருண்மைகளின் ஆதிக்கம் சமூக உலகில் மலிந்துகிடக்கின்றது. இவை சிறார்களின் அற்புத அகவுலகை ஆக்கிரமிப்புச் செய்கின்றன. இந்த ஆதிக்கம் அவர்களை மிகையாய்ச் சுமக்கும் நிலைக்குத் தள்ளிவிடுகின்றது. மிகையாய்ச் சுமப்பவர்களின் அகவுலகம் அழுத்தங்களால் நிறைகின்றது' (இராஜேஸ்கண்ணன், 2015, இரகசியமாய்க் கொல்லும் இருள் முன்னீடுபக்:xvixvii). இந்த அழுத்தம் நிறைந்த உலகில் சிறுவர்களின் உலகம் வடிவமைக்கப்படும் விதம், அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைக் கூறுவனவே சிறுவர் பற்றிய இலக்கியங்கள்.

ஈழத்துச் சிறுகதைகளில் சிறுவர்கள்

சிறுவர்பற்றிய இலக்கியங்கள் என்ற வகைமையினுள் சிறுவர் பற்றிய சிறுகதைகள் உள்ளடக்கப்படலாம். தழிழில் சிறுகதைகள்சிறுவர்கள்பற்றிஎவற்றைக் கூறுகின்றன? அவை சிறுவர்களை எவ்வாறு பிரதிபலிக்கின்றன? என்பவை உண்மையில்சிறுவர்களுக்கானமகிழ்ச்சிகரமானதும், சுதந்திரமானதுமான வாழ்வுக்கான சூழலைத் தராத சமூகம் பற்றிய விமர்சனமாகவே அமைந்துவிடுகின்றது. சிறுவர் பற்றிய சிறுகதை இலக்கியங்களில்பொதுவாகப்பின்வரும்மூன்று விடயங்கள் பிரதிபலிக்கப்படுகின்றன. அவையாவன:

1. சிறுவர்களின் மீது அவர்களது குடும்பங்களின் மேலாண்மையால் எழும் சிக்கல்கள்.
2. சிறுவர்களின் மீது அவர்களது கல்விச் செயன்முறையும் கல்விக்கான ஏற்பாடுகளும் உண்டாக்கும் அழுத்தங்களால்எழும்சிக்கல்கள்.
3. சிறுவர்கள் மீது சமூகத்தில் நிலவிவரும்மேலாண்மைகளால்திணிக்கப்படும்சுமைகளால்எழும் சிக்கல்கள்.

மேற்கண்டசிக்கல்கள் சிறுவர்கள் தொடர்பான சமூக நீதியை சவாலுக்கு உள்ளாக்குகின்றன. இந்தச் சவால்கள் குறித்த சமூகவியல் கண்ணோட்டமும் கலைத்துவ நோக்கும் கொண்ட சிறுகதைகள் பல தொகுதிகளாகவும் உதிரிகளாகவும் ஈழத்தில் படைக்கப்பட்டுள்ளன.

எடுத்துக்காட்டாகச் சில சிறுகதைகள்

ஈழத்துத் தமிழ்ப் புனைகதைகளில் குறிப்பாகச்சிறுகதைகள்பலசிறுவர்களின்பிரச்சினைகளைப் பேசும் சிறுவர் பற்றிய இலக்கியங்களாக இனங்காணப்படுகின்றன. இவை சிறுவர்களின் பிரச்சினைகளை, பொதுவாகக் குடும்பச்சூழல் மற்றும் கல்விச் சூழலைப் பகைப்புலமாகக் கொண்டும், சிறப்பாகப் போரையும் அதன் விளைவுகளையும் பகைப்புலமாக்கொண்டும்வெளிப்படுத்திநிற்கின்றன. இப்பிரச்சினைகளை முன்வைக்கும் சிறுகதைகள் உதிரிகளாகவும் தொகுப்புக்களாகவும் வெளிவந்துள்ளன. ஒரு சில படைப்பாளிகள் இது குறித்து அதிக சமூக மற்றும் படைப்பூக்க அக்கறை கொண்டுள்ளனர்.

க.சட்டநாதனின் சிறுகதைகளில் 'ஒரு அவிழ்கூட..'(2004), 'பொழிவு' (2012), 'சிறுசுகள்'(2013) முதலியனவும், த.கலாமணியின் 'பலூன்'(1993) என்ற கதையும், கே.ஆர்.டேவிட்டின் சிறுகதைகளில் 'வயிறு நிறையச் சோறு சாப்பிடுவம்'(1973), 'குறிசுடப்பட்டவர்கள்'(1978) போன்றவையும், கோகிலா மகேந்திரன் தொகுத்த 'மனதைக் கழுவும் மகா சமர்த்தர்கள்' எனும் தொகுதியில் வரும் கதைகளும், நெடுந்தீவு மகேஷின் 'தாரணி ஓர் ஆச்சரியக்குறி' என்ற சிறுகதைத் தொகுதியின் பெரும்பாலான கதைகளும், என்.சண்முகலிங்கனின் 'ஊழித்தாண்டவம்'(2004) எனும் சிறுகதைத் தொகுதியில் உள்ளடங்கும் 'புறமல்ல அகம்', 'ஊழித்தாண்டவம்'இ 'அப்பா வருவாரா?' முதலிய கதைகளும் புலம்பெயர் எழுத்தாளரான நிரூபாவின் '...சுணைக்கீது' (2005) என்ற தொகுப்பின் சகல கதைகளும்,

இ. இராஜேஸ்கண்ணனின் 'இரகசிய மாய்க் கொல்லும் இருள்' (2015) எனும் சிறுகதைத் தொகுதியிலுள்ள அனைத்துச் சிறுகதைகளும் எடுத்துக்காட்டுக்களாகக்(பட்டியல் பூரணமானதல்ல) கவனிக்கத்தக்கவை. இவை பற்றிய ஆழமானதும் அகலமானதுமான தேடல் நாம் வாழும் சமூகத்தில் சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குக் காரணமான சமூக அசமத்துவத்தை வெளிப்படுத்தும்.

சிறுவர்களுக்கு வேண்டிய சமநீதிக்கான குடும்பச் சூழல், கல்விச் சூழல் மற்றும் சமூகச் சூழலிலான சவால்கள் குறித்து சிறுகதைகளில் வெளிப்படுத்தப்படும் கருத்துக்களைச் சில சிறுகதைகளை முன்வைத்து எடுத்துக்காட்டுக்களாக நோக்க முடியும். ஆயினும், அது விரிவான தேடலை வேண்டி நிற்பது. இங்குசில சிறுகதைகள்மாத்திரம் எடுத்துக்காட்டப்படுகின்றன.

க.சட்டநாதனின் கதைகளில் சிறுவர்கள்...

சட்டநாதனின் சிறுகதைத் தொகுதிகளில் வெளிப்படும் பொதுப் பண்புகளில் ஒன்று சிறுவர்களின் அகவுலகம் மற்றும் புறவுலகம் பற்றிய பதிவாகும். பெரியவர்களின் வாழ்வு பற்றிய பதிவுகளான சிறுகதைகளில்கூட சிறுவர்களின் உலகம் பதிவாக்கப்பட்டுள்ளது. அவரது சிறுகதைகளில் 'ஒரு அவிழ்கூட' என்பதில் சிறுவர்கள் மத்தியில் சமூகத்தின் மேலாண்மை எவ்வாறு கவிந்துள்ளது என்பது புலப்படுத்தப்படுகின்றது.

பாடசாலை வகுப்பறை ஒன்றில் ஏழை மாணவி ஒருத்தி பசியின் கொடுமையால் இன்னொரு மாணவியின் உணவை யாருக்கும் தெரியாது எடுத்து உண்டதற்காக ஆசிரியர் ஒருவர் அவளுக்கு வழங்கும் கொடூரமான தண்டனையால் உளப்பாதிப்படைந்த அந்த மாணவி தனது உயிரை மாய்த்துக்கொள்ளத் துணிந்தமை கூறப்படுகின்றது. ஆசிரியர் ஒருவர் தன் அதிகாரத்தில் எல்லைமீறி 'நான் கள்ளச் சாப்பாடு தின்னுற பட்டினிப்பட்டாளமாம், எனக்குப் பகாசுரப் பசியாம். அண்டா அண்டாவாகச் சாப்பிடுவனாம். சாப்பிட எனக்குக் கொட்டிக் கொடுக்க வேணுமாம்.'(புதியவர்கள், 2006) என்று கடதாசி அட்டையில் எழுதி கழுத்திலே தொங்கவிட்டு பாடசாலை வகுப்பறைகள் காணும்படி வலம் வரச்சொல்லி ஆசிரியர் அனுப்பி வைக்கின்றார். பிள்ளை யொன்றை உடல் மற்றும் உளரீதியாகத் தண்டித்தல் அவர்களுக்கு இழைக்கப்படும் அநீதியே.

கே.ஆர்.டேவிட்டின் கதைகளில் சிறுவர்கள்...

ஜீவநதி வெளியீடாக வந்த கே. ஆர். டேவிட்டின் 'நீரில் கிழித்த கோடுகள்' (2015) எனும் சிறுகதைத் தொகுப்பில் வந்துள்ள கதைகளில் 'குறிசுடப்பட்டவர்கள்' எனும் சிறுகதையில் வீட்டுப் பணிகளில் அமர்த்தப்பட்ட சிறுபிள்ளைகளின் (பிள்ளைக் கூலிகள்) மீதான எசமானர்களின் வன்முறைகள் வெளிப்படுத்தப்படுகின்றன.

சிறுபிள்ளைகள் சேர்ந்து விளையாடும் போது குறிசுடுதலை விளையாட்டாக்கி விளையாடுகின்றனர். அந்த விளையாட்டில்கூட குறிசுடப்படுபவளாக 'வேலைக்காரப் பிள்ளையான' குஞ்சுப்பிள்ளை தெரிவுசெய்யப்படுகிறாள். உண்மையிலேயே வீட்டு எஜமானர்களால் கம்பி காய்ச்சி குறிசுடப்பட்ட அந்தக் குஞ்சுப் பிள்ளை குறிசுடுதல் தொடர்பாக ஏற்பட்ட மனவடுவின் தாக்கத்தால் விளை யாட்டுக்காகவேனும் குறிசுடப்படலுக்கு உட்படுவதை மறுதலிக்கின்றாள். தனது பெற்றோரிடம் செல்லவேண்டுமென அழுகிறாள். நிர்ப்பந்தமாகக் குஞ்சுப்பிள்ளையை இழுத்துவைத்துவிளையாட்டில் குறிசுடப்பட்ட தருணத்தில் 'குஞ்சுப்பிள்ளையின் குண்டித்தசை மேட்டில் அடித்துக் கிளப்பிய மரப்பட்டைபோல் இன்னமும் சரிவர மாறாத மூன்று புண்கள், நீளமான



வைகள் கம்பியால் சுடப்பட்டவைகள் தான் அவை! நிஜமாகவே குஞ்சுப்பிள்ளை குறி சுடப்பட்டிருக்கிறாள்' என்று கூறி உண்மையில் அந்தச் சிறுபிள்ளை வீட்டு 'எஜமானர்களால்' குறிசுடப்பட்டிருந்தமை காட்டப்படுகின்றது. இங்கு விளிம்பு நிலைப்படுத்தப்பட்ட சமுதாயம் ஒன்றிலிருந்து பிள்ளைக்கூலியாக வரும் சிறுபிள்ளை மீதான வன்முறை கூறப்பட்டுள்ளதுடன் சமூகத்தில் ஒரு சாரார் மீது இன்னொரு சாரார் செலுத்தும் அதிகாரத்தைச் சிறுபிள்ளைகளின் வழியாகவும் அவர்களின் விளையாட்டுக்கள் வாயிலாகவும் எப்படிச் சந்ததிகளிடையே பெரியவர்களின் உலகம் கடத்துகின்றது என்பதும் வெளிக்காட்டப்படுகின்றது. அவ்வாறே வறுமையின் பிடியில் சிக்கியுள்ள பிள்ளைகளின் அவாக்களைக் கூறும்வகையில் டேவிட்டின் இதே சிறுகதைத் தொகுதியில் 'வயிறு நிறையச் சாப்பிடுவம்' எனும் சிறுகதையும் உள்ளடங்கியுள்ளது. அது பிள்ளைகளின் மீதான குடும்பச் சூழலின் தாக்கத்தையும் மத்தியதர வர்க்கத்தினரின் கனவுகளையும் மாறிமாறிக் கூறுவதன் மூலம் பிள்ளைகளிடத்தில் குடும்ப வறுமை ஏற்படுத்தும் ஏக்கத்தை வெளிப்படுத்துகின்றது.

யோகேஸ்வரி சிவப்பிரகாசத்தின் கதைகளில் சிறுவர்கள்...

யோகேஸ்வரி சிவப்பிரகாசத்தின் சிறுகதைகளில் 'எண்டாலும் எனக்குப் பயம்' (ஜீவநதி ஆவணி 2011) என்பது போரின் பின்னான சிறுவர்களைப் பீடித்துள்ள உளத்தாக்கம் ஒன்றை இனங்கண்டு சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளது. இராணுவம், படையினரின் சீருடை தொடர்பாக சிறுவர்களது உளங்களில் ஏற்பட்டுள்ள பதிவுகள் எவ்வாறு மனவடுக்களாக நிலைக்கின்றன என்பதை ஒரு பாடசாலையின் பரிசில் நிகழ்வுக்கு விருந்தினராகச் சீருடையில் வந்த அதிகாரி ஒருவரின் வருகையை ஏற்றுக்கொள்ள முடியாத சிறுவன் ஒருவனது உளநிலை வெளிப்பாட்டின் மூலமாகக் காட்டுகின்றது. சீருடை இல்லாத இராணுவத்தினரைக் காணும் தருணத்தில் பேசிப் பழகத் தயாராக இருக்கும் சிறுவன் ஒருவன், இராணுவத்தைச் சீருடையில் காணும் போது பதற்றத்துக்குள்ளாவதைச் சீருடை தொடர்பான பயஉணர்வாக வெளிப்படுத்துகின்றார். 'அவை இப்படியில்லை காக்கிச்சட்டை போட்டிருப்பினம் எனக்கு அதைக் கண்டாலே பிடிக்காது' என்று கூறும் சிறுவனின் பதற்றத்தை 'இந்த ஏரியாப் பொறுப்பான ஆமிப் பெரியவருக்குப் பூக்கொத்துக் கொடுக்கச் சொல்லி இவனிட்டை ரீச்சர் சொன்னவா. இவன் பயமெண்டு வெருளுறான்' என்று வெளிப்படுத்துகின்றார். இது போர்க்காலத்து வடுக்கள் பிள்ளைகளிடத்தில் உளச் சமநிலையைப் பாதிக்கும் வகையைக் காட்டுகின்ற ஒரு பதிவாகின்றது.

த.கலாமணியின் கதைகளில் சிறுவர்கள்...

த.கலாமணியின் சிறுகதைத் தொகுதியான 'நாள்கள், கணங்கள், நமது வாழ்க்கை' (2000) என்பதிலுள்ள கதைகளில் 'பலூன்' என்றசிறுகதைமுன்பள்ளி ஒன்றில் நடைபெற்ற பிள்ளைகளுக்கான விளையாட்டு நிகழ்வில் அந்த ஊரின் சமுதாய மட்ட நிறுவன நிர்வாகத்தினரின் அறியாமை, கௌரவம், அந்தஸ்து என்பவற்றால் பலவீனமான பிள்ளை என்று கருதப்படும் பிள்ளை ஒன்று எத்தகைய உளத்தாக்கத்துக்கு உள்ளாகின்றது என்பதை கடுமையான சமூகம் பற்றிய விமர்சனத்துடன் வெளிப்படுத்துகின்றது. சமுதாயமட்ட நிறுவனத்தை மாத்திரமன்றி பெற்றாரின் தடம் மாறிய போக்கையும் விமர்சனம் செய்கிறது. 'பிள்ளைகளுக்குப் போட்டி முக்கியமல்ல, அவர்களுடைய பங்குபற்றல் தான் முக்கியம் என்று எடுத்துச் சொல்லி பெற்றோர்கள் எல்லோரையும் முன்னெச்சரிக்கை செய்து, இந்தப் பாலர் விளையாட்டு விழாவை ஒரு போட்டியாக மாற்றவிடாமல் நான் எடுத்துக் கொண்ட முன் எத்தனங்களையும் மீறி, இந்தப் பெற்றோர்கள் இப்படிக் குழப்பம் விளைவிக்கிறார்களே யென்றால், இவற்றுக்கு எல்லாம் சூத்திரதாரிகள் இந்த நிர்வாகிகள்தான்.... இவர்களுக்கு அழகுணர்ச்சியே இல்லையா?' என்று சமுதாயத்தின் போலிகளுக்குள் உருவழிந்து போகும் பிள்ளைகளின் நிலையைச் சமூக விமர்சனங்களுடன் பதிவாக்குகின்றார்.

என்.சண்முகலிங்கனின் கதைகளில் சிறுவர்கள்...

என்.சண்முகலிங்கனின் 'ஊழித்தாண்டவம்' (2004) எனும் சிறுகதைத் தொகுதியில் உள்ள ;ஊழித்தாண்டவம்' எனும் கதையில் வறுமையில் வாழும் தாயின் பிள்ளை ஒருத்தியின் நடனம் மீதான அவாவை ஒரு சரிகை வேட்டிப் பிரமுகர் கிள்ளியெறிந்த சம்பவம் விவரிக்கப்படுகின்றது. சிறுபிள்ளைக்கேயுரிய பக்குவத்துடனும் நடனம் மீதான ஆர்வத்துடனும் விருந்தினர் அமர்வதற்கென ஒதுக்கப்பட்ட பகுதியில் அமர்ந்து பார்த்துக்கொண்டிருந்த பிள்ளையை 'இன்ரேவல் வெளிச்சத்திலை தானே பாத்தன். எழும்படி வந்து இருக்கிற இடம்.....' என்று கூறி வெளியேற்றிவிடும் 'பெரியமனிசத்தனம்' பற்றி இந்தக் கதை கூறுகின்றது. வறுமையின் கொடுமையைக் காட்டிலும் வறிய பிள்ளை என்பதால் சமூகத்தில் புறக்கணிக்கப்படும் கொடுமை சிறுவர்களைப் பொறுத்தவரை மிகக்கனமானது என்பது வெளிப்படுத்தப்படுகின்றது.

சிறுவர்களுக்கான சமூகநீதி பற்றிய தனித்துவமான அக்கறையுடன் வெளிவந்த சிறுகதைத் தொகுப்புக்கள் சில குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவை. சிறுவர்கள் மீதான வன்முறைகள், சிறுவர்களிடையேயான பாரபட்சப்படுத்தல்கள், சிறுவர்கள் மீதான தண்டனைகள், சிறுவர்களைத்தவறாகக்கையாளுதல், பிள்ளைகளின் சமூகமயப்படுத்தலிலான பிரச்சினைகள், பெற்றாரியம் தொடர்பான பிரச்சினைகள் முதலிய பல்வேறு கருப்பொருள்களை இத்தகைய தொகுப்புக்களிலுள்ள சிறுகதைகள் வெளிப்படுத்தின.

நெடுந்தீவு மகேஷ் மற்றும் நிரூபாவின் சிறுகதைகளில்...

நெடுந்தீவு மகேஷின் 'தாரணி ஓர் ஆச்சரியக்குறி!' (2012) எனும் தொகுதியில் உள்ளடங்கியுள்ள அனைத்துக் கதைகளும் ஆசிரியர்கள் பற்றிய கதைகளாகவும் அவர்களின் வழியான கல்விச் செயற்பாடுகளின் ஆரோக்கியத்துக்கான வழிகாட்டல்களாகவும் அமைந்துள்ளன. ஆயினும், கல்வி ஏற்பாடுகளில் மாணவர்களான பிள்ளைகள் கற்றலில் எதிர்கொள்ளும் சவால்களை அதிகம் பேசுகின்றார். சிறுகதை என்ற இலக்கிய வடிவத்தை உபயோகித்து கல்வியின் உண்மையான இலக்குகளையும் மாணவர்களான சிறுவர்களுக்கான நீதியான கல்வியுலக வாழ்வுக்குமான போதனைகளையும் மகேஷ் செய்கின்றார்.

நிரூபா புலம்பெயர்ந்த ஈழத்துப் படைப்பாளி. இவரின் படைப்புக்கள் உளவியல் மற்றும் பண்பாட்டுப் பின்புலத்தில் சிறுவர்களின் சமூகமயமாக்கல், பண்பாட்டுமயமாக்கல் என்பவற்றைப் பல்வேறு விமர்சன நோக்குடன் வெளிப்படுத்துகின்றன. குறிப்பாகப் பால்நிலைப் பாரபட்சத்துடன் இயங்குகின்ற சமூகவெளியில் பெண்பிள்ளைகள் எவ்வாறு பண்பாட்டுமயமாக்கப்படுகின்றனர் என்பதை இவரது 'சுணைக்கிது' என்ற சிறுகதைத் தொகுப்பில் காணலாம். பெரியவர்கள் பிள்ளைகளைத் தாங்கள் விரும்பும் வடிவத்தில் வளர வேண்டும் என எதிர்பார்ப்பதை விமர்சனம் செய்கின்றார். பெரியவர்களிடத்திலிருந்துதவறானமாதிரிகளைப்பிள்ளைகள் பெற்றுக்கொள்ளும் விதத்தை நுணுக்கமாகக் காட்டுகின்றார். பால் ரீதியாகப் பெண்பிள்ளைகள் மீது பெரியவர்கள் செய்யும் வன்முறைகள் வெளிக்காட்டப்படுகின்றன. அந்தச் சிறுகதைத் தொகுப்பில் உள்ள 'காதல்' என்ற சிறுகதையில் எப்போதுமே பெரியவர்கள் செய்யும் தவறுகளிலொன்றான பிள்ளைகளுக்கிடையிலானஒப்பீடுபற்றியவிமர்சனம்குறிப்பிடத்தக்கது. இதை' நீ படிக்கப் போறனீயோ அல்லது ஸ்ரைல் காட்டப் போறனியோ? படிக்கிற பிள்ளைக்குக் கால் சங்கிலியும் தேவையில்லை ஸ்ரைலான செருப்பும் தேவையில்லை. கமலான்ரை பெட்டையைப்பார். ஒரே ஒரு சோடிச் செருப்பைத்தான் எவ்வளவு நாளா வைச்சுப் பாவிக்குது. நீங்கள் ஊதாரியள். பொருட்களிலை கவனமில்லை' என்று கூறுகின்றார். இவ்வாறு சிறுவர்களுக்கான அநீதி நடைபெறும் சந்தர்ப்பங்கள் பலவற்றை விமர்சன நோக்குடன் பதிவாக்குகின்றார் நிரூபா.

இராஜேஸ்கண்ணனின் சிறுகதைகளில்...

இராஜேஸ்கண்ணனின் சிறுகதைகள் பலவற்றில் பல்வேறு விதமான சமூக மேலாண்மைகளால் சிறுவர்களுக்குக் குடும்பம், பாடசாலை(கல்வி), சமூகச் சூழலில் இழைக்கப்படும் அநீதிகள் பதிவாகியுள்ளன. 'இரகசியமாய்கொல்லும்இருள்' என்ற சிறுகதைத் தொகுப்பிலுள்ள சிறுகதைகள் சிறுவர்கள் மீதான போரின் தாக்கங்கள், பாடசாலையில் சிறுவர்கள் பாரபட்சப்படுத்தல், சிறுவர் மீதான போட்டித் தேர்வுகளின் வழியான வன்முறைகள், சிறுவர்களின்கனவுகளும்நிராசைகளும் போன்ற பல்வேறு விடயங்களைக் கருப்பொருள்களாகக் கொண்டவை. எடுத்துக்காட்டுகளாக மேலே குறிப்பிடப்பட்ட சிறுகதைகளில் சிறுவர்களுக்கான சமூக நீதிக்கான சவால்கள் பல வெளிக்கொணரப்படுகின்றன.

ஈழச் சமூகத்தில் ஆழமாக வேரூன்றிப்போய்விட்ட சாதி அடுக்கமைப்பின்

பிரதிபலிப்புகள், சமூக மாற்றத்தின் வழிமுனைப்புப் பெற்றிருக்கும் வர்க்க வேறுபாட்டின் தாக்கங்கள், இனமுரண்பாட்டின் கோரவிளைவுகள், பாலியல் மற்றும் பண்பாட்டின் அடிப்படையிலான சுரண்டல்கள்,

வறுமையின் தாக்கங்கள், கல்விமுறையின் முரண்பாடுகள் மற்றும் ஜனநாயக விரோதப் போக்குகள் முதலியன சிறுவர்களின்மீதானநீதியற்றஅழுத்தங்களுக்கு எவ்வாறு காரணிகளாயின என்பதை இந்தச் சிறுகதைகள் சமூக நோக்குடன் வெளிப்படுத்துகின்றன. இத்தகையநோக்கிலான பல படைப்புக்கள் ஈழத்துச் சிறுகதைகளில்மேலும்

தேடப்பட்டு, முழுமையான ஆய்வுக்கு உட்படுத்தப்படும்போது சிறுவர்கள் பற்றிய இலக்கியங்களின் போக்குக் குறித்த தெளிவான புரிதல் ஏற்படும்.

அனைவரையும் பேறாக்கும் அஞ்சறைப் பெட்டி

இயற்கை எமக்களித்த பேருபகாரமே இந்த உலகு. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய ஐம்பூதங்களின் வடிவமே மனித உடலாகும். எனவே தான் நாம் இயற்கையோடு வாழக் கடமைப்பட்டிருக்கின்றோம். இயற்கையை மீறி நாம்மால் எதையுமே வெல்ல முடிவதில்லை. ஆதலால் நாமனைவரும் இனிதே வாழ இயற்கை இன்றியமையாதது.

இயற்கையின் விந்தையாகவே இந்த மனித உடலும் இருப்பதால் இயற்கையில் விளையும்தாவர, மூலிகைப்பயிர்கள் அதற்குஉட்டமாகவும், உண(ர்)வாகவும், உயிராகவும் விளங்குகின்றன. நெல், வரகு, சாமை, குரக்கன், பயறு, உழுந்து சோளம், கோதுமை ஆகிய உணவுப் பதார்த்தங்கள் உடலிலே பயனுள்ள வகையில் செரிமானம் அடையவும், உடலியங்கவும் உபதானியங்கள் பல அதற்குக் கைகொடுக்கின்றன. அவற்றுள் முக்கியமானவை,

வெந்தயம், மிளகு, சீரகம், சோம்பு (பெருஞ்சீரகம்) கடுகு, உள்ளி, வெங்காயம், மஞ்சள், கறுவா, ஏலம், கறிவேப்பிலை, இஞ்சி என்பனவாகும். இவற்றைவிடக் காய்கறிகளும், கீரை வகைகளும் உடலுக்கு நீடித்த வாழ்வையும், ஆராக்கியத்தையும் சாதிக்கும் திறனையும் அள்ளித் தருவனவாய் மிளிர்கின்றன. இவை அனைத்தையும் உள்வாங்கி மனித வாழ்வை மேம்படுத்தக் கூடிய வல்லமை ஐந்து உபகாரிகைகளுக்கே உண்டு. அந்த ஐந்துமே உணவை இரம்மியமாக்குகின்றன. இவற்றையே அடுக்களை (குசினி), பாதுகாத்துச் சேமித்துவைக்கின்ற பழக்கம் உண்டாயிற்று. அந்த ஐந்தையும் சேர்த்து வைப்பதால் அந்தப் பெட்டகம் அஞ்சறைப் பெட்டி என்றாயிற்று.

அஞ்சறைப் பெட்டி

அஞ்சறைப் பெட்டியில்லாத
அடுக்களை ஏது?
அதற்குள் பொதிந்திருக்கும்
அற்புதமோ ஐந்து,
நெஞ்சமதில் இடம்பிடித்த
நைய் வேத்தியமே யுகந்த
நறுஞ்சீரகம்
கடுகு மிளகு சோம்பு
நண்ணிய
வெந்தயமாகும்.

அஞ்சறைப் பெட்டிக்குள் அடக்கப்படும் அற்புதமான உப காரிகைகளாக மிளகு, கடுகு, சோம்பு, சீரகம், வெந்தயம் போன்றவை விளங்குகின்றன. இவை மணம், குணம் நிறைந்தவை. தெய்வீக சக்தி கொண்டவை. உடலைத் தேற்ற வல்லவை. உணவுக்குச் சுவை பயப்பவை. உறுதிக்கு வலுச் சேர்ப்பவை.

வயிற்றுக் கோளாறுகளுக்கு விடிவு தருபவை. முரண்பாடுகளைச் சமநிலைப்படுத்துபவை. மூட்டுக் கட்டுகளைக் கட்டிப் போடுபவை. சகலசத்துக்களும்நிரம்பிய இந்தஉபகாரிகைப் பெட்டி இல்லாத வீடே பழங்காலத்தில் இல்லையென்றுசொல்லலாம். இன்று அஞ்சறைப் பெட்டிகள் பல வடிவங்களில் பிரமிக்க வைக்கின்றன. சில்வரில், தகரத்தில், கண்ணாடிஅல்லதுபீங்கானில் என்று அவை அமைந்து விட்டன. பனையோலையால் இழைக்கப்பட்ட அஞ்சறைப் பெட்டி, தாம்பர அஞ்சறைப்பெட்டி, மாமரப் பலகைகளால் ஆன அஞ்சறைப் பெட்டி, மண் சட்டிகளால் ஆன அஞ்சறைப்பெட்டி என்றுதான் இவற்றின் ஆரம்பங்கள் இருந்தன. இன்று பல வகையில் அஞ்சறைப் பெட்டிகள் பயன்பாட்டில் இருக்கின்றன. எது எப்படி இருந்தாலும், மனித மான்மியத்துக்கும், மானிட ஆன்ம ஈடேற்றத்துக்கும் ஆவன புரிவன மிளகு, கடுகு, சோம்பு, சீரகம், வெந்தயம் என்று இந்த அஞ்சறைப்பெட்டிக்குள் இருந்து பயன்தரும் ஐந்துமே.

மிளகு

பத்து மிளகிருந்தால் பகைவரையும் வெல்லலாம், பழகும் நண்பரையும் மிளகால் பேறாக்கலாம். சித்த மிரங்கிடச் சேருங்கள் உணவோடு. சேமியாக்குணம் பறந்தோடும் செரிமானமாகும். கொட்டும் மழையென்றால் குளிரும் விட்டோடும். குலவும் இல்லற வாழ்வில் மிளகே அருமருந்தாகும். இப்படியான மகத்துவங்களையுடைய மிளகுதான் அஞ்சறைப் பெட்டியில் ராஜா.

மிளகு ஒரு செடியில் வளர்ந்து, படர்ந்து, உயர்ந்து, நிறைந்து, காய்க்கும் தன்மையுடையது. நிலவளம் மிக்க மலைப் பிரதேசங்களில் பயிராகும் இது விலை மிக்கது. குழந்தைகள் முதியவர்கள் வரை அனைவரும் தாம் உண்ணும் உணவுகளில் மிளகுப் பொடியை அளவாகக் கலந்து உண்பார்களாக இருந்தால், எந்த நோயும் வந்தணுகாது. உடலைச் சொந்தம் கொண்டாடாது. நீடித்த ஆயுள் கெட்டியாகப் பிடித்துக்கொள்ளும். ஜீரணம், பூரணமாகும். முக்கிய விழாக்கள் யாவற்றிலும் பரிமாறப்படுகின்ற உணவுப்பண்டங்களில் மிளகின் ஆட்சி அளப்பரியதாகவிருக்கும். சுளகிலேஓடிவிளையாடும் மிளகானது உணவிலும் தனது முக்கியத்துவத்தை வெல்ல வைக்கிறது. மிளகு ரசம், மிளகு சாதம், மிளகுத் தண்ணீர், மிளகு வதக்கல், மிளகுப்பால், மிளகுப் பொடி என மிளகே அடுக்களையில் ஜீவனாக வல்லமை புரிகிறது. மிளகு சேர்த்த குடிநீர், தடிமன், காய்ச்சல், அலுப்பு, தலையிடி எவற்றுக்கும் சிறந்த நிவாரணமாகும்.

கடுகு

கடுகு சிறிதென்றாலும் காரம் பெரிது. தாச்சியில் எண்ணெய் விட்டுச் சூடாக்கிக் கொதிக்கும் எண்ணெயில் கடுகைகப் போட்டால் கடுகு சிரித்துத் துள்ளி எழுந்து கதை சொல்லுமாம்! எப்படித் தெரியுமா?

''நான் எல்லோரிலும் சிறியவன்தான். ஆனால், நானில்லாமல் உங்களால் பேறாக முடியாது. நான் சின்னவன் என்றால்போல, என்னை யாருமே ஒதுக்கிவைத்துவிட முடியாது. ஏனென்றால் நான் ஆற்றும் பணியை மற்றவர்களால் செய்ய முடியாது'' என்று. கடுகைப் போல் மனிதன் வாழ வேண்டும். எப்படிக் கடுகு ஆனது மணம், குணம், காரம், சுவை எனக் கறிகள், வறைகள், பலகாரப் பண்டங்களுக்குப்புதுப்பொழிவையும், சுவையையும் கொடுக்கின்றதோ அவ்வாறு மனித வாழ்வும் சிறந்தோங்கும். அஞ்சறைப் பெட்டியில் யாருக்கும் இல்லாத அதிகாரம் கடுகுக்கு உண்டு. அது எதுவெனில் அகங்காரம். (அகம்xகாரம்)

சோம்பு

சோம்பலைப்போக்கும்ஓர்உபகாரிகையே சோம்பு ஆகும். சைவ அசைவப் பண்டங்களில்மெய்யாகவேமனங்கொள்ளவைக்கும். காதல் சுவை கொண்டது. அழகானது. தொட்டவுடன் தன்பாட்டில் உடல் பறிக்கும் தன்மையது. கடித்தால் சோம்பு சுவைக்கும். தீங்கானவற்றைத் தீண்டியழிக்கும் தகைமை கொண்டது. தீராத ஆசையில் திளைக்க வைப்பது. மிளகும், கடுகும் இதன் பால் மோகம் கொண்டு சோம்போடு கலந்து உறவாட ஆசைப்படுவதால் அஞ்சறைப் பெட்டியில் இது ஓர் அழகியாகவே மிளர்கிறது. எந்தவித காரத்தையும், அதிகாரத்தையும் ஆட்சியையும் அடிபணிய வைக்கிறது சோம்பு.

சோம்பு இல்லாத சமையலுமுண்டோ
காம்பில்லாத மிளகாயுமுண்டோ
வேம்பில்லாத வளவுமுண்டோ
கூம்பில்லாத இயற்கையுமுண்டோ?

மகத்துவங்கள் பல நிறைந்த சோம்பு உணவில் சேர்ந்திருப்பது சுபீட்சத்தை வாரி வழங்கும். என்பதால் சோம்பு ஒரு சிரஞ்சீவி. அல்லாமலும் ஒரு சஞ்சீவி. இதன் பேறாகவே சோம்பினைப் பெருஞ்சீரகம் என்றும் அழைக்கின்றார்கள். அஞ்சறைப் பெட்டியில்நடுநாயகமாகவிளங்குவதும்சோம்பேயாகும்.

சீரகம்

"சீரில்லாத ஊரும் இல்லை - நற்
சீரகம் இல்லாத வாழ்வும் இல்லை"

அடுக்களையின் அற்புதத்துக்கும், அஞ்சறைப் பெட்டியின் பேறினுக்கும் மூலமாயிருப்பது நற்சீரகமே. மனிதனின் அகத்தைச் சீராக்கி, மானிட சாம்ராஜ்ஜியத்தில் தலைவியாகவும், தக்க பெறுமதியாகவும் இருப்பது சீரகமே. அஞ்சறைப் பெட்டியை நாம் திறக்கும்போது இதன் வாசனையே முன்வந்து மூக்கை முதலில் நிறைக்கின்றது. மனிதம் பேறடைகிறது. மனித வாழ்வுக்கு உளவியல் என்பது எவ்வாறு சிறப்பான ஒப்புரவுத் தன்மையைக்கொடுக்கிறதோ, அதேபோலஉளவியல் என்ற ஓர் அலகு வருவதற்கு முன்னரே, சீரகமானதுஎந்தவிதஆரவாரமில்லாமல் மனித வாழ்வை செம்மைப்படுத்தியும், சீர்படுத்தியும், சுபீட்ச மாக்கியும் வந்துள்ளது. சீரகம் செய்யும் பணிக்கு ஒரு நோபல் பரிசும், கலாநிதிப் பட்டமும் வழங்க முடியுமல்லவா? சரி! அடுக்களையில் லாவிட்டால் மனித வாழ்வுகளை கட்டுமா? அடுக்களைக்கு யார் சொந்தக்காரர்? பெண்கள் தானே! பெண்களில்லாவிட்டால் பசி தீருமா? சீரகத்தைப் பெண்களுக்கு ஒப்பிடுவதன் நோக்கம் இதனால்தானோ என்னவோ?

வெந்தயம்

அஞ்சறைப் பெட்டியில், நிறைவான பூரண சக்தியளிப்பது வெந்தயமே. முந்தையோர் எமக்களித்த சீதனங்களில் இதுவுமொன்று. வெந்தயமும், வெங்காயமும் உள்ளியும் ஒன்று சேர்ந்து தாளித்துக் கறியாகும்போது அஞ்சறைப்பெட்டியும், அடுக்களையும் ஒரு தடவை தத்தம் கதவைத் திறந்து பார்த்துச் சாத்திக்கொள்ளும். ஆம்! வெந்தயக்கறிக்கு நிகராக எந்தக் கறியும் முதலிடம் பிடிக்க முடியவே முடியாது. நாளும் வெந்தயப் பாவனையில் இருக்கும் குடும்பங்கள் நோயால் வருந்துவது அரிதே. குருதி அழுத்தம் கொழுப்பு நீரிழிவு, குடற்புண், தேகச்சூடு, உடல் மெலிவு ஆகியவற்றுக்கு நல்ல பரிகாரம் வெந்தயம். அதனாலேயே இது அஞ்சறைப் பெட்டியின் தங்கம் எனப் போற்றவும்படுகிறது.



அஞ்சறைப் பெட்டிக்குள் அடக்கப்படும் அற்புதமான உப காரிகைகளான மிளகு, கடுகு, சோம்பு, சீரகம், வெந்தயம் போன்றவை விளங்கு கின்றன. இவைமணம், குணம் நிறைந்தவை. தெய்வீக சக்தி கொண்டவை. உடலைத் தேற்ற வல்லவை. உணவுக்குச் சுவை பயப்பவை. உறுதிக்கு வலுச் சேர்ப்பவை.

கட்டுரை



கே.எஸ்.சிவஞானராஜா

ஓய்வு பெற்ற ஆசிரியர். இலக்கியம், கலை தொடர்பான கட்டுரைகளையும் கவிதைகளையும் பத்திரிகைகளில் எழுதி வருகிறார். இசைத்துறையில் ஈடுபாடு கொண்ட இவர், பல இசைக் கச்சேரிகளையும் மேடையெற்றியிருக்கிறார். புலவர் மணி அமரர். வை.க.சிற்றம்பலம் இவருடையதந்தை.

கட்டுரை



கலாநிதி.
கந்தையா ஸ்ரீகணேசன்

இணுவிலைச் சேர்ந்தவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்சிரேஷ்டஆங்கிலமொழிக் கற்பித்தல் விரிவுரையாளர், நாடகர், இலக்கிய விமர்சகர், மொழி பெயர்ப்பாளர். வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் வெளியீடான 'மாருதம்' சஞ்சிகை மற்றும் வவுனியா ஆங்கில மன்ற வெளியீடான 'OASIS' சஞ்சிகைகளின் இணையாசிரியர்.

ஐரோப்பிய நாடுகளில் தமிழ்க்கல்வி

தமிழ்மொழியின் உரிமைக்காகப் போராட வேண்டிய நிர்ப்பந்தம் 1958ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட தனிச்சிங்களச்சட்டத்தால்ஈழத்தமிழர்களுக்குஏற்பட்டது. அகிம்சைப் போராட்டமாக முளைவிட்ட காலத்திலேயே அரச ஒடுக்குமுறைக்குத் தப்பி வெளிநாடுகளில் புகலிடம் தேடவேண்டிய நிலைமை தமிழ் இளைஞர்களுக்கு உருவானது. எழுபதுகளில் தமிழரின் உரிமைக்கான போராட்டம் ஆயுதப்போராட்டமாக மாறியபோதும் இளைஞர்கள் மட்டுமல்லாது வளர்ந்தவர்களும் புலம்பெயரவேண்டும் என்பதைக் காலம் கட்டாயப்படுத்தியது.

அரச வன்முறை தமிழ்மக்களை ஊர்விட்டு, ஊர்மாறி, இடம் பெயரும் அவலநிலைக்குத் தள்ளிவிட வாழ்வு உருக்குலைந்து, சொத்துடைமைகள் அழிவாகி, காணி பூமியை இழந்து பரதேசம்நாடப்புறப்பட்டனர்எம்தமிழ் மக்கள். உயிரைக் கையில் பிடித்தபடி பாதுகாப்புக் கெடுபிடிகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் நாடு விட்டு நாடு மாறி, கண்டம் விட்டுக் கண்டம் மாறி, அகதிகள் அந்தஸ்துக் கோரி, தமது வாழ்வைத் தக்கவைக்க அரும்பாடுபட்டனர்; சொல்லொணாத்துன்பங்களை அனுபவித்தனர். ஒருபுறம்பாதுகாப்பற்றநிலைமை, இளைஞர்கைதுகள், தடுத்துவைப்புக்கள். மறுபுறம் கல்வித்திறமைகள் பாழாகியமை, தொழில் தேடமுடியாமை, அபிவிருத்தி அற்ற கிராமங்கள், நகரங்கள் எனத் தமிழர் தம் வாழ்வு உருக்குலைந்தபோது, தமிழின் இருப்பிடமும் கேள்விக்குறியானது.

சங்கத்தமிழ் பறைசாற்றி நின்ற செழுமையும், சிலப்பதிகாரத் தமிழ் தந்த இனிமையும், திருமுறைகள் பரப்பிய பக்தியும், கம்பராமாயணம் காட்டிய காப்பியச்சுவையும், நாயக்கர்கால இலக்கியங்கள் உருவாக்கிய சிற்றிலக்கிய இன்பமும் நவீன தமிழ் தந்த புதுக்கவிதை, சிறுகதை,நாவல்படைப்புக்களும்தமிழ்வாழ்வைஉயர்த்தி நின்றன.

மேடைகளில் தமிழின் ஏற்றமும், நாளாந்த வாழ்வில் நடைமுறைத் தமிழின் வளர்ச்சியும், புது ஆக்கங்களாகப் படைக்கப்பட்ட நாடகத்தமிழும், புதுமலர்ச்சி கண்டு வந்தவேளை தமிழ் மண்ணில் தமிழர் வாழ்வு கேள்விக்குறியானது. பத்து இலட்சத்துக்கும் அதிகமானோர் பரதேசம் நாடிப் புறப்பட்டனர். பல்வேறு இன்னல்களை அனுபவித்துப் புதிய தேசங்களில்புதுவாழ்வுகாணநித்தமும்நம்மவர் பட்ட வேதனை சொல்லும்தரமன்று. காலநிலை தந்த கொடுமை ஒரு புறமும், தொழில்தேடிஅலையும்வாழ்வுமறுபுறமும் என அலைக்கழிந்த எமது இளந்தலைமுறை அந்தந்த நாடுகளின் மொழிகளைச் சற்றுப் பழகிப்பேசி தமது தரம் தாழ்ந்து தொழில் செய்துதத்தமதுநிலையை உயர்த்தினர், தமக்கென வாழ்வு தேடி, தம்மவரையேபெரும்பாலும்துணைவியராகத்தம் தேசத்திலிருந்து அழைத்து, குடும்பங்கள் ஆகி, புதுவாழ்வுகண்டனர்.

புதிய தலைமுறையின் தோற்றம் அந்தந்தப்புலம்பெயர் தேசங்களில் புதிய பிரச்சினைகளையும் கொண்டுவந்தது. வீடுகளில் கணவனும் மனைவியும் சுந்தரத்தமிழ் பேசி நின்ற வாழ்வு புதிய தளங்களின் கலப்பாகப் புதிய தமிழ் உருவாகக் காலாகியதும் புதிய தேசங்களின் மொழிக்கலப்புத் தவிர்க்கமுடியாதது என ஆகியது. ஆனால் அந்தகோ!

என்செய்வோம்? நாலு வயது வரை அம்மா, அப்பாவுடன் ஆனந்தமாகத் தமிழில் உறவாடிய பிள்ளை குழந்தைப் பராமரிப்பு நிலையங்களிலும், பாலர் கல்விக்கழகங்களிலும் ஆயா முதல் அன்பில் இணைந்த பள்ளித் தோழர் வரை புதுமொழி கற்றுத்தரும் சூழலில் வளர்ந்தனர். எம்தமிழ்ப்பிள்ளைகள்ஐரோப்பாவில்பலமொழிகளைப் பேசத்தலைப்பட்டனர்.

பிரான்ஸில் பிரெஞ்சு மொழியையும், சுவிஸில் டொட்ஜ் மற்றும் பிரெஞ்சு மொழிகளையும் ஜேர்மனியில் டொட்ஜ் மொழியையும் டென்மார்க்கில் டனிஷ் மொழியையும், சுவீடனில் சுவீடிஷ் மொழியையும் நோர்வேயில் நொஸ்க் மொழியையும் ஆங்கில தேசங்களில் ஆங்கில மொழியையும் பேசத்தலைப்பட்டனர். வீடுகளில் தொடர்பாடல் மொழியாகத் தாய், தந்தையின் தாய்மொழி விளங்கும்போது தனயர்களின் பேசும் மொழியாகத்தமிழ்மொழிஅமையும்பாக்கியம்ஒருசில குடும்பங்களுக்கே வாய்ந்துள்ளமை அண்மைய எமது ஐரோப்பியப் பயணத்தின்போது தெற்றெனப் புலனாகியது. சுவிற்சர்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, டென்மார்க், சுவீடன் மற்றும் நோர்வே நாடுகளில் வாழும் எமது தமிழ் குழந்தைகள் தமிழில் சரளமாக உரையாடும் சூழல் இல்லை, தங்களது உணர்வுகளைத் தமிழில் வெளிப்படுத்தும் தேவையும் சூழலும் அவர்களுக்கு இல்லை. தவிர்க்க முடியாதபடி ஐரோப்பாவில் வாழும் தமதுதாய், தந்தையருடன்ஓரளவுதமிழில்பேசவேண்டியிருப்பதால்கொஞ்சம்தமிழ்கொஞ்சிவிளையாடுகிறது. மற்றும்படி இளையோர் சகோதரர் நண்பர்களுக்கிடையில் அவர் அவர் பேசும் முதல் மொழியான ஐரோப்பிய மொழியேதொடர்பாடல்மொழியாகிஉள்ளது.

தமிழ் இரண்டாம் மொழியாக மாறியுள்ளது. தமிழ் இரண்டாம் மொழியாகத் தாய்மொழியாக அல்லாமல், தாயின் மொழியாக அல்லது தந்தையின் மொழியாக மட்டுமே மாறியதற்கு காரணம் அந்த அந்த மொழிச்சூழல். பகல் முழுக்கப் பிள்ளைகள் பிறமொழிபேசும் பிள்ளைகளுடனுமே பழகுகிறார்கள். இதனால் மொழியைப் பிடிக்கும் அந்தப் பருவ வயதில் அவர்களுக்கு அகப்படும் பிறமொழியையே அந்தப் பிள்ளைகள் பிடித்துக்கொள்கிறார்கள்.

பிள்ளைகள் வீட்டுக்கு வரும் நேரங்களில் அப்பாவோ அம்மாவோ வேலைக்குப் போய்விடுவார்கள் அல்லது எல்லாருமே களைத்துப்போய் ஓய்வெடுக்கும் உறங்கும் நேரமாகப் போய்விடுவதால் தொடர்பாடல் நிர்ப்பந்தம் இல்லை. தமிழ்மொழியில் உரையாடும் சந்தர்ப்பங்கள் குறைவு. புலம்பெயர் தேசத்துக் காலநிலை, புவியியல் சூழ்நிலைகள், தொழில் கல்வி வளர்ச்சிப் போக்குகள் எல்லாம் புதுச் சூழலை அந்த அந்த மொழியில் வழங்கியுள்ளபோது பிள்ளைகள் அந்த அந்த மொழிகள் ஊடாகவே எண்ணக்கரு உருவாக்கம் பெற்றிருப்பர். இதனாலும்தமிழ்மொழி ஊடாகக்கிடைக்கமுடியாத எண்ணக்கரு உருவாக்கம் தாம் சார்ந்த தேசங்களின் மொழிகள் ஊடாக இலகுவாகக் கிடைக்கின்றபோது இயல்பான வளர்ச்சியாக அந்த மொழிகளின் கல்வி எமது பிள்ளைகளிடம் வலுப்பெற்றிருக்கிறது. மேலும் பாடசாலைக்கல்வியும் அந்த மொழிகளில் நடாத்தப்படுவதால் அந்த நாட்டு மொழிகளிலே பிள்ளைகள் பாண்டித்தியம் அடைவது தவிர்க்கமுடியாதது. அதுவேயதார்த்தமானது.

இன்றுநமக்குமுன்னேஉள்ளபிரச்சினைஎன்னவென்றால் எமது பிள்ளைகள் தமது தாயக உறவுகளுடனும் புலம்பெயர்நாடுகளில்வாழும்தமதுகாலத்துதமிழ்வழி வந்த உறவுகளுடனும் தமிழில் உரையாட முடியாத சூழல். அதுவல்ல பிரச்சினை. எந்தப் பொது மொழியில் அவர்கள் எல்லாரும் தொடர்பு கொள்ளமுடியும்? ஒன்றில், எல்லாரும்தமிழ்தெரிந்தவர்களாகஇருக்கவேண்டும். அல்லது உலகப்பொது மொழியான ஆங்கிலத்தைப் பயிலவேண்டும். ஆங்கிலம் ஐரோப்பிய நாடுகளில் படிக்கப்பட்டாலும் எல்லோரும் அதைச் சிறப்பாகப் படிப்பதில்லை அதைவிடத்தமிழ்க்கல்வியை மேம்படுத்தினால் தமிழில் உறவாடும் சந்தர்ப்பங்களை எமது தமிழ் உறவுகள் அதிகரிக்கமுடியும். ஆயினும் களநிலைமைகள் சாதகமாக இல்லை.

வீட்டில் தமிழ்மொழிப்பாவனை அருகிவிட பிள்ளைகள் தத்தம் முதல் மொழியில், ஐரோப்பிய மற்றும் ஆங்கில மொழிகளிலேதமதுஉணர்வுகளைவெளிப்படுத்திவருகிறார்கள்தமிழின்தேவை இல்லாமல்போய்விடுகிறது. தாயக உறவுகளைச் சந்திக்கும்போதும், தொலைபேசி உரையாடலின்போதும் மட்டும் தொடர்புகொள்ளும் மொழியாகத் தமிழ் சுருங்கிப்போனதால் தமிழ் மொழியில் பேசும் பாண்டியத்தியம் குறைந்துவிடுகிறது. எழுத்துப் பழகுதல், வாசிப்புப் பயிற்சி அறவே இல்லாது போகின்றன. கோடுகளால் கோலம் போடும் ரோமன் வடிவமுறை உள்ள குறைந்த எண்ணிக்கையின் எழுத்



சுவிற்சர்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, டென்மார்க், சுவீடன் மற்றும் நோர்வே நாடுகளில் வாழும் எமது தமிழ் குழந்தைகள் தமிழில் சரளமாக உரையாடும் சூழல் இல்லை, தங்களது உணர்வுகளைத் தமிழில் வெளிப்படுத்தும் தேவையும் சூழலும் அவர்களுக்கு இல்லை. தவிர்க்க முடியாதபடி ஐரோப்பாவில் வாழும் தமது தாய், தந்தையருடன் ஓரளவு தமிழில் பேச வேண்டியிருப்பதால் கொஞ்சம் தமிழ் கொஞ்சி விளையாடுகிறது.

நானிலம் போற்றும் நாடு...



நெய்கிய காலங்கள் நீங்கியென் நாட்டிலே
நெய்தும் மகிழ்ச்சியே பொங்கிடுமே
தோய்கிய தீமைகள் முங்கிலில் நீயென
சூழ் யெனிர்ந்து நீராகிடுமே
மாய்கனி. சர்க்கரை. தேன். சுற்பலாச்சுளை
சேரும் கலவைச் சுவைபோல
ஓய்தும் தமிழினம் பாரே புகழ்ந்திட
வாழ்ந்திரு நாள் வந்து சேர்ந்திருமே

வீதிகள் தோறும் நீள் மாடியுயர்ந்து
மேகங்கள் வந்தோடிக் கொஞ்சிடுமே
தீரு கல்வி உயர்ந்தவிர் நாளும்
ஒருக்கமுமே தனைத் தோய்கிவிடுமே
சாதிமத மலை சாய்ந்தொரு சாதியே
சீதனமாய் இங்கு வாழ்ந்திடுமே
நாதியற்றோர் ஏழை வேலையற்றோர் என
யாரும் இல்லாமையே கண்டிடுமே.

கவிதை



செல்லையா குமாரசாமி

நாவற்குழியைச் சேர்ந்த வர். நீண்ட கால இலக்கிய ஆளுமை கொண்ட இவர், நாவல், கவிதை, சிறுவர் இலக்கியம் போன்றவற்றில் அதிக ஈடுபாடு கொண்டவர். சிறுவர் இலக்கியம் தொடர் பான பல நூல்களை வெளி யிட்டுள்ளார். இதனால் அரச விருதுகள் பலவற்றையும் தன தாக்கிக் கொண்டுள்ளார்.

ஓய்தும் தொழில்வளம் நீய்தும் வளமை நோய்
தோய்தும் தீநிலம் நாட்டினிலே
நீய்து செய்வோ குலம் நெய்கி நருங்கிட
நீதி மேலோய்துமே நாட்டினிலே
பூய்குவிலாயெனப் பூவையர் அற்தாது
போய் வரும் நாள் வரும் நாட்டினிலே
தூய்கிரு வேளையில் வாய்கிய பூட்டுக்கும்
தேவை வராதிர்த்த நாட்டினிலே

ஆலைகள் பற்பல தோன்று மிப்போ
ஆலை சாய்கினொலி கேட்கு மிப்போ
காலை முரைபென்னும் மாலை முரைபென்னும்
காலையர் கன்னியர் போவாரிப்போ
நீலக் கடல்மிசை நீரூயர் கப்பல்கள்
நாலம் வியப்புற்று நற்றொழில் நாடியே
நாளும் பலர் வருவார் இப்போ

முர்தைத் தொழில்முரை மாற்றி முன்னோடிட
நிர்நிக்கும் காலமே வர்ததனால்
நெர்நிநாய்கள் பல சொர்ந்த மதாய்க் கொண்டு
விர்தைகளை நாமே காட்டிவர
இர்நிர லோகமே இறாய்கி வர்தாற்போல
நானை நம்நாடு விளங்கிடுமே
இர்த நிலைக்காய்த் தம் இன்னுயிர் வீட்டோரை
என்றென்றுமே எண்ணி வணங்குவமே

ஐரோப்பிய நாடுகளில்...

துக்கள் கொண்ட ஐரோப்பிய மொழிக ளில் எழுதுவதைவிட வட்ட எழுத்து வடிவு கொண்ட(247 எழுத்துக்கள் கொண்ட) தமிழ் எழுத்து முறையைப் பழகுவது கடி னம்.

இதனால் எழுத்துப் பயிற்சி இல்லாத, தமிழ் வாசிப்பு அற்ற தலைமுறை ஒன்று எமது தமிழ் உலகில் உருவாகி வருகின் றது என்பது எமது தவக்குறைவே. பேச் சுத்தமிழும் சரள மாக இல்லை, சரியான உச்சரிப்பு முறையும் இல்லை என்பதும் ஓர் அவலமான நிலைமையே இத்த கைய நிலைமையை மாற்றி அமைக்க மேற்குலகில் இயங்கும் தமிழ்க்கல்வி நிலையங்கள் தம்மாலான முயற்சிகளை எடுத்து வருகின்றன. என்பதும் யதார்த்த மான நிலைமையே. ஆயினும், பல வேறு பிரச்சினைகளால் அவர்களாலும் ஒரு வெற்றிகரமான தமிழ்க்கல்வியை வழங்கமுடியாதுள்ளது எனக் களத்து ஆய்வுகள் நீரூபிக்கின்றன.

முதலில் தமிழில் பாண்டித்தியம் இல்லாத கற்பித்தல் குழாம் களத்தில் பணி ஆற்றுகி றது. அவர்களுக்கு முறையான பயிற்சி அவசியம். மற்றைய விடயம் மிகவும் முக்கியமானது. இத்தகைய கல்விமு றைக்குப் பயன்படுத்தப்படும் நூல்கள். பொதுவாக நூல்களை ஆக்கும் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. இதில் பல்வேறு நிபுணர்கள் ஆய்வாளர்கள் இணைந்துள் ளமை பாராட்டத்தக்கது. எனினும் மொழிக்கல்வி பற்றிய விழிப்புணர்வும் தெளிவும் அற்று தமிழ்மொழியை முத லாம் மொழியாகக் கற்ற சூழலின் அடிப்ப டையிலேயே இரண்டாம் மொழியாகத் தமிழைக் கற்பிக்கும் நூலையும் ஆக்குகி றார்கள். குறிப்பாகப் பாடங்களின் எண் ணக்கருக்கள் மற்றும் மொழிநடைத் தெரிவு என்பன முக்கிய கவனம் பெறுவ தில்லை.

உதாரணமாக 'பனைமரம்' என்ற தலைப்பில் ஒரு பாடத்தை மேற்குலக சூழ லில் வாழும் ஒருவருக்கு அறிமுகப்படுத் தும்போது ஆரம்பத்திலேயே ஒரு வெறுப் பான சூழலை வகுப்பறையில் உருவாக்கி விடுகின்றோம். மேற்குலகத்தில் வாழும் எமது பிள்ளைகளுக்கு 'பனைமரம்' பற் றிய எண்ணக்கரு உருவாக்கத்தைப் பார்க்கிலும் 'அப்பிள்மரம்' பற்றிய எண் ணக்கரு இயல்பாகப் புரியும் ஒன்றாக உள்ளது. 'பனைமரம்' பற்றிப் பத்து வச னம் எழுதுவதை விட 'அப்பிள்மரம்' பற்றி ஆறுவசனம் எழுதுவதும் மிகவும் சாத்தி யமான ஒன்று. இதனைத் தமது கல்வி முறையில் 'தெரிந்ததிலிருந்து தெரி யாதவற்றுக்கு' எனும் எமது கருத்தாக்கத் தினூடாகப் புரிந்துகொள்ளமுடியும். பனைமரம் எமது குறியீடு, பண்பாட்டின் சின்னம், உறுதி. மேலும் பண்பின் நிலைக்களனாக அமைவது என்று ஆசிரி யர்கள் கூறுகிறார்கள். ஆயினும் பிள்ளைகள் கூறுகிறார்கள் அது தமக்கு அந்நியமானது என்று. எனவே 'பழகியதி லிருந்து பழகாத ஒன்றுக்கு செல்வோம்' எனும் கல்வித் தத்துவத்தைப் புரிந்து கொண்டால், தமிழ்க்கல்வி சாத்தியமான ஒன்று ஆகிவிடும்.

மேலும் நாம் எமது ஆர்வம் காரணமாக 'எல்லாளன்' பற்றியும் 'பண்டாரவன்னி யன்' பற்றியும் பாடங்கள் வைத்துள் ளோம். மேற்குலகில் வாழும் எமது பிள் ளைகள் எமது வரலாற்று அறிவுக்கு அந்நி யம் ஆனவர்கள். தமிழ்மொழி நடை கடு மையாக உள்ளது. இத்தகைய வரலாற்று பின்னணிகளோடு கூடிய பந்திகளைப் புரிந்து கொள்ள அதிக சிரத்தை கொடுக்க வேண்டியுள்ளது. இறுதியில், அவர்கள் கேட்கிறார்கள்; எமது சூழலில் உள்ள விட யங்களைத் தமிழில் எழுதி அவற்றை அறிமுகப்படுத்தும்போது தம்மால் மொழி யைப் பிடித்துக்கொள்வது சுலபம் என்கி றார்கள். எனவே வரலாறு என்று வரும் போது மேற்கு நாட்டு அரச பரம்பரை பற் றித் தமிழில் பாடம் படிக்கலாம். அதுவே இயல்பான கல்விமுறைமை.

'மகாகவி பாரதியார்', 'கவிமேகம் காளமே கப்புலவர்' பற்றிய பாடங்களும் கடுந்தமி ழில் இருப்பதும் அங்கு குறிப்பிடப்படும் பாடல்களின் சிந்தனை முறைமையைப் புரிந்துகொள்ள முடியாமையும் தமிழ்க் கல்வியை எமது பிள்ளைகள் வெறுப்ப தற்கான காரணங்கள் ஆகியுள்ளன. பல பிள்ளைகள் தமிழ்க்கல்வியை 15வயது டன் நிறுத்தி உள்ளார்கள். அதற்கு கார ணம் இன்னும் ஒன்று உள்ளது. இரண் டாம் மொழியாகத் தமிழைப் படிப்பிக்கும் போது முதலாம் மொழியாகப் போதிக்கும் பாணியில் அது படிப்பிக்கப்படுவது. அங்கு பயன்படும் பழந்தமிழ்க் கட்டுரை களோ இங்கு உதவப் போவதில்லை. ஏற் கனவே கூறியதுபோல அந்நியமான அனுபவத்தைப் பகிரும் வாசிப்புப்பகுதி களோ, படிப்பிக்கப்படும் பாவனையில் இல்லாத புதிய சொற்களோ, இயல்பான வாழ்வு அனுபவத்தைப் பிள்ளைக ளுக் குத்தரப்போவதில்லை. குறிப்பாக, இலங் கையில் யாழ்ப்பாணத்தில் புதிதாக அறி முகப்படுத்தப்பட்ட 'வெதுப்பி' (பாண்), 'மிதிவண்டி' (சைக்கிள்), 'உந்துருளி' (மோட்டார் சைக்கிள்), 'தொடருந்து' (புகை வண்டி) ஆகிய சொற்களுக்கும் பெற் றோரே அறிமுகமாகவில்லை. இவற்றை விட சில சங்ககால, காவிய காலத்துச் சொற்களான 'ஞமலி' (நாய்), சிலப்பதி காரத்து சொல்லான 'எழினி' (திரை) போன்ற சொற்களையும் அறிமுகம் செய்கின்ற னர். இவை இன்னும் நமக்கு ஆரம்பக் கல்வியில் அவசியமா எனக் கேட்கத் தோன்றுகிறது. இன்னும் சில புதிய பாவ னைகள் பெற்றோருக்கும் ஆசிரியருக் கும் அறிமுகமில்லாதவை.

உதாரணமாக 'பின்வரும் சொல்லியங்க ளைப் (வசனங்களைப்) 'பலுப்பி' (உச்ச ரித்து) எழுது' என்றால் 'வசனங்களை உச்சரித்து எழுது'. அவை வடமொழிச் சொற்கள் எனக்கூறிப் புதிய சொற்களைப் பழந்தமிழில் தேடி அறிமுகப்படுத்து கிறார்கள்.

நடைமுறைத் தமிழில் இல்லாத இலங் கைத் தமிழில் பாவனையில் இல்லாத மொழிக்கல்வி எமது பிள்ளைகளை ஈர்த் துக்கொள்ளுமா? மொழியியல், கல்வி பற்றிய சிந்தனைகளை மனங்கொண்டு 'தெரிந்ததிலிருந்து தெரியாதவற்றுக்கும்', 'எளிமையிலிருந்து சிக்கலான விடயங்க ளுக்கும்' தமது வகுப்பறைத் தமிழ்க் கல் விப் பாடங்களை நகர்த்த வேண்டும். அந்த நாட்டுச் சூழலுக்கேற்ப, அந்த மொழிச் சூழலில் பயன்படும் பொதுவான சொற்களையும் இணைத்து ஆக்கப்படும் உரையாடல்கள், வாசிப்புப் பந்திகள், உன்னிப்பாகக் கேட்டு விளங்கும் பயிற்சி கள் என்பன உள்வாங்கப்பட வேண்டும். இயல்பான மொழிப் பண்பாட்டுத்தளங் கள் இல்லாத மேற்குச் சூழலில் தமிழ்மொ ழியில் ஆற்றப்படும் செயல்பணிகள், நாடக அரங்குகள், விவாத மன்றங்கள், பட்டி மண்டபங்கள், சிறு சிறு உரையா டல் தளங்கள் பேச்சு மேடைகள், சந்திப்பு அரங்குகள், வாசிப்புப்பயிற்சிகள், போட்டி கள் என்பவற்றை ஒழுங்குசெய்து கருத் துள்ள தமிழ்க்கல்வியை வழங்க நமது தமிழ் ஆலயங்கள், தமிழ்ச்சங்கங்கள், தமிழ்ப்பள்ளிகள், தமிழ்ப் பூங்காக்கள், தமிழ் ஆழிமையங்கள் முன்வர வேண் டும்.

ஆங்கிலத்தை நாம் எவ்வாறு இரண்டாம் மொழியாக இங்கு பயில்கின்றோமோ அவ்வாறே தமிழை புலம்பெயர் தேசங்க ளில் வாழும் எமது பிள்ளைகளுக்கு ஊட்ட நாம் முயல வேண்டும். தமிழ் அகதிகளாக அல்லாமல் தமிழ் அன்பர்களாக நமது தமிழ்க் கல்வியை புலம்பெயர் தேசங்களில் தொடர்பாடல் மொழியாக்கும் எண் ணத்தை முன்னெடுப்போமாக.



உலகெங்கும் பரந்து வாழும் மனித குலத்திலே; காரண காரியத் தொடர்போடு, ஆன்மீக, அறிவியல் கலவையாக மானிட குலத்துக்கு வழிகாட்டியாக, முதன்மை பெற்ற தத்துவார்த்தத்தைத் தன்னகத்தே கொண்ட ஆன்மிக வாழ்வியலுக்குரித்தானவர்கள் தமிழர்கள். தமிழர் தமது வாழ்வியலை இயற்கையோடு இணைத்து வாழ்ந்து வந்தனர் என்பதன் அடையாளமே தைப்பொங்கல் விழா. சூரியனே பூகோள இயக்கத்தின் உயிர்நாயகன். இவனே பஞ்சபூதங்களை இயக்குபவன் சூரியன் இன்றிப் பூமியிலே ஒரு புல் பூண்டு கூட வாழமுடியாது. அத்தகைய சிறப்புப் பொருந்திய கண்கண்ட தெய்வமான சூரியனுக்கு நன்றி செலுத்தவும், வழிபாடு இயற்றி உய்வடையவும் கொண்டாகும் செய்நன்றிப் பெரு விழாவே தைப்பொங்கல்.

சோதிடம்



திருச்செல்வம் தவரத்தினம்

காரைநகர் – சடையாளியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருச்செல்வம் தவரத்தினம் தற்போது அராலி முருகமூர்த்தி வித்திய சாலையின் அதிபராக உள்ளார். சமயம், ஆன்மிகம் சம்பந்தமான விடயங்களை ஆராய்ந்து எழுதிவரும் இவருடைய ஏனைய முயற்சிகளாக சிறுவர் கதைகள், கவிதைகள் மற்றும் சமுக விழுமியம் சார் கட்டுரைகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். சாதாரண மக்களும் விளங்கிக்கொள்ளக் கூடிய இலகு மொழியாற்றலால் சோதிடம், சமயம், கல்வி, இலக்கியம் எனும் பல்வேறு கோணங்களிலும் எழுத்துலகில் திகழ்கின்றார்.

புத்தாண்டில் நீங்கள் பிறந்த எண்ணின் பலன்கள் எப்படி?



பேர் அண்டத்தினதும், சூரியமண்டலத்தினதும் அறிவார்த்தமான நுட்ப உண்மையைக் கண்டறிந்து சமய வாழ்வினூடாகச் சோதிடத்தையும் விரத விழாக்களையும் நம்மவர் உருவாக்கினர். அவ்வாறு தான் தை மாதத்தில் பல உன்னதமான விழாக்களும் விரதங்களும் உருவாகின.

தைப்பொங்கலை அடுத்து வரும் நாளிலே உழவுக்கு உறுதுணையாக விளங்கும் ஆவினங்களைச் சிறப்பித்து வணங்கும் முகமாகப் பட்டிப்பொங்கல் விழாவைக் கொண்டாடுவர். தை மாதத்திலே வருகின்ற மற்றுமொரு மிகச்சிறப்பான நாள் தைப்பூசமாகும். இதைச் சைவ சமயத்தவர் சிறப்பாகப் போற்றிக்கொண்டாடுவர். இந்தத் திருநாளும் அவர்களின் வாழ்வியலோடு இனைந்ததே.

தைப்பூசம் சிவனுக்கும், சக்திக்கும் முருகனுக்கும் உகந்த திரு நாளாக அமைகின்றது. தைப்பூசத் திரு நாளன்றே உலகம் தோன்றியதாகவும் ஐதீகம்.

தைப்பூசத்தன்று பூசநட்சத்திரமும், பௌர்ணமி திதியும் இணைந்து வருவதே மிகச்சிறப்பு. இந்த ஆண்டும் வருகிற 31ஆம் திகதி புதன்கிழமை பௌர்ணமித் திதியும், பூச நட்சத்திரமும்கூடுகின்றநாளில்இதுவருவதுமிகச்சிறப்பாகி விடுகின்றது. இந்த நாளில் கல்வியை ஆரம்பிப்பது (ஏடு தொடங்குதல்) ஆகிய புதிய துறைகளில் ஈடுபடுதல் போன்ற நற்காரியங்களுக்கு மிகச்சிறப்பான பலன்கள் உண்டு. (இந்த ஆண்டு அன்றிரவு இரவு சந்திரகிரகண நாளாகும்.)

சிவனுக்கும், தேவ குருவாகிய வியாழ பகவானுக்கும் உகந்ததினமாகும். இந்நாளிலேகுருவழிபாடுசெய்தால் மிகுதியான பயனைத்தரும். இந்தநாள் சக்திக்கும்உகந்ததே. அன்று அன்னை பராசக்தியை வழிபட்டு திரு விளக்குஏற்றிவழிபட்டால்மிகச்சிறந்தபலன்உண்டாம்.

இந்தத் தைப்பூசத் திருநாளிலே அருட்குருவான சித்தர்களைப்பூசிப்பதனால்அருளாசிகளைப்பெற்றுக்கொள்ளலாம். சித்த பீடங்களில் மிகச் சிறப்பாக இந்தத் தைப்பூச விழா நடைபெற்று வருகின்றது.

முருகக் கடவுளைத் தொடர்புபடுத்தியதாகத் தைப்பூசத்துக்குரிய இன்னொரு கதையும் உண்டு. இது சிவன், சக்தி, முருகன் ஆகியோரை இணைக்கின்றது.

தேவர்களை அசுரர்கள் அடிமைப்படுத்தித் துன்புறுத்திக் கொடுமைப்படுத்தி வந்தனர். தேவர்களால் அசுரர்களை அழிக்க முடியவில்லை அவர்கள் சிவனிடம் முறையிட்டனர். எங்களுக்குத் தலைமை தாங்கிச் செல்லக் கூடிய பலம் பொருந்திய தலைவன் ஒருவர் வேண்டும் என்று சிவனிடம் இறைஞ்சிக் கேட்டனர். தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்க அவர்கள் துயர் போக்க ஒளிப் பிரவாகம் பொருந்திய தலைவன் முருகன் தோன்றினான்.

முருகன் ஆண்டிக் கோலத்தில் பற்றற்றுப் பழனியில் நின்ற போது பராசக்தி தேவர் தலைவனாம் முருகனுக்கு அன்னை வேல் வழங்கியது தைப் பூசத் திருநாளன்று என்றும் கூறப்படுகின்றது.

ஆகவே பொறியாகி விளங்கும் முருகப் பெருமானை வழிபட்டு தீய சக்திகள் எமை விட்டு அகல வழிபாடு இயற்றும் நன்நாள் தைப் பூசத்திருநாளே.

சூரியனும் பிரபஞ்ச இயக்கமும்

தைப் பொங்கலன்று தான் பிரபஞ்ச இயக்கத்தின் நாயகனான சூரியன், தனு இராசியில் இருந்து மகர இராசிக்கு இடம் பெயர்கின்றார். இதுவே தை முதலாம் நாள். இதை 'மகர சங்கிராந்தி' என்று அழைப்பர்.

சூரியனில் உள்ள ஏழு நிறங்கள் ஒன்று திரண்டு பூமியை வந்தடைந்தே பகற்பொழுது எமக்குக் கிடைக்கின்றது. ஒளியாகவும் வெப்பமாகவும் பிரகாசிக்கும் சூரிய ஒளிக்குள் ஏழு நிறங்கள் அடக்கியிருப்பது வியப்புக்குரியதே. எனவேதான் சைவத்தில் சூரியனுக்கும் சந்திரனுக்கும் தனி இடம் உண்டு. ஏனைய கோள்களின் நிறங்கள் சூரியனின் பிரதிபலிப்பு நிறங்களாகின்றன. அந்த வகையில் இந்த நிற வேறு பாடுகளும், கிரகங்களும், எண்களும் மனிதனிடம் பலவாறான தாக்கத்தை உண்டாக்கின்றன.

எண்களும் வர்ண சோதிடமும்

முழு முதல் கடவுளான சிவன், அர்த்த நாரீஸ்வரராகச் சகலசித்து, சத்துக்களைத் தன்னுள் அடக்கி, அண்டசராசரங்களை இயக்குவதுபோலவே சூரிய பகவானும் சிவப்பு, மஞ்சள், நீலம், அகிய முதன்மை வர்ணங்களையும் துணைவர்ணங்களான செம்மஞ்சள், பச்சை, ஊதா ஆகியவற்றையும் தன்னுள் கொண்டுள்ளார். இவையே செவ்வாய் ,புதன், குரு, சுக்கிரன், சனி, ராகு, கேது என் வற்றின் நிறங்களாகியிருக்கின்றன. சூரியனில் இருந்து பெற்ற நிறங்களையே பூமியில் உள்ள தாவரப்பூக்கள் பிரதிபலிக்கின்றன.

உலகில் சீனர், ஜப்பானியர், பாரசீகரும் சூரியனை வழிபடுகின்றனர்ஆயினும்சைவர்களேஅட்டமூர்த்தங்களிலே சூரியனை முதன்மைப்படுத்துகின்றனர். நீள் வட்டமான பாதையிலே கோள்களைச் சுற்றிவரச் செய்து, உயிர்களின் உயிராய் விளங்குபவன் சூரியன். தன்னுள் உள்ள ஏனைய வர்ணங்களால் இந்தப் பூவுலகை ஆட்சி செய்கின்றான் அந்த வகையில் வர்ணங்கள் அபூர்வ சக்தி கொண்டவை. அவை மனிதரையும் தம் வசப்படுத்திச் சாதக, பாதக பலன்களைக் கொடுக்கின்றன. இதில் வர்ண சோதிட பலா பலன்களை எண்கணித ரீதியா நோக்குவோம்.

1இல் இருந்து 9வரை உள்ள எண்களே ஆதார எண்கள். பூச்சியத்துக்குத் தனி மதிப்புக் கிடையாது. ஒரு எண்ணின் இடது பக்கம் பூச்சியம் வந்தால் மதிப்பு இல்லை. அல்லது குறைவடையும். ஆனால் அதே பூச்சியம் எண்ணுக்கு வலது பக்கமாக அமைந்தால் அந்த எண்ணின் மதிப்புக் கூடிச்செல்லும். "எண்ணென்ப எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு" என்றார் வள்ளுவர். எண்களுக்கும் வாழ்க்கைக்கும் தொடர்பு உள்ளது.

தை மாதம் முதலாம் நாள் சூரியனுக்கு விழா எடுக்கின்றோம். தை 1என்ற இலக்கம் சூரியனைக் குறிக்கின்றது. எண்கள் மனித வாழ்வில் தாக்கத்ததைச் செலுத்துகின்றன. இதனைமேலைத்தேசத்தவரும்உணர்ந்துஉள்ளனர். அந்த வகையில் எண்களை வைத்துக்கொண்டு கூறக்கூடிய சோதிடப் பண்புகளையும் அவற்றிலுள்ள சாதக பாதங்கள் எவையென்றும் நோக்குவோம்.

எண்களுக்கும் அவற்றுக்குள்ள நிறங்களுக்கும், கிரகங்களுக்கும், இறைவனுக்கும் தொடர்பு உள்ளது. அது எண் சார்ந்து மனிதரில் செல்வாக்குச் செலுத்துகின்றது.

எண்	கிரகம்	நிறம்	மலர்	சுவை
1	சூரியன்	சிவப்பு	செந்தாமரை	கார்ப்பு
2	சந்திரன்	வெண்மை	வெள்அல்லி	தித்திப்பு
3	வியாழன்	மஞ்சள்	முல்லை	தித்திப்பு
4	ராகு	கறுப்பு	மந்தாரை	புளிப்பு
5	புதன்	பச்சை	வெண்காந்தாள்	உப்பு
6	சுக்கிரன்	வெண்மை	வெண்தாமரை	தித்திப்பு
7	கேது	ஊதா	செவ்அல்லி	புளிப்பு
8	சனி	கறுப்பு	கருங்குவளை	கைப்பு
9	செவ்வாய்	சிவப்பு	சண்பகம்	துவர்ப்பு

இயற்கையின் நியதி எண்கள் வழியாக மனிதனில் உள்ளதை நீங்களும் உங்களை மதிப்பீடு செய்து உணருங்கள்.

1ஜப் பிறந்த திகதியாக கொண்டவர்களுக்கான பலன்கள்

உங்களுடைய ஆதிக்க கிரகம் சூரியன் ஆவார். விருப்புக்குரியநிறம்சிவப்பு. அதிஸ்டம்தரக்கூடியநிறங்கள் மஞ்சள், இளஞ்சிவப்பு. தங்கநிறம். இந்த ஆண்டு உங்களுக்கு வெண்மை நிறம் சாதகமானதாக அமையலாம். அத்துடன் பச்சையும் சாதகமான பலனைத்தரும். இதயம் தொடர்பான நோய்கள், முடக்குவாதம், தலைவலி ஆகியவை உங்களுக்குப் பாதிப்புக்கள் ஏற்படுத்தும் என்பதால் அதிஸ்ட நிறத்தைப் பயன்படுத்தி நிவர்த்திப் பேறுகள் செய்துகொள்ளலாம். செல்வாக்கு அதிகரிக்கும். பெண்களுக்கு உதவிகள் கிடைக்கும். இது உங்களுக்கு நன்மை, பயக்கும் ஆண்டாகும்.

2ஜப் பிறந்த திகதியாக கொண்டவர்களுக்கான பலன்கள்

உங்களுக்குரிய ஆதிக்க கிரகம் சந்திரன். விருப்புக்குரிய நிறம் வெண்மை. அதிஸ்டம் தரக் கூடிய நிறம் வெண்பச்சை. இந்த ஆண்டு உங்களுக்குரிய நிறம் வெண்நிறம். வெளிர்பச்சையும் நன்மை தரும். கலைகளில் ஈடுபடுபவர் சிறப்படைவர். அரசியலில் நன்மை உண்டு. நீரைக் கொண்டு தொழில் செய்பவர் சிறப்படைவர். பிறரின் உதவிகள் கிடைக்கும். உணர்ச்சிவசப்படுவதைத்தவிர்க்கவும். அறிவுக்குச் சிறந்த காலமாகும். நீர்ழிவு, சளி, நீர் தொடர்பான விடயத்தில் அவதானம் தேவை அதிஸ்ட வர்ணத்தைப் பயன்படுத்தி நன்மை அடையுங்கள்.

3ஜப் பிறந்த திகதியாக கொண்டவர்களுக்கான பலன்கள்

உங்களுக்குரிய ஆதிக்க கிரகம் வியாழன். விருப்புக்குரிய நிறம் மஞ்சள். அதிஸ்டம் தரக் கூடிய நிறம் செம்மஞ்சள், மஞ்சள். இந்த ஆண்டு உங்களுக்கு நன்மையளிக்க கூடிய நிறங்கள் வெளிர்நீலம், ஊதா, ரோஜா. பாதுகாப்புத்துறையில் வேலை செய்பவர்களுக்குச் சிறப்பு. ஆசிரியர், கலைத்துறையினருக்கும் நன்மையளிக்கும். ஈரல், நரம்பு தசை போன்ற இடங்களில் நோய்த் தாக்கம் ஏற்படலாம். உரிய அதிஸ்ட வர்ணத்தைப் பயன்படுத்தி நன்மை அடையுங்கள்.

4ஜப் பிறந்த திகதியாக கொண்டவர்களுக்கான பலன்கள்

உங்களுடைய ஆதிக்க கிரகம் ராகு. விருப்புக்குரிய நிறம் கறுப்பு. அதிஸ்டம் தரக்கூடிய நிறம் வெளிர் நீலம். இந்த ஆண்டு உங்களுக்கு அதிஸ்டம் தரக் கூடிய நிறம் இளம் சிவப்பு. கூலிவேலை செய்பவர்கள், வியாபாரிகள், உணவுவிடுதி, சிற்றுண்டிச் சாலை நடத்துபவர்களுக்கு நன்மைகள் உண்டாகும். பித்தரோகம், மஞ்சள்காமாலை, குருதிச் சோகை, மூளை தொடர்பான நோய்களின் தாக்கம் ஏற்படலாம். உரிய அதிஸ்ட வர்ணத்தைப் பயன்படுத்தி நன்மை அடையுங்கள்.

5ஜப் பிறந்த திகதியாக கொண்டவர்களுக்கான பலன்கள்

உங்கள் ஆதிக்க கிரகம் புதன். விருப்புக்குரிய நிறம் பச்சை. அதிஸ்டம் தரக் கூடியவை இளம்பச்சை, சாம்பல் நிறங்கள். இந்த ஆண்டு உங்களுக்குரிய நிறம் மஞ்சள், இளம்பச்சை, சாம்பல்நிறம். கணித ஆசிரியர், கல்வி அதிகாரத்துறையினர், ஆராய்ச்சியாளர்கள், அறிவியளாளர், கணினித்துறையினர், வியாபாரிகள் நன்மைகள் கூடிச் சிறப்படைவர். குடும்பத்தில்சலசலப்புஇருக்கும், ஆடம்பரத்தில்ஈடுபட்டால்கவலைகள்உருவாகும்.
குருதிச் சோகை, மறதி, நரம்பு தொடர்பான நோய்கள், நாக்குப் போன்ற இடங்களில் பாதிப்புக்களும் ஏற்படலாம். அவதானம் தேவை அதிஸ்ட வர்ணங்களைப் பயன்படுத்தி நன்மையடையுங்கள்.

6ஜப் பிறந்த திகதியாக கொண்டவர்களுக்கான பலன்கள்

உங்கள் ஆதிக்க கிரகம் சுக்கிரன். அதிவிருப்புக்குரிய நிறம் வெளிர் வெண்மை. அதிஸ்டம் தரக்கூடிய நிறம்-நீலம், மஞ்சள் கலை இலக்கியத் துறையினர், சட்டத்துறை, வியாபாரகள் உற்பத்தியாளர்கள் நன்மையடைவர். திருமணம் களியாட்டங்கள் சிறப்பாக இருக்குமாம். வாயு, பாலியல் நோய்கள், நாடித்துடிப்பு, மயக்கம் போன்றவற்றால் ஆரோக்கியத்தில் பாதிப்புக்கள் உருவாகலாம் அவதானம் தேவை. அதிஸ்ட வர்ணத்தைப் பயன்படுத்தி நன்மையடையுங்கள்.

1இல் இருந்து 9வரை உள்ள எண்களே ஆதார எண்கள். பூச்சியத்துக்கு தனி மதிப்புக்கிடையாது. ஒரு எண்ணின் இடது பக்கம் பூச்சியம் வந்தால் மதிப்பு இல்லை. அல்லது குறைவடையும். ஆனால் அதே பூச்சியம் எண்ணுக்கு வலது பக்கமாக அமைந்தால் அந்த எண்ணின் மதிப்புக் கூடிச்செல் லும். 'எண்ணென்ப எழுத்தென்ப இவ்விரண் டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு' என்றார் வள்ளுவர். எண்களுக்கும் வாழ்க்கைக்கும் தொடர்பு உள்ளது.

7ஜப் பிறந்த திகதியாக கொண்டவர்களுக்கான பலன்கள்

உங்களுக்குரியஆதிக்கக்கிரகம்கேது. விருப்புக்குரிய நிறம் வெள்ளை. அதிஸ்டம் தரக்கூடிய நிறங்கள் வெள்ளை, நீலம். இந்த ஆண்டுஉங்களுக்கு அதிஸ்ட நிறம் வெள்ளை, வெளிர்சிவப்பு, சந்தன நிறம். அரசியல்வாதிகள், ஆசிரியப்பணி செய்வோர். கலைத்துறையினர், சோதிடர், ஆன்மீக, தத்துவ ஞானிகளுக்குச் சிறப்பான ஆண்டாகும். தோல் நோய், வாத நோய், சுவாசம் தொடர்பான நோய்த் தாக்கங்களில் அவதானமாக இருங்கள். அதிஸ்ட வர்ணத்தைப் பயன்படுத்திநன்மை அடையுங்கள்.

8ஜப் பிறந்த திகதியாக கொண்டவர்களுக்கான பலன்கள்

உங்களுக்குரியஆதிக்கக்கிரகம்சனி. விருப்புக்குரிய நிறம் கறுப்பு. அதிஸ்டம் தரக்கூடிய நிறங்கள் நீலம், மஞ்சள், இளம் நீலம். சுரங்கம், வெடிப்பொருள்கள் தொடர்பான வேலையிலுள்ளவர்கள், விவசாயிகள், புதை பொருள் ஆராய்ச்சியாளர், பொறியியலாளர், கட்டடத் தொழிளாலருக்கு நன்மையான பலன்கள் உருவாகும்.
சுவாசநோய், கசரோகம், வாதநீர்வீக்கங்கள், நெருப்புக்காய்ச்சல், சிறுநீர் கோளாறு, கீல்வாதம், போன்ற பாதிப்புக்கள் உருவாகுமாகையால் அவதானமாக இருக்கவேண்டும். உங்கள் அதிஸ்டவர்ணத்தை பயன்படுத்திநன்மை அடையுங்கள்.

9ஜப் பிறந்த திகதியாக கொண்டவர்களுக்கான பலன்கள்

உங்களுக்குரிய ஆதிக்க கிரகம் செவ்வாய். விருப்புக்குரிய நிறம் சிவப்பு. அதிஸ்டம் தரக்கூடிய நிறங்கள் கருஞ்சிவப்பு, வெளிர்பச்சை. இந்த ஆண்டு உங்களின் அதிஸ்டநிறம் இளம் சிவப்பு. காவல்துறையினர், வைத்தியத் துறையினர், போக்குவரத்துத் துறையினர், சாரதிகள், பொறியியலாளார்கள் ஆன்மிகத் துறையினர் அனைவருக்கும் நன்மையான ஆண்டாகும்.
கோபத்தைக் குறைத்துக் கொள்ளுங்கள். காய்ச்சல், வீக்கங்கள், விபத்துக் காயம், தீக்காயம், நரம்பு, தலை, சிறுநீர் போன்றவற்றில் நோய்த்தாக்கம் ஏற்படலாம். உரிய அதிஸ்ட வர்ணத்தைப் பயன்படுத்தி நன்மை அடையுங்கள்.



தாயின் அழுகுரல்....

கவிதை



ஞா.கீர்த்தலோஜினி

மன்றாடினேன் தாயிடம்
மரணத்துக்காய்
மண்டியிட்டேன் தாயிடம்
மரதி நீங்க
மனதுருகினேன் தாயிடம்
மதிழ்ச்சிக்காய்
கேட்காமலே அனைத்தும்
ஈந்த தாய்
மரணத்தைத் தர மறுத்துவிட்டாள்
பெற்ற பாசத்தால்

நான் பெற்றபிள்ளை
சொல்லாலே ஓர் நொடியில்
மரணத்தையே தந்துவிட்டான்
மண்ணுலக மோகத்தால்
தாயின் சந்நிதியில்
மண்டியிட மறந்த
மாந்நான் பிள்ளையாய்
நின்று
மரணத்தையே தந்தான்
மனைவிக்காக...

மன்னார் வங்காலையைச் சேர்ந்த இவர் வளர்ந்து வரும் ஓர் இளைய படைப்பாளி. கவிதை எழுதுவதில் ஈடுபாடு கொண்ட இவரின் அநேக கவிதைகள் உதயன் சூரிய காந்தியில் பிரசுரமாகியுள்ளன. தற்போது யாழ்ப் பாணப் பல்கலைக் கழகத்தில் அரசியல் விஞ்ஞானத்துறை மாணவியாக உள்ளார்.



ஒரு கதை ஒரு கவிதை அல்லது ஒரு கவிதை கதை

சிறுகதை



குப்பிழான் ஐ. சண்முகன்

குப்பிழானைப் பிறப்பிடமாகக் கொண்டவர். வசிப்பது கரவெட்டி. ஓய்வுபெற்ற ஆசிரியர். கவிதைகள், சிறுகதைகள் எழுதுவதில் கைதேர்ந்தவர். 'பிரபஞ்ச சுருதி' என்பது 2014இல் வந்த இவருடைய கவிதை நூல். அறுபதுகளின் பிற்பகுதியிலிருந்து எழுதிக்கொண்டிருக்கிறார். எழுத்தாற்றல் காரணமாக விருதுகள் பலவற்றையும் தனதாக்கியிருக்கிறார்.

இன்றுபோலவே உலகம் இருண்டிருந்தது. ஒரு முன் மாலைப் பொழுதில் சந்திர சேகரா எங்களிடம் இருந்து எல்லாம் கைகுலுக்கி விடை பெற்றான். அப்போதும் வெளியே மழை தூறிக்கொண்டு தான் இருந்தது. அலுவலகம் மின் சார வெளிச்சத்தில் சோபை பெற்று மிளிர்ந்தது. மின் விசிறிகள் சுழன்றுகொண்டிருந்தன. பிரியாவிடை வைபவம் முடிந்து எல்லாரிடமும் சொல்லிக்கொண்ட சந்திர சேகரா கடைசியாக என்னிடமும் வந்தான். "மகே குருவராயா" எனக் கட்டியணைத்து விடை பெற்றான். "கடவுள் விரும்பினால் நாங்கள் மீண்டும் சந்திப்போம்" என்றும் சொன்னான். அவனது கண்கள் கலங்கியிருந்தன. பரிசளித்த பொதியை ஒரு கையால் தூக்கிக் கொண்டு, மறு கையைத் தூக்கி அசைத்துக் கொண்டே சென்று மறைந்தான்.

மற்றைய நண்பர்கள் ஏற்கனவே போய்விட்டிருந்தார்கள். நானும் அலவலகத்தை விட்டு வெளியே வந்து பார்த்தேன். உலகம் இருண்டு வர மழை அப்போதும் தூறிக் கொண்டுதான் இருந்தது. நான் எனது இருப்பிடத்தை நோக்கி நடக்கத் தொடங்கினேன். மனதில் ஏதோ இனம் புரியாத வெறுமை கவிந்தது போல் இருந்தது.

மூன்று வருடங்களுக்கு முன்புதான் நான் இந்த அலுவலகத்துக்கு முதல் நியமனம் பெற்று வந்திருந்தேன். பாடசாலைப் படிப்பு முடித்து, பல்கலைக் கழகப் படிப்பையும் இடைநடுவில் கைவிட்டு இந்தத் தொழிலுக்கு வந்திருந்தேன். எனக்கு எல்லாமே புதிது. இடம் புதிது. தொழில் புதிது. புழங்கும் மனிதர்கள் எல்லாம் புதியவர்கள். என் மொழி சார்ந்தோர் இரண்டொருவர் இருந்தாலும் மற்றவர்கள் எல்லோரும் வேறு மொழி பேசுபவர்கள் ஒருவிதமான தனிமைத் தவிப்பில் நான் ஆழ்ந்திருந்த போதுதான் சந்திரசேகரா அறிமுகமானான்.

"கோமத யாலுவா? மொக்கத கல்பனாவ?"

நான் மலங்க மலங்க விழித்தேன். தன் தெத்துப் பல் தெரியச் சிரித்தான் அவன். என்னருகில் வந்து என் தோளில் கைவைத்தபடியே தனது மழலைத் தமிழில் கேட்டான்

"என்ன யோசிக்கிறாய் தோழனே"

என் கண்கள் வியப்பால் விரிந்தன. அவனைப் பார்த்துச் சிரித்தபடியே கேட்டேன்

"உங்களுக்குத் தமிழ் தெரியுமா?"

"கொஞ்சம் கொஞ்சம் பேசுவேன். எழுத வாசிக்கத் தெரியாது. உங்களிட்டைத் தான் தமிழ் படிக்கப் போறேன்."

அவனும் என்னைப் போன்றே இளைஞன் தான். என்னிலும் பார்க்க இரண்டொரு வயது கூடுதலாக இருக்கலாம். முன் மண்டையில் மயிர்களின் அடர்த்தி குறைந்து சாடையாக வழுக்கை விழுந்திருந்தது. அரும்பு மீசையும் குறுந் தாடியுமாகச் சிரித்துச் சிரித்துக் கதைத் தான். கண்களிலும் முகத்திலும் ஒரு சாந்த மான பொலிவு.

அன்றைய அறிமுகத்தைத் தொடர்ந்து எங்களிடையே அன்னியோன்யமான நெருக்கம். அதிகரித்துக் கொண்டே சென்றது. நாங்கள் பரஸ்பர இரகசியங்களைக் கூடப் பகிர்ந்து கொள்ளும் அளவில் நெருங்கிய நண்பர்களானோம்.

இன்றுபோலவே மழை தூறிக் கொண்டிருந்த ஒரு நாளில், வழக்கமான கலகலப்பைத் தொலைத்துவிட்டு, கறுத்த முகத்துடன் கலங்கிய கண்களுடன் என் அருகில் இருந்த கதிரையில் வந்தமர்ந்தான். எதுவுமே பேசாது சுற்றிக்கொண்டிருந்த மின் விசிறியைப் பார்த்த படியே இருந்தான்.

"ஏன், என்ன நடந்தது"

எதுவுமே பேசாது என்னையே பார்த்துக் கொண்டிருந்தான். சட்டைப் பையிலிருந்து ஓர் ஒளிப்படத்தை எடுத்து என்னிடம் நீட்டினான்.

ஓர் அழகான இளம் பெண். வசீகரமான முகம். கதை சொல்லும் கண்கள். கன்னக் கதுப்புகளில் அலையும் தலைமுடி. அதரங்களில் இதழ் விரிக்காத ஒரு புன்னகை; வலது கன்னத்தில் ஒரு சிறு கறுப்பு மச்சம்.

"ஏன், என்ன நடந்தது"

ஒன்றும் பேசாமல் என்னையே சில விநாடிகள் பார்த்துக் கொண்டிருந்தான்.

"எல்லாம் முடிந்து விட்டது."

"ஏன் என்ன நடந்தது.?"

"குடும்பத்தினரின் வற்புறுத்தலினால் அவள் இன்னொரு வனைத் திருமணம் செய்துவிட்டாள்" உடைந்து விம்மி அழும் நிலையில் அவன் இருந்தான்.

அவனுக்கு ஆறுதல் மொழிகள் சொல்லித் தேற்றினேன்.

"வாழ்க்கை என்றால் இப்படித்தான் நண்பனே. இன்பங்களும், துன்பங்களும், மகிழ்ச்சியும் கவலையும், ஏற்றமும் இறக்கமும், எல்லாமுமே வரத்தான் செய்யும். என்ன தான் நடந்தாலும் நாங்கள் வாழத்தானே வேண்டும். வாழ்வோம். சரி எழும்பு. நடந்ததை மற. நல்லதே நடக்கும் என்று நம்பு."

எழும்ப மனம் இல்லாதவனாகவே எழுந்து சென்றான். இரண்டு மூன்று நாள்களாக அவளைக் காணவில்லை. அடுத்தடுத்த நாள்களில் திடுதிப்பென பிரசன்னமானான். பழையபடியே கலகலப்பானவனாக மாறியிருந்தான். குருவராய, "புதினமான ஒன்றைக் கேள்விப்பட்டிருக்கி றேன். இதைக் கேளுங்கள்?"

கேள்வியை முகத்தில் தேக்கி அவனைப் பார்த்தேன்.

"அம்மியும் அப்பிடி. குழவியும் அப்பிடி. அரைக்க வந்த கிழவியும் இப்பிடி" அஷ்ட கோணலாக உடம்பை வளைத்து வளைத்து அபிநயங்களுடன் சொன்னான்.

எனக்குச் சிரிப்பு வந்துவிட்டது. பலத்த சத்தமிட்டுச் சிரித்தேன். "எங்கே கேட்டனீ? யார் சொன்னது?"

"நேற்று பஸ்சில போகேக்க ஒரு வயதான தமிழ் மனுசியோட கதைச்சுக்கொண்டு போனன். அவா சொன்னது"

"கருத்தென்னெ விளங்குமோ?"

"ஓம்; எல்லாம் குழறுபடி"

"குழறுபடிகள் எப்பிடி" ஒரு அர்த்தபுஷ்டியான புன்னகையுடன் கேட்டான்.

எதுவுமே பேசாது ஒரு சிரிப்புடன் எழுந்து போய்விட்டான்.

அடுத்த ஞாயிற்றுக்கிழமை எனது இருப்பிடத்துக்கு எதுவித முன்னறிவிப்புமின்றித் திடீரென்று வந்து குதித்தான். மிகவும் பரபரப்பாக இருந்தான்.

"வெளிக்கிடுங்கோ, வெளிக்கிடுங்கோ நாங்கள் ஒரு படத்துக்குப் பத்தரை மணி ஷோவுக்குப் போகவேணும்" ஞாயிற்றுக்கிழமை லீவு நாளில் ஏதாவது வாசித்து ஓய்வெடுக்க வேண்டுமென நினைத்திருந்த நான் கொஞ்சம் தயங்கினேன்.

"நேரம் பத்து மணி ஆகுது. இன்னும் அரை மணித்தியாலம் தான் இருக்குது. கெதியா வெளிக்கிடும்"

அவன் வற்புறுத்திக் கொண்டே இருந்தான். விடமாட்டான்போல் இருந்தது. சரி சரி. முதன் முதலாக ஒரு சிங்களப் படத்தைப் பார்ப்போம் என நினைத்து நானும் வெளிக்கிட்டு அவனுடன் போனேன்.

தியேட்டர் வாசலில் இரண்டு இளம் பெண்கள் அவனுக்காகக் காத்திருந்தார்கள். அவனுடன் இன்னுமொருவன் வருவானென அவர்கள் எதிர்பார்க்கவில்லையென்பது அவர்கள் பார்வையில் தெரிந்தது. நானும் அவர்களை எதிர்பார்க்கவில்லைத்தான். அவனும் அவர்களைப் பற்றி எதுவுமே சொல்லியிருக்கவில்லை.

தியேட்டரில் அவர்களில் ஒருத்தியும் அவனும் அருகருகே இருந்தனர். நான் அவனுக்கு பக்கத்திலும் மற்றவள் அவளுக்குப் பக்கத்திலும் அமர்ந்து கொண்டோம். திரையில் கதாநாயகனும் கதாநாயகியும் ஓடி ஆடிப் பாடிக்கொண்டே இருந்தனர். என்னருகில் இருந்த நண்பனும் அவளும் ஏதோ பேசிப் பேசிச் சிரித்துச் சினுங்கிக் கொண்டே இருந்தனர். நான் படத்தை மட்டும் தான் பார்த்தேனென்று சொல்லமாட்டேன். மற்றவளும் அப்படித்தான் என்று நினைக்கிறேன்.

படம் முடிந்ததும் நான் அவர்களிடமிருந்து விடைபெற்றுக் கொண்டேன். அவர்கள் மூவரும் வேறெங்கெங்கோ போவதாகச் சொல்லிச் சென்றார்கள்.

அடுத்தநாள் அலுவலகத்தில் என்னைச் சந்திக்க வந்த போது சிரித்தபடியே வந்தான்.

"புதிதாய் ஒன்றைப் பிடிச்சிட்டாய்போல் ஏனது மனப்பூர்வமான வாழ்த்துக்கள்."

"அதெல்லாம் பெரிய கதை, பிறகு விவரமாய்ச் சொல்கிறேன்." என்று மழுப்பினான். நானும் வற்புறுத்தவில்லை.

"நேற்றுப்பிறகுளங்கேளங்கேயெல்லாம்போனனீங்கள்?"

"மூன்று பேருமாய் ஒரு கடையில் போயிருந்து சாப்பிட்டம். பிறகு மற்றவள் போய்விட நானும் அவளும் கடற்கரையில் தாழம் புதருக்கை இருந்து பொழுதுபடு மட்டும் கதைத்தோம்" எனது மேசையில் இருந்த சஞ்சிகையை எடுத்து மேலோட்டமாகப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான். அதில் எனது கவிதையொன்றும் பிரசுரமாகியிருந்தது. அந்தப் பக்கத்தில் தரித்தவன், என்னை நிமிர்ந்து பார்த்துக் கேட்டான்.

"இது நீங்கள் எழுதிய கவிதையா?"

"ஓம் ஓம் நான் எழுதிய கவிதை தான்"

மெல்லிய குரலில் வாசித்தான். இப்போது தட்டுத் தடுமாற்றமின்றித் தமிழை வாசிக்கும் அள

கட்டுரை



தெல்லிப்பழையைச் சேர்ந்தவர். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவன். கடந்த 7 ஆண்டுகளாகப் பத்திரிகைத்துறையில் இருக்கிறார். கட்டுரைகள், பத்தி எழுத்துக்களில் ஆர்வம் உள்ளவர்.

குணாளன் டிலீப்அமுதன்

விக்கியின் அரசியல்?

மேடைகளில்கதாப்பிரசங்கம்செய்பவர்களின் பேச்சுக்கள் எப்போதும் இனிமையாக இருக்கும். பேச்சாற்றல்எல்லோரையும்கட்டிப்போட்டுவிடும்.அடுக்கடுக்கானவார்த்தைகள் பேச்சைத் தொடர்ந்து ரசித்துக் கேட்க வைக் கும். "சொல் ஒன்று செயல் ஒன்று" என்பதுபோல உபதேசங்கள்எல்லாம்ஊருக்குத்தான். அந்தமேடைப் பேச்சாளர்களுக்கு இல்லை என்பதைப் போலத் தான் அவர்களுடைய செயற்பாடுகள் இருக்கும்.



அதுபோல ஆன்மிக அருளுரையாற்றிக் கொண்டிருந்த விக்னேஸ்வரனை அரசியலுக்கு இழுத்துக்கு கொண்டு வந்து விட்டாலும், அவர் இப்போதும் அருளுரையாற்றிக் கொண்டுதான் இருக்கின்றார். அவரது பாதி நேரம்கதாப்பிரசங்கத்துக்குக்கதை எழுதுவதற்கே போய்விடும். எஞ்சிய நேரத்தில்தான் மக்கள் சேவை (?) என்றிருக்கின்றார்.

குத்துது குடையுது

கம்பன் கழகத்துக்கு மேடைகளில் கதையளந்து கொண்டிருந்த வரை காலில் வீழ்ந்து கூட்டிக் கொண்டு வந்து விட்ட பெருமை கூட்டமைப்பின்தலைவர்சம்பந்தனைச்சாரும். வடக்குமக்களுக்கு உள்ளூர் உற்பத்திகளில் அதிக நாட்டமில்லை என்பதை நாடி பிடித்துஅறிந்துகொழும்பிலிருந்துவிக்னேஸ்வரனை இறக்குமதி செய்தார்.

வேலியில்போனஓணானைப்பிடித்துவேட்டிக்குள்விட்டுகுத்துது குடையுது என்று கூப்பாடு போடுவதுபோல, விக்கியை அரசியலுக்கு இழுத்துவிட்டு இப்போது சம்பந்தன் குமுறிக் கொண்டிருக்கின்றார் என்பது வேறு உப கதை.

சர்சையின் மறுபெயர் விக்கி

எந்தக்கிரகத்தின்பார்வைஎத்திசையில்பட்டதோ,விக்கி அரசியலுக்குநுழைந்ததுமுதல்சர்சைகளின்மறுபெய ராக இருக்கின்றார். வாக்கு வேட்டையில் இறங்கிய போதுவல்லைமண்ணில்நின்று"பிரபாகரன்மாவீரன்" என்றார். ஆட்சியில் அமர்ந்த பின்னர் மேதின மேடையில்" பிரபாகரனை சர்வாதிகாரி" என்றார். "இலங்கையில் நடப்பது கணவன் மனைவி பிரச்சினை. பக்கத்து வீட்டார் தலையீடு தேவையில்லை" என்றார். "மாகாண சபைத் தேர்தல் காலத்தில். பன்னாட்டுத் தலையீடு இல்லாவிட்டால்எமக்கு விடிவே இல்லை" என்கிறார் இப்போது. மகிந்த முன் பதவியேற்பது "நல்லிணக்கத்தின் அடையாளம் " என்றார். சிங்களச்சம்பந்திகளோடுகூட்டுச்சேர்ந்துதன்குடும்பத் தாரையும் அழைத்துச் சென்று பதவியேற்றார். இதே நல்லிணக் கத்தை இன்னொருவர் செய்ய முனைகையில் அரசிடம் சோரம் போய்விட்டார்கள் என்று சொன்னார். "சம்பந்தனே தலைவர். அதில் எந்த மாற்றுக் கருதுக்கும் இடமில்லை" என்றார். ஆனால் பேரவையின் இணைத் தலைமை கிடைத்ததும் போய்க் குந்தி மாற்றுத் தலைமையாய் அறிக்கைகள் விடுத்தார்.

தடுமாறும் விக்கி

"தமிழ் அரசு கட்சியுடன் பசைபோல் ஒட்டி நிற்கின்றீர்கள்" என்று சுரேஸ் பிரேமசந்திரன் சுட்டிக்காட்ட, "நான் ஆயுத வன்முறை இயங்கங்களுடன் சேரவிரும்பவில்லை" என்றார்.

ஆனால், "எனக்கு இப்போது கட்சியும் இல்லை கடிவாளமும் இல்லை" என்கிறார். நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் நடுநிலைமை என்று சொல்லி மௌனியாகி; இல்லை... சகுனியாகி, "பொன்னம்பலத்தாரின் பொடிக்கு வாக்குப் போடுங்கள்" என்றார்.

உள்ளூராட்சித் தேர்தல் சூடு பிடிக்கின்றது. விக்கியின் அணியினர் இரண்டாகப் பிளவுபட்டுத் தேர்தலில் நிற்கின்றனர். நிலமை தர்மசங்கடம். வலக் கண்ணா ? இடக் கண்ணா? என்ற கேள்வி எழுந்து நிற்கையில், என் கண்ணை விட எதிரியின் கண்ணை குத்திக் கிழிப்போம் என்ற கோணத்தில் விக்கி அறிக்கைகள் விடுகின்றார்.

நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் தனது சகுனிவேலையால்தான்யானைக்கட்சிக்கு யாழ்ப்பாணத்தில் ஓர் ஆசனம் கிடைத்தது என்பதை இரண்டே வருடங்களில் மறந்துவிட்டார்போலும்.

சிங்களக் கட்சிக்கு வடக்கில் அதிகாரம் கிடைக்க இப்போது முக்கி முனகுகின்றார். ஊழலற்ற நிர்வாகம் வேண்டும் என்கிறார். வடக்கு மக்களும் அதுதான் சரிஎன்கின்றனர். அந்தக்கருத்தில்மாற்றுக் கருத்து முன்வைக்கும் அளவுக்கு இங்கு எவரும் முட்டாள்களும் அல்லர்.

விக்கியின் கை சுத்தமா ?

தன் கையைச் சுத்தமாக்காமல், மற்றவன் கை சுத்தமாக இருக்க வேண்டும் என்று விக்கி எப்படி எதிர்பார்க்கலாம் ? இந்தக் கேள்வியை இந்த இடத்தில் முன்வைக்கும்போது உங்கள் முகங்கள் கேள்விக்குறியாகுவது இயல்பானது. விக்கி ஊழல் செய்தாரா ? அவர்அப்படிப்பட்டவர்இல்லையே. அவரதுமுகத்தைப்பார்த்தால் களவு செய்பவர் போன்று இல்லையே! என்று அடுக்கடுக்கான மனப் பதிவுகள் உங்களிடம் ஓடும்.

விக்கி ஊழல் செய்தார் என்பதை விட ஊழலுக்கு உடந்தையாக இருந்தார். அதிகாரங்களை முறைகேடாகப் பயன்படுத்தினார். இந்தக் குற்றச்சாட்டுக்கள் சகட்டு மேனிக்கு முன்வைக்கப்படவில்லை. கடந்தஆண்டுஜனவரியிலிருந்துநடந்துவந்தசம்பவங்களைக் கோர்வையாக்கினால் உண்மை உங்களுக்கே உறைக்கும்.

வடக்கு அமைச்சர் சபையின் தலைவர் விக்னேஸ்வரன். அவரது சபையில் ஓர் அமைச்சராக இருந்தவர் ஐங்கரநேசன். அவர் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. விசாரணை வேண்டும் என்று வடக்கு அவையில் தீர்மானமும் நிறைவேறியது. அடுத்த அமர்விலேயேநிறைவேறியதீர்மானத்தைநீர்த்துப்போகவைக்க முயன்றார் விக்கி. இது தவறு. நீதியரசராக இருந்தவருக்கு, 'அரிவரி'நீதித்துறைதெரியாதா?குற்றச்சாட்டுக்கள்சுமத்தப்படுவதால் மாத்திரம் ஒருவன் குற்றவாளி அல்ல. அவன் மீது விசாரணை நடத்தப்படவேண்டும். விசாரணை நடத்தாமல், குற்றச்சாட்டுக் களை இல்லாமல் ஆக்க முயன்றால் அதன் அர்த்தம் என்ன ?

பாதுகாப்புக் கவசமான விக்கி

இதற்குமேலாக, ஐங்கரநேசனுக்குக்கவசப்பாதுகாப்புவழங்கும் வகையில்விக்கியின்அறிக்கைஅமர்ந்திருந்தது. ஐங்கரநேசன் குற்றமற்றவர். அரசியலுக்காகஅவர்மீதுகுற்றம்சுமத்துகின்றார் கள். பனங்காட்டுநரி. இப்படிாங பல அடுக்குப் பாதுகாப்பு போட்டு ஐங்கரநேசனைப் பாதுகாத்தார். நிலமை எல்லை மீறுகையில், வேறு வழியின்றி விசாரணைக்கு ஒத்துக் கொண்டார்.

இங்கேதான் விசித்திரம் நடந்தது.

போர்க்குற்ற விசாரணையில் சிறிலங்கா இராணுவம் ஒருதரப்பு. அந்த இராணுவத்தை இயக்கும் அரசே, நீதியாளர்களை நியமித்தால் முடிவு எப்படி இருக்கும். எனவேதான் நாங்கள் பன்னாட்டு விசாரணை கோருகின்றோம் என்ற விக்கி, வடக்கு அமைச்சரவையில்தானும் ஓர் அமைச்சராக இருக்கின்றேன் என்பதையும், தன் மீதும் அமைச்சு மீதும் விசாரணை நடக்கும் என்று தெரிவித்துக்கொண்டு, தானே விசாரணையாளர்களை நியமித்தார். சிறிலங்கா அரசு செய்ய முற்பட்டதுக்கும், விக்கி செய்ததற்கும் நூலிழையில்கூட வித்தியாசம் இல்லை.

விசித்திர நடவடிக்கை

விக்கி நியமித்த விசாரணையாளர்கள் விக்கிக்கு எதிராக விரல் நீட்டவில்லை. விக்கியின் அமைச்சரவையில் இருந்த மூத்தவர்களான குருகுலராஜா மற்றும் ஐங்கரநேசனுக்கு எதிராக நடவடிக்கைக்குப் பரிந்துரைத்தார்கள்.

இங்கேதான் அடுத்த விசித்திரம் நடந்தது.

சிறிலங்கா அரசு தான் நியமித்த ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளை எப்படித் தூக்கிக் கடதாசிக் குப்பைக் கூடைக்குள் போடுமோ அதேபோன்றுதான் விக்கியும் செய்தார். பதவிநீக்கப் பரிந்துரைத்தஅமைச்சர்களை இரஞ்சிப்பதவியிலிருந்துநீங்குங் கள் என்றும், தனது விசாரணையாளர்கள் விடுவித்த அமைச்சர் களான சத்தியலிங்கம் மற்றும் டெனீஸ்வரன் மீது புதியதொரு விசாரணை நடத்தப்படும் என்றும் புதுக்குண்டைப் போட்டார். விக்கி போட்ட குண்டில் அவரே சிதறப் பார்த்தார். சம்பந்தப் பெருமானின்கடைக்கண்பார்வையால்தப்பித்துக்கொண்டார். விக்கியின் கதைகளால் கடுப்பான சத்தியலிங்கம் பதவியைத் தூக்கி எறிந்தார். எஞ்சியவர் டெனீஸ்வரன். அவரது சொந்தக் கட்சியே காலைவாரிவிட விக்கி அவரையும் தூக்கி வெளியே போட்டார். புதிதாய் நால்வரை பதவிக் கதிரையில் குந்தச் செய்தார்.

தண்டனை எங்கே ?

விசாரணைக்குழு பதவி நீக்கப் பரிந்துரைத்தவர்களின் பதவிகளை இரஞ்சி மீளப் பெற்றதுடன் அந்த விடயத்துக்கு முழுக்குப் போட்டு விட்டார். பதவி பிடுங்கப் பட்டதுடன்ஊழல்,முறைகேடு சீராகி விடுமா ? அவர்கள் செய்த மோசடிகளுக்கு என்ன தண்டனை பெற்றுக் கொடுத்தார்? பதவி நீக்கப் பட்ட இரு அமைச்சர்களும் இப்போது 'கௌரவ' உறுப்பினர்களான அவையில் இருக்கின்றார்கள்.சத்தியலிங்கம்,டெனீஸ்வரன் மீது விசாரணை நடத்தப்படும் என்றவர், அவர்கள் இருவரும் அமைச்சுப் பதவியில் இப்போது இல்லை என்றதும் விசாரணை விடயத்தை கைவிட்டுவிட்டார். குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன,விசாரிக்கப் பட வேண்டும் என்பதில் விடாப்பிடியாக நின்ற விக்கி அதை ஏன் இன்னும் செயற்படுத்தவில்லை? அவர்களைப் பதவியிலிருந்து நீக்குவதற்குக்கடத்தனமாகக்கையாண்டஉபாயமாவிசாரணை?

விக்கியும் உடந்தை

அவர்கள் இருவர்மீதும்குற்றச்சாட்டுக்கள் இருக்குமாக இருந்தால் அதற்கானவிசாரணையைநடத்தாமல்மூடிமறைக்கும்விக்கிதானே முதன்மைக்குற்றவாளி. அதைப்போன்றுவிசாரணைக்குமுபதவி நீக்கப் பரிந்துரைத்தவர்கள் மீது சட்டரீதியான நடவடிக்கை எடுக்காமல் அமைதி காக்கும் விக்கிதானே அதிலும் குற்றவாளி.

ஊழலற்ற நிர்வாகம், சரியான நிர்வாகம், உள்ளூராட்சி மன்றங்களில் அமையவேண்டும் என்று எதிர்பார்க்கும் விக்கி, தன்னைக் குற்றவாளியாக அறிவித்திருக்கும் மேற்படி விடயங்களுக்கு என்னசொல்லப்போகின்றார்?கட்டுரையின்ஆரம்பத்தில்சொன்னதைப் போல கதாபிரசங்கம் செய்பவர்கள் தாங்கள் சொல்லும் உபதேசங்களைத் தங்களது வாழ்வில் நடைமுறைப்படுத்துவதில்லை என்பதைத்தான் விக்கி விடயத்திலும் பதிலாக எடுத்துக் கொள்ளவேண்டியிருக்கிறது.

பிரச்சினைகளுக்கு தீர்வுகாணல்

கட்டுரை



அ.அஜந்தன்

கந்தர்மடத்தைச் சேர்ந்தவர். பன்னாட்டுஅரசசார்பற்றநிறுவனத்தில் உளவியல், கல்வி, சிறுவர் அபிவிருத்தி தொடர்பாகப் பணியாற்றிவருகிறார். 2009 காலப்பகுதியிலிருந்து கவிதை, கட்டுரை, சிறுகதை போன்றவற்றை எழுதிவருகிறார். 'மனமெனும் கூடு' என்ற கவிதைத் தொகுப்பு ஒன்றைத் தனது பென்சில் ஓவியங்களுடன் 2016இல் வெளியிட்டிருந்தார். இவரது அனேகமான உளவியல்சார் கட்டுரைகள் உதயன்சூரியகாந்தியில்பிரசுரமாகியிருக்கின்றன.



வாழ்க்கைஎன்பதுபிரச்சினையின்றி வாழ்வதல்ல. வாழ்க்கை என்பது பிரச்சினைகளைத் தீர்ப்பதில் உள்ளது' என்கிறார்டொம்குரோஸ். பிரச்சினைஎன்பதற்குப் பின்வருமாறு சில வரைவிலக்கணங்களைக் கூறமுடியும்:

'நாம் தற்பொழுதுள்ள நிலைக்கும் இப்படித்தான் இருக்கவேண்டும் என்று நினைக்கின்ற நிலைக்குமிடையிலான இடைவெளி அல்லது விதிமுறைகளுக்கு விதிவிலக்கான விடயங்கள் அல்லது புரிந்துகொள்வதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு அல்லது சமாளிப்பதற்குக் கடினமான ஒன்று' எனலாம். சில மனிதர்கள் பிரச்சினைகளைச் சுற்றி அலைந்து திரிவதிலே அதிக நேரத்தையும் சக்தியையும் செலவிடுகின்றனர். ஆனால் பிரச்சினையைத் தீர்ப்பதில் அத்தனை கரிசனையைக் காட்டுவதில்லை. 'பிரச்சினை தொடர்பாக கதைத்துக்கொண்டிருப்பதைவிட தீர்ப்பதைப்பற்றி சிந்திக்கத் தொடங்குங்கள்' என்பது ஒரு முதுமொழி.

படைப்பாற்றல் பிரச்சினைகளைத் தீர்க்கும்

பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பல படிமுறைகள் இருப்பினும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்குச் சில திறன்கள் அவசியமாகின்றன. திறந்த மனதுடன் இருத்தல், நியாயத்தின் வழி செயற்படுதல், பொருத்தமான வினாக்களை வினாவுதல், நிதானமாகச் செயற்படல், உற்சாகமாக இருத்தல், சரியான மனப்பாங்கு, பயமின்றி எதிர்கொள்ளல் மற்றும் படைப்பாற்றல் திறன்களும்; அவசியம். 'படைப்பாற்றல் அனேகமாக எல்லாப் பிரச்சினைகளையும் தீர்க்கும்' என்கின்றார் ஜார்ஜ் லூயிஸ். பிரச்சினைகளை நாம் எதிரியாகப் பார்ப்;பதைவிட சரியான ஒன்றைச் செய்வதற்காகத் தரப்படும் சந்தர்ப்பமாகக் கருதிக்கொள்வது பிரச்சினை தொடர்பான பயத்தை அகற்றித் தீர்வைநோக்கி நகர்த்தும்.

பட்டறிவு என்கிற அனுபவ அறிவு

சில சமயங்களில் பிரச்சினைகள் அதற்கான தீர்வை எதிர்பார்ப்பதில்லை. அதற்குப் பதிலாக அந்தப் பிரச்சினையால் ஏற்படும் அனுபவம் அந்தப் பிரச்சினையை வெளியேற்றும். இதையே பெரியவர்கள் பட்டறிவு என்பர். பல இடங்களில் பிரச்சினையை தீர்ப்பவர்கள் வயது முதிர்ந்தவர்களாகவே உள்ளனர். அவர்களின் ஆலோசனையும் அனுபவப் பகிர்வும் பல பிரச்சினைகளைத் தடுக்கவும் தீர்க்கவும் உதவுவதற்கு இதுவே காரணம். பிரச்சினை என்பது எமது பாதையில் வரும் வளைவு போன்றது. அதைத் துணிவோடு கடந்தால் மட்டுமே பயணம் நிறைவுறும். அத்துடன் வளைவைக் கடந்தவுடன் மீண்டும் வாழ்வு நேர்பாதையில் செல்வதை உணரமுடியும். பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான 7படிமுறைகளை நாம் கையாளமுடியும். இந்தப் படிமுறைகளை ஒருமுறை பயன்படுத்தினால் அதன்பின்பு வரும் பிரச்சினைகளுக்கு ஒரு சில படிமுறைகளே தீர்வுகாண்பதற்குப் போதுமானதாக இருக்கும்.

1.பிரச்சினைகளை அடையாளம் காணுதல்

உங்களிடம் உள்ள பிரச்சினையைத் தெளிவாக அடையாளம் கண்டுகொள்ளுங்கள். உங்களது பிரச்சினைப் பற்றி வெளியிலிருந்து பார்ப்பவர்கள் வெள;வேறுபட்ட கருத்துக்களை கொண்டிருப்பர் என்பதை நீங்கள் தெரிந்து வைத்திருக்கவேண்டும். அது பல சமயங்களில் உங்களை மேலும் பல சிக்கலான நிலைக்குள் தள்ளப் பார்க்கும். ஆனாலும் உங்களது பிரச்சினை என்ன என்பதை உங்களால்மட்டுமே உணரவும், அடையாளம் காணவும் முடியும். பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முதலில் பிரச்சினை எதுவென்பதும் அதன்பாதிப்புத்திறனையும்நன்குஅறிந்திருத்தல்அவசியம்.

2.தீர்வுகாண்பதில் எல்லோரது நலன்களையும் புரிந்துகொள்ளுதல்

பிரச்சினையைத் தீர்க்கும்பொழுது பொதுவாகவே அனைவரது நலன்களைப்பற்றிய சிந்தனை மிகக் குறைவாகவே உள்ளது. எடுக்கவுள்ள தீர்வுகளில் நீங்கள் திருப்தியடைந்து கொள்ள அந்தத்தீர்வு முயற்சியில் ஆர்வம் இருப்பது அவசியம். அனேகமாக நாம் தீர்வொன்றை எடுக்க முனைகின்ற பொழுது எமது உண்;மையான நலன் கருத்திலெடுக்கப்படுவது குறைவு. பிரச்சினையோடு தொடர்புடையவர்கள் அனைவரதுநலனையும்கருத்திலெடுத்துதிருப்திப்படுத்தக்கூடிய தீர்வே ஒரு சிறந்ததீர்வாக அமையும். பிரச்சினைக்குரியவர்கள் பிரிவினைகள், முறைப்பாடுகளை ஒருபுறம் தள்ளிவைத்துவிட்டு ஒருவருக்கொருவர் புரிந்துணர்வுக்;காகச் செவிசாயுங்கள். அப்பொழுதுதான் இருவருக்கும் சாதகமானதீர்வுகிடைக்கும். ஒன்றுக்கு மேற்பட்டதீர்வுகளின் பட்டியலிலிருந்து நலன்களை அடையாளப்படுத்திக் கொள்ளுங்கள்.

3.சாத்தியமாகக்கூடியதீர்வுகளைபட்டியல்;படுத்துதல்

மூளைச்சலவை செய்யவேண்டிய தருணமாக இது அமையும். பொறுமையுடன் தீர்வுபற்றிய படைப்பாற்றல்; சிந்தனை சிறந்த தீர்வினைப் பெற்றுத்தருவதற்கு வழிவகுக்கும். படைப்பாற்றல் உடையவர்கள் பிரச்சினைகளைப் பல கோணங்களில் பார்க்கும் ஆற்றலைக்கொண்டிருப்பர். எல்லாத் தீர்வுகளும் சாத்தியமானதாக அமைவதில்லை. அவற்றை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் ஏற்படும் வாய்ப்பு உண்டு. எனவே பிரச்சினைக்கான சாதகமான தீர்வுகளைனங்;கண்டு அவற்றைப் பட்டியலிடவேண்டும்.

4.சாத்தியமான தீர்வுகளை மதிப்பீடு செய்தல்

பட்டியலிடப்பட்ட சாதகமான தீர்வுகளில் நன்மை, தீமைகளைப்பற்றி ஆராயவேண்டும். திறந்த மனதுடனும் நேர்மையான முறையிலும் இது நிகழவேண்டும். பிரச்சினையில் தொடர்புடையோரின் நலன்களும் இந்தவிடயத்தில் செல்வாக்குச்செலுத்தவேண்டும்.

5.மதிப்பீட்டிலிருந்து விருப்பமானதை அல்லது விருப்பமானவற்றைத் தெரிவுசெய்தல்

நடுநிலையாக உங்களுக்கு விருப்பமான அதிக பலனைத் தரக்கூடிய தெரிவை அல்லது தெரிவுகளை ஒன்றிணைத்து நேர்மறையான விளைவுகளைத் தரவல்ல தீர்வை முன்வைக்கவேண்டும். திருப்தியான தீர்வைப் பெறுவதற்குப் பல விருப்பங்களை ஒன்றிணைக்க நேரிடும். மேலும் தீர்வுகள் சாந்தமான விளைவுகளைத் தரக்கூடியதாக அமையப்பெறுவது விரும்பத்தக்கது. தீர்வை நடைமுறைப்படுத்துவதற்கானகாலவரையறையைத்தீர்மானிப்பதும்அவசியமானது.

6.தீர்வை ஆவணப்படுத்தி நடைமுறைப்படுத்தல்

அனேகமான தீர்வுகள் வெறும் திட்டமாக நின்றுவிடுகிறது ஆனால் அது நடைமுறைக்கு வரும்பொழுதே அதன் விளைவு பிரச்சினைய்யத் தீர்க்கும். பல தீர்வுகள் மனதில் தோன்றியிருக்கும் ஆனாலும் அவை மனதில் நிலைத்திருப்பதுகடினம். எனவேமுதலில்தெரிவுசெய்யப்பட்டதீர்வையும் அதன் விளைவையும் ஆவணப்படுத்தி வைத்துக்கொள்ளுங்கள். பின்பு பொருத்தமான வேளையில் அதை நடமுறைப்படுத்திப் பிரச்சினைக்களைத்தீர்க்கவேண்டும்.

7.விளைவையும், கண்காணிப்பையும் மற்றும் மதிப்பீட்டையும் ஏற்றுக்கொள்ளுதல்

நீண்டகாலத் தீர்வுகளின்பொழுது நிபந்தனைகள் சில சமயங்களில்மாறலாம். எனவே எதிர்காலச்சூழ்நிலைகள்பற்றி முன்கூட்டியே உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளுங்கள். தீர்வை நடைமுறைப்படுத்தும்பொழுது தொடர்கண்காணிப்பும் மதிப்பிடுதலுக்குமான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக்கொள்ளுங்கள். குறைந்தது இரண்டு விடயங்களை நீங்கள்மதிப்பிடவேண்டும்:

1. எப்படி இந்த 7படிமுறைகளையும் நடைமுறைப்படுத்தியுள்ளீர்கள்?
2. தேர்ந்தெடுத்ததீர்வின் விளைவுஎன்ன? அதுதிருப்தியாக இருந்ததா?

இவ்வாறான மதிப்பீட்டின் பெறுபேறுகளை ஏற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுதுதான் சாதகமானதும், திருப்தியானதும், நிலையானதுமான தீர்வை அடையமுடியும். பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இவ்வாறான 7படிமுறைகள் ஊடாகசெல்;கின்றபொழுது அதிக நேரத்தையும் கவனத்தையும் எடுத்துக்கொண்டாலும் இந்தப் படிமுறை இரண்டு நபர்களிடையேஉள்ளபிரச்சினைகளுக்கு அல்லதுஒருகுழுவுக்குள் நிகழும் பிரச்சினைகளுக்கு அல்லது ஒரு கடினமான பிரச்சினைக்குத்தீர்வுகாண்பதற்கு திறம்பட வழிசமைக்கின்றது.

கவிதை

விடுதலை



கனகபுனிதராஜாஸ்ரீகர்சன்

உரும்பிராயைச் சேர்ந்த இவர், யாழ். இந்துக்கல்லூரி உயர்தரக் கணிதப் பிரிவு மாணவர். கவிதை, கட்டுரை எழுதுவதில் ஆர்வம் உள்ள இவர், பாடசாலை மட்ட வெளியீடுகளில் எழுதியுள்ளார்.

பத்து மாதம் அன்னையின் கருவறையில்
பக்குவமாய் வளர்ந்த நாம்
பாரினைக் காண்பதற்காக- ஜனனம் எனும் பெயரில்
விடுதலையாகின்றோம்.

கல்வியறிவை விருத்தி செய்ய
பள்ளிக்குகுச் சென்று
பத்தொன்பது வயதினிலே - அதினின்றும்
விடுதலையாகின்றோம்.

நம் வாழ்வினை முடிவுசெய்யவும்
பல்கலைகளையும் விருத்தி செய்யவும்
பல்கலைக்கழகம் சென்று -
மூன்றே ஆண்டுகளில் அதினின்றும்
விடுதலையாகின்றோம்.

மண்ணில் மதிப்புடன் வாழ்ந்த நாம் -இறுதியில்
மண்ணுக்கே இரையாக
மரணம் எனும் பெயரில் -
இவ்வுலகை விட்டே விடுதலையாகின்றோம்.

இத்தனை விடுதலையும் பெற்ற நாம்
ஈழத்திரு நாட்டில் உள்ள
இன்னல்களிலிருந்து
விடுதலையாவது எப்போது?





தன்னிகரில்லாத் தமிழர் பண்பாடு

கட்டுரை



கே.பாலன்

உடுப்பிட்டி – வல்வெட்டித் துறையைச் சேர்ந்த இவர், கலை, இலக்கியத்துறை யில் ஈடுபாடு கொண்டவர். கவிதை, கட்டுரைகளை எழுதி வருகிறார்.

உலகிலே முதன் முதல் தோன்றிய இனம் தமிழினம். இந்த இனம் இந்தியாவிலே குமரிக் கண்டத்திலே தோற்றம் பெற்றதாகவும், பின்னர் ஏற்பட்ட கடல்கோள்களால் வேறு வேறு நாடுகளில் குடியேறினர் என்பதும் ஆராய்ச்சியின் வெளிப்பாடு. இந்த உண்மையைப் பண்டைய இலக்கியங்களும் பகர்ந்துள்ளன. இதனால், கல் தோன்றி மண் தோன்றாக் காலத்துக்கு முன்தோன்றிய மூத்த குடி தமிழ்க் குடி என்பர்.

இவ்வாறு தோன்றிய தமிழினத்தால் பேசப்படும் தமிழானது இறைவனால் பொதிகை மலையிலே வைத்து அகத்திய முனிவருக்கு அருளிச் செய்யப்பட்டதாக ஆன்றோர் கூறுவர்.

இவ்வாறு பொதிகை மலையிலே பிறந்த தமிழானது பொருணை நதியிலே தவழ்ந்து முச் சங்கங்களிலே நடமாடித் திளைத்து வளர்ந்ததென்பர்.

தமிழ் இனத்தின் இயல்பான இறைபக்தியும், அதன் பண்பாட்டுக் கோலங்களும் வேறு எந்த இனத்திலோ, மொழியிலே காணமுடியாத தனித்துவமுடையவை. இதனால் இது இறைவானால் அருளிச் செய்யப்பட்டதாக எண்ண இடமுண்டு.

உலகிலேயே சிறந்த பண்பாட்டுக் கோலங்களையுடைய இனமாகத் தமிழினம் அடையாளம் காணப்பட்டமை வரலாற்று வெளிப்படை.

ஒரு மனிதன் எவ்வாறு வாழ்வாங்கு வாழவேண்டுமென்பதை பண்பாட்டு ரீதியாக உணர்த்தியிருப்பதை மேலைத்தேய அறிஞர்களும் இன்று ஏற்று வருகின்றனர்.

காலத்துக்காலம் உலக சூழ்நிலை மாற்றமடைந்து வருகின்றது. நம்முந்தைத் தமிழரின் வாழ்வியலை உற்றுநோக்கும்போதுதான் தமிழர் பண்பாட்டின் தன்னிகரில்லாத் தன்மையை உணரவும், உணர்த்தவும் முடியும்.



சமயத்தின் வழி வளர்ந்த மொழி

தமிழர் பண்பாடு என்று கருதும்போது அவர்களின் பழக்கவழக்கங்கள் வாழ்க்கை முறைகள், கொள்கைகள், கோட்பாடுகள், சமூகநியதிகள், அகத்தினை, புறத்தினை சார்ந்த மரபுகள் இலக்கிய மரபுகள் அரசியல் விதிமுறைகள், உணவுப் பழக்க வழக்கங்கள், ஆலய மற்றும் வீட்டு நிகழ்வுகள், ஆடையணிகலன்கள், பொழுதுபோக்குகள், விளையாட்டுக்கள், கவின்கலை மரபுகள், நாட்டுப்பாடல்கள், நாடோடி இலக்கியங்கள், பழமொழிகள், முதுமொழிகள் மற்றும் நாடகம், நாட்டியம், ஓவியம், சிற்பம், கட்டடக் கலை போன்றவற்;றைக் குறிப்பிட லாம். பொதுவாகத் தமிழர்கள் அதிகாலை நித்திரைவிட்டெழுந்து காலைக்கடன்களை முடித்த பின் நீராடி இறைவனை வணங்கிய பின்னரே எந்தத்தொழிலையும் செய்வர். திருவிழாக் காலங்களிலும் விசேட தினங்களிலும் கோயில் வழிபாட்டில் முழுமூச்சாக ஈடுபடுவர். தமிழ்ப்பண்பாடு என்பது சமயப்பாட்டின் அடிப்படையிலேயே நடைமுறையிலிருந்தது. அதாவது சமயப்பண்பாடு எதைக் கூற வந்ததோ அதையே தமிழர் தம் பண்பாடாகக் கொண்டிருந்தனர். தமிழ்மொழிக்கும் இந்து சமயத்துக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதை நாயன்மார்களின் வரலாறுகள் உணர்த்தி நிற்கின்றனர். தமிழ்மொழியை முருகப்பெருமானுடன் தொடர்புபடுத்திப் பேசுகின்றமையும் சுந்தர மூர்த்தி நாயனாருக்கு இறைவன், 'தம்மைத் தமிழால் பாடுக!' என்று கட்டளை இட்டதும் அருணகிரிநாதருக்கும் உமாபதி சிவாச்சாரியாருக்கும் பாடலுக்கு அடியெடுத்துக் கொடுத்தமை போன்ற பல சம்பவங்கள் இந்து மதத்திலே பதிவாகியிருக்கின்றமையானது தமிழுடன் சைவம் கொண்டிருக்கும் பிணைப்பையே எடுத்தியம்புகின்றது.

தமிழும் ஒழுக்கமும்

தமிழர் தம் பண்பாட்டிலே ஒழுக்கம் என்பதற்கே முன்னுரிமை கொடுத்துள்ளனர். ஒழுக்கம் என்பது ஆண், பெண் இருபாலாருக்கும் உரியது. அதிலும் முக்கியமாகப் பெண்களின் கற்பு பாதுகாக்கப்படவேண்டும் என்பதிலே கவனம்செலுத்தப்பட்டது. இதனால் ஆண்கள் எதைவேண்டுமானாலும் செய்யலாம் என்பது அல்ல. பெண்கள் கற்பொழுக்கமுள்ளவர்களாக இருப்பதன் மூலமே ஆண்களும் ஒழுக்கமுள்ளவர்களாக அவ்வாறு இருக்க முடியும் என்ற நம்பிக்கை இருந்தது. மேலும் திருமணத்தின்போது தாலி கட்டுதல், அறுகரிசிபோட்டு ஆசீர்வதித்தல், கற்பூர ஆராத்தி எடுத்தல் என்பனவும் பொருள் நிறைந்த தமிழர் பண்பாட்டு முறையே. ஒருவனுக்கு ஒருத்தி என்ற உயர்ந்த பண்பாடும் தமிழினத்துக்கே சொந்தமானது. கோயில்திருவிழாமற்றும்ஏனைய விழாக்களின்போதும் சமய நிகழ்ச்சிகளின் போதும் ஆண்கள் வேட்டி, சால்வை அணிதல், பெண்கள் சேலை, சட்டை அணிதல், தலையிலே பூச்சூடுதல், பொட்டுவைத்தல், ஆபரணம்அணிதல் போன்ற கடைப்பிடிக்கப்படகின்றன. இவையாவும் சமய அனுட்டானங்களோடுஒன்றிய ஒரு பண்பாட்டுரீதியான நடவடிக்கைகள். இவைபண்டையகாலத்திலிருந்துஇன்றுவரைகடைப்பிடிக்கப்பட்டுவருகின்றன.பழக்க வழக்கங்கள் வாழ்க்கை முறைகள், கொள்கைகளின் அடிப்படையில் அறம், பொருள், இன்பம் என்பன தமிழர் பண்பாட்டின் சிறந்த கூறுகளாக உள்ளன.

விருந்தோம்பலும் அறப்பணிகளும்

நம் முந்தைத் தமிழர் திரைகடல் ஓடித் திரவியம்தேடினார்கள். தேடிய செல்வத்தைக் கொண்டு அறப்பணி பல ஆற்றினார்கள். கோயில், குளம் கட்டினார்கள், தான தர்மம் செய்தனர். அன்னதான மடம், தண்ணீர்ப்பந்தல் நிறுவி அறப்பணி ஆற்றினார்கள், தெருவோரம் நிழல் மரங்களைநாட்டினார்கள். இதனால்சூழல்பாதுகாக்கப்பட்டது. விருந்தோம்பலில் சிறந்து விளங்கினார்கள். இரவில் விருந்தி னர் வந்தால் கூட இன்முகத்தோடு இனியவை கூறி வந்தாரை வரவேற்று விருந்தோம்பல் செய்து அகம் மிக மகிழ்ந்தனர். ஏழை, எளியவர்க்கெல்லாம் உணவு கொடுத்து "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்பதற்கமைவாக வாழ்ந்து வரலாறு படைத்தனர்.

இரக்கமும் மதித்தலும்

பண்டைய காலத்தில் தமிழ் மன்னர்கள், அறிஞர்களையும் புலவர்களையும் தமது தகுதிக்கு மேலாக மதித்துள்ளனர். முரசு கட்டில் என்பது அரசர்களின் வீரமுரசம் வைப்பதற்குரிய இடம். அதை யாரும் வேறு தேவைக்காகப் பயன்படுத்தினால் மன்னிப்பு கிடையாது. ஒரு முறை சேரமான் என்ற அரசனின் முரசை சுத்தம் செய்வதற்காகச் சேவகர்கள் எடுத்துச் சென்றுவிட்டார்கள். அவ்வேளையில் அரசனைத் தேடி வந்த மோசிகீரனார் என்ற புலவர் நடந்துவந்த களைப்பால் முரசு கட்டிலென அறியாமல் அந்தக் கட்டிலில் உறங்கிவிட்டார். சிறிது நேரத்தில் அங்கு வந்த அரசன் பார்த்தபோது யாரோ ஒருவர் முரசுகட்டிலில் உறங்குவதைக் கண்டு சினங்கொண்டான். வாளை உருவிக்கொண்டு அவர் அருகில் சென்றபோதுதான் தெரிந்தது அதில் உறங்கியவர் ஓர் ஏழைப் புலவர் என்று. தெரிந்ததும் விசிறி கொண்டு விசிறினான். மனிதர்களுக்கு மட்டுமன்றி பறவைகள், மிருகங்கள் மீதும் இரக்கப்பண்புள்ளவர்களாக அரசர்கள் விளங்கியுள்ளனர். முல்லைக் கொடிக்குத் தேர் ஈய்ந்த பாரி மயிலுக்குப் போர்வை தந்த பேகன் என்பவர்களும் இரக்கப்பண்புடைய தமிழர்களே.

பக்தியும் நீதியும் வளர்த்த பண்பாடு

தமிழ்ப்பண்பாட்டுக்கு அடிப்படையாக இருப்பது பக்தி என்று குறிப்பிடலாம். பக்தியென்பது நீதியின் பாற்பட்டது. நீதியைக் கூறுவதற்கு சமய வழிபாடுகள், பக்தி இலக்கியங்கள், அறநெறி நூல்கள், நீதிநூல்கள், பழமொழிகள், முதுமொழிகள் முன்நின்று உதவுகின்றன. தவத்திரு தனிநாயகம் அடிகளார், தொல்காப்பியம் பொருளதிகாரம், குறுந்தொகை, புறநானூறு திருக்குறள், சிலப்பதிகாரம் என்பவற்றைத் தமிழ்ப்பண்பாட்டின் களஞ்சியம் எனக் குறிப்பிடுகின்றார். உலக நீதி இலக்கியங்களை ஆராய்ந்து ஆய்வு நூல்களை இயற்றிய 'அல்பேர்ட் சுவைட்சர்' என்னும் மேல்நாட்டவர் திருக்குறள் போல் உயர்ந்த பண்பாட்டுக் கோட்பாடுகள் அடங்கிய நூல் இவ்வுலகில் காண்பது அரிது என்கிறர். இவ்வாறு தமிழ்ப்பண்பாட்டைக் கூறும் நூல்கள் தமிழ்த்தேசத்துக்கு மட்டுமன்றி மேலைநாட்டவரும் கற்றுணரும் அளவுக்குப் பண்பாட்டுக்குச் சிறந்த நூல்களாக மிளிருகின்றன.

வாழ்வியலில் பண்பாட்டு வெளிப்பாடுகள்

தமிழ்பண்பாட்டின் செறிவை உள்நாட்டில் மட்டுமன்றி மேலைநாடுகள் சிலவற்றில் கொண்டாடப்படும் விழாக்களின் மூலம் அறிய முடிகிறது. தமிழ் அறநூல்கள் புறத்தூய்மையை விட அக்தூய்மையையே அதிகம் வலியுறுத்துகின்றன. அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்கிற ஐங்குணங்களையும் கொண்டது தமிழர்பண்பாடு.. ஆன்மிகத்தில்நாட்டமும்எதையும்நடுவுநிலைமையோடு சிந்திக்கும் முதிர்ச்சியும் இங்கே உணரப்படுகின்றது. நல்வினை, தீவினை, ஊழ்வினை, மறுபிறவி என்பவற்றைத் தமிழர்கள் முற்று முழுதாக நம்புவதால் அது அறத்தின் வழியில் செயற்பட ஏதுவாய் அமைந்துவிட்டதெனலாம்.

தமிழர்தமதுபண்பாட்டைப்பொழுதுபோக்குநிகழ்ச்சிகளிலும், விளையாட்டுக்களிலும், நாட்டார் போன்ற இலக்கியங்களிலும்;, பழமொழிகள், முதுமொழிகள், நாடகம், நாட்டியம், ஓவியம், சிற்பம், கட்டடக்கலைகள் போன்ற வற்றினூடாகவும் வெளிப்படுத்தி உள்ளனர். இவற்றின் உண்மையான பயனை அனுபவிப்பதனூடாக அன்பு, அறம், அகிம்சை, நீதி, வீரம், ஒழுக்கம், விட்டுக்கெடுக்கும் மனப்பாங்கு, பொறுமை, புரிந்துணர்வு, கடமை கண்ணியம், கட்டுப்பாடு, பொது நலம் போன்ற சிறந்த பண்புகளைக்கொண்டவர்களாக இவர்களால் மிளிர முடிகிறது.

கலித்தொகை என்றும் நூலிலே காளையை அடக்கும் போட்டி நடைபெறுவது கூறப்பட்டுள்ளது. இவ்வாறான வீர விளையாட்டுக்களிலே அந்தக்கால இளைஞர்கள் ஈடுபடுவதென்பது வீரத்தின் பண்பைத் தொட்டு நிற்கிறது. இதன் மூலம் தோல்விகளையும் எதிர்விளைவுகளையும் ஏற்றுக்கொள்ளும் பண்பாடு உண்டாகிறது. பழம்பெரும் கோயில்களில் மட்டுமன்றி இன்றைய கோவில்களிலும் செதுக்கப்படும் சிற்பங்களும், வரையப்படும் ஓவியங்களும் தமிழ் இனத்தின் பண்பாட்டு விழுமியங்களைப் பறைசாற்றி நிற்கின்றன. ஆடற்கலைகளிலே பரத நாட்டியம் என்பது எங்கும் காணமுடியாத ஓர் ஆடற்கலை என்பதை மேலை நாட்டவரும் உணர்ந்து போற்றுகின்றனர்.

மனம் விட்டு மகிழ்வுட்டல்...

இன்றைய அவசர உலகில் எமது உறவுகள் நிலைக்க உள்ளங்கள் பேசுவது அரிதாகவே காணப்படுகிறது. கலந்துரையாடல்கள் விருந்தோம்பல்கள், ஆரம்பகால நட்புறவுகள் கலைந்துபோக உலகில் யந்திர மயமாக மாறியதே காரணம் எனப் பல அறிவார்ந்தோர் கூறுவது சான்றாகிறது.

கட்டுரை



செ. யோசப்பாலா

25 வருடங்களுக்கு மேலாக எழுத்துத் துறையில் பயணித்து வருகிறார். உளவளப் பணி மற்றும் சமூகம் சார்ந்த செயல்பாடுகளில் ஈடுபாடுடையவர். 'நான்' உளவியல் சஞ்சிகை ஆசிரியர் குழுமத்தில் ஒருவர். வாழ்க்கை ஓர் அறநெறி, உளவியல் போன்ற கருப்பொருள்களிலேயே அதிகமாகத் தனது எழுத்துக்களை வெளிப்படுத்தி நிற்கிறார்.

பொங்கல் ஒரு விருந்தோம்பலின் அடையாளம். தினம் தினம் எமது உணவுக்கு முக்கியத்துவம் கொடுத்த வாழ்வானாலும், பிறருடன் விருந்துண்டு மகிழ்வதை ஏற்படுத்துவதற்காகவே பல்வேறு கொண்டாட்டங்களில் விருந்தோம்பல் முக்கிய இடம் பெறுகிறது.

உற்றார், உறவினர்கள், சுற்றத்தார், நண்பர்கள் என விரிந்து சென்ற நட்பின் பரிமாணங்கள் இன்று சுருங்கி, குறுகி, தனிமனித புலம்பலாகி விருந்தோம்பலும் வியாபாரப் பொருளாகி விடுகிறது. விழாவுக்கு அழைத்தவரைக் கவனிக்கும் தேவையால் இருப்பதைப்போட்டு உண்டுவிட்டுப் படத்துக்கு முகம் காட்டும் கலாச்சாரத்துக்குள் சிக்குவதால் உறவுகள், நட்புக்கள், பெருமைக்குப்பேரம்பேசுகின்றன. விருந்தினர் விடுதியில் யார், யாரோ அருகில், உரையாடல், உறவாடல், இன்றியே விருந்தை அருந்திப் பிரியும் நிலையால் விருந்தோம்பல்கள் விசித்திர நிகழ்வாக மாறிவருகின்றன.



விருந்தோம்பலின் பயன்கள்

மனம் விட்டுப் பேசவும் நட்புறவைப் பலமாக்கவும், ஒருவர் மற்றவரின் நிலை உணர்ந்து உதவும் மனப்பான்மை வளரவும், கூடிக் குழாவிய காலங்களில் பிள்ளைகளின் நட்புறவை, உறவு முறைகளை அடுத்த தலைமுறைக்குக் கடத்தும் உரிமை, உறவின் மகத்துவத்தை உணரவைப்பதற்கும் அதனால் உறவின் முறை கூறும் நிலைகள் மைத்துனர், மைத்துணிகள், மாமா, சித்தப்பா, சித்தி, அண்ணா, தங்கை என நீண்டு செல்லும் குடும்பத்தவர்களின் கண்காணிப்பு கரிசனைகள் இறுக்கமாக இருக்கவும் விருந்தோம்பல் உதவுகின்றது. உறவுகளைப் பிற இடங்களில் காணும்போது உறவாடும், உரையாடும், உதவும் மனப்பாங்குகள் தவறிழைக்கும் நிலைகள் அகலக் காரணமானது. இதுவே நம்பிக்கையூட்டும்உறவுப்பாலமாககுடும்பத்தில் வளரும் கரிசனையாக வளர்ந்தது. இல்லம் வருவோரை வரவேற்கும் மனப்பாங்குகள் பண்பாட்டுக் கலாச்சாரங்களாக பேணப்படுவது மனதுக்கு மகிழ்வைத்தரும் செயலானது உழைப்போடு உறவுகளைப் பேணும் நிலை சிறந்த குடும்பக்கலை, இதில் பாரபட்சம் பிரிவினைகளை ஊட்டாது மதிப்பதே நற்பண்பாக வேண்டும். வீட்டில் கதவு தட்டும் சத்தம் கேட்டாலே வரறேறு உபசரிக்கும் தொனியும், புன்னகைக்கும் பாங்கும் வீட்டில் உள்ளவர்களுக்குள் உருவாக வேண்டும். வருபவர், உள்செல்லலாமா? வேண்டாமா? என உடல்மொழியில் உணரவைக்கும் நிலைகண்டு தொடரும் நட்புக்களே குடும்பத்தில் நிலைத்து நிற்கும் உறவாக மாறும்.

'அம்மா யாரோ வந்து நிற்கினம்'(பிள்ளை)
'யாரெண்டு கேள் பிள்ள'(தாய்)
'அண்ணன் எண்டு சொல்லும்'(வந்தவர்)
'யாரோ அண்ணனாம்?' (பிள்ளை)
ஓடிவந்த தாய் 'அண்ணே வாங்கோ, இப்பவாவது வீடு தெரிஞ்சுதே. விஷயமில்லாமல் வர மாட்டியளே' (வந்த அண்ணனுக்கு)
'யாரோ இல்லைப் பிள்ள, இவர் உங்கட பெரியப்பா, என்ர
மூத்த அண்ணன் பிள்ளை'
(தனது பிள்ளைக்கு)

என அறிமுகப்படுத்தும் உறவு நிலையாகி விட்டது இன்றைய நிலை.

'அண்ண உள்ளுக்கு வாங்கோ நிண்டு சாப்பிட்டுப் போங்கோ, இண்டைக்கு அப்பாட துவச மல்லோ'

'அட அதுக்குள்ள வந்திட்டோ? நான் மறந்திட்டன் நான் ஒரு விஷயமாக வந்தனான் வேறு ஒரு நாள் வந்து சாப்பிடுறன்.' என்று அத்துடன் அறுந்துவிடும் அவர்களின் உறவாடல் பிள்ளைகள் மட்டிலும் கூட அவர்கள் தலைமுறையின் உறவைத் தொடர வாய்ப்பில்லாதுபோகிறது. அடுத்த தலைமுறைகள் அன்னியப்படவும் காரணமாகிறது. யாரோ, யாரோ எனச்சொந்த உறவுகளையே தொலைத்தற்கு யாரும் காரணமல்ல தேவை, சுயநலம் மனம் விட்டுப் பகிர முடியாத வாழ்வியலால் இளைய தலைமுறைகள் உறவுள்ள அநாதைகளாகிவிட்ட. இதுவே இன்றய இளமைகளின் மனதில் நான் எதையும் செய்யலாம், எப்படியும் வாழலாம், எனக்கு வழிகாட்டயார் இருக்கிறார்கள்? எனது செயலை கண்காணிக்க எவரும் இல்லை என்ற நிலையை உருவாக்கக் காரணமாயிருக்கின்றது.

சமூக சீரின்மைகளுக்கு இளையோர் தவறே காரணம்

கட்டுப்படுத்த முடியாது திண்டாடும் இன்றைய இளையவர்களின் நிலைக்கு அவர்களைத்; தவறாகப் பயன்படுத்திச் சீரழிப்போர் மலிந்து போக உறவு நிலை மதிக்காத தன்மை அவர்களிடம்ஏற்படுகின்றது. பாலியல்குற்றங்களும், போதைவஸ்து கலாச்சாரமும், வீதி விபத்துக்களும், வன்முறையும் தீர்க்கப்படாத தீர்ப்புக்களாகிவிட்டன. இந்த நிலையில் உள்ளங்களே சீரற்ற எண்ணங்களால் பொங்கிச் சரிகின்றனயாரிடமும்மனம்விட்டுக்கூறமுடியாது மனப்பாரம் சுமையாகி மருந்து மாத்திரைக்குள் முடங்கிக்கிடப்போரும், இது நோயா? நான் என்ன மனநோயாளியா? எனப் புலம்பி அழுவோரும் உணவு, உறக்கமின்றி யாருடைய துணையுமின்றிக் குடும்பத்திடையே இருந்து தனித்து, உளநெருக்கீட்டால் அல்லலுறுகிறார்கள். வீடே சிறையாகி, இருட்டறையாகி வெளிவர முடியாது சிக்கித் தவிப்போரின் மனப் பொங்கல்களைகொட்டிப்பகிர யார் முன்வருவார்? இதுவே இன்றைய யதார்த்த பொங்கலாக பொங்கிச்சரிகின்றது?

எண்ணங்கள்எதுவோஅதுவே வாழ்வாகிறது. அந்தஎண்ணங்களை உருவாக்கும் உயர்நிலயம் குடும்பமே. இன்றைய இளையோரின் தவறுகளுக்கு அவர்கள் மட்டும் காரணமல்ல, அவர்களை உருவாக்கும் குடும்பத் தளங்களும், சமூகங்களும் இதற்கான தமது பொறுப்புக்களை ஏற்காதவரை சமூகச்சீரின்மைகள் தொடர்கதையாகவே தொடரும். வெற்றிக்கு உரிமை கோரும் பாடசாலையும், சமூகமும், குடும்பங்களும் சமூகத் தோல்விக்கும் பொறுப்பானவர்களே என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். நல்லெண்ணங்களுடன் கூடி மனம்விட்டுப் பேசும்போது மகிழ்வூட்டல் அனைவரது இல்லங்களிலும்நிறையும். இனிய பொங்கலாக அதுவே ருசிக்கும்.

எண்ணங்கள் எதுவோ அதுவே வாழ்வாகிறது. அந்த எண்ணங்களை உருவாக்கும் உயர்நிலயம் குடும்பமே. இன்றைய இளையோரின் தவறுகளுக்கு அவர்கள் மட்டும் காரணமல்ல, அவர்களை உருவாக்கும் குடும்பத் தளங்களும், சமூகங்களும் இதற்கான தமது பொறுப்புக்களை ஏற்காதவரை சமூகச் சீரின்மைகள் தொடர்கதையாகவே தொடரும்.



தன்னிகரில்லாத் தமிழர் பண்பாடு....

காதலும் நட்பும்

தமிழர் பண்பாட்டிலே காதலும் வீரமும் சிறந்த பண்பாடாகப்பண்டைக்காலத்தில்மிளிர்ந்துள்ளன. அன்றைய காதலென்பது கற்பொழுக்கம் நிறைந்ததாக இருந்துள்ளது. "இம்மை மாறி மறுமையாயினும் நீயாகியர் என் கணவரே யானாகியர் நீ., நெஞ்சு நேர்பவளே' - என்று குறுந்தொகையிலே காதலர் ஒருவருக்கொருவர் கொண்டிருந்த அன்புவெளிப்படுத்தப்படுகிறது. நட்புஎன்பதுபண்டைக்காலத்தில் மிகச் சிறந்த பண்பாடாக விளங்கியிருக்கின்றதென்பதைப் பல சான்றாதாரங்கள் நிரூபிக்கின்றன. அரசன் புலவர், கணவன் மனைவி போன்ற நட்புகள் பல பதிவுகளாகியுள்ளன. சோழ நாட்டையாண்ட கோப்பெருஞ் சோழன் என்ற மன்னனுக்கும், பாண்டிய நாட்டைச் சேர்ந்த ஆந்தை என்ற புலவருக்கும் ஒருவரை ஒருவர் முகம்தெரியாதிருந்தபோதும்நல்லநட்புஇருந்திருக்கிறது. சோழன் உயிர்துறக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டபோது அதை அறிந்த ஆந்தை என்ற புலவரும் சோழநாடு வந்து இருவரும் ஒன்றாக உயிர்துறந்ததாக வரலாறு. பூத பாண்டிய மன்னன் உயிர் துறக்க அவன் மனைவியும் உடன்கட்டை ஏறி உயிர் துறந்த சம்பவம் போல.

இயற்கையும் தமிழரும்

பண்டைய தமிழர்கள் இயற்கையைப் பாதுகாத்து மதிக்கும் பண்பைக்கொண்டவர்களாக இருந்துள்ளனர். மலைகள், ஆறுகள் மரங்கள் போன்றவற்றையும்; நிலம் நீர், காற்று, தீ, ஆகாயம் என்ற ஐம்பூதங்களையும்; சூரியன், சந்திரன், உடுக்கள் போன்றவற்றைக்கடவுளாகவும் வணங்கிவந்துள்ளனர். இதனால்பருவம்தவறாதுமழை பெய்தது. உலகில் ஜீவராசிகள் மகிழ்சியாக வாழும் சூழ்நிலையும் ஏற்பட்டது. சூழல் மாசடைதல் என்ற நியதிக்கு இடமிருக்கவில்லை. இவைகள் கூட இயற்கையைப் பேணும், இரசிக்கும் அழகுணர்ச்சிப் பண்பாடாக ஏற்றுக் கொள்ளப்பட்டன.

அதுபோலவே மலையும் மலைசார்ந்த இடமும், கடலும் கடல் சார்ந்த இடமும், வயலும் வயல் சார்ந்த இடமும், காடும் காடு சார்ந்த இடமும், மணலும் மணல் சார்ந்த இடமும் என விளங்கும் தரை வேறுபாடுகளைக் கூறுகளாகப் பிரித்து அவை முறையே குறிஞ்சி, நெய்தல், மருதம், முல்லை, பாலையெனப் பெயர் கொண்டு அழைப்பதற்கான சிந்தனை வடிவம் தோற்றம் பெற்றது. தமிழ் மூதாதையர் இயற்கையை மதித்து அதன் நிழலிலே வளர்ந்தவர்கள்.; நோயின்றி வாழ்வதற்கு மூலிகைகளைப் பயன்படுத்தினார்கள். இயற்கையாகக் கிடைக்கும் மூலிகைச் செடிகளைக்கொண்டு மருத்துவம் செய்தனர். சித்த மருத்துவம் என்றழைக்கப்படும் மூலிகை வைத்தியம் சிறப்புப் பெற்றது. தற்போதுள்ள நவீன சிகிச்சை முறையால் மாற்ற முடியாத நோய்களை பக்கவிளைவுகளற்ற சித்த மருத்துவ முறையால் மாற்ற முடியும் என்பது நிரூபிக்கப்பட்டு வருகின்றது.

நம் மூதாதையரும் சித்தர்களும் நீண்ட காலம் சுக தேகிகளாகவாழ்ந்துள்ளனர்என்பதுவரலாறுகூறும்உண்மை. முந்தைத் தமிழர் செடி, கொடி வகைகள் பூக்கள், வாசனைத் திரவியங்கள், மருத்துவப் பொருள்கள் போன்ற பொருள்களின் பெயரிலே நூல்களை ஆக்கியுள்ளமையைக் காணலாம்.

'திரிகடுகம்', 'எலாதி', 'சிறுபஞ்சமூலம்' என்று பெயர்கள் சூட்டப்பட்ட நூல்களே இதற்கு ஆதாரங்கள். இப்படியாக வாழ்வின்அனைத்துப்பகுதிகளுடனும்ஒன்றித்துவளர்ந்தஒரு நன்னெறிப்பண்பாடேதமிழர் பண்பாடாகும்.

புதிய நூற்றாண்டில் ஈழத்து வடபுலத் தமிழ்க் கவிதைகள்

'கலைகளின் அரசி கவிதை' என்பர். கவிதை பழமையிலும் பழமையானது. அது வெறும் சொற்களோ, சொற்றொடர்களோ, பாக்களோ, யாப்புக்களோ அல்ல. சொற்களால் சொற்களை ஊடுருவித் துளையிட்டு வெறுவெளியுள் கலந்திடும் காற்று அது. ஒவ்வொருவருக்கும் தகுந்தாற்போல் அர்த்தப்பாடுகளைத் தருவது. 'கல்லும் பிராணன் எடுத்து மேலெழுந்து பறந்தது' எனும் பசுவையாவின் கவிதை வரியைப்போல கல் கவிதையாகும் கதையே கவிதைக் கலையின் கதை எனலாம். தமிழ்க் கவிதை தனக்கென ஒரு பாரம்பரியத்தைக் கொண்டிருப்பதுபோல ஈழத்தின் வடபுலமும் தனக்கெனத் தனித்துவமான தமிழ்க் கவிதைப் பாரம்பரியத்தை உடையது. இங்கு 'வடபுலம்' என்னும் சொல்லால் குறிக்க முற்படுவது யாழ்ப்பாணமும் வன்னிப் பெருநிலமுமே. இந்தப் பிரதேசத்தின் பதினான்கு வருட வாழ்வியற்புலத்தில் கவிதையின் போக்குக் குறித்து இங்கு ஆராயப்படுகின்றது.

கட்டுரை



தி.செல்வமனோகரன்

சிறந்த இலக்கிய விமர்சகராக அறியப்படும் இவர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் விரிவுரையாளராகப் பணியாற்றி வருகிறார். உலகளாவியரீதியில் நடைபெறும் மாநாடுகளிலும் பங்குபற்றி வருகிறார். இலக்கியம் சார் உலகில் அதிகம் ஈடுபட்டு வருகிறார்.

இந்த நூற்றாண்டுக் கவிதைகளை நோக்கும்போது சென்ற நூற்றாண்டில் எழுதப்பட்டு இப்போது தொகுக்கப்பட்ட கவிதைகளும் உள்ளன.

அ. யேசுராசாவின் பனிமழை, சோ. பவின் தென்னிலங்கைக் கவிதைத் தொகுப்பில் சில கவிதைகள், கருணாகரனின் கவிதைகள், மனோகரியின் 'மழுங்கடிக்கப்பட்ட அடையாளங்களும்....' போன்றவற்றைச் சுட்டலாம். இது காலநதியின் ஓட்டத்தில் தவிர்க்க முடியாத செயற்பாடாகும்.

மரபுக் கவிதை பற்றிய அறிவின்றிய தலைமுறை

இந்த நூற்றாண்டுக் கவிதைகளில் மரபுக் கவிதையின் செல்வாக்குக் குறைந்தே காணப்படுகிறது. சோ.ப, பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம், த.ஜெயசீலன் போன்ற சிலரே இன்றும் மரபுக் கவிதைகளை எழுதி வருகின்றனர். புதுக்கவிதையே இந்த நூற்றாண்டில் செல்வாக்குப் பெற்றுக் காணப்படுகின்றது. சுட்டிப்பாகக் கூறின் இளைய தலைமுறை 'மரபுக் கவிதை' பற்றிய அறிவின்றியே அதை ஒட்டுமொத்தமாக நிராகரிப்பது ஆச்சரியமானவிடயமாகும். எண்பதுகளில் இருந்து ஈழத்தில் கவிதை மொழிபெயர்ப்பு முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. ஆ.யு நுஃமானின் பலஸ்தீனக்கவிதைகளே மொழிபெயர்ப்புச் சார்ந்து தமிழில் வெளிவந்த முதற் கவிதைத் தொகுப்பு. முருகையன், சோ.ப, அ.யேசுராசா போன்றோரும் இதில் ஈடுபட்டு வந்தனர். இந்த நூற்றாண்டில் வெளிவந்த 'பனி மழை' (அ.யேசுராசா) 'ஆபிரிக்கக் கவிதை, தென்னிலங்கைக் கவிதை' (சோ.ப) மிக முக்கியமான கவிதை மொழிபெயர்ப்பு நூல்களாகும். தொடர்ந்தும் சோ.ப பல கவிதை மொழிபெயர்ப்புக்களைப் பல சஞ்சிகைகள், பத்திரிகைகளில் எழுதிவருகின்றார். இவரைத்தவிர ந.சத்தியபாலன், தானா விஸ்ணு, சித்தாந்தன் போன்றோரும் மொழிபெயர்ப்பு முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நூற்றாண்டில் வெளிவந்த வடபுலத்துக் கவிதைகளை உள்ளடக்க ரீதியாக இரண்டு வகைப்படுத்தலாம்.

1. போர் சார்ந்தவை அல்லது அரசியல் சார்ந்தவை
2. போர் சாராதவை அல்லது அரசியல் சாராதவை

இங்கு போர், அரசியல் எனும் சொற்கள் ஒரு பொருட்சொற்கள் அல்ல எனினும் ஈழத்தில் இவை பிரிப்பற்ற சொற்களாகவே காணப்படுகின்றன. போர் சாராத கவிதைகள் குறைவாகவே வெளிவந்துள்ளன. 'போர் நடைபெறுகின்றபோது அதைப் பற்றியே எழுதவேண்டும்' என்னும் சாரப்பட்ட கருத்துக்கள் புதுவை இரத்தினத்துரை போன்றோரால் முன்வைக்கப்பட்டமை இதற்குப் பிரதான காரணம் எனலாம். போர் நடந்த காலத்திலும் வடபுல வாழ்வில் காதல், கருணை, பசி, புணர்தல், அழகின் இரசிப்பு இருக்கத்தானே செய்தது. ஆயினும் போர்; சாராது வெளிவந்த கவிதைகளுள் பல வெறும் வரிகளாக, ஒற்றைத்தன்மை வாய்ந்த வையாகவே இருந்தன. யாழ்ப்பாணப் பத்திரிகைகளில் வெளிவந்த பல கவிதைகள் இதற்குச் சான்றாகின்றன. முகநூற் கவிதைகளில் பெரும்பாலாவை நூலுருப் பெற்று வருவதை நாம் அவதானிக்க முடிகிறது. அவற்றுள் அதிகமானவை ஆரம்ப நிலைக் கவிதைகளாகவும் வெற்று வரிகளாகவும் தான் அமைந்துள்ளன. இன்றைய அச்சக மற்றும் பொருளாதார வசதிகளும் புகழ்நாட்டமும் இவ்வாறான மலினப்பட்ட கவிதைகள் அதிகமாக வெளிவரக் காரணமாக உள்ளன.



வடபுலத்திலிருந்து வெளிவந்த போர் சார்ந்த கவிதைகளைப் பின்வருமாறு எடுத்துரைக்கலாம்.

1. போர்- தமிழ்த் தேசியம்.
2. போரின வலியும் வாழ்வின் துயரங்களும்

தமிழ்த் தேசியம் சார்ந்த உணர்வலைகளை, போர் சார்ந்த வீறார்ந்த உணர்வலைகளை ஏற்படுத்தும் நோக்கில் படைக்கப்பட்ட கவிதைகள் ஏராளம். அதேபோல 'கவிதை' எனும் பெயரில் ஆக்கப்பட்ட கோஷங்கள், பரப்புரைகள் போன்றனவும் ஏராளம். புதுவை இரத்தினதுரை, வேலணையூர் சுரேஷ், பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம், பொன்.கணேஷமூர்த்தி என மேற்சொன்ன இரண்டு தளக்கூறுகளிலும் வைக்கக்கூடிய கவிஞர்கள் பட்டியல் இன்னும் நீளும். இவற்றுட் பல பாடல்களாக, அரங்கக் கவிதைகளாக எனப் பல்வடிவங்கள் பெற்றும் உள்ளன. கருத்தியற் புலத்தில் விடுதலை வேண்டி நிற்கும் இனத்தின் குரலாக இவர்களால் கவிதை முன்வைக்கப்பட்டது. இதேவேளை இறுதிப் போரின் பின் வடபுலக் கவிதைகளில் இந்தக்குரல்கள் ஓய்ந்துபோயின.

போரின் முடிவும்

இருப்புச் சார்ந்த கேள்விகளும் நெருக்கீடுகளும் இதற்குக் காரணங்களாகின்றன. ஒரு கட்டத்தில் போர் சார்ந்த - தமிழ்த் தேசியம் சார்ந்தனவாக இருந்த குரல்கள் மாறுபட்டு போரின் வன்கொடுமைகளைப் பேசுகின்ற - போரை மேற்கொண்ட போராளிகளை நிராகரிக்கின்ற, இணங்கிப் போதலை வலியுறுத்துகின்ற கருத்தியல்களை உடையனவாக உருமாறுகின்றன. உண்மையான மனமாற்றம், இருப்புச் சார்ந்த அச்சம், தேவைகள் என இதற்குக் காரணங்கள் பல கற்பிக்கப்படுகின்றன. எது எவ்வாறு இருந்தபோதிலும் ஒடுக்கப்பட்ட இனத்துக்கான குரலைத் திரிபுபடாது பார்த்துக் கொள்ள வேண்டியது கவிஞர்களின், ஏன் எல்லாத் தமிழர்களினதும் கடமையாகும்.

போரின் பின்னான கவிதைகளில் வலி

போரின் பின் வடபுலத்தில் வெளிவந்த கவிதைகளில் கணிசமானவை போரின் வலியை அந்த வாழ்வைப் பதிவு செய்கின்றன. போர்ப்பிரதேசத்துக்குள் அகப்பட்டவர்களாலும் அதற்கு வெளியே வாழ்ந்தவர்களாலும் இது சாத்தியமாகின்றது. போர்ப் பிரதேசத்துள் அகப்பட்டு அந்த வாழ்வை வாழ்ந்து மறு ஜனனம் பெற்ற தானா விஷ்ணு, கை.சரவணன், கிருபா, லிங்கேஸ் போன்றோர்களில் அதன் வலியைப் புரிந்துகொள்ளலாம். தானாவிஷ்ணுவின் ஒரு சாம்ராச்சியம் மூன்று நாய்கள், மூன்று நட்சத்திரங்கள், சிதறுண்ட காலக்கடிகாரம் எனப்பல கவிதைகளை (கறுப்புருவம் சுமக்கும் ஆந்தைகள்) உதாரணங்களாகச் சுட்டலாம். போர்ப் பிரதேசத்துக்கு வெளியே நின்று போரின் கொடூரத்தை - அதன் வாழ்வை கவித்துவமாக பா.அகிலன், சித்தாந்தன், கிருஷாந், பிரியாந்தி போன்றோர் பதிவு செய்கின்றனர். அகிலனின் சரமகவிகள் 'சிதழூறும் வரிகளை' உடையவை. போர்ப் பிராந்தியத்துக்கு வெளி நின்றவர்களாயினும் போரின் வலியை உணர்ந்தவர்கள் என்பதாலோ என்னவோ இவர்களின் வரிகளில் குருதி கசிகிறது. இந்தக் கவிதைகளில் வாழ்வின் இழப்பும் அலைவும் தீரா நெடுந்துயரும் சிறப்புற வெளிப்படுகின்றன.

இரத்த விளாறாய் கிடந்தான்ளூ
பாதித்தலை
பிளந்த நெஞ்சறையில் நூலிட்டு இறங்க
திரவமாய்க் கசிந்தது இருள்
(பிணி இலக்கம் 178)

எனத் தொடரும் பா.அகிலனின் வரிகள் எமது நெஞ்சுக்குள் நூலிட்டு இறங்குகின்றன. போரையும் தமிழ்த்தேசியத்தையும் ஆதரித்து ஏராளமான கவிதைகள் வெளிவந்துள்ளன. புதுவை இரத்தினதுரை, நிலாந்தன்ரூ, மு.பொன்னம்பலம், சு.வில்வரத்தினம், கருணாகரன், அம்புலி, முல்லைக்கமல், முல்லைக்கோணேஸ், யாத்திரிகன், சித்தாந்தன், தானாவிஷ்ணு, பா. அகிலன், த. அகிலன், தீபச்செல்வன், துவாரகன், எஸ் போஸ், த.ஜெயசீலன், கை. சரவணன் போன்ற இன்னும் பலர் எழுதியுள்ளனர் எழுதி வருகின்றனர். புதுவை இரத்தினதுரையின் கவிதைகள் வீறார்ந்த சொல்லாடல்களும் வீச்சும் போர் முழக்கங்களும், 'அடா' முதலான விளிப்புக்களும் நிறைந்த - அதீத நம்பிக்கை தருவனவாகவே காணப்படுகின்றன. இதன் சாயல் த. ஜெயசீலனின் கவிதைகளிலும் உள. போரியல் சார்ந்த கவிதைகள் எனும் தளத்துக்கு அப்பால் 'கவிதை' என்ற பண்பியற்றளத்தில் நின்று ஆராயின் இவை கோஷங்களால் நிரம்பி வழிகின்றன. பரப்புரைகளால் நீடித்த நெடிவீசுகின்றன. போர் சாராத கவிதைகளிலும் வெறும் சொல்லடுக்குகள் நிறைந்த வார்த்தை ஜாலங்கள் நிறைந்த ஆக்கங்களைக் காணமுடிகிறது. இவையாவும் காலவெள்ளத்துள் காணாது போய்விடும்.

நல்ல கவிதை என்பது சொற்களாற் புலப்படுத்தும் அர்த்தங்களைவிட, சொற்களுக்கிடையே உள்ள வெளிகளால் மௌனங்களினால் கட்டமைக்கப்படும்போது அது பல்பரிமாணமுள்ளதாக மாறிவிடுகின்றது. அதுவே கவிதையின் சிறந்த பண்பு என்றும் கூறலாம். வார்த்தைகளால் கவிதைகளை நிரப்புவதை விடச் சொற்சிக்கனத்தோடு அந்தச் சொற்களைச் சரியான முறையில் ஒழுங்கமைக்கும்போதே நல்ல கவிதை ஒன்று உருவாக முடியும். 'அது ஒரு முடிவில்லாத யாத்திரை. சொல்லிற் தொடங்கி சொல்லின்மையில் முடியுமொரு யாத்திரை' என பா. அகிலன் கூறுவது மனங்கொள்ளத்தக்கது. இவ்வாறான கவிதைகள் பல இந்தக் காலத்தில் தோற்றம் பெற்றன.

ஒரு பொய் வாக்கு மூலம்
ஒரு சதிச் செயல்
ஒரு மாணவன், ஒரு நண்பன்
உப்புப் பாத்திகளின் கீழ் சென்றன
இளமையின் சரிலைகள்
(பா. அகிலன் செம்மணி ஐ)

இதேபோல, தானாவிஷ்ணுவின் காலக்கடிகாரம் போன்ற பலவற்றை இதற்கு உதாரணங்களாகச் சுட்டலாம். சொற்களைப் பின்

புதிய நூற்றாண்டில் ஈழத்து ...

னும்முறைதான்கவிதையின்வெற்றியை, தரத்தை தீர்மானிக்கின்றது. கவிதை வெறும்சொற்களால்வரிகளால்கட்டமைக் கப்படுவதில்லை. அந்தச் சொற்களுக்கும் வரிகளுக்கும் இடையே காணப்படும் தொடர்புகள் மற்றும் வீறார்ந்த வலு என்ப வற்றால்தீர்மானிக்கப்படுகின்றது. அவ்வா றான கவிதைகள் அப்பாலுக்கு அப்பாலாய் காலத்தை வென்றும் நிற்கக் கூடியவை ஆகின்றன. இவ்வாறான தரத்தை பா. அகி லன், தானா விஷ்ணு, சித்தாந்தன், நிலாந் தன் ஆகியோரிடம் பெரும்பாலும் காணமு டிகின்றது.

எளிமையும் இணைந்ததே நல்ல கவிதை ந. சத்தியபாலன், துவாரகன், அஜந்தகுமார் போன்றோர் நம்பிக்கை தருகின்றனர். அதேவேளை, இவ்வாறான இறுக்கமும் சொற்செட்டும், அவரவர்வரித்துக்கொண்ட கோட்பாடும்படைப்புக்களை இருண்மைக் குள் தள்ளிவிடுகின்ற அபாயமும் நிகழ்கின் றது. தரமானநல்லவாசிப்பனுபவம்உள்ள வாசகனால்கூடப் புரிந்துகொள்ளமுடியாத படைப்புக்களாக அமைந்துவிடுகின்றன. மயூரரூபன், விஷ்ணு, சித்தாந்தன் ஆகி யோரின் கவிதைகளிலும் சிலவற்றிலும் இவ்வபாயம் நேர்ந்துள்ளது. படைப்பாளி படைப்பைவெளியிட்டபின்அதுவாசகனுக் குரியதாகிவிடுகிறது. குறைந்தபட்சம்சாதா ரண வாசகனைத் தாண்டி ஒரு நல்ல வாச கனுக்காவதுபுரியும்தன்மைஉடையதாக அமைய வேண்டும். அப்பொழுதே அது சிறந்த படைப்பாகும். 'சொல் புதிது, சுவை புதிது' என்பதோடு எளிமையையும் இணைத்தேபாரதிநல்லகவிதைக்குஇலக் கணம் சொன்னார். கருணாகரன், நிலாந் தன், ஸ்ரீபிரசாந்தன், தீபச்செல்வன், கு.ரஜீ வன், கை. சரவணன், அஜந்தகுமார், துவாரகன், போன்றோரின் கவிதைகளில் இவ்வெளிமையைக் காணமுடியும். கரு ணாகரனின் கவிதைகளில் அவரின் அவ் வவ்காலவாசிப்புஅனுபவத்தின்செல்வாக் கைக் காணமுடிகிறது. பசுவையா மற்றும் மனுஷ்யபுத்திரனின்தாக்கங்களைஅவரது 'ஒருபயணியின்நாட்குறிப்புக்கள்'என்னும் கவிதைத் தொகுதியில் காணமுடியும். கு. ரஜPபனின்,

நீண்டு கொண்டே போகிறது
இரவின் கொடிய இருட்டு
ரத்தமெனக் குடித்தலைபோல
இன்னும் விடிந்தபாடில்லை படியே இருக்கின்றோம்.
மெக்காவை ஒரு பகல்
இன்னும் விடியவே இல்லை (மெக்காவை இருள்'
(கு.ரஜீவன்)

எனும் கவிவரிகள் எளிமையாய் கூற வந் ததை வாசகருக்கு புரியத் தக்கவகையில் கூறுகின்றன. ஆனால் தீபச்செல்வன், கு. ரஜீவன், ஸ்ரீபிரசாந்தன, கை.சரவணன் போன்றோரின் கவிதைகள் சில ஒற்றை அர்த்தத்தோடுஒடிந்துபோகின்றன. அவை வாசகனை சிந்திக்க-சிறகுவிரித்துப்பறக்க விடுவதில்லை. தானா விஸ்ணுவின் சித றுண்ட காலக் கடிகாரம் வாசகனை பல் வேறுதளங்களுக்குசிறகுவிரித்துப்பறக்கச் செய்கிறது. அவரவர் அனுபவப் புலத்துக்கு உணவிடுகிறது. அதுவே நல்ல கவிதை யின் அடையாளமாகும்.
அண்மையில் வெளிவந்த (மே 2014) 'மயான காண்டம் பிந்திய பதிப்பு' எனும் தொகுதிமிகுந்தகவனத்தைப்பெற்றுள்ளது. அதிலும் குறிப்பாக கிருசாந், பிரியாந்தி எனும் இரண்டு இளம் படைப்பாளிகளின் கவிதைகள்வடபுலக்கவிதைத்தளத்தைப் பிறிதொரு தளத்துக்கு நகர்த்திச் செல்கின் றன. கிருஷாந்தின்

நானே கைகளில் விலங்கிடப்பட்டவன்
நானே தெருக்களில் தனித்திருப்பட்டவன்
நானே கடவுளை மன்றாடித்தீர்த்தவன்
கைவிடப்பட்டவன்
நானே மகாமூர்க்கனும் புனிதனும் ஆனேன்
எனை எனையையே உண்டனர் பகிர்ந்தனர்
நானே மரணமும் காட்சியுமாவேன்
.....
நானே தீயுள் சுடரும் காத்திருப்பு
நானே வார்த்தையுள் நெருடும் மறுதலிப்பு
நானே பூமியுள் உறங்கும் பெருவெடிப்பு
நானே நீரும் நிலமும் ஆற்றும் மழையும்

(நானொரு சுயரம் நானொரு வாழ்வு)

எனும் கவிதை தத்துவார்த்தத் தளத்தில் பல வேறு தொன்மங்களை உள்ளடக்கியுள்ளதொரு சுயவிசாரணை - ஆத்ம விசாரணை எனும் தளத்தில் அலைகிறது. தளக்கான தத்துவார்த்த தளத்தை, தன்னைத் தேடுகிறது. நேர்த்தியான சொல் வைப்பு வாசகனைப் பற்றுகிறது. அதேபோல,
'அல்கொரு ஜீவிதமுமற்று
அலைகிறது இலை
.....
ஜீவதம் நீரைந்த அல்வெளியில்
செல்குமற்று அலைகிறதொரு கண்ணின்
தனிமை விரட்டும்
பரவை'

(மூன்று அரசமிலைகள்)

என விரிகின்றது ஒரு கவிதை. குறியீடும், படிமமும் நிறைந்த இந்தக் கவிதை வாச கனை தன்னுலகுக்குள் சஞ்சரிக்கவும் விரும்பிய இடத்தில் அமரவும் வைக்கிறது. இதேபோல நம்பிக்கை தருகின்ற இளங்க விஞைபிரியாந்தி. அவரது அநாமிகா, ஆயி ரமாவது இரவும்அடுத்துவந்தபகலும், துக்க உற்பத்தி மற்றும் துக்க நிவாரணம், நடந்த தடம், மயானகாண்டம்பிந்தியபதிப்புபோன்ற பலகவிதைகள்புதியவாசகதளத்தை-புதிய கவிதா பாரம்பரியத்தை உருவாக்குவதற் குத் தகுதி உடையவை.

'தூரோகத்தின் பசியரிதல் படர்கிறது
உயிர்த்தூப்போன உறவொன்றின்
பழுப்பேறிய பிரதி மீது
.....
வருவார்என்ற நீண்ட மௌனத்தை
முன் முடிக்க உடக்கும் பின்னொரு நாளில்
அவர்கள் அறியட்டும்
எந்த உண்மையும் உன்னை உயிர்ப்பிக்கவில்லை
என்பதை'

(மயான காண்டம் - பிந்திய பதிப்பு)

பிரியாந்தியின் சொல்வெளி மௌனங்க ளால் நிரம்பி வழிகின்றன. தமிழரின் துரோக வரலாற்றை மௌனத்தால் சுடு கின்றன.
தம்மைத்தாமே ஆசுவாசப்படுத்திக் கொள் கின்றன. இறந்த காலத்தைக் கடந்து நிகழ் காலத்தில்பயணித்துஎதிர்காலத்தைநம்பிக் கையோடு எதிர்கொள்கின்றன. இதே போன்று கிருபா, லிங்கேஸ் போன்றோரின்கவிதைகள், நல்லகவிதை களைத் தரக்கூடியவர்கள் இவர்கள் எனும் நம்பிக்கையைத் தருகின்றன.
அதேவேளை இளையதலைக் கவிஞர்க ளின் மொழிக்குறைபாடு படைப்புக்களை -அவற்றின் புலப்பாடுகளை குறைவுடையதாக்கிவிடுகின்றன. தேர்ந்த சொற்களைக்கையாளுவதில்அர்த்தப்புலப் பாடு உள்ளதாய் அவற்றை ஆக்குவதில் பலவீனப்பட்டு நிற்கின்றன. திணை, பால், எண், இடம், சார்ந்த இலக்கணக் குறைபா டுகள்பலரில்காணப்படுகின்றன.
பழந்தமிழ்இலக்கியப்பரிச்சயம், விரிந்தவா சிப்பு என்பனவே இந்தக் குறைகளைத் தீர்க்க உதவும்.
வடபுலத்தில் தோன்றிய கவிதைகள் போரின்வலியையும்வாழ்வையும்சுமந்து நின்றாலும் அதையும் மீறி நம்பிக்கை யோடுஎழுகின்றதமிழ்ச்சமூகத்தைப்படம் பிடித்துக்காட்டுகின்றன. விமர்சிக்கின்றன. வாசகனைப் புதிய தளத்துக்கு இட்டுச் செல் கின்றன.
'வடக்கிருத்தல்' ஆகிப்போன வாழ்வில் இளங்கவிஞர்கள் பீனிக்ஸ் பறவையாய்ச் சாம்பல் மேட்டில் இருந்து பூபாளம் இசைக் கிறார்கள். இசைக்கட்டும், 'பழமையிலும் பழமையான துயரத்தை'.

கவிதை

கனவுப்பொங்கல்



காரைநகரைச் சொந்த இடமாகக் கொண்ட இவர், யாழ். சுந்தரமூர்த்தி வித்தியசாலை ஆசி ரியர் ஆவார். கட்டுரைகள், கவி தைகள் எழுதுவதில் ஆர்வம் காட்டி வரும் இரரது படைப்புக்கள் பத் திரிகைகளில் பிரசுரமாகி யுள் ளன.

பே. யோகேஸ்வரன்

வேப்பஞ் சருகோடு
வீட்டில் சேர்த்த
சாம்பல் வரை
இட்டு உழுது
விதைத்து மாதம் .
ஆறு போன பின்
வெட்டி அடுக்கி
சூடு மிதித்தெடுத்த
முத்தின மொட்டைக்
கறுப்பன் நெல்லரிசியில்
ஒரு பொங்கல்

மாட்டெரு போட்டு
வளர்த் தெடுத்த
மட்டுவில் முட்டிக்
கத்தரிக்காயில்
கறி கொண்ட ஒரு பொங்கல்

மாசிப் பனியோடு
வீசி விதைத்தெடுத்த
பாசிப் பயற்றைக் குற்றி
பக்கத்து வீடு வரை
மணம் வீசும் ஊர்ப்
பருப்பில் கறி கொண்ட
ஒரு பொங்கல்

மாதம் ஒன்பது கொண்ட
மரவள்ளிக் கிழங்கோடு
ஊர்ப் பூசணி ஒரு
துண்டும் சேர்த்துக்
கடைந்தெடுத்த
கிழங்குக் கறியோடு
ஒரு பொங்கல்

வீட்டுக் கோடியிலே
நாட்டி வளர்த்தெடுத்த
சாம்பல் கறி வாழையில்
மஞ்சள் பிரட்டி உப்பிட்டு
பொரித் தெடுத்த வாழைக்
காய்ப் பொரியலோடு
ஒரு பொங்கல்

கன்று குடித்தது போக
கறந்தெடுத்த நாட்டுப்
பசுப் பாலை கருஞ்
சூளை மண் சட்டியில்
வற்றக் காய்ச்சி உறை
மோர் இட்டு மறு நாள்
மத்தால் கடைந்த
வெண்ணையில் பெற்ற
நெய் இட்ட
ஒரு பொங்கல்

சாக்கு விரித்து
சாம்பல் படர்ந்த
கறுத்தக் கொழும்பான்
பறித்துப் பரப்பி
வைக்கலால் மூடிப்
பழுத்த மாம்பழமும்,
மண் கிடங்கில் புகையிட்டு
பழுத்த கப்பல், கதலி
பழங்கள் பல சீப்பும்,
வெட்டிப் பரப்பி
தானாய் விழுந்த
விளாம் பழத்தில் சர்க்கரையும்கலந்து
வைத்து
செங்கரும்புத் துண்டுகள்
பல சீரிப் படைத்த
ஒரு பொங்கல்

முற்றமதில் சாணத்தால்
மெழுகிட்டு அரிசி,
மஞ்சல் மாவில் கோலமிட்டு,
மெழுகிட்ட மூன்றடுப்பில்
மாவிலை, மஞ்சசள், இஞ்சி
இலை கட்டி, திரு நீறு
பூசி சந்தனம் இட்டு,
தென்னம் பாளையால்
அடுப்பெரித்து
அப்பா தலைமை
தாங்கிப் பொங்கி
இறக்கும்
ஒரு பொங்கல்

வைக்கல் பரப்பி
தேங்காய் எண்ணெய்
விளக்கேற்றி, வைத்த
கும்பத்தில் செவ்வரத்தம்
பூ முதல் தேடிய
நந்தியாவட்டை வரை
சாத்திப், படைத்திட்ட
வெண் பொங்கல், பல
கறியும்கொண்டே
சாம்பிராணிப் புகையோடு
கற்பூர தீபமும் காட்டி
பஞ்ச புராணமும்
நெஞ்சார ஓதி உணர்ந்த
ஒரு பொங்கல்

தலை வாழை இலைத்
துண்டுகளேடு
தரையில் குஞ்சு குருமான்
முதல் குடு குடு
ஆச்சி அப்பு
அயலட்டைக் கூப்பன்
அத்தனையும், அழகான
வரிசை இட்ட மர்ந்து,
மண் சட்டியில் இட்டுறைந்த
கட்டித் தயிரோடு
கறி அத்தனையும் இட்டுக்
கலந்து பிசைந்து
உண்டு ஏப்பம் விட்ட
ஒரு பொங்கல்

மறு நாள் காலையில்
மிஞ்சிய பொங்கல்
சாதத்தை பெரு மண்
சட்டியில் இட்டு,
விட்டு வைத்த
பழங்கறிகளைச்
சூடாக்கி பொரியல்
முதல் தயிர் வரை
கலந்து குழைத்து
தகட்டிலைத் துண்டில்
ஒரு திரளை மட்டும்
உண்டு மகிழ்ந்த
ஒரு பொங்கல்



சின்னத் திரைகளால் சீரழிகிறது சமூகம்

கட்டுரை



உடுவிலூர் கலா

ரவீந்திர கலா சிறிபாஸ்கரன் எனும் பெயரைக் கொண்ட இவர், கவிதை, கட்டுரை போன்றவற்றில் ஈடுபாடு கொண்டவர். இவரது பெரும்பாலான ஆக்கங்கள் உதயன் பத்திரிகையில் பிரசுரமாகியுள்ளன. எழுத்துத் துறைக்கு மேலதிகமாக, சமூக சேவையிலும் ஈடுபாடு கொண்டவர்.



எமது சமூகம் பலதரப்பட்ட பிரச்சினைகளால் நிலை குலைந்துள்ளது. மனித வாழ்வியலை வெகு வாகப் பாதிக்கின்ற பல காரணிகளால் ஆங்காங்கு அருவக்குத்தக்க குப்பை மேடுகள் உருவாகி நிலைகொண்டுள்ளன. இவற்றைத் தகர்த்தெறிய முடியாது திண்டாடும் நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். சின்னத் திரைத் தொடர்கள் எமது சமூகத்தில் பெரும் சக்தியாய் ஊடுருவி உள்ளன. ஒலியாய், ஒளியாய் 24 மணி நேரமும் இளவயதினரோடு, குறிப்பாகப் பெண்களோடு இவை உறவு கொள்கின்றன.

அன்றைய, இன்றைய சினிமாக்கள்

அன்றைய சினிமாக்கள் சமூதாய சீர்திருத்தத்துக்கான சிறந்த கருத்துக்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டன. அதனாலேயே நூற்றாண்டைக்கொண்டாடும்அளவுக்குச் சினிமாத்துறைவளர்ச்சியடைந்தது. திரைப்படப்பாடல்களும் கூட சிறந்த இசையமைப்புடன் தத்துவப்பாடல்களாகவும், ஆன்மிகப் பாடல்களாகவும், காதல் ரசனைப் பாடல்களாகவும் செந்தமிழில் வலம் வந்தன. இன்றைய பாடல்களோ ஆபாசம் சொட்டச் சொட்ட, அரைகுறைத் தமிழுடன் வெளிவருவதைக் காணமுடிகிறது. அன்று சமூகத்தின் அடித்தளங்களைப் பாதிக்கின்ற திரைப்படங்களோ, பாடல்களோ உருவாகாமல் பாடலாசிரியர்களும், கதாசிரியர்களும் விழிப்பாயிருந்தனர். தற்போது தென்னிந்திய தமிழ்த் திரையுலகம் புத்தி சாலித்தனங்களைப் புறந்தள்ளி விட்டு, கோமாளித் தனங்கள் மூலமும், ஆபாசங்கள் மூலமும், வன்முறைகள் மூலமும் வருவாயைப் பெருக்கும் உத்திகளைக் கையாள்கிறது. இதன் விளைவாகச் சின்னத்திரை உள்வாங்கப்பட்டு சின்னத்திரைத் தொடர்கள் காட்சிப்படுத்தப்படுகின்றன. சமூகச் சீர்திருத்தமுடையவர்களும், கலையுணர்வும், இறைபக்தியும் உள்ளவர்களும் இருந்தஇடத்தில் இன்றைக்குச் சின்னத்திரை வியாபாரிகள் ஏறி அமர்ந்துள்ளனர். தமிழ்மொழியின் பயன்பாட்டு விதிகளை தாம் விரும்பியபடி ஒதுக்கிவிட்டு, புதியன வற்றைப் புகுத்தி ஒலிக்குவியல்களாலும் நடிக, நடிகையரின் உடல் அசைவுகளாலும் இளையோரிடம் கிளர்ச்சியை ஏற்படுத்துகின்றனர்.

சின்னத்திரையில் பிற்போக்குத்தனம்

தமிழ்ப் பண்பாடு பாரம்பரியமும் பெண்கள் மீது சுமத்தியிருக்கும் பிற்போக்குத்தனமான சுமைகளை அதே அடிமைத்தனத்தின் அடையாளங்களைக் கட்டிக்காப்பதில் சின்னத்திரை முனைப்பாக உள்ளது. பெண் அடங்கி வாழ வேண்டியவள், ஆண்களால் ஆளப்பட வேண்டியவள், ஆணின் வன்முறைகளைத் தாங்க வேண்டியவள், கணவனுக்கும், பிள்ளைகளுக்கும் சேவை செய்யவேண்டியவள் என்பதை வலியுறுத்துகின்றது.

பெண்களுக்கென ஒதுக்கப்பட்ட தாலி, திலகம், கற்பு, ஒழுக்கம் என்பவற்றைப் பேணிக்காப்பதை வலியுறுத்தும் சின்னத்திரை ஒருவனுக்கு ஒருத்தி என்ற தமிழ்ப் பண்பாட்டைக் கூறுபோட்டு இரண்டுபெண்களுக்குத்தாலிகட்டும்ஆண்களைக் காட்சிப்படுத்துவது கொடுமையானது. பெண்களை வில்லிகளாகப் பயன்படுத்தித் பல வன்முறைகளை நெறிப்படுத்தும் மிகவும் கொடுமைக்காரியாக, இன்னொரு பெண்ணின் தாலியைத் தட்டிப் பறிப்பவளாக, ஆபாச உடை உடுத்துபவளாக என்றெல்லாம் வகைவகையாக அதில் உலாவரும் பெண்களைப் பார்க்கும் போது அருவருப்பாகஉள்ளது. ஆக, ஆண் ஆதிக்கம் பலமாகத் தக்க வைக்கப்படுகிறதுஎன்பதேஉண்மை.

சின்னத்திரைக்குத் தம்மை அர்ப்பணித்த தியாகிகள்

இளையோரைத் தடம்புரள வைக்கும் பல பெண்களைச் சின்னத் திரைத் தொடர்கள் கற்பிக்கின்றன. கொலை, களவு, பாலியல் ஊட்டம், காதல், பழிவாங்கல் போன்றன இளையமனங்களில்ஆழமாக்கப்பதியப்படுகின்றன. இதைப் பார்த்துக் இளையவர்கள் அதன்வழி நடந்து சமூகத்தைக் கூறுபோடுகிறார்கள். இவ்வாறு பெண்களை இழிவுபடுத்துகின்ற, இளையோரை வழி தவறவிடுகின்ற சின்னத்திரைத் தொடர்களை வரவேற்பவர்கள் பெண்களே.

இவர்கள் சின்னத்திரை தொடர்களுக்கென்று தம்மை அர்ப்பணம் செய்துவிட்ட தியாகிகள். தமது நேரம் காவு கொள்ளப்படுகிறது என்பதைச் சிந்திக்க நேரம் அற்றவர்களாகப் பொன் போன்ற நேரத்தைச் செலவிடுகின்றனர். இன்று எம் சமூகம் கொண்டுள்ள வாள்வெட்டு, போதை, பாலியல், திருட்டு, கொலை, தற்கொலை என்பனவெல்லாம் சின்னத்திரைகள் கற்பித்த பாடங்களே. வருவாய்க்காகத் தயாரிக்கப்படும் பொழுதுபோக்குத் தொடர்கள் சமூகத்தைக் கூறுபோடுவதை யாருமே உணர்வதில்லை.

ஆக, சின்னத்திரைகள் ஆணாதிக்க ஆளுமைக்குட்பட்டு பெண்கள் மீது அதிகாரத்தைப் பிரயோகிக்கும் ஒன்றாகச் செயற்படுகின்றன. என்பதை அதில் ஊறிப்போயிருக்கும் பெண்களே முதலில் உணர்ந்து கொள்ளவேண்டும்.

சிறுவர்களின் குழந்தைப் பருவத்தையும், இளையோரின் வாழ்வியல் நெறிமுறைகளையும் மாற்றியமைக்கும் மாபெரும் சக்தியாக அதுவே உள்ளது என்பதைச் சமூகத்தில் வாழ்கின்ற ஒவ்வொருவரும் உணரவேண்டும்.

பாரம்பரியமும் நவீன வருகையும்

கட்டுரை

சுன்னாகம் பகுதியில் வசிக்கும் இவர், ஆங்கில ஆரம்பக் கல்வித் தொண்டராசிரியர். கவிதை, கட்டுரைகளில் ஈடுபாடுகொண்டு உதயனில்எழுதிவருகிறார்.



தேவராஜா விஜிதா

எமது வாழ்க்கையில் பாரம்பரியமும் நவீன வருகையும் பின்னிப் பிணைந்ததே காணப்படுகின்றன. உணவு முறைகள், விருந்தோம்பல்கள், கொண்டாட்டங்கள், போக்குவரத்து, தொடர்பால் என்பவற்றில் அவற்றின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது. அவை வரவேற்கத்தக்கவையே ஆனால், பாரம்பரியத்தில் நவீன வருகை உணவு முறைகள் அதிக தாக்கத்தை ஏற்படுத்திவருகின்றன.

உணவு முறைகளில் நவீனம் புகுத்தப்பட்டாலும் அதன் எதிர் விளைவுகளை அறிந்துண்பதே சிறந்தது. "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" அதைமக்கள் எல்லோரும் மனதில்நிறுத்தி நமது உணவு முறைகளைக் கையாள வேண்டும். புதுமைகள் புகுத்தப்பட்டாலும் பாரம்பரியத்தின் மகத்துவம் என்றும் போற்றுதற்குரியதே. ஆனால் இன்றைய அவசர உலகில் நவீன உணவு முறைகளையே அதிகம் கையாள வேண்டியிருக்கிறது. அவ்வாறானவர்கள்தான் அன்றாட வாழ்வில் அதிக சிக்கல்களை எதிர் கொள்கின்றனர்.

நவீனம் இலகுவானது, ஆரோக்கியமற்றது

நவீனம் இலகுவானது எனும் நோக்கில் செயற்பட்டு நோய் எனும் மீள முடியாத பெருந்துயரில் வாடுகின்றனர். நவீனம் மட்டுமே சிறந்தது என்று கருதி எல்லாவற்றுக்கும் அதையே பயன்படுத்துவதால் உடல் எடை அதிகரித்தல், இதய நோய்கள், நீரிழிவு எனப் பல நோய்கள் வயது பாகுபாடின்றி அனைவரையும் ஆட்டிப்படைத்து வருகின்றன. அந்த நோய்களை மாற்றுவதற்குப்பாரம்பரியத்தில்எளியவழிமுறைகள்இருந்தும்அதைக்கைக்கொள்வதற்குப்பலர்முன்வருவதில்லை. உடற் பயிற்சி, மருந்துப் பாவனை என்பதில் கவனம் செலுத்துகின்றனர். அதற்கு மாறாக நாளாந்த வீட்டு வேலைகளை நேரக் கணிப்பீட்டின் படி செய்வதற்கு முன்வருவதில்லை. பாரம்பரிய மருத்துவம், அதன் நன்மைகளுடன் இணைந்து வாழப் பழகிக்கொண்டால் பாரம்பரியம் பேணப்படுவதுடன் நவீனத்தின் தீமைகளையும் குறைத்துக் கொள்ள முடியும்.

இயற்கைப் பாரம்பரியம்

எமது வீட்டிலேயே பல மருத்துவச் செடிகள், மரங்கள், கொடிகள் எம்மையறியாமலேயே காணப்படுகின்றன. கறிவேப்பிலை, முருங்கை, வாழை, வேம்பு, கற்பூரவள்ளி, கொய்யா, மா, தேசி, புடோல், ரோஜா, பாகல் எனப்பல. இவை இயற்கையாக வளர்வதுடன் நாமும் பயன்பெறக்கூடியவை.

ஒவ்வொன்றும் குருதி உற்பத்தி கூட்டல், கிருமிகளைக் கொல்லுதல், சளியைப்போக்குதல், சிறு நீரகக் கோளாறுகளைப் போக்குதல், முரசு கரைவதைத் தடுத்தல், கிருமி களைக் கொல்லுதல், வாந்தி, குமட்டல், தொண்டைப் புண், வயிற்றுளைவு, நீரிழிவைக் கட்டுப்படுத்தல் எனப் பல நன்மைகளைக் கொண்டுள்ளன. அதே போல சமையலறையிலும் மருத்துவப் பயன்தரு பொருட்கள்பலகாணப்படுகின்றன. மஞ்சள், உள்ளி, மிளகு, கடுகு, சீரகம், வெங்காயம், என்பவற்றில் பல நோய் எதிர்ப்பு சக்தி கள் காணப்படுகின்றன. குறிப்பாக கிருமித் தொற்று, வாய்வு அகற்றல், குருதிச் சுற்றோட்டச் சீராக்கம், கொழுப்பகற்றல், காயங்களாற்றுதல் போன்றவைநீக்கும்நிவாரணிகளாகவும்இவை செயற்படுகின்றன.

நவீனம் என்பது முற்று முழுதாகத் தேவையற்றதுஎனயாரும்கூறிவிடமுடியாது. தீமை தருவதாக இருந்தாலும் அதில் ஒருசில நன்மைகளும்அடங்கியுள்ளன.

ஒவ்வொருவரும் அதைப் பயன்படுத்தும் விதங்களில் தான் எல்லாமே தங்கியுள்ளது. நவீனத்தின் வருகை உணவு முறைகள், விருந்தோம்பல் கள், போக்குவரத்து, தொடர்பாடல்களில் இலகுத் தன்மை தருவது நற்பயனே.

ஆனால்உணவுமுறைகளில்நவீனத்தின் தன்மைகளைக் குறைத்து பாரம்பரியத்தைக் கடைப்பிடிப்பதனூடாக ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்கமுடியும்.



மிகையான சொற்களின் ஆட்சி செந்தமிழின் செழுமைக்குக் கேடு

கட்டுரை



ம.ந.கடம்பேசுவரன்

இயற்றமிழ் நூல்களைத் திரிபுறக்கற்றுப் பண்டிதர் பட்டம் பெற்றவர். முதுகலைமாணிப் பட்டம் பெற்றவர். கட்டுரை வன்மையும் கவி செயும் ஆற்றலும் உள்ளவர். நூலகவியலாளர், பத்திரிகையாளர் என்று பல துறைகளிலும் பணியாற்றியவர்.



அன்றாடம் செய்தித் தாள்களில் இடம்பெற்று வரும் செய்திகள் ஒரு புறம். கண்களுக்குக் கவர்ச்சி மிகு காட்சிகளாகத் தோன்றும் எழுத்து வடிவங்கள் இன்னொரு புறம்.

இவ்வாறெல்லாம் பெரும்பான்மையாக, நாளேடுகளும் தொலைக்காட்சி போன்ற ஊடகங்களும் மக்களை ஈர்க்கும் பாங்கிலே தரும் அறிக்கைகளும் விளம்பரங்களும் ஏனையனவும் வழுக்கள் நிரம்பியனவாக உள்ளன. அவை வாக்கிய அமைப்புக்களாலும், உச்சரிக்கும் முறைகளாலும் சொற்கள் தொடரும் தொடர்முறைகளாலும், அதன் செம்மையை- இருப்பைப் பேணாதவர்களின் மனப்பான்மையாம்.

இவற்றின் தாக்கம் பேச்சு மேடைகளையும் ஏனைய நூல் வடிவான ஆக்கங்களையும் ஆட்கொண்டு வழக்கிலே வந்து நிலைபெற்று விடுவதால் அவையெல்லாம் பழக்கப்பட்டுச் சரியெனும் மாயையை உருவாக்குகின்றன. ஆகையால் சொல்லாட்சியில் அவதானம் தேவை.

எவ்வாறேனும் நாம் ஒரு சொல்லைப் பயன்படுத்துங்கால் அது மொழியின் செம்மையைப் பாதிக்காத முறையில் ஆள வேண்டும். இனிமை, கன்னிமை, செம்மை என்று ஒண் தீந்தமிழ், பைந்தமிழ் என்றும் போற்றிக் காக்க பெற்றும் நிலைத்து வளம்பெற்ற தமிழ் தன் சீர்மையிற் குன்றலாமா?

உதாரணத்துக்கு மற்றும்

தமிழின் செம்மையைச் சீர்கெடுத்து வரும் மிகையான சொல்லாகிய 'மற்றும்' என்ற சொல்லை முதலில் எடுத்துக் கொள்வோம். இந்தச் சொற் பயன்பாடு வாக்கியத்துக்குள் வாய்க்கியமாக அளவுக்கதிகமான முறையில் பலரும் பயன்படுத்தி வந்து சேர்ந்தமையால் அதன் தாக்கம் மொழியில் உள்ள பல சொற்களை வழக்கிலிருந்து அற்றுப் போகச் செய்வதற்குத் துணை செய்கின்றது.

செந்தமிழைச் செழுமையற்றதாக்குகின்றது. ஆங்கிலத்தில் உள்ளவற்றைத் தமிழுக்கு மொழிபெயர்க்கும்போது 'மற்றும்' என்றது இணைப்புச் சொல்லாகப் புகுத்தியுள்ளமையை நாம் உணர முடியும்.

மற்று, உம் ஆகிய இடைச்சொற்கள் இணைந்த நிலையில் மற்றும் என்ற சொல் மொழிக்கண் இடம்பெற்றது. ஆகையால் 'மற்று' என்பதையும் 'உம்' என்பதையும் இலக்கண வகையால் நோக்குவோம்.

மற்ற10 உம்- மற்றும் இணைந்த, மற்று, உம் ஆகிய இரண்டு பிறிதொரு சொல்லுடன் சேர்ந்தோ அல்லது புணர்ச்சி வகையால் மாற்றம் பெற்றோ பொருளுணர்த்தும் தன்மையில், மொழிக்கண் வரும். இடைச்சொற்கள் பொருள் உணர்த்துமிடத்து, பெயருடன் அல்லது வினையுடன் இணைந்து கொள்வது இயல்பு ஆகும் என்பதை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும்.

மற்று என்னும் இடைச்சொல் பற்றிய இலக்கணக்குறிப்பு :- இந்தச் சொல் வினைமாற்று, பிறிது என்னும் பொருள்களிலும் அசை நிலை யாகும் இடங்களிலும் வரும்.

'மற்றறிவாம் நல்வினை யாம் இளையாம் என்னாது' என்பதில் நல்வினையை விரைந்து அறிவாம் என்னும் வினையை மாற்றி, இனி விரையாமல் அறிவாம் என்னும் வினையைத் தருதலால் வினைமாற்று

"ஊழிற்பெருவலியாவலியாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்' என்பதில்
மற்றொன்று என்பது ஊழ்வினைக்கு வேறான ஒன்று என்னும் வேறுபொருளைத் தருதல் பிறிது

''மற்றென்னை யாள்க' இதில் மற்று என்பது வேறு பொருளைத் தராது நிற்றலால் அசைநிலை.

"மற்றிவளும் கோற்கண்ணளாகும் குறித்து" இதில் மற்று என்பது பின்என்னும்பொருளிலும்வரும். வினைமாற்று அசைநிலை பிறிதெனு 'மற்றே' என்பது இலக்கண நூற்பாவாகும்.

உம் இடைச் சொல்

'உம்' இடைச்சொல் எதிர்மறை, சிறப்பு, ஐயம், எச்சம், முற்று, அளவை, தெரிநிலை, ஆக்கம் என்னும் எட்டுப்பொருளில் வரும்.

'ஆரூரன் வருவதற்கும் உரியன்' என்பதில் வருகின்ற 'உம்' என்ற இடைச்சொல் வராமைக்கு உரியன் என்னும் பொருள் தருதலால் எதிர்மறை.

'குறவரும் மருளுங் குன்று' என்பதில் குறிஞ்சி நாடாகிய மலையிடத்து வாழ் குறவரும் அஞ்சத்தக்க உயர்ந்த குன்றம் எனப் பொருள் தருதலின் உயர்வு சிறப்பு.

'ஆவுரித்துத் தின்பானும் விரும்பாத உடல்' மாடு, ஆடு முதலிய மிருகங்களையும் தின்கின்ற வரும் எனப் பொருள் தருதலின் இழிவு சிறப்பு.

'மேராயினும் இராசமாயினும் ஊற்றுக' என்பதில் ஒன்றை மட்டும் துணிந்து கொள்ளாமையால் ஐயப்பொருள்.

ஆசிரியரும் வந்தார்- இதில் 'உம்' முன் மாணவர் வந்ததல்லாமல் என்னும்பொருள்தரின் இறந்தது தழுவிய எச்சம். இனி மாணவரும் வருவர் என்னும் பொருள் தரின் எதிரது தழுவிய எச்சம்.

'பண்டிதமணி கந்தையாவின் விழாவில் ஏழாலைக் கிராமத்தவர் எல்லோரும் வந்தனர்' இதில் ''உம்' குறைவில்லாமைப் பொருளை (முற்றுப் பொருளை)த் தருதலின் முற்று. கல்வியும் பதவியும் செல்வமும் உடையன் 'உம்' எண்ணி நிற்றலின் எண்.

அவன் சர்வதிகாரியானமை நாட்டை ஆளவும் அன்று பொருள் சேர்க்கவும் அன்று இதில் 'உம்' வேறொன்றைத் தெரிவித்து நிற்றலின் தெரிநிலை.

'ஆட்டுப்பால் மருந்தும் ஆயிற்று' இதில் 'உம்' அதுவே உணவும் ஆயிற்று என்னும் பொருள் தருதலின் ஆக்கம்.

சூத்திரம்:- எதிரிமறை சிறப்பு ஐயம் எச்சம் முற்று அளவை தெரிநிலை ஆக்கமொடு உம்மை எட்டே'

இலக்கணத்துக்கு அமைவாக இடைச்சொற்களான மற்று, உம் என்பவற்றைக் கையாள்வது சிறப்பாகும். இதைக் கருத்திற் கொள்ளாமல் எல்லா இடங்களிலும் அதை எடுத்தாண்டு மொழிக்குக் கேடு செய்தல் வேண்டுமோ!

பண்டைய இலக்கியங்களில் 'மற்றும்', 'உம்' சில இடங்களில் வாழாது வந்து நிற்கும், 'மற்றும்' என்ற சொல்லை நீக்கி எழுதினால் மேலும் எத்தனையோ சொற்கள் அவ்விடத்தை நிரப்பிவாழும். குறளிலோ, சங்க இலக்கியங்களிலோ, அவற்றின் உரைகளிலோ, இலக்கண உரைகளிலோ மற்று, உம் என்னும் இடைச்சொற்கள் கருத்து வகையில் வேறானவையாக உள்ளன. வேறு வேறு பொருள் நுட்பங்களை உடையவை. அவை மற்றும் என்ற இணைந்த சொல், அவ்வுரைகளில் இணைப்புச் சொல்லாக வராதிருப்பதைக் காணலாம். விதிவிலக்காகக் கூட வந்து குழப்புவதில்லை.

மேலும் 'மற்றும்' என்ற சொல் மொழியில் இல்லாமல் இல்லை. அவ்வாறு வருமிடத்து அது சிறப்புப் பொருள் கொண்டதாகவே இருக்கின்றது. அத்தகைய சொல் தனக்கெனப் பொருளுடையதாகச் சிறப்பாக அமைவதையும் மிகையானே இலசானே தழுவப்பெறுபவற்றை உரையாசிரியர்கள் சுட்டிக்காட்டுமாற்றையும் ஆய்வுக்குட்பட்டனவாய் இருந்து வந்தமையைப் பின்னர் காட்டுவேன்.

'மற்றும்' என்ற சொல்லைப் பலர் வீணே மிகையான சொல்லாக இடத்தை நிரப்பிப் பொருள் பயவாது நிற்கும் முறைமையிலுங் கூடக் கையாளுகின்றார்கள். 'மற்றும்' என்பதற்குப் பதிலாக என, உம், எனவே, ஆக, கூட, அத்தகைய, அவற்றுடன் என்ற பல சொற்கள் வந்து நின்று சிறப்பான பொருள் பயத்தலையும் இன்னும் அத்தகைய சொற்கள் கன்னித் தமிழாகச் செந்தமிழாக நின்று வளஞ் செய்தலையும் காணலாம்.

கவிதை



இரா.ஜெயக்குமார்

உரும்பிராயைச் சேர்ந்த இவர் பாடசாலை அதிபராவார். ஊடகத்துறையிலும் பணிபுரிகிறார். கட்டுரைகள், கவிதைகள் போன்றவற்றை எழுதி வருகிறார்.

புத்தகங்கள்

நித்தமும் வேண்டும் புத்தகங்கள்
சுவாசிக்கும் தோறும்
சுகம் தரும் பூக்கள் போல்
வாசிக்குந் தோறும் வளமூட்டும் புத்தகங்கள்!
உலகைக் குளிர்விக்கும்
உன்னத மேகம் போல்
உந்தன் தேகத்தில்
உணர்வூட்டும் புத்தகங்கள்!
நேற்றைய மனிதர்கள்
நெறி நின்று விதங்காண

ஊற்றென உவந்தளிக்கும்
போற்றிடத் தகுந்த நூல்கள்!
ஆக்கினைகள் இல்லாத ஆசானாக.....
பொறாமைத் தீமூளாத நண்பனாமாக.....
அறாத உறவே அரும் புத்தகங்கள்!

சிறுகதை



யாழ்ப்பாணம் அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், தற்போது வவுனியா விபுலானந்தாக் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிகிறார். சிறுகதை, கவிதை, சிறுவர் பாடலாக்கம், குறும்படத்துக்கான திரைக்கதை அமைத்தல் போன்றவற்றில் ஈடுபாடு கொண்டவர்.

யமுனாராணி செந்தில்பாலன்

சரித்திரமொன்று சாம்பல் மேடாகிறது



காற்றோடு சதிராடிச் சல்லாபித்து மங்கி, மயங்கித் தெளிந்து ஒளியை உமிழ்ந்து கொண்டிருந்தது முற்றத்துத் தீப்பந்தம். கரிய மேகங்களிடையே பல்லிளித்துக் கண்சிமிட்டின நட்சத்திரங்கள். ஆங்காங்கே மலைக்குன்றுகளாய்க் கூடியிருந்த எருமைகள் பூச்சிகளை விரட்டு வதற்கு மூசிக்கொண்டு வாலசைக்கும் ஒலி மத்தொலிக்கும், சிலம்படிக்கும் கூத்துப் படிப்போரின் பாடலுக்கிடையேயும் தெளிவாகக்கேட்டது. ஊர்விழித்திருக்கும் அவ்வேளையில் கலவாய்க் குருவியொன்று வட்டமடித்துப் பெருங்குரலெடுத்து....

குடிலின் குந்திலே தூணோடு தூணாக வேலன் அண்ணாந்து வானத்தைப் பார்க்கிறான். நட்சத்திரங்கள் அவனைப் பார்த்து நகைப்பதாய்....

உள்ளே கனன்றிருந்த பூகம்பத்தின் வெளிப்பாடாய் வெப்பத்தைப் பீய்ச்சிய பெருமூச்சு. மீண்டும் அந்த வார்த்தைகளை....

நீலப்பணிக்கன் நஞ்சாய் கொட்டிவிட்ட வார்த்தைகள்...

கூட்டத்திலே கேலிச்சிரிப்பினோடு மீண்டும் மனதெழுந்த ஊழிமுடிவின் பிரளயமாய் அல்லோல கல்லோலப்படுத்தின.

"வேலனாலை ஆகாதது வேலன் பெண்சாதியாலை ஆகுமடா'

"தொடை நடுங்கிப்பயல்'

"போயும் போயும் ஏழூரும் வேலனை ஒரு வீரனெண்டு'

"சீச்...சீ... பணிக்கர் குலத்துக்கே அவமானம்'

"கூரை ஏறிக் கோழி பிடிக்க மாட்டாதவன் வானம் ஏறி வைகுண்டம் போவானோ?"

'மதங்கொண்டலையும் யானையை அடக்கிற விதம் அறியாது...'

சிரிப்பு, பரிகசிப்பு, வெட்டிப்பேச்சு வேலனை இத்தளவுக்கு நடையிணமாக்கியிருந்தன.

"வேலனாலை ஆகாதது வேலன் பென்சாதியாலை...' மீண்டும் மீண்டும்...

"நான் கோழையா?' அவன் மனச்சாட்சி அவனை உலுப்பியெடுத்தது.

கைகள் இரண்டையும் இறுகப் பிசைகிறான். மலர்க்கரத்தால் அவன் தோள் அழுத்தி "வானத்தைப் பாருங்கள் 10மணி ஆகிறது. தினைச் சோறும் புளிக்குழம்பும் தங்களுக்குப் பிடித்த மாதிரி...'

மெல்லத் திரும்புகிறான். தீப்பந்த ஒளியிலும் அந்த அழகு சுந்தரி பிரகாசித்துக் கொண்டிருந்தாள். முகை விரித்தால்போல மோகனப் புன்னகையோடு கூறிய விழிகள் அவனை ஊடுருவின. அந்த விழிகள் ஆயிரம் பேசின. அதை ஏற்கும் சக்தியற்று அவன் முகம் சற்றுத் தாழ்கிறது.

"நான் எல்லாம் அறிந்தேன் அந்த நீலப்பணிக்கன் சொன்னதை..." பற்கள் நற நறக்க.

"இல்லை வேண்டாம். பாடம் புகட்டுவோம். நாம் இப்போது சாப்பிடலாம்." அரியாத்தை வார்த்தைகள் ஆவேசமாய்...

'அரியாத்தை...' வேலனின் குரலில் ஒருவித வெறி தொனித்தது.

"பேரெடுத்த பரம்பரை நாம். இன்று ஊரே சிரிக்கிறது."

'பணிக்கர் குலத்துக்கு மானம்போய் வேலன் வெட்டிப்பயலாகி விட்டான்."

"ஆ... அந்த நீலப்பணிக்கன் கொக்கரிப்பால் வன்னி மண் இந்த வேலனைப் பார்த்து கைகொட்டிச்சிரிக்கிறது'

வெந்து வந்த வார்த்தைகள் வேலனின் கோப எல்லையைக் கோடிட்டுக்காட்டின.

"சின்ன வன்னியனின் ஆணையைச் சிரமேற்கொண்டு சேனையெல்லாம் நாசம் செய்த யானையதை அடக்கச் சென்றேன் ஆனதென்ன....?'

"மதம் கொண்ட அந்த வேழத்தை வதம் செய்யச் சென்றேன். வித்தை பலிக்கவில்லை'

வேலன் மீசை துடித்தது.

"என்னவரே! சினம் எழும்ப மனம் கலங்கிப் பரிதவித்தல் வீரற்கு அழகல்ல. இது மாற்றான் வார்த்தைக்கு மதிமயங்கும் வேலையல்ல. இந்த வேலன் கைப்பிடித்த காலம் முதல் காலனே வந்தாலும் உமைக் கண்கலங்க விடாள் இந்த அரியாத்தை. பணிக்கர் பரம்பரையின் பலம்மிக்க பெண்நானே... துணிச்சலுடன் கூறுகிறேன். என் துணையே கற்பின் நெறிநின்ற வேலன் பெண்சாதி தோல்விக்கு வழிகாணாள். மதம் கொண்ட வேழத்தை முழம்தாளிட வைப்பேன். வேலனுக்கும் அவர்குடிக்கம் வெற்றியதைத் தருவேன். நாளை சின்னவன்னியன் சபை செல்வேன். சூளுரைப்பேன். யானை அடக்க அனுமதி பெற்று அதை அடக்கிச் சபை கொணர்வேன். தன்மானம் மிக்க தமிழிச்சி வேலப்பணிக்கன் பெண்சாதி என் கற்பின் மீது ஆணை."

நெருப்பாய்ச் சிவந்த கண்கள்... வெறித்தணலாய் வெடித்த வார்த்தைகள்... அவள் கோபத்திலும் அழகாய்த் தெரிந்தாள்.

"அரியாத்தை..." வேலன் அவன் கைகள் அரியாத்தையின் கைகளை இறுகப்பற்றின. உள்மூச்சு ஆவேசமாய் அவன் நெஞ்சோடு மோத, மார்பு உயர்ந்து தணிந்தது. கண்கள் சந்திக்கின்றன.

அங்கே மௌனம் அரங்கேறுகிறது.

☆☆☆

பனிமேகம் கலைந்து ஒளிபரவும் இதமான காலை.

அரியாத்தையும் வேலப்பணிக்கனும் ஐயனாரையும் வேழமுகத்தானையும் பூசைசெய்து, வழிபட்டு நெஞ்சிருத்தி, அரியாத்தையை ஊரே திரண்டு வழியனுப்ப அவள் கொண்டியும் அங்குசமும் கையிலேந்தி புறப்படும் நேரம்.

அரியாத்தை வேலனைப்பார்க்கிறாள்.

அங்கே பெருமிதமும் நம்பிக்கையும் பேசிக்கொள்கின்றன.

"நீலகேசரி! நீலகேசரி! கேட்டாயா செய்தியை...? அந்த வேலப்பணிக்கன் பெண்சாதி அரியாத்தை யானையை அடக்கி வந்தாளாம். அங்கே சின்ன வன்னியன் சபையில் சீர் சிறப்பு நடக்கிறது' அவசரமும் ஆத்திரமுமாய் வெளிப்பட்ட நீலப்பணிக்கன் செய்தி கேட்ட நீலகேசரி அவசரமாய்...

"என்ன...? அரியாத்தை ஆனை அடக்கி வெற்றிக்களிப்புடன் ஊர் திரும்பினாளா?' ஏளனமும் கேலியும் கலந்திருந்தது. அவள் கேள்வியில்.

☆☆☆

"ஆம் நிலகேசரி..'

"அவமானம். அவமானம். வன்னி மண்ணில் புகழ்கூடிய பணிக்கர் குலத்து ஆடவரின் சென்னி தாழ்ந்துவிட்டது. கேவலம் ஒரு பெண் மதம் கொண்ட யானையை அடக்கி விட்டாள். ஊரே கொண்டாடுகிறது." நீலப்பணிக்கன் கோபத்தின் எல்லையில் இருந்தான்.

நீலகேசரி அவன் கோபத்துக்கு மேலம் தூபமிட்டவளாய்....

"கலங்காதே எண் கண்ணாளனே. சின்ன வன்னியர் சபையிலே பாராட்டு முடியட்டும். அரியாத்தை ஆட்டத்தை இன்றோடு முடிக்கிறேன். அந்தக் கிறுக்குப் பிடித்தவளின் செருக்கடக்கிக் கையாலாகாத அந்த வேலப்பணிக்கனைத் தெருத்தெருவாய் அலைய வைக்கிறேன். அவமானம்... பணிக்கர் குல ஆடவர்க்கு அவமானம்."

'பாதையிலே பாதியிலே நஞ்சு தடவி அவள் கதை முடிக்கும் கைங்கரியம் நானறிவேன்"

நீலகேசரியின் நஞ்சூட்டப்பட்ட வார்த்தைகள் அடுத்து அரங்கேறப்போகும் கபட நாடகத்தின் ஒத்திகை என்பதை அவர்கள் இருவரையும் தவிர யாரும் அறிந்திருக்கவில்லை.

☆☆☆

"அரியாத்தை! வெற்றி விழாக் கொண்டாட உன் அத்தான் வேலன் காத்திருப்பார் அதற்காகவா அவசரப்படுகிறாய்?' பெண்கள் கேலிச்சிரிப்பினோடு நீலகேசரி இடையில் புகுந்து கொள்கிறாள்.

"அரியாத்தை!" அன்பும் பரிவும் கலந்த நீலகேசரியின் அழைப்பு அது.

இருவரும் தோழிகளை விட்டுத் தனியே...

"அரியாத்தை! பென்குலத்துக்குப் பெருமை சேர்த்தவளே. உன் துணிவு கண்டு உடன் மைத்துநரும் நானும் ஆனந்தத்தில் திளைத்துள்ளோம். சின்ன வன்னியன் சபையிலே உனக்குக் கிடைத்த பாராட்டும் பரிசில்களும் எமக்கெல்லாம் பெருமையைத் தருகின்றன. எண்ணும் போதே என் தேகமெல்லாம் சிலிர்க்கிறது.

வீரப்பெண்ணே!' நீலகேசரி தனது நஞ்சுக் கரங்களால் கட்டியணைக்கிறாள்.

விதியை மாற்றவந்த அந்த வேடதாரியின் சதிவலைக்குள் அரியாத்தை...

☆☆☆

"அரியாத்தை...."

வன்னி நிலமே வேலனின் ஓலத்தால் ஒரு தடவை அதிர்ந்தது.

'ஆருயிரே! பணிக்கர் குலத்தின் பத்தினியே! வெற்றிக்களிப்பில் திளைத்தேனே! என் வயிறு பற்றி எரிகிறது. கொற்றவன் சபையிலே பட்டமும் பரிசும் பெற்று வருவாயெனக் காத்திருந்தேனே...? வீதியில் பிணமாய்க் கிடப்பதைக் காணவா இந்தப் பாவி காத்திருந்தான். என் பத்தினியே உன் கனியிதழால் இனிய மொழி பேசுவதை எங்கே கேட்பேன். உன் கண்விழித்து இந்தப் பாவி முகத்தை ஒரு தடவை பார்.

காலனேவந்தாலும் கைவிடேன் என்றாயே என்னைக் கதறியழ விட்டு எங்கே சென்றாய்...?'

"விதியே! என் அரியாத்தை வாழ்வில் ஏன் விளையாடினாய்?"

"சதிவலையில் சிக்கவைத்து என்னைக் கதியற்றவனாக்கியது யார்?"

"அரியாத்தை! நீயில்லா இந்த உலகில் நான் ஒரு நொடியும் வாழேன்."

"அன்பே! பல்லி சொல்லியது பார்த்துப்போ... என்றேன் அச்சமில்லை என்றாய். அன்று என் தோல்வியை தோற்கடித்தாய் இன்று என்னை தேம்பியழ ஏன் வைத்தாய்? வேழம் படுத்த வீராங்கனையே! நான் புலம்பியமுவது உன் காதில் விழவில்லையா? உன் பொன்னுடலை இந்தச் செந்தீ தின்று தீர்ப்பதை வேலன் பார்த்துப் பொறுக்கமாட்டான் என்பதை என் பத்தினியே நீ அறிவாயா? என்னையும் ஏற்றுக்கொள்."

வேலனின் ஒப்பாரி அந்தச் சுடுகாடெங்கும் பேய்க் காற்றோடு பெரும் ஓலமாய்...

"என்னையும் ஏற்றுக்கொள் அரியாத்தை"

வேலன் தானும் அந்தத் தீயினுள்... அந்தப் பிணத்தீ தனது கூரிய நாக்குகளை நீட்டி வேலனையும் விழுங்கிக் கொண்டது. கலவாய்க் குருவியொன்று பெருங்குரலெடுத்து....



காத்திருக்கும் புலிகள்

வெள்ளைத்தாளும் பென்சிலும் நிறங்களும்
எம் கைகளில் இருக்க
சிரித்துக்கொண்டிருந்தோம்
ஏதோ உத்வேகம் பெற்றவர்களாய் வரையத் தொடங்கினோம்

எல்லோரின் தாள்களையும்
புலியின் நகங்கள் கீறித்திருக்க
கண்சிவந்த புலிமுகம் தெற்றெனத்தெரிந்தது

கீழே வரையத் தொடங்க முன் எல்லாவற்றையும்
தள்ளிவிழுத்திக்கொண்டு
பாய்ந்து சென்ற புலி
வேட்டையாடி
கடைவாயில் இரத்தம் வழிந்திருக்க
தாளில் வந்து நுழைந்தது

செம்மறு எங்கும் பரவ
தாள் தாழில் புலி மறைந்தது.
தாளை எறிந்துவிட்டு
புதிய தாளை எடுத்து வைத்தேன்
பாய்வதற்குப் புலி காத்திருக்கிறது.

கவிதை



எழுத்தாளர், கவிஞர், விமர்சகர், ஆய்வாளர்என்ற பன்முக ஆளுமை கொண்டவர். 'ஒரு சோம்பெறியின் கடல்', 'அப்பாவின் சித்திரங்கள்' போன்றன இவரது கவிதை நூல்கள். புதிய தரிசனம் என்ற சிற்றிதழின் ஆசிரியராக விளங்கினார். தமிழில் முது தத்துவமாணிப் பட்டத்தைப் பெற்றவர்.

த.அஜந்தகுமார்

மனதுக்கு ஆனந்தத்தை அளிக்கவல்ல 'இசை' என்ற சொல்லுக்கு இசைய வைப்பது என்பது பொருள். மனிதனையும் மற்றைய உயிரினங்களையும் ஏன் இறைவனையுமே இசைய வைக்கின்ற, இணங்கச் செய்கின்ற ஓர் அரும் சாதனம் இசையாகும். இந்த இசையை சங்கீதம் எனவும் அழைப்பர். இசையை ஆங்கிலத்தில் Music என்று அழைப்பர். Music என்ற சொல் ஆழுருளுயு எனும் கிரேக்கச் சொல்லிருந்து தோற்றம் பெற்றது. MUSES என்ற கிரேக்க தேவதைகள் விரும்பியதும் ஊக்குவித்ததுமான ஒரு கலை, பிற்காலத்தில் Music என அழைக்கப்பட்டு வரலாயிற்று.

கட்டுரை



திருமதி ஜெயபாரதி கௌசிகன்

கரவெட்டியைச் சேர்ந்தவர். கலைமணிப்பட்டதாரி. இசை ஆசிரியராக விருக்கிறார். ஆசிரிய கலாசாலையில் விசேடமாக இசை பயிற்றப்பட்டவர். கரவெட்டி அமிர்தவாஹினி இசைமன்றத்தின் இயக்குநர். புகழ் பெற்ற சைவத் தலங்கள் குறித்த பக்திப் பாடல்கள் பலவற்றைப் பாடியிருக்கிறார்.

இசைக் கலையின் மேன்மை



இசையானது கட்டுப்பாடுள்ள இனிமையான ஒலியாகும். கட்டுப்பாடில்லாத, இனிமையைத் தராத ஒலியை இரைச்சல் என்று கூறுகின்றோம். இசைஒலியை'நாதம்'என்பர். இசைக் கலையானது செவியால் கேட்டு இன்பம் பெறக்கூடிய ஓர் அரிய கலையாகும். இதன் காரணமாக இதைச் 'சிரவணகலை' எனச் சிறப்பாக அழைப்பர். ஆய கலைகள் அறுபத்து நான்கு. அத்தகைய சிறந்த கலைகளாகிய லலித கலைகளில் மிகவும் மேன்மை வகிப்பது இசைக்கலையாகும். இந்த இசைக்கலையானது உயிரினங்கள் எல்லாவற்றையும் பரவசப்படுத்தி தெய்வீக நிலையை ஏற்படுத்தும்சக்திவாய்ந்தது.

"நாதமேபிரம்மம்"

இறைவன் நாதவடிவானவன். அதாவது இறைவன் இசை வடிவாய் இருக்கிறார் என்பது முதுமொழி. "நாதோ பாவனை செய்தால் இறைவனை அடையலாம்" என்பது முன்னோர் கூற்று. அதற்கமைய சங்கீத மும்மூர்த்திகள் கர்நாடக இசைக்கும் தேவார முதலிகள் பண்ணிசைக்கும் சாதனை செய்துகாட்டியுள்ளனர்.

"இசையால்வசமாகா இதயம்எது"

"இறைவனேஇசைவடிவம்எனும்போது" என்பது T.M.சௌந்தர்ராஜன் பாடிய ஒரு பக்திப்பாடல். சுந்தரமூர்த்தி நாயனார். "ஏழிசையாய் இசைப்பயனாய்" என்று பாடியுள்ளார். அப்பர் பெருமான் "'ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே" என இறைவனை நினைந்து உருகிப் பாடியுள்ளார். திருஞானசம்பந்தர் இறைவனை "பண்ணமர் வீணையினான்" என வர்ணிக்கிறார். "சங்கரா நாத சரீரா பரா" என எஸ். பி. பாலசுப்பிரமணியம் பாடிய திரை இசைப்பாடலும் உள்ளது. இவற்றின் மூலம் இறைவனுக்கும் இசைக்கும் நெருங்கிய தொடர்புள்ளதை அவதானிக்கடிகிறது. மேலும் "பண் என்ற இசை பாடும் அடியார்கள்" என்று சம்பந்தரும் "தமிழோடிசை பாடல் மறந்தறியேன்" என அப்பரும், "நாத விந்துகலாதி நமோ நமோ" என அருணகிரிநாதரும் பாடிய பாடல்கள் இறைவன் இசை வடிவினன் என்பதையும் இசைப்பிரியன் என்பதையும் எடுத்துக் காட்டுகின்றன.

பண்டைக்காலத்தில் சங்கீதமானது கீதம், வாத்தியம், நிருத்தியம் அதாவது வாய்ப்பாட்டு, இசை, கருவி இசை, நாட்டிய இசை ஆகிய இம் மூன்றின் சேர்க்கையாகக் காணப்பட்டது. பிற்காலத்தில் சங்கீதக் கலை விசேட்மாக விருத்தியான தனால் நிருத்தியக்கலை தனியாகப் பிரிக்கப்பட்டது. கீதம், வாத்தியம் இவை இரண்டும் சேர்ந்து சங்கீதக்கலையானது. பண்டைக்காலத்தில் சங்கீதமானது நாட்டியத்துக்கு அனுசரணையான கலையாகவே கருதப்பட்டு வந்தது. பிற்காலத்தில் மகான்களுடைய முயற்சியால் சங்கீதக் கலை தனித்து விருத்தியடைந்து தனிக்கலையாகவும் பூரண கலையாகவும் பிரகாசித்தது.

இசைக்கு ஆதாரமானது நாதம். எமது உடலில் காற்று, நெருப்பு இரண்டும் சேர்வதால் நாதம் உருவாகும். நாதத்திலிருந்து சுருதியும் சுருதியிலிருந்து ஸ்வரங்களும் ஸ்வரங்களிலிருந்து இராகங்களும் இராங்களிலிருந்து பாடல்களும் உருவாகின்றன.

"ஏழுஸ்வரங்களுக்குள் எத்தனைபாடல்" என்ற பாடலுக்கேற்ப ஸ.ரி.க.ம.ப.த.நி என்ற ஏழு ஸ்வரங்கள் ப்ரக்ருதி விக்ருதி. ஸ்வரங்களாகி விக்குதிஸ்வரங்களின் பேதத்தால் இந்த ஸ்வரங்கள் பன்னிரு ஸ்வரஸ்தானங்கள் ஆகி, அதிலிருந்து 16 ஸ்வரப் பெயர்கள் தோற்றம் பெறுகின்றன. இந்த 16 ஸ்வரப் பெயர்களே கர்நாடகஇசையில்72தாய்ராகங்களின்தோற்றத்துக்கு வித்திட்டுள்ளன. இந்த 72 தாய் ராகங்களிலிருந்து எண்ணிலடங்கா சேய்ராகங்கள்தோற்றம்பெற்றன. இவற்றிலிருந்து எண்ணிலடங்காத பாடல்கள் வந்தன.

வேதகாலத்தில் இறைவனை வழிபட்ட சாமகானம் சாமவேதத்திலிருந்து தோன்றியது. சாமகானமேஎமதுசுத்தஇசைக்கு ஆரம்பம் எனக் கொள்ளலாம். சாமகானத்தில் "நிஸரி" என்ற மூன்று ஸ்வரங்களும் இசைக்கப்பட்டன. இவற்றை அடிப்படையாகக் கொண்ட ஸப்தஸ்வரங்கள் (ஏழு ஸ்வரங்கள்) பிறந்தன. சிவனின் நடனத்துக்கு நந்தி, மத்தளம் கொட்ட, சரஸ்வதி வீணை இசைக்க இதில் இலயித்த'பார்வதி"சபாஸ்" என்றுஒலிஎழுப்பி இரசித்ததாகவும் அந்த சபாஸ் ஒலியே பின்னர் "'ஸபஸ்" என்றுநாம் சுருதிசேர்க்கப் பயன்படும் ஸ்வரங்களாகின என்ற பண்டைக்காலக்கதையும்உள்ளது. இசையானது தற்காலத்தில் கர்நாடக இசை ஹிந்துஸ்தானி இசை, மேலைத்தேய இசை, பொப் இசை, மெல்லிசை, ஜிப்சி இசை, நாட்டார்இசை, திரைஇசை, கானா இசை எனப் பல்வேறு பரிமாணங்களில் உலகளாவிய வளர்ச்சிகண்டுள்ளது.

தென்னிந்தியாவில் தோன்றிய கர்நாடக இசையானது தெய்வீகமானது. சரஸ்வதி கையில் வீணையும், சிவபெருமான் கையில் டமருகமும் (உடுக்கு) கண்ணன் கையில் புல்லாங்குழலும் நாரத முனிவர் கையில் தம்புராவும் நந்தியின் கையில் மத்தளமும் திருஞானசம்பந்தர் கையில்பொற்றாளமும்இருப்பதிலிருந்து இசைக்கலையனது தெய்வீகமானது என்பது தெளிவாகின்றது. சங்கீதத்துக்கு "காந்தர்வ வேதம்" எனும் சிறப்புப் பெயர் இருப்பதும்குறிப்பிடத்தக்கது.

இசையைக் கற்பதன் மூலம் நன்மனப்பாங்கு விருத்தி பெற்ற ஒரு சமூகத்தை உருவாக்க வாய்ப்பு ஏற்படுகிறது. இசை பயில்வதால் அன்பு, அடக்கம், பக்தி, நட்பு, மனத்திருப்தி, சாந்தி முதலான நற்குணங்கள் விருத்தியாகின்றன. அத்தோடு அறிவு, புத்திக்கூர்மை, கற்பனாசக்தி, ஞாபகசக்தி, நல்லொழுக்கம், பலதேசமக்களை ஒன்று சேர்க்கும் உலக ஐக்கிய பாவம் போன்றவையும் ஏற்படும்.

மனிதவாழ்க்கையில் இசையானது பிறப்பு முதல் இறப்பு வரை பின்னிப் பிணைந்துள்ளது. பிறந்த குழந்தை தலாட்டுப் பாடலைக் கேட்டவுடன் தனது அழுகையை நிறுத்தித் தன்னை மறந்து தூங்க ஆரம்பிக்கின்றது. குழந்தை பிறந்தவுடன் மருத்துவிச்சியானவள் அரிசிப் பொதியோடு வந்தீரோ நம்பி" எனப் பாடுகிறாள். பின்னர் குழந்தை வளர்ந்து பிள்ளைப் பருவம் அடைந்தும் பிள்ளை, "ஆலையிலே சோலையிலே ஆலம்பாடிச்சந்தையிலே கிட்டிப் புள்ளும் பம்பரமும் கிறுயடிக்கப் பாலாறுபாலாறு" என விளையாட்டுப்பாடலைப் பாடி விளையாடுகிறது. பிள்ளை வளர்ந்துவேலைக்குப்போகும்போதுபல வகைப்பட்ட தொழிற்பாடலைப் பாடி வேலையை இலகுவாக, களைப்பின்றி, செய்து முடிக்கின்றான். திருமணப் பருவம் வந்ததும் நலுங்குப்பாடல், ஊஞ்சல் பாடல் பாடப்படுகிறது. குடும்பத் தம்பதியர்கள் கன்னியர்கள், காளையர்கள் காதற் பாடல் பாடுகின்றனர். இறை வழிபாட்டில் திருமறைகள் பக்திப் பாடல்கள் பாடப்படுகின்றன. இறுதியாக இறப்பு நேரும்போது ஒப்பாரிப்பாடல் பாடப்படுகின்றது. இவ்வாறு இசையானது மனிதனின் பிறப்பு முதல்இறப்புவரைவாழ்க்கையோடுஒன்றிணைந்து உணர்வுகளை வெளிப்படுத்தும் ஊடகமாகப் பயன்படுகின்றது.

மேலும் தூக்கமின்றி அல்லற்படுவோர் நல்ல இசையைக் கேட்பதன் மூலம் நிம்மதியாக உறங்குகின்றனர். குறட்டை விடுவோர் இசைப் பயிற்சி செய்வதன் மூலம் குறட்டை விடும் பழக்கத்திலிருந்து விடுபடுகின்றனர். இறக்கும் நிலையிலுள்ள நோயாளிகள் கூட நல்ல இசையைக் கேட்பதால் ஆயுள் நீடித்து வாழ்கின்ற நிலையைப் பெறுவார். மனநலம் குன்றியோரும் இசையைக் கேட்டுநற்பயனடைகின்றனர்என மருத்துவர்கள் கூறுகின்றனர். நினைவாற்றலை இழந்தோர் இசையின் மூலம் நினைவாற்றலைப் பெறுகின்றனர். மாணவமாணவியர்பாட்டின்மூலம் நல்ல சிந்தனைகளையும் அறிவையும் பெறுகின்றனர். பக்திப் பாடல்கள் மூலம் மனதை இறைவன் பால் ஈர்க்க முடியும். கடின உழைப்பாளிகள் இசையால் தமது களைப்பைப் போக்கி உற்சாகமாக வேலை செய்ய முடிகிறது. இவ்வாறே இசையானது மனித வாழ்க்கையோடு இரண்டறக்கலந்திருப்பதை அவதானிக்க முடிகிறது.

சங்கீத வாக்கேயகாரர்கள் இசைபாடி பல வேறுபட்ட அற்புதங்களைச் செய்துள்ளனர். முத்தசாமி தீட்சிதர், அமிர்தவர்ஷனி இராகம் பாடி மழை பொழியச் செய்துள்ளார். "மேகராகக் குறிஞ்சி (நீலாம்பரி)" இராகத்தைப் பாடினால் வறட்சி காலத்திலும் மழையைப் பெறலாம். "தீபக்" என்ற இராகத்தின் மூலம் ஒரு இசைக்கலைஞர் நெருப்பை உண்டாக்கியுள்ளார். மேலும் இசையைப் பாடி பசுவின் மடியில் அதிக பாலைச் சுரக்க வைக்க முடியும். பயிர்களை நன்கு வளர வைக்க முடியும். எனவே இசையானது மனித வாழ்வை வளப்படுத்துவதற்காக இறைவன் எமக்களித்துள்ள பெரும் கொடை என்பதை உணர்ந்து அனைவரும் இசை பயின்று வாழ்வில் பல சாதனைகள் புரிந்து, வாழ்வாங்குவாழ்ந்துஇறைபேறடைவோமாக.



இசையினில் நாம் கண்ட
இன்பம்– அதற்கு
ஈடினை ஏதும் இல்லையே

கட்டுரை



தெணியான்

யாழ்ப்பாணம்- பொலிகண்டியைப்பிறப்பிடமாகக் கொண்டவர். கந்தையா நடேசு இவரது இயற்பெயர். தமிழ் ஆசிரியராக நீண்ட காலம் பணியாற்றியவர். 1964களில் 'விவேகி' எனும் சிற்றிதழில் இவர் எழுதிய 'பிணைப்பு' எனும் சிறுகதையுடன் இவரது இலக்கியப் பயணம் ஆரம்பமாகியது. நாவல்கள், சிறுகதைகள், இலக்கிய நூல்கள், கட்டுரைகள் எனப் பரந்துபட்ட எழுத்துக்களைத் தந்திருக்கிறார். பல விருதுகளையும் தன் வசமாக்கியிருக்கிறார்.

கவிஞர்கள் சுட்டுவைத்த வட்டத் தோசைகள்



தமிழ் இலக்கியத்தில் நிலவு பற்றிப் பாடாத புலவர்கள், கவிஞர்கள் இல்லையென்று கூறுவது தவறான ஒன்றல்லவெனத் துணிந்து முடிவுக்கு வந்துவிடலாம். பாடவந்த அத்தனை இலக்கிய கர்த்தாக்களுக்கும் தணியாத மோகம், கவர்ச்சி. சங்கப்புலவர்கள் முதல் இக்காலக் கவிஞர்கள் வரை இந்தப் பொது நோக்குக்கு விதி விலக்காக இல்லை.

"அற்றைத்திங்கள் அவ்வெண் நிலவில்" எனச் சங்ககாலப்புலவர் கபிபலர் குறிப்பிடுகிறார். இந்துக்களின் முழு முதல் ஈசன் சிவன் சடா முடியில் பிறைச் சந்திரன் சூடியிருப்பதாக ஐதீகம். பக்தி இலக்கிய காலத்துத் தோத்திரப் பாடல்களைக் கருத்தில் கொள்ளும்போது நிறைய எடுகோள்களை எடுத்து முன் வைக்கலாம். "தோடுடைய செவியன் விடையேறித் தூவன் மதி சூடி" என ஞான சம்பந்தப் பொருமானும், "பித்தா பிறை சூடி" எனச் சுந்தர மூர்த்தியாரும் 'மாசில் வீணையும் மாலை மதியயும்' என நாவுக்கரசு நாயனாரும் நிலவு பற்றிப் பாடி இருக்கிறார். பக்தி இலக்கிய காலத்தைத் தொடர்ந்து கவிதைத் துறையில் பெரும் பாய்ச்சலாக புயல்போல வந்து தோன்றிய மகாகவி பாரதி நிலவைப் பல கோணங்களில் கண்டு அனுபவித்துப் பாடி இருக்கின்றான். பாரதிக்குப் பின் வந்த பாரதிதாசன் நிலவு பற்றி அழகு வரிகளாகப் போந்துள்ளான். அவர்களைத் தொடர்ந்து இக்காலக் கவிர்கள் எவருமே நிலவு பற்றிப் பாடாதவர்கள் இருக்க முடியாது. இவர்கள் தாம் விரும்பும் ஒரு பெண்ணுக்கு உவமித்தாவது நிலவைப் பாடியே மன ஆறுதல் பெற்றிருக்கிறார்கள்.

இந்தப் புலவர்கள், கவிஞர்கள் மத்தியில் நிலவை வித்தியாசமாக, வேறுபட்ட கோணத்தில், ஒன்றுபட்ட கற்பனைச் சிறப்புடன் இருவர் பாடி வைத்துள்ளார்கள். அவர்களின் பாடல்கள் பற்றி நோக்குவதே இந்தக் கட்டுரையின் அடிப்படையான, பிரதானமான நோக்கம்.

அல்வாயூர்க் கவிஞர் மு.செல்லையா (1906 - 1966) ஈழ கேசரிக் காலத்துக் கவிஞர். அவர் தனது முதல் கவிதையை எப்போது பாடினார் என்று அறுதியிட்டுக் கூறி விட முடியாது. அவரது கவிதைத் தொகுதி 1952இல் வெளிவந்திருக்கிறது. அந்தத் தொகுதியில் இடம்பெற்றுள்ள கவிதைகள் யாக்கப்பெற்ற ஆண்டுகள் வரன் முறையாகத் தெரிவிக்கப் படவில்லை. ஒன்றிரண்டு கவிதைகளுக்க மாத்திரம் அவை பாடப்பட்ட ஆண்டுகள் இடம் பெற்றுள்ளன. 'குடிகாரன் கூறியது' எனும் தலைப்பிலுள்ள பாடல் ஈழகேசரி 7.5.1931இல் வெளிவந்திருக்கிறது. ஏனைய பாடல்கள் சிலவற்றில் காணப்படும் ஆண்டுகள் அதற்குப் பிந்தியவையே. எனவே 'குடிகாரன் கூறியது' பாடலுக்குச் சற்று முன்னதாகவே கவிஞர் மு.செல்லையா கவிதைகள் எழுதுவதற்கு ஆரம்பித்திருக்கலாம்.

அல்வாயூர் கவிஞர் மு.செல்லையாவின் 1952 இல் வெளிவந்த கவிதைத் தொகுதி 'வளர் பிறை' இந்தத் தொகுதியில் இடம்பெற்ற குழந்தைக் கவிதையின் தலைப்பே 'வளர்பிறை' என்பது. கவிஞருக்கு இந்தக் கவிதையில் வெகு நாட்டம் இருந்திருக்க வேண்டும். அதனாலேயே தனது தொகுதிக்கு 'வளர் பிறை' என்று நாமம் சூட்டியுள்ளார். கவிஞர் மு.செல்லையா குழந்தைக் கவிதைகள் வேறும் எழுதியிருக்கிறாரா? என்று அறிய முடியவில்லை. அவர் பாடிய ஒரே ஒரு கவிதையை மாத்திரம் கொண்டு அவரைக் குழந்தைக் கவிஞர் என்று குறிப்பிடலாமா? என்று வினாவுவது நியாயமான கேள்விதான். ஓர் இலக்கிய ஆக்கம் போதுமானது. அவர் அந்தத் துறை சார்ந்த கவிஞர் என வாதிடலாம். அந்தக் கருத்து நாவல், இலக்கியம் போன்ற பெரிய படைப்புத்துறைகளுக்கு ஏற்றதாகலாம். கவிதை, சிறுகதைகள் என்பனவற்றுக்குப் பொருத்தப்பாடுடையதா என்பது சந்தேகத்துக்குரியது தான். அதனாலேதான் கவிஞர் மு.செல்லையாவைக் குழந்தைக் கவிஞர்கள் பட்டியலில் சிலர் சேர்த்துக் கொள்ளாது தவிர்த்து விடுவதை அவதானிக்க முடிகிறது. இத்தகைய நிலமை அவரது உற்ற, சுற்றத்துக்கு மன உவப்பானதல்ல என்பதையும் உணர முடிகிறது. எது எப்படி இருப்பினும் கவிஞர் மு.செல்லையாவின் 'வளர் பிறை' என்னும் குழந்தைக் கவிதை, கற்பனைச் சிறப்பு மிக்க மிகச் சிறந்த கவிதை என்பதை மறுப்பதற்கியலாது. இனி அந்தக் கவிதையை நோக்குவோம்.

(வானத்திலே பூரணச் சந்திரனை ஒரு தினம் கண்டு மகிழ்ந்த பிள்ளை ஒன்று சில தினங்களின் பின். வளர்பிறையையும் அதனைச் சூழ்ந்து ஆயிரக்கணக்கான நட்சத்திரங்கள் விளங்குவதையும் கண்ட உடனே அந்தப் பிள்ளைக்குச் சில சந்தேகங்கள் உண்டாயின. அந்தச் சந்தேகங்களை நீக்கும்பொருட்டு அந்தப் பிள்ளை, தனது தாயை வினாவுகின்ற கற்பனையில் இந்தப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன.)

அம்மா, வெளியே வா அம்மா!
அழகாய் மேலே பாரம்மா!
அம்மா இருந்த சந்திரனை
துண்டாய் வெட்டினதாரம்மா?

வட்டத் தோசை சுட்டது போல்
வானில் இருந்த சந்திரனை
துட்டச் சிறுவன் யாருடைத்தான்?
சொல்லாய் உண்மை தோன்றிடவே.

மட்டிப் பயலவன் வெட்டி விட்டு
மற்றப் பாதியை எங்கேறிந்தான்?
கிட்ட மினுங்கும் கட்டியெல்லாம்
வெட்டிய மிச்சத் துண்டுகளோ?

வானில் தோன்றும் சந்திரன் (நிலவு) குழந்தையின் பார்வைக்கூடாகக் கவிஞர் 'மு.செ'க்கு வட்டத் தோசையாகத் தோன்றுகின்றது. அதே சமயம் வானில் தோன்றும் அந்த வட்ட நிலா தங்கப்பானம் எனும் உள்ளுணர்வு கவிஞருக்கு இருந்திருக்க வேண்டும். அதனாற்றான் பிய்த்துப்போட வேண்டிய தோசையை "யார் உடைத்தான்" என்றும் 'கிட்ட மினுங்கும் கட்டியெல்லாம், வெட்டிய மிச்சத் துண்டுகளோ?" என்றும் வினாக்களை எழுப்புகிறார். தோசையின் துண்டுகளைக் கட்டிகளாகவும் கூறுவதற்கியலாது. குழந்தையின் பார்வையில் அவ்வாறு கூறலாம் எனச் சமாதானம் செய்து கொள்ளலாம். அதேவேளை எதுகை, மோனை பேணும் மரபுவழி வந்த சிக்கலாகவே இது தோன்றுகின்றது.

இத்தகைய கற்பனை நோக்கு தமிழ்நாட்டுக்குப் பழைய கவிதைராயருக்குத் தோன்றியிருக்கிறது. அதனைப் புதுமைப் பித்தன், செ. விருத்தாசலம்(19061948) பம்பாயில் இருந்த தனது நண்பருக்கு 6.6.1948இல் எழுதியிருக்கும் கடிதமொன்றில் பின்வருமாறு தெரிவிக்கிறார்.

"அருமைத் தேவர் அவர்களுக்கு,

முறையே தாங்கள் அனுப்பிய 'இந்தியன் பர்லிமெண்ட்' கடிதங்கள் இரண்டும் கிடைத்தன. காந்திஜி கடிதத்தை 'கத்தரித்து' சாரமான உயிர்ப் பகுதிகளை அகற்றிவிட்டு ஸ்ரீனிவாசன் பிரசுரித்திருக்கிறார். இந்தக் கண் துடைக்கும் வித்தையால் யாருக்குப் பயன். இந்தக் காலத்துப் பத்திரிகைத் தர்மத்துக்கு இது ஒரு உதாரணம். மகாத்மா 'கெதி'யே இப்படியென்றால், உருப்படவழி கிடையாது. ஸ்ரீனிவாசன் இதில் தனிக் குற்றவாளி அல்ல. பொதுப்படவே அப்படித்தான். மேல் நாடுகளில் இம்மாதிரி அவசரப்பட்ட அரை குறைச் சேவைகள் கிடையாது. அதனால் தான் அவர்கள் ஊன்றி நின்று போராடுகிறார்கள். நமக்கு விஷம் என்று நாம் கருதினாலும் இடம் உண்டு.

தங்கள் பாட்டு ரொம்பவும் அருமை. பாட்டைத் திரும்பத் திரும்பப் படித்துவிட்டேன். நல்ல பாட்டு ஐந்து நிழிஷங்கள் அல்ல ஐந்து யுகங்கள் வரையும் மனதிலே நடமாடும். உங்கள் பாட்டைப் படித்ததும்,

சோளப் பொரிமத்தியிலே
சுட்டுவைச்ச தோசையைப்போல்
தோணுமிந்த சோதிநிலா

என்ற பழைய கவிராயன் பாட்டு நினைவுக்கு வருகிறது. பழைய வேகமும் பாஷைக் கட்டும் உங்கள் வாக்கில் நடமிடுகிறது. இந்த மாதிரி நிறைய இருக்கிறதா. புத்தக ரூபத்தில் பிரசுரித்துப் பார்ப்போமே. நான் இருக்கிறேன் அறிமுகம் செய்து வைக்க. என்ன தங்கள் கருத்து ...ப்படி?

நமது புதுக் கவிராயர்களிடம் பாட்டுமில்லை; பாஷையுமில்லை. எல்லாம் மூங்கையர் பேசும் முயற்சி"

இந்தப் பாடலைப் பாடியிருக்கும் கவிராயர் யாரென்று அறிந்து கொள்வதற்கு முடியவில்லை. அவர் வாழ்ந்த காலம் எது என்பதும். தெளிவாகத் தெரிய வராது. சுட்டுவைத்த தோசையாக வானில் வரும் வட்ட நிலா அவருக்குத் தோன்றுகின்றது. தோசையைச் சுற்றிவர இருக்கும் நட்சத்திரங்கள் சோளப் பொரிகளாகக் காட்சியளிக்கின்றன. அவைகளும் தோசை போன்று திண்பண்டங்களாகக் கொள்ளப்படுவது இந்தக் கற்பனை வளத்தின் சிறப்பு எனலாம்.

கவிஞர் மு.செ.வுக்கும் பெயரறியாத தமிழ்நாட்டுக் கவிராயருக்கும் ஒத்த வகையான கற்பனையை வட்டநிலா கொடுத்திருப்பது வியப்பான ஒன்றன்று. இருவரும் சுட்டு வைத்திருக்கும் வானத்து வட்டத்தோசையை இலக்கிய இதயங்கள் இனிதே திண்று சுவைப்பது தனியான ஆனந்தந்தான். ■

சிறுபான்மைத் தேசிய இனங்களின் பிரச்சினைக்கான தீர்வும் கட்டலோனியாவின் பொது வாக்கெடுப்பும்

அறிமுகம்

உலகிலுள்ள சிறுபான்மை இனங்களின் விடுதலைக்கான புதிய உத்தியாகப் பொதுவாக்கெடுப்பு முன்வைக்கப்பட்டு அத்தகைய சிறுபான்மை இனங்களால் அது மேற்கொள்ளப்பட்டும் வருகிறது. இது சிறுபான்மை இனங்கள் பிரிந்து செல்வதற்கான சமகாலவழிமுறையெனக் கருதப்படுகிறது. இதன் முதல் அடையாளமாகக் கடந்த வருட செப்ரெம்பர் மாதம் 25ஆம் திகதி குர்திஸ் இன ஈராக் வாழ்மக்கள் பிரிந்து செல்வதற்கான 92சதவீத ஆணையை வழங்கினர். அவ்வாறே ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி ஸ்பெய்ன் நாட்டிலிருந்து கட்டலோனிய (Catalonia) மாகாணம் 90சதவீத மக்களின் ஆதரவுடன் பிரிந்து செல்வதற்கான ஒப்புதலை வழங்கியது.

இந்தக் கட்டுரையானது இருபத்தியோராம் நூற்றாண்டின் அரசியல் வரலாற்றில் சிறுபான்மை இனங்களின் தேசிய இனவிடுதலைக்கான சிறந்த வழிமுறையாகக் கருதமுடியும் என்ற வாதத்தை விளங்கிக் கொள்வதற்காக ஸ்பெய்னின் கட்டலோனிய மாகாண மக்களது பிரிவினைக்கான ஒப்புதலின் யதார்த்தத்தை முன்வைப்பதன் மூலம் தெளிவு படுத்த முயல்கிறது.



கவிதை

கலாநிதி
கே.ரி.கணேசலிங்கம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அரசறிவியல் துறையின் தலைவரான இவர், பன்னாட்டு அரசியல் சார் துறைகளில் நிபுணத்துவம் கொண்டவர். பன்னாட்டு அரசியல், வெளிநாட்டுக் கொள்கை, தென்னாசிய அரசியல் கலாசாரம் எனப் பல ஆய்வு நூல்களை எழுதியுள்ளார். பன்னாட்டு அரசியல் சார் மாநாடுகளில் பங்கு பற்றியதோடு ஆயிரக்கணக்கில் அரசியல் சார் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

கட்டலோனியா

ஸ்பெய்ன் நாட்டின் ஒரு மாகாணமாக விளங்கும் கட்டலோனியா, நீண்ட காலமாகப் பிரிந்து செல்வதற்கான கோரிக்கையுடன் பயணிக்கின்றது. அதற்கான முயற்சியில் 2003ஆம் ஆண்டு முதல் 2017ஆம் ஆண்டு வரை பலவாக்கெடுப்புக்குத் திட்டமிட்டு நடத்த முடியாத நிலையும், மக்களின் வாக்களிப்புப் பலவீனமும், அவற்றைப் பிராந்திய ஆட்சியாளர் கைவிட்டிருந்தமையும் நடந்துள்ளது. இதன் நவீன வரலாறு அடிமைப்படுத்தப்பட்ட இனத்தின் வரலாறாகப் பதிவாகியுள்ளது. 1939 - 1975 வரையான காலப்பகுதியில் ஜெனரல் பாஸ்கோவின் சர்வாதிகார ஆட்சியால் கட்டலோனியா அடிமைப்படுத்தப் பட்டிருந்தது.

ஸ்பெய்னின் பலமான பிடிக்குள் இயல்பான தேசிய அடையாளத்தைச் சிதைத்ததுடன் மீட்சி பெறமுடியாத துயரத்துடன் கட்டலோனியா காணப்பட்டது. ஜரோப்பாக் கண்டத்தில் ஜனநாயகம், மனித உரிமை, என்பன பேசப்பட்டாலும் கட்டலோனியா மீதிருந்த ஜெனரல் பாஸ்கோவின் அடக்குமுறை அவற்றை முற்றாகவே தகர்த்திருந்ததென்பதை இதர ஜரோப்பிய நாடுகள் கண்டுகொள்ளவில்லை.



பொருளாதாரம்

அதே சந்தர்ப்பத்தில் பொருளாதார பலமும் வளமும் உற்பத்தியில் பொரிய பங்கெடுப்புமுடைய பிராந்தியமாகக் கட்டலோனியா காணப்பட்டது. ஸ்பெய்னின் வடகிழக்குமாகாணமான கட்டலோனியாவின் செழிப்பான பொருளாதாரத்தால் ஸ்பெய்ன் அதன் பிரிவினைப் போராட்டத்தை நிராகரித்துவந்தது. அத்தகைய பிரிவினைக்கு எதிராக தனது இராணுவத்தைப் பயன்படுத்த முடியுமென்ற சட்டச்சரத்தையும் அது (158) கொண்டுள்ளது. பிரிவினைக் கோரிக்கைக்கு 90சதவீதமான ஆதரவு கிடைத்துள்ளதாகக் கட்டலோனியாவின் அதிபர் கார்லஸ்பூஜ்டியமன்ட் குறிப்பிட்டிருந்தார். ஸ்பெய்னின் இராணுவ, பொலிஸ் மற்றும் அரசி[illegible]ந்திரம் அதிகமான நெருக்கடியைக் கொடுத்ததால் மக்கள் தொகையில் 42.3சதவீதமான மக்களே வாக்கெடுப்பில் கலந்துகொண்டு தமது விருப்புக்களை நிறைவு செய்தனர். அந்த வாக்கெடுப்பில் பிரிவினைக்கு 'ஆம்' அல்லது 'இல்லை' என்றே கோரப்பட்டது. அதில் 'இல்லை' என்று வாக்களிக்க வாய்ப்பிருந்தபோதும் அதற்கான முடிவுகள் 8.04 சதவீதமாகவே காணப்படுகின்றன. நியாயமான ஜனநாயக உரிமைகள் பின்பற்றப்பட்டிருப்பின் பெரும்பான்மையான கட்டலோனியர்களும் 'ஆம்' என்றே வாக்களித்திருப்பர்;.

கட்டலோனியர்களின் வாக்களிப்பு முடிவுகள்

வாக்காளர் விகிதாசாரம்
ஆம் 2, 20,144 91.96%
இல்லை 176,565 8.04%
அங்கீகரித்த வாக்குகள் 2,196,709 97.10%
நிராகரித்த வாக்குகள் 65,715 2.9%

மொத்த வாக்குகள் 2,262,424 100.00%
அளிக்கப்பட்ட வாக்குகள் 5,313,564 42.58%

இந்தத் தேர்தலை நடத்தவிடாது தடுப்பதற்காக ஏறக்குறைய நான்காயிரம் பொலிஸாரை ஸ்பெய்ன் அரசு பயன்படுத்தியது. ஏறக்குறைய 400 பொதுமக்கள் பொலிஸாரின் தாக்குதல் நடவடிக்கையால் காயங்களுக்குள்ளாகியுள்ளனர். ஸ்பெய்ன் இப்படியான தடுப்பு நடவடிக்கையை மேற்கொள்ளப்போகின்றது என்ற செய்தியை அறிந்த கட்டலோனிய மக்கள் வாக்குச் சீட்டுக்களுடன் வாக்குச் சாவடிகளில் குவிந்திருந்து வாக்களித்தனர் என்பது அவர்கள் நீண்ட காலத் தேசிய உணர்வைப் பிரதிபலிக்கின்றது. அது மட்டுமன்றி 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குச் சீட்டுகளை ஸ்பெய்ன் பொலிஸார் கைப்பற்றி வீணடித்துமுள்ளனர். அநேகமானவர்களை வாக்களிக்க விடாது தடுத்துள்ளனர். அரசும், அரசமைப்பு நீதிமன்றமும் பொது வாக்கெடுப்புக்கு அனுமதியளிக்காமையை மேற்கொண்டதுடன் வாக்கெடுப்பைத் தடுக்க அதிகமான நடவடிக்கைகளைக் கையாண்டன.

கணிசமான இடங்களில் வாக்குப்பெட்டிகளையும், வாக்குச் சீட்டுக்களையும் பொலிஸார் கைப்பற்றி அழித்தனர்.

வாக்குச் சீட்டுக்களுடன் நின்ற மக்கள் மீது தீவிர நடவடிக்கை எடுத்தனர். இதனால் மாகாண அரசு வெளியிட்ட அறிக்கை எந்த வாக்குச் சாவடியிலும் வாக்களிக்க முடியுமென தெரியப்படுத்தியது. இதனை எல்லாம் கடந்து மிகத் தீவிரமான உணர்வுடன் தனியாகப் பிரிந்து செல்ல கட்டலோனிய மக்கள் முடிவெடுத்துள்ளனர். மக்களது முடிவுக்குப் பின்னர் கட்டலோனிய மக்கள் மீதான ஸ்பெய்ன் அரசின் தொடர்ச்சியான பாரபட்சம் தொடர்ந்தது. அவர்களது உரிமை மறுப்பு, வளங்களைச் சரியாகப் பங்கிடாமை, போதிய சுயாட்சி வழங்கப்பட்ட போதும் அவர்கள் மீதான அடக்குமுறையை தொடர்ந்தமை என்பவற்றைக் காரணங்களாகச் சொல்லிக் கொள்ள முடியும்.

உலகிலுள்ள சிறுபான்மைத் தேசிய இனங்களுக்கு மீளவு மொரு மீட்சி பெறும் வாய்ப்பு உலக அரங்கில் ஏற்பட்டுள்ளது. இதை ஏனைய சிறுபான்மைத் தேசிய இனங்கள் அனுபவமாகக் கொண்டு செயல்படுத்தல் அவசியமானது. சோவியத் யூனியன் சரிவுக்குப் பின்னர் மிகமோசமான பின்னடைவை எதிர் கொண்டுள்ள சிறுபான்மைத் தேசிய இனங்களுக்கு வாய்ப்பான சூழலை தந்துள்ளனர் கட்டலோனிய மக்கள்;. இதை இருபத்தியோராம் நூற்றண்டுக்கான தேசிய இனங்களின் மீட்சிக்கான உபாய்மாகக் கொள்ள முடியும் என்பது மேற்குநாடுகளுக்கு சவாலானவிடயமேயாகும். நட்புமுதலாளித்துவமும் உற்பத்தி முதாலிளித்துவமும் தேசிய இனங்களின் எழுச்சியைத் தடுத்தாலும் இயல்பான வளர்ச்சியில் தேசிய இனங்களுக்கான காலமாக அமைந்துள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் கட்டலோனியாவின் அரசியல் தலைமையின் முடிவு மிகச் சிறந்ததாகவும். உத்தி நிறைந்ததாகவுமே கொள்ளப்பட வேண்டும். அதற்காக கார்லஸ் பாராட்டப்படவேண்டியவர். எப்படிக் குர்திஸ் தலைமையோ அவ்வாறே கார்லஸின் நடவடிக்கையும் அமைந்துள்ளது.

குறிப்பாக ஜரோப்பிய ஒன்றியம் நெருக்கடி, பிரித்தா னிய வெளியேற்றம், கிரேக்கத்தின் பொருளாதார நெருக்கடி, அகதிகள் பற்றிய ஜரோப்பியக் கொள்கையின் பதற்றம், ஜரோப்பியத் தேசிய வாதத்தின் மீள் எழுச்சி என்பன கட்டலோனியாவைப் பிரிவினைக் குத் தூண்டிய விடயங்களாகும். பிரித்தானியர் ஜரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறுவதற்கு எடுத்த பொதுவாக்கெடுப்பே மிகப்பிரதான ஜரோப்பிய மாற்றங்களுக்குக் காரணமாகக் கொள்ளமுடியும். இதைச் சரியானதும் சாதுரியமானதாகவும் பயன்படுத்தும் தலைமைத்துவங்கள் சிறுபான்மைத் தேசிய விடுதலைக்கு வலுச்சேர்க்கின்றன. இவ்வாறு ஜரோப்பாவுக்குப் புதிய அரசுகளுக்கான கோரிக்கை வலுவாவதுதவிர்க்கமுடியாததாகமாறுகின்றகாலப்பகுதியாக உள்ளது.

பனிப்போர் முடிவு, கிழக்கு ஜரோப்பாவில் தேசியங்களின் தேசிய அரசுகளின் உருவாக்கம் நிகழ்ந்ததுபோன்றே பிரித்தானிய வெளியேற்றம் மேற்கு ஜரோப்பாவில் புதிய அரசுகள் உதயமாக வழிசமைத்துள்ளது.

ஜரோப்பிய ஒன்றியத்தில் ஏற்பட்ட குழப்பம் அதற்குப் பின்னுள்ள காரணங்கள் ஜரோப்பாவுக்குப் பொதுவாக்கெடுப்பைச் சாதகமாக்கியுள்ளது. அதுவே மேற்காசியாவிலுள்ள சிறுபான்மைத் தேசிய இனங்களைத் தூண்டியுள்ளது.

இத்தகைய பொதுவாக்கெடுப்பு விடுதலைக்காகச் சிறுபான்மைத்தேசிய இனங்களின் இருப்பில் அதிகமுக்கியத்துவத்தை உலகளாவிய ரீதியில் ஏற்படுத்த விளைவது தவிர்க்க முடியாதது. இந்த நூற்றாண்டில் ஆசியா, ஆபிரிக்கா மற்றும் தென் அமெரிக்காவிலுள்ள சிறுபான்மைத் தேசிய இனங்கள் பொதுவாக்கெடுப்புக்குச் செல்வது தவிர்க்க முடியாததாகவே அமையும்.

இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை பிரிந்து செல்வதற்கான பொதுவாக்கெடுப்பு மேற்கொள்வதென்பது அதிகமான வாதங்களைக் கொண்டது. இலங்கை அரசின் அணுகுமுறைகளை அவதானிக்கும்போது பொதுவாக்கெடுப்புக்கான முடிவை நோக்கியே செயல்படதூண்டும். ஆனால் அது உணர்ச்சிவசப்பட்ட முடிவாகவே அமையும். கடந்த அறுபதுவருடம் நிகழ்ந்த அகிம்சை, ஆயுதப்போராட்டத்தின் முடிவுகளிலிருந்து இலங்கைத் தமிழர் அதிக பாடங்களைக் கற்றுள்ளார்கள். இதனால் பிரிந்து செல்வது என்பதைக் கடந்து இலங்கைக்குள் சுய நிர்ணயத்துடன், வடக்கு, கிழக்கு தாயகத்தை உத்தரவாதப்படுத்துவதும் சுயாட்சிக்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்கான உத்தியாக அமைவதும் அவசியமானது என்று உணருகிறார்கள். இதன் மூலம் தமிழர் தமது நிலைப்பாட்டை மீண்டும் ஒரு தடவை பன்னாடுகளுக்குத் தெரியப்படுத்துவதற்குப் பொதுவாக்கெடுப்புக்குச் செல்வது தவிர்க்க முடியாததாக அமைய வாய்ப்பு அதிகம் உண்டு. இது பிரிந்து செல்வதற்கானதல்ல, இலங்கைத் தமிழர் தமது பூர்வீகதேசத்தில் சுயநிர்ணயத்துடன் வாழ்வதற்கான அங்கீகாரத்தைக் குறிக்கும்.

பிரிந்து செல்வதற்கான வாய்ப்போ அல்லது அதற்கான புவிசார் அரசியல் சூழலோ பன்னாட்டு அரசியல் யதார்த்தமோ தற்போதைய சூழலில் இல்லை என்றே குறிப்பிட முடியும். அறிவு பூர்வமாக முடிவுகளை எட்டுவது சிறப்பான விளைவுகளை ஏற்படுத்தும். தமிழர் இலங்கைத் தீவுக்குள் சுயநிர்ணயத்துடன் வாழ்வதற்கான புறச் சூழலை உருவாக்குவது மிகச் சிறப்பானதாக அமையும். அதுவே பிராந்திய, பன்னாட்டு அரசியலது தீர்மானமாக அமைந்துள்ளது.

புவிசார் அரசியல் தளத்துக்கான வாய்ப்புக்களை உருவாக்குவதும் பன்னாட்டுச் சக்திகளை இராஜதந்திர ரீதியில் கையாள்வதும் இலங்கைத் தமிழருக்கு முன்னாலிருக்கின்ற முக்கிய சவாலாகும். அதை நிறைவேற்றுவதன் மூலம் முழுமையான தீர்வுக்குள் சுபீட்சமான அரசியல், பொருளாதார, சமூக பண்பாட்டு இருப்பை பேண முடியும். இலங்கைக்குள் இருப்பதென்பதும்,

வெளியே இருப்பதென்பதும் புவிசார் அரசியல் தளத்திலும் பன்னாட்டு அரசியல் தளத்திலுமே தங்கியுள்ளது. ■





நாமாகத் தொலைத்துவிட்ட எமது பண்பாட்டு விழுமியங்கள்

‘ஈழத் தமிழினம்’ என்ற அடை மொழியால் சுட்டப்படும் நாங்கள், இன்று, எமது மூதாதையர்களால், காலாதி காலமாகக் கட்டிக் காக்கப்பட்டு வந்த, பொத்திப் பாதுகாக்கப் பட்டு வந்த, எமது பாரம்பரிய வாழ்வியல் விழுமியங்களை, பண்பாட்டுப் பழக்க வழக்கங்களைத் தொலைத்துவிட்டு நிற்கின்றோம் என்று கூறுவது குறித்து எம்மவர்களில் எவரும் கோபமோ, கவலையோ அடைவதில் நியாயம் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை.

மேற்குறித்த எனது கருத்துக் குறித்து இன்றைய எமது இளம் சமூகத்தினர், பெருமளவில் அலட்டிக்கொள்ளவோ அல்லது ஆத்திரப்படவோ போவதில்லை என்பது மட்டும் நிச்சயம். எமது மூதாதையர்களது பாரம்பரிய பண்பாட்டு நடைமுறைகள் குறித்து எமது இன்றைய இளம் தலைமுறையினர் பெரிய அளவில் தெளிவாக எதுவும் தெரிந்து கொண்டிருக்காமையே அதற்கான காரணம்.

இத்தனைக்கும் நிழலின் அருமை வெயிலில்தான் தெரியும் என்பதற்கேற்ப புலம்பெயர்ந்து வெளிநாடுகள் பலவற்றிலும் வாழும் எம்மவர்களுக்கு எமது பாரம்பரிய பண்பாட்டுப் பழக்க வழக்கங்கள் குறித்த ஈடுபாடும், அக்கறையும் இருக்கும் அளவுக்கு இங்கு எமது ஊர் வாழ் உறவுகளுக்கு அக்கறை இல்லாது போயுள்ளமை குறித்து புலம் பெயர்ந்து வாழும் உறவினர்களும் தமது மன ஆதங்கங்களைப் பகிர்ந்து கொள்வது வழக்கமாகியுள்ளது.

“இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை” என்றொரு முதுமொழி தமிழில் வழக்கில் உள்ளது. அதனடிப்படையில் வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் எம்மவர்களில் கணிசமானவர்கள் – (நான் எல்லோரையும் குறிப்பிடவில்லை என்பதைக் கவனத்தில் கொள்க) தாம் அந்தந்த நாடுகளில் அன்றாட வாழ்க்கைச் சூழ்நிலைகளிலும், ஒட்டுமொத்த வாழ்க்கையிலும் எதிர்நோக்கும் சிரமங்களையும் பின்னடைவுகளையும், இங்கு தமது தாயகத்துக்கு வரும் வேளைகளில் தமது குடும்ப உறவுகளுக்கோ நெருங்கிய நண்பர்களுக்கோ ஏன் வெளிப்படுத்த வேண்டுமென்ற வெட்கஉணர்வினால், அவற்றை மறைத்துத் தமது குடும்பத்துக்கு நெருங்கிய உறவுகளை முடிந்தவரை திருப்திப் படுத்தும் வகையில் நடந்து கொள்வதாகக் கூறப்படுவதிலும் ஓரளவு உண்மை உள்ளதென்பதை ஏற்றுக்கொண்டாகத்தான் வேண்டியுள்ளது.

புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் எமது உறவுகளில் பலர் – இங்கு தமது குடும்பப் பின்னணி, வசதி வாய்ப்புக்கள் கணிசமான அளவுக்குத் திருப்திகரமாக இருந்திருந்த நிலையிலும், போர் இடம்பெற்ற காலகட்டத்துச் சூழ்நிலை காரணமாக உயிர்பாதுகாப்பு என்ற ஒரேஒரு காரணத்தின் அடிப்படையில் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில், அந்தந்த நாடுகளது வேறுபட்ட கலாசாரப் பின்னணிக்குள் தம்மையும் இணைத்துக் கொண்டு வாழநேர்ந்தவர்கள்– அதுவுமன்றி, இங்கு தாம் பெற்றுக்கொண்ட கல்வி அறிவுத் தராதரத்துக்கு கொஞ்சமேனும் பொருத்தமேயில்லாத தொழில் முயற்சிகளில் வெளிநாடுகளில் ஈடுபடவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளானவர்கள். அந்த வகையில் மன உணர்வுகள் ரீதியிலோ, இயந்திரமயமான தொழில் முயற்சி ரீதியிலோ மனத் திருப்தியும் மனமகிழ்வுமின்றி வாழ நேர்ந்த அவர்கள் சூழ்நிலைக் கைதிகளாக, தாம் இடம்பெயர்ந்து வாழ நேர்ந்த நாடுகளது கலாசார பழக்க வழக்கங்களுடன் ஒன்றிப்போக நேர்ந்ததால், அவர்கள் தமது தாயக உறவுகளைக் காண இங்கு வரும் வேளைகளில் தமது இனத்துக்கேயுரிய பாரம்பரிய பழக்க வழக்கங்களை புறம்தள்ளி நடப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு வந்தாலும், அது முற்றுமுழுக்க அவர்களது தவறாகக் கொள்ள இயலாது. இவற்றுக் கெல்லாம் விதி விலக்காக, ஒரு குறிப்பிட்ட எமது புலம்பெயர் உறவுகள் தமது பிள்ளைகளை மட்டுமன்றித்தாமும் எமது பாரம்பரியத்தைக்கைவிடாது இறுக்கமாகப் பேணுவதைக் காண்கையில் ஆச்சரியத்துக்கு உள்ளாக நேரிட்டது முண்டு.

எமது பண்டைய தமிழினத்தின் வாழ்க்கைச் சுற்றோட்டத்தில் ஒவ்வொரு பழக்கவழக்கத்தின் பின்னாலும் உடல்நலரீதியிலான அல்லது மதநம்பிக்கை ஈடுபாட்டை வலியுறுத்தவல்ல ஏதாவதொரு அடிப்படைத் தத்துவம் பொதித்திருந்தமையை மறுப்பதற்கில்லை. ஆனால் காலப் போக்கில் அவை யாவற்றையும் நாமாகவே கைவிட்டு புதிய, நவீன, கலாசார நடைமுறைகளின்பாற் கொண்ட ஈடுபாட்டால் கவர்ச்சிக்கு உள்ளாகி அந்தப் புதிய பழக்க வழக்கங்களைக் கடைக்கொள்ள எம்மை நாமே தயார்ப்படுத்திக் கொண்டோம். நாளுக்கு நாள் அத்தகைய புதிய புதிய நடைமுறைகள், செயற்பாடுகள், மாறுபாடுற்று பரிணாமம் பெற்று எமது முன்னைய பாரம்பரிய பழக்க வழக்கங்களை மறக்கடிக்கும் அளவுக்கு எம்மை மாற்றி விட்டுள்ளன.

பொதுப்படையான வகையில் விவரிப்பதனால், தமிழ் மக்கள், அதிலும் தமக்கென தனியான கலாசார விழுமியங்களை அக்கறையோடு பேணிக் கட்டிக் காத்து வந்ததன் மூலம் பெருமைப்பட்டு வந்த ஈழத் தமிழினம், இந்த மண்ணில் பிறப்பது முதல், உயிரிழந்து உறவுகளால் மதிப்பு மரியாதையுடன் தகனம் செய்யப்படும் வரையிலான வாழ்க்கை வட்டத்து நடைமுறைகளில் சீரிய ஒழுங்கு முறைக்கமைய வாழக் கற்றுக்கொண்டிருந்தது. தமது வாழ்வுமுறை அத்தகைய கட்டுப்பாட்டுடன் கூடியது தானென்பதை முற்றுமுழுதாக நம்பி, அவற்றுக்கு மதிப்பளித்து வாழப் பழகியிருந்தது. அத்தகைய கட்டுப்பாடுகளுக்கும், கட்டுக்கோப்பான செயற்பாடுகளுக்கும் நிரூபிக்கத்தக்க அடிப்படை அர்த்தங்கள் இருந்தன. விஞ்ஞான பூர்வமாக நிரூபிக்கும் காலகட்டமாக அது இல்லாதிருந்ததால் மத நம்பிக்கையை அதற்குப் பின்னணியாக்கி அத்தகைய செயற்பாடுகளது புனிதத்தையும்சிறப்பையும்நிலைப்படுத்தி வந்தனர்.

பிறந்த குழந்தையைத் தொட்டிலில் இட்டுச் சீராட்டி மகிழும் சந்தர்ப்பம் முதல், அந்தக் குழந்தையின் ஒவ்வொரு வளர்ச்சிப் பருவத்திலும் உற்றார், உறவினரது சொந்தம் என்ற பிணைப்புடன் அந்தக் குழந்தையின் வெற்றிகளையும், சாதனைகளையும் உற்சாகமூட்டி மேலும் வெற்றிக்கான தூண்டுதலாகச் செயற்படக் கற்றுக்கொண்டிருந்தது. எமது ஈழத் தமிழர் குழந்தை, சிறுவனாகி, இளைஞனாகி, திருமண பந்தத்துள் தன்னை இணைத்து ஒரு குடும்பமாகி, அந்த ஆணும் பெண்ணும் தத்தமக்குரிய, தழது இனம் வகுத்து வைத்திருந்த பண்பாட்டு நடைமுறைகளை முறைப்படி பேணி ஒழுகக் கடமைப்பட்டிருந்தனர். அந்த வகையில் அன்றைய எமது திருமண நடைமுறைகள், கோட்பாடுகள் யாவும் பிறநாட்டவர்களது கௌரவத்துக்கும் பாராட்டுக்கும் உரியவையாக அமைந்திருந்தன.

தான் மணந்துகொண்ட பெண்ணைத் தனது வாழ்க்கைப் பயணத்தில் எந்த நிலையிலும் தன்னோடிணைந்து பயணிக்கத்தக்க வகையில், மனித தர்மங்களின்றும் வழுவாது நடத்தும் குடும்ப வாழ்க்கையின் பயனாய் நன்மக்கட்பேறு பெற்று, ஆல்போல் தழைத்த குடும்பமாக வாழ்வதன்மூலம், அந்தத் தனி மனிதன் தனது குடும்பத் துடன் சேர்ந்து சமூகத்தின் நல் அங்கமாகிறான். தனது பிள்ளைகளுக்கு உரிய தொழில் வழிகாட்டி அவர்கள் வாழ்க்கையில் குடும்பமாகிச் சிறந்து வாழ வழிகாட்டும் வரை, அந்த மனிதர் என்ற பாத்திரம் சமூக கட்டுப்பாடுகளையும் பழக்க வழக்கங்களையும் உரிய முறையில் கடைப்பிடித்தொழுக அவன் சார்ந்த சமூகம் பற்றுக் கோடாக இருந்து உதவுகிறது.

காலப் போக்கில் முதுமை வந்தணைத்துக்கொள்ள ஏதோவொரு சாட்டுப்போக்குடன் சாவைத்தழுவிக்கொள்ள நேரும் வேளையிலும் ‘அந்த மனிதனது’ பின்னுறவுகள் தமது இன மதக் கோட்பாடுகளுக்கமைய, உரிய அந்திமச் சடங்குகளை நிறைவு செய்து வைப்பதுடன் மட்டும் நின்றுவிடாது, வருடா வருடமோ, நல்லநாள் பெருநாள்களிலோ தாம் இழந்துவிட்ட உறவை நினைவு கூர்வது ஈழத் தமிழினத்துக்கேயுரிய தனித்துவமானதொரு நடைமுறையாகும்.

துரதிர்ஷ்டவசமாக இன்று நாம் அன்றைய பாரம்பரிய பண்பாட்டு நடைமுறைகள்,பழக்கவழக்கங்கள்அத்தனையையும்தொலைத்துவிட்டு, அவற்றையெல்லாம் மறந்துவிட்டு, இயந்திரமான வாழ்க்கைச் சூழலுக்குள் அகப்பட்டு அல்லாடி வருகிறோம். ஒரு வகையில் இதனை ‘மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தடுமாறும் நிலை’ என அடையாளப்படுத்த இயலும். நாகரீகமாற்றங்களின் விளைவு என இதனைக் குறிப்பிட இயலாத அளவுக்கு, இந்த மாற்றம் எம்மை அறியாது எம்மைச் சுற்றிச் சூழ்ந்த ஒன்றல்ல. நாமாக, எமது நிலையைத் தெளிவாக உணர்ந்த நிலையிலேயே, இத்தகைய மாற்றங்களின் ஆளுமைக்கு உள்ளாக விட்டுள்ளோம்.

மற்றொருவிதத்தில்குறிப்பிடுவதானால், எமது இளம்சமுதாயம், ஏதோ ஒரு சூழ்நிலைத் தாக்கத்துக்கு உட்பட்டு படிப்படியாக இத்தகைய எமது பாரம்பரிய பண்பாட்டு பழக்க வழக்கங்கள் மற்றும் நடைமுறைகளிலிருந்து எம்மை மாற்றியமைத்து வருகின்றது என்ற குற்றச்சாட்டை ஓரளவுக்கு ஏற்றுக் கொண்டாலும் எமது முதிய தலைமுறையினர் முற்றுமுழுதாக எம் மத்திலிருந்து அகலும்வரை அவர்கள் எமது பண்டைய பழக்க வழக்கங்கள் பற்றி நினைவூட்டுவதுடன், எமது மாற்றம் குறித்துக் குத்திக் காட்டிக் குறை கூறி வரத்தான் செய்வார்கள் என்பதையும் மறுப்பதற்கில்லை.

எனவே இத்தகைய பின்புறச் சூழல்கள் அத்தனையையும் சீர்தூக்கிப் பார்த்து எமது ஈழத்தமிழினம், குறிப்பாக எமது இளைய தலைமுறையினர் எமது பண்டைய பழக்க வழக்கங்களைக் கைவிடாது முடிந்தவரை எமது இன்றைய வாழ்வியல் சூழலை அனுசரித்து அவற்றைக் கடைக்கொண்டு வருவார்களானால், அதுவே அவர்கள் எமது இனத்துக்கு ஆற்றும் பெறுமதிமிக்க கைமாறாக அமையும் என்பதில் சந்தேகம் கிடையாது.

கட்டுரை



வி.எஸ்.தங்கராஜா

‘வி.எஸ்.ரி’எனச் சுருக்கமாக அழைக்கப்படும் வி.எஸ். தங்கராஜா நாவற்குழியைச் சேர்ந்தவர். அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்றிருக்கிறார். பத்திரிகைத்துறையில் அனுபவம் வாய்ந்தவர். மொழிபெயர்ப்புக் (சிங்களம்– தமிழ்) கட்டுரைகளின் சொந்தக்காரன்.

தமிழருக்கானபுதுவருடம்பிறந்திருக்கின்றது. தைத்திருநாள், ஈழத்தமிழர்கள் வாழ்வில் நிரந்தரமான பேரொளியைக் கொண்டு வரவேண்டும். புதிய அரசமைப்பு உருவாக்கம், அரசியல் கைதிகளின் விடுதலை, காணமால் ஆக்கப்பட்டவர்கள் குறித்த நிலைப்பாடு, இராணுவத்திடம் உள்ள காணிகள் விடுவிப்பு என்று பலமுனைப் போராட்டங்களிலும் சிக்கியுள்ள நாம் அவை அனைத்திலும் சாதகமான முடிவைப் பெறவேண்டும் என்பதே அனைவரதும் வேணவா.

தமக்கென்று வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பு எதையும் கொண்டிராதயூதர்கள், பலஸ்தீனத்துக்கு அருகில்குடியேறி இன்று இஸ்ரேல் என்ற மிகப்பெரும் தேசத்தைக் கட்டி யெழுப்பியுள்ளனர். அனைத்துத் துறைகளிலும் ஆதிக்கம் மிக்கதாகவும், சக்திவாய்ந்ததாகவும்இன்றைக்குஇஸ்ரேல் விளங்குகிறது.

சில வல்லரசுகளின் வழிநடத்தலில் யூதர்களுக்கு அது சாத்தியமாகியுள்ளது.அன்றுயூதர்கள்எவ்வாறுஇருந்தனரோ அத்தகைய நிலையிலேயே இன்று ஈழத் தமிழர்கள் உள்ளனர். தமக்கென்று நிரந்தர அடையாளம் ஒன்றைத் தேடுபவர்களாகவும், அதை வலுவாக வேரூன்றச் செய்யவேண்டும்என்றமுனைப்புள்ளவர்களாகவும்உள்ள ஈழத்தமிழர்களின் வாழ்க்கை அவற்றைச்சாத்தியப்படுத்து வதிலேயே இன்று படிப்படியாக நகர்ந்துகொண்டிருக்கிறது. அமெரிக்கா எனும் இமாலயப் பலம் யூதர்களின் பின்னணி யில் இருந்தது. ஆனால் எமக்கு அவ்வாறான எதுவும் இல்லை. இதுவும் நாம் எமக்கென்று தனித்துவங்களைச் சாதிக்காமல் இருப்பதற்கு முக்கிய காரணமாகச் சொல்லிக் கொள்ளலாம்.

போரின் முன்னரும்
போரின் பின்னரும்

தமிழர்களின் விடிவுக்காக ஆயுதம் ஏந்திய போராட்டத்தில் விடுதலைப் புலிகள் தம்மை அர்ப்பணித்தபோது தனிநாடு என்றகொள்கையில்எம்மில்பலர்விடாப்பிடியாய்நின்றோம். தமிழர் தாயகம் உருவாக்கப்படல் வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கள் வெகு சிலவே நிலவின. 2009ஆம் ஆண்டுவிடுதலைப் புலிகள் மௌனிக்கச்செய்யப்பட்டதன் பின்னர் தனிநாடு என்ற கோரிக்கை அப்படியே அஸ்த மித்துப் போனது. எமது பிரதிநிதிகளும் சரி, நிகழ்காலச் சந்ததியும் சரி தனிநாடு என்ற கொள்கையில் பாரதூரமான கரிசணைகாட்டுபவர்களாகஇல்லை. தற்போதுஅவர்களின் எண்ணமெல்லாம் ஒன்றுபட்ட இலங்கைக்குள்ளேயே உள்ளது. அதாவது பெரும்பான்மையினரான சிங்கள மக்களுடன் இணைந்து வாழுவது என்று தீர்மானிக்கப் பட்டாயிற்று.

அத்தியவசியமான
புதிய அரசமைப்பு

ஒன்றுபட்ட இலங்கைக்குள் எமது வாழ்வை எவ்வாறு செப்பனிட்டுக்கொள்வது. ஆம்...அதுஅரசமைப்பினாலேயே சாத்தியப்படும்.

"ஒரு மக்கள் குழுவுக்கான ஆட்சியை வலுப்படுத்த வரை யப்படுவதேஅரசமைப்பு. அது ஆட்சி பற்றிய உறுதி யான விதி" என்று அரச மைப்புக்கான விளக் கத்தைத் தருகிறார் பேரா சிரியர்லிக்.

இவரின் கருத்துப்படி, இலங்கையில்இதுவரை காலமும் இருந்துவரும் அரசமைப்பை மாற்றி, சிறுபான்மை மக்களும் சகல அதிகாரங்களுடன் வாழக்கூடிய வகையில் ஓர்அரசமைப்புஏற்படுத்தப்படுமாயின்அந்தஅரசமைப்பின் மூலம் இடம்பெறும் ஆட்சி அனைத்து மக்களின் சன நாயகத்தையும்வளப்படுத்தக்கூடிய வகையில்அமையும். அதாவது ஒன்றுபட்ட இலங்கை என்ற சித்தாந்தம் சாத்தியப்படக்கூடும். இந்த வகையில் இலங்கையில் புதியதொரு அரசமைப்பை ஏற்படுத்துவதற்கு முயன்று வருகின்றதுதற்போதையமைத்திரி-ரணில்கூட்டுஅரசு. உருவாவது உறுதி என்று தெற்கு இனவாத அரசியல் வாதிகள்போர்க்கொடிதூக்கியுள்ளனர். அவர்களில்மகிந்த, விமல் வீரவன்ச ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களைப் புறந்தள்ளிவிட்டு இந்த அரசமைப்பை நிறை வேற்ற முடியாது. எனவே அரசமைப்பு தொடர்பான விளக்கங்கள் தற்போதுவரை வழங்கப்பட்டுக்கொண்டே இருக்கின்றன. அரசமைப்பில் ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரப்பகிர்வேகுறிக்கப்படுகிறது.அரசதலைவருக்குமுழு அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளது. எனவே தமிழர் தாயகத்தை எண்ணிப் பயம்கொள்ளத் தேவையில்லை என்றவாறாக விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. எனினும் இனவாதத்தின் மூலம் தமது வாக்கு வங்கிகளைத் தக்கவைக்கதெற்குஅரசியல்தலைமைகள்பலரும்இதற்கு எதிர்மாறான கருத்துக்களுடன் தமது பரப்புரைகளைத் தொடர்ந்துகொண்டேயுள்ளனர்.

ஒற்றையாட்சி என்பதை
உறுதிப்படுத்துகிறார்
ஜயம்பதி விக்கிரமரத்ன

இடைக்கால அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது ஒற்றையாட்சிதான் என்பதை உறுதிப்படுத்திக் கருத்துப்



கட்டுரை



யாழ்ப்பாணம்– ஆனைக் கோட்டையைச் சேர்ந்த வர். சென்.பற்றிக்ஸ் கல் லூரியின் பழைய மாண வன். தற்போது பத்திரி கையாளனாகச் செயல் பட்டு வருகிறார்.

ரூபநாதன் ராஜப்பிரகாஸ்

சாத்தியப்படட்டும் புதிய அரசமைப்பு

தமிழ் கூட்டமைப்பின்
3 அம்சக் கோரிக்கை

புதிய அரசமைப்பைத் தமிழ் மக்களின் அரசியல் பீடமான கூட்டமைப்புஏற்றுக்கொள்ளவேண்டுமாயின்தமதுமூன்று முக்கிய கோரிக்கைகளும் நிறைவேற்றப்படுதல் அவசியம் என்றுநாடாளுமன்றஉறுப்பினர்சுமந்திரன்திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தார். வடக்கு - கிழக்கு இணைப்பு, மாகாணங்களுக்கு வழக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் திரும்பப் பெறப்பட முடியாதவாறான இறுக்கமான பொறிமுறை, நிதித்துறைச் சுதந்திரம் ஆகியவையே கூட்டமைப்பின் முக்கிய கோரிக்கைகளாகவுள்ளன. இந்த விடயத்தில் சிறு விட்டுக்கொடுப்புக்கும் இடமில்லை என்று கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் முன்னதாகவே தெரிவித்திருந்தார்.

"இடைக்கால அறிக்கையில் ஓர் அங்குலம் கூட இனிக் கீழிறங்கமுடியாது.நாம்ஏற்கனவேகீழிறங்கிவந்துள்ளோம். தெரிவுக்காக விடப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் எமக்குச் சாதகமாகவரவேண்டும்'எனவும்அவர்பட்டியலிட்டுள்ளார். இந்த மூன்று அம்சக் கோரிக்கைகளுடன் அரசமைப்பின் இடைக்கால அறிக்கை மீதான விவாதங்கள் நாடாளு மன்றத்தில் நடந்து முடிந்துள்ளன. இந்த விவாதத்தில் எடுத்துரைக்கப்பட்ட கருத்துக்களுடன் கூட்டடைப்பின் மூன்று அம்சக் கோரிக்கைகளை நோக்கினால் அவை கைக்கூடுவது அரிதிலும் அரிதே.

இடைக்கால அறிக்கையில் ஏகப்பட்ட குழப்ப நிலைகள்

புதியதொரு அரசமைப்பை உருவாக்குவதற்காக உரு வாக்கப்பட்ட வழிநடத்தல்குழு, கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இடைக்கால அறிக்கையை வெளியிட்டிருந்தது. இந்தஅறிக்கையின்படிபார்க்கையில்புதியஅரசமைப்பானது வலுவான அதிகாரப் பகிர்வைக் குறித்து நிற்கிறது. அது கூட்டாட்சித்தத்துவத்தைக்கருவாகக்கொண்டுள்ளது. இந்த அரசமைப்பு சாத்தியப்படுமானால், தமிழர் தாயகம் பகிர்ந்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினரும் புதிய அரசமைப்பைஉருவாக்குவதற்கானவழிநடத்தல்குழுவில் அங்கம் வகிக்கும் முக்கிய உறுப்பினருமான ஜயம்பதி விக்ரமரத்ன.'புதியஅரசமைப்பில்'ஒற்றையாட்சிமுறைமை முன்புஇருந்ததைவிடவும்மிகவும்பலப்படுத்தப்பட்டுள்ளது" என்றுஅவர்தெட்டத்தெளிவாகக்கோடிட்டுக்காட்டியுள்ளார். 'கூட்டாட்சி என்ற அம்சமே இடைக்கால அறிக்கையில் எங்கும் குறிப்பிடப்படவில்லை' என்றும் அவர் குறிப்பிட் டுள்ளார். மாகாணங்கள் பிரிந்து செல்லுதலைத் தடுத்தல், மாகாணங்களில்குழப்பங்கள்,கலவரங்கள்,பிரச்சினைகள் ஏற்படும்போது அரச தலைவர் நேரடியாகத் தலையிடுதல், தேவை ஏற்பட்டால் நாடாளுமன்றத்தைக் கலைத்தல் உள்ளிட்ட பல அம்சங்கள் கொழும்புக்குச் சாதகமாக உள்ளதையும் அவர் எடுத்தியம்பியுள்ளார். ஜயம்பதியின் கருத்துகொழும்புஅரசின்கருத்துஎன்றேஎண்ணத்தோன்று கிறது. ஏனெனில் அவரிடம்தான் இடைக்கால அறிக்கை தொடர்பிலும், புதிய அரசமைப்புக் குறித்தும் புலம்பெயர் மக்களுக்குகுறிப்பாகபுலம்பெயர்தமிழர்களுக்குவிளக்கம் கொடுக்கும்பணியும்ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஜயம்பதியின் கருத்தின் மூலம் இரண்டு விடயங்கள் தெளிவாகின்றன. ஒன்று, கூட்டமைப்பின்கோரிக்கையான 'மாகாணங்களுக்கு வழக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் திரும்பப் பெறப்பட முடியாதவாறான இறுக்கமான பொறிமுறை'என்பதுகேள்விக்குஉட்படுகிறது.இரண்டாவது, தேவையற்ற குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் மகிந்தவினதும் அவரின் சகாக்களினதும் பரப்புரைகள் அமைந்துள்ளனஎன்பதும்தெளிவாகிறது. நிகழ்காலஅரசியல் நிலவரத்தின்படிபார்க்கையில்தமிழர்களுக்குவிடிவுகாலம் என்பது புதிய அரசமைப்பிலேயே தங்கியுள்ளது. ஆனால் இவ்வளவு தடைகளையும் தாண்டி அரசமைப்பு எவ்வாறு உருவாகப்போகிறது? அவ்வாறு உருவானாலும் அதில் எந்தளவுதூரம் அதிகாரப் பகிர்வு இருக்கப்போகிறது என்பதைச் சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் நிலையே உள்ளது.

கட்டுரை



வா.க.இராஜேஸ்வரன்

ஆவரங்கால் கிழக்கு – புத்தூரைச் சேர்ந்தவர். அரச ஓய்வூதியர். ஓய்வுக்குப் பிறகு பத்திரிகைத் துறையில் ஈடுபட்டு வருகிறார். கட்டுரைகள் எழுதுவதில் கைதேர்ந்தவர். இதுவரை ஆயிரக்கணக்கான கட்டுரைகளை எழுதியிருக்கிறார்.



தமிழர்களின் துயரங்கள் நீங்க பொங்கல் பானை பொங்கட்டும்

சித்திரை மாதம் முதலாம் திகதி ஆரியர்களின் புதுவருடம் பிறக்கின்றது. பழக்கதோசத்தால் தமிழர்களும் மேற்படி தினத்தையே தமது புதுவருடப் பிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர். ஆனால், தமிழர்களுக்குப் புதுவருடம் பிறப்பது தை மாதம் முதலாம் திகதியே ஆகும். அன்றுதான் தனுசு ராசியில் இருந்து மகர ராசிக்குள் சூரியன் காலடி பதிக்கின்றார்.

இந்தியாவின் தெற்குப் பிரதேசத்தில் திராவிடர்களும், வடக்கில் ஆரியர்களும் வாழ்ந்து வருகின்றனர். ஆரியர்கள் ஆரியவம்சத்துக்குரியபழக்கவழக்கங்களையும், நடைமுறைகளையும், கொண்டவர்கள். மகாபாரதத்திலும், இராமயணத்திலும் உலாவிய கதாபாத்திரங்கள் ஆரிய வம்சத்தைச் சேர்ந்தவை. சேர, சோழ, பாண்டியர்கள் உட்படத் தெற்கில் ஆட்சி புரிந்த மன்னர்கள் அனைவரும் திராவிட பாரம்பரியத்தைப் பறைசாற்றும் திராவிடவம்சத்தைச் சேர்ந்தவர்கள்.

தற்போது இந்தியாவின் தெற்குப்பிரதேசங்களில் வசிக்கின்ற மலையாளிகள், கன்னடர்கள், தெலுங்கர்கள், தமிழர்கள் அனைவருமேதிராவிடர்கள் என்றகுடும்பத்தைச் சேர்ந்தவர்கள். ஆனால், திராவிடர்களில் வெவ்வேறு கலாசாரத்தைக் கொண்டவர்கள். வேறுபட்ட மொழிகளைப் பேசுபவர்கள். எமது ஆலயங்களில் அர்ச்சகர்களாகப் பணிபுரிகின்ற பிராமணர்கள் ஆரியவம்சத்தைச்சேர்ந்தவர்கள். இவர்கள் இந்தியாவிலிருந்து அழைத்துவரப்பட்டு அர்ச்சகர்களாகப் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். ஆலயங்களில் எமக்குப் புரியாத சமஸ்கிருத மொழியில் அர்ச்சனைகள் இடம்பெறுகின்றன. இவை தமிழிலே இடம்பெற வேண்டுமென்ற கோரிக்கைகளும் எழாமலில்லை. ஆனால், அது இதுவரையில் நடைமுறைக்கு வந்ததாகத் தெரியவில்லை. திராவிடர்கள் என்ற குடும்பத்தைச் சேர்ந்த தமிழர்கள் தமிழ்மொழியைப்பேசுகின்றனர். தமிழழைப்பேசுவதால்தான் இவர்கள் தமிழர்கள் என அழைக்கப்படுகின்றனர். இவர்கள்தமக்கெனத்தனியானபண்பாடு, கலாசாரம்ஆகியவற்றைக் கொண்டவர்கள். தைப்பொங்கல் பண்டிகை தமிழர்களின் பண்டிகைகளில் முக்கியமானதாகும். இது சூரிய பகவானுக்கு நன்றி செலுத்துகின்ற பண்டிகையாகவும்கொள்ளப்படுகின்றது.

பழமைகளும் பண்பாடுகளும் மறைகின்றன

'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்ற நம்பிக்கை இன்றும் தமிழர்களிடத்தில் காணப்படுகின்றது. தம்மை வருத்தி நின்ற துன்பங்கள் அனைத்தும் தை பிறந்ததும் அகன்றுவிடும் என்பது இந்த நம்பிக்கையின் பொருளாகும். முன்பெல்லாம் மண் பானையில் பொங்கலிடுகின்ற வழக்கம் இருந்தது.

இதனால்மண்பானைகளைத்தயாரித்து விற்பனை செய்கின்ற மக்கள் கூட்டத்தினரும் பயன்பெற்றார்கள். ஆனால் இன்றோ மண்பானைகளின் இடத்தை அலுமினியப் பானைகள் ஆக்கிரமித்து நிற்கின்றன.

மண் பானைகள் என்றதும் எமது முன்னோர்கள் பயன்படுத்திய மண்ணினாலான பாத்திரங்கள் நினைவுக்கு வருகின்றன. சோறு சமைப்பதற்கு மண் பானைகளை அவர்கள் பயன்படுத்தினார்கள்.

கறி சமைப்பதற்கும் மண் சட்டிகளே பயன்படுத்தப்பட்டன. தேங்காய்ச் சிரட்டைகளால் உருவாக்கப்பட்ட அகப்பைகள் சமையல் வேலைகளுக்குப் பயன்படுத்தப்பட்டன. தேநீரைத் தயார் செய்வதற்கும் மண்ணினாலான சிறு பானைகள் பயன்படுத்தப்பட்டன. சிலர் தேநீரை தேங்காய்ச் சிரட்டைகளாலான பாத்திரத்தில் ஊற்றிக் குடிப்பதும் அன்றைய வழக்கமாகக் காணப்பட்டது. அன்றைய மனிதர்கள் இயற்கையோடு ஒன்றி வாழ்ந்தார்கள்.

அந்த அளவுக்கு இயற்கையை அவர்கள் நேசித்தார்கள். இதனால்நோய்கள்அவர்களை அணுகத்தயங்கின. ஆனால் இன்றைய மனிதர்கள் நாகரீக மோகத்தில் மூழ்கி இயற்கையை உதாசீனம் செய்வதால்நோய்களைச்சுமந்துதிரிகின்றனர்.



இயற்கையை அழிப்பதில் ஆர்வம் காட்டுகிறார்கள்

பஞ்ச பூதங்கள் ஐந்தும் இயற்கையின் அருங்கொடைகள். மனிதர்கள் உட்பட்ட உயிரினங்கள் அனைத்தும் கூட இயற்கையால் படைக்கப்பட்டவைதான். இயற்கைக்கு மேலாக எதுவுமே கிடையாது. இயற்கையை வெல்பவரும்எவருமில்லை. இன்றுள்ள மனிதர்கள் இயற்கைக்கு விரோதமாகச் செயற்படுவதில் ஏனோ அதிக ஆர்வம் காட்டுகின்றனர். இயற்கையின்அருங்கொடைகளில்ஒன்றான மரங்களை வகைதொகையின்றி அழித்து வருகின்றனர். மரங்களால் கிடைக்கின்ற பயன்களை மறந்த மனிதர்கள்சிறிதுகூடநன்றியில்லாமல்அவற்றை அழிப்பதில் இன்பம் காண்கின்றனர். நண்பரொருவர் டென்மார்க் நாட்டுக்குச் சென்றிருந்தார். அவரது பயண அனுபவங்கள் தொடர்பாக கேட்டபோது வன்னிக் காடுகளைப் பார்ப்பதைப் போன்ற தொரு அனுபவத்தை 'டென்மார்க்' தனக்குத் தந்ததாகக் கூறினார். அந்த அளவுக்குஎங்குபார்த்தாலும்அங்குமரங்கள் நிறைந்து காணப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். டென்மார்க் தேசத்தில் உள்ளவர்கள் மரங்களின் பயன்களை உணர்ந்துள்ளதால் அந்த நிலை அங்கு காணப்படுகின்றது.

மனிதர்களின் தவறான செயற்பாடுகளைப் பொறுக்க முடியாமல் இயற்கை அவ்வப்போது பொங்கி எழுவதும் உண்டு. சூறாவளி, பூமியதிர்ச்சி, கடும் புயல், சுனாமி ஆகியன இதன் வெளிப்பாடுகளே. ஆனால் மனிதர்கள் இவற்றையெல்லாம் கவனத்தில் கொள்வதில்லை. தமது தவறான செயல்களைத் தொடர்ந்து செய்து கொண்டே இருக்கிறார்கள்.

பூர்விகக் குடிகளுக்கு சமவுரிமை கிடைக்கட்டும்!

ஈழத்தமிழர்கள் பல பிரச்சினைகளுக்கு மத்தியில் தமது வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்கின்றனர். இவர்களின் விடிவுக்கான ஒளிக்கீற்று வெகுதூரத்தில் கூடக் காணப்படவில்லை.

ஒவ்வொரு தடவையும் அடுத்த தை மாதம் பிறந்தவுடன் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைத்து விடுமென இவர்கள் நம்பிக்கை கொண்டிருக்கின்றனர். இதுவரையில் எத்தனையோ தை மாதங்கள் வந்து சென்றுவிட்டன. ஆனால் விடிவுதான் கிடைக்கவில்லை. தைப்பொங்கல் தினத்தன்று பொங்கல் பானை பொங்கி வழியும்போது தமது துன்பங்களும் இதைப்போன்று வழிந்து ஓடிவிடுமென நினைப்பவர்களும் இல்லாமலில்லை.

தைப்பொங்கல் பண்டிகையை ஒருமதரீதியான சடங்கெனக் கூறுபவர்களும் உண்டு. தமிழர்களில் இந்து மதத்தைக் கடைப்பிடிப்பவர்கள் இந்தப் பண்டிகையைக் கொண்டாடுவதுதான் வழக்கமாகும். ஆனால் இன்று மதரீதியான வேறுபாடுகளுக்கு அப்பால் வேற்று மதத்தினரின் ஆலயங்களிலும் பொங்கல்பண்டிகை கொண்டாடப்படுவதைக் காணமுடிகின்றது. இது மத நல்லிணக்கத்தை வளர்க்கக் கூடியது. மதங்களுக்கு இடையிலான வேற்றுமைகளைப் போக்க வல்லது.

காற்று ஏழைகளின் பக்கம் ஒரு விதமாகவும், வசதியுள்ளவர்களின் பக்கம் வேறொரு விதமாகவும் வீசுவதில்லையெனக் கவிஞர் ஒருவர் பாடியுள்ளார். இதைப்போன்றுதான் சூரியனும் வேறுபாடுபார்ப்பதில்லை. இந்த வகையில் சூரியனுக்கு நன்றி தெரிவிக்கின்ற பொங்கல் பண்டிகையில் அனைத்து மக்களும் ஈடுபடுவதில்தவறொன்றும்இல்லை.

முன்பெல்லாம் எமது பகுதியில் தைப் பொங்கல் பண்டிகையின்போதுதான் வெடி கொழுத்தி மகிழ்வார்கள். பொங்கலுக்கு இரண்டொரு தினங்களுக்கு முன்பே வெடியோசைகள் ஆரம்பித்து விடும். பொங்கல் தினத்தன்று வெடிகளின் ஓசை உச்சக் கட்டத்தை எட்டிவிடும். பொங்கல் பானையில் பால் பொங்கி வழியும்போதுவெடிகளின்ஒலிகாதைப்பிளக்கும் வகையில் அமைந்து விடும். இப்போது சகல பண்டிகைகளின்போதும் வெடிகளைக் கொழுத்தி ஆரவாரிக்கின்றனர்.

பிறந்திருக்கின்ற தமிழ்ப் புத்தாண்டு தமிழர்களின் வாழ்வில் புதியதொரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். கடந்த 70ஆண்டுகளுக்கும் மேலாக அவர்கள் அனுபவித்த துயரங்கள் இனியும் தொடரக்கூடாது. அவர்கள் இந்த நாட்டின் பூர்வீகக் குடிகள் என்பதால் சகலதிலும் சம பங்கு வகிக்க வேண்டும். தமிழர்களை இனியும் புறக்கணிக்காது அவர்களது சகல பிரச்சினைகளுக்கும் அரசு தீர்வு காண வேண்டும். தமிழர்கள் தமக்கிடையிலான பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு ஒரே பாதையில் பயணிக்க வேண்டும். அவர்களுக்கிடையில்இனிமேலும்பிளவுகள் இருக்கக் கூடாது. எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கை அவர்களின் மனங்களில்நிறைந்திருக்கவேண்டும். இந்தநாட்டிலுள்ள இனவாதிகளின் மனங்களில் தைத் திருநாள் நல்ல மாற்றங்களை ஏற்படுத்தட்டும். பொங்கல் பானையில் பால் வழிந்து நாலாதிசைகளிலும் பரவுவது போன்று சாந்தியும், சமாதானமும் இந்த நாட்டை ஆட்கொள்ளட்டும்.

வீரியும் சிறுகதை

வீட்டில் இருந்து கிளம்பும்போது மனதில் ஒரே குழப்பம். எதிர்பார்ப்பு இன்றாவது கைகூடுமா என மனம் கிடந்து அடித்துக்கொள்கிறது. ஆழ்மனதில்உறைந்து கிடந்த கடந்துபோன சம்பவங்களின் சுவடுகள் பசுமரத்தாணியாய் அவனது இதயத்தைத்துளைக்க மனம் அல்லாடுகிறது. 'ஏன் இந்தப் பதற்றம் ..?' மனதுக்குள்ளேயே கேள்வி எழுகிறது. புரியாத புதிராகத் தோன்றிய உணர்வலைகளை ஒரு பக்கம் ஒதுக்கிவிட்டு, உந்துருளியைக் கிளப்ப முனைகிறான்.

மனைவி அவசரமாக அவனை நோக்கி ஓடிவருவது தெரிகிறது. 'என்ன...?' என்பதுபோல் அவளைப் பார்வையால் அளந்தான்.

"இஞ்சாருங்கோப்பா! வைபருக்குக் கார்ட் முடிஞ்சுது. வரயுக்கை வாங்கிக் கொண்டு வாங்கோ"

மனதில் தோன்றிய எரிச்சல் எதுவித பதிலையும் சொல்லவிடவில்லை. சுட்டெரிக்கும் பார்வையால் அவளை முறைத்துவிட்டுஉந்துருளியின்வேகத்தைஅதிகப்படுத்தினான்.

'கண்டறியாத வைபரும் மண்ணாங்கட்டியும்' உதட்டளவில்வந்தசொற்கள்உருப்பெறாமலேஅடங்கிப்போயின. ஒழுங்கையின் முகப்பை நெருங்கியதும் வேகத்தைச் சற்றுக்கட்டுப்படுத்தித் தெருவில் ஏறி இடது பக்கமாகப் பயணிக்கிறது உந்துருளி. அவனது மனமோ அவனைப் புறந்தள்ளிவிட்டு, கடந்த கால நினைவலைகளில் மூழ்கிப் போகிறது.

அப்பா... அவர் ஒரு புகையிலை வியாபாரி. வடக்கில் விளையும் புகையிலையைக் கொள்வனவு செய்து தொழும்புக்குக் கொண்டு போய் விற்பனை செய்வதைத் தொழிலாகக் கொண்டிருந்தவர். நாட்டில் நடந்த இனக்கலவரத்தில்கொலையாகிவிட்டார். அப்போதுஅவனுக்கு பதின்மூன்று வயது. தங்கை வாணி எட்டுவயதுச்சிறுமி. அப்பா அவர்களுக்கென்று தோட்டம் எதனையும் வைத்துவிட்டுப் போகவில்லை. அவர்கள் வாழ்ந்து கொண்டிருந்த வீடு மட்டும்தான் அவர்களது உடமை. அதுவும் அம்மாவுக்குச் சீதனமாகக் கிடைத்தது.

அப்பாவின்இழப்புஅம்மாவைநிலைகுலையவைத்தது. தட்டுத்தடுமாறி ஒருமாதிரிக் குடும்பமெனும் வண்டியை இழுக்கமுயன்றாள். இயலாமையால்திண்டாடும்அம்மாவின் நிலை கண்டு அவன் ஒரு முடிவெடுத்தான். விளைவு... கூலி வேலைக்கு அவன் போகத் தொடங்கியபோதுஅவனுக்குபதினைந்துவயது. தான்பாடுபட்டாலும் அம்மாவும் தங்கையும் சீராக வாழ வேண்டும். அவர்களை நான் வாழவைப்பேன் எனத் திடங்கொண்டான். அவனது படிப்பு பாதியில் குழம்பிப் போனாலும் தங்கையை நன்கு படிக்கவைத்துவிட வேண்டுமென்பதில் மூர்ச்சாக இருந்தான். வாணியும் கல்வியே கருந்தனம் எனப் படித்து முன்னேறி ஒரு மருத்துவராகினாள். அண்ணாவின் கடின உழைப்பில் நாட்டில் நடந்து கொண்டிருந்த போர் நெருக்கீடுக்களுக்கிடையாக அவள் படிப்பை நிறைவு செய்தபோது அவளுக்கு வயதோ இருபத்தியெட்டாகி விட்டது.

வாணி உழைக்கத் தொடங்க அம்மா ஒற்றைக் காலில் நின்று அவனுக்குப் பெண் பார்த்து திருமணமும் செய்துவைத்து விட்டாள். இரண்டு வருடங்கள் உருண்டோடி மறைந்தன. அம்மாவின்நமைச்சலும்தொடங்கிவிட்டது. "வாணிக்கு வயது போய்க் கொண்டிருக்குது. அவளுக்கு ஒரு கலியாணத்தைச்செய்து வைக்க வேணும்" அந்தச் சமயத்தில்தான் பிரச்சினை பூதாகரமாக உருவெடுத்தது. 'டாக்டர்' பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடுவதென்றால் அவளுக்குச் சமமான அந்தஸ்தில் தேடவேண்டிய நிலை ஏற்பட அவர்கள் கேட்கும் சீதனத்தைத் தர வல்லமையில்லாமல் அவன் துடித்துப்போனான். அவன், தாம் இருந்த வீட்டைத்திருத்தி அழகாகவடிவமைத்திருந்தான். இருந்தபோதிலும்எதிர்கொள்ளும்மாப்பிள்ளைகளின்எதிர்பார்ப்பு சற்று அதிகமாகவே இருந்தது. யாழ். நகரப்பகுதியில் மாடி வீடு, அல்லது கொழும்பில் வீடு, ரொக்கப்பணம், கார் என சகலவசதிகளையும்பெண்ணேகொண்டுவரவேண்டும் என்பதில் கறாராய் இருந்தனர்.

அவன்மனமுடைந்துபோனான். வாணியை அதிகமாகப் படிக்கவைத்தது அவனுக்குத் தவறாகத் தோன்றியது. சாதாரணஉத்தியோகத்தர்களைச்செய்யவாணிமுற்றாக மறுத்துவிட்டாள். அவளதுதோழிஒருத்தியின்நிலையைக் கண்கூடாகக் கண்ட அவள் அதற்கு இணங்குவாளா... என்ன... தாழ்வுமனப்பான்மைஎன்னும்கொடியவியாதியினால் பீடிக்கப்பட்ட அவளது தோழியின் கணவன் அவளுக்குத் தரும் இம்சையைக் கண்ணீருடன் கதை கதையாகச் சொல்லக் கேட்டிருக்கிறாள். அதன் பிரதிபலிப்பு அவளுக்கு ஒரு முன்னெச்சரிக்கையாய் நின்று அவளை இயங்கவைத்தது.

அம்மாவின் நச்சரிப்பு ஒரு புறம், தங்கையின் பிடிவாதம் மறுபுறம்இருதலைக்கொள்ளியாய்அவன்கல்யாணத்தரகர்களை நாடி நின்றான். அவர்களைச்சொல்லிக்குற்றமில்லை. அர்களும் பிரயாசையுடன் தான் முயற்சித்தார்கள். ஆனால்... இன்றைய சந்தையில் மாப்பிள்ளையின் விலை அதிகரித்துக் கொண்டேயிருந்தது. கொடுப்பவர் இருக்குமட்டும் கேட்பவர் மனதிலும் நப்பாசைவளரத்தானேசெய்யும்.

வாணிக்கும்வயதுமுப்பத்தைந்தாகிவிட்டது. வழமையாக இளம்பெண்களுக்குத்தோன்றும்அபிலாசைகள்அவளுக்கும்ஒருகாலத்தில்இருக்கத்தான்செய்தன. கண்நிறைந்த, கண்ணியமான ஒரு புருஷனைக் கைப்பிடித்து நிறைவானவாழ்க்கைவாழவேண்டும், அவனுடன்இணைந்து ஒன்றாக வெளியில் சுற்ற வேண்டும், குழந்தைகள் இரண்டை ஆண் ஒன்றும் பெண் ஒன்றுமாகப் பெற்று அவர்களைச் சீராட்டி வளர்க்க வேண்டும் என்றெல்லாம் கற்பனை உலகில் சஞ்சரித்தவள் திருமணமுயற்சிகைகூடாதவிரக்தியில்படித்துத்தொழிலில்முன்னேறவேண்டும் என்ற கொள்கையை இறுகப்பற்றிக் கொண்டாள். அம்மா எவ்வளவோதடுத்தபோதும்கேட்காமல்மாற்றம்வாங்கிக் கொண்டுகொழும்புகளுபோவில்லவைத்தியசாலைக்குப் பணிபுரியப் போய் விட்டாள்.

அவனுடையமாப்பிள்ளைதேடும்பணிதொடர்ந்துகொண்டேயிருந்தது. அம்மாவின் புறுபுறுப்பும் கூடத்தான். நேற்றையதினம்தரகர்ஒருகுறிப்போடுவந்திருந்தார். 'டாக்டர்' மாப்பிள்ளை. வாணியின் குறிப்போடு அவரது குறிப்பு தொண்ணூற்றிநான்குவீதம்பொருந்தியிருந்தது. வயதும் முப்பத்தியெட்டுஅவருக்குஇரண்டுதங்கைகள்அவர்களது திருமணம்முடியும்வரைகாத்திருந்தாராம். தரகர்அளந்து கொண்டேபோக, அவனது மனத்தில் மீண்டுமொரு நப்பாசை தலைதூக்கியது. வாணிக்குப் பொருத்தமானவன் இவன்தான். மனம்கற்பனையில்மிதக்கத்தொடங்கியது. இன்று மாப்பிள்ளையின் தகப்பனாரைச் சந்தித்துப்பேசித் திருமணத்தை முற்றாக்கி விடலாம் என்றொரு நம்பிக்கையை அவனதுமனதில்விதைத்துவிட்டிருந்தார்தரகர்.

பல முறை இப்படியான சந்திப்புகள் நடந்திருக்கின்றன. எனினும், அவர்கள் முன்வைக்கும் கோரிக்கைகளை நிறைவேற்றமுடியாமல்இயலாமைஎனும்தாக்கத்தினால் அவன்தலைகுனிந்துபின்வாங்கியிருக்கிறான். 'கடவுளே! இந்தச் சம்மந்தமாவது கைகூட வேண்டும். இரண்டு பெண்களைக் கரைசேர்த்த அவர்களுக்கு எங்களது நிலமையும்புரிய வேண்டும்'

மனம் வேண்டிக்கொள்ள உந்துருளியின் வேகத்தைக் கட்டுப்படுத்தினான். திருநெல்வேலிச் சந்தியைக் கடக்கச் சில நிமிட நேரம் பிடித்தது. வாகனங்கள், நடை பயணிகளெனப் போக்குவரத்து நெரிசல். சற்றுப் பிசகினால்... விபத்து, காயம் என வில்லங்கத்திலே மாட்ட வேண்டியதுதான். நிதானமாக உந்துருளியின் சில்லுகள் உருண்டு கொண்டிருந்தன. மருத்துவ பீடவளாகம் வாணி கல்வி பயின்றகாலத்தை நினைவில்மீட்டுத் தந்தது. அம்பட்டப்பாலத்தைத்தாண்டியபோதுஅமைதிகாக்க வந்தவர்களின் அட்டூழியத்தால் கோரமாக மடிந்துபோன மனித உயிர்கள் பற்றிய சிந்தனை பொறியாகஎழுந்து அவனது இதயத்தைத் தாக்கியது. அடிவயிற்றிலிருந்து ஒரு நீண்ட பெருமூச்சுமேலெழுந்து வெளியேறிக் காற்றுடன் கலந்து சங்கமமாகியது.

கொக்குவில் சந்தியை அடைந்தபோது... தரகர் அவனை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். அவனைக் கண்டதும் தரகரது முகத்தில் ஒரு முறுவல். வேண்டுதலுடன் தான் அவர் புறப்பட்டிருக்கிறார் என்பதை அவரது நெற்றியில் பூசியிருந்த திருநீறு பறைசாற்றியது. கல்யாணத்தை ஒப்பேற்றினால் அவருக்கும் ஒரு தொகை வருமானம் நிச்சயமல்லவா.

இருவரது உந்துருளிகளும் குளப்பிட்டிச் சந்தியிலிருந்து ஆனைக்கோட்டை நோக்கித் திரும்பிய சில விநாடிகளில் ஒரு இரட்டைக் 'கேற்' போட்ட வீட்டின் முன்னே உந்துருளியை நிறுத்தினார்தரகர். அவனும்உந்துருளியைவிட்டு இறங்கி அந்த மதிலுக்கு மேலாகத் தன் பார்வையைச் சுழலவிட்டான். புதிதாகப் 'பெயின்ற்' அடித்த நவநாகரீகமான கல் வீடு. வீட்டுக்கும் மதிலுக்கும் இடையே பரந்த முற்றம். முற்றத்தின் இருகரையோரங்களிலும்மாவும்பலாவுமாக மரங்கள். கேற்றிலிருந்து வீட்டு வாசல் வரைக்கும் அமைந்த பாதைக்கு ஜங்கோண வடிவிலான சிவப்பு, கறுப்பு நிறக்கற்கள் பதித்து அலங்கரிக்கப்பட்டிருந்தது. பாதையின் இரு மரங்களிலும் வண்ண வண்ண நிறங்களில் குறோட்டன் செடிகள் நிரையாக வளர்த்துப் பராமரிக்கப்பட்டிருந்தன. முற்றத்தில்சாடிகளில்வைக்கப்பட்டிருந்த றோசாச் செடிகள் பூத்துக் குலுங்கின. 'பெரிய இடம்தான்!' அவனது மனம் கணக்குப் போட்டது. இதற்கிடையில் உந்துருளிகள்வந்துதரித்துநிற்கும்சத்தம்கேட்டுவிட்டுமுற்றத்தில்நின்றநாய், கேற்றைநோக்கிப்பாய்ந்துவந்துதொடங்கியது. நாயின் குரைப்பொலி கேட்டு வீட்டுக்குள்ளிருந்து வந்த பெரியவர் ஒருவர் எட்டிப் பார்த்தார்.

"அது நான்தானய்யா"

தரகரின் குரல் கேட்டு அவரை அடையாளங் கண்டுகொண்ட பெரியவர், நாயை அழைத்துக்கொண்டுபோய் வீட்டின்பக்கவாட்டிலுள்ளகூட்டினுள் அடைத்துவிட்டுவந்



சிறுகதை



மலரன்னை

திருமதி அற்புத இராணி காசிலிங்கம் என்ற இயற்பெயரைக் கொண்டஇவர், மறைந்தஎழுத்தாளர் 'கச்சாயில் இரத்தினத்தின்' மகளாவார். 24 வருடங்களாகஎழுதி வருகிறார். 125க்கும் மேற்பட்ட சிறுகதைகளை யும், சில நாவல்களையும் எழுதியுள்ளார். இதுவரை 3சிறுகதைத் தொகுப்புக்களையும், 2நாவல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். 'போர்உலா' எனும்போர்க்கால இலக்கியம் படைத்த 'கப்டன் மலரவனின்' தாயார் இவர்.

சாம்பல் நகரம்



இரவு சுவரிய நகரம்.
பகலில் அமைதி உள்ளுறையும்.
இரவிலோ
அமைதியோடுறைந்து அதன் தொன்மைக்குத்
திரும்பும்.
ஆட்களற்ற தெருக்களின் வழியே தன்
புராதன வாசல் திறந்து என்னைத் தன்னுள்
அழைக்கிறது.
நடந்தும் விறைந்தும் பாதங்களால்
நிரப்பப்படுகிறது பட்டினம்.
பாதங்களின் கீழொரு பட்டினம்.
பைரவரும் வேட்டை நாய்களும் ஆதிசேடனும்
காத்துவரும் நகரம்.
காலபைரவனின் ரத்தத்தாலும்
சதையாலும் ஆகிய மின்நகரம்.
சித்துரகசியத்தாலான பொன்நகரம்.
நினைவுகள் உட்புகமுடியா நகரம். கனவுகளை
அழைத்துவரும் நகரம்.
மகா தச்சனே..! யோகியர்
நெஞ்சில் இசையென உறைந்த
என் புராதன பட்டினத்தை

மீண்டும் எழுப்புக...

மந்திரக் கவிஞ..! ஆதியாழின்
நரம்புகளை மீட்டி என் மந்திர
மாநகர் மீது காற்றில் அழியாப்
பாடல்களை பாடுக என்னும்...
கடுந்தவத்தால்
மனதை எரித்து அதன்
சாம்பலால் வனைவோம் எமக்கென்றோர்
பட்டினத்தை.
யாருடனும் பொருதாது எங்கள் பட்டினம்.
யாரிடமும்
தோற்காது எங்கள் பட்டினம்.
எவருக்கெதிராகவும் எவரும்
இங்கே வாளினை
எடுக்காதிருப்பர்.

எங்கள் சாம்பல் நகரம்
பேரின்பவீடாயிருக்கும் காலத்தில்
கிராமங்கள்தோறும்
அநாதியாய் உறையும் தேவதைகள்
உருக்கொண்டெழுவர்.
கறுப்புச் சல்லடமதிரும்
தன் காற்சுவடுகளெங்கும், எங்கள் நகரத்து
மூத்தகுடிகளை உயிர்ப்பிப்பான் காலபைரவன்.

கவிதை



தவ. தஜேந்திரன்

யாழ்ப்பாணம் – இருபாலையைச் சேர்ந்தவர். சித்திரமும்வடிவமைப்பும்துறைப் பட்டதாரி. பாகிஸ்தான் – லாகூர் தேசிய பல்கலைக் கழகத்தில் முதுகலைமாணிக் கற்கை நெறியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார். ஓவியர். கவிதைகள் எழுதுவதில் ஆர்வமுடையவர்.

லிரியும் சிறகுகள்...

தார். அவர்கள் இருவரும் துணிவு பெற்றவர்களாய் உள்ளே போனார்கள். முன்போர்ட்டிக்கோவில்போடப்பட்டிருந்த இருக்கைகளில் மூவரும் அமர்ந்து கொண்டனர். தரகர், தாங்கள் வந்த விடயத்தை ஆரம்பித்து வைத்தார்.

"ஐயா தம்பியின்ரை சம்மந்த விஷயமாய்...."
"நீர் எதைச் சொல்லுறீர்?"
"அதுதான் அன்றைக்குப்பொருத்தம்பார்த்துத்தொண்ணூற்றி நாலுவீதம்பொருத்தம்என்றுசாத்திரியார்சொன்னார். டொக்டர் பொம்பிளை, இவர்தான்பொம்பிளையின்ரைதமையன்" ஏதோ அதிசயப்பொருளைப் பார்ப்பதுபோல் அவனை ஏற இறங்கப் பார்த்தார். அவனுக்கு உடல் கூசியது.
"பொருத்தம் அமோகமாய் இருக்கிறபடியால எனக்கு இந்தச் சம்மந்தத்தில்ஒருநாட்டம், அதுதான்நான்இவரைக்கையோட கூட்டிக் கொண்டு வந்தநான், எதையும் நேரில பேசி முடிவெடுக்கிறதுதான் நல்லது பாருங்கோ" தரகர், காரியத்தில் கண்ணாயிருந்தார்.

"பெம்பிளை எந்தக் ஹெஸ்பிற்றலில வேலை செய்கிறா?"
"களுபோவில்ல ஹெஸ்பிற்றல்"
"ஓ.....புறோக்கர் சொன்னவர்தான். நான்தான் மறந்து போனன்"
"அவ அங்கை எம்.டி. செய்து கொண்டிருக்கிறா. படிப்பு முடிய ஊரோட வந்திடுவா" அவனது வார்த்தையில் சிறிது பெருமிதம் தோன்றத்தான் செய்தது.
"சரிசரி, நேராகவிஷயத்துக்காகவருவம். உங்களுக்குச்சொன்னாலென்ன...நான்தம்பியைப்படிக்கவைக்கிறதுக்காகநிறையக் காசு செலவழிச்சுப்போட்டன்"
"அது எனக்குத்தெரிஞ்சவிசயந்தானே. நானும்தங்கச்சியைப் படிப்பிக்கிறதுக்காகக் கஷ்டப்பட்டு உழைச்சனான்"

"நீங்கள் என்னவேலை செய்யிறியள்?"
"நான்மேசன்வேலைசெய்துதான்அவளைப்படிப்பிச்சனான். இப்ப... நான் 'கொன்றாக்ட்' பொருத்தமாய் எடுத்து ஆக்களை வைச்சுச் செய்விக்கிறன்"
"எங்கட பகுதியில் எல்லாரும் 'கவர்மெண்ட்' உத்தியோகம் தான்" சொல்லிக் கொண்டே அவர் கண்களைக் கூசி அவனை ஒரு பார்வை பார்த்தார். அந்தப் பார்வையில் அவன் கூனிக் குறுகிப் போனான்.

'நேற்றைக்கும்ஒருசம்மந்தம்கேட்டுவந்தது. ரவுணுக்கைமாடி வீடு, சுவிம்மிங்பூல்வசதியோடமாப்பிள்ளைக்குக்கார்வாங்கித் தாறனெண்டவை. தம்பியிட்டைகார் இருக்கு. எங்களுக்கேன் காரை ரொக்கமும்தொகையாய்த்தாறதாய்ச்சொல்லிச்சினம். எண்டாலும்எனக்கு அதிலை விருப்பம்வரயில்லை. ஏன்தெரியுமோ. பொம்பிளைக்கு வேலை ஒன்டுமில்லை"
இப்போதுதரகர்உஷாரானார். "இது... பொம்பிளை எக்கணம் எம்.டி. முடிச்சு வந்தா... ஒரு 'கொன்சல்ற்றன்ற்' ஆக இருப்பா. அது நல்ல போஸ்ற் தானே"

"அதெல்லாம் எனக்குத் தெரியும் காணும். ஒரு சின்ன வீட்டையும் சொற்ப காசையும் சீதனமாய் வாங்கி நான் என்ன செய்யிறது? அவனவன் கோடிக் கணக்கில தாறதுக்குக் காத்திருக்கிறாங்கள். நீங்கள் என்னடா எண்டால்.... அற்லிஸ்ற் ஒரு கோடி ரூபாயும், நல்லூரிலேயே ஒரு மாடி வீட்டையும் கட்டித் தாற தெண்டால் பார்ப்பம்"
அவன் எழுந்து கொண்டான். எட்டாக்கனிக்கு ஏன் கொட்டாவி விடவேண்டும். தரகர்பின்னால்வருகிறாரா என்றுகூடப்பார்க்காமல் புறப்பட்டு விட்டான்.

காய்ந்த முகத்துடன் சோர்ந்து போய் அவன் வந்ததைக் கண்டதும் அம்மா ஓரளவுக்கு நிலமையை ஊகித்துக் கொண்டாள். மனைவியோ தலையையே காட்டாமல் சமையலறைக்குள் முடங்கிக் கொண்டாள். அவன் உடை மாற்றிவிட்டு வரவும் அலைபேசி மணி கிணுகிணுக்கவும் சரியாக இருந்தது. அலைபேசியைக் கையிலெடுத்தான். வாணியின் எண்தான் பதிவாயிருந்தது.
"ஹலோ வாணி!"
"அண்ணா! ஒரு குட் நியூஸ்"
"சொல்லு வாணி"
"அண்ணா! எனக்குலண்டனுக்குப்போய்ப்படிக்கச்சந்தர்ப்பம் கிடைச்சிருக்கு. இஞ்சை என்னுடைய படிப்பு முடியப்போகுது. முடிஞ்சதும்நான் அங்கை போய் எவ். ஆர். சி. எஸ் முடிச்சுட்டுத் தான் ஊருக்கு வருவன்"

"இஞ்சை அம்மா என்னடா எண்டால் உனக்கு கலியாணம் செய்து வைச்சிட்டுத்தான் மறுவேலை என்று ஒற்றைக் காலிலை நிக்கிறா" "அண்ணா! எனக்கு ஒரு காலத்தில கல்யாண ஆசை இருந்ததுதான். ஆனால் இப்ப நான் அந்த வயதெல்லையைத் தாண்டி வந்திட்டன். இனி நான் ஒரு குடும்பத்துக்குள்ள மூழ்கிச்சிறைப்பட விரும்பயில்லை. என்னுடய ஆசையெல்லாம் வாழ்க்கையில ஓர் உயர்ந்த நிலையை அடையுறதுதான். அண்ணா! நீங்கள் எவ்வளவு பாடுபட்டு என்னைப் படிக்க வைச்சனிங்கள் எண்டு எனக்குத் தெரியும். அதப்போலநான்உங்கடபிள்ளைகள்ரெண்டுபேரையும்படிக்க வைப்பன். ஊர்மக்களுக்கு அர்ப்பணிப்பான சேவைசெய்வன். இதுதான் எனது எதிர்காலம்"
உணர்வுகளைத் தொலைத்தவனாய் விக்கித்து நின்றான் அவன்.



தீதும் நன்றும்

சிறுகதை



த. கலாமணி

கலாநிதி.த.கலாமணி அல்வாயைச்சேர்ந்தவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியல் துறை விரிவுரையாளர். சட்டத்துறைத் தலைவராக இருந்தவர். மூன்று சிறுகதைத் தொகுப்புக்கள் உட்பட பதினொரு நூல்களை வெளியீடு செய்துள்ளார். பல்துறை வல்லோன், இசை நாடக்கோன் ஆகிய பட்டங்களின் சொந்தக்காரன். நாடகத்துறையில் தலைசிறந்த நடிகராக விளங்குகின்றார்.

இராணுவத்தலைமைஆய்வுமையத்தில்துருவன்தலையைப் பிய்த்துக் கொண்டிருந்தான். கூடவே இனியா. இனியா கூடஇருப்பதுதுருவனுக்குஉற்சாகம்தரும். அந்தஉற்சாகத்தில் அவனின் மூளை பெரும் பாய்ச்சலைச் செய்யும். இதனால் சங்கேத மொழிகளின் சுரங்கத்தினுள் புகுந்து, அவற்றை இலகுவாகத் தகர்த்துவிடுவான்.

துருவனின் நுண்மதி ஈவுப் பெறுமானத்தை இராணுவத் தலைமையகம்உணர்ந்துகொண்டது. துருவனின்நுண்மதி ஈவுப் பெறுமானம் இராணுவ இரகசியங்களில் ஒன்றாகக் கொள்ளப்பட்டது.

இவை எவற்றையும் அறியாதவனாகத் துருவன் தனது கடமையே கண்ணாக இருந்தான்.

துருவன் ஆய்வு மையத்தின் சங்கேத மொழிப்பிரிவிலும் இனியாமொழிபெயர்ப்புப்பிரிவிலும்பணியாற்றிவந்தார்கள். இனியா. அழகி. அழகு என்றால் கொஞ்ச நஞ்சமில்லை. கொள்ளை அழகு. அடைமொழியுடன் அவள் அழகைச் சொல்வதாயின்பிரபஞ்சஅழகிஎன்றுஅவளைஅழைக்கலாம். இனியா தனது அழகினால் எல்லோரையும் ஈர்த்தாள். ஆனால், எவராலும் ஈர்க்கப்படாமலிருந்தாள். இனியாவின் இனிய குரல் சங்கீதத்துக்குச் சுருதி சேர்க்கும். இனியாவின் காதலுக்காகப்பலர்ஏங்கினர். இன்னும்சிலரோ, இனியாவின் நட்புக் கிடைத்துவிட்டால் இந்தப் பிறவி உய்திபெறும் என்று கனவுகளில்மிதந்தனர்.

இனியாவும் துருவனும் தொழில் நிமித்தம் சந்தித்த வேளைகளில் இருவருக்குள்ளும் இராசயன மாற்றம் நிகழ்ந்து ஏதோ மகிழ்ந்தது. அது காதலா, நட்பா என்று அறியாமல் இருவரும்மன உளைச்சலுற்றனர்.

ஆனால், ஆய்வுமையத்தில் சகல பிரிவுகளிலும் பொருத்தியிருந்தஇரகசியக்கமராக்களும்கண்காணிப்புக்கருவிகளும் அவ்விருவருக்குமிடையே அரும்பியிருப்பது காதல்தான் என்பதை உறுதி செய்து ஆய்வு மையத்துக்கு அறிவித்தன. இத்தகவல்ஆய்வுமையஉயர்அதிகாரிகளுக்கும்இராணுவத் தலைமைப் பணியகத்துக்கும் முதலில் அதிர்ச்சியையே தந்தது. இனியாவின்காதலினால்பல்மதிநுட்பன்ஒருவனை இழந்துவிடுவமோ என்று பலமுறை கலந்துரையாடினர்.

ஆனால், இனியாவுடனான காதல் அரும்புதலின் பின், ஒருவனிடம் காணப்பட்ட வேகத்தையும் வீச்சையும் அறிக்கைகளினூடாக அறிந்து கொண்டபோது ஆய்வுமையத்தலைமைஅதிகாரிதனதுஎண்ணத்தைஉறுதியாகவே தெரிவித்தார். இனியாவையும் துருவனின் பிரிவுக்கே மாற்றிவிடுவதென்ற தீர்மானம் உடனடியாகவே நிறைவேற்றப்பட்டது.

இனியாவுடன் ஒன்றாகப் பணியாற்றத் தொடங்கியபோது, இனியாஅழகி மட்டுமில்லை, அதிபுத்திசாலி என்பதும் துருவனுக்கு விளங்கியது.

இனியாவும் துருவனும் வரம்பு மீறாமல் காதலில் களிகொண்டனர். இந்தக் களிப்பில் பிறநாட்டு இராணுவ இரகசியச் சங்கேதங்களை எல்லாம் அனாயாசமாகச் சங்கேதம்அகற்றிக்கொண்டிருந்தனர். இராணுவத் தலைமை ஆய்வுமையத்துக்கு இவர்கள் காதலால் நன்மையே விளைந்து கொண்டிருந்தது

திடீரென துருவன், இனியா இருவருக்குமேஆய்வுமைய இரகசிய ஆலோசனைக் கூட்டத்துக்கு அழைப்பு வந்தபோதுஇருவருமேசற்று மிரண்டனர்.

இருவருமே ஒரே அலைவரிசையில் சிந்தித்தனர் "எங்கள்காதல்உறவுஎல்லை மீறிச் சென்றுவிடு மென்று அச்சப்படுகிறார்களா?" வழமையாக, ஏதாவது இரகசியத்தகவல்இருப்பின், அதுதுருவனுக்கு அனுப்பி வைக்கப்படும். மிகவும் இரகசியமாக. இராணுவப் பாதுகாப்போடு. வழமைக்கு மாறான அழைப்பின் கூட்சுமம் தெரியாமல் துருவனும் இனியாவும்சிறிது பரபரப்புடனேயேஆய்வுமையஆலோசனைக்கூட்டத்துக்குச் சென்றனர்.

எண்கோணிவடிவில்அமைந்தஒருகூடம், அந்தக்கூடத்தின் சுவர்களில் பொருத்திய பெரிய பெரிய திரைகள். திரைகளில் பல்வேறு சமிக்ஞைகளும் வரைபடங்களும் செய்திகளும் நிகழ்ச்சித் திட்டங்களும் என அந்தக் கூடத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டிய வண்ணமிருந்தன.

ஒரு பெரிய திரையின் முன்னால் ஆய்வுமையத் தலைமை அலுவலகத் தலைமை அதிகாரி. அவரின் முன்னால் காணப்பட்ட ஏழு இருக்கைகளில் ஐந்து நிரம்பியிருந்தன. இருக்கைகளின்முன்னால்தனித்தனிக்கணினிமொனிற்றர்கள்.

"வா. துருவா! இனியா! உங்கள் இருக்கைகளில்அமருங்கள்." ஆய்வுமையத்தலைமைஅலுவலகத்தலைமைஅதிகாரியை துருவன் ஒருமுறைதான் பார்த்திருக்கிறான். இனியாவுக்கு அந்தவாய்ப்பும் கூட இதுவரை கிடைக்கவில்லை.

தலைமை அதிகாரியின் அழைப்பு கட்டளைபோலத் தோன்றினாலும் பெயர் சொல்லி அழைத்து இருக்கைகளில் அமரச் சொன்னமை துருவனுக்குப் பிடித்திருந்தது. இருக்கைகளில் அமர்ந்திருந்த ஏனைய அதிகாரிகளும் கூட இவர்களைத்திரும்பிப்பார்த்துமுறுவலித்துசிநேகபாவத்தை வெளிப்படுத்தினர்.

தலைமைஅதிகாரிஉடனடியாகவேவிளக்கத்தொடங்கினார். "துருவா, நாம் கொஞ்ச நாள்களாக சற்று வித்தியாசமான சமிக்ஞைகளைப் பெற்றுக் கொண்டிருக்கிறோம். தொடக்கத்தில் அவற்றை நாம் அலட்சியம் செய்துவிட்டோம். ஆனால், அவை தொடர்ந்து வந்து கொண்டிருப்பதனால் அவற்றை அலட்சியம் செய்ய முடியாமல் இருக்கிறது."

திரையில் மின்விளக்குகள் போல் சமிக்ஞைகள் ஒளிர, துருவன் அவற்றைத் துருவி நோக்கினான்.

"எங்கிருந்து இந்தச்சமிக்ஞைகள் வருகின்றன என்றுகண்டு பிடித்தீர்களா?"

"இல்லை, இதுவரை இல்லை."

"அப்படியானால், என்ன கண்டுபிடித்திருக்கிறீர்கள்?"

எதுவுமே விளங்கவில்லை... முதலில் சங்கேதச்செய்தியின்னை 'டீகிறிப்ஷன்' செய்தால்தான் உண்மையை அறிந்துகொள்ள முடியும்..."

துருவன் இடைமறித்தான்.

"அப்படி 'டீகிறிப்ஷன்' செய்வதற்கு- மறையீடு நீக்கம் செய்வதற்கு எவ்வளவு தூரம் முயற்சித்திருக்கிறீர்கள்."

"நன்றாக முயற்சித்துக் களைத்துவிட்டோம். அதனால்தான் உன்னை அழைத்திருக்கிறோம்."

துருவன் சமிக்ஞைகளைப் பார்த்தான் அவனின் மூளை தீவிரமாக வேலைசெய்துகொண்டிருந்தது.

பொதுவாக, குறியீட்டுச் சொற்களால் மறைக்கப்பட்ட செய்திகளை விடுவிப்பதே சிரமமானது. அச்செய்திகளை 'என்கிறிப்ஷன்' செய்தவரின் சொந்த ஆளுகைக்குள் வசப்பட்டிருக்கக்கூடியஅந்தமறையீடுஅவருக்குமட்டும்தான் வெளிச்சம். ஆனால், அப்படி இருக்குமா அல்லது இப்படி இருக்குமா? என்ற சந்தேகங்களுடன் முன்னைய அனுபவங்களின்துணையோடுநிகழ்தகவின்அடிப்படையில் அதிகம்முயற்சித்தால்தான்மறையீடுநீக்கம்செய்யமுடியும். அப்படிமறையீடுநீக்கம்செய்யமுடியாமற்போனதகவல்கள் ஏராளம்.

துருவன்மீண்டும்கேட்டான்.

"இந்தச் சமிக்ஞைச் செய்தியால் ஏன் அதிக கலவரம் அடைகிறீர்கள்?"

"ஆம், துருவா! அதிகம் கலவரமாகத்தான் இருக்கிறது..." ஏனென்றால் இவை வெறுமனே மறையீட்டுச் செய்திகளா அல்லதுஎச்சரிக்கையா என்று அறிய முடியவில்லை...

"ஏன் அப்படிச் சிந்திக்கிறீர்கள்? ஏதாவது நட்புறவு நாடுகளிடையே பரிமாறப்படுகின்ற செய்தியாகவும் இது இருக்கலாம், இல்லையா?"

"இல்லை, துருவா. இது Hack செய்து பெறப்பட்ட சமிக்ஞை இல்லை.எங்களுக்கென்றேஅனுப்பப்பட்டதாகத்தான்இருக்க வேண்டும். அதனால்தான்எச்சரிக்கையாகஇருக்குமாஎன்று அச்சப்படுகிறோம்..."

"எதிரிநாட்டிலிருந்துஅனுப்பப்பட்டஎச்சரிக்கையாகஇருந்தால் அதனை ஏன் மறையீடு செய்து அனுப்பவேண்டும்?" துருவனின் கேள்விக்குப் பதிலளிப்பதில் தலைமை அதிகாரி சற்றுத்தயக்கம் காட்டினார்.

துருவன் தீவிரமாக செயலில் இறங்கினான்.

தலைமை அதிகாரியின் பின்னாலிருந்த திரையில் தெரிந்த ஒளிரும்சமிக்ஞைகளைதன்முன்னாலிருந்தமொனிற்றரில் உள்வாங்கி உற்று நோக்கினான். ஒளிர்வை மங்கலாக்கி அதன் பின்னியில் நோக்கியபோது, ஏதோ ஒரு மொழியின் வரிவடிவமாக இருக்குமா என ஐயுறவுகொண்டான்.

உலகமொழிகளின்வரிவடிவங்கள்கொண்டகோவையினுள் உட்புகுந்து அலசியபோதும் எதுவும் புலனாகவில்லை.

தலைமை அதிகாரி சொன்னார்.

"துருவா, இந்தத் தேடல்களை எல்லாம் நாம் மேற்கொண்டு பார்த்துவிட்டோம். முடியவில்லை"

"ஆனால், இவை ஒரு குறித்த மொழியில் அனுப்பப்பட்ட செய்திதான் என்று உறுதியாகநம்புகிறீர்களா"

-துருவன் தனது சந்தேகத்தை உறுதிசெய்துகொள்ள விரும்பினான்.

"ஆம், ஏதோஒருமொழியில்அனுப்பப்பட்டவைதான்ஆனால் என்ன மொழி என்றுதான் விளங்கவில்லை."

-முகத்தை கவலையாக வைத்துக்கொண்டு தலைமை அதிகாரி கூறினார்.

"நானும் அப்படித்தான் எண்ணுகிறேன். அதனால் இந்த மொழி பற்றி விவரங்களுக்கு ஆவணக்காப்பகத்தில் தேடிப்பார்க்கலாம் என்றிருக்கிறேன்."

ஆவணக் காப்பகத்தைத் தரவிறக்கம் செய்ய முயன்ற துருவனை தலைமை அதிகாரி இடைமறித்தார்.

"அங்கும் தேடிப்பார்த்துவிட்டோம், துருவா, பயன் ஏதும் கிட்டவில்லை."

இந்தஉரையாடல்களைஎல்லாம்உள்வாங்கியபடியே,தனது மொனிற்றரில் உள்வாங்கிய அந்தச் சமிக்ஞைகளைப் பற்றி இனியா தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தாள். அவளின் சிந்தனைக்கோடு வேறாக இருந்தது.

மொனிற்றரிலுள்ளஎழுத்துக்களில்சிலவற்றைப்பிரதிபண்ணி, பெரிதாக்கியும் சிறிதாக்கியும் இனியா பரிசீலித்துக் கொண்டிருந்தாள். வெவ்வேறு கோணங்களில் அந்த எழுத்துக்களைச்சரித்து, தலைகீழாக்கி அவள் அவற்றைப் பரிசீலிப்பதைக்கண்டுதுருவன்வியந்தான்.

துருவனின் ஓரக்கண் பார்வையில் இனியாவின் மொனிற்றரின் திரையில் தெரிந்த ஓர் எழுத்து துருவனின் கவனத்தைஈர்த்துவிட, துருவன்அதிர்ந்தான்.

'சித்திர எழுத்து!' இனியாவின் அருகாகச் சாய்ந்து, அவளின் மொனிற்றரிலுள்ள அந்த எழுத்தைப் பெரிதாக்கி, துருவன் துருவி ஆராய்ந்தான்.

'அற்புதம்!' இப்போது விளங்கிவிட்டது.

துருவன்வேகமாகச்செயற்பட்டான்.

இனியாவைப்போன்று,தனதுமொனிற்றரிலும்

தொலைத்தவளின் சாக்குரல்



கத்திக் கத்திநான்
அப்பவே சொன்னேன்

கத்தியமுதும் கேட்டாச்சு
கால்பிடிச்சும் கேட்டாச்சு
செத்துக்கெப்பமென்டு
இப்ப கீறுறாங்கி வந்தாச்சு

சத்துக்கெட்ட கீவனால
கண்டைபோட முடியலயே
பித்தம்பிடிச்ச புத்திக்கு
பொலிட்டிக்கல் தெரியலயே

நட்டாறு வெட்டையில
நாப்பது பேர் மத்தியில
நகைச்ச மனசோட
நம்பிக்காதானே அனுப்பிவைச்சன்

நாசம் வந்து சேருமென்டு
புத்திக்குப் புரிஞ்சிருந்தா

பேராத மனுசன் வருமென்டும்
பொய்கல்பாதனை வைக்குமென்டும்
வீடு வெளி வாசலெல்லாம்
ஓடிவினையாடுமென்டும்
பிள்ளை குட்டி கேட்கும்போது
கதைகதையாச் சொல்லிவைச்சன்
காணாத கனவுக்கு
கண்ணென்டைப் பழுக்கவிட்டன்

வெத்திலையும் தேத்தண்ணியும்
சாப்பாடெண்டாலேப்போச்சு
வேதனையும் கண்ணீரும்
வரமென்டு வாய்கியாச்சு

அடியனிச்சம் பாராத்தாச்சு
செபமாலை உருட்டியாச்சு
தேதி வந்து சேரலையே
நீ சென்ற இடம் தெரியலையே

கொக்கட்டிச்சிவனுக்கு
செப்பாலகிலைசெத்து
அப்பாண்ட கையால
வெண்பொங்கல் படைப்பானாம்

ஆறுயர மெழுகுவர்த்தி
ஆறுக்கொண்டு கொளுத்தினாதா
ஏதாதாச்சாமிக்கு
இளைய மகள் சொன்னாளாம்

இழவெடுத்த சாமியெல்லாம்
இருக்கிறதோ இரந்திட்டுதோ
தமிழுக்குதிதானேயெண்டு
தன்றபாட்டிலகிடந்திட்டுதோ

தன்னிலென்னி குடிச்சாலோ
சாப்பிட்டு இருப்பாலோ
கொண்டுபோன ஒன்னைச்சரம்
இத்தாப்போய்கிடந்திட்டுதோ

தூரியன் பாத்தாலோ
அடுசோறு தின்டாலோ
பருக்கைக்குப் போகேக்க
பாவி என்னைநினைப்பாலோ?

ஏய்கதாசாநீ போனாய்
ஏன்தாசாநீ போனாய்

ஆளினியிலா உலகத்தை
ஆளத்தான் போனாயோ

எட்டு வருசம் ஆகிப்போச்சு
இழவெல்லாம் முடிஞ்சுபோச்சு
என்ற வீட்டு ஒப்பாரி
இன்று வரைக்கும் நீண்டுருக்கே

கஞ்சி குடிக்கிறதே
கத்தியமும் தெம்புக்குத்தான்
குளிச்சு முழுகிறதே என்ற
உலக்கொழுந்த தேடிடத்தான்

செத்த சவம் போல
செத்தைக் குடிசைக்குள்ள
ஏந்தினை நாளைக்குத்தான்
நானும் ஒத்தையில கிடக்கிறது

கூடப்பிறந்ததுகள்
வாய்க்கரிசி போடுதுகள்
அவரோட பிறந்ததுகள்
அருட்டானம் காட்டுதுகள்

எவ்வளவு காலம்தான்
நானும் இரவல் சட்டி ஏத்திறது
வெள்ளாள பிழம்பிறதும்
விடியக்கடன் முடிக்கிறதும்
ஏறாத கோவிலெல்லாம்
இறங்கி ஏறுவதும்
எட்டுவருசம் நடக்குடா
என்ற மாற்றமும் காணேல்லடா

வெள்ளக்காரன் வந்தா
விழுந்து கும்பிர்தும்
கோட்டுப்போட்ட ஆள்வந்தா
கும்பிட்டு விழுகுறதும்
கீவிக்காரன் கமராக்கு
முஞ்சகாட்டி அழுகிறதும்
மனப்போட்டு மனப்போட்டு
மைகீர்ந்து போனதுவும்

நாசமாப் போச்சுதடா என்ற
நாய்ப்புழைப்பு ஆச்சுதடா

முத்த பெட்ட ஒந்தி பிழும்பி

மூண்டு வரும் ஆச்சுதடா
இருப்பெரித்திரிச்ச பெடி
கரஞ்சுண்டல் விக்குதடா

நீ போகேக்க அள்ளித்தந்த
ஆறுமாசப் பெட்டக்குட்டி
கணக்குப் படிக்கிறுண்டு
முத்தமெல்லாம் கிழக்குதடா
கல்யாணமென்டா என்னென்டு
கடைசிவரை காட்டாம
மொத்தமா தந்திட்டு
ஒளிஞ்சுபோய்க் கிடக்கிறியே

கருவாட்டுக் குழம்பென்டா
கமக்காட்டு மயிர் கூட
வேர்கொழுகத் தின்னுவியே

கருவாட்டக் காணவில
என்ற கண்ணென்டும் வேர்க்குதடா

வெள்ளாக்காட்டு அம்மனுக்கு
கோழிக்குருசு நேர்ந்துவிட்டன்
அந்தக் குருசுத் தலைமுறையும்
ஏழுக்கடந்திட்டு

ஏழுவருசம் கடந்துமென்ற
குருசுமுகம் காணேல்லயே

பரம்பரைச் சொத்தென்டு நீ
பருத்திருந்த கட்டினிப்ப
பாட்டத்திலகிடக்குதடா
பாக்க வலிது பத்தி எரியுதடா

கோவிலும் சர்ச்சையுமே
உலகமென்டு இருந்தவளா
ஊரூரா அலையவச்சு
உபத்திரவம் செய்பவனே

நாசமாப் போச்சுதடா என்ற
நாய்ப்புழைப்பு ஆச்சுதடா

பரிதாபம் காட்டும்போது
பாரமெல்லாம் இறக்கிவைச்சா
நீ பக்கத்தில்ல என்டதால
பருக்கைக்கு அழைக்குதடா

ஆர் கேட்டாலும்
என்ன வந்து கதைச்சாலும்

உன்ற செவ்வி கிடைக்குமென்டு
ஊரூர்தொடி நான்போனா
ஏருபட்ட சீலக்கியென்டு
இடிவுப்பட்டம் கட்டுதடா

விடிய விடிய
முடிக்கிறதும் விடிஞ்சா
உன்ற படத்தோட
கச்சேரிக்கலையுறதும்
முக்கியமா என்ற
முழுவேலை ஆச்சுதடா

ஏம்பலாச்சும் சோறுதிண்டா
மண்டையில பிரக்கடிக்கும்
உன்னநினைக்கயில
உச்சியில பல்லி சொல்லும்

நெண்டும்தான் இப்ப என்னை
நம்பிக்கையா வச்சிருக்கு
சத்தியமாச் சொல்லுறண்டா
சாவைத்தவிர ஏதுமில்லை

ஒண்டில் உன் சாவு

இல்லையென்டா எஞ்சாவு

கவிதை



சி.ப. வேந்தன்

மதிவேந்தன், ஓட்டுமடம் வண்ணார்பண்ணையைச் சேர்ந்தவர். செறிவான அர்த்தம்கொண்டவார்த்தைகளைக் கோர்த்துக் கவிதை படைக்கும்வல்லமைகொண்டவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தின் பட்டயப் பெறுதியாளன். நடகத்துறை சார் முயற்சிகளிலும் ஈடுபாடுடையவர். ஆழமான வாசிப்புத்திறனைவளர்த்துக்கட்டுரைகள் வரைவதில் கவனம் செலுத்தி வருகிறார். சுயாதீனப் பத்திரிகையாளரும் கூட.

தீதும் நன்றும்...

உள்ள எழுத்துக்களைப் பெரிதாக்கியும் சிறிதாக்கியும்பரிசீலித்துஅச்சித்திரஎழுத்துகள் சொல்லும் செய்தியை ஆவணக்காப்பகத்திலுள்ள கோவைகளின் உதவியுடனும் தனது மூளையின்பாய்ச்சலுடனும்ஒருமணித்தியாலநேரத்திலேயே கண்டுபிடித்துவிட்டான். ஆனால், அந்தச் செய்தியைச் சொல்வதற்கு துருவன் சிறிது தயங்கினான்.

தலைமை அதிகாரி உற்சாகப்படுத்தினார்.

"சொல்லு, துருவா, ஏன் தயக்கம்?"

துருவன் சொன்னான்

"உங்களுடைய மத்திய தொடர்பாடல் வலையமைப்பை செயல் முடக்கம் செய்யப் போகிறோம்" என்று செய்திவருகிறது. திரும்பத் திரும்ப இதே செய்திதான் பதிவாகியிருக்கிறது' தலைமை அதிகாரியும் ஏனேயோரும் அதிர்ந்தனர். தலைமை அதிகாரி உரக்கக் கத்தினார்.

"Malicious!"

"துருவா, இதுஎப்படிமுடியும்? அவர்கள்என்ன கேட்கிறார்கள்? சிறுபிள்ளை விளையாட்டாக இருக்கிறதே... கணினிக்கற்றுக்குட்டிகள் விசமம் செய்துகப்பம் கேட்பது போல. இவர்களும்எங்களிடமிருந்துஎதையும்எதிர்ப்பார்க்கிறார்களா?"

-தலைமை அதிகாரி கேள்விகளை அடுக்கிக் கொண்டே போனார்.

"இல்லை... இதற்கு மேல் தகவல்கள் ஏதும் இல்லை...இனிமேல்ஏதும்செய்திகள்வரலாம் அல்லது..."

துருவனின்தயக்கம்தலைமைஅதிகாரியைக் கோபம் கொள்ளச் செய்தது. சற்றுக் காட்டமாகவே சொன்னார்.

"துருவா, உன்னுடைய வகிபாகம் உனக்குத் தெரிய வேண்டும். எங்களுடைய நாட்டின் முக்கிய ரகசிய அலுவலர்களில் உங்கள் இருவரையும் சேர்த்துக்கொள்வதற்கு இராணுவத் தலைமையகம் அனுமதி தந்தபின்புதான் உங்களை இங்கு அழைத்திருக்கிறோம். இனி, எங்கள் நாட்டின் வெற்றிதான் உங்கள் குறிக்கோளாக இருக்க வேண்டும். நீஎன்னசொல்லவந்தாய்...அதை முதலில் சொல்லு"

துருவன் தயங்கியபடியேதான் சொன்னான்.

''எதிரி நாட்டின் கணனித்தொடர்பாடல் வலையமைப்பில்பழுதுஏற்பட்டிருக்கலாமோ என்றுசந்தேகமாகஇருக்கிறது. இதைமேலும் சில பரிசீலனைகளுடாக உறுதிசெய்து கொள்ளலாம்..."

தலைமை அதிகாரிக்குச் சந்தோசம் தாங்க முடியவில்லை. பெரிதாகச் சிரித்தார்.

"துருவா, அப்படியா சொல்கிறாய், நாங்கள் அண்மையில் எங்கள் எதிரி நாட்டின் மீது தொடுத்த மிகப்பெரிய மிஷன் இது. இதற்கு 'Operative Paralysis' என்று பெயர் வைத்திருக்கிறோம். இதுஎதிரிநாட்டின்மத்தியகணினி வலையமைப்பைச் செயலிழக்கச் செய்வதற்கானமிஷன்இதில்வெற்றிபெற்றுவிட்டோம் என்பதுமகிழ்ச்சியைத்தருகிறது. இதனைநாம் உடனே இராணுவத் தலைமையகத்துக்கு அறிவிக்கவேண்டும். இதைநாம்கொண்டாட வேண்டும்.."

துருவன் எதையோ சொல்ல உன்னினான்.

"சொல்லு, துருவா, என்ன சொல்ல விரும்புகிறாய்..?"

தலைமைஅதிகாரியின்உற்சாகத்தில்'இடிவிழ' துருவன் தனது கருத்தைச் சொன்னான்.

"நாங்கள் அவர்கள் அனுப்பிய செய்திகளையும்புறக்கணித்துவிட முடியாது. எங்களின் தகவல் வலையமைப்பை முடக்கம் செய்துவிட்ப்போவதாகஅவர்கள்விடுத்தஎச்சரிக்கை அலட்சியம் செய்துவிடக் கூடியதில்லை. மேலும், செய்திகள் எதையும் நாங்கள் பெற முடியாமலிருப்பதற்கு நாங்கள் அவர்களின் வலையமைப்பை முடக்கம் செய்தது காரணமாக இருக்கலாம்..."

"என்ன சொல்கிறாய், துருவா...?"

"ஆம்எதையும்நிச்சயமாகச்சொல்லமுடியாது. அவர்களிடமிருந்து ஏதும் தகவல்கள் வரும் பட்சத்தில்தான் அவர்கள் எங்களின் வலையமைப்பில் என்ன முடக்கம் செய்ய இருக்கிறார்கள் அதற்கு விலையாக என்ன கேட்க இருக்கிறார்கள் என்பதை அறிய முடியும். அவர்களின் வலையமைப்புமுற்றாகத்தகர்க்கப்படாவிட்டால் அவர்கள் எங்களின் வலையமைப்பைஎன்னவும்செய்யக்கூடும்.."

இராணுவ ஆராய்ச்சி மையத்தலைமை அதிகாரிஆடிப்போனார். 'தொப்'என்றுகதிரையில் அமர்ந்தார்.

கணினித்தொடர்பாடல் வலையமைப்பின் செயலிழப்பால் ஏற்படப்போகின்ற இடர்கள் குறித்து துருவன் சிந்திக்கத் தொடங்கினான். எல்லாமே சூனிய வெளியாகத் தெரிந்தது.

இனியா தனக்குள் எதையோ முணு முணுத்துக்கொண்டிருந்தாள். துருவன், 'என்ன?' என்பது போலப் பார்த்தான். அவள் மெல்லிய குரலில் சொன்னாள்.

"தீதும் நன்றும் பிறர் தர வாரா..."

‘பிரதீபா விருது

சிறுகதை



தொல்புரம் சி.கதிர்காமநாதன்

இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், தற்போது வசிப்பது தொல்புரம். சிறுகதைகள், சிரிகதைகள், கட்டுரைகள் போன்றவற்றை எழுதுவதில் சிறப்புப் பெற்றவர். ஈழத்தின் முன்னணிப் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் ஏராளமான சிறுகதைகள், கட்டுரைகளை எழுதியுள்ளார். தற்போது சாவகச்சேரி வைத்தியசாலையில் உளவளத் துணையாளராக பணிபுரிகிறார்.

மதிய உணவை அப்போதுதான் முடித்து விட்டுச் சற்று உடம்பைச் சரித்துத் தரையில் விழ, வெளியில் “ரீச்சர்” என்று குரல் கேட்டது. ‘ரீச்சர்’ என்றால் யார் அவர்? என்ன பாட ‘ரீச்சர்’? இப்போதும் ஆசிரியர் பணியில் உள்ளாரா? விருதுகள் பெற்றுள்ளாரா? ஒன்றும் அவசரமில்லை எல்லாம்எமக்குத்தெரியவரத்தானே போகின்றன. சரிமுதலில்வெளியிலிருந்து ‘ரீச்சரென’ அழைத்தவரை யாரெனப் பார்ப்போம். “உள்ள வாங்கோ” “இது ‘ரீச்சர்’...” அவர் வந்தார், நடுத்தர வயதுப் பெண்மணி

“எட கௌசல்யாவே, ஏன் நிக்கிறீர் வந்து இரும்”

“இருக்கிறன் ரீச்சர், குறைநினைக்க வேண்டாம். படுத்திருப்பியள் இண்டைக்கு லீவு நாள்தானே...”

“அதெல்லாம் ஒண்டுமில்லச் சொல்லுங்கோ...’

“மகனுக்கு ரீச்சர்...! கணக்குப் பாடம் பிரச்சினையாய்க் கிடக்கு ரியூசனுக்கும் போய் வாறவன். அங்க மாஸ்ரர் சொல்லுறது ஒண்டும் அவனுக்கு விளங்குதில்லையாம். முந்தி உங்களிட்டைப் படிச்சவன்... இப்ப நீங்கள் படிப்பிச்சதால்தான் தன்ரை மண்டைக்குள்ள ஏறுமெண்டு சொல்லுறான். அதான் அவனுக்குச் சொல்லிக் கொடுக்க ஏலுமே... ரீச்சர்” யோசனையில் ஆழ்ந்தார்.

இப்போதும் பள்ளி முடித்து வீடு திரும்ப 2.30ஆகிவிடுகிறது. வீட்டு வேலைகள் கூட்டல், கழித்தல், பிரித்தல், பெருக்கல் இங்கேயும் கணக்குத்தான். சாப்பிட்டு விட்டு ஏப்பம் விட நேரம் அங்காலே சென்றுவிடும். காலை 4.30க்கு எழும்பிய உடம்பு ஓய்வெடுக்கச் சொல்லும். கண்கள் சுழன்றடிக்கும். சற்றுப் படுத்து எழும்பினால்தான் பின்னேரம் ரீ போடுதலோடு விறகு பொறுக்கி அடுப்படியில் போட்டு, இரவுச் சாப்பாட்டுக்கு என்ன செய்யலாம் எனப் ‘பிளான்’ பண்ணப் பொழுது சரிந்து விடும். இந்தநிலையில்பையனுக்கு...? கணிதம் சொல்லிக்கொடுப்பதென்றால்...? கஸ்ரமான சூழ்நிலை, அதுவும் மறுத்துச் சொல்வது அவருக்கு மேலும் கஸ்ரமான நிலை இன்னும் 2 வருடங்களில் ஓய்வு பெறும் நிலையில் அவர் உள்ளமையால் உடலும் கொஞ்சம் ஆட்டம் போட்டுக் கொண்டிருந்தது. பதற்றம், ஞாபக மறதி தலை தூக்க தொடங்கியிருந்தன. பாடம் சொல்லிக் கொடுக்க ஒத்துக் கொண்டால், அதைச் சரிவரச் செய்ய வேண்டும். அதில் தவறு செய்யக்கூடாது. ரீச்சருக்குப் பணம் வாங்கும் பழக்கம் இல்லை. இது யசோதா ரீச்சர்.

இப்படி இடையிடையே ஆக்கள் வந்து ரீயூசன் சொல்லிக் கொடுக்கக் கேட்பார்கள் “ரீச்சர் நாங்கள் மூளாயில இருந்து வாறம். மகனுக்கு ‘மற்த்ஸ்’ பிரச்சனையாய்க் கிடக்கு, உங்களிட்டத்தான் போய்க்கேட்கச் சொன்னவை” இலங்கையில் ‘மற்த்ஸ்’, இனப் பிரச்சினை இரண்டும் தான் பெரிய பிரச்சினை. எப்போது தீர்வு வருமோ...?

கல்விக்காகப் பெற்றோர் அலைந்து கொண்டிருப்பது தெரிந்தது. இப்படி தன்னைத் தேடிவருபவர்களுக்கு அவர் என்ன சொல்வார். “இப்ப எனக்கு உடம்பும் இடங் குடுக்குதில்ல. ரியூசன் என்று சொல்லி நேரம் போட்டு சொல்லித்தாறது கஸ்ரம். பிள்ள படிக்கிறதில ஏதாலும் விளக்கங்காட்டி வந்து கேட்கச் சொல்லுங்கோ... சொல்லிக் குடுக்கிறன்”

ஒத்துக்கொண்டு போய்விடுவார்கள். ரீச்சர் யோசனையாய் இருந்தார். பள்ளியில படிக்கினம் ரீயூசன் போயினம் அப்பிடியிருந்தும் ‘மத்ற்ஸ்’ விளங்குதில்ல யெண்டால்... அடிப்படையில பாடத்தைப் பற்றிப் பிள்ளையளுக்குப் பயப்பிடித்திப் போட்டமோ? எப்படியும் கிழமையில் 3 நாளகளுக்கு யாரோ இரண்டு பிள்ளைகள் ரீச்சர் வீட்டுத் திண்ணையிலிருந்து ‘மற்த்ஸ்’ படித்துக் கொண்டிருப்பார்கள்.

“என்னப்பா நீர் பென்சன் எடுத்தாலும், சும்மா இருக்கலாதுபோல... வெளியாக்கள் உம்மைச் சும்மா இருக்க விடமாட்டினம்...” கணவர் தன்பாட்டுக்கு ஒன்று சொல்வார். இவர் கொடுத்த கணக்குகளை பிள்ளைகள் செய்துகொண்டு இருப்பார்கள். முடிந்த தும் குரல் கொடுப்பார்கள். “ரீச்சர் செய்து போட்டன்” “எனக்குக் கணக்குக் கஸ்ரமாய்க் கிடக்கு” “சரி வாறன் பிள்ளையள்... அப்பா அடுப்பில இருக்கிற கேத்தல் தண்ணி கொதிச்சப் பிறகு ‘பிளாஸ்கில’ ஊத்தி விடுங்கோ... புட்டு அவிக்க வேணும்” ரீச்சர் கணவருக்குக் குரல் கொடுத்தார். “என்ன பிள்ளை பிழை விட்டிட்டீர். கவனயீனமாக இருக்கக் கூடாது... இப்ப விளங்குதே...?”

“சரி உமக்கு என்ன பிரச்சினை?” இது பையனுக்கு. அவன் அடிப்படை விசயமே விளங்காமல் இருந்தான். அது விளங்காமல் கணிதம் செய்ய முடியாது. யசோதா ரீச்சர் சொல்லிக் கொடுத்தார். “என்ன இப்ப விளங்குதோ?” “இப்ப கொஞ்சம் விளங்கிட்டிது” “அப்பா...! மறக்காம கேத்தில் தண்ணியை ஊத்திப்போடுங்கோ” கணவருக்கு மறுபடியும் குரல் கொடுத்தார். மதிய உணவு முடித்த கையோடு பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுப்பதில்நேரம்போனது. யசோதா ரீச்சரின் கையெழுத்து குண்டு குண்டாய் நடிகை சரிதாபோல அழகாக இருக்கும். இதனால் பாடசாலையில் முக்கிய எழுத்து வேளைகளில் அவரின் கைவண்ணம் பளிச்சென இருக்கும். கணிதம், விஞ்ஞானம் பாடங்களின்றி இசையிலும் அவருக்கு ஆர்வம் இருந்தமையால் சில நேரங்களில் மேடைகளில் பின்னணியில் குரலும் கொடுத்து இருக்கிறார். சக ஆசிரியர்கள் இப்படியும் அவரைக் கேள்வி கேட்டுள்ளனர்.

“ரீச்சர் உங்களுக்குக் கோபமே வராதா? யாரோடையும் கோபிக்க மாட்டியள் எப்படி இது முடிகிறது?” யசோதா ரீச்சர் இப்போது தனது கணவரிடம் சில விடயங்களைப் பகிர்ந்து கொள்வார்.

“இப்ப சில நேரங்களில் பிள்ளையள் ஒன்டும் சொல்லுக் கேக்குதில்ல, முரட்டுத்தனமாய் நடக்கிற மாதிரி இருக்கு, வாத்திமாரும் பெரிசாய் தண்டிக்கேலாது. அப்படி நடவடிக்கை எடுத்தால்... மேல்மட்டமென்று கன பேர் விசாரிக்க வந்து விடுவினம்.. பின்ளையள் என்ன...? ... சில வாத்திமாரோட கூடக் கதைக்கேலாம இருக்கு... கேட்டா...நாங்க அவற்ற ஆள் எண்டு கதைக்கினம்....”

கணவர் அமைதியாகக்கேட்டுக்கொண்டிருப்பார்.

“கோயில் திருவிழாக்களென்றால், பிள்ளையல் வரமாட்டினம். விரத நாளென்டால் பாதி ரீச்சர்மார் காணாமல் போய் விடுவினம்... இதற்குள்ள வேற விழாக்கள், போட்டிகள் இதுகளை விட்டுத்தான் பிள்ளையளுக்குப் படிப்பிக்க வேணும்”

“சரி சரி நீர் உம்மட கடமையைச் செய்யும் நீர் சொல்லுறதைப் பாத்தா... கணக்குப் பாடம் ஈசிபோல கிடக்கு” காலை நேரம் வேலைக்குப் போறவர்கள் குறிப்பாக அரச வேலை நிமித்தம் வன்னிப்பக்கம் போறவர்கள் பரபரப்பாக இருப்பார்கள். ரீச்சர் வீட்டுக்கு அருகே தருமபுரம் பாடசாலையில் படிப்பிக்கும் ஆசிரியரின் ‘பைக்’ சத்தம் சரியாக ஐந்து மணிக்குக் காதில் கேட்கும். அலாரம் வைக்கத் தேவையில்லை. ரவுண் போய் அங்கிருந்து பஸ் பிடிக்கவேனும்.

காலை 6.50க்கு ரீச்சர் தனது சைக்கிளை உருட்டியபடி ‘கான்பாக்குடன்’ குடையுமாக வெளியே வந்தார். முகத்தில் அவசரம் தெரிந்தது. தனக்கு ஒதுக்கப்பட்ட வகுப்புப் பிள்ளைகளுக்கு மேலதிகாமாக வகுப்பு எடுப்பதற்குப் புறப்பட்டுவிட்டார். மாலையில் வழமையான வகுப்புகள் நடந்து முடிந்தன.

பின்னேரம் சமையல் வேலைகள் ஆரம்பம். யசோதா ரீச்சர் இன்று அமைதியாக இருந்தார்.

“என்ன ரீச்சருக்கு இண்டைக்குச் சொல்ல ஒண்டுமில்லையோ? பயப்படாமல் சொல்லும்... நானும் மற்ற உயர் அதிகாரிகள் மாதிரி உடனடியாக ‘ஆக்சன்’ எடுக்க மாட்டான்” புருஷன் மாருக்கு வேலையில்லாட்டி... மனுசி சொல்லுற கதையளைக் கேட்கிறதே பெரியவேலை.

ரீச்சரின் கணவர் பேப்பரைப் புரட்டிக்கொண்டிருந்தார். விருதுகள் பலபெற்ற ஆசிரியர்கள் வாழ்த்துக்களுடன் படத்தில் சிரித்தபடி இருந்தார்கள் “என்னப்பா இந்த விருதுகள் எப்பிடிக் கிடைக்குது? உதுவேணுமெண்டால் படிவம் வாங்கிப் ‘பில்லப்’ பண்ணி... அனுப்புறது... பிறகு ‘இன்ரவியு’ வைப்பிமெண்டு நினைக்கிறன்”

“உமக்கு ”மற்த்ஸ்’ ஐத் தவிர வேறு ஒண்டும் தெரியாதுபோல”

“என்னோடை நல்லாய்ப் படிப்பிச்ச ஆசிரியர்மாரிலை கனபேர் பென்சன் எடுத்துப் போட்டினம். அவையெல்லாம் உதுகளைப்பற்றி யோசிக்கிற தில்லை. எங்களுக்குத் தாற ‘டியூட்டி’யைச் சரியாச் செய்தாக் கானும் நானும் உதுகளை யோசிக்கிறேல்லை”

ஒரு கிழமை கடந்தது. ரீச்சரின் வீட்டுவாசலில் ஆட்டோ ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து ஒரு பெண் இறங்கினார். இரண்டு குழந்தைகளோடு. ஓர் ஆணும். இறங்கி விசாரித்தனர்.

“யசோதா ரீச்சர் வீடு...?”

“இதுதான் வாங்கோ...”

உள்ள வந்த பெண்ணை ரீச்சருக்குச் சட்டென அடையாளம் காண முடியவில்லை. வந்த பெண்ணோ மறுகணம் ரீச்சரின் காலில் விழுந்து ஆசிர்வாதம்பெற்றார். அவரது பிள்ளைகளும் அவ்வாறே செய்தனர்.

யசோதா ரீச்சர் திகைத்துப் போய் நின்றார். உடலெல்லாம் என்னமோ செய்தது. கண்களில் நீர் முட்டியது.

“ரீச்சர் நான் பிரதீபா... உங்களிட்டப் படிச்ச மாணவி, இத்தாலி போய் நல்லாய் இருக்கிறன்... நான் தாற இந்தப் பரிசைப் பெற்றுக் கொள்ளுங்கோ... பிறகு கதைப்பம்”

பாடம் படிக்க வந்த பிள்ளையள் ஆரவாரம் செய்தார்கள்.

யசோதா ரீச்சர், மாணவி பிரதீபா கொடுத்த பரிசைப் பெற்றுக் கொண்டார். கணவருக்கு அதுவே விருதாகத் தெரிந்தது.







இலக்கிய மானுடவியல் நோக்கில் தமிழ்ப் பண்பாட்டு ஆய்வின் செல்நெறி

தமிழ்ச் சமூகத்தின் நீண்டநெடும் தொடர்ச்சியில், அதன் சமூகபண்பாட்டு உருவாக்கத்தில் இயங்கியல் விசையாக இசைந்திருப்பது இலக்கியம். பாட்டும் தொகையுமாய் அமைந்த பாணர் பாடல்களும், புலவர் பாடல்களும் சங்க இலக்கியம் என்ற சொல்லாட்சியுடன் வழங்கப்படுகின்றன. இந்த இலக்கியப் படைப்புக்களே தமிழின் தொடக்க இலக்கியங்களாகவும் அமைகின்றன. ஐம்பெரும் திணை மரபுக்குரிய வாழ்வியலை இவை பேசுகின்றன.

சங்ககாலம் முதல் சமகாலம் வரையான காலவெளியில் தமிழர் வாழ்வியலில் முன்னை மரபுகளின் தொடர்ச்சியும், அது சந்தித்த மாற்றங்களும், எதிர்கொண்ட சவால்களும் தன்னைத் தகவமைத்துக் கொள்ள எடுத்துக்கொண்ட பிரயத்தனங்களும் தமிழர் வாழ்வியல் வரலாறாகும், தமிழ்ப் பண்பாட்டின் வரலாறுமாகும். இலக்கிய வரலாற்றை வெறுமனே இலக்கியத்தின் வரலாறாகக் கொள்ளாமல் இலக்கியத்தின் வழியான வரலாறாகக் (Literary History) காணவேண்டியதன் அவசியத்தை இது உணர்த்திநிற்கின்றது. பண்பாடென்பது வாழ்க்கை முறையாகவும்வாழ்வுக்கான அர்த்தமாகவும்அமைகின்றது. பண்பாட்டின் வழியாகவே மக்கள் தங்களை வெளிப்படுத்துக்கின்றார்கள். அதன் வழியாகவே மனித மேம்பாடும், சமூகமேம்பாடும்முழுமைபெறுகின்றன. இங்குமேம்பாடுஎன்பதுஒருசமூகம் அவாவி நிற்கும் பொருள்சார், பொருள்சாராக் கூறுகளை உள்ளடக்கிய சமூக முழுமையின் மேல் நோக்கிய அசைவாகும். இந்தக் கருத்தியலின் பின்னணியிலேயே பண்பாடு பற்றிய கவனம் அதிகரித்துள்ளது. இந்தக் கவனிப்பினடியாகவே இலக்கியத்தில் வாழ்வியலைக் காணும் ஆய்வார்வமும் தேடலும், தமிழ் இலக்கிய வரலாறு பற்றிய இந்த புரிதலோடு தமிழர் வாழ்வியலை மீட்டுருவாக்கம் செய்யும் முன்னோடி ஆய்வாக 1904 இலேயே எமக்குவாய்த்த1800வருடங்களுக்கு முற்பட்ட தமிழர் (Tamils Eighteen Hundred years Ago) நூலைத் தந்தவர், ஈழத்துத்தமிழ் அறிஞர் வி.கனகசபைப் பிள்ளை. பண்டைத் தமிழர் வாழ்வியலைச் சங்க இலக்கியங்களிலும் அதற்குப் பிந்திய இலக்கியங்களிலும் அறிவார்ந்து தேடித்தந்தவர்.

இலக்கியங்களை வெறுமனே ரசனைக்கானவை எனக் கண்ட காலங்களுக்கு அப்பால் இலக்கியம் பற்றிய இன்றைய முழுதளாவிய நோக்கில் அவை இனவரைவியல் தகுதிபெற்ற ஆய்வு மூலங்களாகி உள்ளன. எங்களது இலக்கிய வரலாற்று நூல்களும் கலைத்திட்டங்களும் இலக்கிய வரலாற்றை ஆண்டு அரச பரம்பரைகளை வைத்து விளங்கலாம் என எண்ணிய மட்டுப்பாடான சூழமைவில் இருந்து நாம் வெளிவந்துகொண்டிப்பதுநம்பிக்கைதருகின்றமாற்றமாகும். இலக்கியத்தின் சமூகவியல், இலக்கிய மானிடவியல் என்றவாறு விரிவு கண்டுள்ள புதிய அறிவுப் புலங்களின் முறையியல் செம்மையுடன் இலக்கியங்களைப் பகுப்பாய்வு செய்யவும், அதன் வழிப் பண்பாட்டின் செல்நெறிகளைத் துணிந்து கொள்ளவும் இன்று தொடங்கி விட்டோம். இலக்கியங்கள் பற்றிய ஆய்வு என்பது பல்துறை இணை நோக்கில் (Interdisciplinary approach) அமைதலின் அவசியம் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு இன்று வலுப்பெற்று வருவதும்மகிழ்ச்சியானவிடயம்எனலாம்.

✦✦✦

சங்க இலக்கியமானது, தமிழர் வாழ்வியலின் செந்நெறி மரபினைப் பிரதிபலித்து நிற்பது. இவ்விலக்கியப் பரப்பானது ஐந்திணைகளுக்குமுரிய சமூகவாழ்வியல் மரபுகளை வெளிப்படுத்திய அதேவேளையில் தனிமரபுகள், செவ்வியல் மரபுகள் என இன்றுநாம்பகுத்துநோக்குகின்றமரபுகளின் அசைவியக்கத்தையும் தன்னகத்தே கொண்டுவிளங்குவது. இலக்கியப் படைப்புக்கள் உயிர் வாழ்க்கையின் பல்வேறு கோலங்களுடனும் மனித வாழ்வின் உணர்வுகளுக்கும், சிந்தனைக்கு முள்ள முரண்பாடுகளுடனும் சமூகத்துடனான மனித உறவுகளுடன் அகவாழ்வினையும் புறநடத்தைகளையும் சித்திரிக்கின்றது. சித்திரிக்கின்றது என்பதற்கு அப்பால் சமூகத்தின் சிந்தனைக்குரிய கருவியாகவும் இலக்கியம் விளங்குகின்றது. இந்த வகையில் காலத்தின் விளை பொருளாகவும் காலத்தை விளைவிப்பதாகவும் இலக்கியம் விளங்குகின்றது.

சமூகத்துக்கும் இலக்கியத்துக்குமிடையிலான இந்த இயங்கியல் மெய்மையைக் கண்டு கொள்வதாகவே தமிழின் இலக்கிய வரலாற்று ஆய்வுகள் அமைந்திடுதல் வேண்டும். இலக்கிய வரலாற்றாய்வின் வளர்ச்சியிலே சமூக முழுமை பற்றிய புரிதலுடனும் சமூக சமத்துவம், சமநீதி பற்றிய உணர்திறனுடனும் இலக்கியங்களின் பன்மைத்தன்மைக்கு முக்கியத்துவம் தரும் இன்றைய கால ஆய்வுப் போக்கானது மேலும் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக நாட்டார் வழக்காற்றியலை செந்நெறி இலக்கியப் படைப்புக்களின் ஊற்றுக்கண்களாகக் கொள்ளும் ஆய்வுகள் இந்த வகையில் எமது கவனத்துக்குரியன. இங்கும் கூட தமிழ் ஆய்வைப் பொறுத்தவரையில் 'நாட்டார்' என்பதற்கான திட்டமான வரைவிலக்கணத்தைக் காண்பதிலுள்ள பிரச்சினைகளும் எமது கவனத்துக்குரியன. தமிழரிடை காணப்படும் சமஸ்கிருத நெறிப்பட்டபண்பாடு, சமஸ்கிருதநெறிப்படாத பண்பாடு என்ற இரண்டு வாழ்க்கை முறைகளையும் விளங்கிக் கொள்ளுவதில்'தேசி', 'மார்க்க'எனநாட்டியசாஸ்திரம் தரும் எண்ணக்கருவைப் பொருத்தமாய் கொள்ளமுடியும். இந்த இடத்தில் ரெட்பீல்ட் (Redfield), மில்ரன்சிங்கர் (Milton Singer) போன்றோரின் பெரும்பாரம்பரியம் (Great Tradition) சிறு பாரம்பரியம் என்ற எண்ணக்கருக்கள் சரியான பகுப்புகள் அல்ல. அவை மேனிலை விழுமிய முற்சாய்வின் அடியானவை. சமனற்ற, அடுக்கமைவான வளர்ச்சியைக் கொண்ட தமிழ்ச்சமூகக் கட்டமைப்பை நியாயப்படுத்துவதாக இலக்கிய ஆய்வுஅணுகுமுறைகள் அமைந்துவிடக்கூடாது என்பது இங்கு இன்றியமையாதது.

✦✦✦

ஐம்பதுகளைத் தொடர்ந்து வரலாற்றுப்பொருள் முதல்வாத அடிப்படையில் இலக்கியங்களை நோக்கும்புதிய ஆய்வுமுறைதந்தபயன்களும் இங்கு நம் கவனத்துக்குரியன. இந்த வகையில்தமிழகத்துப்பேராசிரியர்நா.வானமாமலையிலிருந்து ஈழத்துப் பேராசிரியர்க.கைலாசபதிஎனவிரியும்ஆய்வாளர்களின் ஆய்வுகளும், அவர்களின் வழி இந்த ஆய்வு மரபினைக்காத்தும்வளர்த்தும்நிற்கும்ஏனைய ஆய்வாளர்களும் எமது காலத்து ஆய்வுப் பண்பாட்டினைச் செழுமைப்படுத்தி நிற்பவர்கள். முன்னை இனக்குழு சமுதாயம் அழிந்து புதிய நிலவுடமைச் சமுதாயம் தோன்றுகின்ற நிலைமாறு காலமாக இந்;த முன்னோடிகள் முன்வைத்த கருதுகோளானது இன்று, அவர் வழி வரும் ஆய்வாளர்களினால் நிருபணமாகி வருவதை இங்கு குறிப்பிடுதல் வேண்டும். சங்ககாலநிலவுடமைமாற்றத்தின்விளைவாக 'கணவனோடு இறத்தல் துறக்கப்பேறு' (கலித்தொகை), 'ஆண்மக்கட்பேறு வழி துறக்கப்பேறு' (அகநானூறு) எனப் பெண் கணவனுடன் முடக்கப்படுதல் பற்றிய பால்நிலை பாரபட்சம் தொடர்பான அறிவார்ந்த புரிதலுக்கு இந்த ஆய்வுகள் இன்று பெரிதும் கைகொடுக்கின்றமையை இங்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம்.

இலக்கிய ஆய்வில் கருத்தியலின் இன்றியமையாமையினை நிலைநாட்டிய வரலாற்றுப் பொருள்முதல் வாதமானது, இயங்கியல் வழியான சமூகமாற்றத்தை வேண்டி நிற்பது. இந்த மாற்றமானது வெறுமனே மாற்றம் என்பதாக அமையாமல்நீதியான மாற்றமாகவும் அமைவது. அனைத்து விதமான சமூகமேலாண்மைகளையும் கேள்விக்குள்ளாக்கும் இந்தக் கருத்தியல் தெளிவினடியாகவே இன்று நாம் எதிர்கொள்ளும் பால்நிலைப் பாரபட்சம், சாதிய, இன ஒடுக்குமுறை போன்றஅநீதிகளைத்தாண்டியபண்பாட்டினைப் படைக்கமுடியும். அதுவே பண்பாட்டின் மேம்பாடுமாகும். நவீனமான இலக்கியக் கோட்பாடுகள் எனப் பல அறிமுகமானாலும் அவற்றைச் சமூக நோக்கின் நியாய அடிப்படையிலேயே நோக்குதல் வேண்டும். இந்த வகையில் அதி நவீன நோக்குகள் என்றவரறு கட்டவிழ்த்தலில் இறுதியில் எதுவுமில்லை என்ற மாயா வாதமாய் முடிந்து விடும் ஆபத்துப் பற்றிய விழிப்புணர்வும் இங்கு அவசியமானது.

✦✦✦

உண்மையில் தமிழ் ஆய்வுப் பண்பாட்டில் அதற்கென அறிவாராய்ச்சியியல் மரபொன்றை மீள் உருவாக்கும் காலக்கடமை எமக்கு முன்னால் விரிந்துள்ளது. மேலை இலக்கியத் தீறனாய்வுக் கோட்பாட்டுஆக்கிரமிப்பில்நாம்இழந்துபோன, மறந்துபோன தமிழ் மரபின் அகவயக் கோட்பாட்டு அணுகுமுறையைமீளக்காண்பதுஇன்றியமையாதது. இந்த வகை



கட்டுரை



பேராசிரியர்
கலாநிதி என்.சண்முகலிங்கன்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர். உலகப் பல்கலைக்கழகங்களில் வருகைப் பேராசிரியர். ஆய்வாளராகப் பலநூல்களை ஆக்கியவர். அண்மையில்சிறந்த ஆய்வுநூலுக்காக தமிழகப் பேராசிரியர் நா.வானமமலை விருது பெற்றவர். ஈழத்துக் கலை, இலக்கியப் புலத்தில் கவிஞர், எழுத்தாளர், ஆக்க இசைக் கலைஞர், வானொலி – காண்பியக்கலை படைப்பாளிஎனப்பன்முகத்தளங்களில்தடம்பதித்துள்ளார்.

இலக்கிய....

தொடர்ச்சி...

யில் இன்று ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க இலக்கியப் புலங்களில் காலனித்துவத்துக்குப் பிந்திய சுதேச முறைமைகளுக்குத்திரும்பும் ஆய்வு நோக்கும்போக்கும் எமக்கும் நெருக்கமாய் வழிகாட்டுவன.

இதனை எய்துவதில் இன்று வளர்ச்சி கண்டுள்ள இலக்கிய மானுடவியல் எமக்குப் பெரிதும் துணையாகும். தங்களது வாழ்வியலை மக்கள் எவ்வாறு நோக்குகின்றார்கள் எனும் 'எமிக்' (emic) - அகவய அணுகுமுறையுடன் பொருத்தமான முறையில் 'எரிக்' (etic) எனப்படும் புறவய அணுகுமுறையை இணைக்கின்ற போதுதான் ஆய்வின் முழுமை எய்தப்படும். மானுடவியல் வழிப்பட்ட இந்த அணுகுமுறையின் வழியாகவே சங்ககாலம் முதல் சமகாலம் வரையிலான மீட்டுருவாக்கத்தை நாம் சரிவரச் செய்ய முடியும். இந்த இடத்தில் இன்றைய இலக்கியவியலாளர்கள் எதிர்கொள்ளும் மயக்க நிலை நோக்குகள் பற்றித்தன் 'இலக்கிய மானிடவியல்' நூலில் மானுடவியல் அறிஞர் பக்தவக்சலபாரதி தரும் எச்சரிக்கை இன்றைய ஆய்வாளர்களுக்குப் பெரிதும் வழிகாட்டுவது என்பேன்.

பண்டைய கால நிகழ்வுகளுக்குச் சமகால கண்ணோட்டத்துடன் விளக்கம் கொடுத்தல்

சமகால நிகழ்ச்சிகளைப் பழைய கால கருத்தோட்டங்களின் அடிப்படையில் நோக்குதல்

கடந்தகாலமே பொற்காலம் எனக்கருதி நிகழ்காலத்தை நிராகரித்து இறந்தகாலத்தை இலட்சியமயப்படுத்துதல்

இந்த மூன்று அணுகுமுறைகளையும் சரியாக அணுகாவிட்டால் பிழையாகப் பொருள் கோடல் ஏற்பட்டுவிடும் என்பதே பக்தவக்சலபாரதியின் எச்சரிக்கை.





✦✦✦

தமிழின் இலக்கியப்பரப்பெல்லையானது சங்ககாலம் முதல் சமகாலம் வரையென்ற நீண்ட நெடும் பரப்பெல்லைகளைக் கொண்டிருப்பது. இன்று தமிழகம், ஈழம், மலேசியா என அமையப்பெற்ற தமிழ்ப் பண்பாட்டுப் பரப்புக்களையும் தாண்டி கடந்த கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக உலகப்பரப்பெல்லாம் புலம்பெயர் தமிழர்கள் என நாமம் சூட்டப்பட்ட தமிழர்களின் புகலிட படைப்பிலக்கியங்களும் எழுத்துக்களும் உலகத் தமிழ் இலக்கிய வரலாற்றிலே புலம்பெயர் இலக்கியம் என்றொரு தனிப்பகுதியாக வளர்ச்சி கண்டுள்ளமையையும் இங்கு நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். இந்தப் புலம்பெயர் இலக்கியமானது ஈழத்தமிழ் இலக்கியத்தின் அறுபடாத் தொடர்ச்சியாகவும் புதிய வாழ்வனுபவங்களின் வெளிப்பாடாகவும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

'பதியெழு அறியாப்பழங்குடிவாழ்க்கை' எனச்சிலப்பதிகாரம் விதந்து பெருமைப்படுத்திய தமிழரின் செம்மையான வாழ்வும் இன்று எதிர்கொள்ளும் பாரிய வாழ்வியல் பிரச்சினைகளும் தனித்து நோக்கப்படவேண்டியன. இந்த ஆய்வுகளினடியாக நவீன வாழ்வில் தமிழ் மக்களின் அபிலாசைகளை எய்தும் வகையில் பண்பாட்டுக் கொள்கையினை வகுத்துக்கொள்வது இன்றியமையாதது. சுய பண்பாட்டு எழுச்சியும் வளர்ச்சியும் இங்கு உயர் இலக்குகளாகும். நாம் வகுக்கும் பண்பாட்டுக்கொள்கையானது பண்பாட்டின் பெயரால் நிலவும் அநீதியான சமூக மேலாண்மைகளை இல்லாதொழிப்பதாக அமைவது இன்றியமையாதது.

சமூகத்தின் அனைத்து மக்களுக்கும் சமமான வாழ்வினைத்தரும் திசையில் பண்பாட்டை ஜனநாயகப்படுத்தும் பெரிய பணியில் மானுட உணர்வின் வெளிப்பட்ட புலமையாளர்கள், கலைஞர்கள், சமூகச் சிந்தனையாளர்கள், சமூகப் பணியாளர்கள் ஒன்றிணைந்து செயற்படுவதும் இன்றியமையாதது. இந்தவகையில் பண்பாட்டின் புத்தாக்கமும் பண்பாட்டின் மேம்பாடும்: காலக்கடமையாகின்றது. கூடவே குடியேற்றனாட்டாதிக்க காலச் செல்வாக்கினுள் முடமாகிப்போன சுதேச பண்பாட்டு அடையாளங்களை மீட்டெடுத்தலில் இருந்து இன்றைய நவகுடியேற்ற, உலகமயமாக்க அலைகளிடை தொலைந்துபோன பண்பாடுகளை மீளமைத்தல் வரையான பண்பாட்டுப்பணிகள் எமக்கு முன்னால் விரிந்துள்ளன.

✦✦✦

தமிழ் இலக்கியங்களி;ன் வழியான வாழ்வியல் என்ற ஆய்வுத்தேடலானது மறுதலையாகத் தமிழர் வாழ்வியலில் இலக்கியங்களின் இடம், பயன்பாடு பற்றிய ஆய்வுக்கு எம்மை அழைத்துச் செல்கின்றமையும் எமது கவனத்துக்குரியது. தமிழ் இலக்கியம் எவ்வாறு ஆக்கம் செய்யப்படுகின்றது, ஆக்கப்பட்ட இலக்கியம் எவ்வாறு மக்களுடன் தொடர்புபடுகின்றது என்பவை தொடர்பான ஆய்வுகள் இன்னமும் எங்களிடையே வளர்ச்சி பெறவில்லை. இத்தகைய ஆய்வுகளின்றி ஒருகாலத்து இலக்கியத்தின் சமூகச் செல்வாக்குத் தொடர்பான சரியான கணிப்பீடுகளை எம்மால் முன்வைக்க முடியாது. எழுத்தறிவு வீதம் பற்றிய எங்களது பெருமிதத்துக்கு ஏற்ப வாசகர் தொகை, நூல் நுகர்வு என்பன இல்லை. வாசிப்புப் பண்பாடு அருகிவருகின்றமை பற்றிய எங்களது இன்றைய பண்பாட்டுக்கவலையையும் இதனோடு இணைத்து நோக்கவேண்டும். இன்றைய வெகுஜன இலக்கியங்களின் மேலாண்மை, விரிவாக்கம் பற்றிய எச்சரிக்கையும் அதன் வழியான ஆய்வும் அவசியமாகின்றது. வெகுஜனப் பண்பாட்டின் திடீர் எழுச்சியானது இலக்கியப் படைப்புக்களைப் பண்டங்கள் ஆக்கியுள்ளது.

ஜனரஞ்சக நுகர்வுக்கெனவே திட்டமிட்டு உற்பத்திசெய்யப்படும்படைப்புகளைப் பிரித்தறி தற்கான தெளிவான முறையியலுக்கான தேவை எம் முன்னே உள்ள மிகப் பெரிய சவாலாகவுள்ளது. மக்களின் சிந்தனை வெளியை மூடிநிரப்பும்பொழுதுபோக்குப் படைப்புக்களின் வழி ரசிகர்களை நுகர்வோராக்கும் இந்த உலகமயமாக்க அவலத்தின் முகமூடியாகப் பண்பாடு பயன்படுத்தப்படுவதும் இங்கு நம் கவனத்துக்குரியது.

✦✦✦

தமிழர் வாழ்வியலில் இன்று அதீத செல்வாக்குச்செலுத்தும்நவீனதொடர்புச்சாதனங்களான திரைப்படம், தொலைக்காட்சி, மற்றும்சமூகவலைத்தளங்களின் வழியான இலக்கியப் படைப்பாக்கம், இலக்கியப் பரவலாக்கம் பற்றிய மதிப்பீடுகளும் இங்கு எம் அவசிய அவசர பணிகளாகின்றன. ஊடக அறிவுஎன்ற பதம் தமிழுக்குப் புதியது. ஆனாலும் அதன் அவசியம் எங்களுக்காகி வெகுநாள்களாகி விட்டது. எங்களது அறிவு, மனவெழுச்சி, அழகியல், ஒழுக்கவியல் என அனைத்து முகங்களிலும் ஊடகங்கள் விதைக்கின்ற பண்பாட்டின் தாக்கங்கள் அதிகரித்துள்ளன. இன்றைய மனிதரின் நீட்சியாய் பார்வை, கேள்வி, தொடுகை, காலம், வெளி என எல்லாமே ஊடக ஆட்சியின் கீழுள்ளன என்பது மிகையான கூற்றல்ல. நுண்நிலையில் தனிமனிதரிடத்தும் பருநிலையில் பண்பாட்டுத்தளத்திலும் நிகழும் இந்த மாற்றங்கள் பற்றிய ஆய்வுகள் இன்றியமையாதன.

அந்நிய நியமங்களை எமதாக்கும் உள்ளுர் பண்பாடுகளை தாழநோக்கும் உலகச்சந்தையின் 'உலகளாவி சிந்தி, உள்ளுர்த்தனமாய் செயற்படு' (Think globally, act locally) போன்ற நியாயப்பாடுகளைக் கேள்விக்குள்ளாக்குவதும் எங்களது காலக்கடமையாகியுள்ளது.



கவிதை



நெடுந்தீவு யோகேஸ்

க. யோகேஸ் எனும் இயற்பெயர் கொண்ட இவர் நுண்கலை மாணிப் பட்டதாரி. இசைத்துறையில் அதிக ஈடுபாடு கொண்டதுடன், இலக்கியத்தில் கவிதைத் துறையில் ஈடுபாடு கொண்டவர். கவிதைத் தொகுப்புக்களையும், இசைத் தொகுப்புக்களையும் வெளியீடு செய்துள்ளார்.

கொஞ்ச நேரம்
அருகிலிருக்கிறேன்
நான் குணப்படும் வரை
உன்னுடைய வெப்பம்
இதம் தரட்டும்

மணல் தரையில் நீட்டிய
கால்களில்
முத்தம் இடுகிறேன்
நான் சுகப்படும் வரை
ஈரம் இருக்கட்டும்

மணித்தியாலயங்கள்
கடந்த உறக்கம்
எனக்குத் தேவை
உன் மார்புகளை
எடுத்துக் கொள்கிறேன்

இப்போதெல்லாம்
அதிகம்
எடுத்துக் கொள்கிறேன்
என்னை அறியாமல்
அதிகம் கொடுக்கிறேன்
எதுவும் புரியாமல்

விரல் பிடிக்க
அனுமதி கேட்டு
வித்தை செய்கிறேன்
உன் பொறுமையிலும்
குழைவிலும்
ஓடி விட்டது ஓராண்டு

சவுக்க மரத்தைக் கோதுகின்ற
தென்றலிலும் பார்க்க
ஏதோ ஒன்று
ரம்மியமாய் இருக்கிறது

இந்த நீலக் கடற்கரையும்
நிலாத்தூறலும்
பழமைப்பட்ட ஒன்று
புதிதாய் இருப்பது
உன் கண்கள் மட்டுமே

மாதவி நீ
கற்பு நிறைந்தவள்
உன் யாழ் ஒலி
புனிதமானது

இந்த வானம்பாடிகளைப் பார்
எம்மைப்போலவே
எல்லைகளை அறுத்து
விட்டது

நம் கதை சொல்லி பாடுகிறது
அலைக்கூட்டம்
நாம்
பெருமைப்பட்டுக்கொள்ளும்
பெரிய பொய்கள்
இலக்கியமாகின்றன

இன்னும்
சிறுமைப்பட்டுக்கொள்ளும்
சிற்றிடையில்
என் தாபம்
ஸ்வரங்களாகின்றன

அலைக்குள்
புகுந்தன நண்டுகள்
கூடவே புகுந்தன உதடுகள்

நெய்தலின் பரிவும்
நயமும் நாணமும்
நம்மை வருத்துகின்றன

மாதவி...! நீதான்
என்னை வருத்திய
முதலாவது கலைப்பிரிவு.





காலணித்துவ ஆட்சிக்காலத்திலே எழுச்சி கொள்ளத் தொடங்கிய இசை அறிக்கை வடிவங்களுள் ஒன்றாக அமைவது இனக்குழும இசை (ETHNO MUSIC) தேசிய இனங்கள் தமது அடையாளத்தை நிலைநிறுத்துவதற்குத் தமக்குரிய இசையின் தனித்துவங்களைத் தேடும் செயற்பாட்டை முன்னெடுத்தன. இந்தியச் சூழலில் எழுச்சி கொள்ளத் தொடங்கிய அடையாள நெருக்கடி, தமிழிசையின் தேடல், தனித்தமிழ் இயக்கம், சுயமரியாதை இயக்கம், முதலியவற்றைத் தோற்றுவித்தது.

தமிழகத்தில் இசையும் ஆடலும் சாதிய அடுக்கமைவுடன் தொடர்பு பட்டிருந்தமையும் தமிழிசை பற்றிய தேடலை முன்னிலைப்படுத்தியது. மேட்டுக்குடியினர் செவ்வியல் இசையும் (சாஸ்திரிய இசை) பரத நாட்டியத்தையும் தமக்குரிய கலை வடிவங்களாக்கிக் கொண்டனர். நாட்டார் இசையும் நாட்டுக்கூத்தும் சாதிய அடுக்கமைவின் அடிமட்டங்களில் வாழ்வோருக்குரியதாயின. மேட்டுக்குடியினர் தமது சாஸ்திரிய இசையையும், பரதநாட்டியத்தையும் அடித்தளத்து மக்களிடமிருந்து பிரித்தெடுப்பதற்கு மொழி அன்னிய மயப்பாடு. (LANGUAGE ALIENATION) என்ற நுட்பத்தைப் பயன்படுத்தினர் பரத நாட்டியமும் கர்நாடக இசையும் அவ்வகை மொழி அன்னிய மயப்பாட்டுக்கு உட்படுத்தப்பட்டன. இதற்குப் பல சான்றுகளைக் காட்டலாம். திருச்சதிராட்டம், கோயிலார் ஆடல், தேவரடியார் ஆடல் என்றெல்லாம் அழைக்கப்பட்டுவந்த ஆடலின் பெயரை 1927 ஆம் ஆண்டில் கிருஷ்ணையர் பரத நாட்டியம் என்று மாற்றி வடிவமைத்தார். ருக்மணி அருண்டேல் அவர்கள் அந்த ஆடலுக்குரிய ஆடை அணிகலன்களை உயர்குடியினருக்குரியனவாக மாற்றி வடிவமைத்தார். தேவரடியாரின் ஆடை அணிகலன்களுக்கும் ருக்மிணி அம்மையார் உருவாக்கிய ஆடை அணிகலன்களுக்கும் இடையே

கட்டுரை



பேராசிரியர் சபா. ஜெயராசா

இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றியவர். கல்வியியல், உளவியல், திறனாய்வியல், பண்பாட்டியல், கலைவரலாறு, கலைச்சொல்லாக்கம் முதலான துறைகளில் எழுபதுக்கு மேற்பட்ட நூல்களை எழுதியவர். சிறுவர் இலக்கியத் துறையிலும் இருபது நூல்களை எழுதியுள்ளார்.
இலங்கை அரசின் கலைக் கழகத்தின் உறுப்பினராகவும், கொழும்பு தமிழ்ச்சங்கத்தின் துணைத் தலைவராகவும், புலமைக் குழுத் தலைவராகவும் பணியாற்றியவருகிறார். இவரது எழுத்துக்களைக் கௌரவித்து இலங்கை அரசு சாகித்திய ரத்னா விருது வழங்கியுள்ளது.







தமிழர் செவ்வியற்கலைகளும் வர்க்க முரண்பாடும்

பெரிய வேறுபாடுகள் உண்டு.
ருக்மணி அம்மையார் உருவாக்கிய கலாஷேத்திரத்தின் கலைத்திட்டத்தை நோக்கினால், அங்கு ஆடலும் இசையும் தொடர்பான எந்தத் தமிழ் நூலுக்கும் இடமளிக்கப்படவில்லை. தொல்காப்பியம், சிலப்பதிகாரம், தேவாரம், திருவாசகம், ஆழ்வார் பாசுரங்கள், சர்த்தனர் எழுதிய கூத்தநூல், இறைவனின் ஆடலை விளக்கும் திருமூலரின் திருமந்திரம் முதலான எந்த நூல்களும் கற்பித்தலில் இடமளிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.
பரத நாட்டியத்தின் வளர்ச்சியும் தொடர்ச்சியும் சமூகத்தின் அடிநிலை மக்களிடமிருந்து அதனை அன்னியமயப்படுத்தும் செயற்பாடுகளோடு தான் இன்னும் இணைக்கப்பட்டுவருகின்றது.
அந்த நடனம் தொடர்பான ஆய்வில் நிகழ்ந்த பிறிதொரு செயற்பாட்டையும் இங்கே குறிப்பிட வேண்டியுள்ளது. பாரத நாட்டியம் தமிழகத்தில் உருவாகவில்லை என்றும் காஷ்மீரத்திலேதான் தோற்றம் பெற்றது என்றும் பத்மாசுப்பிரமணியம் தமது கருத்தை முன்வைத்தார். தமிழ் நாட்டிலே தமிழ் இசையின் அடையாளங்கள் நிராகரிப்புக்கு உட்பட்டுத்தான் வளர்ந்து வந்துள்ளன. தமிழ் இசையின் அடையாளங்களை மேட்டுக்குடியினர் இல்லாதொழித்து வந்தமை ஒரு மேலாதிக்கச்செயற்பாடு. இசை பற்றிய அறிவுறுத்தல்கள் தொல்காப்பியத்திலே காணப்பட்டாலும் அவற்றை நிராகரிப்புக்கு உட்படுத்தும் கற்பித்தலே அவர்களால் முன்னெடுக்கப்பட்டது.
தொல்காப்பியம் குறிப்பிடும் அகவல்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா, பரிப்பா ஆகியவை இசைப்பாக்களாகும். மேலும் இசையின் உயிர்ப்போடு தொடர்புடைய இருபது வண்ணங்களும் தொல்காப்பியத்திலே குறிப்பிடப்பட்டுள்ளன.
பா அ வண்ணம், தா அ வண்ணம், வல்லிசை வண்ணம், மெல்லிசை வண்ணம், இயைபுவண்ணம், அளபெடைவண்ணம், நெடுஞ்சீர் வண்ணம், குறுஞ்சீர் வண்ணம், சித்திரவண்ணம், நலிபு வண்ணம், அகப்பட்டு வண்ணம், புறப்பாட்டு வண்ணம், ஒழுகு வண்ணம், ஒரு உ வண்ணம், எண்ணு வண்ணம், அசைப்பு வண்ணம், தூங்கல் வண்ணம், எந்தல் வண்ணம், உருட்டுவண்ணம், முடுகு வண்ணம் என்ற வாறு இருபது வண்ணங்களும் அமையும்.
சிலப்பதிகாரத்தில் தமிழிசை பற்றிய செய்திகளும் ஆடல் பற்றிய செய்திகளும் விளக்கங்களும் பரவலாக இடம் பெற்றுள்ளன. வரிப்பாடல்கள் தமிழிசையின் பிறிதொரு பரிமாணத்தை விளக்கின. குரவை என்பது வேறொருவகை இசையைப்புலப்படுத்தியது. ஆற்றுவரி, அம்மானைவரி, ஊசல்வரி, ஊர்சூழ்வரி, கந்துகவரி, சாயல்வரி, சார்த்துவரி, திணை நிலைவரி, நிலைவரி, மயங்குதிணை நிலைவரி, முகமில்வரி, முரிவரி, வாழ்த்துவரி, வேட்டுவவரி, ஆச்சியர்க்குரவை, குன்றக்குரவை, மங்கலவாழ்த்துப்பாட்டு, வள்ளைப்பாட்டு முதலான செய்திகள் சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள்ளன. கீர்த்தனை வடிவத்தின் தொடக்கமாக அமைவது தேவாரங்கள், "தலையே நீ வணங்காய்" என்ற தேவார எடுப்பே கீர்த்தனையின் பல்லவி அமைப்புத் தொடக்கத்துக்குக் கால் கோலாயிற்று. கீர்த்தனையே கர்நாடக இசையின் வெளிப்பாட்டுச்சட்டகமாக இருத்தல் குறிப்பிடத்தக்கது.
திருவாசகம் அனுபூதிக் கவியாடலுடன் இணைந்த இசைவடிவம். திருஅம்மானை, திருவுந்தியார், திருவெம்பாவை, திருஏசறவு, திருக்கோத்தும்பி, திருச்சாழல், திருத்தொள்ளேணம், திருத்தோணோக்கம், திருப்படையாட்சி, திருப்பள்ளி எழுச்சி, திருப்புலம்பல், திருப்பூவல்லி, திருப்பொன்னூசல் என்றவாறு திருவாசகப்பாக்கள் அனைத்தும் இசையோடிணைந்த வடிவங்கள்.
அவ்வாறே வைணவ ஆழ்வார்களின் பாசுரங்களும் தமிழிசையை வைணவ பக்தியுடன்கலந்துவெளிப்படுத்தின. பிற்காலத்தில் தியாகராஜ சுவாமிகளின் இராம பத்தியும் செவ்வியல் இசையும் கலந்த இசைப் பிரவாகத்துக்கு ஆழ்வார்களின் பாசுரங்களே கால்கோள் அமைத்தன.
இந்தச் சந்தர்ப்பத்தில் அரிகேச நல்லூர் முத்தையா பகவதர், சி. ஆர் சீனிவாச ஐயங்கார் ஆகியோர் மேற்கொண்ட முயற்சிகளைத் தொடர்புபடுத்திக் காட்ட வேண்டியுள்ளது. அரிகேச நல்லூர் முத்தையா பகவதர், பரிபாடல், சிலப்பதிகாரம் தேவாரங்கள் முதலியவற்றை இசைநோக்கில் விரிவாக ஆராய்ந்து தமிழிசையின் ஆக்கத்தைத் தெளிவுபடுத்தினார்.
1927 ஆம் ஆண்டு சென்னையில் அனைத்து இந்திய இசைமாநாடு நிகழ்ந்தவேளை அங்கு ஆய்வுரை நிகழ்த்திய சி. ஆர். சீனிவாச ஐயங்கார், தேவாரத்தில் இடம்பெறும் பண்களுக்கும் கர்னாடக இசையில் இடம் பெறும் இராகங்களுக்குமுள்ள தொடர்பு கும் சாதிய மேலாண்மைக்குமுள்ள தொடர்பைத் தெளிவாகக் காட்டுகின்றது.
மேட்டுக்குடியினரது அழுத்தங்களையும் பக்கச்சார்பான கருத்து எறிவுகளையும் நிராகரித்து அவர் தமிழிசை ஆய்வுகளைத் தொடர்ந்தார். 1912 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆம் நாளன்று தஞ்சையிலே 'சங்கீத வித்யா மகாஜன சங்கத்தை' நிறுவினார். அன்றுமுதல் தமிழிசை ஆய்வரங்கும், கருத்தரங்கும் நிகழ்த்தப்பட்டன. அந்த நிறுவனத்தால் ஏழு ஆய்வுக் கருத்தரங்குகள் நிகழ்த்தப் பட்டமை குறிப்பிடத்தக்கது. தமிழிசையின் தனித்துவமும் ஏனைய இசைகளின் தோற்றத்துக்கு அது கால்கோள் அமைத்தமையும் ஆய்வரங்குகளின் உரையரங்குகளிலே அறிகை வெளிக்கிளம்பல்களாக அமைந்தன.
தமிழிசையானது 'ஒழுகிசை' என்றும், 'நெகிழிசை' என்றும் இசைச்சுரங்கள் ஒன்றன் பின் ஒன்றாகத் தொடரும் சுரங்களின் 'தொடரிசை' (MELODY) என்றும் குறிப்பிடப்படும். தமிழிசையின் அடையாளம் முதலில் அதிலிருந்தே நிறுவப்படுகின்றது.
'குரலே துத்தம் கைக்கிளை உழையே
இனியே விளரி தாரம் என்றிவை
எழுவகை இசைக்கும் எய்தும்
பெயரே' என்று தமிழ்வழி எழும் ஏழுசுரங்களையும் முதல் நிகண்டாகியதிவாகரம் விளக்குகின்றது.



தமிழர்

அதாவது, ஏழு இசைக்கும் உரிய ஒலிதாங்கிய அமைப்புக்காக குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பவை குறிப்பிடப் பட்டுள்ளன.

மேலும், ஆ, ஈ,ஊ, ஏ, ஐ, ஒ, ஔ என்னும் எழுத்துக்கள் ஏழிசைக் குரியவை என்று விரிவுபடக் கூறப்படுகின்றது.

இசைக்குரிய அடிப்படை ஒலிகள் ஏழும் உலகம் முழுவதும் காணப்படும் ஒரு பொதுவான கண்டுபிடிப்பு. ஒலியோடும் இசையோடும், எழுத்தோடும் உறவாடிய மனித அனுபவங்களில் இருந்து முகிழ்ந்தனவே ஏழிசை வடிவங்கள். எல்லா நாடுகளிலும் காணப்படும் இந்த அமைப்பை யார் முதலிலே கண்டறிந்தார்கள் அல்லது உருவாக்கினார்கள் என்பது இன்னமும் திட்டவட்டமாக நிரூபிக்கப்படவில்லை.

தமிழிசைமையும் தமிழ் இசைக் கருவிகளையும் நவீன ஆய்வு முறைத் தேடல்களுக்கு உட்படுத்தியவர்களுள் சுவாமி விபுலானந்தர் முக்கியமானவர். சென்னைப் பல்கலைக்கழக ஏற்பாட்டில் 22.2.1936ஆம் நாளிலிருந்து தொடர்ந்து நான்கு சொற்பொழிவுகளை "பண்டைத் தமிழிசை" என்னும் தலைப்பில் அவர் நிகழ்த்தினார். தமிழிசை ஆய்வில் அது ஒரு முக்கிய நிகழ்ச்சியாக அமைந்தது. தமிழிசைக்கும் பாணர்களுக்குமுள்ள தொடர்புகளை விளக்கிய அடிகளார் சங்ககாலத்துப் பாணர் பயன்படுத்திய யாழ் பற்றிய விரிவான ஆய்வை முன்வைத்தார். பேரியாழ், செங்கோட்டியாழ் என்ற இரண்டு வகை யாழ்களும் காலத்தால் முந்தியவை என்றும் பேரியாழுக்கு 21தந்திகள் என்றும் செங்கோட்டியாழ் என்ற சிறிய யாழுக்கு 7தந்திகள் என்றும் குறிப்பிட்டார். மகரயாழ், சகோடயாழ் ஆகியவை பின்னர் உருவாக்கப்பட்டவை என்றும் தமது ஆய்வை முன்வைத்தார். யாழின் தந்திகளின் வழியாகச்சுரங்கள் ஒலிக்கப்படுதலை ஒலி இயற்பியல் ஆய்வை அடியொற்றி விளக்கியமை தமிழிசை ஆய்வை விஞ்ஞானமயப்படுத்திய அவரின் செயற்பாடாயிற்று.

தமிழிசை வளர்ச்சியில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தினதும், தமிழிசைச் சங்கத்தினதும் பணிகள் முக்கியமானவை. 1936ஆம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இசைமாநாடு கூட்டப் பெற்றமையைத் தொடர்ந்து தமிழிசை தொடர்பான கருத்தாடல்களுடன் நடைமுறைப்பாடு தொடர்பான விடயங்களும் விரிவாக ஆராயப்பட்டன. தமிழிசையைப் பயிற்றுவிப்பதில் மேட்டுக்குடியினர் தொடர்ந்து தடைகளை ஏற்படுத்திய வண்ணமிருந்ததாகச் சொல்லப்படுகின்றது. அந்தத் தடைகளைத் தகர்த்ததில் தண்டபாணிதேசிகரின் பங்குமுக்கியமானது. ஆக்க நீட்சிகளினூடே தமிழிசை இயக்கத்துக்குத் தொடர்ந்தும் எதிர்ப்புக்கள் வளர்ந்த வண்ணமிருந்தன. சென்னை இந்துப் பத்திரிகை தமிழிசை இயக்கத்தக்கு எதிரான கட்டுரைகளையே தொடர்ந்து வெளியிட்டது. 1941ஆம் ஆண்டில் மைலாப்பூர் டி. எஸ். வெங்கட்ராமையர், கிருஷ்ணமாச்சாரியார் முதலியோர் தமிழிசை இயக்கத்துக்கு எதிரான கட்டுரைகளை இந்து இதழிலே எழுதினர். தமிழ் உணர்வுக்கு எதிரான இந்து நாள் இதழின் போக்கினை இ. வே. இராமசாமிப் பெரியாரும், இளவரசர் முத்தையாவேளும் கண்டித்தமை குறிப்பிடத்தக்கது. (இரா. இளங்குமரன், 1993, ப.79)

தமிழிசை இயக்கம் வேற்று மொழிகளுக்கு எதிரான இயக்கம் அல்ல என்றும் தமிழுக்குரிய அடையாளத்தை நிலை நிறுத்தும் செயற்பாடே ஏன்றும் தெளிவான முன்மொழிவை அந்த இயக்கத்தைச் சார்ந்தோர் அனைவரும் முன்வைத்தனர். தமிழிசைதொடர்பான ஆவண அறிக்கை 15.9.1941ஆம் நாள் வெளியிடப்பட்டது. அதில் டி. என் இராசரெத்தினம் பிள்ளை, மாரியப்பா சாமி, தண்டபாணி தேசிகர், வி. வி. கோபாலசர்மா, கே. ஆர். வேணுகோபாலசர்மா, என். எஸ். கிருஷ்ணன் முதலியோர் கையெழுத்திட்டனர். அந்த இயக்கத்துக்குப் பரந்த வரவேற்புக் கிடைக்கப்பெற்றமை அதன் வெகுசனமயப்பாட்டை வெளிப்படுத்தியது. இசை அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், நடிகர்கள், அரசியல் தலைவர்கள் என்ற பலசாராரும் ஆதரவுவழங்கினர். கல்கி ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தி அவர்களும் தமது ஆதரவைத் தெரிவித்து எழுதினார்.

அந்த வளர்ச்சிகளினூடே தமிழிசையை முன்னெடுத்தார் எதிர்கொண்ட அறைகூவல்கள் வரலாற்றுப்பதிவுக்குரியவை. திருவையாற்று அரங்கிலே தண்டபாணிதேசிகர் தமிழ்க் கீர்த்தனைகளைப் பாடி முடித்தவுடன் அவர் மேடையைத் தீட்டுப்படுத்திவிட்டார் என்று கழுவிச்சுத்தம் செய்தமை ஒரு முக்கியமான வரலாற்றுப்பதிவு.

தமிழிசை இயக்கம் இசைக்கலை வளர்ச்சிக்கு இடையூறாக அமையும் என்று 2.9.1941 ஆம் நாள் இந்து நாளிதள் தலையங்கம் எழுதியமை பிறிதொரு முக்கியமான வரலாற்றுப்பதிவு.

சர் அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் தமிழிசை இயக்கம் ஓர் "எதிர்ப்பண்பாட்டு முனைப்பு" (ANTI-CULTURAL) என்று குறிப்பிட்டமை பிறிதொரு வரலாற்றுப்பதிவு.

சிலகாலங்களுக்கு முன்னர் உஷா இரகுநாதன் இசையாற்றிய ஒரு முக்கியமான கருத்தை வெளியிட்டார். தமிழில் கனதியானதும் விரிவுநீட்சியில் பாடக்கூடியதுமான இசை உருப்படிகள் இருத்தலை அவர் விதந்து குறிப்பிட்டமை தமிழிசை விரிவின் முக்கிய அவதானிப்பாக அமைகின்றது.

கர்நாடக இசை என்ற சொல் பிற்காலத்தில், அதாவது 16ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே தான் உருவாக்கம் பெற்றதென்பது கவனத்துக்குரியது. அதற்குத் "தென்னக இசை" என்ற சொல்லை எடுத்தாளுவதும் வழக்கில் உண்டு. கர்நாடக இசையினூடாக மேட்டுக் குடியினர் மேற்கொண்ட மேலாதிக்கச் செயற்பாடுகளுக்கு எதிராக மேலை முந்த தமிழிசை இயக்கம் ஒரு வகையில் ஒடுக்குமுறைக்கு எதிரான விசைப்பாடுமாகும்.

மேலாதிக்கம் செலுத்துவோர் மொழியை ஓர் ஒடுக்குமுறைக் கருவியாகப் பயன்படுத்துவதை இனங்கண்டு கொள்ளக் கூடிய செயற்பாடுகள், சுரண்டல் வடிவங்கள் பற்றிய அறிகையுடன் தொடர்புபட்டு வளர்ச்சியடைந்தன.

தமது மேலாதிக்கத்தை நிலைநிறுத்துவதற்கு இசையைச் சாதனமாகப் பயன்படுத்திய மேட்டுக்குடியினருக்கு எதிரான கிளர்ச்சியாகத் தமிழிசை இயக்கம் எழுச்சி கொண்டது.

அது மக்கள் இயக்கமாகப் பரந்துபட்டு நீட்சி கொண்டமை சமூகவியல் நோக்கில் ஒரு முக்கியமான நிகழ்ச்சியாகும். சுரண்டலுக்கு எதிரான செயற்பாடுகள் இயல்பாகவே ஒடுக்கப்படுவோரை ஒன்றிணைக்கும் திரட்சியை ஏற்படுத்தும் என்ற இயங்கியல் விதியின் செயற்பாட்டைத் தமிழகச் சூழல் வெளிப்படுத்தியது.

கர்நாடக இசை, பரத நாட்டியம் முதலான செவ்வியற் கலைகளின் 'ஆட்சி'யானது விளிம்புநிலை மக்களுக்கு எட்டாதவாறு தமிழகச் சமூகத்திலே கட்டமைப்புச் செய்யப்பட்டுள்ளமை ஆழ்ந்த உற்று நோக்கலுக்குரியது. "ஆட்சி" என்று சொல்லும்பொழுது, தரத்தைத்தீர்மானித்தல், நிகழ்த்துகைக்கு உயர் நிலை அங்கீகாரம் வழங்குதல், சம்பிரதாயங்களை உறுதிப்படுத்தல் முதலியவாவும் அதன் பொருள் விளக்கமாக அமைகின்றன. தமிழகத்தின் அந்த மேலாதிக்கச் செயற்பாடு உலகம் முழுவதும் நீட்சி கொண்டுள்ளது.

நோக்கியவை

ஆப்பிரகாம் பண்டிதர்(1917) கருணாமிர்த சாகரம், தஞ்சாவூர்.

இளங்குமரன், இரா.(1993) தமிழிசை இயக்கம், சிதம்பரம், மணிவாசகர் நூலகம்.

கலைவாணி, இரா, தமிழ்வேலு, சு.(2005) சங்க இலக்கியத்தில் இசை, மயிலாடுதுறை, ஏழிசைப் பதிப்பகம்.

செயலட்சுமி, சேலம் எஸ்(2000) சிலப்பதிகாரத்தில் இசைச் செல்வங்கள் சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

பெருமாள், ஏ. என்(1984) தமிழர் இசை, சென்னை, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்.

விபுலானந்த அடிகள்(1974) யாழ் நூல், தஞ்சாவூர், கரந்தைத்தமிழ்ச்சங்கம்.

ஆங்கில மொழிபெயர்ப்பு

பு.மு.வங்கார்

குஜராத் மூலம் : நீரவ் பட்டேல்



தமிழாக்கம்



சோ.பத்மநாதன்

வண்ணார் பண்ணையைச் சேர்ந்தவர். ஆங்கில ஆசிரியராக வாழ்க்கையை ஆரம்பித்து விரிவுரையாளராகவும் ஆசிரிய கலாசாலை அதிபராகவும் கடமையாற்றி ஓய்வு பெற்றவர். நாடறிந்தகவிஞர். பேச்சாளர், விமர்சகர், மொழிபெயர்ப்பாளர் என்ற பன்முக ஆற்றலுள்ளவர். சமய, சமூகப்பணிகளிலும் அதிக ஈடுபாடு கொண்டவர்.

நானும் என் கிழவியும்

வெள்ளையர் வெளியேறினர்
கிழவரும் இறந்தார்
சுயராஜ்யம் வந்துவிட்டது
அவர்கள் கூவினார்கள்
கடந்த அறுபத்தைந்து ஆண்டுகளாக
அவர்கள் சத்தமிடுகிறார்கள்
மாரித்தவளைகள்போல, கிரமமாக!
அவர்கள் கூக்குரலால் ஒன்றும் ஆகவில்லை
ஐந்து வருடம் ஆகுமுன்பே
வாக்குக் கேட்கவந்து விடுவார்கள்
மீண்டும், மீண்டும்
வலோ நமேரி இம்முறை போட்டியிடுகிறாராம் நல்ல மனிதர்
பாபா சாஹிப் காலத்திலிருந்து
இந்தப் பேய்களிடையே
ஏழைத்தீண்டத் தகாதவர்களுக்காக
பாடுபடுகிறாராம்
இந்த அப்பாவித் தேவதைக்கு
என்ன வாய்ப்பு இருக்கப்போகிறது?
சொல்லு, கிழவி
இம்முறை நாம் என்ன செய்யலாம்?

கிழவா, நீ பிறப்பிலேயே கள்ளமில்லாதவன்
நாளெல்லாம், வாழ்நாளெல்லாம்
வியர்வை சிந்தி உழைப்பவன்
கேள்விப்படவில்லையா
தலைக்குப் பத்து ரூபா கொடுக்கிறார்களாம்
அதற்குமேல் ஒரு சிற்றுண்டிப் பொதியுமாம்!
ஒரு கார் உன்னை ஏற்றிக் கொண்டுபோய்
திரும்ப எங்கள் குடிசை வாசலில் இறக்கிவிடுமாம்
வயசான காலத்தில் வாழ்க்கையை அநுபவியேன்
விரும்பினால் ஒரு மிடறு 'தேசி' மதுவும் பருகு!
வலோ நமேரியை இறைவன் ஆசீர்வதிக்கட்டும்
ஆனால் இம்முறை நாங்கள்
மனுபாய்க்கு வாக்களிப்போம்!

போய், பேரம்பேசு
எனக்கும் என் கிழவிக்குமாக
எம்மிடம் இருவாக்குகள் உண்டென்று சொல்லு!
எஜமானர்களே
தலைக்குப் பத்துரூபா என்று கேள்வி
பன்னிரண்டு தருவீர்களாயின்
இரண்டு வாக்குகள் தருவோம்
நானும் என் கிழவியும் அது அதிகம் இல்லை
எம் இருவருக்கும் ஒரு நாள் உழைப்பு
இந்தப் பெருநாளில் எங்களுக்கு ஓய்வு கிடைக்கும்
இல்லாவிட்டால்
காசிவாடில் எலும்பு பொறுக்கப் போய்விடுவோம்
ஒரு பைக்கு பாகோ மேஹ்தார் அஞ்சு ரூபா தருவான்
நாள் முடிவில் பாணும் பருப்பும் கிடைக்கும்
எஜமானர்களே
உங்களுக்குப் புண்ணியம் உண்டாகட்டும்
எங்களுக்கு இந்தச் சுற்றுலா ஆகட்டும்!
சொல்லுங்கோ வெயில் ஏறுகிறது
தோளில் சாக்குப் பைகளுடன்
கிழவி கனநேரமாகக் காத்திருக்கிறாள்
இது பாவம் எனத் தெரியும்
ஆனால் சொன்ன சொல்லைக் காக்கவேண்டும்
எங்கள் வாக்கு உங்கள் மனுபாய்க்குத்தான்
சொல்லுங்கோ, தலைக்குப் பன்னிரண்டு தருவீர்களா?
பெறுமதி மிக்க இரண்டு வாக்குகள் வைத்திருக்கிறோம்
நானும் என் கிழவியும்



தேவி மூலை மூலிகை



பொங்கலுக்கான புதுப்பொலிவு முற்றத்தில் நிறைந்துவிட்டதா? என ஒருதடவை நோட்ட மிட்டாள் கலாவதி. "இவ்வளவு அழகாகக் கோலம் போட எங்கே கற்றுக்கொண் டாள் சின்மயி!" எனத் தன் மகளை நினைத்துப் பெருமைப் பட்டது அவளின் மனது. சும்மா சொல்லக்கூடாது. மார்கழி மாதம் முழுவதும் சின்மயியின் கைவண்ணமாக நாளுக் கொரு அழகிய கோலம் அவர்களின் முற்றத்தில் அனைவரையும் கவர்ந்ததை யாரும் மறுக்கமுடியாது.

அதன் நடுவே சாணகத்தில் பிடித்த பிள்ளையார். மலர்களால் அர்ச்சிக்கப்பட்டு வீற்றிருப்பார். முன்னோர்கள் கடைப்பிடித்த இந்தப் பாரம்பரியத்தை மகளும் தொடர்வது அவளுடைய மனதுக்கு நிறைவை ஏற்படுத்தியிருந்தது. பொங்கல் வேலைகளையும் மகளே பொறுப்பாகச் செய்துகொண்டிருந்தாள்.

திலீபனும் சின்மயியும் செய்திருந்த ஆயத்தங்களைப் பார்த்துத் திருப்திப்பட்டுக்கொண்டாள் கலாவதி.

"நானும் அப்பாவும் செய்திருக்கிறதெல்லாம் சரிதானே?" என்ற கேள்வியுடன் எதிரே வந்தாள் சின்மயி.

"நீங்கள் செய்ததிலே பிழையிருக்குமே? அது சரி. ஏன் தலை ஈரத்தைத் துவட்டாமல் வேலையளைத் தொடங்கீட்டாய்? போய் ஒருக்கா ஈரத்தைத் துவட்டிப் போட்டு வந்து மற்றதுகளைச் செய்."

"பிள்ளை பருப்புப் பதம்போலை கிடக்கு. போய்ப் பார்."

மகளின் மேலிருந்த கலாவதியின் கவனத்தை தாயின் குரல் தன் பக்கம் ஈர்த்தது.

படுத்த படுக்கையிலிருந்துகொண்டே சமையலறையில் தயாராகும் உணவைப் பக்குவம் பார்க்கும் திறமை கலாவதியின் தாய் செல்லத்துக்கிருந்தது. நடமாட முடியாது படுக்கையிலிருந்தாலும் அவரது புலன்களெல்லாம் சமையலறையிலிருப்பது வழமைதான்.

"பயறைப் பதமாக வறுத்திருக்கிறாய். மணம் சொல்லுது. இதுக்கு மேலை அவியவிட்டாக் குழைஞ்சுபோம். மோதகத்துக்கு உள்ளுடன் சரியாயிருக்கவேணும்."

செல்லத்தின் குரல் தொடர்ந்து கேட்டது. கலாவதி அவசர அவசரமாகத் திரும்பிச் சமையலறைக்குச் சென்றுகொண்டே, "ஓமம்மா பாக்கிறன்" என உரத்த குரலில் பதிலளித்தாள். அம்மா சமையல் பாகத்தில் கைதேர்ந்தவர். எழும் வாசனையிலிருந்தே சுவையையும் பதத்தையும் அவரது மனம் கணிப்பீடு செய்துவிடும். மோதகம் அவர் விரும்பும் உணவுப்பண்டம். அவர் அவிக்கும் மோதகத்தின் சுவையே அலாதி.

போன தைப்பொங்கலுக்கும் அம்மா படுக்கையில்தான்.

அதற்கு முன்பெல்லாம் மோதக அவியலுக்குக் கலாவதி பக்கவாத்தியந்தான். அம்மாதான் பொறுப்பாயிருப்பார். மார்கழி மாதத்தில் முற்றத்திலே வைத்து வழிபட்ட பிள்ளையாருக்கு தை மாதப் பிறப்பன்று மோதகம் படைத்து வழிபட அவர்கள் தவறுவதில்லை.

பொங்கல் எப்படி நடக்கிறதென்று இடைக்கிடை எட்டிப் பார்ப்பதும் பின்னர்வந்து மோதகம் அவிக்கும் வேலையைக் கவனிப்பதுமாக அவளது நேரம் ஓடியது. சிறிது நேரம் சின்மயியும்வந்துமோதகம்பிடித்தாள். அவளுக்கு அம்மம்மாவைக் கவனிக்கும் வேலையுமிருந்தது.

"எடி பிள்ளை கொம்மாவிட்டச் சொல்லு சந்தைக்குப்போறவையிட்டை ஈரப்பிலாக்காய் கட்டாயம வாங்கச் சொல்லு. மரவள்ளிக்கிழங்கும் வாங்கிப் பொரிக்க வேணும். உன்ரை அம்மப்பாவுக்கு ஈரப்பிலாக்காய்க் கறியும் மரவள்ளிப் பொரியலும் நல்ல விருப்பம்."

தாய். சின்மயியிடம் சொல்வது கலாவதிக்கும் கேட்டது. பொங்கலன்று இரவு சோறு. கறி சமைத்துப் பிதிரர்களுக்குப் படைப்பது வழமை. அதன்போது அப்பாவுக்கு விருப்பமானவற்றைச் செய்யவேண்டுமென்று அம்மா விரும்புகிறார்.

மகள் தன்னிடம் வரும்போதே அம்மம்மா கூறியவற்றை ஒப்புவிக்க வருகிறாள் என அவள் ஊகித்துக்கொண்டாள்.

"அம்மம்மா இரவைக்குப் படைக்க ஈரப்பிலாக்காய்க் கறியும் மரவள்ளிப் பொரியலும் செய்யவேணுமாம்"

சிறுகதை



யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

யாழ்ப்பாணம்– கோப்பாயைச் சேர்ந்தவர். ஈழநாடு நாளிதழில் முதன் முதலாகச் சிறுகதை வெளியானது. உதயனின் வெள்ளி விழாவில் சிறுகதைக்காகக் கௌரவிக்கப் பட்டவர். ஓய்வுபெற்ற வங்கி முகாமையாளர். சிறுகதைத் தொகுப்புக்கள் பலவற்றையும் வெளியிட்டிருக்கிறார்.

"அவா சொன்னது எனக்கும் கேட்டுது."

"செத்த பிறகு அது செய்யவேணும்... இது செய்யவேணும் எண்டு யோசிக்காமல் உயிரோடை இருக்கேக்கையே செய்துபோட வேணும். பிறகு செய்யிறதிலை என்ன பிரயோசனம்?"

"நீ சொல்லுறது சரிதான். ஆனால், அம்மம்மாவைப் பொறுத்தவரை அவ அம்மப்பாவின்ரை நாக்கு என்ன கேட்குது. குடல் எதை ஏற்குது எண்டதைக் கவனிச்சு, அறிஞ்சு கடைசிவரை அவருக்குப் பார்த்துப் பார்த்துச் சமைச்சுப் போட்டவ. ஒரு குறையும் விடேல்லை. இப்பவும் அவர் இராவைக்கு வந்து சாப்பிடுவரெண்டு அவ முழுமையாய்நம்புறா. தான்இருக்குமட்டும்அவர்விரும்புறதுகளைச் செய்து குடுக்கவேணுமெண்டுநினைக்கிறா."

"நீங்கள் உங்கடை அம்மாவை விட்டுக் குடுக்க மாட்டியள். எனக்குத் தெரியுந்தானே"

"இரண்டுபேரும் ஏதோ வேலை செய்யினமெண்டு நினைச்சன். இங்கை பட்டிமன்றம் நடக்குது."

தாயும் மகளும் உரையாடிக்கொண்டிருக்க உள்ளே வந்த திலீபன் இடையில் புகுந்தான்.

"இல்லை அப்பா. நாங்கள் என்னண்டால்..."

"நீங்கள் கதைச்சதைப் பிறகு பாப்பம். அங்கை பொங்கலடியிலை ஒருத்தருமில்லை. நான் போகவேணும். நான் வந்ததெதுக்கெண்டால் இந்த ஏலக்காய்த்தூள் மோதகத்துக்கும் தேவையோ? அல்லது முழுதையும் பொங்கலுக்குப் போடவோ?"

மகளின் விளக்கத்தைக் கேட்காமல் கேட்க வந்ததைக் கேட்டுக்கொண்டு போய்விடுவதற்குத் திலீபன் அவசரப்பட்டான்.

"மோதகத்துக்குத் தேவையில்லை அப்பா. அம்மம்மாவுக்கு மிளகுசீரகத்தூள்தான் போடவேணும். நாங்கள் அதைப் போட்டுத்தான் மோதகம் செய்யிறம்."

"அப்ப சரி. நான் பொங்கலடிக்குப் போறன்"

திலீபன் திரும்பியதும் கலாவதியின் எண்ணங்கள் அம்மாவிடம் திரும்பின. அம்மாவுக்கு மோதகமென்றால் மிகுந்த விருப்பந்தானென்றாலும் தனக்கென்று எடுத்து வைத்து அதை ஆரஅமர அம்மா சாப்பிட்டு அவள் பார்த்ததில்லை. ஆனாலும் அது அம்மாவுக்கு மிகவும் விருப்பமான உணவென்று அவளுக்குத் தெரியும். அம்மாவின் பிள்ளைகளுள் பிறந்தது முதல் அம்மாவைப் பிரியாது இருப்பவள் அவளொருத்திதான். அண்ணா, தம்பி, தங்கைகள் எல்லோரும் ஏதோ ஒவ்வொரு சமயம் பிரிந்திருந்திருக்கிறார்கள். அவள் மட்டுந்தான் அம்மாவுடன் இருந்துவருகிறாள். அதைத் தனக்குக் கிடைத்த வரமாக அவள் பெருமைப்பட்டுக்கொள்வது வழக்கம். அப்படியிருந்ததனால் அம்மாவின் விருப்பு வெறுப்புகளையும் கலாவதி நன்கு அறிந்துவைத்திருந்தாள். அதனால் தான் மிளகுசீரகத்தூள்தான் மோதகத்துக்குப் போட வேண்டுமென்று அவள் முடிவெடுத்திருந்தாள்.

சட்டெனச் சென்று அவித்து வைத்திருந்த மோதகமொன்றைத் தடவிப் பார்த்தாள் கலாவதி. அது மென்மையாகப் பதமாக இருந்தது. கவனமாகத்தான் மாவைக் குழைத்திருந்தாள். என்றாலும் திடீரென்றொரு சந்தேகம். மா பதம் பிழைத்திருந்தால் அம்மாவுக்குப் பிடிக்காமல்போய்விடுமே.

"என்னம்மா?" கலாவதியின் செய்கையைப் பார்த்து மகள் கேட்டாள். "ஒன்றுமில்லை சின்மயி, நீ மோதக அலுவலை ஒருக்காப் பார். நான் அம்மாவைக் குளிக்கப் பண்ணி அவவின் வேலையளைப் பாத்திட்டு வாறன். பொங்கல் படைச்சுக் கும்பிடேக்கை அவவும் கும்பிட வேணும்" கூறிக்கொண்டே கலாவதிதாயாரிடம்சென்றாள்.

சற்றுமுன் சின்மயி பிதிர்களுக்குப் படைப்பது பற்றிக் கூறியது அவளது இதயத்துக்குள் ஒலிப்பதுபோல் ஒரு பிரமை. அடுத்தமுறை மோதகம் செய்யும்போது அதை அம்மா சுவைத்துச் சாப்பிடுவாரோ என்னவோ?

அம்மா இப்போது ஒருகுழந்தை மாதிரித்தான் இருக்கிறார். சின்மயிக்குத் திருமணமாகி ஒரு குழந்தை பிறந்திருந்தால் இப்படித்தான் இருந்திருக்குமென அம்மாவின் செயல்களைப் பார்த்துக் கலாவதி பல சந்தர்ப்பங்களில் நினைத்திருக்கிறாள்.

ஆனால் அம்மா?

அம்மாவின் செயற்பாடுகளை நினைக்க அவளுக்குச் சிரிப்புத்தான் வந்தது.

"குளிப்பமே அம்மா?"

"நீ சுடுதண்ணியைக் கல. நான் மெல்ல மெல்ல வந்து குளிக்கிறன்"

"சுடுதண்ணி கலந்திட்டன். எழும்புங்கோ. போவம்."

"நான் என்ரை பாட்டுக்கு வருவன். நீ

சுவடி மூலை.....

தொடர்ச்சி...

பிடிக்கத்தேவையில்லை"

கலாவதியின் கையை உதறிவிடச் செல்லம் முயற்சித்தார். கையை விட்டால், தாயார் விழுந்துவிடக்கூடுமெனக் கலாவதியின் மனம் பதகளித்தது.

"என்னைக் குளிக்க வாக்கப்போறியோ? உங்களை, உங்கடை பிள்ளையளையெல்லாம் குளிக்க வாத்தனான் மறந்திட்டியளே? கொண்ணனும் இளையவளும் பிள்ளையளை இங்கை கொண்டந்து விட்டிட்டுத்தானே வேலைக்குப் போறவை. நாலுபேரையும் குளிக்க வாத்து. சாப்பாடு தீத்தி. நித்திரையாக்கி எல்லாம் செய்தனான். என்ரைபாடு எனக்குப் பாக்கேலும். வீணாய் நீயேன் கஸ்ரப்படுறாய்? நீ போய் பொங்கல் அலுவலைப்பார்."

செல்லத்தின் குரலில் கோபமும் கலந்திருந்தது.

அதன் பின்புலத்தில் இன்னும் ஏதோ உணர்வுக் கலவை கிடந்து உருக்காட்ட முடியாமல்...

வயோதிபத்தின் தவிப்போ?

"அங்கை எல்லா வேலையளும் முடிஞ்சுது: சின்மயி நிக்கிறாள் தானே. நீங்களும் குளிச்சிட்டு வந்தால், படைச்சுக் கும்பிடலாம்."

பேத்தியின் பெயர் கேட்டதும் செல்லத்தின் முகத்திலே முகிழ்த்தெழுந்த முறுவலின் மிகுதி காதில் விழுந்ததும் கருகிவிடுகிறது. அதென்னவோ தன்னை முன்னிலைப் படுத்துகிறார்களென்றால் அம்மா தட்டுப்பட்ட அட்டையாகி விடுகிறார். அவரும் மனிதப் பிறவிதானே? தன் பிள்ளைகள் தனக்கு முக்கியத்துவம் தரவேண்டுமென்ற ஆசை அடிமனதில் இல்லாமலிருக்குமா?

"கலாவுக்கு வேலையள் கூடிப்போச்சு. அவளுக்கு என்னைக் கவனிக்க எங்கை நேரம்"

தன்னுடன் வந்திருந்து கதைப்பவர்களிடம் செல்லம் இடையிடையே இப்படிக் கூறுவது அவள் காதுகளிலும் விழுந்திருக்கிறது. மற்றவர்களை விடாது கலாவதிதான் தன்னைக் கவனிக்க வேண்டுமென்று அம்மா விரும்புகிறாரோ? தன் விருப்பங்களை என்றுமே அவர் வெளிக்காட்டுவதில்லையே.

சென்ற மாதம் தங்கை லலிதாவின் மகளின் பிறந்த நாளன்று அம்மாவை நடுவிலிருத்திக் குடும்பத்தினர் எல்லோரும் சேர்ந்து போட்டோ ஒன்று எடுத்துக்கொண்டார்கள். அதில் அம்மாவை இருக்கவைக்கப் பட்ட பாடு இருக்கிறதே. அது ஒரு நீளக்கதை. ஆனால், படத்திலே அம்மாவின் முகத்திலே படர்ந்து ஒளிர்ந்த ஆனந்தம் வேறு கதை கூறியது.

"நான் வரவேணுமெண்டில்லை. நீங்கள் கும்பிடுங்கோ. நான் வரச் சுணங்கும். அதுமட்டும் காத்துக்கொண்டிராமல் கும்பிடுங்கோ"

இன்றும் அம்மாவின் அத்தனை மறுதலிப்புகளையும் புறந்தள்ளி அவரது வழிகாட்டுதலில் எங்கள் பொங்கல் வழிபாடு நடைபெற்று நிறைவெய்தியது.

"கொண்ணை வீட்டை பொங்கல் குடுத்துவிடேக்கை அங்கை ஏழெட்டுப்பேரெண்டதை மறந்திடாதை"

"லலிதா வீட்டிலை அவளின்ரை மாமி மச்சாளவையுமிருக்கினம். ஆகப்போகக்குடுத்துவிடு"

உற்றத்துக்கும் சுற்றத்துக்கும் பொங்கல் பங்கீடு செய்வதிலும் அம்மா அவ்வப்போது தன் மனதுக்குத் தோன்றியவற்றைக்கூறி உதவிக்கொண்டிருந்தார்.

"சின்மயி! அம்மம்மாவுக்குப் பொங்கல் குடுத்தியோ?"

"ஒருமாதிரி சாப்பிடப்பண்ணிப்போட்டன்"

வீட்டில் எல்லோரும் உணவருந்தி முடிந்து கொடுக்கவேண்டிய வீடுகளுக்கும் கொடுத்தனுப்பிவிட்டு ஓரிடத்திலிருந்து பத்திரிகையை எடுக்கவும் "அம்மா" என்ற அழைப்புடன் கண்ணம்மாக்கிழவி வந்தாள்.

"என்ன இப்பதான் வாறாய்?"

சிறிது நேரம் கதைப்பதற்கு ஒருவர் கிடைத்த சந்தோஷத்துடன் அம்மாதான் வரவேற்றார். இருவரும் கதை பேசிக்கொண்டிருக்க வெற்றிலை, பாக்கைக் கொடுத்துவிட்டு உள்ளே சென்றாள் கலாவதி.

"பனிக்குளிரும் வெய்யிலுமாகச் சரியாய்ச்சளி பிடிச்சிட்டுது."

கண்ணம்மா மூக்கை உறிஞ்சிக்கொண்டே கூறினாள்.

"தூதுவளமிலைத் துவையலரைச்சுச் சாப்பிடாதையன்?"

"தூதுவளையை எங்கை கண்டுபிடிக்கிறது?"

செல்லத்தின் கைமருத்துவ ஆலோசனைக்குக் கண்ணம்மாவிடமிருந்து இப்படிப் பதில் வந்தது.

"எங்கடை வடக்கு வேலி மூலையிலை படந்து கிடக்கு. போகேக்க புடுங்கிக்கொண்டு போவன்."

"இப்ப அது பட்டுப்போச்சுது அம்மம்மா.''

சின்மயி தற்போதைய நிலையைக் கூறியதும் செல்லத்துக்குக் கோபம் பொங்கி வந்தது.

"அந்த மூலிகையின்ரை அருமை தெரியுமே? வீட்டு மூலைக்கை கிடக்கிற எங்களைப் பாக்கிற மாதிரித்தான் அதையும் கவனிக்காமல் விட்டிட்டியள்."

சின்மயி மௌனம் காத்தாள்.

ஒரு வாழையிலையில் பொங்கலை எடுத்துக் கொண்டுவந்த கலாவதிக்கும் அது கேட்டது. பொங்கலைக் கண்டதும் "நானிப்ப சாப்பிடேல்லை" என்று மறுதலித்தாள் கண்ணம்மா.

"ஏனணை? இது சக்கரைப் பொங்கல்" என்று தொடங்கிய கலாவதியை மேலே பேசவிடாது "இல்லைப் பிள்ளை. நான் ரெண்டு, மூண்டு வீட்டை போய்வாறன். வயிறு நிறைஞ்சு கிடக்கு. உதைக் கட்டித் தந்தா பேரப்பிள்ளையளுக்குக் குடுப்பன்." எனக் கோரிக்கை விடுத்தாள் கண்ணம்மா.

"மோதகங் கிடக்கே பிள்ளை? நாலைஞ்சைக் கிழவிக்குக் குடுத்துவிடு." பொங்கலுடன் உள்ளே திரும்பிய கலாவதிக்குச் செல்லம் கூறினாள்.

இலையில் மேலும் பொங்கலை அள்ளி வைத்து விட்டு மோதகப் பெட்டியைத் திறந்தால் நான்கே நான்கு மோதகங்கள்தான் எஞ்சியிருந்தன. என்ன செய்யலாம்? ஒன்றிரண்டை வைத்துவிட்டுக் கொடுப்பதற்கு வாய்ப்பில்லை. நான்கு கொடுப்பதே குறைவாகத் தோன்றியது. எல்லோரும் சாப்பிட்டு விட்டார்கள்தானே என்றெண்ணிக்கொண்டு நான்கையும் வைத்துப் பொதி செய்தாள் கலாவதி.

"உங்கடை வீட்டு மோதகமெண்டால் பிள்ளையளுக்கு வலு பிரியம். அப்ப நான் போட்டு வரட்டே அம்மா"

இன்னும் நான்கைந்து மோதகங்கள் கொடுக்க முடியாதுபோய்விட்டதே என்ற பச்சாதாபத்தைக் கலாவதியுள் முளைவிடச் செய்துவிட்டுக் கண்ணம்மா போனாள்.

"எங்கடை மோதகத்துக்கெண்டுதான் அவள் வாறவள். அதுதான் குடுக்கச் சொன்னனான்."

"எங்கடை மோதகம் இண்டைக்கு உங்களுக்குப் பிடிச்சுதோ?"

அம்மாவின் வார்த்தைகள் அவளை இப்படிக் கேட்க வைத்தன.

"நீ என்னை இண்டைக்குக் கவனிச்சனியே?"

கலாவதி மகளைப் பார்த்தாள். சின்மயி கையை உதறியபடி "ஐயையோ குடுக்க மறந்திட்டன்" என்று தவிப்புடன் பதறினாள் நீள ஊசியொன்று கலாவதியைச் சுரீரென ஆழத் துளைத்தது. அதுதான் அவள் உயிர்நிலையோ?



கவிதை



திருமதி. றஜீவன் தர்மினி

யர்ழ். பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டத்தையும் காமராஜர் பல்கலைக்கழகத்தில் 'சமூகவியல்' பட்டத்தையும் கொழும்பு பல்கலைக்கழகத்தில் உளவியல், இதழியல் மனித உரிமைகள் டிப்ளோமா கற்கைநெறிகளையும் முழுமை செய்தவர். எழுத்தாளர், நடிகர், கவிஞர் என்று பல்துறைகளில் செயற்படுகிறார்.

எல்லா நாளும் இதுபோல் இல்லை...



துக்க நாளொன்றில் கசங்கிய
இமைகளோடு நானிருக்க
வாழ்வின் நீள் இரவொன்று துரத்தியது.
களைத்த கால்களைத் தனித்த கரங்களை
தன்னிருளின் விரல்களால் அளைந்தது.
மனதின் குருதிக் கறைகளைத் துடைத்தது.
தூக்கிச் செல்லப்பட்ட உடல் தரையெங்கும்
சிறகுகளை உதிர்க்க அறுந்த இரவின்
மிச்சத்தில்
சின்னக் கதைகள் ஒட்டிக் கிடந்தன.
முன்னொரு காலம் இம்மரங்கள்
இலைகளற்று வாழ்ந்தபோது
சிரிப்பைப் பிய்த்துப்போட்டு வழி போனேன்.
ஒரு முறுவல் சிந்த ஆசை தான்.
நோவு தரும் உணர்வாகி வதைக்கிறது.

களவெடுத்த காசைப்போல யாராவது அதை
மறைத்து வைக்க அப்படியொன்றும் பெறுமதியில்லையாம்.
அழகொழுகும் அவ்வோவியப் பெண்
உதடுகளிலிருந்து
பளபளக்கும் பூச்சைப்போல என் வாயில்
உறையவில்லை.
தசைகள் நைந்து போகின்றன.
இரத்தம் வற்றுகிறது.
உற்றுக் கவனிப்பவர்களை இரு புறமும்
கைகளை
விசுக்கித் துரத்துகிறேன்.
எப்போதாவது ஒரு நாள் உம்முகம் வந்து
மறைகிறது.

அப்போது மட்டும்,
சிரிப்பின் நுனியொன்றைச் சுழித்துவிட்டு
ஓய்கின்றன என் சொண்டுகள்.
"எல்லா நாளும் இது போல் இல்லை" அவன்
பாடுகிறான்.
நானோ சலித்துப்போன வார்த்தைகளை
எழுதி எழுதி இன்றோடு எத்தனையாவது
தடவையாகப் பைத்தியமாகிறேனோ?
தோன்றி மறைந்த கனவொன்றில்
முகம் புதைக்க விழைந்து
தேய்ந்த சுவடுகளைக் கண்கள்
மூடித்தேடத்தொடங்குகிறேன்.

ஈழத்தில் ஹைக்கூ கவிதை



கட்டுரை



க. பரணீதரன்

அல்வாயைச் சேர்ந்தவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உளவியல் பாட சிறப்புப் பட்டதாரி. 'ஜீவநதி', 'கடல்' சஞ்சிகைகளின் ஆசிரியராக இருக்கின்றார். இலக்கிய எழுத்துத் துறைகளோடு நின்றுவிடாது இசை நாடகங்களில் பல வேடங்களில் நடிப்பதிலும் கைதேர்ந்தவர்.

'கவிதை' என்பது கவிஞனின் உன்னதமான அனுபவத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் அடக்க முடியாத தூண்டல் என்பார்கள். கவிஞனிடம் தோன்றும் உன்னதமான அனுபவம் வடிவ மாற்றங்கள் கொண்டு காணப்படுகின்றது. கவிதையானது மரபுக்கவிதை, புதுக்கவிதை, கஸல் கவிதை, குறும்பா, மொழி பெயர்ப்புக்கவிதை, குறியீட்டுக்கவிதை, ஹைக்கூ எனப் பலவாறாக இன்று படைக்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றது. 'ஈழத்தில் ஹைக்கூ கவிதை' என்ற தலைப்பினூடாக ஈழத்தில் ஹைக்கூ கவிதையின் தோற்றம், வளர்ச்சி பற்றிய ஓர் அறிமுகக்கட்டுரையாகவே இந்தக்கட்டுரை அமைகின்றது.

ஹைக்கூ கவிதை தோற்றம் பெற்றது யப்பான் நாட்டிலாகும். ஆரம்பகாலத்தில் ஹைக்கூ கவிதையை 'ஹொக்கூ' என்று அழைத்தார்கள். ஹொக்கூ' என்று அழைக்கப்பட்ட ஹைக்கூ 'ஹைகை' என்று திரிந்து, ஹைக்கூ வாகப்பின்னாளில் அழைக்கப்படலாயிற்று. கவிதை வடிவில் மிகச் சிறியதாக விளங்கும் இந்தக் கவிதை வடிவத்தைத் தமிழில் துளிப்பா, கரந்தமிழ், விடுநிலைப்பா, மின்மினிக் கவிதை, வாமனக்கவிதை, அணில் வரிக் கவிதை எனப் பல்வேறு பெயர் கொண்டு அழைக்கின்றனர். இந்தியாவில் முதற் ஹைக்கூ தொகுதியை வெளியிட்ட கவிஞர் அமுதபாரதி, ஹைக்கூ பற்றிக் கூறுமிடத்து, "ஹைக்கூ கடுகளவில் சிறியதாயினும் பூமியளவு படர்ந்த விடயத்தை உள்ளடக்கியது" என்கின்றார். ஹைக்கூ கவிதையானது முதல் வரியில் 5 அசைகளையும் இரண்டாவது வரியில் 7 அசைகளையும் மூன்றாவது வரியில் 5 அசைகளையும் கொண்ட வடிவமாகக் காணப்படுகின்றது. புத்தமதத்தின் கிளைப்பிரிவான 'ஜென்' தத்துவத்தைப் பரப்புவதற்காக இந்தக் கவிதை வடிவம் உருவாக்கப்பட்டது எனச் சொல்லப்படுகின்றது. ஜப்பானியக் கவிஞர்களான மோரிடேகே (1473-1549), சோகன் (1465-1553) ஆகியோர் ஹைக்கூவின் முன்னோடிகளாகக் கருதப்படுகின்றனர். இவர்கள் இருவருக்கும் பின்னர் ஹைக்கூ கவிதைகளை ஹைக்கூவுக்கான தத்துவ மரபுடன் ஹைக்கூக்களைச் சிறப்புறப் படைத்ததோடு ஹைக்கூவின் தோற்றத்துக்கு வித்திட்டவர்களாகவும் மாட்சுவோ பாஷோ, யோசா பூசன், இஸ்ஸா, ஷிகி ஆகியோர் காணப்படுகின்றார்கள். ஜப்பானியர்கள் ஹைக்கூ கவிதைகளை விரும்பிப் படித்ததுடன் எழுதவும் ஆரம்பித்தார்கள். மக்கள் மனங்கவர் ஓவியங்களாகவே ஹைக்கூவை ஜப்பானியர் கருதினார்கள். திருமணப்பெண் பார்க்கும் படலத்தில் ஹைக்கூ எழுதத் தெரிந்த பெண்களை ஆண்கள் அதிகம் நேசித்ததாகக் கூறப்படுகின்றது.

தமிழில் ஹைக்கூ

ஜப்பானில் தோற்றம் கண்ட ஹைக்கூ கவிதையைத் தமிழிலும் படைத்திடலாம் எனப் பல தமிழ்க் கவிஞர்கள் முயன்று வெற்றிகண்டுள்ளார்கள். 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலே தான் தமிழுக்கு ஹைக்கூ கவிதை அறிமுகமானது. பாரதியார் தமிழ் கவிதைகளை ஹைக்கூ கவிதைகளுடன் ஒப்பிட்டு பேசியுள்ளதோடு, சுதேசமித்திரனில் ஹைக்கூ தொடர்பான கட்டுரையை 1916 ஆம் ஆண்டில் எழுதியிருக்கின்றார். அவரைத் தொடர்ந்து தமிழகத்துக் கவிஞர்களான சி. மணி, அப்துல் ரகுமான், சுஜாதா, தமிழ்நாடன், அமுத பாரதி, செந்தில்குமார், மித்ராபோன்றோர் இந்த வடிவத்தைச் சிறப்பாகத் தமிழில் புனைந்தனர்.

மிகச்சிக்கனமாக, மிகப்பொருத்தமான சொற்களைத் தெரிந்து இரண்டு வரிகளில் கூறி மூன்றாவது வரியில் ஒரு பிரமிப்பை ஏற்படுத்துவது இந்த வடிவத்தின் ஒரு சிறப்பு எனலாம். ஈழத்தில் இந்தக் கவிதை வடிவம் மிக அண்மைக்காலமாகவே அறிமுகம் பெற்றுள்ளது. ஜப்பானியக் ஹைக்கூ அப்படியே தமிழில் பிரதிபலிக்க வேண்டும் என்று நாம் எண்ண வேண்டியதில்லை. நமது நாட்டுச் சூழல், தட்ப வெட்பம், பண்பாடு, வழிபாட்டு முறைகள், பழக்கவழக்கங்கள், சமூக மட்டங்கள் எல்லாம் ஜப்பானிய முறையில் இருந்து மாறுபாடானவை, எனவே எமது நாட்டுச் சூழ்நிலை, பண்பாடு, பழக்க வழக்கங்களுக்கு ஏற்ப ஹைக்கூ கவிதைகள் படைக்கப்படுகின்றன.

ஈழத்தின் முதலாவது ஹைக்கூ தொகுதி

ஈழத்தில் முதலவாது ஹைக்கூ தொகுதியைத் தற்போது கல்வி அமைச்சில் தமிழ்ப் பிரிவின் பண்பாளராகப் பணிபுரியும் கவிஞர் சு. முரளிதரன் 'கூடைக்குள் தேசம்' என்னும் பெயரில் 76 ஹைக்கூ கவிதைகளை உள்ளடக்கி 1988 ஆம் ஆண்டில் மலையக வெளியீட்டகத்தின் வெளியீடாக வெளியிட்டிருந்தார். மலையக மக்களின் அவல வாழ்வைப் பிரதிபலிக்கும் பல கவிதைகளை இந்த நூல் கொண்டமைந்துள்ளது. இந்தத் தொகுப்பில் அமைந்துள்ள பல கவிதைகள் ஹைக்கூ கவிதைக்குரிய மரபைத்தவற விடாதவையாகக் காணப்படுகின்றன. மலையக மக்களின் அவல வாழ்வைச் சித்திரிக்கும் சில கவிதைகள்:

மண்ணை மூடி மறைக்கும்
தேயிலைச் செடியின் கீழ்த்தடங்கள்
உறை பாதச்சுவடுகள்

கூடையைக் கனக்க
கனக்கச் சுமந்து சென்றார்கள்
உள்ளே இந்த தேசம்

தேயிலைக்காட்டு துயர்முச்சில்
சரிந்தன மனிதங்கள்
நின்றன மரங்கள்

ஈழத்தின் முதல் ஹைக்கூ இதழ்

கல்முனை புதிய கலைஞர் வட்டத்தினரின் முன்னெடுப்பில் 1993 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் எஸ். எம். எம். றாபீக்கை ஆசிரியராகக் கொண்டு 'புள்ளி' என்னும் ஹைக்கூ இதழ் வெளியானது. இதுவே ஈழத்தில் முதன் முதலில் வெளியான ஹைக்கூ கவிதைக்கான இதழாக இன்று வரை அறியப்படுகின்றது. "இது ஹைக்கூ கவிதைக்காகவே வெளிவந்த பருவ கால வெளியீடு. ஹைக்கூவின் தத்துவார்த்தக்கருத்துக்களையும், அதன் அமைப்பு முறைகளையும் அறிந்தவர்கள், அறிய முயற்சிப்பவர்கள் எவரும் புள்ளியில் எழுதலாம்" என்ற ஆசிரியர் குறிப்புடன் இந்த இதழ் வெளியானது. அபுரஃப்ஸன்ஜானியின் "புள்ளிக்குள் உலகைக்காட்டும் கண்ணாடி" என்னும் ஹைக்கூ தொடர்பான சிறு கட்டுரையும் எம். எச். எம். ஸம்ஸ், மேமன்கவி, கவிஞர் இக்பால் ஆகியோரின் ஹைக்கூ குறித்த சிறு விளக்கமும், 5 ஜப்பானிய ஹைக்கூக்களும், ஆர். எம். நௌஸாத் (6 கவிதைகள்), மருதூர் மைந்தன், அபு இன்ஸாம், என். ஏ. தீரன், வாழை அமர், ஜனுஸ் ஸலாம் ஆகியோரின் தலா ஒரு கவிதையையும் தாங்கி இந்த இதழ் வெளியானது. பலரது எதிர்பார்ப்பைப் பெற்ற இந்த இதழ் முதலாவது இதழுடனேயே தனது வருகையை நிறுத்திக் கொண்டமை ஈழத்து இலக்கிய உலகுக்கு துரதிஷ்டமே.

ஈழத்தில் இருந்து வெளியான ஹைக்கூ கவிதைத் தொகுதிகள்

1. கூடைக்குள் தேசம் (1988) - சு. முரளிதரன்
2. கல்லறைக்குள் கதிரவன் (1990) - சார்ள்ஸ்
3. ஹைக்கூ கவிதைகள் (1998) - கப்டன் மலரவன்
4. உயிர்ச்சிறகு (2001) - ஒலுவில் எம். பாயிஸ்
5. மனசின் பிடிக்குள் (2001) - பாலரஞ்சனி சர்மா
6. பச்சை இறகு (2001) வேல்ணையூர் பொன்னண்ணா
7. நுங்கு விழிகள் (2007) - இ. சு. முரளிதரன்
8. வானவில் (2007) - பெரியஐங்கரன்
9. அம்மா என் ஹைக்கூ (2007) - விக்னா பாக்கியநாதன்
10. இயற்கை இயல்பு (2013) - பஸ்லி ஹமீட்
11. நறுக் (2016) - மொழிவரதன்
12. கவிநுட்பதுளிப்பா (2016) - பாயிஸா நௌபல்
13. - அட்சயன்

போராளிகளின் ஹைக்கூ தொகுதிகள்

சார்ள்ஸ், கப்டன் மலரவன் ஆகிய இருவரும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தம்மை இணைத்துத் தமிழருக்காய் உயிர் நீத்த மறவர்கள். 20 வருடங்களே இவ்வுலகில் வாழ்ந்த மலரவனின் எழுத்துச் சாதனை அளப் பெரியது. காசிப்பிள்ளை விஜித்தன் என்னும் இயற்பெயருடையவர். பிரபல பெண் எழுத்தாளர் மலரன்னையின் இளைய புத்திரனான மலரவன் சென். ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவன். போருலா, புயற்பறவை ஆகிய நாவல்களையும், 'என் கல்லறையில் தூவுங்கள்' என்னும் கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள் அடங்கிய நூலையும் வெளியீடு செய்தார். 40 ஹைக்கூ கவிதைகளைக் கொண்ட தொகுதியாகக் கப்டன் மலரவனின் ஹைக்கூ தொகுதி வெளியானது. போர்க்காலத்தைப் பிரதிபலித்த பல ஹைக்கூ கவிதைகளை உள்ளடக்கி இந்தத் தொகுப்பு வெளியானது. போராட்ட காலத்தை மையப்படுத்திய இவரது ஹைக்கூக்கள் தனிச்சிறப்பு மிக்கனவாய் காணப்பட்டன. போராளிகளின் அர்ப்பணிப்பை:

போரிடும் போராளியை அழையாது
போகிறான் ஊனமான புலி வீரன்
கங்கு மட்டையை ஊன்றிக் கொண்டு

எனவும், கரும்புலிகள் தினத்தை நினைவு கூர்ந்து





ஈழத்தில் ஹைக்கூ கவிதை...

எல்லாக் கடலும் குமுறியிருக்க
வல்லைக்கடல் மட்டும் தூங்கியது
'இன்று கரும்புலிகள் தினமாம்

இவ்வாறாகப் பல போர்க்காலக் கவிதைகளை உள்ளடக்கிய தொகுப்பாக மலரவனின் தொகுப்புக் காணப்படுகின்றது. கவிதை உலகில் நன்கு அறியப்பட்ட பிறிதொரு படைப்பாளியான சார்ள்ஸ் அவர்கள் 4கவிதைத் தொகுதிகளை வெளியிட்டவர். அவரது178கவிதைகளைஉள்ளடக்கிய'கல்லறைக்குள் கதிரவன்' என்னும் தொகுப்பு வசந்தம் வெளியீடாக வெளியானது. இரண்டு பிரிவாகத் தொகுப்பைப் பிரித்து 'உனக்குள்ள உள்ளிருப்பு'(77கவிதைகள்), 'இழப்புகளை இழப்போம்'(101கவிதைகள்) எனப் பல கவிதைகளையும் உள்ளடக்கி இவரது ஹைக்கூ தொகுப்பு வெளியானது. போர்க்கால வாழ்வு, மக்கள் பட்ட துன்பங்கள், அரசின் கொடூர முகம், ஈழத்தமிழரின் சமூக அரசியல் பிரச்சினைகள் என்பவற்றை முன்னிறுத்தியவையாக இவரது ஹைக்கூ கவிதைகள் அமைந்தன.
ஆட்சேர்ப்புக்கான பரப்புரைகளை விடுதலைப்புலிகள் மேற்கொண்டு வந்ததை நாம் அறிவோம். அதைப் பின்வருமாறு ஹைக்கூ ஊடாக சார்ள்ஸ் குறிப்பிடுகிறார்.

காற்றுள்ள போதே
தூவிக் கொள்ளுங்கள்
விடுதலைப் பிரச்சாரம்

போர்க்காலத்தில் இங்குவாழ, துணிந்துபோராடத்தற்துணிவு இல்லாத நம்மவர்களை மிக வன்மையாக கண்டிக்கும் ஹைக்கூவாக,

விமானத்திலேறி விடைபெறும் நண்பா
தேசத்தை விட்டக்லும் துரோகம் உனக்குமா?
மீள வராதே நம் சுதந்திர மண்ணுக்கு

என்கின்றார். இவ்வாறாகப் பல ஹைக்கூக்கூடாகச் சமூக யதார்த்தங்களையும் சார்ள்ஸ் வெளிப்படுத்தியுள்ளார். இலகுவாகமக்களுக்குக்கருத்துக்களைச்சொல்லுவதற்கான ஒரு ஊடகமாகத் தான் ஹைக்கூ கவிதைகளைப் பயன்படுத்துவதாகச் சார்ள்ஸ் தனது முன்னுரையில் குறிப்பிடு கின்றார்.

புலம் பெயர்ந்த நம்மவர்களின் ஹைக்கூ தொகுப்புகள்

புலம்பெயர்ந்துடென்மார்க்கில்வசித்துவரும்வேலணையூர் பொன்னண்ணாவால் 'பச்சை இறகு' எனும் 109 ஹைக்கூ கவிதைகளை உள்ளடக்கிய தொகுப்பு வெளியாகியுள்ளது. ஈழத்துப் போரின்உக்கிரம், அரசியல் கொடுமைகள், சமூக அடக்குமுறைகளை அவரது ஹைக்கூக்கள் பதிவு செய்துள்ளன. அரசின்கொடிய முகங்களை இவரதுபலஹைக்கூக்கள் வெளிப்படுத்தின.

சிங்கள இறப்பர்த் தோட்டப் பொம்மை
பட்டாடையோடு
வன்னியில் தமிழன் கோவணத்தோடு

வெட்டிக் கொல்லும் போட்டி
ஒலிம்பிக்கில் நடந்தது
தங்கம் அனைத்தும் ஸ்ரீலங்காவுக்கே

கொழும்பு பிணப்பெட்டிக் கடைக்காரன்
படைமேல் வழக்கு
வன்னிக்காய் ஆடர் இல்லையென்று

போன்ற பல கவிதைகள் தமிழர்களின் அவல வாழ்வைப் பிரதிபலிப்பனவாய் வெளியாகியுள்ளன. ஜேர்மனியில் வசித்து வரும்விக்னாபாக்கியநாதன்'அம்மாஎன்ஹைக்கூ'என்னும் 220ஹைக்கூகவிதைகள்உள்ளடங்கியதொகுதியைவெளியிட்டுள்ளார். இவரதுஹைக்கூக்கள்வறுமையின்கொடுமை, ஒழுக்கச் சீர்கேடுகள், ஜேர்மனிய தமிழர் வாழ்வு, பெண்ணியக் கருத்துகள், இயற்கையின் வனப்பு எனப் பல்வகைமை சார்கருப்பொருள்களைக்கொண்டுள்ளன. வெளிநாட்டில்கற்பு பற்றி,

ஜேர்மனியக் கல்லூரிகளிலே
மாணவர்களின் கூட்டுப் படிப்பு
கவலைப்படாத கற்பு
என்கின்றார்.
இந்தஇரண்டுஈழத்துப்படைப்பாளிகளுமேஈழத்தில்இருந்து புலம்பெயர்ந்துவாழ்ந்துவருபவர்கள். இருவரதுதொகுதிகளிலும் பல சிறந்த ஹைக்கூ கவிதைகள் காணப்படுகின்றபோதிலும் ஹைக்கூ வரம்பைமீறியவையும் காணப்படுகின்றன என்பது குறிப்பிடப்பட வேண்டியது.

இ.சு.முரளிதரனின் 'நுங்கு விழிகள்'

இலக்கியத்தின்பல்வகைமைகளிலும்தேர்ச்சிமிக்கஇ.சு.முரளிதரனின்60ஹைக்கூகவிதைகளைஉள்ளடக்கி2007ஆம் ஆண்டில் நுங்குவிழிகள் வெளியானது. ஈழத்தில் இருந்து வெளியான ஹைக்கூதொகுதிகளில்ஹைக்கூவுக்குரியசகல கட்டமைப்புக்களுடனும்வெளியானதொகுப்பாகஇ.சு.முரளிதரனின் நுங்குவிழிகள் காணப்படுகின்றது. போர்க்கால நெருக்கடிவாழ்வுக்குள்வடபுலத்துத்தமிழர்களதுஅவலநிலை இவரதுஹைக்கூக்கள்பலவற்றில்வெளிப்படுகின்றன. நுங்கு விழிகளில் உள்ளடங்கிய ஒவ்வொரு கவிதைகளதும் இறுதி வரியை வாசிக்கும்போது ஏற்படும் அதிர்வும் பிரமிப்பும் வாசகனுக்கு நல்லதொரு வாசிப்பு அனுபவமாக அமையும். பிரமிக்க வைக்கும் அவரது சில ஹைக்கூக்கள்:

ஓய்வு பெற்ற இராணுவம்
உறுத்தும்
மகளின் பள்ளிச்சீருடை

தெருமணலில்
சப்பாத்துக் காலடிகள்
வெறை இழந்ததோ கிராமம்

வசந்த காலக் காவலரண்
பட்ட மரத்தில்
குஞ்சிழந்த குயில்

நாய் குறைக்கும் இரவு
திருக்கிடும் தென்னாய்குருத்துகள்
விடியலின் தோரணமா?

இ.சு.முரளிதரன் தனது ஒவ்வொரு கவிதையில் இடம்பெற்ற சொற்களையும்வாசகர்மனதையதார்த்தபூர்வமாகத்தைக்க வேண்டும் என்னும் நோக்கோடு படைத்துள்ளார் என்பதை இவரது தொகுதியை முழுமையாகப் படிக்கும் வாசகர்கள் புரிந்து கொள்வார்கள்.

முதற் பெண் ஹைக்கூ கவிஞர்

ஈழத்துப்பெண்எழுத்தாளர்கள்தமதுஎழுத்தாளுமைகளைப் பல்வேறுபரிமாணங்களில்சாதனையாகநிகழ்த்திவந்தபோதும் ஹைக்கூ எழுதுவதற்கு எவரும் முன்னிற்கவில்லை. இந்த நிலையில் ஈழத்தில் முதன் முதலில் வெளியான பெண் எழுத்தாளரின்ஹைக்கூதொகுதியாகபாலரஞ்சனிசர்மாவின் 'மனசின் பிடிக்குள்' தொகுப்பு 50ஹைக்கூ கவிதைகளை உள்ளடக்கியகையடக்கமானநூல்வடிவமாகவெளியிடப்பட்டுள்ளது.
இ.சு.முரளிதரனின்ஹைக்கூதொகுதிபோன்றுஇந்தத்தொகுதியில்உள்ளபலகவிதைகள்ஹைக்கூகவிதைக்குரியவரம்புடன் படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இயற்கையுடனான உரையாடலாக இவரது பல கவிதைகள் இடம்பெறுகின்றன. இடையிடையேமலையகமணமும்இவரது கவிதைகளில்கமழ்கின்றது. இவரதுசிலகவனத்துக்குரிய கவிதைகள்:

நீலம் பாரித்தும்
மரணிக்கவில்லையே
வானம்!

வெள்ளி எல்லை
இயற்கைக்குப் போட்டது
நீயா நிலவோ?

இதர தொகுப்பு முயற்சிகள்

ஒலுவில் எம் பாயிஸ், 'உயிர்ச்சிறகுகள்' என்னும் தலைப்பில்178ஹைக்கூகவிதைகளைஉள்ளடக்கிய தொகுப்பை வெளியிட்டுள்ளார். இவரது பல கவிதைகளிலும்ஹைக்கூவின்அமைப்புச்சிறப்பாகக்காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. 240 ஹைக்கூ கவிதைகளைஉள்ளடக்கிமிகஇளம்வயதில்பெரியஜங்கரன், 'வானவில்' என்னும் ஹைக்கூ தொகுப்பை வெளியிட்டுள்ளார்இந்தத்தொகுப்பில்தமிழுக்குவளம்சேர்க்கும் வகையானபலஹைக்கூகவிதைகள்உள்ளடங்கியுள்ளன. இவரால்கவிதைகளில்கையாளப்படும்குறியீட்டு வடிவம் சிறப்பானது. இன்றைய எழுத்தாளர்களின் பரிதாப நிலையைத் தனது ஹைக்கூ வாயிலாக:

புத்தகம் வெளியிட்டவன்
பரம ஏழையானான்
பாழ்பட்ட தேசம்
என இன்றைய யதார்த்தத்தைக் கூறுகின்றார்
பிரபலமலையகஎழுத்தாளர்மொழிவரதன்51கவிதைகளை உள்ளடக்கி'நறுக்'என்னும்ஹைக்கூதொகுதியைவெளியிட்டுள்ளார். இவரதுஹைக்கூகவிதைகள்இவரதுஅனுபவத்தின் வெளிப்பாடாகவும்மிகச்சிக்கனமான மிகப் பொருத்தமான சொற்களைப் பயன்படுத்திய ஹைக்கூ கவிதைகளாகவும் காணப்படுகின்றன. இவரது ஹைக்கூ கவிதைகளில் மீறிய பெத்தை துயரம், அரசமைப்பு மாற்றம், மேல் கொத்மலைத் திட்டம், உமா ஓயாத்திட்டம், ஆட்சி மாற்றம், தேசிய அரசு பற்றியஹைக்கூக்கள்மிகஅழகாகச்செதுக்கப்பட்டிருக்கின்றன.

முன்னுரையில் சு.முரளிதரன் குறிப்பிடுவதுபோல இந்தத் தொகுப்புக்கானகனதியைமேற்கூறப்பட்டகருப்பொருள்களில் எழுதப்பெற்றஹைக்கூக்கள்மெருகூட்டுகின்றன.உதாரணமாக:

அறுவைச் சிகிச்சைக்கு வெற்றி
நோயாளி இறப்பு
உமா ஓயாத்திட்டம்

ஜப்பானிய ஹைக்கூ இலக்கணத்துள் புதைந்து வெளியாகியுள்ள மற்றொரு ஹைக்கூத் தொகுப்பாக பஸ்லி ஹமீத்தின் 'இயற்கை இயல்பு' 100ஹைக்கூ கவிதைகளை உள்ளடக்கி வெளியாகியுள்ளது. இவரது கவிதைகள் அகம், புறம், விரிவு, விளக்கம்யாவற்றையும்உணர்த்திநிற்பனவாய்காணப்படுகின்றன. உதாரணமாக:

வேலிக்குள் இருக்கும் மரம்
வீதியில்கூடப் படர்ந்திருக்கிறது
நீண்டிருக்கும் கிளைகள்

கவிநுட்பம் என்னும் புனைபெயரில் எழுதி வரும் பாயிஸா நௌபல்சமூகம், பெண்களின் அவலநிலை, அன்றாடவாழ்க்கையின்பிரதிபலிப்புகள், இயற்கை, காதல், சமூகஅவலங்கள் என்பவற்றை உள்ளடக்கிய பல கவிதைகளை இவரது 'கவிநுட்ப துளிப்பா' எனும் நூலில் உள்ளடக்கியுள்ளார்,
திருகோணமலையில்இருந்துஅட்ஷயன்என்னும்புனைபெயரில் எழுதும் கோபி ரமணன் 'இமைப் பொழுதில்' என்னும் தரமானதொருஹைக்கூகவிதைத்தொகுப்பையும்வெளியிட்டுள்ளார். உதிரியாகப் பலர் ஹைக்கூ கவிதைகளை எழுதி வந்தாலும் யாழ்.சபேசன், கப்டன் ஜெயசீலன், ஆர்.எம்நௌசாத் போன்றோரின் ஹைக்கூ கவிதைகளும் குறிப்பிடத் தக்கன. இவர்களதுஹைக்கூகவிதைகள்நூலுருப்பெறவில்லை. அத்துடன் ஹைக்கூ தொடர்பான கட்டுரைகளை மனோன் மணிசண்முகதாஸ், த.கலாமணி, இ.இராஜேஸ்கண்ணன், மேமன்கவி, ஏ.இக்பால், சி.ரமேஷ்போன்றவர்கள்சஞ்சிகைகளில்எழுதியுள்ளார்கள். ஷம்ஷின் 'ஹைக்கூ எழுதுவது எப்படி?' என்னும்சிறுநூலும்ஈழத்தில் இருந்துவெளியாகி இருப்பது குறிப்பிடத்தக்கது.

ஈழத்தின் முதற் ஹைக்கூ சிறப்பிதழ்

ஜீவநதியின் 110ஆவது இதழ் ஈழத்தின் முதற் ஹைக்கூ சிறப்பிதழாக, ஹைக்கூ தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்பவர்களுக்கான கையேடாக வெளியாகியது. இதில் ஹைக்கூ கவிதைதொடர்பானகட்டுரைகள், இ.சு.முரளிதரன், சு.முரளிதரனின் நேர்காணல்கள், ஈழத்தில் இருந்து வெளியான 12ஹைக்கூ தொகுப்புகள் பற்றிய விமர்சன கட்டுரைகள்,



ஈழத்தில் இருந்து வெளியான 11தொகுப்புகளில் அடங்கியுள்ள அனைத்துக் கவிதைகள்(1332) என்பவற்றை உள்ளடக்கி வெளியாகியிருந்தது.

முடிவுரை

ஈழத்தைப்பொறுத்தவரையில்ஹைக்கூகவிதையைஎழுதுபவர்கள் மிகச்சிலரேயாயினும் தரமான பல ஹைக்கூ கவிதைகள் ஈழத்தில் இருந்து வெளியாகிய வண்ணமுள்ளன. சிலரதுகவிதைகள்விடுகதைகளாகவும்,வினாவிடையாகவும் அமைகின்றபோதிலும் சிறப்பான ஹைக்கூ தத்துவங்களை எமதுநாட்டுச்சூழலுக்குத்தக்கவகையில்வெளிக்கொணரும் பல ஹைக்கூ கவிதைகள் வெளியாகின்றன.

வழுவல?

கட்டுரை



ஐ. சாந்தன்

ஐயாத்துரை சாந்தன் சுதுமலையைச் சேர்ந்தவர். சூழல்பொறியியலைத் தொழிலாய்க் கொண்டவர். ஆங்கில இலக்கிய முதுகலைமாணி, சூழல் முகாமைத்துவ விஞ்ஞான மாணிஎனப்பல்துறைஆளுமையுடையவர். தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும்எழுதும்ஈழத்தின்முக்கிய ஆளுமை. சிறுகதைகள், நாவல்கள், ஆய்வுக்கட்டுரைகள்எனப்பலநூல்களைவெளியிட்டுள்ளார். மிகுந்த சொற் சிக்கனத்தோடும் சுவாரசியத்தோடும்எழுதுபவர்.

தமிழ் என்பது எமது மரபு, அடையாளம், இருப்பு, சரித்திரம், எதிர்காலம், எல்லாமே என்பதால் அது கலத்தல், அடையாளமிழத்தல், அவற்றின்விளைவாய்அழிய நேர்தல் என்பதற்கான ஆபத்துக்களையிட்டு நாம் எச்சரிக்கையடைதல் இன்றைய அவசர தேவையாகிறது.

எமதுமொழித்தரத்தில்கீழ்நோக்கியமுனைப்புத்தென்படுகையில், தமிழறிஞர்களின் மௌனமும் கவலை அளிப்பதாக உள்ளது. இந்தப் பேரலையில் எதிர் நீச்சல் போடுவதெவ்வாறென அவர்கள் நினைத்துமிருக்கலாம்.

ஒரு நீண்ட நாள் வாசகன் என்கிற முறையிலேயே என் எண்ணங்களும், கவலைகளும் இங்கு பகிரப்படுகின்றன. இந்தக் கருத்துக்கள் விதிகளையும் இலக்கணத்தையும் வலியுறுத்துகிற வரண்ட நோக்குகள் என எவரும் எண்ணிவிடலாகாது.

மாறாக, மொழிப்பயன்பாட்டை அறிவின் அடிப்படையில்நாம் சற்றுஅணுகினாலென்ன? என்கிற அக்கறையில்எழுந்தவை இவை. இவற்றுக்கு மாற்றுக் கருத்துக்கள் இருக்கலாம். இருக்கும். ஒரு விரிவான கவனம், கலந்துரையாடல், ஒத்த செயற்பாடு என்பனவே தேவை.

இந்தக் கட்டுரையில்கூட தவறுகள் இருத்தல் சாத்தியம் எனினும் செம்மை நோக்கிய கூட்டு முனைப்பு எம்மிடையே உரு வாகவேண்டும் என்கிற எண்ணத்துடன் எழுதப்பட்டது இது. தமிழ் எனக்கு மட்டும் சொந்தமல்ல. எனக்கும் சொந்தம்.

▬ ▬ ▬

எங்கேயாவதுஒருஅரசஅல்லதுஇராணுவஅறிவிப்புப்பலகையில் ஒரு எழுத்துப் பிழையைக் கண்டால், அதையிட்டுக் கவலை கொள்கிறோம். அந்தக் கவலை நியாயமானதுதான், தவறில்லை. அதைப் படமெடுத்துப் போட்டுக் குறைப்பட்டு, முறைப்பட்டுக் கொள்ளும் நாம் எத்தனை தவறுகளை அறிந்தும் அறியாமலும் இழைக்கிறோம்?

மொழி தெரியா அயலவர் விடும் பிழை ஏற்படுத்தும் பாதிப்பு தற்காலிகமானது. அது தமிழைப் பாதிக்கப்போவதில்லை. ஆனால், தவறான வழக்குகளை நாமே தொடர்வது நிச்சயம் எமது மொழியில் பாதிப்பை ஏற்படுத்தும்.

▬ ▬ ▬

எழுத்துக்களிலேயே குழம்புகிறோம். 'ஜ' என்பது வடமொழி எழுத்துத்தான் எனினும், தவிர்க்க இயலாதவாறு தமிழில் இடம்பிடித்துவிட்டது. 'ஜ்'வுக்கும் 'ஜீ'க்கும் உள்ள வித்தியாசம் சற்றுச்சிக்கலாக பலருக்குப்படுகிறது. சரி, போகட்டும். எம்மில் எத்தனை பேருக்கு 'ஜ'க்கும் 'ஜ'வுக்கும் வேறுபாடு தெரியும்?. இளம்பிள்ளைகள், மாணவர்கள்மட்டத்தில்மட்டுமன்றிப்பெரியோர், படித்தோர், எனப் பலர் மத்தியிலும் பரவலாகக்காணப்படும் குறைபாடு இது. எனது பெயரின் முதலெழுத்தான 'ஜ' என்பதை 'ஜ' என்றெழுதிய அரசு அலுவலர்கள் பலருடன்மல்லுக்கட்டிய அநுபவம் எனக்குண்டு.

'ந்' என்னும் எழுத்தின் உண்மையான உச்சரிப்பு 'nth' எனப் பலரும்நினைக்கிறார்கள். இந்த'நினைக்கிறார்கள்'என்றசொல்லைப்பார்த்தாலே புரியும் அது 'in'. 'ந்' ஐத் தொடர்ந்து 'த' வருகையிலேயேஅது'nth'ஆகிறது. இப்படியிருக்க, நாகரிகமென்றோ, சிக்கனம் கருதியோ 'சந்திரன்' என்ற பெயரை 'சந்ரன்' ஆக்குகிறார்கள். அதுஏறத்தாழ'சன்ரன்' தானேயொழிய 'சந்திரன்' அன்று. இதையொட்டி, 'சிந்மய' என்பதை ஆங்கிலத்தில் 'Chinthmaya' என எழுதுதல் இயல்பாகிறது.

▬ ▬ ▬

'விஷேடம்'என்றசொல் பரவலாகப்புழக்கத்தில் உள்ளது. இது உருவாகிய விதம் சுவையானது. வடமொழி எழுத்துக்களைத் தவிர்த்துத் தமிழ்எழுத்துக்களைப் பயன்படுத்தும்ஆர்வம் மூன்று, நான்கு பத்தாண்டுகளுக்கு முன்னர்முனைப்பாகஇருந்தவேளை'விசேஷம்' என்கிறசொல்லை'விசேடம்' என்று எழுதலானார்கள்.

அவ்வேளையில் வானொலியில் முன்னணி அறிவிப்பாளராக விளங்கிய பெண்மணி ஒருவர் தெரிந்தோ தெரியாமலோ, அல்லதுதன்பாணிஎன்றோ, அதனை'விஷேடம்'என உச்சரிக்கலானார். அதாவது அவர் 'ஷ'வையும் விடாமல், 'ட'வையும்வைத்துக்கொண்டார். இது அவருக்குச்சிலதடவைகள் சுட்டிக் காட்டப்பட்டபோதும், தன்னுடைய 'விஷேட' உச்சரிப்பை விடுவதற்கு அவர் தயாராயில்லை. ஊடகங்கள் மக்களைப் பாதிப்பது இலகு. அதிலும் அது அந்தக் கால வானொலியின் 'விஷேடம்' வேரூன்றிவிட்டது.

▬ ▬ ▬

தமிழ் 'ப' எல்லாம் ஆங்கிலம் அல்லது வடமொழியில் 'ba' என வருமென்றோ, அல்லது 'ப' வை 'ba' என்றால்தான் நாகரிகமென்றோ கருதும் பலரால், Bathma, Branavan, Brema எல்லோரும் உருவாகித் தமது வடமொழிப் பெயர்ப் பொருளை இழப்பது வேடிக்கையானது. இதேபோல், 'ய' என்பது 'ஜ' ஆகுமென்கிற மயக்கத்தில் 'நாஜக'மான நாயகங்கள் உளர். அப்படியே'க'ஒலியெல்லாவற்றையும்'ஹ'என்றெழுதுவதில்எங்கள் தெருக்களில் வேட்டைக்காரர்கள் ஓடித்திரிவதுடன் அடிக்கடி விபத்துகளையும்

ஏற்படுத்துகிறார்கள். இந்தியத்துடுப்பாட்டஅணித்தலைவருக்கு எங்கள் பிரசுரங்கள் அவ்வப்போது 'தூயவர்' எனப் பெயர் கொடுக்கின்றன. வடமொழியிலும்ஆங்கிலத்திலும்கூட 'ப', 'ச', 'க'மற்றும்'ய'ஒலிகள்உள்ளனஎன்பதுஉணரப்படவேண்டும்.

▬ ▬ ▬

இந்த இடத்தில், தற்காலத் தமிழ் எழுத்துக்களைப் பொறுத்தளவில் அடிப்படைப் பற்றாக்குறையாகத் தென்படும் சில ஒலிகளுக்கான எழுத்துக்களை உருவாக்குவது பற்றியும் சிந்திக்கலாம். இன்னொருகோணத்தில், காலத்துக்குக்காலம் வரி வடிவங்கள் மாறி வந்திருப்பதை மனதில் கொண்டு, ஆங்கில எழுத்துக்களைப்பின்பற்றுவது பற்றியும்நாம்யோசிப்பது தவறாகாது. இதனால்எழுத்துக்களின்எண்ணிக்கைஏறத்தாழப் பத்திலொரு பங்காகக் குறைவதுடன், மொழிப் பயன்பாடு எந்த விதத்திலும் பேச்சிலோ, எழுத்திலோ பாதிக்கவும் படாது. இந்தமுறைஏலவேகைபேசிகளிலும், கணனியிலும்செய்திப் பரிமாற்றங்களுக்காக எம்மவர்களால் பின்பற்றப்படுகிறது என்பதும் கவனிக்கத்தக்கது.

▬ ▬ ▬

பழக்கத்தின்மூலம், பலபிழையானபயன்பாடுகள்நுழைவது நாளாந்தம்நடக்கிறது. 'நடத்தல்''நடாத்தல்'ஆகிறது. மாதுக்கள், வளமுடன்போன்றசொற்பயன்பாடுகள்புழக்கத்துக்கேவந்துவிட்டன.

நலனோம்பு- நோன்பு, பதாகை -பதாதை, கிழி -கிளி, சுதாரித்தல்-சுதாகரித்தல், லாகவம்-லாவகம்குழப்பங்கள்தொடர்ந்துகொண்டேதான்போகின்றனஅணிற்பிள்ளை, கிளிப்பிள்ளை, தென்னம்பிள்ளைஎன்பதுமரபு. ஆனால்இப்போதுதென்னம்பிள்ளை, தென்னங்கன்று ஆகிவிட்டது.

பூப்புப் புனித நீராட்டு, பூப்புனித நீராட்டு ஆகிவிட்டது. குண்டும் குழியும்என்பதைக்குன்றும்குழியும்எனத்திருத்திவிட்டோம், மலை வேம்பை, 'மகோகனி'யாகவும் பள்ளிக்கூடத்தை 'ஸ்கூலா'கவும் ஆக்கிவிட்டோம். குவளையும் பேணியும் சில்வர் ஆகிக் கனகாலம். காகங்கள் பறக்கிறது, குயில்கள் கூவுகிறது என எழுதுதல் இயல்பாகவே ஆகிக் கொண்டிருக்கிறது. இவையெல்லாம்எடுத்துக்காட்டுகள்மட்டுமே. இன்னும்இப்படி எத்தனையோ.

அரைநூற்றாண்டுக்குமுன்னரே'அக்கிராசன'ரைத்'தவிசாள'ராகவும், 'காரியதரிசி'யைச்செயலாளராகவும்ஆக்கிவிட்டிருந்தோம். எனினும் இப்போது 'திரு' வுக்குப் பதில், இந்தியாவிலேயே கூடக் காலாவதியாகி விட்ட 'ஸ்ரீமான்' தலைகாட்டமுயல்வதை என்னென்பது?

துரோகம்எனப்பொருள்தரும்'இரண்டகம்'என்கிறசொல்லின் பொருள்'இரட்டைநிலை'எனக்கொள்ளப்படுகிறது. எழுத்தாளர்கள்கூட இப்படிக் கருதுவது தெரிகிறது.

'பிள்ளைபிறந்திருக்கிறது'என்பது'பிள்ளைகிடைத்திருக்கிறது' என்றும்; 'செய்யவுள்ளோம்', 'செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது' என்பன 'செய்ய எதிர்பார்க்கிறோம்', 'செய்ய எதிர்பார்க்கப்படுகிறது'எனவும்வழங்கமுற்படுதல்சிங்களமொழிச்செல்வாக்கால் விளைந்தவை.

▬ ▬ ▬

அச்சில் இடம்பெறும் வசன ஆக்கங்களில் கூட நெருடலான தவறுகள்இடம்பெறுகின்றன. "சுண்ணாகத்தைப்பிறப்பிடமாகவும்சுதுமலையில்வசித்தசுப்பையா' என்பதுபோன்றதொடர்கள் தினசரி அனேகமாகக் கண்களை உறுத்துகின்றன.

வணக்கம் சொல்லும் முறைகூட வேடிக்கையாகிவிட்டிருக்கிறது. 'காலை வணக்க'த்துக்கும் 'மாலை வணக்க'த்துக்கும் என்னவேறுபாடு? 'நற்காலைப்பொழுதாகட்டும்''நன்மாலைப் பொழுதாகட்டும்' என்பதாகப் பொருள்படும் 'Good Morning', 'Good Evening' என்பவற்றைப் போலக்கூற முனைவதில் என்ன பயன் ? வணக்கம் சொல்லும்போது காலையா? மாலையா? என்பதைநினைவூட்டுகிறோமா? இதை இன்னும் 'மெருகூட்டி', "இந்நேரவணக்கம்" என்போரையும்காணமுடிகிறது! இந்த நேரத்தில் வேறு எந்நேர வணக்கத்தைக் கூறமுடியும்?

'ஜனவரி' என்பதைத் தை என மொழிபெயர்க்கிறோம்' இது சரியா? ஜனவரியில் சரி முற்பாதி மார்கழியில் போய்விடுகிறதே.

"ஜனவரி 15இல் பொங்கல் வருகிறது" என்பதை "தை 15இல் பொங்கல் வருகிறது" என மொழி பெயர்த்துவிட இயலுமா? உண்மையில்ஜனவரியைமொழிபெயர்க்கமுடியாது என்பதே சரி.

▬ ▬ ▬

பொருள்கொண்டபெயர்களைச்சூட்டுவதேபொதுவான மரபு. ஆனால்தமிழர்களைப்பொறுத்தளவில்தற்காலப் பெயர்கள் என்ன மொழியென்றோ, என்ன பொருளென்றோ இல்லாமல் எண் சாத்திரத்துக்கு அமைவாகப்புத்தொலி கொண்டிருக்க வேண்டும். புலிகளின் காலத்தில்அழகானபொருள்பொதிந்ததனித்தமிழ்ப்பெயர்கள் சூட்டியதெல்லாம் பழங்கதை.

சிலவேளைகளில்இப்படியானபுதுமைப்பெயர்கள்அபத்தமானஅர்த்தங்களைத்தரும்ஆபத்தையும்காணலாம். ஓரிடத்தில்'றெஜினா' என்கிற பெயருடன் கூடவே அதனுடன்ஒத்தொலிக்கக்கூடியவிதமாக'வ'வில்தொடங்குகிற பெயரையும் காண நேர்ந்திருக்கிறது.

அந்தப் பெயரை ஆங்கிலத்தில் எழுத நேரிடின் எழும் சங்கடம்என்னாகும்?என்றாலும், 'Johnny'எனஆங்கிலப்



வழுவல்?

பெயரை வைத்துவிட்டு அதனைத் தமிழ்உச்சரிப்பில் அழைத்துப் பழகியவர் தாமே நாம் என்று சமாதானப்படுத்திக் கொள்ளலாம். துவிட்டு அதனைத் தமிழ்உச்சரிப்பில் அழைத்துப் பழகியவர் தாமே நாம் என்று சமாதானப்படுத்திக்கொள்ளலாம். தமிழ்நாட்டில், முக்கியமாக வடதமிழ்நாட்டில் தமிழ், தமிங்கிலம் ஆகிக்கொண்டிருக்கிறது என்பது ஒரு புறம். அதன் தாக்கம், திரைப்பட மூலமும் முக நூல் போன்றவை மூலமும் எம்மவர்களை மிக இலகுவாக மூளைச் சலவை செய்து மொழியை அலங்கோலம் செய்கிறது என்பதை உணர்கிறோமா?

இதில்வருத்தத்துக்குரிய முரண் என்னவென்றால், மொழி, மொழி உரிமை, மொழித்தூய்மை என்றெல்லாம் பலத்துக் குரல் கொடுப்போரே, தெரிந்தோ தெரியாமலோ இந்தத்தமிழை இறக்குமதி செய்து பரப்புவதுதான்!

பசங்க, பக்கிப்பயல், ஃபிகர் எல்லோரும் எம்மிடையே வாழத்தொடங்கி விட்டார்கள்.

'போய் விட்டு வருகிறேன்' என்கிற 'போட்டுவாறன்', 'Bye' சொல்லிவிட்டுப் போய்க்கன காலம்.

■ ■ ■

விளம்பரங்கள், சமயம் போன்றவற்றின் செல்வாக்குக்குறைத்து மதிப்பிடக் கூடியதன்று. எங்கள் சமயங்கள் எல்லாமே பிறமொழி சார்ந்தவை என்கிற முரணின் அடிப்படையில் இந்தப் பிரச்சினையைப் புரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. 'கொடியேற்றம்', 'துவஜாரோகணம்' ஆகவும் 'திருவிழா', 'மகோற்சவம்' ஆகவும் 'தேர்' 'ரத'மாகவும் மீண்டும் ஆகிக்கொண்டிருக்கின்றன. 'அடியார்கள்', 'பக்த அடியார்கள்' ஆகி விட்டார்கள். 'சப்பரம்' என்பதற்கு 'சப்பை ரதம்' என்னும் விளக்கம் இப்போது வந்துள்ளது. புரியாமல் ஏற்படுகிற குழப்பங்கள் இன்னொரு புறம். 'விஞ்ஞாபனம்' என்பது 'அறிவித்தல்' என்றறியாது

"திருவிழா விஞ்ஞாபனம் தொடங்குகிறது" என எழுதுகிறோம்.

■ ■ ■

புலிகளின் காலத்தில் தனித்தமிழாக இருந்த விற்பனை நிலையங்கள், சேவை நிலையங்களின் பெயர்கள் பல. இப்போதோவெனில் ஆங்கிலத்தைத் தமிழால் எழுதும் முயற்சியில் நிறைவு காண்கின்றோம். அதிலும், கொழும்பிலிருந்து பெருவர்த்தக நிலையங்கள் தாமே பெயர்ப்பலகைளைத் தயாரித்துக் கொண்டு வந்து கொடுக்கையில் தமிழே கூடக்காணாது போய் விடுகிறது. விளம்பரங்களை ஆங்கிலம் கலந்து எழுதுவதுதான் மரபாகிக் கொண்டு வருகிறது. "Life இன் speedக்கு" என்பது போல!

■ ■ ■

இப்படிக்கூறுவதானது ஆங்கிலத்தைப் படிப்பதையோ பயன்படுத்துவதையோ குறை சொல்வதாக ஆகாது.

தமிழுடன் ஆங்கிலத்தைக் கலப்பது தான் கவலைக்குரியது. இந்தக் கலப்பால் ஆங்கிலமும் வரவே வராது, தமிழும் அலங்கோலமாகி விடும்.

மாறாக, ஆங்கிலத்தையோ அல்லது இன்னும் வேறு மொழிகளையோ சரிவரக்கற்பதென்பது தமிழின் வளர்ச்சிக்கும் உதவும்! இரண்டு மொழிகளையும் சரிவர அறிந்திருக்கையில் கலப்புப் பிரச்சினைக்கும்

இடமிராது.

இதற்குச் சில எடுத்துக் காட்டுகளைக் குறிப்பிடலாம். 'பாகன் கடவுள்', 'அம்புலி வயர்' என்றெல்லாம் தலை சுற்ற வைக்கிற தொடர்களை அண்மைக்காலங்களில் சந்திக்க நேர்ந்ததுண்டு.

இவை ஆங்கிலத்தில் முறையே 'Pagan God' ' மற்றும் 'Amplifier" என்பதைக் கண்டு பிடிக்கக் கொஞ்ச நேரமும் கொஞ்ச ஆராய்ச்சியும் தேவைப்பட்டன. குறிப்பிட்டோரின் ஆங்கில அறிவு சீராக இருந்திருப்பின் இந்தக் குழப்பங்கள் நேர்ந்திரா.

■ ■ ■

மொழியை இலக்கணத்துள் மட்டுப்படுத்தி விடுவதென்பது இயலாத செயல். ஆனால் இலக்கணமின்றி மொழி இல்லை என்பதுவும் அதேயளவு உண்மை. இலக்கணம் என்பது ஒழுங்கன்றி வேறன்று. ஒரு உடலுக்குள் இருக்கிற வன் கூடு போன்றது அது. வன்கூடில்லையேல் உடல் உருவற்று சதைக் கோளம் மட்டுமே எஞ்சும்.

மறுதலையாக வன் கூடும் மனிதனல்ல! (எமது ஆங்கிலக் கற்பித்தலிலுள்ள பெரும் குறைபாடு இதுவென்பதையும் இங்கு குறிப்பிடலாம். இலக்கணத்தை முதன்மைப்படுத்துகிற முனைப்பால், வன் கூட்டைப் பார்த்து மாணவர்கள் பயந்து வெறுப்பதே அங்கு இடம் பெறுகிறது!)

■ ■ ■

மொழி இயல்பாக வர வேண்டும், அது கற்பதல்ல. பயில்வது சுவறுவது. இப்படிப்பார்க்கையில் முக்கியமாக ஊடகங்களின் பணி பொரியது. ஏனெனில் அவை செலுத்தும் செல்வாக்கு மொழிப் பயன்பாட்டைப் பொறுத்தளவில் பலமானது. யாழ்ப்பாண நீர்க்குழாய்களில் படியும் 'கல்சியம்' போல படிவது தெரியாமல் நாளடைவில் படிவது.

நிரல்களில் எழுத்துக்களை அடக்கும் சவாலின்போது சந்திகளில் வரும் 'ப்', 'ச்', 'த்' என்பன அதிகம் விடுபடுகின்றன. இவற்றை வாசிக்கும் மாணவர்களும் அவ்வாறு அவற்றைத் தவிர்த்து எழுத முனைவது இயல்பானது.

'ரெய்டு', 'மெகா ரெய்டு' என்றெல்லாம் கொட்டை எழுத்துத் தலைப்புகள் காணக்கிடைக்கின்றன. 'ஏற்பா'ட்டை நீக்கும் 'முஸ்தீபு' வந்து நெடுநாளாகி விட்டது.

இப்படியெல்லாம் இருக்கையில், "2015 க.பொ.த. சா.த..வில் தமிழ்ப் பாடத்தில் ஏறத்தாழ ஐந்திலொருவர் சித்தியடையவில்லை" என்பது ஒன்றும் வியப்பல்ல.

■ ■ ■

முன்னெப்போதுமில்லாத அதீத விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சியால் ஆங்கிலத்திலேயே நாளாந்தம் புதிய சொற்கள் பல இடம் பிடித்து வருகின்றன. அவ்வாறான சொல்லாக்கங்கள் தமிழிலும் தவிர்க்கப்பட முடியாதவை என்பது மட்டுமன்றி வரவேற்கப்பட வேண்டியவையுமாகும்.

இன்றைய தமிழில் நாளாந்த பயன்பாட்டிலுள்ள வளாகம், வங்கி, பிணை, திணைக்களம், திறைசேரி எனப் பலவும் சில காலங்களுக்கு முன் மொழியின் இயல்புக்கேற்ப உருவாக்கப்பட்டவையே.

இப்படிக் கூறுவதன் பொருள் புதிதாக வருவதால் கலப்படமும் கொச்சையும் சரியென்பதல்ல. ஏற்கெனவே எம்மிடமுள்ள நல்ல சொற்களை மறந்து, தவிர்த்து, கொச்சைப்படுத்திக் கொலை செய்து தமிழின் இருப்பைக் கேள்விக் குறியாக்குகிற பாவங்களைச் செய்யாதிருப்போமாக.

கனநினைய

தெருவோரச் சோளம் பொத்தி
வழி நெடுகும் தூணைவரும்.
ஆடை முதுகொட்டி
வியர்வை வழிந்தோட
உலகை மென்றபடி
நீயும் நானுமான
நெடும் பகல் பயணம்.

தெருவோர மரம்
குடை பிடித்திருக்கும்.
மரத்துப் பறவைகள்
சுகம் கேட்டுப் பாடும்.
குரங்குகள் கூடக்
குசலம் விசாரித்திருக்கும்.
நீயும் நானுமான
நெடும் பகல் பயணம்.

தெருவின் புழுதி
முழுப் பயணத்திலும்
சலிப்பேயின்றிக் கூடவரும்.
கூற்று மெல்லச் சோம்பல்
முறித்தெழுந்து விசிறும்.
நீயும் நானுமான
நெடும் பகல் பயணம்.

தெருவின் சரளைகள்
தார் கண்டு நாளான சோகம்பூசி
நெருடிச் சறுக்கும்
குழியிருந்த சேற்றிருந்து
தவளையொன்று தாவும்
நீயும் நானுமான
நெடும் பகல்பயணம்.

நண்பா....
நீ மட்டுமா
தெரு நீளமுமிருந்த
அத்தனையுந்தான் இப்போ
இல்லவே இல்லை.

யுத்தம் உன்னைப் பறித்தது.
அபிவிருத்தி அத்தனையையும்
களவாடிற்று.

நீயுமில்லை
அவையவையுமில்லை.
நினைவுகள் மட்டும்
கனக்கின்றன





கவிதை



கை. சரவணன்

1990களில் இருந்து இயங்கிவரும் இவர் அளவெட்டியைச் சேர்ந்தவர். ஆசிரியர். சமூகம்சார் செயற்பாட்டாளரான இவரது படைப்புக்கள் சமூகத்தின் அசைவியக்கத்தை இயற்கையின் கூறுகளுடன் பதிவு செய்பவை. கவிதை, சிறுகதை, உருவகம், கோட்டோவியம் எனப் பல தளங்களிலும் பயணிப்பவர். இவரது கவனத்துக்குரிய கவிதைத் தொகுதி 'வானம்விழுந்தநெல்வயல்' ஆகும். புனைபெயர்களிலும் எழுதிவருகிறார். தளவாசல் காலாண்டிதழின் இணையாசிரியர்களில் ஒருவர்.



சிறுகதை



உடுவில் அரவிந்தன்

அப்புத்துரை அரவிந்தன் 1997 முதல் எழுதி வருகிறார். இயல்பாகவே ஒரு கவிஞர், எனினும் ஒரு சிறந்தசிறுகதையாளன்.1999இல் இவரது முதலாவது சிறுகதைத் தொகுதி வெளியானது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் தொகுத்தது வெளியிட்ட பன்னிரு சிறுகதையாளர்களில் இவரும் ஒருவர். சமீபத்தில் 'பாழ்வெளி' என்ற சிறுகதைத் தொகுப்பை வெளியிட்டுள்ளார். தற்போது உடுப்பிட்டி ஆயுள்வேத வைத்தியசாலையில் வைத்தியராகப் பணிபுரிகிறார்.

கிழக்குவானில் முழுநிலவு உயரத்தொடங்கியிருந்தது. நட்சத்திரங்கள் சோளப்பொரிகளாகச் சிதறிக்கிடந்தன. நிலவின் ஒளித்துளிகள் இலைகளுக்கூடாக வழிந்து நிலத்திலே சிந்தியிருந்தன. காற்று பனித்துளிகளைச் சுமந்தபடி அலைந்தது. அந்தத் துறவி மலையின் உச்சியை நோக்கிச் செல்லும் பாதையில் நடந்துகொண்டிருந்தார். அவருடைய தோளிலே தொங்கிய துணிப்பை நடையின் வேகத்துக்கேற்ப முன்னும்பின்னும் ஆடியது.

மலைப்பாதையின் இருபக்கங்களிலும் இருள் வரைந்த உருவங்கள் அச்சமூட்டுவனபோலத் தோன்றின. பலவகையான பூச்சிகளின் ஒலிகள் சூழ்நிலையை மேலும் இறுக்கமாக்கின. இவையெதுவும் அவருடைய கவனத்தைக் கலைக்கவில்லை.

காலையில் குருநாதருடன் நடந்த உரையாடல் மட்டுமே மனதில் நிரம்பியிருந்தது. அவர் அந்தச் சம்பவத்தை அசைபோட்டபடி வேகமாக நடந்தார்.

இளந்துறவியின் மனம் அமைதியிழந்து தவித்துக்கொண்டிருந்தது. அதன்காரணமாகக் காலைப் பிரார்த்தனைகளில் புலன்களைச் செலுத்தமுடியவில்லை. குருநாதரை உடனடியாகச் சந்திக்க வேண்டும் என்ற ஆவல் பெருகியபடியிருந்தது. விகாரையிலிருந்து வெளியேறி வந்தவர், அவரைத்தேடத்தொடங்கினார்.

அதைக்கேட்டதும் முதியதுறவியின் முகத்தில் இலேசான மாற்றம் தெரிந்தது. இவர் அதைக் கவனிக்காதவரைப்போலத் தொடர்ந்து சொன்னார்.

"அந்த மலையிலுள்ள நிலக்குகையொன்றில் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் எங்களுடைய துறவிகள் வாழ்ந்ததாகவும், எம்பிரானுடைய நின்றநிலையிலான திருவுருவத்தை அவர்கள் வழிபட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது"

முதியதுறவி மென்மையாக முறுவலித்தார்.

"நீ அவற்றை முழுமையாகப் படித்தாயா?"

"ஆம் குருநாதரே!"

முதியதுறவி சற்றுநேரம் கண்களைமூடி அமைதியாக இருந்தார். பின்னர் தளர்ந்த குரலில் மெதுவாகச் சொன்னார்.

"அந்த ஓலைச்சுவடிகள் விசித்திரமானவை. அவற்றில் மற்றவர்களுக்குப் புரியாத பல புதிர்கள் உள்ளன. அந்தப் புதிர்களின் மூலமாகப் பல உண்மைகள் மறைக்கப்பட்டுள்ளன. மகனே! உன்னுடைய மனதைத் தேவையற்ற விடயங்களில் ஏன் செலுத்துகிறாய்? அவற்றையெல்லாம் விட்டுவிடு. எல்லையில்லாத அன்பையும், அகிம்சையையும் போதிப்பதே எங்களுடைய மேலான ஒழுக்கம் என்பதை நீ உணரவேண்டும்"

"இல்லை ஐயனே! சுவடிகளிலுள்ள சுலோகங்களை என்னால் ஓரளவுக்குப் புரிந்துகொள்ளமுடிகிறது. நான் அந்த மலைக்குச்செல்லப்போகிறேன். அதற்குத் தங்களுடைய அனுமதி வேண்டும்"

இவருடைய குரலில் உறுதியிருந்தது.

"அப்படிச் செல்வது ஆபத்தை விளைவிக்கக்கூடியது குழந்தாய்! நீ இளமையின் வேகத்தில் இவ்வாறு கூறுகின்றாய். சர்வ வல்லமை பொருந்திய மாமன்னன் ஒருவனுக்குச் சொந்தமாயிருந்த உருத்திரவீணைப் பற்றி நீ படிக்கவில்லையா?'

'மன்னித்துக்கொள்ளுங்கள் குருவே! நான் எல்லாவற்றையும் நேரிலே பார்த்த பின்னர் தங்களுக்குத் தெளிவுபடுத்துகிறேன். எனக்கு அனுமதிகொடுங்கள்'

முதிய துறவி பெருமூச்சுவிட்டுக்கொண்டார். அதற்குப் பிறகு இவரைத் தடுக்கமுயலவில்லை. விகாரையிலிருந்து பிற்பகலிலே புறப்பட்ட இளந்துறவி மிகுந்த உற்சாகத்துடன் மலையேறிக் கொண்டிருந்தார். அந்த ஓலைச்சுவடியிலுள்ள தகவல்களை உறுதிப்படுத்துவதன்மூலம் குருநாதரிடம் தன்னை நிரூபித்துக்காட்டவேண்டிய அவசியம் அவருக்கிருந்தது. அது பிற்காலத்தில் விகாரையின் தலைமைப் பதவியைப் பெற்றுத்தரும் என்று நம்பினார்.

அந்த இளந்துறவி மலையுச்சியைச் சென்றடைந்தபோது நிலவு நன்றாக ஏறியிருந்தது. மலையின் மேற்பகுதி தட்டையாகப் பரந்திருக்க, அதன் நடுவில் ஆலமரமொன்று நிமிர்ந்துநின்றது.

மலைக்கு மறுபக்கம் பெருங்கடல் பாறைகளில் மோதிச் சிதறுகின்ற ஓசை விட்டுவிட்டுக் கேட்டது. அந்தச் சூழ்நிலை அவருடைய மனதிலே கலக்கத்தை ஏற்படுத்தியது. பார்வையை எல்லாப் பக்கங்களும் ஓடவிட்டார்.

சற்றுத்தூரத்தில் பழமையான கோவிலொன்று ஆலமரத்துக்குப் பின்னால் தெரிந்தது. அந்தக் கோவிலைப் பற்றைகள் மூடிப்பிடித்திருந்தன. அதற்குப் பக்கத்தில் சிறிய குகையொன்று தெரிந்தது. அதைப் பார்த்ததும் வரலாற்றுப் புதிருக்கான நுழைவாயிலைக் கண்டுபிடித்த திருப்தியுடன் தலையை அசைத்துக்கொண்டார். அந்தக் குகையை நோக்கி நடக்கத்தொடங்கினார். அதை நெருங்கியதும் மின்சூளை ஒளிரவிட்ட படிஎட்டிப்பார்த்தார். குகைவாசலிலிருந்து படிகள் செங்குத்தாகக் கீழிறங்கின. உள்ளே செல்வதற்காகக் கால்களை நகர்த்தியபோது, அந்தக்குரல் அசரீரி போன்று உரத்து ஒலித்தது.

"நில்!"

அவர் காலை வேகமாக இழுத்துக் கொண்டார். ஆலமரத்தில் உறங்கிக் கொண்டிருந்த பறவைகள் வெருட்சியுடன் சடசடத்தன.

சுற்றுமுற்றும் பார்த்தவருடைய கண்களுக்கு எதுவுமே தென்படவில்லை. மனித சஞ்சாரமற்ற சூழலில் சடுதியாக எழுந்த குரலும், பறவைகளின் அமைதியின்மையும் அவரை நடுங்கவைத்தன. அவருடைய பார்வை ஆலமரத்தில் ஊன்றி நிலைத்தது.

ஆலமரத்தின் அடியிலுள்ள பீடத்தில் ஓர் உருவம் அசைவதை அவரால் அவதானிக்கமுடிந்தது. அந்த உருவம் மெதுவாக எழுந்து அமர்ந்தது. அதன் கண்கள் மின்சூளின் ஒளியில் மினுங்கின. பரந்தநெற்றி வெண்மையாகப் பளீரிட்டது. தோளுக்குக்கீழே வளர்ந்த சடையையும், நீண்டதாடியையும் பார்க்கும்போது ஒரு பரதேசியைப்போலவே அதன் தோற்றமிருந்தது.

அவன் கந்தலாடையை அணிந்திருந்தான். அவனுக்குப் பக்கத்தில் தகரப்பேணியினால் செய்யப்பட்ட வாத்தியமொன்றிருந்தது. அந்த வாத்தியம் கம்பிகளால் இழுத்துக் கட்டப்பட்டிருந்தது.

அவர் எச்சரிக்கையுடன் அவனை நெருங்கிச் சென்றார்.

"யார் நீ? ஏன் என்னைத் தடுக்கின்றாய்?"

"அந்தக் குகைக்குள்ளே எதற்காக நுழைகிறாய்?" பரதேசி பதிலுக்குக் கேட்டதும் துறவிக்குக் கோபம் தலைக்கேறியது.

"நீ யார் அதைக் கேட்பதற்கு?"

"நானா..?" பரதேசி பொறிதாக நகைத்தான்.

"துறவியே! நீ இதற்கு முன்னர் இங்கு வந்திருக்கிறாயா?"

"இல்லை..."

"அப்படியானால் என்னை யாரென்று கேட்கும் தகுதியை நீ இழந்துவிட்டாய். இப்போது சொல். எதற்காக அந்தக் குகைக்குள்ளே நுழைகிறாய்?"

இளந்துறவி மழுங்கிய தலையை ஒருமுறை தடவிக்கொண்டார். பின்னர் மெதுவாகச் சொன்னார், "நான் எங்களுடைய மூதாதையர்களுடைய எச்சங்களைத் தேடிவந்தேன்"

"அப்படியானால்...?"

"எங்களுடைய மூதாதையர் இந்த மலையில் வாழ்ந்ததாகவும், அவர்கள் வழிபட்ட எம்பிரானுடைய திருவுருவம் இங்குள்ள குகையின் ஆழத்தில் இருப்பதாகவும் நாங்கள் பின்பற்றுகின்ற ஆகமத்திலே சொல்லப்பட்டுள்ளது"

பரதேசியின் முகத்தில் ஏளனமான புன்னகை இழையோடியது. "தொன்மையான மொழியைப் பேசுபவர்

பூரணை நாளென்பதால் வழிபாடுகளுக்காக வந்த மக்களின் எண்ணிக்கை அதிகமாயிருந்தது. அவர்களைக் கடந்துசென்றவர், விகாரையின் பின்புறமுள்ள பூங்காவினுள் நுழைந்தார். அங்கே தாமரைத்தடாகத்துக்கருகில் குருநாதர் அமர்ந்திருப்பது தெரிந்தது. ஆர்வத்துடன் அவரை நெருங்கினார்.

"தங்களை வணங்குகின்றேன் குருவே!"

அந்த முதியதுறவி மெதுவாகத் திரும்பிப் பார்த்தார். சுருக்கங்கள் நிரம்பிய அவருடைய முகத்திலே புன்னகை விரிந்தது.

"கருணையின் வடிவமான புத்தபெருமான் உனக்கு அருள்புரிவாராக" அவர் நடுங்குகின்ற கையை உயர்த்தி ஆசீர்வதித்தார்.

"என்ன வேண்டும் மகனே?" முதிய துறவியின் குரலில் அன்பு வழிந்தது.

"ஐயனே! விகாரையின் வடமேற்கு மூலையிலுள்ள நூலக அறையில் பழைய ஓலைச்சுவடிகள் சிலவற்றைக் கண்டேன். அவற்றில் குணதிசையிலுள்ள மாமலையைப்பற்றிய சில குறிப்புகள் காணப்படுகின்றன"

துயர் நிறைந்த பாடல்களால்
வாழ்வென்பது வெறுங்கனவே
என்று என்னிடம் கூறாதீர்கள்
உறங்கித்துயிலும் ஒரு ஆத்மா
இறந்துவிட்ட ஒன்று தான்

எதுவும் எவ்விதம் தோற்றமளிக்கிறதோ
அவ்வாறே இருந்தும் விடுவதில்லை
வாழ்க்கை உண்மையானது!
தீவிர நோக்குடையது!
சாவுப் புதைகுழியல்ல
அதன் இலக்கு.

நீயொரு தூசித் துணிக்கை
உனது முடிவும் அவ்வாறானதே
என ஆத்மாவைக்கூறிவிட முடியாது
குதூகலிப்போ பெருந்துயரோ
எமது விதியும் முடிவும் ஆகிவிடாது.

மாறாக ஒவ்வொரு விடியலும்
முதல் நாளைவிட அதிகம் முன்னேறியுள்ளோராய்
எம்மை எதிர்கொள்ளும் வகையில்
முடிவற்றுச் செயலாற்றுவதே
எமது விதியாகும்

எல்லைகள் அற்றது கலை
விரைந்து கழிந்தோடி விடுவது காலம்
உறுதியும் துணிவும் மிக்க எம்மிதயங்களோ
புதைகுழி நோக்கிய சாவு ஊர்வலத்தில்
உள்ளடங்கி ஒலிக்கும் பேரிகைபோல
தாழ்ந்தே ஒலிக்கின்றன.

இவ்வுலகெனும் பரந்துபட்ட போர்க்களத்தில்
வாழ்வெனும் பாசறையிலகப்பட்ட
ஊமை விலங்குகள்போல்
இட்டுச் செல்லப்படாதீர்கள்
அப்போராட்டத்தின் நாயகர்களாகுங்கள்

எத்துணை களிப்பூட்டுவதாயிருப்பினும்
எதிர்காலத்தை நம்பியிராதீர்கள்.
முடிந்தே போய்விட்ட இறந்த காலத்தை
புதைத்து விடுங்கள்
உயிர்த்துடிப்புடனிருக்கும்
நிகழ்காலத்தில் செயலாற்றுங்கள்
பிரபஞ்ச சக்தியின் நிழலில்
இதய பூர்வமாக!

மகத்துவம் மிக்க உன்னத
மனிதர்களின் வாழ்க்கை
எம்முடைய வாழ்வும் உன்னதமாய்
ஆகமுடியுமென்பதையே
நினைவூட்டுகின்றது
அவர்களின் பின்னால் காலத் தரையில்
அவர்களின் பாதச் சுவட்டைப் பதித்தபடி
வாழ்வின் சோதனையூடு
பயணம் தடைப்பட்டு
கப்பலும் உடைந்துபோய்விட்ட
ஒரு சோதரன் இப்பாதச்
சுவடுகளை வந்து காண நேரிடினும்
மீண்டும் தன் இதயம் உயிர்பெற்றெழ
நிமிர்வான்

நாமும் எத்தகைய விதி வந்து குறுக்கீடு செய்தாலும்
அடைய வேண்டிய இலக்கை குறியாக
முடிவற்ற செயலாக்கத்தோடு
பாடுபடவும் அதற்காய்க் காத்திருக்கவும்
தயாராகவோம்.



ஆங்கில மூலம்:
henry wadsworth
Longfellow

கவிதை



தமிழில் ந. சத்தியபாலன்

நடராசா சத்தியபாலன் ஓய்வு பெற்ற ஆசிரியர். கல்வியங்காட்டைச் சேர்ந்தவர். கவிதை, கட்டுரை, சிறுகதை, பத்தி எழுத்துக்கள், மொழி பெயர்ப்புக் கவிதைகள்போன்ற இலக்கிய, எழுத்துத் துறைகளில் பிரகாசித்துக் கொண்டிருப்பவர். தமிழ்க் கவிதைகளை ஆங்கிலத்திலும், கவனம் ஈர்க்கும் ஆங்கிலக் கவிதைகளைத் தமிழிலும் மொழிபெயர்த்து வெளியிடுவதில் ஈடுபாடு காட்டி வருகிறார்.



வாழ்வின் தேதோடு பாடல்...

பிலம்

கள் இங்கு வாழ்ந்ததைப்பற்றி அதில் சொல்லப்படவில்லையா?'

"இருக்கிறது. ஆனால், அது புனைவு" துறவி அவசரமாகப் பதிலளித்தார்.

"அப்படியானால்.... அந்த ஆகமம் ஒரு புனைவு என்பதை ஏற்றுக்கொள்கிறாயா?"

"இல்லை! நிச்சயமாக இல்லை! நீ என்னைக் குழப்புகிறாய்"

துறவியின் உடல் படபடத்தது.

"நான் எனது முன்னோர்களின் புனித எச்சங்களை எடுத்துவந்து உன்னுடைய அழுக்கு முகத்தில் எறிகிறேன் பார்!"

துறவி விறுவிறுவென்று குகைக்குள் நுழைந்தார். பரதேசி மறுபடியும் சுருண்டு படுத்துக்கொண்டான்.

ஆலமரக்கிளையிலிருந்த ஆந்தை யொன்று இடைவிட்டு ஓசையெழுப்பியது.

குகையினுள் இருள் அப்பிக்கிடந்தது. துறவியின் இதயம் படபடவென்று அடிக்கத்தொடங்கியது. மின்சூளை இறுகப் பிடித்துக்கொண்டார். படிகள் முடிவற்று நீண்டன.

"பேசாமல் திரும்பிவிடுவோமா?" என்று ஒருகணம் எண்ணியவர், பரதேசியிடம் சவால்விட்டது நினைவுக்கு வந்ததும் படிகளில் இறங்கத்தொடங்கினார்.

"எங்கள் முன்னோர்களால் எழுதப்பட்ட ஆகமம் ஒருபோதும் பொய்க்காது. அவர்கள் எதையுமே சரியாகத்தான் எழுதியிருப்பார்கள். எங்களுடைய உண்மையான வரலாற்றைப் பொதுவெளியில் நிறுவவேண்டும்" என்ற முனைப்புடன் இறங்கிக் கொண்டேயிருந்தார்.

கிட்டத்தட்ட நூறு அடிகள்வரை இறங்கியவருக்கு மூச்சுத் திணறத்தொடங்கியது. அவருடைய நெஞ்சு காற்றைத்தேடி அவாவியது. கீழே செல்லச்செல்ல வித்தியாசமான உலகொன்று விரிவதைப் பிரமிப்புடன் பார்த்தார். குகையின் உட்புறம் பாறையிலே குடையப்பட்ட பெருமாளிகையாக உருமாறியிருந்தது. அங்கிருந்த கல்லாலான இருக்கைகள் அவரை வெகுவாகக் கவர்ந்தன. அந்த இருக்கைகள் அமைக்கப்பட்ட ஒழுங்கும், வடிவ நேர்த்தியும் அவரை வியப்பிலாழ்த்தின. தான் வணங்குகின்ற பெருமானின் தூல வடிவத்தைத் தேடி அவருடைய கண்கள் அலைபாய்ந்தன. அங்கிருந்த பாறையொன்றின் இடுக்கினூடாக நீர் வடிந்து செல்வதைக் கண்டார். அதைப் பார்த்தும் ஓலைச்சுவடியிலே குறிக்கப்பட்டிருந்த சுலோகங்கள் அவருடைய நினைவுக்கு வந்தன. அந்த நீரோட்டத்தைப் பின்தொடர்ந்து நடக்கத் தொடங்கினார்.

அது அவரை அங்குமிங்கும் அலைக்கழித்தது. ஏதோவொரு இடத்தை இலக்கு வைத்து அசைவதைப்போல அவருக்குத் தோன்றியது. அவருடைய கால்கள் களைத்துச் சோர்ந்தன. அதற்கு மேலும் நகரமுடியாமல் அருகிலிருந்த சுவரிலே சாய்ந்துகொண்டார். கண்கள் அயர்ச்சியுடன் மூடிக் கொண்டன. வாழ்வின் முடிவைப்பற்றிய சிந்தனைகள் அவருக்குள்ளே தோன்றத்தொடங்கின.

அந்த வேளையில் எதிர்ப்புறமிருந்து வீசிய குளிர்ந்த காற்று உடலைத் தழுவிச்செல்வதை உணர்ந்தார். அவருடைய மனம் மகிழ்ச்சியில் துள்ளியது. மூச்சை ஆழமாக இழுத்து விட்டார்.

"பிரானே! கடைசியில் உன்னைக் கண்டுவிட்டேன்" என்று உணர்ச்சிபொங்கக் கூவியபடி ஓடிச் சென்றார்.

நீரோட்டம் சங்கமிக்கின்ற இடத்தை எட்டிப்பார்த்தவர் அதிர்ச்சியில் உறைந்தே போனார். ஏமாற்றத்தின் பெருவலி அவருடைய முகத்திலே அழுத்தமாகப் பரவியது. அங்கே உருளைவடிவாகப் பொளியப்பட்ட பாறையொன்று நீரின் நடுவில் நிமிர்ந்து நின்றது. அந்தப் பாறையின் அடிப்புறம் வட்டமான பீடமாக அகன்றிருந்தது. அதற்கெதிரே சிறு மேடையொன்றில் உருத்திரவீணையின் உடைந்தபாகங்கள் தூசுபடிந்து கிடந்தன. வழிந்துவந்த நீர் உருளைப்பாறையின் உச்சியின்மேல் தாரையாகச் சொரிந்து கொண்டிருந்தது. நீர் விழுகின்றபோது நூதனமான ஓசையொன்று எழுவதையும், அது ஏழுசுரங்களால் பின்னப்பட்ட இசைக்கோவையாக விரிவதையும் கேட்டார். அந்த இசையின் ஈர்ப்பிலிருந்து அவரால் விடுபட முடியவில்லை. அவருடைய செவிகள் அதிர்ந்து இரைந்தன. நேரம் செல்லச்செல்ல அந்த அதிர்வு அதிகரித்தது. அதைத் தாங்கமுடியாமல் வந்தவழியே தலைதெறிக்க ஓடத்தொடங்கினார். படிகளில் மோதியவாறு மேலேறியவர், வெளியே வந்ததும் துவண்டுபோய்ச் சரிந்தார். அவருடைய உடல் வியர்வையிலே குளித்திருந்தது. நெஞ்சு விம்மித் தணிந்தது. கண்கள் மிரட்சியுடன் தெறித்து விழுந்தன. அவர் பரதேசி படுத்திருந்த ஆலமரத்தின்பக்கம் பார்வையைத் திருப்பினார். அந்த ஆலமரம் கடற்காற்றின் சுழிப்பில் விழுதுகளை வீசியபடிநின்றது. அதைப் பார்க்கும்போது இருபது கைகளையுடைய அரசனொருவன் இறுமாப்புடன் எழுந்து நிற்பதைப்போல அவருக்குத் தோன்றியது. அவரைக் கண்டதும் பரதேசியின் முகத்தில் மந்தகாசம் விரிந்தது. அவன் உரத்துச் சிரித்தான். அடக்கமுடியாமல் சிரித்துக்கொண்டேயிருந்தான். நிலவு மேற்கே சரிந்துவிட்டது.

துறவி மெதுவாக எழுந்து நடந்தார். அவர் தள்ளாடியபடி இறங்கிச்செல்வதை அந்தப் பரதேசி புன்முறுவலுடன் பார்த்துக்



கொண்டிருந்தான். பின்னர் தன்னுடைய தந்திவாத்தியத்தை எடுத்து மீட்டத்தொடங்கினான். சாமகானத்தின் இனிமையான ஒலி மலைப்பிரதேசமெங்கும் வியாபித்துப் பரவியது.

சிறுகதை

1958



தேவி பரமலிங்கம்

நவாலியைப் பிறப்பிமாகக் கொண்டவர். 1962 இல் 'மலரே மலரே மலர்வாயா?' என்ற சிறுவர் பாடலால் எழுத்துலகில் பிரவேசித்தவர். 1965இல்'வடு' என்றதலைப் புடைய சிறுகதையை எழுதியவர். கவிதைகள், கட்டுரைகள், பத்தி எழுத்துக்கள், வானொலி நாடகங்கள், பாடல்கள் பல துறைகளிலும் உச்சம் கண்டிருந்தவர். 'பூமணி' என்பது இவருடைய சிறுவர் பாடல் தொகுதி.

பொன்னையா அண்ணர்...

இவரைச் சரியாக ஐம்பது வருடங்களுக்குப் பிறகு இப்பொழுதுதான் சந்திக்கிறேன். அந்த நினைவுகள் இன்னமும் நெஞ்சை விட்டு அகலாது பசுமையாக இருக்கின்றன. நானும் அவரும் ஒரே கடையில் அப்பொழுது சம்பளத்துக்கு நின்றோம். இப்பொழுது அவரொரு கடைக்கு முதலாளியாகவும் நானொரு நிலையத்தின் பொறுப்பதிகாரி யாகவும் மாறிவிட்டோம். எங்கள் இருவரையும் தவிர இன்னமும் நாலைந்து 'பொடியள்' எங்களோடு அந்தக் கடையில் நின்றதும் ஞாபகம் வருகிறது. அப்பொழுது நானும் ஒரு பொடியன் தான்.

பொன்னையா அண்ணர், வயதால் எங்களை முந்தியவர் மட்டுமல்ல. அந்தக் கடைக்கு வந்ததிலும் எங்களை முந்தியவர் தான்.

பிறந்த மண்ணை விட்டு இருநூற்றுக்கும் அதிகமான மைல்களுக்கு அப்பால் சென்று அந்தத் தனிச் சிங்கள ஊரில் புதிதாகத் தொழில் தொடங்கினால் எப்படி இருக்கும்?

எனது எண்ணமெல்லாம் பிறந்த மண்ணை நினைத்தே சுழன்று கொண்டிருந்தன. தொழில் செய்யக் கை, கால் ஓடவில்லை.

சிறுவன், அத்தோடு அனுபவித்துப் பழக்கம் இல்லாத புதிய புரியாத மொழி வழங்கும் இடம். சிலவேளைகளில் தனிமையான இடங்களுக்குச் சென்று பிறந்த மண்ணை நினைந்து எத்தனையோ தடவைகள் வாய் விட்டும் அழுதிருக்கிறேன். என்னுடைய இந்தக் கலக்கத்தைக் கண்டு என்னைத் தேற்றியவரே பொன்னையா அண்ணர்.

1958ஆம் ஆண்டைத் தமிழ் மக்கள் எவரும் எளிதில் மறந்துவிட மாட்டார்கள். ஆனாலும் ஒரு சிலருக்கு அந்த ஆண்டு வாழ்க்கையோடு நன்றாக ஒட்டியும் விட்டுள்ளது. அந்த ஆண்டிலே மனிதத் தன்மையற்ற சிங்கள இன மிருக வெறியர்களால் நாடெங்கிலும் தமிழர் விரோத நிகழ்வுகள் பல நடந்து முடிந்தன. இந்தக் கலவரம் தொடங்குவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பாகவே நான் அந்த ஊருக்குப் போயிருந்தேன். ஒருவாறு அந்த ஊர் எனக்குப் பழகிவரும் நேரத்தில் இப்படி யொரு புதிய கோஷம் எழுந்து என்னைக் கலக்கியது.

அந்தக் கடைத் தெருவில் யாழ்ப்பாணத்தாரின் கடைகளே அதிகளவும் இருந்தன. ஒரு சில மரக்கறிக் கடைகளைச் சிங்களவர் வைத்திருந்தனர்.

பொன்னையா அண்ணருக்கோ அந்த ஊர் பிறந்த ஊர் மாதிரி. அந்தத் தைரியத்தில் எப்படியோ எனக்கும் நாள்கள் ஓடிக்கொண்டிருந்தன.

அந்த நாள்களில் ஒருநாள்...

நகை அடைவு பிடிக்கும் பக்கத்துக் கடைக்காரர் கனகரத்தினத்தின் குரல் பலமாகக் கேட்டது. கனகரத்தினம் வட்டுக் கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட உயர் குலத்தைச் சேர்ந்தவர். பொன்னையா அண்ணர் சவரத் தொழிலாளி. எந்தக் குலத்தைச் சேர்ந்தவரானாலும் அந்த ஊரில் ஒரே மாதிரித்தான்.

"அவன் கீழ்சாதி இவன் மேல்சாதி" என்னும் பேதங்களோ, கோஷங்களோ அங்கில்லை. அந்த ஒரே காரணத்துக்காக எனக்கு அந்த ஊரை நன்றாகவே பிடித்திருந்ததோடு எவ்வளவு காலமும் அங்கே வாழலாமென்ற ஆவலும் இருந்தது. -அதற்குள்ளாக இப்படிச் சோதனையா?

இத்தகைய இனக் குரோதம் கொண்ட இடத்தில் உழைப்புக்காக வந்து விட்டோம் என்ற எண்ணம் சிறிதளவேனும் நகை அடைவு பிடிக்கும் கடைக்காரர் கனகரத்தினத்துக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

அவர் தான் உயர் குலத்தவன் என்பதை அந்த ஊரிலும் சில சிங்களவர்களிடம் காட்டமுனைந்து பகையைச் சம்பாதித்து வைத்திருந்தார். இல்லையென்றால் இந்தளவு நெஞ்சுத் துணிவுடன் தனிச் சிங்கள ஊரில் தனது கடை விளம்பரப் பலகையில் கொட்டைத் தமிழ் எழுத்துக்களை எழுதுவித்துத் தொங்க விட்டிருப்பாரா?

இவருடைய இந்த நடவடிக்கைகளைக் கடைத் தெருவில் உள்ள சிங்கள வியாபாரிகள் அவதானித்திருந்தாலும் அவர்களால் என்ன செய்துவிட முடியும் என்ற அசட்டுப் போக்கில் அதுகளை எல்லாம் பொருட்படுத்தி இருக்க வில்லை கனகரத்தினம்.

அன்றோ இனக்கலவரம்.



சிங்கள ஊருக்க வந்திட்டமெண்டாப் போலை எங்கடை பரம்பரைப் பழக்க வழக்கங்களை எல்லாம் உதறித்தள்ளிவிட்டிட்ட மெண்டா நினைச்சிட்டாய்.. போடா வெளியில. கேட்டுக் கேள்வியில்லாமல் ஒரேயடியா ஓடிவந்து நுழைஞ்சிட்டாய். ஏதோ உன்ரை வீடு வாசலைப்போல...

இவ்வளவு காலமும் எதிர்பார்த்திருந்த துவேசிகளுக்கு நல்லதோர் சந்தர்ப்பமாக உருவாகிவிட்டது. கனகரத்தினத்தின் குரலைத் தொடர்ந்து எதிர்ப் பக்க மரக்கறிக் கடைச் சில்வாவின் குரலும் கேட்டது. வேலை செய்துகொண்டு நின்ற பொன்னையா அண்ணர் வேலையை விட்டு விட்டுச் சென்று வெளியில் பார்க்கிறார். நானும் தொடர்ந்து எட்டிப் பார்க்கிறேன்.

மரக்கறிக் கடைக்காரச் சில்வா, கண்டபடி பேசிக்கொண்டே கையில் 'தார் ரின்' ஒன்றுடன் அடைவுக் கடையை நெருங்குகிறான்.

கனகரத்தினம் ஒன்றுமே பேச வில்லை.

அதனைச் சாதகமாக்கிக் கீழே மரப்பெட்டி ஒன்றை வைத்து அதனில் ஏறி 'நகை அடைவு பிடிக்கும் இடம்' என்னும் தமிழ் எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ள விளம்பரப் பலகை மீது 'தாரைப்' பூச எத்தனிக்கிறான் சில்வா.

குறிக்கிட்ட கனகரத்தினம் தாரைப் பூசவிடாது தடுக்கிறார். இதற்கிடையில் கடைத் தெருவில் சிறு கூட்டமே திரண்டு நின்றது. இருவருக்கும் இடையில் தோன்றிய இழுபறியில் பாதிக்கப்பட்டது அந்த விளம்பரப் பலகை தான். நேராகத் தொங்கிக் கொண்டிருந்த விளம்பரப் பலகை இப்பொழுது சிறிதே சரிந்து தொங்குகிறது.

சில்வா மீண்டும், மீண்டும் தாரைப் பூசுவதற்கு முயற்சிக்கிறான். எனக்கு இரத்தம் கொதித்துக் கொண்டு வருகிறது. புதிய வீராப்புடன் பொன்னையா அண்ணரைத் திரும்பிப் பார்க்கிறேன்.

அவர் பாதிக்கப்படாதவர்போல் எவ்வித உணர்ச்சியும் இல்லாத வராக நின்றுகொண்டிருந்தார். அப்பொழுதுதான் என் நினைவில் வந்து தைத்தது அந்தக் காட்சி.

முன்னொரு சந்தர்ப்பத்தில் பொன்னையா அன்னர், அந்தக் கனகரத்தினத்தால் அவமதிக்கப் பட்டது நினைவில் வந்து போனது.

ஏதோ அவசர விடயமாகக் கனகரத்தினத்தின் கடையின் உள்ளறைக்குள் பிரவேசித்துவிட்டார் பொன்னையா அண்ணர். அது பிடிக்காமல் கனகரத்தினம் வாயில் வந்தபடி எல்லாம் பேசிவிட்டார்.

"இப்ப மனிசரைத் தெரியேல்லை... ஏதோ சிங்கள ஊருக்க வந்திட்டமெண்டாப் போலை எங்கடை பரம்பரைப் பழக்க வழக்கங்களை எல்லாம் உதறித்தள்ளி விட்டிட்டமெண்டா நினைச்சிட்டாய்.. போடா வெளியில. கேட்டுக் கேள்வியில்லாமல் ஒரேயடியாஓடிவந்துநுழைஞ்சிட்டாய். ஏதோ உன்ரை வீடு வாசலைப்போல..." இவ்விதம் அவமதிச்சுப் பேசியிருந்தார் அவர்.

அதனால்தான் போலும் அவர் இப்போது எதுவித மான உணர்ச்சியும் இல்லாதவராய் நிற்கிறார். சிந்தித்து முடிவு கட்டிக் கொண்டேன் நான். அவரைத் தீண்டுவதில் பயன் இருப்பதாகத் தெரியவில்லை.

இவ்வளவு காலமும் எதிர்பார்த்திருந்த துவேசிகளுக்கு நல்லதோர் சந்தர்ப்பமாக உருவாகிவிட்டது. கனகரத்தினத்தின் குரலைத் தொடர்ந்து எதிர்ப் பக்க மரக்கறிக் கடைச் சில்வாவின் குரலும் கேட்டது.

என்னுடைய அவேசமும் இனவுணர்ச்சியும் வயதையும், உருவத்தையும் கூட்டிக்காட்ட எனது கால்கள் முன்னேற முயற்சிக்கின்றன.

"அங்க போகாத குமார் நில்..." பொன்னையா அண்ணரின் குரல் கேட்டுத் திரும்புகிறேன்.

"நீ எதுக்காக அங்கை போறே... நீ போய் என்ன நடக்கப் போகுது...?" பொன்னையா அண்ணர் தான் கேட்கிறார்.

அப்படிக் கூறி என்னை நிறுத்திய பொன்னையா அண்ணர் தன்னுடைய கால்களை எடுத்துவைத்து முன்னேறிக் கொண்டிருந்தார். அவரைத் தடுத்து நிறுத்த என்னால் முடியவில்லை. நானும் பின்னால் தொடர்கிறேன்.

"மொக்கத சகோதரயாமேக்க... ஏபளா மேமக் கிறவுத் அப்பித் இன்னவாக் கியல இத்தன் நத்தே?" (என்ன சகோதரம் இது... நீங்க இப்படிச் செய்யேக்க நாங்களும் இருக்கிறமெண்டதை நினைக்க வேணும்...)

சில்வாவை எதிர்நோக்கி பொன்னையா அண்ணர் இப்படிக் கேட்டார்.

'நா பாபர்.. ஒபளாத் இன்னவானே... ஒபளாலங்க அப்பி எனவதே... மூ கரி..." (இல்லை பாபர்... நீங்களும் இருக்கிறியள் தானே... உங்கிட்ட நாங்களெதற்கும் வாறமா... இவன் சரியானை...)

சில்வா சொல்லிக்கொண்டே கனகரத்தினத்தை அடிப்பதற்குக் கையில் வைத்திருந்த கொட்டனை உயர்த்துகிறான். அதனைக் கண்டுவிட்ட பொன்னையா அண்ணர் இடையில் பாய்கிறார்.

கனகரத்தினத்தின் உடலைப் பதம் பார்க்க வேண்டிய கொட்டன் பொன்னையா அண்ணரின் மண்டையைப் பிளக்கிறது. தலையில் இருந்து

கவிதை



விவேகானந்தனூர் சதீஸ்

கிளிநெச்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், சர்ந்தர்ப்ப சூழ்நிலைகளால்தற்போது அரசியல் கைதியாக உள்ளார். தளராத மனமும் விடா முயற்சியும் உள்ள இவர், சிறை வாழ்க்கையை தனது படைப்புலகத் தளமாக மாற்றியுள்ளார். சிறையில் இருந்தபடியே இதுவரை நான்கு கவிதைத் தொகுப்புக்களை வெளியிட்டுள்ளார்.

பெரு மூச்சு

கருவுற்ற நாள் முதலாய்
கண்ணாளனே உன் நினைவு
காணாமல் ஆக்கப்பட்டாய் என்று
கதையினை அறிந்தபோது
கதறி அழ முடியவில்லை...

கர்ப்பிணி என் வயிற்றில்
கரு வளர்ந்து உதைக்கிறது
குழந்தையது பிறப்பதற்குள்
குற்றுயிராய் போவேனோ?
குங்குமம் நெற்றியிலே - உன்
குசலம் தெரியலையே...



கவிதை



ம.பா.மகாலிங்கசிவம்

மயிலங்கூடலைப்பிறப்பிடமாகக் கொண்டவர். புலவர் ம.பார்வதி நாதசிவத்தின் மகன். கவிதை, சிறுகதை, நகைச்சுவைக் கதைகள், கட்டுரை, இலக்கிய விமர்சனம், பட்டிமன்றம் எனப் பல துறைகளிலும் தனது ஆளுமையை வெளிப்படுத்தி வருகிறார்.

பெற்றிடங்களின் பிஸ்பரூபம்...

பாண்டவத் தருமன்
தருமத்தின் உருவம் போன்றவன்
அறத்துக்கே அச்சாணி
பொய்மையே பேசாத
புனித நெறியாளன்
ஒரே ஒரு பொய் சொல்ல
ஓடியதேர் ஓரடி பதிந்தாலும்
புகழ் மொழிகள் எல்லாம்
அவனுக்கே மாலைகள்

மறுபுறமோ
பொறுமை பொறுமை என்று
சிறு பருவம் முதலே
தீமைகளை அனுமதித்தான்
சூதாட்டத் தோல்வியிலே
தம்பியாரைக் கையமர்த்தி
துகிலுரிய வாய்ப்பளித்தான்
சஞ்சயனின் தூது கேட்டு
காய், பழம் தின்று கானக வாழ்வுக்கே
மீண்டும் ஓடத் துணிந்தான்

நாடு ஐந்து நிலைமாற்றி
வீடைந்து கேட்கும்
எச்சில் இலை
வாழ்க்கையையும்
இரக்கத் தயாரானான்
வளவளாத் தருமன் என
பாஞ்சாலிசபதத்தில்
பாரதியும் தீர்ப்பளித்தான்

எனினும்
சரித்திரம் பேசும்
சகாதேவனையும்
சேர்த்துக் கொண்டு
துரியோதனன் ஆட்சியே
தொடரத் தோள்
கொடுத்தான்.
எனினும் அவனை நோக்கி
எந்தப் பயலும்
சுட்டு விரல்
உயர்த்த முடியாது!



1958 தொடர்ச்சி...

இரத்தம் பெருகியது.

"ஐயோ... பொன்னையா அண்ணே... உனக்கா அடி விழுந்திட்டுது..."

கத்திக் கொண்டே அவரை நெருங்குகிறேன். மறுபடியும் உயர்ந்த சில்வாவின் கொட்டன் என்னைப் பதம் பார்க்கிறது.

என்னுடைய உடலிலும் இரத்தம் வழிந்து ஓடுகிறது. இந்த ரகளை தெருவிலுள்ள அனைத்துக் கடைகளும் இழுத்து மூடப்படுவதற்கு இலேசாக விளங்கியது. அதற்குப் பிற்பாடு நடந்தவை நினைவில் வரவில்லை.

ஆஸ்பத்திரியில் மயக்கம் தெளிந்து அறிவு வந்தபிறகுதான் எனக்குப் பக்கத்துக் கட்டிலில் பொன்னையா அண்ணர் கிடப்பதைப் பார்த்தேன்.

"பொன்னையா அண்ணே..." நான் அவரை அழைக்கிறேன். ஆடாமல் அசையாமல் கிடக்கிறார்.

மண்டையில் விழுந்த அடி பலமாக விழுந்திருக்க வேண்டும். முகம் தெரியுமட்டும் தலையைச் சுற்றி 'பெண்டேஜ்' போட்டிருந்தார்கள். அப்பொழுதுதான் அங்கே வந்து சேர்ந்த 'நேர்ஸ்' ஆசொன்னாள்.

"அவருக்கு அடி பலமாக விழுந்திருக்கிறது... இன்னமும் சுயவுணர்வு வரவில்லை... நீங்க உடம்பை அலட்டிக்காமல் படுத்துக்கொள்ளுங்க தம்பி" 'நேர்ஸ்' இவ்விதம் தமிழில் கதைத்தது எனக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது.

"நாங்க எங்க இருக்கிறம் நேர்ஸ்...? இந்த ஆஸ்பத்திரி.. எந்த இடம்..." ஆவலோடு கேட்டேன்.

"நீங்கள் எப்படி இங்க வந்தீங்க..."

"தொண்டு செய்வதுக்கு எந்த ஊர் எண்டிருக்கு...? யாதும் ஊரே யாவரும் கேளீர்..." சொல்லிக்கொண்டே இடத்தை விட்டு நகர்ந்தாள் நேர்ஸ். திரும்பிப் பொன்னையா அண்ணர் படுத்திருந்த கட்டிலைப் பார்க்கிறேன்.

"பொன்னையா அண்ணே..."

அவர் இலேசாகக் கண்களைத் திறந்ததைக் கண்டதும் குரல் கொடுத்தேன். மெது மெதுவாகத் திரும்பியவர் என்னைக் கண்டதும் அந்த வேதனையிலும் சிரித்தார்.

பார்வையாளர்களை அனுமதித்ததால் 'வார்ட்' வாசலைப் பார்த்தேன். அடைவுக் கடைக்காரர் கனகரத்தினம் வந்து கொண்டிருந்தார். அடுத்தாற்போல் சில்வாவும் வந்தான்.

"அப்பி ஒக்கம மினுஸ் தமாக் கியல கல்பனாவ நத்துவ வணா சமா வென்ட பாபர்..." (நாங்க எல்லோரும் மனிதரென்ற எண்ணமில்லாமல் நடந்திட்டுது... மன்னிச் சுக் கொள்ளும் பாபர்...") பொன்னையா அண்ணரின் கைகளைப் பிடித்துக்

தொண்டு செய்வதுக்கு எந்த ஊர் எண்டிருக்கு...? யாதும் ஊரே யாவரும் கேளீர்... சொல்லிக்கொண்டே இடத்தை விட்டு நகர்ந்தாள் நேர்ஸ். திரும்பிப் பொன்னையா அண்ணர் படுத்திருந்த கட்டிலைப் பார்க்கிறேன்.



கெஞ்சினான் சில்வா.

"பொன்னை நான் கெட்டவன் இப்படி உன்னைப் பார்க்க வருமளவுக்கு செய்தது அந்தச் சம்பவம்தான். நான் திருந்தி விட்டன். மன்னிச் சுக் கொள்..." கனகரத்தினமும் பேசுகிறார்.

ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறிய பொன்னையா அண்ணரும் நானும் அன்றில் இருந்து சந்திக்கவே இல்லை. இப்பொழுது அவரைக் கண்டதும், அந்த நினைவுகள் திரையிட்டன. நினைவுகள் நெஞ்சைவிட்டு அகலாதவைதான்.

இறைவன் இருக்கின்றான்!



இளங்கோ இந்தச் செவ்விளநீர்க் குலையைக் கொண்டுபோய்ப் பிள்ளையார் கோயில்லை குடுத்திட்டு வாருங்கோ. நாளைக்கு எங்கடை திருவிழாவெல்லோ" சுமதி தனது மகனிடம் தயவா கத் தான் சொன்னாள். "எனக்கு நேரம் இல்லையம்மா... வேறு ஆளைப்பார்த் துக் குடுத்தனுப்புங்கோ. இல்லையோ நீங்களே ஒரு வாகனம் ஏற்பாடு பண்ணி அதிலை கொண்டு போய்க்கொடுங்கோ" இணையத்தளத்தில் இணைந்து அதை மேய்ந்து கொண்டிருந்த இளங்கோ தனது தாய்க்குச் சொன்னான்.

"உனக்கு இரவிலையும் இணையத்திலைதான் வேலை. பகலிலையும் இணையத்திலைதான் வேலை. அதனால்தான் உனக்கு எதற்குமே நேரம் இல்லை. எங்கள் குலதெய்வமடா. பத்து ஆண்டுகள் காத்துக்கிடந்து கிடைக்காததை.... பிள்ளையார்தான் எனக்குப் பிள்ளையாகத் தந்தவர்"

"ஆர்? என்னைச் சொல்லுறீங்களோ? இப்பவெல்லாம் ஒரு பத்துலட்சம் இருந்தால் போதும்! ஒற்றைக்கு இரட்டையாகப் பெற்றுக் கொள்ள முடியும். 'டெஸ்ட் ரியூப் பேபி' காலத்திலை பழைய நேர்த்திக்கடன் பற்றியெல்லாம் பேசி நேரத்தை 'வேஸ்ற்' பண்ணாதையுங்கோ அம்மா." இப்படிச் சொல்லி விட்டு ஏதோ ஒரு பெரிய நகைச்சுவையைத் தான் சொல்லி விட்டதாக நினைத்துக் கொண்டு தானே சிரித்து மகிழ்ந்தான் இளங்கோ.

"அது சரி. அந்த 'டெஸ்ட் ரியூப் பேபி' க்காரரிடம் ஒரு கருமுட்டையை உருவாக்கச் சொல்லு பார்ப்போம்" சொல்லி விட்டுத் தனது வேலையாகச் சமையலறைக்குள் போய்விட்டாள் சுமதி.

இளங்கோ யோசித்தான். அம்மா சொன்னதிலே உள்ள உண்மை அவனைச் சிந்திக்க வைத்தது. அவன் ஒரு மருத்துவக்கல்லூரி மாணவன். தான் இதுவரையிலும் நினைத்துக்கூடப் பார்த்திருக்காத ஒரு விடயத்தை அம்மா எப்படிச் சர்வ சாதரணமாகப் போட்டுடைத்து விட்டுப் போகிறாள் என்று தான் அவன் நினைத்தான்.

இறைவன் இருக்கின்றாரா? அவர் இருந்தால் எங்கே இருக்கின்றார்? இவை சிறுபிள்ளைப் பராயத்தில் தொடங்கி இற்றைவரை இளங்கோவின் மனதில் உள்ள கேள்விகளாக இருக்கின்றன. இன்னும் இவற்றுக்கான பதில் எதுவும் அவனுக்குத் தெளிவாகவில்லை. சிறுவயதில் பெற்றோரிடம் இதுபற்றி அடிக்கடி கேட்டுத் தொல்லை செய்வான் இளங்கோ.

அப்போதெல்லாம் அவனுக்குப் புரியும் வகையில் அம்மா அவனுக்குப் பல விளக்கங்களைக் கொடுத்திருக்கின்றாள்.

'உனக்கு உயிர் தந்து, சுவாசிக்க மூச்சுக்காற்றும் தந்து, உன்னை நிறை வடிவமாகப் படைத்தவர் கடவுள். உண்ண உணவும், பருக நீரும் தந்து, உனது உயிர் வாழ்வுக்கு உறுதுணையாக இருப்பவர் கடவுள். உடுப்பதற்கு உடையும், இருப்பதற்கு இடமும், படிப்பதற்கு படிப்பும், அறிவதற்கு அறிவும் தருபவர் கடவுள். அப்படியெல்லாம் உனக்குத் தந்து கொண்டிருக்கும் கடவுளை இருக்கிறாரா? இல்லையா? என்று நீ சந்தேகப்படுவது சரியல்ல மகனே!'

அப்போதை பல விளக்கங்களில் சுமதியின் ஒரு விளக்கம் இதுவாகும்.

"அப்படியானால் நீங்களும், அப்பாவும் எனக்கு எதையுமே தரவில்லையா அம்மா?'

அப்போது அம்மாவிடம் அப்பாவியாகக் கேட்பான் இளங்கோ.

"கடவுளே! நீ தான் இவனுக்கு நல்ல புத்தியைத் தரவேண்டும்." அந்தச் சமயங்களில் சுமதி ஆற்றாமையால் புலம்புவது வழக்கம்.

இளங்கோவுக்குப் பத்து வயதாக இருந்தபோது, சுற்றுலா நோக்கில் அவனை இந்தியாவுக்கு அழைத்துச் சென்றார்கள் அம்மாவும் அப்பாவும். அவர்கள் தமிழ்நாட்டில் மாகாபலிபுரம், மெரீனாபீச், ஊட்டி, கொடைக்கானல், குற்றாலம் போன்ற பல இடங்களுக்கும் உல்லாசப் பயணம் சென்றனர்.

திருவண்ணாமலை, காஞ்சிகாமாட்சி, மதுரைமீனாட்சி போன்ற பல பழம்பெரும் திருத்தலங்களுக்கும் சென்று சிவசக்தி வழிபாடு செய்தனர். அடுக்கடுக்காகக் கேள்விகள் கேட்டுக் கொண்டே வந்த இளங்கோவுக்கு அப்பா, அலுக்காமல் சலிக்காமல் பதில் சொல்லிக் கொண்டே வந்தார். நிறைவு நிகழ்வாக அவனை ஆந்திராவிலுள்ள புட்டபர்த்திக்கு அழைத்துச் சென்றனர் பெற்றோர். புட்டபர்த்தியில் பிரசாந்தி நிலையத்தில் பகவான் சத்யசாயி பாபா இருக்கிறார் என்றும், அவர் ஓர் அற்புதமான இறை வடிவத்தினர் என்றும் சொல்லித்தான் அவனை அங்கு கூட்டிச் சென்றனர்.

பிரசாந்தி நிலையத்தில் முதன் முதலில் பாபாவைத் தரிசன மண்டபத்தில் கண்டபோது, தன்னையறியாமல் இரு கரம் கூப்பி வணங்கி விட்டான் இளங்கோ. அதைக் கண்ட அம்மாவுக்கும் அப்பாவுக்கும் பெரிய சந்தோஷம். பாபா வெறுங்கையை அசைத்து, திருநீற்றை வரவழைத்து, பக்தர்களுக்கு வழங்கிக் கொண்டே வந்தார். இளங்கோ அருகில் வந்த பாபா, அவன் தலையைத் தொட்டு ஆசீர்வதித்து, உடன் திருநீற்றினையும் வரவழைத்துக் கொடுத்தார்.

ஆறுநாட்கள் புட்டபர்த்தியில் தங்கியிருந்து, ஒவ்வொரு நாள் காலையும் மாலையும் பாபாவின் தரிசனம் பெற்றுத் திரும்பினர் இளங்கோவின் குடும்பத்தினர்.

"இப்போது இறைவன் இருக்கிறார் என்னும் நம்பிக்கை உனக்கு வந்து விட்டதுதானே" வரும் வழியில் அம்மா இளங்கோவிடம் கேட்டாள்.

"பாபா ஓர் அற்புதமான மனிதர். அவர் எத்தனையோ அற்புதங்களை எங்களுக்குச் செய்து காட்டினார். அத்தனையையும் நான் அனுபவித்துப் பார்த்தேன். நான் எத்தனையோ 'மஜிக் ஷோ' பார்த்திருக்கிறேன். அதிலும் கூட இப்படிப்பட்ட 'மஜிக்' எல்லாம் செய்து காட்டியிருக்கிறார்கள் தானே!" என்றான் இளங்கோ.

பாபா வித்தைகள் செய்து காட்டுவதற்குப் பிறந்த மந்திரவாதியல்ல. அவர் புத்தரைப்போல், இயேசுவைப்போல் இறைவனால் இவ்வுலகுக்கு அனுப்பி வைக்கப்பட்ட இறைதூதன். இளங்கோவுக்கு இதை எப்படிச் சொல்லிப் புரிய வைப்தென்று அம்மாவுக்கும் தெரியவில்லை, அப்பாவுக்கும் தெரியவில்லை.

"தனது மூன்றாவது வயதில் தோடுடைய செவியன்.... என்று தேவாரம் பாடியவர் திருஞானசம்பந்தர். நீ சமய பாடத்தில் இது பற்றிப் படித்திருக்கிறாய் தானே! அந்த ஞானக் குழந்தையைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்." என்று ஒரு சமயம் சுமதி இளங்கோவிடம் கேட்டாள்.

"அவர் ஒரு 'ஜீனியஸ்' என்று நினைக்கிறேன்! மிகச்சிறு வயதிலேயே ஒரு பாடலை இயற்றிப் பாடுமளவுக்கான நுண்ணறிவு அவருக்கு இருந்திருக்கிறது." என்று அம்மாவின் அந்தக் கேள்விக்குப் பதில் சொன்னான் இளங்கோ.

"யாரைப் பார்த்துப் பாடினார்?" என்று கேட்டாள் அம்மா.

"இறைவன் இருப்பதாக நினைத்து ஒரு திசையைப் பார்த்துப் பாடினார்!" என்றான் மகன்.

தான் தவமிருந்து பெற்றெடுத்த பிள்ளை ஒரு நாஸ்திகனாகப் போய் விடுவானோ எனப் பயந்தாள் சுமதி.

'மனிதர்களைப் பகுத்தறிவற்ற, பாமரர்களாக்கும் சாதனங்களாக்கத் தான் சமயங்கள் எல்லாமே பயன்படுகின்றன' என்பதே இளங்கோவின் தத்துவமாக இருந்தது. இந்துக் கோயில்கள் எல்லாம் தமிழர்களின் இந்து சமயக் கலாசார மையங்கள் என்பான். சூரியன் தோன்றியதால் தான் பூமியில் உயிர்கள் தோன்றின என்றும், சூரியன் இல்லாமல்போய் விடும் காலத்தில், பூமியில் உயிரினங்களும் இல்லாமல் போய் விடும் என்றும் சொன்னான். இவற்றையெல்லாம் விஞ்ஞானிகள் எப்படிக் கண்டுபிடித்திருக்கிறார்கள் என்பதை விஞ்ஞான பூர்வமாக அம்மாவுக்கு விளங்கப்படுத்துவான்.

இவையெல்லாம் இளங்கோ மருத்துவபீடத்துக்கு அதி உயர் புள்ளிகள் பெற்றுத் தெரிவான பின்பு நடந்த விடயங்கள்.

"என்ன இளங்கோ... நீண்ட நேரமாக ஒரு இடத்திலேயே இருந்து யோசனைசெய்து கொண்டிருக்கிறீங்கள்?" சுமதி தனது சமையல் வேலைகளை முடித்துக் கொண்டு வந்து இளங்கோவிடம் கேட்டாள்.

"நீங்கள் சொன்ன அந்தக் கரு முட்டை விடயம் பற்றித்தான் யோசிக்கிறேன் அம்மா!' என்றான் இளங்கோ.

சுமதிக்குப் பெரிய கொண்டாட்டமாக இருந்தது. தனது மகன் இறைவனின் இருப்பை உணர்ந்து கொள்ள இதுவே போதுமாய் இருக்கும் என்று அவள் நம்பினாள். "நிலமும், நீரும், நெருப்பும், காற்றும், அகாயமும் இந்தப் பஞ்ச பூதங்களுக்கெல்லாம் அதிபதியானவர் இறைவனே தான். இந்த ஐம்பெரும் பூதங்களும் தான் மனிதர்களின் உயிர் வாழ்வுக்கு ஆதாரமானவை என்பது உனக்குத் தெரியும். இறைசக்தி என்பது ஒன்றே ஒன்று தான். அந்த ஒரு சக்தியைப் பல வழிவமாக்கி இந்து சமயத்தவர் நாங்கள் வணங்கி வழிபடுகின்றோம்." என இளங்கோவுக்கு விளக்கம் கொடுத்தாள் சுமதி.

இளங்கோ சிரித்தான்.

'பஞ்சபூதங்கள் எல்லாம் இயற்கையின் கொடைகள் அம்மா! அந்த இயற்கையின் நியமம் தான் ஆணிடம் உருவாகும் விந்தணுக்களும், பெண்ணிடம் உருவாகும் கருமுட்டைகளும். இதுதான் எனது முடிவு" இளங்கோ தனது முடிவைத் தாயிடம் தெரிவித்து விட்டான்.

"இயற்கைக்கும், இறைவனுக்கும் வேறுபாடுகள் இல்லை. இரண்டுமே ஒன்றுதான் என்பது உனக்குத் தெரியுமோ?"

சிறுகதை



சந்திரா தனபாலசிங்கம்

சண்டிலிப்பாயைச் சேர்ந்தவர். சிறுகதை உட்பட பல்வேறு எழுத்துத் துறைகளிலும் தடம் பதித்தவர். இவர் வெளியிட்ட ஐந்து நூல்களில் 'வைரப் பனைமரம்', 'பிறந்துவிட்ட புதுயுகத்தில்' ஆகியன பரிசுபெற்ற நூல்கள் ஆகும்.

இறைவன் இருக்கின்றான்!

"இயற்கை தான் இறைவன் என்று சொன்னால் அந்த இறைவனை நாங்கள் எங்கிருந்து கொண்டும் வணங்கலாம்தானே!'

'வணங்கலாம்தான். சித்தர்களும், சிவயோகிகளும் அப்படித்தான் செய்தார்கள். காடுகள், மலைகள், ஆறுகள், குளங்கள் என்று இயற்கை வளம் செறிந்த இடங்களில் சென்று, தவம் இருந்து, இறைவனைக் கண்டுணர்ந்தார்கள். எங்களைப்போல சாதாரண மனிதர்களுக்கு கோயில்கள் தான் சரியான இடம். அங்கே தான் மனதை ஒரு நிலைப்படுத்தி இறைவனை வணங்கி வழிபடமுடியும். அங்கே சொல்லப்படுகின்ற மந்திர உச்சாடனங்களின் அதிர்வுகள் மனிதர்களை உயர்நிலைக்குக் கொண்டு செல்லும். கோயிலில் ஒலிக்கின்ற தேவாரங்களும், திருவாசகமும் இறைவனின் இருப்பை உணரச் செய்யும். அங்கே நெறிப்படுத்துகின்ற விரதகால நெறிமுறைகள் சரியான விரத அனுட்டானங்களைக் கடைப்பிடிக்கச் செய்யும். அதனால் தான் மனிதர்கள் கோயில்களைத் தேடிச் சென்று பூசை, புனஸ்காரங்களில் பங்குபற்றுகிறார்கள்." சுமதி இளங்கோவின் கேள்விக்கு நீண்ட விளக்கம் கொடுத்தாள்.

"அதுசரி தான் அம்மா, கோயிலுக்குப் போகிறவர் எல்லோரும் குளித்து முழுகிச் சுத்தமான ஆடைகள் அணிந்து போகிறார்கள் என்பதை, கண்டாலே தெரிந்து கொள்ள முடியும். ஆனால், அவர்கள் சுத்தமான மனதுள்ள நல்ல மனிதர்கள் தான் என்பதை யாரால் கண்டறிய முடியும்?'

"நாய் வாலை நிமிர்த்தினாலும் நிமிர்த்தலாம். ஆனால் உனது வாலை நிமிர்த்தவே முடியாது தம்பி. தன்னைத்தானே நம்பாதது சந்தேகம். சந்தேகங்கள் மனித வாழ்வைக் குலைத்து அழித்து விடும். நம்பிக்கை ஒன்றே தான் மனித வாழ்வுக்கான பலமான அடித்தளமாக இருக்கும். நீ திருந்த வேண்டும். இல்லாமல்போனால் நீ எத்தனை பெரிய பதவிக்கு வந்தாலும் பயன் இல்லாமல் போய் விடும் தம்பி."

சுமதி வருத்தத்துடனும், கோபத்துடனும் சொல்லி விட்டு அவ்விடம் விட்டு அகல முற்பட்டாள். அப்போது இளங்கோ அம்மாவைப் பாய்ந்து பிடித்துக் கொண்டான்.

"அம்மா நான் கேட்கின்ற இந்த ஒரு கேள்விக்கு மட்டும் பதில் சொல்லி விட்டுப் போங்கோ. நீக்கமற நிறைந்திருப்பவர் கடவுள் என்றால், இலங்கையின் இறுதிப் போரின்போது, கடவுள் தன்னுடைய கண்களை மூடிக் கொண்டோ இருந்தவர்?" இளங்கோ சுமதியின் கண்களை நேருக்கு நேர் பார்த்துக் கொண்டே தான் இந்தக் கேள்வியைக் கேட்டான்.

மனிதர்கள் தாங்கள் செய்யும் செயல்கள் தோல்வியடையும்போது மிகவும் சுலபமாக இறைவன் மேல் பழியைப் போட்டு விட்டுத் தப்பித்து விட நினைக்கிறார்கள். கடவுள் மனிதரை ஆறறிவுடன் படைத்து விட்டதே பேரறிவுடன் வாழ்வதற்காகத்தான். ஆகவே மனிதர்கள் தான் தமது பகுத்தறிவைப் பயன்படுத்திப் பெறுமதியுள்ள வெற்றிகளைப் பெற்றெடுக்க வேண்டும்.

"நீ இதற்கு மேல் கேள்விகள் கேட்டால், என்னிடமும் சொல்வதற்கு பதில் ஒன்றும் இல்லை. தாயின் மடியில் தொடங்கி சாவின் பிடியில் முடிவது தான் மனிதரின் உயிர்வாழ்வு.

அந்தச் சாவு அர்த்தமுள்ள சாவாக அமைந்து விடுவது நல்லதொரு கொடையாகும். உலகின் உச்ச கட்டத் தியாகமே உயிர்த்தியாகம் தான். மனிதர்களால் தொடங்கப்படுகின்ற எல்லாச் செயல்களுக்கும் முடிவு என்ற ஒன்று இருப்பது இயல்புதான். இது இப்படித்தான் முடிய வேண்டும் என்னும் நியதி இருந்தால் அது அப்படித் தான் முடியும்.

மனிதர்கள் தாங்கள் செய்யும் செயல்கள் தோல்வியடையும்போது மிகவும் சுலபமாக இறைவன் மேல் பழியைப் போட்டு விட்டுத் தப்பித்து விட நினைக்கிறார்கள். கடவுள் மனிதரை ஆறறிவுடன் படைத்து விட்டதே பேரறிவுடன் வாழ்வதற்காகத்தான். ஆகவே மனிதர்கள் தான் தமது பகுத்தறிவைப் பயன்படுத்திப் பெறுமதியுள்ள வெற்றிகளைப் பெற்றெடுக்க வேண்டும்.

போர் புரிவால் மட்டும் எந்தப் பிரச்சினையையும் தீர்த்து வைக்க முடியாது. முப்பது வருட காலங்களுக்கும் மேலாகப் போர் புரிந்த பின்பு தமிழர்கள் நாம் கற்றுக் கொண்ட பாடம் தான் இது'

சுமதி இவற்றையெல்லாம் மூச்சுவிடாமல் சொல்லி முடித்தபோது, இளங்கோ வாயடைத்துப் போய் நின்றான்.

கவிதைகள்



கோகுல ராகவன்

இரட்ணசிங்கம் கோகுலராகவன் புலோப் பளையைச் சேர்ந்தவர். யாழ்ப் பாணம் புத்தூர் இந்து ஆரம்பப் பாடசா லையின் அதிபராகவுள்ளார். 1998களில் இருந்து சிறுகதை, கவிதை, பத்தி எழுத்துக்களை எழுதி வருகிறார். 'குழைக்காட்டுக் கதைகள்', 'யாருமே காணாத ஒரு துளிக் கண் ணீர்' ஆகியன உதயனில் இவர் எழு திய தொடர்கள்.



பெரும் வெளி...

வெளி பெரு வெளி
நீண்டு அகன்று செல்கின்றது
மரம், செடி, கொடி இதர பிற
எதுவும் இல்லை.
நிழல்
வானம்
கடுங்காற்று
பட்டென்று முறித்து படக்கென்று வீசி
விட்டொழிந்து போயிற்று;
எஞ்சிய கனவு
அற்றவை அற்றுப்போனவைதான்
விட்டவை விட்டுப்போனவைதான்
பறைவையாய்
பாம்பாய்
மனிதராய்
வல்லசுரராகி
தின்றவை தின்றதுதான்
கொன்றது கொன்றதுதான்
பாவம்
புண்ணியம்
தர்மம்
நியாயம்
எழுதியது எழுதியதுதான்
பேசியது பேசியதுதான்
வெளி
இனியது பெரும் வெளி



சமன்பாடுகள்

மெல்லிய காற்று எழுதும் பாடலை
யார் தான் பாடுவர்?
நான்
நீ
மற்றும்
அந்தப் பெண்
குடும்பம் அவள் = துயரம்
குழந்தை அவள் = அவலம்
அவலம்ல அவலம் = அவலம்2
பாடல்கள் அல்ல சமன்பாடுகள்.
உருவாக்கப்பட்டவை
கழி
பெருக்கு
கூட்டு
பிரி
அழி
உனது
வானம்
கடல்
பூமி
யார்
உயிர்
கண்ணீர்
அவலம்
பாடல்
பாட யாரும் இல்லை.
சய.
கழித்தலின் குறியீடு
மட்டுமல்ல.



கட்டுரை



மாதகலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 40வருடங்களாகக் கூட்டுறவுச் சங்கப் பணிகளில் ஈடுபட்டு, பண்டத்தரிப்பு கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளராக இருந்த ஓய்வு பெற்றவர்.

க.நா.சபாரத்தினம்

கூட்டுறவு அமைப்பின் வளர்ச்சியில் அக்கறை கொள்ளவேண்டியது அங்கத்தவர்களும் பணியாளர்களுமே

ஓர் அமைப்பு உருவாகுவதற்கு அந்தந்தக் காலங்களில் அந்தச் சூழலில் உள்ள தேவை களை இலகுவாகப் பூர்த்திசெய்ய எடுக்கப்படும் முயற்சிகளே காரணமாகும். இந்த வகையில் ஏறத்தாழ ஒரு நூற் றாண்டுக்குமுன்னர் இங்கிலாந்தில் ஆரம்பிக்கப்பட்டகூட்டுறவு இயக்கமானது வளர்ச்சியடைந்து ஏனைய நாடுகளிலும் வியாபித்தது.

இதில் உணரப்படும் தத்துவம் தனிமனிதனாக நின்று செய்ய முடியாத விடயங்களைக் 'கூடி உழைத்தல்' மூலம் செய்து முடிக்கலாம் என்பதாகும். கூடி உழைக்கும் எல்லோரும் பயனடைவதுடன் முதலாளி வர்க்கச் சுரண்டலிலிருந்து விடுபடவும் முடியும். இந்த வகையில்தான் கூட்டுறவு அமைப்பு ஏனைய நாடுகளைப்போல் இலங்கையிலும் மக்களுக்குப் பயனுள்ள ஒரு அமைப்பாகச் செயற்பட்டு வந்தது. நுகர்ச்சி, விற்பனை, கடன்வழங்கல், போக்குவரத்துஏனைய பல துறைகளிலும் பலம்பெற்றது. கூட்டுறவு அமைப்பின் எஜமான்கள் அங்கத்தவர்களேயாகும். தாமும் தம்முடன் இணைந்த வர்களும் கூடி ஆரம்பித்த அல்லது முன்பு ஆரம்பிக்கப் பட்ட அமைப்பில் இணைந்து கொண்ட அனைவரும் இதன் எஜமான்கள் தான். தங்கள் தொழிற்பாட்டை இலகுபடுத்தி நிர்வகிக்க ஜனநாயகமுறைப்படி சட்டதிட்டங்களையும் நிர்வாக அமைப்புக்களையும் உருவாக்குவதுடன் தேவைக்கேற்ப பணியாளர்களை நியமித்துச் செயற்பட்டு வந்தது கூட்டுறவு அமைப்பு. காலநிலைமாற்றம், பொருளாதாரக் கொள்கைமாற்றம் என்பன ஏற்படும்போது இந்த அமைப்புக்களில் சில பகுதிகள் சில பின்னடைவுகளைச் சந்திக்கும் நிலமை ஏற்படுகிறது.

ஒவ்வொரு அங்கத்தவனுக்கும் இந்த அமைப்பைப் பலவீனமடையாது பாதுகாக்க வேண்டிய கடமை உண்டு.

பின்னடைவுகள்

1957ஆம் ஆண்டு, அப்போதிருந்த விளைபொருள் உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்கள், அந்தக் கால அரசின் உணவுப் பங்கீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காகப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களாக மாற்றியமைக்கப்பட்டன என அறிய முடிகிறது. பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்ந்து பங்கீட்டு முறையான சேவையுடன் உற்பத்தி, கடன் வழங்கல் ஏனைய சேவைகளையும் திறம்படச் செய்தன. இதற்கான சான்றுகளாகப் புடவை உற்பத்தி நிலையங்கள், பாண் உற்பத்தி எனப் பலதரப்பட்ட உற்பத்திகள் இவற்றில் மேற்கொள்ளப்பட்டமையைக் குறிப்பிடலாம். கிராமிய வங்கிமுறை உருவாக்கப்பட்டு அங்கத்தவர்களை சேமிப்பு பழக்கத்தில் ஈடுபட வைத்தமை, இலகுகடன் வசதிகளை ஏற்படுத்தி அங்கத்தவர்கள் பயன்பாடு அடையவும் வழிவகுத்தன.

திறந்த பொருளாதாரக்கொள்கை அறிமுகமானதும் புடைவை உற்பத்தி பெரிய நட்டத்தை ஏற்படுத்தியது. அதிலிருந்து மீள்வதற்குப் ப.நோ.கூ.சங்கங்கள் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்கின. பங்கீட்டுப் பொருள் விநியோகம் காலகதியில் மாற்றம் அடைந்தது. வருமான இழப்பைச் சந்திக்கவேண்டிய நிலமை ஏற்பட்டது. இருப்பினும் அனுபவம் வாய்ந்த பணியாளர்களின் நேர்மையான உழைப்பும், விசுவாசமான கூட்டுறவாளர்களின் நெறிப்படுத்தலும், சுயமுயற்சி வியாபார நடவடிக்கைகள் மூலம் முடியுமான அளவு திறம்படச் செயற்பட்டன. சில நிர்வாக அமைப்புக்களில் போதுமான ஆளுமையின்மை, பணித்தொகுதிகளில் வினைத்திறன் குறைந்தவர்களும், சேவை மனப்பான்மை குறைந்தவர்களும் உள்வாங்கப்பட்டமை, போதுமானதிணைக்களமேற்பார்வையின்மை போன்றகாரணங்களால்பின்னடைவுகளைச்சந்திக்க வேண்டிய நிலைக்குச் சில கூட்டுறவு அமைப்புக்கள் செல்ல வேண்டியிருந்தன.

பின்னடைவுகளில் இருந்து மீளுதல்

உற்பத்தித்துறையில் கள் உற்பத்தியை மரவரி முறையில் இருந்து தவறணை முறைக்கு மாற்றிக் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டுவந்து அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்த அந்தக் காலத்திலிருந்த நிதி அமைச்சராகவிருந்த கலாநிதி என்.எம்.பெரேரா வழிசெய்தார். இந்தத் தொழிலாளர்கள் இதன் பயனை தற்போதுவரை பெற்றுவருகிறார்கள். இதில் உற்பத்தியாளர்களே நிர்வாகிகளாக இருக்கமுடியுமென்பதால் அவர்களது அக்கறை காரணமாகப் பெரும்பாலான அமைப்புக்கள் திருப்திகரமாக இயங்கிவருகின்றன. இத்துடன் உற்பத்தியாளர்களுக்கு விபத்துக் கொடுப்பனவு, ஓய்வூதியத் திட்டம் என்பவற்றை நடைமுறைப்படுத்துவதும் சிறப்பம்சமாகும்.

அரச கொள்கை மாற்றம் காரணமாகப் பங்கீட்டு முறை நீக்கம், இலவச உணவுப் பொருள் விநியோக நிறுத்தம் என்பவற்றால்நுகர்ச்சிப்பகுதிதொழிற்பாட்டைமேற்கொள்ளும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அவற்றினூடாகப் பெறப்படும் வருமானம் பாதிப்பை ஏற்படுத்தியது. பின்னர் சமூர்த்திப் பொருள் விநியோகம் மாற்றமடைந்து அதுவும் இந்தப் பகுதியிலிருந்து விடுவிக்கப்பட்டது. 1957ஆம் ஆண்டில் விளைபொருள் உற்பத்தி கூட்டுறவாக இருந்த சங்கங்கள், அரச முயற்சியால் ப.நோ.கூ.சங்க அமைப்பாக மாற்றஞ் செய்யப்பட்டன. தற்போது அரச பங்கீட்டுப் பொருள் விநியோகத்தின்போது சிலவற்றைத் தனியாரும் செய்வதற்கு அரசு சந்தர்ப்பம்வழங்குகிறது. இதுகவலைக்குரியவிடயமாகும். பாடசாலைப் பொருள் விநியோகம், போசாக்குணவுப் பங்கீடு, மாணவருக்கான புடைவை விநியோகம், எனைய உணவுப் பொருள் விநியோகங்கள் போன்ற பலவற்றையும் ப.நோ.கூ.சங்கங்கள் மூலம் விநியோகிக்க வேண்டியது அரசின் பொறுப்பாகும். இது தவிர ச.தொ.ச. அமைப்பை வலுப்படுத்திப் பொருள் விநியோகம் செய்ய அரசு சில சந்தர்ப்பங்களில் முயற்சி எடுக்கின்றது. மேற்படி விடயங்களைத் தெளிவுபடுத்தி கூட்டுறவுச் சங்க நிர்வாகங்கள், அரசியல் தலமைகள் மக்கள் பிரதிநிதிகள் முன்னின்று, போதுமான அழுத்தங்களைக் கொடுத்துப் பங்கீட்டுப் பொருள் விநியோக உரிமையைக் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பெற்றுக் கொடுக்க முயற்சிக்க வேண்டும். விநியோக முறையில் தவறுகள் ஏற்படுமாயின் அதை மேற்பார்வை செய்ய அரச நிர்வாகப் பகுதியாகிய கூட்டுறவுத் திணைக்களம் உண்டு. கூட்டுறவுத் திணைக்களத்தில் நிலவும் ஆளணி வசதிக்குறைவை நிவர்த்தி செய்து சகல செயற்பாடுகளையும் மேற்பார்வை செய்வது அவர்களது பொறுப்பாகும்.

கூட்டுறவுக் கட்டமைப்புக்குள் திருத்தம் தேவை

கடந்த காலத் தவறுகள் காரணமாக ஓய்வுபெற்ற பணியாளர்கள் சிலர் தங்கள் கொடுப்பனவுகளைப் பெற முடியாத நிலைமையும் ஒழுங்குமுறைக்கு மாறான நிதிப்பாவனை செய்து சொத்துக்கள் விற்கும் நிலை உருவான நிலையும் இனிமேல் கூட்டுறவுச்சங்கத்தினருக்கு ஏற்படாதிருக்க கண்டிப்பான மேற்பார்வை அவசியமாகும். கூட்டுறவுத் துறை பணியாளர்கள் ஏனைய அரச ஊழியர்கள்போல் வேலை நேரம், ஊதியம், ஏனைய சலுகைகள் பெற விருப்பமுடையவர்கள். உரித்துடையவர்களுமாகும். அதே நேரத்தில் வாடிக்கையாளரின் தேவைகளை அவர்களுக்குத் தேவையான நேரங்களில் வழங்க வேண்டும் என்பது ஊழியர்களுக்குரிய உழைப்பில் இருந்தே பெறப்படல் வேண்டுமென்பதும் உணரப்படல் வேண்டும்.

தொடர்ந்து ஒரேபகுதியில் உள்ளவர்கள் நிர்வாகச் செயற்பாட்டில் இருந்து வருவதால் அங்கத்தவர்களுக்கிடையிலான தொடர்பாடல் குறைந்து செல்கிறது. கூட்டுறவுச் சங்கங்களின் பின்னடைவுக்கு இதுவும் ஒரு காரணமாக அமைகின்றது.

கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள சில நிர்வாக அமைப்புகள் மாற்றமடையாமல் தொடர்ந்தும் இருப்பதன் மூலம் தாங்கள் விரும்பியவற்றை நீண்டகால நோக்குடன் அணுகாது செயற்படுத்துவதும், தங்கள் பதவிக்காலத்தில் ஏற்படும் பிணக்குகளுக்குத் தீர்வு காணத் தவறுவதும், தீர்க்காது விட்டுச் செல்வதும் இந்த நிறுவனத்தின் வளர்ச்சியைப் பாதிப்படையச் செய்கின்றது.

கூட்டுறவுத் துறைக்கான கூடுதல் பொறுப்பு மாகாண சபைக்கு வழங்கப்பட்டிருப்பதால் அவர்கள் திணைக்கள உதவியுடன் சரியான மேற்பார்வை செய்து இதன் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்க வேண்டும். கூட்டுறவுத் திணைக்களத்தின் உதவியுடன் வருடாந்தம் அவற்றின் செயற்பாடுகள் தொடர்பான ஒப்பீடுகள் பெறப்படுவதுடன் அந்தத் தகவல்கள் அங்கத்தவர்களைச் சென்றடைய வழிவகுத்தல் வேண்டும். இவற்றில் நிதியாண்டு காலத்தில் ஏற்பட்ட பிணக்குகள் தீர்க்க முடியாதிருப்பின் அது தொடர்பான விவரம், புதிய தொழில் முயற்சி தொடர்பான விவரம், நீண்ட கால வருமதிகள் அறவிட முடியாதிருப்பின் இதற்குரிய காரணிகள் என்பலவும் தெளிவுபடுத்தப்பட்டு குறிப்பிடுதல் வேண்டும்.

மாகாண சபையானது மத்திய அரசின் அனுசரனையுடன் பின்வரும் விடயங்களைச் செயற்படுத்த உரிய ஒழுங்குகள் செய்தல் வேண்டும்.

1. ப.நோ.கூ. சங்கங்களுக்கு அரச பங்கீட்டு பொருள் விநியோகத்துக்கான ஏகபோக உரிமையைப் பெற்றுக் கொடுத்தல்.
2. கடன் மூலம் மக்கள் படும் துன்பங்களிலிருந்து விடுபட கிராமிய வங்கிகள் மூலமும் ஏனைய கடன் வழங்கும் நாணய சங்கங்கள் மூலமும் கடன் வழங்கும் திட்டங்களை விரிவுபடுத்தி வழங்க ஒழுங்குகள் செய்தல்.

இவற்றின் மூலம் மக்கள் பயனடைவதுடன் சங்கங்களும் வளர்ச்சியடையும். அரச அதிபர்களின் அனுசரனையைப் பெற்று புதிய செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தவதற்குக் கூட்டுறவுச் சங்க நிர்வாகங்கள் முயற்சி எடுத்தல் வேண்டும். மாகாண சபையானது தங்கள் நிர்வாக அமைப்பின் கீழ் அல்லது மாவட்ட கூட்டுறவுச் சபை மூலம் அங்கத்தவர், பணியாளர்கட்கு கல்விப் பயிற்சி, தொழில்நுட்பப் பயிற்சிகளை வழங்க முன்வருவதுடன் மக்கள் மத்தியில் கூட்டுறவு தொடர்பான விழிப்பை ஏற்படுத்தும் வகையில் பத்திரிகை வெளியீடு என்பவற்றையும் செய்ய முன்வர வேண்டும். இந்த அறிக்கைகளைத் தங்களுக்கு விடுக்கப்படும் கவன ஈர்ப்பாகக் கருதி ஆய்வுசெய்து உரியநடவடிக்கைமேற்கொள்ளவேண்டியது மாகாண அமைச்சினதும் மாகாண நிர்வாகத்தினதும் கடமையாகும்.

அங்கத்தவர், பணியாளர் பங்களிப்பு

ஓர் அமைப்பில் அங்கத்தவனாக இருப்பவன் அதன் கொள்கைகளில் பற்றுடையவனாகவும் அதைச் சரியாகக் கடைப்பிடிப்பதுடன் அந்த அமைப்பில் இருக்கும் ஏனையவர்களும் அதற்கமைய இயங்குகிறார்களா என்பதையும் அவதானிக்க வேண்டும். அல்லாதவிடத்து ஒரு சில மனிதர்களால் அவர்கள் தம் வழியில் அமைப்பை முன்னோக்கிச் செல்ல முயற்சித்தலும் உருவாகும். இதைச் சீர்செய்யாதுவிடின் இது தனது நோக்கத்திலிருந்து விலகிச் சென்றுவிடும். ஒரு பயிரை வளர்த்து பயன்பெற முயற்சிக்கும் போது புற்களும் வளர்கின்றன. இதை யாம் அவதானித்துக் களை (புல்) பிடுங்கத் தவறுவோமாகின் யாம் எண்ணிய பெறுபேறு என்பது எப்படி அமையும்? பயிரைப்புல்மூடிவிடும். ஒவ்வொரு அங்கத்தவனுக்கும் இந்த அமைப்பைப் பலவீனமடையாது பாதுகாக்க வேண்டிய கடமை உண்டு. குடும்ப அமைப்பில் இணைந்து கொள்ளும் ஒவ்வொருவரும் தங்களில் யாராவது ஒருவராயினும் ஒழுங்கான வழியை விட்டு விலகிச் செல்வார்கள் எனக் கருதுமிடத்து அவர்களை உரிய வழிப்படுத்திக் கௌரவமான குடும்பமாக வைத்திருக்க முயற்சிப்பதுபோல் இந்த அமைப்பிலுள்ள சகல அங்கத்தவர்களையும் தீர்க்கமுடையவர்களாக இணைத்துச் செல்ல வேண்டிய பொறுப்பு ஒவ்வொருவருக்கும் உண்டு. இவ்விதமான அக்கறை இருக்குமாயின் கூட்டுறவுச் சங்கம் என்பது பலவீனப்பட இடமில்லை.

"கூட்டுறவே நாட்டுயர்வு"
"கூடி வாழ்ந்தால் கோடி நன்மை"

பதுங்குகுழி

சிறுகதை



ந. மயூரரூபன்

வடமராட்சி– அம்பனைச் சேர்ந்தவர். தற்போது கரவெட்டி பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக உள்ளார். சிறுகதை, கவிதை, விமர்சனம், நாடகம் ஆகிய துறைகளில் ஆர்வம் உடையவர். 'சமூகப் பிரச்சினைகள் சில சமூகக் குறிப்புக்கள்' என்ற சமூகவியல் நூலையும் 'நீயுருட்டும் சொற்கள்' எனும் கவிதைத் தொகுதியையும் 'சொற்குவியம்' என்ற விமர்சனக் கட்டுரை நூலையும், 'மரத்தில் தொங்கும் பாம்பு' என்ற சிறுகதைத் தொகுதியையும் வெளியீடு செய்திருக்கிறார். தளவாசல் காலாண்டிதழின் இணையாசிரியர்.



உருவத்தில் மிக மெலிந்த, உயரங்குறைந்த தோற்றத்தில் தற்போது குடியிருக்கும் அவன், தன்னை வீரசிங்கம் இரத்தினகுமார் எனப் போதகரிடம் அறிமுகப்படுத்திக் கொண்டான். சுதந்திர புரத்திலிருக்கும் அந்த ஆலயத்துக்குப் போதகர் ஆனந்தம் றொகான் கடந்த மரதந்தான் தனது கடமையைப் பொறுப்பேற்றுக்கொண்டிருந்தார். அவருக்கு மிக இளவயது, ஆயினும் தனது எண்ணங்கள் தொடர்பில் மிக மேலான மதிப்பீடுகளை அனைவரிலும் ஏற்படுத்தியிருந்தார்.

அவரது ஆள்மன எண்ணமும் அதுவாகவே இருந்தது. அதற்கேற்ற வகையிலேயே அவரது நடவடிக்கையும் இருப்பதை உணரமுடிந்தது. தன்னை ஒரு ஆசிரியனாக அடையாளப்படுத்தியிருந்த இரத்தினகுமார், போதகர், றொகானின் முன் வெகுவாக சங்கடப்பட்ட தோரணையிலேயே அமர்ந்திருந்தான். போதகர் அவனது முகத்தை மிக உன்னிப்பாகப் பார்த்தார். நீண்டநேரம் பார்த்தபடியே இருந்தார். இரத்தினகுமார் அடிக்கடி அவரது முகத்தை நமிர்ந்து பார்ப்பதும் பின்னர் தலையைக் குனிவதுமாக இருந்தான். இடைக்கிடை கால்களை அப்படியும் இப்படியுமாக

அசைத்துக்கொண்டான். அவனால் தொடர்ந்து அவ்வாறு இருக்கமுடியவில்லை. போதகர் மேலும் கீழுமாக தலையை ஆட்டிக்கொண்டார். இறுதிப் போரில் அவனது மனைவியும் பிள்ளைகளும்

இறந்துவிட்டதன் பேதலிப்பு அவனது முகத்திலும் உடலிலும் இருப்பதை உறுதிப்படுத்திக்கொண்டிருந்தார்.

இரத்தினகுமாரும் எப்போதும் பதற்றத்தை தன் மேல் போர்த்திக் கொண்டவன் போலவேயிருந்தான்.

சிரிப்பதற்கு அதிகம் சிரமப்பட்டான். சிரிக்க முனையும்போது உதடுகள் மட்டும் கட்டளைக்கு விரிவதுபோல் விரிந்து பின் மூடிக்கொள்ளும். பற்கள் ஒழுங்கற்றும், அதிகமாய் கறைகளைப் பூசிக் கொண்டனவாயும்

காணப்பட்டன. மிகத் தொலைவைப் பார்ப்பதற்கு ஆசைப்பட்டவன்போல அவனது பார்வை தூர எறியப்பட்டிருப்பதைப் போதகர் றொகான் கண்டுகொண்டார். இதனால் அவருக்குள்ளும் சிறிது பதற்றம் தொற்றிக்கொண்டது.

நடுக்கமாகவும் இருக்கலாம், அந்தக் கணத்தில் அதைச் சரியாக இனங்கண்டு கொள்ள முடியவில்லை. தனியாக யாருமற்று இரத்தினகுமார் இருப்பதைக் கண்டுகொண்ட போதகர் றொகான், இரத்தினகுமாரைத்

[illegible]டனேயே இருத்திக்கொண்டார். [illegible]லை நேரம் போக மீதி நேரங்களில் போதகருடனேயே இருக்கமுனைந்தான் இரத்தினகுமார்.

தனிமையின் பிடிக்குள் இருந்து தன்னை விடுவித்துக் கொள்வது அவனுக்கு மிகக் கடினமாகவே இருந்தது. ஆலயத்துள் அதிக நேரம் மௌனமாக இருக்கத் தன்னைப் பழக்கப் படுத்திக் கொண்டான். சிலுவையில் அறையப்பட்ட இயேசுவின் உருவத்தைப் பார்த்தபடி நீண்டநேரம் அமர்ந்திருப்பான். றோகான், இரத்தினகுமாரின் இந்த

இருப்பை அவதானித்தபோதும் அவனைத் தொந்தரவு செய்யாமல் அவன் போக்கிலேயே விட்டுவிட்டார்.

சிலுவையிலுள்ள இயேசுவின் உருவத்தில் விழிகள் எப்போதும் நிலைத்திருந்தன.

தன்னை யாரோ பின் தெடருகிறார்கள் என்பதான பிரமை இரத்தினகுமாரின் தோள்களில் நன்றாகவே குந்தியிருந்தது. அந்தப்பிரமையில் அடிக்கடி தோள்களைக் குலுக்கிக் கொள்வான். தோள்களைக் குலுக்கிக் கொள்வது அவனது இயல்பாகவே மாறியிருந்தது. இரத்தினகுமாரின் ஆலய இருப்புக்கண்டு போதகர் றோகான் அவனுக்கு ஞானஸ்நானம் செய்தார். அவன் போதகரிடம் தன்னுடைய மதத்தைப் பற்றியோ கடவுளைப் பற்றியோ அல்லது ஆன்மிகத்தைப்பற்றியோ எப்போதும் வாய்திறந்து உரையாடியதில்லை. அவனது தூரத்தில் கொழுவிய பார்வையும், ஆலயத்

தனித்திருப்பும், இயேசுவின் மீதான பார்வை நிலைப்பும் இரத்தினகுமாரைக் கிறிஸ்தவனாக்கியிருந்தன. கர்த்தர் அவனது வாழ்வின் கிருபைக்குத் துணையிருப்பார் எனப் போதகர் றொகான் முழுமையாக நம்பிக்கை வைத்தார்.

இப்பொழுதெல்லாம் கிறிஸ்தோபர் இரத்தினகுமார் பைபிளுக்குள் தனது பார்வையை நிலைத்திருக்கப் பழக்கிக் கொண்டான். இரவுகளிலும் தொடர்ந்து பைபிளுக்குள் தனது பார்வையைக் கொழுவியிருந்தான். ஆலயத்தின் மேலே பார்த்த, சிலுவையில் அறையப்பட்ட இயேசுவின் அந்த உருவம் பைபிள் தாள்களில் நீர்த் தோற்றமாய் அசைந்தது. அது அவனது விழிகளை எப்போதும் அழைத்து வைத்திருந்ததை யாருமே அறிந்திருக்கவில்லை.

திடீரென அந்தத் தாள்களிலிருந்து விழிகளைப் பிடுங்கிக் கொள்பவன் தனது தோள்களைக் குலுக்கிக் கொள்வான். பின்னர் விழிகள் மெல்ல மெல்ல அந்த நீருக்குள் இறங்கும். அங்கு சிலுவையில் தொங்கும் இயேசுவை அவை தேடிக் கொண்டேயிருக்கும். கிறிஸ்தோபரின் ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் பார்த்த றொகான் போதகருக்கு வியப்பாக இருந்தது. ஒரு உண்மையான கிறிஸ்தவனாக இருக்க இரத்தினகுமார் உழைக்கிறான் என உணரத் தலைப்பட்டார். அதனால்

கிறிஸ்தோபருடன் விவிலியக் கருத்துகளை விவாதிப்பதற்கு அவர் முனைந்தார். எனினும் இரத்தினகுமார் அதில் பெரிதாக ஆர்வங் கொண்டவனாய்க் காட்டிக் கொள்ளவில்லை. மிகவும் அமைதியுடன் போதகர் கூறுவதை மட்டும் கேட்டுக் கொண்டிருந்தான்.

அவன் கரிசனையுடனும் மிகுந்த ஈடுபாட்டுடனும் தான் கூறுவனவற்றைக் கேட்டுக் கொண்டிருக்கிறானா என்பதைப் போதகரால் அறிந்துகொள்ளமுடியவில்லை. அவன் இடைக்கிடைத் தனது தோள்களைக் குலுக்கிக் கொள்வதை மட்டுமே

அவரால் கண்டுகொள்ள முடிந்தது.

ஆயினும் கிறிஸ்தோபரின் பைபிள் படிப்பு தொடர்ந்து கொண்டேயிருந்தது. விழிகள் தொடர்ந்து நீர்ச்சலனத்துள் மிதந்து படிப்படியாக நீந்தத் தொடங்கியிருந்தன. இயேசுவின் உடல், காயங்களின் செம்மையில் உயிர்த்திருந்தது. குருதிப் பொட்டுகள் நீரில் விழுந்து கீழிறங்கிப் பின்னர் உடைந்து நீரில் அடர்ந்தன. முக்குழித்துச் சுழியோடப் பழகிக் கொண்ட அவனது கண்கள் செந்நீர் அடர்த்தியின் வலிகளில் தத்தளித்தன. மீண்டு பின்னும் தத்தளித்தன.

தொடர்ந்து தத்தளிக்கத் தத்தளிக்க, வலிகள் புதிது புதிதாய் உயிர்த்தெழுவதை விழிகள் தொடர்ந்து பார்த்துக் கொண்டேயிருந்தன.

பொதுவாக இரத்தினகுமாருக்கு இரவுகளில் நித்திரை வருவதில்லை. பெரும்பாலான இரவுகள் இரத்தினகுமாரின் விழிப்புகளை மட்டுமே காவிச் சென்றன. இது கிறிஸ்தோபர் இரத்தினகுமாராக அவன் மாறிய பின்னும்

தொடர்ந்தது. அவனது விழிப்பு நேரங்களில் பெரிதாக மாற்றங்கள் எதுவும் நிகழ்ந்திருக்கவில்லை. அதேபோல் தனிமையில் தன்னுடலை வைத்திருப்பதைத் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தான். அவனது மூளையும் மனமும் முழுமையான விழிப்புடன் இருளுக்குள்ளும், இருள் கடந்தும் தொடர்ந்தும் அலைந்தபடியே இருந்தன. நைலோன் கயிறொன்று அந்தத்தரத்திலிருந்து தொங்கிக் கொண்டிருந்தது. சற்றுப் பழுப்பேறிய நீலநிறக் கயிறு. அதன் கீழ்முனையில் 'யட்டி'யுடன் ஒருவன் தொங்கிக் கொண்டிருந்தான். குள்ளமான மெலிந்த தோற்றத்திலிருந்த அவனது வெற்றுடம்பிலிருந்து வியர்வை கரைந்து கொண்டிருந்தது. அவனது தலைக்குக் கீழே சிறு தொட்டியொன்று, அதற்குள் நீர் நிறைந்திருந்தது.

சற்றே ஊத்தை கலந்த செம்மையேறிய அந்த நீர் சலனப்பட்டுக் கொண்டேயிருந்தது.

மெதுவாக ஒவ்வொரு இஞ்சிகளாய் இறங்கிய கயிறு, திடீரென மிக வேகமாகத் தொட்டிக்குள் அவனது தலை மூழ்கக் கூடியவாறு இறங்கிப் பின் நிலைத்து நின்றது.

அவனது அந்தரத்தையும் அவஸ்தையையும் அவனது உடல் துடித்தபடி வெளித்தள்ளியது. இரத்தினகுமாருக்கு மூத்திரம் மணத்தது.

தொங்குபவனின் விழிகள் அந்தச் செந்நீரில் நீந்தி விளையாடுவது போலிருந்தது. தொங்குபவனின் முகம் தன்னைப் போலவே இருந்ததை அவனது மூளையும்

எனது கவிதை

வலிதரும்
எனது கவிதைகளை
உனது
மொழிகளில்
மொழிபெயர்க்க
சொல்கிறாய்

எனது
கவிதைக் கிண்ணங்களில்
எப்பொழுதும்
புன்னகை
தவழ்ந்ததில்லை

வற்றாது
பெருக்கெடுக்கும்
உனது
மொழிகளிலும்
துயரக் கோடுகளே
பதிந்திருந்தன

புன்னகையை
தின்றுவிட்ட
விலங்குகளிடமிருந்து
தப்பமுனைந்த
காலங்களில் இருந்து
வலி தரும்
கனவுகளே
மொய்த்தபடி உள்ளன
அழகிய
பிணத்தின்
ஈக்களாய்...



சொல்ல மறந்து
போன
உரையாடலுக்குள்தான்
என் பற்றியதும்
உன் பற்றியதுமான
புரிதல்கள்
ஒளிந்து கிடக்கின்றன
மலையைப்போல்

இதற்குள்
உனது மொழிகளில்
எனது கவிதையை
மொழி பெயர்க்கச்
சொல்லுகிறாய்

முயல்கிறேன்
நான் எனது கவிதைகளை
மொழி பெயர்க்க
அர்த்தங்கள்
தொலைந்துபோய்
விகாரமாகிச் சிரிக்கிறது
கவிதை
இப்போது அநாதையாய்
கிடக்கிறது எனது கவிதை.

ஆறுமுகம் விநோதன் எனும் இயற் பெயருடைய இவர், பாட சாலை அதிபராகக் கடமையாற் றுகிறார். 'உயிரோடு இருத்தல்', 'காலப்பழி' போன்ற கவிதை நூல்களை வெளியீடு செய்திருக் கிறார். அத்துடன் சிறந்த ஒளிப்ப டக் கலைஞராகவும் உள்ளார்.

கவிதை



யாத்திரிகன்



பதுங்குகுழி

மனமும் உணர்ந்துகொண்டன.

அவன் முக்குளிப்பதை இரசிக்கும் ஒருவனும் அங்கிருந்தான். 'கொம்ரேட் டுச்சின்னின்' மூளையும் எண்ணமும் அந்த இரசிப்பவனின் சாயலுக்குள் ஒளிந்திருப்பதை இரத்தினகுமாரின் விழிகள் துடித்தபடி கண்டுகொண்டன.

அவனது வாயில் குரூரப் புன்னகையொன்று நெளிந்த நிலையில் உறைந்திருந்தது. உதடுகளின் இடை வெளி, செத்துக்காய்ந்த பாம்பின் உடல் போல் வறண்டிருக்க குரூரம் நஞ்சாய்க் கசிந்து உலர்ந்து கிடந்தது. அவனது கைகளிலும் கால்களிலும் இரத்தம் காய மறுத்த அடத்துடன் வழிந்து சித்திரமாய்ப் படர்ந்து படிந்திருந்தது.

பார்வை அவனது முகத்தை நோக்கி நகர்வதற்கிடையில் கிறிஸ்தோபர் இரத்தினகுமாரின் விழிகள் உறக்கத்துள் அமிழ்ந்து போயின.

உயிர்ப்பதற்கு முன் இயேசு எவ்வாறான வேதனைகளை அனுபவித்தாரெனப் போதகர் றொகான் மிகவும்

உணர்வுபூர்வமாக கூறிக் கொண்டிருந் தார். கிறிஸ்தோபர் இரத்தினகுமார் அதை எந்தவித சலனமுமின்றிக் கேட்டுக் கொண்டிருந்தான்.

குறித்த ரிதத்தில் அவனது தோள்கள் குலுக்கிக் கொண்டன.

மிக மூர்க்கமாக ஆணிகளில் அறையப் பட்ட வலியும் இரத்தமும் தன்னைச் சுற்றி உறைந்திருப்பதான எண்ணம் இரத்தின குமாரின் எண்ணங்களைச் சூறையாடிக்கொண்டிருந்தது. அவனது விழிகள் அந்த வலிகளுள்ளும் வடியும் இரத்தத்துள்ளும் நுழைந்து நுளைந்து வெளியேறிக் கொண்டிருந்தன. கொலை செய்யும்போதிருக்கும் கண்களை இரத்தினகுமாருக்கு நன்றாகத் தெரியும். அந்தக் கண்களின் விழிகள்

எப்போதும் விரிந்திருக்க வாய்ப்பே யில்லை. புருவங்கள் குவிந்தபடியே எப்போதும் இருக்கும். கிறஸ்தோபர் இரத்தி னகுமாரின் மூளையும் மனமும் இந்தக் கண்களை அதன் உறை நிலையில் பாடமாக்கித்

தனக்குள்ளேயே வைத்திருந்தன.

குளிரேறிய அன்றிரவு இருள் சற்று அதிகப்படியான ஈரத்துடனிருந்தது. மௌனத்துக்கான இடைவெளிகள் அவனைச் சுற்றி வழமைபோல கொட்டப் பட்டுக் கொண்டேயிருந்தன. நித்திரையும் அவனருகில்

சுற்றிவைக்கபட்டிருந்தது. மூளையும் மனமும் அந்தக் குரூரமுறைந்த கண்க ளைச் சுற்றியே வட்டமிட்டுக் கொண்டி ருந்தன.

திடீரென எழுந்து ஆலயத்துள் ஓடினான். வழமையாக இருக்குமிடத்தில் அமர்ந்து கொண்டான். மூச்சு இலேசாக இழைத் தது. மெதுவாகத் தலையை உயர்த்திச் சிலு வையில் தொங்கும் இயேசுவைப் பார்த்தான்.

பொல் பொட் ஆட்சியில் கமர் ரூஜ் இயக்கத் தினர் நடத்திய பயங்கரமான கொடுமைக ளின்போது டுவால் ஸ்லெங் (Tuol Sleng)

என்ற சிறையின் வோர்டனாக இருந்த வனே நடந்த கொலைகளில் 17000 கொலைகளுக்குப் பொறுப்பானவன். அவன் பார்த்துக் கொண்டிருந்தபோதே தொங்கவிடப்பட்டிருந்த சிலுவையின் மேற்புற ஆணி கழன்று சிலுவை தலைகீ ழாக வந்து நின்றது. இப்போது இயேசு தலைகீழாகத் தொங்கினார்.

மீண்டும் வீட்டுக்குள் இரத்தினகுமார் ஓடிவந்து அமர்ந்து கொண்டான். தன்னை ஆசுவாசப் படுத்திக் கொண்டபின் பைபிளை எடுத்துப் புரட்டத் தொடங்கி னான். நீராய்ச் சலனப்படும் இயேசு இங்கேயும்

அதேபோல் சிலுவையில் தலைகீழாகத் தொங்கிக்கொண்டிருந்தார்.

உண்மையில் தலைகீழாகத்தான் தொங்கவிட்டிருப்பார்களா?

'ச்சீ... அப்பிடியெண்டா கைகளைப் பின்னுக்கெல்லோ கட்டி வச்சிருப்பாங்கள்.'

விழிகள் இரண்டும் வலிகளும் செம்மை யும் கலந்து நெகிழ்ந்த தாள்களுக்குள் முக்குளித்து மீண்டன. மிதந்து வரும் எண்களைச் சேகரமாக்கிக் கொண்டான். மீண்டும் அந்தக் குரூரக் கண்கள் இருளில் தொங்க முற்படும்போது

முதலாவது அழைப்பை ஏற்படுத்தினான்.

'நீங்கள் அழைத்த இலக்கத்தைத் தற்போது அடையமுடியாதுள்ளது...'

மீண்டும் அழைத்தான்.

மீண்டும் மீண்டும் அழைத்தான்.

தொலைபேசி இலக்கம் அழைப்புகளால் தொடர்ந்து முற்றுகையிடப்பட்ட வண் ணம் இருந்தது. இது மீட்சி பெறும் வழியென கிறிஸ்தோபர் இரத்தினகுமா ரின் மனம் நம்பத் தொடங்கியிருந்தது. வெட்டிப்போடப்பட்டிருந்த தென்னை ஓலைகளுக்கு மேல் குந்தியிருந்தபோது இது ஒன்றுமே தெரிந்திருக்கவில்லை. எந்தப் பற்றுமில்லை...

எந்தக் கடவுளுமில்லை....

எந்த இலக்கமுமில்லை...

பயத்துக்கான அழைப்புகள் மட்டுமே அவனைச் சுற்றிச் சேர்ந்து கொண்டிருந் தன. எனினும் இப்போது இந்தத் தேவைப் படாத அழைப்பை ஏற்படுத்த கிறிஸ்தோபர் இரத்தினகுமார் தொடர்ந்து முயன்று கொண்டிருந்தான். நகமில்லாத சுட்டு விரல்கள் இலக்கங்களை ஏதோவொரு வேகத்துடன் ஓடியோடி அழுத்திக்கொண்டி ருந்தன.

எனினும் விரல்களில் காணப்பட்ட பதற்றம் அவனில் காணப்படவில்லை.

இரவு ஒரு பதுங்குகுழி போலவே தனது வாயைப் பிளந்திருந்தது. இரவு எப்போதும் போல பதட்டங்களை விழுங்கிக் கொண் டேயிருந்தது. அழைப்புகள் நிறைய நிறையக் குழி மூடிக்கொண்டது. இரவின் வெளியில் மரணம் காத்திருப்பதான பிரமையை உள்வாங்கிய அவனது உடல் அதைப் பாவனை செய்து இப்போது வெளிப்படுத்திக்கொண்டிருந்தது.

இரவு - அது பெரும் பதுங்குகுழி

மரணம் கடந்துவிடமுடியாப் பெருவெளி

அவன் கடந்துவந்த வெளி வர்ணங்கள் பூசப்பட்ட முகட்டைக் கொண்டது. சிவப்பும் கறுப்பும் அதிகம் பூசப்பட்ட முகடு. அந்த முகட்டைப்போலவே அவனுக்கான இரவுகளும் துடைக்கப்படாதவை. அவனது ஒவ்வொரு இரவுகளிலும் சிதறியிருக்கும் மூளையும் இரத்தமும் நிணமுமாய் குழந்தைகள் சிதறிக் கிடக்கும் காட்சியும்.... நிறை

வெடிலும்.... அள்ளியிறைக்கப்பட்டிருந் தன. இரவின் சுவர்களில் பசியும் பட்டினியு மாக இருந்த மனிதர்களின் ஓவியங்கள் மறைய மறுத்தன.

கிறிஸ்தோபர் இரத்தினகுமார் தன்னந் தனியே இரவுக் குழிக்குள் பதுங்கிக் கொண்டான். தூரமாய் எறிந்த பார்வையு டன் அந்தத் தொலைபேசி இலக்கங்க ளைத் தன்னிச்சையாகக் கைகள் அழுத்த, அவனது மூளையும் மனமும் இருளைத் துளாவித் துளாவி குரூரமாய் உறைந்த அந்தக் கண்களை இழுத்துக்கொள்ள முயற்சித்தன.

இருளைச்சுற்றி இருளுக்குள் அவனது மனமும் மூளையும் நாய்போல இளைக்க இளைக்க ஓடிக்கொண்டேயிருந்தன. இரத்தினகுமார் தலைகீழாகத் தொங்க, அவனது முகம் மூத்திரத் தொட்டியில் முக்குளித்துக் கிடந்தது. அவன் முக்குளிப்பதை அந்தக் குரூரக் கண்களுக் குச் சொந்தக்காரன் இரசித்துக்கொண்டி ருந்தான். அவனது நிழல் அங்கிருந்த சிறு துண்டு ஒளியில் பூதாகரமாய் நீண்டிருந்தது. அந்த நிழலுக்குள் பல உருவங்கள் எட்டிப்பார்த்துக்கொண்டிருந் தன. அவனது முகத்தில் குரூரப் புன்னகை பாம்புபோல நெளிந்த நிலையில்

உறைந்திருக்க, இப்போது அவனது முகம் வெளிச்சத்துக்குள் சிக்குப் பட்டிருப்பதைக் கிறிஸ்தோபர் இரத்தினகுமார் கண்டு கொண்டான்.

மிக மெலிந்த உயரங்குறைந்த தோற்றத்தி லிருந்த அந்தக் குரூரக் கண்ணுக்குரியவ னின் முகம் இரத்தினகுமாரின் சாயலை அப்படியே கொண்டிருந்தது.

இப்போது அழைப்பை ஏற்படுத்தும் முயற்சியை கிறிஸ்தோபர் இரத்தினகுமார் கைவிட்டிருந்தான்.



கட்டுரை



செ.செல்வராஜா

ஓய்வுபெற்ற உதவிக்கல்விப் பணிப்பாளரான இவர் யாழ்ப் பாணம் அரியாலையைச் சேர்ந் தவர். 'மகிழ்ச்சிகரமான கற்றல்' கைநூலின் ஆசிரியர், பயிற்று நர், வளவாளர். 'யுனிசெவ்' திட் டத்தின் கீழ் இழந்த 'கல்வியை ஈடுசெய்தல்' என்ற ஆரம்பக் கல்வி வளவாளர். சிறுகதை, கவிதைபோன்றவற்றில்திறமை கொண்ட இவர், நாடகத் துறை யில் பிரதி எழுதுதல், நெறி யாள்கை, நடிப்பு, ஒப்பனை என எல்லாவற்றிலும் திறமை பெற் றவர்.

தமிழ் வாழ...

தைப்பொங்கல் தமிழர் திருநாளென அழைக்கப்படுவது மனங்கொள்ளத்தக்க விடயமாகும். வரும் காலங்களி லும் அது கொண்டாடப்பட்டாலும், 'தமிழ் வாழுமா?' என்கின்ற கேள்வி பல்வேறு தரப்பிலும் எழுகிறது. ஈழத் தமிழர்களில் பாதிப்பேர் வரை புலம் பெயர்ந்து, புலத்தில் சுருக்கமாகவேனும்; பெருக்க மடைந்து வருகின்றனர். மீதிப்பேரும் வாய்ப்புப் பார்த்துக் கப்பலேறுவ தற்கு ஏங்கிய வண்ணமுள்ளனர். வீட்டுக்கொருவரேனும் வெளிநாடு புக் காராயின் அந்த வீடு திருமகள் கடாட்சம் இல்லா வீடாகக் கொள்ளப்படும் நிலையே இங்கு காணப்படுகிறது.

வெளிநாடு சென்ற நம் உறவுகளில் பலர் கடந்த ஆவணி, நல்லூர் திருவிழாவின் போது வருகை தந்திருந்தனர். அவர்க ளில் பலர் - குறிப்பாக இள வயதுக்காரர் கள் தமிழில் கதைக்க முயற்சிக்கின்ற னர். எங்களை மகிழ்விக்கும் விதமா கவே அவர்கள் தமிழிலேயே கதைக்க முற்படுகின்றனர். எனது பெறாமகன் ஒருவர்,.... அவர் பிறந்த வளர்ந்ததெல் லாம் வெளி நாட்டிலேயே.

அவரிடம் "எத்தனையாம் வகுப்பு படிக்கி றீர்கள்" எனக் கேட்டேன். "ஒன்பது" என் றார். "ஒன்பது என்பது சரி. ஆனாலும் ஒன்பது என்னும் போது இனிமையாக இருக்கும்" எனக் கூறினேன் ஏற்று மகிழ்ந்தார். அவர்கள் வீட்டில் பெற்றோர் தமிழில் கதைக்கும் பொழுது, செவிம டுத்த பழக்கமும், தமிழ் வகுப்புக்குச் சென்று வருவதால் கற்ற அனுபவமுமே தமிழைப்புரிந்துகொள்ள அவர்களுக்கு உதவுகின்றது. இன்னும் சிலர், "தமது பிள்ளைகளுக்குத் தமிழே தெரியாது" என்று கூறுவதை ஒரு பெருமையான விடயமாகவும் கொள்கின்றனர்.

இந்த நிலையில், கடந்த வருடம் ஒக்டோ பர் மாதம் கொழும்பில் நடந்த விழா வொன்றில், "எமது பிள்ளைகளுக்குத் தமிழ் உச்சரிப்புத் தெரியவில்லை" என, வடக்கு முதலமைச்சர் ஆதங்கப்பட்டுள் ளார். தமிழ் உச்சரிப்பில் பெரும்பாலா னோர் தவறு விடுவது, 'ல','ழ','ள' உச் சரிப்புகளிலேயே என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. மற்றும் 'ன','ண' உச்சரிப்புகளிலும் தவறுவிடு கின்றனர். 'ர', 'ற' உச்சரிப்புக்களும் சிலருக்குப் பிரச்சினையே.

தமிழுக்கு அழகைக் கொடுப்பது இந்த 'ழ' வே. வாழ்வில் 'ழ' வரும். அழகில் 'ழ' வரும். கிழடு, ஒழுக்கம், விழுப்பம், அழைத்தல், அழித்தல், பழித்தல், விழித்தல், விழுதல், ஊழ், காழ் எல் லாவற்றிலும் வரும்.

உடலிலுள்ள ''பிற்றியூற்ரறி'' (Pituitary) சுரப்பிஎல்லாச்சுரப்பிகளுக் கும் தலையாய சுரப்பியாகும். இந்தச் சுரப்பியே உடலியக்கக் கட்டுப்பாட் டில் முக்கிய பங்காற்றுகின்றது. 'வாழ்க' என்று வாழ்த்தும்போது இந்த 'ழ்' ஐ உச்சரிக்கையில் உச்சரித்து 'வாழ்த்தும்போது, இந்த 'பிற்றியூற்றி' சுரப்பியின் செயற்பாடு மேம்படுவ தாக அண்மையில் ஓர் அறிஞர் கூறி யிருந்தமையும் இங்கு நோக்கற்பா லது. "வாழ்கவளமுடன்" என வாழ்த்தும் போது, அந்தச் சுரப்பியின் செயல்பாடு சிறப்பாகநடைபெறுவதாகஅந்தஆராய்ந் தறிந்த மேதை தெரிவித்திருந்தார்.

மொழித் திறன்களாவன. கேட்டல், பேசு தல், வாசித்தல், எழுதுதல் என வகைப்ப டும். இவற்றில்முதலிரண்டிலும்போதிய வாய்ப்புக்கள் இல்லையேல், ஏனைய இரண்டிலும் சங்கடப்பட வேண்டியேற் படும்.

இந்தக் கேட்டலின் பொழுது "பழம் நழு விப் பாலில் வீழ்ந்தது" என்று அழகொ முக உச்சரித்து எம்மையெலாம் மொழி யில் வழி நடாத்திய பண்டிதர்களே கண் முன் வருகின்றனர். பாடசாலைக் கல்வி யில் பண்டிதர்களிடம் கற்ற அனுபவ முண்டு. தொழில் நுட்பக் கல்லூரியி லும், பண்டிதர்களிடம் தமிழ் பயின்ற ஞாபகமுண்டு. ஆசிரிய கலாசாலைகளி லும் பெரிய பண்டிதர், சின்னப் பண்டிதர் என்று பண்டிதர்களிடம் தமிழ் கற்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவர்கள் தமிழ் உச்சரிக்கும் அழகே தனி. அவ்வாறு உச் சரிப்பதைக் கேட்டால், வாசிக்கும்போதும், எழுதும் போதும் அந்த 'ல'க்களும், 'ள'க் களும் 'ழ'க்களும் காதில் ரீங்காரமிடும்.

பண்டிதர்களிடம் தமிழ் கற்றவர்களிடம் தமிழைப் பயில்கின்ற வாய்ப்பு அடுத்த சந்ததிக்குக் கிடைத்தது. இப்போது பண் டிதர் பரம்பரை அருகி வருகின்றது. சிலரே உலா வருகின்றனர்.

போர்க் காலத்தின்போது கல்வியில் கவ னம் செலுத்தியவர்களால், ஆரிய திரா விட அபிவிருத்திச் சங்கத்தின் ஊடாக, பண்டிதர் வகுப்புக்கள் இலவசமாக நடாத்தப்பட்டன. வலயங்களாகப் பிராந் திய கல்வித் திணைக்களம் பிரியும் வரை இது சிறப்பாக நடைபெற்றது. சங் கத் தலைவராகப் பதவி வழி, யாழ்ப்பா ணம் கல்வித் திணைக்கள கல்விப் பணிப்பாளர் பதவி வகித்தார். செயலாள ராகப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பணி யாற்ற, பல பண்டிதர்கள் அங்கத்தின ராக இருந்தனர்.

இந்தச் சங்கத்தால் இலவசமாக, பண்டி தர் வகுப்புக்கள் நடாத்தப்பட்டன. (கற்ப வர்களிடமிருந்து பணம் அறவிடப்படாத போதும், விரிவுரையாளர்களுக்கு கணி சமான ஒரு தொகை வழங்கும் நிதி மூலம் கண்டறியப்பட்டிருந்தது) அதில் பங்குகொள்ள, பாடசாலைகளில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்கள் ஊக்குவிக்கப் பட்டனர். க.பொ.த உயர்தரம் கற்றுவிட்டு இதிலிணைந்து கொள்ளவும் வாய்ப்பு அளிக்கப்பட்டது.

இதில் தேறுபவர்களுக்குப் பட்டதாரிப் பட்டம்வழங்கக்கல்வியமைச்சுமற்றும் சம்பந்தப்பட்ட தரப்பி னருடன் தொடர்பு கொண்டு நாடாளு மன்ற உறுப்பினர் கள் ஊடாக நடவ டிக்கை எடுக்கும் முயற்சிகளிலும் ஈடு பாடு காட்டப்பட்டது. இதை வித்துவான் சொக்கன் போன் றோர் ஈடுபட்டு வழிப் படுத்தியிருந்தனர்.

அல்லாமலும், பாடசா லைகளில் தமிழ் கற்பிப் பவர்கள் பண்டிதர் தேர் வில்சித்திபெற்றிருந்தால் அவர்களுக்கு ஊக்குவிப் புத் தொகை ஒன்றும் கல் விக் கழகத்தால் வழங்க நடவடிக்கை எடுக்கப்படு மெனத் தெரிவிக்கப்பட்டி ருந்தது. பின்னர் இடப் பெயர்வு ஏற்பட்டு இவையெல்லாம் கைவிடப்பட்டு வெறும் கனவாகின.

இந்த நிலையில், மீண்டும் தமிழ் மீதும் தமிழ் உச்சரிப்பின் மீதும், கரிசனை காட்டுகின்ற ஒரு நிலை காணப்படுகின் றது. அதை நடைமுறைப்படுத்த, எஞ்சி யுள்ள பண்டிதர்கள் உதவியுடன் ஆக்க பூர்வமான நடவடிக்கையெடுக்கலாம். அதாவது விட்ட இடத்திலிருந்து தொடர லாம்.

தமிழ் உச்சரிப்புப் பிறழ்வு ஏற்பட பல்வேறு ஏதுநிலைகள் காணப்படுகின்றன. மெட் ராஸ் சென்னைத் தமிழைப்பற்றி கரன் கார்க்கி ஆழமாக ஆராய்ந்து கட்டுரை எழுதியுள்ளார். அந்த மொழி மெட்ராஸ் தவிர்ந்தோரை எரிச்சலூட்டக் கூடிய தென்கிறார். ஆயினும் அதற்கான கார ணத்தை அவர் எடுத்துக் கூறுகையில், எம்மையறியாமலே, மெட்ராஸ் தமிழ் பேசுபவர்கள் மீது ஒரு கருணை பிறக் கின்றது. அவை சமூக, அரசியல், பொரு ளாதார, சமூக, உளவியல் எனப் பல காரணிகளை அவர் இனங்கண்டு வெளிப்படுத்தியுள்ளார். மதராஸ் பட்டி னத்தின் ஆரம்பமே, ஆங்கிலம், உருது, தெலுங்கு இந்தி, தமிழ் என ஐந்துக்கு மேற்பட்ட மொழிகள் பின்னிப்பிணைந்த கலப்பு என அவர் கூறுகின்றார்.

அவர்கள் அழகான வார்த்தை உச்சரிப் புக்களைக் கேட்டுப் பழக வாய்ப்பற்றவர் கள் எனக் கூறுகின்றார். எழுதப் படிக்கத் தெரியாது, எஜமானர்கள் சொல்வதே சரியானதென நம்பப் பழக்கப்பட்டவர் கள் என அவர்கள் மீது பச்சாதப்படுகின் றார்.

எமக்கு, ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மூன்று மொழிகள் பின்னிப் பிணைந்து எமது பிரதேச உச்சரிப்பை தீர்மானிக்கும் காரணிகளாக மெல்ல மெல்ல மாறிவருகின்றன. இதிலுள்ள அவலம் என்னவென்றால், இங்கு தமிழ் எனக் குறிக்கப்பட்டதிலேயே பல் வேறு தமிழ்கள் உள்ளமைதான். யாழ்ப்பாணத் தமிழ், மட்டக்களப்புத் தமிழ், மலையகத் தமிழ், இஸ்லாமியத் தமிழ், மெட்ராஸ் தமிழ், இந்திய ஏனைய பிராந்திய மதுரைத் தமிழ் என வும், திரைப்படத் தமிழ், தொலைக்கட்சி நிகழ்ச்சித் தமிழ், வானொலித் தமிழ், விளம்பரப் பெயர்ப்பலகைத் தமிழ் என தமிழிலேயே எண்ணற்ற வகைகள் உள்ளமை அவதானிக்கப்பட வேண்டி யதாகும்.

அவ்வப்போது, வெளிவரும் வர லாற்றுத் தொடர்கள், வரலாற்று சினிமாப்படங்கள் போன்றன ஓரளவு இலக்கியத் தமிழை எவி மடுக்க வைப்பது ஓர் ஆறுதலான விடயமாகும். கவிஞர் வைர முத்து, சந்திப்புக்களில் உரை யாற்றும்போது, தரமான தமி ழிலே இயன்றவரைச் சரளமா கப் பேசுவது, மனதுக்கும் செவிக் கும் மிகுந்த இன்னுணர்வு தரு வதாக அமைகிறது.

நாகரீகமாகத் தமிழ் பேசுவதும், தமிழ் உச்சரிப்புப் படுகொ லைக்கு ஒரு காரணமாகும். ''அவர் என்ன ஷொன்னவ ரப்பா?" என ஒருவித மோடிமைப் படுத்தப்பட்ட வகையில் கதைப்ப தைச் சில இள நங்கையர் ஒரு நாகரீகமாகக் கருதுகின்ற னர். ''சொல்லச் செல்ல இனிக்குதடா'' என்கின்ற முருகன் பாடலை இவர்க



கதவு - நிலை : கை - விளக்கு



கவிதை



நாக. சிவசிதம்பரம்

கோண்டாவிலைப்பிறப்பிடமாகக் கொண்ட இவர், யாழ்ப்பாணம் – கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியசாலை அதிபர். முப்பது வருடங்களுக்கு மேலாக கவிதைத் துறை அனுபவம் கொண்ட இவர், கவியரங்க மேடைகளைச் சிறப்பித்தவர். அத்துடன் பத்திரிகைகள் சஞ்சிகைகள் கவிதைகளை எழுதியவர். விரைவில் கவிதைத் தொகுப்பு ஒன்று வெளிவரவுள்ளது.

நிலை பேறுடையதானால்
'நிலை' என்றார்கள் எனில்
'கதவு' என்றழைப்பதற்கு – என்ன
காரணமோ...? நானறியேன்!

கவிதை எழுத எண்ணி – மனம்
களைத்திருந்த வேளைதனில்
'நிலை – கதவு' என்றதொரு
நினைவெனக்குள் வந்தது – ஏன்...?

இடம்பெயர்ந்து எங்கள்
இருப்பு – நிலை இழந்த
மனதின் குரலோ – ஒரு
மலராய் முகை அவிழ்த்து...

நிலையான வாழ்வு இல்லா
நிலை – வரத்தில் கதவுகளின்
தலையாய பிரச்சினை – எம்
தலைமுறைக்கு விளங்குதில்லை...!

நிலையாக – சேர்ந்து இங்கு
நிம்மதியாய் வாழுதற்கும்
முடியாது எனும் நிலையில் எங்கள்
முன்னோரின் காணி – நிலம்...!

கதவு – நிலைக்கு) இடையில் ஓர்
காதல் உளவு என்னும் உயிர்
'பிணைச்சல்கள்' இல்லை என்றால்,
பிரிவினை தானே மிச்சம்...?

பூட்டியவாறே இன்றும் ஓர்
புரிந்துணர்வு எதுவுமின்றி – எங்கள்
பாட்டனார் வழி – வழி – எம்
பரம்பரையின் 'நிலை' இருளில்...!

பூட்டிய எங்கள் வாழ்வின்
புழுதிகள் மேலாக இன்று
புதிது புதிதாய் எங்கும்
பூட்டாத நிலைக் கதவு!

திறப்பது எவர் கரமோ?
தினம் தினமும் வெளி வரவாய்
கிடைப்பது எவர் வரமோ?

இருப்பவர் யார்? இரப்பவர் யார்?
இல்லை என்னாது இன்னும் இன்னும்
கொடுப்பவர் யார்? எதனை...?

தோட்டம் துரவு இன்னும்
தொழில் துறை – எம் உறவு – எல்லாம்
வாட்டம் கொண்டாட எந்த
வளர்ச்சியிலே மனம் குளிரும்?

காலமெல்லாம் மூடிவைத்த
கதவுகளைத் திறப்பது யார்?

நேர்ந்து நிலை வைத்து
இன்னும்
நேர்வழியில் தாம் உழைத்த
வீட்டை மறத்தல் எந்த
விடுதலையின் பால் நிகழும்?

காலம் கதவினுள் தாம்
கவலைகளை மூடிவைத்து –
எங்கள்
வாசல் திறந்து வழி விடுங்கள்
என்று அந்தோ
வீதியெலாம் தாய்மார்
விழுந்து அழும் குரலைக்
கேட்பதற்கோர் செவியும்
இல்லாக்
கேவலம்... இங்கு ஆர் அறிவார்?

தக்கது ஈது இன்னும்
தகாதது ஈது... என்று
உற்றுணர்ந்தோர் தாமும். இன்றெம்
உறவுகளின் நிலை மறந்தார்...!

விழுந்தும் எழுந்து தங்கள்
விழுதுகளை வாழ வைக்க
வளைந்து நிழல் கொடுத்த – எங்கள்
வாழ்வுகளை நாம் மறந்தோம்...!

என்னையே நான் கொன்றும்
எரித்தும் உடைத்தெறிந்தும்
தன் அயல் ஊர் சுற்றம்
தனது இனம் என்று எண்ணா
பிள்ளைகள் தம் நெஞ்சில் இன்று
'பிழை' பரவக் காரணம் யார்?

தன்னிறைவு இல்லாதெம்
தகுதிகளின் இறங்கு நிலை
கண்டும் மனம் இரங்காது – எம்
காவலரை ஏது சொல்ல?
நிலைகளின் ஈடுபாட்டால் இன்னும்
நீடித்திருப்பதுவா?
கதவுகளும் பிணைச்சல் இல்லா
கவலையில் தாம் வீழ்வதுவா?

தக்க வழி திறந்து இன்னும்
தகாத வழி மூடுவதற்கு
ஒத்துழைக்கும் கைகளுக்குள்
ஒழிப்பு மறைப்புக்கள் ஏன்?

கட்சிகளாய் எம் வீட்டு
கதவு – நிலை உடையுமென்றால்...
நித்திரையும் இன்றி இந்த
நிலமைக்கா கண் விழித்தோம்?

கைவிளக்கு நூர்ந்தும் எங்கள்
கைகள் ஒளி ஏற்றுதற்கு...
இன்னமும் தான் சோரா...
இருட்டினில் எம் வாழ்க்கை என்றால்...

கண்ணிழந்து போரில்... உள்ள
காயம் சுமப்பவரை
எண்ணுகையில்
நெஞ்சுள் இன்னும்
ஏதேதோ செய்கிறது...!

தமிழ் வாழ...

தொடர்ச்சி...



கல்வியமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளரும் தமிழ் இலக்கியவாதியுமான திரு. தில்லை நடராஜன் கூறியிருந்தமையும் தமிழை வாழ வைக்கும் ஒருவழியாகும். ஏனெனில், தமிழ், கணிதம், மற்றும் சமய பாட நூல்களில் பல தவறுகள் இடம்பெறுவது பலராலும் சுட்டிக்காட்டப்படும் ஒரு விடயமாகவுள் ளது. கடந்த வருட கா.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் "தத்தை விடுதூது என்பது தி. த. கனகசுந்தரம்பிள்ளை இயற்றிய செய்யுளாகும்" என்பதாகக் குறிப்பிட்டுவிட்டு "தத்தை என்பதன் பொருள் யாது?", "தத்தைவிடு தூதினூடாக ஆசிரியர் யாருடைய விடுதலை பற்றிக் குறிப்பிடுகிறார்?" எனக் கேள்விகள் கேட்கப்பட்டன. தத்தைவிடுதூது தி.த.சரவண முத்துப் பிள்ளையால் எழுதப்பட்டது என்பது உண்மையாக இருக்கும் போது இதெப்படிச் சாத்தியமாகும்! இதனால் பரீட்சை எழுதிய மாணவர்கள் குழப்பமடைந்தது தவிர்க்கமுடியாதது ஆகிற்று. அல்லாமலும் தமிழ் மொழி மூல க.பொ.த. சாதாரண தரத் தேர்வில் கூட தமிழ் மொழிப் பாடத்தில் சித்தியடையாத மாணவர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருவதும், தமிழ் வாழ்கிறதா, தேய்கிறதா என்பதற்கான ஒரு குறி காட்டியாக உள்ளது.

2015ஆம் ஆண்டு, தமிழ்ப் பாடத்துக்குத் தோற்றிய 63ஆயிரத்து 101பேரில், 51ஆயிரத்து136 பேர் சித்தியடைந்தனர். ஏனைய 11ஆயிரத்து 965பேர் தோற்றுப்போயினர். அதாவது தரம் ஒன்றிலிருந்து தமிழைக்கற்று, 11ஆண்டுகள் கழிந்தபின்னர்தான், உரிய அடைவை அல்லது பாண்டியத்தை அடைய அவர்களுக்கு அறிவு, திறன், மனப்பாங்கு காணாமல் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

2016ஆம்ஆண்டுக.பொ.தசாதாரணரத் தேர்விலும் தோற்றிய 65622 மாணவர்களில், 51ஆயிரத்து 612பேர் சித்திபெற்றனர். அதேவேளை, 14ஆயிரத்து 50பேர் சித்தியடையவில்லை. இவற்றைக் கருத்தில் கொண்டு, தமிழ்மொழி அடைவுமட்டக் குறைவு தொடர்பில் கொழும்பு கல்வியமைச்சில் கூட்டம் நடாத்தப்பட்டது.

இதேவேளை, "தமிழர்களைக் கல்வியில் வீழ்த்தும் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன" என மாகாண சபை உறுப்பினர் ஒருவர் தெரிவித்தமையும் இங்கு கருத்தில்கொள்ளப்படவேண்டியதாகும். தமிழ் இனம் உலகெங்கெங்கும் பெருவிருட்சமாகக் கிளை பரப்பியிருந்தாலும், தமிழ் மொழியெனும் அந்த இனத்தின் வேர்,கண்காணப்படமுடியாதவகையில் செல்லரிக்கப்பட்டு வருவதை உணரமாலிருக்கின்றோமா என்கின்ற ஐயம் இயல்பாகவே எழுகின்றது.

தமிழ் மாணவர்கள் கல்வியில் பின்னடைவதே பல சீரழிவுக்கும் காரணமென வடக்கு முதலமைச்சர் ஒருதடவை சுட்டிக் காட்டியிருந்தார். கல்வியில் பின்னடைவுக்கு வட மாகாணசபை மீது, வடமாகாண சபை எதிர்க்கட்சி குற்றச்சாட்டுத் தெரிவித்திருந்தமையும் இங்கு நோக்கத் தக்கது. தமிழ் மொழி வளர்ச்சிபற்றியும் கல்விபற்றியும், ஒருவர் மீது ஒருவர் குற்றம்சாட்டி எவரும் தப்பிவிட முடியாது. தாம்தனிப்பட்ட அளவிலும், கூட்டுச்சேர்ந்தும்தமிழ்மொழிவளர்க்கமேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன என்பதை மக்கள் முன் சென்று தெரிவிக்க வேண்டிய பொறுப்பும் கடமையும், தமிழ் மக்களுக்காகத் தாம் பாடுவடுவதாகக் கூறிக்கொள்ளும் ஒவ்வொருவரினதும் தட்டிக்கழிக்க முடியாத செயலாகும்.

ளைப் பாடச் சொல்லிக் கேட்டால், "ஷொல்லச் ஷொல்ல இனிக்குதடா" என்றே பாடுவர் போலும்.

அதேபோன்று தமிழ் சினிமாப் பாடல்களிலும் இத்தகைய உச்சரிப்புப் பிழைகளைப் பர்க்கக் காணலாம். "தேரடி வாசலில்யாரடிவந்ததுகிலியேகிலியே" எனக் 'கிளி' என்பது கிலியடையச் செய்வதாகவும், 'பிள்ளை' என்பது 'பில்லை' என்றும் உச்சரிக்கப்பட்ட தமிழ் சினிமா பாடல்கள் 'பிரபல்யமானவை'.

பேச்சுத் திறன் வளர்க்கும் வழிகளில் ஒன்று, கற்றுக் கொள்வதுதான். அதனால்தான் "சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்" எனக் கூறப்பட்டது. ஒரு குழந்தையைக் குரங்குகளுடன் சேர்த்து வளர்த்தால், குரங்கைப் போல ஒலியெழுப்பவும், சப்தமிடவும் தான் அது கற்றுக்கொள்ளும்.

நிறுவனம் ஒன்றால் நடாத்தப்பட்ட பட்டிமன்றம் ஒன்றைக் கேட்கும் வாய்ப்புக் கிடைத்திருந்தது. இடை நிலைக் கல்வியைத் தற்போதுதான் பூர்த்தி செய்து வெளியேறிவர்கள் அதில் பங்குபற்றியிருந்தனர். அவர்களது விவாதங்களின் போது பெரும்பாலும், "என்னன்னுசொன்னாக்கா..." போன்ற இந்தியத் தொலைக்காட்சி, சினிமாப்படம், பட்டிமன்றம் போன்றவற்றில் பயன்படுத்துகின்ற தமிழையே பேசித் தமது விவாதத்தைத் தொடர்ந்தனர்.

வடக்கு, கிழக்குமாகாணங்களிடம்தமிழ் மொழிப் பாட நூல்களைத் தயாரிக்கும் பொறுப்பை ஒப்படைக்கவேண்டுமென

கொக்கரக்கோ...

சிறுகதை



ஏ. ஜே. ஞானேந்திரன்

1970 முதல் எழுதிவரும் இவர், உடுவிலைச் சேர்ந்தவர். பத்திரிகைத்துறையில் பணியாற்றிய அனுபவத்துடன் 30வருட வெளிநாட்டு வாழ்க்கையும், உலக நாடுகள் பல வற்றுக்கும் பயணித்த அனுபவமும் இவரது எழுத்துக்கு வலிமை சேர்க்கின்றன. கட்டுரைகள், சிறுகதைகள் என அதிகம் எழுதியுள்ளார்.

கோழி முட்டைகள் சாப்பிடுவது அவனுக்கு மிகவும் பிடிக்கும். பொரித்தோ, அவித்தோ முட்டையை ரசித்து, ருசித்துச் சாப்பிடுவான் திலகன். இடையிடையே அம்மா வைக்கும் முட்டைக்கறியின் சுவையில் அவன் தன்னையே மறந்து விடுவதுண்டு. சரி எல்லாம் இருக்கட்டும். திலகன் ஒரு முட்டைப் பிரியன் என்பது நன்றாகவே தெரிகின்றது.

ஆனால், இந்த முட்டைகளை விரும்பிச் சாப்பிடும் திலகனுக்குக் கோழிகளையோ சேவல்களையோ அடியோடு பிடிப்பதில்லை ஏன்...?
இரண்டும் இல்லையென்றால் முட்டையே இல்லை என்பது அவனுக்கு நன்றாகவே தெரியும். என்றாலும் அம்மா நான்கு பேட்டுக் கோழிகளையும் ஒரு சேவலையும் அவற்றின் இஸ்டத்துக்கு முற்றத்தில் மேய விடுவது திலகனுக்குப் பிடிப்பதில்லை. முற்றமெல்லாம் கோழிகள் தங்கள் கழிவுகளை அகற்றி விட்டுச் செல்வதுதான், கோழிகள் மீதான அவனின் கோபத்துக்குக் காரணம். என்ன செய்வது? தின்னும் முட்டைகளுக்காகக் கோழிகளை அவன் சுதந்திரமாக நடமாட விட்டிருந்தான். அவற்றைக் கொல்ல வேண்டும் என்று தனக்கு இடையிடையே வரும் கொலைவெறியையும் அடக்கிக் கொண்டான்.
முட்டையிலிருந்து கோழியா? அல்லது கோழியிலிருந்து முட்டையா? என்று பழைய கதையைக் கிளறாமல், ஒன்றில்லை என்றால் இன்னொன்று இல்லை என்பது மட்டும் அவனுக்குத் திடமாகத் தெரிந்தது.
அவன் குடும்பத்தில் நான்கு பிள்ளைகள். 15வயதாகும் இவன் இன்னமும் படித்துக் கொண்டிருக்கிறான். பத்து வயதாக இருக்கும்போதே தன் அப்பாவை மாரடைப்புக் காரணமாக இழந்த துரதிஷ்டசாலி. அவன் மாமாதான் அவர்களுக்குப் பலவழிகளிலும் உதவி செய்து கொண்டு வருகின்றார்.
35வயதாகிவிட்ட அக்கா கமலம் இதுவரையில் கல்யாணமாகமல் வீட்டோடு இருக்கிறாள். அவள் பட்டதாரி. ஆங்கில ஆசிரியையான அவளுக்கு வேலைகிடைத்திருக்கின்றது. வருகிற சம்பந்தங்களையெல்லாம் ஆயிரத்தெட்டுக் காரணங்கள் சொல்லித் தட்டிக் கழித்துக் கொண்டிருக்கிறாள். அவள் வயதும் ஏறிக் கொண்டே போகின்றது.:. கமலத்துக்கு இளையவர்களான அவளது இரண்டு அக்காமார் திருமணமாகி ஆளுக்கு இரண்டு பிள்ளைகளையும் பெற்றுக் கொண்டு விட்டார்கள்.

அவன் வகுப்புகளுக்குப் போய்விட்டு, சைக்கிளைத் தள்ளிக் கொண்டு வீடு திரும்பியபோது, அவன் அக்காள், கமலம் தான் கழுவிய உடைகளை கொடியில் காயப் போட்டுக் கொண்டிருந்தாள். திலகனைக் கண்ட குஷியிலோ தெரியவில்லை. முற்றத்தில் மேய்ந்து கொண்டிருந்த ஒரு கோழி மெல்லத் தன் கழிவை முற்றத்தில் அகற்றி விட்டுச் சிறகைப் படபடவென அடித்தது. தூரத்திலிருந்து சேவல் ஓடிவந்து கோழியை ஆக்ரோஷமாக ஏறி மிதித்து விட்டுக் கொக்கரித்தது.
சைக்கிளை அப்படியே போட்டுவிட்டு, ஒரு கல்லை எடுத்துக் கோழி மீதும், சேவல் மீதும் எறிய வேண்டும் என்ற ஆத்திரம் அவனுள் மேலிட்டது. ஆனால், மதியச் சாப்பாட்டுடன் கிடைக்கும் முட்டைப் பொரியலை நினைத்துக் கொண்டு, தன் வழமையான கொலைவெறியைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டான் திலகன்.
"வீட்டுக்காரர்...."
யாரோ ஒருவர் வீட்டு வாசலில் நின்று கூப்பிடுவது கேட்டு அவன் கேற் பக்கம் திரும்பினான்.
"இங்க கோழி விக்க இருக்கே...?"
திலகன் பதில் சொல்ல முன்பு முற்றத்துக்கு வந்த அம்மா வந்தவரை உள்ளே அழைத்தாள்.
"வாங்க தம்பி. ஒரு கோழி இருக்கு...."
திலகனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அம்மா கோழியை விற்கப் போகிறாளா? அதே நேரம் அவனுக்கு மாமா முறையான சிவகடாட்சம் வந்தவரை உரிமையோடு அழைத்துக் கொண்டு,
"உள்ளே வாங்க தம்பி.. கோழி இருக்கு... நல்ல விலைக்குத் தரலாம்.." என்றபடி உள்ளே நுழைந்தார்.
திலகனுக்கு ஆச்சரியத்துக்கு மேல் ஆச்சரியம். அம்மா கோழியை விற்கப் போகிறாள் என்பதாகக் காதில் விழுந்த செய்தி முதலாவது ஆச்சரியம். கோழி வாங்க வந்தவரைக் கையைப் பிடித்து உரிமையோடு மாமா வீட்டுக்குள் அழைத்து, உட்கார வைப்பது இன்னொரு ஆச்சரியம்.
"தம்பி இரும்.. வாறன்" என்று சொல்லி விட்டுச் சிவகடாட்சம் பார்வதியை அடுக்களைக்குள் அழைத்துச் சென்றார்.
பார்வதியும் குழப்பத்தோடு சிவகடாட்சத்தைத் தொடர்ந்தாள். அவசரமாக அவர்களைத் தொடர்ந்த திலகனுக்குச் சட்டென இருவரும் வெளியே வந்ததால் அவர்கள் என்ன பேசிக் கொண்டார்கள் என்பதைக் கேட்டறிய முடியாதது உப்புக் குறைவான முட்டைக் கறியைச் சாப்பிட்டது போன்ற சப்பென்றதொரு உணர்வைத் தந்தது.
முட்டை போடுவது குறைவாகி விட்டதால், இருப்பதில் ஒன்றை விற்றுவிட்டு, மேலும் இரண்டு கோழிகளும் ஒரு சேவலும் அம்மா வாங்கி முற்றத்தில் மேயவிடப் போகிறாள் என்ற தகவலைத் திலகன் அறிய நியாயமில்லை. அட கோழி வாங்க வந்தவரை உட்கார வைத்து எதற்கு பால் ரீயும் பலகாரமும் கொடுக்கின்றார்கள் என்று குழம்பியபடி அவன் உடைமாற்றுவதற்குத் தன் அறைக்குள் சென்றான்..
அக்காளிடமும் கேட்க முடியாது. அவள் சிடுமூஞ்சி. உனக்கெதற்கு அதெல்லாம் என்று எரிந்து விழுவாள். .கோழி வாங்க வந்த வசீகரன் திலகனை விட நன்றாகக் குழம்பிப் போயிருந்தான். தான் கோழி வாங்க வந்த இடத்தில் முன்பின் தெரியாத எனக்கு ஏன் இத்தனை உபசாரம் என்று அவனால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. தன்னை உட்கார வைத்து சுகம் விசாரித்து, குடும்ப நலன் விசாரித்து, பலகாரமும் தேநீரும் தந்து கோழியோடு அனுப்பியபோது அவன் நன்றாகவே குழம்பி விட்டான். கோழிக்கு அதிக பணமும் வாங்கவில்லை.
அட இந்த ஊரில் கோழி வாங்க வருபவர்களுக்கு இப்படியொரு ராஜ உபசாரமா...? என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். முதலில் முற்றத்துக் கொடியில் உடுப்புக் காயப் போட்டுக் கொண்டிருந்த கமலத்தை நேரில் பார்த்தபோது, வசீகரமான அழகிதான் என்று வசீகரன் நினைத்துக் கொண்டான். கதவிடுக்கில் இரகசியமாகத் தன்னை அவள் பார்த்துக் கொண்டிருந்தபோது, அவனை அறியாமல் அவளில் ஓர் ஈர்ப்புத் தோன்றுவதை அவன் உணர்ந்திருந்தான்.

இங்கேதான் வாசகர்கள் குழப்பத்தைத் தீர்க்க வேண்டி இருக்கின்றது.
வசீகரன் இருபது வருடங்களுக்கு மேலாக லண்டனில்தான் வசித்து வருகின்றான். பல இடர்களுக்கு முகம் கொடுத்த முடிவில் 2013இல்தான் அவனுக்கு இங்கிலாந்தின் குடியுரிமை கிடைத்தது. தனது 25ஆவது வயதில் அப்பா, தொடர்ந்து அம்மா என்று இருவரையும் இழந்து விட்ட துரதிஷ்டசாலி இவன். அதன் பிறகு லண்டனில் ஒரு விபத்தில் சிக்கியதால், ஒரு நல்ல வேலையைத் தேடிக் கொள்ள முடியாமல் ஐந்து வருடங்கள் கழிந்தன. இந்த ஐந்து வருட காலத்துக்குள் பொறுமையாக ஆங்கில மொழியைச் செவ்வனே படித்தான். அரச சலுகையைப் பயன்படுத்தித் தொழிற்கல்வியைப் படித்தான். பொறுமையும், கற்ற கல்வியும் கைகொடுத்தன. பிரபல்ய சுவிஸ் நிறுவனமொன்றின் லண்டன் கிளையில் மேற்பார்வையாளராக வேலை கிடைத்தது. மனதுக்குத் திருப்தியான உழைப்பும் தேடிவந்தது. உழைப்பின் மீது இருந்த அதீத ஈடுபாடு, திருமணத்தில் அவனுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தவில்லை. ஆனால் காலவெள்ள ஓட்டத்தில், முப்பதுகளில் இருந்து அவன் வயது நாற்பதைத் தொட்டபோது, அவனுள் ஓர் உண்மை உறைத்தது. தான் இன்னமும் கட்டைப் பிரமச்சாரி என்ற உண்மைதான் அது. இறைவன் ஆணையும் பெண்ணையும் படைத்ததே ஒருவர் மீது இன்னொருவர் தங்கியிருந்து வாழ்க்கையை ஓட்டத்தான் என்று அவன் தீர்க்கமாக நம்பினான். இனியும் திருமணமாகாது விட்டால் வாழ்வின் பிற்பகுதி பெரும் சிக்கல்கள் கொண்டதாக இருக்கும் என்பது அவனுக்கு நிதர்சனமாகத் தெரிந்தது. அவன் ஒரு தீர்மானத்துக்கு வந்து. முதல் கட்டமாகத் தான் செய்து கொண்டிருந்த வேலையை விட்டுவிடலாம் என்று தீர்மானித்தான். தன் அனுபவமும், படிப்பும் தனக்கு இன்னொரு வேலையை நிச்சயம் தேடித்தரும் என்று அவன் திடமாக நம்பினான். யாழ்ப்பாணம் சென்று எப்படியாவது ஒரு பெண்ணைத் தேடிவிட வேண்டும் என்ற முடிவோடுதான் இவன் யாழ்ப்பாணப் பயணம் தொடங்கியது. ஒரு வருடமாவது அங்கு நின்று ஒரு பெண்ணைத் துணைவியாகத் தேடிவிட்டுத்தான் லண்டன்



தேவகுமாரர்களின் வருகை...



தேவகுமாரர்களின் வருகையால்
வீதிகள் அலங்காரம் பெற்றன

ஒரு யுக காலத்தின் வாசனையோடு
நெருங்கி வந்தார்கள்

வண்ணங்கள் பூசப்பட்ட நாள்களை
பரிசளிப்பதாக
சொற்களால் குளிர வைத்தார்கள்

ஒரு தேவலோகத்துக் கனவில்
மிதந்த படியே
உறங்கிப்போனோம்

யாரும் சபிக்க முடியாத வரமொன்றை
பெற்றதாக நினைத்தாலும்
பாஞ்சாலிகள் துகிலுரியப்பட்டதையும்
அபிமன்யுக்கள் அழிக்கப்பட்டதையும்
நினைவு கூரப்படமலேயே
எங்கள் நாள்களை
அவர்கள் வரைந்து கொண்டு
இருந்தார்கள்

ஒரு மாபெரும் குருசேத்திரத்தில்
எல்லோருமே தோற்றுப் போனார்கள்

சக்கர வியூகத்துள் எல்லாம்
சாம்பலாகின

இன்று தேவலோகச் சபையில்
ரம்பைகளும் ஊர்வசிகளும்
ஆடத்தொடங்கியிருக்கிறார்கள்

அவர்கள் நளினங்களில்
நனைவதற்கென்றே
நிர்வாணமாக்கப்பட்டிருக்கின்றோம்

அரியணைகளை
அவர்களே அலங்கரிக்கிறார்கள்

தேவேந்திரர்களால் ஆசிர்வதிக்கபட்ட
இளவரசர்களின் மஞ்சத்தில்
கண்ணகிகள் கணிகையர்களாக
மாற்றப்பட்டிருக்கிறார்கள்

மீண்டும் கடல் புரண்டு படுத்திருக்கும்
ஆதிசொருபத்தின் வடிவிலான
சொற்களால்
இனிக் கவிதை புனைய வேண்டும்

கவிதை



கு. ரஜீவன்

ஏழாலையைச் சொந்த இடமாகக் கொண்டவர். கிராமத்துக்குயில் ஓவியா என்ற புனைபெயருடன் எழுதி வருகின்றார். 'மௌனத்துயில்','வலிகளைத்தாங்கி','ஒரு நதியின் தேடல்', 'பேசற்க', 'நகுநயம் மறைத்தல்', 'ஒரு பெருதுயரும் இலையுதிர் காலமும்', 'சீத்துவக்கேடு' என்ற கவிதை நூல்களையும் 'உயிரிசை' என்ற ஒலி நாடாவையும் வெளியிட்டுள்ளார். கரைச்சிப் பிரதேச செயலகத்தின் கலாசார உத்தியோகத்தராகப் பணிபுரிகிறார்.

கொக்கரக்கோ...



தொடர்ச்சி...

திரும்புவது என்பது அவன் திட்டம். வேலை இதற்கு இடையூறு. எனவே முகாமையாளருக்கு உண்மையான காரணத்தை நேரில் விளக்கிய பின்னரே எழுத்தில் தன் வேலை துறப்புக் கடிதத்தைச் சமர்ப்பித்திருந்தான். அவனது நேர்மை அவனுக்குப் பரிசளிக்கத் தவறவில்லை. ஒரு வருடத்தில் திரும்பி வந்தால் வேலை மீண்டும் தரப்படும். சம்பளமில்லா லீவில் போய்வரலாம் என்று மனிதாபிமான அடிப்படையில் நிர்வாகம் அறிவித்தபோது,

அவன் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தான். பொய்யை மெய்யாக்க ஆயிரம் பொய் சொல்லாமல், உள்ளதை உள்ளபடிசொன்னதால், அவனுக்கு யோகம் அடித்திருக்கின்றது. இப்போது 12மாதகால அவகாசத்தில் ஒருபெண்ணைத்தேடிவிடவேண்டும்.

— — — — —

யாழ்ப்பாணம் – தெல்லிப்பளையில் அவனுடன் ஒன்றாகப் படித்த குபேரன் அவனுக்கு இந்த விடயத்தில் உதவுவதாக வாக்களித்துத் தன் வீட்டில் தங்க ஓர் அறையும் கொடுத்திருந்தான். அவன் நல்ல மனம் கொண்ட பாடசாலைத் தோழன். 8மாதங்கள் கழிந்தும் அவர்கள் பெண் வேட்டை எந்த வழியிலும் பலன் கொடுக்காதது இருவருக்குமே ஏமாற்றமாக இருந்தது. மீண்டும் மீண்டும் கொழும்பு பயணித்து விசாவைப் புதுப்பித்துக் கொண்டிருந்த வசீகரனுக்கு எரிச்சலாக இருந்தது.
ஓர் இடத்தில் வயதுப் பிரச்சினை, இன்னொரு இடத்தில் சாத்திரப் பொருத்தப் பிரச்சினை... அவன் பிரித்தானியப் பிரஜை என்பதால் இன்னொரு புறம் பிறந்த மண்ணில் அந்நியனாகி, விசாவுக்காக கொழும்புக்கு ஓடித் தரியும் அவலம்... கைவசம் இருக்கின்ற வேலையும் பறிபோகப் போகின்றது. தேடி வந்த துணைவியும் கிடைக்காமல் போகப் போகிறாள் என்று வசீகரன் மனம் நொந்து கொண்டான். அவனை உற்சாகப்படுத்திப் பெண் தேடும் வேட்டையை மும்முரமாக்கியிருந்தான். நண்பன். இந்த வேட்டையில்தான் 35வயதான கமலத்தைப் பற்றிய தகவல் அவர்கள் காதில் வீழ்ந்தது. அவன் நண்பன் நம்பிக்கையான இடங்களில் விசாரித்ததில் நல்ல குடும்பம். பொறுப்பு எதுவும் வருகிற மாப்பிள்ளைக்கு இல்லை. பெண் படித்த பட்டதாரி. ஆங்கில ஆசிரியை. சுமாரான அழகி. மாநிறம் என்ற தகவல்கள் எல்லாம் கிடைத்தன. பெண்ணின் போட்டோ கிடைத்திருந்தாலும் நேரில் ஒரு தடவை பார்க்க வேண்டும் என்ற சபலம் வசீகரனுக்கு.
அப்படியானால் என்ன செய்வது? ஒரு திட்டம் வகுக்கப்பட்டது.
கொக்குவிலில் கமலத்தின் குடும்பத்தாரோடு தொடர்புடைய ஒருவரை வசீகரனின் நண்பன் குபேரனுக்குத் தெரியும். வீட்டுக் கோழியை விற்கும் நோக்கம் கமலத்தின் தாய்க்கு இருக்கின்றது. கோழி வாங்கும் காரணத்தோடு வீட்டுப் பக்கம் தலையை நீட்டினால்,
பெண்ணை நேரில் பார்க்கலாம் என்று குபேரன் காதில் போட்டு வைத்தார் அந்தக் கொக்குவில் நண்பர்.
பெண் வீட்டில் நிற்கிறாள். இப்பொழுது போனால் நேரில் பாக்கலாம் என்று அவர் போனில் தகவல் தந்த காரணத்தால்தான், தன் பைக்கை எடுத்துக் கொண்டு வசீகரன் குறிப்பிட்ட வீட்டுக்குக் கோழி வாங்கப் போயிருந்தான்...

— — — — —

இப்பொழுது வாசகர்களுக்குக் குழப்பம் தீர்ந்திருக்கலாம். அத்தோடு வசீகரன் குழம்பியதிலும் நியாயம் இருக்கவே செய்தது. காரணம் குபேரனுக்குத் தெரிந்த அந்தக் கொக்குவில் நண்பர் 'குபேரன், சங்கதி ரகசியமாக இருக்கட்டும்' என்று இவர்கள் இருவருக்கும் அடித்துச் சொல்லிவிட்டு கமலத்தின் மாமாவின் காதிலும் அதே சங்கதியைப் போட்டுடைத்திருக்கிறார்.

— — — — —

'ஒருத்தருக்கும் சொல்லிப் போடாதீங்கோ' என்று அவருக்கும் சொல்லத் தவறவில்லை. இதனால்தான் கோழி வாங்க வந்த வசீகரனை, 'கமலத்தைத் திருட்டுத்தனமாகப் பார்க்க வந்த பொடியன். நல்ல பொடியனாம். ஆளும் வாட்டசாட்டமா இருக்கிறார். லண்டன் மாப்பிள்ளை. விட்டிராதை பார்வதி' என்ற சங்கதியை பார்வதியின் காதில் போட்டு அவளை அடுக்களையில் உஷார்படுத்தியிருந்தார் சிவகடாட்சம் மாமா. இதைத் தொடர்ந்ததுதான் பசுப்பால் கலந்த தேநீரும் பலகாரமும்! வசீகரனுக்கு வழங்கப்பட்டது. மனிதன் சுயநலவாதி. தன் இலாபத்துக்காக நேரத்துக்கு ஏற்றவாறு தன்னை மாற்றிக் கொள்ளும் சந்தர்ப்பவாதி.
திலகனுக்கு மகா குழப்பம். ஒருநாளும் இல்லாத திருநாளாய் அவனது அக்காள் அவன் கையில் இரண்டு நூறு ரூபாய்த் தாள்களைத் திணித்து,
"தம்பி இந்தா நீ கேட்ட காசு. அது சரி கோழி வாங்க வந்த மாமாவை உனக்கு ஆரெண்டு தெரியுமே?" என்று கமலம் கேட்டபோது, அவன் குழப்பம் எல்லை மீறியது. இதென்ன கதையாக இருக்கிறது? கோழி வாங்க வந்தவரை மாமா என்கிறாள் அக்கா...! அம்மாவும் மாமாவும் வீட்டுக்கு வந்தவனைக் கதிரையில் இருத்தி வைத்துப் பலகாரமும் பால் ரீயும் கொடுக்கினம்...!
எப்பவோ கேட்ட நூறு ரூபாய்க்காக இருநூறு ரூபாயைக் கையில திணிச்சு, கோழி வாங்க வந்த மாமாவைத் தெரியுமா எண்டு கேக்கிறாள் அக்காள்...!
அவன் நன்றாகவே குழம்பிப் போனான்....

— — — — —

கோழிகளை வெறுக்கும் அவன் வீட்டுக் கோழியொன்று வெளியிலிருந்து வந்த சேவல் ஒன்றின் மீது மோகம் கொண்டு விட்டதையும், வீட்டில் உள்ள இந்தப் பெட்டைக் கோழி வந்த சேவலோடு வெளியேறுவதற்கு ஆவல் கொண்டுவிட்டதுவும் புரிந்திருந்தால் ஒருவேளை அவனுக்கு இந்தக் குழப்பம் தீர்ந்திருக்கலாம். வீட்டில் ஒரு பெட்டைக் கோழி குறைகிறது என்ற அற்ப சந்தோஷத்தையாவது அது கொடுத்திருக்கலாம்.
"கொக்கரக்கோ..." நேரகாலம் தெரியாமல் தனிக்காட்டு ராஜாவாகத் தெரியும் திலகன் வீட்டுச் சேவல் கூவியது.

சிறுகதை



நெடுந்தீவு மகேஷ்

நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், வடக்கு- கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராக் கடமையாற்றி ஓய்வுபெற்றிருக்கிறார். 1960களில் இவர் எழுத ஆரம்பித்ததும் இவரது சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள் போன்றன பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் தனியிடம் பிடிக்கத் தொடங்கின. இவர், ஆரம்பத்திலிருந்தே ஆக்க ஓவியம், இசை, நாடகம் போன்றவற்றில் ஈடுபாடு கொண்டுள்ளதுடன் எழுத்தலகிலும் கல்வித்துறையிலும் தொடர்ந்தும் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார்.

கிராமும் நகரமாகிறது

'தொப்' என்ற பேரொலியோடு விழுந்து உருண்டோடும் பனம்பழத்தைப் பார்த்திருந்த பற்குணத்தாரின் மூக்கின் வழியாக உள்ளீர்க்கப்பட்ட பனம்பழத்தின் வாசம் அவரது வாயில் உமிழ்நீரைச் சுரக்கச் செய்தது. 'தொப்பென்று விழுந்தான் தொப்பி கழன்றான்' என்பதாக, அந்த நாள், சிறுவயதில் கேட்டுச் சலித்த விடுகதையொன்றின் விடையாகத் தோன்றிய பனம்பழத்தை அவர் ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தார். பனம்பழம் வீழ்ந்த சத்தத்தை எங்கிருந்தோ கேட்டிருந்த பசுமாடு ஒன்று உருண்டோடும் பனம்பழத்தின் விசை அடங்கும் முன்னரே அதைக் கடித்துச் சுவைப்பதைக் கண்டார். "அங்கபார் பனம்பழத்தை மாடு கூப்பித் தின்னுது" என்றார்.

அவரது வார்த்தைகளைக் கேட்க அங்கே ஒருவருமே இருக்கவில்லை. அவரது பேரப்பிள்ளையான டினோசன் அவரது பேச்சுக்களை அலட்சியம் செய்வதாக அவருக்குத் தெரிந்தது. முற்றத்தில் நின்ற பனை மரத்தின் அடியில் மாடு கூப்பிய பனம் பழத்தின் விதைகள் சில பரவிக் கிடந்தன.

தனது மூத்த மகனின் வீட்டு விறாந்தையில் போடப்பட்டிருந்த சாய்மனைக் கதிரையில் இன்றைய ஓய்வு நிலையில் பற்குணத்தார் சாய்ந்திருந்தார். மாடு தின்னும் பனம்பழத்தின் மீதில் விழுந்த கண்ணை வேறு திசைக்குத் திருப்ப அவருக்கு மனம் வரவில்லை.

மாட்டைத் துரத்திவிட்டுப் பனம்பழத்தைக் கையிலெடுக்கும் ஆசையை அவரது வயோதிப இயலாமை தடுத்தது. இப்பொழுது சிலநாள்களாகப் பனம்பழம் சாப்பிட வேண்டும் என்ற ஆசை நிராசையாகவே போய்க் கொண்டிருந்தது.

அவரது ஒரேயொரு மகன் சரவணன், படிப்புக்கும் பட்டத்துக்கும் ஏற்ற மதிப்பான தொழிலைத் தனது ஓய்வுக்கு முன்னரே அவனாகத் தேடிக் கொள்ளப் பற்குணத்தார் ஊக்குவித்திருந்தார்.

இப்பொழுது அவரது மகன் ஓர் அரச உயர் அலுவலர். பிரதேச செயலர். அவனது தொழிலுக்கு ஏற்றாற்போல் படிப்பும் பணமும் சேர்ந்த இடமாகத் தேடி அந்தக் கிராமத்திலேயே மருமகளையும் சேர்த்துக் கொண்டார்.

ஒரேயொரு மகள் கனடாவில் திருமணமாகி அங்கேயே வசிக்கிறாள். அன்போடிணைந்திருந்த துணையைப் போர்க்காலத்தில் இழந்தார். இப்பொழுது ஊரோடு, உத்தியோகம் பார்க்கும் மகனின் வீட்டிலேயே அவரது காலம் ஓடிக்கொண்டிருக்கிறது.

— — —

மகனுக்குச் சீதனமாகக் கிடைத்த வீடு அது. அந்தக் கிராமத்தின் பிரதான வீதியில் உயர்ந்திருந்த மாளிகையாக அது தோன்றியது. அதே கிராமத்தில் மாஸ்ரர் பற்குணத்தார் வாழ்ந்த அந்த ஓலைக் குடிசைவீடு இன்று சிறு மண்மேடாக எஞ்சிக் கிடக்கிறது.

நாகரிகம் உள்நுழையாத முன்னைய நாள்களில் இந்தக் கிராமம் அமைதியாகக் கிடந்தது. இந்தக் கிராமத்தில் போக்குவரத்து வசதிகள் பெரிதாக எதுவுமே இருக்கவில்லை. இப்பொழுது இந்தக் கிராமம் விரைவாகவே நகரமயமானதாக எல்லோருமே பெருமை பேசுவது பற்குணத்தாரின் காதுகளுக்குச் செய்திகளாக வந்தன.

அன்று கொட்டில் வீட்டில், குப்பி விளக்கின் வெளிச்சத்தில், பாயில் விழுந்து, குப்புறப் படுத்துக் கிடந்து படித்து ஓர் ஆசிரியராக உயர்ந்தவர் அவர்.

படிக்கும் காலத்தில் ஒவ்வொரு காலையிலும் பள்ளிக்கூடத்தை நோக்கி ஓடுவதற்கு முன்னர் பனம்பழத்தையும் பழங்கஞ்சியையும் காலை உணவாகக் கொண்ட வேளைகளில் இருந்த உற்சாகம் இன்றைய கிராமத்தவர்களிடத்தில் இருப்பதாக அவருக்குத் தோன்றவில்லை.

இது நகரமாக மாறிவிட்டதாகப் பலரும் இன்று பிதற்றிக் கொள்வதாகவே மாஸ்ரர் எண்ணமிட்டார்.

காப்பெற் வீதிகளில் ஓடிவிரையும் பேருந்து, கார், லொறி என்பவற்றின் ஊர்வலம். இரவு பகலாக மின்னி வெளிச்சமிடும் மின்சாரம் என்பன எல்லாமே நகரத்தின் கோலத்தை மெல்ல மெல்லக் கிராமத்தின் உள்ளே நுழையவிட்டிருந்தன.

குசினியின் உள்ளே அடுப்பமைத்து, விறகு வைத்து, நெருப்பு மூட்டி, உணவு சமைத்த காலம் தொலைந்து எரிவாயுவும் மின்சாரமும் சமையலறைகளை ஆக்கிரமித்திருந்தன. இவைகளெல்லாம் நாகரிகத்தின் தோற்றங்களாகத் துலங்கின.

பனை மரங்களிலிருந்தும் தென்னை மரங்களிலிருந்தும் வீழும் ஓலை, பாளை, கொக்கறை, பன்னாடை என்பவற்றைச் சேகரித்து அடுப்பெரிக்கும் எவரையும் இன்று காணவே முடியவில்லை. அந்த விறகுப் பொருள்கள் எல்லாமே ஆங்காங்கே வீழ்ந்து சிதறிக் குப்பைகளாகிக் கிடக்கின்றன. பற்குணத்தாருக்கு இவை பற்றிச் சிந்திக்கும் தோறும் துயரம் மேலெழும். சொல்லியழ ஆள்களின்றி அங்கலாய்ப்பார்.

கிராமத்தை அலங்கரித்த மாட்டு வண்டிகளும் மிதிவண்டிகளும் தொலைய மோட்டார் வண்டிகளின் இரைச்சல்கள் அவரது காதுகளில் நாராசமாக விழுந்தன. அவைதாம் கிராமத்தை நகரமயமாக்கும் காரணிகள் எனக்கூறும் அறியாமையை நினைக்கப் பற்குணத்தாருக்குக் கோபமும் பொங்கி வரும்.

ஓலை வீடுகளைக் காண்பது இன்று அரிதாகிப் போனது. கல்வீடுகளும் மின்சாரமும் உள்நுழைய விட்ட தொலைக்காட்சிப் பெட்டிகளின் முன்னே கிராமத்தவர்கள் சூழ்ந்திருக்க அருமையான பொழுதுகள் அர்த்தமின்றிப் போயின.

பற்குணத்தார் முன்னர் பாவித்த அட்டாளைக் குடில் இப்பொழுது மகன் வீட்டுக்கு வந்த கையோடு தூக்கிவரப்பட்டு மகனின் மாளிகை வீட்டருகே வைக்கப்பட்டிருக்கிறது அதன் ஓலைக் கூரை இற்றுப் போய் விட்டது. அதை வேய்ந்து, புதுப் பிக்க இன்று அவர் ஒரு தொழிலாளியைத் தேடினார்.

தென்னோலையில் கிடுகு பின்னும் தொழிற் திறமையுள்ளவர்கள் எவரையும் கிராமத்தில் இன்று காணமுடியவில்லை. கிடுகு பின்னும் தொழிலின் தேவை இல்லையென்றாகி விட்டதோ!

கல்வீடுகளின் தோற்றத்தால் கூரைகளெல்லாம் கல்நார் ஓடுகளால் வேயப்பட்ட காட்சி, கிடுகுகளின் தேவையைக் குறைத்து விட்டன.

கல்நார் ஓடுகளின் பாவனையால் புற்றுநோய் தோன்றும் அபாயம் அதிகரித்திருப்பதான செய்திகளைப் பலரும் சொல்லப் பற்குணத்தார் கேட்டிருக்கிறார்.

மகனின் மாளிகை வீட்டுக் கூரையைப் பற்குணத்தார் அண்ணாந்து பார்த்தார்.

அது அந்தக்காலத்தில் கிராமத்துக்குக் கொண்டுவரப்பட்ட செம்மண் நிற ஓடுகளால் வேயப்பட்டிருந்தது. மனத்தில் ஓர் ஆறுதல்.

இன்று ஊரவர்கள் ஒருவரையேனும் ஒரு வேலைக்கென்று கூப்பிட்டுச் செய்விக்க முடியவில்லை. வேலையென்றும் கூலியென்றும் எவரும் கிராமத்தில் உழைப்பதற்கென்று அலைந்து திரிவதையும் காணவேயில்லை.

எல்லோருமே இப்பொழுது எவ்வாறு பணம்படைத்தவர்கள் ஆனார்கள்?

கிராமத்தில் இருந்தவர் பலரின் உறவினர்கள் அண்ணன், தங்கை, மாமன், மச்சான் என்று அநேகர் வெளிநாட்டுக்குப் போய்விட்டார்கள். மாடு தின்ற பனம்பழத்தின் எஞ்சிய விதைகள் பற்குணத்தாரின் பார்வையில் விழுந்தன. பாத்தி போட்டுக் கிழங்கெடுத்து ஓடியலாக்கிப் புழுக்கொடியலாக்கி உண்ட ஞாபகம் வந்து, அவரைப் பழைய வாழ்க்கையின் மகத்துவத்துக்கு இழுத்துச்சென்றது. கூழ் என்றும் பிட்டென்றும் சுவைத்துக் களித்த நாள்கள் எங்கே?

ஒருமுறை பெருமூச்சு விட்டார்.

பசுமாடு பனம்பழம் சாப்பிட்ட உற்சாகத்தில் அங்கிருந்து நகர்ந்து கொண்டிருந்தது. முந்தாநாள் 'நாளைக்கு வாறன் ஐயா' என்று சொல்லிப்போன சுப்பர் மகன் சொக்கன் இப்பொழுது பாதையோரத்து இரும்புப் படலையைத் திறந்துகொண்டு உள் நுழைவது தெரிகிறது.

இத்துப்போன அட்டாளைக் கூரையைத் திருத்தி வேயச் சொக்கனை வரச்சொன்ன நினைவில் 'வாடாப்பா நேற்று வாற தெண்டு சொன்னாய்' என்றபோது, அவன் இன்றாவது வந்தானே என்ற சந்தோசம் பற்குணத்தாரது முகத்திலே தெரியச் சிறிது புன்னகைத்துக் கொண்டார்.

"இல்லைச் சேர்! என்னிட காணியில் நான் புதுசாக் கட்டின கல்வீட்டுக்குக் கடைசிக் காசாகக் கொஞ்சக் காசு தாற தெண்டு வரச் சொன்ன வங்கள். அதுதான்...! அதுக்குப் போனனான்." என்றான் சொக்கன்.

"எப்பிடிநீ கட்டின வீடு நல்லதோ?"

"சும்மா காசைத் தந்தவங்கள் எல்லோரும் கட்டிறாங்கள் எண்டு சொல்லி நானும் கட்டினனான். ஆனால் எங்கட குடிசை வீட்டில இருக்கிற குளிர்மையும் காத்தோட்டமும் மகிழ்ச்சியும் இந்தக் கல்வீட்டில காணக் கிடைக்காது. அது அவங்கள் தந்த காசுக்கும் பொருளுக்கும் அவங்கட சொற்படி கட்டின வீடுதானே! வசிக்கிறதுக்கு எங்கட இந்தக் குடிசை வீட்டைப் போல சுவாத்தியமான வீடு எங்கையும் கிடைக்காது'

சொக்கன் சொன்ன குடிசைவீட்டுப் பெருமை பற்குணத்தாருக்கு மகிழ்ச்சியைத் தந்தது. வீட்டின் வடக்கே கூரை சிதைந்து கிடந்த அட்டாளைக் கொட்டிலைத் திரும்பிப் பார்த்தார். சொக்கன் வந்துவிட்டான். அட்டாளையின் கூரையைச் சரி







கொல்லும் தமிழ்

கவிதை



வேலணையூர் தாஸ்

வேலணையைச் சேர்ந்தவர். கந்தையா சோதிதாசன் இவரது இயற்பெயர். தமிழ்க் கவிதைப்பரப்பில் நீண்ட காலமாக எழுதி வருகிறார். 'மழைக்காலக் குறிப்புக்கள்' இவ ருடைய கவிதைத் தொகுப்புக்களில் ஒன்று. இலக்கியச் செயற்பாட்டாளர். யாழ். இலக்கி யக்குவியத்தின் தலைவராக இருந்து கலை இலக்கியப்பணிகளை முன்னெடுத்துவரு கிறார்.

"எல்லாம் முடிந்துவிட்டது
பிணங்களின் நடுவே
வெற்றிக் கொடியை நாட்டியாயிற்று
இனிப் பயமில்லை" என்றீர்கள்.
உலக அரங்கில்
நீங்கள் தான் வீரரென்றீர்கள்.
இரவு விருந்தும் பைலாப் பாடலுமென
சுதந்திரம் பெற்றதாய்க் குதூகலித்தீர்கள்.
ஆனால்...,
உங்கள் முகத்தில் நிரந்தரப் புன்னகையை
ஒட்ட முடியாது அவதிப்படுகிறீர்கள்.
தூக்கத்தின் இடையே பதறி விழிக்கிறீர்கள்.
எங்களிடம் எதுவுமில்லை
ஆனாலும் நீங்கள் பயப்படுகிறீர்கள்

தமிழில் வாசிப்பதை
நிறுத்தியிருக்கிறீர்கள்
எங்கள் பாடல்கள், கவிதைகள், உரைகள்
கேட்டால் காதைப் பொத்திக் கொள்கிறீர்கள்
முகம் வெளுத்து வியர்க்கிறீர்கள்.

ஆம் புரிகிறது
நீங்கள் எம் சொற்களுக்கு அஞ்சுகிறீர்கள்
'அன்பே சிவம்' என்றும் 'யாவரும் கேளிர்' என்றும்
'அன்பின் வழியது உயிர்நிலையென்றும்'
நாம் எழுதியதால் எம் சொற்கள் ஒருமானவை
என்று நினைத்து இருந்தீர்கள்.
இப்பொழுது நெருப்பெரியும் சொற்களை
கண்டு நடுங்குகிறீர்கள்.
எமது கவிதைகளில் உருகி வழியும் சொற்கள்
உங்கள் குழந்தைகளைத் தாக்காது
இருக்கப் புத்தரிடம் இறைஞ்சுகிறீர்கள்.

குரலுக்குரிய பலரைக் கொன்றபின்னும்
புதிதாய் எழுகிற சொற்களால்
துரத்தப்படுகிறீர்கள்
சொற்கள் கேள்விகளாய்க் குத்துகின்றன
சாபமாய் எரிக்கின்றன

குற்றங்களைப் பட்டியலிடுகின்றன
வல்லரசின் துணையோடிருந்த
உங்களை வெறும் வார்த்தைகள்
என் செய்யும் என இருந்தீர்
தமிழ் வாழ்த்தும்,
வணங்கும், வரவேற்கும்,
வாழ்வில் கேடு வந்தால்
தீயாகும், பெருநெருப்பாய் எரியும்,
பகை அழிக்கும்,
ம்ம்... தமிழ் கொல்லும்.



கிராமம் நகரமாகிறது

(தொடர்ச்சி)

செய்து விடலாம் என்ற ஆர்வத்தோடு "இன்றைக்கு வேலையைத் தொடங்கலாமா?"

என்றார் பற்குணம்.

"இப்பவே தொடங்கலாம். எல்லாத்துக்கும் இந்தத் தென்னோலைக் கிடுகுகள் இருந்தால் இப்பவே தொடங்க லாம்" என்ற

சொக்கனின் சொற்களில் இந்தத் தென்னோலைக் கிடுகுகளை இன்று எங்கிருந்து கொண்டு வரப்போகிறீர் கள்?

என்ற கேள்வியும் தொக்கி நின்றது.

"கிடுகுகளை எங்கே வாங்கலாம்?" பற்குணத்தார் சொக்கனிடமே கேட்டார்.

"அதுதானே சேர் பெருங்கஸ்ரம். இப்ப ஒருத்தரும் இங்க கிடுகு பின்னிறதில்லை. கிடுகு வேணுமெண்டால், சொல்லித்தான் பின்னுவிக்க வேணும். அதுவும் தென்னந் தோட்டக் காணிக்காரரிட்டச் சொன்னாத்தான் கிடைக்கும். முந்தியெண்டால் கலியாணவீடு சாமத்திய வீடு செத்தவீடு கொண்டாட்டங்களுக்கெல்லாம் பந்தல் போட்டு

அலங்கரிக்கிறதெல்லாம் கிடுகுப் பந்தல் போட்டுத்தான் செய்யிறவை. இப்பயெல்லாம் ஓடர்பண்ணித் தகரக் கொட்டகையெல்லோ போடுகினம்.' சொக்கன் ஒரு பிரசங்கமே செய்தான்.

பற்குணத்தாருக்கு என்ன சொல்வதென்றே தெரிய வில்லை.

மருமகள் கார்த்திகா அறையின் கதவோரமாக வந்து பற்குணத்தாரை எட்டிப் பார்த்தாள். அவளது பார்வை யில் தெரிந்த தேவையை உணர்ந்துகொண்ட சொக்கன் "சேர் இன்னமும் சாப்பிடயில்லைப்போல.."

என்று வார்த்தையை இழுத்தான்.

பற்குணத்தார் பதில் சொல்லு முன்னரே 'நான் போயிட்டு வாறன்' என்றவன் அங்கிருந்து புறப்பட ஆயத்தமா னான்.

"இரு இரு சாப்பிட்டிட்டுப் போகலாம்" என்று தடுத்த பற்குணத்தார். எதிர்பார்த்ததைப்போலவே திரும்பி வந்த மருமகள் சொக்கனுக்கும் சேர்த்து இரண்டு கோப்பைக ளில் சோறு, கறியோடு வந்திருப்பதைக் கண்டு மகிழ்ந்து போனார்.

சொக்கனோ, வீட்டிலிருந்து புறப்படும் முன்னரே ஒடியல்பிட்டும் திருக்கை வறையும் சாப்பிட்டு வந்த சங்கதியைச் சொல்லியவாறு அங்கிருந்து போக ஆயத்தமானான்.

ஒடியல்பிட்டும் திருக்கை வறையும் என்றதும் பற்குணத் தாருக்கு வாயூறியது.

"அப்ப நான் போயிட்டு வாறன் சேர்! கிடுகுகளை வாங்கிப் போட்டு எனக்குச் சொல்லி அனுப்புங்கோ நான் வந்து அட்டாளைக் கொட்டிலை மேஞ்சு தாறன்" சொல்லிக் கொண்டே சொக்கன் புறப்பட்டுப் போனான்.

கைக்கு வந்த சோற்றுக் கோப்பையைப் பார்த்த பற்கு ணத்தாருக்கு கோப்பையில் குவிந்திருந்த சோறும் கறியும் விசம்போல தோன்றின.

இந்தக் கிராமத்தில் அந்தக் காலத்திலே தும்பை, தூது வளை, முசுட்டை குறிஞ்சா, வீணாலை போன்ற இலைக்கறி வகைகளும்

கடல்வாழ் நல்ல மீன் வகை மச்சங்களும் சமைத்துண்ட நிலை இன்று இல்லையென்றாகிவிட்டதே.

இரசாயனப் பசளைகளும் மருந்தும் விசிறி விளைவித்த கீரை காய்கறி கிழங்குகளும் குளிர்சாதனப் பெட்டிக்குள் வைத்துப் பாதுகாத்த அந்தியேட்டியும், ஆண்டுத் திவசமும் கண்ட கோழி ஆடு, மாடு என்பவற்றின் இறைச் சிகளும் தகர டப்பாவில் அடைக்கப்பட்ட உணவுப் பொருள்களுமே இன்று உணவாகப் பரிமாறப் படுகின் றன. கோப்பையில் இருந்த பாசுமதி அரிசிச் சோறும் புறொயிலர் கோழி இறைச்சிக் கறியும் மருந்தடித்து வளர்த்த செடிகளிலிருந்து பிடுங்கிச் சந்தைக்கு வந்த காய்கறி வகைகளும் சாப்பாடாகி இருந்தது. நேரமும் பசியும் தூண்டிய வேகத்தில் பற்குணத்தார் சோற்றில் சிறிதளவு சாப்பிட்டார்.

கிராமம் தனது இயற்கையை அழித்துக் கொண்டு செயற்கையின் பூச்சில் அழகும் ஆனந்தமும் பெறுவதாக அவர் எண்ணினார். உள்ளம் கனத்தது.

கிராமத்தின் மேற்கே இன்னமும் மின்சாரம் இணைக்கப் படவில்லை. அங்கே வசிக்கும் பற்குணத்தாரின் சகோதரியின் மகள் பார்வதி, சாதாரண தோட்டத் தொழிலாளியான கணவன் கிராமத்து வாழ்க்கை முறையில் ஊறிப்போன குடும்பம். அவர்கள் தம்முடன் வந்து தங்கள் குடிசையில் தங்கிப்போகலாம் என்ற ழைத்த அன்பு வேண்டுகோளை இப்பொழுதே பற்குணத் தார் நிறைவேற்ற எண்ணினார்.

மகனிடமும் மருமகளிடமும் சொல்லிக் கொண்டே மறுநாள் மிதிவண்டியில் புறப்பட்டவர் ஐந்து கிலோமீற்றர் தூரத்தைக் கற்பனைக் கடலில் மிதக்கவிட்டார். பார்வதி யின் குடிசைவீடு குளிர்ச்சியானது. அவர்கள் சமைக்கும் உணவில் கிராமத்தில் கிடைக்கும் இலைக்கறியும்

மீன்வகைகளும் இருக்கும். ஒடியல்கூழும், பிட்டும் உண்ணலாம். பனாட்டும் புழுக்கொடியலும் சுவைக்க லாம். அவர்கள் வளர்க்கும் பசுவிலிருந்து பாலும் மோரும் குடிக்கலாம் கோழி முட்டைக்கும் குறைவிருக்காது. மனம் மகிழ்ச்சிப் பெருக்கில் நீந்தியது.

பார்வதி வீட்டுக்குப் பற்குணத்தார் போய்க் கொண்டிருக்கி றார்...!

வலி சுமந்த நெஞ்சினராய்...



சிறுகதை



நடராசா இராமநாதன்

யாழ்ப்பாணம்– அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். வசிப்பது முல்லைத்தீவு உடையார்காட்டு. 50வருடங்களுக்கு மேலாக கலை, இலக்கியத்துறையில் ஈடுபட்டு வருகிறார். சிறுகதை, நாடகம், கவிதை, பாடல்கள், ஒலிபரப்புத் துறை போன்றவற்றில் சிறந்த கலைஞனாவர். ஒளிபரப்புக் கலைஞராகவும், மேடைநாடகநடிகராகவும்விளங்கும் இவரின் சிறுகதைகள் அடங்கிய 'அழுத்தும் நிஜங்கள்' எனும் தொகுப்பு அண்மையில் வெளியிடப்பட்டது.

தெருப்படலையடியில் நாய் பலமாகக் குரைத்தபோது எட்டிப் பார்த்த குமுதினிக்கு வந்தது யார் என்பது புரிந்துவிட்டது. "ஐயையோ, நாகராசா மாமா வாறார்..."என்று கூறிக்கொண்டே வாசலடியை நோக்கி ஓடினாள் குமுதினி. தங்களது நாய் அவருக்குக் கடித்துவிடக்கூடாது என்ற நோக்கோடு வேகமாக ஓடியவள் நாயை எட்டிப் பிடித்துவிட்டாள். இதற்குள் நாகராசருக்கு இதயம் "படக்.. படக்" கென அடிக்கத் தொடங்கி விட்டது.

"வாருங்கோ மாமா... நான் நாயைக் கட்டிறன் நீங்கள் உள்ளுக்குப் போய் இருங்கோ.."
கொய்யா மரத்துக்குக் கீழுள்ள அலவாங்கிலே நாயைக் கட்டி விட்டு, கைகளை அலம்பி, வீட்டுக்குள் புகுந்த குமுதினி, நாகராசர் தனது கைகளில் திருமண அழைப்பிதழ்களோடு நிற்பதைக் கண்டாள்.

"இருங்கோ மாமா" என்றவளிடம் திருமண அழைப்பிதழைக் கொடுத்த நாகராசர், "காசி எங்க போட்டான், ஆளைக்காணேல்ல..." என்று கேட்டபடியே அருகிலிருந்த கதிரையில் அமர்ந்துகொண்டார். காசிஎன்றகாசிலிங்கமும், நாகராசாவும் நெருங்கிய நண்பர்கள், என்பதால் 'அவன்', 'இவன்' என்று தான் இருவரும் தங்களை விழித்துக்கொள்வது வழக்கம். இந்த விடயம் குமுதினிக்கும் தெரியும்.

"அப்பா உதிலை சந்தைக்குப் போட்டார், இப்ப வந்திடுவார்..." என்ற குமுதினி, நாகராசா குடிப்பதற்காக ஏதும் கொடுக்கும் நோக்கில் குளிர்சாதனப்பெட்டியைத் திறந்து பார்த்தாள். காசிலிங்கத்தாரின் மனைவி மனோன்மணியின் பெரிதாக்கிய உருவப்படம் சுவரில் படச்சட்டத்துக்குள் தெய்வீக நிலையில் கொழுவப்பட்டிருந்தது. வாடாமலர்மாலை அணிவிக்கப்பெற்றிருந்தது. காலைவேளை கொழுத்தப்பட்ட ஊதுபத்தியின் மணம் விறாந்தையெங்கும் வியாபித்திருந்தது. அதைப் பார்த்த நாகராசருக்கு மனதில் சிறிது ஏக்கம் பிறந்தது.

"...ச்சா...என்ன அந்நியோந்நியமான, அன்பான குடும்பம். மனோன்மணி அகாலமாய்ப் போனதிலிருந்து காசிஒருநடைப்பிணமாய்ப் போனானே..." "மனதுக்குள் எண்ணியபடியே குமுதினி கொடுத்த குளிர்பானத்தை அருந்தினார் நாகராசா.
"பிள்ளை காசியை இன்னும்காணேல்ல.. நான் போட்டுவரப் போறன், இன்னும் கன இடத்துக்குப் போகவேணும்... அவனை நான் பிறகு நேரில கண்டு சொல்லுறன், நீ இந்த நோட்டீஸை நான் தந்தனான் எண்டு குடுத்துவிடம்மா..." குளிர்பானங் கொடுத்த ஏதனத்தை வாங்கியபடியே "அம்மா போனாப்பிறகு, இந்தநாலுவருஷத்தில அப்பாகோயில்குளம், கலியாணவீடு, சாமத்தியவீடுஎண்டுநன்மையானநிகழ்சியள் ஒண்டுக்கும் போறதில்லைத்தானே மாமா..." என்று கூறிய குமுதினியை இடைமறித்தார் நாகராசா.

"அது எனக்குத் தெரியும்பிள்ளை, அவன்ர துன்பமும், அவன் படுகிறஅவஸ்த்தையும்எனக்குத்தெரியுமம்மா... எண்டாலும் இந்தநோட்டீஸைநான்கொண்டுவந்துதந்ததெண்டுகுடுத்து விடம்மா. நான் போட்டுவாறன்." நாகராசர் புறப்பட்டுவிட்டார். தாயாரின் உருவப் படத்தை நிமிர்ந்து பார்த்த குமுதினிக்குக் கண்ணீர் கரைகட்டியது. உலையில் கொதித்துக் கொண்டிருந்தசோற்றுப்பாணையைத்திறந்துதுலாவியகுமுதினிக்குப் படலையடியில்தந்தையார்வருவதுதெரிந்தது. தனதுதந்தையின்உடல்மெலிந்து, நடைதளர்ந்துபோனமைகுமுதினிக்குக் கவலையை அளித்தது. தந்தையினதும், தாயாரினதும் நாற்பதுவயதுத்தோற்றம்அவளின்கண்முன்னேவந்துபோனது.

"...அப்பாதோட்டஞ்செய்துநல்லவருமானமீட்டியவர். அவரின் சுறுசுறுப்பும், விடாமுயற்சியும், கடுமுழைப்பும்அவரைநல்ல நிலையில் வைத்திருந்தன. எனது அம்மா தனக்கு வாய்த்த அழகான, அன்பான மனைவி என்பதில் அவர் பெருமிதங் கொண்டதும் எனக்கும், எல்லோருக்கும் தெரிந்த விடயமே.

"காசி, பிள்ளையின்ர கன்னிக்கால் நாளைக்கு, நேரத்துக்கு வந்திடுஎன்ன...மனோவையுங்கூட்டிக்கொண்டுவா. நாள்க் காரியம் எல்லாம் உன்னோட தான்." அழைப்பை விடுத்தவர்கள் சொல்லிவிட்டுப்போக, அப்பாவும், அம்மாவும் போய் முன்னுக்கு நிண்டு எல்லாம் செய்வினம். எங்கட ஊர்க் கோயில் திருவிழா எண்டால் அம்மாவும், அப்பாவும் போய் நிப்பினம்.
"காசி, இஞ்சவா, இதில நிண்டு எல்லா அலுவலையும் செய்..." கோயில் ஐயா கூப்பிட்டு முன்னுக்கு விடுவார். எனக்கு முன்னால்ரெண்டுஅண்ணையவை, நான்மூண்டாங்கால்பெம்பிளைப் பிள்ளை எண்டிறதில அப்பாவுக்கு ஏதோ மகுடஞ் சூட்டியது போன்ற பெருமை. அவரை எல்லா விடயத்துக்கும், எல்லாரும்முன்னுக்குவிடுகிறதைஎண்ணியெண்ணிஅவர் தனக்குள்சந்தோசப்படுகிறதோடஎங்களுக்குஞ்சொல்லிதிருப்திப் படுவார். இப்போது, அம்மா செத்தாப்பிறகு அப்பா ஒரு இடமும் போறதில்லை. தானும், அம்மாவும் ஒன்றாய்த் தீரிந்த நாள்களையெல்லாம் எண்ணியெண்ணிப்பார்த்து அவர் கலங்குவதை நான் நிறையத் தடவைகள் கண்டிருக்கிறன். 'அல்பத்தில்' இருக்கிறஅந்தநிகழ்வுகளின்படங்களைஎடுத்துப் பார்த்துப் பார்த்து அவர் பெரு மூச்சு விடுவார்... தந்தையின் காலடிச் சத்தங்கேட்டு, நினைவுச்சங்கிலி அறுபட நிமிர்ந்து பார்த்தவள், தந்தையார்கொண்டுவந்தசந்தைச்சாமான்களை வாங்கினாள்.
"என்ன பிள்ளை, ஆர் வந்தது, மோட்டச்சயிக்கிள் வந்த அடையளங் கிடக்குது"
"அது... நாகராசா மாமா வந்தவர். அவற்றை கடைசிப் பெடியனுக்குக் கலியாணவீடு. அதுதான் 'நோட்டீசு' கொண்டுவந்து தந்திட்டுப் போறார்.." கூறியபடியே அந்த அழைப்பிதழைக் கொடுத்தாள் குமுதினி. அழைப்பிதழை வாங்கிக்கொண்டு சாய்மனைக்கதிரையில்அமர்ந்தவர்மூக்குக்கண்ணாடியை அணிந்தபடி அழைப்பிதலைப் படித்தார். சந்தைக்குப் போய் வந்த களைப்பால் நெற்றியில் வியர்வைத் துளிகள் முத்து முத்தாகத் தெறித்தன. கண்களில் இருந்து வெளிவந்த ஆவி கண்ணாடியில் படிந்து கண்களை மறைத்தது. மூக்குக் கண்ணாடியை துடைத்தவர், 'நாகராசா தன்ர முதல் மூண்டு பிள்ளையளுக்கம் எனக்குத்தான் நாள் 'நோட்டீஸ்' தந்தவன். நானும் மனோவுந்தான் எல்லாக் காரியங்களுக்கும் முன்னுக்குநிண்டனாங்கள். இப்பஅவள்போ...ன...தாலை' காசியருக்கு நெடுமூச்சொன்று அடிமனதிலிருந்து புறப்பட்டு வெளியேறியது.
"சரி... அப்பாகஞ்சியைக்குடியுங்கோ..." மதியம்வடிச்சகஞ்சியைக் குடிப்பதென்பது தனது தகப்பனுக்கு மிகப்பிரியம்என்பதையறிந்தகுமுதினிஒருகிண்ணத்தில்கஞ்சியைக்கொண்டு வந்து வைத்துவிட்டுசமையல்வேலையைத் தொடர்ந்தாள்.

சாய்மனைக்கதிரையில் இருந்தபடியே தனது மனைவி மனோன்மணியின் உருவப்படத்தை உற்றுப்பார்த்துக் கொண்டு, மனதால் அவளோடு உரையாடிய க்ாசிலிங்கம் அப்படியே உறங்கிவிட்டார். சமையல் முடிந்து தந்தையைச் சாப்பிட அழைப்பதற்காக வந்த குமுதினி, தான் கொடுத்த கஞ்சியைத் தந்தை குடிக்காமல் அது அப்படியே கிடப்பதைப் பார்த்து சற்று ஆதங்கப்பட்டாள். தனது தந்தையாரின் மனம் காயப்பட்டிருந்ததை அவள் அறிந்து கொண்டாள். தனது தந்தை இப்படியே இருந்தால்அவர் எப்போதுமே கவலைப்படுவார். அவரை இனி இப்படியானநல்லநிகழ்வுகளுக்குஅழைத்துச்செல்லவேண்டும். அல்லது தனியே என்றாலும் போகவிட வேண்டும் என்று தீர்மானித்த வள் தனது தந்தைக்குச் சாப்பாட்டைக் கொடுத்தபடியே, "அப்பா, வாற வெள்ளிக்கிழமைதானே நாகராசா மாமான்ரமகன்ரகலியாணவீடு, நீங்கள்கட்டாயம்போகவேணுமப்பா, அவர் உங்களோடநல்லமாதிரித்தானே... அம்மா போனபிறகுநீங்கள்உப்பிடியேயோசிச்சுக்கொண்டிருந்தால் பேந்து உங்களுக்கு வருத்தம் வந்திடும்..." மௌனமாகவே உணவருந்திக் கொண்டிருந்தார் காசியர்.

"உதிலலபக்கத்திலதான்மண்டபம், நாங்கள்ஒருஓட்டோவில போவம்"
"இல்லப்பிள்ள, இப்ப நாலுவரியமா நான் ஒரு இடமும் போகேல்லை, அதாலமற்றாக்கள்..." காசியர்சொல்லிமுடிப்பதற்குள்..,
"அவையார் ஒருதரும் கோவிக்க மாட்டினம், உங்கட நிலைமைஎல்லாருக்குந்தெரியுந்தான.." சரியெனசம்மதித்தவர், எஞ்சிய சோற்றை நாய்க்குவைத்துக்கையலம்பினார்.
ஓட்டோ ஒன்றில் மகள் குமுதினி, மருமகன் பேரப்பிள்ளைகளோடு கல்யாணமண்டப வாசலில் இறங்கியவர் நிமிர்ந்துபார்த்தபோது அங்கே அவரது வயதையுடைய குமாரலிங்கம் நிற்பது தெரிந்தது.
"வாடாகாசி, நான் உள்ளுக்குப்போகத் தோதான ஆளில்லையெண்டுயோசிக்கநீவாறாய்," முக்கத்தில்சிரிதுபுன்னகையை வரவழைத்து, குமாரலிங்கத்தோடுபோனகாசிலிங்கத்தாரின் நடையில் பழைய நிமிர்வைக் காணவில்லை.
"வாறன் குமாரு... இந்தச் செருப்பை இதில கழட்டி விட்டிட்டு வாறன்" என்றவர் ஓரிடத்தில்செருப்பைக்கழற்றிவிட்டுஇருவருமாகபடிக்கட்டுகளில்ஏறிமண்டபத்துக்குள்நுழைகின்றனர். தனக்குப் பெரிதாக மூச்செறிவதைக் குமாரலிங்கத்தாருக்குக் காட்டிக்கொள்ளவில்லை. இருவருமே பக்கத்துப் பக்கத்துக் கதிரைகளில் அமர்கின்றனர். மண்டபம் நிறைந்திருந்தது. நண்பர்கள்யாராவதுவந்திருக்கிறார்களாஎனப்பார்த்தபோது பலரும் வந்திருந்தமை தெரிந்தது. காசிலிங்கத்தாரின் மனைவிமனோன்மணியின்தங்கைசெல்வராணியும், தம்பியோகனும் வந்து "அத்தான்" என்று விட்டுத் தங்கள் தங்கள் இருக்கைகளில் அமர்ந்து கொண்டனர்.

மணமகனின் தந்தை நாகராசரும் அவர் மனைவி லீலாவும் வந்திருந்தஎல்லோர்மேலும்கண்களைஎறிந்து, அவர்களைக் கண்டு வரவேற்பதும் சிரிப்பதும், நடப்பதும், ஓடுவதும் என வாய்...
காசிலிங்கத்தாரைக் கண்ட நாகராசா கிட்டே வந்து கைகொடுத்து வரவேற்று... ஏதேனும் பேசுவதற்கிடையில் யாரோ சைகையால் அழைக்க அங்கே ஓடி...
மங்களவாத்தியங்கள் முழங்கிக் கொண்டிருந்தன. தானும்

கவிதைகள்



புலோலியூர் வேல்நந்தகுமார்

ஈழத்தில் கவிதைத் துறையில் இயங்கிவரும் இளைய படைப்பாளிகளில் இவரும் ஒருவர். புலோலியூர் வேல்நந்தன், வேல்நந்தகுமார் ஆகிய புனை பெயர்களில் ஞானம், ஜீவநதி, கலைமுகம் உட்பட ஈழத்துச்சஞ்சிகைகளிலும் உதயன், சூரிய காந்தி உட்பட்ட பல்வேறுபட்ட பத்திரிகை வெளி களிலும் இவரது படைப்புக்கள் வெளிவந்துள்ளன. பேச்சாளர், விமர்சகர், பத்தி எழுத்தாளராகவும் விளங்குகிறார். யாழ்ப்பாணம் ஹாட்லிக்கல்லூரித் தமிழ் ஆசிரியர். யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்க ஆட்சிக் குழு உறுப்பினர்.

தேர்தல் பொங்கலில்....



ஒன்றாய்ப் பொய்த்தோம்
ஒன்றுதான்
இருந்தோம்
முடியவில்லை
தோற்றுவரை
ஒன்றாய் இருந்தாலும்
வீட்டுக்குள்
ஒன்றுபட்டதாய்
இன்று
தேர்தல்ப் பொய்களினில்
முடிவு
பாதைக்கா?
அரிசிக்கா?
அரும்புக்கா?
சூரியனுக்கா?
புரியவில்லை எமக்கு
ஒன்றுமட்டும்
புரிகிறது
தமிழ்த்தேசியப்
பொய்களிட
அவனுக்கு மட்டுமே
அருகதை
உள்ளதென்பது



யாதும் ஊரே
யாவரும் கேளிர்
என்ற இனமே
ஏன் இப்படி
ஆளுக்கொரு
கட்சியும்
நாளுக்கொரு
கோலமும்
கொண்டாய்
இப்போமட்டுமே
அல்லும்
காட்சி இதுதான்
யாருக்கு மாலையிட
குழம்பிப்போன
தமயந்தியின்
மனமாய் நாம்
உன்மை
நிலைநில்லா
அத்தாணி
மண்டபத்தில்
அவர்கள்...

உறவிழந்த வலிகளின் பாடல்





கலோகச் சொற்களில்
இருந்து வழியும்
கண்ணீரில்
தெரிகிறது
அவர் வாழ்வின் வலி
அவர்கள்
முகங்களில்
எல்லாம் தெரிவது
நாளை பற்றிய
நம்பிக்கையின் ஒளி
கை பிரித்தால்
வழி பிறக்கும்
என்று நம்பிட
அவர்கள்
கொண்டுவந்து
இருத்தியுள்ள
கடைசி
இருப்பிடத்தில்
இருந்தபடி
அவர்கள்
கேட்பதெல்லாம்
தம் வாழ்வுக்கான வழி
வாக்குப் போட்டவரிடமே
வல்லமை இல்லாதபோது
வாக்குறுதிகளை நம்ப
அவர்கள் இனியும்
தயாராகவில்லை
குந்தியழும் அவர்கள்
தூயர் போக்கிடவும்
இந்த மண்ணில்
யாரும் தயாராகவில்லை

வலி சுமந்த நெஞ்சினராய்...

மனைவிமனோன்மணியும்முன்னார்திருமணவிழாக்களில் நின்ற காட்சிகள் காசிலிங்கத்தாரின் மனத்திரையிலோடின. அழகான கூறையுடுத்து, கொண்டை போட்டு, அதில் சிறிய மாலை கொழுவி, நெற்றியிலும், உச்சியிலும் பெரிய குங்கு மப்பொட்டுக்கள் வைத்து, புன்னகை சிந்தி, தேவதை போல அவள் திருமண நிகழ்வுகளில் நின்ற காட்சிகள் காசிலிங்கத் தாரின் மனத்திரையிலோடின.

"என்ன காசியண்ண... எங்கமனோ அக்கா... இஞ்சால வாங்கோ ஒளிச்சு நிக்கிறியள்... நாள் அலுவல்களைப்பா ருங்கோவன்..."

"எங்க காசியண்ண... இஞ்ச வாங்கோ... மனோ அக்கா வோடசேர்ந்து இந்ததாலியைத்தொட்டுக்கும்பிட அக்காளுக் குக் குடுத்திட்டுக்கொண்டு வாங்கோ..." என்று சொன்ன நாள்கள்?, செய்த நாள்கள்...?

நினைவுகளில் இருந்து மீண்டவர் நிமிர்ந்து பார்த்தபோது, தாலிக்கொடி வைத்த தாம்பளத்தோடு ஆனந்தனும் அவன் மனைவியும்வந்துநின்றனர். தாலியைத்தொட்டுக்கும்பிட்டு, ஒரு வாய் வெற்றிலையைப்போட்டுக் குமாரலிங்கத்தோடு கதைத்தபோது, ஐயரின் மங்கல்யம் தந்துணா மந்திர ஓசை காற்றில் கலந்தது.
மலர்தூவல், அறுகரிசிபோடுதல், வாழ்த்துதல், எவற்றிலுமே காசிலித்தாரால் கலந்துகொள்ள முடியவில்லை. மணவ றைக்கு அண்மையாகக்கூட அவரால்போகமுடியவில்லை. மனம் இடிந்த நிலை அவருக்கு...

யாரோ சாப்பிட அழைத்தது கேட்டது.
உணவருந்தும் இடத்தில் உறவுகளும், பழைய நண்பர்க ளும் நலம் விசாரிப்பு, கைகொடுப்பு...
"அப்பா போவமே...?"
மகள் அழைத்தாள்.
காசிலிங்கத்தார் கழற்றிவைத்த தனது செருப்பை அணிந்த படி இரண்டு அடிகள் வைத்தபோது நடுவீதியில் அவரது இட துகால் செருப்பு அறுந்துவிட்டது. இனிமேல் அணியமுடியா தவாறு அந்தச்செருப்பு அறுந்திருப்பதை அறிந்துகொண்டார்.
என்ன செய்யலாம்...?
காசியர் சிந்தித்துக் கொண்டு நிற்க, "செருப்புகளை அதிலை ஓரமாகப் போட்டிட்டு வாருங்கோ அப்பா" மகள் பலமாக அழைத்தாள்.
அவசரமாக முடிவெடுக்க வேண்டிய நிலையில் காசியர். அறுந்துபோன செருப்பைக் கையிலெடுத்துப் பார்த்தவர் அதை ஓரமாக வைத்துவிட்டு மற்றச் செருப்பையும் வைத்து விட்டு ஒருவித விரக்தியுடன் ஓட்டோவில் ஏறினார்.
"ம்... சோடியிலை ஒரு செருப்பு அறுந்துபோனால்... மற்றச் செருப்புக்குமதிப்பில்லைத்தான்..." அவர்மனதுசொன்னது.
வலி சுமந்த நெஞ்சோடு அவரது பயணம் தொடர்ந்தது.

கெடுவாய் மனனே... கதிகேள்

கட்டுரை



ந.நவராஜ்

மனிதனது உயர்வுக்கும் தாழ்வுக்கும் அவனது மனமே காரணமாக அமைந்து விடுகிறது. "உள்ளத்தனையது உயர்வு" என்பார் வள்ளுவர். ஒருவரது உள்ளம் உயர்வானவற்றை உள்ளுமாக, சிந்திக்குமாக, எண்ணுமாக இருந்தால் அவர் உயர்ந்தோர் தம்முள் தன்னையும் ஒருவராக இணைத்து உயர்ந்து நிற்பார். மனத்துக் கண் மாசிலனாக மிளிர்வார். இதைச் சொல்வது யாருக்கும் எளிதாம். செயலளவில் மனதை எஜமானாக்கி நாம் அதன் அடிமைகளாக இருந்து அது இழுக்கும் இழுப்புக்கெல்லாம் சலாம் போட்டபடி அதன் பின்னால் ஓடுகின்றோம். உயர்வுகளை விட வீழ்ச்சிகளையும் வேதனைகளையுமே சந்திக்கின்றோம். இதனால் மேலும் மேலும் மனம் மாசுபட்டுத் தனக்குள் பலதையும் அமுத்தி வைத்து வெறியாட்டம் ஆடுகிறது. வாழ்க்கை சிக்கலானதாக மாறுகிறது. நாம் நிம்மதியிழக்கிறோம்; மற்றவர்களையும் நிம்மதியிழக்க வைக்கின்றோம். வீடு குழம்புகின்றது. சமூகம் குழம்புகின்றது. சொல்லப்போனால் நாடே குழம்புகின்றது.

மனப்பேயின் ஆட்டத்தில் அதன் எஜமானர்களாக இருக்க வேண்டிய நாமோ அதன் அடிமைகளாகிக் கூனிக்குறுகிக் கிடக்கின்றோம். கிடந்து, காமம், கோபம், வெறுப்பு, விரக்தி, பேராசை, மதவெறி, பொறாமை, காழ்ப்புணர்வுகள் போன்ற குணங்களைப் பரப்பிப் பூமிப்பந்தைப் புரட்டி எடுத்து அதில் பொத்தல்கள் வீழ்த்தி, அழியும் நிலைநோக்கி அதைக் கொணர்ந்து விட்டு வாழ்வுக்கு வேறு கிரகங்களைத் தேடுவது முக்கியம் என்று அறிக்கைகள் விட்டு விண்வெளி நோக்கி விரைகின்றோம். தேடல்கள் தொடர்கின்றன.

வேற்றுக்கிரகத்தில் வேரூன்றித் தனது வேட்டையைத் தொடர்வதற்கு மனக்குரங்கு காத்துக்கிடக்கின்றது. மாசுபட்ட பூமியை விட்டு மாசற்ற வேறு கிரகத்தைக் காணவிழையும் நாம் மாசுபட்ட மனத்தோடு அங்கும் மாசுகளையே விதைக்கக் காத்திருக்கின்றோம்.

★★★

ஓர் ஆந்தை கரும்புறா ஒன்றைச் சந்தித்தது.

"எங்கே செல்கிறாய் நீ?" கரும்புறா ஆந்தையைக் கேட்டது.

"நான் கீழைத்தேசத்துக்குச் செல்கின்றேன்" என்றது ஆந்தை.

''எதற்காகப் போகிறாய்?'' என்றது கரும்புறா.

"எனது அலறல் சத்தத்தை இங்குள்ளவர்கள் வெறுக்கிறார்கள் அதனால் நான் இங்கிருக்க விரும்பவில்லை. கீழைத்தேசத்துக்குச் செல்கின்றேன்'' என்றது ஆந்தை.

அதற்குக் கரும்புறா, "உன்னால் உனது குரலை மாற்றமுடியுமென்றால் நீ கீழைத்தேசத்துக்குச் செல்வது சரி; இல்லையெனில் நீ கீழைத்தேசத்துக்கோ அல்லது வேறு எந்தத் தேசத்துக்கோ சென்றாலும் அங்கு உள்ளவர்கள் இங்குள்ளவர்களைப்போலவே உன்னை வெறுப்பார்கள்" என்றது.

ஆந்தையின் நிலையில் தான் நாம் இருக்கின்றோம். எனினும் நம்நிலை வேறு. எமக்குப் பகுத்தறிவு இருக்கிறது. மாற்றக்கூடிய வல்லமையும் இருக்கிறது. முயன்றால் மாற்றலாம். ஆந்தையின் இயல்பு போல் அல்ல நமது மனத்தின் இயல்பு அது இயல்பாகவே அற்புதமான ஆற்றல்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

★★★

"கடவுள் உனக்குக் கோழையான மனத்தையல்ல வல்லமையும் அன்பும் கட்டுப்பாடும் உடைய மனத்தையே தந்திருக்கின்றார்"

என்கிறது திமொத்தேயுவினுடைய வாசகம் (1:7)

வாழ்க்கையில் வெல்வதற்கு நாம் அதை பயன்படுத்த வேண்டும். அதற்குமுதலில் மனத்துக்கு எஜமானராக நாம் ஆகவேண்டும். மனம் கடந்த நிலைகள் பற்றிய பேச்சை விடுத்து மனதுக்குள் நின்றே அதற்கு எஜமானராக மாறுவது பற்றியநுட்பங்களை நாம்கற்றுக்கொண்டால் வாழ்க்கையை வென்றெடுக்கலாம்; உயர்வுபெறலாம். அதற்குமுதலில்எமது மனம் எப்படிக் கெட்டுப்போயுள்ளது என்பதைப் பார்க்கவேண்டும். அதனை அதில் இருந்து மீட்டு எமது வசம் ஆக்குவதற்கு ரிய வழிவகைகளை அறிந்துகொள்ள வேண்டும். அதன் வழியில் இயங்க வேண்டும்.

(இந்தக்கட்டுரைகந்தரனுபூதியில்அருணகிரிநாதர் சொல்லியிருக்கின்ற இரண்டு வழிகளை அடிப்படையாக வைத்து இவற்றை ஆராய்கின்றது)

இயல்பாகவே வல்லமை, அன்பு கட்டுப்பாடுகொண்டமனமானதுஎமதுவளர்ப்பு முறைகளால், சூழல்காரணிகளால் தன்னை வடிவமைத்துக் கொள்கிறது. அதனது ஆற்றலை வெளிக்கொணர்ந்து நல்ல முறையில் இட்டுச் செல்வதற்குரிய வழிகளும் சூழலும் கிடைக்கப்பெறின் தனது சுயத்தை உணர்ந்து அடங்கி தன்னைப் பெற்றிருக்கும் எம்மைத் தனக்கு எஜமானராக ஏற்று உயர்வை நோக்கி இட்டுச் செல்லும். மாறாக வளர்ப்பவர்களும் சூழலும் அதன் இயல்புகளை மதிக்காது சிக்கலான பாதைகளை உருவாக்கி முரண்பாடான கருத்துக்களை, செயல்களைத் திணித்து அதன் மீது கரியை, சாணியைப் பூசுகின்றபோதும் களிமண்ணைக் கொட்டுகின்றபோதும் அதற்குள் அது தன்னைப் புதைத்து, மறைத்துத் தனது சுயத்தை இழந்து கரியாக, சாணியாக, களிமண்ணாக உருவாக்கப்பட்டிருப்பவனே நான் என்ற நினைப்பைத் தன்னைத் தாங்கியிருப்பவருக்குக் கொடுத்து அவரைத் தன்வழியில் இழுத்துச் செல்கின்றது. அவரும் அதன் போக்கில் இழுபட்டு அதன் பின்னே உலைந்து, கெட்டழிந்து, எதிரான நினைப்புக்களை உருவாக்கி, தன்னம்பிக்கை இழந்து நடப்பவையெல்லாம் தனக்கு எதிரானவைஎன்றநினைப்பைவளர்த்து முடங்கிப் போய்விடுகின்றார். மனம் தானே எஜமானாக இருந்து அவரை வழிநடத்தி முடிவில் உலகின் முகத்தில் இருந்து அவரைத் துடைத்தழிக்கும் எல்லை வரை கொண்டு சென்றுவிடுகின்றது.

மனத்தின் இயல்பான நிலையில் இருந்துபேசும்சுய அறிவு இடைக்கிடை வெளிவந்து "இது நீயல்ல உனது சுயம் வேறு அதனை வெளிக்கொணர்" என்று கூறினாலும் அதனை விட வலுவான நிலையில் இருக்கும்கெட்டழிந்த மனமானது அதை உள்ளே அமுக்கிமேலெழவிடாமல்செய்து விடுகின்றது.

வல்லமைமிக்கஎஜமானாகஅது உருவாகி எமது முன்னே நின்று எம்மைக் கெட்டொழியச் செய்கின்றது. கேடுகளை எமக்கு உருவாக்கி விடுகிறது.

கரிபடிந்தவனாய்க் களிமண்பொம்மையாய் சாணி பூசப்பட்டவனாக எம்மை வாழ்ந்து போகச் செய்கிறது. உன்னத நிலையை வழங்கும் ஊற்றாகிய சுயம் உள்ளே மறைந்து, மனத்தின் அடிமையாக எம்மை அதன் கையில் ஒப்புவித்து உறைந்துகிடக்கிறது.

★★★

இத்தகையை ஒரு மனத்தைப் பார்த்து அருணகிரிநாதர் "கெடுவாய் மனனே" என விளிக்கின்றார். 'உனக்குள் இருக்கும் சுயத்தை வெளிக்கொணர அதன் ஆற்றலைப் பரப்பி நீ உன்னை உயர்த்திக் கொள்ள, நான் கதியொன்று சொல்கின்றேன் வழியொன்று கூறுகின்றேன் கேள்" என்று இரண்டு வழிகளை இயம்புகின்றார். ஒன்று 'கரவாதிடுவாய்' மற்றொன்று 'வடிவேல் இறைதாள் நினைவாய்'. இந்த இரண்டு வழிகளையும் நீ சரியாக உணர்ந்து பின்பற்றினால் உன்னைப் பற்றிப் பிடித்திருக்கும் கொடிய வேதனைகளைக் கவலைகளை நீ சுட்டெரிப்பாய் என்கின்றார். இப்படிச் செய்தால் இயல்பான எமது ஆற்றலோடு பரிசுத்தமாக உயர்வுகளை நோக்கி நாம் செல்லலாம். இந்த இரண்டு வழிகளும் அதைச் சாத்தியமாக்குமா? என்றால் அதற்கு இந்த இரண்டு வழிகளையும் முதலில் சற்று நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். அதை எப்படிப் பயன்படுத்துவது என்பதை அறிய வேண்டும்.

'கரவாதிடுவாய்' என்றால் உன்னிடத்தில் உள்ளதை ஒளிக்காமல் மற்றவர்களுக்குக் கொடுப்பாய் என்று நேரடியாகச் சொல்லலாம். அதுபோல் 'வடிவேல் இறைதாள்நினைவாய்'என்றால்முருகப் பெருமானது திருவடிகளை நினைப்பாயாக என்று கூறலாம். இவற்றைச் சற்று எமது கருத்துக்கியைந்த வகையில் சிந்தித்துப்பார்க்கலாம்.

மனதைப் பொறுத்தவரையில் அது நேரான மற்றும் எதிரான எண்ணங்களின் கூட்டாகவே இயங்குகின்றது. நல்ல எண்ணத்தையும் கெட்ட எண்ணத்தையும் கொண்டுள்ளது. கடவுளாகவும் இருக்கின்றது சாத்தானாகவும் இருக்கின்றது. தேவராகவும் இருக்கின்றது அசுரராகவும். இருக்கின்றது. இந்த இருவரும் சேர்ந்து கடைந்தால் தான் அமிர்தம் வரும் உயர்வானது.

நிகழும் அழிவின்மை உருவாகும். சைவ சித்தாந்தம் இருவினையொப்பு என்பது பற்றிக்குறிப்பிடுகின்றது.



> மனத்தின் இயல்பான நிலையில் இருந்து பேசும் சுய அறிவு இடைக்கிடை வெளிவந்து 'இது நீயல்ல உனது சுயம் வேறு அதனை வெளிக்கொணர்' என்று கூறினாலும் அதனை விட வலுவான நிலையில் இருக்கும் கெட்டழிந்த மனமானது அதனை உள்ளே அமுக்கி மேலெழ விடாமல் செய்து விடுகின்றது.

''கடவுள் உனக்குக் கோழையான மனத்தையல்ல வல்லமையும் அன்பும் கட்டுப்பாடும் உடைய மனத்தையே தந்திருக்கின்றார்''

திமொத்தேயுவினுடைய வாசகம் (1:7)

"உன்னை நீ உணர்வாயாகில் உனக்கொரு கேடுமில்லை"

எமது மனத்தின் இயல்பு இன்னவாறு தான் கட்டமைக்கப்பட்டுள்ளது. கடவுள் எல்லாம் அறிபவர் என்பதை நாம் மறந்து விடுகின்றோம். காரணம் கடவுளையும் நாம் எம்மைப்போல ஒருவராக நினைத்துக் கதைகளைப் பின்னி வைத்துக் கொண்டு அவரைச் சுற்றிச் சுவர்களை எழுப்பி அவரை அடக்கம் பண்ணி வைத்திருக்கின்றோம். எம் கடவுளே கடவுள் என்று மார்தட்டி மதவெறிகளை உருவாக்கும் நாம் ஆத்மீகம் சர்ர்ந்தும் இறுக்க மான வர்களாகவே இருக்கின்றோம். இந்தத் தடைகளை உடைத்து கடவுளுக்கு முன்னராவது எம்மை முழுமையாக ஒப்புவிக்க வேண்டும்.



நாம் எமது இந்த இரண்டு இயல்புகளில் ஒன்றையே வெளிக்காட்ட முனைகின்றோம். சிலர் அசுரர்களைத் தமக்குள் அடக்கிவைத்துத் தேவர்களாகவாழ்கின்றனர். பலர் அசுரர்களை வெளியில் விட்டுதேவர்களைஉள்ளேஅடக்கிவைத்துள்ளனர். அதனால் தான் எம்மால் அமிர்த்தத்தைப் பெறமுடியவில்லை. காரணம்நாம்எல்லோரும்ஏதோஒருவகையில் ஒளித்துப்பிடித்து விளையாடிக் கொண்டிருக்கின்றோம். இதனால் அமிர்த்தத்துக்குப் பதில் ஆலகால விஷம் வெளிப்பட்டு உலகத்தை அழித்துக் கொண்டிருக்கின்றது. அதை அடக்கித் தொண்டையில்இடுவதற்குஆளில்லை.

★★★

அசுரர்கள் இயல்பாகவே கெட்டவர்கள் எனினும் அவர்களிடம் அடக்கப்பட்ட தேவகுணம் இருக்கின்றது. அதுசிலவேளைகளில் வெளிப்படுகின்றது. தேவர்கள் நல்லவர்கள் என்று சொல்ல முடியாது ஏன் எனில் அவர்கள் அசுரர்களை உள்ளே வைத்திருப்பவர்கள் வெளியே நல்லவர்களாக இருப்பவர்கள். ஆக, இருவரும் பிரச்சினைக்குரிய வர்கள். அசுரர் வந்தால் பிரச்சினை யில்லை அவன் அசுரன் என்பது வெளிப்படையாகத் தெரியும். தேவர் வந்தால் அவர் உள்ளேஎன்ன அசுரத்தனம் இருக்கிறது என்று எமக்கு வெளிப்படையாகத்தெரியாது. ஒருஞானியிடம்காட்டில்இருப்பது நல்லாதா? நாட்டில் இருப்பது நல்லதா எனக் கேட்கப்பட்டபோது அவர் காடுதான் நல்லது என்றார். ஏனெனில் காட்டில் வரும் சிங்கம், புலி, நரி, நாய், கரடி எல்லாம் வெளிப்படையாகவே இவை அவைதான் எனத் தெரியும். ஆனால் நாட்டில் முன்னுக்கு நிற்பது மனிதனாக இருந்தாலும் இவன் சிங்கமா? புலியா? நரியா? கரடியா? என்பது தெரியாது.

எனவே காடு நாட்டிலும் நலம் பெருந்தியதுஎன்றார். அந்தநிலையில்தான்நாம் இன்று இருக்கின்றோம்யாரையும்நம்ப முடியாதவர்களாக. எனவே 'கரவாதிடுவாய்' என்பதை எமது நேரான மற்றும் மறையான எண்ணங்களைத் தேவ அசுரத்தனங்களைஒளிக்காமல்மறைக்காமல் வெளிப்படுத்தும் தன்மையை எனக்கொள்ளலாம். இரண்டோடும் எம்மை முகம் சுழிக்காது தீர்ப்பிடாது ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு துணையை உறவை நாம் கொண்டிருப்பது இதற்கு அவசியமானது. இப்படியான உறவு முறை எமது வாழ்வியலில் முழுமையாகச் சாத்தியப்படக் கூடியது அல்ல. ஆதலால்தான் கடவுள் என்ற உன்னதமான ஒருவர். எம்மைத் தீர்ப்பிடாது எந்நிலையினும் வெறுக்காது ஏற்றுக்கொள்ளும் ஒருவர்உருவாக்கப்பட்டுள்ளார்போலும்.

★★★

அருணகிரிநாதர் அந்த உறவைத்தான் அடுத்ததாக 'இறை தாள் நினைவாய்' என்கின்றார். சாதாரண வாழ்வியலில் ஒளித்துப்பிடித்து விளையாடுவதைப் போலவே நாம் கடவுளுக்கும் எம்மை முழுமையாக வெளிப்படுத்துவதில்லை.

கடவுளை கோயில்களுக்குள் முடக்கி வைத்துக்கொண்டு அவர் முன்னரும் எம்மை ஒளித்துக்கொண்டு வெளியே வந்ததும் எமது திருகுதாளங்களை நாம் காட்டியபடியே இருக்கின்றோம். இதற்குக் கடவுளைப் பற்றிய எமது அறிவும் அவரை நாம் புரிந்து வைத்திருக்கும் நிலையும் காரணமாக அமைகின்றன. தாகூரின் கீதாஞ்சலியில் (கவிதை - 50, மொழிபெயர்ப்பு குழந்தை ம.சண்முகலிங்கம்) ஒரு விடயத்தை அவர் வெளிப்படுத்துகின்றார்.

கிராமத்து வீதியில் வீடு வீடாக
இரந்து கொண்டிருந்தேன்
அவ்வேளை,
ஒளிவண்ணமார்ந்ததொரு
கனவுபோல
உனது தங்கத்தேர்
தொலைவில் தோற்றம் தந்தது
இந்த மன்னர் மன்னன் யார்,
என நான் அதிசயித்தேன்...
நான் நின்ற இடத்தில்
தேர்வந்து நின்றது
உனது கடைக்கண் பார்வை
என்னில் விழுந்தது,
புன்சிரிப் பொன்றுடன்
நீ இறங்கி வந்தாய்
பின்னர் திடீரென
வலது கையினை ஏந்தியவாறு
எனக்குத் தர, நீ என்ன
வைத்திருக்கிறாய் என நீ
கேட்கிறாய்.
ஆ, இரப்பவனிடம்
இரக்கக் கைவிரிப்பது
எத்தகையதோர் அரசவிகடமிது
மலைப்புற்று முடிவற்று நின்றேன்
பின்னர் மெதுவாக
சிறு பையிலிருந்து
அறச்சிறிய தானியமணி
ஒன்றை எடுத்தேன்
உன்னிடம் கொடுத்தேன்.
ஆனால்
அன்றைய நாளின் முடிவில்
பையில் கிடந்ததைத் தரையில்
கொட்ட
வறிதெனக் கிடந்த சிறிய குவியலில்
அறச்சிறிய பொன்மணி ஒன்று
கிடக்கக்கண்டு
பேராச்சரியம் அடைந்தேன்
அழுது புலம்பினேன்
எனதனைத்தையும்
உனக்குத் தரும்
இதயம் எனக்கு இருந்திருக்க
வேண்டும்
என நினைத்தேங்கினேன்.

இதில் இருப்பதைப்போலவே பெரும்பகுதியை மறைத்து வைத்தே கரந்து வைத்தே கடவுளுக்கும் எம்மை வெளிப்படுத்துகின்றோம்.

எமது மனத்தின் இயல்பு இன்னவாறு தான் கட்டமைக்கப்பட்டுள்ளது. கடவுள் எல்லாம் அறிபவர் என்பதை நாம் மறந்து விடுகின்றோம். காரணம் கடவுளையும் நாம் எம்மைப்போல ஒருவராக நினைத்துக் கதைகளைப் பின்னிவைத்துக் கொண்டு அவரைச் சுற்றிச் சுவர்களை எழுப்பி அவரை அடக்கம்பண்ணிவைத்திருக்கின்றோம். எம் கடவுளே கடவுள் என்று மார்தட்டி மதவெறிகளை உருவாக்கும்நாம்ஆத்மீகம்சர்ர்ந்தும்இறுக்கமானவர்களாகவே இருக்கின்றோம். இந்தத்தடைகளைஉடைத்துகடவுளுக்கு முன்னராவது எம்மை முழுமையாக ஒப்புவிக்கவேண்டும்.

★★★

"ஒப்பாக ஒப்புவித்தார் உள்ளிருக்கும் உள்ளானை' என்பார் மாணிக்கவாசகர். தேவர் அசுரர் என்ற இருநிலைகளுள்ள ஒருவராக எம்மை ஏற்று வெளிப்படுத்த வேண்டும். நம்மை நாமே ஏற்கும் ஒரு நிலையை முதலில் இது உரு வாக்கும். எம்மை எமக்கு அறிவிக்கும் எமது பலங்கள், பலவீனங்களை வெளிப்படுத்தும். நான் யார்? என் உள்ளம் யார்? போன்ற உயர்ந்த சிந்தனைகளை எமக்குத் தோற்றுவிக்கும். எம்மையே நாம் சந்திக்கும், பார்க்கும் ஒரு வழிபாட்டுநிலையை உருவாக்கும். இதனைக் கூர்மையான வேல்படைக்கலத்தை உடைய கடவுளுக்கு முன்னர் செய்ய வேண்டும் என்ற பொருள் பட "வடிவேல் இறைதாள் நினைவாய்" என்கிறார் அருணகிரிநாதர். ஏனெனில் முருகன் குழந்தைக் கடவுள். அறிவுடைய குழந்தைக் கடவுள் வேல் அறிவின் அடையாளம். குழந்தைகள் தம்மை முழுமையாக வெளிப்படுத்துவார்கள் அவர்கள் எதையும் ஒளித்து வைப்பதில்லை அதனால் தான் ஞானிகளைப் பற்றிப் பேசும் போது "சேய்போல் இருப்பர் கண்டீர் உண்மை ஞானம் தெளிந்தவரே" என்பார் பட்டினத்தார். குழந்தையோடு பழகப்பழக எமக்கும் குழந்தையின் மனநிலை உருவாகும். உளவியலாளர் எரிக்போன் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் சிறியோன், தெள்நிலையோன், பாதுகாப்போன் என்ற மூன்று நிலைகள் இருக்கின்றன என்பார். இந்த வழிபாடு எமக்குள் இருக்கும் இறுக்கத்தை உடைத்துக்குழந்தைத்தனத்தை வெளியே கொணர்கின்றன. இது அறிவோடு கூடிய குழந்தைத்தனம்.

எஜமானர்களாக நாம் இருக்க எமது பின்னே மனம் குழைந்துவரும் நிலை. இந்த நிலை வந்துற்றால், அறிவோடு கூடிய குழந்தையியல்பு வந்துற்றால், இடர்கள்இல்லை. இறுக்கங்கள்இல்லை. இன்பமேஎந்நாளும்.





நவீன இயற்பியல் கோட்பாடுகளும்

திருமந்திரத்தில் பொதிந்துள்ள உண்மைகளும்

கட்டுரை



மருத்துவர் சி. யமுனாநந்தா

யாழ். போதனா வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி யாகக் கடந்த நான்கு வருடங்களாக இருந்தவர்.. மருத்துவக் கட்டுரைகள், போரால் ஏற்பட்ட உளந லப்பாதிப்புக்கள், சமூக, உளத்தாக்கம் தொடர் பான கட்டுரைகளை எழுதியவர். காசநோய் தொடர்பான நாடகங்களை நெறியாள்கை செய்ததுடன் விழிப்பு நூல்களையும், பாடங்களையும் வெளியிட்டவர். காசநோய், தொய்வுநோய், நீர் வெறுப்பு நோய் என பவற்றுக்குச் சிறந்த நூல்களையும் எழுதி வெளியிட் டுள்ளார். 'யாழ்ப்பாணத்தில் தெய் வத்தமிழ்' என்ற பொருளில் தமிழகம்கோயம்புத்தூர் பேரூர் ஆதீனத் தில் கருத்துரை வழங்கியிருந்தவர்.

அகிலத்தின் தன்மையை ஆராயும் பௌதீகம் கடந்த சில நூற்றாண்டுகளாகப் பல விஞ்ஞா னக் கருத்துக்களை முன்வைத்து வருகின் றது. கலிலியோ கலிலீ, ஐசாக் நியூட்டன், ஐயன்ஸ்டீன், ஸ்ரீபன் ஹாக்கிம் என்பவர்களது கோட்பாடுகளுக்கு அப்பால் தற்போது விஞ்ஞானம் புதிய கோட்பாடுகளை நோக்கி முன்னேறியுள்ளது. அண்மைய பௌதிக விஞ்ஞானிகள், எல்லா நிகழ்வுகளும் ஒரு குறித்த கேத் திரகணித உருவின் வடிவில் சமச்சீராக நிகழ்வதாக நம்புகின்றனர். இதனை அனைத்துக்குமான கேத்திர கணிதக் கோட்பாடு (A Geometric Theory of Every thing) என்று அழைக்கின்றனர்.

இந்தக் கோட்பாட்டின்படி அகிலத்தில் உள்ள திணிவைத் தரும் துணிக்கைகளும் சக்தியைத் தரும் துணிக்கை களும் கேத்திரகணித மாதிரியில் அமைந்து உள்ளன. இந்தக் கோட்பாடுகளில் திணிவை உடைய துணிக்கை கள் போசான் என்றும் (Boson) சக்தியை உடைய துணிக்கைகள் பேர்மியோன்ஸ் என்றும் (Fermions) அழைக்கப்படுகின்றன. இவைகளே அகிலத்தின் அடிப்ப டைத் துணிக்கைகளாக அமைகின்றன. இவை நுண் ணிழை அமைப்பில் 248 வகையான பரிதியில் ஒன்றை ஒன்று தழுவிய வண்ணமும், சுற்றிய வண் ணமும் அமைந்திருக்குமாறு காலவெளித் தளத்தில் அமைகின்றன என 'E8' கோட்பாடு கூறுகின்றது.

திணிவுடைய துணிக்கைகளும் அவற்றுடன் இணையான சக்தியைத் தரும் துணிக்கைகளும்

Boson (போசான்)	Fermions (பேமியோன்)
1. Phoon (போட்டோன்) ஒளி அலைக்குரிய கணியம்	Neutrons
2. Weak bosons	Electrons
3. Gluons	Up quark
4. Gravitons ஈர்ப்பு விசைக்குரிய கணியம்	Down quark
5. Frame Higgs	Up quark
6. Weaker bosons	Down quark
7. X bosons	Up quark
8. More Higgs	Down quark





ஒவ்வொரு நுண்ணிழையிலும் ஒரு வகையான சக்தி யும், ஒரு வகையான திணிவுத் துணிக்கையும் அவற்றை இணைக்கும் துணிக்கையுமாக மூன்றி ணைப்புக் காணப்படும் என 'E8' கோட்பாடு விளக்கு கின்றது. குவாண்டம் பௌதீகத்தின் ஆராய்ச்சிகளும் புதிய கண்டுபிடிப்புக்களும் இவ்வாறு நவீன தத்துவங்க ளுக்கு ஊடாக மிளிர்கின்றன.

சிவநடனம் பற்றியோ நமது மொழி பற்றியோ, திருமந்திரம் பற்றியோ இந்த ஆராய்ச்சியாளர்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால் E8 Theory of Everything Model. இந்தக் கோட்பாட்டின் மாதிரி சிதம்பர சக்கர அமைப்பை உடையது. இதைத் திருமந்திரத்தின் 91ஆம் பாடலில் காணலாம்.

இருந்த இவ் வட்டங்கள் ஈராறிரேகை
இருந்த விரேகை மேல் ஈராறிருத்தி
இருந்த மனைகளும் ஈராறு பத்தொன்று
இருந்த மனை யொன்றில் எய்துவன் தானே.

அகிலத்தின் இயக்கத்தைச் சிவ நடனத்துக்கு ஒப்பிடும் திருமந்திரத்தின் 913ஆம் பாடல் இப்படி அமைகிறது.

ஒன்று இரண்டு ஆட ஓர் ஒன்றும் உடன் ஆட
ஒன்றினின் மூன்றாட ஒரேழும் ஒத்தாட
ஒன்றினால் ஆடவோம் ஒன்பதும் உடன் ஆட
மன்றினில் ஆழ நான் மாணிக்கக்கூத்தே

மேலே குறிப்பிடப்படும் 'ஒன்றினின் மூன்றாட' என்பது E8 கோட்பாட்டின் Triality தன்மையை விளக்குவதுபோல் அமைகின்றது. அகிலத்தின் தோற்றம் 'ஓம்' என்னும் பிரணவ ஒலியுள் ஒடுங் கும் ஒலியில் தோன்றும் என்பதைத் திரு மந்திரப் பாடல் 381 குறிப்பிடுகின்றது.

ஆதியோடு அந்தம் இலாத பராபரம்
போத மதாகப் புணரும் பராபரை
சோதி அதனில் பரந் தோன்றத் தோன்றுமாம்
தீதில் பரையதன் பால் திகழ்நாதமே

இதுவே படைப்பின் முதல் படியாகும். பரம் + அபரம் என்பது பராபரம். முதலும் முடி வும் இல்லாமல் எங்கும் நீக்கமற நிறைந்து இருக்கின்ற பரம்பொருள். இதையே நவீன சார்பியல் கோட்பாடுகள் Unified field theory என நிறுவ முற்படுகின்றன.

அடுத்து குவாண்டம் பௌதீகத்தின் அடிப்படையாக Bosons, Fermions அமைகின்றன. இங்கு போசோன்கள் சக்தி உடைய துணிக்கைகளாகக் கூறப்படுகின்றன. இது விந்துவைச் சுட்டுவதாக அமைகின்றது. அடுத்து பேமியோன் திணிவை உடைய துணிக்கைகளாக அமைகின்றன. இது நாதத்தைச் சுட்டுகின்றது.

நாதவிந்துநமசிவாயம் எனத் திருமந்திரத்தின் 382ஆம் பாடலில்

நாதத்தில் விந்துவும் நாத விந்துக்களில்
தீதற்று அகம் வந்த சிவசக்தி என்னவே
பேதித்து ஞானங்கிரியை பிறத்தலால்
வாதித்து இச்சையில் வந்தெழும் விந்துவே

என உலகப் படைத்தலின் ஓம் என்ற ஒலியின் தன்மை யைக் கூறுகின்றது. இதுவே குவாண்டம் பௌதீகத்தின் அடிப்படைத் துணிக்கைகளாக அமைகின்றன. அதா வது சக்தி உள்ள துணிக்கைகள், சக்தி அற்ற துணிக்கை கள் என்று அவை வகைப்படுத்தப்படுகின்றன.

ஓம் எனும் பிரணவ வடிவம் இறைவனின் ஆனந்தத் தாண்டவத்தின் உட்பொருள் ஆகும். இதைத் திரு மந்தி ரத்தின் 887வது பாடல் பின்வருமாறு கூறுகின்றது.

ஆமே பொன் அம்பலம் அற்புதம் ஆனந்தம்
ஆமே திருக் கூத்து அனவரத தாண்டவம்
ஆமே பிரளய மாகும் அத் தாண்டவம்
ஆமே சங்காரத்து அரும் தாண்டவங்களே.
தில்லைப் பொன்னம்பலத்தில் இறைவன்

ஓயாது ஆடிக் கொண்டிருக்கின்றான். இறைவன் ஓயாது ஆடும் தாண்டவம் அனவரதத் தாண்டவமாகும். மேலும் அற்புதத் தாண்டவம், ஆனந்தத் தாண்டவம், அனவரதத் தாண்டவம், பிரளயத் தாண்டவம், சங்கா ரத் தாண்டவம் என அகிலத்தின் அனைத்து இயக்கத் தையும் குறிக்கின்றது. Theory of everything.y; consciousness கோட்பாட்டுக்குள் வரையறுக்கப்படு பவை இவையே ஆகும்.

இதை உணர்ந்தவர்கள் சித்தர்கள் எனத் திருமந்தி ரத் தின் 124ஆம் பாடல் குறிக்கின்றது.

வெளியில் வெளிபோய் விரகியவாறும்
அளியில் அளிபோய் அடங்கியவாறும்
ஒளியில் ஒளிபோய் ஒடுங்கியவாறும்
தெளியும் அவரே சிவ சித்தர் தாமே.

Expanding Universe தத்துவத்தையும், Blackhole, Warm hole தத்துவத்தையும் எளிமையாக மேற்குறித்த திருமந்திரப்பாடல் வெளிப்படுத்துகின்றது.

பேரொளியோடு பாரொளி விளங்குவதைத் திருமந்திரப் பாடல் 1274 விளக்குகின்றது.

காரொளி அண்டம் பொதிந்துல கெங்கும்
பாரொளி நீரொளி சாரொளி காலொளி
வானொளி ஒக்க வளர்ந்து கிடந்து மின்
நேரொளி ஒன்றாய் நிறைந் தங்கு நின்றதே.

குவாண்டம் பௌதீகத்தின் அடிப்படையாக நாதமும் விந்து வும் விளங்குவதை 1276ஆவது திருமந்திரப் பாடல்

விந்துவும் நாதமும் ஒக்க விழுந்திடில்
விந்துவும் நாதமும் ஒக்க விரையதாம்
விந்திற் குறைந்திடும் நாதம் எழுந்திடில்
விந்துவை எண்மடி கொண்டது வீசமே

நாத விந்து மண்டலமே அகிலம் எனக் கூறப்படுகின்றது.
ஒளி அணுக்கள் (Photons) இரண்டு விதமாக உள்ளன என்பதை 1277ஆவது திருமந்திரப் பாடல் எடுத்துக் காட்டுகின்றது.

வீசம் இரண்டுள நாதத் தெழுவன
வீசமும் ஒன்று விரைந்திடு மேலுற
வீசமும் நாதமும் எழுந்துடன் ஒத்த பின்
வீசமும் விந்து விரிந்து காணுமே.

இதன்தொழில்நுட்பத்தையேசீனவிஞ்ஞானிகள் குவாண்டம் கணனியில் பயன்படுத்துகின்றனர். உயிர்மூச்சு என்பதைத் 'தனஞ்சயன்' என்ற காற்றாகத்திருமந்திரம்விவரிக்கின்றது. இந்தக்காற்று உடலில் ஒன்பது இடங்களில் இருக்கின்றது. இந்தக் காற்று 224உலகங்களிலும் வாழும் உயிர்களில் இருக்கின்றது. இந்தக் காற்று இருக்கும் வரைதான் உயிர் இருக்கும். இதை விளக்கும் 654 ஆவது திருமந்திரப் பாடல்

கும் தனஞ்சயன் ஒன்பது காலில்
இருக்கும் இருநூற்று இருபத்து நான்காய்
இருக்கும் உடலில் இருந்தில ஆகில்
இருக்கும் உடல் அது வீங்கி வெடித்ததே

இது ஆன்மாவுக்குச்சார்பியல் அடையாளத்தைக் கொடுக்கின்றது. பரமனோடு ஆன்ம ஒளி அடங்கும் இன்பநிலை என்பது நவீன சார்பியலில்; Unified field theory of Consciousness என்ற வடிவில் ஆராயப்படுகின்றது. ஆன்மாவும் அகிலமும் எவ்வாறு ஒன்றுடன் ஒன்று விரகுகின்றன என்பது பற்றிய ஆய்வுகளே அவை. அதையேதிருமந்திரத்தின் 135ஆம் பாடல் இப்படிக் கூறுகின்றது.

த முதல் ஐந்தும் தன்வழித்தான் சாரில்
சித்துக்குச் சித்தன்றிச் சேர்விடம் வேறுண்டோ
சுத்த வெளியில் சுடரில் சுடர் சேரும்
அத்தம் இது குறித்து ஆண்டு கொள் அப்பிலே
உடலாக, உயிராக, உணர்வாக, உள் ஒளிரும் சுடராய், எட்டாத தொலைவாய், விண்ணும் மண்ணும் தொடுமாறு நின்ற பேருருவமாய், உலகைத் தாங்கும் ஆதாரமாக, சூரியனாய், சந்திரனாய் இவற்றை ஆளுகின்றவராகப் பரம்பொருள், அண்டம் முழுவதும் கலந்து நிற்பதை 374ஆவது திருமந்திரப்பாடல் இப்படிக் குறிக்கின்றது.

ஊனாய் உயிராய் உணர் அங்கியாய் முன்னம்
சேணாய் வான் ஓங்கித் திரு உரு வாய் அண்டத்
தாணுவம் ஞாயிறும் தண் மதியுங் கடந்து
ஆள் முழுது அண்டமும் ஆகி நின்றானே.

இங்கு குறிப்பிடப்படும் 'அண்டத்தாணு' என்பது உலகைத் தாங்கும் அச்சு எனப் பொருள்படும். இதையே Theory of everything கோட்பாட்டில் குறிப்பிடப்படும் மாறியின் சமச்சீர் அச்சாகக் கருதலாம்.
நவீன இயற்பியல் கோட்பாடுகளின் சாரம் திருமந்திரத்தில் பொதிந்து உள்ளது. திருமந்திரம் ஒரு யுக நூல். இதைத் திருமூலர் தமிழுக்கு அருளியமையானது தமிழுக்குக் கிடைத்த மிகப் பெரும் சொத்தாகும். இதன் கருத்துக்கள் காலத்துக்குக் காலமே உலகத்தவர்க்குப் புரியும். இயற்பியலின் முதன்மையானதே சிவ தத்துவமும் சிவ நடனமும் ஆகும். இதைத் திருமூலர் தனது 901ஆவது பாடலில் கூறி நிற்கின்றார்.

தானே தனக்குத் தகுநட்டந் தானாடுந்
தானே அகார உகாரம தாய்நிற்குந்
தானே ரீங்காரத் தத்துவக் கூத்துக்குத்
தானே உலகில் தனிநடம் தானே

இதையே இந்தக்கால இயற்பியல் விஞ்ஞானிகள் Theory of Everything அனைத்துக்குமான கோட்பாடு என வடிவமைக்க முனைகின்ற னர். தவிர, நவீன கோட்பாடுகள் பலவற்றுக்குமான அடிப்படைகள் திருமந்திரத்தில் இன்னும் நிறையவே பொதிந்து கிடக்கலாம்!



நவீன இயற்பியல் கோட்பாடுகளின் சாரம் திருமந்திரத்தில் பொதிந்து உள்ளது. திருமந்திரம் ஒரு யுக நூல். இதைத் திருமூலர் தமிழுக்கு அருளியமையானது தமிழுக்குக் கிடைத்த மிகப் பெரும் சொத்தாகும். இதன் கருத்துக்கள் காலத்துக்குக் காலமே உலகத்தவர்க்குப் புரியும்.

என்மகன் 'டச்போன்' வாங்கி விட்டான்



வீதி விபத்திலே
விழுந்து கிடப்போரை
விரைந்து தூக்கும் என்மகன்
இனிமேல் படம்தான் பிடிப்பான்.

காலை எழுந்தவுடன்
கதிரவ வணக்கம் செய்பவன்
முகநூல் நட்புகளுக்கே
இனி வணக்கம் செய்வான்.

மாலையிலே நூலகம்
இனி அவனுக்கில்லை.
'வட்ஸ் அப்பிலும்
வைபரி'லும்
அந்த நேரத்தை
அரட்டையடித்துக் கழிப்பான்.

முகம் பார்த்துப் பேசும்
ஊர் நண்பர் தொகை
அவனுக்குக் குறைந்துவிடும்.
முகம் தெரியாதோருடன்
சற்றிங் செய்வதால்...

இரவிலே
ஏற்ற நேரத்துக்கு
இனித் துயில்செல்ல மாட்டான்.
இந்த நாட்டு நேரமும்
இவன் நண்பர் நாட்டு நேரமும்
எவ்வளவோ வித்தியாசம்.

அவன் விரும்பாவிட்டாலும்
ஆபாசப் படங்கள்
அவன் கண்களில் படும்.
வேண்டாமென விட்டுவிட்டால்
வெற்றி பெறுவான்.
என்னதான் இருக்குதென
இறங்கிப் பார்த்தால்
நாசமுறுவான்.

ஒரு கையை மடிவைத்து
ஒழுங்காய் உண்ணும் மகன்
ஒரு விழியால் போன்பார்த்து
மறுவிழியால் உணவுபார்த்து
உண்ணுதல் செய்வான்.

மலசலகூடம் நுழைகையிலும்
கொப்பியோடு நுழைபவன்
இப்போது
'டச்போனு'டன் நுழைகிறான்.

இப்போதெல்லாம் அவன்
எங்களுடன் பேசுகையில்
விரல்களும் விழிகளும்
கைபேசித் தொடுதிரையில்.

வீட்டுப் பாடங்கள்
கிடப்பில் கிடக்கின்றன.
'யூரியூப்' வீடியோக்கள்
அவன் விழிகளை நிறைக்கின்றன.

பள்ளி இடைவேளையில்
விளையாட்டு இல்லை.
கைபேசிக் 'கேம்ஸ்'சில்
களித்துப் போகிறான்.

ஆலய வழிபாட்டு வேளையும்
சாமியைப் படம் பிடிக்கிறான்.
பக்திக்காய் அல்ல
முகநூல்
பதிவு போடுதற்காய்...

முந்தித் தூங்கி
முந்தி எழுகிறவன்
பிந்தித் தூங்கி
பிந்தி எழுகிறான்.
நடுச்சாமம் விழிக்கையில்
தண்ணீர் குடிப்பவன்
இப்போது முகநூலைக் குடிக்கிறான்.

வருங்காலத்தில் அவனுக்கான
திருமணம் தேடும் படலம்
எங்களுக்கு இராது.
அநேகமாக
அவனே இணையத்தில் தெரிவான்.

தேறத்தக்க எதையும்
தேடியிவன் பெற்றால்
'டச்போன்' இவனுக்கு உயிர்ப்பு.
வீழத்தக்க விடயத்திலேயே
விழுந்து கிடந்தால்
'டச்போன்' இவனுக்குக் குழிறிப்பு.

கவிதை



யோ. புரட்சி

விஸ்வமடு – வள்ளுவர்புரத்தைச் சேர்ந்த இவர், சிறுகதை, கவிதை, நூல் வெளியீடு போன்றவற்றில் ஆர்வம் உள்ளவர். இடம்பெயர்ந்த ஊரில் இடம் பெயரா நாய்', 'எதிர் வீட்டு நாயும் என் ஏழை நாயும்' ஆகிய கவிதைத் தொகுப்புக்களையும், 'ஆஷா நாயும் அவளும்' என்ற சிறுகதைத் தொகுதியையும் வெளியிட்டிருக்கிறார். அண்மையில் ஆயிரம் கவிஞர்களை ஒன்று சேர்த்து கவிதைத் தொகுதி ஒன்றையும் வெளியிட்டுள்ளார்.



அழிந்துவரும் பொருட்பண்பாட்டுக் கூறுகளும், தேவையான நடவடிக்கைகளும்



கட்டுரை



கட்டடக்கலைஞர்
இ. மயூரநாதன்

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகக்கொண்டவர்.இணையவழிக்கலைக்களஞ்சியமான 'விக்கிப்பீடியா'வை 2003இல் முதன் முதலாகத் தமிழில் தொடக்கியவர். தொடர்ந்து விக்கிப்பீடியாவுக்குப் பங்களிப்புச் செய்துவரும் இவர், பல துறைகளையும் சார்ந்த 4ஆயிரத்து 600க்கு மேற்பட்ட கட்டுரைகளைத் தொடக்கியும், பிறர் தொடங்கிய ஆயிரக்கணக்கான கட்டுரைகளை விரிவாக்கியுமுள்ளார். கனடாவில் இயங்கும் தமிழ் இலக்கியத் தோற்றம் 2015ஆம் ஆண்டுக்கான வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கியது. 2016இல் வட அமெரிக்கத்தமிழ்ச்சங்கம்கௌரவித்தது. 2015இல் தமிழ் நாட்டின் பிரபல சஞ்சிகையான ஆனந்தவிகடன் சிறந்த பத்து மனிதர்களில் ஒருவராகத் தேர்வு செய்து விருதுவழங்கியது.

ஒரு பண்பாட்டுக் குழு அதன் வரலாற்றுக் காலம் முழுதும் தனது தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டுப் பல பொருள்களை உருவாக்கிக் கொள்வதுடன், அந்தத் தேவைகளுக்கு ஏற்றபடி தனது பௌதீகச் சூழலிலும் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்கிறது. இவ்வாறு உருவாக்கப்படும் பொருள்களும், சூழல்களும் 'பொருட் பண்பாடு' (Material Culture) என்னும் கருத்துருவுக்குள் அடங்குகின்றன.

'பொருள்' எனும் சொல் உயிர் இல்லாத எல்லாவற்றையும் குறிக்கின்றது. இதற்குள் இயற்கையாக இருப்பவையும், செயற்கையாக உருவாக்கப்பட்டவையும் அடங்கும்.

'பொருட் பண்பாடு' என்பது மனிதச் செயற்பாடுகளால் உருவாக்கப்பட்ட அல்லது மாற்றி அமைக்கப்பட்ட பொருள்களை மட்டும் குறிக்கின்றது. அத்துடன் இந்தச் சொல் மனிதனால் ஆக்கப்பட்ட பொருள்களுக்கும் பண்பாட்டுக்கும் உள்ள தொடர்பையும் வெளிப்படுத்துகிறது.

"பண்பாட்டின் அடைப்படையிலான நெறிப்படுத்தலின்கீழ் மனிதனது விருப்பத்தின் பேரில் உருவாக்கப்படும் அவனது பௌதீகச் சூழலின் ஒரு பகுதியே பொருட்பண்பாடு" என வரைவிலக்கணம் கூறப்படுகிறது.

பௌதீக உலகப் பிரச்சினைகளைச் சமாளிப்பதையும், சமூகத் தொடர்புகளுக்கு வசதியளிப்பதையும், மனித ஆசைகளை நிறைவேற்றி மகிழ்ச்சி கொள்வதையும், அர்த்தங்களோடு கூடிய குறியீடுகளை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டு, மனிதனால் உருவாக்கிப் பயன்படுத்தப்படும் செய்பொருள்கள் அனைத்தும் மேற்சொன்ன பௌதீகச் சூழலின் பகுதிக்குள் அடங்குகின்றன.

பண்டைக்கால மனிதனின் கற்கருவிகள் முதல், வேட்டைக்காகப்பயன்பட்டவில், அம்பு போன்றவை அதன் பின்னர் உருவாக்கப்பட்ட வேளாண்மைக் கருவிகள், உணவு சமைப்பதற்கான பானை, சட்டி, அடுப்பு முதலானவை பல்வேறு நம்பிக்கைகளின் வெளிப்பாடாக உருவாகின்ற இறை உருவங்கள், பலிபீடங்கள், ஈமச்சடங்குப் பொருள்கள், ஆடை அணிகள், வாழ்வதற்கான வீடுகள், கோயில்கள், கட்டடங்கள், பாதுகாப்பு அமைப்புக்கள், பூங்காக்கள் உள்ளிட்ட பல்வேறு கட்டச் சூழல்கள் என்பவற்றுடன் இன்று நாம் பயன்படுத்துகின்ற இன்னோரன்ன பயன்பாட்டுப் பொருள்கள் அனைத்தும் மேற்படி பொருள் பண்பாடு என்பதற்குள் அடங்குவனவே.

பொருட் பண்பாட்டின் முக்கியத்துவம்

இவ்வாறான பொருட் பண்பாடு உணர்ந்தோ, உணராமலோ, நேரடியாகவோ, மறைமுகமாகவோ அதை உருவாக்குபவர்களினதும், அவர்கள் சார்ந்த பண்பாட்டினதும் வெளிப்பாடாக அமைகின்றது. எனவே நமது பண்பாட்டைப் பற்றிப் பெருமை கொள்பவர்களாகிய நாம், அந்தப் பண்பாட்டின் வெளிப்பாடுகளான பொருள்களின் முக்கியத்துவத்தை உணர்ந்துகொண்டு அவை தொடர்பில் அக்கறையுடன் இருக்கவேண்டியது அவசியமானது.

ஒரு சமூகத்தின் பண்பாட்டு வரலாறு குறித்த தகவல்களைப் பொருட் பண்பாட்டின் பல்வேறு கூறுகள் தம்முள் பொதிந்து வைத்துள்ளன. இதனால், பண்பாட்டு வரலாற்றை ஆய்வு செய்வதற்கான முக்கிய தகவல் மூலங்களாக இவை விளங்குகின்றன. இதற்கும் அப்பால், பொருட் பண்பாடு அதை உருவாக்கிய சமூகத்தின் அடையாளமாகவும் விளங்கக்கூடியது. இதனால், நமது மரபு வழியான பொருட் பண்பாட்டை வலுப்படுத்துவதன் மூலம், நமது சமூகத்தின் தனித்துவம் வாய்ந்த அடையாளங்களையும் வலுப்படுத்த முடியும். இவ்வாறான அடையாளங்கள் இன்று உலகெங்கிலும் சிதறிக் கிடக்கும் நமது சமுதாய உறுப்பினர்கள், தாம் இந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்னும் உணர்வைத்தக்கவைத்துக்கொள்ளஉதவக் கூடியன.

பொருட் பண்பாடும் மாற்றங்களும்

இலங்கைத் தமிழ்ச் சமூகங்களுக்கு உரித்தான பல பொருட் பண்பாட்டுக் கூறுகள் தொடர்பிலும், தற்போதைய சூழலில் மிக வேகமான மாற்றங்கள் ஏற்படுவதுகுறித்தும், இந்தமாற்றங்களினூடாக அண்மைக்காலம் வரை பயன்பாட்டில் இருந்த பல பொருட் பண்பாட்டுக் கூறுகள் அருகி, அழியும் நிலையில் உள்ளமை குறித்தும் பல்வேறு பண்பாட்டு ஆர்வலர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர். மாற்றங்கள் தவிர்க்கமுடியாதவை.நிரந்தரமானது மாற்றம் மட்டுமே. ஆனால், பண்டைக்காலச் சமூகங்களில், அவற்றின் பொருட் பண்பாடு தொடர்பில், மாற்றங்கள் மெதுவாகவே இடம்பெற்றன. குறிப்பிடத்தக்க வகையிலான மாற்றங்கள் ஏற்படுவதற்குப்பலநூறு ஆண்டுகளோ, ஆயிரக் கணக்கான ஆண்டுகளோகூட எடுத்திருக்கலாம். அந்தக் காலச் சமூகங்கள் பெருமளவுக்குத் தனித்தனித் தீவுகள் போலவே வாழ்ந்தன. பிற சமூகங்களுடனான தொடர்பாடல் எல்லைகள் மிகக் குறுகியனவாகவும், குறிப்பிட்ட பகுதிக்குள் அடங்கியனவாகவும் இருந்தன.

மாற்றங்களுக்கான உந்துதல் அந்தச் சமூகத்தின் தேவைகள், சூழல்கள் என்பவற்றை அடியொற்றியே அமைந்தன. அதனால் அவ்வாறான மாற்றங்களிலும் தெளிவான பண்பாட்டுத் தொடர்ச்சிகளைக் காணக்கூடியதாக இருந்தது. அண்மைக் காலத்தில் ஏற்பட்ட பெருமளவிலான அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சிகள் உலகைச் சிறிதாக்கிவிட்டன. பெரும்பா



நமது மரபு வழியான பொருட் பண்பாட்டை வலுப்படுத்துவதன் மூலம். நமது சமூகத் தின் தனித்துவம் வாய்ந்த அடையாளங்களையும் வலுப்படுத்த முடியும்.



லான சமூகங்களின் தொடர்பாடல் எல்லைக்குள் ஏறத்தாழமுழுஉலகமுமே அடங்கிவிட்டதைக்காண முடிகிறது. இத்தகையசூழலில், மாற்றங்கள், குறித்த சமூ கம் ஒன்றுக்கு வெளியே உள்ள காரணிகளா லும், பண்பாட்டுக் கலப்புகளாலும் உருவாவதால், பண்பாட்டுத் தொடர்ச்சியும் தெளிவற்றதாக ஆகி விட்டது.

ஐரோப்பியர் ஆட்சியில் மாற்றங்கள்

ஐரோப்பியர் நமது பகுதிகளைக் கைப்பற்றி ஆளத் தொடங்கிய 17ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்தே நமது பண்பாட்டில் மேனாட்டுச் செல்வாக்கின் நேரடியான ஊடுருவல்தொடங்கிவிட்டது. சிலஅம்சங்களில், குறிப்பாகச் சமயம் சார்ந்த விடயங்களில் பெரிய அளவிலான தாக்கங் கள் இருந்தன. இந்துக் கோயில்கள் அனைத்தும் தடயங் கள் இன்றி அழிக்கப்பட்டன. இந்து சமய நடவடிக்கைகளுக் குத்தடை விதிக்கப்பட்டதால் அந்தநடவடிக்கைகள்தொடர்பி லான பொருட் பண்பாடுகளும் மேற்படி நிலை நீடித்த சுமார் 160ஆண்டுகளில் அழிந்து போயிருக்கும். அதேவேளை கிறிஸ்தவ மதத்தின் அறிமுகம் புதிய பொருட் பண்பாட்டுக் கூறுகளின் உருவாக்கத்துக்கும் வித்திட்டது. எனினும், பொருட் பண்பாடு தொடர்பில் தொடக்கத்தில் ஐரோப்பியச் செல்வாக்கு, எல்லா அம்சங்களிலும் பரவலானதும், ஆழ மானதுமான மாற்றங்களை ஏற்படுத்தியதாகத் தெரிய வில்லை.

ஐரோப்பியர் நம்மை ஆண்ட ஏறத்தாழ 350ஆண்டு காலத் தில் மாற்றங்கள் படிப்படியாகவும், மெதுவாகவுமே இடம் பெற்றன. இந்த 350ஆண்டுகாலத்தில்ஐம்பதுக்கும் குறை வான ஆண்டுகளே எஞ்சியிருந்த 1905 காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய லெனார்ட் வூல்வ், இலங் கையின் கொழும்பு, கண்டி, காலி போன்ற பிற நகரங்க ளைப் போல் யாழ்ப்பாணம் ஐரோப்பியமயமாகவில்லை என்றும், அந்தநகரின்மிகச்சில இடங்கள்தவிர்ந்தஎனைய பகுதிகள்தமிழ்ஆகவேஇருந்தனஎன்றும்குறிப்பிட்டிருப்பது யாழ்ப்பாணத்தில் மரபுவழிப் பண்பாடு அதிக மாற்றமின்றி வேரூன்றி இருந்ததை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

அதற்குப் பின்னான காலத்தில் மாற்றங்கள்

அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சிகளும், உலகமயமாக்க மும் பிற்காலத்து அறிவியல், தொழில் நுட்ப வளர்ச்சிகளும், உலகமயமாக்க முமே நமது பொருட் பண்பாட்டில் ஆழமா னதும் பரவலானதும், விரைவானதுமான தாக்கங்களை ஏற்படுத்தின. நமது அன் றாட வாழ்வில் பயன்பட்ட ஏராளமான பொருள்களும், சூழல்களும் இந்தக் காலத்திலேயே விரைவாகப் பயன்பாடற் றுப்போயின.

ஆயிரக் கணக்கான ஆண்டுகள் பயன் பாட்டில் இருந்திருக்கக்கூடிய அம்மி, ஆட் டுக்கல், உரல், உலக்கை, பானை, சட்டி, மண்ணடுப்பு போன்றவை இன்று மிக அரிதாகவே காணப்படுகின்றன. பலவ கையான இறக்குமதிப் பொருள்களும், மின்சாரக் கருவிகளும் இவற்றை நமது வீடுகளிலிருந்து வெளியேற்றிவிட்டன. உழவு இயந்திரங்கள், நீரிறைக்கும் இயந் திரங்கள் போன்றவற்றின் வருகையால் கலப்பை, துலா, சூத்திரக் கிணறு போன்ற வேளாண்மை சார்ந்த விடயங்கள் இன் றைய தலைமுறையினருக்குத் தெரியாத விடயங்கள் ஆகிவிட்டன. ஒரு காலத்தில் சமூகத்தகுதியில்உயர்நிலையில் இருந்த வர்களின் விருப்புக்கு உரியதாக இருந்த நாற்சார் வீடுகள் காலத்துக்கு ஒவ்வாதன என்று விலக்கப்படுகின்றன. இவ் வாறான பல வீடுகள் இடிக்கப்பட்டு நவீனமானவை என்று கருதப்படும் வீட்டுவகைகளாக

மாற்றீடு செய்யப்படுகின்றன. கால்நடையும், மாட்டு வண்டி களுமே போக்குவரத்து வடிவங்களாக இருந்த ஒரு காலத் தில் நமது பகுதி மக்களின் வாழ்வியலோடு நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருந்த தெருவோர மடங்களும், அவற்றை அண்மித்திருந்த கிணறுகள், கேணிகள், நீர்த் தொட்டிகள், ஆவுரஞ்சிக்கற்கள்போன்ற அமைப்புக்களும், மோட்டார் வண்டிகளின் அறிமுகத்துடன் பெருமளவுக்குப் பயன்பாடற்று அழிந்துவிட்டன.

உள்நாட்டுப்போரால் மாற்றம்

உள்நாட்டுப் போர்ச் சூழல் பொருட் பண்பாட்டில் ஏற்படுத் திய தாக்கங்கள் நமது பண்பாட்டில் இருந்துநேரடியாகஉரு வானவை அல்ல எனினும், நமது மண்ணில் ஐரோப்பிய ஆட்சியாளர் உருவாக்கிய கட்டடங்களும், கட்டடச் சூழல்க ளும் நமது சமூகத்துடனான பகைமை அல்லது நல்லெண் ணத் தொடர்புகளின் விளைவுகள். அவையும் நமது பண் பாட்டு வரலாற்றில் தாக்கங்களைக் கொண்டவையே. கோட் டையும் அதற்குள் இருந்த கட்டடங்களும், பறங்கித்தெருப் பகுதி, பழைய பெரியகடைச் சந்தைகள், பழைய மாவட்டச் செயலகக் கட்டடம், பழைய பூங்கா, யாழ்ப்பாண நகர மண்ட பம் போன்ற இத்தகைய பொருட் பண்பாடுகளை உள்நாட் டுப்போர் காவுகொண்டது. இவற்றில்பல மீள்விக்க முடியாத இழப்புக்கள். இவை தவிர பண்பாட்டுப் பெறுமதி கொண்ட பல தனியார் வீடுகளும், கட்டடங்களும் முற்றாகவோ பகுதி யாகவோ அழிந்துவிட்டன.

உள்நாட்டுப் போர்ச் சூழல் மட்டுமன்றி வெளிநாட்டுப் பண வரவும் நிலைமையை மேலும் மோசமாக்கின என்றே சொல் லவேண்டும். உள்நாட்டுப் போர் ஓய்ந்து மீள்கட்டுமான வேலைகள் தொடங்கியபோது மேலும் பல பண்பாட்டுச் சுவ டுகள் அழிந்துபோயின. இதுவிடயத்தில்தெரிந்தோதெரியா மலோ தனியாரும், பொது அமைப்புக்களும் போட்டி போட் டுக்கொண்டு செயலாற்றியதைக் காண முடிந்தது. எடுத்துக் காட்டாக, யாழ்ப்பாண நகரப்பகுதியில் வீதிகளை அகல மாக்கிமேம்படுத்தும்வேலைகளில்நூற்றாண்டுகள்பழமை வாய்ந்த கட்டடங்களும், சூழல்களும் பாதிக்கப்பட்டன. நூறாண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்த வீடுகள், காலத் துக்கு ஒவ்வாதன எனக்கருதி இடிக்கப்பட்டுபுதிய வகையான வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

வெளிநாடுகள் மீள்கட்டுமானத்துக்காக வழங்கிய பணமும், புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் நமது மக்களினூ டாக ஏற்பட்ட பண வரவும் இதில் பெரும் பங்காற்றின. போருக்குப் பின் ஏற்பட்ட அமைதி வெளிச் சந்தைகளுக்கு, குறிப்பாகத் தென்னிலங்கைச் சந்தைகளுக்கு நமது பகுதி களை அகலத் திறந்துவிட்டதனால், பல தலைமுறைகளாக நம்மவர் வீடுகளில் இருந்த மரபுரிமைப் பொருள்களும், சேதமான அல்லது புதுமை புகுத்துவதற்காக இடிக்கப்பட்ட வீடுகளில் இருந்து அகற்றப்பட்ட கலையம்சம் கொண்ட கூறுகளும் விற்பனைப் பொருளகளாகிநமது பகுதிகளுக்கு வெளியே கொண்டு செல்லப்பட வழியேற்பட்டது. இதைக் கட்டுப்படுத்துவதற்கான வழிவகைகள் எம்மிடம் இருக்க வில்லை.

ஆவணப்படுத்தல்

மேலே எடுத்துக் காட்டிய அழிப்புக்களுக்கும், மாற்றங்களுக் கும் நியாயமான காரணங்கள் இல்லை என்று சொல்லமுடி



யாது. கடந்தகாலத்தின்எல்லாவிடயங்களையுமே பழமைச் சுவடுகளாகவைத்திருக்கமுடியாதுஎன்பதையும்நாம்கருத் தில்கொள்ள வேண்டும். இடம்பெறுகின்ற பல மாற்றங்கள் தவிர்க்க முடியாதவை. பல்வேறு பொருளாதார, தொழில் நுட்பக் காரணங்களும், புதிய வாழ்க்கை முறைகளும், புதி தாக உருவான தேவைகளும் இந்த மாற்றங்களை அவசிய மானவை ஆக்குகின்றன. இந்த மாற்றங்களால் பயன்பா டற்றுப்போகின்ற பொருட் பண்பாட்டுக் கூறுகள், புதிய, நமது காலத்துப் பண்பாட்டை வெளிப்படுத்தும் பொருள்களுக்கு வழிவிட்டு ஒதுங்குகின்றன என்பதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். அதேவேளை, இன்று கிடைக்கக்கூடிய னவாக உள்ள, நமக்கு முந்திய தலைமுறைகளின் பொருட் பண்பாட்டுக் கூறுகளின் போதிய அளவு எடுத்துக்காட்டுக ளும், தகவல்களும் பின் வரக்கூடிய தலைமுறையினருக் காகப் பாதுகாக்கப்படவேண்டியதும் அவசியத்தையும் நாம் உணரவேண்டும்.

அருகிவருகின்ற பொருட் பண்பாட்டுக் கூறுகளில் அசையக் கூடியவற்றின் பொருத்தமான எடுத்துக்காட்டுகளைச் சேக ரித்துப் பாதுகாப்பதுடன், அவற்றின் உருவாக்கம், உற்பத்தி வழிமுறைகள், பயன்பாடு, அவற்றில்காணப்படும்வேறுபா டுகள், போன்ற

இன்னோரன்ன தகவல்களைச் சேகரித்து ஆவணப்படுத்து வதும் முக்கியம். அசையாத பொருட் பண்பாட்டு அம்சங்க ளான கட்டடங்கள், உட்கட்டமைப்புக் கூறுகள், கிராமங்கள், நகரங்கள், பூங்காக்கள், மற்றும் பல வகையான கட்டிடச் சூழல்கள் போன்றவற்றை அளந்து வரையப்பட்ட வரைபடங் கள், ஒளிப்படங்கள், காணொலிகள், எழுத்துமூல விவரங் கள் போன்ற பொருத்தமான ஊடகங்களூடாக ஆவணப்ப டுத்திப் பாதுகாக்கலாம். கடந்த காலங்களிலும் இவ்வாறான முயற்சிகள் இடம்பெற்றன எனினும் இவற்றுள் பெரும்பா லான முயற்சிகளில் இந்தத் தகவல்கள் இலகுவாக எல்லோ ருக்கும் கிடைக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட வில்லை. இதனால் அரும்பாடுபட்டுத் தேடிய பொருள்க ளும், திரட்டிய தகவல்களும் காலப்போக்கில் இல்லாமல் போய்விட்டன. தற்காலத்தில், பொருட் பண்பாடு தொடர்பி லான தகவல்களைச் சேகரிப்பதற்கும், அவற்றை ஆவணப் படுத்திப் பாதுகாப்பதற்கும், உலகம் தழுவிய அளவில் அவற்றை எல்லோருக்கும் கிடைக்கும்படி செய்வதற்குமான தொழில் நுட்பங்கள் உள்ளன. ஆனாலும், தொழில்நுட்பங் கள் மட்டும் போதுமானவை அல்ல. தகவல்களைத் திரட்டியவர்கள் அவற்றைத் தமக்குள்ளோ, அல்லது தமக்கு நெருங்கிய குறுகிய வட்டத்துக்குள்ளோ வைத்துக்கொள்ள வேண்டும் என்ற மனப்பாங்கைக் களைய வேண்டியது அவ சியம். அத்தோடு, இவ்வாறான பொருட் பண்பாடு சார்ந்த பொருள்களை வைத்திருப்பவர்கள் அவற்றை ஆவணப்ப டுத்தவழங்குவதில்தயக்கம்காட்டுகின்றநிலையும்காணப்ப டுகின்றது. இவ்வகையான மனப்பாங்குகள் நமது சமூகத் தின் மேம்பாட்டுக்கு உதவக்கூடியன அல்ல.

தற்காலத்தில் பல நிறுவனங்களும், குழுக்களும் இவ்வா றான ஆவணப் படுத்தல்களில் ஈடுபடுவதுடன், அவற்றினூ டாகக் கிடைக்கும் தகவல்களைக் காப்புரிமைக் கட்டுப்பாடு கள் இன்றி உலகெங்கும் பரந்து வாழும் ஆர்வலர்கள் பயன் படுத்தக்கூடிய வகையில் வழங்குவதற்கும் முயற்சி எடுத்து வருகின்றன.

'நூலக நிறுவனம்' என்னும் இலாப நோக்கற்ற தன்னார்வ நிறுவனம், இலங்கைத் தமிழ்ப் பேசும் சமூகங்கள் தொடர் பான விடயங்களைப் பல்லூடக முறையில் ஆவணப்ப டுத்தி, இணையத்தினூடாக எல்லோருக்கும் பயன்படும்படி கட்டற்ற முறையில் வழங்கி வரு வதை எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

புதிய பயன்பாடுகள்

பயன்பாடற்றுப்போன அல்லது பயன்பாடு அரு கிப்போன பொருட் பண்பாட்டுக் கூறுகளை இவ் வாறு கணினிகளிலும், ஆய்வேடுகளிலும், அருங்காட்சியகங்களிலும் மட்டுமே வைத்துக் கொள்ளவேண்டும் என்பதில்லை. இந்தப் பொருள்களையும் அவை சார்ந்த உற்பத்தி முறை களையும் மீட்டுருவாக்கம் செய்து அவற்றை வரு மானம் ஈட்டக்கூடிய தொழில்களாக உருவாக்கும் சாத்தியக்கூறுகள் பற்றியும் சிந்திக்கலாம். மேற் படி பொருட் பண்பாட்டுக் கூறுகள் பலவற்றை முன்னைய பயன்பாட்டுக்கு உட்படுத்தி அவற்றில் இருந்து வருமானம் பெறுவது சாத்தியம் ஆகாது. ஆனால், சுற்றுலாத்துறை போன்ற வேறு துறை கள் சார்ந்த தேவைகளை நிறைவேற்றும் வகை யில் மேற்குறித்த பொருள்களுக்குப் புதிய பயன் பாடுகளை உருவாக்க முடியும்.

மரபுவழிப் பொருட் பண்பாட்டுக் கண்காட்சிகளை நிரந்தரமாகவோ, பண்டிகைகள், விழாக்கள் போன்றவற்றை அண்டிக் குறுகிய காலத்துக்கோ ஏற்பாடு செய்வது பயன் தரக்கூடியது. இவ்வாறான கண்காட்சிகள் ஊடாக நமது பொருட் பண்பாடு குறித்த பொதுவான விழிப்பு ணர்வை ஏற்படுத்தவும், ஆய்வுகளை ஊக்கப்படுத்தவும், நமது மரபுவழிப் பொருட் பண்பாடு சார்ந்த புதிய பயன்பாடு கள் குறித்து அறிமுகப் படுத்தவும் முடியும். இவ்வாறான நிகழ்வுகள் பண்பாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் விதத்திலும் திட்டமிடப்படலாம்.

முடிவுரை

நமது பகுதிகளின் பொருட் பண்பாடுகள் குறித்து ஆய்வு களை ஊக்குவிக்கவும், அருகி வரும் அல்லது அழியும் நிலையில் உள்ள பொருட் பண்பாட்டுக் கூறுகளை இனங் கண்டு அவற்றை ஆவணப்படுத்தவும், அவற்றுள் வர லாற்று, பண்பாட்டு முக்கியத்துவம் கொண்ட பொ ருட் பண் பாட்டுக் கூறுகளுக்குப் பொருளாதாரச் சாத்தியப்பாடுக ளைக் கொண்ட புதிய பயன்பாடுகளைக் கண்டறிந்து அவற்றை நடைமுறைப் படுத்த உதவவும், நமது பகுதிக ளின் பொருட் பண்பாடு தொடர்பில் பல்வேறு வகையான பயிற்சிகளை வழங்கவும் அல்லது அவ்வாறான முயற்சி களை ஒருங்கிணைக்கவும், மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடவும் கூடிய வகையில், வல்லுநர்களையும், ஆர்வலர்களையும்கொண்டஅமைப்பு ஒன்று அவசியம். இவ்வாறான அமைப்பொன்றின் மூலமே நமது பொருட்பண்பாட்டுக்கூறுகள் அவசரகதியில் அழிந்து போவதைத் தடுத்து, அவற்றினூடாக நமது அடையாளங் களை வலுப்படுத்திக்கொள்ளவும் முடியும்.

அறிவுப் பரப்புகை என்பது ஆய்வுச் சூழலில் மிகவும் அவசியமானதொன்று. தான் கண்ட உண்மைகளை, தன் அனுபவங்களைப் பிறரிடம் பகிர்ந்து கொள்வதும் அதனால் பிறர் பயன் கொள்வதுமாய் அது இருக்க வேண்டும். மேலும் தூண்டல்களையும் துலங்கல்களையும் அது நிகழ்த்த வேண்டும். அதனூடான சமூக நன்மையும் அதனுள் அடங்கின் அது மேலும் நலமுடைத்து. இந்தப் பகிர்வு எந்த வடிவத்திலும் நிகழ்த்தப்படலாம். மேலும் தன்னுடைய தேடலில் அறிவு பூர்வமான வினாக்களை எழுப்புவதும் அதன்வழி நுணுக்கமான பரிசீலனைகள் செய்வதும் மிகவும் அவசியமானது.

கட்டுரை



பேராசிரியர்
வ. மகேஸ்வரன்

இணுவிலைச் சொந்த இடமாகக் கொண்டவர். பேராதனைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றுகிறார், கலை,பண்பாடு,சாசனம்,தத்துவம், நாட்டாரியல், வரலாறு, விமர்சனம் ஆகிய துறைகளில் பெரிதும் ஈடுபாடு கொண்டவர். இதுவரை 5 நூல்களையும் நூற்றுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

கேரளத்து அடர்காவுகளும் யாழ்ப்பாணத் தமிழரும்

அருளினியனின் கேரள டயறிஸ் 1ஐ முன்னிறுத்திய சில பதிவுகள்



கடந்த நான்கு தசாப்தங்களுக்கு முன் பல்கலை மாணவனாக இருந்தபோது நமது பேராசிரியர் ஒருவர் இரண்டுகட்டுரைகளைத் தட்டச்சுப் பிரதியாக நம்மிடம் வாசிக்கத் தந்தார். அதில் ஒன்று யாழ்ப்பாணத்துக்கும் மலையாளத் தேசத்துக்குமுரிய கலாசாரத் தொடர்புகள், மற்றையது மட்டக்களப்புப் பேச்சுத் தமிழுக்கும் மலையாள மொழிக்கும் இடையிலுள்ள ஒற்றுமைகள் என அவை அமைந்துமிருந்தன. மாணவப் பருவத்தில் அத்தகைய கட்டுரைகள் நம்மைப் பல சிந்தனைத் தூண்டுதல்களுக்கு வழிப்படுத்தின. இந்திய மக்களினுடைய இலங்கைப் புலப்பெயர்வுகள், தமிழ்மொழியின் கிளைமொழித் தன்மை எனப் பலவாறாக அவை தூண்டின. மேலாக, யாழ்ப்பாணத்தில் நாற்சார வீடு, தேங்காய்ப் பால் பாவனை, கன்னக் கொண்டை, புழுங்கல் அரிசிச் சோறு, இடியப்பம், வேட்டியில் கொய்யகம் எனப் பல பழக்க வழக்கங்களை அடையாளங் காண முடிந்தது. மட்டக்களப்பில் எழுவான், படுவான் கரை, ஒள்ளுப்பம் முதலான சொற் பயன்பாடுகள் கண்ணகி வழிபாட்டின் விரிவாக்கம் அண்மையில் அருளினியன் என்பவர் எழுதிய 'கேரள டயரீஸ் வேர் தேடுவோம்' என்ற நூலின் வரவு பற்றிப் பரபரப்பாகப் பேசப்பட்ட சூழ்நிலையில் அந்த நூலை வாசிக்க வேண்டுமென்ற அவாவால் அதைப் பெற்று வாசிக்க முடிந்தது.

இருபத்து நான்கு கட்டுரைகளைக் கொண்ட தொகுப்பைப் பயணஎழுத்துக்கள் அல்லது பத்தி எழுத்துக்களின் தொகுப்பு என்ற அளவிலே அடையாளப்படுத்த முடியும். எழுத்தாளரின் கூற்றுப்படி வேர்கள் தேடி அடர்காவுகளிலும், கோயில்களிலும் அலைந்த அவர் தான் பெற்றுக்கொண்ட அனுபவங்களைப் பகிர முனைந்துள்ளார். அடிப்படையில் கேரளத்தின் பரசுராமர் வழிவந்த தொன்மங்கள், நம்பூதிரிப் பிராமணர்களின் மேலாண்மை, கேரளத்து அடர்காடுகளில் அமைந்த காவுகள், கொட்டியூர் கோயிலின் மர்மங்கள், மலபாரின் அடிமை வியாபாரம், கதகளி, முத்தப்பனும் தொய்யமும் எனக் கேரளத்து இருட்டுக்களையும், அடையாளங்களையும் தனித்துவமான பாணியில் வெளிப்படுத்தியுள்ளார்.

இந்தத் தொகுப்பின் இன்னோர் பகுதி மலையாளக் கரையோரத்தின் முகத்தைக்காட்டுகின்றது. மாட்டிறைச்சி அரசியலில் அது ஆரம்பித்து, ஆரியர்கள் மிருகபலியுடன் தொடர்புபட்டனர் என்றும் அவர்களும் அடிப்படையில் மாமிசபட்சிணிகளே என்பதையும் வலியுறுத்த முனைகின்றார். திலீப் ஏட்டன், டிங்கோயிஸ்ட், buddy love என்ற கட்டுரைகள் இந்தியச் சூழலின் பொது அனுபவங்களை வெளிப்படுத்துவனவாக அமைகின்றன.

கட்டுரைகளின் இன்னோர் தொகுதி கேரளாவின் பண்பாட்டைக் கட்டமைத்தலினூடாக அவற்றை யாழ்ப்பாணப் பண்பாட்டுடன் இணைத்துப் பார்க்கின்ற வகையில் அமைந்துள்ளது. 'மணிப்பிரவாளமும் இலங்கைத் தமிழும்', 'ஈழத்தவர் என்ற ஈழவர்', 'வேர்கள் தேடி', 'வெள்ளாளர்கள் யாழ்ப்பாணத்தின் துயரம்', 'நாவலரும் சைவ வெள்ளாள மேலாதிக்கமும்', 'வீரத்தை இழந்த கதை', 'தேசவழமை என்ற வெள்ளாளச் சட்டம்' ஆகிய கட்டுரைகள் இந்தத் தொகுதியில் மிக முக்கியம் வாய்ந்தவையாக அமைகின்றன.

அருளினியன் பிரகாசிக்கக்கூடிய பத்திரிகையாளனாக மேற்கிளம்புவார் என்ற நம்பிக்கையை அவரது கேரள அனுபவங்கள் சார்ந்த கட்டுரைகள் வெளிப்படுத்துகின்றன. நூலின் அமைப்பும் முகப்பும் கட்டுரைத் தலைப்புக்களும் ஸ்ரீபதி பத்மநாபா எழுதிய 'மலையாளக் கரையோரம்' என்ற நூலை ஞாபகமூட்டுகின்றன.

'சரஸ்வதி டீச்சரும் முத்தப்பனும் ஐயப்பனும் பின்னே ஞானும்' என்ற ஸ்ரீபதியின் கட்டுரைத் தலைப்பும் போலவே இந்த நூலின் 'தளிப்பறம்பு நம்பூதிரியும் பின்னே ஞானும்' என்ற முதற்கட்டுரை அமைந்துள்ளது. ஸ்ரீபதியைப் பார்த்து இது பிரதி பண்ணியது என்பதல்ல. மேலாக அருளினியனின் கட்டுரை சுவாரஸ்யமான முறையில் எழுதப்பட்டுள்ளது என்பதையும் இவ்விடத்தில் குறிப்பிட்டாக வேண்டும். தளிப்பறம்பு நம்பூதிரியின் அதிகாரமிழந்த சோகமும் அவருள் வியாபித்திருக்கும் ஜாதீயமும் எவ்வாறு ஒரு சமாந்தரக் கோட்டில் செயற்படுகின்றன என்பதை அவர் கட்டுரையில் வடிவமைத்த விதம் அலாதியானது.

அருளினியனின் இன்னோர் முகம் கேரளத்துக் காவுகளில் அமைந்த கோயில்களை அறிமுகம் செய்வதில் மையங் கொள்கிறது. அந்தவகையில் கொட்டியூர் மர்மங்கள் என்ற கட்டுரை முக்கியம் பெறுகின்றது. தக்கனின் வேள்வியுடன் தொடர்புடைய தொன்மத்தின் வழி கட்டமைக்கப்பட்ட வழிபாடொன்றின் தொடர்ச்சியை மிகச் சுவாரஸ்யமாகப் பதிவு செய்கின்றார்.

"கேரளத்தின் அடர்காட்டுக்குள் ஜன சஞ்சாரமாக இல்லாத பாவலி ஆற்றங்கரையில் ஏகப்பட்ட மர்மங்களையும் அருளையும் தன்னகத்தே புதைத்தபடி ஹாயாக அமர்ந்திருக்கிறார் கொட்டியூர் சிவபெருமான்" என்று ஆரம்பிக்கின்றது அந்தக் கட்டுரை. தட்சயாகம், அடியேந்திர யோகம், வாள் எழுந்நலத்து, கரிம்பனக்கல் கோபுரம், ஆலிங்கன புஷ்பாஞ்சாலி என்ற சிறு தலைப்புகளில் மிக விஸ்தாரமாக தொன்மம், வழக்காறு, பண்பாடு, நடைமுறை ஆகிய விடயங்களை ஒருங்கிணைத்து ஒரு பத்திரிகையாளனாக அல்லாமல்

'சரஸ்வதி டீச்சரும் முத்தப்பனும் ஐயப்பனும் பின்னே ஞானும்' என்ற ஸ்ரீபதியின் கட்டுரைத் தலைப்பும் போலவே இந்நூலின் 'தளிப்பறம்பு நம்பூதிரியும் பின்னே ஞானும்' என்ற முதற்கட்டுரை அமைந்துள்ளது.

எனப் பல துறைகளிலும் அறிந்து கொள்ள அந்தக்கட்டுரைகள் வழிசமைத்தன. காலங்கள் மாறின. ஆய்வு மாணவராகத் தமிழகம் சென்றபோது இன்னோரு புதிய அனுபவம் கிடைத்தது. எமது பேச்சு, உச்சரிப்பு, தொனி இவைதமிழகப்பேச்சிலிருந்துவேறுபட்டதால் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் நம்மை நாகர் கோவில் பக்கமிருந்து வந்ததமிழராகவே அடையாளம்செய்தனர். அதாவது மலையாளவாடை வீசுகின்ற பேச்சுமுறையால் நாம் அவ்வாறு இனங்காணப்பட்டோம். தொடர்ந்து இது தொடர்பான அவதானங்களைச் செலுத்தி வந்தபோது இது தொடர்பான ஆய்வுத்தேடலொன்றை நிகழ்த்த வேண்டுமென்ற அவா நிலைத்தபோதும் அதற்கான சாத்தியப்பாடுகள், சந்தர்ப்பங்கள் வாய்க்காமல் போய்விட்டன.

நாவலர் வாழ்ந்த காலம், அவரது காலத்தைய சமூக இருப்பு, சமய இருப்பு, அன்றைய சமூகத்தேவைகள் எனப்பலவிடயங்களை இவ்விடத்தில் நினைவுறுத்தித்தான் அவரது செயற்பாட்டைக் கண்டனம் செய்யமுடியும். அவர் உருவாக்கிய சமூக இருப்பினால் ஏற்பட்ட பல பேறுகளையும் அனுபவித்துக்கொண்டு எழுந்தமானத்தில் குற்றம் சுமத்துவதில் என்ன நியாயம் இருக்கின்றது.



ஆய்வுத் தேடல் கொண்ட நாடோடியின் குறிப்புகளாக அவை மேற்கிளம்பியுள்ளன. இந்தக் கோயில் பற்றிப் பரணீதரன் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்னால் கொட்டியூரில் வைகாசிச் சுவாதி என்ற தலைப்பில் ஒரு பயணக்கட்டுரை எழுதியுள்ளார். (கேரள ஆலயங்கள்: பாகம் 3, கலைஞன் பதிப்பகம்- 1998) அதில் தலைச்சேரி, படகரா, கண்ணனூர், பையனூர் முதலிய பகுதிகளிலிருந்து கால் நடையாகக் கொட்டியூரில் செல்லும் காரணவர் என்றழைக்கப்படும் தலைவர்களுடன் இவர்கள் கொட்டியூருக்குச் செல்லுதல் அவர்களது 'மடி' யான ஆசாரங்களையும் குறிப்பிட்டு அருளினியன்குறிப்பிடுவதுபோலவே இறுதியில் மஹாதேவர் நாமம் மறந்து 'ஹரிகோவிந்தா' கோசத்துடன் 28 நாள்கள் நடைபெறும் உற்சவத்தை விவரிக்கின்றார். பரணீதரனுடைய விவரிப்பு பயண அனுபவத்தினூடான பக்தி சார்ந்தது அருளினியனின்; விவரிப்பு பக்தியும், தேடலும், விவரணமும் சார்ந்தது.

பண்டைக்காலத்தில் கடவுளர் உறையும் இடங்கள் என்ற வகையில் வனங்கள் (காடுகள்) பாதுகாக்கப்பட்டமை நம்முள் பலரும் அறிந்திருக்கக்கூடும். சனத்தொகைப் பெருக்கம் அதிகமில்லாத காலத்தில், நவீன விஞ்ஞான சாதனங்களின் பெருக்கமற்ற சூழலில் சுற்றுப்புறச்சூழல் பேணுகை தெய்வங்கள் சார்ந்து காடுகளில் நிலை பெற்றுள்ளன. அந்தக் காடுகள் பற்றிய விவரிப்பில் கேரளக் காடுகளும், தமிழ்நாட்டுக் காடுகளும் உதாரணங்களாகின்றன. காரைக்காலம்மையார் பாடிய 'திருவாலங்காடு' நமக்குப் பக்தி இலக்கியவழி அறிமுகமானது. பின்னர் சேத்திரக்கோவை 'காடு' என்ற பின்னொட்டுள்ள பல கோயில்களைக் குறிப்பிடுகின்றது. அதற்கு முன்னரே சிலம்பில் காடு பற்றிய ஆதாரங்கள் இருப்பதாகக் குறிப்பிடும் அருளினியன் அவற்றைச் சுற்றுப்புறச்சூழல் பேணுகை என்ற தளத்துக்குநகர்த்;தி இன்று அவை காவுகள் (காடுகள்) காவுகொள்ளப்படுவதை வருத்தத்துடன் குறிப்பிடும் அவர் அவற்றைப் பாதுகாக்க வேண்டிய தன் அவசியத்தை, "காடுகளின் பலனை அறிந்த எமது முன்னோர்கள் காடுகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காகஅவற்றுக்குத்தெய்வநம்பிக்கைஊட்டிக்கோவில் காடுகளாகப் பாதுகாத்தனர். அவை அழிந்து போகாமல் பாதுகாப்பது இன்றைய தலைமுறையின் கடமை இல்லையா?" என்ற குறிப்புரையுடன் நிறைவு செய்கிறார்.

'பசினிக்கடவு' என்ற இயற்கை அழகு கொட்டிக்கிடக்கும் கிராமத்தில் 'வலப்பட்டனாம்' என்ற நதியோரம் உள்ள 'முத்தப்பன்' என்ற கிராமியக் கடவுள் கோயிலில், முத்தப்பன்வேஷம்அணிந்தஒருவர்முட்டிநிறையக்கள்ளருந்திவிட்டுக் கேரளத்தின் பாரம்பரியமான 'தெய்யம்' என்ற நடனத்தைச் செண்டை மேளம் ஒலிக்க உக்கிரமாக ஆடும் ஆட்டம் பற்றிய விவரிப்பு சுவாரஸ்யம் ஊட்டக்கூடியது. அது மட்டுமன்றிப் பண்பாட்டு மானிடவியல் பார்வையும் கொண்டது. வேட்டை நாய்கள் தொடர்பான தகவலும் புதியது. இதைப் போலவே பெங்களூரில் நடைபெறும் முன்னேஸ்வரனுக்கான விழா திருவண்ணாமலையின் குக்கிராமம் ஒன்றில் நடந்த 'நடுகல் விழா' என்பவற்றையும் அனுபவம் சார்ந்து பகிர்ந்து கொள்கிறார். பின்னர், "சிறுதெய்வ வழிபாட்டிலேயே இந்து மதத்தின் ஆத்மா மறைந்துள்ளது எனத் தீவிரமாக நம்புபவன் நான். இந்து மதத்தின் சிறப்பே அது யாரையும் கட்டுப்படுத்துவது இல்லை. இதைச் செய், அதைச் செய் என்று ஆக்கினை கொடுப்பதில்லை. பிடித்தால் வணங்கு, பிடிக்காவிட்டால் வணங்காதே. இதுதான் இந்து மதத்தின் அடிப்படை. இறைவன் என்ற சித்தாந்தத்தை ஏற்றுக் கொள்ளாதவர் கூட இந்து சமயத்தில் அங்கம் வகிக்கலாம். பிராமணக்கலப்பில்லாத சிறுதெய்வ வழிபாடுகள் தான் இந்து மதத்தை மிகச்சரியாகப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன" என்ற முடிவுக்கு அவர் வருகிறார்.

தன்மதம் (தன்கருத்தை) சொல்வதற்கு அவருக்குப் பூரண உரிமையுண்டு. நமது பண்பாட்டு வேர்கள் கிராமியங்களில்தான் தங்கியுள்ளன என்பதற்கு மாற்றுக்கருத்தில்லை. ஆயின், நவீன விஞ்ஞானம் தந்த சகல பண்பாடுகளையும் உள்வாங்கிக் கொண்டு நவீன மனிதர்களாக உலவும் நாம் நமது அடிப்படைப் பண்பாடுகள் புறத்தாக்கங்களின் வழி மாறுகின்றபோது அவற்றை எதிர்கொள்வதில் தயக்கம் கொள்வதன் காரணம் புரியவில்லை. மேல்நிலையாக்கம் என்பது அடிப்படையில் நிறுவனம் சார்ந்துதான்.

அதற்கான நியமங்கள் சற்றே அதிகாரத் தோரணைகள் நிறைந்தவைதாம். ஆயின் மாற்றங்களை ஏற்றுக்கொள்ளும் மனோபாவங்களும் நமக்கு அவசியமானவை என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்துப்பண்பாட்டு வரலாறானது காலம், தேச வர்த்தமானங்கள் கடந்து உருப்பெற்றதொன்று. பூர்வீக இயற்கை வழிபாட்டில் தொடங்கிப் பின்னர் படிப்படியாக மனிதகுல நாகரிக வளர்ச்சியுடன் தன்னை இணைத்துக்கொண்டு கொள்வினை, கொடுப்பினைகளை நிகழ்த்திக் கொண்டு பெருங்கதையாடல்களை நிகழ்த்தியும், பெருங்கோயில் பண்பாட்டு வழிப்பட்டும், தத்துவச்சாரங்கள் நிகழ்த்தியும் இன்றுவரை நீண்ட தொடரோட்டத்தின் வழி வந்த இன்றைய நிலையை அடைந்துள்ளது. இவற்றுள் பூர்வீக இனக்குழுமங்கள், வந்தேறிகளான இனக்குழுமங்கள் ஆகியவற்றின்இருப்பும்நடப்பும்கலப்பும்நிகழ்ந்துள்ளன. இனக்குழும அரசுகளிலிருந்து பேரரசுக் கலங்கள் வரை அரசியல் உருமாறியுள்ளது. இவற்றின் வழி நடத்தைக் கோலங்கள், வழிபாட்டுமுறைகள், மொழி, இலக்கியம் என்பனவெல்லாம் தோன்றியும் அழிந்தும் கலந்தும் உருமாறியும் வந்துள்ளன. இது மனுக்குல வரலாற்றின் நிதர்சனமான பக்கங்களில் பழையன கழிதலும் புதியன புகுதலும் காலத்திற்கேற்ற வகையில் நிகழ்ந்திருக்கின்றன.

பழையன எவையும் இழிந்தவையாகா. புதியன எவையும் உயர்ந்தவையாகா. இன்று உயர்ந்தவை என்று கருதப்படும் நடத்தைக் கோலங்கள் நாளை விமர்சனத் துக்குள்ளாகலாம். இவ்வாறான பின்புலத்தின் வழிதான் மாட்டிறைச்சி அரசியலையும், மிருகபலி எதிர் அகிம்சை என்ற அல்லது பெருநெறி எதிர் சிறுநெறி அல்லது அதிகாரம் எதிர் அடிமை என்ற கருத்தியல்கள் வழி இந்தியச் சூழலில் விவாதப் பொருளாகி வந்துள்ளன.

மாட்டிறைச்சி உண்பது அவரவர் விருப்பம் சார்ந்தது. ஆடு, பன்றி, கோழிமுதலியவற்றைக் கொன்று உண்ணலாமெனின் மாட்டையும்கொன்றுஉண்ணலாம் என்பது தருக்கரீதியில் ஒப்புக் கொள்ளக் கூடியது. ஆயின் அது இந்துத்துவ அரசியல் சார்ந்த வன்முறையானதுதான் அபத்தம். எனினும் மாடு அல்லது பசுவை ஏன் புனிதப் பொருளாகக் கொள்ள வேண்டும்? இந்திய உபகண்டத்தின் பாரம்பரியத் தொழிலான விவசாயத்தில் மிகவும் வேண்டப்பட்டவை கால்நடைகளே. அதாவது, மாடுகள் தாம். அவற்றை மீறி அவை உணவுத் தேவையினையும் நிறைவு செய்தன. இந்தப் பொருளாதாரப் பின்புலத்தில் கால்நடைகளின் பராமரிப்பு அல்லது பாதுகாப்பு அவசியமானபோது அவற்றை வேள்விகளின் பெயரால்கொன்றுகுவிப்பதன்அவலம்பற்றியபிரக்ஞை உருவாகியபோதுகால்நடைப்பாதுகாப்புகருத்துநிலைக்கு புனிதத்துவச் சாயமும் பூசப்பட்டு அது பராமரிக்கவும்பட்டது. இது பொதுக் கருத்துநிலை. ஆயின் மறுபுறம் மாட்டிறைச்சியை உணவாகக்கொள்ளுதல்நிகழ்ந்தேவந்துள்ளது. புனிதம் என்ற போர்வையில் (அது அபத்தமானபோதும் கூட) ஒரு பொருளியல் பண்பாடு பேணப்பட்டது என்பதையும் மனங்கொள்ளல் அவசியம். கால்நடை சம்பந்தமான கருத்து நிலை நமது தமிழ்ச் சூழலில் காலத்துக்குக் காலம் மாற்றமுற்று வந்ததைப் பின்வரும் உதாரண வழி அறியலாம். நமது நிலம் சார்ந்த போரில் அடிப்படைப் போரை வெட்சிப்போர் என்கின்றது தொல்காப்பியம். ஆநிரைகளின் வேற்றுப்புலக் களவு வெட்சி என்றும், களவு கொள்ளப்பட்ட ஆநிரைகளை மீட்டல் செய்யும் போர் 'கரந்தை' என்றும் அதைத் தொல்காப்பியர் வரையறை செய்கின்றார். கால்நடைகளை (ஆநிரை, தொறு) அடிப்படையாகக் கொண்டே நமது பூர்வீக இனக்குழும வரலாற்றில்போர்கள்நிகழ்ந்துள்ளன. மாடுஎன்பதுசெல்வம் என்ற கருத்துநிலையில் அவற்றை அடிப்படையாகக் கொண்ட 'தொறுப்பூசல்' கள் நிகழ்ந்துள்ளன. இவற்றுள் கால்நடைகளின் அழிவும் உள்ளடக்கம். ஆயின் காலம் மாறியபோது பசுக்கள் (ஆநிரைகள்) போர்த் தொழிலிலிருந்து விலக்கி வைக்கப்பட்டன. (புறம் 9) அது அறத்தாறுநுவலும் பூட்கை என்றும் சிறப்பித்துப் பேசப்பட்டது. இதில் பிராமணியத்தின் தாக்கம் இல்லாமல் இல்லை. எனினும் தமிழக அரசியல் வரலாறு அந்த மாற்றத்தைத் தமிழகப் பொருளியல் சார்ந்தும், அறம் சார்ந்தும் ஏற்றுக் கொண்டது என்பதுதான் இங்கு பேசுபொருள். ஆகவே மாட்டிறைச்சி உண்ணக்கூடாது என்பது அரசியல் மயமாக்கப்பட்ட அபத்தமானபுனிதக்கருத்தியல்போல "உன் மூதாதையர் உண்ணவில்லையா?" என்று வினவுவதும் அபத்தமானது எனப்படுகின்றது. நீ குற்றம் செய்யாது போனாலும் உன் மூதாதையர் குற்றம் செய்திருப்பர் என்ற வாதத்தைப் போன்றது.

'பசினிக்கடவு' என்ற இயற்கை அழகு கொட்டிக்கிடக்கும் கிராமத்தில் 'வலப்பட்டனாம்' என்ற நதியோரம் உள்ள 'முத்தப்பன்' என்ற கிராமியக் கடவுள் கோயிலில், முத்தப்பன் வேஷம் அணிந்த ஒருவர் முட்டி நிறையக் கள்ளருந்திவிட்டுக் கேரளத்தின் பாரம்பரியமான 'தெய்யம்' என்ற நடனத்தைச் செண்டை மேளம் ஒலிக்க உக்கிரமாக ஆடும் ஆட்டம் பற்றிய விவரிப்பு சுவாரஸ்யம் ஊட்டக்கூடியது. அது மட்டுமன்றிப் பண்பாட்டு மானிடவியல் பார்வையும் கொண்டது.



+++

இந்தக் கட்டுரைகளில் இலங்கையைத் தொடர்புபடுத்தி எழுதியவை கவனத்துக்குள்ளாகின்றன. கேரளத்துக்கும் இலங்கைக்கும் குறிப்பாகயாழ்ப்பாணத்துக்கும் இடையிலான உறவுகள் பற்றிப் பல கோணங்களில் இவர் நோக்கியுள்ளார். குறிப்பாக, கேரளப் பண்பாடும் யாழ்ப்பாணப் பண்பாடும் பல வழிகளில் ஒத்துப்போவதை மொழிசார்ந்தும் (மணிப்பிரவாளரும் இலங்கைத் தமிழரும்) இனக்குழுமவரலாறுசார்ந்தும் (ஈழவர் என்ற ஈழத்தவர்) சமூக மேலாண்மை சார்ந்தும் (வெள்ளாளர்கள் யாழ்ப்பாணத்தின் துயரம், நாவலரும் சைவ வெள்ளாள மேலாதிக்கமும், தேச வழமை என்ற வெள்ளாளச் சட்டம்) விவரிக்க அல்லது விவாதிக்க அல்லது எள்ளல் செய்ய விரும்பு கின்றார் யாழ்ப்பாணத்துத் தமிழ்மொழியில் குறிப்பாகத் தராதரத் தமிழில் (பேச்சு வழக்கிலல்ல) சமஸ்கிருதச் சொற்களின் தாக்கம் அதிகம்தான். ஆனால் இந்த அதிகரித்த தன்மை சேர நாட்டின் வழி வந்ததுதான் என அவர் வாதிக்கின்றார். தமிழகத்தில் நிகழ்ந்த ஆரியக்



கேரளத்தின் பரசுராமர் வழிவந்த தொன் மங்கள், நம்பூதிரிப் பிராமணர் களின் மேலாண்மை, கேர ளத்து அடர்காடுகளில் அமைந்த காவுகள், கொட்டியூர் கோயி லின் மர்மங்கள், மலபாரின் அடிமை வியாபாரம், கதகளி, முத்தப்ப னும் தொய்ய மும் எனக் கேரளத்து இருட்டுக்களையும், அடையாளங்களை யும் தனித்துவமான பாணியில் வெளிப்ப டுத்தியுள்ளார்.

சலப்பால் தமிழ்மொழியில் மணிப்பிர நடை ஏற்பட்டது என்பதைத் தமிழ கத்தல பொத்தம் பொது வரலாற்றின் வழிவிளக்கிவிட்டுசேரநாட்டில்நம்பூதிரி களின்செல்வாக்கால்ஏற்பட்டமொழிக்க லப்பு அல்லது மொழி மாற்றம் காரண மாக சமஸ்கிருதம் கலந்த மொழியைப் பேசிய மலபாரிகளே யாழ்ப்பாணத்தில் குடியேறினர். அதனால் மொழி வழக் குச்சமஸ்கிருதம்கலந்தமொழியாகிவிட் டது என்ற முடிவுக்கு அவர் வருகின்றார். இந்த இடத்தில்யாழ்ப்பாணத்தில் மலபா ரிகளின் குடியேற்றம் அவர்களதுமொழி சமஸ்கிருதம் கலந்த பழைய மரபொன் றின் தொடர்ச்சி என்ற இரண்டு விடயங் கள் முனைப்புப் பெறுகின்றன.

யாழ்ப்பாணச் சனவேற்றத்தில் சேரநாட் டுத்தமிழர் அல்லது மலபாரிகளின் பங்க ளிப்புப் பற்றி யாழ்ப்பாணன் தொடர் பான பழமரபுக் கதைகள் காலத்திலி ருந்தே ஆரம்பித்துவிட்டன. வரலாற்று நூல்களும் ஆவணங்களும் அவற்றை உறுதி செய்தன. மாறாக, யாழ்ப்பாணத் தமிழரது நடத்தைக் கோலங்களும் பண்பாடுகளும் இவற்றை உறுதி செய் துள்ளன. அருளினியன் கூறுவதற்குப் புதிதாக ஒன்றுமில்லை எனின் மொழி தொடர்பான கருத்துநிலை பற்றி விவா திக்க வேண்டியுள்ளது. யாழ்ப்பாணத் துத் தமிழின் பேச்சுத்தொனி, சொல் வழக்குகள் மலையாளத்தை ஒத்துள் ளன என்பது ஆய்வாளர்கள் ஏற்கனவே கண்ட முடிவுகள். ஆயின் மொழிதலில் சமஸ்கிருத வாடையும் அங்கிருந்து தான் வந்ததா? என்பது சந்தேகத்துக்குரி யது. யாழ்ப்பாணத்தில் இற்றைக்குப்பல வருடங்களுக்கு முன் மக்கள் பேசிய மொழி முறைமையைப் பதிவுகளின் வழி அறிய முடியாது போயினும் ஆவ ணங்களின்வழி நோக்குகின்றபோது அவை அவ்வாறிருக்கவில்லை என்பது புலனாகின்றது.

ஆக்க இலக்கியங்கள் ஒரு புறமிருக்க ஆவணங்கள் தாம் இந்த மொழிக்க லப்பை உறுதி செய்வன. யாழ்ப்பாணத் திலுள்ள எழுத்தாவணங்கள் வழிநோக் குகின்றபோது பெரும்பாலும் சமஸ்கிரு தக் கலப்பல்லாத மொழிமுறைமையே நிகழ்ந்துள்ளமை புலனாகின்றது. மேலாக, ஜராவதம் மகாதேவனின் Early Tamil Inscription என்ற நூல் பற் றிய கருத்தாடலின்போது, பேராசிரியர் நாச்சிமுத்து அவர்கள் யாழ்ப்பாணத் தமிழில்தான் பிராமிக் கல்வெட்டுத் தமி ழின் பேச்சுமுறைமையின் தொடர்ச்சி யைக் காணலாம் என்கிறார். அவர் உதாரணமாகக் காட்டிய பிராமிக் கல் வெட்டுக்கள் எவையும் சேரநாடு என்ற கேரளத்துக்கு உரியவை அல்ல. அவை வட, தென் தமிழகத்துக்குரியவை. குறிப்பாக 'கொட்டுப்பித்த' என்ற தமிழ்ச் சொல்லின் தொடர் பாவனை யாழ்ப்பா ணத்தில் மாத்திரமே மாற்று வடிவில் நிகழ்கின்றது என்கிறார் அவர்.

+++

சேந்தன் கொட்டுப்பித்த பாளி. சேந்த னால் கொட்டுவிக்கப்பட்ட (குடைவிக்கப் பட்ட) குகை என்பது அதன் பொருள் யாழ்ப்பாணத்தில் அப்பா கட்டுவித்தவீடு அல்லது அப்பா கட்டுவிப்பித்தவீடு என்ற தொடர் பிராமி வாக்கியத்தின் அமைப் பைக் கொண்டதாக அமைகின்றது. நிற்க, இற்றைக்கு அறுபது ஆண்டுக ளுக்கு முன்னர் பேராசிரியர் க.கணப திப்பிள்ளையின் நாடகங்களை அறிந்த வர்கள் அதில் நிகழ்த்தப்பட்டுள்ள பேச்சு மொழியின் அமைப்பையும் அறிந்திருப் பர். அது யாழ்ப்பாணத்துப் பேச்சுத்த மிழ். அது தீரிபடையாத தமிழ் எனின் சமஸ்கிருதம் கலந்தது எப்போது என்பது தான் இங்கு தொக்கு நிற்கின்றது. யாழ்ப் பாணச் சமூகத்தில் சமஸ்கிருதமயமா தல் என்ற கருத்து நிலை பிற்காலத்தில் ஊடுருவியபோதே இந்த மொழிமாற்ற மும் நிகழ்ந்திருத்தல் வேண்டும். இந்தக் கருத்தியலை சமஸ்கிருத மயப்படுகை (Sanskritization) என்ற வகையில் அடக் கலாம் போலத் தெரிகின்றது. பேராசிரி யர் எம். என் ஸ்ரீநிவாஸ் என்பவர் குடகு மக்களிடையே செய்த ஆய்வொன்றின் வழி இதனை நிறுவுகின்றார்.

"இந்தியச் சூழலில் மேனிலைப்பட்ட அசைவியக்கத்துக்கு ஆளாகும் ஒருவர் அன்றேல் குழுமம், தமது மத முறை மைகளைப் படிப்படியாக உயர் இந்து மத நெறியில் கூறப்படுகின்ற அதாவது சமஸ்கிருத எழுத்துக்களில் உள்ளதென நம்பப்படுகின்றமுறைமையில்அமைத் துக் கொள்கின்றார்/றது. இப்படிச் சொல் கின்ற பொழுது தாம் இதுவரை கடைப் பித்து வந்தனவற்றை சமஸ்கிருத நிலைப்படுத்தி அல்லது சமஸ்கிருதமயப் படுத்தி அவற்றையும் உயர் மரபுக்குரி யன போன்று போற்றுதல் மரபாகும். (சிவத்தம்பி, கா. யாழ்ப்பாணம் : சமூ கம், பண்பாடு, கருத்துநிலை, பக். 136) இந்த சமஸ்கிருதமயமாதல் கருத்து நிலை யாழ்ப்பாணத்தில் மத மேனி லைப்பாட்டின் ஓரங்கமாக நிகழ்ந்தது என்கின்றார் சிவத்தம்பி. இதற்கான ஆதாரமாக யாழ்ப்பாணத்தில் கடைப்பி டிக்கப்பட்ட பஞ்சாங்க முறைமையை அவர் ஆதாரங்காட்டி அதை நிறுவு கின் றார். இந்தக் கருத்தியலின் வழிதான் இதுதான், யாழ்ப்பாணத்து வெள்ளாளர் என்போர் ஆதிக்க சாதியினர். அவர்கள் தாழ்ந்த சாதியினர் மீது வன்முறைக களைப் பிரயோகித்துத் தமது மேலாதிக் கத்தை நிலைநாட்டினர். வேளாளர் தேசவழமைஎன்றசட்டத்தைத்தமக்குச் சாதகமாக உருவாக்கிக் கொண்டு தமது இருப்பைத் தக்கவைத்தனர். இந்த வெள்ளாள மேலாதிக்கத்தின் முட்டுக் கொடுக்கும் தூணாக நாவலர் விளங்கி னார் என்பதேயாகும்.

யாழ்ப்பாணத்து வெள்ளாள மேலாதிக்க மும், அதன் ஜாதியக்கட்டுமானமும் அத னால் ஏற்பட்ட பிரச்சினைகள், மோதல் கள், போராட்டங்கள் என்பன ஏலவே பேசப்பட்ட விடயங்கள். வெகுஜனன் இராவணா என்போர் எழுதிய 'இலங் கையில் சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும்' (Southvision- 2017) என்ற நூலில் அதைப் பதிவு செய்துள் ளார். றொபேட் ஹோம்ஸ் என்பவர் Jaffna 1980 என்ற நூலில் இது பற்றிப் பிரஸ்தாபித்துள்ளார். சிவத்தம்பியின் யாழ்ப்பாணம்: சமூகம், பண்பாடு, கருத் துநிலைஎன்றநூலிலும்இதுபற்றிஎழுதி யுள்ளார். நமது இலக்கியகாரர்களும் இதுபற்றி எழுதியுள்ளனர். இடதுசாரிக ளும், புத்திஜீவிகளும், முற்போக்கு இலக்கியகாரர்களும் இது தொடர்பாக நிறையப் பேசியும், எழுதியும், போராடி யும் உள்ளனர். ஆயின் மேற்குறித்த நூல்கள் எல்லாம் ஒருமித்து ஒரு கருத்தை வலியுறுத்துகின்றன. அதா வது யாழ்ப்பாணம் சாதியம் இன்னமும் விடுபடா நிலையில், நீறுபூத்த நெருப் பாக உள்ளது. எனினும் சமூக அசைவி யக்கம் இறுக்கமான சாதியக்கட்டுமா னத்தை இளகச்செய்தது.

யாழ்ப்பாண வைபவமாலையோ, சைமன்காசிச் செட்டியோ குறிப்பது போன்ற பல சாதிகள் இன்று இல்லை. அவர்கள் பெருங்குழுக்களுக்குள் இணைதல், பொருளியல், கல்வி முத லியவிடயங்களால்மேல்நிலையாக்கம் பெறுதல் என்பது நிகழ்ந்துள்ளன. இது ஒரு சமூக நிலைப்பட்ட விடயம், சமூகம் அதன் இருப்பு, அதன் கட்டமைவு, ஊடாட்டம், தொழில் உறவுகள், பொரு ளியல் நிலைகள் என்பவற்றின் கட்டுமா னத்தின் வழி அவற்றுள் ஒரு பண்போ பலபண்புகளோமாற்றமடைவதற்கான சாத்தியக்கூறுகள் உண்டு. எனவே இதைப் பண்பாட்டுமானிடவியல் அசை வியக்கத்தின் வழி நோக்கி அதன் பரி ணாமங்களை இனங்காண்பதை விடுத்த அருளினியனது கூற்றுப் படியே பலபடித்தரங்களைச்சேர்ந்தவர்கள் அதி காரம் பெற்றவர்களாக மாறும் நிலையி லுள்ளது என்பதை விடுத்து கடும் வார்த் தைப் பிரயோகங்களால் சாடுவது பத்தி ரிகா தர்மமாகாது.

அருளினியனின் தீவிரமான குற்றச் சாட்டு நாவலர் மீது படிகின்றது.

"இன்று யாழ்ப்பாணத்தில் தாண்டவமா டும் அத்தனை வெள்ளாளக் கொழுப்புக் கும் ஆறுமுக நாவலர் ஜயாவே மூல காரணமாக இருந்துள்ளார்." (பக் 54)

"வெள்ளாள மயமாகி 'சைவசித்தாந்தம் மூலமாக மனு தர்மத்தின் புது வேர் ஷனை யாழ்ப்பாணத்தில் பரப்பி ஒடுக் கப்பட்ட மக்களை மேலும் ஒடுக்கினார்". (பக் 59)

இவ்வாறான குற்றச்சாட்டுக்களுக்கு அவர் ஆதாரம் காட்டுவது நாவலரது சைவவினாவிடை.

நாவலர் என்ற ஆளுமை பற்றி ஆதர வும் எதிர்ப்பும் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றது. காலங்கடந்தும் நாவலர் பேசப்படுவதுதான் அவரதுபலம். அருளி னியன் மாத்திரமன்று பல்வேறு தரப்பி லிருந்தும் நாவலர் மீது கல்லெறியப் பட்ட பதிவுகளை நம்மால் பதிவு செய்ய முடியும். யாழ்ப்பாணத்தாரின் கல்வி யும் அது சார்ந்த உயர்பதவிகளை மட் டுமே நோக்கிய நகர்வும் நாவலர் வழி வந்ததால் இதர தொழில்கல்வியை யாழ்ப்பாணச்சமூகம்கருத்தில்கொள்ள வில்லை என்றும், ஆறுமுக நாவலரது சமயம்சார் கொள்கையே திரு முருகாற் றுப்படையைத் தவிர ஏனைய சங்க நூல்களைப் பதிப் பிக்க அவர் முனைப்புக் காட்ட வில்லை என்றும் குற்றச்சாட்டுக்







ஒரு பண்பாடு இன்னோர் பண்பாட்டை மேலாதிக்கம் செய்து தன்வசப்படுத்தும், அல்லது இன்னோர் பண்பாட்டினுள் நுழைந்து கரைந்த போகும், அல்லது இரண்டு பண்பாடுகள் ஒன்றையொன்று சார்ந்து, கொள்ளல் கொடுத்தல் என்ற முறையில் சமரசம் செய்து கொள்ளும். இந்த மூன்றாம் நிலைப்பட்ட சமரசமே வேலன் வழிபாடு ஸ்கந்த வழிபாடாக மாறிய கதையாகும். இந்த மாற்றத்தை திருமுரு காற்றுப்படை துல்லியமாகப் பதிவு செய்கின்றது.

கள்நிகழ்ந்தவண்ணமே இருக்கின்றன. அண்மையில் ப.சரவணன் தொகுத்த அருட்பா, மருட்பா மறுப்பு கண்டனத்தி ரட்டு (காலச்சுவடு வெளியீடு 2010, 2014) மூலமாக அவர் புலமைத்துவ மரபில் தமிழ் நாட்டில் எவ்வாறான சவால்களை எதிர்கொண்டனர் என்பது புரியவரும்.

நாவலர் வாழ்ந்த காலம், அவரது காலத்தைய சமூக இருப்பு, சமய இருப்பு, அன்றைய சமூகத் தேவைகள் எனப்பல விடயங்களை இவ்விடத்தில் நினைவு றுத்தித்தான் அவரது செயற்பாட்டைக் கண்டனம் செய்யமுடியும். அவர் உருவாக்கிய சமூக இருப்பால் ஏற்பட்ட பல பேறுகளையும் அனுபவித்துக் கொண்டு எழுந்தமானத்தில் குற்றம் சுமத்துவதில் என்ன நியாயம் இருக்கின்றது.

"நான் நாவலரின் பாரம்பரியம் என நம்பப்படும் பாரம்பரியத்தில் வந்தவன். வீட்டிலும், நான் படித்த பாடசாலையிலும் நாவலரின் பங்கு மிகப்பெரியது. எனது சிறுவயதுச் சிந்தனைப் போக்கில் நாவலரின் பங்கு மிகப்பெரியது. சைவபரிபாலன சபை வைத்த அத்தனை பரீட்சையிலும் நான் தோற்றியிருக்கிறேன். நாவலர் பேச்சுப் போட்டியில் பதக்கங்களைப் பெற்றுள்ளேன். எனது பிரச்சினை, இன்று யாழ்ப்பாணத்தில் தாண்டவமாடும் வெள்ளாள சாதிக் கொழுப்புக்களுக்கு நாவலர் காரணமாக இருந்துள்ளார் என்பதுதான். அதை எதிர்க்க வேண்டியது எங்களது கடமை" (ப-640)

என்ற அருளினியனின் கூற்றில் மூன்று விடயங்கள் அடங்கியுள்ளன. ஒன்று நாவலர் பாரம்பரியம் மிகப்பெரியது, இரண்டு வெள்ளாளக் கொழுப்புக்கு அவர்தான் காரணம், மூன்று அதை எதிர்க்க வேண்டியது.

அது அருளினியனின் கடமையாகின்றது. அருளினியனின் முதலாவது கருத்துக்கு எதிர்வாதம் இல்லையென்று வைத்துக் கொள் வோம். வெள்ளாளசமூகமேலாண்மையின் பாதுகாவலராக அல்லது வெள்ளாளக் கொழுப்புக்கு அவர் காரணமானார். அதன் வழி தாழ்த்தப்பட்ட சமூகத்தைத் தூரப்படுத்தி சாதிப்படிநிலையின் அநியாயங்களுக்கு எல்லாம் மூலகாரணமாக இருந்தார். அல்லது சைவவினாவிடை மூலம் அறிவூட்டினார் என்ற வாதத்தில் உண்மை இல்லாமல் இல்லை. எனின் நாவலர் விரும்பிய சமூக நடத்தையில் எல்லாச் சாதிகளையும் தானே விமரிசனம் செய்தார். பிராமண குருக்கள்மாருக்கு எதிராக, கோவில் தர்மகர்த்தாக்களுக்கு எதிராக, திருவிழா பூசை புனஸ்காரங் களுக்கு எதிராக அவரது எதிர்க்குரலை, நல்லூர் கந்தசுவாமி கோயில் பத்திரிகை வழி அறிய முடிகின்றது.

யாழ்ப்பாணத்தில் ஒரு பஞ்சம் நிகழ்ந்த போது அவர் செய்த கஞ்சித் தொட்டித் தர்மம் பற்றி நாம் அறிந்துள்ளோம். நாவலர் அவரது காலத்தைப் பிரதிபலித்தார். அவர் இருபத்தோராம் நூற்றாண்டில் பிறந்தவரல்லவே. இந்த இடத்தில் இந்திய சீர்திருத்த வாதிகளை மேற்கோள் காட்டி நாவலர் மீது வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் பற்றியும் அதன் தார்ப்பரியம் பற்றியும் அறிஞர் ஒருவரது கூற்றைப் பதிவிட விரும்புகிறேன்.

"இந்து மதத்தின் வளர்ச்சிக்கும் சமுதாய முன்னேற்றத்துக்கும் சாதி அமைப்பு முறை தடங்கலாய்க் கிடக்கிறதெனப் பொதுவாகக் கொள்ளக்கிடக்கின்றது. வங்காளத்தில் இந்துசமய வாழ்க்கை முறையினையும் சமுதாய அமைப்பினையும் சீர்திருத்த இயக்கம் நடத்திய இராஜாராம்மோகன்ராஜ் (1772-1833) வேதாகமங்களில் பூரண மதிப்புக் கொண்டவராயினும் சாதிமுறையினை எதிர்த்தார். ஆசாரசீலராகிய நாவலர் வெகுசன துரோகத்தை எதிர்த்தும் வாந்திநோய், பஞ்சகாலங்களிலும் பிறமதத்தினரையும் சேர்த்துக் கொண்டு பொது நலத்தொண்டாற்றிய வராயினும் சாதியமைப்புக்கெதிராக கிளர்ந்தெழவில்லை. நாவலர் தோன்றிய பிரதேசத்தில் பிறப்பினால் உயர்வு, தாழ்வு பாரட்டப்படுவதன் குறை இன்னும் தக்கபடி உணராத நிலையில் அந்தச்சீர்திருத்தத்தை நாவலர் அன்றுமுன்னெடுத்துச் செல்லவில்லை என்பதை ஒரு முறையாகக் கொள்ளலாமோ என்பது கேள்விக்குரியது. ராஜாராம் மோகன்ராய்தானும் பிராமணரல்லாதார் வேத உபநிடதங்களைத் தீண்டுவதை அனுமதிக்க அன்றுதயங்கினார்" இந்தக் கூற்று நாவலருக்குச் சார்பான தல்ல. ஆயின் நாவலர் வாழ்ந்த காலத்துடன் பொருத்திப்பார்த்த கூற்று. அதுதான் நிதானமான சமூகவியல் ஆய்வின் நோர்மை. இதே அறிஞர் தனது தொகுப்பினைப் பின்வருமாறு கட்டமைக்கின்றார்.

"சீர்திருத்தவாதிகள் எனப்படுவோர் பொதுவாக மரபுவழி அமைப்புகளின் பொதுமைகளைப் போற்றிச் சார்ந்து நின்று முன்னிலை மீட்புக்கு முயல்வார்களேயன்றிப் புதிய அடிப்படைமாறுதல்களுக்காகப் போராடுவதில்லை. முன்னைப் பெருமைக்குப் பங்கம் விளைவிக்கும்வகையில்நடைமுறைற்கெட்டியாகிவிட்ட பழக்கவழக்கங்களைக் களைய அவர்கள் முயற்சி மேற்கொள்வர். முன்னைய பெருமைக்கு ஊறு விளைவிக்கும் வகையில் ஒழுகுபவர்களைக் கண்டித்தத் திருத்த எத்தனிப்பர். முன்பிருந்த நிலைக்கு இடையூறு நேராத வகையில் ஒழுகுவதற்கு அவசியமான விழுமியங்களைப் பொதுமக்களிடைப் பரப்பும் நடவடிக்கைகளையும் மேற்கொள்வார். முந்தியவற்றுக்கு முரணாகவும் அவற்றைப் பலவீனப்படுத்தும் வகையிலும் புதியன புகுமிடத்து இரண்டுக்குமிடையில் இணக்கம் காண்பதற்கும் பண்டையமைப்புக்குக் கேடு நேர்வதைத் தடுக்க அவசியமான சீர்திருத்தங்களை வலியுறுத்துவதற்கும் சீர்திருத்தவாதிகள் முன்வருவர்."

(சி. தில்லைநாதன், சீர்திருத்தவாதி நாவலர், நாவலர் நூற்றாண்டு விழா மலர் 1979)

இந்த மேற்கோளை கூர்ந்து கவனிப்பவர்கள் நாவலரது காலத்தில் அவரது இயங்குதளத்தை நன்கு புரிந்துகொண்டவர். நாவலர் விட்ட இடத்தை நிரப்பாத குறை நம்முடையது. நாவலருடையது அல்ல. நாங்கள் எமக்கான எண்ணப்படியும் கருத்தியல் படியும் நடப்போம் ஆனால் பிழைவரு கின்றபோது நமது மூதாதையர் தலையில் அனைத்தையும் சுமத்தி விடுவோம். இதுதான் நமது தார்மீகம். அருளினியனோ அவர் சார்ந்தவர்களோ அவர் குறிப்பிடும்கொழுப் புக்களைக் கரைக்கும் முயற்சியில் இறங்க வேண்டும். விடுதலைப் புலிகளின் காலத்தை மாத்திரம் பொற்காலம் எனச் சொல்லி அதில் குளிர்காய வேண்டிய தில்லை. ஆய்வு செய்தல், அறிவுப்பர்ப்புகை, எதிர்வினையாற்றுதல் என்பது வேறு, கொச்சைப்படுத்துதல் என்பது வேறு என்பதைப்புரிந்துகொள்ளவேண்டும். யாழ்ப்பாணச் சமூகத்தில் அதுகடைப்பிடித்து வந்த பல ஒழுகலாறுகள் பல (அவை போலியாவை தர்க்கமற்றவை அல்லது அருளினியன் கூற்றில்கொழுப்பு) இன்று அர்த்தமற்றவையாகிப் போய்விட்டன. சமூக அசைவியக்கமும் அது சார்ந்த மாற்றங்களும் சகல சமூக அமைப்புக்களும் ஊடுருவி இன்று அவை பெருமளவில் காலாவதியாகிப் போய்விட்டன. எனினும் 'எங்கள் தாத்தாவிடம் ஒரு யானை இருந்தது' என்று பாரம்பரியம் பற்றிப் பெரிதாகப் பேசுவதுபோல் "எங்கள் தாத்தாவிடம் ஒரு பன்றி இருந்தது" என்று கொச்சைப்படுத்துவதில் யாருக்கு இலாபம். (கொளரவக் கொலைகள் தாழ்த்தப்பட்டோர் மீதான வன்முறைகள் மலத்தை உண்ணச் செய்தல் என்பவை யாழ்ப்பாணத்தில் இன்று நடந்து விடமுடியுமா) அருளினியனின் நளவர் சமூகம்பற்றிய கூற்றுக்களும் சரியாக ஆதாரம் சார்ந்தவை. 'ஈழவர்' என்ற சமூகம் யாழ்ப்பாணத்தில் குடியேறியமை பற்றியும் அவர்கள் இங்கு பரந்து வாழ்ந்தமை பற்றியும் க.ஓ.ஈநடராசா, ஆ. வேலுப்பிள்ளை முதலியோரும் பிரஸ்தாபரித் துள்ளனர். ஆயின் ஈழவர்கள் இங்கிருந்துதான் சென்றார்கள் என்பது அவருடைய வாதம். இதைச்சரியான ஆதாரங்களுடன் அவர் ஆய்வு செய்யும்போது இருளான பக்கங்கள் வெளிச்சத்துக்குக் கொண்டுவரக்கூடும். பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையும் (சங்கிலி நாடகம்) ம.க. அந்தனிசிலும் (வீர சங்கிலியன்) எழுதிய நூல்களில் அவர்கள் இது பற்றிப்பிரஸ்தாபிக்கவில்லை. போராசிரியர் கணபதிப்பிள்ளை மறவன் புலவு பற்றிக் குறிப்பிடுகின்றார். எனினும் அரு

இன்றுள்ள முருக வழிபாடு என்பது இரண்டு பண்பாடுகளின் கலப்பு என்பது நிதர்சனமான உண்மை. வேலன் என்ற காவலன் வீரன்தான் நமது ஆதித்தலைவன் அவன் தொடர்பான வழிபாடுகள் கருத்து நிலைகளைச் சங்கப்பாடல்களி;ன் வழி பரவலாக அறிய முடிகின்றது. எனின் வட பண்பாட்டின் வழிவந்த ஸ்கந்தன் கார்த்திகேயன் என்ற கடவுளுடன் இணைந்தபோது அவன் ஆறுமுருகனாகினான். இதனைப் பண்பாட்டு மானிடவியலாளர்கள் 'பண்பாட்டுக்கலப்பு' என்கின்றனர்.



ளினியனின் வீரத்தை இழந்த கதை புதியது. ஒரு சினி மாப்பாணியில் அதன் முடிவைக்கட்டமைத்திருக்கிறார்.

முருகனைத் தொலைத்த கதை என்பதிலும் பல சுவாரஸ்யங்களை அவர் முன்மொழிகின்றார். "ஈழத்தமிழர்கள் ஆரம்பகாலத்தில் வேல்வழிபாடு, கண்ணகி வழிபாடு ஆகிய சேரநாட்டு வழிபாட்டு முறைகளையே பின்பற்றினர். பிற்காலத்தில் சோழ - பிராமண ஆதிக்கம் நிலவிய வேல்வழிபாடு இன்றுள்ள முருகவழிபாடாகவும் கண்ணகி வழிபாடு அம்மன் வழிபாடாகவும் திரிபடைந்தன." (பக் 28) இன்றுள்ள முருகவழிபாடு இரண்டு பண்பாடுகளின் இணைவு என்பதைப் பலர் எழுதியுள்ளனர். பேராசிரியர் வானமாமலை (முருகவணக்கம் இருபண்பாடுகளின் இணைப்பே, ஆராய்ச்சி 1976) பெ. மாதையன் (வரலாற்றுநோக்கில் சங்க இலக்கியப் பழமரபுக்கதைகளும் தொன்மங்களும், தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக்கழகம் 2001) பேராசிரியர் வ. மகேஸ்வரன் (கந்த சஷ்டி கவசத்தின் சமூக உள்ளடக்கம், பெரியதும் சிறியதும், 2016) ஆகியோர் இந்த இணைவு தொடர்பாக எழுதியுள்ளனர். ஆயின் சோழ - பிராமண ஆதிக்கம் தான் இந்த வழிபாடுகள் மேல்நிலையாக்கம் பெற்றன என்ற கூற்று ஆராய்ச்சிக்குரியது. மேற்கூறிய ஆய்வாளர்கள் எவரும் இந்த மாற்றத்தை குறிப்பாக வேலன் x முருக இணைவைச் சோழ ஆதிக்கத்தின் வழி வந்ததாக என்று கட்டமைக்கவில்லை. மாறாகச் சோழ மேலாதிக்கம் சைவமதத்தின் பாதுகாவலனாக இருந்து சிவவழி பாட்டையே மேன்மையுறச் செய்தது என்பது ஆதாரம் காட்டத் தேவையில்லாத செய்தி.

மேலும் இலங்கையில் சோழராட்சி நிலவியபோது அவர்கள் சிவாலயங்களையும், விஷ்ணு ஆலயங்களையும் கட்டி வழிபாட்ட முறைகளையும் ஏற்படுத்தினர் என்பதுதான் கோயில்கள் படிமங்கள், கல்வெட்டுகளின் வழியான செய்திகள். அதுவும் பொலனறுவை (ஜனநாதமங்கலம்) பதவியா, மானங்கேணி, கந்தளாய் முதலிய பிரதேசங்களை மையப்படுத்தியே அவர்களது ஆட்சி நிலை பெற்றது என்பதுதான் வரலாற்றுச் செய்திகள். சோழர்கள் எங்கே முருகவழி பாட்டையும் கண்ணகி வழிபாட்டையும் ஆகம மயமாக்கினர் என்பது தெளிவாக வில்லை. மேலும் வேல் வழிபாடு, கண்ணகி வழிபாடும் எந்தவித மாற்றமுமின்றிக் கதிர்காமம் முதல், செல்வச்சந்நிதி வரை நிலவிவருகின்றது என்பது நிதர்சனமானது.

இன்றுள்ள முருக வழிபாடு என்பது இரண்டு பண்பாடுகளின் கலப்பு என்பது நிதர்சனமானஉண்மை. வேலன்என்ற காவலன் வீரன்தான் நமது ஆதித்தலைவன் அவன் தொடர்பான வழிபாடுகள் கருத்து நிலைகளைச் சங்கப்பாடல்களி;ன் வழி பரவலாக அறிய முடிகின்றது. எனின் வட பண்பாட்டின் வழிவந்த ஸ்கந்தன் கார்த்திகேயன் என்ற கடவுளுடன் இணைந்தபோது அவன் ஆறுமுருகனாகினான். இதைப் பண்பாட்டு மானிடவியலாளர்கள் 'பண்பாட்டுக்கலப்பு' என்கின்றனர்.

ஒரு பண்பாடு இன்னோர் பண்பாட்டை மேலாதிக்கம் செய்து தன்வசப்படுத்தும், அல்லது இன்னோர் பண்பாட்டினுள் நுழைந்து கரைந்து போகும். அல்லது இரண்டுபண்பாடுகள்ஒன்றையொன்று சார்ந்து, கொள்ளல், கொடுத்தல் என்ற முறையில் சமரசம் செய்து கொள்ளும். இந்த மூன்றாம் நிலைப்பட்ட சமரசமே வேலன் வழிபாடு ஸ்கந்த வழிபாடாக மாறிய கதையாகும். இந்த மாற்றத்தை திருமுருகாற்றுப்படை துல்லியமாகப் பதிவு செய்கின்றது. அறுபடை வீடுகள் சிலவற்றில் நடைபெறும் சடங்குகளை முன்வைத்த திருமுருகாற்றுப்படையை பண்டைய வேலன் வழிபாட்டுக்குச் சாட்சியம் சேர்க்கிறார். அதற்கு மலேசியப் பேராசிரியர் ஒருவரின் உரைதான் அவருக்குப்பொருத்தமானதாகப்படுகிறது. (ப 31)ஆனால்இதேமுருகாற்றுப்படைதான் வேலன் ஆறுமுகன் ஆனதையும் பதிவு செய்கிறது.

"ஆங்கு மூவிரு முகனும் முறை நவின்
றொழுகலின்
ஆரந்தாழ்ந்த அம்பகட்டுமார்பிற்....

பன்னிரு கையும் பாற்பட இயற்றி
அந்தரப் பல்லியங் கறங்கத் திண்காழ்
வயிரெழுந்திசைப்ப வால்வளை ஞரல
உரந்தலைக் கொண்ட உரும் இடி முரச
மொடு பல்பொறி மஞ்ஞை வெல் கொடி
அகவ விசும்பு ஆறு ஆக விரை செலல்
முன்னி உலகம் புகழ்ந்த ஓங்கு உயர்
விழுச்சீர் அலைவாய்ச் சேறலும்..."
(திருமுருகாற்றுப்படை:103-125)

ஆக அருளினியனின் பண்டைய வேலன் வழிபாடு என்று ஆதாரம் தரும் திரு முருகாற்றுப்படையே வேலன் ஸ்கந்தனாகிவிட்ட மரபைப் பதிவு செய்கிறது. இந்த மாற்றங்களை அருளினியன் பிராமணக் 'கப்ஸா' வாகக் கட்டமைக்கின்றார். நமது கடவுளரும் அவர்கள் தொடர்பான கருத்துருவாக்கங்களும், வழிபாட்டு முறைகளும் நாம் உருவாக்கியவைதாம். வேலனும், கருப்பனும், ஐயனும், மாரியும், கண்ணகியும் முருகனும், சிவனும், விஸ்ணுவும் இவ்வாறுதான் உருவானார்கள், கலந்தார்கள், சமரசம் செய்தார்கள், மாற்றங்கொண்டார்கள்.

இந்தப் பண்பாட்டுப் படிமலர்ச்சியைப் பெரும் ஜனத்திரள் ஏற்றுக்கொண்டபோது அது பொது நியமாகியது.

இந்த வரலாற்றுப் போக்கைச் சரிவரப் பரிந்து கொள்வதும் பரப்புகை செய்வதும்தான் அறிவுப் பரப்புகை. மேற்குறித்தனவெல்லாம் அருளினியன் மீதான குற்றச்சாட்டுக்களோ அல்லது வைதீக மேலாண்மையோ அல்ல. மாறாக நமதுபுதியதலைமுறையும்பிறரும்அயலவர்களும் நம்மைத் தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாதே என்ற அக்கறைதான். மனிதர்கள் யாவரும் அடிப்படையில் சமூகப் பிராணிகளே. அவர்களின் நடத்தைக் கோலங்கள் காலதேசவர்த்தமானத்தின் வழி இயங்கும் என்பதே நடைமுறை. அதில் நன்மையும் விளையலாம். தீமையும் நடந்தேறலாம். இது விதி. இந்த விதியை மாற்றுபவர்கள் மகாத்மாக்கள் ஆயின் மகாத்மாக்களும் அப்பழுக்கில்லாத மனிதர்களல்ல என்பதை அவர்களது மறுபக்கங்களைப் புரட்டுபவர்கள் அறிவர். நிற்க, தமிழினியன் சிறந்த பத்தி விவரணச் செய்தியாளர் என்பது அவரது எழுத்து வழி புரிகின்றது. மேலாக அவரது நன்றி தொடர்பான குறிப்புக்களில் கவிதை பொங்கி வழிகின்றது. பாவலி ஆறும், காளந்தி ஆறும் நம்முன்னே பிரவாகிக்கின்றன. டீக்கடை மோகன் சேட்டன் நம்முன்னே உயர்ந்து நிற்கின்றனர்.

மலைவாழ் தங்கை பிரியாவும் உன்னி ஏட்டனும் கள்ளமில்லாத நாகரிகக் கலப் பற்ற அன்புள்ள ஆத்மாக்களாக நம்கண் முன்னே விரிகின்றனர். இந்த எழுத்து முறை அருளினியனின் தனித்துவ அடையாளம் அவரது கேரள டயறீஸ் 2 தொடர்ந்து விரியும்போது மட்டக்களப்புத் தமிழகத்துக்கும் கேராளவுக்கும் இடையேயான உறவு (இது பற்றி வெல்லவூர்க் கோபால் 'மலையாள நாடும் மட்டக்களப்பும்) கேரளத்துக்கும் சிங்கள மக்களின் பத்தினி வழிபாட்டுக்கும் (Gananath obeyesekara The gult of soddess pattini 1984) இடையிலான உறவுதலதாமாளிகைக் கட்டடக்கலை, கண்டிய நடனத்தின் ஊற்று தென்னிலங்கைக் கரையோரச் சிங்கள மக்களது நடை, உடை பாவனை பண்பாட்டுக் கோலங்கள், அவர்களது தொவில், கோலம் நடனங்களின் ஊற்றுக்கள் ஓட்டங்கள் என்பன பற்றியும் கவனங்கொண்டு எழுத வேண்டும். அருளினியனிடம் இருந்துநாம்எதிர்பார்ப்பது கலகக்குரலுக்கும் மேலான கனத்த ஆதாரங்களுடன் கூடிய தேடலை. அதை அவர் நிறைவேற்றக் கூடும்.



முரண்பாடு

முகம் 1

நீங்கள்
பேசாதீர்கள்
எங்களுக்கு
நஞ்சேறப் போகிறது.

நிலவை
இரசித்தீர்கள்
அற்புதங்களை
போற்றுகிறீர்கள்.

யதார்த்தங்களை
கற்பனைக்கு
விற்பனை
செய்கிறீர்கள்
பூக்களை
பூசைக்கு
அனுப்புகிறீர்கள்.

நீங்கள்
பேசாதீர்கள்
எங்களுக்கு
நஞ்சேறப் போகிறது.

பூக்களுக்கே
பொறப்பதில்லை,
இதழ்களில்
முறுக்கேற்றி
அவை
புயலை
எதிர்க்கும் காலம்.

நாங்கள்
இரசிப்பதற்கு,
சூரியனுக்கே
கூடு
இல்லை.

இன்று
பூமி
அதிர்கிறது
புரிந்து கொள்ள
ஓர்
ஊடகம்
தேவையில்லை.

முகம் 2

எனது தலை
குனிவது,
உனது
முகம் பார்க்க வல்ல
முன்னால்
நிற்பதால்.

நான்
வாழ்ந்த காலம்
கோணல்
மாணல்
நாறல்
நரகல்
திசைகள்
தெரியவில்லை.

நீ
பிறந்த நேரம்
தெளிந்த நீரோடை,
பாதை அறிந்த பயணம்
வழி நெடுகிலும்
பனைமரங்கள்.
பூரணச்
சந்திரன்
வேலிக் கண்கள் வட
தோள் கொடுக்கும்
மாற்றம்.

நான்
புத்தகங்களை
படித்திருக்கிறேன்
முழு
மனிதனாகவில்லை.
உனக்கோ,
முழுமைதான்
வழிகாட்டுகிறது.

வரலாறுகள்
வலுப்பெறகின்றன
உயிரினங்கள்
உயிர்ப்படைகின்றன.

இன்று
என்மனமும்
இருப்பெய்தவில்லை
முனைப்படைகிறது
முடிந்தவரை
நானும்...



கவிதை



த.சிவகுமாரன்

இணுவிலைச் சேர்ந்தவர். மானிப்பாய் ஆசிரியர் வள நிலைய முகாமையாளராகப் பணிபுரிந்து வருகிறார். நாடகத்துறையில் ஈடுபாடு கொண்ட இவர், நாடகம் நடிப்பதிலும் இயக்குவதிலும் சிறப்புப் பெற்றவர். அத்துடன் கவிதைகள் கட்டுரைகளையும் எழுதி வருகிறார்.



இலைப்பாறா இயந்திரங்கள்...

சிறுகதை



மிருசுவில் தமிழ்தாசன்

மிருசுவிலைப்பிறப்பிடமாகக் கொண்டவர். கணபதிப் பிள்ளை சிவலிங்கம் என்பது இவரது இயற்பெயர். 1978களில் எழுத ஆரம்பித்தவர். பெருமளவில் பத்திரிகைகள் முலமாகவே தனது எழுத்தாற்றலை வெளிப்படுத்தி வருகிறார். கவிதை, சிறுகதை, கட்டுரை, நாவல், நாடகம்எனப் பரந்துபட்டு எழுதி வருகிறார். சிறுகதைத் தொகுப்புக்கள் சிலவற்றையும் வெளியிட்டிருக்கிறார்.

பாலையடிப் பிள்ளையார் கோயில் மணி ஒலித்தோய்ந்து கொண்டது. அதிகாலை ஐந்து மணி. வேண்டுமானால் கடிகாரத்தில் நேரத்தைச் சரி செய்து கொள்ளலாம். வழக்கம்போல் படுக்கையைக் கலைத்துப் பரபரப்புடன் எழுந்தாள் நிர்மலா. தூக்கக் கலக்கத்தில் விழிகளிரண்டும் சொருக்கிக் கொண்டு போயின. இன்னும் ஒரு அரை மணி நேரமாவது உறங்கிவிட்டடெழுந்தால்...!

அப்படிநினைக்கலாமே தவிர செயற்படுத்தவே முடியாத வெறும் கற்பனை! அடுக்களைக்குள் அவசரமாக நுழைந்தாள். அடுப்பைப் பற்ற வைத்த போது எரிய மறுத்த விறகு சண்டித்தனம் செய்தது. காலை ஏழு மணிக்கு முன்பு உணவுதயாரிக்க வேண்டும். பள்ளி செல்லும் மூன்று பெண் குழந்தைகளுக்கும் நேரம் தவறாது உணவுதயாரித்துக்கொடுத்து அவர்களைப் பாடசாலைக்கு அனுப்பவேண்டிய பொறிய பொறுப்பு அவளின் கைகளில். அத்துடன் அலுவலகம் செல்லும் கணவன் விசாகனுக்குக் காலை உணவும் கொடுத்து மதிய உணவும் கட்டிக் கொடுத்து விட வேண்டும்.

"நிர்மலா! உங்கை என்னப்பா செய்யுறீர்! எங்கை கோப்பி!"

விசாகன் விடிந்தது விடிய முன்பு ஆரம்பித்து விட்டான். இனி இரவு பதினொரு மணிவரைக்கும் அவளை அழைத்து நச்சரித்துக் கொண்டே இருப்பான். அவனைப் பொறுத்த வரையில் அவளின்றி ஓர் அணுவும் அசையாது. குடும்பப் பொறுப்புக்கள் அத்தனையும் ஈவிரக்கமின்றி மனைவியின் தலையில் சுமத்திவிட்டு வெறுமனே ஒரு குடும்பத் தலைவனாகக் கிரீடம் சூட்டிவாழும் ஒரு கடற்கரைத் தாளங்காய் அவன்.

ஈர விறகுகளுடன் மல்லுக்கட்டிப் போராடி நெருப்போடு நெருப்பாக நின்று மாய்ந்தவளின் உடல் வியர்வையில் ஊறிப் பிசுபிசுத்தது. கணவனிடம் ஓடிச் சென்று கோப்பியைக் கொடுக்கும் வேளையில் தான் இன்னுமொரு விடயம் ஞாபகத்துக்கு வந்தது.

"ஐயையோ! அவற்றை 'ஷேர்ட்' அயன் பண்ணி வைக்க மறந்துபோனேன்"

துடித்துப் பதைத்து ஓடிப்போய் 'ஷேர்ட்'டைத் தேடி எடுப்பதற்குள், மாமியார்க் கிழவியின் அவசர அழைப்பு செவிகளில் நாராசம் பாய்ச்சியது. அழைப்பின் நோக்கம் புரிந்துவிட்டது. என்ன வேலை இருந்தாலும் அவைகளை எல்லாம் உதறித் தள்ளிவிட்டுக் கணவனுக்கக் கோப்பிகொடுக்கும் அந்தவேளை, தவறாது அவளுக்கும் கோப்பி கொடுத்தே ஆக வேண்டும். தவறினால் ஏகப்பட்ட முணுமுணுப்புக்களுக்கு முகம் கொடுக்க வேண்டிவரும்.

கடிகாரத்தைப் பார்த்தாள். செக்கு மாடுகளாகச் சுற்றிச் சுற்றிவந்த கடிகாரத்துக் கம்பிகளில் மணிக்கம்பி மெல்லவந்து ஆறு மணியில் நங்கூரம் பாய்ச்சியபடி நின்றது.

"இன்னும் முக்கால் மணித்தியாலம் தான் கிடக்குது. புட்டும் அவியாதாம். கடவுளே...!"

அறுந்துபோன பல்லி வாலாக மனம் துடித்துக் கொண்டிருந்தது. "அம்மா! இஞ்சை வந்து ரஜனியையும், தாரணியையும் ஒருக்கால் பாருங்கோ!"

பதினொரு வயதைத் தொட்டுக்கொண்டிருக்கும் மூத்த மகள் கஜனியின் அவசர அழைப்பு. விறுவிறென்று கிணற்றடியை நோக்கி விரைந்தாள் நிர்மலா.

"என்னடி ரஜனி! என்ன ராத்துப்படுறியளே! பள்ளிக்கு நேரம் போச்சுது. பேசாமல் கெதியாய் குளியுங்கோடி. தாரணிக் குட்டி! தலையை நனைச்சுப் போடாமல் குளிச்சிட்டுக் கெதியாய் வந்து சட்டையைப் போடுங்கோ!"

அதட்டல் ஒரு புறம் அரவணைப்பு மறு புறமாகச் சமாளித்துவிட்டுக் குசினிக்குள் காற்றாகப் பறந்து வந்தாள். பிட்டு எப்படியோ அவிந்து தான் விட்டது. இனிச் சாம்பார்! பொரியல்!... அது மட்டுமா! கணவனுக்கு மதிய உணவு தயாரித்துக் கட்டிக் கொடுக்க வேண்டும். பரபரப்பு இன்னமும் தீர்ந்த பாடில்லை.

"பிள்ளை நிர்மலா! எங்கை மோனை என்ரை மருத்துக் குளிசைப் போத்திலைக் காணயில்லை. ஒருக்கால் தேடி எடுத்துத் தா பிள்ளை!"

சற்றும் இங்கிதம் தெரியாது சிவபூசைக் கரடியாக மீண்டும் மாமியார் தொல்லை கொடுத்துக் கொண்டேயிருந்தாள்.

நிர்மலா பொறுமையுடன் தேடியெடுத்துக்கொடுத்துவிட்டாள். கொடுக்கத் தவறினால் கணவனிடம் இல்லாத பொல்லாததுகளைச் சொல்லிப் பற்றவைத்து விடும் மாமியாரின் சுபாவம் நிர்மலாவுக்குத் தெரியாத விஷயமல்ல.

விசாகனுக்குக் குடிப்பழக்கமோ வேறு எந்தத் துர்ப் பழக்கங்களோ கிடையவே கிடையாது. ஆனால் கோபம் மட்டும் மூக்கு நுனிக்குள்! மூலரோகமும் ஏதேன் மெல்லிதாக இருக்குமோ! என்ன இழவோ!

"தலையை இழுத்துப் பின்னிவிடுங்கோம்மா! நேரம் போகுது!"

சீப்பும் கையுமாக வந்து நின்றாள். மூத்தவள் கஜனி. அவளுக்கு மட்டுமா! ஒன்பது வயது ரஜனி! ஏழு வயதுக் கடைக்குட்டி தாரணி! அனைவருக்கும் தலை வாரி இழுத்து அலங்கரித்து பள்ளிச் சீருடைகளைச் சீராக அணிவித்துப் பள்ளிவரை நிர்மலாவே அழைத்துச் செல்ல வேண்டும். கிட்டத்தட்ட பதினைந்து நிமிட நேர நடைதூரம்.

அடுக்களைக்குள் ஏதோ எரிந்து நாற்றம் வீசியது.

"ஐயையோ! கத்தரிக்காய் பொரியல் எரியுது போலை!" அடுக்களைக்குள் அடியெடுத்து வைத்த கையோடு, "நிர்மலா! என்ன நான் கூப்பிட்டது கேக்கயில்லையோ!"

கணவனின் கோபக் கணல் அவளைச் சுட்டெரித்தது. எப்படியோ ஒரு தடவை முகத்தைக் காட்டி ஆடிய பாம்பைப் பெட்டிக்குள் அடைத்துவிட்டாள்.

"அம்மா! எனக்குப் புட்டைத் தீத்தி விடுங்கோ! இல்லாட்டில் சாப்பாடு வேண்டாம்."

கடைக்குட்டி அடம்பிடித்துக்கொண்டிருந்தது. கடிகாரத்தைப் பார்த்தாள் நிர்மலா. இன்னும் பத்து நிமிடங்களேயிருந்தன. ஓட்டமும் நடையுமாகப் போனால் தான் குறிப்பிட்ட நேரத்துக்குப் பாடசாலை செல்ல முடியும்.

"நேற்றைக்கும் 'லேற்றாய்' போனதுக்கு ஆரணி ரீச்சர் பேசினவா. இனிமேல் பிந்தி வந்தால் வகுப்புக்கை விட மாட்டவாம்."

கஜனி கடுக்காயில் பேதி கொடுத்தாள் நிர்மலாவுக்கு. பிள்ளைகளைப் பாடசாலைக்கு நிர்மலாவே அழைத்துச் செல்வது வழக்கம். பெண்பிள்ளைகளல்லவா! எந்தப் பற்றைக்குள் எந்தச் சுவிஸ் குமார் நிற்பானோ! வயது ஒன்றும் பொருட்டேயல்ல அவர்களுக்கு.

வித்தியாவுக்கு நடந்த துன்பியல் நாடகத்தை நிர்மலா இன்னமும் மறக்கவில்லை. அதுதான்போலும் இந்தப்

அதட்டல் ஒரு புறம் அரவணைப்பு மறு புறமாகச் சமாளித்துவிட்டுக் குசினிக்குள் காற்றாகப் பறந்து வந்தாள். பிட்டு எப்படியோ அவிந்து தான் விட்டது. இனிச் சாம்பார்! பொரியல்!... அது மட்டுமா! கணவனுக்கு மதிய உணவு தயாரித்துக் கட்டிக் கொடுக்க வேண்டும். பரபரப்பு இன்ன மும் தீர்ந்த பாடில்லை.

பலத்த பந்தோபஸ்துக்கள்.

"எங்கையப்பா! சாப்பாடு கட்டியாச்சுதே!"

எதுவித பொறுப்புணர்வுகளுமின்றிச் சாவகாசமாக அமர்ந்திருந்து பத்திரிகை படித்துக்கொண்டிருந்தான் விசாகன். மனைவியானவள் குடும்பப் பாரத்தைத் தனி ஒருத்தியாக நின்று சுமந்தே ஆக வேண்டும். சமையலுக்கும் மையலுக்கும் மற்றைய வீட்டுப் பணிகளுக்கு மென்று பிறந்தவளே பெண் எனப்படுவாள். சமத்துவம், சமஉரிமை, என்பவை களெல்லாம் வெறும் வாய் வீச்சுக்களே என்று நினைக்கும் ஆண் வர்க்கத்தினரில் விசாகனும் ஒருவன்.

அப்பாடா! ஒருவாறு கணவனுக்குரிய பணிவிடைகள் அத்தனையையும் முடித்து அவனை அலுவலக்துக்கும் அனுப்பியாயிற்று. இனியாவது சற்று ஆற அமர உட்கார்ந்து ஒருவாய் தேநீர் பருக ஆசைப்பட்டாள் நிர்மலா!

"என்ன பிள்ளை! புட்டே அவிச்சனி! எனக்குப் புட்டு வேண்டாம். செமிக்குது இல்லை. நாலு இடியப்பம் புளிஞ்சு நல்ல பாற்சொதியும் வைச்சுத்தா மேனை!" மீண்டும் தொல்லை கொடுக்கத் தொடங்கிவிட்டாள் மாமியார்.

"கடவுளே! உந்தக் குஞ்சு குருமனுகளையெல்லாம் துடிக்கப் பதைக்க எடுக்கிறாய். இந்த எண்பது வயதுக் கிழடு உன்ரை கண்ணுக்குத் தெரியவில்லையே?".

உறைப்பாகக் கடவுளுக்கு ஒரு 'டோஸ்' கொடுத்தாள் நிர்மலா. அவளும் தான் என்ன செய்வாள் பாவம். அதிகாலை ஐந்து மணிக்கு விழித்த நேரம் முதல் இரவு பதினொரு மணி வரைக்கும் கணவனுக்கு, பிள்ளைகளுக்கு, வீட்டுக்கு என்று நாயாகப் பேயாகப் பாடுபடுகின்றாள். யாருடைய ஒத்தாசைகளுமின்றித் தனி மரமாக நின்று இயந்திரத்தனமாக அவள் அல்லாடிக்கொண்டிருப்பது யாருக்கும் புரிவதில்லை. அவள் மட்டுமா! அவளைப்போல எத்தனை ஆயிரமாயிரம் பெண்கள் இந்தக் கேடுகெட்ட சமூகத்தில் கிடந்து உழன்று கொண்டிருக்கின்றனர்.

"ஆ! பார் இந்தப் பாழ்பட்ட கோழியள் முத்தத்தைப் படுத்தியிருக்கிற பாட்டைச் சீ!"

கையிலெடுத்த விளக்குமாற்றை மாமரத்தில் சாத்திவிட்டு மண் வெட்டியுடன் வந்தாள். நேரம் ஓடிக்கொண்டிருந்தது. அவளுக்காக இன்னும் எத்தனை பணிகள் காத்திருக்கின்றன.

நிர்மலாவுக்கு வயது ஒன்றும் அதிகமல்ல. கடந்த ஆவணியில் தான் முப்பத்து மூன்றாவது பிறந்த தினம் வந்துபோனது. ஆனால் அவளின் தோற்றத்தைப் பார்ப்பவர்கள் கண்ணை மூடிக்கொண்டு நாற்பதையே மதிப்பர்.

அளவு கடந்த வேலைப்பளுக்கள். உதவி ஒத்தாசைக்கு என்று யாருமில்லாத ஒற்றை மரம். பராயம் குறைந்த பிள்ளைகள். இந்த இலட்சணத்தில் அவளும் என்னதான் செய்வாள் பாவம்!

உடல்முழுவதும் புண்ணாக வலித்தது. காலையில் ஐந்து மணிக்கு உறக்கம் விட்டெழுந்தவள், இப்போது பதினொரு மணியாகியும் கூட ஒரு நிமிடம் குந்தியிருக்க முடியவில்லை. உடலசதியும் நித்திரைக்கலக்கமும் போட்டி போட்டுக் கொண்டு அவளைப் பிழிந்தெடுத்தன. விழிகள் தானாக மூடிச்செருகிய நிலையில் படுக்கையறைக் குள் நுழைந்தாள். நடைப்பிணமாக.



முகம் நிறைந்த புன்னகை, அகம் குளிர்ந்த பூரிப்பும் பார்ப்போரைப் பரவசப்படுத்தி மீண்டும் பார்க்க வைக்கும் மதாளித்த மேனி எழிலும், கலகலப்பான வேடிக்கைப் பேச்சுக்களும் எங்கேதான் ஓடி ஒளிந்து கொண்டனவோ!

"நேரம் பத்து மணியாய்ப் போச்சுது. இனி சந்தைக்குப் போய் மீன் வாங்கவேணும். மச்சத்தண்ணி இல்லாட்டில் ஒருத்தருக்கும் சோறு இறங்காது. பாவம்! பிள்ளையளும் பசியோடை வரப்போகுதுகள்."

கடமை உணர்வு பிடரியில் பிடித்துத் தள்ளிவிட மீண்டும் இயந்திரமயப் பட்டாள்.

மீன் முள்ளைப் பக்குவமாக ஆய்ந்தெடுத்துக் கறியை இதமாகச் சோற்றில் பிசைந்து கடைக்குட்டி தாரணிக்கு ஊட்டிக்கொண்டிருந்தாள்.

"அம்மா! எனக்கும் தீத்தி விடுங்கோ!" இரண்டாவது மகள் ஒன்பது வயதுடைய ரஜனியின் வேண்டுகோளிது.

"எட! ஒன்பது வயதுக் கிழவிக்கும் தீத்திவிட வேணுமோ ஆளைப்பாரன்"

செல்லமாகப் பொய்க் கோபம்கொண்டாலும் அவளுக்கும் அன்பாக ஊட்டிவிட்டாள். பிள்ளைகள் மூவரும் ரியூஷனுக்குப் புறப்படும் நோரம் அண்மித்துவிட்டது. கஜனி ஒரிடம். அவள் தன்னுடைய சிறிய சைக்கிளில் போய்க் கொள்வாள். அதிக தூரமில்லை.

"பிள்ளை கஜனி உயினேக்கை மண் மிசினுகள் வரும். கவனமாய்ப் போய் வரவேணும். இளையவர்களிருவருக்கும் தனித்தனி இடம். இருந்தாலும் அவர்களை நிர்மலா அழைத்துச் செல்வாள். மீண்டும் போய் அழைத்துவர வேண்டும். அந்தளவில் மாலை ஐந்தரை மணியாகிவிடும். கணவனும் அலுவலகப் பணி முடித்து வீடு திரும்பிவிடுவான்.

இன்று சற்று வேளைக்கே வந்துவிட்ட விசாகன் முகத்தை 'உம்'மென்று வைத்திருந்தான். நிர்மலாவுக்குச் சங்கதி புரிந்துவிட்டது. அவள் எங்கிருந்தால் என்ன?. என்ன நிலைமையிலிருந்தால்என்ன? வந்தவுடன் உடைகளை மாற்றுவதற்குமுன்பேசூடாகத்தேநீர்கொடுக்கவேண்டும். தவறிவிட்டால்கோபம்பொத்துக்கொண்டுவந்துவிடும்.

"பிள்ளையள்! எல்லாரும் போய் கால்முகத்தைக் கழுவி, சாமி கும்பிட்டிட்டு வந்து குழப்படியில்லாமல் படியுங்கோ. அம்மா இடியப்பம் அவிக்கப்போறன். ஏதேன் தெரியாட்டில் விளங்காட்டில் கூப்பிடுங்கோ! சரியே!"

இரவு ஏழு மணியானது சமையலறைக்குள் நுழைந்த நிர்மலா இரவு உணவுத் தயாரிப்புக்குத் தயாரானாள். பத்து நிமிடம் கூட ஆகியிருக்காது. மூத்தவள் கஜனி ஓடிவந்து அம்மாவின் கையைப் பிடித்தாள் நிர்மலாவுக்கு ஒன்றுமே புரியவில்லை.

"அம்மா! எனக்கொரு கட்டுரை எழுதித்தாருங்கோ! மேனகா ரீச்சர் சொல்லிவிட்டவா. தமிழ்த் தினப் போட்டியிலை என்னைப் பேச்சுக்கு எடுத்திருக்கினம். எழுதித் தாறியளே! இல்லாட்டில் ரீச்சர் அடிப்பா"

கெஞ்சினாள் கஜனி.

"சரியம்மா இப்ப நீ போய்ப்படி, நான் இரவைக்கு எழுதிப்போட்டுத் தாறன். இல்லாட்டிக் காலமை, வெள்ளண எழும்பி எழுதித் தாறன்."

"சரியம்மா இதிலை தலையங்கம் எழுதித் தந்திருக்கிறா ரீச்சர். கொப்பியை மேசையில் வைக்கிறன். மறக்காமல் எழுதித்தரவேனும்."

மீண்டும் கெஞ்சியது அந்தப் பிஞ்சு.

எப்படியும் எழுதிக்கொடுக்கத் தான் வேண்டும். இப்போது தலைக்கு மேல் வேலைகள். காலையில் இன்னும் கொஞ்சம் வேளைக்கு எழும்பினால் எழுதிக்கொடுக்கலாம்.

"அம்மா இந்தக் கணக்கை ஒருக்கா விளங்கப்படுத்தி விடுங்கோ"

ரஜனியின் வேண்டுகோளையடுத்து சமையல் வேலைகளை அப்படியே போட்டுவிட்டுக் கணக்குப் பாடம் சொல்லிக்கொடுத்தாள்.

"தாரணிக்குட்டி உதென்ன உந்த எழுத்து உறுப்பாய் எழுதப் பழக வேணும். சரி படியுங்கோ ஒருத்தரும் நித்திரையாகக் கூடாது. சாப்பிட்டுத்தான் படுக்கவேணும்."

நேரம் இரவு ஒன்பது மணியை நெருங்கி விட்டது. பிள்ளைகள் மூவரும் இரவுச் சாப்பாடு முடித்து உறங்கி விட்டனர். குசினிக்குள் நிர்மலாவுக்கு இன்னமும் வேலைகள் முடிந்தபாடில்லை. நாளை காலை உணவுக்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்து முடித்து நிம்மதி மூச்சுடன் வெளியே வந்தாள். பத்து மணியாகியும் விசாகன் தனியறையிலிருந்து இணையத்தில் ஏதோ நோன்டிக்கொண்டிருந்தான். மாமிக் கிழவி தொலைக் காட்சியில் "யாரடி நீ மோகினி" சீரியல் பார்த்துக்கொண்டிருப்பதைப் பார்க்க நிர்மலாவுக்குச் சிரிப்பாகிலும் மறுபுறம் எரிச்சலாகவுமிருந்தது. அவர்களிருவருக்கும் உணவு கொடுத்துத்தான் நிர்மலா சாப்பிடுவது வழக்கம். சரி அவர்கள் எழும்பும்வரைக்கும்சற்றுமுதுகைநிமிர்த்தலாம் என்றொரு ஆசை. உடம்பெல்லாம் புண்ணாக வலித்தது. காலையில் ஐந்து மணிக்கு உறக்கம் விட்டெழுந்தவள் இரவு பத்து மணியாகியும் ஒரு நிமிடம் நிம்மதியாகக் குந்தியிருக்க முடியவில்லை. கண்கள் உறக்கத்துக்காக அலைந்தன. தன்னை மறந்து விழிகளை மூடுவதும் திறப்பதுமாயிருந்தவள் பொத்தென வெறுந்தரையில் வீழ்ந்து படுத்தாள். கொஞ்ச நேரமென்றாலும் முதுகை நிமிர்த்தலாம்என்ற ஆசை தலைவிரித்தாடியது.

"ஐயோ கடவுளே தாரிணிக்குட்டியின்ரை பள்ளிக்கூட உடுப்பு சவுக்காரம் போட்டு உறைவச்சபடி கிடக்குது. தோய்க்கவேணும்."

கிணற்றடியை நோக்கி விரைந்து அதையும் முடித்தாயிற்று. கணவண், மாமியாருக்கும் சாப்பாடு கொடுத்தாயிற்று. எப்படியோ இரவுப்பாடு நிறைவேறிவிட்டது. விசாகன் படுக்கையறைக்குள் போய்விட்டான். நிர்மலா பாத்திரங்களைக் கழுவி வைத்து விட்டுத் தாங்க முடியாத உடல் அசதியில் கண்கள் செருகிக்கொண்டு போகப் படுக்கையறைக்குள் செல்லும் போது நள்ளிரவு பதினொரு மணியையும் கடந்துவிட்டது.

"இனியெண்டாலும் படுப்பம். காலமை இன்னும் ஒரு மணித்தியாலம் முந்தி எழும்பினால்தான் கஜனிக்குட்டியின்ரை கட்டுரையை எழுதி முடிக்கலாம்."

திட்டங்களைத் திடமாகத் தீட்டினாள் நிர்மலா.

கடவுளே எனக்கேனிந்த இயந்திர வாழ்க்கை கட்டினவனுக்குக் கட்டில் துணைக்கும், வேளாவேளைக்குச் சமைத்துப்போடவும், குடும்பச்சுமை தனி ஒருத்தியாய் நின்று மூச்சு முட்டச் சுமப்பதற்கும் தான் என் னைப்படைத்தாயா? ஏதோ ,பெண் ணுரிமை, சமத்துவம், சுதந்திரம் அது... இது...வெண்டு எழுதுகினம், மேடையளிலை முழங்குகினம்,

"கடவுளே எனக்கேனிந்த இயந்திர வாழ்க்கை கட்டினவனுக்குக் கட்டில் துணைக்கும், வேளாவேளைக்குச் சமைத்துப்போடவும், குடும்பச்சுமை தனி ஒருத்தியாய் நின்று மூச்சுமுட்டச் சுமப்பதற்கும் தான் என்னைப்படைத்தாயா? ஏதோ ,பெண்ணுரிமை, சமத்துவம், சுதந்திரம் அது... இது...வெண்டு எழுதுகினம், மேடையளிலை முழங்குகினம், ஆனால் என்னைப்போல் எத்தினை மனைவியள் அடக்கப்பட்டு முடக்கப்பட்டு அரங்கத்தில் ஆனந்தமாயும் அந்தரங்கத்தில் அழுத கண்ணீரோடையும் வாழுகினம். பெண்ணாய்ப் பிறக்கிறதே பாவம். அதிலும் என்னைப்போல பெண்கள் பிறக்கிறது மகாபாவம். கடவுளே மற்றப்பிறவியிலை என்டாலும் என்னைப் பெண்ணாய் படைச்சிடாத"

நிர்மலா விரக்தியின் உச்சத்துக்கே போய்விட்டாள். வாழ்க்கையே சூனியமாகிவிட்டது.

உடல்முழுவதும் புண்ணாக வலித்தது. காலையில் ஐந்து மணிக்கு உறக்கம் விட்டெழுந்தவள், இப்போது பதினொரு மணியாகியும் கூட ஒரு நிமிடம் குந்தியிருக்க முடியவில்லை. உடலசதியும் நித்திரைக்கலக்கமும் போட்டி போட்டுக் கொண்டு அவளைப் பிழிந்தெடுத்தன . விழிகள் தானாக மூடிச்செருகிய நிலையில் படுக்கைய றைக்குள் நுழைந்தாள். நடைப்பிணமாக.

ஏலவே அறைக்குள் நுழைந்து விட்ட கணவன் நிர்மலாவின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அவள் நுழைந்த கையோடு அவசர மாக 'லைட்'டை அணைத்தான். அவளின் இயந்திர வாழ்க்கைக்கு இப்போதும் முடிவு கிட்டவில்லை.

வைகறையில் துயிலெழுந்து அவசரமாக மகளின் கட்டுரைக் கொப்பியை எடுத்தாள். கட்டுரை எழுதுவதற் காக விரித்தாள். "மாதராய்ப் பிறப்பதற்கு மாதவம் செய்திடல் வேண்டும்." இதுதான் தலைப்பு. தலை சுற்றிக்கொண்டு வந்தது நிர்மலாவுக்கு.



கட்டுரை

தியர் கவிந்த சரிதையில் அழுத்திப் பதியும் நிழல்

'அப்பால் ஒரு நிலம்'



சி.ரமேஸ்

தமிழ்ப் படைப்பிலக்கிய வெளியில் ஆய்வுக் கட்டுரைகள் மூலம் அறியப்படுகிறார். கவிதைகள்சார் படைப்புக்கள் மீதான இவரது விமர்சனங்கள் கவனத்துக்குரியன. யாழ்.மகாஜனாக் கல்லூரியின்ஆசிரியர்.

"பண்பாட்டை உயர்த்துகின்ற விசையாகக் கலை இருக்க வேண்டும்"என்கிறார்குணாகவியழகன். அந்தஅடிப்படையில் குணா கவியழகனின்'நஞ்சுண்ட காடு', 'விட மேறிய கனவு' முதலான நாவல்களைக் கடந்து வெளி வந்த நாவலே 'அப்பால் ஒரு நிலம்'. இந்த மூன்று நாவல்களும் சொல்முறை, வடிவம், பேசுபொருள் முதலானவற்றால் நேர்த்தி மிக்க படைப்புக்களாக அமைந்துள்ளன. போர் என்பது இழிவானது. கசப்பானது. அழிவானது. போரற்ற வாழ்வுக்காகத் தமிழனுக்குஇந்தப்போரைக்கடந்தநிலம்தேவை.அந்தநிலத்துக்காகத் தம்மை அர்ப்பணிக்க முனைந்த போராளிகளின் வாழ்வு 'அப்பால் ஒரு நிலமாக' விரிகிறது.

போர் என்பது இழிவானது. கசப்பானது. அழிவானது. போரற்ற வாழ்வுக்காகத் தமிழனுக்கு இந்தப் போரைக் கடந்த நிலம் தேவை. அந்த நிலத்துக்காகத் தம்மை அர்ப்பணிக்க முனைந்த போராளிகளின் வாழ்வு

இது ஒரு புறமிருக்க இந்த மறவர்கள் அப்பால் ஒரு நிலத்தில் வாழ்ந்துள்ளார்கள். அவர்களின் வாழ்வு உயர்வானது. உன்னத இலட்சியங்களால் உருவாக்கப்பட்டது. இந்த இரண்டு பிரதிபலிப்பான்களும் ஒன்றிணைந்து அப்பால் உள்ள நிலத்தின் நினைவுகளக மற்றும்எண்ணப்பதிவாக, வரலாறாகநாவலில்கட்டுறுகிறது. இதன் விரிவே தலைப்பாக இருக்கிறது.

வோவுப் போராளிகளின் உன்னத பணி

ஈழத்தின் ஆனையிறவு, பரந்தன், கிளிநொச்சி, வன்னிக்களமுனைகளை அப்பட்டமாக வெளிப்படுத்தும் இந்த நாவல் வேவுகாரர்களின் வாழ்வை, உணர்வின் தளத்தில் சித்திரிக்கிறது. செங்கையாழியானின் 'சாம்பவி' வேவு புலிகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட முதல் ஈழத்து நாவல் என்றாலும் அதில் யதார்த்தம் இருக்கவில்லை. உணர்வின் கூர்மையை விடக் கதை சொல்லியின் கற்பனையே அதில் விஞ்சி நின்றது. குணா கவியழகனின் இந்த நாவல் சம்பவங்களின் வாயிலாக மக்களின், போராளிகளின் அனுபவங்களை உணர்வுத்தளத்தில்சித்திரிக்கிறது.

வேவுப் போராளி ஏனைய போராளிகளில் வித்தியாசமானவன். அவனின் சிந்தனை மற்றவர்களின் சிந்தனைகளைப் போலிருக்காது. அவன் தனித்துவமானவன். தனக்கென எல்லைகளை வகுத்துக் கொண்டவன். போருக்குப் பழக்கப்பட்டவன். துன் பங்களைச் சுமந்தவன்.

காதலை, காமத்தைக் கடந்து எதிர்காலத்தைச் சிந்திப்பவன். குடும்ப உறவுகளைக் கடந்து சிந்திப்பவன். தன்னலமற்றவன். தாயக வேட்கைமிக்கவன். இந்த உணர்வுகளின் வடிவமே நாவலில் வரும் மணி, வீரா என்ற போராளிகள். வீரனும், மணியும் வேவுப் போராளிகள்.

அவர்களின் தனிப்பட்ட உணர்வுகளிலிருந்து அவர்கள் வேவுப்போராளிகளாக எதிரியின் படைத்தளத்துக்குள் புகுந்து சிலநாள்கள் அங்குதாகம், பசி... என்ற பலவித கொடுமைகளைத் தாங்கி, மறைந்து மறைந்துவாழ்ந்துஒருபோரையேதிசை மாற்றி விடக் கூடிய மிக முக்கியமான தகவல்களைச் சேகரித்துக் கொண்டு திரும்புவதைப் பற்றியகதையேநாவலாகவிரிகிறது. நாவலை நகர்த்திச் செல்ல குணா கவியழகனின் இயல்பும், உணர்வும் கலந்த மொழிநடை கைகொடுக்கிறது.

வாசகனை நெருங்கும் போராட்டக் காலம்

வன்னியைக்கைப்பற்றிவடக்கை முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் பொருட்டு 'ஜெயசிக்குறு'எனும்பெரும்படைஎடுப்பு ஒன்று இலங்கை அரசால் முன்னெடுக்கப்படுகிறது. வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணத்தை நோக்கிநகரும்இந்தநடவடிக்கையில் கூட்டுப்படை முகாமாகக் கிளிநொச்சி முகாம் தொழில்படுகிறது. ஆகையால் அந்த முகாமைக் கைபற்றுவதன் மூலமே குறித்த நடவடிக்கையை முடிவுக்குக் கொண்டு வரலாம் என்பதை விடுதலைப்புலிகள் உணர்கிறார்கள். அந்த முகாம் எவ்வளவு விஸ்தீரணத்தைக் கொண்டது? முகாமின் இயங்குநிலை என்ன? முகாமுக்குள் எத்தனை படைவீரர்கள் உள்ளார்கள்? முகாமின்கட்டளைகள் எவ்வாறு செயலாக்கம் பெறுகின்றன? என்பவை பற்றிய தகவல்களை வேவுப் புலிகள் எவ்வாறு சேகரிக்கின்றனர் என்பதே இந்த நாவலின் கருப்பொருளாகும். இந்தப் பின்னணியில் விடுதலைப் புலிகளின் அன்றாட வாழ்க்கையில் நிகழும் தீவிரமான பயிற்சிமுறைகள், இயக்கச்செயற்பாடுகள், தந்திரோபாயமானபடைநகர்வுகள், இயக்கத்தினுடைய களவியூகங்கள், மற்றும்போரால் அலைக்கழிந்த அப்பாவி மக்களின் வாழ்க்கை முறை ஆகியவற்றை வாசகனுக்கு நெருக்கமான முறையில் காட்சிப்படுத்தும் நாவலாக அமைந்துவிடுகின்றது குணா.கவியழகனின் இந்த 'அப்பால்ஒருநிலம்'.

எதிர்மறைகளுக்குள் தனித்துத் தெரியும் 'நிலம்'.

புலிப் போராளிகளின் வாழ்க்கையைத் துல்லியமாகப் பதிவு செய்யும் இந்த நாவலில் ஆங்கிலத்தில் வெளிவரும் சண்டைப் படங்களில் சித்திரிக்கப்படும் போர் வீரர்களைப்போலவோ, அசகாய சூரர்களைப் போலவோ, நாடி நரம்பெல்லாம் தேசபக்தி புடைத்து, எதிரிகளை நிலைகுலையச் செய்யும் தென்னிந்தியப்படங்களின்வீராதிவீரர்களாகளைப் போலவோ அன்றி இயல்பான மனிதர்களாக விடுதலைப் புலிகளை உலவவிட்டிருக்கிறார்எழுத்தாளர்.

நாவலில் இடம்பெறும் வர்ணனைகளும் விவரணங்களும் கட்டுரைப் பாங்கில் அமைந்துள்ளபோதிலும் வாசிப்பதற்கு அதுசலிப்பைஏற்படுத்தவில்லை. மாறாகக் கதையோட்டத்தை நகர்த்தி செல்வதற்கும் இராணுவமுகாம், போராளிகளின் செயற்பாடுகள், அவர்களின் நடவடிக்கைகள் முதலானவற்றை விளங்கிக் கொள்வதற்குமே உதவுகின்றன. விடுதலைப்போராட்டம் முடிவுக்கு வந்ததன் பின்னர் எழுத்தாளர்களால் விடுதலைப் புலிகளைப்பற்றிய எதிர்மறையான செய்திகளே தமிழ் இலக்கியமாக அதிகம் விதைக்கப்பட்டுப்பரப்பப்பட்டுவருகின்ற சூழலில், இந்த நாவல் இரண்டு முக்கியமான செய்திகளைத்தொட்டுச் செல்கிறது.

ஒன்று, புலிகள் இயக்கத்துக்கும் மக்களுக்கும் இடையே இருந்த நெருக்கம். மற்றையது போரால் சிதைந்த மக்களின் வாழ்க்கையைச் சீர்படுத்துவதற்கு முறையான தொரு பாதுகாப்பாளர்களாக நின்று புலிகள் இயக்கம் காட்டிய அக்கறை.

இந்த நாவலில் வரும் இயக்கப் போராளிகள் இயக்கத்தில் சேர்ந்த வீரர்களின் குடும்பங்களைத் தங்களது குடும்பமாகவே கருதி அவர்களின் இன்ப, துன்பங்களில் பங்கெடுக்கின்றனர். போராளிகள் தம் முடைய சகவீரர்களின் வீடுகளுக்குச் சென்று வருவது அவர்களுடன் தோழமையுடன் உறவாடுவது என்பன இயல்பாகவே நாவலில்சித்திரிக்கப்படுகின்றன. அந்த வீரர்கள் போராளிகளின் வீடுகளுக்குச் சென்று வரும்போது போராளிகளின் குடும்பத்தினரும் தங்களது பிள்ளைகள் போலவே, புலிகள் அனைவரையும் நடாத்துகின்றனர். அந்தப் பிள்ளைகளுக்குத் தங்கள் உணவுகளைப் பங்கிட்டுக்கொடுக்கின்றனர்.

புலிகள் பெறும் சிறுவெற்றியைக் கூட மக்கள் அனைவரும் கொண்டாடிக் களிப்பது, போரால் இடம்பெயர்ந்தவர்களுக்கு நிலம் வழங்குதல், தொழில் வாய்ப்பு நல்குதல், குழந்தைகளுக்குப் படிக்க வசதி ஏற்படுத்திக் கொடுத்தல் ஆகியவற்றில் புலிகள் காட்டிய அக்கறை, இயக்கத்தில் இருந்த கட்டுப்பாடுகள், ஒழுக்க விதிகள் காலவளர்ச்சிப் போக்கில் படிப்படியான மாற்றம் பெறுவன ஆகியவை மிக அழகாகவும் உணர்வுபூர்வமாகவும்நாவலில்சித்திரிக்கப்பட்டிருக்கின்றன.

தியர் கவிந்த...

தொடர்ச்சி...

சமூகத்தில் விரவிக்கிடக்கும்
வதனாபோன்ற
தாய்மார்களின் சித்திரிப்பு

கிளிநொச்சிக் களமுனைக்குச் சென்று பார்க்கும் வேவு நடவடிக்கையின்போது போராளிகள் படும் அல்லல்களைக் குணாகவியழகன் உணர்வு பூர்வமாகவும் இதய சுத்தியோடும் விவரிக்கிறார். களமுனைகளும் போராளிகளின் தலைவர்கள் வகுக்கும் வியூகங்களும் குணா கவியழகன் மூளையின் செயல்திறன் கொண்டுபடைக்கப்பட்டாலும்வீரனின்தாயார் வதனா, மணியின் காதலி அருளினி முதலான பாத்திரங்கள் குணா கவியழகன் உணர்வின் மையத்தில் எழும் பாத்திரங்களே. வேவுக்குப் போகும் முன்பாகத் தனது தாயைச் சந்திக்க வரும் வீரா, தன்னுடைய தாயின் அன்புக்குள் கட்டுண்டுதன்னை இழக்கிறான். அவன் தங்கியிருக்கும் மூன்று நாள்களில் தாய் கஸ்டப்படக் கூடாது என நினைத்து அவளின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் சராசரி மகனாகச் செயற்படுகின்றான். இது வீராவின் வாழ்க்கையன்று. களத்தில் தம்மைக் காவு கொடுப்பதற்கு முன்பாகத் தாய் வீடு சென்று தம் இன்னுயிரை நீத்த சகல போராளிகளினதும் வாழ்க்கையைப் பிரதிபலிப்பதாக இருக்கிறது.

தாயுடைய நேசத்தின் ஆழ்ந்த சுளிப்பிலிருந்து விடுபட்டுக் களத்துக்குச் செல்ல முற்படும் தன் மகவுக்கு அந்த ஏழைத்தாய் கொடுக்கும் சிற்றாண்டிகள் அவளுடைய மகனுக்கு மட்டுமானதல்ல. அவன் முகாமில் தங்கியிருக்கும் ஏனைய போராளிகளுக்குமானவை என்பதை இந்த நவீனம் மக்களின் நுண்ணுணர்வுத் தடத்தில் விவரிக்கிறது. ஒரு போராளியின் தாய் ஒரு மகனுக்குச் சொந்தமானவள் அல்ல. எல்லாப் போராளிகளுக்கும் சொந்தமானவள். குணா வெளிப்படுத்தும் வதனா பாத்திரம் வன்னி மண்ணுக்குள் இன்றளவும் நம் கண்முன் உலாவும் உணர்வுபூர்வமான தாய்ப் பாத்திரம். கணவனையிழந்து தனது உறவுகளைப்பறிகொடுத்துக்காமத்துக்கும்சமூகத்துக்கும் இடையில் அல்லாடும் எத்தனையோ தாய்மார்கள் வதனாவைப்போல் உறவிழந்து அநாதையாய் நிர்க்கதியாய் நிற்கின்றனர்.

புலிகள் இயக்கம் நல்லதொரு
இராணுவ நிர்வாகம்

நாவல், எங்குமே தரித்து நிற்காமல் இயல்பாகவே முன்னேறுகிறது. இதனால் வழமையான நாவல்கள்போல் இந்த நாவலுக்கு அத்தியாயம் கிடையாது. சாதரண நதியைப்போலச் செல்லும் நாவல் வீராவும், மணியும் வேவு பார்க்கக் களமுனைக்குச் செல்லும் போது வளைந்து நெளிந்து செல்லும் ஆழமான சுழியாற்றைப்போல் வேகம் கொள்கிறது. வீரா எனும் சாகாச வீரனைப் பேசும் இந்த நாவல், விடுதலைப் புலிகள் சிறந்த நிர்வாகக் கட்டமைப்பையுடைய இயக்கமாகச் செயற்பட்டதையும் விளக்கி நிற்கிறது.

ஒழுங்கமைவுக்கமைய இயங்கும் கட்டளைப் படிநிலை, குறைந்த படைக்கருவிகளைக் கொண்டு எதிரிகளைத் தாக்கும் வியூகம், இலக்கை அடைவதில் புலிகள் காட்டிய உறுதி மற்றும் அதன் தீவிரம், நுட்பமான கூர்மையான மதிநுட்பம் நிறைந்த திட்டமிடல், வீணாக ஓர் உயிரிழப்பு நேர்ந்துவிடக் கூடாது என்பதில் இயக்கம் காட்டி நிற்கும் அக்கறை, உயிரிழந்தவர்களின் உடல்களை மீட்பதில் புலிகள் காட்டிய தீவிரம், உறுதியான மனோபாவம், ஒவ்வொரு படைப்பிரிவுக்கும்வழங்கப்பட்டசிறப்பான பயிற்சி, போரில் சாதித்துக் காட்டியவர்களுக்குக் கொடுக் கப்படுகின்ற மரியாதை, நோய்வாய்ப்பட்ட மற்றும் காயமடைந்த வீரர்களுக்கு இயக்கம் வழங்கிய மாற்றுப் பணிகள் என நாவலில் ஆங்காங்கே தொட்டுக் காட்டப்படும்செய்திகள், உலகின் சிறந்ததொரு இராணுவ, நிர்வாக அமைப்பாகப் புலிகள் இயக்கம் வளர்ந்திருந்ததைச் சுட்டிநிற்கிறது.

நீஜம் பேசும் ஒரு நாவல்

தவறுகள், குற்றங்கள் நிகழும்போது போராளிகள் தலைமையாளர்களால் தண்டிக்கப்படுவார். தமதுநிலை, அந்தஸ்துஇழந்துசகபோராளிகளால் கூட மதிக்கப்படாது நடாத்தப்படும் இந்தப் போராளிகள், இயக்கத்தின் மீது விசுவாசம் மிக்கவராகவும் தம் தலைமைத்துவத்தின் மீது பாசமுள்ளவராகவும் இருப்பர். இயக்கம் அவர்களைக் கண்டுகொள்ளாவிட்டாலும் அவரின் மனோநிலை இயக்கம் பற்றியதாகவே இருக்கும். இயக்கத்தில் பால்ராஜ் அவர்களின்மனோநிலையை ஒத்த ஒரு பாத்திரமாகவே ரோமியோ பாத்திரத்தைக் குணா கவியழகன் படைத்துள்ளார். போராட்ட வாழ்வுக்குத் தம்மை அர்ப்பணித்து நம் கண்முன்னே மாவீரர்களாக மடிந்த படைத்தளபதிகள் ஜெயம், தீபன் முதலானவர்களின் நிழல் விம்பமே சேரா, கில்மன்முதலானபாத்திரங்கள். போராட்டம் மீதும் தம் தலைவன் மீதும் தம் போராளிகளின் மீதும் அவர்கள் கொண்டிருந்த ஈடுபாடு என்பது மிகச் சாதரணமானதன்று.

அவர்களின் இலட்சியங்கள் உன்னதமானவை. தம் தாய் நிலத்தை உரம் கொள்ளச் செய்பவை. இந்தப் பாத்திரங்களின் உணர்வுகளை, அவர்கள் விடுதலைப் போராட்டத்தில் கொண்ட நம்பிக்கையை நுண்மையாகத் தீட்டும் அப்பால் ஒரு நிலம் வரலாற்றுத் தளத்தில் வைத்து நன்கு ஆராயப்படவேண்டிய நாவல் என்றால் அது மிகையில்லை.

போராளி ஒருவனின் இழப்பால் குடும்பம் மாத்திரம் துயரை அனுப்பவிப் பதில்லை. அவனோடு சேர்ந்தியங்கிய போராளிகளும் களமுனைகளை அண்மித்து வாழுகின்ற சகமனிதர்களும் அந்த இழப்பால் அல்லல்படுகின்றனர். ஒரு போராளியின் இழப்பு குடும்பத்தை மாத்திரமன்றி இயக்கத்தையும் பாதிக்கின்றது என்பதை இதயனின் இழப்பூடாக எழுத்தாளர் வெளிப்படுத்தி நிற்கிறார்.

இயக்க வாழ்வு என்பது இனிப்பானதல்ல. அது இனிப்பும் கசப்பும் நிறைந்த கூட்டுக்குடும்ப வாழ்வு. அந்த வாழ்வு றாகுலன், கவி, கோபி, மணி, வீரா முதலானவர்களின் முகாம் வாழ்வுக்கூடாகவெளிப்படுத்தப்படுகிறது. குணாகவியழகனின் மூளையால் எழுதப்பட்ட இந்தப் புனைவு ஈழத்தின் வரலாற்றுப் பதிவாக விளங்குகிறது. செய்நேர்த்திமிக்கமொழியானது அவருடைய உள்ளத்தின் உணர்வுகளுக்கும் போர்கிளர்த்தும் எண்ணங்களுக்கும் உருக்கொடுக்கிறது. ஈழத்தில் பேசப்படாததும் பேச அஞ்சும் விடயங்களைப் பேசும் இந்தப் புனைவு கடந்த கால வாழ்வின் பக்கங்களைப் புரட்டிப் படிக்கின்றது.

> போராளி ஒருவனின் இழப்பால் குடும்பம் மாத்திரம் துயரை அனுப்பவிப் பதில்லை. அவனோடு சேர்ந்தியங்கிய போராளிகளும் களமுனைகளை அண்மித்து வாழுகின்ற சகமனிதர்களும் அந்த இழப்பால் அல்லல் படுகின்றனர். ஒரு போராளியின் இழப்பு குடும்பத்தை மாத்திரமன்றி இயக்கத்தையும் பாதிக்கின்றது என்பதை இதயனின் இழப்பூடாக எழுத்தாளர் வெளிப்படுத்தி நிற்கிறார்.

கவிதை



யாழ்.பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானமானிப் பட்டத்தையும் குடிசன அபிவிருத்தியில் முதுகலை மாணிப் பட்டத்தையும் பெற்றவர். ஆசிரியராகப் பணியாற்றியவர். தற்போது யாழ்.மாநகர சபை ஆணையாளராக இருக்கிறார்.

த.ஜெயசீலன்



ஆட்டுக்கல், அம்மி தனில் அரைத்த
தோசைச் சம்பல்,
'திரிகை'யிலே பயறு திரித்துச் செய்த பலகாரம்,
'மாற்றுலக்கை' போட்டுரலில்
இடித்த அரிசிமா அப்பம்,
'சுளகில்' உமிபுடைத்து 'அரிக்கன் சட்டி'யில் சிறுகல்
கிளைந்துமண் பானையிலே
காய்ச்சி வடித்தசாதம்,
சட்டிகளில் சமைத்தகறி,
அவை காக்க வைத்த 'உறி',
மிஞ்சிய சோற்றில்...நீர் விட்டு
வெங்காயம்
பச்சைமிளகாய் கடித்து
பகிர்ந்த காலைப் பழஞ்சோறு.
உலையிறக்க முன்... வடித்த கஞ்சித் தெளிவு,
அதில்
அரைஅவிந்த அன்னமிட்டு அருந்து(ம்)ருசி,
மச்சத்துக் கூழோ தனி, மோர் மிளகாய் தயிர் வட
'ஆரதக்' கறிசோறு.
'சனி' நல்லெண்ணையில் ஊறி

கூடு பறக்க முழுகி... ஊர்ச் சாவல் வெட்டி
அரைத்துக் குழம்புவைத்து
வறை, சொதி, பொரியலோடு
வயிறு புடைக்க உண்ட விருந்து,
மாலைகளில்
கிட்டி, ஊஞ்சல், பாண்டி, கிளித்தட்டு எனமகிழ்வு,
இரண்டு தேங்காய் துருவி
'இரத்த வறுவலோடு'
இரவில் சுவைத்த குழல் புட்டு.
தினம் எந்த
வெயில் மழை எனினும்
விடிய...முதல் மாலை...ஈறாய்
துலா பட்டையோடு தோட்டத் துரவுமழைப்பு,
புகையிலைச் சுருட்டு,
போட்ட வெத்திலை, பாக்கு,
'பிளா'வில் உறுஞ்சிப் பிரமித்த ஊர்க்கள்ளு,
கதையளந்த திண்ணை,
கலந்த நிலாமுற்றம்,
நதிமூலம் தேடிநடந்த வயல் கடல்கள்,
தொற்றும்நோய் தொற்றாநோய் தொடாது...
ஆரோக்கியம்
பற்ற...நூறாண்டுக்குப் பாறாமல் நீண்ட...ஆயுள்.

'வெளியுலகம் புரியாத போதும்'
உறவு சுற்றம்
கனிந்து மகிழ்ந்து கலை.... இசையில்
நனைந்தடைந்த
நிம்மதிசேர் தூக்கம்,
திருவிழா தொடங்கிவிட்டால்
ஆச்சர்ய ஆன்மீகம் அந்நாளில் இரவிரவாய்
பேச்சோடு கூத்து, சின்னமேளம்
என மயங்கி
வாழ்ந்த பெருவாழ்வு... இவை விற்று(விட்டு)
"யாமும்...இவ் ஊரினது... மண்ணினது...
உருத்துடைய வம்ச...மைந்தர்
தாம்..." என்றோம்!
நம்முகத்தைக் காப்பமென்றோம்!
வாழ்கின்றோம்.

கட்டுரை



கலாநிதி
ஏ.என். கிருஷ்ணவேணி

வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்நுண்கலைத்துறைப்பேராசிரியராகவும், தலைவராகவும் இருந்தவர். சென்னைப் பல்கலைக் கழகத்தில் மெய்யியலில் உயர்நிலை ஆய்வுக்கான இராதகிருஷ்ணன் நிறுவனத்தில் இரண்டு முதுநிலைப் பட்டங்களையும் அதன் பின்னர் கலாநிதிப்பட்டத்தையும்பெற்றவர். இவரதுபல ஆய்வுக்கட்டுரைகள்சமயம், தத்துவம், கலை, அழகியல் எனும்பொருள்களில்இலங்கை, இந்தியா, மலேசியா ஆய்வேடுகளில் வெளிவந்துள்ளன.

தமிழர் அழகியலில் தொல்காப்பியம் பொருளதிகாரம்

அறிமுகம்

பண்டைத்தமிழர்பண்பாட்டுக்குவரைவிலக்கணம்வகுத்தது தொல்காப்பியம். நில இயற்கைக்கு ஏற்றவகையில்குறிஞ்சி, முல்லை மருதம், நெய்தல், பாலை என்ற ஐவகை நிலப்பிரிவுகளையும் அவற்றுக்கு ஐவகை ஒழுக்கங்களையும் கொண்டு வாழ்ந்தவர்கள் தமிழர்கள். நிலப் பிரிவுக்குஏற்றவகையில்தமதுவழிபாட்டுத்தெய்வங்களையும்அவர்கள் கொண்டிருந்தமைகுறிப்பிடத்தக்கது. பண்டைத்தமிழ்செந்நெறிஇலக்கியங்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்கள் இதை எமக்கு அறியத்தருவன. அத்தகைய இலக்கியங்கள்கூறும்விடயங்களின் அடிப்படையில்தமிழ்ப்பண்பாட்டுக்கு தொல்காப்பியம்இலக்கணம்வகுத்து அதைத் தெளிவுபடுத்தியுள்ளது.

தமிழ்இலக்கியவடிவங்கள்பற்றிச்சரியாகஅறிந்துகொள்வதற்கும் தொல்காப்பியம் இன்றியமையாதது. இது பண்டைய இலக்கிய அமைப்பை ஒருமுறைமையாக விவரிப்பதுடன் தமிழின் சிறப்பம்சங்களையும் உள்ளடக்கமாகக் கொண்டுள்ளது. பண்டைத்தமிழ் இலக்கியங்களை நோக்கும் ஒரு சிறந்த முறைமையைத்தீர்மானித்தது தொல்காப்பியமே.

தொல்காப்பியம் இன்றிச் சங்க இலக்கியங்களை நோக்குவது சிக்கலானதே. அத்தகைய தொல்காப்பியம், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம்என்றமூன்றுஅதிகாரங்களைக்கொண்டது. எழுத்து, சொல் அதிகாரங்கள்மொழியின்இலக்கணத்தைவிவரிக்க, பொருளதிகாரம் இலக்கியம், கவிதை, செய்யுள், அதன் உருவ உள்ளடக்கங்கள், அழகியல் அம்சங்கள் பற்றிப் பேசுகிறது.

இலக்கியத்துக்குப் பொருளாக மக்களது அக, புற வாழ்வைக் கொள்ளவேண்டும்என்றுகூறுவதுடன் அகவாழ்வுக்கு முக்கியத்துவம்கொடுத்துஅகப்பாடல்மரபுக்குஇலக்கணம்வகுத்துள் எமை சிறப்புக்குரியது. சங்கத்தமிழ் மக்கள் வாழ்ந்த வாழ்கையை சுவைத்தனுபவிப்பதற்கு தொல்காப்பியம் பொருளதிகாரமேவழிவகுத்தது. இற்றைவரைதமிழர்கலை, இலக்கியம், அழகியற்கொள்கைகளைத் தொல்காப்பியத்துடன் இணைத்துப் பார்க்கும் மரபே நம்மிடையே உண்டு. தொல்காப்பியம் தோன்றிய காலத்திலிருந்து மிக நீண்ட காலத்துக்குப் பின்னர் அதற்கு உரைகள் எழுதப்பட்டமையை நோக்குமிடத்து தொல்காப்பியத்தின் வகிபாகம் அறியப்படுகின்றது. மேலைத்தேய அழகியல் மரபில் அரிஸ்டோட்டிலின் கவிதையியல் முக்கியத்துவம் பெறுகிறது. அத்தகைய கவிதையியலோடு ஒப்பிட்டுநோக்கும்வகையில்தொல்காப்பியம்பொருளதிகாரம் சிறப்புடையது. அழகுபற்றிய தமிழர் சிந்தனைகளைத் தொல்காப்பியம்முறைமையியலுக்குட்பட்ட வகையில் எடுத்துரைப்பதைத் தொல்காப்பியம் தரும் விளக்கங்களுடாகஅறியலாம். இந்திய மரபில் வடமொழிஅழகியல் பற்றி அறியத்தருவதாகப் பரதரது நாட்டியசாஸ்திம் விளங்குவதுபோன்று தமிழர் மரபில் அத்தகையஇடத்தைத் தொல்காப்பியம் பொருளதிகாரமே கொண்டுள்ளது எனலாம். இதைத் தொல்காப்பியப் பொருளதிகார வைப்புமுறை விளக்குவதாக உள்ளது.

மக்களின் ஒழுக்கங்களின் அடிப்படையில் திணை பற்றிய கோட்பாட்டுக்கு முக்கியத்துவம் கொடுத்த தொல்காப்பியர் அகத்திணை இயல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல், உவமையியல், செய்யுளியல், மரபியல் என்று ஒன்பது இயல்களை வைப்புச் செய்துள்ளார். கலைகளில் சிறந்த கவிதைக்கலையைஅறிவதற்குச்செய்யுளியல்முக்கியத்துவம்பெறுகிறது. செய்யுளைமையப்படுத்திதொல்காப்பியர்பேசும்விடயங்களின் அடிப்படையில் தமிழர் அழகியல் சிந்தனைக்குத்தெளிவான விளக்கத்தைக் கொடுக்கலாம்.

தொல்காப்பியர் கூறும் செய்யுள்

கலைகளில் மிகத் தொன்மையும் சிறப்பும் உடையது கவிதைக் கலை இந்திய மரபிலும், மேலைத்தேய மரபிலும்கவிதையைஅடிப்படையாகக் கொண்டு அழகியற் கொள்கை விளக்கம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அரிஸ்டோட்டில்கவிதைக்கலையையேகலைவடிவங்களில் மிக உயர்ந்ததாகக் கொள்கிறார். ஜேர்மன் கலைக் கொள்கையாளரான பாம்காட்டனும் கவிதைக்கலையைஅடிப்படையாகக் கொண்டு அழகியற் கொள்கையைவிளக்கியுள்ளார். அரிஸ்டோட்டில், பிளேட்டோ, தொல்காப்பியர், பரதர், காளிதாசர் போன்றோர்கவிதையியல் ஆசான்களாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்திய அழகியல் வடமொழிக் கவிதையியலைஅடிப்படையாகக் கொண்டது. தமிழர் அழகியலும் தமிழ்க் கவிதையியல் அடிப்படையில்வளர்ந்துவந்துள்ளது. சங்கத்தமிழ்இலக்கியங்கள்மட்டுமன்றிக்காப்பியஇலக்கியங்கள், பக்திஇலக்கியங்கள் யாவும் பண்டைத்தமிழர் பண்பாட்டின் கவிதையியல் பற்றி அறிய உதவுகின்றன. தமிழர் மரபில் முத்தமிழ் கோட்பாடு முதன்மையானது. இயற்தமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் மூன்றும்சேர்ந்ததே முத்தமிழ்.

தொல்காப்பியம்பொருளதிகாரம்இந்தமூன்றுபற்றியும்அறிய உதவுகிறது.

■ ■ ■

இலக்கியம் என்பது மொழியை ஊடகமாகக் கொண்ட கலை வடிவம். அது ஆங்கிலத்தில்'literature'என்றுஅழைக்கப்படும். எழுத்தைஅடிப்படையாகக்கொண்டதுஎன்பதுஇதன்அர்த்தம். அத்தகைய இலக்கியம் மக்களது கருத்து வெளிப்பாடு, உணர்ச்சிவெளிப்பாட்டைஒருவகைஒழுங்கமைப்பில்வெளிப்படுத்தும்போது வாசகருக்கு இன்பம் பயப்பதாக உள்ளது. தமிழ்க்கவிதைப்பாரம்பரியத்தில்இலக்கியப்படைப்பு'செய்யுள்' என்றேகொள்ளப்பட்டது. 'செய்யுள்உருவாக்கம்'இந்தியமரபுக்கமையத் தமிழிலும் விதிமுறைகளான 'இலக்கண விதிகளாகவே' எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இலக்கியக் கோட்பாடு என்பது வெறும் கருத்து நிலைப்பட்ட ஒரு வெளிப்பாடு அல்ல. அது சமுகத்தில் மக்கள் இயங்கும் முறைமையைத் தெளிவுபடுத்துவதாகவும் மக்களது வாழ்க்கை பற்றிய ஒரு கண்ணோட்டத்தைத் தருவதாகவும் மனித அனுபவத்தின் வெளிப்பாடாகவும் அமைகிறது. சங்க இலக்கியங்கள் அழகுணர்ச்சியுடன் கூடிய ஆக்க இலக்கியங்களாக உள்ளன. சங்க இலக்கியங்களின்அடிப்படையில்தோன்றியஇலக்கியக்கோட்பாடுகளைத் தொல்காப்பியர் வெளிப்படுத்தி உள்ளார். அந்த வகையில்இலக்கியக்கோட்பாடுகள்சுவையுணர்வைத்தருவனவாகஉள்ளன. சுவைரசனையேகவிதைக்குஅழகூட்டுவது. சுவையை முழுமையாக ஒருவன் துய்க்கும்போது செய்யுள், கவிதைபரிபூரணத்தன்மையைப்பெறுகிறது. தொல்காப்பியர் கூறும் செய்யுள் என்பது கவிதை, பா, பாட்டு என்றே பொருள்படுகிறது. சொற்கள் ஓசை ஒழுங்குக்கேற்றவகையில் ஒழுங்குபடுத்தப்பட்டு ஆழமான உள்ளத்துணர்ச்சிகளைக் குறிப்பால் உணர்த்துவதாக அமைகிறது. உலகியல் வழக்கும் நாடக வழக்கும்கலந்த'புலநெறிவழக்கு'செய்யுள்என்றுசிறப்பித்துக் கூறப்படுவதிலிருந்துஅதன்சிறப்புத்தன்மைபெறப்படுகின்றது. செய்யுள் என்பது செய் உள் என்று பிரித்து நோக்கப்படும். இது ஒன்றைப் புதிதாகச் செய், உருவாக்கு என்ற அர்த்தத்தைக் கொண்டது. இதுவேகலைக்குரியபொதுஇலக்கணமும்ஆகும். உலகியல் வழக்கு என்னும் புறவய உண்மைகள் நாடக வழக்கு என்னும் அழகியல் உத்திகளின்வழி பாடல் சார்ந்த புலநெறிவழக்காக உள்ளன. இதை மேலும் விரித்துரைக்கும் போது தொல்காப்பியர் கூறும்புலநெறிவழக்கு 'புலமையாளர் வழக்கு'என்றுபொருள்படும்நிலையில்மேலும்அழகுணர்வை வெளிப்படுத்துவதாக உள்ளது.

அழகுஉணர்ச்சி, சுவையைவெளிப்படுத்தும்வகையில்செய்யுள்அமையவேண்டும். பிரக்ஞைபூர்வமாக, உணர்வுபூர்வமாக ஆக்கப்படும் நிலையில் அது சுவையுணர்வை உண்டுபண்ணும். கவிதையின்உணர்ச்சிஅம்சமேஅதன்சுவைக்குப் பிரதான காரணமாக அமைகிறது. புலமையாளர்கள் (புலவர்கள்) தாம்கண்டும், கேட்டும்அறிந்தவிடயங்களைச்சுவைபட எடுத்துரைக்கும் நிலையில் கேட்போர், வாசகரிடமும் அத்தகைய உணர்வைத் தோற்றுவிக்கும் இயல்புடையது.

கவிதையின் உணர்ச்சி அம்சம்

தொல்காப்பியர் செய்யுளாக்கம் பற்றிக் கூறுமிடத்து "'செய்யுள் செய்வார் மெய்ப்பாடு அதாவது பாவம் அல்லது உணர்ச்சி வெளிப்பாடு தோன்றச்செய்ய வேண்டும்" என்று வித்துரைப்பதைக் காணலாம். தொல்காப்பியர் செய்யுள் உறுப்புக்களுள் ஒன்றாக'மெய்ப்பாட்டைக்'கூறுவதுடன்அதற்கெனத்தனிஇயலையேவைப்புசெய்துள்ளார். தொல்காப்பியம்பொருளதிகாரம் ஆறாவது இயல்'மெய்ப்பாட்டியல்'

என்று அழைக்கப்படுகிறது. 'மெய்ப்பாடு' என்பது உள்ளத்து உணர்ச்சிகள்காரணமாகஉடலில்ஏற்படும்மாற்றங்கள்என்று நேர்பொருளிற்பயன்படுத்தப்படுகிறது. பாடல்களில்நிகழ்ச்சிக்குரியவர்களது பேச்சுக்களைக் கேட்போர் அவர் கூறிய பொருளைக் கண்ணெதிரிலே தோன்றப், புலப்பட அதனால் அவர் உணர்ச்சிவயத்தவராகவேஅவர்தம்உடலிலேசிலதோற்றங்கள், மாற்றங்கள் புலனாதல் ஆகும்.

"நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளிஉவகையென்ற
அப்பால் எட்டே மெய்ப்பாடென்ப"
(தொல்காப்பியம் மெய்பாட்டியல் சூத். 3)

என்று அடிப்படை மெய்ப்பாடுகள் எட்டு என்று கூறியுள்ளார். இவற்றுக்குமேலாகப்பல்வேறுஉணர்ச்சிகள்பற்றிமெய்ப்பாட்டியலின்சூத்திரங்களில்கூறியுள்ளமையும்கவனிக்கத்தக்கது. அகம், புறம் பற்றிப்பேசப்பட்டாலும் அகத்திணை மரபுக்கே தொல்காப்பியர்முதன்மைகொடுத்தமையைச்செய்யுளுக்குப் பொருளாகவரும்தகுதிப்பாடுஅன்பின்ஐந்திணைக்கேஉரியது என்பதை எடுத்துக் காட்டுவதிலிருந்து அறியலாம்.

"இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை"

அன்பின்ஐந்திணையாகியபுணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்ற ஐவகை உணரச்சிகளும் செய்யுளுக்குப் பொருளாக வரும் நிலையில் அறம், பொருள், இன்பம் ஆகிய பயனைக் கொடுப்பதாக அமையும்.

உணர்ச்சி வெளிப்பாட்டு முறைமையும் சுவையுணர்வும்

செய்யுளியலில் உணர்ச்சி அம்சம் மெய்ப்பாட்டியலை அடிப்படையாகக் கொண்டு விளக்கப்பட்டதை நோக்கினோம். அந்த உணர்ச்சிகள் எவ்வாறு வெளிப்படுத்தப்பட முடியும் என்பதை மெய்ப்பாட்டியலை அடுத்து வரும் உவமவியல் எடுத்துக் கூறுகின்றது. உவமைகளுள் உயர்ந்தது உள்ளுறை உவமை. அகப்பாடல் மரபில் முக்கியம் பெறுவது உள்ளுறை உவமை ஆகும். தொல்காப்பியத்தில் உவமை என்பது உள்ளுறை உவமை, ஏனை உவமை என இரண்டு வகைப்படுத்தப்படுகின்றது. உள்ளுறையுவமை திணையை (உணர்ச்சிகள், ஒழுக்கங்கள்) உணர்த்துவதற்குப் பயன்படுத்தப்படுவதுடன், கருப்பொருள் தெய்வம் நீங்கலாக ஏனையவற்றை இடமாகக் கொண்டு வரும் எனக் கூறியிருப்பதைக் காணலாம். அகத்துறைப் பாடல்களுக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியர் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்ற மூன்றும் பாடலுள்வரும்போதுதான்அந்தப்பாடல்சிறப்புப்



இரண்டு

கவிதை



முருகு

சரவணமுத்து முருகையா எனும் இயற்பெயர் கொண்ட இவர் கொழும்புத்துறையைச் சேர்ந்தவர். 1973முதல் கவிதை, சிறுகதை போன்றவற்றை எழுதுகிறார். 'ஊருக்கல்ல' என்ற சிறுகதைத் தொகுப்பையும் 'பாடிப் பறந்த குயில்கள்' என்ற இசைக் கலைஞர்கள் தொகுப்புநூலையும் வெளியிட்டுள்ளார்.

விலங்குகள் வெவகளென்று
விளக்[illegible] கடினமா
விலங்[illegible]வகளென்று
விளங்குவதும் [illegible]னமா?

கல்வியேதும் கற்றறியா
மானிடரும் விலங்குதான்!
கற்றதன்படி நின்றறியா
மானிடரும் விலங்குதான்!!

கடுகளவும் கலைஞானம்
இல்லாதவனும் விலங்குதான்!
கலைஞர்களை மதிக்குமெண்ணம்
இல்லாதவனும் விலங்குதான்!!

நீதிநியாயம் பற்றிச்சிறிதும்
எண்ணாதவனும் விலங்குதான்!
நீதிநியாயம் பற்றிச்சிறிதும்
அஞ்சாதவனும் விலங்குதான்!!

சட்டம் பற்றி அறிந்திராத
மனிதனுமோர் விலங்கன்றோ?
சட்டம்பற்றி அறிந்துகொள்ள
விரும்பாதவனும் விலங்கன்றோ?

சட்டத்தை மதித்து நடக்க
மற(று)ப்பவனும் விலங்கன்றோ?
சட்டத்தினை மதிக்காதவன்
கைகளிலே விலங்கன்றோ?

மனிதர்களை மனிதராக
மதிக்காதவனும் விலங்கன்றோ?
மனிதராக மதிப்பவரைத்
தடுப்பவனும் விலங்கன்றோ?

சீதனமாய் இலட்சங்களைக்
கேட்போரும் விலங்கடா!
சீதனமாய் இலட்சங்களைக்
கொடுப்போரும் விலங்கடா!!

பணத்துக்காகக் காதலதைத்
துறப்போரும் விலங்கடா!
பணத்துக்காகக் காதலினைத்
தடுப்போரும் விலங்கடா!!

பணத்தைப் போற்றித்தினமும்
துதிப்பவனும் விலங்கடா!
பணத்துக்காக நற்குணத்தை
இழப்பவனும் விலங்கடா!!

குறுக்குவழியில் பணத்தைச்சேர்க்க
முனைபவனும் விலங்குதான்!
குறுக்குவழியில் பணத்தைச்சேர்க்க
உதவுபவனும் விலங்குதான்!!

பணத்துக்காக உறவுகளைத்
து(ம)றப்பவனும் விலங்குதான்!
பணத்துக்காக உறவுகளை
மறுப்பவனும் விலங்குதான்!!

தம்பணியை நிறைவேற்றித்தர
லஞ்சம் பெறுபவன் விலங்கடா!
தம்பணியை நிறைவேற்றிப்பெற
லஞ்சம் தருபவனும் விலங்கடா!!

சூதாடித் தன்பணத்தை
இழப்பவனும் விலங்கன்றோ?
சூதாடிப் பணத்தைச் சேர்க்க
நினைப்பவனும் விலங்கன்றோ?

அடுத்தவரின் பணம்பொருளைக்
கவர்பவனும் விலங்கன்றோ?
அடுத்தவரின் உழைப்பதனைச்
சுரண்டுபவனும் விலங்கன்றோ?

பெற்றவரின் உள்ளம் வேக
நடக்குமெவரும் விலங்கன்றோ?
மற்றவரின் உள்ளம் நோக
நடக்குமெவரும் விலங்கன்றோ?

தஞ்சம்கேட்டு வருகின்றவரை
அணைக்காதவனும் விலங்கப்பா!
தஞ்சம்தந்து அணைத்தவரை
மறக்குமெவனும் விலங்கப்பா!!

கற்றவரின் நெஞ்சம்காய
நடக்குமெவனும் விலங்கப்பா!
உற்றவரின் நெஞ்சம்நோக
நடக்குமெவனும் விலங்கப்பா!!

பிறரின்துயரம் கண்டுஉள்ளடம்
துடிக்காதவனோர் விலங்கப்பா!
பிறரின் உயர்வைக் கண்டு உள்ளம்
துடிப்பவனுமோர் விலங்குதான்!!

உண்மையேசி வாழ்வதற்கு
மற(று)ப்பவனோர் விலங்குதான்!
உண்மையேசி வாழ்பவனைத்
தடுப்படுப்பனோர் விலங்குதான்!!

தன்னினத்தைத் தமிழ்மொழியை
மறப்பவனோர் விலங்குதான்!
தன்னினத்தைத் தமிழ்மொழியைச்
சிதைப்பவனோர் விலங்குதான்!!

பிறர்மதத்தை மதிக்காதவனும்
மானிடருள்ளொரு விலங்குதான்!
தனதுமதத்தைத் துதிக்காதவனும்
மானிடருள்ளொரு விலங்குதான்!!

போதைமிகுந்ததனால் பண்பிழந்து
நடப்பவனோர் விலங்கடா!
போதைமிகுந்ததனால் பாதையிலே
கிடப்பவனோர் விலங்கடா!!

மக்களுண்ணும் உணவுப்பொருளைப்
பதுக்குபவனோர் விலங்கடா!
மக்களுண்ணும் உணவுப்பொருளில்
கலப்படம்செய்பவனோர்விலங்கடா!!

அதிகவிலையில் பொருள்களினை
விற்பவனோர் விலங்கடா!
குறைந்தநிறையில் பொருட்களினை
விற்பவனோர் விலங்கடா!!

பழுதடைந்த பொருட்களினை
விற்பவனோர் விலங்கப்பா!
தரம்குறைந்த பொருட்களினை
விற்பவனும் விலங்கப்பா!!

நம்மினத்தின் பண்பாடெதையும்
மறப்பவனோர் விலங்கப்பா!
நம்மினத்தின் பண்பாடெதையும்
சிதைப்பவனோர் விலங்கப்பா!!

ஊரில் நல்லவை செய்வதற்கு
மறுப்பவனோர் விலங்கப்பா!
ஊரில்நல்லவை செய்வோரைத்
தடுப்பவனோர் விலங்கப்பா!!

நம்மிடையே விலங்கினங்கள்
இன்னும் பல வாழுதடா!
அவைகள் பற்றி இன்னும் விரிக்க
எனது கவிதை நீளுதடா!!

காட்டினிலே வாழ்பவையோ
நாலுகாலுள்ள விலங்கப்பா!
நாட்டினிலே வாழ்பவையோ
இரண்டுகாலுள்ள விலங்கப்பா!!

நாலுகாலுள்ள விலங்குகளால்
அச்சம் மிகவும் இல்லையடா!
இரண்டுகால்களுள்ள விலங்குகளால்
அச்சம் மிகவும் தொல்லையடா!!

விலங்குகள் பற்றி கவிதையிதைப்
படித்து நன்கு விளங்கிக்கொள்!
விலங்காக நீயும் வாழ்ந்திடாதே!
மனிதனாயென்றும் விளங்கிக்கொள்!!



தமிழர் அழகியலில் தொல்காப்பியம் பொருளதிகாரம்

பெறுவதாகக் கூறினார்.

"முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங்காலை முன்றிறந்தனவே
பாடலுட் பயின்றவை நாடுங்காலை"
(அகத்திணை, சூத்3)

முதற்பொருள், நிலம், பொழுது இரண்டையும் குறிக்கக்கருப்பொருள்தெய்வம், உணவு, மாமரம், புள், பறை, செய்தி, யாழின்பகுதிபோன்றவற்றைக்குறிக்கின்றது. இவற்றுள்தெய்வம் தவிர்ந்தஏனையவற்றைஇடமாகக்கொண்டு உள்ளுறைஉவமைஇடம்பெறும். உரிப்பொருள்எனப்படுவதுகுறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலைஎன்றஐவகைநிலங்களுக்கு முரிய ஐவகை ஒழுக்கங்களான புணர்தல், இருத்தல், ஊடல், இரங்கல், பிரிதல்என்றஐவகைக் காதல் உணர்ச்சிகளைக் குறித்து நிற்கின்றது. ஐவகைக் காதல் உணர்ச்சிகளும் கவிதைக்குப் பாடுபொருளாக வரும்போது அந்தஉணர்ச்சிகள்எவ்வாறுகேட்போர், வாசகரைச் சென்றடையும் என்பதே இங்கு வினாவாக உள்ளது. உணர்ச்சிகள் நேரடியாக வாக்கியங்கள்காட்டும்அர்த்தங்களால்வாசகரைச் சென்று சேர முடியாது. இதனால் பல்வேறு இலக்கிய உத்திகளைக் கையாள வேண்டிய தேவை தொல்காப்பியருக்கு ஏற்பட்டிருத்தல் வேண்டும். இந்த நிலையில் தம் ஆளுமையால்அகப்பொருட்புலப்பாட்டுக்காக உள்ளுறை உவமம், இறைச்சிப் பொருள் பற்றிக்கூறியிருத்தல்வேண்டும். மெய்ப்பாட்டியலில் உணர்ச்சி வெளிப்பாடுப்பற்றிப் பேசிய தொல்காப்பியர் அந்த உணர்ச்சிகளைக் கவிதையில்வெளிப்படுத்தும்முறைமையாக உள்ளுறையுவமை, இறைச்சிப்பொருள் பற்றிப் பேசுவதுடன் மெய்ப்பாட்டியலை அடுத்து உவமையியலை வைப்புச்செய்தமையைக்கவனிக்கலாம்.

■ ■ ■

சங்கத் தமிழ்ப் பாடல்கள் தனிப்பாடல்களாக இருந்தாலும் நாடகப்பாங்கைக் கொண்டதாகப் பல்வேறு கதாப்பாத்திரங்கள் தொழிற்படுவதைக் காணலாம். தலைவன், தலைவி, பாங்கன், தோழி, செவிலி, பார்ப்பான், அறிவர், பாணன், கூத்தன்போன்றபலகதாபாத்திரங்கள்கருத்துவெளிப்பாடு, தொடர்பாடலுடன் தொடர்புடையனவாக இருப்பதைக் காணலாம். அகப்பாடல் மரபில் அமையும் பேச்சு 'கூற்று' எனப்படும். அகம், களவு, கற்பு இயல்களில் கூற்றுக்குரிய மரபுகள் எடுத்துகூறப்பட்டுள்ளன. கூற்றுக்குரியவர் கேட்போர் பற்றிக் கூறுவதைக்காணலாம். இந்தஇடத்தில்தொல்காப்பியர் 'முன்னம்' என்ற விடயம் பற்றிப் பேசுகிறார். கூற்று நிகழ்த்துவோர், கூற்று நிகழ்த்துமிடத்து, கூற்றைக் கேட்போர் குறிப்பால் அர்த்தம் கொள்வது பற்றி விளக்கும் போதுதான் 'முன்னம்' பற்றிப் பேசுகிறார்.

குறிப்பாகப்பொருள்கொள்ளும்இலக்கியஉத்தியான 'முன்னம்'செய்யுள்உறுப்பாகக்கூறப்பட்டுள்ளது. இது உள்ளுறையுவமையுடன் தொடர்புடையதாக உள்ளதுடன், இதில் இருந்தே குறிப்பாகப் பொருள் கொள்ளும் இறைச்சிப்பொருள் தோன்றியது என்பதையும்அறியலாம். உள்ளுறையுவமை, இறைச்சி சமஸ்கிருதக் கவிதையியற் கொள்கையான 'துவனி'யுடன் ஒப்பிட்டு நோக்கத்தக்கவை.

■ ■ ■

துவனி என்பது வியங்கியார்த்தம் என்று அழைக்கப்படும். இதுகவிதையிலோஏனைய கலைகளிலிலோ சூசகமாக, குறிப்பாக அர்த்தத்தை வெளிப்படுத்துவது. இது கவிதைக்கு ஆத்மாவாக அதாவது உயிராக அமையுமிடத்து வாசகருக்கு, ரசிகருக்கு சுவை இன்பத்தைத் தருகிறது.

"செல்லாமை உண்டேல் எனக்குரை மற்று
நின்வல்வரவு இங்கு வாழ்வார்க்குரை"
(குறள் 1151)

தலைவன் தலைவியை விட்டுப்பிரிந்து தூர தேசம் செல்லும் நிலையில் அந்தப் பிரிவுத் துயரைத்தாங்கமுடியாதநிலையில்தலைவி, தோழியிடம்"தலைவன்செல்லவில்லைஎன்றால், எனக்குரை. அவன் போய் விரைவில் வருவான்என்றுகூறுவதாகஇருந்தால்இங்கு உயிரோடு இருப்பவர்களுக்கு உரை" என்று தலைவிகூறுவதைக்காணலாம். இங்குஒரு கணமும் தலைவனைப் பிரியாத தலைவியின் காதல் வைராக்கியம் குறிப்பாலு ணர்த்தப்படுகின்றது. பார்வையாளர், கேட்போர், வாசகரிடம் சுவையுணர்வை உண்டுபண்ணும்வகையில்உள்ளுறையுவமை, துவனி போன்ற எண்ணக்கருத்துக்கள் கவிதையியலில் முக்கியத்துவம் பெறுகின்றமை தமிழில் அழகியற் சிந்தனை வளர்ச்சி பற்றி அறிய உதவுகிறது.

மேற்குறிப்பிட்ட வகையில் சுவை உணர்வு பற்றியறியும்நிலையில்கலைநயப்பு, கலைரசனை பற்றிய விளக்கங்கள் முக்கியத்துவம் பெறுவதைக் காணலாம் இந்த நிலையில் ரசிகர்கள், சுவைஞர்கள், நுகர்வோர், வாசகர்களது தகுதிப்பாடு பற்றி அழகியல் மரபு எத்தகைய கருத்துக்களை முன்வைக்கிறது என நோக்குவதும் அவசியமானது. ரசிகர்கள் இன்றி கலைப்படைப்புக்கள் துலக்கமடைய முடியாது.

தமிழர் மரபில் ரசிகர்கள் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்து முதன்மை பெறுகிறது. "தமதுகண்ணாலும்செவியாலும்தாமாகவே ஒன்றைஅறியும்ஆற்றலுடையவர்களேசெய்யுள்களில் மிகநுட்பமாகப்புலப்படுத்தப்ப டுத்தப்படும் மெய்ப்பாடுகளை, உணர்ச்சிகளை அறிந்து உணர்ந்து அனுபவிக்கும் ஆற்றல் உடையவர்கள்" இவ்வாறு கூறப்படும் விளக்கம், ரசிகர்கள் தகுதிப்பாடு உடையவர்களாக இருக்கவேண்டும்என்பதைத்தெளிவுபடுத்துகிறது.

முடிவுரை

தமிழர் கலை, அழகியலில் தொல்காப்பியம் பொருளதிகாரம் பிரதான இடத்தைப் பெறுகிறது. தமிழர்அழகியற்சிந்தனைபற்றியதோற்றம் வளர்ச்சியில் தொல்காப்பியத்துக்குத் தனித்துவமானஇடம்உண்டு. தமிழர்கலை, பண்பாட்டைப் பொறுத்தமட்டில் தொல்காப்பியம்கூறும்கருத்துக்களின்அடிப்படையிலேயே அவற்றுக்கு விளக்கங்களைத் தரமுடியும்.

நேர்காணல்



உளமருத்துவ நிபுணர் சா. சிவயோகன். யாழ்போதனா வைத்தியசாலை.

"தெரிவுக்கான சாவி எம்மிடம் தானே இருக்கிறது"

வணக்கம் டொக்ரர். ஊடகங்களோடு அதிகம் உறவாடாத உங்களை நேர்காணும் சந்தர்ப்பம் கிடைத்தது மகிழ்ச்சியாக இருக்கின்றது. அதுவும் குறுகியகால அறிவித்தலோடு நீங்கள் எங்களுடன் செலவழித்த, செலவழிக்கப்போகும் நேரத்துக்காக...

'நன்றி சொல்லப் போகிறீர்களா? தேவையில்லை. பேட்டி காண்பவர்களாக உங்களைச் சந்திப்பது சுவாரசியமாக இருக்கின்றது. இந்தப் பேட்டி உங்களுக்கும் எனக்கும் மாத்திரமல்லாது வாசகர்களுக்கும் சில தகவல்களையும், அனுபவங்களையும் கொடுக்குமாறு பார்த்துக் கொள்வதோடு, அவர்களது மனங்களில் சில கேள்விகளை எழுப்புமாறும் பார்த்துக் கொள்ளுங்கள்' (சிரிக்கிறார்).

டொக்ரர். உளமருத்துவ நிபுணர் என்ற அடையாளத்தின் பின்புலம் பற்றி...

அப்படியொரு பின்புலமும் எனக்கு இருக்கவில்லை. என்றாலும், நான் அதற்குள் உள்ளீர்க்கப்பட்டமை பற்றிக் கதைக்கலாம் எனக் கருதுகின்றேன்.

எனது தந்தையார் ஒரு கணித ஆசிரியர். தாயார் வீட்டுப்பெண்ணாக, வீட்டுத் தலைவியாகத் தனது வாழ்க்கையைக் கொண்டு நடத்தி அமைதி கண்டவர். பொருளாதாரத்தில் எமது குடும்பம் ஒரு கீழ் மத்தியதர வர்க்கத்தைச் சார்ந்திருந்தது. மூன்று ஆண்பிள்ளைகளில் மூத்தவனானேன். மீசாலைக் கிராமச்சூழலில் எமது வாழ்க்கை தொடங்கியது. பின்னர் அது எங்கெல்லாமோ சென்றது. எனது ஆரம்பக் கல்வி பொன்னாவளிக் கிராமத்தில் தொடங்கியது. பின்னர் அது சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு மாறியது. சாதாரண தரம் வரை அங்கு கல்வி கற்றதன் பின்னர் உயர்தரக் கல்விக்காக நான் யாழ். பரியோவான் கல்லூரியில் சேர்க்கப்பட்டேன். பின்பு அங்கிருந்தே பல்கலைக் கழகத்துக்குள் நுழைந்தேன்.

எனது பெரிய தகப்பனாரின் விருப்பப்படியே நான் மருத்துவத் துறையைத் தேர்ந்தெடுத்தேன். மருத்துவப் படிப்பின் ஆரம்பம் முதலே இயல்பாகவும், அந்தக் காலப் பகுதியில் நிலவிய அரசியல், சமூக, பொருளாதார அசைவியக்கங்களாலும் நான் சமூகம் சார்ந்த விடயங்களுக்குமுன்னுரிமைகொடுக்கத்தொடங்கினேன்.

மருத்துவபீட மாணவனாக இருந்தவேளையில் என்னை அதிகம் ஈர்த்த துறைகளுள் ஒன்றாக சமுதாய மருத்துவத் துறை இருந்தது. அந்தத் துறையில் என்னுடைய பெயரோடிருந்த ஓர் ஆசிரியர், அவர் இப்போது ஒரு பேராசிரியர், என்னை ஆகர்ஷித்துக் கொண்ட ஒருவராக இருந்தார். ஆயினும் எமது பல ஆசிரியர்களுக்கு நடந்ததைப்போலவே 'சண்டை' அவரையும் யாழ்ப்பாணத்தை விட்டுத் துரத்திற்று.

பின்பு உளமருத்துவத்துறையில் கற்கின்றபோது பேராசிரியர் தயா சோமசுந்தரத்தின் அறிமுகம் கிடைத்தது. நோயாளர்களுடனும், மாணவர்களுடனுமான அவரது அணுகுமுறை, உளமருத்துவத் துறைமீது ஓர் ஈர்ப்பை ஏற்படுத்தியது. சமூகத்தோடும் உளவியலோடுமான அவரது ஊடாட்டங்கள் பிரமிப்பை ஏற்படுத்தின. அந்தவேளை உளவளத் துணை சார்ந்து வணபிதா டேமியன் அவர்கள் நடத்திய வகுப்புக்கள் என்னில் ஒரு மாற்றத்தை உருவாக்கின.

அத்தோடு அந்தக் காலத்தில் என்னிடம் இயல்பாகவே பிரச்சினைகளை அணுகுகின்ற தன்மை, வித்தியாசமான முறையில் சிந்திக்கும் இயல்பு போன்றன இருந்து வந்திருக்கின்றன என்பதை நான் இப்பொழுது உணர்கின்றேன். உதாரணமாக, படிக்கும் காலத்தில் எனது நட்பு வட்டத்தில் இருந்த நண்பர்கள் தங்களது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் தீர்வுகளைக் காண்பதற்கும் என என்னை நாடிவருவார்கள். யோசனை கேட்பார்கள். பின்பு, என்னை உளமருத்துவத் துறையையே படிக்குமாறு ஆலோசனையும் கூறுவார்கள். இவற்றோடு அவ்வேளை எனக்கிருந்த சிந்தனைப் பாங்கும், மற்றவர்கள் பிரவேசிக்கத் தயங்கும் வழிகளில் பிரவேசித்துப் பார்க்கும் ஆர்வமும் உளமருத்துவத் துறையைத் தெரிவுசெய்யலாமா? என்ற எண்ணத்தை என்னுள் உருவாக்கின.

ஆயினும், மருத்துவ பீடத்தில் இறுதிப்பரீட்சையை எடுக்கும் வரை எனக்குள் உளமருத்துவப் பிரிவைத் தெரிவு செய்வது பற்றிய

நேர்கண்டவர்கள்



நா. நவராஜ்

கொழும்புத் துறையைச் சேர்ந்தவர். உளவளத்துணையாளராகக் கடமை புரிகின்றார். நாடகம், இலக்கியம், உளவியல், ஆன்மிக சொற்பொழிவு போன்ற பல துறைகளில் ஈடுபாட்டுடன் செயற்பட்டு வருகிறார். கட்டுரைகள், மரபு சார்ந்த கவிதைகள் போன்றவற்றையும் எழுதி வருகின்றார்.



ந. ஞானசூரியர்

இணுவிலைச் சொந்த ஊராகக் கொண்ட இவர், உளமருத்துவ சமூக சேவையாளராகக் கடமை புரிகின்றார். ஒளிப்படக் கலைஞராகவும் உள்ள இவர், கவிதைகள், கட்டுரைகள் போன்றவற்றையும் எழுதி வருகிறார்.

உறுதியான முடிவு இருக்கவில்லை. பரீட்சைகள் முடிவடைந்ததன் பின்னர், உள்ளகப்பயிற்சிக்குமுன்னராகஉளமருத்துவத் துறையில் தற்காலிகமாகப் பணியாற்றும் வாய்ப்பு ஏற்பட்டது. அந்த வேளையில் முதன்முதலாகப் பேராசிரியர் தயா சோமசுந்தரத்திடம் எனது ஆளுமைக்கு இந்தத் துறை பொருத்தமானதாக இருக்குமா? இதைநான்தெரிவுசெய்யலாமா? என ஆலோசனை கேட்டேன். அவர் 'பிரச்சினையில்லை சமாளிப்பீர்கள் என நம்புகின்றேன்' என என்னை இந்தத் துறைமீது ஆற்றுப்படுத்தினார்.

நான் இன்னுமொரு விடயத்தையும் குறிப்பிட்டாக வேண்டும். மருத்துவபீட மாணவராக இருக்கின்ற காலங்களிலேயே எனக்குக் கலைஞர்களுடனான தொடர்பும், குறிப்பாக நாடகத்துறை சார்ந்த, இசை சார்ந்த பரிச்சயங்களும் விருப்பங்களும் இருந்தன. இந்தத் துறைகளோடு நிறைய வாசித்தல், எழுதுதல் போன்றவற்றையும் தொடர்ந்து வளர்த்துச் செல்லவும், முன்னெடுக்கவும் விரும்பினேன். அதற்கமைவாக அதிகம் பளுவில்லாத, இலகுவாக வேலைசெய்யக் கூடிய துறையொன்றைத் தெரிவு செய்ய நினைத்தேன். உளமருத்துவத் துறை அவ்வாறான ஒரு துறையென்றே அவ்வேளை நினைத்திருந்தேன். இன்று நிலைமை தலைகீழாக மாறிவிட்டது! (சிரிக்கிறார்).

உளமருத்துவத் துறையில் உங்களது வளர்ச்சி மற்றும் அனுபவம் என்பன பற்றிக் கூறுங்களேன்?

உளமருத்துவத் துறையில் நான் 1994இலிருந்துபேராசிரியர்தயாசோமசுந்தரம், உளமருத்துவ நிபுணர் செல்வரத்தினம் போன்றவர்களின் கீழ்ப் பணியாற்றத் தொடங்கினேன். யாழ்ப்பாணத்தில் 1995ஆம் ஆண்டு ஏற்பட்ட இடப்பெயர்வைத் தொடர்ந்து பேராசிரியர் தயா சோமசுந்தரம் கம்போடியாவுக்குச் சென்றுவிட்டார். அந்த வேளையில் உளமருத்துவ நிபுணர் செல்வரத்தினம் இருந்தும் அவரது இயலாமைகளால் இல்லாதவர் போலவே நான் உணர்ந்தேன். அதன்பின்னரான சிலவருடங்களுக்கு எனக்குத் துறைசார் நிபுணர் ஒருவரின் மேற்பார்வை கிடைக்காமல் போயிற்று. திடீரெனக் கண்ணைக் கட்டிக் காட்டில்விட்டதுபோல் உணர்ந்தேன். படிப்படியாகப் பல விடயங்களை முயன்று தவறுதல் முறை மூலம் கற்றுக்கொண்டேன். அந்தவேளை யாழ்ப்பாணத்தில் இருந்த பொது மருத்துவ நிபுணர்கள் பலபேர் எனக்கு மிகவும் ஆதரவாக இருந்ததோடு வழிகாட்டிகளாகவும் திகழ்ந்தார்கள்.

1998இல் பேராசிரியர் மீள வந்தார். பொருத்தமான மேற்பார்வை மற்றும் வழிகாட்டுதல்களைத் தந்துதவினார். அந்தவேளை அவர் உளசமூகம் எனும் கருத்து நிலையை அறிமுகப்படுத்தினார். தனிமனிதப் பிரச்சினைகளோடு பணியாற்றுவது மட்டும் போதாது பரந்துபட்டுச் சமுதாயத்தோடு பணியாற்ற வேண்டியதன் அவசியம் பற்றி விளக்கினார். வைத்தியசாலையில் மட்டும் இருந்த எமது பணி அதற்கு வெளியேயும் நீட்சி பெற்றது.

பேராசிரியரோடு சேர்ந்து இயங்கிய தருணங்கள் என்னைப் பல வழிகளில் வளர்த்தெடுக்க உதவின. உளமருத்துவத் துறை சார்ந்த மேற்படிப்பிலும் நான் பெரும்பாலான பொழுதுகளைப் பேராசிரியரோடேயே செலவழித்தேன். அந்தக் காலப்பகுதியில் பேராசிரியரோடு சேர்ந்து ஆய்வுகள் செய்வதற்கும், துறை சார்ந்து எழுதுவதற்கும் பழக முடிந்தது. அவருடன் சேர்ந்து உளமருத்துவம் மற்றும் உளநலம் சார்ந்த நூல்களை வெளியிட்டோம். (தமிழர் சமுதாயத்தில் உளநலம், முதுமை, சிறுவர் உளநலம்). பேராசிரியரிடம் ஓர் இயல்பு உண்டு. அவர் தன்னை நோக்கி வருபவர்களைத் தட்டிக் கொடுத்து வளர்த்தெடுப்பார். அதற்கும் மேலாக, உடனடியாகவே அவர்களுக்குரிய சுதந்திரத்தையும்பொறுப்பையும்கொடுத்துவிடுவார். இன்;று என்னால் பரந்துபட்டுச் சிந்திப்பதற்கும், விடயங்களை விமர்சனப் பாங்காக அணுகுவதற்கும், துறைசார்ந்து எழுதுவதற்கும், காரியங்களைத் தற்துணிவோடு ஆற்றுவதற்கும் ஓரளவுக்கேனும் முடிகிற தென்றால் அது அவரிடம் இருந்துகற்றுக்கொண்டதே.

பேராசிரியரின் வழிகாட்டலில் உளநலத்துறையில் பல்துறைசார் அணுகுமுறைமையைக் கற்றுக் கொள்ள முடிந்தது. உளமருத்துவத் துறையில் பணியாற்றுவதற்கான பல்துறைசார் சிகிச்சைக்குழு ஒன்றை நாம் 2000ஆம் ஆண்டில் தெல்லிப்பழை வைத்தியசாலையில் உளநலசங்கத்தின் அனுசரணையோடு உருவாக்கினோம். சிலவருடங்களில் நான் துறைசார் பயிற்சிகளைப் பெறுவதற்காக அவுஸ்திரேலியாவுக்குச் செல்ல வேண்டி வந்தது. 2004இல் அங்கிருந்து மீண்டும் வந்தேன். உளமருத்துவநிபுணராகப்பணியாற்றத் தொடங்கினேன். வந்த சில மாதங்களிலேயே சுனாமி வந்தது. சுனாமி பல அழிவுகளை ஏற்படுத்தினாலும், அது இலங்கையில் உளசமூக வேலைகளுக்கான ஒரு பெரிய களத்தைத் திறந்து விட்டது. பல்வேறு நிறுவனங்கள், பல்வேறுஅணுகுமுறைகள், பல்வேறுநிபுணர்களுடனானசந்திப்புகள், பல்வேறுபகுதிகளில் வேலை செய்யும் அனுபவம், அரச சார்பற்ற நிறுவனங்களோடு இணைந்து பணியாற்றுதல் மற்றும் அவர்களின் சொல்விளையாட்டுக்களைக் கற்றுக் கொள்ளல் என அது உளமருத்துவத் துறையிலிருந்து சற்று விலகிய உளசமூகப் பரப்பில் அறிவுகளையும் அனுபவங்களையும் தந்துஉதவிற்று.

ஆயினும், 'சண்டை' தொடர்ந்து கொண்டிருந்தது. அதன் எதிர்விளைவுகள் காரணமாக 2006 ஆம் ஆண்டளவில் பேராசிரியர் மீண்டும் வெளியேறியனார். நான் தனியனானேன். முயன்று தவறுதல்களுக்கும், தொடர் கற்றலுக்கும் அது களம் அமைத்துத் தந்தது.

நான் விரும்பித் தெரிவு செய்த துறையொன்றில் எனக்குத் தரப்பட்டிருந்த பொறுப்புகளை மனத்திருப்தி வருமாறு நிறைவேற்று வதற்கு நிறையப் பாடுகள் படவேண்டியிருந்தது.

ஒருவகையில் தனித்து விடப்பட்ட இந்தக்காலத்தைநான்கடவுள்தந்தசந்தர்ப்பமாகவே கருதுகிறேன். எனது ஆளுமையைக் கட்டமைக்கும் வெளியாக, அதுஎனக்குப்பயன்பட்டது.சுயமாகவும் ஆணித்தரமாகவும் சிந்தித்தல், முடிவுகளை எடுத்தல், செயற்படுத்தல் என அது என்னைச் செதுக்கியது. பல்வேறு அறிஞர்கள், இலங்கையின் ஏனைய பகுதியில் பணியாற்றும் துறைசார் நிபுணர்களின் பழக்கமும், பரிச்சயமும் ஏற்படுவதற்கு அது வழிகோலிற்று. அவர்களுடன் ஊடாடியது பல்கோணப் பரிமாணத்தை ஏற்படுத்திற்று. இவர்களுள்உளமருத்துவநிபுணர்கணேசன் முக்கியமானவர். விமர்சனப்பாங்கான பின்னூட்டல்களைத் தருவதில் அவர் வல்லவர். குறிப்பாகநோயாளர்சார்ந்து சிந்திக்கும் எண்ணக்கரு வளர்ச்சிக்கு உளமருத்துவர் கணேசனின் பங்கு அளப்பெரியது.

தனித்திருந்து பணியாற்றிய இந்தக் காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தின் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராகக் கடைமையாற்றிய வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் அவர்கள் எனக்கு மிகுந்த பக்கபலமாக இருந்தார். உளமருத்துவத் துறையுடன் தொடர்பான பல சேவைகளின் தோற்றத்துக்கும், விரிவாக்கத்துக்கும்அவரே தூண்டியாகவும், ஊக்கியாகவும் தொழிற்பட்டார். யாழ்ப்பாணத்தில் காணப்படும் உளமருத்துவ சேவை வழங்கல்கள் இலங்கையில் உள்ள சிறந்த மாதிரிகளுள் ஒன்றாகக் காணப்படுவதற்கு அவரது ஆதரவே முக்கிய மானதாகஇருந்தது. உளநலசிகிச்சைப் பிரிவுகளைப் படிப்படியாகப் பரவலாக்கு

நீங்கள் குறிப்பிட்ட விடயங்களை நோக்குகின்றபோது எமது பிரதேசத்தில் உளமருத்துவம் சார்ந்த செயற்பாடுகள் வளர்ச்சியடைந்து செல்கின்றன என்ற முடிவுக்கு நாம் வரமுடியுமா..? இதன் தொடர்ச்சி எவ்வாறு இருக்கும்...?

நான் குறிப்பிடுவதை மட்டும் வைத்துக் கொண்டு அது வளர்ந்து செல்கின்றது என்ற முடிவுக்கு வருவது கேள்விக்குரியதே. என்றாலும், எமது பிரதேசத்தில் உளமருத்துவச் சேவைகள் பரவலாகியிருக்கின்றன. அவை பல்வேறு பரிமாணங்களை எடுத்திருக்கின்றன. உளப்பிரச்சினையுடையவர்கள் அவற்றை இலகுவாக அணுகக் கூடியவாறு வடிவமைக்கப்பட்டிருக்கின்றன என்றே நான் கருதுகிறேன். உண்மையில் எமது பிரதேசத்தில்; முன்பு நடைபெற்ற உளமருத்துவத்துறை சார்ந்த செயற்பாடுகள் குறித்த பதிவுகள் பெரிதும் பேணப்படவில்லை. அவை பற்றிய ஓர் உசாவல் இடம்பெறுகின்றபோதே தற்போது நடைபெறும் செயற்பாடுகளைப் பற்றிய ஒரு கருத்து நிலைக்கு வரலாம். யாழ்ப்பாணத்தின்உளநலசேவைகள்பற்றிய ஓர் ஆய்வு 2008இல் சுகாதார்த் துறை சார்ந்த ஒரு பிரித்தானியப் பெண்மணியால் செய்யபட்டு, அறிக்கையிடப்பட்டிருக்கின்றது. சில மாதங்களுக்கு முன்னர், இலங்கையிலுள்ள உலக சுகாதார நிறுவனம் யாழ்ப்பாணத்தில் உளநோயாளர்கள் தங்கிநின்று புனர்வாழ்வு பெறுகின்றநிலையம்பற்றியஒருசுயாதீனமான ஆய்வை நடத்தியிருந்தது.



யாழ்ப்பாண உளநல சேவைகளைப் பார்த்தீர்களேயானால், அவற்றில் உலகின் பல நாடுகளில் செயற்படுத்தப்படுகின்ற மாதிரிகள் உள்வாங்கப்பட்டு, எமது சூழல், வளங்கள் மற்றும் வளப் பற்றாக் குறைகள் என்பவற்றை கருத்தில் கொண்டு, அவற்றை எமக்கேற்ற வகையில் செயற்படுத்தியிருக்கின்ற மையைப்புரிந்துகொள்ளமுடியும். உளநலசேவைகளின் விரிவாக்கத்தில்நாம் அகலக்கால் வைப்பதாகச் சில கருத்துகள் இருந்தாலும், புத்தாக்கச் சிந்தனையோடு, சாத்தியப்படும் அளவுகளுக்குள்ளேயே நின்றிருக்கின்றோம் என்றே நான் கருதுகின்றேன்.

இந்தச்சேவைகளின்தொடர்ச்சிபற்றிய, இவை எவ்வளவுகாலம்நின்றுபிடிக்கப் போகின்றன என்பது பற்றிய ஒரு பயம் இருக்கவே செய்கின்றது. உதாரணமாக உளநோயால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள்தங்கிநின்றுபுனர்வாழ்வுபெறுகின்ற நிலையமான குடில் எனும் அமைப்பை (இது உருவான விதம் பற்றி 'புத்துயிர்ப்பு' என்றகுடிலின்பத்தாண்டுநிறைவாக வெளியிடப்பட்ட நூலில்

வதற்கும், குடில், குருந்தம், மாதவம், நேயம் போன்ற புதிய சேவைகளின் உருவாக்கத்துக்கும் அவரேகர்த்தாவானார்.

எனது உளமருத்துவர் என்ற அடையாளம் இப்படித்தான் வளர்ந்து வருகின்றது. அது நன்மைகளையும் தந்திருக்கின்றது. அதிருப்திகளையும் உருவாக்கியிருக்கின்றது. எவ்வேளையும்எல்லாரையும் திருப்திப்படுத்தமுடியாது இல்லையா? இன்று பேராசிரியர் மீண்டும் இந்த மண்ணில் பணியாற்றுகிறார். அவர் அருகில் இருந்தாலும், தனித்துவமாகச் செயலாற்றும் வெளிஎனக்குக்கிடைக்கின்றது. அவரது இருப்பு பலத்தைத் தருகின்றது. ஒருவரது ஆளுமையின் உருவாக்கத்துக்கு எவ்வாறு தனிமனிதர்களும், சூழலும் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதனை உணரமுடிகின்றது.

எமது நாட்டின் சூழ்நிலைமைகளும் இவற்றின் தொடர்ச்சி பற்றிய ஓர் அச்சத்தை இப்பொழுது உருவாக்குகின்றது. அதாவது நாம் இப்பொழுதுஒருதிரிசங்குநிலையில்இருந்துகொண்டிருக்கின்றோம். நிர்வாகங்களை நடத்துபவர்களுக்கும், சேவைகளை வழங்குபவர்களுக்கும் இடையேயான வெளி அதிகரித்துப் போய்விட்டது போலவே நான் உணர்கிறேன்.பிழைபிடித்தல்,அல்லதுபிடிபடாமல் தப்புதல் என்னும் பணிப்பாங்கு பிரதான செல்நெறியாக மேலோங்கி வருவதையும் நான் காண்கின்றேன். இந்த நிலையில் வேலை செய்வதென்பதுவும், சேவைகளைத் திருப்திகரமாக வழங்குவது என்பதுவும் பிரச்சினைக்குரியதாகின்றன.

பார்க்கலாம்) அடுத்த தலைமைத்துவத்துக்குக் கையளிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டேன். ஆயினும், அதுமுடியாமல் போய்விட்டது.

எமது நாட்டின் சூழ்நிலைமைகளும் இவற்றின் தொடர்ச்சி பற்றிய ஓர் அச்சத்தை இப்பொழுது உருவாக்குகின்றது. அதாவது நாம் இப்பொழுது ஒருதிரிசங்கு நிலையில் இருந்து கொண்டிருக்கின்றோம். நிர்வாகங்களை நடத்துபவர்களுக்கும், சேவைகளை வழங்குபவர்களுக்கும் இடையேயான வெளி அதிகரித்துப் போய்விட்டது போலவே நான் உணர்கிறேன். பிழை பிடித்தல், அல்லது பிடிபடாமல் தப்புதல் என்னும் பணிப்பாங்கு பிரதான செல்நெறியாக மேலோங்கி வருவதையும் நான் காண்கின்றேன். இந்த நிலையில் வேலை செய்வதென்பதுவும், சேவைகளைத் திருப்திகரமாக வழங்குவது என்பதுவும் பிரச்சினைக்குரியதாகின்றன.

உண்மையில் அர்ப்பணிப்பும் மனிதநேயமும் உள்ள பணியாளர்களின் கைகளில் தான் இவற்றின் தொடர்ச்சி தங்கியுள்ளது.

கலைபற்றிய செயற்பாடுகளை முன்னெடுத்தலில் விருப்பமிருப்பதாகக் குறிப்பிட்டீர்கள். கலைகள் தனிப்பட்ட ரீதியில் உளமருத்துவத்துறையில் உங்களுக்கு ஏதும் பங்களிப்பை நல்கியதா...?

நிச்சயமாக. ஒருவர் எந்தத் துறையில் இருந்தாலும் அவர் தனக்குரியதான இன்னொரு பக்கத்தைக் கொண்டிருக்க வேண்டிய தேவையிருக்கின்றது. கலைகளோடான ஈடுபாடானது எம்மைத்தளர்வுநிலைக்கு இட்டுச்செல்லும் ஓர் ஊக்கியாக அமைகின்றது. நாளெல்லாம் வேலை செய்து களைத்து வருபவர்கள் இப்படியொரு பக்கத்தை உருவாக்கி வைத்திருப்பது அவர்களை மீளுயிர்ப்புச் செய்ய உதவியாக இருக்கும். 'ஆடிப்பாடி வேலைசெய்தால் களைப்பிருக்காது' என்பர். நாங்கள் இந்தக்காலத்தில் வேலையின் போது ஆடிப்பாட முடியாதுதானே. அதன் பிறகு ஆடிப்பாட எவரும் தடைவிதிக்க முடியாது. நாங்களே எங்களுக்குத் தடைவிதித்தால் ஒழிய. இப்படியொரு பக்கம் எல்லோருக்கும் தேவை என நான் கருதுகின்றேன்.

வைத்தியர்களிடம் மக்கள் அதிகம் எதிர்பார்க்கின்றனர். எனவே வைத்தியர்கள் தமது அறிவைப் பரந்தளவில் வைத்திருப்பது முக்கியமானது என்றே கருதுகின்றேன். எந்த ஒருதுறையினரும் ஒரு பயன்பாட்டோடு மட்டும் இருப்பது என்பது சலிப்பானது. யோசித்துப் பாருங்கள். பல்வகைமைப்பட்ட பயன்பாடு என்பது ஒருவரது வாழ்வை ஆனந்தமாக்குகின்றது. அர்த்தமாக்குகின்றது. கலைகள் உடனான பரிச்சயம் மற்றும் அதனோடான ஈடுபாடு என்பது எனக்கு மிகவும் பிடித்திருக்கின்றது. என்னுடையதொடர்ந்தசெயற்பாடுகளுக்கும், மீளுயிர்ப்புக்கும் அது எனக்கு உதவியாகவிருக்கின்றது.

நாடகங்களுடனான எனது பரிச்சயம் எனது துறையில் மிகவும் உதவுகின்றது என்றே நான் கருதுகிறேன். உளப்பிரச்சினையுடையவர்களைப் புரிந்துகொள்வதிலும், அவர்களது பின்னணிகளை விளங்கிக்கொள்வதிலும், அவர்களுடன் சாதாரண மொழியில் உரையாடுவதிலும் அது எனக்குக் கைகொடுக்கின்றது. மனிதர்களைப் பாத்திரங்களாகப் பார்க்கவும், அவர்களது வார்த்தைகளுக்குப் பின்னால் உள்ள சொல்லாத சேதிகளைப் புரிந்து கொள்ளவும் அது எனக்கு உதவுகின்றது. சிலவேளைகளில் என்னுடன் உரையாடுபவர்களுக்கான எதிர்வினைகளைக் காட்டவும் அது எனக்கு வழிகாட்டுகிறது. இசை மனதுக்கு அமைதி தருகின்றது. ஓவியங்கள் வாழ்க்கைக்கு வேறு அர்த்தங்களைக் காட்டுகின்றன.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்குக் கலைசார்ந்த விடயங்களில் ஆர்வத்தையும், அவற்றினுடனான ஈடுபாட்டையும் சிறுவயதில் இருந்தே ஊட்டவேண்டும்என்பதைநான் உறுதியாக நம்புகின்றேன். பெரும்பாலான பெற்றோர், பிள்ளைகளுக்கு அது பிரயோசனம் இல்லை என்று நினைக்கின்றனர். அது உண்மையிலே பொய்யானது. சமூகத்தில் நன்கு தொழிற்படுபவர்கள் கலையோடு தொடர்புடையவர்களாகவும் இருந்திருக்கின்றனர். அதனைநீங்களும்அவதானித்திருப்பீர்கள். நான் பெயர்களைக் குறிப்பிட வேண்டும்என்றில்லைத்தானே?

கலைகள் என்றால் சங்கீதம், நடனம், நாடகம் என்று மாத்திரம் யோசிக்கத் தேவையில்லை. விளையாட்டுகளில் ஈடுபடுதலும் சிறந்ததே. ஏனெனில் விளையாட்டும் ஒரு கலைதானே. தற்காலத்தில் விளையாட்டுத் தொடர்பான ஆர்வம் மேலோங்கி வருகின்றது. அது வரவேற்கத் தக்கது. ஏனைய கலைகள் தொடர்பாகவும் அந்த ஆர்வம் பரவவேண்டும்.

போரின் பின்னரான இன்றைய எமது சமுதாயத்தில் நிகழும் சமூக விரோதச் செயற்பாடுகளுக்குப் போரை ஒரு காரணமாகச் சொல்லுவது எவ்வளவு தூரம் பொருத்தமுடையது...?

போர் எமக்குப் பொதுவான சில இலக்குகளை முன்வைத்தது. குறிப்பாக உயிர்வாழ்வு, பாதுகாப்பு, கஷ்டங்களுக்குள் வாழுதல், புத்தாக்கத்தோடு சிந்தித்தல், அர்ப்பணிப்போடு செயலாற்றுதல், ஒருவருக்கொருவர்உதவுதல், பண்பாட்டுத் தொடர்ச்சியைப்பேணுதல்என அதுபல பொதுவான இலக்குகளை நோக்கி எம்மை உந்தித் தள்ளிற்று. போர்க் காலத்தில் கட்டளைக்கு அடிபணிதல் எனும் போக்கு வளர்ந்து சென்றது. அதனால் சுயாதீனத்தோடு, பொறுப்போடு தீர்மானங்களை மேற்கொள்ளும் இயல்பு மழுங்கடிக்கப்பட்டது. போர்க் காலத்தின்போது ஒன்றுக்கு மேற்பட்ட அதிகார மையங்களோடு சமரசம் செய்து வாழ வேண்டியிருந்தது. ஒரு நாள் போர்; முடிந்துபோனது. அதன்சடுதியான முடிவையடுத்து, அது ஒருவெறுவெளியை ஏற்படுத்தியது. இந்த வெளியில், வெற்றிடத்தில் பல ஆரோக்கியமில்லாத போக்குகளும். மனிதர்களும் உள்நுழைந்து கொண்டனர். போரின்போது அடையாளங் காணப்பட்ட ஓர் எதிர்நிலைக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்ட உணர்வுகள் சக்திகள் யாவும் தற்போது எமக்குள் திருப்பப்பட்டு விட்டன. அது தற்போது ஒருவகையான உள்ளகப் போராக மாறிவிட்டது. மகாபாரதத்தில் போரின் பின்பு யாதவ குலத்தினர் தம்மைத் தாமே அடித்துக் கொண்டு அழிவடைந்ததையொத்த ஒரு சூழல் உருவாகியுள்ளது. இந்தச் சூழல் எம்மைப் பலபகுதிகளாக உடைத்துத்துண்டாடிக் கொண்டிருக்கிறது.



போரின்போது அடையாளங் காணப்பட்ட ஓர் எதிர்நிலைக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்ட உணர்வுகள் சக்திகள் யாவும் தற்போது எமக்குள் திருப்பப்பட்டு விட்டன. அது தற்போது ஒருவகையான உள்ளகப் போராக மாறிவிட்டது. மகாபாரதத்தில் போரின் பின்பு யாதவ குலத்தினர் தம்மைத் தாமே அடித்துக் கொண்டு அழிவடைந்ததையொத்த ஒரு சூழல் உருவாகியுள்ளது. இந்தச் சூழல் எம்மைப் பலபகுதிகளாக உடைத்துத்துண்டாடிக் கொண்டிருக்கிறது.

எனினும் இந்தக் குழுமனநிலை போரால் மட்டுமே ஏற்பட்டது என்று கருதுவதற்கும் இடம் இல்லை. இது எமக்குச் சங்ககாலம் தொடங்கி இருந்திருக்கிறதுபோலத் தோன்றுகின்றது. ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்புக் குள் மூவேந்தர்கள், குறுநில மன்னர்கள் எனக் குழுக்களாய்ப் பிரிந்து நின்று, சண்டையிட்டு,. துரோகங்களும், காட்டிக்கொடுப்புக்களும் என்று கூறுபோட்ட வரலாறுதானேஇருக்கின்றது. தமிழர் என்று ஓர் இனம் உண்டு தனியே அவர்க்கு ஒரு குணம் உண்டு என்பது இதுதான்போலும்.

போர்தான் எல்லாவற்றுக்கும் காரணம் என்றால் பெரிய போர்கள் நடைபெற்ற ஜப்பான், ஜேர்மன், போன்றதேசங்கள் எவ்வாறு முன்னேறின என்பதைப் பற்றியும் யோசித்துப் பார்ப்பது நல்லது.

பொரிய இடர்கள் மற்றும் அழிவுகளின் பின்னர்தானே அவை தம்மைப் புதிதாய்க் கட்டமைத்துக் கொண்டன. உண்மையில் நாம் ஒரு சமூகமாக அடிபட்டுப் போனவர்கள் ஆகிவிட்டோம். எமது வளங்கள் அழிந்து போயின. அயல் சுற்றம் போன்றவற்றை இழந்து போனோம். அப்படியாயின் நாங்களும் தானே நல்லாய் வரவேண்டும். ஆனாலும் அந்த உத்வேகம் எம்மிடம் இல்லை. ஆளுமையான தலைமைகளும்எம்மிடம்உருவாகவில்லை. போர் என்பது பல சமூகங்களையும் பாதித்திருக்கின்றது. மனக்காயங்களைஏற்படுத்தியிருக்கின்றது. பொருளாதார இழப்புகளை ஏற்படுத்தியிருக்கின்றது. ஆனாலும், அதிலிருந்து மீண்டு அடுத்த கட்டத்துக்குச் செல்வதற்கான காத்திரமான முயற்சிகளை மேற்கொள்ளாது. இன்று வரையும் போரை ஒரு சாட்டாக வைத்து. எமது பொறுப்பற்ற செயற்பாடுகளுக்கு நியாயங்கள் சொல்லி வருகின்றோம் என்றே நான் கருதுகின்றேன்.

அப்படியானால் இதற்கு என்ன காரணங்களை நாம் சொல்ல முடியும்...?

நாம்போட்டுவளர்த்தவிதைகளில்ஏதோ பிரச்சினையிருக்கின்றது. அதுசரியான மனிதர்களை உருவாக்கவில்லை. நாம் சமூகப்பொறுப்புள்ள ஆட்களை உருவாக்கவில்லை. நீண்டசிந்தனைப் போக்குள்ளவர்களை உருவாக்கவில்லை. சரியான முன்மாதிரிகள் இல்லாமல் தலைமைத்துவம் இல்லாமல் எமது சமூகம் வளர்ந்து வந்திருக்கின்றது. வாய்ச்சொல்லில் வீரர்களாக நாம் இருக்கின்றோம். நல்ல முன்மாதிரிகளாக எம்மால் இருக்க முடியவில்லை. தலைவர்கள் தங்களின் இருப்பைத் தக்க வைப்பதில் குறியாக இருக்கின்றார்கள். பலர் உணர்ச்சிவசப்பட்ட கோஷங்களை எழுப்புவதையே தமது தந்திரோபாயமாகக் கொள்கின்றனர். இளைஞர்கள் வரலாறு தெரியாமல், காரணகாரியம்விளங்காமல்மேலோட்டமான உணர்ச்சிகளின் பிரதிபலிப்புகளைக் காட்டுகின்றார்கள்.

சமூகமீள் கட்டுமானம் தொடர்பான வாய்ச்சவடால்களே தற்போது மிகையாக்க் காணப்படுகின்றன. சிலகாலங்களுக்கு முன்பு போரும்;, அழிவுகளும் கண்ணுக்குத் தெரியக் கூடியவிதமாக நடைபெற்றது. இப்பொழுது அது வேறுவிதமாக நடக்கிறதோ என எண்ணத் தோன்றுகிறது. தவணைமுறைக்கடன்களும், வேறு கடன்களும், பல்பொருட் சந்தைகளும் சந்தோஷத்தைத் தருவது போன்ற மயக்கத்தைத் தந்து வாழ்க்கையைப் பறிக்கின்றன. அவை எம்மைச் சிந்திக்க விடாமல் பண்ணுவதில் குறியாக இருக்கின்றன. எளிமைக்கும், சேமிப்புக்கும் பெயர்போன இயல்பான எமது வாழ்வு பறிபோய்விட்டது. இப்படிப் பலவற்றை நாம் சொல்லிக் கொண்டேபோகலாம்.

ஜென் கவிதையொன்று "குளிர் காய்வதற்காகச் சுள்ளிகளைப் பொறுக்கத் தொடங்கினோம் சுள்ளி களைப் பொறுக்குவதிலேயே எமது காலம் கழிந்து கொண்டிருக்கின் றது" என்கின்றது. இன்றையஎமதுவாழ்க்கையும் இப்படித்தானே இருக் கின்றது. இதனை உலகமயமாதலால் ஏற்பட்டவிளைவு எனப்பார்க்கலாமா? அல்லதுஇதற்குஏதாவதுஉளவியல் பின்னணிஇருக்கின்றதா?

சொற்களுக்குள் ஒளிந்து நிற்பதை விட்டுச்சுயமாக எம்மைப்பார்த்தல்நல்லது. உண்மையில்உலகமயமாதல்தொடர்பான எமது பார்வையில்தான் பிழையிருக்கின்றதுபோல எனக்குத் தோன்றுகின்றது. உலகமயமாதல் என்பது வெறுமனே பொருட்களைக் கொள்வனவு செய்வதா? அல்லது தொடர்பு சாதனங்கள் மற்றும் இலத்திரனியல் சாதனங்களில் அதீத பரிச்சயம் கொள்வதா? உலகம் என்று நாம் கருதுவது தனியே மேற்கத்தேய உலகை மட்டுமா? சரி உலகத்திலிருந்து பிரதியெடுக்கும் நாம் அதே உலகத்துக்கு என்ன வழங்கியுள்ளோம்? எமது தந்தையின் தந்தை வைத்த தென்னையில் இருந்துதானே நாம் இன்று வரை தேங்காயைப்

பெற்றுக்கொள்கின்றோம்.

நுகர்வுக்கலாசாரத்துக்குள் அகப்பட்டுப் போயிருக்கும் நாம் சுயமாகச் சிந்தித்துக் கொள்வதைக்குறைத்துவிட்டோம். எமது தேவைகளுக்கு ஏற்றவற்றை நாம் பெறுவதுமில்லை. உருவாக்குவதும்இல்லை. இன்னுமொரு வகையில் சொன்னால் ஒரு பொருள் எமக்குத் தேவையோ இல்லையோ என்றுகூட நாம் பார்ப்பதில்லை. மற்றவர்களுக்காகவே நாம் அதைத் தெரிவுசெய்கின்றோம். இப்போ, கோப்பியைக் குடிப்பதற்கு எனப் பலவகையான கோப்பைகள் இருக்கின்றன என வைத்துக் கொள்வோம். எந்தக் கோப்பையை எடுப்பது என்பதை நாம் தான் முடிவுசெய்ய வேண்டும். அது எமது மனப்பாங்கைப் பொறுத்தே நடைபெறுகின்றது. மற்றவர்கள் தெரிவு செய்வதையே நாமும் தெரிவு செய்வதால் பிரச்சினைகள் உருவாகின்றன. கோப்பிதான் (வாழ்க்கைதான்) முக்கியம். அதைப் பருக உதவும் கோப்பை விலையுயர்ந்ததாக இருந்தால் மட்டும் தான் கோப்பி சுவைக்கும் என்றில்லை. அது சுத்தமாக இருந்தால் போதுமானது.

இந்த மனப்பாங்கே உலகமயமாதல் தொடர்பாகவும்எமக்குஇருக்கிறது. அதை நாம் நேராகப் பார்ப்பதில்லை. முழுமையாகவும் பார்ப்பதில்லை. உலகத்தில் உள்ள நன்மையான விடயங்களைப் பார்ப்பதில்லை. உதாரணமாக யோக நெறியிலான வாழ்க்கை முறை, ஆரோக்கியமான உணவை உண்ணுதல், உடற் பயிற்சி செய்தல், உளநலம் சார்ந்த அக்கறைகள், அடுத்தவர்களுக்கு இடைஞ்சல் தராது நடந்து கொள்ளல், கூட்டுணர்வு, சமூகப் பொறுப்புணர்வு என பல நன்மை தரும் விடயங்களும் உலகத்தில் உள்ளன. இவற்றை நாம்உலகமயமாதலின் பண்புகளாக ஏற்றுக்கொள்ளத் தயக்கம் காட்டுகின்றோம்.

பல்தேசிய பிராண்டுகளும், ஆடை அலங்காரங்களும், உணவு மற்றும் குடிப் பழக்கமுமே எமது கண்களுக்குத் தெரிகின்றன. அவற்றைப் பிழை என்று நான் மறுதலிக்கவில்லை. ஒதுக்குமாறு கூறவும் இல்லை. எல்லாம் இருக்கலாம். ஆயினும், தெரிவுக்கான சாவி எம்மிடம் தானே இருக்கிறது. எமக்குரிய தெரிவை எம்மீது இன்னொருவர் திணிக்கிறார் என்றால், எமது ஆளுமையை நாம் சீர் செய்ய வேண்டியிருக்கின்றது என்று தானே அர்த்தப்படுத்திக் கொள்ள முடியும். ம்... இது மிகவும் அகன்ற பரப்பில் உரையாடப்படவேண்டியது. அவ்வளவுதான்சொல்லமுடியும்.

பிள்ளை வளர்ப்புஎன்பதுபெரிய.சவாலான ஒரு விடயமாக இன்று மாற்றம் பெற்றிருக்கின்றது. பலர் ஒரு கட்டத்துக்கு மேல் என்ன செய்வது என்று தெரியாத ஒரு நிலையில் ஸ்தம்பித்து விடுகின்றனர். இது பற்றி நீங்கள் என்ன கருதுகின்றீர்கள்...

பிள்ளை வளர்ப்பு என்பது காலங்காலமாகச் சவால் நிறைந்த ஒன்றாகத்தான் இருந்து வந்திருக்கின்றது. அது தற்போது இன்னும் கொஞ்சம் அதிகளவான சவால்கள் நிறைந்ததாக மாறியிருக்கின்றது எனக்கூறலாம். ஆரம்பத்தில்பிள்ளைகள் பலபெற்று அவர்களை வளர்த்தெடுத்த அனுபவம் கொண்டவர்கள், புதிதாகப் பெற்றோராகியவர்களின் அருகில் இருந்து இந்தச் சவால்களை எதிர்கொள்ளப் பழக்கினார்கள். ஆலோசனைகளை வழங்கினார்கள். வழிப்படுத்தினார்கள். பல பிள்ளைகள் இருந்ததனால் ஆரம்பத்தில் பெற்ற அனுபவங்களை வைத்து மற்றப் பிள்ளைகளைச் சரியாகக் கையாள முடிந்தது. அதாவது ஒன்று பிழைத்தாலும், அவர்களால் மற்றப் பிள்ளைகளைச் சரியாகக் கையாள முடிந்தது. முயன்று தவறிக்கற்றல்என்பது மனிதவாழ்வில் இயல்பான ஒன்றுதானே. இன்றைய வாழ்வியலில் பெற்றோராக விரும்புபவர்கள் பெரும்பாலும் பிள்ளைகளின் எண்ணிக்கையை ஒன்று, இரண்டு என்ற எண்ணிக்கைகளுக்குள் வரையறுத்து வைத்திருப்பதால் மேற்படி முயன்று தவறுதல் எனும் விடயத்தைச் சாத்தியமற்றதாக மாற்றிவிட்டது. தவறினால் தவறியதுதான்.

இது மட்டுமல்ல இன்று பெற்றோராகவுள்ள பலர் தனித்து விடப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தேவையான (கூட்டுக்) குடும்ப ஆதரவுகள் போதியளவு கிடைப்பதில்லை. அத்துடன் பெற்றோர் இருவரும் வேலைக்குச் செல்லுதல், அவர்களது வேலை தொடர்பான அயர்ச்சி, பிள்ளைகளுடன் செலவழிக்க நேரமில்லாது போதல், அதனால் ஏற்படும் இடைவெளியைச் சரிசெய்கின்றோம் என நினைத்துக் கொண்டு பிள்ளையை வளர்க்க, பிள்ளைக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க என வீட்டுக்கு அந்நியமான பலரின் சேவைகளைப் பெறுதல், அந்தச் சேவை வழங்குபவர்களுக்குப் பிள்ளை வளர்ப்பு முறைகள் தொடர்பாக இருக்கும் அறிவு மற்றும் அறியாமையின் அளவுகள் எனப் பற்பல காரணங்களால், இன்றைய பிள்ளை வளர்ப்பு அதிக சவால்களுக்கு உள்ளாகின்றது.

இன்னுமொரு விடயத்தையும் குறிப்பிடலாம். தற்காலத்தில் உள்ள பலபெற்றோர் தாம் கஷ்டப்பட்டு வளர்ந்ததுபோல தங்கள் பிள்ளைகள் வளரக்கூடாது என்ற நினைப்போடு அவர்களுக்குப் பல சலுகைகளையும், பொருட்களையும்வழங்கி வருகின்றனர். பிள்ளைகளுக்குத்தேவையானவற்றையும் ஏன் தேவையற்றவற்றையும் கூட அவர்கள் வழங்கி நிற்கின்றனர். இதனால் பிள்ளைகள் இருந்த இடத்தில் இருந்தபடியே தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு, எப்போதும் தாங்கள் நினைத்ததுபோல வாழ்வதற்கான சூழலையும் எதிர்பார்க்கத் தொடங்கிவிடுகின்றனர்.

உண்மையில் வாழ்க்கையின் பலகணங்கள் நாம் நினைப்பதுபோல் நடப்பதில்லை. இந்த யதார்த்தத்தைப் பிள்ளைகள்உணரவேண்டும். ஏமாற்றங்களைச் சகித்துக் கொள்ளுதல் என்பது பிள்ளைகளிடம் மிக முக்கியமாக வளர்த்தெடுக்க வேண்டிய திறன்களுள் ஒன்றாக இருக்கின்றது. ஆயினும், அது அவ்வாறு நடைபெறுவதற்கான சூழலைத் தற்காலத்துப் பெற்றோர் உருவாக்குவதில்லை.

இப்போது, அநேகமான குடும்பங்களில் உள்ள பிள்ளைகள் தமது விருப்பத்துக்கு ஏற்பப் பெற்றோரை ஆட்டிவைக்கின்றனர். பிள்ளைகளே குடும்பங்களின் சக்கரவர்த்;திகளாகவும் சக்கரவர்த்தினிகளாகவும் ஆகின்றனர். இங்கு நாங்கள் ஒன்றைக் கவனத்தில் எடுக்க வேண்டும். பிள்ளைகள் தங்களது மூளை வளர்ச்சிக்கு ஏற்பவே, சிந்திப்பார்கள். தமது உடனடி இன்பத்துக்காகத் தமது தேவைகளை நிறைவேற்ற முயற்சிப்பார்கள். உளவியல் சார்ந்த மொழியில் சொன்னால் பிள்ளைகளில் 'இட்' என்ற மனக்கூறே மேலோங்கியிருக்கும். இந்த நிலையில் அவர்களுக்குச் சரி பிழை, நல்லது கெட்டது, தேவை தேவையற்றது போன்ற நியமமான நினைப்புக்கள் இருப்பதில்லை. அவர்கள் எப்போதும் தாம் நினைத்ததை, விரும்பியதை உடனடியாகவே பெற்றுக்கொள்ள விழைகின்றனர். அதற்காக அவர்கள் பல சந்தர்ப்பங்களில் ஒற்றைக் காலில் நிற்கின்றனர். சிலவேளைகளில் பெற்றோரை மிரட்டவும் செய்கின்றனர். அந்த நடத்தைகளைச் சரியாகப் புரிந்து கொள்ளாத பலபெற்றோர் அவர்களது பிள்ளைகளின் விருப்புகளுக்கு இணங்கிப்போய், தமது செயற்பாட்டின் மூலம் பிள்ளைகளின் இந்தவிதமான நடத்தைகளை ஊக்குவித்தும் விடுகின்றனர்.

இன்னும் சில பெற்றோர் பிள்ளைகளின் அடம்பிடிக்கும் நடத்தையைத் தவிர்ப்பதற்காகப் பிள்ளையைத் திசை திருப்புகின்றோம் என்ற பெயரில் தொலைபேசியை அல்லது தொலைக்காட்சியின் 'றிமோட்' கட்டுப்பாட்டுச் சாதனத்தை அவர்களின் கைகளில் கொடுத்து அந்தப் பிரச்சினையைக் கையாளுகின்றனர். இவைகள் பிறிதொரு சந்தர்ப்பத்தில் மேலும் பல சிக்கல்களை உருவாக்கிவிடுகின்றது.

பிள்ளைகளின் நடத்தைகள் பிரச்சினைகளுக்குள்ளாகின்றபோது, அல்லது அவை பிறழ்வடைந்து செல்கின்றபோது நிலைமைதலைக்குமேல்போய்விடுகின்றது. 'நான் என்ரை பிள்ளைக்கு என்ன குறைவைச்சனான்? ஏன்அவன்இப்பிடிச் செய்யிறான்?' என்ற அங்கலாய்ப்புக்களைப் புலம்பல்களைத் தோற்றுவிக்கின்றது. நான் சொல்ல விரும்புவதெல்லாம் இதுவே. பிள்ளைகளின் தேவைகளுக்கு முன் உரிமை கொடுக்கவேண்டும் என்பதிலும், அவர்களது விருப்பங்கள் செவிசாய்க்கப்படவேண்டும் என்பதிலும் மாற்றுக் கருத்துக்கள் ஏதும் எனக்கில்லை. அதேசமயம் பிள்ளைகள் தொடர்பான எல்லா முடிவுகளையும், வீடு தொடர்பான எல்லா விடயங்களைப் பற்றியதுமான முடிவுகளையும் பெற்றோர் எடுப்பதே நன்மை பயக்கும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். குறிப்பாக ஒரு சந்தர்ப்பத்தில்பெற்றவர்களில்ஒருவர்எடுத்த முடிவை மற்றவர், தாய் எடுத்த முடிவைத் தந்தையோ, தந்தை எடுத்த முடிவைத் தாயோ, மறுதலிக்கக் கூடாது. ஒருவரது முடிவில் திருப்தியில்லை எனில் அது சம்பந்தமாகப் பிள்ளைகளுக்கு முன்நின்று வாதாடாது பெற்றோர் தம்முள் கலந்துரையாடி, விவாதித்துப் பொருத்தமான முடிவுக்கு வருதல் வேண்டும். எப்போதும் முடிவுகளை எடுத்ததன்பின்னர் முடியுமானளவுக்கு அதில் உறுதியாக இருக்க வேண்டும்.

பிள்ளைகளுக்கு நேரான விடயங்களையும், உணர்வுகளையும் மட்டும் வழங்காது,எதிரானவிடயங்கள்மற்றும்உணர்வுகள் பற்றியும் புரிந்து கொள்வதற்கு வழிசெய்யவேண்டும். பிள்ளைகள்ஏமாற்றம் அடைந்தால், அவர்கள் அதில் இருந்து மீண்டுவர அவர்களுக்கு ஆதரவு கொடுத்து வழிகாட்ட வேண்டும். இப்படியாகப் பெற்றோராக இருப்பதில் பல நுட்பங்கள் இருக்கின்றன.

பிள்ளை வளர்ப்புத் தொடர்பான சரியான அணுகுமுறைகளை பதின்மவயதுகளில் அல்லாது மிகவும் சிறிய பராயத்தில் இருந்தே ஆரம்பிக்கவேண்டும். துரதிர்ஷ்டவசமாக எங்களுடைய கல்விமுறைக்குள், படிப்புக்குள் பிள்ளை வளர்ப்புப் பற்றிய விடயங்கள் எவையும் இணைக்கப்படவில்லை. என்னைப் பொறுத்த வரையில் இந்தக் காலத்திலும் சரி, இனிவரும் காலங்களிலும் சரி, பிள்ளை வளர்ப்புத் தொடர்பான விடயங்களை நாம் கற்றுக் கொள்ளுதல் தேவையானதாக உள்ளது. சுருக்கமாகச் சொன்னால், அடிப்படையில் நாங்கள் பிழையான அணுகுமுறைகளை வைத்துக்கொண்டு, ஏற்படும் பிரச்சினைகள் பற்றி மாத்திரம் கதைப்பதால்தீர்வுகள்எவையும்கிடைக்கப்போவதில்லை. இனிவரும் காலங்களிலாவது திருமண உறவுகள், பிள்ளை வளர்ப்புத் தொடர்பான விடயங்களில் நாம் கவனம் செலுத்தினால், தற்போதுபோல் ஸ்தம்பிக்க வேண்டிய நிலை உருவாகாது என நினைக்கின்றேன்.

"நாங்கள் முந்தி எப்பிடியிருந்தோம்.. இன்று எல்லாம் தலைகீழாக மாறிவிட்டது" என்று பலர் அங்கலாய்க்கின்றார்கள்... இது சரியான ஒரு கூற்றாக அமையுமா..?

(சிரித்தபடி) இது சந்ததி இடைவெளியால் ஏற்படும் ஒரு பெருமூச்சு என்றே கருதுகின்றேன். தமது காலத்தைவிட முன்பிருந்த காலத்தைப் பொற்காலம் எனப் பார்த்து அங்கலாய்க்கும் ஒரு மனப்போக்கினுடைய தொடர்ச்சியாகத்தான் இதைப் பார்க்கலாம். நாம் நிகழ்காலத்தை விட்டுவிட்டு, எமது இறந்தகாலத்திலும், எதிர்காலத்திலும்தான். எமது சிந்தனைகளை நிறுத்தி வைத்துள்ளோம். அதுவும் தமது இறந்த காலங்கள் மீளவராதா? என்ற பழைஏக்கம் (Nostalgia) பலரிடத்தில் எஞ்சியிருக்கின்றது.

மாற்றம் என்ற ஒன்று இல்லாமல் வாழ்க்கை என்பது சாத்தியமே இல்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். தத்துவவியலாளர்களும் மாற்றம் ஒன்றே மாறாதது என்கின்றனர். இதன்படி, மற்றைய அனைத்தும்மாற்றம் அடைகின்றன. அதுதான் இயங்கியல் விதியும் கூட. இவற்றை மறுதலித்துக்கொண்டு

என்னதான் தொழில்நுட்பம் வளர்ந்தாலும், அடுத்த தலைமுறையை எவ்வாறு உருவாக்குவது என்பது எமது கைகளிலேயே தங்கியிருக்கின்றது என்றே நான் நம்புகின்றேன். அடுத்த தலைமுறையை உருவாக்கும்போது மனிதருக்கு இயல்பாகவே இருக்கும் சிறப்பான பண்புகளானசிரித்தல், ஆடுதல், பாடுதல், கதைத்தல், உதவிசெய்தல் போன்றவற்றை வளர்த்துக் கொள்ளுமாறு பார்த்துக் கொள்ளல் முக்கியமானது.



வாழமுடியாதுஎன்றேநான்உணர்கின்றேன். மாற்றங்களைச் சகித்துக்கொள்வது என்பது மிகவும் முக்கியமானது. அதற்காக மாற்றங்களினூடே எமது தனித்துவத்தைத் தொலைக்கவும் தேவையில்லை. மாறுகின்ற விடயங்களைப் போதியளவு சகிப்புத்தன்மையோடு ஏற்றுக்கொள்ளப் பழகுவதோடு, அந்த மாற்றங்களில் உள்ள புதியவற்றை எவ்வாறு எமது வளர்ச்சிக்கு சாதகமாகக் கையாளலாம் என்பதனையும் நோக்குவதுநல்லது.

இந்தப் பின்னணியில் பார்க்கின்றபோது எமது சமுதாயத்தில் காணப்பட்ட ஒழுக்க நியதிகள் மற்றும் விழுமியங்களில்தற்போதுஒருமாற்றம்ஏற்பட்டிருப்பதாகவே எனக்கும் தெரிகின்றது. அது வீழ்ச்சியா? சரிவா? என்பதனை நிறுவுவதை விடுத்து, அதை அறிந்து புரிந்து கொள்வதுதான்புத்திசாலித்தனமானது. சரி, அது அப்படித்தான் என்றால், அதை ஏற்று, அதற்குள் நின்றுகொண்டு, எவ்வாறு ஒரு செம்மையான சமுதாயத்தை நாங்கள் உருவாக்கலாம் என்று யோசித்தல்நல்லது.

தகவல்தொழில் நுட்பத்தின் அபரிதமான வளர்ச்சியே தற்போதைய இளைஞர்களுக்கும் பெரியவர்களுக்கும் இடையே பரந்து விரிந்து கிடக்கும் பெரியதோர் இடைவெளியை ஏற்படுத்தியிருக்கின்றது என்று நான் நினைக்கின்றேன். தற்போதைய வாழ்வில் மகனுக்கு அல்லது மகளுக்குத்தெரிந்தவிடயங்களில் பல தந்தைக்கோ அல்லது தாய்க்கோ தெரியவில்லை. அறிவுகட்டின்றிப் பரந்து கிடக்கின்றது (அறியாமையுந்தான்). அதற்கானதிறவுகோல்களும் இளைய சமுதாயத்தினரிடையே பெருமளவில் காணப்படுகின்றன. இது தலைமுறைகளுக்கிடையே பெரியதோர் இடைவெளியை உருவாக்குகின்றது. பெற்றோர் சொல்வதற்கு மேலால் அவர்கள் சொல்லுகின்றனர். பெற்றோர் நினைப்பதற்கு எதிராக அவர்கள் செயற்படுகின்றனர். அதனைப் பெற்றோர்களால் விளங்கவும் முடியவில்லை. பிள்ளைகளால் அதைச்சொற்களால் சொல்லி விளங்கவைக்கவும் முடியவில்லை.

இந்த முரண்நிலையை முதலில் நாம் புரிந்து கொள்ளல் வேண்டும். இளையவர்கள் சொல்வழி கேட்கின்றார்கள் இல்லை, அவர்கள் கெட்டுப்போய்விட்டார்கள், பெரியவர்களை மதிக்கிறார்கள் இல்லை, தாம் விரும்பியபடி குளப்படி செய்கின்றார்கள் என்று வசை கூறுவதை நிறுத்திக் கொள்ளுதல் நல்லது. அவர்களது உலகுக்குள் நுழைந்து அந்த அனுபவங்களைப்பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். பூதாகரமாக வளர்ந்து செல்லும் தகவல் தொழில் நுட்ப அறிவை எப்படிச் சரியாகப் பயன்படுத்தலாம்என்றுசிந்திக்கலாம். தொழில் நுட்பம் மனிதப் பண்புகளை விழுங்கிவிட இடங்கொடாது அதை எப்படிக் கட்டி ஆள்வதுஎன்றுபற்றியும்யோசிக்கலாம்.

தேவைப்படுமிடத்து நாங்கள் எங்கள் பிள்ளைகளிடமே பாடம் கேட்கலாம். சிவபெருமான் முருகனிடம் பாடம் கேட்கவில்லையா...? முன்னுதாரணம் இருக்கிறதுதானே.

என்னதான் தொழில்நுட்பம் வளர்ந்தாலும், அடுத்ததலைமுறையை எவ்வாறு உருவாக்குவது என்பது எமது கைகளிலேயே தங்கியிருக்கின்றது என்றே நான் நம்புகின்றேன். அடுத்த தலைமுறையை உருவாக்கும்போது மனிதருக்கு இயல்பாகவே இருக்கும் சிறப்பான பண்புகளான சிரித்தல், ஆடுதல், பாடுதல், கதைத்தல், உதவிசெய்தல் போன்றவற்றை வளர்த்துக் கொள்ளுமாறு பார்த்துக் கொள்ளல் முக்கியமானது. மிகமுக்கியமாக அவர்கள் மந்தை இயல்பூக்கத்திலிருந்து விடுபட்டு, சுயமாகச் சிந்தித்துச் செயலாற்றும் திறனை வளர்க்கும் விதமாக எமது அணுகுமுறைகள் அமைய வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக, அவர்கள் எம்மைப் பார்த்துக் கற்றுக் கொள்ள உதவுமாறு நாங்கள் அவர்களுக்கு நல்ல முன்மாதிரிகளாகத் திகழும் வண்ணம் எமது வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுதல்தேவையானது.

இவ்வாறு தலைமுறை இடைவெளியால் ஏற்படுகின்ற தவறான புரிதல்களைக் குறைப்பதற்கான பல்வேறு வழிகளைப் பற்றிச் சிந்திப்பதே காலத்தின் தேவையாக இருக்கின்றது. இதைத் தெளிவுறாது முந்தைய காலங்கள் எல்லாம் அற்புதமானவை, தற்காலமே கெட்டுவிட்டது என அங்கலாய்ப்பதில் நியாயமில்லை. அதில் நியாயம் இருந்தால் பண்டைய காலங்களில் நீதி நூல்கள் உருவாகவேண்டிய தேவை இருந்திராது.

டொக்ரர்...! மதுபாவனைக்கு உட்படும் சூழல் இன்று அதிகரித்து விட்டதாக நம்பப்படுகின்றது.

இளைஞர்கள் ஒன்றாகச் சேரும்போது மதுவை நோக்கியே போகின்றனர். அதில் ஓரிருவர் குடிக்காமல் இருந்தால் அவர்கள் பெரும் சிக்கலுக்கும் மனஉளைச்சலுக்கும் உள்ளாகின்றார்கள். எது சரி? எது பிழை? என்ற முரண்பாட்டுக்குள் தள்ளப்படுகின்றார்கள். இத்தகைய இளைஞர்களுக்குத் தாங்கள் என்ன கூறவிரும்புவீர்கள்...

மனித வாழ்க்கையில் மது அருந்துவது என்பது காலங்காலமாகவே நிகழ்ந்து வந்திருக்கின்றது. புராணங்களில், இதிகாசங்களில் தமிழ் மற்றும் ஏனைய மொழிசார்ந்த இலக்கியங்களில் இவை பற்றிய செய்திகளும் குறிப்புக்களும் நிறையவே இருக்கின்றன.

மதுவை மனிதனின் மூளை நாடுவது என்பது இயல்பானது என்றே நான் கருதுகின்றேன். கூர்ப்பில் மனிதருக்குக் கீழான விலங்குகளிலும் போதையை நாடும் பழக்கம் அவதானிக்கப்பட்டிருக்கின்றது.

இந்தப் பின்னணியில் மது அருந்துவது எனும்நடத்தையை ஒரு பிரச்சினையாகப் பார்ப்பதை விட, அதனால் ஏற்படும் தனிமனிதன் சார்ந்த, சமூகம் சார்ந்த தீங்குகள் பற்றிக் கவனம் எடுப்பதே முக்கியமானதுஎனநான்நினைக்கின்றேன். மதுவின் பாவனை காரணமாகக் கூர்ப்பு வழியிற் பின்சென்று விலங்கு நிலையை அடைவது வரவேற்கத்தக்கதல்ல.

இளைஞர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் மதுவைப் பரிசோதித்துப் பார்க்க முயல்வதென்பது இயல்பான ஒன்றுதான். அவர்கள் பார்ப்பவையும், கேட்பவையும், அறிந்தவையும், அறியாதவையும் அவர்களை மதுவை நோக்கி இழுத்துச் செல்லக்கூடும். எனினும், விஞ்ஞான ரீதியில் பார்த்தால், இளவயதில் மதுவைப் பரிசோதித்துப் பார்த்தல்என்பதுமுதிர்ச்சியுறாதஅவர்களது மூளையில் பல்வேறுவிதமான பாதிப்புகளை ஏற்படுத்துவதோடு, அவர்களைமிகவிரைவாகஅடிமைநிலையை நோக்கியும் இட்டுச் செல்கின்றது. இதை விட உயிரியல் காரணிகளினாலும் சில இளைஞர்களும், வளர்ந்தவர்களும் விரைவில் மதுவுக்கு அடிமையாகும் உடல்நிலையையும்ஆளுமையையும் இயல்பாகவே கொண்டிருக்கிறார்கள். இவ்வாறானவர்கள் இயலுமானளவு மதுவிலிருந்து விலகி வாழ்வதே நல்லது.

நீங்கள் குறிப்பிட்டதுபோல் சிலவேளைகளில் குடிப்பவர்களோடு சேர்ந்திருக்கும் குடிப்பழக்கமில்லாதவர் மற்றவர்களோடுதன்னைஒப்பிட்டுமனஉளைச்சலுக்கு ஆளகின்றமையை நானும் அவதானித்திருக்கிறேன். இதற்குக் காரணம் அவர்களது பார்வையில் இருக்கும்பிழைதான். உண்மையில்மனப்பலம் உள்ளவர்கள் குடிப்பதில்லை. அவ்வாறு குடித்தாலும் 'குடிகாரர்கள்' ஆவதில்லை. பலவீனமானவர்களே குடிக்கிறார்கள். பின்பு அதற்கு அடிமையாகியும் விடுகிறார்கள். மதுவை மற்றவர்களின் அழுத்தம் காரணமாக அருந்தும்ஒருவர்பலவீனமானவரே. இதைத்தான்அவர்கள்உணரவேண்டும்.

மது அருந்துபவர்களுடைய கூட்டத்தில் இருக்கும் மது அருந்தாதவர்கள் ஒருவராகவோ, அல்லது எண்ணிக்கையில் குறைந்தவர்களாகவோ இருக்கலாம். இருப்பினும், அவர்கள் பலமானவர்கள். எமது சமூகத்தில் நல்லதொரு மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய ஒரு தலைமுறையின் தொடக்கப் புள்ளியாகக் கருதத் தக்கவர்கள். இத்தகைய புள்ளிகள் எண்ணிக்கையில் அதிகரிக்க வேண்டும். அப்பொழுதுதான் அவை தம்முள் இணைந்துபுதுக்கோலத்தைஉருவாக்கும். சமூகத்தில் மாற்றம் ஏற்படுவதற்கான வாய்ப்பு ஏற்படும்.

இது மிகப் பொறுப்பான பணியாகும். மதுபற்றிய பிழையான நம்பிக்கைகள் இத்தகைய மனஉறுதி உள்ளவர்களையும் சிலநேரங்களில் தடுமாற வைத்துவிடுகின்றன. உதாரணமாக மது அருந்தினால்தான் மகிழ்வு இருக்கின்றது என்ற ஒரு எண்ணத்தைக்குறிப்பிடலாம். இது போலியானது. இத்தகைய நம்பிக்கைகள்வெறும் முற்கற்பிதங்கள்மட்டுமே. முற்கற்பிதங்களை மட்டும் நம்பி வாழ்வதே எமது கலாசாரம் போல்தெரிகிறது. நீரில் முழ்கினால் ஒருவர் செய்யும் பாவங்கள்போய்விடும்எனச்சிலர்நம்புவதில்லையா? அதுபோலவே குடித்தால் கவலைபோய் மகிழ்வு உருவாகும் என்பதுவும் வெறும் நம்பிக்கை மட்டுமே. ஆயினும் பலர் குடிக்கிறார்கள். மது அருந்துவதும் விடுவதும் அவரவர் தனிப்பட்டவிருப்பம், விடயம். அதனால் ஏற்படுகின்ற உடல் உளப் பாதிப்புகளுக்கு அவரவரே பொறுப்பாக முடியும். ஆனால் மதுவினுள் மூழ்கி, அடிமையாக மாறி, தனக்கும் மற்றவருக்கும் தீமைசெய்கின்றபோது அதுபிரச்சினையாகமாறிவிடுகின்றது.

போதை பற்றியும், போதையை ஏற்படுத்தும் பதார்த்தங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் பற்றியும் ஒரு பரவலான விழிப்புணர்வு தேவைப்படுகின்றது. இந்த விழிப்புணர்வு வளர்ந்தவர்களுக்கும், குறிப்பாக இவற்றில் பரிச்சயமாகும் ஏதுநிலையைக் கொண்ட இளவயதினருக்கும் தேவைப்படுகின்றது. மதுவுக்கு மட்டுமல்ல எந்தவொரு விஷயத்துக்கும் அடிமையாகாமல் வாழுவது தானே வாழ்க்கை.

ஓம் டொக்ரர் .. அதுக்கு வாழ்க்கை என்றால் என்ன வென்று தெரிய வேணும்....

ஒரு ஞானி சொன்னார் வாழ்க்கை என்பது ஒரு இசைக்கருவி என்று. அது இசைக்கருவி என்பது எங்களில் பலபேருக்குத் தெரியாது. சிலபேருக்கு இசைக்கருவி என்று தெரியும் ஆனால் வாசிக்கத் தெரியாது. இன்னும் சிலபேருக்கு அது இசைக்கருவி என்றும் தெரியும் வாசிக்கவும் தெரியும் ஆனால் ரசிக்கத் தெரியாது. கொஞ்சப்பேருக்குத்தான் அது இசைக்கருவி என்பதும், வாசிக்கவும்ரசிக்கவும்தெரிகிறது.



இளவயதில் மதுவைப் பரிசோதித்துப் பார்த்தல் என்பது முதிர்ச்சியுறாத அவர்களது மூளையில் பல்வேறுவிதமான பாதிப்புகளை ஏற்படுத்துவதோடு, அவர்களை மிக விரைவாக அடிமை நிலையை நோக்கியும் இட்டுச் செல்கின்றது

டாக்ரர்... குடும்பம், குழந்தை, குட்டி, வீடு என்ற பிணைப்போடு வாழ்ந்த எமது சமூகத்தில் உள்ள பல பெற்றோர் இன்று பிள்ளைகள் இன்றித் தனித்து ஒரு வெறுங்கூட்டு நிலையில் வாழ்கின்றனர். வீடுகள் யாவும் வெறுங்கூடுகள் ஆகிப் போயிருக்கின்றன. இந்த நிலை மையை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்...

உண்மையிலேயே இது மிகவும் கரிசனையோடு ஆராய்ந்து பார்த்துத் தீர்வுகளை நோக்கி நகரவேண்டிய ஒரு விடயமாக இன்று எம்முன் விஸ்வரூபம் எடுத்து வருகின்றது. இன்று வெறுங்கூடுகளாக இருக்கும் வீடுகளிற் பல முன்னர் பசுஞ்சோலைகளாக இருந்தன. ஆரம்பத்தில் உயிர்த்துப்புவதற்காகவும், பின்னர் பாதுகாப்புக்காகவும், அதன் பின்னர் பொருளாதாரத்துக்காகவும் என இருந்த வெளியேற்றங்கள் தற்போது ஆசை, வேணவா மற்றும் வேறு பல நிர்ப்பந்தங்கள் காரணமாக ஏற்படுகின்றன. இளைய தலைமுறைகளைச் சேர்ந்தவர்கள் தத்தம் கூடுகளில் இருந்துவெளிக்கிட்டு,பறந்துசென்றனர். இந்த நிலை காரணமாக அவர்தம் பெற்றோர்தனித்துவிடப்பட்டநிலையில் இங்குவாழ்கின்றனர். இன்றுதனித்துக் கஷ்டப்படும்இவர்கள், அன்றுதாம்நடுத்தர வயதில், சக்தியோடு இருக்கையில், தம் பிள்ளைகளின் எதிர்காலத்தை முக்கியமானதாகக் கருதி அவர்களை அனுப்பி வைத்தனர். அவ்வாறு போன பிள்ளைகளும் அந்த அந்தத் தேசங்களில் குடியேறி, வேர் ஊன்றித் தமது வாழ்வை முன்னெடுத்தார்கள். இப்போது அவர்களால்அடிக்கடிவந்துதமது பெற்றோரைப்பார்க்கமுடியாமல், அதற்கான வாய்ப்புக்கள் இல்லாமல், அந்தந்தநாடுகளின்நடைமுறைக்கு ஏற்ற வகையில் பெற்றோரை அழைத்து தம்முடன் தங்கவைக்க முடியாமல் தவிக்கின்ற



னர். இக்கரையிலும் அக்கரையிலும் இந்த தத்தவிப்புகள், பெருமூச்சுக்கள்தொடர்ந்த வண்ணம்உள்ளன. இந்தநிலைமிகவும் துன்பகரமா னது. எனது பார்வையில் வெளிநாட்டில்இருந்துவந்துபோகக்கூடிய வாய்ப்புக்களும் வசதிகளும் கொண்டவர் கள், தங்களுக்குள் ஒரு ஒழுங்குமு றையை வைத்துக் கொண்டு தமது பெற் றோரை வந்து பார்த்துச் செல்லுதல் விரும் பத்தக்கது. உதாரணமாக நான்கு பிள் ளைகள் வெளிநாடுகளில் வசிப்பார்கள் என்றால் அவர்கள் தமது பயண ஒழுங்கு களைத் தங்களுக்கு ஏற்றவகையில் பிரித் துக் கொண்டு நான்கு மாதங்களுக்கு ஒரு முறையோ அல்லது ஆறு மாதங்களுக்கு ஒரு முறையோ ஒவ்வொருவராக வந்து போவது பிரயோசனமானது. பெற்றோ ரின் பார்வையில் ஒவ்வொரு நான்காவது மாதமும், அல்லது ஆறாவது மாதமும் உதவிக்கு ஒரு பிள்ளை இருக்கும். பின்பு அடுத்த பிள்ளை வருவதற்கான நம்பிக் கையோடுகாத்திருப்புகள்தொடரும்.

அதை விடுத்து பிள்ளைகள் எல்லோரும் ஒன்றாகவந்துநின்றுவிட்டுப்பின்புஒரேய டியாகப் போய்விடுவது என்பது மிகுந்த மனவேதனையை ஏற்படுத்தி, பெற்றோ ரின் மனநிலையில் மேலும் வெறு மையை ஏற்படுத்தலாம். பிள்ளைகள் தமது வீட்டுக்கு வருகின்ற போது முடியுமா னளவு முழுநேரத்தையும் தமது பெற்றோ ருடன் செலவிடுவது நல்லது. அதைவி டுத்து, உறவினர்கள், ஊர்கள், கோயில் கள், மலைநாடு என்று பெரும்பாலான நேரத்தைச் செலவழித்துவிட்டுச் செல்வது பெற்றோருக்குப்பெரியளவில்பிரயோசன மாக இருக்காது. போதாக்குறைக்கு வய தான பெற்றோரை அங்குமிங்கும் அலைக்கழித்து, அவர்களிடம் இருக் கின்ற ஆரோக்கியத்தைக் கெடுக்காது பார்த்துக் கொள்வதும் அவசியமானது.

எனது அவதானிப்பில் தனித்திருக்கும் பெற்றோர் தங்களுக்கு இடையிலான சம நிலை பேணப்படும் வரையில் தமது வாழ்க்கையைஎந்தப்பிரச்சினையும்இல் லாமல் கொண்டு நடத்துவர். தப்பித் தவறி ஒருவருக்கு ஏதும் பாதிப்பு அல்லது நோய் வந்தால் அது அவர்களது சமநிலையைக் குலைத்து அவர்களது வாழ்வைக் கேள் விக் குறியாக்கி விடுகின்ற வாய்ப்பிருக் கின்றது.

டொக்ரர்.. இதனைக்கையாள்வ தற்கான வழிவகைகள் ஏதாவது இருக்கின்றனவா....?

இந்த நிலைமைக்கான பொருத்தமான தீர்வு என்ன என்பது எனக்குத் தெரியாது. எனினும் தனித்திருக்கும் முதியவர்களின் தொகை அதிகரித்துக் கொண்டு செல்கின் றது என்பதையும், அவர்களது உளசமூ கப் பிரச்சினைகள் சிக்கலானவை என்பத னையும் நான் ஒரு நெருக்கடி (Crisis) நிலையாகவே பார்க்கிறேன். இந்தப் பிரச் சினை முன்னுரிமை அடிப்படையில் அணுகப்பட வேண்டியுள்ளது. அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்கள் இந்தப் பெற்றோருக்கான சேவைகளை வழங்க முன்வர வேண்டும் என்பதே எனது விருப்பமாகும். இது இன்றையமுக் கியமான சமூகத்தேவை என்றே நான் கருதுகின்றேன்.

உளவியல் சிகிச்சைகளைப் பெறுவ தில் சமூகத்தின் மனநிலை முன் னைய காலங்களோடு ஒப்பிடுகை யில்இன்றுஎந்தவாறுகாணப்படுகின் றது....

உளநோய்களோடு பின்னிப்பி ணைந் துள்ளகளங்கமனப்பான்;மைஅதுதொடர் பான சிகிச்சையைப் பெறுவதில் எதிர்ம றையான செல்வாக்கைச் செலுத்துகின் றது. பலர் சமூகத்தில் இருக்கும் 'அந்த நாலுபேருக்கு'ப் பயப்பிடுகின்றனர். இந் தப் பயம், களங்கம் தொடர்பான மன நிலை பல குடும்ப உறுப்பினர்களையும், உளப்பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டவர்



களையும் மௌனமாகத் தம்முள் அமிழ்ந்துதுன்புறவைக்கின்றது.

கடந்த இரண்டு தசாப்தங்களோடு ஒப்பிட் டுப் பார்க்கும்போது, முன்னர் இருந்ததை விடத் தற்போது உளநல சேவையை நாடும் போக்கு அதிகரித்துள்ளமை தெரி கின்றது. உளநலசேவைகளைநாடிவரும வர்களுடைய எண்ணிக்கையும் அதிக ரித்துக் கொண்டு செல்கின்றது. நிலைமை இவ்வாறு முன்னேற்றகரம்போல் இருந் தாலும், இன்றும் கூட உளநோய் ஏற்பட்ட வர்களை அறைக்குள் பூட்டிவைத்து வைத்தியசாலைக்குக் கொண்டு வராமல் இருக்கும் நடைமுறைகளும் நிகழ்ந்த வண்ணமே இருக்கின்றன. இதனது மறு பக்கமாக மிகவும் சிறிய சிறிய பிரச்சினை களுக்கே உளவியல் உதவியை நாடும் போக்கும் அதிகரித்துள்ளது.

இந்தவாறு விடயங்கள் இருந்தாலும், நான் வருந்திக் கொண்டிருக்கும் ஒரு பிரச் சினை பற்றி இந்த இடத்தில் வெளிப்படுத்த விரும்புகின்றேன். தற்போது உளநல சேவைகளை நோக்கி வருபவர்களின் எதிர்பார்ப்புக்கு உகந்த வகையில் அவர்க ளுக்கான உதவிகளை வழங்குவதற்கு ரிய போதிய ஆளணி வசதிகள் எம்மிடம் இல்லாமல் இருக்கின்றன. ஒருபக்கத்தில் அதிகம் பேர் சேவையை நாடுகிறார்கள். மறுபுறத்தில் உளநலப் பரப்பில் வேலை செய்வதற்குரிய ஆளணி பற்றாக்குறை யாக உள்ளது. இதை ஒரு முரணணி என்று கூறுவதைத் தவிர என்ன செய்ய லாம்!

பாலியல்சார்ந்தவிலகல்நடத்தைகள் இன்று அதிகரிப்பதைப் பாலி யல் கல்விமற்றும்இனப்பெருக்கசுகாதாரம் பற்றிய சரி யான அறி வின்மையின் வெளிப் பாடாக நோக்கலாமா? அல் லது இதற்கு வேறு பின்னணிகள் ஏதும்உள்ள னவா?

தற்போது பாலியல் விலகல் நடத்தைகள் சம்பந்தமாகப் பலமுறைப்பாடுகள் பதிவு செய்யப்படுவதை அவதானிக்க முடி கின் றது. முறைப்பாடுகள் செய்யலாம் என்ற விழிப்புணர்வும், அதற்கான இடங்களின் மற்றும் சேவைகளின் ஒழுங்குபடுத்தல்க ளும் இதனைச் சாத்தியமாக்கியிருக்க லாம்என வாதிடலாம்.

ஆயினும், தனிப்பட்டரீதியில் இந்த வகை யான செயற்பாடுகள்தற்பொழுதுஅதிகரித் திருப்பதாகவே நானும் கருதுகின்றேன். நீங்கள் கூறுவதுபோல் பாலியல் சார்ந்த அறிவின்மையின் ஒரு வெளிப்பாடாக வும் இதைக் கருதமுடியும். ஏனெனில் குறித்த விடயம் சார்ந்த அறிவு பரவலாக இருக்கும்போது அந்த விடயம் சார்ந்த விலகல்கள் குறைவாகவே காணப்படும் என்பது ஒரு பொதுவான உண்மை.

எனினும் இங்கு பாலியல் விலகல் நடத் தையில் ஈடுபடுபவர்களாகத் தங்களை மாற்றிக் கொள்ளும் போக்கு அதிகரிப்பது எதனால்என்பதுபற்றிஆழமான ஆராய்ச் சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். பாலி யல் விலகல் நடத்தைகளால் பாதிப்புக்கு உள்ளானவர்கள் தொடர்பாக நாங்கள் போதுமானளவு கரிசனையும் அக்கறை யும் எடுத்துச் செயற்படுகின்றோம். அது போல் விலகல் நடத்தையில் ஈடுபட்டவ ரைப் பற்றியதாக, அவ ரின் கோணத்தில் இருந்தும் ஆய்வுகள் மேற் கொள் ளப் பட வேண்டும். அப்பொழு துதான் இவ்வாறான நடத்தைகளின் அதிக ரிப்புக்கான காரணங்க ளும் பின்னணிகளும் தெளிவாக இனங்கா ணப்படலாம்.

சமூகத்தைநெறிப்படுத்த ஆன்மிகம்சார்ந்த செயற்பாடுகள்உதவும் என்றகருத்துக்கள் முன்வைக்கப்படுவதை நீங்கள்எவ்வாறு நோக்குகின்றீர்கள்...

உலக சுகாதார நிறுவ னத்தின் ஆரோக்கியத் துக்கான வரைவிலக்க ணம்உடல், உளம்சமூ கம் என்ற அடிப்படை களை மட்டுமே தற்பொ ழுது கொண்டுள்ளது. எனினும்அதில் ஆன்மி கம் இணைக்கப்பட வேண்டும் என்னும் கருத்து பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டி ருக்கின்றது. இருப்பினும், இன்னமும் அது உத்தியோகபூர்வமாக இணைக்கப்ப டவில்லை. எனினும்நாம்அதைப்பயன்ப டுத்தி வருகின்றோம்.

ஆன்மிகம்என்பதுமனிதருக்குப்பயனுள் ளது என்பதில் மாற்றுக் கருத்தில்லை. எனி னும் அதனது வரையறை என்பது முக்கி யமானது. ஆன்மிகம் என்று நாம் எத னைக் கருதுகின்றோம் என்பதில் தெளிவு தேவைப்படுகின்றது. ஆன்மிகம் என்பது மதங்களைக் கடந்தது என்றே நான் கருது கின்றேன்.

மத சம்பந்தம் பெறாத ஒருவராகவே கட வுளை ஞானிகள் கருதி நிற்கின்றனர். அது குறுகிய வட்டமுடையதும் அன்று. உண் மையில் ஆன்மிகத்தால் நாங்கள் நற் பயனை அடைய வேண்டும் எனில், அடிப் படையில் அது தொடர்பான புரிதல் முக்கிய மானது. புரிதல் இன்றிப்போனால் நாம் வழமையாகக் கையாளும் சடங்கு நிலைப்பட்டதாகவே ஆன்மிகமும் உரு மாறிவிட வாய்ப்பிருக்கின்றது. நாம் அதற் குள் அமிழ்ந்து, ஆரோக்கியமற்ற நிலையை அடையும் துர்ப்பாக்கியம் நிகழ லாம். அதுதான் இன்று நிகழ்ந்துகொண்டி ருக்கின்றது போலத்தெரிகின்றது.

ஆன்மிகம் என்ற சொல் வரைவிலக்க ணங்களைத் தாண்டியது என்றால், அது அதைப் பார்ப்பவர் கோணத்தில் இருந்து பொருளைக் கொடுக்கலாம். எனினும் எடுத்துக்கொண்ட அந்தப்பொருளில்தெளி வாகி, பின்பு அது வாழ்வியல் தத்துவமாகி, மற்றவர்களுக்கும் தனக்கும் பிரச்சினை கொடுக்காமல் இயல்பான நிலையில் அது பயணிக்கும் என்றால், ஆன்மிகப் பயண மானது பயன்தரும் ஒன்றாக மாறலாம். அப்படியில்லாது பார்வைகள் இறுக்கம டைந்து, இதுவேசரிமற்றையவையாவும் பிழை என்கின்ற மனப்பாங்கில் அது இறு கிவிடுமாக இருந்தால் அது நாற்றமடிக்கும் குட்டையாகமாறிச்சமூகத்தைச்சிதைத்து விடும். இன்று மதங்கள் வெறுமனே மேலெழுந்த வாரியான சடங்குகளை முதன்மைப்படுத்துத்துபவையாகமாறியி ருக்கின்றன என்றே நான் கருதுகின் றேன். இவை இன்னும் ஆழமாக்ச்சென்று புரிந்துகொள்ளப்பட வேண்டியவை அவ் வளவுதான்.

நன்றி டொக்ரர். குறுகிய நேரத்துக்குள் நிறையவிடையங்களைப் பற்றி, பலபிரச்சி னைகளுக்கான மூலங்கள் பற்றி மாறுபட்ட கோணத்தில் உரையாடி இருக்கிறோம்

பாலியல் விலகல் நடத்தையில் ஈடுபடுபவர்களாகத்தங்களை மாற்றிக் கொள்ளும் போக்கு அதிகரிப்பது எத னால் என்பது பற்றி ஆழமான ஆராய்ச் சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். பாலியல் விலகல் நடத்தைகளால் பாதிப்புக்கு உள்ளானவர்கள் தொடர் பாக நாங்கள் போதுமானளவு கரிசனை யும் அக்கறையும் எடுத்துச் செயற்படு கின்றோம். அதுபோல் விலகல் நடத் தையில் ஈடுபட்டவரைப் பற்றியதாக, அவரின் கோணத்தில்இருந்தும்ஆய்வு கள் மேற்கொள்ளப்படவேண்டும். அப்பொழுதுதான் இவ்வாறான நடத் தைகளின்அதிகரிப்புக்கானகாரணங்க ளும்பின்னணிகளும்தெளிவாகஇனங் காணப்படலாம்.

என்று நினைக்கிறோம். இவை இன்னும் ஆழமாகவும் காத்திரமாகவும் சிந்தித்துச் செயற்படவேண்டியவை என்பது எங்க ளுக்குப் புரிகிறது. நீங்கள் நேர்காணலின் தொடக்கத்தில் குறிப்பிட்டதுபோல சிலரின் மனங்களிலாவதுஆழமானகேள்விகளை யும் காத்திரமான சிந்தனைகளையும் தேடல்களையும்இவைஉருவாக்கும்என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது. மீண்டும் எமது நன்றிகள் (டெக்ரர் சிரித்துக் கொண்டேவிடைதருகின்றார்)



‘யாழ்பாடி’யை மறந்த யாழ்ப்பாணத்தார்

கட்டுரை



அ. விஜயகிருஷ்ணன்

காரைநகரைச் சேர்ந்தவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத் துறையில் சிறப்புப் பட்டத்தைப் பெற்றவர். யாழ்.பல்கலைக்கழகத்தில் சிறிது காலம் விரிவுரை யாளராக இருந்தவர். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாப னத்தின் நேரடி ஒலிபரப்பாளராகப் பயிற்று விக்கப்பட்டு அங்கு கடமையாற்றினார். அரசியல், வரலாறு, மனித உரிமை விட யங்கள் தொடர்பாகப் பல்வேறு ஊடகங் களில் கட்டுரைகள் எழுதி வருகிறார். ‘புதிய முகவரி’ மாதாந்த சஞ்சிகையின் பிரதம ஆசிரியராகவும் உள்ளார்.

ஒவ்வொரு மக்கள் கூட்டமும் தமது பூர்வீகத்தைத் தேடிக் கண்டுபிடித்து நிறுவுவதில் பெருமை கொள்கின்றன. இந்தவகையில் அலெக்ஸ் ஹேலி என்பவரால் எழுதப்பட்ட ‘றூட்ஸ்’ (வேர்கள் என்று இந்த நூல் ஏழு தலைமுறைகள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது) என்ற நூல் மிகவும் பிரபல்யமானது. ஆபிரிக்காவிலிருந்து அமெரிக்காவுக்குக் கப்பல் மூலம் அடிமைகளை ஏற்றிச்செல்லும்முறை கி.பி.1619இல் ஆரம்பமானது. அந்த அடிமை வியாபாரத்தில் விற்கப்பட்ட ஒரு கறுப்பு மனிதனின் ஏழாவது தலைமுறையைச் சேர்ந்த ஒருவரே அலெக்ஸ் ஹேலி.

அவர் ஒரு அமெரிக்கக் குடிமகன்.
தனது மூதாதையரின் வம்சப் பெயர் தொடர்ந்து அந்த மக்களிடம் ஒரு பாடலாகக் கடத்தப்பட்டிருந்தது. ‘குண்டா’ அதன் பின் வந்த வம்சமான ‘கிண்டே’ ஆகிய சொற்களை மட்டும் வைத்து ஆபிரிக்கக் கண்டத்தின் சாம்பியா நாட்டில் உள்ள ஜப்பூர் என்ற குக்கிராமத்தில் தனது மூல வேரைக்கண்டுபிடித்தார் அலெக்ஸ்ஹேலி. இது ஒரு மறக்கப்பட்ட வரலாற்றையும், இனக் குழுக்களின் அடிவேரையும் கண்டுபிடிக்க அலெக்ஸ் ஹேலி என்ற தனி மனிதனின் தேடலுக்குக் கிடைத்த வெற்றி. நிலமை இவ்வாறு இருக்க, யாழ்ப்பாணம் என்ற உலகப் பிரசித்தி பெற்ற அல்லது ஈழத்தமிழருடன் இரண்டறக் கலந்த தலைநகரின் வேர் என்னவென்பது பலருக்குத் தெரிந்திருந்தும் அதைக் கண்டுபிடிக்க யாரும் முன்வரவில்லை. அண்மைக்கால போர்ப் புதைகுழிகளைப் பற்றிப் பேசுகின்ற தமிழன் தனது பிதாமகனான ‘யாழ்பாடி’யின் புதைகுழியைத் தேடிப் பார்க்க முனையவில்லை?
தனது வேரை மறந்த இனம் அல்லது வேரை மறைத்த இனம் ஒரு பூர்வீக வரலாற்றுக்குச் சொந்தக்காரராக இருக்க முடியாது. பழம் பெருமை பேசும் யாழ்பாணத்துத் தமிழரும், வரலாற்று ஆய்வாளர்களும் ஏன் யாழ்பாடியை மறந்தார்கள்? அல்லது இதுவிடயத்தில் ஏன் ஊமையாய் வாழ்கின்றனர்.

யாழ்பாடி பற்றித் தேடிப் பார்த்தால்....
“...அந்தக் காலத்திலே சோழநாட்டில் இருந்து இரண்டு கண்ணும் குருடாகிய கவிவீரராகவன் என்னும் யாழ்ப்பாணன் செங்கடக நகரிலிருந்து அரசாட்சி செலுத்தும் வாலசிங்கமகாராசன் பேரிற் பிரபந்தம் கொண்டு போய் யாழ் வாசித்துப் பாடினான். அரசன் அதைக்கேட்டு மிக்க சந்தோசம் கொண்டு அவனுக்குப் பரிசிலாக இலங்கையின் வடதிசையில் உள்ள மணற்றிடல் என்னும் இந்நாட்டைக் கொடுத்தான்...” (இந்த மணற்றிடல் கரையூரும், பாசையூரும் என இராச நாயக முதலியார் குறிப்பிட்டுள்ளார். யாழ்ப்பாணவைபவமாலை-முதலியார் குலசபாநாதன் பக். 23)
மேற்படி குறிப்பு யாழ்ப்பாண வைபவமாலையில் காணப்படுகிறது. முதலியார் குல.சபாநாதன் அவர்களால் எழுதப்பட்ட இந்த நூல் மிக முக்கிய வரலாற்று ஆதாரமாகக் கொள்ளப்படக்கூடியது. யாழ்ப்பாண வரலாற்றைக் குறிப்பிடும் வைபவமாலைக்கு கைலாயமாலை, வையாபாடல், பரராசசேகரனுலா, ராசமுறை போன்ற நூல்கள் ஆதாரமாக இருந்துள்ளன என்ற குறிப்பும் யாழ்ப்பாண வைபவமாலையில் உண்டு.
வையாபாடல் என்ற நூலின் இறுதிப்பகுதியில் யாழ்பாடியின் வரலாறு இருந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது. மேலும் யாழ்ப்பாண வைபவமாலை நூலில் யாழ்ப்பாணம் என்ற தலைப்பில் “...யாழ்ப்பாணன் இதற்கு யாழ்ப்பாணம் என்று பெயரிட்டு, இவ்விடத்தில் வந்திருந்து வடதிசையில் சில தமிழ்க் குடிகளை அழைப்பித்துக் குடியேற்றி, இவ்விடமிருந்த சிங்களவர்களையும் அவர்களையும் ஆண்டு, முதிர்வயதுள்ளவனாய் இருந்து இறந்து போனான். அந்தக் காலத்திலே சிங்களவரும், பிறரும் இந்நாட்டை அரசாளக்கருதி தமிழ்க்குடிகளை ஒடுக்கியதால், தமிழ்க் குடிகள் மீண்டும் தங்கள் நாட்டுக்குப் போய்விட்டார்கள்...” (மேற்கூறப்பட்ட அதே நூல் பக். 24)
யாழ்ப்பாணவைபவமாலையின் இந்தக் குறிப்பானது பல விடயங்களைத் தெளிவுபடுத்துவதாய் உள்ளது.
1) யாழ்பாடிக்குக் கிடைத்த மணற்றிடல் பகுதியான குருநகர், பாசையூர்ப் பகுதிகளில் ஏற்கனவே சிங்களவர்கள் இருந்துள்ளார்கள்.
2) வடபகுதியிலிருந்து குடியேறிய தமிழர்கள் கீரிமலை, மாவிட்டபுரம் பகுதியில் அதாவது குருநகர், பாசையூருக்கு வடக்கே இருந்து வந்து குடியேறினார்கள். பின்னர் அவர்கள் திரும்பிப்போனார்கள்.
3) யாழ்பாடி என்ற கண்தெரியாத அந்த மனிதர் வயதாகி இறந்தார் என்ற செய்தியும் உண்டு. வயதாகி இறந்த யாழ்பாடியை எங்கு அடக்கம் செய்தார்கள்? அதற்கான நினைவுச்சின்னமோ, குறிப்புக்களோ இல்லை. எப்போதோ கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தில் இருந்த விடயங்களுக்குக் கூட ஆதாரங்கள் இருக்கும்போது, யாழ்பாடி திட்டமிட்டு மறைக்கப்பட்டாரா? நாவலரின் குறிப்புக்களில்கூட யாழ்ப்பாடி பற்றி உள்ளதாகத் தெரியவில்லை. (சில வேளை ஆறுமுகநாவலரின் பூட்டனாக அல்லது அவரது பரம்பரையைச் சேர்ந்த வராக யாழ்பாடி இருந்திருந்தால் தலையில் தூக்கி வைத்திருக்கலாம். ‘எங்கள் உரித்து’ என்றிருக்கவும் சந்தர்ப்பம் உண்டு. இது விடயத்தில் மேலும் யாழ்ப்பாண வைபவமாலைக் குறிப்பில் “...முதலியார் இரசநாயகத்தின் கருத்துப்படி சிங்களவர் நல்லூருக்கு வைத்த யாப்பநே ‘யாப்பா பட்டுநே’ என்னும் பெயரே பிற்காலத்தில் யாழ்ப்பாணம் என மருவியது என திரு. எஸ். டபிள்யு. குமாரசாமியும் சுவாமி ஞானப்பிரகாசரும் கருதுகின்றனர்.
“யாழ்ப்பாணம் என்னும் பெயர் 15ஆம் நூற்றாண்டுச் சிங்களநூலில்தான் முதல் முதல் காணப்படும்” என்ற குறிப்பும் உள்ளது. (யாழ்ப்பாணவைபவமாலைபக். 24)
அதேவேளை, யாழ்ப்பாண வைபவமாலையில் மற்றொரு குறிப்பும் யாழ்ப்பாணம் பற்றிக் காணப்படுகிறது. “...14ம் நூற்றாண்டின் இறுதியில் இருந்தவராகக் கருதப்படும் அருணகிரிநாதர் ‘யாழ்ப்பாணாயன் மருவிய பெருமாளே” எனக் குறிப்பிட்ட இடம் யாழ்ப்பாணத்தையே குறித்தது என்றும், அதனால் யாழ்ப்பாணம் என்னும் பெயர் தமிழ்ப்பெயர் எனவும் கொள்வர் ஒரு சாரார்.” அருணகிரிநாதர் குறித்த இடம் எருக்கத்தம்புரியூர் என்பாரும் உளர். எங்ஙனமாயினும் அருணகிரிநாதர் குறிப்பிட்டதலம் ஈழநாட்டின் கண்ணதேயென்பது வலியுறின் யாழ்ப்பாணம் என்னும் சொல் சிங்களப் பெயரடியாகப் பிறந்ததெனும் கொள்கை வலியிழந்துபடும்...’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (மேற்கூறப்பட்ட நூல் பக். 24)
இந்தக் குறிப்புக்கள் யாழ்ப்பாண அறிஞர்கள் அவ்வப்போது ஓலைச்சுவடிகளில் குறித்து வைத்தவை என்பதும், காலத்துக்குக்காலம் அவை தொகுக்கப்பட்டன என்பதும் இறுதியில் அச்சேறி யாழ்ப்பாண வைபவமாலை என்ற நூல் வடிவம் பெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. அவ்வாறெனில், இந்த யாழ். குடாநாட்டின் பிதாமகனான வீரராகவன் அல்லது பாணன் அல்லது யாழ்பாடி என்ற அந்த இரண்டுகண்களும் குருடான மனிதனை ஏன் யாழ்ப்பாணச் சமூகம் கருத்தில் எடுக்கத் தவறியது? என்பதே இங்குள்ள கேள்வி.



யாழ்பாடி திட்டமிட்டு ஒதுக்கப்பட்டாரா?
சுவாமி விபுலானந்தர் ஆய்வு செய்து எழுதிய யாழ் நூல் பற்றிப் பெரிதாக எடுத்துக் கொள்ளும் தமிழ் அறிஞர்கள் அந்த யாழை வாசித்துப்பாடி யாழ்ப்பாண நிலத்தைப் பரிசாகப் பெற்று இங்கு வந்து குடியேறி, இந்த மண்ணில் இறந்துபோன யாழ்பாடியை ஏன் மறந்தனர்? 1974ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டின் போது, பலரது சிலைகள் யாழ். நகரமெங்கும் நிறுவப்பட்டன. ஆனால், யாழ்பாடிக்கு எந்த முக்கியத்துவமும் கொடுக்கப்படாதது ஏன்? ஓர் இனத்தின் பிதாமகன் அல்லது ஆதித் தந்தை அந்த இனத்தவரால் புறக்கணிக்கப்பட்டிருப்பது இந்த மக்களின் நன்றி உணர்வற்ற தன்மையைக் காட்டுகிறதா? அல்லது வரலாற்றைப் பேணும் தன்மை அறவே இல்லை என்பதைக் காட்டுகிறதா? அல்லது திட்டமிட்டு யாழ்பாடி ஒதுக்கப்பட்டாரா?
யாழ்ப்பாணன் அல்லது யாழ்பாடி வாழ்ந்து மறைந்த பகுதியை நம் முன்னோர்களின் செவிப்புலச் செய்திகள் மூலமும், நாட்டுக்கூத்து, ஏனைய கோயில் பாடல்கள் மூலமும் அறியமுடியும். கி.பி.

'யாழ்ப்பாடி'யை மறந்த யாழ்ப்பாணத்தார்

1505இல் போர்த்துக் கேயர் வருகைக்குப் பின்னரே பாசையூர், குருநகர்ப் பகுதிகளில்வாழ்ந்தமக்கள்கிறிஸ்தவமதத்தைத் தழுவினார்கள். அதற்கு முன்னான வரலாற்றின் தேடல் என்பது யாழ் பாடியின் மூலங்களைக்கண்டறியஉதவும். பாசையூர், குருநகர்ப் பகுதி மக்கள் மத்தியில் இசையுடன் கூடிய நாட்டுக்கூத்து பிரபல்யமானது. இதன் மூலவேர் யாழ்பாடியின் இசையிலிருந்து ஊற்றெடுத்ததாக இருக்கலாம்!

ஒவ்வொரு வருடமும் நாட்டுக்கூத்து மற்றும் பல விடயங்களில் சாதனை நிலை நாட்டியவர்களுக்கு 'யாழ் விருது' வழங்கிக் கௌரவிக்கப்படுகின்ற நிலை காணப்படுகின்ற போதிலும், யாழை இங்கு கொண்டுவந்த யாழ்பாடி புறக்கணிக் கப்பட்டு யாழ் மட்டும் முன்னிலைப்படுத் தப்படுகிறது. யாழ் விருதை கையில் வாங்கியவர்களும் அந்த யாழுக்குரியவன் எங்கே என்றுதேடாதுவிட்டதுதான்துயரமானது. யாராவது ஒரு சிங்கள ஆய்வாளரோ, வெளிநாட்டு ஆய்வாளர்களோ யாழ்ப்பாணம் என்ற பெயர் எப்படி வந்தது? என்று ஒரு யாழ்ப்பாண வாசிகளைக் கேட்டால் மறக்கப்பட்டுள்ள யாழ்பாடியின் கதையைக் கூறாமல் அதை விளங்கப்படுத்த முடியாது. அதே ஆய்வாளர்கள் யாழ்பாடி என்ற அந்தப் பிதாமகனின் வரலாற்று எச்சங்கள் எங்குள்ளன? அதைப் பார்க்க விரும்புகிறோம் என்று கேட்டால் தமிழ் வரலாற்றாசிரியர்களிடமோ, ஆய்வாளர்களிடமோ பதில் இருக்கமுடியாது.

யாழ்பாடியைத் தவிர்த்த யாழ் மாத்திரம் எதற்கு?

யாழ்ப்பாணப்பெரியார்கள்என்ற வகையில்நவாலியூர்சோமசுந்தரப்புலவர், கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி, சேர்.பொன்.இராமநாதன், சேர்.பொன். அருணாசலம், ஆறுமுக நாவலர், கல்லடி வேலன் எனப் பலருக்கு யாழ்ப்பாணத்தில்சிலை வைத்துள்ளபோதிலும், யாழ்பாடிக்கோ அல்லது யாழ் நூலைஆய்வுசெய்தவிபுலானந்தருக்கோ யாழ்ப்பாணத்தில் சிலை வைக்கவில்லை.

குறைந்தபட்சம் ஒரு வீதிக்குக்கூட யாழ்பாடிவீதி, விபுலானந்தர் வீதியெனப்பெயர் வைக்கவில்லை. ஆனால், யாழை நாம் மறந்துவிடவில்லை என்பதற்கு ஆதாரமாக வடமாகாண சின்னத்தில் மட்டும் யாழுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணன் என்பவர் சோழ மன்னனின் அவையில் யாழ். வாசித்துப் பாடியதற்காகப் பரிசாகப் பெற்றவரையோ, யாழ்நூலை ஆய்வு செய்தவரையோ யாழ்ப்பாண மக்களும் ஆட்சியாளர்களாகிய வடமாகாண சபையும் மறந்தது ஏனோ? யாழ்:ப்பாணத்து மக்களின் வாழ்வியல் மரபின் முதற்படியே நன்றிக்கடன் செலுத்தாத வகையில் உள்ளது. தமிழ் மக்கள் தாங்கள் யாரென்பதைத் தெளிவாக விளங்கிக்கொள்வது அவசியம்.

யாழ்ப்பாணம் என்றால்நல்லூர்க் கோயில் என்று அடையாளப்படுத்தி இலங்கை அரசு நாணயம் வெளியிடும் அளவுக்கு யாழ்ப்பாணத்தின் தொன்மை மறைக்கப்பட்டு விட்டது. இது விடயத்தில் தமிழ் வரலாற்றுப் பேராசிரியர்கள் தமது கருத்துக்களை முன்வைக்கவேண்டும். இதற்கான புதிய ஆய்வுகளை முன்னெடுக்க வேண்டும். யாழ் பாடியின் வரலாறு பக்கச் சார்பற்ற முறையில் எழுதப்படல் வேண்டும்.

யாழ்பாடியின் வரலாறு தொடர்பில் பல நேரடி உரையாடல்கள், தென்னிந்திய ஆதாரங்கள், பிரித்தானிய அமெரிக்க ஆவணக் காப்பகங்களில் உள்ள ஆதாரங்கள், கண்டி நூதனசாலை மற்றும் கொழும்பு ஆவணக் காப்பகம் போன்ற வற்றில் உள்ள ஆதாரங்கள், ஓலைச் சுவடிகள், செவிவழிச் செய்திகள், பத்தகிகள் போன்றவற்றுடன் மேலைத்தேய அறிஞர்களதுகுறிப்புக்கள்எனபலவற்றையும் ஆய்வுசெய்து யாழ்பாடியின் வரலாறு எழுதப்படல்வேண்டும். ஒருசிலரதுதனிப் பட்டகருத்துக்கள்அல்லதுமுந்திக்கொண்டு வெளியிடும் அறிக்கைகள் வரலாறு ஆகாது.

ஐப்பானியர்கள் தமது தொன்மை வரலாறு, தொன்மை இனக்குழுக்களின் பெயர்களையே தமது நவீன உற்பத்திப் பொருள்களுக்குப்பெருமையுடன்சூட்டியிருக்கிறார்கள். பியூஜி, ஹொண்டா, கவசாக்கி, சொனி, ஹிற்றாச்சி, கொன்ஷாய், கனொன்.... என்பவற்றைக் குறிப்பிடலாம். அதன்மூலம்ஒவ்வொரு இனக்குழுவும் தமது வம்சத்தின் முன்னோர்களை வெளிக்கொணர்ந்துள்ளனர். தமிழர்கள் மட்டும் தமது தொன்மை அடையாளங்களைஏன்மறைக்கவேண்டும்? மறைப்பதில்என்ன பெருமையிருக்கிறது?

வேர்கள் என்ற நூலை எழுதிய அலெக்ஸ் ஹேலி அமெரிக்காவிலிருந்து ஆபிரிக்கா வரை பயணம் செய்து, ஆயிரக்கணக்கான மூலக் குறிப்புக்களை ஆராய்ந்து தனது மூத்த குடி தோன்றிய இடத்தைக் கண்டறிந்தார். இந்தளவுக்குச் சிக்கலான ஒரு பின்னணி 'யாழ்பாடி' விடயத்தில் இருக்கப்போவதில்லை. வேண்டுமென்றே மறைக்கப்பட்டஒன்றைத்தேடிப்பிடிப்பதுதான் இங்குள்ள வேலை. யாழ்பாடி யாரென்பதும், அவரது ஆதாரங்கள் வெளியிடுவதாலும் இன்று வரலாறு எனச் சோடிக்கப்பட்ட பல விடயங்கள் அர்த்தமற்றதாக மாற்றப்படவாய்ப்புண்டு.

யாழ் நகரம் நவீனமயப்படுத்தப்படவுள்ள நிலையில் நகரின் மத்தியில் அமைக்க வேண்டிய சிலை யாழ்பாடி யாழ் வாசித்துக்கொண்டிருக்கும் பெரிய சிலையாக இருக்கவேண்டும். இவ்வாறான விடயத்துக்குச்சிங்கப்பூரைமுன்னுதாரணமாகக் கொள்ளமுடியும். வரலாற்றில் வாழ்ந்து மடிந்த யாழ்பாடியின் உருவத்தை வடிவமைப்பதில்சிரமம்இருப்பதாககூறமுற்பட்டால், இந்துக் கடவுள் சிலைகள், திரு வள்ளுவர், அவ்வையார் போன்ற பல கற்பனைச் சிலைகளைஉருவாக்கியவர்கள் தலைகுனியவேண்டுமல்லவா?

இலையுலர்ந்த காலத்தின் சலனம்

கவிதைகள்



சித்தாந்தன்

யாழ்ப்பாணம் கோண்டாவிலைச் சேர்ந்தவர். யாழ்.மத்திய கல்லூரி ஆசிரியர். கவிதைகளுடன்சிறுகதைகளும்விமர்சனங்களும் எழுதிவருகிறார். 'தருணம்' என்ற வலைப் பதிவிலும் எழுதுகிறார். 'மறுபாதி' எனும் கவிதைக்கான சஞ்சிகையின் ஆசிரியர். 'காலத்தின் புன்னகை', 'துரத்தும் நிழல்களின் யுகம்' போன்ற கவிதை நூல்களை வெளியீடு செய்துள்ளார்.

நீங்கள் பேசத்துணியாத ஒரு சொல்லைக்
கண்டெடுத்திருக்கின்றேன்

பளிங்காய் ஒளிரும் காலத்தை
பிசைந்தாக்கிய இச்சொல்
உடைந்த வீடொன்றின் கூரைக்குள்
பறவைக்கூடாய்ச் சிதைந்து கிடந்தது
நெடுந்தொலைவின் அசையும் படிமங்களை உற்பவித்து
நீர்ச்சலனத்துடன் அடங்கிய பெருங்காட்டுத்தீயை
கனவுகளில் அவிழ்க்கிறது இச்சொல்

நீரை விழுங்கிப் புரையேறிய வேடுவன்
மரங்களைப் பிடுங்கிவந்து
புதியகாட்டினை நடுகின்றான்
இலைகளை உலர்த்தும் மரங்களைத்
தன் கூந்தலில் சூடிய அழகி
பிரபஞ்சச் சூலிலிருந்து படைத்தளிக்கிறாள்
பூக்காத மரங்களை
நான் இச்சொல்லை
சவஊர்வலத்தின் சங்கீதமாகப் பாடவிரும்புகின்றேன்
பயணத்தில் தடுமாறிய கால்களோடு
மரங்களைத் தேடியலைபவர்கள்
வந்திருக்கிறார்கள் வேடுவனின் காட்டுக்கு

புறங்கூறும் முகம் கொண்ட யாவரும்
நிழல்களைப் புறமொதுக்கிப் பாதைவிதிகளை மறந்து
நடுவீதியில் உலாவிக் களிக்கையில்

நான் இச்சொல்லை மலராக்கி இதழ்களை
உதிர்த்து விடுகின்றேன்

அழகி தன்கூந்தலில் சூடிய
முதிர்ந்த மரத்திலிருந்து வேடுவனின் காடு பட்டுதிர்கிறது

இதழ்களாய் உலர்ந்த சொல்லை
அள்ளிப்போகிறது காற்று

அமைதியாகச் செல்லும் சவஊர்வலத்தின் பின்னால்
மிக அமைதியாக நான்



போதையுலராப் பொழுதின் ஐந்துகள்

சுருக்கக் குறிப்பு–1

தன் துக்கத்தை மலைகளுக்குப் பரிசளித்தவனின்
நிழலில் பதுங்குகிறது வரியடர்ந்த மிருகம்
காடுகள் வீழ்த்துக் கொண்ட பிறகு
நகரங்களின் மேலைமுடுக்குகளெல்லாம் பதுங்கித் தீர்ந்து
கலைத்து திரும்பியிருக்கிறது இவனிடம்

தன் சொற்களுக்குள் உதை ஒளித்து வைத்திருக்குமிவன்
துயில் மறந்த நோயால் அவஸ்தையுற்றான்
அவனின் புத்தகக் கட்டுகளுக்குள்ளிருந்து அது உறுமும்
பொழுதுகளில்
சாபத்தைத் தன் தலையில் தாங்கித் தீர்பவனைப் போலாய்
நள்ளிரவுகளில் வீதியிலிறங்கி ஓடினான்

நீதானித்த ஒரு பகற்பொழுதில்

இவனுக்கும் அதற்குமிடையில் ஒப்பந்தம்
கைச்சாத்தானது அதன்படி
இவன் தன் புத்தகக் கட்டுகளை விரித்துப் பெருங்காட்டை
வரைந்து குகைகளுக்குள் பதுங்கலானான்
அது தன் குரலைச் சுருக்கி உடல் வயிற்றில் புதைத்து கொண்டது

ஒற்குப்பிறகு
இவனுக்கும் அதுக்குமிடையில் பேதங்களை யுணரமுடியவில்லை
அது தன்னைப் போல்ருப்பதாக இவனும்
இவன் தன்னைப் போலிருப்பதாக அதுவும்
குற்றஞ்சாட்டத் தொடங்கின

முடிவில் ஒருநாள்
நகரத்தின் சந்தொன்றில் இகரசியமாக சந்தித்துக் கொண்டபோது
ஒன்றையொன்று குரோதத்துடன் கடித்துக் குதறின

இவனின் இரத்தைத்தைக் கண்டு அதுவும்
அதன் இரத்தைத்தைக் கண்டு இவனும் கதறத்தொடங்கினர்

இவனின் உடல் முழுதும் தழும்புகளாய் படர்ந்தன
அதன் வரிகள்
அதன் குரலில் பழிந்து போனது இவனது சொற்கள்

இப்போது இரண்டும் சேர்ந்து பெருங்காட்டை உருவாக்குகின்றன
தாம் வாழ்வதற்கு

தீப்பெட்டி...?

இந்த இது தொடர்பாக, புருஷன், பெண்சாதி, இருபேருக்குமிடையில், கதைவழி பெலத்தும் கொண்டது...?
"எனிக் கதைச்சது காணும்... கதையை நிப்பாட்ட டியாத்தை... எனி இதுக்கிருந்து கதைச்சாப்போலை... போன சாமான் திரும்பி எங்கடை கைக்கி வரப்போகுதே...?"



சிறுகதை



தையிட்டி
அ. இராசதுரை

"ஈழத்துச்சிறுகதைவரலாற்றில்நிரல்படுத்தக்கூடிய பத்து தரமான சிறுகதையாளர்களில் ஒருவர் இவர்" என்பதைச்செங்கைஆழியான்தனதுஈழத்துத்தமிழ்ச் சிறுகதை வரலாறு எனும் நூலில் குறிப்பிடுகிறார். யாழ்ப்பாணச்சமூகத்தின் குடும்ப உறவின் நுணுக்க மான கலாசார விழுமியங்களைத் தையிட்டி அ.இரா சதுரை மிக அற்புதமாகத் தனது சிறுகதைகளில் விவரிப்பார். பேச்சு வழக்கைச் சிறப்பாகக் கையாளு வதிலும், மெல்லிய நகைச்சுவை உணர்வுடன் கதை சொல்வதிலும் சிறப்பான இடத்தைப் பெற்றவர்.

உரிந்து விழப்போகின்ற, சாரத்தையும், வடிவாக, இறுக்கிக் கட்டிக்கொண்டே... தங்கவடிவேல், ஓர் ஐ.நா. பாணியில் மனைவி, வண்ணமயிலுக்கு, 'அட்வைஸ்' பண்ணத்தொடங் கினான்...? எந்த நேரத்திலும், கெடுபிடி... அடிபிடி... எல்லை நாடுகள் போலிருக்கும். பக்கத்து வீட்டு, ஓலை வேலிகளின், சங்கடமான, சரசரப்புச்சத்தங்களையும்... தங்கவடிவேலின் கழுதைக் காதுகளிரண்டும் பக்குவமாய் ஒலிப்பதிவு செய்து கொண்டுமிருந்தன....!

... இந்த ஓலை வேலிகளின்... சரசரப்புகளும்.. வரவரக் கூட வாய்ப்போகின்ற... 'நேச்சரில்...' இப்பொழுது... கதைவழிப்ப டும், அந்தஜயிற்றமும்... அந்தஜயிற்றத்துக்குரியவர்களும்... வடகொறியாவும், தென்கொறியாவும்போல... முண்டுசாத்தத் தொடங்கினால்..., என்று, தங்கவடிவேல்... பெண்டுகள்மயிர் பிடிபாட்டுச் சண்டையை நினைத்துவிட்ட... கலக்கடியில்... வேகக்கட்டுப்பாட்டினையிழந்தும்விட்ட.. வாகனமாய்... எவ் வளவோசொல்லச்சொல்லவும்தான், தன்னுடையமனைவி யானவள்... மூச்சுவிடாமலுக்கு, மண்வெட்டியெறிய... மீண் டும், தன்னையுமறியாமலே, சாரம், உரிந்து நிலத்தில் விழுந் தும்விட்டதுபோல... பொல்லாதகோபம், தட்டிய, தீக்குச்சிபோல், சுரீரென்றும் சீறிவருகின்றது. கடிந்து, கதைப்பதற்கு, அந்த வேளையாய்... வாயில், வேறெந்தவசனமும், வராத, குற்றத் துக்கு... வடகொறியா, ஏவுகணை நிகர், இரண்டு மூன்று... தூசண வார்த்தைகள்தான், பறந்துவந்து... மயிலின், வார்த் தைக் கடலில், விழுந்து மூழ்கி... எட்டித் தொடுமளவு தூரத்திலிருக்கும் ஆமிச்சென் றியிலிருந்து... சிங்களபைலா, பாடலின், சத்தவெடி ஒரு கலக் குக் கலக்கிக்கொண்டுமிருந் தது... அந்தத் தமிழ் 'ஏரியா' முழுவதும்... எந்தநேரம்.. எது நடக்கும்.. அருமந்த உயிர்க ளும்.. த்திரில்லாய்... போய்ப் பறியுமென்ற ஆமியதார்த்தங் கள்தாம். பன்பலாயிருந்தா லும் தான்... எல்லாத்தையும், 'forget' பண்ணி... அரசாங் கம்... வாரியள்ளிக்கொடுக் கும், குஷாலின், குளிர்ச்சியில்... நீச்சலடித்து, 'என்ஜோய்' பண் ண வும் தான்... ஒரு, குறைச்சலுமில்லையே...!! ஒரு, இனத்தின் வாழ்வி யலை... இன்னொருஇனம்... தராசில் போட்டு, வெயிற், பார்த்தகணக்காய்... தங்கவடி வேல்... 'திங்' பண்ணிப்பார்த்து முடித்த, கைவாங்குது வாங்க முன்னராய்... வடகொறியா வும்... தென் கொறியாவும் மாறிமாறி... ஏவுகணைவீச்சுக் குத்தொடங்கிவிட்டாற்போல... சரசரத்த ஓலை வேலிக்கரை யில்... இந்தத்தீப்பெட்டிஜயிற்றத் தின், ஹீரோயினான மயி லும்... அந்த, ஜயிற்றத்தின், வில்லியான, சரசுவும்... மாறி யான்... ஒரு பன்ப லுக்கெண்டு... ராமாலை நேரங் களிலை... உங் கடை... என்னம் பொண்டுக்கு... வாறதும்... குற்றம்தான்...? அயதி மறதீலை... சுருட்டுப்பத்த வென்று ... கைநீட்டி... வாங்கின, நெருப்பெட்டியை... தரமை...!! கொண்டுவந்ததும்... கொண்டுவந்துவிட்டதும்... பெரிய, கோடு கச்சேரி... குற்றமெண்டா... போய் வழக்கை வை... எங்களையென்னடிநீயும்.. உன்ரைஹஸ்பண்டும்... நெருப்பெட்டிக்கும் தண்டு தராதரமில்லாத ஆக்களெண்டு.. நினைச்சோடீ... உந்தளவு... உதயதாளமும்..." இப்படியெல் லாம்... படைமுறியக்கேட்டும் விட்ட... சரசு... " இந்தா பிடி... பொம்படச்சியார்... உன்ரை.. வீட்டுச் சீமண நெருப்பெட்டி யள்...?"

என்று, மூச்சு வாங்க... வாங்க... ஒரு, கிசுகிசுப்பை கொள் ளாத... தீப்பெட்டிகளைத் தூக்கிச் சுழற்றி... வேலிக்குமே லால்... வீசி எறிகின்றாள்...??

... கணையெறிவீச்சாய்... அந்தளவும்வந்து, மயிலின், மூஞ் சயிலடித்துவிழ... அந்தக் கிசுகிசு, பைகொள்ளாத, ஒரு நக்கலடிப்பு ஜயிற்ற மாக... அவ்வளவும், 'வெறும்' தீப்பெட்டிகள் தானென்பதை, கண் கொண்டு, பார்த்தும் விட்ட, மயில்... சீறிய தீக் குச்சிகள்போன்ற... பெரு நெருப்பாய், பத்திக் கொண்டும் வந்த, விச ரில்... அப்படியே... அவ்வ ளவையும், தூக்கி, வேலிக்குமேலால்.. திருப் பியடித்தகணக்காய், வீசி யெறிய... சண்டை... வலுத்தும் கொண் டது...?? சினம்... நூற்றுக் கணக்கான... சீறிய தீக் குச்சிகளாய்க் கெம்பிலி யாத்த, தான் சரியாகத் தான்... சங்கேனப்பட் டுப்போனேனென்ற, வெக்காளிப் போடு, வீட் டுத் திருத்த வேலைக் கென்று, பறித்த, கிறேஷர் சல்லியை மயில்... இரண்டு கைகளினா லும், வாரியள்ளியள்ளி... வேலிக்கு மேலால்... கைவாங்காமலுக்கு... வீசித்தள்ள... அவ்வள வும், கொத்துக்குண்டுகள் வீசுரமாய், சரசுவின் முகத்திலும்... தலையிலும்...???... இந்தக்காட்சியைப்பார்த்துவிட்ட, தங்க வடிவேல்... உரியத்தொடங்கிய, சாரத்தை, இறுக்கிக் கட்டிக் கொண்டே... தானும், இரண்டுகதை, கேட்கவென்று... ரெடி, பண்ணிய நேரமாய்...

"அங்கிள்..." என்றகுரல்கேட்டு, திரும்பிப்பார்த்தபோது... சென் ரியிலுள்ள ஆமிக்காரன், அரவிந்த... சண்டைபார்க்கவந்தும் விட்டவன்போல், நின்றுகொண்டிருக்கும் திடீர்க் காட்சி... !! ர ... சென்ரிக்காரனைக் கண்டும் விட்ட... அதிர்ச்சியில்... சண்டை... போன பக்கம் தெரியாமல்... சடின் Stop ஆகியும் விடுகின்றது... "... மொக்கத கரதெறாய்... ஏன் சண்டு பிடிக் குது...?" இந்தக் கிராமத்துச் சண்டையை ... இரசித்தும்... கொண்டும் விட்ட... அரவிந்த, இந்தத் தமிழர்கள் தங்களுக் குள்ளும்சண்டைபோடுகிறார்கள், எங்களோடும்... சண்டை போடுகிறார்கள்... என்றெல்லாம் ... இந்த நாட்டின்... யதார்த் தத்தையும், ஒரு கணம் அலசி எடுத்தவன்...

"அங்கிள்..கினிப்பெட்டியதெண்ட...??" என்று, பொருத்தமான, நேரத்தில்... பொருத்தமில்லாததொரு, கேள்விக் குண்டை யும்... 'பிளாஸ்ற்' பண்ணியும் விடுகின்றான்...??

பாஷை... புரியாமலுக்கு... முழிசிக்கொண்டும்... நின்ற... தங்கவடிவேல், மறுபடியும்... சாரத்தை இறுக்கிக்கட்டி, 'ரைமைக்' கடத்த சிகரெட்டை எடுத்து... வாயில் வைத்து .. 'சிக்னல்'.. காட்டியதும் பயந்து பயந்து... "தீப்பெட்டி No sir பிளீஸ்...??என்றுஉள்ளயதார்த்தத்தைச்சொல்லிவிட்டதும்... அரவிந்தநம்பியும்கொண்டான்..."

...மீண்டும்பைலாப்பாடலின்... சத்தவெடிகள்...

'இஞ்சார்... இஞ்சார்... பொம்பிளை... என்ரைமனிசன்... எனி சென்மமழிஞ்சாலும்... உன்ரை முத்தம் மிதியாது கண் டியோ..." "நெருப்பெட்டியளைப் பக்குவமா... சேத்துச் சேத்து வையடி...உன்ரை...மேளுக்கு..சீமணம்...குடுக்குறதுக்கு..." "ஓமடி???" பதுங்கு குழியில் சற்றுநேரம் பதுங்கியிருந்து விட்டு... எட்டிப் பார்த்துவிட்டு மீண்டும்... தீக்குச்சிகளைக் கீறிப்போட்ட கணக்காய்...

சரசுதான்... தொடக்கினாள்... சண்டையை... கெடுபிடி யுத் தத்தை...?

வடிவாய்க் கதை கேட்டுக்கொண்டு... ரொய்லெற்றுக்குள்ளி ருந்த மயில்.. அவதிப்பட்டு ரொய்லெற் கதவைச் சடாரென 'ஓப்பிண்' பண்ணவும்... திடீர் குண்டுச்சத்தம்..???யாரோ... ஆமிசென்ரிக்கு, குண்டு... வீசிவிட்டார்களென்ற... குண்டுவெ டிப்புக்கதை... குண்டாக வெடித்துப்பறக்கிறது... துப்பாக்கி வேட்டுக்களின்... கனமழைபொழிவுச் சத்தங்கள்...?? இரா ணுவ வாகனங்களின்... இரைச்சல்கள்...?? ஓட்ட பாட்டங் கள்..?? நாலாபக்கங்களுக்கும்... சனங்களின்... திகிலான... சிதறுசன்ன.. ஓட்டபாட்டங்கள்...?? திடீரட்டியனவாய்... சரசு, வீட்டில்... ஆள்கள்சேர்ந்து, குளறும்சத்தம்??? சரசுவின்கண வன், கதிரமலை... தெருவில்... மலைசரிந்தகணக்காய்... மெஷின்கண், குண்டுபட்டு.... செத்துப்போய்க்கிடக்கும்... சாச்செய்தி... சீறிப்... சீறிப்... போட்டும்விட்டதீக்குச்சி... நெருப் பாய்...??? முற்றாகவே.. உரிந்துநிலத்தில்... விழுந்தும்விட்ட சாரத்தை... தங்கவடிவேல்... மளமளவென்று.. எடுத்துக்காட் டியும் கொண்டு, கதவு..... ஜன்னல்... எல்லாம் அடித்துப் பூட்டி...???

'அங்கிள்..." என்ற குரல் கேட்டு, திரும்பிப் பார்த் தபோது... சென் ரியி லுள்ள ஆமிக்காரன், அர விந்த... சண்டை பார்க்க வந்தும் விட்டவன்போல், நின்று கொண்டிருக்கும் திடீர்க் காட்சி...
... சென்றிக்காரனைக் கண்டும் விட்ட... அதிர்ச் சியில்... சண்டை... போன பக்கம் தெரியா மல்... சடின் Stop ஆகியும் விடுகின்றது... "... மொக் கத கரதெறாய்... ஏன் சண்டு பிடிக்குது...?"

கட்டுரை



பா.துவாரகன்

பாலசுப்ரமணியம் துவாரகன் யாழ்ப்பாணம் ஏழாலையைச்சேர்ந்தவர். தமிழ்மொழி, கலை, இலக்கியம், ஊடகம், இசை, ஒளிப்படக் கலை மற்றும் திரைப்படத் துறைகளில் ஈடுபாடு கொண்டவர். பண்டிதர் க.நாகலிங்கத்தை ஓராண்டுக்கு மேலாக விரிவாக நேர்கண்டு 'தமிழோடு அவாவுதல்' எனும் நூலை வெளியிட்டவர். க.வைத்தீஸ்வரக் குருக்களின் நூற்றாண்டு மலரைத் தொகுத்து வெளியிட்டவர். சமுதாய நலன் கொண்டு செயற்படும் இவர், தற்போது யாழ்.போதனா வைத்தியசாலை அபிவிருத்தி உத்தியோகத்தராகச் செயற்படுகிறார்.

சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவர்

(18.01.1854 - 09.03.1922)

குமாரசுவாமிப் புலவர் சுன்னாகம் மயிலணியில் 1854ஆம் ஆண்டில் அம்பலவாணபிள்ளைக்கும்சிதம்பரம்மையாருக்கும் இரண்டாவது மகவாகப் பிறந்தார். யாழ்ப்பாணம் பெற்ற புலவருள் நிகரற்றவர். முருகேச பண்டிதரிடமும் ஆறுமுகநாவலரிடமும் தமிழ் இலக்கண, இலக்கியங்களை ஐயந்திரிபறக் கற்றவர். அறுபதுக்கும் மேற்பட்ட நூல்களை இயற்றியும் பதிப்பித்தும் தமிழ்த் தொண்டு புரிந்துள்ளார். கண்டனம் எழுதுவதில் வல்லவர். ஒரு நடமாடும் கலைக்களஞ்சியம்.

வழிநெடுகிலும் வாழ்வெங்கிலும் கல்வி

புலவர் வண்ணார்பண்ணையிலுள்ள நாவலர் வித்தியாசாலையில் (தற்போது மனோகராத் திரையரங்கு உள்ள இடம்) கற்பித்து வந்தகாலத்தில், யாழ்ப்பாணமாவட்டச்செயலகத்தில் உத்தியோத்தராகக் கடமையாற்றியசபாரத்தின முதலியார் தமதுபணிமுடிந்ததும் 4 மணிக்கு நாவலர் பாடசாலைக்கு வந்து புலவரைத் தமது குதிரை வண்டியில் கொக்குவில் வரை ஏற்றிச் செல்வார். முதலியார் புலவருடன் பல்வேறு இலக்கண, இலக்கிய ஆராய்ச்சிகளை நடத்தித் தமது சந்தேகங்களைக் கேட்டுத் தெளிவு பெறுவார். கொக்குவிலில் இருந்து தாவடி வரையும் தா.பொன்னையாபிள்ளை, கொக்குவில் இளையதம்பிப் பிள்ளை ஆகியோர் புலவரிடம் பாடங்கேட்டபடி நடந்து வருவர். கோண்டாவில் சந்தி தொடக்கம் மருதனார்மடம் வரையும் தென் கோவைக் கந்தையா பிள்ளை, நீர்வேலி மயில்வாகனம்பிள்ளை ஆகியோர் பாடங்கேட்பர். புலவரிடம் பாடங் கேட்க எவருமில்லையெனில் புலவர் நூல்களை இயற்றிக் கொண்டு வழிநடப்பார். மருதனார் மடம் தொடங்கிச் சுன்னாகம் சந்தைவரை இராமோதந்தம், சாணக்கிய நீதி வெண்பா போன்ற நூல்களை இயற்றிக் கொண்டு வழி நடப்பார். சுன்னாகச் சந்தை வந்ததும் நண்பர் வைத்தியநாதபிள்ளையைக் கூட்டிக்கொண்டு 6 மணியளவில் வீடுவந்து சேருவார்.

அந்தநாள்களில்பத்திரிகைகள்கிடையாது. வானொலியும் இல்லை. யாழ்ப்பாணத்துப் புதினங்களைக் கேட்பதற்காகப் புலவருடைய வீட்டுக்கு அயலில் உள்ள நண்பர்கள் வந்து கூடியிருப்பர். புலவர் 6மணி தொடக்கம் 8மணிவரை நண்பரோடும் பிறரோடும் உலகவிடயங்களைப்பற்றிஉரையாடுவார். இரவு உணவின் பின் 9மணி தொடக்கம் 12 வரையும் வடமொழி ஆராய்ச்சி செய்வார். காலையில்6மணியளவில்எழுந்திருப்பார். விடுமுறை நாள்களில் நூல் இயற்றுவதிலும்பாடஞ்சொல்வதிலும்புலவரதுபொழுது கழியும்.அந்தக்காலத்தில்மண்ணெண்ணெய் விளக்குக் கிடையாது. தனது வீட்டுத் திண்ணையில் இருந்துவேப்பெண்ணெய்விளக்கிலே வடமொழி ஆராய்ச்சி செய்தும் பிற நூல்களைக் கற்றும் வந்தார்.

வாழ்க்கை ஒரு செய்தி

புலவர் காட்சிக் கெளியவர். தூய உள்ளத்தவர். பணிந்தமொழிபேசுபவர். சீரியநோக்குடையவர். கோபம், பொய், பெருமை, புறங்கூறல், தம்மை வியத்தல், பேராசை முதலான தீய குணங்கள் சிறிதும் இல்லாதவர். பிறருக்குத் தீமை நினைக்காமலும். தீமை செய்யாமலும்வாழ்ந்தார். தமதுசுகத்துக்காகப் பிறரை வருத்தாமலிருந்தார். பட்டுப் பீதாம்பரங்கள், குண்டலங்கள், உருத்திராக்க மாலைகள் முதலியவற்றை அவர் அணிவதில்லை. நிலத்தில் சப்பாணி கொட்டிக்கொண்டிருந்து மண் குந்துக்கு மேல் வைக்கப்பட்டபலகையின்மேல்கடதாசியை வைத்து நூலுரைகளை எழுதுவார். புலவர் ஒருபோதும்விளம்பரம்நாடுவதில்லை. அரசின் சன்மானம் பெற்றபோது நண்பர்கள் அவருக்கொரு பாராட்டு விழாவை வைக்க முயன்றனர். தமக்குப்பாராட்டுவிழாவைப்ப தற்காகப் பொதுமக்களிடம் பணம் திரட்டுவதைவிரும்பாமல்பாராட்டுவிழாவைமறுத்தார். (இன்று புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமைக்காக ஆசிரியர்களுக்குப் பாராட்டு விழா வைப்பதற்காகச் சித்தியடைந்தமாணவர்களிடம்500ரூபாபணம் வசூலிப்பதைஎன்னவென்பது?)

புலவர் மாணவர்களுக்குத் தாமறிந்த நுண்பொருளை வஞ்சிக்காது கற்பிப்பவர். பிறரைக்கொண்டுதம்மைமதிப்பிக்கவேண்டுமென்று விரும்பாதவர். தாம் புலவரென்று தாமியற்றிய நூல்களில் தாமேயெழுதாதவர். தமக்குப் புலப்படாதவற்றைக் கற்றவர் பால் வினவியறியும் பெருங் குணம் பூண்டவர். தமக்குத் தெரியாதவற்றைத் தெரியாது என்று சொல்லுவார்.

உ.வே.சாமிநாதையர் 16.3.1913ஆம் ஆண்டில் புலவருக்கு எழுதிய 'திருமுகத்தில்', 'தங்களுடைய வேலைகளுள் எதுதான் சாதாரணமானது.

தங்களுடைய விஷயத்தில் இந்தத் தமிழ் நாடு மிகவும் கடப்பாடுற்றிருக்கிறது' என்று குறிப்பிட்டுள்ளார். புலவர், தேகவியோகம் எய்தியபோது, வாய்க்கரிசி போடும் நேரம் வந்த ஆறுமுகநாவலரும் வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலை தருமபரிபாலகராகிய த.கயிலாயபிள்ளையும் புலவருடைய பூதவுடலுக்கருகில் சென்று, 'கவலைக்கடலில் பெரிதும் மூழ்கியவராய் நாம் இன்று தமிழுக்கு வாய்க்கரிசி போடுகிறோம்' என்று உரத்துக் கூறி வாய்க்கரிசி இட்டனர். புலவர் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு இராமநாதபுரம் சேதுபதி அரசர் அனுப்பிய இரங்கற் செய்தி 'Extremly Sorry. Great loss of Tamilagam| என்றும் மதுரைத் தமிழ்ச்சங்க உபதலைவர் பெத்தாச்சிச் செட்டியார் தமது இரங்கல் தந்தியில் Extremly Sorry. Great loss to Tamil world| என்றும் குறிப்பிடுவது புலவர் தம் புலமையையும் தமிழ் உலகு புலவரிடத்துக் கொண்டிருந்த மதிப்பையும் காட்டுகிறது.

இலக்கியச் சொல் அகராதி

புலவர் இலக்கியச் சொல் அகராதி தொகுக்க உதவியவர் புலவரது பிற்கால மாணவருள் பிரியத்துக்குரியவரான பண்டிதர் சி.கதிரிப்பிள்ளை. இலக்கியச் சொல் அகராதி வெளிவந்த வரலாறு பற்றி பண்டிதர் சி.கதிரிப்பிள்ளையின் மைந்தராகிய உமாமகேசுவரம் பிள்ளை இப்படிக் கூறுவார், 'அப்பா ஒருநாளும் புலவரைப் பெயர் சொல்லி அழைத்ததில்லை. புலவர் என்று தான் சொல்லுவார். அப்பா புலவரிடம் தமிழறிஞர்களால் இரும்புக் கடலை எனக் கூறப்படும் தணிகைப் புராணத்தைக் கற்கின்றபோது புதிய ஒரு சொல் வந்தால் புலவர் அதைக் குறிக்கச் சொல்வார். சொற்களையும் பொருளையும் ஒரு தாளிலே எழுதி அதைச் சுருள் போலச் சுற்றி சால்வைக்குள் முடிந்துகொண்டுசெல்வார். இவ்வாறாகத் தாம் தொகுத்த சொற்கள் அனைத்தையும் புலவர் முழுமையாகப் பிரசுரிக்க வில்லை. இலக்கியச் சொல் அகராதியை நாவலருடைய அச்சகத்திலே பதிப்பித்து விட்டுப் புலவர் ஒரு பிரதியை அப்பாவிடம் கொண்டு வந்து கொடுக்கிறபோது அப்பாவுக்குஅதிர்ச்சி. 'அகராதியை இப்படிச்சுருக்கி விட்டீர்களே' என்றார். அதற்குப்புலவர், 'ஒரு ரூபாவுக்கு மேல் விற்றால் எவரும் வாங்க மாட்டார்கள்' என்றார். 'இலக்கியச் சொல் அகராதி போன்ற வேலையை யார் செய்வினம்' என்று அப்பா என்னிடம் சொல்கிற போது கண்கலங்கிக் கண்ணீர் வரும். மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் திருவிழா நடைபெற்ற சமயம் பூவேலை செய்யும் ஒருவர் பாட்டுப்பாடி நூல்களை விற்கிறபோது இலக்கியச் சொல் அகராதியையும் விற்பனை செய்ததாக அப்பா கூறுவார். பின்னாளில் அறிஞர் ஒருவர் புலவர் எழுதி வைத்த குறிப்புக்களை எல்லாம் வாங்கிச் சென்று இலக்கியச் சொல் அகராதியை முழுமையாக வெளியிட்டதாகவும் அறியக் கிடைத்தது. க. உமாமகேசுவரம்பிள்ளை புலவர் தொகுத்து வெளியிட்ட இலக்கியச் சொல்அகராதி1914ஆம்ஆண்டில்பதிப்பிக்கப்பட்டதாக அதை 2009ஆம் ஆண்டில் மீள் பதிப்புச் செய்த சந்தியா பதிப்பகத்தார் குறிப்பிடுகின்றனர்.

இதேவேளை 'பயனீர்புக்சேவிசஸ்' (Pioneer Book Services) என்ற பதிப்பகத்தார் 1985 ஆம் ஆண்டிலே இலக்கியச் சொல் அகராதியைப் பதிப்பித்துள்ளனர். அதிலே முதற் பதிப்பு 1878ஆம் ஆண்டு என்று குறிப்பிட்டது எது கருதியோ?

21.9.1915 என்று திகதியிட்ட இராஜ ராஜேஸ்வர சேதுபதி அரசர் புலவருக்கு எழுதிய கடிதம்பின்வருமாறு தெரிவிக்கிறது.

'மகாவித்துவான் ஸ்ரீமான் அ.குமாரசுவாமிப்பிள்ளை அவர்களுக்கு விஞ்ஞாபனம். தாங்கள் அன்பு கூர்ந்தனுப்பிய இலக்கியச் சொல்அகராதிஎனும்புத்தகம்எய்தப்பெற்று பெருமகிழ்ச்சி அடைந்தேன். பெரிய இலக்கியங்களிலுள்ள அரிய சொற்களெல்லாம் இதன் கண்ணுண்மையால் இது தமிழ் நூலாய்வார்கட்கெல்லாம் அதிகமாகப் பயன்படுமென்று கருதுகின்றேன்'

இங்கனம்
பி. இராஜ ராஜேஸ்வர சேதுபதி

இதன் மூலம் புலவர் பதிப்பித்து வெளியிட்ட அகராதி1914ஆம்ஆண்டுஎனஊகிக்கமுடியும். இருப்பினும் புலவரது மைந்தராகிய முத்துக்குமார சுவாமிப் பிள்ளையவர்கள் இயற்றிய குமார சுவாமிப்புலவர் வரலாறு எனும் நூலிலே பிற்சேர்க்கை யாகப் புலவர் இயற்றிய நூல் விவரங்களைத் தருகிறபோது இலக்கியச் சொல் அகராதி வெளிவந்தஆண்டு1915என்றுகுறிப்பிட்டுள்ளார். எவ்வாறாயினும் புலவர் பதிப்பித்த இலக்கியச்சொல் அகராதி கிடைக்கப்பெறின் மாத்திரமே. இலக்கியச் சொல் அகராதி முதற் பதிப்பைப் பற்றிச் சரியாகக் கூற முடியும்.

பல இடங்களில் தேடியும் புலவர் பதிப்பித்த அகராதியைப் பெற முடிய வில்லை என்பது கவலைதான்.





அந்த நாள்களில் பத்திரிகைகள் கிடையாது. வானொலியும் இல்லை. யாழ்ப்பாணத்துப் புதினங்களைக் கேட்பதற்காகப் புலவருடைய வீட்டுக்கு அயலில் உள்ள நண்பர்கள் வந்து கூடியிருப்பர். புலவர் 6மணி தொடக்கம் 8மணிவரை நண்பரோடும் பிறரோடும் உலகவிடயங்களைப் பற்றி உரையாடுவார். இரவு உணவின் பின் 9மணி தொடக்கம் 12 வரையும் வடமொழி ஆராய்ச்சி செய்வார்.

கவிதைகள்



க.சட்டநாதன்

வேலணையைச் சேர்ந்தவர். மென்மையான உணர்வுகளைக் கலைநயத்தோடும் மனித நேயத்தோடும் வெளிப்படுத்தியதால் ஈழத்தின் சிறுகதைப்பரப்பில் தனித்துவத்தை நிலைநாட்டியிருக்கிறார். சிறுகதைகளை அதிகம் ஆக்கியிருந்தாலும் வெளிவந்திருக்கும் இவருடைய முதலாது கவிதைத் தொகுதியான 'நீரின் நிறம்' கவனத்துக்குரியது.


உறவு

ஆராதனை



உனது ரசனைகள்
எவை என்பது
எனக்குத்
தெரியாமலே போய்விட்டது.

பறவைகளின்
விரக ஒலி வெளிறிய
வானில்
சுடகும் ஒற்றை நட்சத்திரம்.
காற்றின் சிறு சலசலப்பு,
சில சமயம்
அதன் சங்கீதம்.
தூரத்தில்...
வெகு தூரத்தில்
தெளிவற்றுக் கேட்கும்
மழலைச் சொல்.
பிரியமான
உனது விழி மலரின்
மருட்சி,
கழுத்தோரம் தெரியும்
சிறு மச்சம் என்று
இவை எல்லாம்
எனக்கு....
எனக்கேயானவை!
உனக்கு...?

காலதாமதமாய்த்தான்
அந்தச் செய்தி
எனக்குத் தெரியவந்தது.
நீ என்னை விரும்பினாயாம்!

மரணப் படுக்கையில்
நீ கிடந்தபோது உனது
மஞ்சள் பாரித்த உடம்பின்
அணுக்கள் தோறும்

உனது காதல்
நிரம்பி வழிந்தது.
உனது மூச்சுடன்
வாசனையிலும்
அது இருந்தது.

கால தாமதமானாலும்
உனது காதலைக்
கண்ணீருடன்
நான் ஆராதிக்கிறேன்.

சூரியனுடன் நான் கொண்ட உறவு
இன்று நேற்றல்ல ஜன்ம பரியந்தம்.
அவனுடனான உறவில்.
நான்
உற்று, உயிர்த்து, உணர்ந்தவை அனந்தம்.
அவன் இப்பொழுதெல்லாம் என்பக்கம்
வராமலே விட்டுவிட்டான்.
சோம்பலுடனான அவனது போக்கில்
துளிர்ப்பு ஏதும் இல்லை.
வசக்க மறுக்கும் அவனை
நான்
வாளிப்புடன் பார்த்த போதும்
அவன் நிமிர்ந்து பார்க்காமலே
ஓடுகிறான்.
ஆழ்ந்த துயரத்துடன்
அவனைத் தொடர்வது
எனது விதியாகிவிட்டது

படிமம்

புழுதி படிந்த
வெளித்திண்ணையில்தான்
நீ படுத்துக்கிடந்தாய்.
உனது உடலில் எல்லாமே
உலர்ந்து போய்க் கிடந்தன.
விரல்கள் ஓலை நெட்டியாய்....
கழுத்து நரம்புகள் புடைத்து.
பட்ட வேரின் பழுப்பு நிறத்தில்.
கண் உறையுள்
சோர்ந்து கிடக்கும் விழிகள்.
கிழிந்த புள்ளிச்சட்டையின் கீழாகக்
குருக்குத்திக் குட்டி வாழையின்
சவளல் தண்டுகளாய்க் கால்கள்
உன்னில் உயிர் ஓட்டிக் கொண்டிருப்பது
லேசாய்ப் படரும் மூச்சில் தெரிகிறது.

"எங்களூர் பிள்ளைதான்...
அம்மன் கோவிலடி..."
ஆரோ சொன்னது கேட்டுத்
திரும்பிப் பார்த்தேன்.
லேசாய்க் கால்பிதித்து அசைந்து வருகிறாய்.
வரட்சியால் கோலாய் கெட்டுக் கிடக்கு
நீ
எங்கள் ஊரின்
அசல் படிமம்.







புலவருக்கு சேதுபதி அரசரால் வழங்கப் பெற்ற பொன்னாடை. ஏறத்தாழ 100 வருடங்கள் பழமையானது. இன்றும் ஒரு நினைவுப் பொருளாக புலவரது குடும்பத்தவர்கள் இதைப் பேணி வருகின்றனர்.

(ஒளிப்படம் 2010)



புலவர் 1897 ஆம் ஆண்டில் ஏழாலை அத்தியடி விநாயகர் மீது பாடியருளிய ஊஞ்சல் கையெழுத்துப் பிரதி.
(ஒளிப்படம் 2010)





சுன்னாகம் மயிலணியில் புலவர் வாழ்ந்த வீடு.
(ஒளிப்படம் 2010)

உசாத்துணை:
1. குமாரசுவாமிப்புலவர் வரலாறு
2. புலவர் பெற்ற கடிதங்கள்
3. இலக்கியச் சொல் அகராதி – 'பயனீர் புக் சேவிசஸ்'
4. இலக்கியச் சொல் அகராதி – சந்தியா பதிப்பகம் 2009
5. புலவர் நினைவுகள்

தகவல் உதவி:
1. தமிழறிஞர் க. உமாமகேசுவரம் பிள்ளை
2. திருமதி. சிவசோதி துரைசிங்கம் புலவரின் பேர்த்தி

"எனக்கொரு நண்பன் உண்டு. அவன் தனக்கேன வாழாத் தலைவன்" என்ற கிறிஸ்தவப் பாடல் சின்ன வயதிலிருந்து என் காதுகளில் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது. இந்தப் பாடலின் வரியை என் நண்பன் குமாரைக் காணும்போது அவ்வப்போது பாடுவேன். அவன் நான் பாடும் போதெல்லாம் கேலியும் கிண்டலும் செய்வதோடு என்னைப் பார்த்து "பண்ணாடை பண்ணாடை" என்று திட்டியும் தீர்ப்பான்.

குமாருக்கு நாற்பத்திரண்டு வயதிருக்கும். பொது நிறமும், உடல் நல்ல கட்டுமானமாகவும், உயரமாகவும் இருப்பான். ரொம்பக் கறாரானவன்போல் தன்னைக் காட்டிக் கொள்வான். நெஞ்சில் அடர்ந்து கிடக்கும் கறுத்த முடியெல்லாம் வெளியில் தெரியும்படியாகச் சேர்ட்டின் மேற் பக்கப் பட்டனைத் திறந்து விட்டபடியே என்னோடு எப்போதும் வருவான். எதிரில் வரும் பெண்கள் எல்லாம் தனக்காக அலைகிறார்கள் என்று தனக்குள் நினைப்பான். நினைப்பதோடு மட்டும் நின்றுவிடமால் நண்பர்களுக்கெல்லாம் சொல்லியும் திரிவான். சிலவேளை நெஞ்சை நிமித்தியபடி ஏதோ உலகத்தைத் தலை கீழாகப் பிரட்டப் போகிறவன்போல் அலைவான். ஆனால் ஒண்டும் உருப்படியாகச் செய்யமாட்டான்.

எனக்குக் குமார் நண்பனாகியது, கல்லூரியில் படித்த கால கட்டதில்தான். படித்த காலத்தில் தொடங்கிய நட்பு இன்று வரை தொடர்வதைப் பெரிய சாதனையாகவே நான் நினைக்கிறேன். எப்ப என்ன செய்வான் என்று எனக்கு மட்டுமல்ல யாருக்குமே தெரியாது. சிறுவயதில் பரவைக் கடலில் கட்டப்பட்டுக் கிடந்த வள்ளத்தில் ஏறி விழுந்து போனதால், என்னுடைய ஒற்றைக் காலில் உடைவு ஏற்பட்டு விட்டது. இடது காலைக் கொஞ்சம் 'தென்டித்தென்டித்'தான் நான் நடப்பேன். என்னைச் 'சொத்தி' என்று சிலர் கூப்பிடுவார்கள். இருந்தும் குமார் என்னைச் 'சொத்திக் காலன்' என்று கூப்பிடுவதில் தனிக் கவனம் எடுப்பான். நான் நல்ல கறுப்பாக் இருப்பேன். 'செயின்ச் சுமோக்கர்'. பகலில் வேலைக்குப் போகிறதைத் தவிர இரவு முழுதையும் போதையில் கழிப்பேன். நான் கறுப்பாய்ப் பிறந்தேன் என்பதில் ஒரு வகையான தாழ்வு மனப்பான்மை எனக்குள் இருந்து கொண்டேயிருக்கிறது.

சினிமாப் பாடலில் மட்டும் 'கறுப்பு'என்பது அழகென்று சொல்லப்பட்டிருக்கலாம். ஆனால் அதை அனுபவித்துப் பார்த்தால் தான் அதன் வலி தெரியும். தலை முடி நன்றாகக் கறுப்பாக இருக்கும். கட்டையாகவும் கறுப்பாகவும் இருந்து தென்டித் தென்டித் நடப்பதால் அன்றாட வாழ்கையில் மிகுந்த அயர்ச்சியையும் சோர்வையும் உணர்வதுண்டு.

ஒருவருடன் கொஞ்ச நாள்கள் பழகினாலே நான் அவர்களை அடையாளம் கண்டு விடுவேன். பின் அவர்கள் என்னை ஏற்றுக் கொள்கிறார்களா? அல்லது புறந் தள்ளுகிறார்களா? என்பதை நான் எனக்குள் உணர்ந்து கொள்வேன். அப்படித் தான் குமாரை நான் அடையாளம் கண்டு கொண்டேன். ஆனால் அவன் என்னை அலட்சியப்படுத்துவதும் பின் தானாகவே என்னோடு ஒட்டிக் கொள்வதுமாகவே இருந்து வந்தான். நான் அவனை முதலில் சந்தித்தபோது இலங்கை அரசியல் பற்றி அவன் கதைத்தது இன்னும் எனக்கு நினைவில் இருக்கின்றது. நான் எப்போதுமே தீவிரமாக அரசியலில் ஈடுபட்டது கிடையாது. அவ்வப்போது அரசியலைக் கூர்ந்து கவனித்து வருவேன் அவ்வளவுதான். அதற்குமேல் ஒரு படிகூட மேலே போகமாட்டேன். ஆனால் அவன் இலங்கை அரசியலை முழுமையாக அறிந்தவன்போல அலட்டிக் கொள்வான். நான் அவனுடைய அலட்டலை அதிகம் காது கொடுத்துக் கேட்பதில்லை. அவனுடைய அப்பா கடன் தொல்லை தாங்க முடியாமல் தற்கொலை செய்து கொண்டார். அப்பா இறந்து ஆறுமாதம் கூட ஆகாத நிலையில் அவனுடைய தாய் அவளிலும் ஐந்து வயது குறைந்த பக்கத்து ஊரைச் சேர்ந்த பொடியனோடு ஓடிப்போய் விட்டாள். அதன்பின் அவனுடைய வாழ்வில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. அவனுடைய மாமியார் அவனையும் அவனுடைய தங்கையையும் தன் பொறுப்பில் வளர்க்கத் தொடங்கினாள். குமாருடைய கல்லூரிப் படிப்பை அவனுடைய மாமியர் நிறுத்திவிட்டு யாழ்ப்பாணத்திலுள்ள புடவைக்கடையில் சேர்த்து விட்டாள். சில வாரத்திலேயே கடையில் களவெடுத்ததாக அந்தக் கடை முதலாளி வேலையிலிருந்து அவனை நீக்கிவிட்டார்.

இந்திய இராணுவம் யாழ்ப்பாணத்தில் புலிகளோடு அடிபட்டுக் கொண்டிருந்த போது, சனங்களெல்லாம் அகதி முகாங்களுக்குச் செல்ல, இவனோ இரவோடு இரவாகக் கூப்பன் கடையை உடைத்து அதற்குள்ளிருந்த பொருள்களையெல்லாம் எடுத்து விற்றான். அதைப் பற்றி அவனிடம் கேட்டபோது, அவன் சொன்னான் "இது அரசாங்கச் சொத்து அதலை எடுத்தன்" என்று இப்படிச் சின்னச் சின்னக் களவென்று நிறையச் செய்தான்.

பொல்பொட், மாவா, சே.காஸ்ட்ரோ என்ற பெயர்களை அடிக்கடி உச்சரிக்கத் தொடங்கினான். கணவனால் கைவிடப் பட்ட இரண்டு குழந்தையின் தாயைக் காதலித்துத் திருமணமும் செய்து கொண்டான். அவன் அவளைக் காதலிக் கிறபோது, தான் இயக்கத்தில் இருப்பதாக ஒரு பொய்யைச் சொல்லி வந்தான். அதை அவள் உண்மையாகவே நம்பி விட்டாள். யாழ்ப்பாணத்தில் இயக்கம் இருந்த காலத்தில் எப்படி யாழ்ப்பாணத்திலுள்ள பெண்களுக்கு அவர்கள் மீது பாிவும் பயமும் இருந்ததோ அதேபோல் இவளுக்கும் அவன் மீது இருந்தது.

தன்னை ஓர் இடதுசாரி என்று சொல்லி வந்தவன், ஆனால் சைவ முறைப்படியே திருமணம் செய்து கொண்டான். திருமணம் நடந்த அன்றிரவே அவன் மனைவி தேவி காதுக்குள் முணு முணுக்கத் தொடங்கினாள். தூங்குவதற்காகப் பாயில் குமார் மல்லாந்து கிடந்தபோது அவள் கேட்டாள் "ஏதும் ஆயுதம் சட்டைக்கில்ல வைச்சிருக்கிறீயா...?" அவன் சிரிச்சுக் கொண்டே "அடியேவிசரி...நான் இயக்கத்துக்குத் துண்டு குடுத்து விலகிட்டேன். மக்கள் போராட்டம் கன நாளாகுமாம் அதுவரைக்கும் நான் காத்திருக்கேலா தெண்டு விலகிட்டன். இப்ப என்னட்ட ஒண்டுமில்லை" என்று அவன் சொல்ல. "நான் நம்ப மாட்டேன்" என்று அவள் சத்தம் போட அவன் தன்னை நிர்வாணப்படுத்திக் கொண்டான். அதன் பின்னர் தான் அவள் அவனுக்கு அருகில் போனாள்.

வருடம் தவறாது பிள்ளைகளைத் தேவி பெற்றுக் கொண்டேயிருந்தாள். ஏற்கனவே இருந்த இரண்டு பிள்ளைகளோடு

சிறுகதை



செ.டானியல்ஜீவா

நாவாந்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் இப்போது கனடாவில் வசித்து வருகிறார். சிறுகதை, கவிதை போன்ற துறைகளில் ஈடுபாடு கொண்டவர். இவரது 'தோணி' எனும் நாவல் வெளிவரவுள்ளது. கனடா 'கூர்' சஞ்சிகையின் இணை ஆசிரியர்களில் ஒருவர்.
மறைந்த எழுத்தாளர், சஞ்சிகையாளர் (சமர்) டானியல் அன்ரனி, கவிஞர் டானியல் சௌந்தரம் ஆகியோர் இவரது சகோதரர்கள்.

குமாருக்கு இன்னும் மூன்று பிள்ளைகள் பிறந்து மொத்தம் ஐந்தாகின. குமார் கல்யாணம் கட்டிய நாள்களிலிருந்து எந்தவித வேலைக்கும் போவதில்லை. தேவியோடு உடன் பிறந்த சகோதரர்கள் நான்குபேர். இருவர் கனடாவில் இருக்கிறார்கள். ஒருவர் பிரான்சிலும் மற்றவர் ஜேர்மனியிலும் இருக்கிறார்கள். இதைவிட ஊரில் இரண்டு சகோதரிகள் இருக்கிறார்கள். வெளிநாட்டில் வாழும் நான்கு சகோதரர்கள் அனுப்பி வைக்கிற வெளிநாட்டுப் பணத்திலேயே குமார் குடும்பம் நடத்தி வந்தான்.

குமார் செய்த சில தவறுகளுக்காக ஒரு நாள் இயக்கம் பிடித்துக் கொண்டு சென்று அடித்ததோடு விட்டு விட்டார்கள். அதன் பிறகு வீட்டுக்கு வெளியில் வராமல்

கடல் யோசித்தது...



இருந்த குமாரைத் தேவி சமாதானப்படுத்தி வெளிநாட்டுக்கு அனுப்புவதற்காகக் கொழும்புக்குக் கூட்டிக்கொண்டு வந்தாள். சில நாள்கள் இருவரும் 'லொஜ்' இல் தங்கியிருந்தார்கள். குமார் கனடாவுக்குப் போகிற வேலை தாமதமாகிய காரணத்தால் தேவி குமாரை 'லொஜ்' இல் இருக்கச் சொல்லிவிட்டு ஊருக்குத் திரும்பி விட்டாள். அது அவனுக்கு வாய்ப்பாக அமைந்தது. தன்னுடைய வழக்கமான குழப்படியை ஆரம்பித்தான் குமார். மாதந்தவறாது குமாருக்கு வெளிநாட்டுப் பணம் வந்து கொண்டிருக்கும். அந்தப் பணத்தை எப்படியெல் லாமோ சீரழித்தான். ஒவ்வொரு நாளும் ஆறுமணிக்குப் பிறகு குடிபோதையிலேயே இருப்பான். நிறைய நண்பர் கள் அவனோடு நட்பாக இருந்தார்கள்.

றஞ்சினி என்ற யாழ்ப்பாணத்துப் பெண் வெளிநாடு போவதற்காகக் கொழும்பு கொச்சிக்கடை றெட்ணம் றோட்டில் அவர்களுடைய உறவினர் வீட்டில் தங்கியிருந் தாள். அடிக்கடி பக்கத்திலுள்ள கொச்சிக்கடை அந்தோனியார் கோயிலுக்கு முன்னால் இருக்கும் சிவன் கோயிலுக்குப் போய் வருவாள். அவ ளைக் கோயிலில் சந்தித்த குமார், தான் இன்னும் கல்யா ணம் செய்யவில்லையென்றும், தமிழீழம் கிடைக்கும் வரை தான் கல்யாணம் செய்வதில்லை என்ற முடிவோடு இருப்பதாகவும் அவளுக்குச் சொன்னான். வெளிநாட்டில் இருக்கிற தன்னுடைய அண்ணன்மார் தன்னை எடுக்கப் போவதாகவும் அதற்காகத்தான் கொழும்பில் காத்திருப்பதாகவும் கதை விட்டு இல்லாத பொல்லாத பொய்யெல்லாம் சொல்லி அவளைத் தன் வசப்படுத்தினான்.
அவளுக்கும் குமாருக்கும் காதல் கசிந்து வழிந்தது. றஞ்சினியும் அவனுடைய கதையை நம்பி அவன் பின்னால் தீரிந்தாள். நல்ல சாப்பாடு, தமிழ்ப்படம், உடுப்புகள், காசு என்று பல்வேறு வகைகளில் அவளை அவன் சந்தோஷப்படுத்தினான்.

றஞ்சினி கோயிலுக்குப் போய் வரும்போது ஒரு தெய்வீகக் களை அவள் முகத்தில் படிந்திருக்கும். பா. ராகவனின் நெற்றியில் கிடக்கும் திருநீற்றின் அளவுபோல் அவள் எப்போதும் கோயிலுக்குப் போய் வரும்போது பூசிக்கொண்டு வருவாள். நல்ல பண்பான குடும்பத்தில் பிறந்து நல்ல பழக்க வழக்கத்துடன் இருந்தவள் எப்படிக் குமாரின் பொய்யான வார்த்தைக்களுக்குள் விழுந்திருப்பாள்?
வெளிநாடு செல்வதற்காகக் கொழும்பு வரும் பெண்கள் இப்படி எத்தனையோ பேரால் ஏமாற்றப்பட்டிருக்கலாம் யாருக்குத் தெரியப் போகிறது. வெளியில் சொன்னால் வெட்கம் என்பதற்காகச் சிலர் மறைத்திருக்கலாம்.

ஒரு நாள் பின்னிரவு றஞ்சினியின் வீட்டுக்கு வந்த இலங்கைப் பொலிஸ் உளவுப் பிரிவைச் சேர்ந்த இருவர் றஞ்சினியை ஒருவாகனத்தில் ஏற்றிக்கொண்டு போய் விட்டார்கள். குமார் அவளைப் பார்ப்பதற்காகக் கோயிலில் தேடியலைந்தான். தொடர்ந்தும் அவள் வரவில்லை என்று தெரிந்தபோது அவள் தங்கியிருந்த வீட்டுக்குச் சென்றான். அங்கே இருப்பவர்கள் றஞ்சினிக்கு என்ன நடந்தது என்ற தகவலைக் கவலையோடு விவரமாக அவனுக்குச் சொன்னார்கள். அந்த வீட்டுக்குப் போய் வந்த நாளின் பின் அவன் நிறையவே குடிக்கத் தொடங்கினான். கவலைப்பட்டான். கண்ணீர் விட்டான். ஒரு சில வாரத்தில் அவன் இயல்பு நிலைக்கு வந்தான். அதன் பின் அவளை அடியோடு மறந்து விட்டான். றஞ்சினி எங்கேயிருக்கிறாள்...? அவளுக்கு என்ன நடந்திருக்கும்...? என்ற எந்த யோச னையோ அல்லது அவளை வெளியே எடுக்க வேண்டு மென்ற எந்தவித முயற்சியோ அவன் எடுக்கவில்லை. நான் கனடா வந்து இறங்கிய கொஞ்ச நாள்களுக்குள் அவனும் வந்து சேர்ந்து விட்டான்.
வந்தவுடன் எப்படியோ என்னைத் தேடிப் பிடிச்சு என் னோடு ஒட்டிக் கொண்டான். மார்க்கத்தில் ஒரு தமிழ்க் குடும்பத்தின் வீட்டில் குமார் வாடகைக்கு ஒரு 'றூமை' எடுத்துத் தங்கியிருந்தான். அந்த வீட்டாரைப் பற்றி நிறைய முறைப்பாடுகள் எனக்குச் சொல்லுவான். சாப்பாடு கொடுப்பதிலிருந்து தன்னைச் சரியாகக் கவனிப்பதில்லை வரை வாய் வலிக்காமல் சொல்லிக் கொண்டிருப்பான். ஒருநாள் என்னைத் தானிருக்கும் வீட்டுக்குக் கூட்டிச் சென்றான். அவனுடைய வீட்டுக்காரர் என்னை வைத்துக் கொண்டே பகிடியாக இவனுடைய திருகுதாளம் பற்றிச் சொன்னார்கள். அவன் சிரித்து மழுப்பிக்கொண்டிருந்தான். ஒன்று மட்டும் எனக்குச் நன்றாகவே விளங்கியது, அவன் வாடகைக் காசு ஒழுங்காகக் கொடுப்பதில்லை.
குமார் வாடகைக்கு இருக்கும் வீட்டார், பிறப்பால் இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள். கனடா வந்த பின் ஏதோ காரணத்துக்காகக் கத்தோலிக்க மதத்தில் சேர்ந்து விட்டார்கள். கிறிஸ்தவ அறத்தில், சமயக் கருத்துக்களில் மிகவும் இறுக்கமாக இருந்தார்கள். குமாரைப் பாவத்துக்கு இரங்கித்தான் வீட்டில் வைத்திருக்கிறார்கள்போல எனக்குத் தெரிந்தது.

நான் அவனைக் கனடாவில் சந்தித்து மூன்று மாதங்க ளின் பின் குமாரின் 'ஸ்பொன்சரில்' அவனுடைய மனை வியும் ஐந்து பிள்ளைகளும் இங்கு வந்து விட்டார்கள். தனி அறையில் இருந்த குமார் மூன்று அறை கொண்ட தொடர்மாடிக்கு மாறிவிட்டான். குடும்பம் வந்தவுடனேயே 'வெல்வயருக்குப்' போய் விட்டான். அவனுக்கு அரசாங் கம் கொடுக்கும் பணம் ஓரளவு போதும். ஆனால் குமாரு டைய குழப்படியாலும், செலவுகளாலும் கொடுக்கிற பணம் அவர்கள் குடும்பத்துக்குப் போதவில்லை.
தேவி கனடா வந்த பின், யாருடைய உதவியையும் எதிர்பார்க்காமல் எல்லாக் காரியங்களையும் தானாகச் செய்யப் பழகிக் கொண்டாள். கிழமை நாள்களில் தன்னு டைய பிள்ளைகளைப் பாடசாலைக்குக் கூட்டிப் போவதும், வருவதுமாக அவளுடைய நாளகள் கடந்தன. இங்குதான் ஒரு தமிழ்ப் பையனோடு நட்பு ஏற்பட்டது. அடிக்கடி அவள் சந்திப்பதோடு, வீட்டில் குமார் இருக்கும் போதும் அவ னோடு அவள் கதைத்தாள்.

குமாருக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் எனக்குப் போன் பண்ணுவான். அவன் என்னோடு நிறையவே கதைக்க வேண்டுமென்று நினைப்பான். சிலவேளை நேரிலும் வந்து சந்தித்துக் கதைப்பான். அவனுக்கு ஆறுதல் அளிப்பது என்னுடைய வார்த்தைகள் தான் என்று அவன் உணர்ந்திருந்தான். அவனுடைய முறைப் பாடுகளில் முதலாவது அவனுடைய மனைவி பற்றியது தான். அவள் எந்த நேரமும் தொலைபேசியில் யாரவது ஒருவரோடு கதைத்துக் கொண்டிருப்பது. அது அவனுக்கு அடிப்படையில் பிடிக்கவில்லை. குறிப்பாக ஓர் இளைஞனோடு தொடர்ச்சியாகக் கதைக்கிறாள் என்று எனக்குச் சொல்லி வந்தான். நான் கேட்டு விட்டுச் சிரிப்பேன். நான் சிரிப்பதைப் பார்த்தால், அவன் தனது மூளிக்கண்ணைக் கொஞ்சம் அகலமாக விரித்துக்கொண்டு கோபமா என்னைப் பார்ப்பான். அப்படிஅவன் பார்க்கும்போது, "கண் விழிகள் வெளியில் விழப் போகின்றன" என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டு நான் சிரிப்பதை நிறுத்தி விடுவேன்.

⅄ ⅄ ⅄

கடும் குளிரோடு காற்று முனகியது. உயிர் குளிரில் மரணித்துக் கிடந்தது. நெருப்பை உடல் முழுவதும் அள்ளிப் பூசினாலும் அந்தக் குளிரைத் தாங்க முடியாதுபோல் என் உடல் விறைத்துக் கிடந்தது. இந்தக் கடும் குளிருக்குள் தான் நானும், அ. முத்துலிங்கமும், வரனும், காலம்செல்வமும் தமிழ்நாட்டிலிருந்து அமெரிக்கா வந்திருந்த 'தேவிபாரதி'யைச் சந்தித்து விட்டு அதிகாலையில்தான் வீடுதிரும்பினோம். வந்தவுடன் நான் குளிக்காமலேயே தூங்கிவிட்டேன்.

அதிகாலை நாலு மணியிருக்கும், தொலை பேசி மணி கிணுகிணுத்தது. "யார் இந்த நேரத்தில் போன் பண்ணுவார்கள்...?" என்று நினைத்துக் கொண்டு மற்றப் பக்கம் திரும்பிப்படுத்து விட்டேன். மீண்டும் பேசி மணி அடித்தது. உடல் எங்கும் சோம்பலோடு அச்ச உணர்வு ஊரத் தொடங்கியது. கண்ணைக் கசக்கிக் கொண்டு தொலைபேசியில் விழுந்த இலக்கங்களைப் பார்த்ததும் மனதில் சலிப்பு ஏற்பட்டது. என்னுடைய நண்பன் குமார்தான் அழைக்கிறான். "ஏன் இந்த நேரத் தில் இவன் எடுக்கிறான்?" என்று யோசித்துக் கொண்டு தொலை பேசியை எடுக்காமல் மீண்டும் திரும்பி எதிர்ப் புறமாகப் படுத்து விட்டேன்.
திரும்பத் திரும்பத் தொடர்ந்து எடுத்துக் கொண்டிருந்தான். நான் எரிச்சலோடு தொலை பேசியை எடுத்தேன். நான் உடனே எடுக்கா தற்கு முதலில் எரிந்து விழுந்தான். திரும்பிச் சொன்னான், "நான் என்ரை மனுசியோட பெரிய பிரச்சினைப்பட்டுட் டன். உன்னோட நிறையக் கதைக்க வேணும் உன்ர வீட்டவரணும்" என்றான். "அதுக் கென்ன வாவன். எ ப்படியடா வரப் போற..?"என்று நான் கேட்டேன்.
"பஸ்சிலதான்"
"வீட்டு முன் கதவை உள்ளால திறந்து விட்டுட்டு நான் படுக்கிறன். நீ உள்ள வந்து என்னை எழுப்பாமல் ரீ. வியை மெதுவாகப் போட்டுக் கொண்டிரு.. நான் நித்திரையால எழும்பின உடனே எல்லாத்தையும் கதைக்கலாம்"என்று சொல்லிவிட்டுத் தொலைபேசியைத் துண்டித்தேன்.
பூட்டியிருந்த கதவை உட்பக்கமாகத் திறந்துவிட்டு நான் மீண்டும் தூங்கிவிட்டேன்.

⅄ ⅄ ⅄

பகல் பத்துமணிக்கே படுக்கையிலிருந்து எழுந்தேன். குமார் சோபாவில் தூங்கிக் கொண்டிருந்தான். நான்கு ளித்து விட்டு வெளியில் போவதற்கு ஆயத்தப்படுத்தி னேன். அவன் என்னுடைய காலடிச் சத்தம் கேட்டு விழித்துவிட்டான். நான் அவனுக்குப் பக்கத்தில் உட்காந் தேன். அவன் முகத்தைப் பார்த்ததும் பதற்றமானேன்.
"என்னடா முகத்தில நடந்தது..?"
"என்ர பொஞ்சாதியும் அவளின்ரை முதல் தாரத்து மூத்த பிள்ளையளும் சேர்ந்து அடிச்சுப் போட்டுதுகள்."
"நீ என்ன செய்தனீ..?"
"வழமைபோலவே என்னைக் கணக்கெடுக்காமல் யாரோ பொடியனோடு கதைத்துக் கொண்டிருந்தாள், அதுதான் அடிச்சனான்.... அவளுக்கும் நல்ல காயம் வைச்சிட்டன். அதுக்குத்தான் அவளுகள் இரண்டு பேரும் பிச்சுப் பிறாண்டிப் போட்டாளுகள்! என்ன வீட்டிலை இருக்கக் கூடாது எண்டு என்ர மனுசி என்னை வெளியில கலைச் சுப் போட்டாள். நான் ஊருக்குப் போறதுக்குரிக்கற் புக் பண்ணிட்டன் இண்டைக்குப் பின்னேரம் ஞ்சு மணிக்கு பிளைட்.."
"ஏன்ரா அவசரப்படுகிறாய்?"
"நான் முடிவு செய்து போட்டன் அதை விடு. ஒரு விசயம் உன்னட்டைக் கேக்கிறன் பதில் சொல்லு...!, நான் இந்தச் சோபாவில படுத்துக் கிடக்கேக்கில ஒரு கனவு கண்ட னான்...கடல் யோசிச்சுக் கொண்டு இருக்குதாம் என் னைச் சுனாமிபோல வந்து அழிக்க... இந்தக் கனவின்ர அர்த்தமென்னடாமச்சான்..?"
"நீ போறனெண்டு முடிவெடுத்த பிறகு ஏன்ர கண்டமாதிரி பயப்படுற...? பயப்படமல் இரு"
நான் சிரிச்சுக் கொண்டு 'சரி வா கோப்பிக் கடைக்கு போவம்.' என்றேன். அவன் எந்த மறுப்பும் சொல்லாமல் எழுந்து வந்தான்.
கோப்பிக் கடைக்கு முன்னால் காரை நிறுத்தி விட்டு, இருவரும் நடந்து வந்து கடைக்குள் போவதற்காகக் கதவை நான் திறக்க கண்ணாடிக்குள்ளால் கவுண்டரில் நின்ற ஒரு தமிழ்ப் பெண்ணைக் குமார் கண்டதும் சட்டென முகத்தை மறைத்துக் கொண்டு என்னுடைய காரை நோக்கி அவன் விரைந்து நடந்தான்.
நான் கோப்பியை அவனுக்கும் சேர்த்து வாங்கிக் கொண்டு வந்து காருக்குள் ஏறினேன். அவன் சிரிச்சுக் கொண்டு என்னைப் பார்த்தான். "ஏன்ரா குமார் அந்தப் பொட்டையைப் பார்த்தவுடன ஓடி வந்தன்னீ" அவன் புன் சிரிப்போடு "அவள் தான் என்ர பழையறஞ்சினி. கொழும்பில சிறிலங்கன் சீ.ஐ.டி. பிடிச்சுக் கொண்டு போனது எண்டு சொன்னன் ஞாபகம் இருக்குதா?" என்றான். "அது உன்ர பழைய காதலியல்ல.. அவளா இவள்..?" என்று ஏக்கத்தோடு கேட்டேன். அவன், "ம்..." என்று இழுத்தான். நான் உறைந்து போனேன்.

அதிகாலை நாலு மணியிருக்கும், தொலைபேசி மணி கிணுகிணுத்தது. 'யார் இந்த நேரத்தில் போன் பண்ணுவார்கள்...?' என்று நினைத்துக் கொண்டு மற்றப் பக்கம் திரும்பிப் படுத்து விட்டேன். மீண்டும் தொலைபேசி மணி அடித்தது. உடல் எங்கும் சோம்பலோடு அச்ச உணர்வு ஊரத் தொடங்கியது.



தொடரும்

சுவாமி விபுலானந்தர்

ஈழத்து வசன கவிதை முன்னோடி

மேலைத்தேசத்திலிருந்து தமிழுக்கு அறிமுகமான நவீன இலக்கிய வடிவங்களில் ஒன்று புதுக் கவிதையாகும். ஆரம்பநிலையில் இது வசனகவிதை என்றே அழைக்கப்பட்டது. இத்தகைய வசன கவிதை முன்னோடியாகக் கருதப்படுபவர் பாரதியார் ஆவர் 'காட்சி', 'சக்தி', 'காற்று', 'கடல்', 'ஜகத் சித்திரம்', 'விடுதலை' என்பன பாரதியார் எழுதிய வசன கவிதைகளாகக் கருதப்படுகின்றன.

இந்த நிலையில் ஈழத்து வசனகவிதை முன்னோடியாகக் கருதப்படுவர் யாரென்று நோக்குகின்றபோது சுவாமி விபுலானந்தரை அவ்வாறு கருதமுடிகின்றது. சமயத் துறவியாகவும் ஈழத்தின், இந்தியாவின், உலகின் முதல் தமிழ் பேராசிரியராகவும் தமிழியல் ஆய்வாளராகவும் கருதப்படுகின்ற சுவாமி விபுலானந்தர் நவீன இலக்கியத்தோடு நெருங்கிப் பரிச்சயமுடையவர் என்பது பலராலும் அறியப்படாத விடயமாகும்.

ஈழத்து நவீன கவிதை ஊற்றுகளுள் ஒருவராகக் கருதக்கூடிய சுவாமிவிபுலானந்தர் மேலைத்தேய நவீன கவிதைகள் சில வியப்புக்குரியதன்று. அவர் மொழிபெயர்த்த இரண்டு மேலைத்தேய கவிதைகள் வசனகவிதைகளாகவேஉள்ளன. அவரெழுதிய 'ஆங்கிலவாணி' (1941) என்ற கட்டுரையிலே மேலைத்தேயக் கவிஞர்களான மில்ரன் வால்ரர் ஸ்கொட், வேட்ஸ்வேத் கீட்ஸ், ஷெல்லி, ரெனிசன், பைரன், றெபேட் பிறவுண் முதலானோரது கவிதைகள் சில மொழிபெயர்ப்பு வடிவில் இடம்பெற்றுள்ளன. "கடந்த இருபத்தெட்டு ஆண்டுகளில் அந்தப்பொருள்பற்றி இதுபோன்று('ஆகாசவாணி' கட்டுரை போன்று கர்) சிறப்பு மிக்க அறிமுகக் கட்டுரை வேறெவராலும் எழுதப்படவில்லை" என்பார் பேராசிரியர் கைலாசபதி. நவீன கவிஞர்கள்பலரைத்தமிழ்ப் பண்டிதர்களுக்கு அறிமுகப்படுத்தும் நோக்குடன் எழுதப்பட்டுள்ள அத்தகைய கட்டுரையிலே இடம்பெற்றுள்ள கவிஞர்களில் ஒருவர் ரெனிசன்.

அவரது 'கையறு நிலைச் செய்யுள்' என்ற நீண்ட கவிதை மொழிபெயர்ப்பின் ஆரம்பப் பகுதி பின்வருமாறு:

"ஆண்டவனது திருமகனே! அருந்திறலுடையாய்! அழியா அன்பின் நிலைக்களமே! நினது திருமுத்தை நேரிற் கண்டில மெனினும் உள்ளத் துணர்ச்சியே (நம்பிக்கையே) துணையாக நின்னை நம்பி, நின்னருளிற் கலந்து நிற்கின்றோம்"

"பகற்பொழுதினை விளக்கும் செஞ்ஞாயிறும், இரவுப் பொழுதினை விளக்கும் வெண்டிங்களும் நினக்கு உரியவை. மனிதவுயிர்க்கும்விலங்குயிர்க்கும் வாழ்வின் ஈந்தனை சாவினையும் நீயே படைத்தனை. நினது திருவடி நீசெய்த மனிதகபாலத்தின்மீதுபொருந்திநிற்கிறது. மண்ணிற் புழுதியிற் கிடக்கும் வண்ணம் எம்மை புறக்கணிப்பாயல்லை. மனிதனைப் படைத்தனை, ஏற்று குப் படைத்தனையென அவன் அறியான். வாளா இறந்து ஒழிந்துபோம் வண்ணம் படைக்கப்படவில்லையென அவனது உள்ளம் நினைக்கின்றது. அவன்நினதுதிருக்கரத்தினால் உருவாக்கப்பட்டான். நீ அறத்தின் முதல்வன். மக்களது நீர்மையும் தெய்வத் தன்மையும் நின்பாற் காணப்படுகின்றன. அதியுயர்ந்த, அதி தூய்மையாகிய ஆண்டகைமை நினக்கு உரியது. எமது சித்தம் எமக்குரியன. அவ்வுரிமை எவ்வாறு எய்தியதென யாம் அறியோம். எமது சித்தம் எமக்கு உரியனவாயின. அவை தம்மை நினக்குஉரியவாக்குதற்பொருட்டாகவோ?"

"யாம்வகுக்கும்முறைகள்சிலநாள்நின்று ஒழிந்துபோகும் தகைமைய. ஆவை நினது அருளொளியினின்று சிதறிய கதிர்கள். என ஆண்டவனே! நீ அவற்றிலும் மிக்காய்."

"எமது உள்ளத்தில் நம்பிக்கையுளது. அறியும் அறிவு இல்லை. அறிவு காட்சிப் பொருள்கள் மேற்செல்வது (நீ காட்சிக்கு எட்டாப்பொருள்) ஆயினும் யாம் நின்னை நம்புகிறோம். அந் நம்பிக்கை நின்னிடமிருந்து வந்தது. பேரிருளிலே அஃது ஓர் ஒளிக்கிரணம்; அது வளர்வதாக."

"அறிவு மேன்மேலும் பெருகுக. அறிவினும் பார்க்க வழிபாடு எம் உள்ளத்தில் உறுவதாக. முன்னிருந்ததுபோல உள்ளமும் உயிரும் ஒன்றுபட்டு இசைபரப்புக."

வால்ரர் ஸ்கொட் எழுதிய 'நீர்நிலைக்கன்னி'யையும் மொழி பெயர்த்திருந்தார் சுவாமிகள்.

அதன் ஒரு பகுதி பின்வருமாறு:

"வடபுலத்து நல்யாழே! நீருற்றினுக்கு நிழலளிக்கும் இம்மரக்கிளைமீது நெடிது தங்கினை. இலையொலியும் அருவி நீரொலியும் இசையியம்ப, நின்னரம்புகள் இசையின்றித் துயிலுதல் முறையாகுமா? முன்னாளிலே வீசுகின்ற காற்றிலே இசையமிழ்தத்தை யுகுத்தனையே! நின்பாற் பொறாமையுற்ற பசுங்கொடி படர்ந்து, நின் நரம்புகளை ஒவ்வொன்றாகக் கட்டிவிட்டமையினாலே பேசாதிருக்கின்றனையா? வீரர் முகத்திலே புன்னகை தவழவும், அரிவையர் நாட்டங்களிலிருந்து உவகைக்கண்ணீர் கலுழவும் நினது இனிய குரலினாலே பேசலாகாதா? முன்னாளிலேரூபவ் கலிடோனியாவிலே, விழாக்கொண்டாடுவார் மத்தியிலே, நீ மௌனஞ் சாதித்ததில்லையே. காதலையும் வெற்றியையும் பாடி, அச்சத்தையும் பெருமிதத்தையும் அளவுபடுத்தினையே, நினது இசை கேட்டுருகும் வண்ணம் காவலரும் காரிகை நல்லாரும் சூழ்ந்து நின்றனரன்றோ? வீரரது தீரச்செயலும் காரிகையாரது ஒப்பற்ற கண்ணிணைகளுமே நினது பாடற் பொருளாக அமைந்தன"

"நல்யாழே! துயிலொழிந் தெழுவாயாக. நினது நரம்புகளிற் படருங் கையானது பயிற்சியற்ற கையெனினும், செழியபழம் பாடல்களின் இன்னொலியையொளவிற்காவது இசைத்தலாகாதா? நின்னிசைக்கு ஓர் இதயமாவது துடிப்புறுமெனின், நின்செயல் வீண்செயலாகாதல்லவா? நீ இன்னும் வாய்திறவாதிருத்தல் தகுதி அன்று. சித்தத்தைக்க வரும் வனமோகினியே! எழுந்திரு. இன்னும் ஒருமுறை எழுந்திரு" ஏனைய கவிதைகளை மரபுக்கவிதை வடிவங்களிலேமொழிபெயர்த்துத்தந்தசுவாமி விபுலானந்தர், மேற்குறிப்பிட்டவற்றை வசனகவிதை வடிவங்களில் தந்தமைக்குக் காரணம் யாது? என்றொரு கேள்வி இந்த வேளை எழக்கூடும். பாரதியாரும் அவ்வாறு செயற்பட்டுள்ளார். தமது பாஞ்சாலி சபதம் நவீன காவியத்திலே சூரிய அஸ்தமனத்தை முதலில் கவிதை வடிவில் வெளிப்படுத்தியபாரதியார்சடுதியாகவசனகவிதை வடிவத்திலும் அதைத் தொடர்ந்திருந்தார். கவிதா உணர்ச்சி கரைபுரண்டு எழுகின்ற போது யாப்பு அதற்குத் தடையாகவிருந்திருக்கும் என்று அதற்குக் காரணம் கூறுவர்



கட்டுரை



பேராசிரியர் செ.யோகராசா

யாழ்ப்பாணம்– கரணவாயைச் சேர்ந்த இவர், கருணயோகன் என்ற பெயரில் கவிதைகளையும் சிறுகதைகளையும் எழுதியவர். தற்போது ஓய்வுநிலைப்பேராசியராக இருக்கிறார். தென் கிழக்குப் பல்கலைக் கழகத்தின் வருகைதரு விரிவுரையாளர். ஈழத்து நவீன கவிதை, ஈழத்து நாவல், ஈழத்து இதழ்கள் தொடர்பான நூல்களை வெளியிட்டிருக்கிறார். நூல்கள் பலவற்றைப் பதிப்பித்திருக்கிறார். சிறுவர் இலக்கியங்களைத் தொகுப்பதிலும் ஆர்வம் உள்ளவர்.

ஆய்வாளர். கவிஞரான சுவாமி விபுலானந்தருக்கும் அந்தக்காரணம்பொருந்தக் கூடியதே. அதுமட்டுமன்று, கவிதைமொழிபெயர்ப்பு நாட்டம் வேதப் பாடல்களிலே ஈடுபாடுமுதலானவற்றையும் பாரதியாரின் வசனகவிதைஈடுபாட்டுக்குக் காரணமாகக் கூறுவதுண்டு. அவ்வாறெனில் சுவாமி விபுலானந்தருக்கும் அவை பொருந்துவதே. இறுதியாக, இன்னொரு சுவையான முக்கியமான விடயமொன்றையும் நினைவுகூர்வது அவசியம்!

பாரதியாரை வசன கவிதை முன்னோடியாகக் கருதி ஆய்வுகள் பல எழுந்திருந்தாலும் (உம் : வல்லிக்கண்ணன், அக்கினிபுத்திரன் ஆகியோரது நூல்கள்) பாரதியார் தமது (ஆரம்பத்தில் குறிப்பிட்டுள்ள) காட்சி முதலானகவிதைகளைவசனகவிதைகள் என்று எங்குமே குறிப்பிடவில்லை என்பதும் அவற்றை நூல் வெளியீட்டாளர்களே 'வசனகவிதைகள்' என்று தலைப்பிட்டு வகைப்படுத்தி இருந்தனரென்றும் பேராசிரியர் கைலாசபதி (தமது விரிவுரைகளிலே) குறிப்பிட்டிருப்பது கவனத்துக்குரியதொன்று. பாரதியார் போன்றே, (பாரதியார் புகழ்பரப்பிய முன்னோடியான) சுவாமி விபுலானந்தரும் தனது மேற்குறிப்பிட்ட ஆக்கங்கள் வசனகவிதைகளென்று எங்குமே குறிப்பிட்டாரல்லர் என்பதே அதுவாகும்!

"நல்யாழே! துயிலொழிந் தெழுவாயாக. நினது நரம்புகளிற் படருங் கையானது பயிற்சியற்ற கையெனினும், செழியபழம் பாடல்களின் இன்னொலியை ஓரளவிற்காவது இசைத்தலாகாதா? நின்னிசைக்கு ஓர் இதயமாவது துடிப்புறுமெனின், நின்செயல் வீண்செயலாகாதல்லவா? நீ இன்னும் வாய்திறவாதிருத்தல் தகுதி அன்று. சித்தத்தைக்க வரும் வனமோகினியே! எழுந்திரு. இன்னும் ஒருமுறை எழுந்திரு"

வற்றை மொழிபெயர்த்தவர். பாரதியாரை நவீன கவிஞராக இனங்கண்டு வெளிப்படுத்தியமுன்னோடிகளில்ஒருவர். பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் நவீன நாடகம் ('நானாடகம்'), நவீன பிரபந்தம் (காதலி ஆற்றுப்படை) ஆகியவற்றைப் பாராட்டியவர். மண்வாசனை நோக்குடன் புனைகதை எழுதப்பட வேண்டுமென்று நாற்பது களளவிலேயே வற்புறுத்தியவர். நவீன இலக்கிய வடிவங்களுள் முக்கியமான கட்டுரை இலக்கியத்துறையிலீடுபட்டு பல்துறைசார்ந்த கட்டுரைகள் எழுதிய முன்னோடி.

அனைத்தையும்விட இலங்கை எழுத்தாளர் அங்கத்தலைவராக நியமிக்கப்பட்டவர் (செயலாளர்கள் : மார்ட்டின் விக்கிரசிங்க, கே.கணேஷ்) மேற்கூறிய ஆளுமைகள் நிறைந்த சுவாமி விபுலானந்தர் வசன கவிதை எழுதியிருப்பது

நிலவு சுடுவதில்லை



சிறுகதை



ஆர். எஸ். ஆனந்தன்

இ.சச்சிதானந்தம் எனும் இயற் பெயர் கொண்ட இவர், தும் பளை – பருத்தித்துறையைச் சேர்ந்தவர். கலை, இலக்கியத் துறையில் ஈடுபாடு கொண்ட இவர் கவிதைகள், கட்டுரை கள் போன்றவற்றை எழுதி வரு கிறார்.

சாய்வு நாற்காலிச் சட்டங்களுக்குள் தன்னைப் புதைத்துக் கொண்ட சபா, தனது மன அழுத் தத்தை இதயத்துக்குள் புதைத்துக் கொள்ள முடியாமல் தவித்துக் கொண்டிருந்தார். அந்த நினைவுகள், தாண்டிச் செல்லும் காட்டாற்று வெள்ளம்போல் அவரின் இதயத்தின் அடிவரை பாய்ந்து கொண்டிருந்தன.

"ஒரு வருடமா? இரு வருடங்களா? இருபத்தேழு வருடங்கள் மார்பில் தாங்கி வளர்த்த பிள்ளை அல்லவா அனிதா. புறாவின் சிறகடியில் குளிர் காயும் குஞ்சைப்போல், எனக்குள் பொத்திப் பொத்தி வளர்த்தவளை ஏன் என்னால் புரிந்து கொள்ள முடியாமல் போய்விட்டது." கண்களில் முட்டிய நீர்த்துளிகள் கன்னங்களில் வடிகால் தேடின.

தனது இரு விழிகளையும் மெல்ல மூடிக் கொண்ட சபாவினால் தன் நினைவுகளை மட்டும் அஸ்தமனத்தின் அடிவானத்தினுள் புதைத்து விட முடியாமல் தவித்தார். சலனமில்லாமல் கடலுள் குளித்தெழும் நிலவுபோல் கடந்த கால நினைவுகள் அவர் மனத்தில் உதயமாகின.

⅄ ⅄ ⅄

மகள் அனிதாவுக்கு ஒன்பது வயதிருக்கும்போதே அந்தக் குடும்பத்தின் தேயாத நிலவாய்ப் பவனி வந்த அந்தக் குல விளக்கை, கொடும் பாம்பாக விதி கௌவிக் கொண்டது. தாயை இழந்த குறையின் நிழல் கூடப்படாமல் அனிதாவை வளர்த்து வந்தார் சபா. இமைகளுக்கு நடுவே மகளை வைத்துத் தன் இமைகள் மூடாமல் உறக்கத்தைத் தொலைத்து வாழ்ந்தவர்.

நன்றாகப் படிக்க வைத்தார். அதன் பயன் அவளுக்கு வங்கியில் உத்தியோக நியமனமும் கிடைத்தது. அந்த வைரத்தை ஒரு தங்கக் கலசத்தில் பார்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் அலைந்தார் சபா.

அவரின் அலைச்சல் ஒன்றும் வீண் போகவில்லை. ஆயிரம் தேடலின் பின் ஓர் அற்புதமான வரன் கிடைத்தது. அந்தப் பையன் கிராம சேவையாளராகக் கடமை புரிகின்றார். அப்பா, அம்மா கிடையாது. தன் சகோதரியுடனும், மைத்துனருடனும் வாழ்ந்து வருகின்றார்.

அன்பான, அருமையான குடும்பம் அழகான வரன். சபாவுக்குப் பிடித்துக் கொண்டது. அனிதா மட்டும் குறைவானவளா? அவள் தன் தாயைப் போல் நல்ல அழகி. நட்சத்திரத் தோழிகளுடன் பவனி வரும் பௌர்ணமி நிலவு. நிதானமான பார்வை, இரவின் ஒளித் துளிகளாக மின்னும் மின் மினிகள்போல் கண்கள், மலரின் இதழ் அவிழ்ந்ததுபோல் மெல்லிய சிரிப்பு. மொத்தத்தில் தன் அழகை எல்லாம் அவள் தன் கன்னக்குழிக்குள் புதைத்து வைத்திருந்தாள்.

⅄ ⅄ ⅄

திருமணமும் இனிதாக நிறைவடைந்தது. தன்னந் தனியாகவே தன் மகளின் சடங்கு வைபவங்களை எல்லாம் ஓடியோடிப் பார்த்ததால் சபா மெத்தக் களைத்து விட்டார். பரிசாக இருமலும் வந்து சேர்ந்து விட்டது.

மணமகன் வீட்டுக்குச் சென்ற மகள், கால் மாறித் தன் வீட்டுக்குவர இன்னமும் இரு தினங்கள்தான் இருந்தன. அதுவரை சபாவால் மகள் அனிதாவைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. நித்திரை, விழிப்பு, வெயில் குளிப்பு இவைகளின் பாதிப்பால் சபா நொந்து விட்டார். இருமலும் அவரைத் தொல்லைப் படுத்தியது. இவற்றுக்கெல்லாம் மேலாக மகளைக் காணாத தவிப்பும் அவரை வாட்டத் தனது சைக்கிளில் மெல்ல மகளிடம் புறப்பட்டார். அதிக தூரமில்லை இரண்டு மைல்கள்தான் வரும்.

அந்த வீட்டு வாசலில் ஒரு புத்தம் புதிய ஹையஸ் வாகனம் நின்றது. கதவைத் திறந்து உள்ளே தன் சைக்கிளை ஓரமாக நிறுத்தும்போதே அவரின் பெருத்த இருமல் அவர் வரவைக் கட்டியம் கூறியது.

இருமல் சத்தம் கேட்டதும் அனிதா தகப்பன் வருவதை அறிந்து கொண்டு வெளியே வந்தவள் தகப்பனை உள்ளே அழைத்து அங்கே சுவர் ஓரமாக இருந்த சோபாவில் அமர வைத்துவிட்டு எதுவுமே கூறாமல் குசினிக்குள் சென்று விட்டாள்.

தனக்காகத் தேநீர் எடுத்துவரச் சென்று விட்டாள் என்ற நினைப்புடன் சபா காத்துக்கிடந்தார். அனிதா வந்தவர்களைக் கவனித்துக் கொண்டிருந்தாள். மருமகன் அவர்களுடன் கதைத்துக் கொண்டிருந்தார். பலகாரங்கள், கேக் வகைகள், பழ வகைகள் எனப் பல உபசாரங்கள் குளிர்பானம் இன்னும் பல அனுசரணைகள் சபா மட்டும் கவனிப்பார் இல்லாமல் உட்கார்ந்திருந்தார்.

தன் மகள் ஒரு தடவையாவது தன்னுடன் கதைக்கவில்லையே என்ற மனச் சுமையுடனும், அந்தச் சோபாவுக்குச் சுமையாக நான் இருக்கின்றேன் என்ற எண்ணத்துடனும் இருந்தார் சபா.

அவரையும் மீறி வந்த இருமலையும் சிரமப்பட்டு வந்த இடத்துக்கே திருப்பி அனுப்பிக் கொண்டார். வசதியான வாழ்க்கை கிடைத்தவுடன் வளர்த்த அப்பாவைக்கூட மறந்து விட்டாளா? இரண்டு நாளகளுக்கிடையிலா? நினைவுகளால் உலர்ந்துபோன மனத்துடன் சோபாவின் மூலையில் உறைந்து போனார் சபா.

இன்னமும் மகளுடன் ஒரு வார்த்தையாவது பேசிவிட்டுப் போகலாம் என்ற நினைப்புடனும், அவளாவது என்னுடன் பேச மாட்டாளா? என்ற நினைவின் உயிர்ப்புடனும் உட்கார்ந்திருந்தார்.

"எப்படித்தான் முடிந்தது என்னை மறந்து போக ஈன்று புறந்தள்ளியவள் இவ்வுலகை நீத்த பின் தாங்கி வளர்த்தவன் நான் அல்லவா, தாயாக, தந்தையாக.. எப்படி என்னை மறந்தாள்?' அந்த அவரின் மனக் கேள்விகளின் பதில்கள் மட்டும் கூரிய ஈட்டியாக மகளைத் தாங்கிய இதயத்தைக் குத்தி இரணப்படுத்தியது.

வந்தவர்கள் விடைபெற்று நகர்ந்தார்கள். வாசல்வரை சென்று அவர்களை வழி அனுப்பிய அனிதாவின் அந்த அன்புப் பார்வை தந்தை மீது பதிந்தது. நேராகத் தந்தை இருந்த சோபாவின் அருகே வந்தவள் தந்தையின் அருகே அமர்ந்து கொண்டு அவர் நெஞ்சில் தலையைச் சாய்த்துக் கொண்டாள்.

அவளின் ஈரவிழிகளின் கசிவு சபாவின் இதயத்தைச் சுட்டது. அவள் அழுகின்றாள். சபாவால் தாங்கமுடியவில்லை. மெல்ல மகளின் தலையை வருடிக் கொண்டிருந்தார்.

அனிதாவின் கரங்கள் தந்தையின் நெஞ்சைத் தடவிக் கொண்டிருந்தது. " அப்பா நல்லா நொந்து போனீங்கள். தன்னந்தனியாக எவ்வளவோ செய்து முடிச்சுப் போட்டீங்கள். இனி உங்களுக்காக நாங்கள் இருக்கிறம் அப்பா, கவலைப் படாதேங்கோ" என்றவள், இன்னமும் தந்தையின் மார்பில்தான் சாய்ந்திருந்தாள். அவளின் வார்த்தைகள் மனதில் முட்டித் தொண்டைக்கு வெளியே வராமல் விக்கிக் கொண்டன. தகப்பனை இறுக அணைத்துக் கொண்டாள்.

"அப்பா ஏன் இருமிறீங்கள். நான் குசினிக்கை முட்டை அடிச்சு மூடி வைச்சிருக்கிறன். அவையள் இருந்ததிலை கொண்டு வரவில்லை. பொறுங்கோ எடுத்து வாறன்" என்றபடி எழுந்திருக்க முன்னரே முட்டை அடித்த பாத்திரத்துடன் மருமகன் வந்து கொண்டிருந்தார். அதைக் கணவரிடம் வாங்கித் தகப்பனிடம் கொடுத்தாள் அனிதா.

"மாமா...! வந்திருந்தவை என்ரை அம்மாவின்ரை தூரத்து உறவுக்காறர். கொஞ்சம் அகடவிகடம் பிடிச்ச மனிசர். பணத் திமிர்தான். அதுதான் நான் உங்கள அறிமுகப்படுத்தேல்லை. தேவையில்லாமல் கதைச்சு உங்கள நோகடிச்சுப் போடுங்கள்.'

சபாவின் மனம் நிறைந்து விட்டது. அவரின் நினைவுகள் அவரையே சுட்டது. தவறாக நினைத்த இதயத்தின் சுவர்களிலிருந்து குருதிப் புனல் வழிந்தது.

"சாப்பிட்டுவிட்டு போகலாம் மாமா" நாங்கள் நாளைக்கு வந்திடுவம். யோசிக்காதையுங்கோ. அனிதாவுக்கு உங்கடை நினைவுதான் அப்பா சாப்பிட்டாரா? நித்திரை கொண்டாரா? குளிசை போட மறந்து போடுவார். என்றபடிதான்' என்று கூறிமுடிக்கமுன் கணவனின் தோளில் சாய்ந்து கொண்டாள் அனிதா.

சபா மெல்ல சிரித்தபடி இல்லை பிள்ளையள் அங்கையுமி சாப்பாடு கிடக்கு. நான் போட்டு வாறன். என்றபடி புறப்பட்ட தந்தையின் கைக்குள் ஒரு சாப்பாட்டுப் பாசலை வைத்தாள் அனிதா. 'போன உடனே சாப்பிடுங்கோ அப்பா. முட்டை அவிச்சு வைச்சிருக்கிறன். பிறகு பழுதாய்ப் போடும்" என்றாள்.

மகளிடமும் மருமகனிடமும் விடை பெற்றுக் கொண்டு வந்த சபாவின் மனம் இன்னமும் வேதனையால் வெந்து கொண்டிருந்தது.

"என் மகள் குளிர் நிலவு. நிலவு சுடுவதில்லை" என்ற நினைப்புடன் அந்தச் சாய்வு நாற்காலிக்குள் தன்னைப் புதைத்துக் கொண்ட சபாவால் தன் மனதில் ஏற்பட்ட தவறான நினைவுகளைப் புதைத்துக் கொள்ள முடியாமல் தவித்துக் கொண்டிருக்கின்றார்.

மெல்ல அவர் இமைகள் உறக்கத்தை நேசித்தாலும் கடை விழிநீர் சுரந்து அவரின் தவறான நினைவுகளைக் கழுவிக் கொண்டிருந்தது.

"தீர்ப்புக்கள் திருத்தப்படலாம்

திருத்தங்களே தீரப்பாகலாம்"

ஆனால் நினைவுகளை அழித்தெழுத முடியாது. அழிக்க நினைக்கும் போதெல்லாம் வலிக்கும்.
வேதனைப்படுத்தம், இதயத்தை வேக வைக்கும்.
யாரையும் தவறாக எடைபோட முடியாது.
மற்றவர்களின் சந்தர்ப்பம், சூழ்நிலை என்ன என்பதை நாங்கள் புரிந்து கொள்ளும்வரை.





காடுகளும் மனிதனும்

கட்டுரை



இர.சந்திரசேகரசர்மா

விஞ்ஞான ஆசிரியராக இருந்தவர். கல்வி அமைச்சின் பாடவிதான அபிவிருத்தி நிலையத்தின் விஞ்ஞானக்குழுவில் அங்கத்தவராகப் பணிபுரிந்தவர். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் மாணவர்களுக்கும் வளர்ந்தோருக்குமான விஞ்ஞான நிகழ்ச்சிகளை நீண்டகாலமாகத் தயாரித்து வழங்கியவர். சிறுகதைகள், கட்டுரைகள் எழுதி வரும் இவரின் 'விந்தைகள் செய்த விஞ்ஞானிகள்' என்ற நூல் இதுவரை ஐந்து பதிப்புக்களைத் தாண்டியுள்ளது.

மரங்களின் நிழலில்தான் மனிதனதும் மற்றும் உயிரினங்களினதும் வாழ்க்கைதங்கியிருக்கிறது. மரங்கள், செடிகள், கொடிகள் பச்சை இலைகள்தான் இந்த உலகத்துக்கே உணவளிக்கின்றன. பச்சைஇலைகள் பகல் நேரங்களில் சூரிய ஒளியில் நிலத்து நீரையும் கனியுப்புக்களையும் வளியிலுள்ள காபனீரொட்சைட்டையும் பயன்படுத்தி உணவைத்தயாரிக்கின்றன.

அவை காபனீரொட்சைட்டைப் பயன்படுத்தி ஒட்சிசனைவெளியிடுகின்றன. தாவரங்களில் தயாரிக்கப்பட்ட உணவுப்பொருள்கள்இரவில் தாவரத்தின்எல்லாப்பகுதிகளுக்கும்எடுத்துச் செல்லப்பட்டு, பயன்படுத்தப்படுவதோடுதாவரத்தின்பலபாகங்களிலும்உணவு, பல்வேறு பொருள்களாகச் சேகரித்து வைக்கப்படுகின்றன. இவைஅந்தத்தாவரங்களுக்குமட்டுமல்லாது மனிதனுக்கும் மற்றும் உயிரினங்களுக்கும்உணவாகின்றன. உலகத்துக்குக்கே உணவளிக்கும் பச்சை இலைகள் தாமே உணவாவதும்உண்டு.

சில காய்கள், பழங்கள், தாவரப் பாகங்கள் புளிக்கின்றன, இனிக்கின்றன, வேறு சில துவர்க்கின்றன. இவற்றுக்கெல்லாம் காரணம்அவற்றில்உள்ளவெவ்வேறுவிதமான கனியுப்புக்கள்தான். தாவர வேர்களிலுள்ள வேர்மயிர்கள் தாவரத்துக்குத் தேவையான கனியுப்புக்களைத்தேர்ந்தெடுத்துஉறிஞ்சும் திறனுள்ளவை.

இதை வேர்மயிர்களின் "தேர்ந்தெடுக்கும் திறன்" என்று சொல்லலாம்.

மனிதன் மரங்களை மறந்துவிடுவதில்லை. அன்றிலிருந்து இன்றுவரை பல இடங்களுக்கும் மரங்களின் பெயரையே வைத்து சுட்டிவருகிறார்கள். உதாரணத்துக்குச் சில வற்றைக் குறிப்பிடலாம்.

அரசடி அம்மன் கோயில்
ஆலடிப் பிள்ளையார் கோயில்
அரசடிப் பேருந்துத் தரிப்பிடம்
இலுப்பையடிச்சந்தி
வேம்படிப் பள்ளிக்கூடம்

என இடங்களுக்கு மரத்தின் பெயரை வைத்திருக்கிறார்கள்.

சில காலங்களுக்கு முன்னர் நாமெல்லாம் மாணவர்களாக இருந்த காலங்களில் கொழும்புக்கு தொடருந்து செல்லும்போது, போகப்போக இருமருங்கிலும் அடர்ந்த காடுகள் இருந்தன. இப்போது அவை எல்லாம் எங்கோ காணாமல்போயின. நிலம்வெட்ட வெளியாகப் போய்விட்டது. ஏதோ பயிர் செய்கிறார்கள். மக்கள் காடுகளின் முக்கியத்தை அறிவதாகத் தெரியவில்லை.

உலகின் காடுகள்

காடுகள் உலகின் தரைப்பரப்பில் மூன்றில் ஒருபாகத்தைமூடியிருக்கின்றன. பலவிலங்குகளுக்கும் எண்ணிறைந்த உயிரினங்களுக்கும்ஆதாரமாகஇருக்கின்றன. அத்தோடு 1.6பில்லியன் மக்களுக்கு வாழ்வாதாரமாகவும் இருக்கின்றன. இருப்பினும் மனிதனே ஒவ்வொருவருடமும்மில்லியன்கணக்கான ஏக்கர் காடுகள் அழிவதுக்குக் காரணமாக இருக்கின்றான்.

போர்னியோ தீவின் காடுகள்

உலகத்தின் மூன்றாவது பெரிய தீவு போர்னியோவாகும். இங்குள்ள காடுகளில் பெரும்பாலும் குரங்கினங்கள் வாழ்கின்றன.

அமேசன்

அமேசன் காடுகள் உலகில் மிகவும் பிரபல்யமான காடுகளாகும். 10அயிரத்துக்கும் மேற்பட்ட உயிரியல் பரம்பல் இங்கே காணப்படுகின்றது.

இந்தியா கிப்ளிங்கில் உள்ள காடுகள்

இது மனதைக் கவரும் காடாகும். இந்தக்காட்டைப் பற்றி றுடியாட் கிப்பிளிங் (Rudyard kipling) என்ற ஆய்வாளர் அதனுள் சென்று எழுதிய ஆக்கம் அண்மையில் படமாகவெளிவந்தது. இங்குள்ளகன்காதேசிய பூங்காவில் உலகின் பெரிய புலிகளின் பாதுகாப்பிடம் அமைந்துள்ளது.

இலங்கையின் சிங்கராஜ காடு

இலங்கையின் சிங்கராஜ வனத்தில் குறிப்பிடத்தக்கதாவரங்களும்மிருகங்களும் இருக்கின்றன. அயனமண்டலத் தாவரங்களும், செடி, கொடிகளும் இந்தக் காட்டில் நிறைந்துள்ளன. இங்கு பலவகை மிருகங்களும்வசிக்கின்றன.

ஆபிரிக்கக் காடுகள்

மேற்கு ஆபிரிக்காவின் கரையோரக் காடுகளில்தான்'டார்சான்'படமாக்கப்பட்டது. இந்தக் காடுகளில் கொரில்லா மிருகங்களை அவற்றின் அருகில் சென்று அவதானிக்கலாம். உகண்டா,ருவண்டாபோன்றஇடங்களிலுள்ள காடுகளில்கொரில்லாக்கள்அநேகமுண்டு.

பபுவா நியுகினியின் காடுகள்

இங்கு75சதவீதபொட்டல்காடுகள்இருக்கின்றன. நூற்றுக்குமேற்பட்ட இனத்தாவரங்கள் இங்கு மண்டிக் கிடக்கின்றன. கங்காரு மிருகங்கள் இங்கு வாழ்கின்றன. வரலாற்றில் ஆர்வமுள்ளவர்கள் இங்கு சென்று ஆய்வு செய்வதற்குப் பொருத்தமானகாடு.

கிறிஸ்மஸ் தீவு

இங்குள்ள காடுகளில் 40மில்லியன்கள் வரையானசிவப்புநண்டுகள்வாழ்கின்றன. தென்னைநண்டுகளும்இங்குள்ளன.

புராதன வைப்பொவா காடுகள்

நியூசிலாந்தின் வடக்குத் தீவில் இந்தக் காடு அமைந்துள்ளது.வைப்பொவாதான்உலகின் பழமையான காடாகும். இங்கு கயுரி என்ற இன மரங்கள் தமது பருத்த அடிகளுடனும் அடர்ந்த இலைகளுடனும் உயர்ந்து நிற்கின்றன.

பேருவின் முகில்மூடிய காடுகள்

பல புதிய தாவர இனங்கள் முகில் மூடுமாறு காட்டுத்தரையில்எழுந்துநிற்கின்றன.

கொஸ்றா றிக்கா முகில் காடுகள்

இங்குள்ளபலவிதமானமரங்கள்ஒழுங்கான சூரிய ஒளியைக் காண்பதில்லை. அவற்றின் உள்ளே சூரியஒளி புகுந்து செல்கையில் அழகான தோற்றமேற்படும்.

காடுகளின் முக்கியத்துவம்

காடுகள் ஒட்சிசனைத் தருவதால் நமது சுவாசத்துக்கு உதவுகின்றன. காடுகள் வெறும் காடுகள் மாத்திரமல்ல அங்கு உலகின் பல உயிரினங்களும் வாழ்கின்றன. மக்களும் அங்கு வாழ்கின்றனர். உலகில் 300மில்லியன் மக்கள் காடுகளில் வாழ்வதாக அறியப்பட்டுள்ளது.

காடுகள் எம்மைக் குளிராக வைத்திருக்கின்றன. நிழல்தருகின்றன. உலகையேகுளிராக வைத்திருக்கின்றன. மழைவீழ்ச்சிக்குக்காரணமாகஅமைகின்றன. காடுகள்வெள்ளப்பெருக்கைத்தடுக்கின்றன. காற்றுத்தடுப்புவலயமாக அமைகின்றன. அசுத்தமான காற்றைச் சுத்தமாக மாற்றுகின்றன. ஒலி மாசைத் தடுக்கின்றன. நமக்கு உணவளிக்கின்றன. நமக்கு மருந்துப் பொருள்களைத் தருகின்றன. தளபாடங்களைச்செய்ய வெட்டுமரங்களைத் தருகின்றன. மக்களுக்குத் தொழில் வழங்குகின்றன. காடுகள் கம்பீரத்தைத் தருகின்றன. இயற்கை அழகாக இருக்கின்றது. மண்ணரிப்பைத்தடுக்கின்றன. நாம்பழைய காடுகளைக்காத்து,பேணிஅடுத்தசந்ததிக்குக் கொடுக்கவேண்டும். காடுகளை நாம் அழித்துவிட்டால் அவற்றை நாம் இழந்தவரா

கவிதை



பா. பாலாஜினி

வளர்ந்து வரும் இளம் எழுத்தாளர். வண்ணாங்கேணி– பளையைச்சேர்ந்தவர், யாழ். பல்கலைக் கழகத்தில் கலைப்பிரிவில் முதலாம் வருடத்தில் அரசியல் விஞ்ஞானம், சுற்றலாத்துறை ஆகிய பாடங்களைக் கற்று வருகிறார். கவிதை எழுதுவதில்ஆர்வம்உள்ளஇவர், ஏராளமானகவிதைகள், கட்டுரைகளை உதயனில் எழுதியுள்ளார்.

மோகப் படலம்

முல்லைக் காட்டுக்குள் "உனை
முத்தமிடப் போகின்றேன்
உன் முகில் கத்தரிதில்
உயிர் வாழப் போகின்றேன்" உன்
முத்தாரைப்பாயில்
உறங்கிடப் போகின்றேன்
உன்முக்கு நுனியை "நான்
சுவைத்திடப் போகின்றேன்
முன்று வேளைகளும் உனை
இரசித்திடப் போகின்றேன்

உன்விரல் நுனி தொட்டு
விளையாடப் போகின்றேன்
உன் நுனிடை கண்டு
இளைப்பாறப் போகின்றேன்
உன்தல் இருளில் நான்
குடியிருக்கப் போகின்றேன்
கூதல் பொழுதில் உனை
கொஞ்சிடப் போகின்றேன்

உன் பின்னழகில் நான்
பிரியங்களாகப் போகின்றேன்
அவை அசைந்திடும் அழகில்
அடிமையாய் போகின்றேன்
மோதி நிற்கும் முன்னழகில்
முகம் சாய்க்கப் போகின்றேன்
கோபுர வாசலில் தனில்
பக்தனாகப் போகின்றேன்
உன் பாத அழகில் நான்
பலியாகப் போகின்றேன்
உன் மொத்த அழகில் நான்
பித்தனாகப் போகின்றேன்



கட்டுரை



கலாநிதி சு. குணேஸ்வரன்

யாழ்ப்பாணம் – தொண்டமானாற்றைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கவிதை, கட்டுரை, ஆய்வு ஆகியவற்றில் ஈடுபட்டு வருகிறார். 'மூச்சுக் காற்றால் நிறையும் வெளிகள்', 'அம்மாவிடம் சேகரமாகிய முத்தங்கள்' ஆகிய கவிதைத் தொகுதிகளும் 4கட்டுரை நூல்களும் வெளிவந்துள்ளன. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில், 'புலம் பெயர் இலக்கியங்களில் நாவல்கள்' தொடர்பான ஆய்வை மேற்கொண்டு கலாநிதிப் பட்டம் பெற்றார். தற்போது ஆசிரியராகப் பணியாற்றுகிறார்.

பண்பாட்டின் கூறாக மொழி

தாயகம் துறந்தவர்களின் புனைவுகளை அடிப்படையாகக் கொண்ட பார்வை

மனிதனின் அடிப்படைத் தேவைகள் அனைத்துப் பண்பாடுகளிலும் ஒன்றாக இருப்பதைக் கொண்டு பண்பாட்டுப் பொதுமை என்ற தொடரை மானிடவியலாளர்கள் எடுத்துக்காட்டுவர். மொழி, உணவு, வீடு, போக்குவரத்துச்சாதனங்கள், உடை, கருவிகள், பொருள்கள், தொழில்கள், கலை, மரபுக்கதைகள், அறிவியல் கருத்துக்கள், சடங்குகள், மூடநம்பிக்கைகள், குடும்பம், திருமணம், சமுதாயக்கட்டுப்பாடு, விளையாட்டுகள், பிற தொடர்புடைய சமுதாய நிறுவனங்கள், சொத்து, பரிமாற்ற முறைகள், வணிகம், அரசு, சட்டம், போர் ஆகியனவெல்லாம் இவற்றுள் அடங்கும்.

"பண்பாட்டுப்பொதுமைகள் என்பன உலகிலுள்ள அனைத்துப் பண்பாடுகளுக்கும் பொதுவான கூறுகளைக் குறிக்கும். எண்ணற்ற கூறுகள் அனைத்துப் பண்பாடுகளுக்கும் பொதுவாக உள்ளன." (பக்தவத்சலபாரதி, 1999 பண்பாட்டு மானிடவியல், விரிவாக்கப்பட்ட திருத்திய பதிப்பு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, ப. 152)

இந்தப் பண்பாட்டுக்கூறுகளைச் சமுதாயத்திலிருந்து கற்றுக்கொள்ளும் அறிவாலும் வழிவழியான கையளிப்பாலும் பெற்றுக் கொள்கிறோம். இந்த வகையில் குடும்பம், சமூகம், திருமணம், சடங்கு, சமயம், மொழி, நம்பிக்கை, பழக்கவழக்கம் எனப் பண்பாட்டின் உட்கூறுகள் ஏராளமாக இருக்கின்றன. ஆனால் இவை ஒவ்வொரு பண்பாட்டிலும் வேறுபட்டுக் காணப்படுகின்றன. அதற்கு இயற்கைச் சூழலும் சமுதாயச் சூழலும் காரணமாக அமைகின்றன. இவற்றில்மொழிகுறித்து இங்கு நோக்குவோம்.

மொழி

ஓர் இனக்குழுமத்தின் உயிர்ப்பின் அடையாளமாக இருப்பது மொழி. அது பண்பாட்டின் வழிவந்த ஊற்று. மொழியின்றேல் இனமில்லை. அந்த இனத்தின் தனித்துவ அடையாளங்கள் இல்லை. பல்பண்பாட்டுச் சூழலில் புலம்பெயர்ந்து, தமது பிள்ளைகளுக்குத் தமிழ்மொழியைக் கற்பிப்பதற்கும், தமிழைப்பேசவைப்பதற்கும் தமிழினூடாகத் தமிழர் என்ற அடையாளத்தைக் கையளிப்பதற்கும்பல்வேறுசெயற்பாடுகளைப்புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்கள் ஆற்றிவருகின்றனர். அவ்வகையில் புனைவு மற்றும் புனைவுசார இலக்கிய முயற்சிகளுடன் கலை தொடர்பான செயற்பாடுகளிலும் ஈடுபட்டுவருகின்றனர்.

இவையெல்லாவற்றினதும் நோக்கம், தமிழ்மொழியை அடுத்த தலை முறையினரிடம் கையளிப்பதாகும்.

புகலிட அனுபவங்களைக் கொண்ட நாவல்களில் மொழி தொடர்பான செய்திகள் ஆங்காங்கே வருகின்றன. இரண்டாம் தலைமுறையினர் தமிழ்மொழியை எழுதவும் பேசவும் வேண்டும் என்பதற்காக வார இறுதி நாள்களில் தமிழ்ப் பாடசாலைகளை நிறுவித் தமிழ் பயிற்றுவிக்கின்றனர். தமிழ்மொழிக்கல்வியுடன் கலை நிகழ்ச்சிகளையும் அங்கு நிகழ்த்துகின்றனர். குறிப்பாக இரண்டாம் தலைமுறையினரின் தமிழ்மொழிக் கல்வி தொடர்பான பிரச்சினைகள் புலம்பெயர்ந்தவர்களைப் பெரிதும் சிக்கலுக்குள்ளாக்குகின்றன. முற்றிலும் மாறுபட்ட பிரதேசத்தில் அந்நியப்பட்டு, தம்மைக் கறுப்பராகவும், நாடற்றவராகவும், அகதிகளாகவும்உணரும்போதுதாயகம்பற்றியும், தமது உறவுகள் பற்றியும், தமது பண்பாடு பற்றியும் நினைக்கத் தலைப்படுகின்றனர். கனடாபோன்று அதிகளவில் தமிழர் வாழக்கூடிய நாட்டில் தமது தாயகத்தை மீளுருவாக்கம்செய்து கொள்வதன் ஊடாகத் தாயகம் பற்றிய நினைவைத் தற்காலிக நினைவாக வேனும் பேண முயல்கின்றனர்.

தாம் எப்போதாவது இலங்கைக்குத் திரும்பிச்செல்லும்போது தமது பிள்ளைகள்தமிழ்பேசவேண்டும்என்றகுறைந்தபட்ச விருப்பம், மற்றும் அந்நிய நாட்டில் தமதுஉரவரைஉறவினரைச்சந்திக்கும் போதும், விழாக்களில்பங்கெடுக்கும்போதும் தமிழ் பேசவேண்டும், தமிழராய் உணர வேண்டும் என்ற அவர்களின் வேணவாதான் பிள்ளைகள் தமிழ் கற்க வேண்டும் என்ற கட்டாயத்தை ஏற்படுத்துகின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக வேற்றுநாட்டு அடையாளம் முழுதாகத் தமிழைக் காவு கொள்ளும்முன்னர் உணர்வாலும், செயற்பாட்டாலும் தமிழராய்உணர்தல். இதுபுலம்பெயர்ந்தமுதல் தலைமுறைக்குப்பிரச்சினையல்ல.

அவர்களின் இரண்டாந் தலைமுறைக்குரிய பிரச்சினை. எனவே மொழிவழியாகப் பண்பாட்டைக் கடத்துவதற்கு ஒரு முயற்சியாகத்தான் தமிழைக் கற்க வேண்டிய தேவையை வலியுறுத்துகின்றனர். நான் யார்? எனது தாய்நாடு எது? எது எனது தாய்மொழி? ஆகிய கேள்விகள் எழும்போதுதான் தாய்நாடு பற்றியும் தமது மொழி பற்றியும்தமது பண்பாடுபற்றியும் பெற்றோர் பிள்ளைகளுக்குச் சொல்லவேண்டிய நிலையும்தமது வேர்களைத் தேடவேண்டிய தேவையும் வருகிறது.

தமிழர் புலம்பெயர்ந்திருக்கின்ற நாடுகளைப் பொதுப்படையாக மொழி சார்ந்து பார்ப்போமானால், ஆங்கிலம் பேசும் நாடுகள், ஆங்கிலம் அல்லாத ஏனைய மொழிபேசும் நாடுகள் என இரண்டாக வகுத்து நோக்கலாம். பிரித்தானியா, அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா ஆகியவை ஆங்கிலத்தை அரசமொழிகளாகக் கொண்ட நாடுகள். அங்கு கல்வி மொழியும் ஆங்கிலம்தான். அங்கு புலம்பெயரும்போது ஏற்கெனவே இலங்கை காலனித்துவ ஆட்சிக்குள் இருந்தமையால் தமிழர்களை, அவர்களின் பண்பாட்டை ஆங்கிலேயர் ஓரளவுக்காவது புரிந்து கொள்ள இடமிருக்கிறது. அதேபோல் புலம்பெயர்ந்தவர்களும் ஆங்கில மொழி அறிவுள்ளவர்களாக இருக்கும்போது அவர்களுக்குரிய தொழிலைப் பெற்றுக்கொள்வதற்குரிய வாய்ப்புக்களும் இருக்கின்றன.

நோர்வே, பிரான்ஸ், சுவீடன், டென்மார்க், சுவிஸ், ஜேர்மனி முதலியநாடுகளில் அந்தந்தநாட்டுமொழிகள்முதன்மொழிகளாகவும் பிரெஞ்சு, ஜேர்மன், ஆங்கிலம், இலத்தீன், டேனிஷ், சுவீடிஸ், உரோமன்ஸ், நொஸ்க் முதலிய மொழிகளில் ஏதாவது ஒன்று இரண்டாம் மொழியாகவும் இருப்பதற்கு வாய்ப்புஉள்ளது.

இந்த நிலையில் 'தமிழ்' மூன்றாம் அல்லது நான்காம் நிலைக்குத் தள்ளப்படும் நிலையே ஏற்படுகிறது. புலம்பெயர்ந்தவர்களின் பிள்ளைகள் அந்தந்த நாட்டு மொழியிலேலே கல்வி பயில்கின்றனர். பிள்ளைகளின்சிந்தனைமொழியாகவும் கல்விமொழியாகவும் அந்தநாட்டுமொழிகளேமுதன்மொழியாகவும்உள்ளன. ஒரு பிள்ளை அந்த நாட்டு மொழியிலேயே சிந்திக்கிறது. பேசுகிறது. கற்கிறது. இந்த நிலையில் மேலதிகமாகத் தமிழ் கற்க வேண்டிய தேவை ஏற்படும்போது ஆங்கிலம் பேசும் நாடுகளைக் கொண்ட பிள்ளைகளுக்கு 'தமிழ்' இரண்டாவது மொழியாகவும், ஆங்கிலம் அல்லாத பிற மொழி பேசும் நாடுகளில் வாழும் பிள்ளைகளுக்கு 'தமிழ்' மூன்றாவது மொழியாகவும் ஆகிவிடுகிறது. இது முடிந்த முடிபுமல்ல. சில பிள்ளைகளுக்குத் தமிழ் இரண்டாவது மூன்றாவது மொழியாகக் கூட இல்லாத நிலையும்உள்ளது.

'கல்வி மட்டத்தில் தமிழ்மொழிப் பயில்வினை கல்விமொழி நீலைநின்று வகுக்கலாம். இந்த வகைப்பாட்டுக்குப் பெயரிடுவதிலேயே சிறியதொரு சிக்கலுண்டு. தமிழை 'தாய்மொழி' (mother tougue) எனக்கொள்வதா அன்றேல் 'முதல் மொழி' (first language) எனக்கொள்வதா என்பதுவே

அந்தப் பிரச்சினையாகும். கல்விமொழி (educational medium) தமிழாக இல்லாத விடத்துப் பாடசாலைச் சூழலிலேயே தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட ஒரு பிள்ளை தமிழை அந்தக் கல்விச் சூழலில் இரண்டாவது மொழியாக (second language) அன்றேல் நோர்வே, டென்மார்க்கில்நடப்பதுபோன்று மூன்றாவது மொழியாகவே (third language) பயிலவேண்டிய ஒரு நிலைமையுண்டு" (சிவத்தம்பி,



கா. 2007. தமிழ் கற்பித்தல். குமரன் புத்தக இல்லம். ப .8.) என்று பேராசிரியர் அவர்கள் குறிப்பிடுகிறார்.

தாயகம் துறந்தவர்களின் படைப்புக்களின் ஊடாகத் தமிழ்மொழியின் நிலை

இப்போது எழுதிக்கொண்டிருப்பவர்களில் அதிகமும் முதற் தலைமுறையினர் தான். புதியதலைமுறையினர் தமிழ்மொழியைக் கற்றுக்கொண்;டாலும் அவர்களின் சிந்தனைமொழி அந்தந்த நாட்டு மொழிகளாகவே உள்ளன.

எனவே புதிய தலைமுறையினரில் சிலர் தான் எழுத்து முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் கவிதை, கட்டுரை மற்றும் ஓவியம் முதலான கலைப்படைப்புக்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆனால், புனைகதைப்பரப்பில் ஈடுபடுவது பற்றி அறியமுடியவில்லை. சில நாவல்களை அடிப்படையாக வைத்து மொழி பற்றிய கூற்றுக்களை எடுத்துக் காட்டமுடியும்.

தாயகம் துறந்து அவுஸ்திரேலியாவில் வாழும் முருகபூபதியின் 'பறவைகள்', டென்மார்க்கில் வாழும் இ.தியாகலிங்கத்தின் 'திரிபு', டென்மார்க்கில் வாழும் கி.செதுரையின்'சுயம்வரம்', நித்தி யகீர்த்தியின் 'தொப்புள்கொடி' ஆகிய சில நாவல்களிலேயே இவை பதிவாகியுள்ளன. கதை நகர்வில் பிள்ளைகள் பிரெஞ்சு, டொச், டெனிஸ் ஆகிய மொழிகளில் உரையாடுவதாகக் காட்டப்படுகிறது. அந்தப் பிள்ளைகள் தாயகத்துக்குப் பெற்றோருடன் விடுமுறையில் வரும்போது தமது பெற்றோரின் தாயக உறவுகளுடன் உரையாடுவதற்குக் கஷ்டப்படுகிறார்கள் என்பதும் காட்டப்படுகிறது.

— — — — —

"சிற்றம்பலம் சில நிமிடங்கள் கண்களை மூடினார். இருமினார்"

"இந்தப் பிள்ளைகள் ஒரு சொல் தமிழ் பேசுவதாகத் தெரியவில்லை. இந்த இலட்சணத்தில் அவ என்ன செமினாரில் பேசப் போகிறாவாம்...?" சிற்றம்பலம் மனக்குமைச்சலை வெளியே கக்கினார்.

"என்ன செய்வது அங்குள்ள சூழல் அப்படி?"

"அப்படிச்சொல்லாத பிள்ளை... இவவுக்கு அக்கறையில்லை... அவன் பாவி... புருஷனோடு இவவுக்குச் சண்டை பிடிக்கிறதில் இருக்கும் அக்கறை இந்தப் பிள்ளைகளுக்குத் தமிழ் சொல்லிக் கொடுப்பதிலும் இருந்திருக்கலாம்தானே... வெட்கக்கேடு... நான் தமிழ் தமிழ் என்று முழங்கினதமிழ்வாத்தி... ஆனால் என்ரபேரப்பிள்ளைகளுக்குத்தமிழ்தெரியாதாம்." (முருகபூபதி, லெ. (2001) பறவைகள், குமரன் பதிப்பகம், சென்னை, ப. 172.)

மேற்குறித்த உரையாடல் முருகபூபதியின் 'பறவைகள்' நாவலில் வருகிறது. தாயகத்து உறவுகளைப் பார்க்கப் பெற்றோருடன் வரும் பிள்ளைகளுக்கு தமிழ் தெரியாதநிலையும், அங்குகுடும்பஉறவுகளில் அந்நியோன்னியம் இல்லாமையும் இந்த நாவலின் குறித்த பகுதிக்கு ஊடாகத் தெரியவருகிறது. இதேபோல் தெ. நித்தியகீர்த்தியின் தொப்புள்கொடி என்னும் நாவலிலும் மொழி மற்றும் கலை தொடர்பான புலம்பெயர்ந்த தமிழரின் செயற்பாடுகள்எடுத்துக்காட்டப்படுகின்றன. அ. முத்துலிங்கத்தின் உண்மை கலந்த நாள்குறிப்புகளில்குறித்தபாத்திரம்ஒன்று வேற்று இனத்தவர் ஒருவருடன் உரையாடுகிறது. அந்த உரையாடலில் மிக முக்கியமான ஒரு பகுதி சுட்டிக்காட்டப்படுகிறது. பத்து மில்லியன்மக்கள்ஒருமொழியைப் பேசினாலும் அந்த மக்களுக்கு என்றொரு நாடுஇல்லாவிட்டால்அந்த மொழி விரைவில் அழிந்துவிடும்என்றும், 'ஹீப்ரு' மற்றும் 'அராமிக்' மொழிகள் பற்றியும் இந்த நாவலில் எடுத்துக்காட்டப்படுகின்றது.

"நீங்கள் வரலாற்றைப் படித்தால் தெரிந்துவிடும். கிறிஸ்து பிறப்பதற்கு 1000 ஆண்டுகளுக்கு முன்னரே ஹீப்ரு மொழியும், அராமிக்மொழியும்செழித்துவளர்ந்தன. இரண்டுக்குமே சமவயது. இரண்டிலுமே எழுதப்பட்ட செல்வங்கள் இன்றுவரை பாதுகாக்கப்பட்டு வருகின்றன. நாளடைவில் இரண்டு மொழிகளுமே நலிந்தன. 100வருடங்களுக்கு முன் ஹீப்ரு மொழி எழுத்தில் மட்டுமே வாழ்ந்தது. பேசுவதற்கு ஓர் ஆன்மா இல்லை. இன்று ஐந்து மில்லியன் மக்கள் ஹீப்ரு பேசுகிறார்கள். எழுதுகிறார்கள். பழைய இலக்கியங்களும் புதிய இலக்கியங்களும் படிக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு நாடு உண்டு. அதன் பெயர் இஸ்ரேல். அவர்களுடைய மொழி இனிமேல் அழியவே அழியாது"

"நாடு இல்லாமல் ஒரு மொழி வாழமுடியாது என்று சொல்கிறீர்களா?'

''நான் ஒரு தலைமுடி திருத்துபவன். மொழியியல் அறிஞன் அல்ல. எனக்கு என்ன தெரியும்? நாடு இல்லாமல்தானே என் மொழி சிதைந்தது. நாடு இருந்தபடியால்தானே இறந்துபோன ஹீப்ருமொழி மறுபடியும் உயிர்பெற்று நிலைத்து நிற்கிறது. உங்கள் மொழி தமிழ் நாடு இல்லாமல் வாழும் என்று நினைக்கிறீர்களா?"

"ஆனால் இந்தியாவில் ஒரு தமிழ் மாநிலம் இருக்கிறதே"

"மாநிலம் வேறு. நாடு வேறு. இன்று உலகத்திலுள்ள ஒரு சின்னஞ் சிறிய நாட்டை எடுத்துக்கொள்ளுங்கள் மால்ட்டா. அங்கே 4இலட்சம் மக்கள் வாழ்கிறார்கள். அவர்களுடைய மொழி மால்ட்டீஷ். அந்த மொழி அழியுமா? அழியாது. ஒரு மைல்கல் எப்போதும் உண்மை பேசுவதுபோல நான் பேசுகிறேன். அவர்களுடைய மொழி அழிய வேண்டும் என்றால் முதலில் அந்த நாடு அழியவேண்டும். உங்கள் நாட்டுக்குச் சமீபத்தில் இருக்கும் மாலை தீவு, அதை எடுத்துக் கொள்ளுங்கள். அதனுடையசனத்தொகை3.5இலட்சம் அவர்களுடைய மொழி திவேஹி. அது அழியுமா? எப்படி அழியும்? 3இலட்சம் மக்கள் வாழும் நாடு ஐஸ்லாந்து. அவர்களுடைய மொழி ஐஸ்லாண்டிக். அது அழியுமா? இல்லை. இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம்"

"நம்புவதற்கு கஷ்டமாக இருக்கிறது. பத்து மில்லியன் மக்கள் ஒரு மொழியைப் பேசினாலும் அவர்களுக்கு ஒரு நாடு இல்லாவிட்டால் அந்த மொழி அழிந்துவிடும் என்று சொல்கிறீர்கள்?" (முத்துலிங்கம். அ. 2008, உண்மை கலந்த நாட்குறிப்புகள், பக். 26,32,64.)

என்றமேற்குறித்தஉரையாடல்நாடு, மக்கள், அவர்கள் பேசும் மொழியின் ஆயுட்காலம் என்பவற்றை எடுத்துக்காட்டுகின்றன. எனவேதான் தமிழ்மொழி அடுத்த சந்ததிகளுக்குக் கையளிக்கப்படவேண்டும் அவை நீடித்த வாழ்வைக் கொண்டமைய வேண்டும் என்ற சிந்தனையும் பேரவாவும் புலம்பெயர்ந்த தமிழர் மத்தியில் உள்ளது.

'எஸ்.பொ' தனது கட்டுரை ஒன்றில் பின்வருமாறு எழுவது இங்கு பொருத்திப் பார்க்கத்தக்கது.

"சபிக்கப்பட்ட இனமாக, இரண்டாயிரம் ஆண்டுகளாக அகதிகளாக நாட்டுக்கு நாடு அல்லாடித் திரிந்த யூத இனத்துக்கு இன்று நாடு கிடைத்துவிட்டது. தமது எபிரேய மொழியை மீட்டெடுத்து அரசமொழியாக்கியிருக்கிறார்கள். இரண்டாயிரம் ஆண்டுகளாக வழக்கற்றிருந்த மொழியை ஆட்சிமொழியாக்கி, அந்தமொழி பயிலப்பட்ட மண்ணிலே இஸ்ரேல் நாட்டைத் தோற்றுவித்திருக்கிறார்கள்.

இதற்குக் காரணம் என்ன? யூதேய மதத்தினையும், யூத இனத்தின் தனித்துவத்தையும் அவர்கள் அகதிகளாக அலைந்த அனைத்து நாடுகளிலும் சுமந்து திரிந்தார்கள். புதிய வளங்களை அவர்கள் பெற்றிருந்தபோதிலும் புகுந்த நாடுகளிலே தங்களது தனித்துவ அடையாளங்களைக் கரைத்துக் கொள்ளாது அதனைத் தங்கள் உயிருடனும்உணர்வுடனும் சந்ததி சந்ததியாகப் பேணினார்கள். இப்பொழுது இஸ்ரேலிலும் பார்க்க அதிக யூதர்கள் ஐக்கிய அமெரிக்காவில் வாழ்கிறார்கள். அவர்களுடைய ஓர்மமும், பணமும், சாதுர்யமும் இஸ்ரேல் மலருவதற்குப் பெரும் பங்கு வகித்தது.' (எஸ்.பொ. இயல்விருது ஏற்புரை. http://akkinikkunchu.com)

முடிவுரை

எனவேதான் இன்று புலம்பெயர்ந்து வாழ்கின்ற முதலாம் தலைமுறையினர் தமிழ் பற்றியும், தமிழ் அடையாளம் பற்றியும் மேற்கொண்டு வருகின்ற செயற்பாடுகள்அறிவுபூர்மாக மேலும் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டிய தேவை வலியுறுத்தப்படுகிறது. தமிழ்ப்பண்பாடு என்பது புதிய தலைமுறையினரிடத்தில் மொழிவழியல்லாத அடையாளமாகப் பேணப்படும்நிலைதற்போது உணரப்படுகிறது. இது மிக ஆபத்தானதாக இருக்கும். தமிழ்ப்பெயருடன் வாழும் பிள்ளைக்குத் தமிழ் தெரியாத நிலைபோலவும் நடனம் மற்றும் ஆற்றுகைக் கலைகளுக்குரிய பாடத்தை பிரெஞ்சிலோ அல்லது ஆங்கிலத்திலோ மனனம் செய்துவிட்டு அளிக்கை செய்வது போலவும் இருக்கும். இந்த நிலைதான் இன்று மொரீசியசிலும், ரியூனியனிலும் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த ஆபத்துக்களைக் களைவதற்கு தமிழ்மொழிசார்ந்து முதலில் புலம் பெயர்ந்து வாழ்கின்ற ஆளுமைகள் சிந்திக்க வேண்டும். அவர்களிடம் இருந்துதான் எதைப் பிள்ளைக்குப் போதிக்கலாம். அதற்கு எவ்வாறான ஒழுங்கு முறைகளை (அகராதிகள் உருவாக்குதல். சொற்களஞ்சியத்தை உருவாக்குதல், பொருத்தமான கற்பித்தல் முறைகள், பாடத்திட்டம், பாடநூல், ஆசிரியர் பயிற்சிகள்) செய்யலாம் என்ற திட்டம் வரவேண்டும்.

இம்முயற்சியில் பலர் ஈடுபட்டு வருவதும் அறியப்படுகிறது.

எனவே புகலிடத்தில் தமிழ்மொழிப் பயில்கையைத் தொடர்வதன் ஊடாகவே எதிர்காலத்தில் அடுத்த தலைமுறையினரிடத்தில் தமிழ்மொழியைப் பேணமுடியும் என்பதைப்பேராசிரியர் அ. சண்முகதாஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

"புலம்பெயர்ந்து சென்ற தமிழரது அடுத்த தலைமுறை வாழிட மொழிகளிலே பெற்ற புலமைத்துவத்தை இன்னும் தமிழ் மொழியிலே பெறவில்லை. அதற்கான தமிழ்மொழிப் பயிற்றலும், சில நாடுகளில் தவிர, சரியாக நடைபெறவில்லை. தமிழ்மொழியின் தரத்தைக் குறைத்துப் பயிற்றுகின்ற கற்கைமரபுஒன்றும்ஒரு நாட்டிலே உருவாக்கப்பட்டுத் தொடர்கிறது. இது எதிர்காலத்தில் தமிழ் மொழியிலே இலக்கியம்தோன்றமுடியாத சூழலையே ஏற்படுத்தும். இவ்விடத்தில் 19ஆம் நூற்றாண்டில் ஈழத்திலிருந்து தமிழகம் புலம்பெயர்ந்து சென்ற தமிழர்களை மீண்டும் நினைவிற் கொணர வேண்டியுள்ளது. ஒரு மொழியின்பேணலுக்கு அந்த மொழிப் பயில்கை தொடர வேண்டும். பண்டைய இலக்கியங்களைக் கற்பிக்கவேண்டும்." (பேராசிரியர் அ. சண்முகதாஸ், டிசம்பர்2014 'புலம்பெயர் இலக்கிய ஆய்வுகளும் அவ்விலக்கியங்களின் எதிர்காலமும்' ஞானம் 175 சிறப்பிதழ், பக். 20,21.)

மொழிதொடர்பான பேணுகை முயற்சிகள், திருமணநிகழ்வுகள், பூப்புநீராட்டு விழாச் சடங்குகள், பெரும் எடுப்பில் நிகழ்த்தப்படும் கலை நிகழ்வுகள், ஆலயம்சார்ந்த திருவிழாக்கள், கிரியைகள், கிராமச் சங்கங்கள் வருடத்தில் நிகழ்த்தும் ஒன்றுகூடல்கள் என நாம் தகவல்களாக





> புகலிடத்தில் தமிழ்மொழிப் பயில்கையைத் தொடர்வதன் ஊடாகவே எதிர்காலத்தில் அடுத்த தலைமுறையினரிடத்தில் தமிழ்மொழியைப் பேணமுடியும் என்பதைப் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார். "புலம்பெயர்ந்து சென்ற தமிழரது அடுத்த தலைமுறை வாழிட மொழிகளிலே பெற்ற புலமைத்துவத்தை இன்னும் தமிழ் மொழியிலே பெறவில்லை. அதற்கான தமிழ்மொழிப் பயிற்றலும், சில நாடுகளில் தவிர, சரியாக நடைபெறவில்லை. தமிழ்மொழியின் தரத்தைக் குறைத்துப் பயிற்றுகின்ற கற்கைமரபுஒன்றும்ஒரு நாட்டிலே உருவாக்கப் பட்டுத் தொடர்கிறது.

வும், பண்பாட்டு நிகழ்வுகளாகவும் அறியும் செய்திகள் இலக்கியத்துக்கு அப்பாற்பட்டே உள்ளன. எனவேதமிழ்அடையாளத்தைத் தமிழ் மொழியூடாகப் புதிய தலைமுறைகளுக்குக் கடத்துவதும் இன்று எமக்குள்ள ஒரு வழியாகும். அதனூடாகத்தான் தமிழ் மொழியையும் தமிழ்ப்பண்பாட்டையும் தமிழ் இனத்தையும் எதிர்காலத்தில் வாழவைக்கமுடியும்.

ஒரு கதை...

(36ஆம் பக்கத் தொடர்ச்சி)

வில் தேர்ச்சி பெற்றிருந்தான். திடீரென்று கவிதையின் மூன்றா வது கண்ணி யைப் பலத்த குரலில் வாசித்தான்.

"இனிது இனிது இளமை இனிது
காதல் இன்பக் களிப்பின் காலம்
கன்னி மதுகில் மயங்கும் மோகம்
வாழ்தல் இன்றேல் மாழ்தல் என்ற
வஞ்சினங்கள் கூறும் காலம்"

தொடர்ந்து நாலாவது கண்ணியை நான் பலத்த குரலில் பாடினேன்

"இனிது இனிது இளமை இனிது
கொடுமை போக்கும் கொள்கை நோக்கு
மிடியைத் தீர்த்து மீட்கு முழைப்பு
கடமை வேட்கை கண்ணிய வாழ்க்கை
அடிமைத் தளத்தில் அடங்கா வெகுட்பு

தொடர்ந்து அவன் மெல்லிய குரலில் வாசிக்க, நான் பலத்த குரலில் ஐந்தாவது கண்ணியையும் பாடினேன்.

இனிது இனிது இளமை இனிது
உச்சமான உயர்ந்த இன்பம்
உண்மையான சுவர்க்க மிதுவே
அச்சமென்ற அவதி இல்லை
அணுகும் நோயின் கொடுமை இல்லை.
இனிது இனிது இளமை இனிது.

வாசித்து முடித்து என்னை நிமிர்ந்து பார்த்துச் சிரித்தான். நானும் சிரித்தேன். இருவரும் சேர்ந்து சிரித்தோம்.

"கவிதை நன்றாக இருக்கிறது. எனது பாராட்டுக்கள்"

"நன்றாகத் தானே இருக்கும். இனிது இனிது இளமை இனிது" கண்ணைச் சிமிட்டிச் சிரித்தேன்.

"இனிது இனிது இளமை இனிது'

'மிஹிறயி மிஹிறயி யௌவன மிஹிறயி" திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டே இருந்தான்.

"இதை நீயே சிங்களத்தில் மொழிபெயர்த்துத் தாவேன்" கேட்டேன்.

அதிர்ச்சியும் வியப்பும் கலந்தவனாய் என்னைப் பார்த்தான்.

"என்னால் முடியாது கவிதையை முழுதாக நான் விளங்கினேனென்றும் சொல்லமாட்டேன். தமிழும் சிங்களமும் கரை கண்ட எனது நண்பன் பெரேரா வைக் கொண்டு மொழி பெயர்ப்பித்துத் தாறேன்."

சொன்னது போலவே இரண்டு, மூன்று நாள்களில் கவிதையின் மொழி பெயர்ப்பைக் கொண்டுவந்து தந்தான்.

"இனிது இனிது இளமை இனிது" நான்.

மிஹிறயி மிஹிறயி யௌவன மிஹிறயி" அவன்.

"புதிய காதலெல்லாம் எப்படிப் போகுது?"

"நல்லாய்ப் போய்க்கொண்டிருக்கு" என்று சொல்லிச் சிரித்தான். நான் எனது கவிதையின் மூன்றாவது கண்ணியை அவனுக்குக் கேட்கும் படியான குர லில் பாடினேன். அவனும் அந்தக் கண்ணியின் சிங்கள மொழி பெயர்ப்பைத் தொடர்ந்து சொன்னான். இரண் டொரு நிமிஷம் ஏதோ யோசனை யில் இருந்தான். "திடீரென பிறகு சந்திப்போம்" என்று சொல்லிச் சிரித்துக் கொண்டே எழும்பிப் போய்விட்டான்.

ஒரு வாரத்துக்கு முன்னர் வேறு ஒரு சிறு நகரத்துக்கு அவன் மாற் றலாகி போறதாகச் செய்தியைச் சொன்னபோது கேட்டேன்.

"உனது காதெல்லாம் என்ன மாதிரி"

"நல்லவிதமாகப் போய்க்கொண்டி ருக்கு. அவளது ஊருக்குத் தான் மாற்றலாகிப் போகிறேன்."

நான் அவனை வாழ்த்தினேன். அப்போதும் சிரித்தான் அவன்.

எனது இருப்பிடம் வந்துவிட்டது. மாலை மங்கி இருள் கவிந்து விட் டது. மழைத்தூறலும் நின்று விட் டிருந்தது. வீதி விளக்குகள் பிரகா சிக்கத் தொடங்கிவிட்டன. கடைசி யாக அவன் சொன்ன வாக்கியம் மனதில் மிதந்து வந்தது.

"கடவுள் விரும்பினால் நாம் மீண் டும் சந்திப்போம்"



நீ என்ற பூமியிலே.....

ஸ்பானிய மொழியில்: paplo neruda
ஆங்கிலத்தில்: donald de walsh

தமிழில்



வி. பி. யோசப்

குருநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். நெல் சந்தைப்படுத்தும் சபையில் இயந்திர உதவிப் பொறியியலாளர். தற்போது ஓய்வில். ஆங்கில – தமிழ் மொழிபெயர்ப்பில் படைப்புக்களை உரு வாக்கிவருகிறார்.'தாயகம்நோக்கியபயணம்'(1993) நாவல், 'களத்திலேயே வீழ்வோம்' கவிதைத் தொகுதி, 'மூடு பனிக்குள் ஒரு தேடல்' குழந்தை உளவியல் நாவல் போன்றன இவருடையவை.



சிறிய ரோஜாவே
ரோஜா அரும்பே
சில சமயங்களில்
சின்னஞ் சிறியதாகவும்
நிர்வாணமாகவும் இருக்கும் நீ,
என் கையொன்றுக்குள்
அடங்கலாம் என்றும்
அப்படியே
உன்னைப் பற்றிப் பிடித்து
என் இதழ்களில் ஒற்றலாம்
என்றும் தோன்றும்
ஆனால்
திடீரென...
எனது பாதங்கள்
உனது பாதங்களைத் தொடும்

எனது இதழ்கள்
உனது இதழ்களிலே படும்.

நீ வளர்ந்து விட்டாய்
உன் தோள்கள் இரண்டும்
குன்றுகளாய் எழுகின்றன
உன் கொங்கைகள்
என் மார்பின் மீது அலைகின்றன
உன் பிறை வடிவ மெல்லிடையை
வளைத்துக் கொள்ள
என் ஒரு கரம் போதவில்லை
போக வேளையிலே
கடல் நீராய்
உன்னை இளக்கிக் கொண்டாய்
வானத்தின் கண்களாய்
மலரும் விழிகளை
முழுமையாய் அளக்க முடியாமல்
பூமியை முத்தமிடவென
உன் இதழ்களை நோக்கிக் குனிகின்றேன்

பெண்ணினத்துக்கு பெருமை சேர்த்த பெண்கள்

இலங்கையின் வடபுலத்தில் இருக்கும் பெருநிலப்பரப்பான அடங்காப்பற்றுவன்னியின் வரலாற்றில் பெண் தெய்வ வழிபாடு பெருமளவில் காணப்படுகின்றது. சக்தியின் வடிவங்கள் பல இங்கு வழிபடப்பட்டு வருகின்றன. முத்துமாரி அம்மன், சப்தகன்னிமார், கண்ணகை அம்மன் போன்ற தெய்வ வழிபாடுகள் புராதன காலம் தொடக்கம் இங்கு இடம்பெற்று வருபவையாகும். தற்போது நாகபூசணி அம்மன், கருமாரியம்மன் போன்ற ஆலயங்களின் தொகையும் அதிகரித்து வருகின்றது. பெருநிலப்பரப்பில் பெண்களைக் கௌரவிக்கும் பாரம்பரியம் தொன்று தொட்டு இருந்துள்ளது. மனிதர்களாகப் பிறந்து அவர்களின் புனிதமான செயல்கள் காரணமாக அவர்களைக் கௌரவிக்கும் வழக்கம் இருந்துள்ளது. அவர்களில் சிலரைக் கடவுள்களாக வணங்கும் பண்பாடும் இருந்துள்ளது. இதுவே பெண் தெய்வங்களின் வழிபாடுகள் அதிகரிக்கக் காரணங்களாக இருந்துள்ளன. பெருநிலப்பரப்பில் இதுபோன்ற பெண்களின் வரிசையில் பலர் இடம் பிடித்துள்ளனர். அவர்களைப் பற்றிய விவரங்களை ஆய்வு செய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

கட்டுரை



அருணா செல்லத்துரை

முல்லைத்தீவு – முள்ளியவளையைச் சேர்ந்தவர். இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தில் உதவி நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும், நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் இருந்தவர். நாடகங்கள் எழுதுவதிலும், நடிப்பதிலும், தயாரிப்பதிலும் ஈடுபாடுடையவர். இலங்கைத் தொலைக்காட்சி சேவை அறிமுகமான போது அதன் செய்தித் தயாரிப்பு பயிற்சிக்காக ஜேர்மன் சென்ற முதலாவது தமிழர். 1999இல் தனியார் தொலைக்காட்சியில் தமிழ்ச் செய்திப் பணிப்பாளர். இதுவரை 15 நூல்களை எழுதியுள்ளார். நான்கு நூல்கள் வானொலி தொலைக்காட்சி சம்பந்தமானவை. பல ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

மண்டோதரி

கிறிஸ்துவுக்கு முன்னர் 3084ஆம் ஆண்டுகளில் வாழ்ந்தவர் இயக்கர் குலத்தைச் சேர்ந்த இராவண மகாராசாவாகும். இவர் பெருநிலப்பரப்பின் கிழக்குக் கரையான திருகோணமலைப் பிரதேசத்தில் வாழ்ந்தவர்.

பெருநிலப்பரப்பின் மேற்குக் கரையான மன்னார்ப் பிரிவில் மாதோட்டம் பகுதியில் வாழ்ந்தவர் நாகர் குலத்தைச் சேர்ந்த மயனுடைய மகள் மண்டோதரியாகும். இயக்கர்கள் சிவலிங்க வழிபாட்டில் சிறந்தவர்கள்.

நாகர்கள் ஐந்து தலை நாகத்தை வழிபடுபவர்கள். இராவண மகாராசா மண்டோதரியைத் திருமணம் செய்தார். இந்தத் திருமணத்தின் மூலம் நாகலிங்க வழிபாடு ஆரம்பித்தது என்ற கருத்தும் முன்வைக்கப்படுகிறது. இதனால் நாகலிங்க வழிபாட்டின் முன்னோடி மண்டோதரி என்றும் கூறலாம். இராவண மகாராசாவுக்கு மேற்குக் கரையில் மாதோட்டம் பகுதியில் இலங்காபுரம் என்ற இராசதானியும், மாந்தைத் துறைமுகமும் நாகர் குலத் தலைவனால் கட்டிக் கொடுக்கப்பட்டன.

வடஇந்திய அயோத்தியின் சக்கரவர்த்தி இலங்கையைத் தமது ஆட்சியின் கீழ் கொண்டு வருவதற்காகத் தனது மகனான இராமனைத் தென் திசைக்கு அனுப்பினான். இலங்கையைக் கைப்பற்றுவதற்கு இராமன் தென்னிந்தியாவுக்கு வந்திருப்பதை அறிந்த இராவணன் தானும் போருக்கு ஆயத்தம் என்பதை முன்னறிவிப்புச் செய்வதற்குத் திராவிடப் பாரம்பரியத்தின்படி இராமருடைய மனைவி சீதையை அவளிருந்த பர்ணசாலையோடு தூக்கி வந்து மாதோட்டத்தில் பணயப்பொருளாகச் சிறை வைத்தான். சீதை மீது கொண்ட காம மயக்கத்தால் இராவணன் சீதையைச் சிறை வைத்தான் என்ற கருத்து இராவணனது உடன் பிறப்புகள் உட்பட பலரால் முன்வைக்கப்பட்டது. இந்தக் கருத்துக்குக் காவியமும் முக்கியத்துவம் கொடுத்தது.

இதனால் மனம் தளராத மண்டோதரி, இராவண மகாராசா மீது கொண்ட காதலையோ நம்பிக்கையையோ இழக்கவில்லை. இராவண இராம போர் நடைபெற்றது. அதில் இராவணன் தோல்வி அடைந்தார். போர்க்களத்தில் இராமனுடைய பாணங்களால் துளைக்கப்பட்டு இராவணன் வீழ்ந்திருந்தார். அப்போது அங்கு ஓடிவந்த மண்டோதரி இராவணன் மீது வீழ்ந்து அழுகிறாள். அம்புகள் துளைத்த காயங்கள் ஊடாக இராவணன் சீதைமீது கொண்டிருந்த காதல் தெரிகிறதா என்று தேடிப் பார்க்கிறாள். சீதை மீது அவன் கொண்டிருந்த காதல் எந்த இடத்திலும் தெரியவில்லை என்பதால் அவன் மீது விழுந்து உயிர் துறக்கிறாள். இந்த விடயம் காவியத்திலும் கூறப்பட்டுள்ளது.

இந்தியக் காவியங்களில் இருந்து புனித கன்னிகைகளாக ஐவர் தெரிவு செய்யப்பட்டனர். இதனால்தான் அவர்களில் ஒருவராக மண்டோதரியும் தெரிவு செய்யப்பட்டு வணக்கத்துக்கு உரியவளானாள்.







வடஇந்திய தென்னிந்தியக் காவியங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பஞ்சகன்னிகைகளுள் இலங்கையைச் சேர்ந்த மண்டோதரியும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் இலங்கை அறிஞர்கள் ஏனைய கதாபாத்திரங்களுக்குக் கொடுத்த முக்கியத்துவத்தை துரதிர்ஷ்ட வசமாக மண்டோதரிக்குக் கொடுக்கத் தவறிவிட்டனர். ஆனால் பஞ்சகன்னிகைகளுள் ஒருவராக மண்டோதரி தெரிவு செய்யப்பட்டுத் தமிழ் அகராதிகளில் இடம்பிடித்தார்.

அவரின் வாழ்புலம் பெருநிலப்பரப்பிலுள்ள மாதோட்டம் என்பது பெருமைக்கு உரியதாகின்றது.

நாச்சிமார்

கி.பி. 4ஆம், 5ஆம் நூற்றாண்டுகளில் இலங்கை மீது படையெடுத்து வந்த சோழ மகாராசா திருகோணமலைப் பிரதேசத்தில் கோயில்களைக் கட்டிக் குளங்களைத் திருத்தியமைத்தார். அவற்றிலிருந்து வருமானத்தைப்பெற்றுக்கோயில்களையும் குளங்களையும் பராமரிக்க வன்னிய குலத்தவர்களை அழைத்து வந்து குடியேற்றினார். இந்த வன்னிய குலத்தவருள் இருந்த தலைவர்கள் 'வன்னியனார்' எனவும் தலைவர்களுடைய மனைவியர் 'வன்னிச்சியார்' எனவும் அழைக்கப்பட்டதாக வரலாற்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கணவன்மார் உயிரிழக்கும்போது வன்னிச்சிமார் உடன்கட்டை ஏறும் வழக்கம் இருந்துள்ளது. உடன்கட்டை ஏறிய வன்னிச்சிமார் 'நாச்சிமார்' என அழைக்கப்பட்டு வணக்கத்துக்கு உரியவராகினார்கள் என்று குறிக்கப்பட்டுள்ளது. இதுவே வன்னிச்சிமார் 'நாச்சிமார்' ஆகி வணக்கத்துக்குரிய வரலாறாகும். கிழக்குக் கரையில் இருந்த வன்னியர்களின் நிர்வாகம் பாணன்காமம் (பனங்காமம்) வரை பரவியிருந்தது என்பதற்கு ஆதாரமாக தம்பலகமமும் பெருநிலப்பரப்புக்குள் அடங்கியிருந்ததாக வரலாற்றில் குறிக்கப்பட்டுள்ளதிலிருந்து தெளிவாகிறது. இலங்கையின் வட புலத்துக்கு வன்னியர்கள் பலமுறை வருகை தந்துள்ளனர். 14ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சோழ இளவரசனுக்கு மணப்பெண்ணை அழைத்தபடி இலங்கைக்கு வந்த 60 வன்னியர்கள் பெருநிலப்பரப்பின் வரலாற்றில் சிறப்பாகக் குறிப்பிடப்படுகின்றனர். மணப்பெண்ணை அழைத்துவந்த வன்னியர்களுள் 59பேர் பாணன்கமத்தில் நிர்வாகம் செலுத்த அனுமதிக்கப்பட்டனர்.

பெருநிலப்பரப்பின் அடங்காப்பற்றுவன்னிப் பிரதேசத்தில் இருந்தவர்களுடன் ஏற்பட்ட மோதலில் பல வன்னியர்கள் உயிரிழந்தனர். வன்னியர்களுக்குள் தலைமைப்பதவிக்கு ஏற்பட்ட போட்டிகள் காரணமாக மேலும் பலர் உயிரிழந்தனர். முழுவதுமாக 54 வன்னியர்கள் உயிரிழந்த பின்னர் மிகுதி 5பேரும் பனங்காமத்தை 5பிரிவுகளாகப் பிரித்து நிர்வாகம் செலுத்தினர். அவர்கள் தமது தாய்நாடு திரும்புவதற்கு எண்ணி அதற்கு முன்னர் முல்லைத்தீவு பிரதேசத்தில் இருந்த இளஞ்சிங்க மாப்பா



ணரை அழைத்து பனங்காம நிர்வாகத்தை ஒப்படைத்தனர். இதிலிருந்தே முதன்முத லில் பனங்காமத்தில் மாப்பாண குலத்தவர்க ளுடைய நிர்வாகம் ஆரம்பித்தது என்று கூறலாம்.

எஞ்சியிருந்த வன்னியர்கள் 5பேரும் யாழ்ப்பாணத்திலிருந்த அரசரிடம் சென்று உத்தரவுபெற்றுபடகில் இந்தியா திரும்பினர்.

அவர்கள் சென்ற படகு திமிங்கலத்தால் தாக்குண்டு அனைவரும் உயிரிழந்தனர். இதேநேரம் மதுரையிலிருந்த வன்னிச்சிமார் தமது கணவன்மாரைத் தேடிப் படகில் காங்கேசன்துறை செல்விவாய்க்காலில் வந்திறங்கினர். கடல் வழியாக நாடு திரும்பிய 5வன்னியனார்களுக்கும் என்ன நடந்தது என்பதை அறியாத இளஞ்சிங்க மாப்பாணன் வன்னியர்கள் 54பேர் உயிரிழந்த செய்தியை வன்னிச்சியருக்கு அனுப்பி வைத்தான்.

54 பேருடைய கணவன்மார் உயிரிழந்த செய்தி கேட்ட வன்னிச்சியர்கள் தமது பாரம்பரியத்தின்படி தீமூட்டி அதில் இறங்கித் தமது உயிரை மாய்த்துக் கொண்டனர். இவர்களும் நாச்சிமார் என யாழ்ப்பாணப்பிரதேசத்தில்வழிபடப்பட்டனர். எஞ்சியவர்களுள் ஒருவர் நுவரகலாவெளவுக்குச் சென்றார். மிகுதி 5பேர் பனங்காமத்துக்கு வந்தனர். தமது கணவன்மார் உயிருடன் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையில் அவர்கள் திரும்பி வரும்வரைப் பனங்காமத்தில் நிர்வாகம் செய்வதற்கு இளஞ்சிங்க மாப்பாணனுடன் ஒப்பந்தம் செய்துகொண்டனர்.

ஒப்பந்தத்தின்படி வன்னியர்கள் திரும்பி வரும்வரை பனங்காமத்தை 5 பிரிவுகளாகப்பிரித்து வன்னிச்சியர்கள் நிர்வாகம் செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

கி.பி.1505களின் பின்னர் இலங்கையில் அந்நியர் ஆட்சி ஆரம்பித்தது. வடபுலத்தின் கரையோரங்களைக் கைப்பற்றிய பின்னர் 1558களில் மன்னாரிலிருந்து போர்த்துக்கேயர் பெருநிலப்பரப்பின் மீது படையெடுத்து வந்தனர்.

பனங்காமத்திலிருந்த 5வன்னிச்சிமாரும் ஆண்வேடம் பூண்டு போர்த்துக்கேயருடன் போர் தொடுத்தனர்.

இந்தத் தாக்குதலில் போர்த்துக்கேயர் தோல்வி கண்டனர். போர் நடவடிக்கைகளுக்குச் செலவு செய்ய விரும்பாத போர்த்துக்கேயர் 'There are Vannees' என்று கூறி மன்னாருக்குத் திரும்பிச் சென்றுவிட்டனர்.

இதற்குப் பின்னர் வரைபடங்களில் பெருநிலப்பரப்பு 'வன்னியர்களுடைய நாடு' (Vannees Country') எனக் குறிக்கப்பட்டது

தென்னிந்தியா திரும்பிய தமது கணவன்மார்கள் கடலில் உயிரிழந்த செய்தியைக் கேட்ட வன்னிச்சிமார் இனிமேல் தமக்குப் பாதுகாப்பில்லை என்று கருதினர். கணவன்மார் உயிரிழந்த பின்னர் உயிர் வாழாமை அவர்களுடைய பாரம்பரியம் என்பதால், கொடிய விசமான கார்த்திகைக் கிழங்கை அரைத்துச் சாப்பிட்டு உயிரிழந்தனர். இவர்களும் நாச்சிமார் என்று அழைக்கப்பட்டுத் தெய்வங்களாக மதிக்கப்பட்டனர்.

வன்னிச்சிமாரின் மறைவுக்குப் பின்னர் இளஞ்சிங்க மாப்பாணருடைய பரம்பரையினர் பாணன்கமத்தில் வன்னியனார் பதவிவகித்ததாக வரலாற்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்குப்பிந்திய காலத்து வரைபடங்களில் வன்னியனார்களுடைய நாடு என்பது 'வன்னி' என எழுதப்பட்டுள்ளதைக் காணலாம். வன்னிச்சியர்களே வன்னி என்ற பெயர் வருவதற்கு மூல காரணமாக இருந்துள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கற்பின் கனலாகப் புகழப்படும் கண்ணகியை காக்கும் தெய்வமாக வழிபடும் பாரம்பரியம் இடம் பெற்று வருகின்றது.



கண்ணகி அம்மன்

கண்ணகி

சிலப்பதிகாரத்தின் கதாநாயகியான கண்ணகி பாண்டிய மன்னன் செய்த தவறுக்காக அவனைப்பழிவாங்கி, மதுரையைத் தீக்கிரையாக்கித் தனது கற்பின் மகிமையை வெளிப்படுத்தினாள். சாதாரண குலத்தைச் சேர்ந்த பெண்ணொருத்தி பாண்டிய மன்னனுக்கு எதிராகக் குரல் கொடுத்தபோது அவளது கற்பின் பெருமையைக் கண்ட பாண்டிய மன்னன் அதற்கு முகம் கொடுக்க முடியாமல் உயிரிழந்தான்.

கண்ணகிக்கு விழா எடுத்த சேரன் செங்குட்டுவனின் அழைப்பின் பேரில் அங்கு சென்ற இலங்கை மன்னன் கஜபாகுவிடம் பத்தினித் தெய்வ வழிபாட்டை ஆரம்பிக்கும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அதன்படி புனித கல்லொன்றைக் கொண்டுவந்து இலங்கையில் பல இடங்களில் பத்தினி வழிபாட்டை ஆரம்பித்ததாக வரலாற்றுக் குறிப்பொன்று கூறுகின்றது.

கண்ணகிமதுரையை எரித்த பின்னர் இலங்கையின் கரையோரம்வழியாகக்கதிர்காமம் சென்றதாகக் கூறப்படும் செவிவழிக் கதைகளை அடியொற்றிக் கண்ணகி வழிபாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவுப்பிரதேசத்தில்உள்ளவற்றாப்பளையில் நந்திக்கடல் கரையில் இடைச் சிறுவர்களுக்குக் கண்ணகி காட்சி கொடுத்த காரணத்தால் வைகாசி விசாகத்தில் பொங்கல் விழா இடம் பெறுவது இதில் முக்கியமானது.

இதற்கெனச் சிலம்பு கூறல் காவியமும் எழுதப்பட்டுள்ளது. கற்பின் கனலாகப் புகழப்படும் கண்ணகியை காக்கும் தெய்வமாக வழிபடும் பாரம்பரியம் இடம் பெற்று வருகின்றது. சில இடங்களில் கண்ணகி வழிபாடு புறந்தள்ளப்பட்டபோதும் முல்லைத்தீவுப் பிரதேசத்தில் அது சிறப்பாக இடம்பெறுவது பிரதேசத்தின் பெண் தெய்வ வழிபாட்டின் முக்கிய அம்சமாகும்.

மரிய செம்பாத்தை

ஒல்லாந்தர் காலத்தில் திரியாய் தென்னமரவடிப் பகுதியில் மரிய செம்பாத்தை என்பவர் வன்னிச்சியராக இருந்தார். அவருடைய பெயர் செம்பாத்தை என்பதாகும். மரிய (மேரி) என்ற பெயர் ஒல்லாந்தரால் பதவி வழங்கும்போது சேர்க்கப்பட்டது. ஒல்லாந்தருடைய நிர்வாக காலத்தில் யானைத் திறையை முறையாகச் செலுத்தாத வன்னியனார்களும் வன்னிச்சிமாரும் இராச துரோகம் செய்தவர்களாகக் கருதப்பட்டார்கள். சிலரை வன்னியனார் பதவியிலிருந்து நீக்குவதும்உண்டு. யானைத்திறையை முறையாகச்செலுத்துவதைஉறுதிசெய்வதற்காக வன்னியனாரோ அல்லது வன்னிச்சியாரோஒருவர்மூன்றுமாதத்துக்கு ஒரு தடவை யாழ்ப்பாணத்தில் வீட்டுக்காவலில்இருக்கவேண்டும்என்பது ஒல்லாந்தரின்கட்டளை.

மரிய செம்பாத்தையும் யானைத்திறை செலுத்தாதகாரணத்தால்யாழ்ப்பாணத்துக்கு வந்து வீட்டுக் காவலில் இருக்கவேண்டும் என்று ஒல்லாந்தர் கட்டளை பிறப்பித்தனர். மரிய செம்பாத்தை கட்டளையை மீறியதோடு வீட்டுக் காவலில் இருக்க மறுத்தும் வந்தார். இதனால் அவரைக்கைதுசெய்துவீட்டுக்காவலில் வைக்க ஒல்லாந்தர் தீர்மானித்தனர்.

ஒல்லாந்தரின்கட்டளையைநிறைவேற்றச் செம்பாத்தையைக் கைது செய்துவருவதற்காகப் பூதன் ஆராய்ச்சி என்பவர் யாழ்ப்பாணத்திலிருந்து படைவீரர்களுடன் புறப்பட்டுச் சென்றார். தனது ஆள்பலத்தை வைத்து செம்பாத்தையை கைது செய்ய முடியாது என்பதை உணர்ந்து கொண்ட பூதன் ஆராய்ச்சி, செம்பாத்தையைக் காதலிப்பதுபோல நடித்து அவளின் நம்பிக்கையைப் பெற்றான். அவளை யாழ்ப்பாணம் அழைத்துச் சென்று, ஒல்லாந்தருடன் கலந்து பேசித் தண்டனையிலிருந்து விலக்களிப்பித்துத் திருமணம் செய்வதாக வாக்குறுதியளித்தான்.

செம்பாத்தையைப் பாதுகாப்பாகப் பட்டத்துராணிபோல பல்லக்கில் அழைத்து வந்தான். யாழ்ப்பாணத்தில் ஒல்லாந்தருடைய கோட்டை வாசலுக்கு வந்ததும் பல்லக்கில் இருந்து அவரை இறக்கி கைவிலங்கு போட்டு ஒல்லாந்தரிடம் கையளித்தான்.

செம்பாத்தை காதலுக்காகத் தன்னையே அர்ப்பணித்தவள் என்ற நல்ல பெயரோடு மக்கள் மனதில் வாழ்ந்து கொண்டிருக்கின்றாள்.



கணவன்மார்களுக்காக உயிரை விடும் அளவுக்குப் பெண்களின் மனத்துணிவு இருந்ததன் காரணத்தாலும், அதன்மூலம் தமது கற்பின் மகிமையை வெளிப்படுத்தியுள்ளதாலும் பெருநிலப்பரப்பின் கௌரவத்துக்கு இங்கு வாழ்ந்த பெண்களில் பலரும் பெருமை சேர்த்துள்ளார்கள் என்று கூறலாம். புராதன காலம் தொடக்கம் மண்டோதரி, நாச்சிமார், செம்பாத்தை, அரியாத்தை, குருவிச்சி போன்றவர்கள் பெருநிலப்பரப்பின் அடையாளங்களாக இருக்கின்றனர்.



நுகர்ந்து மகிழும் அடிமைத்தனம்



வகுத்துவாழும் எல்லைகள் கடந்து
ஊடாடும்
இயல்புப் பெருவாசல்கள் களைந்து
வியாபித்துநிற்கின்றன
தனித்துப்போன
அடையாளங்கள்

கொள்ளல், கொடுத்தல்
விடுத்தும் மறுத்தும்
எதிரிட்டு நிற்கின்றன
அயல்கள்

மோதி முரண்பட்டு
கொள்ளல் கொடுத்தல் நீத்த
உறவுவெளிகளில்
கடைவிரிக்கும் உலகவணிகம்

தாராளங்கள் நீத்த
சொந்தவெளிகள் எங்கும்
பரவிப் படர்ந்து
எல்லை கடந்த
வாணிபக் கொலுவிருப்பை
நுகர்ந்து மகிழும் அடிமைத்தனம்

கவிதைகள்



சி. ஜெயசங்கர்

யாழ்ப்பாணம் கோண்டாவிலைச் சேர்ந்தவர். முதுநிலைவிரிவுரையாளர் நாடகமும் அரங்கியலும். பணிப்பாளர் சுவாமி விபுலானந்தா அழகியல்கற்கைகள் நிறுவனம். 'மூன்றாவது கண்' உள்ளூர் அறிவுதிறன் செயற்பாடுகளுக்கான நண்பர்கள் குழுவின் இணைப்பாளர். நாடகம், கவிதைகள் எழுதுதல், மொழி பெயர்த்தல் ஆகிய வற்றில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார். நவீன, பாரம்பரிய அரங்க ஆற்றுகையாளர்.

நாகரிகமாக... அபிவிருத்தியாக...

மரங்களின் மனிதம்
மரங்கள் அறிவதில்லை
மனிதர்கள் தம்மைக்கண்டு அச்சமுறுவதை
மரங்கள் அறிவதில்லை
மனிதர் ஆதிக்கம் நிலைநாட்ட
தம்மை வளர்த்து வருவதை
மரங்கள் அறிவதில்லை
தம்மைத் துளிரிலேயே இல்லாதாக்கிவிடும்
மனித அச்சத்தின் பின்புலங்களை
மரங்கள் அறிவதில்லை
மரங்கள் அறிவதில்லை
இவை எதையுமே மரங்கள் அறிவதில்லை
ஆயினும் ஆயினும் மரங்கள்
குளிர்மையும் நிழலும் வளர்த்தபடி
மனிதர்கள் ஆறவும் அமரவும்



தொடர்ச்சி...

அதன் பின்னர் அவளுக்கு என்ன நடந்தது என்பது எவருக்கும் தெரியாது என்பதுவரலாறு. காதலுக்காகத்தன்னையே அர்ப்பணித்தவள் செம்பாத்தை என்ற நல்லபெயரோடுமக்கள்மனதில்வாழ்ந்து கொண்டிருக்கின்றாள்.

அரியாத்தை

வன்னியனார்கள் நிர்வாகம் செலுத்திய காலத்தில் அந்நியருக்கு யானைகளைத் திறையாக வழங்க வேண்டும் என்பது நியதி. யானைகளைப் பிடிப்பதில் திறமையுள்ளவர்களாகவிருந்த பணிக்க குலத்தவர்களை இந்தியாவிலிருந்து அழைத்து வந்து வன்னியில் குடியேற்றினர்.
ஒருநாள்வன்னியனார் அவையில்மதம் கொண்ட யானையைப் பிடிப்பதற்கான ஆலோசனைகள் இடம்பெற்றன. பணிக்கர்களுக்குள் பலகுடும்பப் பிரச்சினைகள் இருந்தன. அந்தக் குழுவுக்குத் தலைவனாக இருந்த வேலப்பணிக்கன் என்பவனை மானபங்கப் படுத்துவதற்காக ஆலோசனைக்கூட்டத்தில்'மதங்கொண்ட யானையைத்தமதுதலைவனால்பிடிக்க முடியாது, வேண்டும் என்றால் அவனது மனைவி அரியாத்தையால் பிடிக்க முடியும்'என நகைச்சுவையாக ஒருவர் கூற ஏனையோரும் சேர்ந்து சிரித்தனர்.
வன்னியனார் அவையில் தனது கணவனுக்கு ஏற்பட்ட அவமானத்தை நீக்குவதற்காகத் தானே சென்று யானையைப் பிடித்து வருவதாகக் கூறி அரியாத்தை காட்டுக்குள் சென்றாள். மதம்கொண்டு திரிந்த யானையைத் தனது கற்பின் மகிமையாலும் கடவுள் நம்பிக்கையாலும் அடிபணியச் செய்து அதன்மேல் ஏறி அமர்ந்து வீதிவலம்வந்து யானைகட்டும்தளத்திலிருந்த புளியமரத்தில்கட்டினாள்.



இதனை அறிந்த வன்னியனாரும் மனைவியும் அவளைத் தமது இல்லத்துக்கு அழைத்துப்பரிசில்கள்வழங்கிக் கௌரவித்தனர். அரியாத்தைக்குக் கிடைத்த மரியாதையைத் தாங்க முடியாதவர்கள் அவளின் பொன்னாடை மீது நஞ்சுதடவியதால்அவள்உயிரிழந்தாள். அரியாத்தைக்கு நடந்த கொடுமையைக் கேள்வியுற்ற வேலப்பணிக்கன் அவள் உயிரிழந்த இடத்துக்கு ஓடிவந்தான். அரியாத்தையின் பெருமையை ஒப்பாரியாகப்பாடித்தனதுகவலையைவெளிப்படுத்தினான். அத்தோடு அவளோடு உடன் கட்டை ஏறியதாகவும்கூறப்படுகிறது.
பெண்களே ஒப்பாரி பாடுவது பிரதேசத்தின் பாரம்பரியம். ஆனால் தனது மனைவிக்காக ஆண் ஒருவர் ஒப்பாரிப்பாடல் மூலம் அரியாத்தையின் பெருமையை உயர்த்தியுள்ளமை வரலாற்றின் சிறப்பம்சமாகும். இதனால்யானையைஅடக்கிய அரியாத்தையும் பெருநிலப்பரப்பின் அடையாளமாகத்திகழ்கிறாள்.

குருவிச்சி நாச்சியார்

ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயர் போன்றோரின் நிர்வாகக் காலத்தில் வன்னியனார் பதவி வகித்த ஒருவர் (பண்டாரம் வன்னியனார் இவரையே பண்டாரவன்னியன் என்று குறிப்படப்படுகிறார்) அவர்களுக்கு எதிராகத் தாக்குதல்களை நடத்தியுள்ளார். 1790களில் ஒல்லாந்தருக்கும் 1803களில் ஆங்கிலேயருக்கும் எதிராக நடத்திய தக்குதல்களில் இவர் கடைப்பிடித்த போர்த் தந்திரங்களும் வீரமும் பிரதேசத்தின் அடையாளங்களாகக் குறிப்பிடப்படுகின்றன. பண்டாரம் வன்னியனாரின் தாக்குதல் நடவடிக்கைகள் பற்றிய விவரங்கள் அந்நியர்களுடைய குறிப்புகளில் நிறையவே காணப்படுகின்றன.
பண்டாரம் வன்னியன் திருமணம் செய்யவில்லை. ஆனால்அவருக்குகுருவிச்சி என்ற பெயரில் ஒரு காதலி இருந்ததாகச் செவிவழிக் கதைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தாக்குதல்களின்போது பண்டாரம் வன்னியனார் உயிரிழந்ததாகத் தகவல்கள் பரவின. இதனால் அவரைக் காதலித்த குருவிச்சி கார்த்திகைக் கிழங்கை அரைத்துச் சாப்பிட்டு உயிர் விட்டபோது அவரோடு சேர்ந்து அவரது தோழியும் உயிரை மாய்த்ததாகக் கூறப்படுகிறது.
குருவிச்சியின் வாழ்புலத்துக்கு அருகில் உற்பத்தியாகி ஓடும் சிற்றாறு ஒன்றுக்கு 'குருவிச்சி ஆறு' என்று பெயர் சூட்டப் பட்டுள்ளது. இந்த விவரங்களைக் கூறுவதாக'குருவிச்சிநாச்சிதாயார் சலிப்பு' என்ற ஒப்பாரி வடிவில் பாடலும் பாடப்பட்டுள்ளது. இதனால் குருவிச்சியும் 'குருவிச்சி நாச்சியார்' என்று அழைக்கப்பட்டுக் கௌரவப்படுத்தப்பட்டுள்ளார்.
கணவன்மார்களுக்காக உயிரை விடும் அளவுக்குப் பெண்களின் மனத்துணிவு இருந்ததன் காரணத்தாலும், அதன்மூலம் தமது கற்பின் மகிமையை வெளிப்படுத்தியுள்ளதாலும் பெருநிலப்பரப்பின் கௌரவத்துக்கு இங்கு வாழ்ந்த பெண்களில் பலரும் பெருமை சேர்த்துள்ளார்கள் என்று கூறலாம். புராதன காலம் தொடக்கம் மண்டோதரி, நாச்சிமார்,' செம்பாத்தை, அரியாத்தை, குருவிச்சி போன்றவர்கள் பெருநிலப்பரப்பின் அடையாளங்களாக இருக்கின்றனர்.
இதனால்தான்கண்ணகிவழிபாடும்முக்கியத்துவம் பெற்றுள்ளது. பெண்களுக்குக் கௌரவம் வழங்கும் பண்பு அடங்காப்பற்று வன்னியில் இருந்து வருவது அதன் தொன்மைக்கு மற்றுமொரு முக்கிய அடையாளமாகத் திகழ்கிறது. ■

பெண்களுக்குக் கௌரவம் வழங்கும் பண்பு அடங்காப்பற்று வன்னியில் இருந்து வருவது அதன் தொன்மைக்கு மற்றுமொரு முக்கிய அடையாளமாகத் திகழ்கிறது.





சிறுகதை



ஜனதா

ஜனதா ஜோர்ச் எனும் இயற்பெயர் கொண்ட இவர், யாழ்ப்பாணம் நல்லூரைச் சேர்ந்தவர். தமிழ் மொழியில் சிறப்பாகக் கற்பிக்கும் இவர் ஓய்வுபெற்ற ஆசிரியர் ஆவார். பத்திரிகைத்துறையோடு நீண்ட காலம் தொடர்புபட்ட இவர் சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள் போன்றவற்றை எழுதி வருகிறார்.

வீடு விற்பனைக்கில்லை

> தான் வாழ்ந்த வீட்டை ஒருவன் விற்க முற்படுகிறானென்றால் அதற்கு இரண்டு காரணங்கள்தான் இருக்க முடியும். ஒன்று அந்தக் குடும்ப அங்கத்தவர் ஒருவரோ அல்லது முழுக் குடும்பமோ நாட்டின் வேறு மாவட்டத்துக்கோ அன்றேல் வெளிநாடோ செல்வதற்காகவிருக்கும். இரண்டு, கடன் சுமை. எனது பிரச்சினை இரண்டாவது ரகம்.

அன்று ஞாயிற்றுக்கிழமை அன்றைய தினம் பத்திரிகையில் மூன்றாவது முறையாகவும் 'வீடுவிற்பனைக்கு' என்று விளம்பரத்தைக் கொடுத்து விட்டு வீட்டு முற்றத்தில் காலை எட்டு மணியில் இருந்து இதோ பத்து மணிவரை உட்காந்திருக்கிறேன். இன்று விடுமுறை நாளென்பதால் வீட்டில் எனது குடும்பத்தவரின் வேலைகளில் நான் உதவி ஒத்தாசைகள் புரிவது வழக்கம். ஆனால் எனக்கு இன்று எதிலும் மனம் ஓட்டவில்லை. தொலை பேசி அழைப்புகளை எதிர்பார்த்துக் கொண்டே இப்படி இருக்கின்றேன். இதுவரையில் வந்த தொலைபேசி அழைப்புக்கள் ஒன்பது. இவர்களுள் வீடுவாங்குவதில் ஆர்வப்பட்டுப் பேசியவர்கள் ஒரு சிலராகத் தான் இருக்கும். ஆனால் வீட்டை வாங்குவதாகப் பாசாங்கு செய்து எனது நேரத்தையும் தங்களது நேரத்தையும் விரயம் செய்தவர்கள் பலராக இருக்கும்.

இதுவிடயமாக முன்புநான் விளம்பரம்கொடுத்த இரண்டுதடவைகளும் என்குக் கிடைத்த அனுபவங்களே இதுவிடயத்தில் எனக்கு அவநம்பிக்கையை ஏற்படுத்தியிருந்தன. அந்த அனுபவங்களில் பல வருந்தத்தக்கவை. சுவராசியமானவையும் கூட இருந்தன. ஆயினும் மூன்றாவது முறையாகவும் முயன்று பார்ப்போம் என்ற ஒரு சிறிய நம்பிக்கையே இந்த முயற்சி.

"ஹலோ.... பத்திரிகையில் வீடு விற்பனைக்கெண்டு விளம்பரம் போட்டிருந்தது... வீடு எவடத்தில இருக்குதெண்டு சொல்லுவியளே"

"நீங்கள் நாவலர் றோட்டுப்பக்கமிருந்து வாறதெண்டால் பாப்பையா கடைச் சந்தியாலை வலது பக்கம் திரும்பிவர ஒரு வைரவர் கோயில் வரும் அதையும் தாண்டி..." ஒருவாறாக வீடு வருவதற்கு வழி சொல்லியாயிற்று.

பத்திரிகையில் பிரசுரிக்கும் விளம்பரங்களின் விளம்பரதாரருடன் தொடர்பு கொள்வதற்கு அவரது தொலை பேசி இலக்கத்தையோ அல்லாது செல்லிட பேசி இலக்கத்தையோ அந்த விளம்பரத்தில் பதிவு செய்தால் ஒருவரோ அல்லது ஒரு சிலர் சேர்ந்த குழுவோ மாறி மாறி அந்த இலக்கத்துக்குத் தொடர்பெடுத்து விளம்பரம் கொடுத்தவரை ஏமாற்றிப் பேய்க்காட்டுவார்கள். "பிள்ளைக்கு விளையாட்டு சுண்டெலிக்குச் சீவன் போகிற" இந்தநிலை பற்றி அவர்கள் சிந்திப்பதே இல்லை. அடுத்தவன் துன்பத்தில் குளிர்காய்வதுதான் அவர்களுக்கு மகிழ்ச்சியைத் தரும்போலும்.

தலையிடியும் காய்ச்சலும் தனக்கு தனக்கென்று வரும்போது எல்லாம் தன்னால் புரிந்து போகும்.

விளம்பரத்தில் வீட்டின் முகவரி உட்பட வீதிமற்றும் முக்கியமான சுற்றுச் சூழல் அடையாளங்களைக் குறிப்பிட்டு இறுதியில் "விலைநேரில் பேசித் தீர்க்கப்படும்' என்று குறிப்பிட்டிருந்தாலும் கூட ஒரே ஒரு தொலைபேசி அழைப்பிலேயே பேட்டி காண்பதுபோல முழு விவரத்தையும் கேட்டு இறுதியில் விலையும் வேறு கேட்டு விடுவார்கள். பேசாமல் "வீடு விற்பனைக்கான நேர்காணல்" என்று போட்டு விளம்பரதாரரின் வீட்டு முகவரி, நேர்காணும் நேரம் என்பவற்றையும் போட்டுவிடலாம் போலும். வேலைக்கான நேர்முகத் தேர்வு என்பதுபோல் இதுவும் ஒரு வித்தியாசமான விளம்பரமாக அமைந்து விடும்.

இந்தத் தொலைபேசியிலே முழுவிவரமும் கேட்பர்களுக்குத் தாங்கள் வாழ்நாள் முழுவதும் வாழப்போகும் மனையை ஒருமுறை பார்வையிடக் கூடவா முடியாது. ஏதோ சந்தையில் மீன், காய்கறி வாங்குவது போல... மீனைக் கூடத் தொட்டுப் பார்த்தும் காய்கறிகளைத் தொட்டும் முறித்தும் பார்த்துத் தானே வாங்குவார்கள். சொந்த இடங்களைவிட்டு ஏதிலிகளாகி இடம்பெயர்ந்து ஒருசிறிய கொட்டிலில் பத்துப் பதினைந்து பேரென அவல வாழ்வு வாழும்போது ஊரில் தமது வீடு வாசல்களை நினைந்து ஏங்கி உருகிய அந்த நாள்களை இவர்கள் எப்படி மறந்தார்கள்? இருக்க ஒரு வீடு என்பது இவர்களுக்கு இப்போது அத்துணை மலினமாகிப் போய்விட்டதா? இவர்களின் இந்த அலட்சியப் போக்குகளுக்கு காரணம்தான் என்ன?

"ஹலோ... ஹலோ.. வீடு பார்க்க இப்ப வாறம்"

"இப்ப எங்கை நிக்கிறியள்"

"நாங்கள் றக்கா றோட் சந்தியில நிக்கிறம் வீட்டுக்கு வாற வழியைச் சொல்லுறியளே!"

'ஆ.... வீட்டுக்குக் கிட்டத்தான் நிக்கிறியள். அப்பிடியே மருதடி பிள்ளையார் கோயிலடிக்கு வாங்கோ... அதில நிண்டு உங்கட இடது கைப் பக்கம் திரும்புக்கோ. அதுதான் றோட்டு அதில போட்டும் போட்டிருக்கு அதால நேர வந்தால்... சரி நான் எங்கட வீட்டு கேற் வாசலுக்கு வாறன். நீங்கள் வாங்கோ'

"இல்ல பின்னேரம் வாறம்"

"இப்ப வந்து நிற்கிறம் எண்டியள்""

"இல்ல அவசரமா ஒரு இடத்துக்குப்போக வேணும் அதுதான்'

"சரி பின்னேரம் எத்தின மணிக்கு வருவியள்""

"ஒரு நாலு மணிபோல""

மறுமுனையில் தொடர்பு நிறுத்தப்படுகிறது. இப்போது பேசிய அந்த நடுத்தர வயதுப் பெண்ணின் குரல் எனக்கு மிகவும் பரிச்சயமான குரல்போல இருந்தது. உடனே அந்த அழைப்பின் தொலைபேசி எண்ணைப் பார்க்கிறேன். தெரிந்த தொலைபேசி எண்தான். நான் நினைத்தது சரிதான். ஆயினும் எனக் கொரு சந்தேகம். அதே எண்ணுக்குத் தொடர்பு எடுக்கிறேன். "இப்ப வீடு பாக்க எண்டு இந்த இலக்கத்துக்கு போன் செய்தது நீங்கள் தானே"

"ஓம்... ஓம் நான் தான். அதுதான் பின்னேரம் வாறன் எண்டனாங்கள்""

"பிள்ள திலகம் நீ இப்ப தானே ஆறுமாதத்துக்கு முதல் புதுவீடு கட்டிக் குடிபுகுந்தனீர். நீரோ எங்கட வீட்டை வாங்கப் போறீர்"

சட்டென்று தொலைபேசித் தொடர்பு நிறுத்தப்படுகிறது. அது என் குடும்பத்துக்கு மிகவும் அறிமுகமான ஒரு வகையில் எமக்குத் தூரத்து உறவு முறையான பெண்ணின் குரல்

✦✦✦

தான் வாழ்ந்த வீட்டை ஒருவன் விற்க முற்படுகிறானென்றால் அதற்கு இரண்டு காரணங்கள்தான் இருக்க முடியும். ஒன்று அந்தக் குடும்ப அங்கத்தவர் ஒருவரோ அல்லது முழுக் குடும்பமோ நாட்டின் வேறு மாவட்டத்துக்கோ அன்றேல் வெளிநாடோ செல்வதற்காகவிருக்கும். இரண்டு, கடன் சுமை. எனது பிரச்சினை இரண்டாவது ரகம். அந்தக் குடும்ப அங்கத்தவர் ஒருவரோ அல்லது முழுக் குடும்பமோ நாட்டின் வேறு மாவட்டத்துக்கோ அன்றேல் வெளிநாடோ செல்வதற்காகவிருக்கும். இரண்டு, கடன் சுமை. எனது பிரச்சினை இரண்டாவது ரகம். அந்தக் குடும்ப அங்கத்தவர் ஒருவரோ அல்லது முழுக் குடும்பமோ நாட்டின் வேறு மாவட்டத்துக்கோ அன்றேல் வெளிநாடோ செல்வதற்காகவிருக்கும். இரண்டு, கடன் சுமை. எனது பிரச்சினை இரண்டாவது ரகம்.

அந்தக் குடும்ப அங்கத்தவர் ஒருவரோ அல்லது முழுக் குடும்பமோ நாட்டின் வேறு மாவட்டத்துக்கோ அன்றேல் வெளிநாடோ செல்வதற்காகவிருக்கும். இரண்டு, கடன் சுமை. எனது பிரச்சினை இரண்டாவது ரகம். எனது மகளின் திருமணம் பெரிய தொடர். மாரடைப்பால் பாதிக்கப்பட்டுச் சாவின் விளிம்பைத் தொட்டுநின்ற எனக்கு 'பைப்பாஸ்' அறுவைச்சிகிச்சை கூடவே இப்போது நான் விற்க முனைந்திருக்கும் வீட்டின் அப்போதைய வெளிநாட்டு உரிமையாளரால் வரிந்து என் மேல் சுமத்தப்பட்ட பண நெருக்கடி.

இப்படிப் பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்ததுபோல, அடிமேல் அடியாக அடுத்தடுத்து ஒரு சில மாதங்களுக்குள்ளேயே நான் மீள முடியாத அளவு கடனாளியாக்கப்பட்டேன். எனக்கு ஏற்பட்ட இந்தச் சிக்கலான, மிகவும் நெருக்கடியான நிலமை என் எதிரிக்குக் கூட வரக் கூடாது. இந்தச் சிக்கலான நிலமைகளை எனது உறவுகளோ, அயலவரோ, நண்பர்களோ அறியாமலும் இல்லை. நான் ஓரளவு வசதியோடு வாழ்கையில் அவர்களுக்குப் பண உதவிகளும் சீரிய உதவிகளும் செய்திருந்தேன். தருணத்தில் நல்ல ஆலோசகனாகவும் வழிகாட்டியாகவும் இருந்திருக்கிறேன். ஆனால் இன்று அவர்களில் பலர் புதுப்பணத்தில் புரண்டு கொண்டிருக்கிறார்கள். ஏறிவந்த ஏணியை எட்டி உதைப்பதும் செய்நன்றி மறப்பதும் இன்றைய சமுதாயத்துக்குக் கற்றுக்கொடுக்க வேண்டிய ஒன்றல்லவே. இன்றைய இளைய சமுதாயம் தனது பெற்றோரில் இருந்து வழிமுறையாக இவற்றைக் கற்றுக் கொண்டு வருகிறது.

எமது வீட்டைத் தாண்டி ஒரு கார் வேகத்தைக் குறைத்து மெதுவாகச் செல்கிறது. சிறிது வேளையில்..., "ஹலோ இங்க நாங்கள் வீடு பாக்க வந்து உங்க ஒழுங்கையில்தான் நிக்கிறம். நீங்கள் உங்கட வீட்டு கேற்றுக்கு வெளியில் நிண்டீங்கள் எண்டா நாங்கள் அடையாளம் காணலாம்"

நான் வீட்டுக் கேற் பக்கம் விரைகிறேன். எனது வீட்டுக்குச் சற்று தூரத்தில் அதே காரில் வந்தவர்கள் ஒரு நடுத்தர வயதுடையவருடன் பேசிக்கொண்டிருப்பது எனக்குத் தெரிகிறது. தெரிந்ததும்..."சீ இவர்கள் வீடு வாங்க மாட்டார்கள்" என்ற முடிவுக்கு நான் வந்தேன். ஏனெனில் அவர்கள் பேசிக்கொண்டிருப்பது இராமாயணத்தில் கூனிபோலவும் மகாபாரதத்தில் சகுனிபோலவும் மிகவும் 'நல்லவர்'. அவர் எமது அயலவர் தான். ஆனால் நல்ல காரியங்களைக் கெடுத்து வைப்பதில் மிகவும் கைக்காரர். தானும் தனது குடும்பமும் மட்டும் நல்லாய் இருந்தால் போதும் என்ற 'நல்ல மனம்' உடையவர். வதந்திகளைக் கிளப்பி விடுவதிலும் அடுத்தவர் பற்றி அவதூறு பேசுவதிலும் அது இளம்பெண்கள் வாலிபர்கள் என்றால் என்ன வயோதிபர்கள் என்றால் என்ன எல்லோரும் இவர் பல்லுக்குப் பதமானவர்கள் தான்.

காரில் வந்தவர்கள் ஒரு பெண்மணி உட்பட மூவர். இப்போது வீடு முழுவதும் பார்த்தாகி விட்டது. அவர்களுக்கு வீடு பிடித்துப்போன மாதிரி எனக்குத் தோன்றியது. இப்போது அவர்களது வினாக்க



வாழ்த்தான் வாழ்க்கை..!

கவிதை



வேலணையூர் சுரேஸ்

யாழ்.இந்துக்கல்லூரி மாணவரான இவர், யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்வியை ஆரம்பித்து ஆரசியல் சூழ்நிலைக ளால் அதைப் பூர்த்தி செய்ய முடியா மல்போன வர்.கவிதைத்துறையில்ஈடுபாடுகொண் டவர். விடுதலைப் போராட்டம் உச்சம் பெற்றிருந்தவேளையில் விடுதலைப் பாடல்களை எழுதிக் கவனம் ஈர்த்தவர். இப்போது பக்திப் பாடல்களின் பக்கம் தனது கவனத்தைத் திருப்பி ஏராளமான இசைப்பாடல்களை இறுவட்டுக்களாக வெளியிட்டுள்ளார். இத்துடன் கவிதைத் தொகுப்புக்கள், சிறுவர் பாடல்களைக் கொண்ட தொகுப்புக்கள் போன்றவற்றை யும் வெளியிட்டுள்ளார்.

கூட்டுக் குடும்ப வாழ்க்கை
இன்று
கேட்டுத்தான் தெரிய வேண்டும்
பாட்டி, பாட்டன் காலம்
முடிந்த கையோடு அதற்கும்
தீட்டு எழுதியாயிற்று.

தாம் தாம்
தம் வழிகளில்

நாற்சார் வீட்டு வாழ்க்கைமுறை
இன்று இருக்குமானால்
வாற்போர், விற்போர் எல்லாம்
வீட்டுக்குள்ளேயே தெரிந்திருக்கும்
நல்லதுக்குத்தான்...
கூட்டமற்ற இனமானோமோ...?

பல காரியங்களில்
பக்கத்தில் கூடும் உறவுகள்
சுப காரியங்களில்கூட இன்று தூரத்தூர...

கனத்த மனிதர்ளாய்
இதயமற்று குரூரம் அசடுவழிய
அதையே அழகென்று கருதி
வாழும் வாழ்க்கை ஏனோ தானோ?
என்று?
அன்பு, பாசம்
மருந்துக்கும்
அற்றுப்போன
பின்பும் வாழ்க்கை
இருக்குதென்று
பேதலிக்கிறது இப் பேய்
மனசு.

நீயும் நானும் என்று
வாழ்ந்த கூட்டு
வாழ்க்கை
இன்று
நீயா...? நானா...?
என்று
வேட்டு வைக்கிறது
வாழ்வில்.

சித்தப்பன் மகனுக்கு
குழந்தை கிடைத்ததற்காய்
எங்கப்பன்
எனக்கும் 'துடக்கு' என்று
பொங்கலிட அம்மனுக்கு வைத்த
நேர்த்திக் கடனை
ஒத்தி வைத்தான் ஒரு காலம்!
இன்று
பெரியப்பன் செத்துப் பத்துநாள்
ஆக முன்பே
சிறியப்பன் பிள்ளை 'திவ்ய மஹாலில்'
திருமணக் கோலம்.

யாருக்கும் யார் பற்றியும்
அற்றுப்போச்சுது கவலை

படித்து விளங்க இது
பைதகரசின் தேற்றமல்ல
விளங்காத புதிர் வாழ்க்கை

துணை என்று நினைத்தால்
வினையாகிப் போகுமோ என்று
விழி பிதுங்கும் காலம்.
மனைச் சரித்திரம் பார்த்து
அமைத்த வீட்டிலும்
மனம் நிம்மதி இல்லை.

ஒருவருக்காய் ஒருவர்
உருகிய காலம் கடந்து
ஒருவரை ஒருவர்
உயிர் உருவும் காலத்தின்
சாபங்களா நாங்கள்...?

ஆளை ஆள் விழுங்கும்
அந்தளவுக்கு மனம்
ஏழையாய்ப் போச்சோ?

அட என்னவும் செய்யும் பணம்
மனிதனை மனிதன்
தின்னவும் செய்யுமா?

வசதியாய் வாழ்வதல்ல வாழ்க்கை.
ஒழுக்கம் வழுவாமல் வாழ்வதும் தான்
வாழ்க்கை!



வீடு

ளுக்கு நான் விடை அளிக்கும் நேரம்.
"இதென்ன கிணறு முத்தத்தில இருக்கு?'
'வாஸ்து சாஸ்திர முறைப்படி (வீடு அமைவிடம் பற்றிய சாஸ்திர நூல்) கிணறு குசினிப்பக்கம் எல்லோ இருக்க வேணும்"
"நான் உதுகளை நம்புறேல்ல. எண்டாலும் கிணறு வெட்டுக் கிணறாயும் வடக்கு, வடகிழக்கு, வட மேற்கில் அது அமைய வேண்டும் எண்டு சொல்றது இப்ப இது வெட்டுக் கிணறு. வீட்டுக்கு வடமேற்கு முலையில இருக்கு வேறென்ன?'
"அதெல்லாம் சரி ஆனாக் குசினி கிணத்துப் பக்கம் இல்லையே பின்பக்கம் மெல்லோ இருக்கு?'
"அதுதான் குசினிக்குப் பக்கத்தில பெரிய நீர்க்குழாயும் தண்ணீர் தாங்கியும் இருக்கே இது போதாதோ...? மற்றது கிணத்தை நாங்கள் கண்டபடி அங்க இஞ்சை எண்டு தூக்கி வைக்கவும் முடியாது பாருங்கோ... நாங்கள் வீட்டை வாங்கேக்க இதெல்லாம் பாத்து வாங்கியிருக்க வேணும். இப்ப பாருங்கோ கடனில் வீட்டை விக்க வேண்டியதாய்ப் போச்சு"
இப்போது அவர்கள் பேச்சு என்னைக் கேலி பண்ணுவது போலவும் எனது இயலாமையைச் சுட்டிக்காட்டுவது போலவும் இருந்தது. எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. எனது தனிப்பட்ட விடயத்தைப் பேச இவர்கள் யார்? நான் விற்பவன் அவர்கள் வாங்குபவர்கள். இங்கே நடப்பது வியாபாரம்தான். வந்த ஆத்திரத்தைக் கஷ்டப் பட்டு அடக்கிக் கொண்டேன்.
"அது சரி ஏன் வீட்டை விக்கிறியள்? இதென்ன கேள்வி? காசுத் தேவைக்குத்தான். அதுதான் இப்ப சொன்னீங்களே. கடனில விக்கிறமெண்டு"
'இல்லை அதில ஒரு ஆள் சொன்னார்....'
"இன்னும் கனக்கச் சொல்லியிருப்பாரே! நீங்கள் அயலட்டையெல்லாம் பேட்டி எடுத்துப்போட்டுத்தான் வந்திருக்கிறியள்போல். அப்பிடியெண்டால் நீங்கள் வீடு வாங்க மாட்டியள்"
"இல்லைக் குறையாக நினைக்காதையுங்கோ. அவர் எங்களுக்குக் கொஞ்சம் பழக்கமானவர் அதுதான் அவரோட பேச வேண்டியதாய்ப் போச்சு'
"சரி ஐயா! சுவாமிஅறை கிழக்கப் பாக்குதுபோல? ஏன் கேக்கிறனெண்டா கிழக்க பாக்கிறதால இங்க மச்சம் மாமிசம் புழங்கேலாது" "இல்ல மற்ற அறையள் தான் கிழக்க பாத்தபடியிருக்கு, இது வடக்கு வாசல் வீடு. இங்க சரியாப் பாருங்கோ... அதனால் நீங்கள் தாராளமாக ஆடு, மாட்டை என்ன மனிசனைக் கூட வெட்டிச் சாப்பிடலாம்"
'இதென்ன இப்படிச் சொல்லுறியள்"
"சரி சாமியறை எங்க பாத்தா என்ன? சாமியை நீங்கள் பாத்தாச் சரிதானே! அல்லது சாமி உங்களப் பாத்தாச் சரிதானே! சாமி அறை வாசலில நிண்டா சாமி கும்பிடப் போறியள். சாமிக்குக் கிட்டப்போயிவியள் தானே!'
வந்தவர்கள் தமக்குள் குசு குசென்று பேசிக் கொள்கிறார்கள். வினாக்கள் தொடர்கின்றன. இப்போது பெண்மணி பேசினார். "இதென்ன ஐயா சாமி அறைக்குப் பக்கத்தில அட்டாச் பாத்றூம்"
"அது அப்பிடித்தான் இருக்கு. நீங்கள் தொண்றூற்றைந்து இடப்பெயர்வில இலங்கையில தானே இருந்தனீங்கள். அப்ப குளிக்கிறதுக்கும்மற்றத்தேவைகளுக்கும்எங்கபோனனீங்கள். அப்ப சாமியறை எண்ட ஒண்டுதான் இருந்ததோ? கோயிலில் கூட சாமிகளை மறைச்சுக் கொண்டு சனங்கள் தானே இருந்ததுகள் அப்ப மனசிலை இருந்த சாமியைத்தானே கும்பிட்டனீங்கள். கடவுள் தூணிலும் இருப்பார் துரும்பிலும் இருப்பார் தானே! ஆனா இப்ப சாமி அறை அந்தப் பக்கம் இந்தப் பக்கம் எண்டு பேசிறியள்"
"ஐயா கேட்கிறம் எண்டு குறை நினைக்காதையுங்கோ நீங்கள் கடவுள் இல்லை என்கிற நாத்திக வாதியா?"
"இல்லை கடவுள் இருந்தா இப்படித்தான் இருக்க வேண்டும் என நம்புகிற யதார்த்தவாதி"
"சரி ஐயா! வீடொன்று வாங்கேக்க இப்படி வாஸ்து முறைகள் பலதை அவதானித்துத்தானே வாங்க வேணும் அப்படித்தானே வீடும் நிலைக்கும் பிள்ளை குட்டியளும் சிறப்பாக வாழும்"
"முந்தி இந்த வீட்டு உரிமையாளர் மிகுந்த சைவர். சரியான வாஸ்து முறைப்படி பஞ்ச பூதங்களின் (நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்) ஆட்சி நிறைவாக இருக்கும் முறையில் சாஸ்திரி ஒருவரைக்கொண்டு இட மெடுத்தே இந்த வீட்டைக் கட்டினவர். அவர் குடும்பம் வெளிநாடு போகும் வரை இந்த வீட்டில் சீரும் சிறப்புமாய் வாழ்ந்துதான் இங்கிருந்து போனவை. அதுவும் கெட்டு நொந்து போகவில்லை. போர்க்காலச் சூழ்நிலையில் இங்கு வாழ முடியாது என்பதால்தான் போனவர்கள். போர்க்காலப் பாதிப்புகள் எல்லோருக்கும் பொதுவானவை தானே! அதுசரி போர்க் காலத்தில வடபகுதியில் தரைமட்டமான வீடுகள் யாவும் வாஸ்து முறையில் கட்டபடாதவையா?"
"சரி ஐயா இந்த வீட்டில கன திருத்தங்கள் செய்யக்கிடக்கு. முதலில சாமி அறையை இடிச்சு மாத்திக் கட்ட வேணும். அதுக்கே அதிக செலவாகும். நீங்கள் கொஞ்சம் விலையைக் குறைச்சியள் எண்டா நாங்கள் இப்பவே ரெடிக் காசு தந்து உறுதியை முடிப்பம்'
"விலையைக் கொஞ்சம் குறைக்க நான் தயார். ஆனா இந்தக் குறைகளோட வீட்டை நான் உங்களுக்குத் தரமாட்டன். சாமியறையை மாத்துவியள். கிணற எங்க தூக்கி வைப்பியள். உங்களுக்கு .'ரெடிமேட்வீடு' சரிவராது. காணியை வாங்கி வாஸ்து முறைப்படி வீட்டைக்கட்டுங்கோ. குறைகளுடனான வீடு உங்களுக்கு வேண்டாம். இதில் நானும் எனது குடும்பமும் வாழ்ந்துவிட்டுப் போகிறோம்"
'நாங்கள் ஏழைகள் தான். ஆனால் தன்மானம் உள்ளவர்கள்" தவித்த முயல் அடிக்கும் முயற்சியில் தோற்றுப்போன வர்கள் காரில் புறப்பட்டுப் போயினர். வீடு விற்கவெனப் புறப்படுவோரெல்லாம்பிச்சைக்காரர்கள் அல்லர். ஆனால் எனது இத்தனை வருட அனுபவத்தில் கூறுகிறேன். அவர்கள் நிச்சயமாக ஒரு காலத்தில் பிறரில் ஏமாந்து போனவர்களாகவும் பிறரால் ஏமாற்றப்பட்டவர்களாகவும் இருந்திருப்பார்கள் என்பது மட்டும் நிச்சயம். அடுத்து வந்த அதே ஞாயிறு பத்திரிகையின் விளம்பரப் பகுதியில் "வீடு விற்பனைக்கு இல்லை" என்று என்னால் கொடுக்கப்பட்ட விளம்பரம் வெளியாகி இருந்தது.



மரண தண்டனை

சிறுகதை



இந்திரா ஆனந்தன்

பரமானந்த ஆச்சிரமம் கரவெட்டி எனும் இடத்தில் பணிபுரியும்இவர், சிறுகதை எழுதுவதில் ஆர்வம் உள்ளவர். தற்போது பத்திரிகைகளில் எழுதி வருகிறார்.

அன்புச் சிறுவர் இல்ல வளாகத்தில் விசாலமாக அமைக்கப்பட்ட படிப்பு மண்டபத்தில் அமர்ந்திருக்கிறேன். நேற்றுமாலைஎனது அம்மாசொன்ன விடயத்தை என்னால் நம்பவே முடியவில்லை. இப்படி ஒன்று நடக்குமென்று நான் கனவில் கூடக் கண்டது இல்லை. பத்து வருட காலத்தின் பின்னர் என்னைப் பொறுப்பெடுத்துக் கூட்டிச் செல்ல அம்மா வருவார் என்று நினைக்கவேயில்லை. இல்லத்தில் உள்ளவர்களிடமும் விடயத்தைக் கூறி விடையும் பெற்றாயிற்று. இனி அம்மாவு டன் போவது தான். இவ்வாறான அவள் நினைவுகள் மேலும் சிறகடித்துப் பின் நோக்கிப் பறந்து செல்கின்றன.

கபிலா அம்மா, அப்பாவுக்கு ஒரே மகள். தந்தை தினேஷ் ஒரு ஆரம்ப ஆசிரியர். மகள் கபிலா மீது அளாதிப்பிரியம் அவருக்கு. ஒரே மகள் என்பதால் கேட்டதை எல்லாம் வாங்கிக் கொடுத்துப் பெற்றோர்கள் செல்லமாக வளர்த்து வந்தார்கள். அவள் மேல் ஒரு தூசு, துரும்பு கூடப்படவிட்டதேயில்லை. அவளும் பூலோகத்துத் தேவதைபோல் வாழ்ந்து வந்தாள். துன்பமே தெரியாது வாழ்ந்த குடும்பம் யார் கண்பட்டதோ தெரியாது தந்தை தினேஸ் மாரடைப்பால் சாவடைந்து விட்டார். அந்த உலகம் அழிந்து போனதைக் கண்டு இருவரும் உடைந்து போய் விட்டார்கள். அம்மா ராசாத்தி வேரறுந்த மரம்போல வாடித்துவண்டு போயிருந்தாள்.

இந்த நேரத்தில் உறவினரின் ஆறுதல் வார்த்தைகளால் நல்லதோர் வாழ்வை எனக்கு ஏற்படுத்தித்தர வேண்டும் என்ற நினைப்பினால் அப்பாவின் பிரிவிலிருந்து மீண்டு செயற்படத் தொடங்கினாள். தாய்க்குத் தாயாக தந்தைக்குத் தந்தையாக இருந்து அப்பா இல்லையே என்ற குறை ஒருபோதும் நெருங்க விடாத அளவுக்கு அம்மா என்னை வளர்த்து வந்தாள். நானும் அம்மா மீது உயிராக இருந்தேன்.

அப்பா இறந்து இரண்டு வருடம் கடந்த நிலையில் தோட்ட வேலை செய்யும் குமார் என்பவரை அம்மா காதலித்துத் திருமணம் செய்து கொண்டார். எனக்கு ஆரம்பத்தில் அப்பா இருந்த இடத்தில் வேறு ஒருவரை அப்பா ஸ்தானத்தில் வைத்துப் பார்க்க மனம் கூசியது. எதையோ பறிகொடுத்ததுபோல மனம் ஏங்கித் தவித்தது. யாரிடமும் சொல்லாது வேதனைகளை மனதுக்குள் போட்டுப் புதைத்துக் கொண்டேன்.

ஆனால் சித்தப்பா "கபிலா...! கபிலா...!" என்று அழைத்து நன்றாகவே பழகி வர நானும் 'சித்தப்பா... சித்தப்பா' என்று ஒட்டி உறவாடத்தொடங்கினேன். அம்மா சந்தோஷமாக வாழ்ந்தார். எல்லாம் சில காலம் தான். பின்பு சித்தப்பா என்னை வெறுக்கத் தொடங்கினார். அம்மா முன்னே எனக்கு அடிப்பது, ஏசுவது, தனது சேட்டைத் தோய், அதைச் செய், இதைச் செய் என்று வேலைக்காரியாக நடத்தத் தொடங்கினார். அம்மா செய்வதறியாது திகைத்தார். சித்தப்பா வீட்டில் இல்லாத நேரம் என்னைக் கட்டியணைத்து அழுவாள். "கபிலா என்னை மன்னித்து விடு. இப்பிடிச் சித்தப்பா உன்னை வெறுத்து ஒதுக்குவார் என்று தெரிந்திருந்தால் நான் மறு திருமணம் செய்திருக்க மாட்டேன். வாழா வெட்டியாக வாழ்ந்து தொலைந்திருப்பேன். என் தலை விதி என்ன செய்வது" என்று விதிமேல் பழிபோட்டுக் கொள்வார்.

சித்தப்பா வருவதைக் கண்டால் நான் ஓடி ஒளித்துக் கொள்வேன். அம்மாவிடம் கூடச் சொல்ல மாட்டேன். சித்தப்பாவுக்குத் தெரியாமல் அம்மா எனக்கு வேண்டிய சகல தேவைகளையும் பூர்த்தி செய்வாள். எனக்கு அம்மாவைப் பார்;க்கப் பாவமாக இருக்கும். 'அம்மா...!' என்று ஓடிச் சென்று அம்மாவை அணைக்கவோ கட்டிக் கொண்டு படுக்கவோ முடியாத துர்ப்பாக்கிய நிலை. எண்ணி வெம்பி வெதும்புவேன். சித்தப்பா, 'கபிலா சனியனை எங்கயாவது கொண்டு போய் விடு, எவனோ பெத்த பிள்ளைக்கு என்னாலை உழைச்சுப்போட முடியாது" என்று கடுமையாக நச்சரிக்க தொடங்கினார். "கபிலா நான் பெத்த பிள்ளை. அவளைச் சனியன் என்று பேசாதீங்க. அவள் என்ர உயிர். புரிந்து கொள்ளுங்கோ" என்று மறைவாகவும், எனக்கு முன்பாகவும் கெஞ்சிப்பார்த்தாள். ஆனால் சித்தப்பா விடாப்பிடியாக என்னை எங்கையாவது விட்டு விட்டு வா என்று அழுத்தமாகக் கூறினார். அம்மா எரிமலையானாள். 'விருப்பமில்லை எண்டால் நீங்கள் வீட்டை விட்டுப் போங்க. இந்த வீடு சொத்தெல்லாம் கபிலாவின் அப்பா தேடியது. கபிலாவின் சொத்து' என்று காரசாரமாக அம்மா பேசச் சித்தப்பா பெட்டிப் பாம்பாய் அடங்கினார்.

அன்று தொடக்கம் அம்மா, ஆடு, மாடு, கோழிகள் வளர்த்து அதனால் கிடைக்கும் வருமானத்திலேயே வாழ்க்கையை ஓட்டினாள். சித்தப்பாவிடம் எதுவித காசையும் எதிர்பார்ப்பதில்லை. தேவையற்று சித்தப்பாவோடு கதைப்பதில்லை. பயந்த சுபாவம் கொண்ட எனது அம்மாவின் துணிவு கண்டு வியந்தேன். நானும் படிப்பில் கவனத்தைச் செலுத்துவதோடு அம்மாவுக்கு என்னால் இயன்ற உதவிகளைச் செய்யத் தவறவில்லை. சுமாராக வாழ்க்கை ஓடிக்கொண்டிக்கின்றது.

காலச்சக்கரம் ஓடிச்செல்ல நான் பன்னிரண்டு வயதில் பூப்பெய்தேன். எனது பூப்புனித நீராட்டு விழா பெருவிழாவாக நிகழ்ந்தது. எனது பெற்றோராக அம்மாவும் சித்தப்பாவும் பதவி ஏற்றார்கள். சித்தப்பா வந்தோரை வரவேற்பதிலும், உபசரிப்பதிலும், சகல கடமைகளையும்முன்னின்றுசெய்ததால்நிகழ்வுக்குவந்த அனைவரும் சித்தப்பாவைப் பார்த்து வியந்தார்கள். புகழ்மாலை சூடினார்கள். சிலர், 'ராசாத்தி மறுதிருமணம் செய்து கொண்டது நல்லது. இல்லையேல் கபிலாவைத் தனியாக வைத்து எப்படி காப்பாற்ற முடியும்?' என்று கூறிச் சென்றனர். என்னை வாழ்த்த வந்தோர், 'அப்பா இல்லையென்றாலும் சித்தப்பா உன்னை வடிவாப் பாக்கிறார்' என்று வாழ்த்திச் சென்றனர். இவ்வாறு கலகலப்பாக அன்றைய நிகழ்வு இனிதே முடிந்தது.

காலச்சக்கரம் ஓடிச்செல்ல நான் பன்னிரண்டு வயதில் பூப்பெய்தேன். எனது பூப்புனித நீராட்டு விழா பெருவிழாவாக நிகழ்ந்தது. எனது பெற்றோராக அம்மாவும் சித்தப்பாவும் பதவி ஏற்றார்கள். சித்தப்பா வந்தோரை வரவேற்பதிலும், உபசரிப்பதிலும், சகல கடமைகளை முன்னின்று செய்ததால் நிகழ்வுக்கு வந்த அனைவரும் சித்தப்பாவைப் பார்த்து வியந்தார்கள். புகழ் மாலை சூடினார்கள். சிலர், ''ராசாத்தி மறுதிருமணம் செய்து கொண்டது நல்லது. இல்லையே கபிலாவைத் தனியாக வைத்து எப்படி காப்பாற்ற முடியும்?'' என்று கூறிச் சென்றனர்.

அன்றைய தினம் வீட்டில் சுபநிகழ்வு நடந்ததால் சித்தப்பா அவருடைய நண்பர்களை அழைத்து மது விருந்து ஏற்பாடு செய்திருந்தார். நானும் அம்மாவும் அலுப்பாக இருந்ததால் நேரத்துக்கே தூங்கி விட்டோம். இரவு பத்துமணி இருக்கும் "டொக் டொக்.." எனக் கதவு பலமாகத் தட்டப்படும் சத்தம் என் காதில் விழப் பதறி விழுந்து போய் "ஆரு இந்த நேரத்தில்..." என முனகியபடி பயத்துடன் மெது மெதுவாகக் கதவைத் திறந்து பார்வையை விட்டேன். காற்றில் சாரய நாற்றத்தால் தானாகவே என் கை மூக்கைப் பொத்திக் கொள்கின்றன. சுழன்று கொண்டிருந்த சிகரெட் புகைக்கு நடுவில் இரு காமக் கருவிழிகள் என்னை என்னை அளைந்து கொண்டிருந்ததை நான் அறிவேனே?

"யாரது" என உயர்ந்த தொனியில் கண்களை அகல விரித்தபடி கேட்கின்றேன். பதிலேதும் இல்லை. படுக்கை அறையின் மங்கலான வெளிச்சத்தில் அது சித்தப்பாவென ஊகித்துக் கொண்டேன். அவர் என்னை நோக்கி " மயங்கினேன் சொல்லத் தயங்கினேன்..." என்ற சினிமாப் பாடலை அவரது போதைத் தொணியில் பாடிக்கொண்டே என் கைகளைப் பிடித்து இழுத்தார்.

"சித்தப்பா நீங்க குடிச்சிருக்கிறீங்க போய்ப் படுங்க," என்று கூறிக் கதவை சாத்த எத்தனிக்கிறேன். "என்னடி உனக்கு அவ்வளவு திமிரா" நான் இறங்கி வந்தால் நீ



ஏறிப்போவியா ?·எவனுக்கே பிறந்த உன்னைச் சேர்த்துக் கொண்டதே பெரிய விஷயம். உன்னால சந்தோஷம் எல்லாம் போச்...ச்சு" என வார்த்தைத் தணல்களை என்மீது அள்ளி எறிந்தபடியே என்னைத் துரத்த "அம்மா, அம்மா " என்று கத்த ஓடி வந்த அம்மா சித்தப்பாவின் தலையில் கோடரிப்பிடியால் ஓங்கி அடிக்க இரத்தம் பெருக்கெடுத்து ஓட அவர் முனுகுவதைப்பார்த்து "ஐயோ அம்மா" என அலறுகிறேன்.



"பிள்ளை கமலா எழும்புங்கோ... என்னம்மா கனவு கண்டியா ? ஆறு மணியாச்சு எழும்புங்கோ" என்னைத் தட்டி எழுப்பியபோது தான் நான் கண்டது கனவென நிம்மதிப் பெரு மூச்சு விட்டேன். இருந்தாலும் கனவு உள்ளூர உறுத்திக் கொண்டிருக்க எழுந்து, பல் துலக்கிக் குளித்து விட்டு அம்மா சமைத்த இட்லியைச் சாப்பிட்டு விட்டு அம்மாவின் முத்தங்களுடன் பாடசாலையில் நடக்கவிருக்கும் பரீட்சைக்குச் செல்லத் தயாரானேன். என்றுமில்லா அக்கறையுடன் சித்தப்பா "நில்லம்மா கபிலா நான் உன்னைக் கெண்டு போய் விடுகிறேன் " . என்று கூற அம்மாவின் முகத்தில் அதிர்ச்சியும், புன்னகையும், மாறி மாறி மின்னலடித்துக் கொண்டிருந்ததை நான் கவனிக்கத் தவறவில்லை.

"ஏதோ உன்ர சித்தப்பனுக்கு நான் கும்பிட்ட கடவுள் நல்ல புத்தியை கொடுத்திருக்கின்றார்' என வீட்டு வாசலில் தொங்கிய அம்மன் படத்தைத் தொட்டு வணங்கிக் கண்ணில் ஒற்றிக்கொள்ள அம்மன் படம் கீழே விழுந்து உடைந்தது. அம்மா பதறிக்கொண்டே " என்ன இது? கூடாத சகுனமாச்சே... பார்த்துப் போம்மா...' என்றார்.

இரவு கண்ட கனவை அம்மாவிடம் சொன்னால் பயப்பிடுவார் என்று எண்ணிச் சொல்லாமல் குழம்பியபடி சைக்கிளில் ஏறிக் கொள்ளுகிறேன். சித்தப்பா சைக்கிளை உதைத்தபடி சிறிது தூரம் செல்ல "கபிலா உன்னை இனிமேல் சந்தோஷமாக வைச்சிருப்பன். நீ என்ன கேட்டாலும் வாங்கிக் கொடுப்பன். அம்மாவுடன் சண்டை போடமாட்டன். நான் சென்னபடி கேப்பியா?' என்று கூறினார். "சித்தப்பா நீங்களும் அம்மாவும் சந்தோஷமாக இருக்க வேணும் என்பது தான் எனது ஆசை. அம்மாவின் சந்தோஷத்துக்காக நான் எதையும் செய்வேன் சித்தப்பா சொல்லுங்கோ' என்றேன். " அட சாவுக்குப் பிறந்தவனே பள்ளிக்கூடப்பிள்ளையை ஏத்திக்கொண்டு இப்படியா குறுக்கால போவாய், இளந்தாரிகள் தான் கற்பனையில் திரியுதுகள் எண்டால், கிழடு கட்டைகளும் இப்படியாப் போச்சு" என்ற சத்தம் கேட்டு சித்தப்பா சுயவுணர்வுக்கு வந்தவராய் நிதானமாகிறார். பாடசாலை மணி ஒலிக்கும் சத்தம் கேட்கப் " போட்டு வாறன் சித்தப்பா " என்று சைக்கிளால் இறங்கி அவசரமாக ஓடுகின்றேன்.

நான் வகுப்பறைக்குள் நுழையவும் ரீச்சர் வினாத்தாள் கொடுக்கவும் சரியாக இருந்தது. பரீட்சை முடிந்ததும் சக மாணவிகளுடன் வீடு செல்ல வெளியே வர... வழமைக்கு மாறாகச் சித்தப்பா வாசலில் நிற்கக் கண்டு மகிழ்ச்சியுடன் சைக்கிளில் ஏறிக்கொள்கிறேன். "கபிலா அம்மா ஊருக்கு போய் விட்டா. வர இரண்டு நாட்களாகும். உன்னைக் கவனமாகப் பார்க்க சொல்லி விட்டுப் போயிருக்கின்றா" எனச் சித்தப்பா கூறக் கசிந்த கண்களுடன் 'என்னை விட்டு ஏன் போனவா ?" என்று கூற அவர் சமாதானம் செய்தார்.

சித்தப்பாவின் முகத்தில் என்றுமில்லாத சந்தேஷம். வேகமாகச் சைக்கிளை உதைக்க வீடு வந்து சேர்ந்தது. அம்மா செய்வதுபோல சித்தப்பா எனக்கு உணவு ஊட்டியபடியே என்னை முத்தம் கொடுக்க முனைவதோடு அவரின் பார்வையும் பயத்தை தூண்டியது. அன்றொருநாள் பாடசாலையில் நடந்தேறிய சிறுவர் விழிப்புணர்வுக் கூட்டம் ஞாபகம் வர "வேண்டாம் சித்தப்பா வேண்டாம். என்னை ஒண்டும் செய்யாதீங்கோ. உங்களைப் பாக்கப் பயமா இருக்கு' என்று ஓடிச் சுவருடன் மோதுகின்றேன்.

முகத்தில் தண்ணீர் படக் கண் விழிக்கின்றேன். அம்மாவின் அபயக் குரல் கேட்கின்றது. எழும்பி இருக்க முயற்சிக்கின்றேன். தலை ஒரே பாரமாக உள்ளது. தலையைச் சுற்றிக் கட்டுப்போடப்பட்டுள்ளது. 'கடவுள் என்னைத் திருப்பி அனுப்பியுள்ளார். இல்லையென்றால் எனது செல்வத்தின் கற்பைச் சூறையாடிக் கொலையும் செய்திருப்பாய். இந்த பிஞ்சு உள்ளத்தை கசக்கி எறிய எப்படியடா மனம் வந்தது. நீங்களும் மனிதர்களா? இந்தப் பிஞ்சு உள்ளம் அப்பா இல்லை என ஏக்கம் வரக் கூடாது என்று தான் உன்னை கலியாணம் செய்தேன். என்னைச் செருப்பால அடிக்கவேணும்." என்று என்னைக் கட்டியணைத்தபடி புலம்புகின்றாள். அம்மாவின் ஆதரவுடன் எழும்புகின்றேன். சித்தப்பா குருதி வெள்ளத்தில் கிடக்கிறார்.

"அம்மா சித்தப்பா செத்து விட்டார்' "மொட்டுகளைக் கசக்கி எறிய நினைப்பவர்களுக்கு இப்படி உடனுக்கு உடன் தண்டனை கொடுத்தால்தான். எங்கட வலி புரியும்"

ஐயாவெனக் கத்த அயலவர்கள் ஒன்றுகூட, பொலிஸ்சும் வந்து சேர்ந்தார்கள். பொலிஸ் அம்மாவை விசாரிக்கும்போது அம்மா தனக்கு சித்தப்பா அடிக்க வந்ததாகவும் தான் தப்பிக் கொள்ள ஆவேசமாகத் தள்ளியபோது சுவருடன் மோதி நிமிர்த்தி வைத்திருந்த கோடாரிக்கு மேல் விழுந்து விட்டார் என்றும் கூறினார். நானும் அம்மா சொன்னது போலவே கூறினேன்.

அம்மா கொலைக்குற்றத்துக்காகச் சிறையில் அடைக்கப்பட்டாள். என் கல்வி தொடர அன்புச் சிறுவர் இல்லத்தில் நீதிமன்றக் கட்டளைப்படி இணைக்கப்பட்டேன். இங்கு எதுவித குறையும் இல்லை. நான் சந்தோஷமாக இருக்கின்றேன். ஆனால் அம்மா...? அன்பு எங்கும் கிடையாது. எனது தாயார் என் கற்பைக் காப்பதற்காகவே காட்டுமிரண்டித்தனமாகச் சித்தப்பாவை அடித்தார். தனது பிள்ளையின் எதிர்காலம் பாழாகக் கூடாதென்ற நல்ல சிந்தனையிலேயே இன்று கொலைக்குற்றவாளியாகச் சிறையில் அடைக்கப்பட்டுப் பத்து வருடங்களின் பின் விடுதலையாகி என்னை அழைத்துச் செல்ல வருகின்றார். ஆனால் இங்கே என்போன்ற எத்தனையோ சிறார்கள் தமது தாயின் வரவுக்காகக் காத்திருக்கின்றார்கள்.

விடிவைத் தேடி...

கவிதை



மித்ராஞ்சனி கனகபுனிதராஜா

உருப்பிராயைச் சேர்ந்த இவர், யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில் உயர்தர மாணவி. கவிதைத் துறையில் ஈடுபாடு கொண்ட இவர், அவ்வப்போது கவிதை எழுதி வருகிறார்

விழியோடு வழிந்திடும் கண்ணீரோடும்
வழியின்றி அலுபவிக்கும் சோகங்களோடும்
கனிவின்றி நிகழ்ந்திடும் நிகழ்வுகளோடும்
பனிபோல் மறைந்திடும் சந்தோசத்தோடும்
சுதந்திரமற்ற வாழ்வை
கண்முன்னே நிறுத்திக் கொண்டு
இன்று பெண்பிறவியே
சபிக்கப்பட்ட ஒன்றாய் ஆனது ஏன்.....?
பாசம் கொண்ட உறவுகள் கூட
பகையாளியின் கண் கொண்டு பார்த்தால்
வேசம் பூண்ட நடிகர்கள் வாழ்வாய்
மாறிப் போகும் நம் விதியும்
அன்பு மிக்க குடும்பமும்
தோள் கொடுத்திடும் நட்பும்
பலம் தந்திடும் உறவுகளும்
வரம் தானே நம் வாழ்வில்
பிரகாசம் மிக்க விடிவை நோக்கி
பிணைக்கப்பட்டுச் செல்லும் என் வாழ்வுப் பாதையின்
முடிவு நாள் என்றோ - அதை
தேடி நாளும் பயணிப்பவளாய்



இருள் யுகத்தின் ஒளி விம்பம்





'டியூ... டியூ...' என்ற நவீன பாண் காரனின் அலார ஒலி ஒருவித எரிச்சலைத் தந்து மூளைக்குள் சூட்டைக் கிளப்பியது. சடாரெனக் கதவைச் சாத்தினாள் மாலா. அந்தச் சத்தம் கேட்டுக் கேட்டுச் சலித்து இப்போது அந்த ஒலி இயமதூதனின் வருகை ஒலிபோல வெறுப்பைத் தந்தது அவளுக்கு.

கதவு நிலையில் மோதி மீண்டும் வந்து மீண்டும்போய் வேகம் குறைந்து சட்டென ஓய்ந்துபோக,

''ஏன் பிள்ளை இப்ப கதவை உடைக்கிறாய் உனக் கென்ன இப்ப பைத்தியமா பிடிச்சிட்டுது? கண்டதை யும் அடிச்சு நொருக்கு. அது ஐயா செய்து போட்ட முதிரைக்கதவு அது ஒண்டுதான்

அவரின்நினைவாக இருக்கு அதையும்அடிச்சுஉடைச் சுவிடு....''

பாண்காரனின் ஒலி மறைந்து, அவள் தட்டிவிட்ட கதவு ஒலி மறைந்து. இப்போது அவள் அம்மா போடும் பழைய பஞ் சாங்க வாசிப்பு மாலாவுக்கு இன்னும் எரிச்சலை ஏற்படுத்தி யது: எதிர்த்துப் பதில்பேசத் திராணியற்று, உள்ளே இருக்கி றேன்என்பதைக்காட்டிக்கொள்ளாதவளாய்முழங்கால்கள் மூக்கில் படும்படி ஒருக்களித்துப் பாயில் சுருண்டு கொண் டாள்...

மனம் சூனியத்தை வெறித்தபடி கண்களையும் இழுத்துக் கொண்டு ஓடித்திரிந்தது. கட்டுக்கடங்காத அவள் மனமும் எண்ணமும் சிறகசைக்கத் தொடங்கின. தான் எப்படி இருந் தேன் எவ்வளவு துணிவோடு காடுகளைக் கடந்து திரிந்த எனக்கு இப்போது ஏன் இந்தச் சூனியமான வாழ்வு என்று கடந்தகால நிகழ்வுகளுக்குள் மூள்கிப்போகிறாள் மாலா...

கட்டுக்கடங்காத எண்ணங்களையும் கற்பனைகளையும் கொட்டிக்கொட்டிமனதைச்சுகப்படுத்தியதுஅந்தப்பதினெட்டு வயதுக் குமரிப்பருவ காலம். எப்போதும் மாறாத மனத்து ணிவு அவளுக்கு இருந்தமையால்அம்மா, அப்பாயாருமே அவளின் தூரப்பயணங்களுக்கு மறுப்புச்சொல்வதில்லை. நிவாரணம் எடுப்பதற்குப் புதுக்குடியிருப்பில் இருந்து ஒட்டு சுட்டான் கருவேலன்கண்டல் போவது அவளது மாதாந்தச் செயற்பாடு. அந்தநீண்டகாட்டுப்பாதைஎப்போதும்அவளுக் குப் பிடித்த தனிமையை விரித்திருந்தது.

"சொல்லி சொல்லி வந்ததென்ன இந்தப் பிள்ளையின் செந் தமிழ்பாட்டு...."என்றபாடலைஎப்போதும்முனுமுணுப்பது அவளது மூளைக்கு ஒரு சுகமான பயிற்சி. இந்த வேளையி லும் அந்தப் பாடலை மூளை 'ரீவைண்ட்' பண்ணிக்கொண் டது ஏற்றம். இறக்கம். குன்று. குழி எல்லாம் தட்டிச் சுழன்று கொண்டு அந்த மிதிவண்டி நகர்கிறது. புதுக்குடியிருப்பில் இருந்து ஒட்டுசுட்டானுக்கு...

சைக்கிள்புதியடயர்,ரியூப்பைக்கண்டுபலவருடங்கள். முன் டயர்கம்பிக்கட்டுவிட்டு தவளையைவிழுங்கியபாம்புபோல் ஒரு பக்கமாகத் தள்ளிக்கொண்டு நின்றது. அதை நூலால் சுற்றிக்கட்டி, அந்த ஊதலை உள்ளுக்குத் தள்ளி டயரை நேராக்கி, அப்பா காலையில் கட்டிவிட்டார்.

அதுஓடஓடவெளித்தள்ளத்தான்பார்க்கிறது. 'பரவாயில்லை எப்பிடியும் போயிரலாம்' என்ற தைரியம் மனதுள் இருந்த மையால் பொருட்படுத்தாமல் அவள் மிதிவண்டியை மிதிக்கிறாள்.

அங்கொன்றும்இங்கொன்றுமாகவேக மாக ஓடும் இயக்கத்தின் பிக்கப் வாக னங்களைத் தவிர அந்த அதிகாலை வேளையில் மக்கள் நடமாட்டம் ஒன்றி ரண்டாகவே இருந்தது.

ஐயனார் கோவில் தாண்டும் வரை கொஞ்சம் சனம் போய்வரும். பிறகு ஏழெட்டுமணிக்குத்தான் அந்தவீதியில் சனம் வரும். அதற்கு பிறகு வெயில் ஏறிவிட்டால் சைக்கிள் உழக்க முடி யாது. அதனால் அதிகாலை ஆறு மணிக்கே வெளிக்கிடுவது வழமை. திடீரெனக் 'கீச்கீச்' எனக்கத்திக்கொண்டு குரங்குகள் வீதியைக்கடந்து பக்கத்துக் காட்டுக்குக்குறுக்கறுத்துஓடின. அவை அங்கலாய்ப்பதுமனதுள்பதட்டத்தைக் கொண்டு வந்தது. மிதிவண்டியின் வேகத்தைக்குறைத்துமெதுவாகஉழக் கத் தொடங்கினாள். அந்தத் தருணம்பார்த்து வீதியில்இயக் கத்தின் வாகனங்கள் ஒன்றும் வரவில்லை. என்னவாக இருக்கும்? அவள்மனம்பலவகைச்சிந்தனைகளைத்தட்டி விட்டது. அதுவாக இருக்குமோ? ஒருவேளை கிளைமோர் வைக்கும் ஆமிக்காரனாக இருக்குமோ? மனம் ஒருவித பயத்தை உள்வாங்கிக்கொண்டதால்வியர்வை அதிகமாகி நெற்றியில்கசிகிறது.

படையாகஓடியகுரங்குகளைவிடத்தனியனாகஒருகுரங்கு, குட்டியைமடியில்அணைத்தபடிமிகநிதானமாகப்பின்னுக் குப் பார்த்து பார்த்து மெதுவாக நடந்து வந்துகொண்டு இருந் தது. அப்போது ஓரளவுக்கு விளங்கியது கண்டிப்பாக அது மனித நடமாட்டம்தான் என்பது.

"இயக்கமாகத்தான் இருக்கும் எதுக்கும் கொஞ்சம் ஊண்டி மிதித்துடக்கென்று இடத்தைக்கடப்போம்" என மனதுக்குள் நினைத்துக்கொண்டுசைக்கிளைவேகமாகஉழக்குகிறாள். ஆறு பெண் போராளிகள், நான்கு ஆண் போராளிகள் எனப் பத்துப் போராளிகள் மன்னாகண்டல் காட்டுக்குள் இருந்து வெளியே வந்து வீதிக்கு ஏறுகிறார்கள்.

அவர்களைக் கண்டதும்தான் உடலுக்கு உயிர் வந்தது. அதைவிடப் பெண் போராளிகளைக் கண்டதும்தான் இன் னும் நிம்மதி. காரணம் இயக்கத்தின் சீருடைகளைப் பயன் படுத்திக்கொண்டுதான் ஆமிக்காரனின் ஆழ ஊடுருவும் படையும் வருவதாகப் பேசிக்கொள்கிறார்கள். அதனால் சிலவேளைகளில்ஆமிதானோஎனஐயப்படத்தேவைஇல் லாமல்பெல் பெண்போராளிகள் பேசிச் சிரித்தபடி வந்தது மனதில் ஆமிப் பயத்தைப் போக்கிவிட்டது.

மன்னாகண்டல் ஏற்றம் மிக பெரிய ஏற்றம். குத்தென ஏறி அடுத்தபக்கம் பத்து நிமிடங்களுக்குச் சைக்கிளை மிதிக்கத் தேவை இல்லை. தானாக ஓடி ஓய்வுநிலையை அடையும். அப்படியானஓர்ஏற்றம். அந்தஏற்றத்தில்ஏறும்போதுஅம்மா விடம் குடித்த பால் தைரியம் தருவதாக அவள் கற்பனை செய்துகொண்டு சைக்கிளை மிதிப்பாள். அவ்வளவு பெரிய ஏற்றம்அது. மெதுமெதுவாகஅவள்சைக்கிளைமிதிக்கவும், போராளிகள் ஓடி அந்த ஏற்றத்தில் ஏறவும், அந்த இடம் ஓர் ஓட்டப்பந்தயக் களமாக மாறியது. அவர்கள் பத்துப்பேரும் ஆயுதங்கள்சகிதம்ஓடிஅந்தஏற்றத்தில்ஏறுகின்றனர். அவள்

சிறுகதை



ப்ரியமதா பயஸ்

காயத்திரிபயஸ்ராஜாஎனும்ப்ரியம தாபயஸ் 1999ஆம் ஆண்டில் இருந்து வானொலி நிகழ்ச்சித் தொகுப்பாளராக அறிமுகமானார். இரா.காயத்திரிஎனும்பெயரில்கவி தைகள், கட்டுரைகள் எழுதினார். ஆதாரம், பொருண்மியச் செய்தி கள், ஈழநதாம்(பொருண்மிய வாசல்), நமது ஈழநாடு, உதயன் இணைய வானொலி, கனேடியத் தமிழ்ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம், அக்னி வானொலி போன்றவற்றில் பணியாற்றியுள்ளார்.

அவர்களுக்கீடான வேகத்தில் சைக்கிளை மிதிக்கமுடியாமல்மிதித்துஏறுகின்றாள்.

திடீரென்று ஒரு பெண் போராளி. "தங்கச்சி எங்க வேகமாக மிதிபார்ப்பம் நாங்க முன் னுக்கு இறங்குவம்" எனக் கூறிக்கொண்டு கரியலில்பிடித்துதள்ளிக்கொண்டுஏற்றத்தில் ஏறுகின்றார்.

ஒன்பது பேரையும் முந்திக்கொண்டு நாம் சைக்கிளில் ஏற்றத்தில் ஏறி உச்சிக்கு வந்து விட்டோம். "அக்கா! கையைவிடுங்கோநான் போட்டு வாறேன். அண்ணாக்கள், அக்காக் கள் நான் போய்ட்டு வாறன்" எனக்கூறிக் கொண்டேகாற்றில்மிதக்கும்அந்த இறக்கத் தில் இறங்குகிறாள்.

கால்கள் இரண்டையும் தூக்கிச் சைக்கிள் பாரில்வைத்துக்கொண்டுசுகமானபத்துநிமி டங்களைக் கடக்க விழைகிறாள் காற்றைக்கி ழித்துக்கொண்டு ஓடும் சைக்கிளின் வேகத் தில் வயிறு கூசிக்கொண்டு வந்தது. ஒருவித மான சுகமான ஓட்டமாகப் பத்து நிமிடங்கள் ஓடிப்பின்னர்வேகமாகமிதித்துமன்னாகண் டல் கடந்தாகிவிட்டது.

இன்னும் அரைமணி நேரம் ஓடினால், சம ளங்குளம். பின்னர்ஒட்டுசுட்டான்சந்தி. இடங் களை வரையறை செய்து கொண்டு மிதிவண்டியை வேக மாக மிதிக்கிறாள்.

நேரம் இன்னும் எட்டுமணியைத் தாண்டவில்லை. கற்சி லைமடுவில் பால் கறக்கப்பட்ட பின்னர் பட்டிகள் திறந்து விடப்பட்ட மாநிற மாடுகள் வீதியை மறைத்துப் போய்க் கொண்டு இருக்கின்றன.

"கை... கைஜாகை... ஜா.." என அறிவுறுத்திக்கொண்டுமாடு களைச் சாய்த்துக்கொண்டு அறுபத்தைந்து வயது மதிக்கத் தக்க ஐயா ஒருவர் போய்க்கொண்டு இருக்கிறார். மாடுகள் வழிவிட்டுக் கொடுப்பதாக இல்லை. நூற்றுக்கு மேற்பட்ட மாடுகள். கற்சிலைமடு வயல்வெளி வரும்வரையும் வீதி யால்தான்பயணிக்கப்போகின்றன. எப்படியும்பத்துநிமிடங் கள் ஆகும் அவை வயல்வெளிக்குள் இறங்க. அதுவரை மெதுவாக மிதிவண்டியை மிதிக்கிறாள்.

"பிள்ளைஇந்தப்பக்கத்தாலேவா! இப்பிடிப்போகலாம்" ஐயா பாதை பிரித்து, மாடுகளை விலக்கி விட நூறு மடுகளுக்குள் ளாலும் ராஜபயணமாக நினைத்துக்கொண்டு சைக்கிளை மிதிக்கிறாள். எத்தனை பெரிய மாட்டுக் கூட்டமாக இருந்தா லும், அவைமுட்டிமோதிமனிதரைவதைப்படுத்தாதவிலங் குகளாக இருந்தமை அந்த மண்ணின் சிறப்புத்தான்.

மனிதர்கள் சரி விலங்குகள் சரி ஒருவருக்கொருவர் ஆறுத லாக இருந்த தருணங்களே அதிகம். இப்போது மட்டும் ஏன் அந்தநிலைமைஇல்லையோஎனஅவள்சுயநினைவுக்குள் ளும் வந்து போகிறாள்.

கற்சிலைமடு தாண்டி ஆகிவிட்டது. போத்தலில் கொண்டு போனதண்ணீருக்குவேலைகொடுக்கவேண்டும்தானே! ஒரு பாலை மரத்தின் கீழ் சைக்கிளை விட்டு விட்டுத் தண் ணீர்ப் போத்தலை எடுத்துத் தாகம் தீர்த்துக் கொள்கிறாள். பாடசாலைக்குப்பிள்ளைகள்வரத்தொடங்கிவிட்டனர். ஆமி முன்னேற முன்னேறப் பாடசாலைகளும் நாமும் பின்னுக் குப் போவது வழமைதானே! அப்படிப் போனபோது அந்த கற்சிலைமடு மகாவித்தியாலயத்திலும் ஓர் ஆறுமாதங்கள் அவள் உயர்தரம் படித்தாள். அந்தப் பாடசாலையைக் கண் டதும் அந்த ஆறுமாதத்தையும் மீள அசைபோட்டுக்கொண் டாள்.

கவிதை



வெற்றிச் செல்வி

வாசிப்பு, எழுத்து, உளச் சமூகச் செயல்பாடுகள், சிறப்புத் தேவையுடையவர்களின் உரிமைகள் சார் பணிகளில் ஈடுபாடு கொண்டவர். போராளிப் படைப்பாளியாக 'இப்படிக்கு அக்கா' எனும்கவிதைநூல், 'சுதந்திரப்பறவைகளால்' வெளி மீடு செய்யப்பட இவர் அறிமுகமானார். இதுவரை ஒன்பதுக்கு மேற்பட்டநூல்களை வெளியீடு செய்தி ருக்கிறார். இவற்றில் சில இரண்டாம், மூன்றாம் பதிப் புக்களைக் கண்டவை.



ஆகவே மக்காள்...!

கண்ணீரை உள்ளே
கடலொன்றைப் படைத்தாலும்
அதில் நீர்ந்தி வெளியே
நமக்குத் தெரியும்.

இழப்புகளின் காயங்களை
எத்தனை தரம் கிளறினாலும்
வடியும் குருதியைத் துடைத்துவிட்டு
வலிதாங்க முடியும்.

ஆம்
மக்காள்!
நாம்
வாழும் வழியை
நாமே அமைப்போம்
நமது வாழ்வை நாமே செதுக்குவோம்.

போர் எங்களின் முகமல்ல.

அடக்குமுறை
எம்மீது வீட்டெறிந்த சவாலில்
மீளந்த போரை
அடக்குமுறையே வென்றது.

அதனால்
நாமொன்றும்
தோற்றுப் போனவர்கள் அல்ல.

போரின்
கனத்த நினைவுகளில்
தாங்கியிருக்கும்
நம் பிள்ளைகளின் வீரத்தை
தாலாட்டாய்ப் பாடலாம்
நம் பேரர்களுக்கும்.

நம் பிள்ளைகள்போல் வீரர்கள்
வீடுதலைப் போராட்டங்கள் தோறும்
வாழ்ந்திருக்கிறார்கள்.

ஆகவே மக்காள்
இயற்றுவோம் பாடல்களை
இனிய தாலாட்டுகளாய்.....

மீண்டும் நாய்கள் வளமாகவேண்டும்

ஒரு பயங்கரக் கனவு
மறுபடி மறுபடி மறுபடி
மூளைக்குள் துடைத்து துடைத்து
என் தோழியரின் நறும்பு மண்டலங்களில்
ஆட்சிபுரியத் தூடிக்கிறது.

அது என் தோழியரை

வீதாராக்கி
வீதியில் விடுவேன் என
கொக்கரிக்கிறது.

அந்தக் கொடிய கனவுகளை
வெறோடு வீருங்கி எறிந்து விடவே
எத்தனிக்கிறேன்.

நாய்கள் பட்ட பாடுகள்
வீணென்று விம்மும்

குற்றவுணர்வுகளால் உளிப்போகும்

அவமானம், தோல்வி என்று தலை கவிழும்
நீலை மாற்றி
நீமிர்க என் தோழியரே
நம் பாடுகள் எதையும்
நமக்காகதாகக் கொண்டதில்லை.
காவுகளைக்கூட
பிறருக்காகத் தாய்க்
தயாராத நாய்கள்
கயநலவாதிகள் அல்ல.
சமூகத் தொண்டர்களே.

அதில் சர்தேகம் வேண்டாம்.
உய்களுக்குள்
உய்களைத் தொலைக்கும்
நாள்களைக் கடந்து
வெளியில் பாருங்கள்.
தோன்றுக்கு
உடலை விற்போர் என்றும்
வறுமைக்குப் பிறத்தவர்கள் என்றும்
அடிவுக்குக் காரணமானவர்கள் என்றும்
நம்மைச் சொல்வதெல்லாம்
உன்மையல்ல என்பதை
நீங்கள் அறிவீர்கள்.
உய்கள்திடமெல்லாம்
திரும்பி வர வேண்டும்
நீங்கள் எம் சமூகத்தின்
பெரும் வளமாக வேண்டும்.

தாயாக
தோழியாக
பிள்ளையாக
அதிகாரியாக
சேவகியாக
மீண்டும் நீங்கள்
வளமாக வேண்டும்.

இருள் யுகத்தின் ஒளிவிம்பம்

சங்கக் கடையில் காட்டுகள் அடுக்கப்பட்டு இரண்டு மூன்று அடி உயரத்துக்கு வந்திருக்கும் என நினைக்கும்போது வீடு திரும்பும் நேரம் இரவாகிவிடுமே என எண்ணிக்கொண்டு சைக்கிளை எடுத்து மிதிக்கத் தொடங்குகிறாள்.

சங்கக்கடைக்கு அருகேபத்துமீற்றர்கள்வரைமக்கள்அலை மோதும் இடமாக இருக்கிறது. இதற்குள் இருந்து எப்படி இரண்டு மணிக்குள் மீழுவது என நினைத்துக்கொண்டு நிவாரண அட்டையை எடுத்து அந்த இரண்டடி உயரத்தில் இருக்கும் அட்டைகளுக்குமேல் வைக்கிறாள். வைத்துவிட்டுத் திரும்பினால்., எல்லாம் அறிந்த தெரிந்த முகங்களே.
"பிள்ளை! அம்மா எப்பிடிச் சுகமே...?",
"அப்பா எப்பிடி இருக்கிறார்...?"
"சாப்பிடியா? தண்ணி குடிச்சிட்டியா?"
"நாற்பத்தைந்து ஐம்பது கிலோ வரும்
கட்டிக்கொண்டு சைக்கிள் ஓடமுடியுமா? நான் தம்பியை அனுப்பட்டா கொண்டுவந்து தருவான்?"
என அன்புநிறைந்த அந்த உள்ளங்கள். அவளுக்கு மனதில் தைரியத்தையும் உற்சாகத்தையும் ஊட்டின. "இல்லை அம்மா! இல்லை அக்கா! நான் கொண்டுபோவேன். போன முறையும் நான்தான் வந்தனான்" எனச் சொல்லி அவர்க ளோடு அளவளாவிகொண்டு இருந்தாள். அவள்
புதுக்குடியிருப்பில் இருந்துவந்திருக்கும்விடயம்ஒருவிதமா கச் சங்கக்கடை மனேச்சருக்கும் போய்ச்சேர எல்லோரும் ஒருமித்து அவளுக்கு முதலில் நிவாரணத்தைக் கொடுக்க முன்வருகிறார்கள்.
அதுவரை ஒருபத்துப்பேருக்குள்தான்கொடுத்திருப்பார்கள். அதற்குள் இப்போதுவந்த அவளுக்குக்கொடுக்கப்பட்டு, அங் கிருந்த அண்ணன்களால் தூக்கிச் சைக்கிளில் வைத்து, புய லடித்தாலும் விழாத மாதிரிக் கட்டியும்
விட்டார்கள். நான்கு மணிக்கெல்லாம் அவள் அதே பாதை யால் வீடு வந்துவிடுவாள். எவ்வளவு அன்பும் அக்கறையும் ஒற்றுமையும் அங்கே நிறைந்திருந்தன என்பது இப்போது நினைத்தாலும்
ஆச்சரியப்படுவதான ஒரு விடயமே.
இப்போதுஎங்கேயும்அந்தஅன்னியோன்யமானமனநிலை கொண்ட உள்ளங்களைக் காணவே முடிவதில்லை அவ ளால். தனிமையும் வெறுமையும் வாட்டும் பொழுதுகளை அப்படியான அன்புள்ளங்கள்இருக்கும்சூழலில்வாழ்ந்திருந் தால்துயர்திண்றுதீர்க்காதே என்னை என அவள் ஆதங்கப் படுவதுண்டு.
அந்தப் பாதுகாப்பான சூழல் இங்கேயும் இருந்தால், சுதந்திர மான நடமாட்டம், சௌகரியமான பயமற்ற வாழ்வியல் வாழலாமேஎனநினைப்பதும்வருந்துவதும்அவள்வழமை. இன்றும் அந்த ரம்மியமான நினைவுகள் துரத்த மாலா அப் படியே உறங்கிப்போனாள். வீட்டு வாசலில் ஓட்டோ வந்து நிற்கும் சந்தம் கேட்டுச் சுதாகரித்துக் கொண்டவள்,
"அம்மா...!' ' என்றபடி ஓடிவந்த மகனை அணைத்துக் கொள்கிறார்.

சிறுகதை



தெல்லிப்பழையூர்
தி. சிதம்பர பாரதி

உதயனூடாக வளர்ந்து வரும் சிறுகதையாளரான திருச்செந்திநாதன் சிதம்பர பாரதி, கவிதைகளிலும் ஆர்வம் உள்ளவர். பதுளையிலுள்ள ஊவா – வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தில் தேயிலைத் தொழில்நுட்பமும் பெறுமதி சேர்ப்பும் கற்கை நெறியைப் பயின்று வருகிறார்.



முதல் முதலில் தவறவிட்டபோது...

வளவு முழுவதும் காரிருள் வியாபித்திருந்தது. ஆங்காங்கெ நின்ற தென்னை மரங்களும் கோரமான தோற்றமாகிவிட்டிருந்தன. இடையிடையே அழுகைகளும் விம்மல்களும். பானுவானத்தைவெறித்தபடிபடுத்திருந்தாள். அவள் ஒருபோதும் நினைத்ததில்லை நட்டநடு இராத்திரி மண் தரையில் இப்படிப் படுப்பேன் என்று. பெரியவர், சிறியவர், ஆண், பெண் எந்த பேதமும் இன்றி மக்கள் கும்பலாகி விட்டிருந்தார்கள். எல்லாமேகனவுபோல்நடந்தாகிப்போனது...

மூன்று மாதம் முதல் வரை பானுவின் வாழ்க்கை நன்றாய்த்தான் போய்க்கொண்டிருந்தது. அழகும் அன்பும் நிறைந்த அம்மா, கண்டிப்போடு அக்கறையையும் சேர்த்துத் தரும் அப்பா. குறும்போடு சண்டைபோடும் அக்கா. இவள் தான் செல்லப் பிள்ளை. வசதியென்று இல்லாவிட்டாலும் சந்தோசம் வீட்டை நிரப்பியிருந்தது. அம்மா, அப்பாவின் கச்சேரி வேலைக்காக அரச விடுதி எல்லா வசதிகளோடும். அதுவும் பிரதான வீதியோடு. நினைத்தவுடன் எல்லாமே கிடைத்துவிடும். அருகருகாய்க் கடைகள் பாடசாலை கூடத் தூரமில்லை.

போர் நடக்கும் பிரதேசம் என்பதால் இடையிடையே கேட்கும் குண்டுச் சத்தங்களும் செல்லடிகளும் விமானக் குண்டு வீச்சுக்களும் தான் ஞாபகம் வரும். மற்றபடி அற்புதமான வாழ்க்கை அனுபவம் தரும் இடம் அது.

ஒரு நாள் பானு பாடசாலையில் இருந்தபோது பேரிரைச்சல் சத்தம் ஒன்று கேட்டது. ஆசிரியர்கள், மாணவர்கள் எல்லோரும் பெரும் கூச்சலோடு அங்கும் இங்குமாய் ஓடினார்கள். ஆரம்ப நாள்களில் எப்போதாவது தான் இரைச்சல் கேட்கும். நாளடைவில் அது நாளுக்கென்றானபோது பதுங்கு குழிகள் பாடசாலைக்குள் முளைத்தன.

ஊரில் உள்ள மக்கள் தயாரானது மாதிரிப் பள்ளிக்கூடங்களும் போரை எதிர்கொள்ளத் தயாராகி விட்டன. சாதாரணமான இரைச்சல்கள் மட்டுமென்றால் யாரும் பதுங்கு குழிகளை பிரதானப்படுத்துவதில்லை. வழமைக்கு மாறாக ஒரு நாள் இரைச்சலோடு பெரும் இடிச்சத்தம். அதுவும் மிக அருகில். ஆசிரியர் தள்ளிய தள்ளில் நிலத்தோடு விழுந்தாள் பானு. நிலத்தோடு விழுந்தால் ஆபத்துக் குறைவு. அன்று அவளும் சற்றுப் பயந்துதான் போனாள். அதுவே நித்தம் நடக்கத் தொடங்கியது. போர் தீவிரமடையத் தொடங்கியதை உணர முடிந்தது. பாடசாலைக்கான மாணவர் வருகை அருகி அருகி ஐந்தாகிப் போனது. செல் தாக்குதல், விமானக் குண்டு வீச்சுக்கள் ஊரவர்கள் எல்லாம் மூட்டைகளைக் கட்டி இடம்பெயரத் தொடங்கியபோது இரைச்சல்களும் வெடிச்சத்தங்களும் ஒரே நாளில் பலமுறையாகிப் போயின... வாழ்விடங்கள் சிதறத் தொடங்கின...

மனம் முழுவதும் விரக்தியாக வீட்டுச் சாமான்களை மூட்டை கட்டி விசுவமடுவுக்குப் போனபோது பானுவின் அக்காவுக்கு சாதாரண தரப் பரீட்சை கிட்டிவிடடிருந்தது. பாதிச் சுவருக்குச் சாறிகளால் மறைப்புக் கட்டி, அறையாக மாற்றி பானு, அக்கா, அம்மா, அப்பா என எல்லோர் சகல தேவைகளும் அதனுள்ளே அடங்கிப்போயின. படிப்பதற்கு மெழுகுதிரியே கதியானது. பாடசாலை மதிய நேரமானது. பானுவுக்கு அதுதான் ஒரு சந்தோசம். என்னதான் வேறு இடம் சென்றாலும் அதே பாடசாலை. அதுவும் பாடசாலை போவதே ஒரு சுகம்தான். அவள் பள்ளிக்கெனவே ஒரு பஸ் எல்லா இடங்களுக்கும் போய் ஏத்தி வரும். அதில் சண்டைகள், அலட்டல்கள் என ஜொலியாய்த்தான் போனது. அது கூட நீடிக்கவேயில்லை. மீண்டும் மூட்டைகளைக் கட்டத்தொடங்கினார்கள். சுதந்திர புரம் போனபோது அந்த அரைச் சுவர்கூடக் கிடைக்கவில்லை. வெறும் வளவு மட்டும்தான். வீட்டை விட அத்தியவசியமாகி விட்டிருந்த ஒன்று பதுங்கு குழிதான். இடத்துக்கிடம் பதுங்கு குழியமைப்பு காசுகளைக் கரைத்துக்கொண்டிருந்தது. ஆனால், அந்த நிமிடம் உயிர் என்பது மட்டுமே முக்கியமாகி இருந்தது. பாடசாலை என்பதும் எட்டாக் கனிதான். சுதந்திர புரத்தில் இருந்து மூட்டைகளைக் கட்டியபோது போவதற்கு வாகனங்கள் கூட இருக்கவில்லை. பானு ஒரு சைக்கிள், அக்கா ஒரு சைக்கிள், அப்பா மோட்டார் சைக்கிள். ஆளுக்கு ஒரு மூட்டை. மூட்டைகளோடு பதினாழு கிலோ மீற்றர் தூர நடைபவனி முடிவில் தேவி புரத்தில் ஒரு வெறும் வளவு கிடைத்தது. அங்கும் பதுங்கு குழிகள், தறப்பாள் கொட்டகைகள் என அதே பல்லவிதான். மூட்டைகளின் எண்ணிக்கைகளும் குறைந்து குறைந்து இரண்டொண்றாக மாறின.

தேவிபுரத்திலிருந்து இரணைப்பாலை போய் பதுங்குகுழி அமைக்கத் தொடங்குகையிலே மீண்டும் மூட்டை மாத்தளனுக்கு மாற்றப்பட்டது. மாத்தளன் விசித்திரமான அனுபவம்தான். பானுவுக்கும். கடற்கரைவெளி. அடுக்கடுக்கான தறப்பாள் கொட்டகைகள், இரண்டு பெரல்கள் வைத்து உருவான கிணறு முழுக்குடும்பங்களுக்கும் கதியாகிப் போனது. இருந்தது இரண்டு மலசலகூடங்கள். பாதிப்பேர் அதிலும் மீதிப்பேர் கடற்கரையிலுமாய்ப் போனது. பானுவின் அம்மா பொதுவாகவே நான்கு மணிக்கு எழுந்துவிடுவார். பானுவையும் அக்காவையும் எழுப்பி மலசலகூடம், குளியல் எல்லாம் ஐந்து மணிக்கு முடிந்து விடும். எட்டு மணிக்குளியல்காரர்களின் கதி அதோ கதிதான். வரிசை நீண்டுவிடும்.

நாளாக, நாளாகப் பதுங்கு குழியே வாழ்க்கையானது.

வெடிச் சத்தம் இடிச் சத்தம்போலானது. காதுகளுக்கு விடுதலையற்றுப் போனது. வழமைக்கு மாறாக அன்று வெடிச்சத்தம் முழுதாய் ஓய்வுக்குப் போனதால், அம்மா, அப்பா, பானு, அக்கா எல்லோரும் பானுவின் அன்ரியைப் பார்க்கச் சென்றுவிட்டனர். இரவாகி வர முடியாது போனதால். எல்லோரும் அங்கேயே.

சுமார் இரண்டு முப்பதுமணிபோல வெடிச்சத்தம் சராமாரியாகத் தொடங்கியது. இடைவிடாது மிக அருகில். பதுங்கு குழிக்குள் இருக்க இடமின்றி ஆட்கள் சிதறினர். பானுவின் மனது பட படக்கத் தொடங்கியது. இருளில் அக்கா, அம்மா, அப்பாவைத் தேடுவதற்கிடையில் அவளை அன்ரி ஒரு பக்கம் இழுத்துப்போனார். "அப்பா, அம்மா, அக்கா" என்று அவள் திமிற அன்ரி அவளைச் சமாதானப் படுத்தினாள்.

"பொறு பொறு அவை எங்கை போனவை பாப்பம்" என்றார். ஒரு மணல் மூட்டைக்கருகே அன்ரியும் அவளும் பதுங்கினர். அவளின் அனுமதியின்றிக் கண்கள் குளமாகின. சூரியன் உச்சிக்கு வந்தபோதுகூட சத்தம் நிற்கவில்லை. அந்தி சாயும் நேரம் சத்தம் முழுதாய் அற்றுப்போயிருந்தது. அவலோடு வெளியில் வந்தாள் பானு. தரை எங்கும் துப்பாக்கித் தோட்டாக்களின் கோதுகள். வீதியில் ராணுவத்தினர் அக்கடுக்காய் நின்றிருந்தனர். அம்மா, அப்பா, அக்கா நினைவு அவளைப்போட்டு வாட்டியெடுத்தது. ஒரு வழியுமின்றிக் கையில் அகப்பட்ட பையைத் தூக்கிக் கொண்டு நடந்தாள்.

அப்பா நண்பருக்கு மகன், மருமகள், இரு பேரப்பிள்ளைகள். அவர்களோடு இவள். அதிலும் கொடுமை அவர்களின் பிள்ளை ஒன்று இரண்டு வயது. மற்றது பிறந்து பத்தே நாள். அம்மா, அப்பா, அக்காவைச் சுற்றியே பானுவின் மனம் பறந்துகொண்டிருந்தது. எங்கிருக்கிறார்கள்? என்ன ஆனார்கள்? என்ற கேள்விகள் மனதைப் பிசைத்தெடுத்தன. இடையிடையே கண்களைத் துடைத்தபடிதான் நடக்கவேண்டியிருந்தது. ஆரம்பத்தில் அவள் தன் பையுடன் தன்பாட்டுக்கு நடந்து வந்தாள். சிறிது தூரம் சென்றதும் ஆண்களும் பெண்களும் இரு பிரிவாக்கப்பட்டார்கள். வேறு வழியின்றி அந்தப் பச்சைக் குழந்தை இவள் வசமானது. கைகள் நடுங்கத் தொடங்கின. பொதுவாகப் பானுவின் அம்மா சிறு பிள்ளைகளைத்தூக்க அனுமதிப்பதில்லை. அவள் ஒழுங்காகப் பிடிக்க மாட்டாள் என்பது அவள் எண்ணம். அருகில் அம்மா இல்லாதது ஏதோ ஒரு வெறுமையாகப் பானுவை ஆட்டிப் படைத்தது. கால்கள் வலித்தன. ஆனால், வேறு வழியே இல்லாமல் நடந்தே ஆகவேண்டும். கால்கள் ஒன்றுடன் ஒன்று பின்னத் தொடங்கின. கால்களில் ஏதோ தட்டுப்படக் குனிந்தாள். ஒரு கணம் இதயம் துடிக்க மறந்தது. ஒரு சிறவனின் உடல் கறுத்து வாய் பிளந்தபடி. இலையான்கள் சுற்றி வட்டமிட்டன. என்ன வாழ்க்கை இது. யார் மகனோ. அவன் அம்மா எப்படி ஒரு மனநிலையில் அவன் உடலை விட்டுச் சென்றிருப்பாள்...

நேரம் மட்டும் கரைந்துகொண்டே போனது.

"பானு பானு"

கனவிலிருந்து நிஜத்துக்குள் வருவது போன்றிருந்தது. நினைவுகளில் மூழ்கியிருந்தவளுக்கு விழிந்தது. கூடத் தெரியவில்லை. அந்த அக்காதான் கூப்பிட்டார். மூன்று நாள்களாக உணவில்லை. வயிறுமட பசியை மறந்திருந்தது. அவளுக்கு அது கஸ்ரமாய் இருக்கவில்லை.

"பானு கொஞ்சத்தூரம் தானாம் நடக்கவேணும் வாங்கோ"

அந்த அக்கா அவளைச் சுயத்துக்குக் கொண்டு வந்தாள்.

"சரி அக்கா"

பைகளை எடுத்துக் கொழுவிக் கொண்டாள். மீண்டும் அந்தக் குழந்தை இவள் கைவசமானது. ஓரிடத்தில் உணவுப் பைகளை இராணுவத்தினர் தூக்கி வீசிக்கொண்டிருக்க மக்கள் அடிபட்டு அதைப் பிடித்துக்

முதல் முதலில்...

கொண்டிருந்தார்கள். கையில் குழந்தையோடு அங்குபோய் என்ன செய்வது. மனதுக்குள் நினைத்துக் கொண்டாள் பானு.

சிறிது தூரத்தில் அப்பாவின் நண்பரும் மகனும் இவர்களோடு இணைந்து கொண்டார்கள். ஆனால், அவரின் மகனின் நாரியில் இரத்தம் வழிந்தது. அவளுக்கு முன் அந்த அக்கா முந்திக் கொண்டாள்.

"என்னப்பா இது?"

"சின்னதாப் பீஸ் பட்டுட்டு"

"ஐயோ மருந்து ஏதும் கட்டுங்கோவன்"

"இஞ்சை எங்கையப்பா கட்டுறது. பொறும் பாப்பம்"

அந்த அண்ணாவின் குரலில் கடுப்புத் தெரிந்தது.

"பானு தண்ணீ குடுக்கினமாம்... வாங்கிக் குடிச்சிட்டு வரவம் வாரும்"

பிள்ளையை வாங்கி மனிசனிடம் கொடுத்தபடி கூறினாள் அக்கா.

"சரி அக்க வாங்கோ போவம்' பானுவுக்கும் தாகமாய் இருந்ததால் இருவரும் போனார்கள். அங்கு போய்ப் பார்த்ததும் தாகம்கூடப் போய்விட்டது அவளுக்கு... தறப்பாளால் ஒரு தொட்டி செய்த அதற்குள் நீரை நீரப்பி அதற்குள் சப்பாத்துக்கால்களுடன் நின்றுகொண்டிருந்த இராணுவத்தினர் நீரை அள்ளி அள்ளி எடுத்துக் கொடுத்துக்கொண்டிருந்தனர்.

பானுவின் முகமாற்றத்தைக் கண்ட அந்த அக்கா சொன்னார், "இப்ப உதுகளை எல்லாம் பாக்க ஏலாது வாரும்" உண்மைதான் மூன்று நாள்களாச் சொட்டுத் தண்ணிகூட இல்லை. நாவெல்லாம் வறண்டு விட்டது. என்ன செய்ய? மனதைத் தான் தேற்ற வேண்டும் என்று நினைத்தபடி அந்தச் சப்பாத்துக்கால்களிடமிருந்து நீரை வாங்கிக் குடித்தார்கள். முன்னொரு நாளில் தண்ணீர் டம்ளரில் அக்கா வாய் வைத்துக் குடித்ததுக்கு இவள்போட்ட சண்டையை நினைக்க இப்போது சிரிப்புத்தான் வந்தது.

"கொஞ்சத்தூரம் கொஞ்சத்தூரம்" என்று சொல்லிச் சொல்லியே நடக்கும் தூரமும் நீண்டு கொண்டே போனது. இறுதியில் ஒரு மாதிரியாக ஏ9 பிரதான வீதியை அடைந்தார்கள். எல்லா இடத்துப் பேருந்துகளையும் குவித்தால்போல ஒரு தொடராகப் பேருந்துகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. பானு போவதற்குள்ளேயே தெரு நீளத்துக்குப் பேருந்துகள் ஆக்களால் நிறைந்து விட்டிருந்தன.

அந்த அக்காவால் சற்றும் நடக்க இயலவில்லை. கால்கள் துவண்டு மயங்கும் நிலைக்குச் சென்று விட்டார். அதனால் அதனைப் பார்த்த பெண் இராணுவத்தில் ஒருத்தி அம்புலன்சுக்கு ஏற்பாடு செய்தார். அவர் கணவர், பிள்ளைகள் எல்லோரும் மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டார்கள். பானுவும் அங்கிளுமாய்த் தனித்துப் போனார்கள். ஒருவாறு பேருந்து ஒன்றில் ஏறிச் சனநெரிசலுக்குள் இறுகிப் போயினர். பேருந்தின் வேகம் ஆமை வேகத்தில் இருந்தாலும் பானுவின் மனம் முயல் வேகத்தில் ஓடிக் கொண்டிருந்தது.

அக்கா என்ன செய்கிறாளோ? அம்மா, அப்பா எங்கே இருக்கிறார்களோ? புறப்பட்டிருப்பார்களோ? எங்கே போய்த் தேடுவது? மனம் முழுதும் கேள்விகள் மட்டும்தான். நடு இரவானது. பேருந்தும் ஓரிடத்தில் போய் நின்றுகொண்டது. பேருந்தை விட்டிறங்கி அங்கிளைத் தேடினாள். அவர் இரண்டு பேருந்துகளுக்கு இடையே தார் வீதியில் படுத்திருந்தார். பானுவுக்குக் காய்ச்சல் அடிப்பதுபோல் இருந்தது. அவர் அருகிலே படுத்துக் கொண்டாள்.

அதிகாலை நேரம் உணவுப் பொதிகளைக் கொண்டுவந்து கொடுத்தார்கள். அங்கிளின் அறிவுரைக்கிணங்க ஒரு பார்சலிலேயே இருவரும் உண்டார்கள். ஒரு பார்சல் பத்திரப்படுத்தப்பட்டது. மூன்று நாள்கள் சாப்பாடு இல்லாததால் அதுவே அதிகமானதாகத்தான் இருந்தது. பானு சாப்பிட்ட அடுத்தநொடியே சாப்பாடு முழுதும் வாய் வழியே நிலத்தை வந்தடைந்தது. காய்ச்சலின் உக்கிரம் கூடியிருந்தது. காய்ச்சலின் வெப்பம் கண்களைக் கறங்கடித்திருந்தாலும் அம்மாவின் நினைவுகளால் வந்த கண்ணீர் கன்னங்களைத் தொட்டது.

மறுநாள் பதிவுகள், விசாரணைகளுக்குப் பின் இரண்டு குடும்பங்களுக்கும் ஒன்றாகக் கொட்டகை வழங்கப்பட்டது.

காட்டை வெட்டி வெறும் வளவாக்கியிருந்தார்கள். கண்ணுக்கு எட்டிய தூரம் வரை வெட்டை வெளியாக் கிடந்தது. தறப்பாளால் ஆனா கொட்டகைகள் நிரை நிரையாய் அடுக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு கொட்டகைக்கு இலக்கம் வேறு...

ஓடிச் சென்று அவர்களுக்குரிய கொட்டகைக்குள் தனது பையை வைத்த பானு, பதிவகம் அருகாய் வந்து நின்று கொண்டாள்... வந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு பேருந்துகளையும் அவள் விழிகள் தேடத் தொடங்கின... அம்மா, அப்பா, அக்கா வருவார்களா?



கவிதை



மாதவி உமாசுத சர்மா

கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த இவர், கொக்குவில் இந்துக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவி. பாடசாலை மட்டத்தில் பாட்டு, பேச்சு, விவாதம், கவிதை போன்றவற்றில் ஈடுபாடு கொண்டு பரிசில்கள் பெற்றுள்ளார்.



இயற்கை எழுதிய
தண்ணீர்க் கவிதை நான்
மண்ணின் மனக்குரலின்
திரவப்பதிவு இது!
புவிக்கோளத்தின் புதுமை
யுகங்களைக் கடந்து நிற்கும்
அகிலத்தின் ஆயுள் ரேகை
வெளியில் மிதக்கும் வெளிச்சப்புதையல்
எழுத்திடத்துடிக்கும் என் அலைகள்
குளிர் திவாலைகள்
உயிர்களைப் பிரசவித்திட
மண் மங்கை கருவுற்றபோது
நான் உயிரணுக்கள்
ஊறி வந்த தாய்ப்பால் நான்!
பிரபஞ்சமொழியில் பேசியதெல்லாம்
புரியாமல் போனதால்
உங்கள் உள்ளூர் மொழியில்
உரைத்திட வந்தேன்

ஜீவநாடியாகத் செல்லத் துடித்து
காட்டாறாகக் காலம்
கழித்திருந்தேன்
கரைகள் இரண்டைக்
காவலுக்கு அனுப்பினீர்கள்
கௌரவம் வந்ததாய்க் கர்வப்பட்டால்....
என்னை ஆங்கங்கே
அணைச்சிறைகளுக்குள்
அடைத்து வைக்கிறீர்கள்
என் பார்வை முழுவதும்
பள்ளங்களையே பார்த்திருக்க
மேடுகளைக் கண்டு
மிரண்டு போகிறேன்
அருவியாய்ப் பார்த்து
அவ்வப்போது குதிக்கிறேன்
வரும் வழிதோறும் பச்சை
கம்பளமாய் விரிகின்றேன்
உங்கள் கால்களைத் தழுவ
பூக்களைப் பரிசாகச்
சுமந்து வருகின்றேன்
நீங்களோ முட்களையே
முகத்தில் வீசி எறிகின்றீர்கள்
உங்கள் அழுக்குகளை
அகற்றிட வந்த என்னை
அசிங்கங்களால் அழுக்காகி விட்டீர்கள்
என் உடன் பிறப்புகளின் சந்திப்புகளில்
பாதையில் நேர்ந்த துயரங்களைச் சொல்லி
தேம்பி அழுவதால் தான் கடல்நீர்க்
கண்ணீரால் கரித்து உப்பு நீராய் உவர்த்துப் போனது
சமுத்திரச் சங்கமம் எனும் சங்கற்பத்தில்
சமரசங்களுக்கு சம்மதிப்பதில்லை
இலட்சியங்களை அடகு வைத்து விட்டு
அடக்குமுறைகளுக்கு அடிபணிவதில்லை
தாமதம் ஆகலாம்
ஆனால் தவிர்க்க முடியாது
எங்களைச் சூரிய நெருப்புச் சுட்டெரிக்கிறது
மேகச் சிறகுகளைக் கட்டிக்கொண்டு
மேலே பறந்து மழைத்துளியாக மறுபடி உயிர்க்கிறோம்
என் கோபத்தைக் காட்டிட அவ்வப்போது குமுறியிருக்கிறேன்
நீங்களோ..... நியாயத்தைத் தள்ளுபடி செய்து விட்டீர்கள்!
தரையோடு தரையாய் தவழ்ந்து கேட்கும் இந்தத் தண்ணீரின்
கோரிக்கைகள் நிராகரிக்கப்படும் என்றால் நான் ஒருநாள் நெருப்பாகக்
கொழுந்து விட்டு நிமிர வேண்டியிருக்கும்!



சிறுகதை



அல்லாரை வடக்கு கொடிகாமத்தைச் சேர்ந்த இவர், ஓய்வு பெற்ற அரச அலுவலர். இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டு முப்பதுக்கும் மேற்பட்ட சிறுகதைகளைப் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் எழுதியுள்ளார்.

சி. காசிப்பிள்ளை

சாதனையாளர்கள்

கடந்த ஆண்டு உயர்தரப்பரீட்சையில் மூன்று 'ஏ' தரச் சித்திகளைப் பெற்றுச் சாதனை படைத்த மாணவர்களைப் பாராட்டுவதற்கு விழா. எமது பகுதிப் பாடசாலையொன்றில் ஆயத்தங்கள் சுறுசுறுப்பாகக் காணப்பட்டன. மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், புத்தி ஜீவிகள் எனப் பல தரப்பட்டவர்களும் அங்கே வந்து கொண்டிருந்தார்கள். இவர்களைக் கண்ட நானும் பொழுது போக்காக அவர்களுள் ஒருவராகக் கலந்து கொண்டேன்.

சற்று நேரத்தில் அலங்கரிக்கப்பட்ட அந்தப் பாடசாலை மண்டபத்தில் முதல்வர் தலைமையில் விழா ஆரம்பமாகியது. முதல்வர் தனது உரையில் இந்தப் பாடசாலையின் வரலாற்றில் கடந்த ஆண்டு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் பலர் சாதனையாளராக இருப்பதை நாம் பாராட்டாமல் இருக்க முடியாதென்றும் இவர்களைப் போலவே இந்த ஆண்டு பரீட்சைக்குத் தோற்றும் உயர்தர, சாதாரண தர, ஐந்தாம் ஆண்டு மாணவர்களும் சாதனை படைக்கக் கூடியதாக அதிக அக்கறை எடுத்துக் கற்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டதுடன் தன்னுரையை முடித்துக்கொண்டார்.

அவரைத் தொடர்ந்து சில ஆசிரியர்களும் புத்தி ஜீவிகளும் உரையாற்றினார்கள். அவர்கள் யாவரும் ஒவ்வொருவருடைய வாழ்க்கையையும் கல்வியே மேம்படுத்துகிறது என்ற கருத்தொலிக்க உரையாற்றினார்கள்.

இதன்பின் அந்தப் பாடசாலை மாணவர்களால் "போதை வேண்டாம்" என்ற நாடகமொன்றை .Nடையேற்றினார்கள். அரை மணி நேரத்துக்குள் அற்புதமான உண்மைகளை அங்கிருந்தோருக்குத் தெளிவுபடுத்தினார்கள். போதைப் பொருள்களினாலும் மதுபானங்களினாலும் மனிதர்களின் அறிவு, அழகு, ஆரோக்கியம் எனபன கெட்டு இள வயதில் சாவடையும் நிலைக்கு ஆளாக வேண்டி வருமென்ற யதார்த்தத்தை நாடகத்தின் மூலம் காண்பித்தார்கள்.

மேலும் அந்த நாடகம் இன்றைய மாணவர்களை எவ்வித போதைப் பொருள்களையும் தொட்டுக் கூடப் பார்க்க வேண்டாமென்ற எச்சரிக்கையையும் விடுத்தது. இந்த எச்சரிக்கையை மீறினால் கல்வி போகும். வாழ்க்கையும் கேள்விக்குறியாகும். இப்படியான நிலையில் எதையுமே சாதிக்க முடியாததென்ற உண்மையை அந்த நாடகம் அறிவுறுத்தியது. வலயக் கல்வியதிகாரியான பெண்ணெருவர் உரையாற்றத் தொடங்கினார். இனிமையான குரலில் அந்தப் பெண்ணின் உரையிருந்ததால் மாணவர்களும் மற்றையோரும் ஆர்வத்துடன் செவிமடுத்துக் கொண்டிருந்தனர்.

'எந்த ஆண்டைச் சேர்ந்த மாணவர்களாயினும் கல்வி கற்பதை ஒரு சுமையாக எண்ணக் கூடாது. கரும்பைக் கடித்துச் சுவைக்க விரும்புவது போல கல்வி கற்பதிலும் ஆவலிருக்கவேண்டும். மகிழ்வான மனநிலையுடன் தினமும் உள்வாங்கிக்கொள்ளும் கல்விச் செயற்பாடுகளே பசுமரத்தாணிபோல மனதில் பதியும். கல்வி கற்கும் காலத்தில் தினமும் திரைப்படங்களைப் பார்த்தல், நண்பர்களுடன் வீண்பொழுது போக்குதல் போன்றவற்றையும் குறைத்தல் நன்று.

இதைவிட மாணவர்களின் கல்வியையும் அவர்களின் வாழ்க்கையையும் படுகுழியுள் தள்ளும் கருவியாகக் கைபேசிகள் மாறலாமென ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். இதில் உண்மை இல்லாமலில்லை. இதனால் மாணவர்கள் இதன் பாவனையை விலக்கிக்கொள்வதே கல்விக்கும் வாழ்வுக்கும் சிறப்பாக அமையுமென நம்புகிறேன்.

இப்படியே மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகப் பல கூறலாம். சுருக்கமாகச் சொன்னால் ஒவ்வொரு மாணவர்களுக்கும் படிக்க வேண்டுமென்ற தாகம் ஏற்பட்டு அதைத் தீர்ப்பதற்காகத் தினமும் பாடசாலைக்குப் போக வேண்டும் அங்கு ஆசிரியர்கள் கற்பிப்பதை மனதிலிருந்தி அவர்களின் வழிகாட்டலின்படி நடந்தால் சாதனையாளராக மாறலாம். சாதனையென்பது பலவகையாகக் காணப்படுகின்றது. எவ்வித சாதனையென்றாலும் அதை எவருமே என்றுமே மறப்பற்கில்லை. இதை அறிந்து கொள்ள உண்மையாக நடந்த ஒரு கதையை உங்களுக்குச் சொல்லுகிறேன்' என்ற வலயக்கல்வி அதிகாரியான அந்தப் பெண் பேச்சைத் தொடர்ந்தனர்.

'தென்மராட்சியில் கச்சாய் என்ற பெயருடன் கடற்கரையோரமாக ஒரு கிராமமுள்ளது. கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டுக்கு முன் இந்தக் கிராமத்திலுள்ள பலர் கட்டுமரங்கள் மூலம் கடல் கடந்துபோய் மறுபக்கத்திலிருக்கும் பரந்த பிரதேசமான பூநகரி என்ற இடத்தில் நெற்செய்கையில் ஈடுபடுவது வழக்கமாகும்.

ஒருதடவை ஒரு விவசாயிக்கு என்றுமேயில்லாதவாறு பெருமளவிலான நெல் விளைச்சல் காணப்படவே மனம் மகிழ்ந்த அந்த விவசாய உரிய காலத்தில் அறுவடை செய்து பல கட்டு மரங்களில் ஏற்றி கச்சாய்க் கடற்கரைக்கு கொண்டு வந்து சேர்த்தார். கடற்கரையிலிருந்து அரைக் கிலோ மீற்றர் தூரத்திலேயே அவர்களின் வீடு இருந்தது.

அந்தக் காலத்தில் பொருள்களை ஏற்றி இறக்குவதற்கு மாட்டு வண்டில் மட்டும்தான் பயன்பாட்டிலிருந்து அந்த விவசாயியிடமிருந்த வண்டிலின் அச்சு உடைந்து போயிருந்ததால் வேறு வண்டில்களைத் தேடியலைந்தார். அறுவடை காலமானதால் ஒன்றுமே கிடைக்கவில்லை.

என்ன செய்யலாம்? என்ற யோசனையுடன் நின்றபோது வானத்தில் கருமேகங்கள் ஓடிக்கொண்டிருந்தன. மேற்குத் திசையில் மின்னல் கீற்றுகளும் தோன்றி மறைந்தன. கடற்சேறு பொங்கியதால் காற்றுடன் ஒருவித நாற்றமும் பரவியது. இடையிடையே சூரிய ஒளி. தாழ்நிலத்தில் குடியிருந்த எறும்புகள் தமது முட்டைகளை வாயிற் கௌவிக்கொண்டு மேட்டு நிலத்துக்கு இடம்பெயரத் தும்பிகளும் வட்டமிட்டுப் பறந்தன.

இதையெலலாம் கவனித்த அந்த விவசாயி மழை வரப்போகிறது என்பதை உணர்ந்து மிகுந்த மன வேதனையுடன் தவித்துக் கொண்டு அங்குமிங்குமாக அலைந்தான். இதைக்கண்ட இவரின் ஒரேயொரு மகனான சின்னத்தம்பி தனது மண்வெட்டியுடன் கடற்கரைக்கு விரைந்தான். கடற்கரையிலிருந்து வீடுவரை ஒரு வாய்க்காலை குறுகிய நேரத்தில் வெட்டி அதனூடாகக் கட்டுமரங்களை இழுந்து வந்து நெல்மூட்டைகளை வீட்டுக்குக்கொண்டு வந்து சேர்த்தான். இதுபோன்ற பல சாதனைகளைச் சின்னத்தம்பி செய்ததாக அந்தப் பகுதி மக்கள் மூலம் அறியக் கூடியதாக உள்ளது.

இவ்வாறு பல சாதனைகளைச் செய்ததனால் இவரை நீங்கள் புராணக் கதைகளில் வரும் நாயகன் என்று நினைத்து விடாதீர்கள். இவரொரு பலசாலியான சாதாரண மனிதனென்றே சொல்லப்படுகிறது. இவரின் மனோசக்தியும் உடற்பலமுமே இந்தச் சாதனைகளுக்குக் காரணமாக இருந்தன.

இந்தக் கதையிலிருந்து கல்வியின் மூலமே சாதனையாளராக வேண்டுமென்றில்லை. இயல்புக்கேற்றவாறு விடாமுயற்சியுடன் செயற்பட்டால் பல்வேறு துறைகளிலும் பலர் சாதனையாளராகிப் புகழடையலாம். நாமெல்லோரும் சாதனைகள் மூலம் புகழடைய வேண்டுமென்பதையே திருவள்ளுவரும்"தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று"என்று கூறியுள்ளார்.



இந்தக் குறளிலிருந்து திருவள்ளுவர் காலத்திலும் சாதனையாளர்கள் பாராட்டப்பட்டிருக்கிறார்கள் என்பதை அறியக்கூடியதாக உள்ளது. இன்றைய சமுதாயத்திலும் சாதனையாளர்கள் மதிப்புக்குரியவர்களாக இருப்பதுடன் அவர்களின் புகழ் என்றுமே சாவடையாமல் எல்லோர் மனங்களிலும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இதனால் மாணவர்கள் மட்டுமல்ல ஏனையோரும் சாதனையாளர்களாகத் திகழ முயற்சிக்க வேண்டும்.' எனக் கேட்டுக்கொண்டு தன்னுரையை முடித்தார் வலயக் கல்வியதிகாரியான அந்தப் பெண்மணி.

இதன் பின் சாதனை படைத்த மாணவர்களுக்குப் பெறுமதியான பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதுடன் நன்றியுரையோடு விழா முடிவடைய அங்கிருந்தோர் யாவரும் எப்படித் தாங்களும் சாதனையாளராக மாறலாம் என்ற எண்ணத்துடனேயே மண்டபத்தை விட்டு வெளியேறினார்கள். அவர்களுடன் நானும் சேர்ந்து நடக்க எனது மனமோ எனக்கு எண்பது வயதை எட்டிப் பார்க்கும் நிலையிலும் ஏதாவதொரு சாதனை படைத்து இறவாப் புகழடைய வேண்டுமெனத் துடித்தது.


இங்கிருந்து
எங்கே?

ஒவ்வொரு கணத்தையும்
காணிக்கையாக்கி
இருட்டுக்குள் இருந்து
வெளிச்சத்தை பாய்ச்சி
அறியப்படாத அற்புதாய்கள்
நடந்த நாட்கள்

தோளில் சுமந்த
சிலுவைகளோடு
பேதமற்ற பெரு வெளியில்
ஒரு பாவமும் அறியாது
தீராத கண்ணீர் கசிவுடன்
கால்கள் வலிக்க - வலிக்க
நடந்த நாட்கள்

கரிய முகில்களால் சூழப்பட்டு
ஆகாயத்தை பிளந்தெடுத்து
ஆரவாரங்களின் பேரிச்சில்
காற்றில் படரும் நெருப்பாகி
இருளில் கவிந்த நாட்கள்

துயரத்தை சொல்ல முடியாமல்
பிரியமானவர்களை தொலைத்து

அநாதைகளாக - அகதிகளாக
ஏமாற்றப்பட்ட வலிகளின்
வரலாறுகள்
தொடரும் நாட்கள்
இன்னமும் முடிவிலியாக.

கவிதை



டானியல் சௌந்திரன்

நாவாந்துறையைச் சேர்ந்த இவர், நாட்டுக்கூத்துக் கலைஞர் டானியல் பெலிக்கானின் மகன் ஆவார். நாட்டுக்கூத்து, கவிதைத் துறையில் ஈடுபாடு கொண்ட இவர், கவிதைகள், கட்டுரைகளைப் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் எழுதி வருகிறார்.

பொங்கல் பண்டிகை நான்கு நாள் கொண்டாடப்படும்

போகிப்பண்டிகை

பொங்கல் பண்டிகை நான்கு நாள் கொண்டாடப்படும். முதல் நாள் போகிப்பண்டிகை, இரண்டாம் நாள் பொங்கல் திருநாள், மூன்றாம் நாள் மாட்டுப் பொங்கல், நான்காம் நாள் காணும் பொங்கல் இவற்றை விபரமாகப் பார்க்கலாம்.

பொங்கல் திருநாள்

சூரியனை வழிபடும் பண்டிகை இது, பயிர் பச்சைகள் செழிக்கச் சூரியனுடைய உதவி இன்றியமையாதது நோய்களை நீக்கி மக்களுக்கு உடல் நலத்தைக் கொடுப்பவன் சூரியன் ஆவணி, புரட்டாதி மாதங்களில் மழை பெய்ததைமாதத்தில் நாடெங்கும் நெல், கரும்பு, முதலியவை நன்றாக விளைந்திருக்கும் புதிதாக விளைந்த நெல்லை மக்கள் முதலில் கடவுளுக்குப் படைக்க வேண்டும். பிறகுதான் விருந்தினரோடு கூடிக்குலவி மகிழ்ந்து சேர்ந்துண்ண வேண்டும். தாம் விருந்தோடு உண்ணுவது மட்டும் போதாது, தம்மை அண்டியிருப்பவர்வேலைக்காரர்கள் மற்றையோருக்கும் புதிய விளைச்சலில் ஒரு பகுதியைக் கொடுக்க வேண்டும்.

பொங்கல் வழிபாடு

பொங்கல் திருநாளில் சூரியன் உதிப்பதற்கு ஐந்து நாழிகைக்கு முன்னர் அதிகாலையில் மக்கள் நித்திரை விட்டு எழுந்து, நீராடித் தம்மைத் தூய்மைப்படுத்திக் கொள்வர். வீட்டு முற்றத்தில் சாணத்தினால் மெழுகப்பட்ட நீள் சதுர மான பகுதியை வெள்ளை- சிவப்பு நிற மாவினால் அழகிய கோலமிட்டு மண்டபமாக வடிவமைத்துக் கொள்வர் மலைவாழை, கமுகு, கரும்பு மகர தோரணங்கள், மலர்கள் என்பவற்றால் அலங்கரிப்பர் அதனுள் அழகிய கோலங்களையும் கலைத்திறன் மிளிரப் போடுவர் பிள்ளையார் பிடித்து வைத்து குத்துவிளக்கு ஏற்றி பூரண கும்பம் வைத்து பழங்கள், வெற்றிலை பாக்கு, தேங்காய் முதலிய மங்களப் பொருட்களை நிவேதிப்பர் விநாயகனை முதலில் நினைத்து இஷ்டதெய்வங்களைப் பிரார்த்திப்போர் நீரினால் சுத்தம் செய்யப்பட்ட பானையை திருவணையில் வைத்து அதன் வாய்ப்பானையை மஞ்சள் இலை, இஞ்சி, இலை, மாவிலை ஆகியவற்றைப் பொருந்திக்காட்ட பானையின் மேற்புறத்தில் திருநீற்றைக்குழைத்து திரிபுண்டரமாக மூன்று இடங்களில் பூசி, சந்தனம் குங்குமம் திலகமிட்டு பானைக்குள் பசுப்பாலும் நீரும் விட்டு நிரப்பி தூப தீபம் காட்டி, கற்பூர தீபத்தினால் அடுப்பில் நெருப்பை உண்டாக்கிப் பற்றவைத்து கணவனும் மனைவியும் ஒரு மித்த சிந்தையராய் சூரியனை வணங்கி பானையை பக்குவமாய் இருவரும் தம் கைகளால் பற்றிப் பிடித்துத் தூக்கி அடுப்பில் ஏற்றுவர்.

பொங்கலோ பொங்கல்

பானையில் பால் பொங்கி எழும் போது பொங்கலோ பொங்கல் என்று உரத்துக் கூறி மகிழ்வர், தம்முடைய வாழ்வில் இன்பம் பொங்கப்போவதை உணர்த்தும் அறிகுறியாகப்பால் பொங்கி ஓங்கி எழுதலைக் கண்டு அவர்களின் மனமும் பொங்கிப் பூரிக்கும் பால் பொங்கி வடக்கு முகமாக வேனும் ஈசானத்தை நோக்கியேனும் முதலில் அரிந்து வெளித்தள்ளினால் அதனை நன் நிமிர்த்தமாகக்கருதிப் புளகாங்கிதம் கொள்வார். அதன் பின்னர் குடும்பத் தலைவர் புது நெல்லில் குற்றியெடுத்த பச்சரிசியை தம் இரு கைகளாலும் அள்ளி சூரிய பகவனை வழிபட்ட வண்ணம் பானையின் வாய்விளிம்பினைமும் முறை சுற்றி பானையுள் இடுவர். தொடர்ந்து குடும்பத் தலைவி, குடும்பப் பெரியவர்கள், பிள்ளைகள், என்போர் அரிசியைப் பானையில் இடுவர். வெல்லம், கற்கண்டு, நெய், தேன் கருப்பஞ்சாறு, திராட்சை, முந்திரிப்பருப்பு,



பயற்றம்பருப்புஎன்பனவற்றைப்பாலுடன்கலந்துவிட்டுதித்திக்கும் இனியபொங்கலைஆக்குவர். பொங்கிய அமுதினை மூன்று தலை வாழையிலைகளில் படைத்து பழங்கள், கரும்பு, செவ்விளநீர், மலர்கள் முதலியவற்றைக் கொண்டு படை பரவி தேங்காய் உடைத்து வைத்து நீரும் மலரும் கொண்டு அர்ச்சித்து தூபதீபம் காட்டி பக்திகிரத்தையோடு திருமுறைகளைப் பாராயணம் செய்து சூரிய பகவானை வணங்கி வழிபாடு செய்வர்.

மாட்டுப் பொங்கல்

தை மாதம் முதல் நாள் பொங்கல் திருநாள் அடுத்த நாள் மாடுகளை வழிபடும் நாள். இது மாட்டுப்பொங்கல் எனப்படும்.

கோமாதா எங்கள் குலமாதா

பசு, இந்துக்களுக்குத் தெய்வம், காளை சிவபெருமானின் வாகனம். பசுவையும் காளையையும் பலர் பக்தியோடு வழிபட்டு வருகிறார்கள். எருதுகள் விவசாய வேலைகளுக்கும் பயன்படுகின்றன. நல்ல விளைவு கிடைக்க அவையும் விவசாயிகளோடு உழைக்கின்றன. தெய்வத் தன்மை பொருந்திய பசுவையும் தெய்வீகக் காளையையும் எருதையும் பூசிக்கும் திருநாளே மாட்டுப்பொங்கல். திருமால் கிருஷ்ணாவதாரத்தில் மாடுகளை மேய்த்திருக்கிறார். மாடுகளுக் குச் செய்யும் சேவை புண்ணியமானது என்பதை அவர் காட்டியிருக் கிறார். கோக்களைக் காத்து வந்து கண்ணபிரானுக்குக் கோபாலன் என்ற பெயர் சிறப்பாக உள்ளது.

மாடுகளைப் பராமரித்தல்

மாட்டுப்பொங்கல் அன்று எவரும் மாடுகளை மேய்ச்சலுக்கு அனுப் பமாட்டார்கள். தொழுவத்திலேயேஅவற்றைக்குளிப்பாட்டுவார்கள். கொம்புகளுக்கு வர்ணம் தீட்டுவார்கள். கழுத்துக்கு மணிகளைக் கட்டுவார்கள். மலர் மாலைகளைக் கழுத்திலும் கொம்புகளிலும் அணிவார்கள். புதிய ஆடைகளைக் கழுத்தில் கட்டுவார்கள். குங்குமம் மஞ்சள் சந்தனம் முதலியவற்றை மாடுகளின் நெற்றியில் பூசுவார்கள்.

மாலையில் புதுப்பானையில் முன்நாள் செய்து போல பொங்கல் செய்வார்கள். பிறகு மாடுகளுக்குப் பூசை செய்வார்கள். பிள்ளையாரை மஞ்சளிலோ, சாணத்திலோவைத்து அதற்குப் பொங்கலைப் படைப்பார்கள். பிறகு அந்தப் பொங்கலை ஆறவைத்து மாடுகளுக்குக் கொடுப்பார்கள். அதன்பிறகு "பால் பல ஊறுக".... பகடு சிறக்க என்று இறைவனை வேண்டிக்கொள்வார்கள். மாடுகளை வணங்குவார்கள். பின்னர் மாடுகளைக் கட்டிப் போடாமல் சிறிது நேரம் அவை காலாறத் திரிந்து வரும்படி வெளியே அனுப்பி விடுவார்கள். ஒருவர் தோட்டத்திலோ வயலிலோ அன்று மாடுகள் மேய்ந்தாலும் அவற்றை அடித்துத் துரத்த மாட்டார்கள். மாட்டுப்பொங்கலன்று மாடுகளிடம் உழுதல், ஏற்றம் இறைத்தல் வண்டிகளில் கட்டி ஓட்டுதல் முதலிய வேலைகளை எவரும் வாங்க மாட்டார்கள்.

காணும் பொங்கல்

மாட்டுப் பொங்கலுக்கு அடுத்த நாள் காணும் பொங்கல். வயல்களிலும் தோட்டங்களிலும் நல்ல விளைச்சல் இருப்பதை வீட்டிலுள்ள பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் காட்டும் திருநாள் இது.

என்றும் வீட்டோடு இருக்கும் பெண்கள் அன்று புதிய அணிகளை அணிந்து கொள்வார்கள். புதிய புதிய ஆடைகளை உடுத்திக்கொள்வார்கள். கட்டுச்சோறு, பொங்கல் சிற்றுண்டிகள் முதலியவற்றைக் கையில் எடுத்துக்கொள்வார்கள். குழந்தைகளையும் சிறுவர், சிறுமதிகளையும் கூட வைத்துக்கொள்வார்கள். பிறகு எல்லோரையும் குடும்பத்தலைவர் வயல்வெளிகளுக்கு அழைத்துச் செல்வார். பல இடங்களை எல்லோரும் சுற்றிப்பார்ப்பார்கள்.

பிறகு நீர்த்துறை, கோவில், வயல் வெளி போன்ற ஓர் இடத்தில் வட்டமாக உட்கார்ந்து தாங்கள் கொண்டு வந்த பொங்கல் தின்பண்டங்கள் முதலியவற்றைச் சாப்பிடுவார்கள். சாப்பாட்டுக்குப் பிறகும் வயல்வெளிகளைச் சுற்றிப்பார்ப்பார்கள். காணும் பொங்கல் என்பது இதுதான். எல்லோருடைய மனங்களும் வயற்காட்சிகளைக் கண்டு மகிழ்ச்சியினால் பொங்குவதையே காணும் பொங்கல் என்பார்கள்.

கட்டுரை



கொட்டடி நமசிவாய வித்தியாசாலை ஆசிரியராவார். இந்து சமய நிகழ்ச்சிகளில் நேர்முக வர்ணனையாளர், வர்ணனை ஒலிபரப்பாளர். சமயக் கட்டுரைகள், கவிதைகள் எழுதுவதிலும் கவியரங்குளில் பங்குபற்றுதலிலும் ஈடுபாடு உடைய வர்.

காரை எம்.பி. அருளானந்தன்

கவிதை

நடுக்கிணற்றிலே போட்ட கல்லாச்சு...!



கந்தசாமி பேரின்பதாசன்

கந்தபேரின்பம் தீவான், காவலூர்க் கவிஞன்ஆகியபுனைபெயர்களில் எழுதி வருகிறார். ஆங்கில ஆசிரியராகவும் உடற்கல்வி ஆசிரியராகவும், அதிபர் சேவையிலும், உதவிக்கல்விப் பணிப்பாளராகவும் இருந்த இவர், இலகு மொழிநடையில் கவிதைகள் எழுதுவதில் கைதேர்ந்தவர். கவிதைத் தொகுப்புக்கள் பலவற்றை வெளியிட்டுமிருக்கிறார்.

உள்ளூராட்சித் தேர்தல் சடுகுடு
ஊர் மக்களை ஏமாற்றும் தேர்தல் சடுகுடு
அடுத்திந்தத் தேர்தல் எதிர் வரும் போது
அடிக்கடி வேட்பாளர் கூட்டணிமாறும்
'பொடுக்'கெனப்புதிய கட்சிகள் தோன்றும்
'போஸ்டர்கள்' வீதிப் போஸ்ட எல்லாம் 'தூங்கும்'
போத்தல்கள் உடையும், நோட்டு கை மற்றும்
காக்காக கூட்டங்கள் காசெனக் கத்தும்
பணநதி ஓடும் புதுப்பாசங்கள் தோன்றும்
பரவசமான பெருவிழாக் கோலம்

காரில் இருந்து இறங்காதகால்கள்
சேரி, சேரியாய் 'ஓட்டுக்காய்' அலையும்
கட்சித் தாவல்கள் கனமாயநடக்கும்
பெட்டி பெட்டியாய், வாக்குறுதிகள் குவியும்
சண்டைகள் நடக்கும், மண்டைகள் உடையும்
சரமாரியான பிரசாரம வெடிகள்
'உள்ளூராட்சித் தேர்தலுக்காக
உண்மைகள் மறைந்து பொய்அரசாளும்

அந்நியர் எல்லாம் வீட்டுக்கு வருவர்
புன்னகையோடு யோடு (கூழை) க்கும்பிடுபோடுவர்
பந்தம் பிடிப்போர் பந்தா ஒருபுறம்
'அம்மா, ஐயா, அண்ணா,
தம்பி அடுக்கு மொழியிலே
அன்பாய் அழைப்பார்
எங்கள் அண்ணன் சின்னத்துக்கே
உங்கள் வாக்கைப் போடுங்கள் என்பர்
உங்கள் வாக்கை நீங்கள் போட்டால்
எங்கள் வாக்குத்தவறாதென்பர்

எல்லாம் முடிந்தது எலக்சனும் முடிந்தது
தம்பி பெரியமெம்பர் ஆனார்
பொது நலம் தொலைத்து சுயநலம் புகுந்தது
பேரும் புகழும் பணமும் சேர்ந்தது
காரும், பங்களாவும் கனமாய்ச்சேர்ந்தது
ஆளும் அரசின் அடிவருடியானார்

வாக்கை நம்பி வாக்குப் போட்டோம்
வாக்குகள் வாக்கு மாறிப்போச்சு
சொல்லை நம்பிப் புள்ளடி இட்டோம்
செல்லாக் காசாய் எல்லாம் போச்சு
நம்பிய மக்கள் நம்பிக்கை எல்லாம்
நடுக் கிணற்றிலே போட்ட கல்லாச்சு

